T. 2820.

அண்ணாமலைப் பல்கலைக் கழக சரித்திர வெளியீடு-18

இந்திய வரலாறு

(மூன்றாம் பாகம்)

புதிய கால இந்தியா

ஆக்கியோர் :

R. சத்தியநாதய்யர், எம்.ஏ., எல்.டி.,
பேராசிரியர்,
வரலாறு, அரசியல்துறை.

D. பாலசுப்பிரமணியன், எம்.ஏ.,
வரலாற்று விரிவுரையாளர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
1961

ஆக்கியோருரை

தொன்மையும் நன்மையும் படைத்த தமிழ் மொழியின் பெருமையைப்பற்றி மாறுபாடான கருத்துக்கே இடங் கிடையாது என்பது யாவரும் அறிந்த உண்மை. பல சிறப்பு களுடன் கூடிய தமிழுக்கு இக்கால வாழ்க்கைக்குரிய பிற கலைச் செல்வங்களும் இன்றியமையாத தேவையாகும். இத் தேவையினை நிறைவேற்றும் பணிகளுள் வரலாறுகளைத் தமிழ்மொழி வாயிலாக வெளியிடுதலும் ஒன்ருகும். கல்லூரி மாணவர்கள் சிறப்பாகத் தமிழிற் பயின்று தெளியும் முறையில் இந்நூல் வெளிவருகிறது. பாரதியார் கண்ட தமிழ்நாடு தோன்றுவதில் தமிழ்நாட்டினர் யாவருக்கும் ஆர்வம் உண்டு. எனினும் குறுகிய காலத்தில் சில அருஞ்செயல்களைச் சிறப்பான முறையில் செய்துகாட்ட முடியுமா என்ற ஐயம் சில பேரறிஞர்களிடம் காணப்படுகிறது. தொடக்க காலத்திற் ருேன்றும் நூல்களில் குறைபாடுகள் இருக்கக்கூடும். அவற்றை ஆதாரமாகக் கொண்டு ஒரு முடிவுக்கு வருவது சிறப்புடையதன்று. காலப் போக்கில் தக்கார் ஊக்கமளித்தால் தலைசிறந்த படைப்புக்களைத் தமிழன்னையின் திருவடி மலர் களில் சமர்ப்பிக்க இயலும் என்றே நம்புகிருேம். மேனுட்டு, கீழ்நாட்டுக் கலைகளை வளர்ப்பதுடன் தமிழ்க் கலைகளையும் வளமூட்டி வளர்த்துவரும் தாயகமாகத் திகழும் அண்ணுமலைப் பல்கலைக்கழகம் வெளியிடும் இத்தமிழ் நூலை, தாய்மொழியில் நாட்டம் நிலைத்துவரும் இக்காலத்தில் தமிழுலகம் வரவேற்கு மென்றே நம்புகிருேம். இப்பல்கலைக்கழகத்தின் "சிண்டிகேட்" அமைத்த பேராசிரியர் குழுவினர், இந்நூலின் கையெழுத்துப் பிரதியை பரிசீலனைசெய்து உதவினர். அவர்களுக்கும் இந் நூல் வெளிவர உதவிய பல்கலைக்கழக அதிகாரிகள் யாவருக் கும் நூலாசிரியர்களின் நன்றி உரியதாகும். மிகக் குறுகிய காலத்தில் இதை அச்சிட்டுத் தந்த "கீதா பிரஸ்" உரிமை யாளரது பணி பாராட்டத்தக்கதாகும்.

குறிப்பு: இந்நூலின் அடிக்குறிப்புக்களில் தரப்பட்டுள்ள எண்கள் இந்நூல் முடிவிலுள்ள மேற்கோள் நூற்ருெகுதியிற் காணப்படும் நூல்களைக் குறிப்பன.

அதிகாரம் 1

முகலாய பேரரசு

			பக்கம்
பகுதி	1	பகதூர் ஷா (1707—12) ஜஹந்தர் ஷா (1712—13)	1
,,	2	பரூக்சையர் (1713—9) ; அவருக்குப் பின் வந்தோரும் சையது சகோதரர்களும்	6
,,	3	முகம்மது ஷா (1719—48) ; நாதிர் ஷாவின் படையெழுச்சி (1738-39)	10
,,	4	பேரரசர் அகமதுஷாவும் (1748 - 54) அப்தலியின் படையெடுப்புக்களும்	24
,,	5	II-ம் ஆலம்கீர் (1754—59) ; II-ம் ஷாஆலம் 1759-1806 அப்தலியின் படையெழுச்சிகள் (தொடர்ச்சி)	28
,,	6	முகலாயப் பேரரசின் அழிவு : பல படிகள் (Stages)	33
,,	7	அசப் ஜாஹி குலம்	36

அதிகாரம் 2

பேஷ்வாக்களின் உயர்நிலை (1713-72)

பகுதி	1	சாகுவும் தாராபாயும் (1780—12)	42
,,	2	பாலாஜி விசுவநாத் (1713—20)	44
,,	3	பாஜிராவ் (1720—40)	50
,,	4	பேஷ்வாவின் பண்புகள் ; படைத் திறமையும், அரசதந்திரமும்	58
,,	5	மஸ்தானி, சிம்னுஜி அப்பா, பிரம்மேந்திர ஸ்வாமி	61
,,	6	ரகூஜி பான்ஸ்லேயின் கருநாடகப் படையெடுப்பும் அவரது பிற்கால வாழ்க்கையும்	64
,,	7	பாலாஜிராவ் (1740—61) அரசியல் வாழ்க்கையின் முதற்பகுதி	68

			பக்கம்
பகுதி	8	சாகு (1708—49) பண்புகளும் கொள்கையும்	71
,,	9	தாராபாயின் இறுதி வீழ்ச்சி	75
,,	10	பேஷ்வாக்களின் முன்னேற்றம்	77
,,	11	பாலாஜிராவும் ஆங்கிரரும் புஸ்ஸியும்	79
,,	12	உத்கீரும் பானிப்பட்டும்	81
,,	13	மராட்டியர் வீழ்ச்சியின் காரணங்களும் அதன் விளைவுகளும்	85
,,	14	சதாசிவராவும் ரகுநாதராவும்	89
,,	15	பாலாஜிராவின் தன்மையும் கொள்கையும்	91
,,	16	மாதவ ராவ் (1761—72)	93
,,	17	அகல்யா பாய் ஹோல்கார்	97
,,	18	மராட்டியரின் தரைப்படையும் கடற்படையும்	98
,,	19	சிவில் ஆட்சிமுறை	103
,,	20	சமூக வாழ்க்கையும் பண்பாடும்	107

அதிகாரம் 3

ஆங்கிலேயர் ஆட்சியின் எழுச்சி (1708—72)

பகுதி	1	ஆங்கிலக் கூட்டுக்குழுவும் பிற மேனாட்டினர் போட்டியும் (1708-46)	110
,,	2	மார்த்தினின் பின்வந்தோர்; லெனையரும் தூமாவும்	116
,,	3	தியூப்ளே: வாழ்க்கை, கொள்கை, முறைகள், திறமை, தோல்வி முதலியன	118
,,	4	ஆனந்தரங்கப் பிள்ளை (1709—61)	135
,,	5	புஸ்ஸி	137
,,	6	புதுச்சேரியின் வீழ்ச்சி	139
,,	7	பிரெஞ்சுக்காரரின் தோல்விக்குரிய காரணங்கள்	144
,,	8	ஐரோப்பியரின் வெற்றிக்குரிய நிலைமைகள்	149

			பக்கம்
பகுதி	9	யூசுப்கான்	151
,,	10	ஐதர் அலியும் முதல் மைசூர்ப் போரும்	153
,,	11	கருநாடகத்தில் ராபர்ட் கிளைவ்	161
,,	12	சிராஜ்-உத்-தௌலாவும் கல்கத்தா இருட்டறைத் துயர நிகழ்ச்சியும்	165
,,	13	வங்காளத்தில் கிளைவ், பிளாசி, பிதேரா போர்கள்	168
,,	14	மீர்ஜாபர்; மீர்காசிம்; பக்ஸார் போர்	175
,,	15	கிளைவின் இரண்டாம் முறை ஆட்சி; வெளித்துறைக் கொள்கை	182
,,	16	பிரிட்டிஷ் ஆட்சியின் எழுச்சி	186
,,	17	ஆட்சிமுறை; இரட்டை ஆட்சி	189
,,	18	கிளைவின் சீர்திருத்தங்களும் இரண்டாம் முறை வங்காள ஆட்சித் தலைமையும்	193
,,	19	கிளைவின் இறுதிக்காலம் (1767—74)	197
,,	20	கிளைவின் இயல்பு, போர் வீரத் திறமை, அரசியல் வல்லமை	199
,,	21	வங்காளத்தில் வெரெல்ஸ்ட், கார்ட்டியர் ஆகியோர் ஆட்சி	202

அதிகாரம் 4

வாரன் ஹேஸ்டிங்ஸ் (1772-85)

பகுதி	1	ஹேஸ்டிங்ஸ்: ஆரம்ப வாழ்க்கையும், வங்காள ஆட்சியும்	204
,,	2	ரோஹில்லாப் போர் (1774)	215
,,	3	முறைப்படுத்துஞ் சட்டம் (1773) (ஒழுங்குமுறைச் சட்டம்)	220
,,	4	குழப்ப நிலை.	227
,,	5	நந்தகுமாரின் துயர முடிவு	231
,,	6	ஹேஸ்டிங்ஸின் நிலைமையும் ஆலோசனை சபை-நீதிமன்றப் போராட்டமும்.	237

			பக்கம்
பகுதி	7	நாஞபட்னிஸ்; மகாதஜி சிந்தியா; முதல் மராட்டியப்போர். (1775-82)	241
,,	8	ஐதர்அலியும் சென்னை அரசாங்கமும்; இரண்டாம் மைசூர்ப்போர்-முற்பகுதி (1780—2)	250
,,	9	ஐதரைப்பற்றிய மதிப்பீடு.	262
,,	10	திப்புசுல்தானும் மக்கார்த்னேயும்; இரண்டாம் மைசூர்ப் போரின் பிற்பகுதி (1783-84)	266
,,	11	இராமபுரியின் பெய்ஸுல்லாகான் (1780-1)	269
,,	12	வாரணுசியின் செயிட்சிங் (1781)	270
,,	13	பைஸாபாத் (Fyzabad) பீகங்கள் (1782)	274
,,	14	பார்லிமெண்டு சட்டங்கள், 1781 முதல் 1784 வரை	278
,,	15	ஹேஸ்டிங்ஸ் பதவிக்காலத்தின் இறுதிப்பகுதி (1780-5)	283
,,	16	துரோகக்குற்ற விசாரணை	286
,,	17	வாரன் ஹேஸ்டிங்ஸைப் பற்றிய மதிப்பீடு.	293

அதிகாரம் 5

(1785—6) முதல் (1786—98) வரை

இந்திய வரலாறு

பகுதி	1	மக்பர்ஸன் (1785-6) காரன்வாலிஸ் (1786-93)	301
,,	2	திப்புசுல்தானும் மூன்ருவது மைசூர்ப் போரும் (1790-2)	305
,,	3	கருநாடகம், அயோத்தி, நேபாளம்	311
,,	4	நிலையான நிலவரித்திட்டம் (1793)	313
,,	5	முறை வழங்கலும் பிற சீர்திருத்தங்களும்	318

			பக்கம்
பகுதி	6	பார்லிமெண்ட் சட்டங்கள்–1793-ம் ஆண்டு பட்டயச்சட்டம்	325
,,	7	காரன்வாலிசின் இயல்பும் அருஞ் செயல்களும்	327
,,	8	மகாதஜி சிந்தியாவின் உயர்நிலை, இயல்பு, பெருமை	331
,,	9	ஷோர் (1793-8)	338
,,	10	நாஞ பட்னிஸ்; உயர்நிலை, இயல்பு, அரசியல் வல்லமை	344
,,	11	சீக்கியர்	353
,,	12	பண்பாடும் சமூக வாழ்க்கையும்	358

அதிகாரம் 6

வெல்ஸ்லி முதல் ஹேஸ்டிங்ஸ வரை
(1798—1823)

பகுதி	1	வெல்ஸ்லியின் கொள்கை (1798-1805)	360
,,	2	திப்புவும் நான்காம் மைசூர்ப் போரும் (1799)	369
,,	3	திப்புசுல்தானின் இயல்பும் தோல்வியும்	372
,,	4	வெல்ஸ்லியும் மைசூரும்	377
,,	5	தஞ்சாவூர், சூரத், கருநாடகம், பருக்காபாத்	381
,,	6	ஐதராபாத், லக்னௌ	386
,,	7	பிரெஞ்சுக்காரருக்கு எதிரான நடவடிக்கைகள்	390
,,	8	இரண்டாவது மராட்டியப் போர் (1803-5)	392
,,	9	ஆட்சி முறை	402
,,	10	வெல்ஸ்லியின் பிற்கால வாழ்க்கை; படைத்தலைவர் வெல்ஸ்லி	404
,,	11	கவர்னர்–ஜெனரல் வெல்ஸ்லியின் சிறப்பு	408

			பக்கம்
பகுதி	12	காரன்வாலிஸ் (1805) ; பார்லோ (1805-7)	414
,,	13	வேலூரில் புரட்சிக்கலகம் (1806)	418
,,	14	மிண்டோ (1807–13) வாழ்க்கையின் முற்பகுதியும் கொள்கையும்	420
,,	15	அமிருதசரஸ் உடன்படிக்கை (1809)	423
,,	16	மத்திய இந்தியா ; இராசபுதனம்	425
,,	17	திருவாங்கூர், சென்னை, புரட்சிக் கலகங்கள்	427
,,	18	கடல் கடந்த படையெழுச்சிகள்	429
,,	19	பிண்டாரிப் பேரிடர்	430
,,	20	பார்லிமெண்ட்டுச் சட்டங்கள் ; பட்டயச் சட்டம் (1813) மிண்டோ வின் பணிகள்	433
,,	21	ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் கொள்கை (1813 – 23)	437
,,	22	கூர்க்கருடன் போர் (1814—16	441
,,	23	புரட்சிக் கலகங்கள் ; பிண்டாரியர் அழிவு	444
,,	24	மூன்றுவது மராட்டியப் போர் (1817—19)	448
,,	25	II-ஆம் பாஜி ராவ் ; தௌலத் ராவ் சிந்தியா ; மராட்டியரின் தோல்விக் குக் காரணங்கள்	452
,,	26	லக்னௌ ; ஐதராபாத்	461
,,	27	ஆட்சி முறை	464
,,	28	ஹேஸ்டிங்ஸின் இயல்பும் அவர் முடித்த செயல்களும்	468
,,	29	மன்ரோ	471
,,	30	எல்பின்ஸ்டன் (Elphinstone) மால்கம் (Malcolm)	475
,,	31	கல்வி வளர்ச்சியும் இராம் மோகன்ராயும்	478

			பக்கம்
பகுதி	32	செராம்பூர் பாதிரிகளும் பத்திரிகைத் தொழிலும்	481
,,	33	இலங்கை	483
,,	34	பர்மா	484

அதிகாரம் 7

(1823 முதல் 1848 வரை)

இந்திய வரலாறு

பகுதி	1	ஜான் ஆதம்	488
,,	2	ஆமெர்ஸ்ட் (1823 – 8). முதல் பர்மியப் போர் (1824 6)	490
,,	3	பெண்டிங்கு (1828 35). பாதுகாப்புக் குட்பட்ட அரசுகள்	497
,,	4	மைசூர், குடகு	502
,,	5	வெளித்துறைக் கொள்கை	504
,,	6	பட்டயச் சட்டம் (1833)	506
,,	7	பெண்டிங்கு நிறைவேற்றிய சீர்திருத்தங்கள்	510
,,	8	பெண்டிங்கின் இயல்பு. அரசியல் வல்லமை, ஆட்சித் திறமை	525
,,	9	மெட்காஃப் (1835 6	528
,,	10	இரஞ்சித்சிங் (பி. 1789 – இ. 1839)	530
,,	11	ஆக்லண்டு (1836—42) ; முதல் ஆப்கானியப் போர் (1838 - 42)	537
,,	12	எல்லன்பரோவும் (1842 – 4) முதல் ஆப்கானியப் போரின் தொடர்ச்சியும் (1842)	546
,,	13	சிந்துநாட்டைச் சேர்த்துக்கொள்ளல் சிந்தியாவுடன் போர் (1843)	549
,,	14	ஹார்டிஞ்சு (1844 8) முதல் சீக்கியப் போர் (1845—6)	554
,,	15	கல்வி வளர்ச்சி	560
,,	16	முகம்மதிய சமய, இலக்கியப் பணிகள்	561

			பக்கம்
பகுதி	17	வில்சன், இராம் மோகன்ராய் (தொடர்ச்சி), தேவேந்திர நாத் தாகூர்	562
,,	18	தொழில்துறையில் இந்தியாவின் தளர்ச்சி	565

அதிகாரம் 8

டல்ஹௌசியும் இந்தியப் படைக்கலகமும்

(1848—58)

பகுதி	1	டல்ஹௌசியின் கொள்கை	569
,,	2	இரண்டாவது சீக்கியப்போர் (1848–9) பஞ்சாபில் பிரிட்டிஷ் ஆட்சி	574
,,	3	கோஹினூர் வரலாறு	578
,,	4	இரண்டாவது பர்மியப் போர் (1852)	579
,,	5	இறுதிப் பட்டயச் சட்டம்	581
,,	6	அவகாசியிலிக் கொள்கை (The Doctrine of Lapse).	583
,,	7	டல்ஹௌசியும் வேறு சில சிற்றரசர்களும்	588
,,	8	புரட்சிக் கலகங்கள்	590
,,	9	அயோத்தியை இணைத்துக் கொள்ளல்	592
,,	10	ஆட்சிமுறை	596
,,	11	இருப்புப்பாதை, தந்திமுறை, அஞ்சல்முறை	598
,,	12	கல்வியும் வேறுபல பொதுநலச் சீர்திருத்தங்களும்	602
,,	13	டல்ஹௌசியின் இயல்பும் சாதனைகளும்	606
,,	14	டல்ஹௌசியை, கர்சான், வாரன் ஹேஸ்டிங்ஸ், வெல்ஸ்லி ஆகியோருடன் ஒப்பிடுதல்	611

			பக்கம்
பகுதி	15	கானிங்கு (1856-8)	613
,,	16	படைக்கலகத்தின் தன்மையும் அதன் காரணங்களும்	616
,,	17	டங்ஹௌசியின் பொறுப்பு	622
,,	18	படைக்கலக நிகழ்ச்சிகள் (1857–8)	625
,,	19	கலகம் தோல்வியுற்றமைக்குக் காரணங்கள்	629
,,	20	கம்பெனியின் முடிவு	631
,,	21	இந்திய அரசியல் நிர்வாகச் சட்டமும், விக்டோரியா பேரரசியின் அறிக்கையும் (1858)	634
,,	22	படைக் கலகத்தின் வேறு சில விளைவுகள்	636

அதிகாரம் 9

(1858 முதல் இந்திய வரலாறு)

பகுதி	1	அரசப் பிரதிநிதி கானிங்கு (1858–62)	638
,,	2	எல்ஜின்	643
,,	3	லாரன்சு (1864–69)	644
,,	4	மேயோ (1869–72)	649
,,	5	நார்த்புருக்கு (1872–6)	652
,,	6	லிட்டன் (1876-80)	656
,,	7	ரிப்பன் 1880–84)	666
,,	8	டஃப்ரின் (1884–1)	674
,,	9	லாண்ஸ்டவுன் (1888-94)	680
,,	10	இரண்டாவது எல்ஜின் (1894–9)	688
,,	11	சமயமும் இந்திய தேசிய இயக்கமும்	694
,,	12	கர்சான் (1899-1905)	698
,,	13	இரண்டாவது மிண்டோ பிரபு (1905–10)	718

			பக்கம்
பகுதி	14	இரண்டாவது ஹார்டிஞ்சு (1910–16)	727
,,	15	செம்ஸ்போர்டு (1816–21)	731
,,	16	ரீடிங் (1921–6)	747
,,	17	இர்வின் (1926–31)	752
,,	18	வில்லிங்டன் (1931–6)	760
,,	19	லின்லித்கோ (1936–43)	776
,,	20	வேவல் பிரபு (1943–47)	785
,,	21	இந்தியாவின் கடைசி அரசப் பிரதிநிதி	789
,,	22	1950 ஆண்டு புதிய அரசியலமைப்பும் 1951-ம் வருட திருத்தமும்	792
,,	23	தேசிய ஒற்றுமையும் பிற முன்னேற்றங்களும்	819

நாட்டுப் படங்கள்

			பக்கம்
I.	முகலாயப் பேரரசு (1707–61)	...	41
II.	மராட்டியரின் உச்சநிலை (1713–72)	...	109
III.	பிரிட்டிஷ் அரசின் எழுச்சி (1708–72)	...	203
IV.	வாரன் ஹேஸ்டிங்ஸ் காலத்து இந்தியா (1772–85)	...	300
V.	இந்தியா (1785–98)	...	359
VI.	இந்தியா (1798–1823)	...	487
VII.	இந்தியா (1823–48)	...	568
VIII.	இந்தியா (1848–58)	...	637
IX.	இந்தியா (1858–1947)	...	788
X.	இந்தியாவும் பாகிஸ்தானமும்	...	822

அதிகாரம் 1.

முகலாயப் பேரரசு (1707—61)

பகுதி 1.

பஹதூர் ஷா (1707—12)
ஜஹந்தர் ஷா (1712—13)

அரசுரிமைப் போர்: அவுரங்கசீபுக்குப் பிறகு முகலாயர் வரலாற்றில் நாம் அறிந்துகொள்ள வேண்டிய செய்தி அரசுரிமைப் போர் ஆகும். ஷா ஆலம் என்ற முகம்மது முவாஸாம் அப்பேரரசரின் இரண்டாவது மகனுர் (1643-ல் பிறந்தவர்). தம் அண்ணனை முகமது சுல்தான் இறந்த பிறகு 1676-ல் இவர் இளவரசரானுர்., இவர் ஷயிஸ்டாகானே அடுத்து 1664-ல் அரசப் பிரதிநிதியாக அமர்ந்ததிலிருந்து மராட்டியருடனும், பீஜப்பூர் மன்னர்களுடனும் நிகழ்ந்த போர்களிற் பங்கு கொண்டார். ஆனுல் இவர் கோல்கொண்டாவின் அப்துல் ஹாஸன் குதுப்ஷாவிடம் காட்டிய நல்லெண்ணத்திற்காக 1687-ல் கைதியானுர். ஏழாண்டுகட்குப் பின் விடுதலை பெற்று மாகாணத் தலைமை அரசியற் பணியாளராகி 1699-ல் காபூலில் செயலாற்றி வந்தார். இவர் பெஷாவருக்கு அண்மையிலிருந்த பொழுதுதான் இவருடைய தந்தை இறந்த செய்தி இவருக்குக் கிடைத்தது. உடனே இவர் தமது உடன் பிறந்தோராகிய ஆஸாம், காம்பக்ஷ் ஆகிய இருவருடனும் அரசுரிமைக்காகப் போரிட வேண்டுமென்று முடிவு செய்துகொண்டு அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்யலானுர். லாகூருக்குச் சென்ற இவர் தாமே முடிசூட்டிக்கொண்டு பஹதூர்ஷா என்னும் பட்டத்

தையும் பெற்றார். உடன் பிறந்தாருக்கிடையே ஒற்றுமை என்பது சிறிதளவேனும் இல்லை.

"உறல் முறையான் உட்பகை தோன்றின் இறல்
முறையான் ஏதம் பலவுந்தரும்"

என்னும் வள்ளுவர் வாக்கை இந்திய மன்னர்கள் உணர்ந்து செயலாற்றியிருப்பின் இந்நாட்டு வரலாறு வேறு வகையாக அமைந்திருக்கும். ஆஸாம் தம்முடைய மகனிடமே நம்பிக்கை கொள்ளவில்லை! பஹதூர் ஷா, ஆக்ராவைக் கைப்பற்றிக் கொண்டபின் பேரரசைத் தமக்குள் பகிர்ந்து கொள்ளலாம் என்று கூறிய அறிவுரையை ஏற்றுக்கொள்ளவும் ஆஸாம் இணங்கினாரில்லை. முடிவாக ஆஸாமும் அவர் மகனும் ஜாஜவ் (ஆக்ராவின் அண்மையில்) போர்க்களத்தில் தோல்விகண்டு மாண்டொழிந்தனர். காம்பக்ஷ் இளவரசரும் தம் அண்ணனின் அறிவுரையை ஏற்றுக்கொள்ளாமல் தம் மனம் போனவாறு தக்கணத்தில் பழிக்கத்தக்க செயல்களைச் செய்து வந்ததால் 1709-ஆம் ஆண்டின் முற்பகுதியில் அண்ணனுக்குத் தோற்று இறந்தார்.

இராசபுத்திரரும் சீக்கியரும்: மார்வார் நாட்டு அஜித்சிங் என்ற இராசபுத்திர வீரரைப் பற்றி முன்னரே நாம் குறிப்பிட்டிருக்கிறோம். அவர், அவுரங்கசீப் இறந்தது கண்டு, உரிமை கோரி ஜோதிபுரியை மீட்டுக்கொள்ள விழைந்தார். ஆனால் 1708-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பஹதூர்ஷா, அவரை முறியடித்து, 3500 குதிரை வீரர்களுக்குத் தலைவரான ஒரு மான்சப்தாராக அவரை அமர்த்தினார். ஆனால் காம்பக்ஷுக்கு எதிராகப் பேரரசர் படையெடுத்துச் சென்றது, இராசபுத்திரத் தலைவர்களான அஜித்சிங், செய்சிங், அமார்சிங் முதலியவர்களுக்கு ஒரு நல்வாய்ப்பை அளித்தது; அவர்கள் மொகலாயரைத் தாக்கலாயினர். பஹதூர் ஷா, 1710-ல் தக்கணத்திலிருந்து திரும்பினார். ஆனால் அவர் இராசபுத்திரருடன் சமாதானமான முறையிலேயே நடந்துகொள்ள வேண்டியிருந்தது. ஏனெனின் சீக்கியரும் அவ்வமயம் கலகம் விளைத்து வந்தனர்.

கோவிந்த சிங் என்ற பத்தாவது சீக்கிய குரு இயற்கை எய்திய வரையில் நிகழ்ந்த சீக்கியர் செய்திகளை நாம் முன்னரே கண்டோம். 1608-ல் கோவிந்த சிங் இறந்த பின் பண்டா என்ற ஒருவர், தாம்தான் மறு உலகத்திலிருந்து மீண்டு வந்த கோவிந்த சிங் என்று பறை சாற்றிக்கொண்டு முகலாயரை அழிக்க முனைந்தார். அவர், "சச்சா பாதுஷா" அல்லது "உண்மையான பேரரசர்" என்று தம்மைக் கூறிக்கொண்டார். முகலாய ருக்குரிய சில இடங்களைக் கைப்பற்றிக்கொண்டதுடன் முகம்மதியரை ஒழிப்பதே தமது கடமை என்றும் கூறி வந்தார். அவரால் பல மசூதிகளுக்கும் முகம்மதியப் பெண்டிருக்கும் கேடு விளைந்தது (1710). லாகூரைக் கைப்பற்ற அவர் முயன்றது பயனுறவில்லை. பேரரசர் பஹதூர்ஷா புறப்பட்டுச் சென்று பண்டாவை புறமுதுகு காட்டச் செய்தார். அவர், போரில் வெற்றி பெற்று சர்ஹிந்த் முதலிய இழந்த பகுதிகளை மீட்டுக் கொண்டார். ஆனால் 1712-ல் பேரரசர் இறந்த பிறகு, பண்டா மீண்டும் வெற்றிக்கொடி நாட்டி, பஹதூர்ஷாவின் வெற்றியைப் பயனற்றதாக்கி விட்டார்.

பேரரசர் பஹதூர்ஷா: பஹதூர்ஷா இன்ப வாழ்வை விரும்பியவர்; தம் ஆதிக்கத்தின் மதிப்புக்கேற்ப அவர் நடந்துகொண்டார். அவரிடம் சமயப்பற்றும் பல மூட நம்பிக்கைகளும் இருந்தன; ஆனால் மத வெறி கிடையாது. எனினும் அவர் இந்துக்களுக்கு, அரசியல் நிர்வாகத்தில் குறிப்பிடத்தக்க பங்கு அளிக்கவில்லை. தந்தையைப் போலன்றி அவர் தமது குமாரர்களை நல்ல முறையில் வளர்த்தார். ஆதலால் அவர்கள் அவருக்குப் பகை யாக எழவில்லை. ஆனால் பஹதூர் இறந்தபின் அவர்கள், அரியணைக்காகப் போட்டியிட்டனர். தமது உணர்ச்சிகளை அடக்கிக்கொள்வதில் பஹதூர்ஷா மிகவும் திறம்படைத்த வர். அவர் தந்தையின் அரசியலில் பணியாற்றியவர்களைத் தம் அரசியலிலும் அமைத்துக்கொண்டார். அவர் தந்தை அவருடன் நடந்துகொண்ட முறை அவரது ஊக்கத்தை

யும் உறுதியையும் அழித்தது. மேலும் அவர் தமது 64-வது ஆண்டில் அரசுகட்டில் ஏறியமையால் உறுதியான மனம் கொண்டு செயலாற்ற அவரால் இயலவில்லை. அளவு கடந்த பெருந்தன்மை அவரிடம் விளங்கியது. "இல்லை" என்பாருக்கு "இல்லை" என்று கூருத இயல்புடையவர். அவுரங்கசீப்பின் பெரிய அலுவலாளரான ஆஸாத்கானைப் பேரரசர் தமது தலைமை அமைச்சராக்கியிருந்தார். அவர் அரசுகட்டிலேற உதவிய முனிம்கான் என்பாருக்குப் பொருளமைச்சர் பதவி கிடைத்தது. பஹதூர்ஷா, மிகப் பெரிய பேரரசர் அல்லர் என்ருலும் அவருக்குப் பின் போந்த மன்னர்களைக் கருதும்பொழுது, மிகவும் வெற்றி யாக அரசாண்டவர் என்றே கூறவேண்டும் என்பது அறிஞர் இர்வின் அவர்களின் கருத்து.*

ஜஹந்தர்ஷா : பஹதூர்ஷாவுக்கு இருந்த நான்கு பிள்ளைகளில் மூத்தவரான ஜஹந்தர்ஷா 1661-ல் பிறந்த வர்; அஸிம் உஷ்ஷான், ரவியுஷ்ஷான், ஜஹான்ஷான் என்ற மூவரும் அவர் பின் பிறந்தவர்கள். அவுரங்கசீப் இறந்த பின் ஏற்பட்டிருந்த சூழ்நிலையைத் தன் நலத் திற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற பேரவா, அக்காலத்தில் ஸுல்பிகர் கான் (ஆஸாத் கானின் மகன்) என்ற வீரனிடமிருந்தது. அவன் அரசியல் தொடர்பான அக்காலத்துப் போர்களில் ஆர்வத்துடன் ஈடுபட்டான். முதலில் ஆஸாமுக்கு உதவிய அவன், அவநிறந்த பின் பஹதூர்ஷாவுக்கு உதவிபுரியலானுன். ஜஹந்தர் அவ னுதவியுடன், தம்முடன் பிறந்தார் மூவரையும் தோற் கடித்துக் கொன்றுவிட்டு அரியணை ஏறினுர். ஸுல்பிகரின் தந்தை ஆஸாத்கான், முதலமைச்சராகத் தொடர்ந்து பணியாற்றி வந்தார். தம் தந்தையுடன் முன்னரே தொடர்பு கொண்ட டச்சுக்காரரிடமிருந்து வந்த ஒரு தூதுக் குழுவைப் பேரரசர் வரவேற்ருர். ஜஹந்தர்ஷா, சிற்றின்பத்துறையில் எளியராகி, லால்குமாரி என்ற பொதுமகள் ஒருத்தியுடன் களித்திருந்து காலங்கழித்து

* 47, I. பக். 137.

வந்தார். தில்லிப் பேரரசின் சிறப்பு மங்கியது. பெருஞ் செல்வர்கள் அரசரையும் அமைச்சரையும் வெறுக்கலாயினர். அஸிம் உஷ்ஷாவின் மகனை பரூக்சையர் என்பார் சையது குலச்சகோதரர்களான ஹாஸன் அலி (அப்துல்லாகான்) ஹுசேய்ன் அலி என்ற இருவருடன் இணைந்து கொண்டு, 1712-ல் காஜ்வா என்னுமிடத்தில் பேரரசப்படையை தோற்கடித்துவிட்டு, அடுத்த ஆண்டில் ஆக்ராவுக்கு அண்மையில் ஜஹந்தர் ஷாவையும் முறியடித்தார். மாறுவேடம் பூண்டு தில்லிக்கு ஓடிய ஜஹந்தரை வெற்றிவீரரின் ஆணைப்படி, ஆஸாத்கானும் ஸுல்பிகர்கானும் கொலைசெய்தனர்.

பகுதி 2.

பரூக்சையர் (1713—9) ; அவருக்குப்பின் வந்தோரும் சையது சகோதரர்களும்

சையது சகோதரர்கள் : பரூக்சையர் (பிறந்த ஆண்டு 1683) தமது வெற்றிக்குப்பின் தாமே பட்டமெய்தினர். அவர் ஜஸியா வரியை நீக்கினர். (1679-ல் அவுரங்கசீப்பால் மறுமுறை விதிக்கப்பட்ட அவ்வரி தொடர்ந்து வந்தமை, ஈண்டு நினைவு கூறத்தக்கது) ஸுல்பிகர்கானைக் கொன்ருர். அப்போ திருந்து சையது சகோதரர்கள் எய்திய உயர்நிலை தொடர்ந்து விளங்குவதாயிற்று. அவர்கள், முகம்மதி யரில் இந்துஸ்தானிப்பிரிவைச் சேர்ந்தவர்கள் (இந்தியா வில் பிறந்தவர்கள்). அவர் தம் முன்ஞேர் பல நூற்ருண்டுகட்கு முன்பு மெஸபொடேமியாவிலிருந்து வந்தவர்களாவர். ஆகையால் அவர்கள் துரானியருமல் லர், ஈரானியருமல்லர், அவர்களுடைய ஆதிக்கவளர்ச் சியை பரூக்சையர் விரும்பவில்லை. ஆகவே மறைமுகமாக அவர்தம் செல்வாக்கை அழிப்பதே அரசரின் நோக்க மாயிருந்தது. பேரரசரின் நம்பிக்கைக்கு உரியவர்களில் சிறப்பானவரான மீர்ஜம்லா என்பார் ஒரு துரானியர். சையது சகோதரர்களின் அதிகாரத்தை அழிக்கவேண்டு மென்பதே மீர்ஜம்லாவின் குறிக்கோளுமாம். ஆகவே பேரரசர் பெரும்பாலும் தம் ஆட்சி தொடங்கியதிலிருந்தே சையது சகோதரர்களுடன் சச்சரவு செய்து வந்தார். ஆனல் அவருடைய உறுதியின்மையும் தைரியமின்மையும் அவரை அச்சகோதரர்களுக்கு உட்படுமாறு செய்தன. அரசரை ஆதரித்தவர்கள் மீது அடங்காச் சினங்கொண் டிருந்தனர் அவ்வுடன் பிறந்தோரிருவரும். மேலும் துரானியரும், ஈரானியரும் முறையே அன்னியரும், ஷியாக்களும் ஆதலின் அவர்கள் மாறுபாடு சமய அடிப் படையிலும் பற்றி எரிந்தது. அவ்விரு பிரிவினரும்

இந்துஸ்தானியரை எதிர்த்துவந்தனர். ஆயினும் அவர்களுக்கிடையே ஒற்றுமை கிடையாது. ஆற்றலற்ற அரசரின் ஆட்சிக்காலத்தில் இக்குறைபாடு பேரரசின் அழிவுக்குக் காரணமானதில் வியப்பில்லை.

புரட்சிக் கலகங்களும் ஆங்கிலத்தூதுக்குழுவும்: பஹதூர்ஷா இறந்தபிறகு பண்டா என்ற சீக்கியத்தலைவர் மறுபடியும் முகலாயரைத் தாக்கி இன்னல்கள் விளைத்தார். அதனால் வெகுண்ட பேரரசுத்தலைவர்கள் அவரை 1715-ல் குருதாசபுரத்தில் (அமிருதசரஸ்ஸுக்கு அண்மையில்) கைப்பற்றி அடுத்த ஆண்டில் கொலைசெய்தனர் ; மேலும் சீக்கியர்களைத் தொடர்ந்து சென்று வருத்தினர்; சீக்கியர் தலைகளைக் கொணர்வோருக்குப் பரிசுகளும் வழங்கினர். 1714-ல் ஹுசேய்ன் அலி என்பார் மார்வார் அஜித்சிங்கின் கலகத்தை அடக்கினர். பின்னவரின் மகளைப் பேரரசர் மணந்துகொண்டதும் குறிப்பிடத்தக்கது. அவுரங்கசீப் காலத்தில் ஏற்பட்டதுபோலவே ஜாட் கலகக்காரரும் புரட்சிக் கலகத்தை மேற்கொண்டனர். அவர்களை அடக்குமாறு அனுப்பப்பெற்ற ஆம்பர் நாட்டு சவாய் ஜயசிங் ஆக்ராவுக்கு அண்மையில் அவர்களுடன் போரிட்டார். ஜாட் தலைவர் சூரமான், ஓராண்டுகாலம் எதிர்த்து நின்றும் முடிவில் அடிபணிந்தார். 1714 முதல் 1717 வரை முகலாயர் அவையில் இருந்த ஜான்சூர்மன் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கூட்டுக்குழுவுக்கு வேண்டிய சில சலுகைகளைப் பெற்றார். இது தொடர்பாக வில்லியம் ஹாமில்ட்டன் என்ற ஆங்கில அறுவை மருத்துவருடைய பணிகள் பேரரசருக்கு உதவியாயிருந்தன.

பருக்சையரின் வீழ்ச்சி: ஹுசெய்ன் அலி, இராசபுதனம் சென்றிருந்த பொழுது (1714) பேரரசர் இரகசியமாக அஜித்சிங்கைக் கலகம் செய்யுமாறு தூண்டினர். அவர் தில்லி திரும்பியபின், ஹுசெய்ன் தம்முடைய உடன் பிறந்தாருடன் பதவி துறந்துவிடுவதாக அச்சுறுத்தினர். அதைக்கண்டு அஞ்சிய பருக்சையர் அவர்களுக்கு அடங்கிவிட்டார். எனினும், பின்னர்த்

தக்கணத்தின் அரசப்பிரதிநிதியாகத் தம்மை அமர்த்திக் கொண்ட ஹுசெய்னுடன் பகைமை உறவே உள்ளூரத் தொடர்ந்துவந்தது. சையது சகோதாரர்களை முறியடிக்கப் பேரரசருடைய படைத்தலைவர்கள் செய்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. 1717-ல் ஜஸியா வரி மறுபடியும் விதிக்கப்பெற்றது. 1719-ல் ஹுசெய்ன் அலி தக்கணத்தி லிருந்து திரும்பினார். திரும்புங்கால் மராட்டியப் படை யையும் பேஷ்வா பாலாஜி விஸ்வநாத்தையும் உடன் அழைத்துவந்தார். அவர் சாஹுவுக்கு நல்ல சலுகை களைக்காட்டிச் செய்து கொண்ட உடன்படிக்கையைப் பேரரசர் ஏற்றுக்கொண்டார். அவ்வாறிருந்தும் அர சரின் கொடுஞ் சூழ்ச்சிகளை அறிந்த சையது சகோதரர் கள் தாம் தப்பிக்க விரும்பி அவரை மானக்கேடு அடை யச்செய்தனர். பின்னர்ப் பேரரசர் கொல்லுண்டார். "பயனற்ற, ஒன்றுக்கும் தகுதியற்ற பரூக்சையரின் அதி காரத்தை குலைத்தது, 'அவ்வாறு அரசன் தெய்வீகபுருடன் என்று உறுதியான நம்பிக்கை கொண்டவர்க்கே தவ ருகத்தோன்றும். ஆனால் அவ்வாறு செய்யவேண்டியது இன்றியமையாதது என்று கருதினாலும் அதனைச் செய்து முடித்தவிதம் மிகவும் கொடுமையானது. .... தங்க ளுடைய உயிரையும் மானத்தையும் காப்பாற்ற வேண்டிய சையதுக்கள் இக்காரியத்தைச் செய்வது இன்றியமையாத தாயிற்று .... பரூக்சையருக்கு ஏற்பட்ட முடிவுக்கு பரூக்சையரே காரணமாவர். உறுதியற்ற, பொய் நிறைந்த இழிக்கத்தக்க அக்கோழையைக் கொண்டாடு வதற்கோ அவர் முடிவுபற்றி வருந்துவதற்கோ இல்லை."

அரசர்களைப் படைப்போர் அமைத்தவர் : பரூக்சை யர் உயர்ந்ததற்கும், வீழ்ந்ததற்கும் காரணமான சையது சகோதரர்கள் அரசர்களைப் படைப்போராக (King-makers) த்தொடர்ந்து பணியாற்றிவந்தனர். 1719-ல் தில்லி அரியணை நான்கு மன்னர்களைக்கண்டது —. பரூக்சைருக்குப்பின் ரபி (Rabi) – உத்–தரஜத் (பிப்ரவரி

---

* ஷெ பக். 395-6

முதல் ஜூன்வரை), ரபி-உத்-தௌலா (ஜூன் முதல் செப்டம்பர் வரை), ரௌஷன் அக்தார் (முகமதுஷா) ஆகியோர் ஆட்சி நிலவியது. ஏறக்குறைய அதே காலத்தில் மற்றொரு கட்சியினர் நிருஸியர் (அவுரங்கசீபின் மூன்ருவது மகனுன அக்பரின் குமரன்) என்பாரை ஆக்ராவில் பேரரசராக அமர்த்தினர் (மே மாதம் முதல் ஆகஸ்ட் வரை). ஆனால் சையது சகோதரர்கள் அவரை நீக்கி விட்டனர். ரவி-உத்-தரஜத், தம் ஆட்சிக்காலத்தில் ஜஸியா வரியை நீக்கினுர் ; நிஸாம்-உல்முல்க் என்பாரை மாளவத்தின் அரசப் பிரதிநிதியாக அமர்த்தினுர். ஹுசெய்ன் அலி மராட்டியருடன் செய்துகொண்ட உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டு உறுதிசெய்தார். பாலாஜி விஸ்வநாத்தும், தக்கணத்தில் சௌத், சர்தேஷ்முகி என்ற வரிகளை வசூலிக்கும் உரிமைகளையும் சுயராச்சியத்தையும் பெற்றுத் தம்நாடு திரும்பினுர். மேலும் சாஹுவின் தாயையும் பான்ஸ்லே குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களையும் பேரரசர் சிறையிலிருந்து விடுதலை செய்தார். பீஷ்வா கொண்டுசென்ற உரிமைப் பத்திரங்களில் முகம்மது ஷாவின் பெயர் உள்ளது. ஆனால் அவற்றில் குறித்துள்ள தேதிகள் மார்ச், 13, 24, 1719. முகம்மதுஷா, பேரரசராக அமர்ந்திருந்தது அக்காலத்தில் அன்று. ஆகவே, அப்பத்திரங்களை அவர் வழங்கவில்லை என்பது புலனுகிறது. ரபி-உத்-தரஜத் உடல்நலம் குன்றி பதவியினின்று நீக்கப்பெற்று, பின் இறந்தார். அவருக்குப்பின் அரியணையிலமர்ந்த அவர் அண்ணன் ரபி-உத்-தௌலாவும் (II-ம் ஷாஜஹான்) அவரைப்போலவே சையதுகளால் சிறைப்படுத்தப்பட்டிருந்து பின் இறந்தார். அடுத்து, ஜஹான்ஷாவின் மகனுன முகம்மது ஷாவை (பிறந்த ஆண்டு 1702) அரசரைப் படைப்போர் பட்டத்தில் ஏற்றினர்.

———

பகுதி 3.

முகம்மது ஷா (1719—48) ; நாதிர்ஷாவின் படையெழுச்சி (1738—39)

சையது சகோதரர்களின் வீழ்ச்சி: தங்களுக்குள் ஏற்பட்ட கலகத்தாலும், துரானியருடனும், ஈரானியருடனும் அவர்கள் கொண்டிருந்த பகைமையாலும் சையது சகோதரர்களின் ஆதிக்கம் குலைந்தது. நிஸாம்-உல்-முல்க், பேரரசரின் மனத்தை நன்கு உணர்ந்தவர். ஆகவே சையதுக்களை எதிர்த்துப் போரில் அவர்கள் படையை முறியடித்தார். (1720) அதே ஆண்டில் ஹுசேய்ன் அலி கொலையுண்டார். இதையடுத்து அப்துல்லா கான், முகமத் இப்ராஹிமைப் பேரரசராக்கினர். இப்ராஹிம், ரவி-உஷ்-ஷானின் மூத்த மகனவர்; முகமது, முகமத் ஷாவுக்கு முன்னர் அரசாண்ட இருவரின் உடன் பிறந்தாருமாவர். ஆனால் அப்துல்லாகானைத் தில்லிக்கு அருகில் உள்ள ஹாஸன்புரியில் பேரரசுப்படையினர் தோற்கடித்து விட்டனர். இப்ராஹிம் சிறைப்பட்டார் (1720). அப்துல்லாவின் சிறைவாசம் 1722-ல் முடிந்தது. பின் அவரும் கொல்லுண்டார். சையது சகோதரர்கள் பரூக்சையரை நடத்திய முறையை முன்னரே கண்டோம். அவர்கள் உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்; அரசியலில் திடீரென்று முளைத்தவர்களல்லர். பேரரசருடைய கட்சியைத் தழுவுமுன் பேரரசுக்கு அவர்கள் நன்கு பணியாற்றி வந்தனர். துரானியர் அவர்களிடம் பகைமை பூண்டமை காரணமாக சையதுக்களை நாம் குறை கூற முடியாது. நிஸாம்-உல்-முல்க்கூட அப்துல்லாவின் வீழ்ச்சிக்குப் பிறகு அவர் உயிரைக்காப்பாற்ற முயன்றார் என்பதும் ஈண்டு நினைவுகூறத் தக்கது. அச்சகோதரர்களின் அன்பைப் பெற்றரதன் சந்த் என்ற கொடியவன் செய்த பணத் தொந்திரவினால் மக்களின் வெறுப்பை அவர்கள் ஏற்க நேர்ந்தது. அவர்கள்-குறிப்பாக ஹுசேய்ன்அலி

கற்றவர்களைப் பாராட்டினர். எளியோரிடம் கருணை காட்டினர். அப்துல்லாகான் மிகவும் பொறுமையும் அடக்கமும் சீவகாருண்யமும் உள்ளவர்.[1]

ஜான் சர்மன் என்பவர் அவரைச் சிறந்த அமைச்சர் என்று குறிப்பிடுகிறார். ஆனால் அவர் மூட நம்பிக்கைகள் நிறைந்தவராயும் இன்பத்திலே மிகுந்த நாட்டம் உள்ளவராயுமிருந்தார். சிற்சில காலங்களில் பொதுக்காரியங்களைக்கூட அவர் புறக்கணித்ததுண்டு. ஹுசெய்ன்அலி ஊக்கமும் உறுதியுமுள்ள செயலாளராக இருப்பினும் அவருடைய வெளி ஆரவாரத்துக்கு அளவில்லை. அவர், தமது கால் செருப்பின் நிழல் எவன் தலையில் பட்டதோ அவன், பேரரசன் ஆலம்கீருக்கு இணையானவன் என்று செருக்குடன் கூறியிருப்பது நோக்கற்பாலது.[2]

நிஸாம் உல் முல்க் : நிஸாம்-உல்-முல்க், அசிர்கார், பர்ஹன்பூர் ஆகிய இடங்களைக் கைப்பற்றிக்கொண்டதுடன் மத்திய மாகாணத்தில் காண்டுவாவிலும், பேராரில் பாலபூரிலும் வெற்றிகள் பெற்றுத் தக்கணத்தில் தமது அரசப்பிரதிநிதிப் பதவியை 1720-ல் வலிமையுறச் செய்துகொண்டார். மேலும், தில்லி அரசியலை கட்டுப்படுத்தவும் அவர் விரும்பினர். ஆகவே, 1722-ல் அவர் பேரரசில் முதலமைச்சராக நின்று குஜராத் நிர்வாகத்தையும் மேற்கொண்டார். ஆனால் அவர் அரசியலைச் சிறந்த முறையில் நடத்தவில்லை. மேலும் கடுமையான அளவுக்கு ஒழுக்கக் கட்டுப்பாடுகளை அவர் வற்புறுத்தியதால் அவரை பலர் வெறுத்தனர். அதனால் 1723-ல் அவர் அவுரங்கபாத்துக்குத் திரும்பிச் செல்லலானர். ஹைதராபாத்திலிருந்த முபாரிஸ்கான் என்ற அவரது கீழலுவலாளர் பேரரசரின் இரகசிய உத்தரவின் பேரில் அவரை எதிர்த்துச் சென்றார். ஆனால் ஷகர்கெல்டா (பேரார்) போர்க்களத்தில் தோல்வியுற்று இறந்தார். - இவ்வெற்றிக்குப் பின் நிஸாம் – உல்–

1. ஷி II. பக். 98.

2. ஷி பக். 101.

முல்க் 1725-ல் ஹைதராபாத்தைக் கைப்பற்றி அதையே தம் தலை நகராக்கிக் கொண்டார். அதே ஆண்டில் பேரரசர் அவருக்கு "அஸப் ஜா" என்ற பட்டத்தை அளித்ததுடன் அவர் தக்கணத்தின் அரசப் பிரதிநிதி என்பதையும் உறுதி செய்தார். (முகம்மதியக் கதைகளின்படி அஸப் ஜா என்ற சொல் மிகுதியான அறிவுத் திறமையைக் குறிக்கும்) நிஸாம் ராச்சியம் தொடங்கிய வரலாறு இதுவே.

மராட்டியர் அரசியலின் விரிவு : பாஜி ராவ் பேஷ்வாவாக இருக்கும் பொழுது (1720-40) மராட்டியர் அரசியலின் ஆக்கம், செயல் முறையில் தன்னுட்சி பெற்றிருந்த ஹைதராபாத்தையும் முகலாயப் பேரரசையும் மிகவும் பாதித்தது. புனைவை எதிர்த்துச் சென்ற அஸப் ஜா, பால்கெட் (தௌலத்தாபாத்துக்கு அருகில்) என்ற இடத்தில் 1728-ல் தோல்வியுற்றார். இங்கேதான் பாஜிராவின் வாழ்வின் சிறப்பு நிலை தொடங்குகிறது. அடுத்த ஆண்டில் பேஷ்வா, பண்டல்கண்டின் சத்ராசாலுக்கு உதவினார். சத்ராசால், (வாழ்க்கைக் காலம் 1650–1731) அவுரங்கசீபை எதிர்த்துக் கலகம் செய்தவர் என்பது ஈண்டு நினைவு கூறத்தகும். தம் ஆதரவிலிருந்த சத்ராசால் இறந்தவுடன் அவரது உயிலின்படியே பண்டல்கண்டின் மூன்றில் ஒரு பகுதியைப் பாஜிராவ் பெற்றார். 1731க்குள் குஜராத்தில் அவருடைய ஆட்சி பரவியது, 1735க்குப் பிறகு அது முகலாய ராச்சியத்தினின்று பிரிந்தது. அவர் 1732-ல் மாளவத்தின் மீது படையெடுத்தார். 1736-ல் பேரரசரே அவரை மாளவத்தின் உதவி ஆளுநராக (Deputy Governor) அமர்த்தினார். 1734-ல் மராட்டியர் இராசபுதனத்தின் மீது படையெடுத்தனர். 1737-ல் பேஷ்வா, தில்லியை நோக்கி விரைந்து, முகலாயப் படையை வென்று, வழியில் கொள்ளையடித்துக்கொண்டே மீண்டார். அவருடைய போர்த்திறமையைக் கண்டு வியந்த பேரரசர் அவரை மாளவத்தின் ஆளுநராகவே அமர்த்தியதுடன் ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை அவருக்கு அளிக்கவும் இணங்கினார். அதே

ஆண்டில் அஸப் ஜா பேரரசின் முதலமைச்சராகத் திரும்ப வும் ஆயினர். அவர் அடுத்த ஆண்டில் (1738) போபால் என்னுமிடத்தில் பாஜிராவிடம் தோற்ருர்; அதன் விளை வாக மிகவும் இழிவான உடன்படிக்கையில் கையொப்ப மிட்டு மராட்டியருக்கு மாளவம் முழுவதையும் அளிக்க நேர்ந்தது. இவ்வண்ணம் சிவாஜிக்கு அடுத்தபடியாக புக ழோடு தலைசிறந்த பேஷ்வா " பட்டுப்போகவிருந்த மரத் தின் (முகலாயப் பேரரசு) அடியிற்ருக்கினர் ". முடிவாக 1743-ல் பேரரசர், மாளவத்தைப் பாலாஜி ராவுக்கு வழங்கினர்.

நாதிர்ஷாவின் எழுச்சி : 1722-ல் பாரசீக ஸபாவி (Safavi) குலம், காந்தாரத்திலிருந்த கில்ஸாயிகள் என்ற ஆப்கானியரால் அழிவுற்றது. நாதிர் குலி (வியத்தக்க பெரியோனின் ஆண்டவனின் அடிமை) என்ற கொரா சான் நாட்டுத் துருக்கிய இடையனெருவன் பாரசீகனுக மாறி (பிறந்த ஆண்டு 1688) வட பாரசீகத்தின் ஒரு மூலை யில் வாழ்ந்து வந்த ஸபாவி குல II-ம் ஷா தமஸ்ப் என்பா ரின் கட்சியைத் தழுவி, 1727-ல் கொராசானைக் கைப்பற்றிக் கொண்டான் ; 1730-ல் ஆப்கானியர் ஆதிக்கத்திலிருந்து பாரசீகத்தையும் மீட்டான்; 1732-ல் அவன் ஷாவை நீக்கி விட்டு அவருடைய குழந்தையை அரியணையிலமர்த்தித் தானே அரசப் பிரதிநிதியாக அரசியல் நிர்வாகத்தை மேற்கொண்டான். அக்குழந்தையே II-ம் ஷா அபாஸ், நாதிர்குலி, துருக்கியும் ருஷ்யாவும் முன்னரே கைக் கொண்டிருந்த பாரசீக மாகாணங்களை மீண்டும் கைப்பற்றி அரசியலை முன்னிலைமைக்கும் கொண்டு வந்தான். 1736-ல் குழந்தை அரசன் இறக்கவே அவனே பாரசீக மன்னனுக முடிசூட்டிக்கொண்டு சுன்னி மதத்தை அரசியல் சமயமாக் கினன். 1738-ல் காந்தாரம் அவன் வசப்பட்டது.

இந்தியப் படையெழுச்சி (1738-9): காந்தாரத்தி லிருந்து வெளியேறிய ஆப்கானியர்களுக்குக் காபூல் மாகா ணத்தில் ஆதரவு அளிக்கக்கூடாது என்று கூறி முகலாயப் பேரரசர் முகம்மது ஷாவுக்கு மூன்று தூதுக் குழுவினரை

அடுத்தடுத்து நாதிர்ஷா அனுப்பினுர். ஆனுல் ஷாவை மகிழ்விக்கப் பேரரசர் யாதும் செய்யவில்லை. ஆகவே நாதிர்ஷா முகலாயப் பேரரசின் மீது படையெடுத்து 1738-ல் காபூல், பெஷாவர் ஆகிய இரண்டையும் அடுத்த ஆண்டில் லாகூரையும் கைப்பற்றினுர். பல முகலாயப் பெருஞ் செல்வர்கள் அவருடைய படையெழுச்சிக்கு உதவியாயிருந்தனர். அவர் பேரரசருக்கு ஒரு கடிதம் எழுதினுர். அதிலிருந்து நாதிர்ஷா, தம்மைப் பேரரசர் மானக்கேடு அடையச் செய்ததாகவும் காபூலிலிருந்து பேரரசருக்கு அனுப்பப்பட்ட தூதனைக் கொன்றதாகவும் ஆகவே பேரரசரிடமிருந்த தகுதியற்ற மதியுரைஞர்களைத் தண்டிப்பதே தம் நோக்கமென்றும் அறிந்து கொண்டார். நாதிர்ஷாவை எதிர்த்துப் படையைச் செலுத்த எந்த முகலாயப் பெருஞ்செல்வரும் விரும்பவில்லை. அஸப் ஜா கூட மறுத்து விட்டார். எனவே முகம்மது ஷாவே படைத்தலைமை தாங்கினுர். கர்னுல் என்ற இடத்தில் (பானிப்பட்டுக்கும் தானேசுரத்துக்கும் இடையில்) நடந்த முடிவான போரில் முகலாயப் படையைப் பகைவர் சித்திரவதை செய்தனர். பேரரசர், அஸப் ஜாவை நாதிர்ஷாவிடம் அமைதி உடன்பாட்டைக் கோரி அனுப்பினுர். வெற்றி வீரர், தம்முடன் முன்னர் பேரரசர் நடந்துகொண்ட விதத்தைக் கண்டித்து, பேரரசுக் கருவூலச் சாவியைப் பெற்றுக்கொண்ட பின்பு பேரரசரைத் தொடர்ந்து தில்லிக்குச் சென்ருர். (மார்ச், 7.) பாரசீக வீரர் சிலர் தாக்குண்டதாலும் நாதிர்ஷா இறந்தார் என்ற பொய்ச் செய்தி பரவியதாலும் அவரைப் பின்பற்றியவர்களில் 900 பேர் கொலையுண்டனர். மேலும் நாதிர்ஷா மீது கற்கள் வீசப்பெற்றன. இவற்ருல் மனக்கொதிப்படைந்த அவ்வீரர் கருணையின்றி பகைவர் யாவரையும் கொன்றழிக்குமாறு ஆணையிட்டார். ஏறத்தாழ 30,000 மக்கள் இறந்தனர். அஸப் ஜாவின் மூலம் பேரரசர் வேண்டுகோள் விடுத்ததின் விளைவாக அக்கொலை நின்றது. முகம்மதுஷாவிடமிருந்தும் தில்லி மக்களிடமிருந்தும் மிகுதியான பொருளை நாதிர்ஷா பெற்ருர். அவர் திறையாகப் பெற்றவை வருமாறு : 15 கோடி ரூபாய்,

மயிலாசனம் (இப்பொழுது அது காணப்படவில்லை. அதைப் போன்ற வேறொன்று செய்யப்பட்டு அது இன்று தெஹிரானில் உள்ளது), கோஹினூர் முதலிய விலை உயர்ந்த பொருள்கள், "1000 யானைகள், 7000 குதிரைகள், 10,000 ஒட்டகங்கள், 100 பேடிகள், 130 எழுத்தாளர்கள், 200 சிற்பிகள், 100 கொற்றர்கள், 200 தச்சர்கள்."* அஸப் ஜாவிடமிருந்து மட்டும் 1½ கோடி ரூபாய்களை வெற்றி வீரர் கவர்ந்தார். நாதிர்ஷாவை மயக்கிய நூர் பாய் பாரசீகத்துக்கு அனுப்பப்படாமல் தப்பினாள். வெற்றி வீரர் சிந்து ஆற்றுக்கு அப்பால் உள்ள இடங்களைத் தம் இராச்சியத்துடன் இணைத்துக்கொண்டார்; அவுரங்கசீபின் மகன் காம்பக்ஷின் பேர்த்தியைத் தம் இளைய குமாரனுக்கு மணம்புரிவித்தார்; ஜாகீர் வழங்கும் முறையையும் மான் சப்தாரி முறையையும் கைவிட்டு அலுவலாளர்கட்குப் பண மாக ஊதியம் தருமாறும் அவர்கள் படைகளை வைத்துக் கொள்வதைத் தடுக்க வேண்டுமென்றும் முகம்மதுஷா வுக்கு அறிவுரை கூறினார். மேலும் அஸப்ஜாவின் தந்திரத் தையும் எதற்கும் துணிந்துள்ள அவர் தன்மையையும் பேரரசருக்குச் சுட்டிக் காட்டினார்; முகம்மதுஷாவுக்குக் கீழ்ப்படிந்து நடக்குமாறு முகலாயப் பெருஞ்செல்வர்களுக் குக் கூறினார்; பேரரசரிடம் கண்ணியமான முறையில் நடந்துகொள்ளுமாறு பாஜி ராவுக்கு ஆணையிட்டார். தம் விருப்பம் நிறைவேறியவுடன் நாதிர்ஷா, 1739-ஆம் ஆண்டு மே மாதம் ஐந்தாம் நாள் (தில்லியில் 2 மாதங்கள் தங்கிய பிறகு) பாரசீகத்துக்குத் திரும்பினார்.

நாதிர்ஷாவின் பெருமை: நாதிர்ஷா, 1740-ல் பொக்காராவையும் கீவாவையும் கைப்பற்றிக் கொண்டபின் ஆட்சியின் கொடுமுடியை அடைந்தார். ஆனால் அடுத் தடுத்து கிடைத்த அவரது வெற்றி அவரைக் கெடுத்தது. ஆப்கானியர் கையிலிருந்து அவரால் விடுவிக்கப்பட்ட அதே மக்கள் அவரை இரத்தவெறி பிடித்த கொடுங் கோலன் என்று வெறுக்குமாறு அவருடைய எஞ்சிய வாழ்

* ஷெ பக்கம் 363.

நாட்களில் அவர் கொடுமையும் பேராசையும் கொண்டு விளங்கினர்.[1] 1747-ல் கொராசானில் அவர் கொலையுண்டார். இந்தியாவின் பெருநிதியும் அவரை ஒரு கஞ்சனுக்கியது. பாரசீகத்தில் மூன்று ஆண்டுகட்கு வரி விதிக்கக் கூடாது என்று தில்லியிலிருந்து உத்திரவு பிறப்பித்த அவரே அந்த ஆணையை நீக்கிவிட்டார். தமது பெருஞ் செல்வத்தை அவர் தம்நாட்டைத் திருத்தி அமைப்பதற்குப் பயன்படுத்தினரில்லை. ஷீயா மதத்தை ஒழித்துக்கட்டவே அவர் முயன்ருர். அரசியல் நிர்வாகத்தையும் அவர் ஒழுங்காகச் செய்தாரில்லை, ஆனல் அவர் ஒரு திறமைவாய்ந்த படைத்தலைவர் என்பதை யாரும் மறுக்க முடியாது. சிறந்த தந்திரசாலியான அவரிடம் ஊக்கம், வீரம், உறுதி முதலிய பண்புகள் அமைந்திருந்தன, சாபாவியர் இராச்சியத்தை விட இவரது பேரரசு மிகவும் விரிவுற்றிருந்தது. தில்லி அரியணையை அடைய அவர் எண்ணுத வரையில் அவரை மதியூகி என்றே கூற வேண்டும். கப்பற் படையின் சிறப்பை உணர்ந்த முதல் பாரசீக அரசர் இவரே. "இடையர் சாதியிற் ருேன்றிய அவர், தமது இராணுவத் திறமை காரணமாக, அப்கானியர், துருக்கியர் முதலிய பல படையெடுப்பாளரிடமிருந்து ஈரானை விடுவித்ததுடன், தம் பேரவா நிறைவேறப்பெற்று சைரஸ், நோஷிர்வான், ஷா அபாஸ் முதலியோரின் அரியணையில் அமர்ந்த பெருமையைப் பெற்ருர்........... ஆசியாவின் சிறந்த வெற்றி வீரர்களில் இறுதியானவர் அவர்........... அவர் இந்தியா, பொக்காரா, கீவா முதலிய இடங்களில் வெற்றிகள் பெற்றவுடனேயே இறந்திருப்பின், எக்காலத்திலும் போற்றப்படும் சிறந்த தேசீய வீரராக அவருடைய புகழ் நிலைத்திருந்திருக்கக் கூடும்.[2] "

முகலாயப்பேரரசின் நிலைமை (1739): நாதிர்ஷா முகலாயரின் நாடுகளிற் சிலவற்றைக் கைப்பற்றிக்கொண்டாரென்பதை முன்னரே கண்டோம். அவரது படை

1. *112*, II. பக். *265*.
2. ஷெ பக். *255*, *271* & *274*.

யெடுப்பினுல் பஞ்சாப் அழிந்தது. பாதுஷாவும் அவரைச் சேர்ந்த பிரபுக்களும் திறமை வாய்ந்தவர்களல்லர். ஆதலால் பேரரசைத் திருத்தி அமைப்பது இயலாத செயலாயிருந்தது. அச்செயலே மேற்கொள்ளக்கூடிய ஆற்றல் அஸப்ஜா ஒருவரிடம் தான் இருந்தது. ஆனுல் அவரோ, தமக்குக் கிடைத்த வாய்ப்பினைத் தம் நலத்துக்கு பயன் படுத்திக்கொள்ளக் கூடிய அரச தந்திரி. பேரரசருக்கோ பொதுக்காரியங்களில் ஈடுபடவேண்டுமென்ற மனப் பான்மை இல்லே. நாதிர்ஷாவின் அறிவுரையும் அவரது தன்மையை மாற்றவில்லே. அஸப்ஜா 1740-ல் தில்லியை விட்டுச் சென்ருர். முகமது ஷாவின் எஞ்சிய ஆண்டுகளில் அரசியல் மேலும் மேலும் தாழ்நிலேயை அடைந்து வந்தது. பேரரசின் சிதைவு, மராட்டியருக்கு நல்வாய்ப்பை அளித்தது. அவர்கள் வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா ஆகிய பகுதிகளே நோக்கித் தமது கருத்தைச் செலுத்தலாயினர்.

வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா : வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா பகுதிகளில், அரசப் பிரதிநிதியாக இருந்த ஜாபர்கான் 1727-ல் இறந்த பின்பு அவருடைய மருமகன் ஹுஜா வுதீனும், 1739-ல் அவர் இறந்தபின், சாராபிரஸ் கான் என்ற அவரது மகனும் ஆட்சி செலுத்தி வந்தனர். அம்மூன்று பகுதிகளிலும் அரசப் பிரதிநிதிக்கு அடங்கிய மூன்று ஆளுநர்கள் (கவர்னர்கள்) பணியாற்றினர். பீஹார் கவர்னரான அலிவர்திகான், சாராபிரஸ்கானேத் தோற்கடித்துக் கொன்று 1740-ல் மேற்கூறிய மூன்று மாகாணங்கட்கும் தாமே நவாப் ஆகினுர். ஒரு கோடி ரூபாய் பரிசு கொடுத்துத் தமது செயலேப் பேரரசர் ஒப்பு மாறு செய்து கொண்டார்.* அவருடைய பகைவரில் ஒருவன், வங்காளத்திற் படையெடுக்குமாறு நாகபுரி ரகூஜி பான்ஸ்லேவை வேண்டினுன். ரகூஜியின் முதலமைச்சரான பாஸ்கர ராம், அலிவர்திகானே முறியடித்து, 1742-ல் மேலே வங்காளம் முழுவதையும் கைப்பற்றிக் கொண்டார்.

* 88, I பக். 71-2.

அவரது படை வீரர்கள் நாட்டைக் கொள்ளையிட்டு மக்களைச் சித்திரவதை புரிந்தும், கற்பழித்தும், எரியூட்டியும் துன்புறுத்தினர். கல்கத்தாவைக் காப்பாற்றும் பொருட்டு வெற்றி வீரரால் முற்றும் நிறைவேற்றப் பெறாத "மராட்டிய அகழ்" தோண்டப்பட்டது. இறுதியில் நவாப், படை யெடுப்பாளரைப் பின் வாங்கும்படி செய்தார். 1743-ல் வங்காளத் தலைநகரான மூர்ஷிதாபாத் வரையில் சென்ற ரகூஜியை, பீஷ்வா பாலாஜிராவின் உதவியைக் கொண்ட அலிவர்திகான் தோற்கடித்தார். இந்த பாலாஜி ராவ், 1740 முதல் ரகூஜியின் பகைவராயிருந்ததால் பேரரசருடன் முன்னர் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தார். பாலாஜி–ரகூஜி பகைமை பின்னர் சாஹூவின் முயற்சியால் முடிவுற்றது. 1744-ல் பாஸ்கர்ராம் மீண்டும் வங்காளத்திற் படையெடுத்துப் பல அழிவு பாடுகளை விளைவித்தார். அக் கொடுமை காரணமாக அவரும் அவரது அலுவலாளரும் கொல்லுண்டனர். அடுத்த ஆண்டில் ரகூஜி, கட்டாக்கைக் கைப்பற்றிக் கொண்டு ஒரிஸ்ஸாவின் பெரும்பாலான பகுதிக்குத் தலைவரானார்.; பர்த்வானையும் சூறையாடினர்; பீஹாரின் மீது படையெடுத்துவிட்டு வங்காளம் திரும்பினர்; மூர்ஷிதாபாத்தின் சுற்றுப்புறத்தைக் கொள்ளையிட்டு அழித்தார். ஆனால் அடுத்தபடியாக அவருக்குக் கிடைத்தது தோல்வி தான். 1746-ல் மராட்டியர் வங்காளத்திலிருந்து பின்னேற வேண்டியதாயிற்று. ஆயினும் அவர்கள் ஒரிஸ்ஸாவில் நிலைபெற்றிருந்தனர். இரு சாராருக்குமிடையே போராட்டம் நின்றபாடில்லை. 1749-ல் நவாப், கட்டாக்கை மீண்டும் பெற்று மீண்டும் இழந்தார். 1750-ல் மராட்டியர் மறுபடியும் வங்காளத்தில் படையெடுத்தனர். அடுத்த ஆண்டில் நவாப்புடன் அமைதி உடன்படிக்கை உண்டாகியது. இதன்படி வங்காளம் பீஹார், ஒரிஸ்ஸா என்ற மாகாணங்களில் கிடைக்கும் சவுத், சர்தேஷ்முகி என்றவரிகட்குப் பதிலாக ஒரிஸ்ஸாவின் பெரும் பாகத்தையும் நவாப், விட்டுக்கொடுத்தார்.*

---

* 21, அத்தியாயம் III.

அலிவர்திகான், 1756-ல், தம் எண்பதாவது வயதில் இறந்தார். அவர் பதவியைப் பெற்ற அவருடைய பெயரனை சிராஜ் - உத் - தௌலாவின் காலத்தில் (1757) பிளாசிப் போர்க்களத்தில் வெற்றிபெற்ற ஆங்கிலேயரின் ஆதிக்கம் வங்காளத்தில் நிலைத்துவிட்டது. அவ் வரலாறு பின்னர்ப் பேசப்பெறும்.

முகம்மது ஷா : இளைஞரான முகம்மது ஷா கல்வியறிவு அற்றவராயிருந்த போதிலும் உடலழகு வாய்ந்தவர். அருகில் ஒரு காதலியையும் கையில் சாராயக் குப்பியையும் கொண்டு வாழ அவர் தவறியதில்லை. அவரது காம வெறியும் அபினிக் களிப்பும் அவருடைய உடல் நலத்தைக் கெடுத்தன. தில்லியை விட்டு அவர் நீங்கி இருந்தது இரண்டே தடவைகள் தான். அவர், பொதுக் காரியங்களைப் புறக்கணித்து, உவளகத்திலும் பூங்காக்களிலும், விலங்குப் போர்க் காட்சிச்சாலைகளிலும் தமது காலத்தைக் கழித்து வந்தார். சையதுக்களிடமிருந்து விடுதலை பெற்ற பின் அவர் 1732-வரை கோக்கிஜி என்ற தூய்மை அற்ற பெண் ஒருத்தியிடம் சிக்கிக் கொண்டிருந்தார். அவர் ஆட்சிக் காலம் முழுவதிலும் அவர் பிறர் வசப்பட்டே இருந்தார். அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்ட பெண்களும் பேடிகளும் அவருடைய குறைபாடுகளைத் தம் நலத்துக்குப் பயன்படுத்திக் கொண்டு வந்தனர். 1720-ல் ஜஸியா வரியை அவர் நீக்கியதால் அரசியலார் 4 கோடி ரூபாய் வருமானத்தை இழந்தனர். "1723-ல் இவ்வரியை மறுபடியும் விதிக்க நிஸாம்-உல்-முல்க் முயன்றார். முயற்சி பயன்பெறவில்லை ; 1725-ல் மீண்டும் அதனை விதிக்க ஆணை பிறந்தது. ஆனால் ஆணை நடைமுறைக்கு வரவில்லை. அதன் பின்னர் அக்கொடிய வரி விதிப்பதைப் பற்றிய பேச்சே இந்தியாவில் எழவில்லை."*

1721-ல் மார்வார் அஜித்சிங் கலகம் செய்தார். ஆனால் விரைவில் அரசரிடம் அன்பு பூண்டு அவருக்குக் கீழ்ப்படிந்

* ஷி II பக். *103.*

தார். அவருடைய இரண்டாவது மகன், 1724-ல் அவரைக் கொலை செய்தான். அக்கொலைக்குக் காரணம் பின்னவரின் மனைவியை முறையின்றி அஜித்சிங் கூடியமைதான் என்று கூறப்படுகிறது. கொல்லுண்டவரின் மூத்த மகன் அபை சிங், பின்னர் பட்டமேற்றார். ஜெயபுரியின் சவாய் ஜெயசிங், ஜாட் கலகக்காரரை அடக்கி வெற்றி பெற்றார். 1721-ல் தற் கொலை புரிந்து கொண்ட ஜாட் தலைவர் சூரமனின் உற வினரான பதான்சிங் என்பாரே, தில்லிக்கு அடங்கியிருந்த பாரத்புரி (இராசபுதனம்) இராச்சியத்தை அமைத்தவர்.

ஜெயபுரி: தமது பதினெட்டாவது வயதில் ஜெயபுரி அரியணையிலமர்ந்த சவாய் ஜெயசிங், (பி. 1699–இ. 1743) ஒரு போர் வீரர் மட்டும் அல்லர்; அறிவுத் திறமையும் வாய்க்கப் பெற்றவர். வங்காளத்திலிருந்து ஒருவரும் ஜெர்மனியினின்று இருவருமாக, மூன்று ஏசுசங்கப் பாதிரி களின் உதவியால் நான்கு வான்நிலை ஆராய்ச்சிக் கூடங் களை ஏற்படுத்தி அவர் விஞ்ஞான வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினர். அவர் மாளவத்தின் கவர்னராக இருந்த பொழுது மராட்டியரிடம் தோல்வியுற்றார். பாஜிராவுடன் அவர் நெருங்கிய தொடர்பு கொண்டதுடன் அவருடன் அமைதி உடன்பாடு செய்து கொள்ளப் பேரரசரையும் தூண்டினர். அவரை மார்வாரின் அபைசிங் (1724–49), 1741-ல் தோற்கடித்தார். ஜெயசிங், தம் வாழ்நாள் இறு தியில் காம விகாரம் பிடித்துக் குடிகாரனுக மாறினர். இவர் இறந்த பின் ஏழாண்டுக் காலம் வரை இவர் மக்களான ஈஸ்வர சிங்குக்கும் (1743–50) மாதவ சிங்குக்கு மிடையே போராட்டம் நிகழ்ந்தது. இவர்கட்கு மராட்டியர் மாறி மாறி உதவினர். இறுதியில் ஈஸ்வரிசிங் தற்கொலை புரிந்து கொண்டார் (1750). அவரை அடுத்துப் பட்டமேற்ற மாதவ சிங், தம்முடன் கூட்டுறவு அமைத்துக் கொண்டவர்களி டமே பகைத்துக் கொண்டு அடுத்த ஆண்டில் அவர்களில் 1500 பேரை ஜெயபுரியில் கொலை செய்தார்.

ரோஹில்கண்டு கலகம்: 17'ம் நூற்றுண்டில் உட் குடியேற்றத்தின் விளைவாக ஷாஜஹான்புரி, பரூக்காபாத்

ரோஹில்கண்டு ஆகிய ஆப்கானியக் குடியேற்றப் பகுதிகள் ஏற்பட்டன. கிழக்கு ஆப்கானித்தானத்திலிருந்து வந்த முகம்மதுகான் பங்காஷ் என்பார், 1714'ல், பேரரசர் பரூக்சையரின் பெயரைக் கொண்ட பரூக்காபாத்தை நிலை நாட்டினார். அவர் அலகாபாத், மாளவம் முதலிய இடங்களில் ஆட்சி செலுத்தியதுடன் 'நவாப்' பட்டமும் பெற்றிருந்தார். 1743'ல் அவர் இறந்த பின் அவர் மகன் பரூக்காபாத்தின் நவாப் ஆனார். ஆப்கானியக் குடியேற்றப் பகுதிகளில் மிகப் பெரியது ரோஹில்கண்டு. அப்பகுதியின் முதற் பெயர் கதீர். மலைநாடான ஆப்கானித்தானத்தின் மக்களான ரோஹில்லர் அங்குக் குடியேறியதால் அது ரோஹில்கண்டு எனப் பெயர் பெற்றது. அவ்வரசை ஏற்படுத்திய அலி முகம்மதுகானின் குலத்தைப்பற்றித் தெளிவாக அறிதற்கில்லை. அவர் இந்திய ஜாட் வகுப்பினர் என்ற ஒரு கருத்தும் நிலவுகிறது. அவருடைய வளர்ப்புத் தந்தை காந்தாரத்தைச் சேர்ந்த ஒரு ஆப்கானியராவர். அவர், 1721-ல் இறந்த பின் அலி, பெரில்லி மாவட்டத்தில் (உத்தரப் பிரதேசம்) தம் நிலையை வலிமையுறச் செய்து கொண்டு 1727க்குப் பிறகு சிறப்பான நிலையை எய்தினார். பத்து ஆண்டுக் காலத்தில் நவாப் பட்டத்தைப் பெற்றார். நாதிர்ஷாவின் படை யெடுப்பின் பின்னர் அலி முகம்மதுவின் ஆதிக்கம் விரைவில் உயர்ந்தது. அவர் தம்மைத் தண்டிப்பதற்காகப் பேரரசின் முதலமைச்சர் 1741'ல் அனுப்பிய படைத்தலைவனை முறியடித்ததுடன் அண்மையிலிருந்த சில மாவட்டங்களையும் கைப்பற்றிக் கொண்டார். அவரை அம் முதலமைச்சரே, ரோஹில் கண்டின் கவர்னராக்கினார். அடுத்த சில ஆண்டுகளில் அலி, மேலும் சில இடங்களைக் கைப்பற்றிக் கொண்டதுடன் ஷெர்ஷாவைப் போலத்தாமும் பேரவாவுடன் செயலாற்றலாயினர். 1745-ல் பேரரசர், அக்கலகக்காரரை எதிர்த்துச் செல்ல நேரிட்டது. அலி, அடிபணிந்ததால், 4000 குதிரை வீரருக்குத் தலைவரான மான்சாப்தாராகச் செய்து அவரை அரசியலார் சர்ஹிந்துக்கு அனுப்பினர். ஆனால் பின்னர் அகமதுஷா அப்தலியின் படையெழுச்சிக்

காலத்தில், அலி ரோஹில்கண்டுக்குத் திரும்பிச்சென்று மீண்டும் அதன் தலைவரானர். அதே ஆண்டில் (1748) அவர் வாழ்நாளும் முடிவுற்றது.

அகமது ஷா அப்தலி: அப்தலி வழியினனுன அகமதுகான் என்ற ஆப்கானியன், 1737-ல் நாதிர்ஷாவால் கைதியாகப் பெற்ருன், ஆனல் விரைவில் தன் தலைவனின் நன்மதிப்பைப் பெற்று முன்னணிக்கு வரலானன். அவனைப்பற்றி நாதிர்ஷா குறிப்பதாவது :— "அகமது அப்தலியைப் போல ஆற்றலிலும் நற்பண்பிலும் சிறந்த ஒருவனை ஈரான், துரான், இந்துஸ்தானம் எங்கிலுமே நான் கண்டதில்லை." 1747-ல் நாதிர்ஷா கொலையுண்ட பின் தில்லியில் கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களில் ஒரு பங்கை அகமது பெற்ருர். கோஹினூர் வைரமும் அவருக்குக் கிடைத்தது. பின்பு அவர் கொராசானிலிருந்து காந்தாரத்துக்குச் சென்ருர். வழியில் அவர் அரசராக முடி சூட்டிக்கொண்டு " துரானி பாதுஷா " என்ற பட்டத்தையும் பெற்ருர். காந்தாரத்தையும் காபூலையும் கைப்பற்றிக்கொண்ட பின் ஆப்கானித்தானத்தின் தலைவராக அமர்ந்தார். அப்பொழுது பஞ்சாபின் நிலை அவரைப் படையெடுக்கத் தூண்டியது. பஞ்சாபில் 1713 முதல் 1726 வரை அப்துஸ் சமாத்கானும் பின்னர் 1726 முதல் 1745 வரை அவர் மகன் ஸக்ரயா கானும் கவர்னர்களாகப் பணியாற்றினர். பின்னவருக்குப் பிறகு ஹயதுல்லாகான் என்பார் (ஷா நவாஸ் கான் என்ற பெயரும் அவருக்கு உண்டு) தம்முடைய அண்ணனுக்கு எதிராகத் தாமே தலைமைப்பதவிபெற விரும்பி முறையற்ற வகையில் செயலாற்றி வந்தார். தமது நிலையை வலிமையுறச் செய்துக்கொள்ள அகமதுஷா அப்தலியுடன் கூட்டுறவு அமைத்துக்கொண்டார். ஆனல் அப்தலி, பின்னர் அவரைப் பொருட்படுத்தவில்லை; 1747-ல் பெஷாவரையும் லாகூரையும் கைப்பற்றிக்கொண்டு அகமதுஷா அப்தலி 1748-ல் சர்ஹிந்தையும் கைக்கொண்டார். முகலாயப்படை மிகத் தாமதமாக இயங்கி வந்தது.

சர்ஹிந்தின் அண்மையில் உள்ள மனுப்புரிச் சண்டையில் எதிர்பாராத ஒரு அதிர்வெடியால் அப்தலி முன்னேற முடியாமற் போக, அவன் ஆப்கானித்தானத்துக்குத் திரும்ப வேண்டி நேர்ந்தது. அச்சூழ்நிலை காரணமாக இளவரசர் அஹமது தலைமையில் இயங்கிய முகலாயப் படை வெற்றிபெற்றது. அடுத்த சில வாரங்களில் முகம்மதுஷா இறந்தார்.

———

பகுதி 4.

பேரரசர் அகமதுஷாவும் (1748 - 54) அப்தலியின் படையெடுப்புக்களும்

அகமதுஷா : 22-வது வயதில் அரியணை ஏறிய அகமதுஷா, கல்வியறிவில்லாதவர்; தீய நடத்தை உள்ளவர்; நம்பத்தகாதவர்; வீரமற்றவர்; ஒன்றுக்கும் தகுதியற்றவர், ஜவித்கான் என்று ஒரு பேடி அவரது அரசியலில் வன்மை பெற்றிருந்தான். இவனுடைய தூண்டுதலின் விளைவாக அரசர் குடிகாரனுகவும், காமுகனுகவும் இழிசெயல் புரிந்துவந்தார். மூன்று வயதுள்ள தம் மகனைப் பஞ்சாப் கவர்னராகவும், ஓராண்டுக் குழந்தையை அவருடைய உதவியாளராகவும் அமர்த்திய அகமதுஷாவின் செயல் அவருடைய சிறுபிள்ளைத் தன்மையை நன்கு காட்டுகிறது! அந்நிகழ்ச்சி 1753-ல் ஏற்பட்டது. முகம்மது ஷாவினுல் இராணியின் நிலைக்கு உயர்த்தப்பட்ட உதாம் பாய் (பேரரசரின் தாயார்) அரசியல் நிர்வாகத்தில் தலையிட்டும் பல கெடுதல்களைச் செய்து வந்தாள். அவள் ஒரு தாசிப் பெண். ஜவித்கானுடன் அவள் பழகத்தகாத முறையில் உறவுகொண்டாள். ஈரானியனும் ஷீயாமதத்தவனுமான சாப்தர்ஜங் 1739-ல் முதலமைச்சரானுர். அவரே அயோத்தியின் அரசப்பிரதிநிதியுமாயினர். அவருடைய நியமனம் பேரரசுக்குப் பல இடையூறுகளை அளித்த வரலாற்றைப் பின்னர் காண்போம்.

ரோஹில்கண்டும் பருக்காபாத்தும் (1749 – 52) : அலிமுகம்மது ரோஹில்லா 1748-ல் இறந்தார். அவருக்கு ஆறு பிள்ளைகள். பெய்ஸுல்லாகானும் அப்துல்லாகானும் அகமது அப்தலியுடன் காந்தாரத்திலிருந்தனர். மற்ற நான்கு குமாரர்களும் இளைஞர்கள். ஆகவே படைப் பயிற்சி பெற்றவரும் அரசியல் நிர்வாகத்திறமையாளரும் அலியின் உறவினருமான ரஹ்மத்கான் (பி. 1710-இ. 1774)

அரசியல் நடத்தும் பிரதிநிதியாகப் பணியாற்றி வந்தார். 1749-ல் ரோஹில்கண்டில் பேரரசின் ஆதிக்கத்தை ஏற் படுத்த எண்ணிய முயற்சி பயனுறவில்லை. சாப்தர்ஜங், ரோஹில்லரைத் தாக்குமாறு பரூக்காபாத் ஆப்கானிய ருக்கு ஆணையிட்டார். ரோஹில்லார், தம் நாட்டிற் படை யெடுத்தவர்களை முறியடித்துப் பரூக்காபாத்துக்குரிய பல இடங்களைக் கைப்பற்றிக்கொண்டனர் (1740). முகம்மதுகான் பங்காஷின் மகன் அகமத்கான் சாப்தர் ஜங்கைத் தோற்கடித்து அலஹாபாத்தை முற்றுகை யிட்டார். கோட்டை பிடிபடவில்லை. ஆயினும் நகரைக் கொள்ளையிட்டுத் தீயிட்டுப் பல மகளிரைச் சிறையிட்டனர். அயோத்தியின் மேல் வந்த படையெடுப்பு (1751) தடுக்கப் பட்டது. சாப்தர்ஜங் மராட்டியரின் உதவியையும் சுராஜ் மல் ஜாட்டினுடைய உதவியையும் கொண்டு ரோஹில் கண்டையும் பரூக்காபாத்தையும் வென்றார். அடுத்த ஆண்டில் அமைதி உடன்பாடு ஏற்பட்ட போதிலும் 1761-ஆம் ஆண்டுக்குப் பிறகே அவ்விரண்டு ஆப்கானியச் சிற்றரசுகளும் குறிப்பிடத்தக்க முறையில் தமது நிலை மையை ஒழுங்குப்படுத்திக் கொண்டன.*

மார்வார் (1749–52): மார்வார் அபைசிங் 1749-ல் இறந்தார். அவர் மகன் ராம்சிங்குக்கும் பக்த்சிங் என்பா ருக்கும் அரியணை யேறுவதில் போட்டி ஏற்பட்டது. பக்த் சிங்குக்குப் பேரரசரின் ஆதரவு இருந்தது. ஆனால் பேரரசரின் தளபதி ராம்சிங்கை முறியடிக்க முடியாமல் அவருடன் அமைதி உடன்பாடு செய்துகொள்ள நேர்ந் தது. அதனால் பேரரசுக்குப் பொருள் இழவும் இழிவும் ஏற்பட்டன. அதற்கு அடுத்த ஆண்டில் பக்த்சிங் பேர ரசரின் உதவியின்றியே ராம்சிங்கை முறியடித்துத் தாமே மார்வார் அரசரானார். இவ்வாறு இராசபுதனத்தில் தமது ஆதிக்கத்தை நிலைபெறுவிக்க முகல் அதிகாரிகளின் இறுதி முயற்சி வீணாயிற்று. 1752-ல் மார்வார், ஆச்மீரையும், 1753-ல் ஜெயபுரி, ரந்தம்போரையும் வென்றன. அத்

* ஷெ III பக். 10-15.

துடன் இராசபுதனம் முகலாயர் ஆட்சியினின்றும் விடுதலை அடைந்தது.

அப்தலியின் படையெழுச்சிகள் (1749-52) : பஞ்சாபில் சாப்தர்ஜங், அதன் கவர்னருக்கு எதிராகச் செய்த தந்திரங்களால் அப்பகுதியின் வலிமை குறைந்தது. ஆகவே அப்தலி 1749-ல் லாகூர் நோக்கிப் படையெடுத்தார். இது அங்கு அவர் நடத்திய இரண்டாவது படையெழுச்சியாகும். அவர், சியால்கட்டையும் மற்ற மூன்று இடங்களையும் கைப்பற்றியதால் மேற்செல்லாமல் திரும்பினர். 1750-ல் இவ்வாறு இந்தியாவின் ஒரு சிறுபகுதி அவர் வசப்பட்டது. இரண்டு ஆண்டுகட்குப்பின் அவர் பஞ்சாப் கவர்னர் முயின்-உல்-முல்கை முறியடித்ததால் பேரரசர் லாகூரையும் மூல்தானையும் அவருக்கு அளித்தார்.

சாப்தர்ஜங்கின் கலகம் (1753) : தம் ஆட்சிக்காலம் தொடங்கியே பேரரசருக்கும் சாப்தர் ஜங்குக்கும் இடையே ஒற்றுமை கிடையாது. முதலமைச்சரும் அயோத்தியின் அரசப்பிரதிநிதியுமான சாப்தர் ஜங்கின் அதிகாரத்தைக் குலைக்கவேண்டுமென்பதே பேரரசரும் ஜவித்கானும் கொண்டிருந்த நோக்கமாகும். அம் முதலமைச்சர், ஆப்கானியப் படையெடுப்பாளருக்குப் பகையாக மராட்டியரின் உதவியை நாடிக்கொண்டிருக்கையில், பேரரசர், லாகூரையும் மூல்தானையும் அப்தலிக்கு அளித்ததால் இருசாராருக்கு மிடையே நிலவிய வெறுப்பு மேலும் பெருகிற்று, சாப்தர்ஜங் ஜவித்கானைக் கொன்ருர்.* அது காரணமாக அவர் பேரரசரின் கடும் பகைவராஞர் (1752). அதே ஆண்டில் அஸப்ஜாவின் மூத்த மகனை காஸி - உத் - தீன், அவருடைய மாற்ருந்தாயினுல் ஔரங்காபாத்தில் நஞ்சு ஊட்டப்பட்டார். இவர் அது வரையில் தில்லி அவைக்களத்தில் சிறப்பு வாய்ந்த பிரபுவாகவும் அவர் தந்தையின் பிரதிநிதியாகவும் இருந்தார். அவருடைய மகனை 2-ஆம் காஸி-உத்-தீன் இப்பொழுது அதிகாரம்

---

* ஷெ *109*, பக். *196-201*.

பெற்ருர். அவர் ஒரு கவிஞர்; பன்மொழிப் புலவர்; மேலும் தலைமை பூண்டு செயலாற்றும் ஆற்றல் வாய்ந்தவர். ஆனல் இவ்வளவு சிறந்த பண்புகளும் தலையோங்காதபடி அவரிடம் ஒழுக்கமின்மையும் அளவற்ற பேராசையும் பணத்தில் எல்லையற்ற அவாவும், கொடுமையும் நிறைந் திருந்தன. தில்லி வரலாற்றிலேயே அவர் ஒரு கோர அரக்கனுக விளங்கினர்.* அவர் சாப்தர்ஜங்கை ஒழிக்க வேண்டிப் பேரரசரின் பக்கம் சேர்ந்தார். 1753-ல் முதல் அமைச்சர் கலகத்தைத் தொடங்கினர். தொடர்ந்து ஆறு மாதங்கள் தில்லி முழுவதும் கொள்ளை யும் குருதிக்களரியுமாய்க் கிடந்தது. ஷியாவான சாப்த ருக்கு சுராஜ்மல் உதவினர். சுன்னி மதத்தைச் சார்ந்த காஸி-உத்-தீனுக்கு நஜீப்-கான் ரோஹில்லா உதவினர். ஆதலின் இந்தப் போர், ஷியா-சுன்னிப் போராக மாறி யது. ஆனல், முடிவான வெற்றியை ஒருவரும் பெற வில்லை. இறுதியில் அமைதி உடன்பாடு ஏற்பட்டது. சாப்தர் அயோத்திக்குச் சென்று இறந்தார். அவர் மகன் ஷுஜா-உத்-தௌலா அவரை அடுத்து அயோத்தியில் பட்டத்துக்கு வந்தான்.

பேரரசர், பதவியினின்று நீக்கப்படுதல் (1754): சுராஜ் மல்லுக்கு எதிராகச் சென்ற காஸி - உத் - தீனினு டைய படை யெடுப்பினல் சுராஜ் மல்லின் பெருமை உயர்ந்தது. காஸி - உத் - தீனுக்கு மராட்டியரின் உதவி இருந்தும் அது பயனில்லாமற் போயிற்று. பேரரசர் சுராஜ் மல்லுக்கு உதவ முயன்றதைக் கண்ட காஸி - உத் - தீன் வெகுண்டு எழுந்தார். அவர் படையுடன் தில்லிக்குச் சென்று பேரரசரைக் கட்டாயப்படுத்தித் தாமே முதல் அமைச்சரானர். அடுத்தபடியாக அவர் பேரரசரையே விலக்கி விட்டு ஜஹந்தர் ஷாவின் மகனை IIம் ஆலம்கீர் என்பவரை அரியணையில் ஏற்றினர். அதனை அடுத்து அஹமதுஷாவையும் அவரது அன்னையையும் குருடர்க ளாக்கினர்.

---

* ஷெ 88, பக். 447.

பகுதி 5.

II'ம் ஆலம் கீர் (1754 - 9); II'ம் ஷா ஆலம் (1759 - 1806); அப்தலியின் படை யெழுச்சிகள் (தொடர்ச்சி)

II'ம் ஆலம்கீர்: இவர் ஐம்பத்தைந்தாவது வயதில் பட்டமெய்தினர். 1713'ல் பரூக்கியர் இவர் தந்தையைக் கீழ்ப்படுத்தி மேலே வந்த போது இவரும் மிக்க துயருற்ரூர். சில பண்புகளில் இவர் அவுரங்க சீப்பைப் பின்பற்றிஞர்; கல்வியிலும் சமய ஒழுக்கங்களிலும், அவரைப் போலவே மிகவும் ஈடுபட்டார். ஆனல் இவர் சிறந்த செயலாளர் அல்லர்; தம் கருத்தை எல்லாம் உவளகத்தில் நாட்டி இருந்தார்; அரசியல் துறையில் யாதும் அறியார்; தமக்கு இளமையில் கிட்டாத பல இன்பங்களைத் துய்ப்பதிலேயே மனம் செலுத்திஞர். சுருங்கக் கூறின் ஓரளவுக்கு அவர் சுறு சுறுப்பாக இருந்தார். முயற்சி, நிதானம், மதப் பற்று முதலியன அவரிடம் இருந்தன; ஆடல் பாடல் களில் அவருக்கு விருப்பமில்லை; வயது முதிர்ந்த நிலையில் உவளக இன்பத்தையே பெரிதும் நாடிஞர்.

நான்காவது அப்தலிப் படை யெழுச்சி (1757): அஹமது அப்தலியால் முறியடிக்கப்பட்டுப் பின்னர் அதிகாரத்தில் அமர்த்தப்பட்ட முயின் - உல் - முல்க் என்ற பஞ்சாப் கவர்னர் 1753'ல் இறந்தார். அவரை அடுத்து அவரது சிறு குழந்தை பட்ட மெய்திஞன். முக்லானி பீகம் என்ற அக்குழந்தையின் தாயார் அரசியல் அலுவல்களை அவனுக்காகப் பார்த்து வந்தாள். அவள் செல்வாக்கு வாய்ந்த சில பேடிகள் வயப்பட்டதால் அவள் ஆட்சியில் மிகக் குழப்பமான நிலையையே பஞ்சாப் அடைந்தது. அச்சமயம் பார்த்துப் பேரரசின் முதல் அமைச்சர் II'ம் காஸி - உத் - தீன் அம் மாகாணத்தின் மேல் படையெடுத்தார். அவர் முதல் முயற்சி வீணுகியது (1755).

அடுத்த ஆண்டில் அவர் வெற்றி பெற்று பஞ்சாபில் தாமே ஒரு புதிய கவர்னரை அமர்த்தினர். இதுவே அஹமது அப்தலி இந்தியாவின் மீது நான்காவது முறையாகப் படை யெடுத்ததற்குக் காரணமாம். அப்தலி லாகூரைக் கைப்பற்றிக் கொண்டு காஸி - உத் - தீனை மன்னித்து விட்டு 1757'ல் தில்லியைச் சூறையாடினர். அவர் தலை நகரில் ஒரு மாத காலம் தங்கி இருந்தார். அவருடைய மகன் தைமூர் ஷா ஒரு முகலாய அரச குமாரியை மணந் தார். அதன் பின்னர் அவர் காஸி - உத் - தீனை அயோத்தி யிலிருந்த ஷுஜா - உத் - தௌலாவுக் கெதிராக அனுப்பி னர். மேலும் அவ் ஆப்கானியர் சுராஜ்மல்லை எதிர்த்துச் சென்று அவருடைய ஒரு கோட்டையையும் கைப்பற்றிக் கொண்டார் ; வடமதுரையிலிருந்த யாத்திரீகர்களைக் கொன்று தள்ளினர் ; ஆக்ராவையும் கொள்ளையிட்டார். அவர் இழைத்த கொடுமைகள் கொஞ்சமல்ல. அவர் தங்கி யிருந்த பகுதியில் வாந்திபேதித் தொற்று நோய் பரவிய தால் அவர் ஊர் திரும்ப நேரிட்டது. அவர் கொள்ளை யிட்ட பொருள்களின் மதிப்பு மூன்று கோடிக்கு மேல் பனி ரண்டு கோடி ரூபாய் வரையாகும். நஜீப் - கானைத் தலை மைப் பிரபுவாக அப்தலி அமர்த்தினர். காஸி - உத் - தீன் மீது நம்பிக்கையற்ற பேரரசர் இவனிடம் ஒப்படைக்கப் பெற்றிருந்தார். முகமதுஷாவின் மனைவிகளில் ஒருத் தியை அவள் வேண்டுகோளின் பேரிலேயே அப்தலி மணந்தார். அதைத் தவிர வயது முதிர்ந்து கோர உரு வம் கொண்ட அவர் பதினேழு வயது நிறைந்த முகமது ஷாவின் மகளையும் கட்டாயப்படுத்தி மணந்து கொண்டார்.

II'ம் காஸி - உத் - தீன் (1757 - 9) : அப்தலியின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட காஸி - உத் - தீன் மராட்டி யர், பரூக்காபாத் அஹமத்கான் என்ற இவர்களின் ஆதர வால் ஒரு மாதத்திற்கு மேலாகத் தில்லிக் கோட்டையில் ஆலம்கீரையும் நஜீப்பையும் முற்றுகையிட்டார். 1757'ல் பேரரசர் காஸி - உத் - தீனுக்குப் பணிய நேர்ந்தது. அடுத்த ஆண்டில் மராட்டியர் பஞ்சாப்பை வென்று அப்

தலியின் மகனும் பஞ்சாப் கவர்னருமான தைமூர்ஷாவை விரட்டினர். காஸி - உத் - தீன், பேரரசரின் மூத்த மகன் ஷா ஆலம் என்பாரையும் தில்லியை விட்டு வெளியேறச் செய்தார். அவ் இளவரசர் 1772 வரை பல இடங்களில் அலைந்து திரிந்து பின்னர்த்தான் தலைநகருக்குத் திரும்பினார். நஜீப் - உத் - தௌலாவிற்கு மராட்டியரால் ஏற்பட்டிருந்த இடையூறுகள் அஹமத் அப்தலியின் ஐந்தாவது இந்தியப் படையெழுச்சியின் விளைவாக நீங்கின. (1759). அந்நிலையில் காஸி - உத் - தீன் பேரரசரைக் கொன்று விட்டு அவுரங்க சீப்பின் மகனை காம் பக்ஷ் என்பவனின் பெயரனை அரியணையில் அமர்த்தி III'ம் ஷாஜஹான் என்ற பட்டத்தைச் சூட்டினார். சில வாரங்கள் கழித்து அலிகௌஹர் (கொல்லப்பட்ட பேரரசனின் மூத்த மகன்) பீஹாரில் பேரரசராக முடி புனைந்து II'ம் ஷா ஆலம் என்று பட்டப்பெயர் தரித்தார் (1759 - 1806). ஆப்கானியப் படை யெடுப்பாளருக்கு அஞ்சி ஓடிய காஸி-உத் - தீன், சுராஜ் மல்லைச்சரண் அடைந்து அரசியல் தொடர்பே அற்றிருந்தார். எனினும் 1800-வரை அவர் வாழ்ந்திருந்ததாகத் தெரிய வருகிறது.

அப்தலியின் ஐந்தாவது இந்தியப் படையெடுப்பு (1759 - 61): 1758'ல் மராட்டியர் பஞ்சாபில் புகுந்ததால் அஹமத் அப்தலியின் ஐந்தாவது படையெடுப்பு அடுத்த ஆண்டு நிகழ்ந்தது. பஞ்சாபை மீட்டுக் கொண்ட அப்தலி தில்லியை நோக்கிச் சென்றார். ரோஹில் கண்டு, பரூகாபாத், இவற்றின் ஆப்கானியத் தலைவர்கள் அவருடன் கூடினர். 1760'ல் தில்லிக்கு அருகில் பராரி கட்டத்தில் அப்தலியை எதிர்த்த தாதாஜி சிந்தியா தோல்வியுற்று இறந்தார். அடுத்து, சிகந்தரா என்ற இடத்தில் (தில்லி அருகில்) மால்ஹர் ராவ் ஹோல்கார் ஆப்கானியரிடம் தோல்வி யடைந்தார். அதே ஆண்டில் (1760) ஹைதராபாத்திலிருந்து சதாசிவராவ் பாவேவின் தலைமையில் ஒரு பெரிய படை தில்லி சென்று அதைக் கைப்பற்றியது. சதாசிவராவ் III'ம் ஷாஜஹானை நீக்கி விட்டு II'ம் ஷா ஆலத்

தின் மூத்த மகனை ஜாவன் பக்த் என்பாரைப் புதிய பேரரசராக்கினர். மேலும் அவர் ஆப்கானியப் படையெடுப்பாளருக்கும் அயோத்தியில் இருந்த ஷுஜா உத்-தௌலாவுக்கு மிடையே பகைமை உண்டு பண்ணினர். அப்தலி பின்னிடாதபடி பஞ்சாபைத் தன் வசப்படுத்த எண்ணி மராட்டியத் தளபதி தில்லியிலிருந்து புறப்பட்டுச் சென்றார். அவர் 1761-ல் (மூன்றாவது) பானிப்பட்டுப் போரில் தோல்வியுற்றுக் கொல்லப்பட்ட வரலாறு பின்னர் விரிவாகப் பேசப்படும். ஆப்கானிய வெற்றி வீரர் II'ம் ஷா ஆலத்தைப் பேரரசராகவும் நஜிப்-உத்-தௌலாவை முதல் அமைச்சராகவும் நியமித்து விட்டுத் தம் நாடு திரும்பினர். சீக்கியர் உண்டாக்கிய கலகங்களால் 1762'ல் அப்தலி மீண்டும் லாகூர் வர நேர்ந்தது. அமிர்த சரஸில் சீக்கியக் கோவிலை மத வெறியால் அவர் அழித்தது அவர்கள் சினத்தைப் பெருக்கியது. மராட்டியருடன் ஒப்பந்தம் செய்து கொண்டு தில்லி அரசியலை வலுப்படுத்த அவர் எண்ணிய எண்ணம் நிறைவேறவில்லை. ஆனால், காச்மீரை அவர் தம் அரசுடன் இணைப்பதில் வெற்றி பெற்றார். இவர் தம் நகருக்குத் திரும்பியதும் சீக்கியர் பஞ்சாபில் முதன்மை பெற்று லாகூரை அடக்கி ஆண்டனர். 1767-ல் அவர் இறுதியாகப் பஞ்சாபுக்கு வந்ததும் அதைத் தம் ஆட்சியில் நிலை நிறுத்துவது அருமை என்பதை உணர்ந்தார். 1773-ல் அவர் வாழ்க்கை முடிவுற்றது.

பானிப்பட்டுப் போருக்குப் பின் தில்லியின் நிலை: நஜீப் - உத் - தௌலா "ரீஜென்ட்" என்ற முறையில் 1761 முதல் 1770-ல் தாம் இறக்கும் வரை தில்லியை அடக்கி ஆண்டார். நாட்டை விட்டு வெளியேறிய முகலாயப் பேரரசரின் ஆதிக்கத்தைப் பானிப்பட்டுப் போர் திரும்பவும் ஏற்படுத்தவில்லை. அப்போர் பிற்கால முகலாயர் வரலாற்றுக்கே முற்றுப்புள்ளி வைத்து விட்டதாகக் கருதப்படலாம். ஆப்கானிய மராட்டியப் போரில் தம் நிலையைக் காப்பாற்றிக் கொண்ட சுராஜ்மல் பானிப்பட்டுப் போரின் பின்பு, வன்மை பெற்று விளங்கினர். அப்

போருக்கு அடுத்த ஆண்டிலேயே அவர் ஆக்ராவைக் கைப்பற்றினர். மேலும் அவர் தம் அதிகாரத்தைப் பெருக்கிக்கொண்டு நஜீப்-உத்-தௌலாவுடனும் போரிட்டார். ஆனல் 1773-ல் நடந்த அப்போரில் அந்த ஜாட் வீரர் வீரமரணம் எய்தினர். அவர் இருபது ஆண்டுகட்டு மேலாகப் பொதுக்காரியங்களில் ஈடுபட்டவர். அவர் குமாரனை ஜவஹருடைய அமைதியற்ற வாழ்க்கை 1768-ல் அவர் மரணத்துடன் முடிந்தது. பானிப்பட்டுப் போரின் பின்வந்த பத்து ஆண்டுகளில் தில்லி வரலாற்றிலேயே மிகவும் உயர்ந்த வீர புருடர் நஜீப் - உத் - தௌலா ஆவர். அவர் மிகச்சிறந்த இராணுவ வீரர், சிறந்த அரசியல் நிர்வாகி; பலருடன் தக்க முறையில் உறவாடுவதில் திறமை வாய்ந்தவர். மராட்டியரின் ஆதரவுடன் தில்லிக்குத் திரும்பிய II-ம் ஷா ஆலத்தின் வரலாற்றைப் பின்னர்க் கூறுவோம். 1765-ல் அவர் வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா ஆகிய ஆட்சிப்பகுதிகளை ஆங்கிலக் கும்பினியாருக்கு விட்டுக்கொடுத்தார்.

———

பகுதி 6.

முகலாயப் பேரரசின் அழிவு

பலபடிகள் (Stages)

இதுகாறும் நாம் பார்த்தவை: 1739-ல் சிந்து நதிக்கப்பாலுள்ள முகலாயப் பேரரசின் பகுதிகளை நாதிர்ஷா இணைத்துக்கொண்டது; 1741-ல் மராட்டியர் குஜராத்தையும் மாளவத்தையும் கைப்பற்றியது; 1752-ல் பஞ்சாபை அப்தலிக்கு ஈந்தது; பஞ்சாப், வங்காளம், அயோத்தி, ஹைதராபாத் என்ற சிற்றரசுகளில் வழி வழி உரிமையை நிறுவியது; இந்த மாகாணங்களி லும் இராசபுதனத்திலும் செயல்முறையில் சுய ஆட்சி நிறுவப்பட்டமை; வங்காளத்தில் பிரிட்டிஷ் அதிகாரம் நிலை பெற்றது; பலவகைப் புரட்சிக்கலகங்கள்; 1753-ம் ஆண்டில் உள்நாட்டுப்போர்; அரசரைப்படைப்போர் களான சையது சகோதரர்கள், II-ம் காஸி-உத்-தீன் முதலியவர்களின் செயல்கள்; நாதிர் ஷாவும் அப்தலியும் படையெடுத்ததால் ஏற்பட்ட துயரநிலை; மராட்டியரின் பலபடியான முயற்சிகள் முதலியன. இவையே குறிப் பிடத்தக்கவை. 1753-ல் காஸி-உத்-தீனுடன் சச்சரவு இட்டுக்கொண்டு சாப்தர்ஜங் அயோத்திக்குத் திரும்பிய செய்தி, மாகாணங்கள் பேரரசின் அலுவல்களில் கொண்டிருந்த பொறுப்பற்ற தன்மையை விளக்கும் ஓர் எடுத்துக்காட்டாகும். பரந்து விரிந்த பேரரசு முடிவில் தில்லியும் அதன் பக்கமும் என்ற அள்வில் ஒடுங்கிவிட்டது. பேரரசின் வாழ்வு தாழ்வுகளில் மாகாணத்தலைவர்கள் பெரும்பாலும் அக்கரை கொள்ளவில்லை. பெரிய மாகாணங்கள் தம் தம் செயல்களிலேயே கருத்தூன்றி இருந்தன.

காரணங்கள்: பதினேழாம் நூற்றுண்டின் பிற் பகுதியில் முகலாயப் பேரரசு வீழ்ச்சி யடைந்ததன்

காரணங்களை முன்பு கண்டோம். அக்குறைபாடுகள் பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பாதியில் மிகுதியாக வலிமைபெற்றன. தவிர, புதிய குறைபாடுகளும் தோன்றலாயின. இவையாவும் பேரரசின் அழிவுக்குச் சிறப்பான காரணங்களாம். தீய வழிக்கு அடிப்படையான உவளகப்பழக்கத்தினால் கேடுகளும் ஆற்றல் குறைவும் ஏற்பட்டன என்ற பெர்னியரின் கூற்றுக்களை * மெய்ப்பித்து நின்ற பஹதூர்ஷாவின் பின் வழியினரின் ஆற்றலின்மையை முன்னரே கண்டோம். மகளிராலும் பேடிகளாலும் தூண்டப்பட்ட பேரரசர்களின் நடத்தையும் அவர்களது அமைச்சர்களாலும் பிறராலும், அவர்கள் நடத்தப்பட்ட விதமும் அரசியலையே இழிவுபடுத்தி விட்டன. அரசு கட்டிலுக்கு ஏற்பட்ட போட்டிப்போர்களும் பிற குடும்பப் போர்களும் பேரரசின் அழிவுக்குக் காரணமாயின. பெரும்பாலும் அயல் நாட்டினரான பிரபுக்களின் துன்மார்க்கமும் தந்நலமும் வாய்ப்புக்கிடைத்தால் அதைத் தமக்காகப் பயன்படுத்திக் கொள்ளும் தன்மையும், நாட்டுப் பற்று இன்மையும், துரானியர், ஈரானியர் இந்துஸ்தானியர் என்ற இவர்கட்குள் நிகழ்ந்த போராட்டமும் ஷியாக்கள், சுன்னிக்கள் என்ற இவர்களது சச்சரவுகளும் அவர்களின் போர்த்திறமைக் குறைவும், அறிவின்மையும், ஒழுக்கமின்மையும், சிறந்த அரசதந்திரிகளால் கூட சீர் திருத்தமுடியாத நிலையில் இருந்தன. அத்தகைய அரசதந்திரிகளும் மிகுதியாக இல்லை. பேரரசின் நடவடிக்கைகளைச் சீர்திருத்த முடியாது என்று அஸப்ஜாவே கைவிட்டார். மராட்டியர், சீக்கியர், இராசபுத்திரர், பண்டேலர், ஜாட்டியர் என்ற அனைவரும் பேரரசின் பகைவர்களாயினர். உள்நாட்டுக் குழப்பங்கள் நிகழவே பாரசீகர், ஆப்கானியர் முதலிய அயலவர்கள் எளிதில் இந்நாட்டில் படையெடுக்க நேர்ந்தது. "இந்திய வரலாற்றுப்பகுதியைப் (1707-1803) படிக்கப் படிக்க இராணு

---

* Constable and Smith, Bernier's Travels in the Mogul Empire (1916) *(கான்ஸ்டபிலும் ஸ்மித்தும்--முகலாயப் பேரரசில் பர்னியர் செய்த பயணங்கள்)* பக் 144-7

வத்திறமைக் குறைவுதான் பேரரசின் அழிவுக்கு முக்கிய காரணமெனத் தோன்றுகின்றது ".* நாதிர்ஷா அப்தலி, ஆகியோர், தம் இந்தியப் பகைவர்களை விடப் படைத்திறம் வாய்ந்தவர்கள் என்பதைக் கண்டோம். அனைவற்றிற்கும் மேலாக மராட்டியர் சபைகளில் பேஷ்வாக்களின் ஆதிக்கமானது முகலாயப் பேரரசின் அழிவுக்கான ஓர் திட்டத்தை ஏற்படுத்தியது. எனவே பானிபட்டுப் போர் தொடக்ககாலத்தில் அவர்கள் முதன்மை பெற்று விளங்கினர். அவ்வமயம் அவர்கள், பேரரசின் அதிகாரத்தைக் கீழ்ப்படுத்தித் தாம் மேலோங்கி நின்றனர். என்றாலும் முடிவில் ஆங்கிலேயருக்குத்தான் அந்நிலைமை நன்மையளித்தது.

---

* Irvine the Army of the Indian Moghuls (1903) (இர்வின் — இந்திய முகலாயரின் படை) பக். *296.*

பகுதி 7.

அசப் ஜாஹி குலம்

அசப் ஜாஹியின் வாழ்க்கை வரலாறு : 1671-ல் பிறந்த மீர் கமாருதீன் (பிற்கால அசப்ஜா) சாமர்கந்து காஸியுத்தீனின் மகன். இவரும் இவர் தந்தையும் அவுரங்க சீப்பிடம் பணியாற்றியவர்கள். காஸியுத்தின் (கி. பி. 1650 – இ. 1710) அவரது வாழ்நாளின் பிற்பகுதியில் 20 ஆண்டுகள் குருடாக இருந்தாலும் போரிலும் இராச்சிய நிர்வாகத்திலும் சிறந்து விளங்கினுர். கமாருதீனின் தாயார் ஷாஜஹானுடைய அமைச்சரான சாதுல்லாக் கானின் மகள். இத்துரானி இளைஞருடைய அரசியல் வாழ்க்கை 1684-ல் தொடங்கியது. இவர் 1685-ல் **கான்** என்ற பட்டத்தையும் 1691-ல் சின் கிலிச்கான் என்ற பட்டத்தையும் பெற்ருர். 1707-ல் அவுரங்கசீப் இறப் பதற்கு முன்னரே இவருக்குப் பீஜப்பூரின் கவர்னர் பதவி கிடைத்தது.

1707-ல் பஹதூர்ஷா இவரை அயோத்திக்கு மாற்றி ஞர். பின்னர், பேரரசர் ஜஹந்தர்ஷாவுக்கு எதிராகக் கமாருதீன் பருக்சையரை ஆதரித்தார். அதன்விளைவாக அவருக்குத் தக்கணத்தின் அரசப்பிரதிநிதி பதவியும் நிஸாம்-உல்-முல்க் என்ற பட்டமும் 1713-ல் கிடைத்தன. அவுரங்காபாத் அவருடைய தலைநகராயிருந்தது. தக் கணத்தில் அவர் சாகுவுக்கும் பாலாஜி விஸ்வநாத்துக் கும் பகையாகிச் சூழ்ச்சிகள் செய்துவந்தார். ஆனல் அவை நிறைவேறுமுன் அவர் தில்லிக்குத்திரும்பிச் செல்ல நேரிட்டது (1714). 1719-ல் அவர் பீஹாரின் கவர்னரானுர். ஆனல், பாட்னுவுக்குச் செல்லவில்லை. தக்கணத்திலிருந்து அவர் திரும்ப அழைக்கப்பட்டது முதலே அவருக்கும் சையதுசகோதரர்கட்கு மிடையே பகை மையே நிலவியது. காலப்போக்கில் அது முதிர்ந்து

வந்தது. கமாருதீனின் சிறப்பு விரைவில் வளர்ந்து அவர் 1722-ல் பேரரசின் முதலமைச்சராக அமர்ந்தார். அவுரங்கசீபின் உண்மையான சீடர் என்ற முறையில் அவர் ஜஸியாவைத் திரும்ப விதித்தார். இத்துடன் வாய்தா வசூல் முறையை ஒழுங்குபடுத்தவும் பரி தானத்தை ஒழிக்கவும் ஒவ்வொருவரும் வைத்துக் கொள் ளத்தக்க ஜாகீரை அளவுபடுத்தவும் வேண்டிய முறை களைச்செய்தார் (1723). மேலும் முன்னுண்டில் ஆப் கானியரால் அழிக்கப்பெற்ற சபாவி குலத்தினருக்கு உதவிபுரிய பாரசீகத்துக்கு ஓர் படை யனுப்புமாறு கூறி னுர். உமாயூனை நட்புகொண்ட பாரசீகத் தலைவர் ஷாவிற்கு நன்றியறிவு காட்டுதற்காகவே அவர் அவ்வாறு செய்ய எண்ணினுர். ஆனுல் அதனுல் எப்பயனும் விளைய வில்லை. பின்னர் நிஸாம்-உல்-முல்க் தில்லியிலிருந்து அவுரங்காபாத்துக்குச் சென்று, ஷாகர்கெல்டா என்ற இடத்தில் வெற்றிபெற்று 1725-ல் ஹைதராபாத்தைக் கைக்கொண்டார்.

அது முதல் அந்நகரே அவருடைய தலைநகராயிற்று. பேரரசரும் அவ்வேற்பாட்டை ஏற்றுக்கொண்டுவிட்டார். நிஸாமுக்கு அவ்வமயம்தான் அசப்ஜா என்ற பட்டமும் கிடைத்தது. ஷாகர்கெல்டா வெற்றி நிகழ்ந்த 1724-ஆம் ஆண்டு தான் தக்கணத்தில் முதல் முதல் நிஸாம் ஆட்சி தொடங்கிய காலம் என்று கருதப்படுகிறது. அஸப்ஜா, 1726-ல் II-ம் சாம்பாஜியை வரவேற்ருர்; சாகு அவரது பேஷ்வா இவர்கள் பகைவர்களைத் தூண்டிவிட்டார். நிஸா முக்கும் பாஜிராவுக்கும் ஏற்பட்ட போரை நாம் கண்டோம். நிஸாம், 1728-ல் பால்கெட்டில் தோற்ற பின்பு சாம்பாஜி யின் கட்சியை விட்டுவிட நேர்ந்தது. பேஷ்வாவுக்கு எதி ராக அவர் செய்த முயற்சிகள் கைகூடவில்லை. எனவே 1731ல் இருவரும் போர் செய்வதில்லையென்றுத் தமக் கிடையே ஒப்பந்தம் செய்து கொண்டனர். அசப்ஜா, வடக்கே, முகலாயப் பேரரசுக்கு இடையூறு ஏற்படும்படி மராட்டியருடைய முயற்சிகளைத் தூண்டி, மராட்டியரிடம் இருந்து தாம் விடுதலை பெற்ருர். தில்லிக்கு அருகில்

பாஜி ராவ் படையெடுத்த பின் அஸப்ஜா, முகம்மதுஷா வின் முதலமைச்சர் பதவியில் 1737-ல் மீண்டும் அமர்ந் தார். ஆனுல் அடுத்த ஆண்டில் போபாலில் பேஷ்வா விடம் தோற்ருர். கர்னுல் போரில் அவர் கொண்ட பங்கை முன்னரே கண்டோம். நாதிர்ஷாவினுல் அவருக்கு அளிக்கப்பட்ட தில்லி அரியணையை அவர் ஏற்றுக் கொள்ளாதது அவர் பெருமையையே காட்டுகிறது (1739). அடுத்த ஆண்டில் அவர் பேரரசின் தலைநகரை விட்டுப் புறப்பட்டார். தமது மகன் நாசிர்ஜங் புரிந்த கலகத்தை 1741-ல் அசப்ஜா அடக்கினுர். 1740-41'ல் நிகழ்ந்த மராட்டி யரின் கர்நாடகப் படையெடுப்பின் விளைவாகத் திருச்சிராப் பள்ளிப் பகுதியில் அவர்கள் அதிகாரம் பரவியது. மேலும் சந்தா சாகிப் கைதியானுர். 1743-ல் அசப்ஜா, முராரி ராவ் கோர்படேயிடமிருந்து திருச்சிராப்பள்ளியைக் கைக் கொண்டார்; தஞ்சாவூரைத் திறை செலுத்துமாறு செய் தார். ஆர்க்காட்டில் சாதத்துல்லாகானை விரட்டி விட்டு அன்வாருத்தீனை அங்கே நவாப்பாக அமர்த்தினுர். முடி வாகப் பேரரசர் தமக்கு அளித்த முதலமைச்சர் பதவியை ஏற்க மறுத்து, 1748-ல் தமது 77-வது வயதில் இறந் தார்.

அசப்ஜாவின் பெருமை : அசப்ஜாவின் வாழ்க்கை யில் இடைவிடாத முயற்சிகளைக் கண்டோம். 25 ஆண்டு கள் அவர் முதன்மையாக விளங்கினுர்; அவுரங்கசீபைப் பின்பற்றி வாழ்க்கையில் ஒரு சிறந்த குறிக்கோளுடன் பணியாற்றினுர். முகலாயப் பேரரசிலேயே மிகவும் பெருமை வாய்ந்த அவர், அந்த பேரரசு முழுவதையும் காப்பாற்ற இயலாது என்று கண்டவுடன் ஒரு சிறந்த பகுதியையேனும் பாதுகாக்க நினைந்து அதில் வெற்றி பெற்ருர். அவர் சிறந்த தானைத் தலைவராகவும் அரச தந்திரியாகவும் விளங்கினுர். அரசியல் நிர்வாகத்திலும் தலைசிறந்தவர். மராட்டியரின் ஆற்றலை நன்கு உணர்ந் திருந்தார். பாஜி ராவ் பேஷ்வாவைப் போல வீரமும் இரக்கமும் ஆற்றலும் வாய்ந்தவர் இல்லை என்று அவர்

புகழ்ந்தது குறிப்பிடத்தக்கது.* அவர்களுடன் ஒத்துழைக்குமாறு அவர் நாஸிர்ஜங்கை வற்புறுத்தினர். உள்நாட்டு அலுவலாளர்களை ஒன்றிரண்டு ஆண்டுகட்கே அவர் அமர்த்தி வந்தார். பலருக்கும் வாய்ப்பு அளிக்கவேண்டும் என்பதே அவர் நோக்கம். கலகமிட்ட தன் மகன் நாஸிர் ஜங்கின் தஸ்தாவேஜுகளை அழிப்பதில் மிகுந்த அறிவாராய்ச்சியோடு கருத்தினைச் செலுத்தினர். ஏனெனின் பல பிரபுக்களுடைய அரச பக்தியின்மையை அவை வெளிக்காட்டுவனவாக இருந்தன.

பின் வரக்கூடியவற்றை முன் கூட்டி உய்த்துணரும் ஆற்றல் அவரிடம் இருந்தது. அரசியலில் கிடைத்த வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்வதில் அவர் பெருந் திறமையாளர். இப்பண்புகள் அவர் வெற்றிக்குக் காரணமாயின. அவுரங்கசீபைப் போலவே அவர் ஒரு தீவிரமான சுன்னி ; ஒழுக்கத்திற் கருத்தைச் செலுத்தினர் ; எளிய வாழ்க்கையையே விரும்பினர் ; பாரசீக மொழியில் அவர் கவிகள் இயற்றியதும் குறிப்பிடத் தக்கது. முஸ்லீம் அறிஞர்களையும் சமயாசாரியர்களையும் அவர் ஆதரித்தார். ஹைதராபாத், பர்ஹான்பூர் என்ற இடங்களில் அவர் கோட்டைகளை வலிமைப் படுத்தினர் ; அவுரங்காபாத்தில் ஒரு கால்வாய் வெட்டினர்; நிஸாமாபாத் என்ற நகரையும் நிறுவினர்.

நாசிர் ஜங்கும் (1748–50) முஸபர் ஜங்கும் (1750–51) : அசப் ஜாவுக்கு ஆறு புதல்வர்கள் இருந்தனர். காஸியுத்தீன், நாசிர் ஜங், சலபத்ஜங், நிஸாம் அலி, பசலத் ஜங், முகல் அலி. முஸபர் ஜங் என்பார் அவருடைய மகளின் மகன். தில்லி தர்பாரில் காஸியுத்தீன் பெற்றிருந்த பதவியைப்பற்றியும் அவர் மகன் II-ம் காஸியுத்தீனைப் பற்றியும் நாம் முன்னரே பார்த்தோம். அசப் ஜாவை அடுத்து நாஸிர் ஜங் பட்ட மெய்தினர். இவர்,

---

* *பர்வே, II-ம் சிவாஜியின் வாழ்க்கையும் காலமும்.*
BURWAY, LIFE and TIMES OF SIVAJI II (1932). பக். *133.*

தம் தந்தையின் பிரதிநிதியாக ஹைதராபாத்தில் 1737 முதல் 1740 வரை இருந்தவர். நாஸிர் ஜங்குக்கும் சாப்தர் ஜங்குக்கும் பகை மூட்ட வேண்டுமெனப் பேரரசர் அகமது ஷா திட்டமிட்டார். ஆனால் அது பலிக்கவில்லை. முஸபர் ஜங்கும் சந்தா சாகிப்பும் புதுச்சேரி கவர்னரான டூப்ளே யின் ஆதரவைப் பெற்று, ஆர்க்காட்டு நவர்ப்பாக இருந்த அன்வாருத்தீனை முறியடித்துக் கொன்றார்கள். (1749).

நாசிர் ஜங் கர்நாடகம் சென்று பகைவர்களை முறி யடித்தார் என்றாலும் (1750) பிரெஞ்சியரால் ஒரு இரவுத் தாக்குதலில் இறந்தார். இதன் விளைவாக தக்கண அரசப் பிரதிநிதியான முஜபர் ஜங்கை புஸ்ஸி ஹைதராபாத்துக்கு அழைத்துச் சென்றார் (1751). வழியில் முஸபர் ஜங் கொல்லப்படவே புஸ்ஸி சலபத் ஜங்கை ஆதரித்தார்.

சலபத் ஜங் (1751-62) : புஸ்ஸியின் உதவியால் சலபத் ஜங் பட்டமெய்தினார். இதனால் காஸியுத்தீனு டைய உரிமையை ஆதரித்த பாலாஜிராவுடன் போர் மூண்டது. மராட்டியரின் ஹைதராபாத் படையெடுப்பு சலபத் ஜங்கைத் துன்புறுத்தியது. ஆனால் புஸ்ஸி தமது உயர்ந்த தந்திரத்தினால் அவரை ஊக்கி வந்தார். "படை யெடுத்துவரும் சேனையைக் கண்டு அஞ்சாதே, அஞ்சாதே; பூனாவுக்குப் படையெடுத்துச் செல்வாயானால் தக்கணத்தை நீ காக்க முடியும்" * என்று அவர் கூறினார். 1751-ல் ஆமதுநகர் அருகில் பேஷ்வா தோற்றார். புஸ்ஸி கோர் கயான் வரை சென்றார். ஆனால், இந்தியாவில் புஸ்ஸி யின் தந்திரத்தைப் பின்பற்றி, பாலாஜி **திரும்பாக்** என்ற இடத்தைக் கைப்பற்றிக் கொண்டார். மேலும் ரகூஜி பான்ஸ்லே நிஸாமின் நாட்டைக் கொள்ளையடித்தார். இவ் வாறு புஸ்ஸியின் சூழ்ச்சிகள் பயனற்றவையாயின (1752). அதே ஆண்டில் தக்கண அரசப் பிரதிநிதியாக வேண்டி அவுரங்காபாத்துக்கு வந்த காஸியுத்தீன் அவரது மாற்றாந் தாயினால் (நிஸாம் அலியின் தாய்) நஞ்சு ஊட்டப்பட்டு இறந்தார். அதை அடுத்து சலபத் ஜங்குக்கும் பாலாஜி

* 54, பக். 310 - 1.

முகலாயப் பேரரசு 1707—61



ராவுக்கும் பால்கி என்ற இடத்தில் (பீடார் மாவட்டம், ஹைதராபாத்) அமைதி உடன்பாடு ஏற்பட்டது. தோல்வியுற்ற போதிலும், நிஸாமின் தர்பாரில் புஸ்ஸியின் ஆதிக்கம் குறையவில்லை. சலபத் ஜங்கோ ஆட்சிபுரியும் ஆற்றல் அற்றவர். ஆகவே அரசியலை நடத்த ரீஜண்டுகள் அமர்த்தப்பெற்றனர். அவர்களில் மிகவும் சிறப்பு வாய்ந்தவர் ஷாநவாஸ்கான் என்பாராவர். இவர் ஒரு வரலாற்றுசிரியர். முகலாயப் பெருஞ் செல்வர்களைப் பற்றிய ஒரு பெயரகராதியை இவர் தயாரித்தார். அதன் பெயர் மாசிர் – உல் - உமாரா என்பதாகும். மேலும் இவர் வியத்தகு அரசியல் அறிஞர்; சிறந்த பண்புகள் வாய்ந்தவர். ஆனால் புஸ்ஸியை விரட்ட இவரால் இயலவில்லை. 1758-இல் இவர் கொலையுண்டார். அதே ஆண்டில் பிரெஞ்சுத் தலைவர் லாலி, புஸ்ஸியை சோழ மண்டலக் கரைக்கு வரும்படி அழைத்தார். 1759-இல் நிஸாம் அலி "ரீஜண்டு" ஆனார். 1760-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சதாசிவராவும் ரகுநாத ராவும் நிஸாம் ராச்சியத்தில் படையெடுத்தனர். உத்கீர் என்ற இடத்தில் பெரிய வெற்றி அவர்கட்குக் கிடைத்தது. இராச்சியத்தில் பல இடங்கள் வெற்றி வீரர்கட்குக் கிடைத்தன. 1761-இல் பானிப்பட்டுப் போருக்குப் பிறகு நிஸாம் அலி பூனாவுக்கு அண்மையில் படையெடுத்துச் சென்றார். ஆனால் பெருந் தோல்விதான் அவர் கண்ட பலன். 1762-இல் அவர் தம் நாடு திரும்பிச் சலபத் ஜங்கைச் சிறையிலிட்டார்; (சலபத் ஜங் 1764-இல் இறந்தார்) பின்னர் தாமே நிஸாமாகி 1802 வரை ஆட்சி புரிந்தார்.

அதிகாரம் 2.

பேஷ்வாக்களின் உயர்நிலை (1713—72)

பகுதி 1.

சாகுவும் தாராபாயும் (1708-12)

சாகு முடிபுனைதல் (1708): யசூபாய் ஷர்கிக்கும் சாம்பாஜிக்கும் மகனாக II-ஆம் சிவாஜி (சாஹு) 1682-இல் பிறந்தார். 1689-இல் அவரும் அவர் தாயும் முகலாயரால் கைப்பற்றப் பட்டனர். அவர் முகலாயர் சிறையிலிருந்த பொழுது அவுரங்கசீபின் இரண்டாவது மகள் சினதூன் நிஸா, அவரிடம் அன்பு காட்டி, பேரரசர் இவரை முகம் மதியராகச் செய்த முயற்சியைத் தடுத்தாள். சிவாஜியை யும் சாம்பாஜியையும் திருடர்களாகக் கூறிய அவுரங்கசீப் சாகுவைத் திருடனல்லன், நல்லவன் என்று புகழ்ந்தார். 1700-இல் சாகுவின் உடல் நலம் பெரிதும் கெட்டு மூளைக் கோளாறும் ஏற்பட்டது. பேரரசர், மராட்டியரைப் பிரிப்ப தற்காக அவரை விடுவிக்க இரு முறைகள் எண்ணினர். ஆனால் அவர், பேரரசர் இறந்த பிறகுதான் ஸுல்பிகர் கானுடைய சிபார்சின் பேரில் ஆஸாம் இளவரசரால் விடுதலை செய்யப்பெற்றார் (மே, 1707). சாகுவுக்கும் தாராபாய்க்கும் நிகழ்ந்த போராட்டத்தின் முதல் நிலையை யும், தாராபாயின் தோல்வியையும் சதாரா பிடிபட்ட பின்பு 1708-இல் சாகு முடிபுனைந்ததையும் நாம் முன்னரே பார்த் தோம். அவனைக் கைவிட்ட தானாஜி ஜாதவ் சாகுவின் தானைத் தலைவரானார்.

தாராபாயின் வீழ்ச்சி (1712): தாராபாய், கிருஷ்ணா ஆற்றின் கிளையான வார்ணாவின் தெற்கேயுள்ள நிலப் பகுதியைச் சாகுவிடமிருந்து ஏற்க உடன்படாததால் இரு வரிடையே போரும் தொடர்ந்தது. சாகு, பன்ஹாலா

முதலிய இடங்களைக் கைப்பற்றினர்; ரங்கனுவில் அவளை முற்றுகையிட்டு மால்வானுக்கு ஓடும்படி விரட்டினர். ஆனல் தாராபாயை மிகவும் துயருறுத்திச் சாகு முழு வெற்றி அடையாதிருக்குமாறு, தன்னலம் காரணமாகவே அறிவுரைகூறிய தானுஜியின் முயற்சியால் முற்றுகை கைவிடப்பட்டது. சத்ரபதி சதாராவுக்குத்திரும்பி சகுணு பாய், சக்வார்பாய் என்ற இருவரையும் மணந்தார். தானுஜி இறந்தவுடன் அவர் மகன் சந்திராசென் தானைத் தலைவரானர். தாராபாய், கான்ஹோஜி ஆங்கிரே என்ற கடற்படைத்தலைவர் உட்பட்ட சில மராட்டியத் தலைவர் களின் உதவியைப் பெற்று, பன்ஹாலாவை கைப்பற்றி, 1709-ல் கோலாப்பூரைத் தன் தலை நகராக்கினள். அவ் வமயம் காம்பக்ஷ் விஷயமாகத் தக்கணத்திலிருந்த பேரர சர் பஹதூர்ஷா (1708-9) ஒருகட்சியிலும் சேரவில்லை. அவருடைய மதியுரைஞர்களான ஸுல்பிகர்கான், முனிம் கான் ஆகிய இருவரும் முறையே சாஹுவையும் தாரா பாயையும் ஆதரித்துப் பேசியதே அதற்குக் காரணமாகும். பழிக்குப்பழி வாங்க எண்ணிய தாராபாய், பேரரசரின் கொள்கையினல் தைரியமடைந்தாள். மராட்டியத் தலை வர்களிடம் சாகுவைக் கைவிடும்படியும் முகலாயரிடம் சேவை செய்வதுகூட சிறப்பானது என்றும் அவள் முறையிட்டாள். சந்திராசென் 1711-இல் அவளுடன் சேர்ந்தார். அடுத்த ஆண்டில் பாலாஜி விசுவநாத், இராஜாஸ்பாயையும் (தாராபாயின் சக்களத்தி) அவ ளுடைய ஆதரவாளரையும் தாராபாயை முறியடிக்குமாறு வற்புறுத்தினர். அதன் விளைவாக தாராபாய் சிறைப் பட்டாள். இவ்வாறு இராஜாஸ்பாயிக்கும் இராசா ராமருக்கும் பிறந்தII-ம் சாம்பாஜி (பிறந்த ஆண்டு 1693) கோலாப்பூரில் தாராபாயின் மகளை முறியடித்தார் (1712).

பகுதி 2

பாலாஜி விசுவநாத் (1713-20)

1713-இல் பதவி ஏற்றல்: அவுரங்கசீபால் சாகு என அழைக்கப்பட்ட II-ம் சிவாஜி, போதுமான அரசியல் அறிவு பெற்றவரல்லர். தமது பேஷ்வா அல்லது பிரதம அமைச்சரே அரசியலை நடத்துவது சிறப்புடையதாகும் என்று அவர் எண்ணினார். 1713-இல் பாலாஜி விசுவ நாத் என்பவரை அவர் பேஷ்வாவாக அமர்த்தினார். அவருக்குப்பிறகு அவருடைய குலத்தவர் பேஷ்வாக்க ளாக அமர்ந்தனர். பேஷ்வாக்களின் ஆதிக்கப்பெருக்குக் கான அடிப்படையை அமைத்தவர் பாலாஜி விசுவத நாதரே ஆவர். இவர் 1660-இல் ஸ்ரீவர்தன் (ஜஞ்சிரா ராச்சியம், பம்பாய்) என்னுமிடத்தில் விசுவநாதபட் என் பாருக்கு மகனாகத்தோன்றினார், சித்பவன் பிராமணராகிய இவருடைய குடும்பத்தினர் தேஷ்முக்குகளாக ஜஞ்சிரா வின் சீதிகளுக்கு அடங்கியிருந்தனர். 1692-இல் இவர், தம் ஊரைவிட்டு நீங்கி மராட்டியநாட்டில் ஒரு வரித்துறை அலுவலாளராகப் பதவியேற்றார். பின்னர்ப் பல உயர்ந்த பதவிகளையும் இவர் முறையே பெற்றார். தானாஜி ஜாத வின் கீழ்ப் பணியாற்றிய காலத்தில் இவருடைய படைத் திறமை மிகவும் போற்றப்பட்டது. அவ்விருவரும் தாரா பாயைக் கைவிட்டுச் சாகுவின் கட்சியில் சேர்ந்தனர். அதன் விளைவாக 1708-இல் பாலாஜி, படை அமைப்பாள ராகப் பதவியேற்றார். இரண்டு ஆண்டுகட்குப் பிறகு கலகக் காரத் தலைவனொருவனால் சிறைபட்ட பாலாஜியை மிகுந்த பொருள்கொடுத்து சாகு மீட்டார். 1711-இல் பாலாஜி, சந்திர சென்னுடன் போரிட்டார்; அடுத்த ஆண்டில் தாராபாயை முறியடித்தார்; 1713-இல் பேஷ்வா ஆனார்.

கானோஜி ஆங்கிரேயுடன் அமைதி உடன்பாடு (1714): துகாஜி ஆங்கிரேயின் மகன் கானோஜி அவர் தந் தைக்குப் பின் 1690-ல் மராட்டியக் கடற்படை அலுவலாள

ராகவும், 1698-ல் இராசாராமரின் கீழ், கடற்படைத் தலைவ ராகவும் ஆனார். அவர் தாராபாயின் கட்சியைச் சேர்ந்தவர். மராட்டியருடைய கடற்போர்த் தந்திர முறையின் முன்னேற்றத்துக்கு அவர் யாதும் செய்யாத போதிலும் மேலைக் கடற்கரையில் பெரும் அச்சத்தை உண்டாக்கிய பெருமை அவருக்கு உண்டு. சீதிகள், ஆங்கிலேயர், டச்சுக்காரர், போர்ச்சுகீசியர் முதலிய பல பகைவர்களின் தாக்குதல்கட்கு இடையே அவர், கெரியாவிலும் (இரத்தினகிரி மாவட்டத்தில் உள்ள விசய துர்க்கம்) கொலாபாவிலும் (ஜஞ்சிராவின் வடக்கில்) தமது நிலைமையை வெற்றியுடன் சமாளித்து வந்தது போற்றற்குரியது. அவருடைய அரச தந்திர ஆற்றலும் சிறப்பு வாய்ந்தது.

"காஞ்ஹோஜி ஆங்கிரே, மராட்டியக் கடற்படையை இரண்டாம் முறையாக நிறுவிய தலைவர் என்று கருதத் தக்கவர்."* 1712-ல் அவர் சாகுவுடன் போரிட்டார். ஆனால் பாலாஜி விசுவநாதரின் தந்திரம் காரணமாக அவர் அமைதி உடன்பாட்டுக்கு இணங்கி சாகுவின் தலைமையை ஏற்றுக்கொண்டார் (1714). காஞ்ஹோஜியின் இணக்கமும் சாகுவின் கப்பற்படைத் தலைவராக அவர் அமர்த்தப்பட்டதும் பேஷ்வாவின் மிகச் சிறந்த அருஞ் செயல்கள் என்று கூறவேண்டும். பம்பாயிலிருந்த ஆங்கிலேயர் 1717-இலிருந்து 1722-க்குள் காஞ்ஹோஜியிடம் மும் முறை தோற்றார்கள். இறுதி முறையில் தாய்நாட்டின் ஆதரவும் போர்ச்சுகீசியரின் கூட்டுறவும் இருந்தும் அவர்கள் வெல்ல முடியவில்லை. 1725 வரை காஞ்ஹோஜி மிகவும் சுறுசுறுப்பாகச் செயலாற்றி வந்தார். அவர் வாழ்க்கையின் இறுதிக்காலம் அமைதியாகவே கழிந்தது. அவர் இறந்த ஆண்டு 1729-ஆக இருக்கக்கூடும்.

தில்லியில் மராட்டியப் படையெழுச்சி (1718-9): சாகு, விடுதலை பெற்றவுடன், காண்டேஷ், பேரார். அவுரங்காபாத், பீடார், பீஜப்பூர், கோல்கொண்டா என்ற ஆறு தக்கண சுபாக்களில் சௌத்தும் சர்தேஷ்முகியும்

* 93, பக்கம் 213.

வசூலிக்கும் உரிமையை ஆஸாம் இளவரசரிடமிருந்து பெற்ருர். ஆனல் அரியணைப் போட்டியில் ஆஸாம் தோற்ற பின், பஹதூர்ஷா, ஒன்றுக்கொன்று மாறுபட்ட அமைச்சர் களின் அறிவுரையின் விளைவாக, சாகுவிற்கும் தாராபாய்க் கும் நிகழும் போரில் வெற்றி பெற்றவர்க்கே சௌத்தும் சர்தேஷ்முகியும் வசூலிக்கும் உரிமையை அளித்தார். 1712-ல் தக்கணத்தில் ஸுல்பிகர்கானுக்குப் பின் பதவி யேற்ற தாவூத்கான், சாகுவின் கோரிக்கைக்கு இணங்கி ஞர். ஆனல் நிஸாம்-உல்-முல்க் (1713–14), சாகுவிற்கும் II-ம் சாம்பாஜிக்கும் இருந்த மனவேறுபாடுகளைத் தம் நலத்திற்குப் பயன்படுத்திக் கொண்டார். சையது ஹுசெய்ன் அலி, தக்கணத்தில் அரசப் பிரதிநிதியானதும் நிலைமை மாறியது. பரூக்கியரால் ஊக்கப்பெற்ற மராட்டி யருடன் செய்த பயனற்ற போரும், பரூக்கியரின் தூண்டு தலும் ஹுசேய்னை மராட்டியருடன் நட்புகொள்ளுமாறு செய்தன. இருதரத்தாருக்கும் இடையே 1718-ல் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி மராட்டியர் சுதந் திரம் பெறுவதென்றும், தக்கணத்தில் சௌத், சர்தேஷ் முகியை வசூலிப்பதென்றும், மற்றும் மராட்டிய அரச குடும்பத்தினரை விடுதலை செய்வதென்றும் முடிவாயிற்று.

"தக்கணத்திலிருந்து ஆறு சுபாக்களில் வசூலிக்கப் படும் சௌத்தும் சர்தேஷ்முகியும் சாகுவிற்குக்கிடைத்தன. அதற்குக் கைமாருக 15,000 மராட்டியப் படையினரை சாகு, பேரரசரின் பணிக்காக வைத்துப் பாதுகாக்கவும், மேலே கூறிய ஆறு சுபாக்களில் அமைதி நிலவுமாறு செய்யவும் கட்டுப்பாடுடையவர் ஆனர்."* ஆனல் பேரரசர் அவ்வுடன்படிக்கையை உறுதிசெய்ய மறுத்து விட்டார். தில்லி அரசியலில் ஏற்பட்ட சில நிகழ்ச்சிகள் காரணமாக ஹுசேய்ன் அலி அவுரங்காபாத்திலிருந்து, தம் படையுடனும் மராட்டியப் படையுடனும் பாலாஜியை யும் உடனழைத்துக்கொண்டு பேரரசுத் தலைநகருக்குச் சென்ருர். பரூக்சையர் மராட்டியருடன் செய்துகொண்ட

99, பக். 34.

உடன்படிக்கையை ஏற்றுக்கொள்வதாக அறிவித்திருந்த போதிலும் பேரரசரை நீக்கிவிடவேண்டு மென்பதே ஹுசேய்னின் நோக்கமாயிருந்தது. அவ்வமயம் நகரில் நிகழ்ந்த ஒரு கலகத்தில் 2,000 மராட்டியர் இறந்தனர். ரபி-உத்-தரஜத் முடிசூடியபின்பு அவர், மாராட்டியருடன் ஏற்பட்ட உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டார். பாலாஜி அவ்வெற்றிக்குப்பின் யசுபாயையும் விடுதலை பெற்ற கைதிகளையும் அழைத்துக்கொண்டு தம் நாடுதிரும்பினார். வெளிப்பகட்டில் மறைந்துகிடந்த பேரரசின் ஆற்ற லின்மையை மராட்டியர் உணர்ந்தனர். சையது சகோதரர் களின் சார்பாகப் பேரரசின் அரசியல் சிக்கல்களில் தலையிட்டதால் மராட்டியரின் சிறப்பு – முக்கியமாக பேஷ்வாவின் பெருமை – உயர்ந்தது.

சிறுபோர்களும் பேஷ்வாவின் குடும்பமும்: தாரா பாயும் கானோஜி ஆங்கிரேயும் அடக்கப்பட்ட பின்னர் தாமாஜி தோரத்து என்ற கலகக்காரன் தொடர்ந்து கிளர்ச்சி செய்து வந்தான். முடிவாக 1728-ல் அவன் சிறையிலேயே மாண்டான். நாட்டின் அமைதியைக் குலைத்து வந்த II-ம் சாம்பாஜி, 1718, 1720 ஆகிய ஆண்டு களில் தோல்வியடைந்தார். அதன் பிறகு பாலாஜி இறந்தார் (1720). அவருடைய மனைவி இராதாபாய் பரந்த நோக்கம் கொண்ட அறிவாளி. 1753-ல் அவள் இறக்கும் வரை சமூகத்தில் செல்வாக்குடன் விளங்கினாள். பாலாஜிக்கு ஆண்மக்கள் இருவரும் பெண் மக்கள் இரு வரும் இருந்தனர். மூத்த மகன் பேஷ்வா பாஜிராவும் அவர் இளவலும் நாட்டிற்குச் சிறந்த பணிகள் ஆற்றினர். அவர்களுடைய இளைய தங்கை, இச்சால் கராஞ்சி (கோலாப்பூருக்கருகில்)யில் அரசப் பிரதிநிதியாக இருந்து புகழ் பெற்றாள் (1745–1775).

மராட்டியக் கூட்டரசு: இன்றியமையாக் காரணங் களால் இராசாராம் ஜாகீர் முறையைத் திரும்பக் கொணர்ந் ததும், தாராபாயின் அரசப்பிரதிக்காலத்தில் ஜாகீர்தார்கள் தமது அதிகாரங்களையும் செல்வாக்கையும் உறுதிப்படுத்திக்

கொண்டதையும் நாம் முன்னரே பார்த்தோம்; தங்க ளுடைய சொத்துக்களை பறிமுதல் செய்யமாட்டார் என்ற நம்பிக்கையுடன்தான் சாகுவுக்கு அவர்கள் ஆதரவு அளித் தனர். சத்திரபதியும் நிலைபெறுத்தப்பட்ட இராச்சிய முறைகளைக் குலைக்க விரும்பவில்லை. ஜாகீர் முறை இன்றியமையாதது என்று பாலாஜி உணர்ந்தார். அவரே பல ஜாகீர்களுக்குத் தலைவராயிருந்தார். நில மானியத் தலைவர்களுக்கு, சௌத் சர்தேஷ்முகி வரிகளை வசூலிக்கும் அதிகாரத்தையுமளித்தார். ஜாகீர்தார்கள் அவரவர்கட்கு உரிய எல்லையில் செயல் முறையில் உரிமை பெற்றே விளங்கினர். இவ்வாறு சிவாஜியின் முறையை அவருக்குப் பின் வந்தோர் கைவிட்டனர். ஆனால் பாலாஜி விசுவநாத், நிலமானியத் தலைவர்களுக் கிடையே ஒற்றுமையை வலிமைப் படுத்தி வெளிப் பகைவர்களை ஒன்று கூடி எதிர்க்கும் முறையை ஒழுங்கு படுத்தினர். அவர் ஒரு மராட்டியக் கூட்டரசை அமைத்தார் என்று கூறலாம். நடு அரசான சாகுவின் அரசியலை அவர் பல வழிகளில் வலிவுறச் செய்தார். சிவாஜியின் கால் வழியினரிடம் அரச பக்தி கொண்டிருப்பதுதான் சிறப்புடையது என்ற கொள்கை பல்வேறு மராட்டியத் தலைவர்களிடமும் வற் புறுத்தப்பட்டது. மராட்டிய நாட்டின் எல்லாப் பகுதிகளி லும் நிலமானியத் தலைவர்கள் அக்கறை கொள்ள வேண்டி ஒவ்வொருவருக்கும் இராச்சியத்தின் பல்வேறு இடங்களில் ஜாகீர்களை விநியோகித்துப் பொதுவான பொருள் தொடர்பின் வழி வரும் பொறுப்பு ஏற்படும்படி பேஷ்வா செய்திருந்தார். பெருநிலத் தலைவர்களால் வசூலிக்கப் பட்ட தொகையிலிருந்து சர்தேஷ்முகியும் சௌத்தில் நூற் றுக்கு 34 விகிதமும் சத்திரபதிக்குச் சேர்ந்தது. எஞ்சிய 66 சதவிகிதம் தொடர்பு கொண்டோருக்கு விநியோகிக்கப் பட்டது. பிற்கூறியவர்கள் மத்திய அரசியலாருக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். இச்சிக்கலான முறை நன்கு நடைபெற்றது. ஆனால் தனிப்பட்டோரின் பேரவா குறுக் கிடத் தொடங்கவே இம்முறை பயனற்றதாகி விட்டது. இரண்டு தலைமுறைகள் வரை வன்மை பெற்றிருந்த இம்

மராட்டியக் கூட்டரசை அமைத்த பாலாஜியை ஒரு சிறந்த அரசதந்திரி என்றே கூறவேண்டும். ஆனால் அவருடைய அரசதந்திர ஆற்றல் சிவாஜியின் முறைக்கு அடுத்தபடி யானதேயாம்.*

பாலாஜி, நாட்டுக்கு ஆற்றிய பணிகள்: மூன்று சிறந்த புதல்வர்களுக்குத் தந்தையும் பெருந்தன்மை வாய்ந்த ஒருத்திக்குக் கணவனுமான பாலாஜி விசுவநாத் கற்பனை சக்திகள் வாய்ந்தவர்; அமைதியாகக் காரியங்களைச் செய்பவர்; நீதி முறையால் பல முரடர்களை அவர் அடக்கி ஆண்டார். அரச தந்திரமும் பொருளமைப்பு ஆற்றலும் இராணுவ வலிமையும் அவரிடமிருந்தன. சாகுவினிடத்தில் அவர் மிக்க அரச பக்தி கொண்டிருந்தார். பாஜிராவைப் போலில்லாமல் பாலாஜி ஒரு வைதீக அந்தணர்; உண்மையான சாத்திரி. பிரம்மேந்திர சுவாமியுடன் (1649 – 1745) அவர் நெருங்கிப் பழகி வந்தார். அவர், குழப்பத்தை அடக்கி மகாராட்டிரத்தில் ஒழுங்கை ஏற்படுத்தினார்; சாகுவின் நிலைமையை உள்நாட்டிலும் புறத்திலும் வலிமைப்படுத்தினார். தாராபாயின் ஆண்மையைக் குறைத்ததும், கானோஜி ஆங்கிரேயுடன் அவர் செய்த ஒப்பந்தமும், முகலாயப் பேரரசருடன் அவர் செய்த உடன்படிக்கையும் மிகப் பெருஞ்செயல்கள். மராட்டியக் கூட்டரசை அவர் நிலைநிறுத்தினார். அதன் பொருளமைப்பை ஒழுங்கு செய்தார். மராட்டியர் வரலாற்றிலேயே ஒரு சிறப்பு வாய்ந்த காலப்பகுதியைத் தொடங்கச் செய்தார். பராக்கிரம சேவகர் அல்லது ஒப்புயர்வற்ற பணியாளர் என்ற இவருடைய பட்டத்துக்கு இவர் தகுதியானவரே. அதே சமயத்தில் அவர் தமது குடிவழியைத் தாபித்துப் பான்ஸ்லேக்களின் வீழ்ச்சிக்குக் காரணமானார். பேரரசர் ஆதிக்கத்தை அவர் விரும்பவில்லை. ஆனால் அவர் மகனின் முன்னேற்ற நடவடிக்கைகட்கு அடியிட்டுக் கொடுத்தார். பாலாஜி விசுவநாதரின் தொண்டுகட்கு அவர் பின்வந்த பாஜிராவின் செய்கைகளே உண்மையான சான்றாகும்.

---

* 77, *அதி. 10.*

பகுதி 3.

பாஜிராவ் (1720 - 40)

வாலிப வாழ்க்கை : பாஜிராவ் 1698-இல் பிறந்தார். பாஜி என்ற சொல் பி(வி)ஸ்வநாத்ஜி (அவருடைய பாட்டனரின் பெயர்) என்பதின் சுருக்கம். ராவ், என்னும் சொல் ராயர் அல்லது ராஜர் என்பதின் திரிபு. இவர், தமது தந்தையின் முயற்சிகளில் ஒத்துழைத்தார். 1718–9-இல் அவருடன் இவரும் தில்லிக்குச் சென்றார். இராணுவத் துறையிலும் பொருள் துறையிலும் இவரது ஆற்றல் புகழத்தக்கதாயிருந்தது. தந்தையைப் போன்ற பெரும் பண்டிதர் அல்லர்; எனினும் கடினமான வாழ்க்கையிற் பயின்று பொறுப்பான அலுவல்களை ஆற்றக்கூடிய சிறந்த பயிற்சி பெற்றிருந்தார். ஏறத்தாழ 1710-இல் அவர் காசிபாய் என்ற பெண்ணை மணந்தார். இவரைப் பேஷ்வாவாக ஆக்குவதற்குப் பெரிய எதிர்ப்பு இருந்தது. எதிர்ப்புக்குக் காரணம் அவருடைய இளமைப் பருவமே ஆம். ஆனால் அதைப் பொருட்படுத்தாமல், சாகு தந்தை இறந்த பின் சில தினங்களுக்குள்ளாகவே மைந்தனைப் பேஷ்வா ஆக்கினார். (2–4–1720).

அவரது முன்னேற்றக் கொள்கை : 1723-ஆம் ஆண்டுக்கு முன்பே பாஜிராவ் தமது முன்னேற்றக் கொள்கையை எதிர்த்த பலரையும் வென்று தலை சிறந்து விளங்கினார். அதே ஆண்டில் "பிரதிநிதி" யைத் (பேஷ்வாவை விடச் சிறிது உயர்ந்த ஒரு அலுவலாளர்) தலைமையாகக் கொண்ட அவரது பகைவர்கள் பெரும் குழப்பத்தை விளைவித்தனர். பிரதிநிதியான ஸ்ரீபத்ராவ், பாஜிராவின் பெரிய பகைவர். பின்னவர் பேஷ்வா பதவிக்கு வந்ததை மிகக் கடுமையாக அவர் எதிர்த்தார். சதாராவில் ஒன்றுக்கொன்று மாறுபட்ட பல கருத்துக்கள் விவாதிக்கப் பெற்றன. வீழ்ச்சி அடைந்து வந்த முகலாயப் பேரரசுக்கு

எதிராக வட இந்தியாவில் மராட்டியர் படையெடுத்தலைப் பேஷ்வா தீவிரமாக ஆதரித்தார். அதனால் மராட்டியருக்கு பொருள் வரவும், புகழும், சிறப்பும் அதனால் ஏற்படுமென் பதே அவர் கூறிய காரணம். அச்செயலில் பொதிந் துள்ள சமயத் தொடர்பான நோக்கத்தை அவர் மிகவும் வற்புறுத்தினர். ஆயினும் அதே சமயத்தில் தாம் அமைக் கும் திட்டம் உள்நாட்டில் இருந்து மராட்டியத் தலைவர் களின் சச்சரவுகளையும் பொறாமையையும் ஒழிக்கும் வகை யில் பயனளிக்கும் என்ற அதன் இயல்பை அவர் மறக்க வில்லை. நாட்டின் சாதனங்களை அழித்த மராட்டிய உரிமைப் போருக்குப் பின் ஏற்பட்ட காலப்பகுதியில் கருநாடகத்தில் ஆதிக்கத்தைப் பெருக்கி உள்நாட்டை வலிமைப்படுத்துவதே சாலச் சிறந்தது என்று அவரது எதிரிகள் வாதித்தனர். ஆனால் அத்தகைய இயல்முறை வெற்றியடைய வேண்டுமானால் நிஸாம்-உல்-முல்க் நொது மல் கொள்கையைப் பின்பற்ற வேண்டும். ஆனால் அவரோ மராட்டியர் தெற்கே பரவுவதை விரும்பவில்லை; தென் பகுதி தமக்கே உரியது என்ற எண்ணம் கொண்ட வர் அவர். மேலும் அக்கொள்கையின் வெற்றிக்கு உள் நாட்டில் கட்சிப் பிரதிகட்சி இருத்தலாகாது. ஆனால் மகாராட்டிரத்தில் தக்காணியர்க்கும் கொங்கணர்க்கு மிடையே இடைவிடாத போராட்டம் இருந்துவந்தது. இவற்றையெல்லாம் எடுத்து விளக்கிய பாஜிராவின் சொல் வன்மையில் மயங்கி சாகு அவருடைய திட்டங்களை ஏற்றுக்கொண்டார். அவ்வமயம் பேஷ்வா கூறியதாவது "இந்துக்களின் நாட்டை விட்டு அயலாரான முகலாயரை விரட்ட இதுவே தக்க தருணம். அவ்வாறு செயலாற்றி னால் அழியாப்புகழ் நம்மை வந்தடையும்; பட்டுப் போன மரத்தின் அடியில் தாக்குவோம்; கிளைகள் தாமே ஒடிந்து விழும். நம்முடைய முயற்சிகளை இந்துஸ் தானத்தை நோக்கித் தொடங்கினால் மராட்டியக்கொடி யானது கிருஷ்ணாவிலிருந்து அட்டாக்வரை பறக்கும்"*

* *14*, IV, பக். 397.

தொடக்கத்தில் எழுந்த இராணுவ முயற்சிகள் : பாஜிராவ் 1722-இல் பகல்கண்டையும் அடுத்த ஆண்டில் மால்ஹாராவ் ஹோல்கார், ராணோஜி சிந்தியா முதலானவர்களின் உதவி கொண்டு மாளவத்தையும் தாக்கிச் சூறையாடினர். சவாய் ஜெய்சிங்கும் இதில் கூடி உழைத்தார். மால்ஹர் ராவ் ஹோல்கார் பிறப்பில் ஒரு இடையர். அவர் முன்னோர்கள் ஹோற் என்றயிடத்தில் வசித்ததால் ஹோல்கார் என்ற துணைப்பெயர் அவர்களுக்கு அமைந்தது. இவர் பாலப்பூர் போரில் (1720) சிறந்த பங்குகொண்டார். ராணோஜியின் முன்னோர்கள் சதாராவின் அருகில் 'படேல்' அல்லது ஊரதிகாரிகளாக இருந்தவர்கள். அவர்களிடையே சிந்திராக் என்ற ஒரு க்ஷத்திரியக் குடும்பப் பெயர் நிலவியது. சிந்திராக் என்ற சொல் திரிபுற்று சிந்தியா என வழங்கலாகியது.* இளமைப்பருவ வாழ்க்கையில் பாஜிராவுடன் தொடர்புகொண்ட ராணோஜி சிந்தியா, பேஷ்வாவின் செருப்புத்தூக்கியாக இருந்தவன் என்று கூறுவர். ஆனால் இதைச் சிலர் உண்மையென ஏற்றுக்கொள்ளவில்லை.

ஷாகர் கெல்டா போர்க்காலத்தில் நிஸாம்-உல்-முல்க்கும் மராட்டியருக்கும் கூட்டுறவு இருந்தது என்றாலும் அவர்களுக்குள் பிளவு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாமல் இருந்தது. பாஜிராவ், தமது கொள்கைக்கு மாறானதாக இருப்பினும், சாகுவின் விருப்பத்திற்கிணங்கிச் சித்தால் துர்க்கத்தின் மேலும் சீரங்கப்பட்டணத்தின் மேலும் படையெடுத்தார் (1725-7). இதனால் நிஸாமுக்கும் மராட்டியருக்கு மிடையே இருந்த பிளவு பெருகியது. நிஸாம், கருநாடகத்தில் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்தத் தீர்மானித்தார். 1723-ம் ஆண்டிலும் அதன் முன்பும் குஜராத்தில் மராட்டியர் சூறையாடினர் என்றாலும் பாஜிராவ் அதில் தலையிட்டது 1727 முதலே ஆகும். அடுத்த ஆண்டில் தௌலத்தாபாத்தின் அருகில் பால்கெட் என்ற இடத்தில் ஒரு பெரிய வெற்றி அவருக்குக் கிடைத்தது. அங்கே பெரிய கொரில்லாப்போரை அவர் செய்து சிறந்த

* *99,* பக். *111* n.

தோர் இராணுவத் தலைவனை வென்றார். அதன்விளைவாக எழுந்த முங்கி ஷெவ்காான் (ஆமது நகர் மாவட்டம்) உடன் படிக்கை, அவருடைய செல்வாக்கை மிகுதியாக்கிற்று. மகாராட்டிரத்தில் அவருடைய பகைவர்களின் மனத்தைக் குழப்பியது. ஆதலால் 1728-இலிருந்து பாஜிராவின் ஆதிக்கம் தொடங்கியதாகக் கருதலாம். அதே ஆண்டில் மாளவத்தில் அவர் இராணுவ முயற்சிகளில் ஈடுபட்டு வந்தார்; 1729-ல் அலகாபாத் கவர்னரான முகம்மது கான் பங்காஷுக்கு எதிராகச் சத்ராசால், பண்டேலாவுக்கு உதவிபுரியப் போனார். அதன் விளைவாகப் பண்டேலா இராச்சியத்தின் மூன்றில் ஒரு பகுதியை அவர் பெற்றார். இதனால் 33 லட்ச ரூபாய் வருமானம் அவருக்குக் கிடைத்தது. சிவாஜிக்கும் பாஜிராவுக்கும் தொடர்புள்ள சத்ரா சாலின் உயிலில் பாஜிராவைத் தம் புதல்வனாகக் கருதியதாகக் கண்டிருந்தது. இவ்வாறு பேஷ்வா தம் காரியங்களுக்கு மிகவும் பயன்படத்தக்க முக்கியமான நிலப் பகுதியை அடைந்தார். இதிலிருந்து முகலாய அரசாகிய பட்ட மரத்தை அடியில் தாக்கி அதன் வழியே ஆக்ராவையும் தில்லியையும் அவர் அச்சுறுத்த வாய்ப்பு ஏற்பட்டது. சத்ராசால் அந்த நன்கொடை வழங்கியதன் மூலம் தமக்கு உதவிபுரிந்தோரிடம் நன்றியறிவு காட்டினார். மேலும் முகலாயப் பேரரசருக்குப் பகையாகத் தம் குமாரர்கட்கு மராட்டியர் ஆதரவுகிடைக்கும் என்ற எண்ணம் அவருக்கு உண்டு. பிறிதொரு வரலாற்றின்படி சத்ராசாலுக்கும் ஒரு முகம்மதியப் பெண்ணுக்கும் பிறந்த மஸ்தானி என்பவளையும் பாஜிராவ் அடைந்தாராம்.

தபாய்ப் போர் (1731): 1730-ல் திரும்பக்ராவ் தபடே படைத்தலைவரானார். அவர் தம் தந்தையைப் போலவே பாஜிராவை வெறுத்துவந்தார். ஆகவே தபாய் என்ற இடத்தில் (பரோடாவுக்கு அருகில்) 1731-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நாளில் இருவருக்கும் போர் நிகழ்ந்தது; அதில் திரும்பக் இறந்தார். அவர் தாய் உமா பாய், பாஜிராவுடன் அமைதி உடன்பாடு செய்துகொண்டாள். ஆகவே, பேஷ்வா கட்டுப்பாடற்ற படைத்தலைவராக அமர்ந்தார்.

உண்மையில் அவரையே மகாராட்டிரப் பேரரசர் என்று கூட நாம் கருதலாம். அவருடைய வெற்றி, II-ம் சாம்பாஜி அசப் ஜா முதலியோரின் தோல்விக்கும் காரணமாயிற்று. தபாய்ப்போர்,. பாஜிராவின் வாழ்க்கையிலேயே ஒரு சிறந்த, குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். உள் நாட்டுப் பகைவர்களை அடக்கிய இச்செயல் முகலாயப் பேரரசை அறவே ஒழிப்பதற்கு வேண்டிய வசதியைத் தந்தது.

வார்ணு உடன்படிக்கை (1731): பாலாஜி விசுவ நாத்துக்குத் தொந்தரவு தந்த கோலாப்பூர் II-ம் சாம்பாஜி, சாகுவினிடமும் தொடர்ந்து பகைமைபூண்டு அசப் ஜாவுட னும் திரும்பக்ராவுடனும் கூட்டுறவு கொண்டார். ஆனால் 1730-ல் ஸ்ரீபத்ராவினால் அவருக்கு அழிவு ஏற்பட்டது. தாராபாயும் (கைதியாக இருந்தவள்) அவள் விருப்பப் படியே சதாராவிலிருந்த சாகுவிடம் வந்து சேர்ந்தாள். அடுத்த ஆண்டில் கிருஷ்ணு ஆற்றின் உபநதியான வார்ணு அருகிலேற்பட்ட உடன்படிக்கையானது சாம்பாஜி இராச்சியத்தின் எல்லையை வரையறுத்துக் காட்டியது. சதாராவுக்குக் கோலாப்பூர் கீழ்ப்பட்டதையும் அது அறிவிக் கிறது. இவ்வாறு மகாராட்டிரம் முழுவதிலும் சாகுவின் அரசியலாதிக்கம் நிலைபெற்றது. நீண்டகாலமாக நிலவிய உள்நாட்டுக் கலகங்கள் ஒருவாறு ஓய்ந்தன. அதன்பின் சாம்பாஜிக்கும் சாகுவுக்கு மிடையே இருந்த தொடர்பு தொந்தரவுகள் இல்லாமலிருந்தது. உள்நாட்டு அமைதி நிலவவே பாஜிராவ் வெளிநாட்டுச் செய்திகளில் கருத்துச் செலுத்துவதில் பேரவாக்கொண்டார். சில திங்கள்கட்குப் பிறகு பாஜிராவ் அசப் ஜாவுடன் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி வடக்கு, தெற்கு பாகங் களில் முறையே ஒருவர் மற்றவரை எவ்விதத்தடைக்கும் உட்படுத்தக் கூடாது எனக் கண்டிருந்தது.

முன்னேற்ற நடவடிக்கைகள் (1731-6): பாஜிரா வுக்கு உள்நாட்டில் கிடைத்த வெற்றி அவரது முன்னேற் றக் கொள்கையை நிறைவேற்ற வழிகோலியது. 1735-6-ல் அவர் குஜராத், மாளவம், பண்டல்கண்டு ஆகிய இடங்

கட்குத் தலைவர் ஆனார். இராசபுதனத்தில் அவருடைய முயற்சிகள் 1734-ல் தொடங்கின. 1735-ல் பேஷ்வாவின் தாயார் ராதாபாய், அமைதியான முறையில் உதயபுரி வழியாகக் காசிக்கும் கயைக்கும் ஜெயபுரி, வட மதுரை, குருக்ஷேத்திரம், அலகாபாத் முதலிய இடங்கட்கும் சென்ற யாத்திரையிலிருந்து அவளது புகழ் வாய்ந்த மகனது செல்வாக்கை நாமறியலாம். பேரரசைப் பெருக்கும் நோக்கத்தில் ஜெயபுரி சவாய் ஜெயசிங்கின் கூட்டுறவை அவர் பெற்றிருந்தார். செயசிங்கைத் தமக்கு எவ்வகையிலும் உயர்ந்தவராகப் பாஜிராவ் கருதவில்லை என்பதற்குச் சான்று உளது. 1736-ல் பேரரசர் பாஜிராவின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டு தக்கணத்தின் **சர்தேஷ்** பாண்டேயாகச் செய்தார். இதனால் அப்பகுதியின் வருவாயில் 5 சதவீதத்தை இவர் அடைந்தார். பேரரசரின் இச்செயல் தக்கணத்தில் சௌத் வரி வாங்கும் உரிமை பெற்ற சாகுவுக்கு அடுத்தபடியாக மகாராட்டிரத்திலேயே பெரிய அதிகாரியாகப் பாஜிராவை ஆக்கியது. மேலும் அப் பீஷ்வா, மாளவத்தின் துணைக் கவர்னராக அமர்த்தப்பெற்றார்.

தில்லிப் படையெழுச்சி (1737): மராட்டியர் தோஆப் பகுதியை அழித்ததால் அயோத்தியின் சாதத்கான் அவர்களைத் தோல்வியுறச் செய்தார். இச் செயலை அவர் அளவு கடந்து, பெரியதோர் அருஞ் செயலை ஆற்றிவிட்டதாகப் பேரரசரிடம் அறிவித்தார். மேலும், பேரரசரையும் மராட்டியரிடமிருந்து தப்புவிப்பதாக வீண் நம்பிக்கையை அவருக்கு உண்டு பண்ணினார். இந்தப் பகட்டான சொற்கள் பாஜிராவின் செவியில் எட்டியதும் அவர், "பேரரசர் முழு உண்மையையும் அறியவில்லை, என்பதைச் செயல் முறையில் காட்டுகிறேன். தில்லியின் வாயிலில் மராட்டியக் குதிரைகளையும் தம் ஊர்கள் எரிவதையும் அவர் காண்பார்" என்று வீர முழக்கம் செய்தார். சொல்லியவாறே நடத்தியும் காட்டினார். பேரரசர் நடுக்கமுற்றார். ஒரு முகலாயப்படை தோல்வியுற்றது. தில்லி முழுவதும் ஒரே நடுக்கம். ஆனால் விரைவில் பிற

முகலாயப் படைகளின் செலவை உணர்ந்த பேஷ்வா, இராசபுதனத்தின் வழியாகத் தந்திரமாகப் பின்வாங்கினர். இச்செயல் பேரரசரை மகிழ்வித்தது; பேஷ்வாவின் சிறப்பையும் ஓங்கச்செய்தது. இதன் விளைவாகப் பேஷ்வா, மாளவத்தின் அரசியல் தலைவர் ஆனர். மற்றும் பேரரசுக்கு மராட்டியரால் ஏற்படும் இடையூறுகளை ஒழிக்க அசப்ஜா, முதலமைச்சராக ஆக்கப்பட்டார். அடுத்த ஆண்டில் அசப்ஜாவைப் போபாலில், பாஜிராவ் முற்றுகையிட்டார். தோல்வியுற்ற அப்பகைவர், துரைசராய் (இராசபுதனத்தில்) என்னுமிடத்தில் உடன்பாட்டுக்கு இணங்கினர். தம் எதிரியின் அறிவன்மையைக் கண்டு பாஜிராவே வியந்தார். உடன்பாட்டின்படி மாளவ மாகாணமும், நருமதைக்கும் சம்பலுக்கும் இடையே உள்ள நிலப்பகுதியும் 50 லட்ச ரூபாயும் பாஜிராவுக்குப் பேரரசர் அளிக்கவேண்டும் என்று உறுதி செய்யப்பட்டது. நாதிர்ஷாவின் இந்தியப் படையெழுச்சியும் தில்லியில் நிகழ்ந்த சம்பவங்களும் (1739) பாஜிராவை மராட்டிய நாட்டைப் பாதுகாக்கத் தூண்டின. அவ்வமயம் சாகு நடுங்கிக்கொண்டிருந்தார். ஆனல் நாதிர் ஷா, பேரரசர் முகம்மது ஷாவுக்கு அடங்கி உண்மையுடன் பணியாற்றுமாறு பீஷ்வாவுக்கு அறிவுரை கூறிச்சென்றார்!

பஸ்ஸீன் வெல்லப்படுதல் (1739): 1733-க்கும் 1739-க்குமிடையே, சீதிகள், ஆங்கிரர்கள், போர்ச்சுகீசியர் என்ற இவர்களுடன் பாஜிராவ் மேற்கொண்ட நடவடிக்கைகள் கொங்கணத்தில் அவருடைய அதிகாரத்தை நிலை நிறுத்தின. பேஷ்வாவின் உடன் பிறந்தாரான சிம்னஜி அப்பா பஸ்ஸீனை (1737 – 39) முற்றுகையிட்டு அதை வென்றார். மிகவும் ஆற்றலுடன் அதனைப் பாதுகாத்தவர்களை ஒழித்த ஓர் அருஞ்செயலை அவர் நிறைவேற்றினர். இந்தப் போருக்குக் காரணம் பஸ்ஸீன் கவர்னர், பாஜிராவை இழிவாகக் குறிப்பிட்டதே ஆகும். வெற்றி பெற்ற மராட்டியர் வீழ்ச்சியுற்ற போர்ச்சுகீசியருக்கு நேர்மையான கட்டுப்பாடுகளையே விதித்தனர். பஸ்ஸீனுடன் மராட்டியர் தாணு, சால்செட் என்ற இடங்களையும்

பெற்றனர். சிம்ஞஜி அப்பா, பிரம்மேந்திர ஸ்வாமிக்குப் பின்வருமாறு எழுதினர், "வணங்கத்தக்க தங்களுடைய ஆசீர்வாதத்தால் அடியேன் பஸ்ஸீனே வென்றேன். சமயப்பகைவரின் தலையில் இறைவனின் சுதர்சனச் சக்கரம் இடிபோல் தாக்கியது. அவர்கள் சரணடைந் தனர் ".* பம்பாயிலிருந்த ஆங்கிலேயர் மராட்டியரின் நன்மதிப்பைப் பெற வெண்ணி இஞ்சுபர்டு, கோர்டன் என்ற இருதலைவர்கள் மூலம் பஸ்ஸீனுக்கும் சதாராவுக் கும் முறையே இரண்டு தூதுக்குழுக்களை அனுப்பி வாணிக உரிமைகளைப் பெற்றனர்.

பேஷ்வா பாஜிராவின் இறுதிக்காலம் : 1739-ல் பாஜிராவ், புகழின் உச்ச நிலையை எய்தியிருந்தார். அவரு டைய முன்னேற்றக் கொள்கை சிறப்பாக வெற்றி பெற் றது. ஆனல் அவர் அன்புக்கு உரியவளாயிருந்த முகம் மதியப் பெண்ணை மஸ்தானியை, சிம்ஞஜி அப்பா சிறை யிலிட்ட செய்தி அவர் மன அமைதியைக் குலைத்தது. அவ்வாண்டின் (1739) இறுதியில் நாசிர் ஜங்கின் கீழி ருந்த ஹைதராபாத்துடன் போர் புரிந்து, தம் துயரத்தை மாற்றினர். மேலும், பால்கெட் உடன்படிக்கைக்குப்பிறகு 1728-ல் அசப்ஜா கொடுப்பதாகக் கூறிய ஜாகீர்களைப் பெறும் நோக்கத்தை அவ்வமயம் நிறைவேற்றிக் கொண் டார். அவர் 1740-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28-ம் நாள் கடும் சுரத்தினல் இறந்தார்; மஸ்தானி உடன்கட்டை ஏறி னள். ஆனல் பாஜிராவால் புறக்கணிக்கப்பட்ட அவரு டைய சொந்த மனைவி காசி பாய் உடன்கட்டை ஏறவில்லை. அவளுக்கும் பாஜிராவுக்கும் பிறந்த மக்கள் நால்வர். அவ ருள் நான சாகிப் என்ற பாலாஜி பாஜிராவ் மூத்தவர் ; ரகுநாதராவ் அல்லது ரகோபா, மூன்ருவது மகன். மஸ்தா னிக்கும் தமக்கும் பிறந்த மகனெருவனை அந்தணனக்கப் பாஜிராவ் முயன்றது பயனுறவில்லை. காசி பாய், தன் மக னின் உயர் நிலையைக்கண்ட பிறகு 1758-ல் இறந்தாள்.

---

* *99*, பக். *171*.

பகுதி 4.

பேஷ்வாவின் பண்புகள் ; படைத் திறமையும் அரச தந்திரமும்

பாஜிராவின் தன்மை : பாஜிராவ் ஒரு கம்பீரமான ஆடவர் ; அவருடைய அழகிய முகம் யாவரையும் கவர்ந்தது. அசப்ஜாவின் உவகை மாதர்கள் அவ்வழகிய அந்தணனைப் பார்ப்பதற்கு விரும்பினார்கள் என்று ஒரு கதை வழங்குகிறது. பகட்டான உடைகளை அவர் விரும்பவில்லை. சிவாஜியைப் போலவே இவரும் இன்பப்பொருள்களில் நாட்டம் கொள்ளவில்லை. அவர் குதிரை சவாரி செய்யும் போதே உமியை நீக்கித் தானியத்தை உண்பதாகக் காட்டும் அவரது படத்தைப் பார்த்து, முகம்மதுஷா, "இவன் ஒரு பேய் போலும்" என்றாராம். அவர், மஸ்தானியின் கூட்டுறவுக்குப் பின் அவளுடைய பழக்கத்தால் ஊன் உண்ணவும் மதுபானம் செய்யவும் தொடங்கினார்.* அவருடைய படைப் பயிற்சியும் அரச தந்திரமும் மிக உயர்ந்த தன்மை வாய்ந்தவை. உடல் வன்மையும் அறிவு வன்மையும் மிகவும் பெற்றவர். தமது சொல் வன்மையால் பிறரை இணங்கச் செய்யும் ஆற்றல் அவருக்கு உண்டு. முறையான கல்விப் பயிற்சி இன்றியே அவர் அருஞ் செயல்கள் பல ஆற்றினார். அவர் தந்தையினுடைய கல்வியோ சமய உணர்ச்சியோ அவருக்குக் கிடையாது. பல வகைகளில் அவர் மரபு ஒழுக்கத்தைப் பின்பற்றவில்லை. குடும்பத்தினரும் பொதுமக்களும் பழித்தபோதிலும் அவர் மஸ்தானியைக் கைவிட இணங்கவில்லை. மணந்த மனைவியை அவர் புறக்கணித்து விட்டார். அவருடைய குழந்தைகளைச் சிம்னாஜி அப்பா வளர்க்க நேர்ந்தது. பேஷ்வா, சாகுவிடம் அரச பக்தியுள்ளவராகவும் நாட்டுப்பற்று மிக்கவராகவும் இருந்த போதிலும் செருக்கும் பெருமித

---

* 87, Vol. II பக். 179.

மும் அவரிடம் குடிகொண்டிருந்தன. அவரிடம் வணக்க இணக்கமான தன்மை இல்லை. ஆதலால் அவருக்குப் பல பகைவர் ஏற்பட்டனர். பிறருடைய உணர்ச்சிகளை அவர் மதிப்பதில்லை. பிறர் எவ்வளவு பெரிய தகுதியுள்ளவர்களானாலும் அவர்கள் முன்னிலையில் புகை பிடிக்க அவர் தயங்குவதில்லை ; சத்ரபதியைக் காணப்போகும் போது கூட தம் ஆசை நாயகியை உடனழைத்துச் செல்வார். மிகவும் கண்டிப்பான அவரைக் கண்டு அவருடைய குழந்தைகள் கூட அஞ்சின.

படைத் திறமை : பாஜி ராவ் ஒப்புயர்வற்ற இராணுவ வீரர் ; விடா முயற்சி உள்ளவர். அடிக்கடி பல இடங்கட்குச் சென்றாலும் அவர் சளைப்பதில்லை. குதிரைச் சவாரி செய்வதில் மிகுந்த திறமை படைத்தவர். கொரில்லாப் போர் முறையை நன்கு கற்றிருந்தார். தமது படை வீரர்களைத் தம்பால் ஈர்த்துக் கொள்ளும் உயர்ந்த ஆற்றல் அவரிடமிருந்தது. நிஸாமுக்குப் பகையாக அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள், போர்த் தந்திர முறையின் உயர்ந்த பண்புகளைக் காட்டா நிற்கும். வெற்றியினால் அவர் தலை கிறுக்கடைவதில்லை. வெற்றிக்குப் பின் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டதைக் காண்கிறோம். சுருங்கக் கூறின், அவர், சிவாஜியின் காலத்தை நமக்கு நினைவூட்டுகிறார்.

அரசியல் வல்லமை : அரசியல் வல்லமையிலும் பேஷ்வா சிறந்தவர். உள்நாட்டில் அவருக்கு இருந்த எதிர்ப்பை அடக்கியதிலேயே அவருடைய அரசியல் திறமையைக் காணலாம். அசப்ஜாவின் சூழ்ச்சிகளை அவர் முறியடித்த விதமும் நோக்கற்பாலது. பாஜிராவின் பேரரசுக் கொள்கை அவர் தந்தையின் எண்ணத்தாலும் முயற்சியாலும் ஏற்பட்டதெனினும் மராட்டிய நாட்டின் விரிவுக்கு இவருடைய கோட்பாடுகளும், அமைப்புத் திறமையும், செயலாற்றும் வீரமும் சிறப்பான காரணங்களாயின. அவர், முகலாயப் பேரரசின் ஆற்றலின்மையை உணர்ந்திருந்தார்; கருநாடகத்தில் மிகுந்த கருத்தைச்

செலுத்தி இராச்சியத்தை அங்குப் பரவச்செய்தல் பயன் தராது என்பதையும் நன்கு உணர்ந்திருந்தார். அவர் கொள்கையின் சிறப்பை அதன் வெற்றியைக் கொண்டே உணரலாம். பானிப்பட்டுப் போர், அவருடைய கொள்கையின் விளைவு என்று கூறுவது தவறு. அத்தகைய போரை அவர் தடுத்திருக்கவும் கூடும். மராட்டியக் கூட்டுக் குழுவினரிடம் அவர் நடந்து கொண்ட முறை அவர்களைக் கொண்டே தம் ஆதிக்கத்தைப் பெருக்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. தம்முடைய நோக்கத்தை அவர் நிறைவேற்றிக்கொண்டு பேஷ்வாவின் சர்வாதிகாரத்துக்கு உதவிய போதிலும் கூட்டு அரசுக்குத் தீமை தரும் பல சக்திகளை அவர் எழுப்பிவிட்டார். ஆகவே சத்ரபதி மீதும் பேஷ்வாவின் மீதும் பல தலைவர்களும் பகைமை கொண்டார். இவ்வாறு இரு வகைகளிலும் அரச அதிகாரம் மெலிவடைந்தது. சுருங்கக் கூறின் பாஜிராவிடம் வணக்க இணக்கப்பண்பு இல்லாததால் மராட்டியக் கூட்டரசு ஆற்றல் குன்றியது. சில குறைகள் அவர்பாலிருப்பினும் திட்டங்கள் தீட்டும் திறமையும் அவற்றை நிறைவேற்றும் ஆற்றலும் அவரிடம் சிறந்து விளங்கின. அவர் தன்மையும் கொள்கையும் முகலாயப் பேரரசின் வீழ்ச்சி நிலையும், சவாய் ஜெயசிங் போன்ற இராசபுத்திரத் தலைவர்களின் ஆதரவும் பாஜிராவின் வெற்றிக்குக் காரணங்களாம்.

பகுதி 5.

மஸ்தானி, சிம்ஞஜி அப்பா, பிரம்மேந்திரஸ்வாமி

மஸ்தானி : இவள் தோற்றத்தைப் பற்றி பலவகையான செய்திகள் வழங்குகின்றன. அவளைப் பாஜிராவுக்கு தந்தவர், சத்ராசால் என்றும், அசப்ஜா என்றும், அவளைச் சிறைப்பிடித்து வந்தவர் சிம்ஞஜி அப்பா என்றும் கதைகள் வழங்கும். சத்ராசாலுக்கு ஒரு முஸ்லிம் காமக்கிழத்தியிடம் பிறந்தவள் அவள் என்று கூறுவதும் உண்டு. அவள் நகைச்சுவையுடன் பேசும் பேரழகி; இசையிலும் நாட்டியத்திலும் தேர்ச்சி பெற்றவள். பல போர்க்களங்கட்குப் பாஜிராவுடன் அவள் குதிரை ஏறிச் சென்றதிலிருந்தே அவளுடைய ஆண்மை விளங்கும். அவள் காதலிலேயே பாஜிராவ் மூழ்கினர். பூனவில் அவர் கட்டிய ஷன்வார் வாடா அல்லது சனிவார அரண்மனையில் அவர் எடுத்த மஸ்தானி வாசல், அந்தக் காதலின் விளைவே ஆம். வருந்தத்தக்க அவள் முடிவினையும் அவள் மகனை ஓர் அந்தணராக மதிக்கச் செய்ய வேண்டும் என்ற பாஜிராவின் முயற்சி தோற்றதையும் முன்னரே பார்த்தோம்.

சிம்ஞஜி அப்பா (பி. 1708 - இ. 1740) : பேஷ்வாவின் இளவலான சிம்ஞஜி, குஜராத், மாளவப் போர்களில் பங்கு கொண்டார் (1728-9) ; 1736-ல் ஜஞ்சிராவின் சத்சீதியை முறியடித்துக் கொன்ருர்; பின்னர்ப்போர்ச்சுகீசியரிடமிருந்து பஸ்ஸீனைக் கைப்பற்றிப் பெரும் புகழ் கொண்டார். சுருங்கக்கூறின் சுய நலத்தைக் கருதாது பாஜிராவின் முயற்சிகளில் அவரோடு ஒத்துழைத்து அவரை ஊக்கிவந்தார். தம் அண்ணனுடைய வெற்றிகளைக்கண்டு பொருமைகொள்ளாது அவற்றிற்கு உதவியாகவே இருந்தார். அவர் வீரம் நிறைந்த படைத்தலைவர் மட்டுமல்லர் ; பேற்றத் தக்க நுண்திறமும் உலகியல் அறிவும், கவரத்

தக்க குணப்பண்புகளும் பெற்றவர். மஸ்தானியை அவர் வெறுத்தார். அது அவருடைய ஒழுக்கத்தின் சிறப்பைக் காட்டுகிறது. அவரது நற்பண்புகள் அவரைப் பேஷ் வாக்குடும்பத்தின் தலைவராக்கின. அவர் கல்வியில் மிக்க நாட்டம் உடையவர். பாஜிராவின் மக்களுடைய கல்விப் பயிற்சியில் அவர் கருத்துச் செலுத்தினர். அரசியல் நிர் வாகத்தில் தம் அண்ணனைவிட இவருக்கு ஆற்றல் மிக் கிருந்தது என்றுகூடக் கூறலாம். எலும்புருக்கி நோயி ஞல் இவர் இறந்தது அவரைச் சேர்ந்தோருக்கு ஈடு செய்யமுடியாததோர் இழப்பாகும் என்றே கூறவேண்டும் அவருக்கு ரக்மாபாயிடம் பிறந்தவர் சதாசிவராவ் பாவோ.

பிரம்மேந்திரசுவாமி : (பி. 1649-இ. 1745) பான்ஸ் லேயர், பேஷ்வாக்கள் முதலியோர் அன்புடன் போற்றிய பிரம்மேந்திரஸ்வாமி, இராமதாசரைப் போலவே சிறப்பும் செல்வாக்கும் பெற்று விளங்கினர். இரத்தினகிரி மாவட்டத்தில் தங்கியிருந்த அவர், 1728-இல் சதாராவுக்கு அண்மைக்குச் சென்ருர். ஜஞ்சிராவின் சீதியரும் அவரை ஆதரித்தனர். அவரது செல்வமும் செல்வாக்கும் பெருகின. முதலிரண்டு பேஷ்வாக்களுக்கு அவர், பணம் கடனைக் கொடுத்து உதவிவந்தார். பாலாஜி விசுவநாத் தின் வருங்காலச் சிறப்பை அவர் முன் கூட்டியே உணர்ந்து கூறினர். சாகுவை ஆதரிக்குமாறு அவர் பேஷ்வாவுக்கு அறவுரையும் கூறிவந்தார். தாராபாய்க்கு எதிராகச் சத்திரபதியின் கட்சியையே பின்பற்றினர். பாலாஜிவிசுவநாத், பேஷ்வாவாக அமர்வதற்கு அவரும் ஒரு காரணம், அவருடைய குடிலின் அண்மையிலிருந்த கோயிலைச் சத்சீதி 1727-இல் அழித்ததால் அவர் அச்சீதி களுக்கு எதிராக ஒரு சமயப்போரைத் தொடங்க வேண்டு மென்று போதித்தார். 1733-இல் பாஜிராவ், சீதிகளுடன் உடன் பாடுசெய்து கொண்டதைச் சுவாமி விரும்பவில்லை. 1736-இல் சிம்ஞஜி அப்பா, சத்சீதியைக் கொன்றபோது தான் அவருக்கு மனநிறைவு ஏற்பட்டது. அத்துறவி,

தக்கணக்கட்சியினரின் சூழ்ச்சிகளை எதிர்த்துப் பேஷ்வாக்களுக்கு உதவிபுரிந்துவந்தார். ஆங்கிரர்களுடனும் அவர் பகைமைகொண்டிருந்தார். அரசியல் நடவடிக்கைகளைப் பேஷ்வாக்கள் அவ்வப்போது அவருக்கு அறிவித்து வந்தனர். பஸ்ஸீனைக் கைப்பற்றியபிறகு சிம்ஞஜி அப்பெரியாருக்கு நிகழ்ச்சிகளை விளக்கி நீண்டதோர் முடங்கல் வரைந்தார்.

———

பகுதி 6.

ரகூஜி பான்ஸ்லேயின் கருநாடகப்படை யெடுப்பும் அவருடைய பிற்கால வாழ்க்கையும்.

கருநாடகப் படையெடுப்பு : (1740-1). ஸுல்பிகர் கானுடைய உதவித் தலைவரான தாவூத்கான், அவுரங்க சீபின் தளபதியான சாததுல்லாகானை பௌச்தார் அல்லது கருநாடகநவாப் (கவர்னர்) என்ற பதவியில் அமர்த்தினார். இந்தவகையில் வேலூருக்கு அருகில் பாலாற்றங்கரையில் உள்ள ஆர்க்காட்டைத் தலைநகராய்க் கொண்ட நிலையான "கருநாடக நவாப்பு நாடு" தோன்றியது. நிஸாமுக்குக் கீழ்ப்பட்டிருந்த ஏறத்தாழ 30 தென்னிந்திய நவாப்பு நாடுகளில் இதுவும் ஒன்றாகும். முதல் நவாப்பு சிறந்த ஆட்சிமுறை வல்லுநர். அவர் இறந்தபின் அவர் மருமகன் தோஸ்து அலி (1732—40) அப்பதவியை ஏற்றார். அவருடைய மருமகனே சந்தா சாகிபு. திருச்சிராப்பள்ளி நாயக்க அரசி மீனாட்சி, 1736-இல் சந்தாசாகிப் கையில் தோல்வியுற்றதை[1] முன்னரே கண்டோம். அவருடைய உடன்பிறந்தார் மதுரையைக் கைப்பற்றினார். தஞ்சாவூரின் "பெருமை சால்வேந்தர் களில் இறுதியானவர்"[2] எனச் சிறப்பிக்கப்படும் பிரதாப் சிங் (1739-'63) சந்தாசாகிப்பின் ஆக்கிரமிப்பினால் மிகவும் வருந்தி சதாராவின் உதவியை நாடினார். அதன் விளை வாக சாகு கர்னாடகப்படையெடுப்பை ரகூஜி பான்ஸ்லே

---

1. ஆர். சத்தியநாதஐயர்—மதுரை நாயக்கர்களின் வரலாறு.

(R. Sathianathaier, History of the Nayaks of Madura (1924) பக். 232-4

2. (K. R. Subramaniam, The Maratha Rajas of Tanjore) (1928) பக். 47.

K. R. சுப்பிரமணியம், தஞ்சை மராட்டிய அரசர்கள்; 108, பக். 249 ff.

யிடம் ஒப்படைத்தார். மராட்டியர் பேரழிவினை விளைவித் தனர். நவாப்பின் உவகை மாதர் புதுச்சேரிக்கு அனுப்பப் பெற்றனர். தமல் செருவுக் கணவாயில் கடும்போர் நிகழ்ந்தது. அதில் தோஸ்த் அலி உயிர்நீத்தார் (1740). திருவண்ணுமலை பெருந்துன்பத்துக்குள்ளாயிற்று. இறந்த நவாப்பின் மகன் சாப்தர் அலியுடன் அமைதி உடன்பாடு ஏற்பட்டது. பிரதாப்சிங்கின் கட்டளைப்படி மராட்டியப்படை சந்தாசாகிப்பை எதிர்த்துச் சென்று பரங்கிபேட்டை யைச் சூறையாடித் திருச்சிராப்பள்ளியை முற்றுகை யிட்டது. முற்றுகை மூன்று மாதகாலம் தொடர்ந்தது. அதற்கிடையில் ரகூஜி புதுச்சேரி கவர்னர் தூமாவை அச்சுறுத்தி ஒரு முடங்கல் எழுதினர். அதில் தம்முடைய போர்ச் செயல்களையும் அவர் அளக்கவேண்டிய கப்பத் தொகையையும் காட்டி, சந்தா சாஹிப்பின் மனைவியையும் மகனையும் அனுப்புமாறு கேட்டார். புதுச்சேரி கவர்னர் பின்வருமாறு மறுமொழி வரைந்தார் :–

"நீங்கள் உமது அரசருக்கு 50 ஆண்டுகளாகக் கப்பம் கட்ட வேண்டும்மென்று எழுதியிருக்கிறீர்கள். பிரெஞ்சுக் காரர் யாருக்குமே எவ்வித கப்பமும் செலுத்தியதில்லை. சந்தா சாகிப்பின் மனைவியார் எம் தலைவரான பிரெஞ்சு அரசரின் பாதுகாப்பில் புதுச்சேரியில் இருந்துவருகிறர். அவளை விடுவிப்பதைக்காட்டிலும் இந்தியாவில் உள்ள ஒவ்வொரு பிரெஞ்சுக்காரனும் உயிர்விடத் துணிந்துள் ளான்.'' இந்த மறுமொழியினின்றும் பிரஞ்சு கவர் னரின் மனேதிடத்தையும் தன்னம்பிக்கையையும் ரகூன் உணர்ந்தார். அவருடைய வலிமையின் இரகசியத்தை அறியும் நோக்கத்துடன் புதுச்சேரிக்கு ஒரு தூதுவனை அனுப்பிவைத்தார். வந்த தூதுவனுக்கு நகரத்தின் பாதுகாப்பு முறைகளை மரியாதையாகக் காட்டி, தூமா அவனுக்குப் பின்வருமாறு கூறினர். "உமது தலைவர் எங்கள் நகரத்தில், பொன், வெள்ளிச் சுரங்கங்களை எதிர் பார்த்திருந்தால் எங்களிடம் அவை யாதுமில்லை என்று சொல்லுங்கள். ஆனல், எங்களை எதிர்த்து வருபவர்களை முறியடிக்க மிகுதியான இரும்புக் கருவிகள் எங்களிடம்

உண்டு.'' பத்துச் சீசாக்கள் சாராயத்துடன் தூதர் திரும்பினர். ரகூஜியின் மனைவி அவ்வளவையும் குடித்து விட்டு மேலும் வேண்டுமென்று விரும்பினள். உடனே ரகூஜியின் விருப்பத்திற்கிணங்க 30 சீசாக்கள் சாராயத்தை தூமாஸ் அனுப்பினர். ரகூஜியும் சாராயத்தைக் குடித்து மகிழ்ந்தார். தூமாவிடம் அவர் மேலும் பகைமை கொள்ள வில்லை. திருச்சி வீழ்ந்த பிறகு, 1741-ல் அவர் சதாராவுக் குத் திரும்பினர். சந்தா சாகிப் கைதி ஆனர். சாந்தாஜி கோர்படேயின் உறவினரான முராரிராவ் கோர்படேயைத் திருச்சியின் தலைவனுக அமர்த்தினர். இந்த ஏற்பாடு, 1742-ல் ஆர்க்காட்டு நவாப் சாப்தர் அலி கொலையுண்ட பின் கருநாடகப் படையெடுப்பை மேற்கொண்ட அசப் ஜாவினல் குலைந்தது என்பதை முன்னரே குறிப்பிட்டோம். ஆர்க்காட்டு நவாப்பாக அன்வாருத்தீன் (1743–49) அமர்த்தப்பெற்ருர்.

ரகூஜியின் பிற்கால வாழ்க்கை : 1742-இல் மராட்டிய பாஸ்கர ராமுடைய வங்காளப் படையெழுச்சியும், அதனை யடுத்து ரகூஜி பான்ஸ்லேயின் படையெடுப்பும், வங்கா ளம், பீஹார், ஒரிஸ்ஸாவின் சௌத் சர்தேஷ்முகிக்குப் பதிலாக 1751-ல் மராட்டியருக்கு ஒரிஸ்ஸாவை விட்டுக் கொடுத்ததும் மேலே கூறப்பட்டன. கிழக்கிந்தியாவில் பல முயற்சிகளைச் செய்துகொண்டிருந்த ரகூஜி இடை யிடையே பாலாஜிராவுடன் போர் புரிந்தார். ஆனல், சாகுவின் மத்தியஸ்தத்தால் 1743-ல் இருவரும் நட்பு பூண்டனர். ரகூஜி, பாலாஜியைப் பேஷ்வா வாகவும், 1750-ல் இராமராசரைச் சத்திரபதியாகவும் ஏற்றுக்கொண் டார். 1755-ல் தாம் இறக்கும் வரை ரகூஜி பேஷ்வாவுடன் ஒத்துழைத்தார். ரகூஜி இறந்தவுடன் அவரது மனைவி மார் பதின்மூவர் உடன் கட்டை ஏறினர். அவர் இராணுவ வீரராகப் பணியாற்றிய காலத்தில் மிகப் புகழ்பெற்று விளங்கினர். சாகுவின் நல்லெண்ணத்தை அவர் பெற் றிருந்த போதிலும், தம்முடைய நான்கு மக்களில் ஒருவ னுக்கேனும் சதாரா அரியணையை ஈட்டிக்கொடுக்க முடிய

வில்லை. பாலாஜிராவ், பேஷ்வாவாக வருவதைத் தடுக்க முயன்றும் அது அவரால் கைகூடவில்லை. பின்னர் அப் பேஷ்வாவை நிலையாக விலக்கிவிட அவர் செய்த முயற்சி யும் வீணாயிற்று. இறுதியில், படைத்திறமை வாய்ந்த வீரர் அறிவுத்திறமை மிக்க அரசியல் வல்லுநருக்கு அடிபணிந் தார்.

பகுதி 7.

பாலாஜி ராவ் (1740 — 61)

அரசியல் வாழ்க்கையின் முதற் பகுதி

பேஷ்வாவாக அமர்தல் (1740): பாலாஜி பாஜி ராவ் (பாலாஜி ராவ் அல்லது நானசாகிப்) 1721-ல் பிறந்தார்; சிறிய தந்தை சிம்ஞஜியால் வளர்க்கப் பெற்ருர். இளமையில் போர்ப்பயிற்சியை விட மிகுதியாக அரசதந்திர முறைப் பயிற்சியைப் பெற்ருர். சாகுவின் அன்பைப் பெற்று அவருடன் மிராஜ் போரில் ஈடுபட்டார். ரகூஜி பான்ஸ்லே முதலிய பலருடைய எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் அவர் தந்தை இறந்த இரண்டு திங்கள்களுக்குள்ளாகவே சாகு, பாலஜிராவைப் பேஷ்வா ஆக்கினர். சத்திரபதி அவருக்குக்கூறிய அறிவுரையாவது: "உம் தந்தையின் பேரவாவை நிறைவேற்றுக; அட்டாக் பகுதியைக் கடந்து உமது படையைச் செலுத்துவீராக." இவ்வண்ணம் பாலாஜீராவின் முன்னேற்றக் கொள்கையை அவர் மகனர் தொடர்ந்து நிறைவேற்றுவார் என்பது உறுதியாயிற்று. பிள்ளையில்லா சாகு இறந்த பின் தமது மகன் முடிபுனைவதற்கு உதவியாக இருக்கக் கூடிய ஒரு நண்பன், பேஷ்வாவாக வேண்டுமென்ற விருப்பம் ரகூஜிக்கு இருந்தது. அதனற்ருன் பாலாஜி ராவ் பேஷ்வா ஆவதை அவர் தடுக்க முயன்ருர். கோலாப்பூரின் II-ம் சாம்பாஜியே, சாகுவுக்குப்பின் அரியணை பெற வேண்டுமென்பது பாலாஜியின் விருப்பமாகும். ராவ் என்ற க்ஷத்திரிய பட்டத்தை இவர் ஏற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது. வைதீகப் பற்று மிக்க பாலாஜி விசுவநாத் அப்பட்டத்தை சூடிக்கொள்ளவில்லை என்பதும் நோக்கத்தக்கது.

பாலாஜியின் படையெழுச்சிகள் (முற்பகுதி): தமது பொருள் நெருக்கடியைத் தீர்த்துக்கொள்ளும் நோக்கத்

துடனேயே, பாலாஜி தமது ஆரம்பப் படையெடுப்புக்களை மேற்கொண்டார். அவர் நாஞுபுரந்தரர்க்குப் பின்வருமாறு எழுதினர் :- "என் தந்தை, பகீரதனைப்போல, 24 ஆண்டுகள் வடக்கிலிருந்து தெற்கில் தங்கம் பாயும்படி செய்தார்; இந்த வட அருவியும் தென் அருவியும், இடையே இடையீடு படாமல் பூனுவிற் சென்று கூடுமானல் நான் என்னுடைய கடன்களை ஒழிப்பதுடன் இவ்வுலகிலும் மறு உலகிலும் என் பணிகட்கு ஏற்ற பரிசைப் பெறுவேன்."* அவருடைய வட இந்தியப் படையெடுப்பு, 1740-ல் அவர் சிறிய தந்தை சிம்ஞஜி இறந்ததால் சிறிது தடைபட்டது. அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் மாளவத்தின் மீது அவர் படையெடுத்தார். வழியில் தமக்குப் பகையாகக் கலகம் செய்த தமது மகனுக்கு எதிராக மராட்டியரின் உதவியை வேண்டிநின்ற அசப்ஜாவிடம் 15 லட்ச ரூபாய் பெற்ருர். மேலும், நிஸாம் ஒருவேளை, தம்மை எதிர்க்கக் கூடுமென்று எண்ணிப் பாலாஜி, தம் தந்தையின் கொள்கைப்படி, சவாய் ஜெயசிங்குடன் மராட்டியரின் கூட்டுறவை வலிமைப்படுத்திக் கொண்டார். 1742-ல் அவர் காரா, மண்டலா, (மத்திய மாகாணம்) என்ற இடங்களைக் கைக்கொண்டார். அங்கே ரகூஜி பான்ஸ்லேயுடன் போரிட நேர்ந்தது; பண்டல் கண்டுக்குச் சென்று அங்கே சில இடங்களையும் கைப்பற்றினர். இதை அடுத்து, பேரரசரின் வேண்டுகோளுக் கிணங்கி, வங்காள அலிவர்டி கானுடன் ஒத்துழைத்து, ரகூஜி பான்ஸ்லேயை இருமுறை முறியடித்தார். பான்ஸ்லே உடன்பாட்டுக்கு இணங்க நேர்ந்தது. அவ்வுதவிக்காக முகலாயப் பேரரசர் பேஷ்வாவை மாளவத்தின் கவர்னராக்கினர் (1743). சாகு அதே ஆண்டில் பேஷ்வாவுக்கும் ரகூஜிக்கும் அமைதி உடன்பாடு செய்து வைத்தார். 1745-ம் ஆண்டினிறுதியில் பேஷ்வா, சதாசிவராவைக் கருநாடகத்துக்கு அனுப்பினர். சாகுவின் உடல் நலம் குறையவே அமைதி வேண்டியிருந்தது. ஆனல் அவருடைய இரு

* *93,* பக். 71-2.

மனைவியருக்கு மிடையே போராட்ட மேற்பட்டதால் அரண்மனையின் அமைதி குலைந்தது ; கட்சிச் சண்டை பெருகியது. சாகுவின் விருப்பப்படி பேஷ்வா, அவ் விரு அரசியரும் கடைப்பிடிக்க வேண்டிய பத்துச் சட்டங் களை வகுத்தார். அவர்களும் அவற்றை ஏற்றுக் கொண்டனர். ஆயினும் நிலைமை மாறவில்லை. சக்வார்பாயின் சூழ்ச்சியின் விளைவாக 1747-ம் ஆண்டின் தொடக்கத்தில் பாலாஜி பதவியினின்று விலக நேர்ந்தது. ஆனால் அப் பதவியை ஏற்கும் ஆற்றலுள்ளவர் யாருமில்லாமையால், விரைவில் அவர் மறுபடியும் பேஷ்வாவாக அமர்த்தப் பெற்ருர். 1743-ல் சவாய் ஜெயசிங் இறந்த பின்பு ஜெயபுரி யில் அரியணைக்காகப் போட்டி ஏற்படவே இரு கட்சிகள் தோன்றின. அதனுல் இரு திறத்தார் பங்கிலும் தலையிட மராட்டியருக்கு வாய்ப்புக் கிடைத்தது. 1747-8-ல் பாலாஜி இராசபுதனத்தில் படையெடுத்துச் சென்ருர். ஜெயசிங் கின் குமாரர்களான ஈஸ்வரி சிங், மாதவ சிங், தமக் கிடையே நிகழ்த்திய போரும், 1750-ல் முன்னவர் தற் கொலை செய்து கொண்டதும், பின்னவருடைய வெற்றியும், அடுத்த ஆண்டில் மராட்டியர் கொலையுண்டதும் முன் னரே கண்டோம். இவ்வாறு பாஜி ராவ் தொடங்கிய இராசபுத்திரரின் நட்பும் கூட்டுறவும் இப்பொழுது கைவிடப்பட்டன.

பகுதி 8.

சாகு (1708 - 49) பண்புகளும் கொள்கையும்

சாகுவின் இறுதி ஆண்டுகளில் அவருடைய நோயும் அவர் மனைவி சக்வார் பாயின் அடாச் செயல் களும் பெரும் துன்பமாகவே முடிந்தன. சாகுவின் அமைதி வாழ்க்கைக்கு ஓரளவு காரணமாயிருந்த ஸ்ரீபத் ராவும் நற்பண்பு மிக்க சகுணபாயும் அவருக்கு முன்பே இறந்து விட்டனர். மேலும் மகப்பேறு இல்லாத குறை யும் அவர் மனத்தை வாட்டியது. தம்மை அடுத்து கோலாப்பூர் II-ம் சாம்பாஜி பட்டமேற்பதை அவர் விரும்ப வில்லை. ரகூஜி பான்ஸ்லேயின் மூன்ரும் மகனை முதோ ஜியைத் தத்து எடுத்துக் கொள்ள ஒப்புக் கொண்டார். அவ்வமயம் தாராபாய் இராமராசன் என்ற 27 வயதுள்ள தனது பெயரன் உயிருடன் இருப்பதாக வெளியிட்டுச் சத்திரபதியைத் திடுக்கிடும்படி செய்து விட்டாள். இறக்குந் தருவாயில் இருந்த மன்னர் இராமராசரின் இருப்பைப் பற்றிய கதையை நம்பினர்; தமது இளவரசனுகவும் ஏற்ருர். அவர் தாம் எழுதிய இரு முடங்கல்களைப் பேஷ் வாவுக்கு அனுப்பினர். அவற்றில் இராச்சியம் நடைபெற வேண்டிய முறையை அறிவித்தார். "நீரே படைகள் யாவற்றையும் அடக்கியாள வேண்டும். நமது உறவின ரில் யாரேனும் ஒருவர் ஆட்சியில் தொடர்ந்திருக்க வேண்டும். ஆனல் கோலாப்பூரிலிருந்து யாரையும் கொண்டுவர வேண்டாம். சிட்னிஸுக்கு யாவற்றையும் விளக்கியுள்ளோம். எமது விருப்பத்தை அவர் கூறுவார். அதன்படி செயலாற்றுக. எம் குலத்தவரிடம் அன்புடனும் கீழ்ப்படிந்தும் நடந்து கொள்ளுங்கள். எமது பின் வழி யினர் உமது அலுவல்களில் தலையிடமாட்டார்கள்." இவ் வண்ணம் பேஷ்வாவின் ஏற்றம் உறுதியாயிற்று. பாலாஜி ராவைக் கொலை செய்ய எண்ணிய சக்வார்பாயின் சூழ்ச்சி

தோல்வியுற்றது. 1749-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ம் நாள் சாகு இறந்தார்.

சாகுவின் தன்மை : 1682-ல் பிறந்த சாகு 1708-ல் முடிபுனைந்த வரையில் அவருடைய வாழ்க்கையின் ஏற்றத் தாழ்வுகளை நாம் கண்டோம். அவர் தாராபாயுடன் நடத்திய போர் 1712-ல் முடிவெய்தியது. 1713-ல் பேஷ்வா பதவிக்குப் பாலாஜி விசுவநாதர் உயர்த்தப்பட்டதிலிருந்து சாகுவின் வாழ்க்கை ஒருவகையில் சாரமற்றது என்று கூறலாம். ஏனெனில், அரசியல் விவகாரங்களைப் பேஷ்வாவே ் கைக்கொண்டிருந்தார். ஆயினும், 1739-ல் மிராஜ் (கோலாப்பூர் அண்மையில்) போரைத் தொடங்கி அதில் சாகு வெற்றி பெற்றார். ஆனால் அவர் போரிலோ அரசியலிலோ பெரிதும் ஈடுபட்டவர் அல்லர். அவர் அமைதியையே விரும்பினார்; அரசகுலப் பெருமையை நிலைநிறுத்தினார்; தம்மைவிடச் சிறந்த முறையில் செயலாற்றக் கூடிய பேஷ்வா முதலியோரிடம் பொறுப்புக்களை விட்டு விட்டார். அன்பும் பெருந்தன்மையும் அறச்சிந்தையும் அவரிடமிருந்தன. அவர் தம்மைக் கொல்ல நினைத்த ஒவ்வொருவருக்கும் ஓர் பொற்கடகம் பரிசளித்தார் என்றோர் குறிப்பு உண்டு.

“ இன்னாசெய் தாரைஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்துவிடல் ”

என்ற கொள்கையைப் பின்பற்றினார் போலும். ஆனால் II-ம் சாம்பாஜியிடம் மட்டும் அவர் வெறுப்பே கொண்டிருந்தார். பிறர் சச்சரவு செய்துகொண்டிருப்பதை மட்டும் அவரால் பொறுக்க முடியவில்லை. ஆகவே, 1731-ல் பாஜி ராவுக்கும் உமாபாய் தபடேக்குமிடையேயும், 1743-ல் பாலாஜி ராவுக்கும் ரகூஜி பான்ஸ்லேக்கும் இடையேயும் எழுந்த வேற்றுமைகளை மாற்றி நட்பை நிலை நாட்டினார். பிறர் பண்புகளை ஆராய்ந்துத் தக்கோரைத் தேர்ந்தெடுப்பதில் அவர் திறமை வாய்ந்தவர். முதல் மூன்று பேஷ்வாக்களை அவர் தேர்ந்தெடுத்ததே அதற்குச் சான்றாகும். மேலும் அவர்கள் அலுவல்களில் தலையிட்டு அவர்களுக்கு இடையூறு விளைவிக்க அவர் விரும்பவில்லை. ஆங்கிலேயத்

தலைவர் கோர்டனைப் பார்த்து அவர் பின்வருமாறு கூறினர் :—“ஆங்கிலேயராகிய நீங்கள் நற்பண்பு வாய்ந்தவர்கள் ; நேர்மையானவர்கள் ; வாணிகம் தவிர வேறு நோக்கம் உங்களுக்குக் கிடையாது. மதச்சார்பு பற்றி நீங்கள் ஒருவரையும் துன்புறுத்துவதில்லை.”*

நன்றியறிவு, சாகுவின் பிறிதொரு சிறந்த பண்பு. அவுரங்கசீபினிடமும் தாம் சிறையிலிருந்த காலத்தில் தமக்குத் தாய்போலுதவிய அவருடைய • இரண்டாவது மகளிடத்திலும் மிக நன்றியறிவு பாராட்டினர். முகலாயப் பேரரசரின் சமாதியைச் சென்று கண்டார். தம்மை முகலாயப் பேரரசைச் சார்ந்திருப்பவராகவே அவர் கருதி வந்தார். கண்டியா எனப் பெயர் பெற்ற அவருடைய நாய் அவர் உயிரைக் காப்பாற்றிய நன்றிக்காகச் சாகு அதை ஒரு “ ஜாகீர்தார் ” ஆக்கினர். இது அவரிடம் பொலிந்த நகைச்சுவைப் பண்பைக் காட்டுகிறது. அனைத்திற்கும் மேலாக அவர் மிக்க சமயப்பற்றுடையவர். மகப்பேறு இல்லாமைக்காக மிகவும் வருந்தினர். பிரம்மேந்திர சுவாமியிடமும் நாராயண தீட்சிதரிடமும் அவர் அன்பு கொண்டொழுகினர். அவர் பழமையிற் பற்று கொண்டவர். “ பழையனவற்றை அழிக்காதே ; புதியனவற்றைப் புகுத்தாதே ” என்பது அவர் கொள்கை. சுருங்கக்கூறின் முன்னேற்றப் பான்மைக்குரிய எண்ணங்கள் அவரிடமில்லை. அவரிடம் வீர உணர்ச்சி இருந்தபோதிலும் இராணுவத் தொடர்பான செயல்களை வெறுத்தார். இளமைப் பருவத்தில் முகலாயரின் உவளகத்தில் வாழ்ந்த காரணத்தால் அவரிடம் பெண்தன்மையும் இன்ப விருப்பமும் சோம்பேறித்தனமும் மேலோங்கின. ஆயினும் வேட்டையாடுவதிலும் மீன் பிடிப்பதிலும் அவருக்கு விருப்பமுண்டு. முடிவாக, மனைவி சக்வார்பாயின் முரட்டுத் தன்மையை அவரால் அடக்க முடியவில்லை.

கொள்கை : இணக்கப்படுத்துவதும் உள்ளவற்றைப் போற்றிக் காப்பாற்றுவதும் சாகுவின் தன்மையின் அடிப்

---

* *54, பக். 454.*

படைப் பண்புகளாம். ஆனால் ஜாகீர்முறையை அவர் ஊக்கியது அரசியலுக்கே அழிவு விளைத்தது. அவரை ஒரு பொம்மை அரசர் என்று கூறுவதிற்கில்லை. பாலாஜி ராவின் பேரவாவை அடக்கி ரகூஜி பான்ஸ்லேக்கு ஆதரவு அளித்த அவர் செயல் குறிப்பிடத்தக்கது. மராட்டியத் தலைவர்கள் அவருக்கு மரியாதை செலுத்தினர் எனினும் அரசியலில் அவருக்கிருந்த செல்வாக்கோ கூட்டரசு முறைக்கு இடையூறு விளைத்தது. ஆனால் அவருடைய செல்வாக்குத் தனிப்பட்ட அவரைப் பொறுத்ததேயன்றி பதவித்துறையைப் பொறுத்ததன்று. அவருடைய நீண்டகால ஆட்சியில் அரசரது அதிகாரம் குறைந்து பேஷ்வாக்களின் ஆதிக்கம் வலுத்து வந்தது. அவரை விக்டோரியா மகாராணியுடன் ஒப்பிடுவர்; ஆனால் மக்களை ஆட்சிபுரிவதில் உள்ள பல சிக்கல்களை அவர் அறியாததால் ஆற்றல் வாய்ந்த பேஷ்வாவிடம் சர்வாதிகாரமும் அமையும்படி ஏற்பட்டுவிட்டது. சுருங்கக் கூறின் சாகு ஒரு பெரிய அரசர் அல்லர்; ஆயினும் அவர் நற்பண்புடைய அரசர் எனக்கூறலாம்.

---

* *99, பக். 226.*

பகுதி 9.

தாராபாயின் இறுதி வீழ்ச்சி

சாகு இறந்தவுடன் சக்வார் பாய் உடன் கட்டை ஏறினர். 1750-ஆம் ஆண்டு சனவரி மாதம் நான்காம் நாள் இராமராசர் முடிசூடினர். தாராபாயின் ஆசையும் ஆற்றலும் நாளுக்குநாள் வளர்ந்து வந்தன. இராம ராசருடைய வாய்ப்புக்களைப் பெருக்கினல் அதன் மூலம் அவரையும் பேஷ்வாவையும் அடக்கி ஆளலாமென்று அவர் கனவுகண்டார். ஆனல் விரைவில் பாலாஜிராவ் பணிந்து நடக்கக்கூடியவர் அல்லர் என்பதைக்கண்டு கொண்டார். தாராபாயின் திட்டங்களை பேஷ்வா அழித் தார். அவளுடைய கட்சியினரிடமிருந்து அவளைப் பிரிப் பதில் வெற்றிகண்டார். இராமராசரையும் பீஷ்வா தம் வசப்படுத்திக் கொண்டார். 1750-ஆம் ஆண்டு சாங் கோலா (ஷோலாப்பூர் மாவட்டம்) ஒப்பந்தப்படி பேஷ்வா வின் அறிவுரைப்படி அரசியலை நடத்த இராமராசருடன் கோவிந்தரரவ் சிட்னிஸ் இருத்தல் வேண்டு மென்று முடிவு செய்யப்பட்டது. தாராபாயின் சினம் அளவுகடந் தாயிற்று. அவள் சத்திரபதியைக் கைப்பற்றி சதாராவில் சிறைப்படுத்தினள். அதன்பின் ஆயுட்காலம் முழுவதும் அவர் சிறையிலேயே இருந்தார். இவ்வண்ணம், பேஷ் வாக்களின் ஆதிக்கவளர்ச்சிக்கும் பான்ஸ்லேக்களின் வீழ்ச்சிக்கும் தாராபாய் அடிகோலியதைக் காண்கிரும். 1751-இல் பேஷ்வா, ஐதராபாத் படையெடுப்புக்காகப் பூனுவுக்குச் சென்றிருந்தபொழுது தாராபாயும் உமாபாய் தபடேயும் மகளிர்போர் (1751–2) தொடுத்தனர். ஆனல் பாலாஜி விரைவில் அதை முடிவுக்குக் கொண்டுவந்தார். எனினும் சதாராவில் தாராபாய் தம் நிலையைக் காப் பாற்றிக்கொண்டு ஒரு பயங்கர ஆட்சியை ஏற்படுத்தினள். இராமராசரின் வாழ்க்கை அவலமுறும்படி செய்தாள். ஆனல் இறுதியில் பேஷ்வாவுக்கு அவள் பணிய நேரிட்

டது. சத்திரபதியைச் சிறையிலிருந்து விடுவிக்க அவள் மறுத்துவிட்டாள். பாலாஜியும் அதுபற்றி அதிகம் முயல வில்லை (1752). இருதிறத்தாரும் ஜெஜுரியில் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்துகொண்டனர். தாராபாய் ஒரு ஆலயத்தில் சென்று இராமராசர் உண்மையில் தன் பெயரன் அல்லன் என்றும் அவன் ஒரு நாடோடிப் பாடகன் என்றும் உறுதிகூறினாள். அரசகுலப் பெருமை அறவே ஒழிந்தது. தாராபாயை பேஷ்வா வென்றார். ஆயினும் தாராபாய், பேஷ்வாவின் பகைவர்களுடன் இணைந்து உள்நாட்டு வெளிநாட்டுக் கலங்களில் பங்கு கொண்டார். பானிப்பட்டுப்போரின் விளைவைக் கண்ட பின் அவர் தமது 86-வது வயதில் இறந்தார் (டிசம்பர், 1761).

———

பகுதி 10.

பேஷ்வாக்களின் முன்னேற்றம்

பலபடிகள் : 1713–20-இல் பாலாஜி விசுவநாத் மாராட்டியக் கூட்டரசையும் பொருளமைப்பு முறையையும் அமைத்து ஒழுங்கு செய்ததுடன் அரச குலத்தவருக்குக் கூட்டரசு உறுப்பினர் மாத ஊதியம் கொடுத்ததானது அரச அதிகாரத்தைக் குறைத்து பேஷ்வாவின் அதிகாரத்தைப் பெருக்கியது. பாஜிராவ் 1720-ல் பேஷ்வாவாக அமர்ந்தது, அப்பதவி வழிவழி உரிமை ஆனதைக் காட்டுகிறது. முகலாயரைப் பகைத்துக்கொள்ள விரும்பாத சாகு 1723-இல் அவர்களை எதிர்த்து முன்னேறும் பேஷ்வாவின் கொள்கையை ஏற்றுக் கொண்டமை அவ்வமைச்சர்களின் ஆதிக்கத்தை உணர்த்தும். பாஜிராவ் 1730-ல் பூனுவில் சன்வடாவார் அல்லது சனிவார அரண்மனைக்குக் கடைக்கால் நாட்டினார். அக்கட்டடம் பேஷ்வாக்களின் ஆதிக்கத்திற்கும் பிற்காலத்தில் பூனு அவர்களது தலைமை நகராக ஆவதற்கும் ஒரு அடையாளமாகும். 1731-ல் தபாய் போரில் படைத் தலைவர் திரும்பக் ராவ் தபடே மீது பேஷ்வா அடைந்த வெற்றி முழு அதிகாரத்தையும் அவரிடம் கொண்டு சேர்த்தது. 1736-ல் பேரரசர் பேஷ்வாவைத் தக்கணத்தின் சர்தேஷ் பாண்டேயாகச் செய்தார். 1740-ல் பாலாஜி ராவ் பேஷ்வா ஆனதும், அவர் தந்தையின் முன்னேற்றக் கொள்கையை அவர் பின்பற்றத் தொடங்கியதும் பேஷ்வாப் பதவியின் பரம்பரைத் தன்மையை உறுதி செய்தது. 1749-ல் சாகு இரண்டு முடங்கல்கள் உருவில் எழுதிய உயில், பேஷ்வாவிடம் அரசியலை ஒப்படைத்து அவருக்கு உரிமைவழங்கியது. பேஷ்வாவின் ஆதிக்கத்தைச் சத்திரபதியே ஏற்றுக்கொண்டதை காண்கிறோம். அடுத்த ஆண்டில் பேஷ்வாவின் விருப்பப்படி இராமராசர் பூனுவுக்குச் சென்றார். இவ்வாறு சதாராவைக் கீழ்ப்படுத்தி செயல்

வகையில் பூனு மராட்டியத் தலை நகராகியது. அதே ஆண்டில் நிகழ்ந்த சங்கோலா ஒப்பந்தம் அரசர் அமைச்சர்கட்குக் கீழ்ப்படியுமாறு செய்தது, 1752-இல் தாராபாயின் இறுதி வீழ்ச்சியும் இராமராசர் ஒரு நாடோடிப் பாடகன் என்ற அவ்வம்மையாரது உறுதியுரையும், அவர் ஆயுள் முழுவதும் அவரிடம் கைதியாக இருந்ததும் பேஷ்வாவின் ஆதிக்கம் மேலோங்கச் செய்து சத்திரபதியின் சிறப்பைக் குன்றச்செய்தது. பேஷ்வாவின் ஆதிக்க வளர்ச்சியைக் கண்டு யாவரும் வியப்புறுவதற்கில்லை. அது இயற்கையாகவும் நாளடைவாகவும் தானே வளர்ந்து சிறந்தது.

காரணங்கள் : முதல் மூன்று பேஷ்வாக்களின் ஆற்றலும் முயற்சிகளும் மராட்டிய வரலாற்றில் அமைச்சர்களின் செல்வாக்குக்குக் காரணமாயின. சாகுவின் ஆற்றலின்மையும் இராமராசரின் பிறப்பு வரலாறும் மேலும் அந்நிலைக்குத் துணை செய்தன. தாராபாயின் பேரவாவும், தலையீடும், சக்வார் பாயினுல் தூண்டப்பெற்ற அரண்மனைக் கலகங்களும் பேஷ்வாவின் ஆதிக்கத்திற்குப் பக்கத் துணையாக நின்றன. பான்ஸ்லேக்களின் அரசாட்சியில் சிறிது தடைப்பட்டிருந்த சாதிப் போராட்டத்தை, சித்பவன் அந்தணர்களான பேஷ்வாக்களின் ஆதிக்கம் பெருக்கிற்று என்றாலும் முதல் மூன்று பேஷ்வாக்களின் ஆட்சி மராட்டிய வரலாற்றில் மிகவும் ஒளி சிறந்த பகுதி என்பது மறக்க முடியா உண்மை.

———

பகுதி 11.

பாலாஜிராவும் ஆங்கிரரும் புஸ்ஸியும்

ஆங்கிரரின் அழிவு (1755-6) : கானோஜி ஆங்கிரேக்கு ஆறு புதல்வர்கள். அதில் முறையாகப் பிறந்தவர் சாம்பாஜி மற்ற இருவரான மானாஜியும் துளாஜியும், வரன் முறையிற் பிறந்தவரல்லர். அவர்களுக்கிடையே நிலவிய போராட்டம் அவர்கள் வலிமையைக் குன்றச் செய்தது. பாலஜிராவ் அவர்களை அடக்கி ஒடுக்கத்திட்டமிட்டார். சாம்பாஜி ஆங்கிரே ஏறத்தாழ 1739-ல் இறந்தார். துளாஜி அவரை அடுத்துப் பட்டமெய்தினார். அவர் மானாஜியை எதிர்த்துவந்தார். பிரம்மேந்திர சுவாமி அவருக்குப் பின்வரும் அறவுரைகூறினார்:- "நீ ஓராயிரம் குற்றங்கள் புரிந்துள்ளாய் .... மானாஜியின் குடும்பமகளிரை அவர் வீட்டுக்கு அனுப்பிவிடு. உடன் பிறந்த நீங்கள் யாவரும் ஒற்றுமையாக இருக்கவேண்டும். அருஞ்செயலாற்ற ஆசைப்படுங்கள்........" ஆனால் இதைத் துளாஜி பொருட்படுத்தினாரில்லை. அவர் தாராபாயுடனும் இராமராசருடனும் சேர்ந்துகொண்டு பாலாஜியை இழித்துக்கூறினார். மேலும் பெரிய எதிரியாக மாறிக் கடற் போரில் சுவர்ணதுர்க்கம், விசயதுர்க்கம் என்ற இடங்களை கைப்பற்றினார். இறுதியில் மானாஜி, பேஷ்வா, ஆங்கிலேயர் ஆகிய மூவரும்கூடி அவரை எதிர்த்தார் (1755). சுவர்ணதுர்க்கத்தை காமடோர் ஜேம்சும், 1756-இல் கிளைவ், வாட்சன் ஆகியோர் தலைமையில் கெரியாவை ஆங்கிலேயரும் துளாஜியிடமிருந்து கைக்கொண்டனர். துளாஜி ஆங்கிரே பேஷ்வாவின் கைதியானார். இவ்வண்ணம் ஆங்கிரரை அழிக்கவேண்டுமென்ற பாஜிராவின் திட்டத்தைப் பாலாஜிராவ் ஆங்கிலேயர் உதவியுடன் நிறைவேற்றினார்.

புஸ்ஸி : பாலாஜிராவ், ஐதராபாத்தின் சலபத்ஜங்கின் இராச்சியத்திற்குள் படையெடுத்துச் சென்றார்.

1751-இல் தாராபாயின் தொந்தரவுகளால் அது தடைப் பட்டது, மீண்டும் பேஷ்வா அந்த முயற்சியைத் தொடர்ந்து ஊக்கத்துடன் மேற்கொண்டார். புஸ்ஸி பூனு வின் மேல் படையெடுக்க முயன்றதைப் பேஷ்வா, 1752-இல் பால்சி உடன்படிக்கையின் மூலம் தோற்கடித் ததை முன்னரே பார்த்தோம். பின்னரும் பேஷ்வா, அப் பிரஞ்சுத் தலைவரின் ஆதிக்கத்தை ஐதராபாத்தில் குலைக்க எண்ணினர். ஆனால் புஸ்ஸி வடசர்க்காரை கைப்பற்றித் தமது நிலைமையை வலிமைப்படுத்திக்கொண்டார் (1753). 1754-5-இல் புஸ்ஸியும் பாலாஜிராவும் மைசூரின்மேல் படையெடுத்தனர். அவ்வமயம் இருவருக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது, பிரெஞ்சுத் தளபதியின் உயர்ந்த பண்புகள், ஆற்றல் முதலியன பேஷ்வாவின் உள்ளத் தைத்தொட்டன. அவரைத் தம்மிடம் வந்து பணியில் அமருமாறும் அழைத்தார். ஆனால் அவர் அதை வணக் கத்துடன் மறுத்துவிட்டு ஐதராபாத்தில் தமது நிலையை வலிமையுறச்செய்து கொள்வதிலேயே முனைந்திருந்தார். மராட்டிய சிவாஜியின் காலத்திலிருந்து கைப்பற்ற முடி யாமலிருந்த சிவநேர் என்ற இடத்தை பாலாஜி கைக்கொண்டார். எனினும் பேஷ்வா, புஸ்ஸியை அடக்கித் தம்வசப்படுத்தும் முயற்சியில் தோல்வியுற்றார். ஆனால் அதற்கிடையில் பிளாசிப்போர் நடந்ததில் ஆங் கிலேயர் வெற்றிமாலை சூடியதால், பிரெஞ்சு அதிகாரி லாலி, புஸ்ஸியை ஐதராபாத்திலிருந்து திரும்ப அழைத் துக்கொண்டார். பாலாஜிராவும் சதாசிவராவும் சீரங்கப் பட்டணம் வரை வெற்றியுடன் சென்று மைசூர் செலுத்த வேண்டிய திறையைப் பெற்றனர் (1757). இரண்டு ஆண்டுகட்குப்பின் கோபால் ராவ் பட்வர்த்தன் என்பார் பங்களூரை முற்றுகையிட்டார். ஐதர் அலியின் தூண்டு தலால் மைசூர், மராட்டியருடன் மீண்டும் பகைத்துக் கொண்டதே அதற்குக் காரணமாகும். இறுதியில் ஐதரின் முயற்சியால் இருதிறத்தார்க்கும் அமைதி உடன் பாடு ஏற்பட்டது.

———

பகுதி 12.

உத்கீரும் பானிப்பட்டும்

புகழ்பெற்ற உத்கீர் போர் (3-2-1760): சலபத் ஜங்கின் ஆட்சிக்குட்பட்ட ஐதராபாத்துக்கு எதிராக அவருடைய கலகக்கார உடன் பிறந்தாரான நிஸாம் அலியுடன் சேர்ந்து பாஜிராவ் செய்த முயற்சிகள் யாவும் இரு உடன்பிறந்தார்க்கு மிடையே ஏற்பட்ட ஒப்பந்தத் தால் வீணாயின. நிஸாம் அலியுடன் மராட்டியர் செய்து கொண்ட கூட்டுறவு முறியவே 1759-ஆம் ஆண்டில் போருக்கான முன்னேற்பாடுகள் நடைபெற்றன. ஐதரா பாத்தில் பீடார் மாவட்டத்திலுள்ள உத்கீரில், 1760-இல் சதாசிவராவ், பகைவர்களைத் தோற்கடித்து எதிரிகளை இழிவு படுத்தும் ஓரு உடன்பாட்டை ஏற்படுத்தினர். மராட்டியரின் அவ்வெற்றி அவர்தம் புகழை மேலும் ஓங்கச்செய்தது.

பானிப்பட்டுப்போர் (1761): **வரலாற்றுத்தொடர் பான முன்னிகழ்ச்சிகள்.** முகலாயப் பேரரசின் மிகவும் வருந்தத்தக்க இறுதிப்பத்து ஆண்டுகளின் நிகழ்ச்சிகளை ஒட்டி வட இந்தியாவில் எழுந்த மராட்டியத் தலைவர்களின் முயற்சிகளை முன்னரே பார்த்தோம். 1751-இல் சாப்தர் ஜங், மால்ஹர்ராவ் ஹோல்கார் ராணோஜி சிந்தியாவின் மூத்த மகன் ஜெயப்பா 'சிந்தியா' என்ற இருவரின் உதவிகொண்டு ரோஹில்கண்டையும் பரூக்காபாத்தை யும் கைப்பற்றினர். 1754-இல் முகமது ஷாவை அரசு கட்டிலினின்று நீக்கிய II-ம் காஸி யுத்தீனை ரகுநாதராவும் மால்ஹர்ராவும் ஆதரித்தனர். இராசபுத்திர நாடுகளின் அலுவல்களில் பாலாஜிராவ் கடைப்பிடித்த கொள்கையும் அவருடைய உதவியாளரின் செயல்களும் சிறிது சிறிதாக பாஜீராவ் அமைத்திருந்த மராட்டிய இராசபுத்திரக் கூட்டுறவை அடிபறித்தது. 1751-இல் மராட்டியர் ஜெய

புரியில் கொலையுண்டனர். 1754-இல் நிகழ்ந்த ஜெயப்ப சிந்தியாவின் மார்வார் படையெடுப்பு, அதனை அடுத்த ஆண்டில் அவர் கொலையுடன் முடிந்தது. ஆனால் 1755-ல் இராசபுதனத்தில் மராட்டியரின் ஆதிக்கம் தத்தாஜி சிந்தியாவால் நிலைநாட்டப் பெற்றது. 1757-இல் ரகுநாதராவ் அந்நாட்டின் மேல் படையெடுத்தார். ஆனால் அது தோல்வியுற்றது. அடுத்த ஆண்டில் தத்தாஜியும் ஜெயப்பசிந்தியாவின் மகனை ஜங்கோஜியும், 1759-இல் மால்ஹார்ராவ் ஹோல்காரும் இராசபுத்திரரை எதிர்த்துப் போர்புரிந்தனர். இதனால் மராட்டியரிடம் இராசபுத்திரருக்கிருந்த நல்லெண்ணம் அடியோடு மறைந்தது. 1758-ல் II-ம் காஸிஉத்தீனின் தூண்டுதலின் பேரில் ரகுநாதராவ் லாகூரைக் கைக்கொண்டார். இவ்வாறு மராட்டிய இராச்சியம் விரிவடைந்தது அவர்களுக்கு ஒன்றும் நன்மை செய்யவில்லை. ஆனால் அது அகமது அப்தலியைச் சினங்கொள்ளச் செய்தது. லாகூரில் அரசப் பிரதிநியாக இருந்த அவர் மகனை, மராட்டியர் விரட்டி விட்டனர். ஆகவே 1759-இல் அப்தலி இந்தியாவின் மேல் படையெடுத்துப் பஞ்சாபை மீட்டுக்கொண்டார். மராட்டியர் பின்வாங்கினர். வெற்றி வீரர், 1760-ஆம் ஆண்டு சனவரிமாதம் ஒன்பதாம்நாள் தில்லிக்கு அண்மையில், தத்தாஜி சிந்தியாவைத் தோற்கடித்துக் கொன்றார். இதை அடுத்து அவருடைய துணைப்படைத் தலைவரான ஜஹன்கான் சிகந்தராபாத்துக்கு (தில்லிக்கு அண்மையில்) அருகில் மால்ஹர்ராவ் ஹோல்காரை வென்றார்.

பாவோவின் படையெடுப்பு (1760-1): வட இந்தியாவில் நிகழ்ந்த இரட்டைத் தோல்விகள் மராட்டியர் உத்கீரில் பெற்ற வெற்றியினாலேற்பட்ட மகிழ்ச்சியை அழித்தன. பாலாஜிராவ், பழிக்குப்பழி வாங்க ஒரு பெரும் படையைத் தயாரித்து அனுப்பினார். 1752-இல் முகலாயப் பேரரசின் உள்நாட்டு வெளிநாட்டுக் காவற் பொறுப்பைப் பேஷ்வா ஏற்றுக்கொண்டிருந்தார் என்பது ஈண்டு நினைவு கூறத்தக்கது. ஆகவே அப்பொறுப்பை நிறைவேற்றப்

பேஷ்வாவின் படையெடுப்பு நிகழ்வது இன்றியமையாத தாயிற்று. பானிப்பட்டுப் போர் இந்து முஸ்லிம் போர் அன்று; இந்தியா, இந்தியருக்கே என்ற கொள்கையை வெளிக்காட்டும் ஒரு நிகழ்ச்சியாகும்.* அப்படையெடுப்பைத் தலைமை தாங்கி நடத்தியவர் சதாசிவ ராவ். வட இந்தியப் போர்களில் பயிற்சிபெற்று திறமைசாலி என்று பெயர் வாங்கிய இரகுநாத ராவ் அப்படையில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. சதாசிவ ராவுடன் அவர் மனைவி பார்வதிபாய், பேஷ்வாவின் மூத்த மகனுன விசுவாச ராவ், அவர் மனைவி இலக்குமி பாய், ஷாம்ஷெர் பஹதூர், இப்ரஹிம் கான் கார்டி முதலியோரும் சென்றனர். வழியில் மால்ஹர் ராவ் ஹோல்கார், ஜங்கோஜி சிந்தியா, மகாதஜி சிந்தியா, தாமாஜி கெயிக்வார், ஆகியோரும் சேர்ந்துகொண்டனர். சதாசிவ ராவ் தில்லியைக் கைப் கைப்பற்றியபின் அரசராக்குவோர் என்ற முறையில் நிகழ்த்திய செயல்களை முன்னரே கண்டோம். அதை அடுத்துத் தில்லியின் வடக்கேயுள்ள குஞ்சிபுரம், அப்தலியைச் சார்ந்த ஒரு ஆப்கானியனிடமிருந்து கைப்பற்றப் பட்டது. அவ்வாப்கானியனுக்கு அயோத்தியின் ஷுஜா உத்தௌலாவின் உதவியும் கிடைத்திருந்தது. பானிப் பட்டில் தங்கியிருந்த மராட்டியரை எதிர்க்க அப்தலி, தில்லிக்குச் செல்லும் சாலையின் ஊடே, மராட்டியர் தங்கியிருந்த இடத்துக்கு எதிராகத் தமது படையை அமைத்தார். அப்படையை எதிர்த்து முதலில் ஜங்கோஜி சிந்தியா வெற்றிபெற்றுர். ஆனுல் அதை அடுத்து ஆப்கானியர், மராட்டியரின் குதிரைப் படையை அழித்து, அவர்களுக்கு வரக்கூடிய உணவுப் பொருள்களைத் தடுத்தனர். மராட்டியர், உணவின்மையால் வருந்தநேரிட்டது. 1761-ம் ஆண்டின் தொடக்கத்தில் அவர்கள் தில்லிக்குச் செல்ல முடிவு செய்தனர். ஆனுல் இப்ரஹிம் கார்டி பகைவரை உடனே தாக்க வேண்டுமென்று வற்புறுத்தினுர். சதாசிவ ராவ், முடிவாக, சனவரி 14-ம் நாள் ஆப்கானியரைத்

---

* 97, பக். 123 – 4; 87. Vol. II, பக். 455.

தாக்கத் திட்டமிட்டு, ஷுஜாஉத் தௌலாவிடமிருந்த காசிராசாவுக்கு உதவிகோரிச் செய்தி அனுப்பினுர். " துயரம் மிகுந்துவிட்டது. இனிப் பொறுப்பதற்கில்லை.'' என்று அவர் குறிப்பிட்டிருந்தார். ஷுஜா உத்தௌலா அச்செய்தியை அப்தலிக்கு அறிவித்துவிட்டார். போர் தொடங்கியது. முதலில் மராட்டியர் முன்னேறினர். ஆனால் அடுத்து நிகழ்ந்த எதிர்ப்பில் அப்தலி வென்ருர். இப்ரஹிம் கான் காயமுற்ருர்; விசுவாச ராவ் கொலை யுண்டார் ; சதாசிவ ராவ் வீரப்போர் புரிந்து மாண்டார். பெரும்படை சிதறிப் பலதிசைகளிலும் ஓடித்துன்ப முற்றது. தப்பியோடிய பலர் சுற்றியிருந்த ஊர்ப்புறத்தி லுள்ள உழவர்களால் துன்பறுத்தப்பட்டனர். பானிப் பட்டுக்குத் திரும்பியவர்கள் ஆப்கானியரால் சித்திரவதை செய்யப்பட்டனர். மகளிர் அடிமைகளாயினர். ராஞோஜி யின் மூன்ருவது மகனை துக்கோஜி சிந்தியா இறந்தார். ஜங்கோஜி சிந்தியாவும் இப்ரஹிம்கானும் கொல்லுண் டனர். ஷாம்ஷெர் பஹதூர் காயத்தால் மரித்தார். மால்ஹர் ராவ் தப்பிஓடி பாரதபுரியின் சுராஜ் மல்லின் வரவேற்பைப் பெற்று மகிழ்ந்தார். தாமாஜி கெயிக்வார், தம் நாடு திரும் பினர். பார்வதிபாயும் இலக்குமிபாயும் குவாலியருக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மகாதஜி சிந்தியாவும் நானபட்னிஸும் தப்பி ஓடினர். பானிப்பட்டுப்போர் மராட்டியருக்கு ஒரு பெரும் துயர நிகழ்ச்சி ஆயிற்று.

பகுதி 13

மராட்டியர் வீழ்ச்சியின் காரணங்களும் அதன் விளைவுகளும்

காரணங்கள் : படைத்திறமையைப் பொறுத்தவரை அப்தலி, மராட்டியரைவிட மேலானவர் என்பதை பானிப் பட்டுப்போர் தெளிவாக்கிற்று. அவருடைய திறம் வாய்ந்த காலாட்படையும் அகன்ற ஆறுகளை அவர் கடக்கும் ஆற்றலும் மிகவும் பாராட்ட தக்கன. மராட்டியர் இரு வேறு விதமான போர் முறையைக் கையாண்டனர். இரண்டும் குறைபாடுகள் நிறைந்தன. மராட்டியப் படை யின் அமைப்பு முறை சிறிது சிறிதாக முகலாய இராணுவ முறையை ஒத்ததாக மாறிவந்தது. பானிப்பட்டுப் போர் தொடங்கு முன் மராட்டியப் படையினரிடம் ஒழுங்கின்மை, பகட்டாரவாரம், வலியுறுதியின்மை முதலிய குறைகள் புலனாயின. பேஷ்வாக் குடும்ப மகளிரும் போர்க்களத்துக் குச் சென்றனர். அனைத்திற்கும் மேலாக விசுவாச ராவ் இறந்த பின் பாவோ சாகிப்பின் அறிவின்மையும் போரைத் தொடங்கியதிலேற்பட்ட காலத்தாழ்வும் பல இடையூறுகளுக்குக் காரணமாயின. மால்ஹர் ராவ் ஹோல் காரும் சுராஜ்மல்லும், மராட்டியப் போர் முறையைக் கையாண்டு கொரில்லாத் தந்திரத்தை மேற்கொள்ள வேண்டுமென்று கூறினர். ஆனால் அவர்கள் முடிவைப் பாவோ சாகிப் ஏற்றுக்கொள்ளவில்லை. மேலும் அதைக் கூறியவர்களை இகழ்ந்தும் பேசினார்.

அவருக்கு, குஞ்சிபுரத்தில் கிடைத்த சிறு வெற்றி செருக்கைப் பெருக்கி விட்டது. ஆகவே பலவகையில் தேர்ச்சி பெற்றவரான ஹோல்காரை அவர் மதிக்கவில்லை. அவர் கையாண்ட முறை தில்லியிலிருந்து மராட்டியரைப் பிரித்து உணவு நெருக்கடிக்கு அவர்களை உள்ளாக்கிற்று. மேலும் ஹோல்கார், தில்லிக்குத் திரும்பிச் செல்ல

வேண்டுமென்று கூறியதை ஏற்காமல், இப்ராஹிம் கானின் வழியையே அவர் பின்பற்றியது மிகப் பெருந்தவறு. பகைவரை அடியோடு அழித்துவிடுவோம் என்று, ஆதார மற்ற தந்நம்பிக்கையில் மூழ்கினர். அவர் காசிராசருக்கு எழுதிய முடங்கலே அப்தலி அறிந்து கொண்டாரென் பதையும் முன்னரே கண்டோம். விசுவாச ராவ் இறந்த வுடன் பாவோவின் மனநிலை பிறழ்ந்தது. இறந்தவரிடம் அவருக்கு இருந்த பாசம் அவர் கடமையை மறக்கச் செய்தது. பெரியதோர் படை தம் தலைமையை நம்பி இருக் கிறதென்பதை அவர் அத்துயரத்தால் மறந்தார். அவர் வீரமரணம் எய்திய போதிலும் மதியூகத்துடன் நடந்து கொண்டார் என்று கூறுவதற்கில்லை.

பேஷ்வாவின் பெருந் தவறுகள் : பேஷ்வா, போது மான ஆட்களைப் பெற்றிருக்க வில்லை என்ற குற்றச் சாட்டுப் பொருந்தாது. அவருக்குப் பொருள் தேவைதான் ஏற்பட்டிருந்தது. 1760-ம் ஆண்டு டிசம்பரில் பாலாஜி ராவ் இரண்டாவது திருமணம் செய்து கொண்டதையும் பானிப்பட்டுத் தோல்வியுடன் இணைப்பதற்கில்லை. மிகப் பெரிய படையைத் தயார் செய்ய அவர் தம்மால் இயன்ற வரை முயன்ருர். அவரிடம் இருந்த பொருள் வசதியைப் பொறுத்துத்தான் அவர் தமது படையை அமைக்க முடியும் என்பதை நாம் நினைவிற் கொள்ளவேண்டும். உண்மை யில் பூனுவின் கருவூலம் வட இந்தியாவையே எதிர்பார்த் திருந்தது. பாவோ, பொருட் குறைவைப் பற்றி அறிவித்த பொழுதே பேஷ்வா வடக்கு நோக்கிய தம் படையெடுப்பு இடையூறுகள் நிறைந்தது என்பதை உணர்ந்திருக்க வேண்டும். ரகுநாத ராவ் காரணமாக மராட்டியரின் பகை வர்களாக மாறிய நாஜிப் உத்தெளலா, அப்தலி என்ற இவர்கள் இருந்த வடக்குப்புற எல்லையின் நிலையை அறியவோ அதனை அறிந்த அடக்கவோ பேஷ்வா வலியற்றிருந்தார். அப்தலியின் பகையைத் தேடிக் கொண்டது மராட்டியரின் பெருந் தவருகும். அலுவல்கள் யாவற்றிற்கும் பொறுப்பாளியான பேஷ்வா, இரகுநாத

ராவின் வட இந்தியப் படையெடுப்பால் ஏற்படக்கூடிய பேரிடரை உணர்ந்திருக்க வேண்டும்; உணர்ந்து அதைத் தடுத்திருக்க வேண்டும்.

போரின் விளைவுகள்: பானிப்பட்டுப் போரினால் மராட்டியருக்கு ஏற்பட்ட இழப்புக்களும் துன்பங்களும் அளவிடற்கரியன. பெரிய படையில் முக்கால் பாகம் அழிந்தது. சதாசிவ ராவ், விசுவாச ராவ் ஆகியோர் இறந்ததைத் தொடர்ந்து நிகழ்ந்த பாலாஜி ராவின் மரணம், ரகுநாத ராவின் தீங்கு தரும் பெரும் பிழைகளுக்கு வழி வகுத்தது. வெற்றிக்குப் பின் ஆப்கானியப் படையினரிடம் தோன்றிய ஒழுங்கீனம் அப்தலியை ஆப்கானித் தானத்துக்குத் திரும்பச் செய்தது. மேலும் மராட்டியரிடம் அவர் அமைதி உடன்பாடு செய்து கொள்ளவும் அது காரணமாயிற்று. வட இந்தியாவில் அரசியல் குழப்பம் நிலவத் தொடங்கியது. ஆனால் அதைத் தற்காலிகமாக ஓரளவு நீக்கிய பெருமை நஜிப் - உத் - தெளலா (1761 – 70) வுக்கும் சுராஜ்மல்லுக்கும் உரியதாகும். பின்னவர் அவருடைய பொருளாதாரச் சிறப்பினால் இந்தியாவிலேயே மிகவும் வலிமை வாய்ந்த பெருமகனாரானார்.[1] ஆகவே, பானிப்பட்டுப் போரின் நிகழ்ச்சிகளின் பெருமையை நோக்குமிடத்து விளைவுகள் மிகவும் சிறிய அளவினவே என்று கூறப்படுகிறது.

ஆனால், அப்போரானது முகலாயப் பேரரசின் அழிவை உறுதிப்படுத்தியது; தென் இந்தியாவில் ஐதர் அலியை முன்னேறச் செய்தது; 1765-ல் பிரிட்டிஷ் ஆதிக்கம் இந்நாட்டில் அடிகோல வழிவகுத்தது. அப்போரின் அழிவுபாட்டு விளைவுகளைச் சில அறிஞர்கள் குறைத்து மதிப்பிடுவதாக வேறு சில அறிஞர்கள் குறை கூறுவர்[2].

---

1. *60,* பக். *154.*

2. *88,* பக். *355.*

தில்லியைப் பின்னர் மராட்டியர் கைப்பற்றியதும், அப்தலி அவர்களுடன் நட்புகொள்ள விழைந்ததும் பானிப் பட்டுப் போர் அவர் தம் வலிமையை இழக்கச் செய்தது என்றகோட்பாட்டிற்கு முரண்படவில்லை என்று அவர்கள் வற்புறுத்துவர். அவர்கள் வெற்றிபெற்றிருந்தால் என்ன நிகழும் என்பதனோடு அப் போருக்குப்பின் அவர்களுக்கு ஏற்பட்ட நிலைமையை ஒப்பிட்டு நோக்கவேண்டுமென் பதும் அவ்வறிஞர்களின் கருத்து. எவ்வாறிருப்பினும் மராட்டியரின் உள அமைதியைப் பொறுத்தவரை அப் போரின் விளைவுகள் மிகவும் கடுமையானவை என்பதில் ஐயமில்லை. அவர்களுடைய நண்பர்களின் கருத்தைப் பொறுத்தவரை மராட்டியரின் சிறப்பே குன்றிவிட்டது. முன்னேற்றக் கொள்கையில் அவர்களுக்கிருந்த மன உறுதி குலைந்தது. பேஷ்வாக்களின் சிறப்பும் குன்றியது. மராட்டியரின் அரசியல் ஒற்றுமைக்கு வழிவகுத்த பேஷ்வா வின் ஆதிக்கம் குலைந்தது. மராட்டியக் கூட்டரசு அதற்குப் பின்னர் "மணற்கயிறு"போல மாறி தலைவர் பலரும் தம்தம் கொள்கையைப் பின்பற்ற முற்பட்டனர். ஆனால், இடை யிடையே பொதுப் பகைவர்களை எதிர்க்க அவர்கள் இணைந்தனர். ஆயினும் தென் இந்தியாவில் மராட்டியர் ஆட்சி முழுவதையும் (ஒரு காலத்தில் கருதப்பட்டதுபோல) பானிப்பட்டுப்போர் அழித்து விடவில்லை. 1763-ல் மராட் டியர் ராட்சச பவனத்தில் நிஸாமை முறியடித்ததும் நான்காவது பேஷ்வா மாதவராவின் சிறப்புவாய்ந்த அருஞ் செயல்களும் மராட்டியரின் வீரம் முழுவதும் அழிந்துவிடவில்லை என்பதைக் காட்டுகின்றன. பானிப் பட்டுப் போரினால் அப்பேரரசு அழியவில்லை எனினும் மராட்டியரின் முன்னேற்றம் தடைபட்டதென்பதை மறுப் பதற்கில்லை.

---

* 88, II பக். 442.

பகுதி 14.

சதாசிவ ராவும் ரகுநாத ராவும்

சதாசிவராவ் பாவோ (பி. 1730 – இ. 1761) : சதாசிவ ராவ் சிம்ஹஜி அப்பாவின் மகனும் பாலாஜி ராவின் ஒன்று விட்ட உடன் பிறந்தானும் ஆவர். உடன் பிறந்தார் அல்லது பாவோ என்ற புனை பெயரை அவர் சூட்டிக் கொண்டார். பேஷ்வாவின் அன்பும் ஆதரவும் இவருக்குக் கிடைத்திருந்தது. 1747-ல் கருநாடகத்தில் இவர் பெற்ற வெற்றிகள் இவர் சிறப்பை ஓங்கச்செய்தன. 1749-ம் ஆண்டின் இறுதியில் இவர் ராமராசரைச் சதாராவிடம் அழைத்துச் சென்றார். அடுத்த ஆண்டில் இரண்டாம் மனைவியாகப் பார்வதிபாயை மணந்தார் ; சத்ரபதியுடன், (ஒப்பந்தம் நிகழ்த்த) சங்கோலாவுக்குச் சென்றார் ; 1751-ல் தமது பேரவாவின் காரணமாகப் பேஷ்வாவுடன் பகைமை பூண்டார். தாராபாயுடன் இணைந்துகொண்டு II-ம் சாம்பாஜியுடன் ஒப்பந்தமும் பேசினார். ஆனால் பாலாஜி ராவ் அதைத் தடுத்தார். 1757-ல் சதாசிவராவ் சீரங்கப் பட்டணப் படையெடுப்பில் பங்கெடுத்துக்கொண்டார். இரண்டாண்டுகளுக்குப்பின் இவரைக் கொன்றுவிட நடந்த முயற்சி பயனுறவில்லை. 1760-ல் உத்கீரில் இவர் வெற்றி பெற்றுப் புகழ் அடைந்தார். பானிப்பட்டு அழிவுபாடு வரையிலும் இவர் செய்த தவறுகளை முன்னரே பார்த்தோம். ஆயினும் அவர் பொருளமைப்புத்துறையில் ஆற்றல் வாய்ந்தவரென்பதையும் சிறந்த ஆட்சி வல்லுநர் என்பதையும், ஓரளவு சிறப்புமிக்க தானைத்தலைவர் என்பதையும் மறுப்பதற்கில்லை.*

ரகுநாத ராவ் (பி. 1743-- இ 1784) : ரகுநாத ராவ் அல்லது ரகோபா அல்லது தாதாசாகிப் பாலாஜி ராவின் இளவல் ஆவர். 1752-இல் இவர் குஜராத்தில் படை

---

* *54*, பக். *345*.

யெடுத்தார். அடுத்த ஆண்டில் முகலாயரிடமிருந்து ஆமதாபாத்தைக் கைப்பற்றினர்; 1755-இல் ஆனந்திபாய்க்கும் அவருக்கும் திருமணம் நடந்தது. 1758-இல் லாகூரைக் கைப்பற்றும் வரை இவர் வட இந்தியாவில் கண்ட வெற்றிகளை முன்னரே கண்டோம். ஆனால் பஞ்சாபில் இவர் தமது வெற்றியை உறுதிப்படுத்தவில்லை. அவரது லாகூர்படையெழுச்சி இடையூறுகளுக்கே காரணமாய் முடிந்தது. அம்முயற்சியை விடாது தொடர்ந்ததால் பானிப்பட்டுப்போர் இன்றியமையாததாயிற்று. உத்கீர்படையெழுச்சியிலும் அவர் கலந்துகொண்டார். அதன் பின்னர் அவர் புறக்கணிக்கப்பட்டது வருந்தற்பாலது. பானிப்பட்டுப்போர் அவரது தவறானபேராசைக்கு வழி கோலியது.

பகுதி 15

பாலாஜி ராவின் தன்மையும் கொள்கையும்

நோய்வாய்ப் பட்டிருந்த பாலாஜி ராவ் பானிப்பட்டுப் போரினால் மனமுடைந்து இறந்தார். தம் தந்தைக்கு நேர் மாருக அவர் அமைதி ஏற்பாட்டில் மிகுந்த நாட்டம் செலுத்தினர். அவருடைய பண்புகள் பிறரைக் கவரத் தக்க சிறப்புவாய்ந்தவை. தந்திரத்திலும் நடிப்பிலும் அவருக்கு மிக்க திறமை இருந்தது. அன்பும் அருளும் உடையவர் எனினும் சிற்றின்பத்தில் மிகுந்த விருப்பம் கொண்டிருந்தார். சக்வார் பாயுடனும் தாமாஜி கெய்க் வாருடனும் அவர் நடந்து கொண்ட விதம் அவர் புகழுக்கு களங்கம் விளைத்தது. அவர் பலருடைய அன்பிற்குப் பாத்திரமாய் இருந்ததற்கு அவருடைய ஆட்சிமுறைச் சீர்திருத்தங்களும் உழவர் நன்மையில் அவர் கொண்ட அக்கறையும் காரணமாகும். அவர், தம் தந்தையைப் போல் தலைமைச்சிறப்பு வாய்ந்த இராணுவவீரர் அல்லர். ஆனால் அரசியல் வல்லமையும் ஆட்சிமுறைத் திறமையும் அவரிடம் இருந்தன. ஆயினும் அரசியல் வல்லமையில் அவர் பாஜிராவிற்குக் கீழ்ப்பட்டவரே. அரசுரிமைச் சிக்கலைத் தீர்ப்பதிலும் தாராபாயின் முயற்சியைத் தோற்கடிப்பதிலும் அவர்காட்டிய அரசியல் ஆற்றல் போற்றத்தக்கது. அசப்ஜா இறந்த பின்பும் ஐதராபாத் விளைவிக்கக்கூடிய தீங்கை உணர்ந்து உத்கீர்போருக் கான முன்னேற்பாடுகளை அவர் செய்தார். ஆனால் வட இந்திய அரசியல் நிலையைப் போதுமான அளவு அவர் உணரவில்லை. அதன் காரணமாகப் பானிப்பட்டில் பெரும் தோல்வி ஏற்பட்டது. துளாஜி ஆங்கிரேயின் அழிவாலும் பேஷ்வாவுக்கும் புஸ்ஸிக்கும் ஏற்பட்ட போராட்டத்தினாலும் சிறந்த நன்மையடைந்த ஆங் கிலேயர்களின் உதவிகொண்டு ஆங்கிரரின் கீழ் இருந்த மராட்டியக் கப்பற்படையை பாலாஜி ராவ் அழித்தது பற்றி அறிஞர் ராஜ்வாடே அவர்மீது குற்றம் சாட்டுகிருர்.

“1756-இல் பேஷ்வாவை யாரும் தடைசெய்வதற்கில்லை; அவர் நிலைமை அசைக்கமுடியாததாய் இருந்தது; இந்தியாவிலேயே மிகவல்லமை பொருந்தியவராக விளங்கினர். அவ்வமயம் கருநாடகத்திலும் வங்காளத்திலும் அவர் ஆங்கிலேயரை எதிர்த்துச் சென்றிருந்ததால் அவர்கள் முன்னேருதபடி தடுத்திருக்ககூடும். அவ்வாறு செய்யாமல் அவர் தில்லி அரசியலில் அளவுகடந்து தலையிட்டார். அப்தலியுடன் வீணை பகைமை பூண்டு பானிப்பட்டுக் கேட்டை தேடிக்கொண்டார்”* மேலும் பாலாஜி அவர்தந்தையைப்போல் அல்லாது ராசபுத்திரர்களைப் பகைத்துக் கொண்டார். இவர் பாஜி ராவைவிடச் சமய உணர்ச்சி உள்ளவர்தான். ஆனல் இவர் இராணுவத் தலைமையிலும் அரசியல் வல்லமையிலும் அவருக்கு இணை ஆகார். எனினும் ஆட்சிமுறையில் பாலாஜிராவ் மிகுந்த கருத்துச் செலுத்திவந்தார்; சதாசிவராவின் ஒத்துழைப்புடன் வரிவாங்கும் முறையிலிருந்த குறைபாடுகளை நீக்கினர்; கணக்குகளை ஒழுங்காக வைத்திருக்குமாறு வற்புறுத்திவந்தார்; பாலகிருஷ்ண சாத்திரியின் உதவிகொண்டு நீதிவழங்கும் முறையைச் சீர்திருத்தினர். பூனவில் சிறப்பான காவல்முறை அமைந்திருந்தது. நகர மக்கட்கு ஒரு பயிற்சிக்கழகமும் ஏற்பட்டிருந்தது; சமூக நலங்கள் பெருகியிருந்தன. பாலாஜி, போக்குவரவுத்துறையிலும் பலசீர்திருத்தங்களை செய்தார். இராணுவத்தில் அவர் செய்த மாறுதல்கள் படைவீரர்களை வன்மையற்றவர்களாகவும் சுகவாசிகளாகவும் செய்துவிட்டன. படையமைப்பும் சிக்கல் நிறைந்ததாகவும் ஆயிற்று. அதன் திறமை குறைந்தது. மகளிர் தம் கணவருடன் போர்க்களம் செல்லும் வழக்கத்தை அவர் ஆதரித்தார். கல்வியை அவர் விரும்பிப் போற்றினர். வாணிகத்தைப் பெருகச் செய்தார்; சாலைகள் அமைப்பதிலும் ஏரி குளம் வெட்டுவதிலும் கருத்தைச் செலுத்தினர். பூனவில் உள்ள பார்வதி மலையில் பார்வதிக்கும் திருமாலுக்கும் அவர் கோயில்கள் எடுத்தார்.

———

* *86*, பக். *114*.

பகுதி 16

மாதவராவ் (1761—72)

அரண்மனைச் சண்டை: பாலாஜி ராவுக்கு விசுவாச ராவ் (பி. 1741–இ 1761), மாதவராவ் (பி. 1745), நாராயண ராவ் என்ற மூன்று மக்களிருந்தனர். மூத்த மகனர் பானிப்பட்டில் இறந்தார். உடனே இராமராசர் மாதவ ராவைப் பேஷ்வாக ஆக்கினர். ரகுநாத ராவ், மிக அழகியும் ஆனல் கொடுமையானவளுமான தம் மனைவி ஆனந்தியின் தூண்டுதலின் விளைவாக, சிறுவனை பேஷ்வாவின் பேரில் எல்லா அதிகாரங்களையும் செலுத்தினர். அவ்வமயம் ஏற்பட்டுவந்த உட்கலகங்களும் தாராபாயின் சூழ்ச்சிகளும் நிஸாம் அலியைக் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளச் செய்தன (1761). அவர் பூனவுக்கு அருகிற் சென்ருர். ஆனல் தடை ஏற்பட்டது. உத்கீர் உடன் படிக்கையை உறுதி செய்துவிட்டுத் திரும்பினர் (1762). அதே ஆண்டில் மாதவராவ் 'ரீஜண்டை' அகற்றிவிட்டுத் தாமே பேஷ்வாவாகப் பணியாற்றத் தொடங்கினர். அவர் தமது அந்தரங்கச் செயலாளராக, பாலாஜி ஜனர் தன் பானு என்பவரை அமர்த்திக்கொண்டார். நான பட்னிஸ் (பட்னவிஸ் அல்லது பர்னவிஸ் = தலைமைக்கணக்கர்) என்றும் அவர் அழைக்கப்பெறுவர். பாலாஜி விசுவநாத்தின் அலுவலாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர் அவர். 1741-ல் பிறந்த நான, பானிபட்டுப் போரில் (1761) தப்பியோடினர். மாதவ ராவ், இராமா சாத்திரி என்பவரை தலைமை நீதிபதியாக அமர்த்தியதும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கதாகும், ரகுநாத ராவ் நிஸாம் அலியுடன் சூழ்ச்சி செய்து அவருதவிகொண்டு பேஷ்வாவைத் தாக்கினர். அச்சமடைந்த பேஷ்வா அவருக்குப் பணிந்தார். மீண்டும் ரகுநாதர் 'ரீஜண்டா'னர். ஆனல் நிஸாம் அலி தமது பகைமையைத் தொடர்ந்து சில மராட்டியத்தலைவர்களின் துணைகொண்டு பூனவைத் தாக்கினர். ரகுநாதர்

ஐதராபாத்தைக் கைக்கொள்ள முயன்ருர். முடிவாகக் கோதாவரிக் கரையில் ராட்சசபவனம் என்னுமிடத்தில் போர் நடந்தது. முதலில் நிஸாம் அலி வெற்றிபெற்ற போதிலும் மாதவ ராவ் தமது முழு வீரத்தையும் காட்டி அவ்வெற்றியைப் பயனற்றதாக்கினுர். அதன் விளேவாக ரகுநாத ராவ் அரசியலின் பெரும்பாகத்தை அவரிடமே விட்டுவிட்டார். நாளு தலைமைக் கணக்கராஞர்,

தக்கணப் போர்கள்: 1761-ல் வழியல்லா வழியில் பட்டத்துக்கு வந்த ஐதர் அலியின் ஆக்கிரமிப்புச் செயல்கள் அவரை மராட்டியருடன் போர் நிகழ்த்துமாறு செய்தன. 1764–5-ல் மாதவ ராவ் ஐதர் அலியை வென்ருர். ஆளுல் இடையில் ரகுநாத ராவ் தலையிட்டதால் உடன்படிக்கை ஏற்பட்டுத் தமக்குச் சாதகமாகப் பலவற் றைப்பெற்ருர். 1766-ல் பேஷ்வா, நிஸாம் அலியின் துணை கொண்டு பேரார்மீது படையெடுத்து ஜாஞேஜி பான்ஸ் லேயைப் (ரகூஜி பான்ஸ்லேயின் மகன்) பணியச்செய் தார். அடுத்த ஆண்டிலும் மாதவ ராவின் படை வலிமை யைக்கண்டு அஞ்சிய ஐதர் அவருடன் மறுபடியும் அமைதி உடன்பாடு செய்துகொண்டார். 1766—7-ல் ரகுநாத ராவ் தில்லிக்குப் படையெடுத்துச் சென்றதால் எப்பயனும் விளேயவில்லை. அவர் தம் மனைவியின் தூர்ண்டு தலின்மேல் மாதவ ராவுக்குப் பகையாக ஜாஞேஜி பான்ஸ் லேயுடன் இணைந்துகொண்டு சூழ்ச்சிசெய்து மராட்டிய இராச்சியத்தில் பாதியைத் தம் பங்காக அடையவேண்டு மென்று கேட்டார். ஆளுல் 1768-ல் நாசிக்கின் அருகில் பேஷ்வாவிடம் தோற்ருர்; சன்வார் வாடாவில் சிறைப் பட்டார்; நாளுபட்னிஸ் அவரது சிறைக் காவலாள ராளுர். அடுத்த ஆண்டில் ஜாஞேஜி, பேஷ்வாவுக்கு அடிபணிந்து அவர் அதிகாரத்துக்குட்பட்டார். மீண்டும் ஐதர் தமது ஆக்கிரமிப்புக் கொள்கையை மேற்கொள் ளவே பேஷ்வா மைசூரின் மீது படையெடுத்துப் பங்களூர் நோக்கிச் சென்று பல இடங்களைக் கைப்பற்றிஞர். ஆளுல் 1770-ல் அவர் நோய்வாய்ப்பட்டு ஊர் திரும்ப நேர்ந்தது. போரைத் தொடர்ந்து திரும்பக்ராவ் (சதாசிவ ராவின்

தாய் மாமன்) நடத்தி 1772-ல் ஐதர் இழிவான ஒரு உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளுமாறு கட்டுப்படுத்தினர்.

வட இந்தியப் படையெடுப்பு : பானிப்பட்டுப் போரில் காயமடைந்து பின்னர் முடமாகிய சிறந்த வீரரான மகாதஜி சிந்தியாவின் உதவிகொண்ட விசாஜி கிருஷ்ண ராவ் தலைமையில் 1769-ல் வட இந்தியப் படையெடுப்பு ஒன்று நிகழ்ந்தது. துக்காஜி ஹோல்காரும் (மால்ஹர் ராவின் படைத்தலைவர்) உடன் சென்றார். மராட்டியப் படை கப்பம் வாங்கிக்கொண்டு இராசபுதனம் வழியாகச் சென்று ஜாட்டியரை அடிப்படுத்தியது; நாஜீப்-உத்-தௌலாவைக் கீழ்ப்படும்படி செய்தது; பிற ரோஹில் லாத் தலைவர் நிலப்பகுதிகளையும் தாக்கியது. II-ம் ஷா ஆலம் அலகாபாத்தையும் பிரிட்டிஷாரின் பாதுகாப்பையும் கைவிடும்படி தூண்டப்பட்டார். 1772-ல் அவர் தில்லியில் புகுந்தார். அவர் உடன்பாட்டின் பேரில் ரோஹில் கண்டில் மராட்டியர் படையெடுத்துச்சென்றனர். பேரரசரிடமிருந்து அவர் பாதுகாப்புக்காக காரா, அலஹாபாத் என்ற இடங்களையும் பெற்றனர். இப்பொழுது பேரரசருக்கு, தில்லி ஒன்றுதான் மிஞ்சியது. அவர், மராட்டியரின் பாதுகாப்பைத் தாம் விழைந்தது பெரும் அறிவீனம் என்றுணர்ந்து அவர்களைத் தலைநகரிலிருந்து விரட்ட முயன்றார். எதிர்பாரா வகையில் பேரரசரின் மனமாற்றம் மராட்டியரை வியப்புறச் செய்தது. அவ்வமயம் பேஷ்வா இறந்ததால் அவர்கள் முயற்சி தடைப் பட்டது.

மாதவராவின் பெருமை: மேலே கூறியதிலிருந்து மாதவராவின் பெருமை நமக்கு ஒருவாறு புலனாகிறது. "பேஷ்வாக்களுள் மிகச் சிறந்தவர்" என்ற பெருமை அவருக்கு உண்டு. எலும்புருக்கி நோயினால் வருந்திய அவர் 1772-ல் இறந்தார். இரமாபாய் என்ற அவர் மனைவியார் உடன்கட்டை ஏறினர். உள் நாட்டு, வெளி நாட்டு அலுவல்களில் போற்றத்தக்க ஆற்றலுடன்

மாதவராவ் செயலாற்றினர். அவருடைய வெற்றியினுலும் ஆற்றலினுலும், பானிப்பட்டுப் போரின் பிறகும் மராட்டியரின் வன்மையை நன்கு விளக்கி நின்ருர்; ஐதர் அலியின் பேராசைக்கு ஒரு முட்டுக்கட்டையிட்டார். அவருடைய அரிய செயல்கள் பம்பாயிலிருந்த பிரிட்டிஷாரை அவருடன் நட்புகொள்ளுமாறு செய்தன. அவரது ஆட்சிமுறைத் திறமையும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. தமது உடல் நலத்தையும் பொருட்படுத்தாது அரும் பணியாற்றிவந்த அவரது தன்மை, பிறருக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். தலைசிறந்த நீதிபதியான இராமா சாத்திரியின் நட்பும் உதவியும் அவருக்குக் கிடைத்தன. எளியோரை ஆதரிக்கும் நற்பண்பு அவரிடமிருந்தது. துன்புற்றவருக்கு அவர் ஆதரவு அளித்தார். பிழைகளைப் பொறுத்து மன்னிக்கும் கருணை அவர்பால் பொலிந்தது. பெரிய இராணுவத்தைக் கட்டுப்படுத்தினர்; ஒற்றர்களைச் சிறந்த முறையில் கையாண்டார்; நேர்மையுடன் முறை வழங்கினர்; கைக்கூலி பெறுதல் முதலிய கேடுகளை அரசியலினின்று விலக்கிப் புகழ் பெற்ருர். அவரது மரணம் மராட்டியருக்கு ஈடுசெய்ய முடியாத ஒரு நட்டமாகும்.

பகுதி 17

அகல்யா பாய் ஹோல்கார்

மால்ஹர் ராவ் ஹோல்காரின் மகனை கண்டே ராவின் மனைவி அகல்யா பாய் ஹோல்கார். 1766-இல் மால்ஹர்ராவ் இறந்தார். அதற்கு முன்னரே கண்டே ராவும் உயிர் நீத்துவிட்டார். இவர் மகன் சிறிது காலம் அரசாண்டபின் அகல்யாபாய் பட்டமெய்தினர். இவ் வம்மையர், 1795-ல் தாம் இறக்கும்வரை குடிகளை நன்கு பாதுகாத்து நாட்டில் அமைதி நிலவச்செய்தார். இந்தோர் நகரை அமைத்த பெருமை அவருக்குரியது. அவர் அறங் கள்பல புரிந்தார்; சமயத் தொடர்பான இலக்கியங்களை ஆதரித்தார். தற்பெருமை என்பது அவரிடம் சிறிதும் இல்லை. அவரது 30 ஆண்டு ஆட்சியும் மிகச் சிறப்புற் றிருந்தது. மக்கள் வாயார, மனதார அவரை வாழ்த்தி வழுத்தினர். "மிகத்தூய்மை வாய்ந்தவராய்ப் பிறருக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் சிறந்த ஆட்சியாளர்களில் அகல்யாபாயும் ஒருவராவர் என்று சர் ஜான் மால்காம் என்னுமறிஞரே புகழ்ந்துள்ளார். அகல்யாபாயை அடுத்து அவருடைய தளபதி துக்காஜி ஹோல்கார் ஆட்சிபீடத் துக்கு வந்தார். இவர் தமது முன்னவரின் கொள்கை களையே பின்பற்றினர். 1797-ல் இவர் இறந்தவுடன் இந்தோர் இராச்சியத்தில் குழப்பம் மேலிட்டது.

பகுதி 18

மராட்டியரின் தரைப்படையும் கடற்படையும்

இயல்பு. பேஷ்வாக்கள் நால்வரின் கீழிருந்த மராட்டியப் படை நிலமானிய முறையில் அமைந்திருந்தது. மராட்டியரல்லாதவரும் படையில் சேர்க்கப்பட்டனர். இந்தியப் போர் முறையும் மேனாட்டுப் போர் முறையும் ஒன்றுபட்டு இணைந்து விளங்கின. இதனால் இருமுறைகளிலும் திறமையின்மை புலனாகியது. படையில் ஒழுக்க முறைக் கட்டுப்பாடு இல்லை. போர்க்கருவிகளும் மற்றய தளவாடங்களும் பலதிறப்பட்டனவாகவும் நாகரிகத்தின் பல நிலைகளைக் காட்டுவனவாகவும் இருந்தன ; காலத்திற்கேற்ற முன்னேற்றம் அடைந்திருக்கவில்லை. சிவாஜியின் குறிக்கோள்களைக் கைவிட்டு, பேஷ்வாக்கள் படைமானிய முறையையும், நாட்டைப் பெருக்கும் கொள்கையையும் பின்பற்றிவந்தனர். இதனால், நன்கு ஒழுங்கு செய்யப்பட்ட தேசீயப்படைக்குப் பதிலாக ஒழுங்கீனமான கூலிப்படைகளின் கூட்டமே நிலை பெற்றது. படைத் தலைவர்களும் வீர மனப்பான்மை மாறிச் சுக புருஷர்களாகக் காணப்பட்டனர்.

நிலமானியமுறை மீண்டும் அமைத்தல். இராசாராமர், நிலமானிய முறையை விரும்பாத தமது தந்தையின் கொள்கையைப் பின்பற்றினர். ஆனால் பிறகு நிலைமை மாறியது என்று முன்னரே பார்த்தோம். பாலாஜி விசுவநாதர் நிலமானிய முறையை ஏற்றுக் கொள்ளவேண்டிய சூழ்நிலை உருவாகியது. பாஜிராவ், நிலமானியத்தலைவர்களை அடக்கியாண்ட போதிலும், புதிய தலைவர்களை அவர் ஏற்படுத்திவந்தார். பெருந் தலைவர்கள் தமக்குக் கீழ்ப்பட்ட சிறிய மானியத்தலைவர்களை ஏற்படுத்தி வந்ததால் இராச்சியத்தின் நிலப்பகுதி பெரிதும் துண்டாடப்பட்டது. சாம்பாஜி கொலையுண்ட

பின் இராச்சியத்தைப் பாதுகாப்பதற்காகவும் பெருக்கு வதற்காகவும் நிலமானிய முறை மறுமலர்ச்சியுற்றது. அது நாட்டின் படைமுறையையும் ஆட்சிமுறைத் திறமை யையும் பாதித்தது; குடும்பப் போராட்டத்தையும் உள் துறைச்சண்டைகளையும் உண்டுபண்ணியது. அசப்ஜா வும் பிறரும் அந்நிலைமையைப் பயன்படுத்திக்கொண் டனர். வழி வழி (பரம்பரை) உரிமை வற்புறுத்தப்படவே படைத்திறமை குறைந்தது; அதிகார ஒற்றுமை மறைந் தது. தலைவர்களின் தன்னலம் காரணமாக குதிரைப்படை யின் சிறப்புக் குன்றியது. மேலும் நிலமானியத் தலைவர் களிடம் சிவில் ஆட்சி முறை ஒப்படைக்கப்பட்டதால் அவர்களுடைய இராணுவத் திறமை பழுதுற்றது. இந்தக் கேடுகளுடன், அரசியல் குறிக்கோளின் விரிவால் படை யின் தேசீயத் தன்மை குறைந்தது. பலப்பலர், இராச புத்திரர், சீக்கியர், ரோஹில்லர் தென் இந்தியர், அரேபி யர், அபிசீனியர், போர்ச்சுகீசியர் முதலானோர் – படையில் சேர்ந்தனர். இம்மாறுதல்களால் மராட்டியப்படை இரக்க மற்றதாகவும் அஞ்சத்தக்கதாகவும் ஆயிற்று. ஓரினத் தன்மை, நாட்டுப்பற்று, அரசரிடத்தன்பு, கீழ்ப்படியுந் தன்மை முதலிய பண்புகள் அதில் காணப்படவில்லை.

குதிரைப்படையும் காலாட்படையும். 18-ம் நூற் றுண்டின் மராட்டிய இராணுவத்தில் காலாட்படையினும் குதிரைப் படையே மிகுந்திருந்தது. பேஷ்வாக்களின் சொந்தக் குதிரைப்படை மிகவும் திறம் வாய்ந்திருந்தது. காலாட்படையில் இருந்தவர்கள் பெரும்பாலும் மராட்டிய ரல்லாதாரே. அவர்கள் தமது தலைவர்களுக்குக் கீழ்ப் படிந்திருந்தனரேயன்றிப் பேஷ்வாவிடம் அன்பு செலுத்த வில்லை. கத்திகள், ஈட்டிகள், வாணவெடிகள் முதலியன முக்கிய போர்க்கருவிகளாயிருந்தன. பகைவர்களைக் கொள்ளையடிப்பதற்காக பிண்டாரிகள் என்ற பயிற்சி பெற்ற கொள்ளைக்கூட்டத்தினர் அமர்த்தப் பெற்றிருந் தனர். படைத்தலைவர்களைப் போர் யானைகள் சுமந்து சென்றன. எடுத்துக்காட்டாகச் சதாசிவராவ், பானிப் பட்டுப் போரில் யானையின்மீதே அமர்ந்து சென்றார்.

18-ம் நூற்றுண்டில் ஐரோப்பாவில் நிலவிய இராணுவ முறைக்கும் மராட்டியரின் முறைக்கும் உள்ள வேறுபாடு மனத்தில் குறித்துவைக்கத்தக்கது.

பீரங்கிப் படை : பீரங்கிப் படை அமைப்பில் பேஷ்வாக்கள் மிக்க கருத்துச் செலுத்தினர். பாலாஜி ராவின் வார்ப்படத் தொழிற்சாலையைக் காப்டன் கோர்டன் மிகவும் புகழ்ந்துள்ளார் (1739). மாதவராவ், பீரங்கிகளும் பீரங்கிக் குண்டுகளும் செய்வதற்குத் தொழிற்சாலைகள் அமைத்திருந்தார். ஆயினும் வெளிநாட்டுக் கருவிகளும் வேண்டியிருந்தன. போதுமான போர்க்களப் பீரங்கிகள் மராட்டியரிடம் இல்லை. அசப்ஜாவிடம் அவை இருந்த காரணத்திஞற்றுன் அவரைப் பாஜிராவ் அடியோடு அழிக்க முடியவில்லை. பாலாஜிராவ், அக்குறையை நிறைவு செய்தாரெனினும் பானிப்பட்டுப் போர், மராட்டியர் பீரங்கிப் படைத் திறமையைச் சிறப்பான வகையில் பெற்றிருக்கவில்லை என்பதைக் காட்டுகிறது. ஒரு விஞ்ஞானக் கருவியைப் பயன்படுத்திய அவர்கள் அதன் நுணுக்கத்தை நன்கு உணரவில்லை. மேலும் மராட்டியர், பயிற்சி பெற்ற காலாட்படையையும் பீரங்கியையும், நம்பியிருந்தனர் ; குதிரைப் படையைப் புறக்கணித்தனர். புஸ்ஸியின் பணிகளைப் பாலாஜிராவ் பெறமுடியவில்லை. உத்கீர் போரும், பானிப்பட்டுப் போரும் புதிய கருவியின் பயனையும் அதனுல் நிகழக்கூடிய இடையூற்றையும் முறையே வெளிப்படுத்தின. மகாதஜி சிந்தியா, பிற்காலத்தில் பீரங்கிப்படையைப் பெருக்கிஞர்.

கோட்டைகள் : சிவாஜி இறந்தபின் கோட்டைகளின் பாதுகாப்பு வன்மை, மேற்பார்வைக் குறைவால் பழுதுபட்டது. சாம்பாஜி கொலையுண்டபின், தலைசிறந்த கோட்டையான ரெய்காத், அலுவலாளன் ஒருவனின் நம்பிக்கைக் கேட்டால் பகைவரிடம் விடப்பட்டது. பேஷ்வாக்களின் ஆட்சியில் ஒவ்வொரு முக்கிய அதிகாரியிடமும் பல கோட்டைகள் ஒப்புவிக்கப் பெற்றிருந்தன. கோட்டையின் தலைமைக் காவலாளரின் பதவி, பரம்பரை

உரிமையில் அமைந்தது. இராணுவ முறையில் ஏற்பட்ட புதிய மாறுதல்களால் கோட்டைகள் பாதிக்கப் பெற்றன; கோட்டைகள் அமைப்பில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. நில மானியமுறை, கோட்டைப் பாதுகாப்புப் படையின் திறமையைக் குறைத்தது.

பாசறை முறை : மராட்டியப் பாசறை முறை முகலாயர் முறையைப் பின்பற்றிச் சீர்திருத்த மடைந்தது. போர் வீரர் தங்கும் கூடாரங்கள், நகரங்களைப்போலக் காட்சி அளித்தன. சமூக வாழ்க்கைக்குரிய நலங்கள் யாவும் அங்கே அமையப் பெற்றிருந்தன. கட்குடி, நடனம் முதலியவற்றுக்கான வசதிகளும் இருந்தன. பெண்டிர், குழந்தைகள், பணியாட்கள், முதலியோரும் அங்கே தங்கமுடியும். விலங்குகளும் அழைத்துச் செல்லப் பெற்றன. அங்கே, போரிலீடுபட்டவரைவிட போரில் ஈடுபடாதவர்களின் எண்ணிக்கை மிகுதியாயிருந்தது. போக்குவரவு, படை உணவுத்துறை, மருத்துவ உதவி முதலிய செய்திகளில் சிறப்பான கருத்தை மராட்டியர் செலுத்தவில்லை. கடன் கொடுத்தவர்கள் கடன்காரர்களைப் பாசறைகட்குச் சென்றும் கேட்க முடியும். அதில் ஓர் ஒழுங்கு முறை கிடையாது. ஆயினும் குதிரைப் படையும் ஒற்றர் குழாமும் பாசறைகளைப் பகைவரிடமிருந்து காப்பாற்றிவந்தன. பிரிட்டிஷ் படையுடன் மராட்டியர் போரிட்ட பிறகுதான், பின்னவரின் படை முறையில் இருந்த குறைபாடுகள் தெளிவாக வெளியாயின. குறைபாட்டுக்குறிய மானிய முறை ஒரு காரணமாகும். மேலும் மக்கள், விஞ்ஞான முன்னேற்றத்தைப் பொருட்படுத்தவில்லை என்பதும் குறிப்பிடற்பாலது. 18-ம் நூற்றாண்டில் மராட்டியரின் வெற்றிக்கு இரண்டு முக்கிய காரணங்கள் கூறலாம். முதலாவதாக சிறந்த படைத் தலைவர்கள் அவர்களிடமிருந்தனர். அடுத்தபடியாக அவர்களது இந்தியப் பகைவர்கள், படைத்துறையில் அவர்களுக்குக் கீழ்ப்பட்டவர்களாகவே இருந்தனர்.

கப்பற் படை : ஆங்கிரரின் கப்பற் படையினின்று வேறான ஒரு கடற் படையைப் பாஜிராவ் அமைத்தார்

பின்னவரின் கப்பற்படைத்தலைவரான **நரோ பந்த்** சிறந்த வீரர். ஆனால் ஒரு கப்பலோட்டி அல்லர். ஆங்கிலேயர் உதவி கொண்டு பேஷ்வா துளாஜி ஆங்கிரேயரை முறியடித்தார். ஆனால் தனிமையில் அவர் ஜஞ்சிராவின் சீதிகளைத் தோற்கடிக்க முடியவில்லை. சுருங்கக்கூறின் ஐரோப்பியரின் கடலாதிக்கம் உயர்வானது என்பதை மராட்டியர் ஏற்றுக்கொண்டனர். ஆனால் புதியன புனைந்து தம் நிலையை வலிமைப்படுத்திக்கொள்வதற்குப் பதிலாக கடலோரப் பகுதிகளைக் கட்டுப்படுத்துவதிலேயே அவர்கள் தம் கருத்தைச் செலுத்தி வந்தனர்.

———

பகுதி 19

சிவில் ஆட்சி முறை

சத்ரபதி. சிவாஜி, முகல் மான்சப்தார் பதவியை ஏற்றுக்கொண்டு ஒரு பொழுதும் தம் நிலையைக் குறைத்துக்கொள்ளவில்லை. பேரரசருக்குரிய இடங்களில் அவரை மீறி "சௌத்" வரி வசூலித்தாரென்பதையும் கண்டோம். ஆனால் அவர் தம் மகன் சாம்பாஜி, மான்சப்தாராக உடன்பட்டார். பேரரசரின் ஆணையின்பேரில், பின்னவர் சௌத், சர்தேஷ்முக் என்ற வரிகளை வாங்கிக் கொண்டார். மேலும் சாகு, தம்மை, முகலாயப்பேரரசரின் ஆதரவிலிருப்பவராக எண்ணிக்கொண்டிருந்தாரே அன்றி உரிமை வாய்ந்த தனி மன்னராகக் கருதவில்லை. பாஜிராவை மாளவத்தின் தலைவராகவும் தக்கணத்தின் சர்தேஷ்பாண்டே ஆகவும் செய்தது, பேரரசரின் 1736-ம் ஆண்டு ஆணைதான் என்பதும் ஈண்டு குறிக்கற்பாலது. மராட்டிய நாட்டைப் பொறுத்தவரை சத்ரபதி இறைமாட்சியுடன் விளங்கினர். ஆனல் அவர் அதிகாரம், சாகுவின் ஆட்சிக்காலத்தில் குறைந்து இராமராசரின் கீழ் மறைந்ததையும் கண்டோம்.

பேஷ்வா : பேஷ்வாப் பதவியின் வளர்ச்சியைப் பற்றி முன்னரே பார்த்தோம். அது வழிவழி உரிமையாயிற்று. சத்ரபதியின் "பிரதிநிதி', என்ற தலைமை அலுவலாளரைவிடச் செயல் முறையில் பேஷ்வா சிறப்பு எய்தினர். சாகு, இராமராசர், ஆகியோரின் ஆட்சி அதற்குப் பல வகைகளில் உதவியது. பேஷ்வாவின் அலுவலகம் "பட்ணவிஸ்" அல்லது "பட்னிஸ்" என்பாரின் தலைமையின் கீழிருந்தது. மாவட்ட, ஊர் அதிகாரிகளை அவ்வலுவலகத்தார் மேற்பார்வை செய்துவந்தனர். நாணபட்னிஸ் காலத்தில் அதன் சிறப்பு மிகவும் ஓங்கியிருந்தது. அரசியல் குறிப்பேடுகள் யாவும் அங்கு இருந்தன.

வரித் திட்டம் : பாஜிராவின் வரித் திட்டத்தையும் அக்கால உழவரின் வளமான வாழ்க்கையையும் 1739-ல் காப்டன் கோர்டன் விளக்கிக் கூறியுள்ளார். ஆட்சி முறையின் இத்துறையில் மிகுதியான அளவுக்குக் கருத்துச் செலுத்தியவர் பாலாஜிராவ் ஆவர். அவர் நிலங்களை ஒழுங்காக அளந்து புதிய முறையில் வரிகளை விதித்தார்; உயர்ந்த வகை, நடுத்தர வகை, கீழான வகை என்று மூன்று கூறுகளாக நிலங்களைப் பிரித்து, நிலத்தைப் பண்படுத்தப்படும் நிலையைக் கொண்டு வரிகளைத் திட்டம் செய்தார். வரிகளைக் கூலங்களாகவோ, பணமாகவோ, படேல் என்ற அதிகாரியிடம் மக்கள் செலுத்திவந்தனர். மூன்று அல்லது நான்கு தவணைகளில் அவர்கள் அதைச் செலுத்தலாம். விளைவுக் குறைவு போன்ற நெருக்கடிக் காலங்களில் உழவர்களுக்குப் பலவகைச் சலுகைகளை அரசியலார் வழங்கிவந்தனர்; நீர்ப்பாசனத்திற்கென தனி மானியங்களையும் அளித்தனர். தரிசு நிலங்களைப் பண்படுத்துவதற்கான ஊக்கத்தையும் ஊட்டினர்; படை வீரரால் துயரமுற்றோருக்கு இழப்பீடு வழங்கினர்; வேளாண்மைக் கடன்களைக் கொடுத்தனர். ஈவு இரக்கமற்ற லேவாதேவிக்காரரிடமிருந்து உழவரைக் காப்பாற்றும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டனர்; வேளாண்மையைச் சிறப்புற்று ஓங்கச் செய்வதற்கான பல திட்டங்களையும் தீட்டினர். இனிச் சில குறைபாடுகளையும் குறிப்பிடவேண்டும். அந்தணர்கள் சில தனிச் சலுகைகளைப் பெற்றனர். சில தீய பேஷ்வாக்கள் காலத்தில் கொடுமை நிலவியது. ஆனால், பாலாஜிராவ், மாதவராவ் ஆட்சிக் காலங்களில் குறைபாடுகள் நீக்கப்பெற்றிருந்தன. மராட்டிய நாட்டு நிலங்கள் சிறந்த முறையில் பண்படுத்தப் படுகின்றன என்று சர் ஆர்தர் வெல்லஸ்லி குறிப்பிட்டுள்ளார். உள்நாட்டு முறையை மாற்ற எல்பின்ஸ்டனும்* விரும்பினரில்லை.

---

* Elphinstone — British Resident at Poona.

முறைவழங்கல்: பஞ்சாயத்து முறை நிலவியது. குற்றவாளிகளைகளைப் பஞ்சாயத்தார், கடுந்தேர்வு முறை களுக்கு உட்படுத்தினர். கைகால்களை முடமாக்குதலும் ஒரு தண்டனையாயிருந்தது. ஆயினும் எளிய முறையில் நீதி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மிகுந்த பொருட் செலவின்றி மக்கள் நீதி பெறமுடியும். பாலகிருஷ்ண சாத்திரியின் உதவிகொண்டு பாலாஜி ராவ் நீதி முறை யைச் சீர்திருத்தினுர். முறை வழங்கலை யொட்டிச் சுற்றுப் பயணங்களையும் மேற்கொண்டார். அவர் காலத்தில் கொலைத் தண்டம் கிடையாது. மாதவராவ் காலந்தொட்டு அத்தண்டனை வழங்கப்பட்டதைக் காண்கிறேம். காசிக்குச் சென்று கல்வி பயின்றுவந்த இராமா சாத்திரியின் முறை வழங்கும் ஆற்றல் யாவராலும் புகழப்படுகிறது. தலைமை நீதிபதியாக, மாதவராவ் காலத்தில் அவர் ஆற்றியபணிகள் மறக்கற்பாலன அல்ல. 1773-ல் ரகுநாத ராவ், நாராயண ராவின் கொலைக்கு ஒரு முக்கிய காரணமாயிருந்ததால் அவரிடம் பணியாற்ற இராமா சாத்திரி மறுத்துவிட்டுத் தாம் பதவியினின்று விலகிக்கொண்டார். நானுபட்னிஸ் ஸின் வேண்டுகோளுக்கிணங்கி மீண்டும் 1777-ல் அவர் பதவி ஏற்ருர். 1789-ல் அவர் இறந்தரர்.

மாவட்ட ஆட்சி: பெரிய மாவட்டம் " மாம்லத் தார் " என்ற அதிகாரியின் கீழும், சிறிய மாவட்டம் " காம்வீச்தார் " என்பாரின் கீழும் இருந்தன. அவர்கள் அடிக்கடி ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்துக்கு மாற்றப் பட்டு வந்தனர். நிலவரியைத் தீர்மானிக்கும் பொறுப்பு அவர்களுக்கிருந்தது. பொதுவாக மக்களின் நலத்தில் அவர்கள் அக்கரை கொள்ளவேண்டிய கடமை பெற்றிருந் தனர். வருவாயில் நான்கு சதவீதத்தை அவர்கள் ஊதிய மாகப் பெற்றனர். ஆண்டுக்கு 10 அல்லது 11 மாதங் கட்கே அவர்களுக்கு ஊதியம் உண்டு. மாவட்ட அதிகாரி கள், மத்திய அரசியலாருக்கும் பஞ்சாயத்தாருக்கு மிடையே தொடர்பு ஏற்படுத்திவந்தனர். அதிகாரிகளை அமர்த்துங் காலத்தில் அவர்தம் நன்னடத்தையின் பொருட்டு அவர்களிடமிருந்து அரசியலார் பிணையத்

தொகை பெற்றுவந்தனர். மேலும் அவர்கள் செயல்களைக் கவனித்துவரத் தனி அலுவலாளரும் இயங்கி வந்தனர். மாவட்ட அதிகாரிகள், ஊர் அதிகாரிகளான "படேல்" என்பாருடன் ஒத்துழைத்தனர். கிராமங்களின் உரிமைகளுக்கு ஊறு விளையவில்லை.

ஊர் ஆட்சி : கிராமத்தலைவர் அல்லது படேல், பரம்பரை உரிமை பெற்றிருந்தார். வரி வசூல், ஊர்க் காவல், முறைவழங்கல் முதலியன அவருடைய அலுவல்களாம். ஊர்மக்கள், கூலங்களை அவருக்கு ஊதியமாக அளித்துவந்தனர். "பிரிட்டிஷ் ஆட்சியின் கீழிருந்த டெபுட்டி கலெக்டரின் நிலையைவிடப் பேஷ்வாக்கள் காலத்திய படேலின் நிலை சிறப்புற்றிருந்தது எனக் கூறலாம்"*. உரிமைகளுக்கு ஏற்பப் பொறுப்பு வாய்ந்த கடமைகளும் ஊர் அதிகாரிகளுக்கு இருந்தன. படேலுக்கு உதவியாயிருந்த குல்கர்ணி எனப்படும் கணக்கர் ஒரு அந்தணர். தவிர, வேறு சில உதவியாளரும் அவருக்கு உண்டு. பேஷ்வாக்களின் கட்டுப்பாடுகள் இருந்தபோதிலும் ஊர்களில் உரிமை ஆட்சி நிலவியதென்றே கூறவேண்டும். எல்பின்ஸ்டன் போன்ற ஆட்சி வினைஞர்கள் அச்சுய ஆட்சித் தாபனங்களைப் புகழ்ந்து கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

———

* 92, பக். 224.

பகுதி 20

சமூக வாழ்க்கையும் பண்பாடும்

சாதிமுறையும் சமயமும்: பேஷ்வாக்கள், சாதி முறையை வற்புறுத்திப் போற்றினர். அந்தணர்கள் மிகுதியான உரிமைகளைப் பெற்றிருந்தனர். ஆயினும் அறிவுத் திறமை மிகுதியாகப் பெற்ற ஒருவன் எச்சாதியினனு யிருந்த போதிலும் முன்னணிக்கு வர வாய்ப்பு இருந்தது. பேஷ்வாக்களின் கீழ் பெருகிய சாதி வேற்றுமை உணர்ச்சி மராட்டிய அரசின் வீழ்ச்சிக்கு ஒரு காரணம் என்ற கூற்று ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இல்லை*. பெரும்பான்மையும் அடிமைகள் துன்புறுத்தப்படவில்லை. கைதிகள் (அரசியல் கைதிகள் உட்பட), நீத்தார் கடன், மகள் திருமணம், பிள்ளையின் உபநயனம் முதலிய சமயத் தொடர்பான கடமைகளை அகற்றுவதற்காகக் குறிப்பிட்ட காலத்துக்கு விடுதலை பெற்றனர். சாதித்தொடர்பான குற்றங்களைப்புரிந்த கைதிகள், சில சமயச் சடங்குகளைச் செய்து தூய்மை பெற முடியும். இந்து சமயத்தை விட்டு நீங்கியவர்கள் மீண்டும் அம்மதத்தைப் பின்பற்ற அனுமதிக்கப்பட்ட குறிப்புகள் உள்ளன. பல மூட நம்பிக்கைகள் சமூகத்திலிருந்தன. பல்லி விழுதல் தூய்மையற்றதெனக் கருதப்பட்டது. வழிபாட்டு உருவச் சிலையின் மேல் பல்லி விழுந்தால் அதற்காக, விரிவான பல பிராயச்சித்தங்கள் விதிக்கப்பட்டிருந்ததைக் காண்கிறோம். பண்டரிபுரச் சமய இயக்கத்தைப்பற்றி முன்னர்ப் பார்த்தோம். துக்காராம், இராமதாசர், பிரம்மேந்திரசுவாமி முதலியோர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க பெரியோர்களாவர். பாலாஜி விசுவநாதரைத் தவிர மற்ற பேஷ்வாக்கள், "ராவ்" என்ற பட்டத்தைத் தம் பெயருடன் கூட்டி வழங்கிய போதிலும், அவர்கள் மத்துவர்களல்லர். இஸ்லாம், கிறித்தவம் ஆகிய

* *86, பக். 175–81.*

மதங்கள் நிலைபெற்றிருந்த இடங்களில் அவற்றைப் பேஷ்வாக்கள் ஆதரித்தனர். ஆனால் பசுக்கொலையை அவர்கள் ஆதரிக்கவில்லை.

பெண்டிர் நிலை : ஜீஜாபாய், தாராபாய், உமாபாய், ஆகியோர் பொது வாழ்க்கையில் கொண்ட பங்கைப்பற்றி முன்னர்ப் பார்த்தோம். பாலாஜி விசுவநாதரின் மகளான அனுபாயும், அகலியாபாய் ஹோல்காரும் சிறந்த ஆட்சியாளர் என்ற புகழைப் பெற்றுள்ளனர். சக்வார்பாயும் ஆனந்திபாயும் இழைத்த கலகங்களையும் முன்னர்க் குறிப்பிட்டோம். பேஷ்வாக் குடும்பப் பெண்டிர் வைதீகப்பற்றுடனிருந்தபோதிலும் சமூகத்தைப் பொறுத்தவரை பரந்த நோக்குடனே விளங்கினர். முதல் பேஷ்வாவின் மனைவி இராதாபாயின் செல்வாக்கினால் நன்மையே ஏற்பட்டது. முற்காலத்தில் சில குற்றங்களுக்காகப் பெண்டிர் தமது சாதியினின்றும் விலக்கப்பெறுவது வழக்கம். ஆனால் அத்தகைய குற்றங்களைப் பேஷ்வாக்கள் காலத்தில் தூய்மை படுத்தும் சடங்கு முறைகள் பின்பற்றப்பட்டன. பொதுவாக, மகாராட்டிரத்தில் கைம்பெண் மறுமண முறை நிலவிய போதிலும் அந்தணர்கள் அதை ஏற்கவில்லை. அந்தணர்கள் தமது பெண்களைத் தம் உடன்பிறந்தாளின் மகனுக்குத் திருமணம் செய்தமைக்காக பஸ்ஸீனில் குற்றத் தண்டம் விதிக்கப்பெற்றனர் என்ற குறிப்பு காணப்படுகிறது. அத்தகைய மணவினை முறை தரும சாத்திரத்துக்கு முரணானதாம். மூன்று வயது அந்தணப் பெண் ஒருத்தியை 45 வயதுள்ள ஒரு ஆடவர் மணந்தாராம். பெண்ணின் பெற்றோர் அச்செயலை அறியவில்லை. அத் திருமணம் முறையற்றது என்று நீக்கப்பட்டு, அப்பெண் வேறொருவரை மணந்துகொண்டாள். இளமைப் பருவத் திருமண முறை பேஷ்வாக்கள் குடும்பத்திலேயே இருந்ததைக் காண்கிறோம்.

பண்பாடு : பேஷ்வாக்கள், பூனாவைச் சிறந்த வடமொழிக் கல்வித் தலைநகரமாக்கினர். இந்தியாவின் பல இடங்களிலிருந்து பண்டிதர்கள் அங்கே சென்றனர்.

மராட்டியரின் உச்சநிலை 1713—72

அந்தணர்களுக்கு, அவர் தம் அறிவுத் திறமையைப் பொருட்படுத்தாது. 'தக்ஷிணை' கொடுக்கும் முறையை மாதவராவ் விரும்பவில்லை. ஒவ்வொருவருக்கும் அவரவர் தகுதிக்குத் தக்கவாறு பரிசு அளிப்பதையே அவர் ஆதரித்தார். பேஷ்வாக்கள், குறிப்பாக பாலாஜி ராவ், சிறப்பு வாய்ந்த நூல்களின் கையெழுத்துப் பிரதிகளையும் அரசியல் பதிவேடுகளையும் சேமித்துக் காப்பாற்றுவதில் மிகுந்த ஊக்கங்காட்டினார்கள். பதினாறும் நூற்றாண்டில் ஏகநாதரும் அடுத்த நூற்றாண்டில் முக்தேஸ்வர், துக்காராம், இராமதாஸ் முதலியோரும் சிறப்பு வாய்ந்த மராட்டிய இலக்கிய அறிஞர்களாவர். பெருமை பொருந்திய மராட்டியக் கவியான ஸ்ரீதரர் (1679—1728), 1703-ல் இராம விசயம், ஹரிவிசயம் என்ற நூல்களையும், 1712-ல் "பாண்டவப் பிராதபம்" என்பதையும், 1712-ல் சிவ லீலாம்ருதம் என்ற நூலையும் ஆக்கிப் புகழ் பெற்றார். வாமன பண்டிதர், மஹிபதி முதலிய அறிஞர்களும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவராவர். பின்னவர், "பக்தி விசயம்" முதலிய நூல்களை ஆக்கியுள்ளார். இராம் ஜோஷி (1762—1802) லாவணிப்பாக்கள் இயற்றும் ஆற்றல் பெற்றிருந்தார். வரலாற்றுத்தொடர்பான நாட்டுப் பாடல்களைத் தெருப் பாடகர்கள் பாடி வந்தனர். எடுத்துக்காட்டாக; அப்ஸல் கானின் சாவு, பானிப்பட்டுப்போர், முதலிய நிகழ்ச்சிகள் அவ்வாறு பாடப்பெற்று வந்தன. "பகார்கள்" என்பவை உரைநடையிலுள்ள வரலாற்றுக் குறிப்புகளாம். சிவாஜியின் வாழ்க்கையைப்பற்றிய சபாசத்பகார் அவற்றில் மிகவும் சிறப்பு வாய்ந்தது. இவை யாவும், மராட்டியர், தம் நாட்டுக்கு வெளியே பலபோர் முயற்சிகளை மேற்கொண்டிருந்தபோதிலும் உள்நாட்டில் பண் பாட்டைப் பேணுவதில் ஊக்கங்காட்டினர் என்பதைத் துலக்குகின்றன.

———

அதிகாரம் 3.

ஆங்கிலேயர் ஆட்சியின் எழுச்சி (1708—72)

பகுதி 1

ஆங்கிலக்கூட்டுக்குழுவும் பிறமேனாட்டினர் போட்டியும் (1708-46)

வாணிக நிலை : முற்புத்தகத்தில் ஆங்கிலேயரின் பண்டகசாலைகள் இந்தியாவில் வளர்ச்சி அடைந்த வரலாற்றைக் கண்டோம். ஆங்கிலக் கூட்டுக்குழுவுக்கு ஏற்பட்டிருந்த இடையூறுகள் (தாய்நாட்டில்) 1708-ம் ஆண்டில் ஒருவாறு முடிவுற்றன என்றும் முன்னரே கூறினோம். கொடால்பின் பிரபுவின் 1708-ம் ஆண்டுத் தீர்ப்பின்படி பழைய கூட்டுக்குழு புதிய கூட்டுக்குழுவுடன் இரண்டறக்கலந்தது என்றும் பார்த்தோம். அவ்வாறு இணைந்த கூட்டுக்குழுவுக்கு ஐக்கிய கிழக்கிந்தியக் கூட்டுக் குழு என்று பெயர், அதேகாலத்தில்தான் அவுரங்கசீப் இறந்ததால் இந்திய அரசியலில் குழப்பம் மேலிட்டிருந்தது. 18-ம் நூற்றாண்டின் முற்பாதியில் ஆங்கிலேயரின் இந்தியவாணிகம் இரு மடங்காகப் பெருகியிருந்தது. 1711, 1730, 1744 ஆகிய ஆண்டுகளில் பார்லிமெண்ட் நிறைவேற்றிய சட்டங்களின்படி, 1783 வரை, கூட்டுக் குழு, வாணிகத் தனி உரிமையைப் பெற்றிருந்தது. பங்குதாரர்களின் பங்கு ஊதியம் பத்துச் சதவீதம் வரையிலும் பெருகிவந்தது. கள்ள வணிகரை அடக்குவதற்கான பல முயற்சிகள் தோன்றின. சீனாவின் தேயிலை, அராபியாவின் காப்பிக்கொட்டை முதலிய பொருள்களில் ஆங்கிலேயரின் வாணிகம் மிகுந்த முன்னேற்றமடைந்தது.

மூன்று மாநிலத் தலைநகர்கள் : வில்லியம் கோட்டை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டை, பம்பாய் ஆகிய மூன்று

பகுதிகளின் தோற்றத்தைப்பற்றி முன்னர்ப் பார்த்தோம். அவை தனித் தனியாகவே இயங்கிவந்தன. சென்னை கவர்னர் தாமஸ் பிட் என்பார் 1708-ம் ஆண்டிலிலே முகலாயப் பேரரசருக்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பத் திட்டமிட்டார். ஜான் சூர்மன் (1714–7) கல்கத்தாவி லிருந்து தில்லிக்குச் சென்றதால் முகலாயப் பேரரசரிட மிருந்து சில உரிமைகளையும் சலுகைகளையும் கம்பெனியார் (கூட்டுக்குழுவினர்) பெற்றனர். அவற்றை வழங்கிய பேரரசரின் ஆணைகளை, கூட்டுக்குழுவின் மாசாசனம் என்று சில அறிஞர்கள் கூறுவர். அத்தூதுவர் சென்று வந்ததால் பேரரசின் வீழ்ச்சிநிலை ஆங்கிலேயருக்குப் புல னாகியது.

1626-ம் ஆண்டுப் பட்டயத்தின்படி கல்கத்தாவில் நீதி வழங்கும் முறை சீர்திருந்தியது. அந்நகரின் மக்கட் தொகையும் பெருகிவந்தது. 18-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அதன் மக்கட்தொகை 15,000. அந்நூற் றாண்டின் நடுவில் 100,000 ஆகியது. 1742-ல் மராட்டி யரின் வங்காளப் படையெழுச்சியே அத்தகைய மக்கட் பெருக்கத்துக்குக் காரணமாயிருக்கக்கூடும். அச்சமடைந்த வங்காளியர் வில்லியம் கோட்டைக்குச் செல்லலாயினர். அவ்வாண்டில் தோன்றிய மராட்டிய அகழியைப் பற்றி முன்னர்க்குறிப்பிட்டோம். தென்னிந்தியாவில் ஆங்கிலே யருக்கும் பிரெஞ்சியருக்கும் போர் தொடங்குவதற்கு 50 ஆண்டுகள் முன்னரே சென்னை, வலிமையிலும் சிறப்பிலும் முன்னேறிவந்தது. அண்மையிலுள்ள பல ஊர்களின் சேர்க்கையால் அந்நகரம் பரவியது. அதன் நகராட்சி மன்றம், 1726-ம் ஆண்டு அரசப் பட்டயத்தின் படி திருத்தி அமைக்கப்பட்டது. அதன் மக்கட்தொகை அவ்வமயம் ஏறத்தாழ 300,000. பம்பாயை அடுத் துள்ள இடங்களில் போராட்டம் விளைந்து வந்த போதிலும் அந்நகரின் வாணிகச் செழிப்புக் குன்றவில்லை. மேற்கு இந்தியாவிலிருந்த ஆங்கிலேயர், சாகுவுடனும் பேஷ்வாக்களுடனும் நட்பு உறவு பூண்டிருந்தனர். பம்பாயில் நீதிவழங்கும் முறை ஒழுங்குற்றது. வங்கி,

முதலிய மக்களுக்கான தலங்கள் உண்டாயின. வணிகரும் தொழில்துறை மக்களும் மிகுதியாக அங்குச் செல்லலாயினர்.

ஆங்கிலேயக் குடியேற்றப்பகுதிகளின் உள்துறை அமைப்பு : சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய ஒவ்வொரு பகுதிக்கும் தலைவர் ஒருவர் இருந்தார். அவருக்கு ஆலோசனை கூறும் குழுவில் அனுபவம் வாய்ந்த ஆங்கிலேய வணிகர் உறுப்பினராக இருந்தனர். தலைவரை அக்குழு கட்டுப்படுத்திவந்தது. ஆலோசனையாளருக்கு அடுத்தபடியாக, சிறப்புவாய்ந்த சில வணிகர்களும், ஆலைத் தலைவரும், கணக்கரும், தொழில்பழகுவோரும் பணித்துறைச் சார்பான அலுவல்களைப் புரிந்து வந்தனர். ஆட்சித் தலைவர், முடிவுசெய்வாக்கைப் பெற்றிருந்தார். ஆனால் ஆலோசனைக் குழுவின் கருத்தை அவர் மீற முடியாது. மாகாணத் தலைவரின் புரட்சிக் கலகத்தைத் தடுப்பதற்கு அத்தகைய ஏற்பாடு சாலச் சிறந்ததே. ஆனால் சிற்சில காலங்களில் குழுவினர் வரம்பு மீறியும் செயலாற்றியதைக் காண்கிறோம். 1720-வரை அலுவலாளர் யாவரும் ஒரே குடும்பத்தினரைப் போல, ஆட்சித் தலைவருக்குக் கட்டுப்பட்டு வாழ்க்கை நடாத்தி வந்தனர். அவர்களிடையே ஏற்படும் கருத்து வேற்றுமையை அகற்றி ஆட்சித் தலைவர், ஒழுங்கை நிலைநாட்டினர். அவர்கள் குடிப் பழக்கத்தையும் சூதாட்டத்தையும் மிகுதியாக மேற்கொண்டிருந்தனர். ஒருவர் மற்றொருவருடன் போர் செய்வதைச் சட்டம் தடுத்திருந்தது. அடிமைகளை அன்புடன் நடத்துமாறும் நலந்தரும் ஆட்சிக் கொள்கையைப் பின்பற்றுமாறும் தாய்நாட்டிலிருந்து ஆணைகள் வந்து கொண்டு இருந்தன. இந்திய நடனப் பெண்டிர்பால் ஆங்கிலேயரின் நாட்டம் மிகுதியாகச் சென்றது, மணமாகாத பலர், அவர்களைத் தம் ஆசை நாயகிகளாக ஆக்கிக் கொண்டனர். தொடக்க காலத்தில் ஆங்கிலேயர் இந்திய வாழ்க்கையுடன் தொடர்பு கொள்ளவில்லை. எனினும் அவர்கள் இந்திய பழக்க வழக்கங்களை வெறுக்கவில்லை ; இந்நாட்டு மொழிகளைக் கற்ப

தில் கருத்தைச் செலுத்தாமல் பல இந்தியச் சொற்களை ஆங்கில முறையில் அமைத்துக் கொண்டனர். இந்நாட்டினரின் சில பழக்கங்களையும் ஓரளவு மேற்கொண்டனர். எடுத்துக் காட்டாக இந்திய முறையில் உட்சட்டை அணிதல், தம் இல்லங்களுக்குப் புறத்தில் இந்திய முறையில் உணவு அருந்துதல், வெற்றிலை போட்டுக் கொள்ளல், இந்நாட்டு முறையில் புகை பிடித்தல் முதலிய சில பழக்கங்கள் குறிப்பிடத் தக்கவை *

பிற கிழக்கிந்தியக் (கம்பெனிகள்) கூட்டுக் குழுக்கள் : டேனிஷ்காரர் இந்தியாவுடன் வாணிகம் செய்வதற்கு முயன்றதைப்பற்றி முன்னர் கண்டோம். பிளாண்டர்ஸ் (Flanders) (ஆஸ்திரியப் பேரரசரின் ஆட்சிக்குட்பட்டது) வணிகர், கீழ்நாட்டு வாணிகத்தின் பொருட்டு ஒரு கூட்டுக் குழுவை அமைத்தனர். ஆஸ்டெண்ட் (Ostend) கம்பெனி என்று அதற்குப் பெயர். 1723-இல் அக் குழுவினர் ஆஸ்திரியப் பேரரசரிடமிருந்து பட்டயம் பெற்றனர். ஆனால் டச்சுக்காரரும் ஆங்கிலேயரும் அம் முயற்சியைக் கடுமையாக எதிர்த்தனர். தம் நாட்டின் அரசியல் நிலை காரணமாக ஆஸ்திரியப் பேரரசர் 1731-இல் அக் கூட்டுக் குழுவைக் கலைத்துவிட்டார். அக்குழுவினர் தாம் குடியேறியிருந்த வங்கி பஸார் (ஹூக்ளி ஆற்றங் கரையில்), கோவளம் (சென்னைக்குத் தெற்கில் உள்ளது) ஆகிய இடங்களைக் கைவிட்டனர். ஆஸ்டெண்ட் கம்பெனியின் முயற்சியை ஆங்கிலேயர் எதிர்த்தது வீணானசெயலே. ஏனெனின் அது வளர்ச்சியுற்றிருக்குமாயின், அதனால் ஆங்கிலேயரை விடப் பிரெஞ்சியரும் டச்சுக்காரருமே மிகுதியான அளவுக்கு இன்னலுற்றிருப்பர். சீனாவுடன் வாணிகம் செய்வதற்காக 1731-ல் ஏற்பட்ட ஸ்வீடன் கிழக்கிந்தியக் கம்பெனியும் இறுதியில் தோல்வியுற்றது. பிரஷ்யா நாட்டினர் 1750, 1753 ஆகிய ஆண்டுகளில் இரண்டு கம்பெனிகளை அமைத்தனர். அவற்றில்

* T. G. P. Spear. The Nabobs (1932)
(டி. ஜி. பி. ஸ்பியர், நவாபுக்கள், பக். 22)

முன்னையது சீனாவுடனும் பின்னையது வங்காளத்துடனும் வாணிகம் செய்வதற்காக ஏற்பட்டவை. அவற்றின் செயல்களும் பயனற்றவை ஆயின. 1775-ல் தோன்றிய ஆஸ்திரியக் கிழக்கிந்தியக் கம்பெனி பத்து ஆண்டுகட்கு மேல் செயலாற்றவில்லை.

டச்சுக்காரரின் போட்டி வலிமை அற்றது : 17-ஆம் நூற்றாண்டில், கீழ்த்திசையில் போர்ச்சுகீசியரின் வீழ்ச்சியைப் பற்றியும் டச்சுக்காரரின் எழுச்சியைப் பற்றியும் முன்னர் விரிவாகக் குறிப்பிட்டுள்ளோம். டச்சுக்காரருடன் தொடர்பு கொண்ட சில ஐரோப்பியப் போர்களின் விளைவாக இந்தியாவில் அவர்தம் அதிகாரம் இடருக்குள்ளாகியது.[1] டச்சுக்காரருடன், 1652-4, 1665-7, 1672-4 ஆகிய ஆண்டுகளில் ஆங்கிலேயரும், 1672 முதல் 1713 வரை பிரெஞ்சுக்காரரும் போரிட்டு வந்ததால், டச்சுக்காரரின் கடற்படையும் வளஆதாரங்களும் குறைந்தன. 1674-ம் ஆண்டுக்குப் பிறகு ஹாலந்து நாடு இங்கிலாந்துடன் நட்பு உறவு கொண்டிருந்ததால் இந்தியாவில் டச்சுக்காரர் தமது பழைய பகைமை உணர்ச்சியை ஆங்கிலேய வணிகரிடம் காட்ட இயலவில்லை. தமது தாய்நாட்டின் பொருளாதார நிலைமை காரணமாக டச்சுக் கிழக்கிந்தியக் கூட்டுக்குழு இடுக்கணுற்றது. அனைவற்றிற்கும் மேலாக டச்சுக்காரரின் கீழ்நாட்டு ஆட்சி, வாணிகம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டதாகும். மக்களுக்கு நலந்தரும் ஆட்சியை அமைத்துத் தரவேண்டுமென்பது அவர்தம் நோக்கமன்று. வாணிகத்தில் அவர்கள் நாடிய தனி உரிமைக் கொள்கையும், கட்டாய உழைப்பு முறையும், ஈவு இரக்கமற்ற முறைகளும் இந்நாட்டில் டச்சுக்காரரின் அழிவுக்குக் காரணங்களாகக் குறிப்பிடலாம். வாணிகத்துறையிலும் பேரரசு அமைப்பதிலும் டச்சுக் கம்பெனி சிறப்புற்றிருந்த போதிலும் குடியேற்ற நாட்டு ஆட்சி முறையில் அது தோல்வியுற்றது.[2] 18-ம் நூற்றாண்டில்

1 81, பக். 19.

2 14, V பக். 57.

டச்சுக் கடற்படை வீழ்ச்சி நிலேயிலிருந்தது. ஆகவே இந்தியாவில் அது செயலாற்ற முடியவில்லே. அதே சமயத்தில் தென்னிந்தியாவில் தியூப்ளேயின் முயற்சியால் பிரெஞ்சு ஆதிக்கம் ஏற்பட்டிருந்தது. வங்காளத்தில் கிளேவின் தலேமையில் ஆங்கிலேயர் வலிமை பெற்றிருந்தனர். அந்நிலேமை டச்சுக்காரருக்கு இன்னலேத்தந்தது. ஆகவே, 18-ம் நூற்றுண்டில் ஆங்கிலேயருடன் வன்மையாகப் போட்டியிட்டவர்கள் பிரெஞ்சுக்காரரே ஆவர். இனி அவர்களேப் பற்றி அறிந்துகொள்வோம்.

———

பகுதி 2

மார்த்தினின் பின் வந்தோர் : லெனுயரும் தூமாவும்

லெனுயர் : மார்த்தினின் கீழ் புதுச்சேரியின் வளர்ச்சியைப் பற்றி முன் புத்தகத்தில் குறிப்பிட்டோம். 1606-ல் அவர் இறந்தார். அதன் பின் 1720 வரை இந்தியாவில் பிரெஞ்சுக்காரரின் முன்னேற்றம் தடைபட்டிருந்தது. அவ்வாண்டில் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி மாற்றி அமைக்கப்பட்டதால் வலிமை பெற்றது. 1720 முதல் 1735 வரை புதுச்சேரியின் கவர்னராக இருந்த லெனுயர் திறமையுடன் ஆட்சி நடத்தினர். அக்காலத்தில், மசூலிப் பட்டினம், கள்ளிக்கோட்டை, மாஹி, ஏனும் ஆகிய இடங்களிலும் பிரெஞ்சியர் குடியேறினர். லெனுயரும் அவர் பின் வந்தோரும் வாணிக முன்னேற்றத்துக்கான வழியைப் பின்பற்றி ஒழுகினர். கண்ணைக் கவரும் கட்டடங்களால் புதுச்சேரி அணி செய்யப்பட்டது. அங்கு பல பூங்காக்களும் ஒரு கல்லூரியும் அமைந்தன. அயல் நாட்டுத் தூதுவர் தங்குவதற்கான மாளிகை எடுக்கப் பட்டது.

தூமா : லெனுயருக்குப் பின் போந்த தூமா (1735-42) அரசியல் அலுவல்களைத் திறமையுடன் கை யாண்டார். அவருடைய வீரம், நாட்டுப்பற்று, அறிவுக் கூர்மை, அரசியல் தந்திரம் முதலிய பண்புகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. அவர், தமது நாட்டினருக்குப் புகழைத் தேடித்தந்தார். தஞ்சாவூரின் அரசுரிமையை நாடிப் போட்டியிட்ட ஒருவர்க்குப் பொருள் உதவி செய்ததன் மூலம் அவருக்குக் காரைக்கால் கிடைத்தது. ரகூஜி பான்ஸ்லே கருநாடகத்தில் படையெடுத்த பொழுது அவர் தூமாவுடன் கொண்ட உறவைப் பற்றி முன்னரே குறிப்பிட்டுள்ளோம். தோஸ்து அலி குடும்பத்

தினரில் சிலரைக் காப்பாற்றி வந்தார் தூமா. பிரெஞ்சியரின் பெருமை இந்தியா முழுவதும் பரவுவதற்கு இவரும் முக்கிய காரணமாவார். இவரை, அசப்ஜாவும், சாப்தர் அலியும், முகலாயப் பேரரசரும் பெருமைப் படுத்தினர். பேரரசர் இவரை ஒரு நவாப்பாகவும், 4,500 குதிரை வீரர்களுக்குத் தலைவரான மான்சப்தாராகவும் செய்தார். இவர் பதவி துறந்தவுடன் தியூப்ளே அரசியல் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

பகுதி 3

தியூப்ளே : வாழ்க்கை, கொள்கை, முறைகள் திறமை, தோல்வி முதலியன

தியூப்ளேயின் வாழ்க்கையின் முற்பகுதி(1697-1742): ஜோஸப் பிராங்காய் தியூப்ளே என்பவர் லாண்ட்ரெஸீஸ் என்னுமிடத்தில் பிறந்தார். இவர் தந்தை கீழ் நாட்டு வாணிகக் கம்பெனியில் தலைமை இயக்குநராகப் பணியாற்றி வந்தார். தம் மகன் வாணிகத்துறையில் சிறப் பெய்த வேண்டுமென்பதே அவர் அவா. ஆனால் தீயூப் ளேயோ கணிதத்துறையில் ஆர்வம் காட்டிவந்தார். அவர் அமெரிக்கா, இந்தியா முதலிய நாடுகட்குக் கடல் வழியாகச் சென்று வந்த பிறகு வாணிகத்தில் அவருக்கு மிக்க ஊக்கமும் ஆற்றலும் ஏற்பட்டன. 1720-ல் புதுச்சேரி ஆலோசனைக் குழுவில் அவருக்குத் தலைமை இடம் கிடைத்தது. அவர் தனிப்பட்ட முறையிலும் வாணிகம் செய்து பெருஞ் செல்வரானர். அதைக் கண்ட சில தீயோர் பொருமை கொண்டு அவர் மீது சில குற்றச் சாட்டுகளைச் சுமத்தினர். அதனால் தியூப்ளே தமது பதவியை இழக்க நேரிட்டது. ஆயினும் அதனால் அவ் வீரர் மனத்தளர்ச்சி அடையாமல் தம்மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் பொய்யானவை என்பதைத் தாய் நாட்டினருக்கு உணர்த்துவதில் முயன்று அதில் வெற்றி பெற்ருர். பின்னர் அவர் சந்திரநாகூர் பண்டகசாலையின் இயக்குநராக அமர்த்தப்பெற்ருர் (1731-41). அந்நகரின் வாணிகப் பெருக்கத்திற்காக அவர் தமது பொருளையும் பயன்படுத்தினர். இதனல் அந்நகரம் சீறும் சிறப்பும் உயர்வும் ஒழுங்கும் எய்தியது. தியூப்ளேயின் செல்வமும் பெருகியது. அவருடன் பணியாற்றி வந்த அவருடைய நெருங்கிய நண்பர் ஒருவர் இறந்தபின் அவர்மனைவியை தியூப்ளே, 1741-ல் திருமணம் புரிந்துகொண்டார். அவருக்கு மனைவியாக இருக்கக் கூடிய பெரிய தகுதி அவ்வம்மையாருக்கு

இருந்தது என்பதில் ஐயமில்லை. இருவரும் இன்பத்திலும் துன்பத்திலும் இணைபிரியாது வாழ்ந்தனர். அவர்களுக்குப் பிறந்த ஒரே மகன் 1742-ல் பிறந்த அதே நாளில் இறந்தான். தனித் துறையிலும் பொதுத் துறையிலும் தியூப்ளே அவர் மனைவிக்கு மிகவும் கடப்பாடுடையவர் என்றே கூறவேண்டும். வங்காளத்தில் வாணிகத்துறையில் அவர் அடைந்த சிறப்பின் விளைவாக அவர் புதுச்சேரிக் கவர்னராகவும், இந்தியப் பிரெஞ்சுக் குடியேற்றங்களின் தலைமை இயக்குநராகவும் அமர்த்தப்பெற்றார்.

புதுச்சேரி கவர்னராகப் பணியாற்றல்: தியூப்ளே' 1742-ல் புதுச்சேரியின் கவர்னரானார். கருநாடகத்தின் அக்காலநிலைமையை அவர் கூர்ந்து நோக்கி வந்தார். 1740-ல் ரகூஜி பான்ஸ்லே அங்குப் படையெடுத்ததால் ஏற்பட்ட விளைவுகளை அவர் தெளிவாக உணர்ந்து கொண்டார். அப்பகுதியில் பிரெஞ்சியர் செல்வாக்குப் பெறவேண்டு மென்பது அவருடைய அவா. அதற்கான முன்னேற்பாடுகளை அவர் செய்துவந்தார். அவ்வமயம் ஆஸப்ஜாவும் கருநாடகத்தில் மராட்டியர் செல்வாக்கு ஏற்படுவதைத் தடுக்க முயன்று வந்தார்; ஐரோப்பாவில், ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சியருக்கு மிடையே போர் ஏற்படும் சூழ்நிலை தோன்றியிருந்தது. இதலால் புதுச்சேரியின் காவல் அரண்களை தியூப்ளே வலிமைப்படுத்திக் கொண்டார். நிதிநிலைமையை ஒழுங்குபடுத்தினார். கம்பேனியின் பணியாளர் பரிசுகள் வாங்கிக்கொள்ளும் வழக்கத்தைத் தடுத்தார்; பல வழிகளில் சிக்கனத்தைக் கையாண்டார்; ஆட்சி முறையின் தன்மை உயர்வடைந்தது. தம் முன்னவர்க்கிருந்த நவாப் பட்டத்தை இவரும் சூட்டிக் கொண்டார்.

ஆர்க்காட்டு நவாப் பதவி (நவாபி): ஆர்க்காட்டின் முதல் நவாப் சாததுல்லாகான் (1710–32) என்பவராவர். அவருக்குப் பின் தேஸ்து அலி (1732–40) அப்பதவியை ஏற்றார். அவர், தாமல் செருவுக் கணவாயில் மராட்டியருடன் போரிட்டு இறந்தார். அவருடைய மகனான சாப்தர்

அலியுடன் (1740–2) மராட்டியர் அமைதி உடன்பாடு செய்து கொண்டனர். மேலும் அவர்கள், தோஸ்து அலி யின் மருமகனை சந்தா சாகிப்பைத் திருச்சிராப்பள்ளி யில் முற்றுகையிட்டுப் பின் சதாராவுக்குக் கைதியாக அழைத்துச் சென்றனர் (1741). சாப்தர் அலியை ஆஸப்ஜா, முறைப்படி நவாப் ஆக்கவில்லை. அதற் கிடையில் 1742-இல் சாப்தர் அலியை அவருடைய மைத்துனரான முர்த்தாஸா அலி கொன்று விட்டார். ஆனால் பின்னவர் ஆர்க்காட்டில் நிலைபெற முடியாது, பெண்ணுடை அணிந்து தப்பி ஓட நேர்ந்தது. அதன் பின் சாப்தர் அலியின் மகன் முகம்மது சயத்கான் 1742 முதல் 1743 வரை பெயரளவில் நவாப்பாக இருந்தார். 1744-ல் அவர் கொலையுண்டார். கொலை செய்தவன் ஒரு பட்டாணி யன் அல்லது முர்த்தாஸா அலியாக இருக்கக்கூடும். 1743-ல் ஆஸப்ஜா கருநாடகத்தில் படையெடுத்ததின் விளைவாக, அன்வாருத்தீன் என்பாரை (1743–9) ஆர்க் காட்டு நவாப்பாக ஆக்கினர். இப்புதிய நவாப் சாத துல்லாகானின் குடும்பத்தவரல்லர். இவருக்கு முறைப்படி பிறந்த மகன் மாபுஸ்கான்; முறையின்றிப் பிறந்த மகன் முகம்மது அலி. (1749–95).

பிரெஞ்சியர் சென்னையைக் கைக்கொள்ளல் (1746): ஐரோப்பாவில் தோன்றிய ஆஸ்திரிய வாரிசு உரிமைப் போர், 1746-ல் இந்தியாவிலும் பரவியது. இந்தியாவில் அப்போர் பரவுவதை தியூப்ளே அவ்வமயம் விரும்பவில்லை. ஆகவே ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் இந்தியாவில் நொதுமல் கொள்கையைப் பின்பற்ற வேண்டுமென்பது அவர் விருப்பம். ஆனால் ஆங்கிலேயர் போரை வரவேற் றனர். ஏனெனின் பிரெஞ்சுக்காரரின் அதிகாரத்தை இந்நாட்டில் ஒழிக்க ஆங்கிலக் கப்பற்படையும் நிலப்படை யும் உதவும் என்று அவர்கள் நம்பினர். தியூப்ளே போரைத் தடுக்க முயன்றது பயனுறவில்லை. ஆங்கில அரசாங்கம், பார்னெட் என்ற தலைவரின் கீழ் ஒரு கப்பற் படையை, கீழ்நாட்டுப் பிரெஞ்சுக் கடற்படையைக் கைப்

பற்றுமாறும் புதுச்சேரியை எதிர்ப்பதில் சென்னைக்கு உதவி புரியுமாறும் அனுப்பியது. அவ்வமயம் சென்னைக் கவர்னராக இருந்தவர் நிக்கோலஸ் மார்ஸ் என்பாராவர். தியூப்ளேயின் முதல் முயற்சி தோல்வியடையவே, அவர் வேறோர் முயற்சியைக் கையாண்டார். தமது ஆட்சிப் பகுதியில் ஆங்கிலேயர் பிரெஞ்சியரை எதிர்க்காதவாறு தடை செய்ய வேண்டி நவாப் அன்வாருத்தீனுக்கு தீயூப்ளே முறையிட்டுக்கொண்டார். நவாப்பும் இருசாராரும் ஒருவர் மற்றவரைத் தாக்கக்கூடாது என்று அறிக்கை விடுத்தார். இவ்வாறு தியூப்ளேயின் எண்ணம் நிறைவெறியது. ஆங்கிலேயர் நவாப்பை மீறி எதையும் செய்ய விரும்பவில்லை. ஆதலால் பார்னெட் கப்பற்படையுடன் சோழ மண்டலக்கரையை அடைந்தும் புதுச்சேரியைத் தாக்காமல் திரும்பிச் செல்ல நேர்ந்தது.

இவ்வாறிருக்க, மொரீஷஸ், போர்போன் தீவுகளில் பிரெஞ்சுக் கவர்னராயிருந்த லாபோர்தனே ஒரு கப்பற்படையை அமைத்திருந்தார். தியூப்ளே, அவருடைய உதவியை நாடி முடங்கல் வரைந்திருந்தார். 1746-ல் லாபோர்தனேயின் படை வங்காள விரிகுடாவை நோக்கி வந்தது. வரும் வழியில் நாகப்பட்டினத்துக்கருகில் அவர் ஆங்கிலேயக் கடற்படையுடன் போரிட நேர்ந்தது, அப்போரில் வெற்றி தோல்விகளைப்பற்றி உறுதியாக எதையும் கூற முடியவில்லை. ஆங்கிலப் படைத்தலைவர், இன்றியமையா அலுவல்களை முன்னிட்டு ஈழத்துக்குச் சென்றுவிட்டார். அவர் மீளவும் வருவதற்குள் லாபோர்தனே தமது படையைப் பெருக்கிக்கொண்டு கிழக்குக் கரையில் தம் ஆதிக்கத்தை வலிமைப் படுத்திக்கொண்டார். அவ்வமயம் சென்னை நகரம் போதுமான காவலில்லாமல் இருந்தது. அதன் கவர்னர் மார்ஸ், நவாப்பின் உதவியை நாடினர், நவாப்பும் தியூப்ளேக்கு எச்சரிக்கை விடுத்தார். ஆனல் பின்னவரோ நவாப்புக்காகவே தாம் சென்னையைக் கைப்பற்ற முயலுவதாகக் கூறினர். ஆகவே சென்னையைப் பிரெஞ்சுக்காரர் கைப்பற்றிக்

கொண்டனர். அதன்பின் லாபோர்தனேக்கும் தீயூ பிளேக்கும் தாம் பெற்ற வெற்றியைப் பயன்படுத்திக் கொள்வதில் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. சென்னையைத் தம் வசமே வைத்துக்கொள்ள வேண்டுமென்பது தீயூப்ளேயின் கருத்து. ஆனால் லாபோர்தனேயோ, அந்நகரின் விடுதலைக்காகப் பணத்தைப் பற்றி ஆங்கிலேயருடன் சொல்லாடினார். அதன் பொருட்டுத் தமக்குக் கைக்கூலி கொடுக்கப்பட வேண்டியதைப் பற்றியும் அவர் பேச்சு நடத்தினார். தியூப்ளே, அம் முயற்சிகளை எதிர்த்து வந்தார். சென்னையை ஆங்கிலேயருக்குத் திருப்பிக் கொடுத்து விட்டால் இந்தியாவில் பிரெஞ்சியருக்கு விளையக்கூடும் இடையூறுகளைப் பற்றியும் அவர் விளக்கினார். ஆனால் லாபோர்தனே தியூப்ளேக்குக் கீழ்ப்படியாமல் தமது விருப்பத்தையே நிறைவேற்றி விட்டார். ஆங்கிலேயருடன் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி சென்னையைத் திருப்பித்தர அவர் இணங்கினார். அந்நிலையில் ஒரு புயற்காற்று லாபோர்தனேயின் கடற்படையின் பெரும்பகுதியை அழித்தது. எஞ்சியபடையுடன் அவர் திரும்பிச் சென்ற பிறகு அவர் செய்த உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளத் தீயூப்ளே மறுத்தார் சென்னையைத் திருப்பி அளிக்க அவர் இணங்கவில்லை. பிரெஞ்சு அலுவல்களைப் பொறுத்தவரை இந்தியாவில் தாமே தலைமை அதிகாரி என்பதையும் வற்புறுத்தினார். லாபோர்தனே பிரான்சுக்குத் திரும்பிச் சென்ற பிறகு அவருக்குத் தீயூப்ளே இன்னல் விளைவிக்கத்தொடங்கினார். அதன் விளைவாக அப்படைத்தலைவர் மூன்று ஆண்டுகள் சிறைப்பட்டிருந்து, பின் விடுதலைபெற்று இறந்தார். அவ்விடுதலைக்குப் பிரெஞ்சு அரசி தாம்-த பாம்பதார் முக்கிய காரணமாவர். தீயூப்ளே, சென்னையிலிருந்த உள் நாட்டு வணிகர்களையும் அவர் தம் சொத்துக்களையும் புதுச்சேரிக்கு மாற்றித் தலைநகரின் செழிப்பை உயர்த்த எடுத்துக்கொண்ட முயற்சி பயனளிக்க வில்லை.

செயிண்ட் தோம் போர் (1746): நவாப் அன்வாருத்தீன், சென்னையைத் தம்மிடம் ஒப்படைத்து விடும்படி

தியூப்ளேயைக் கேட்டார். ஆனால் அவர் மறுக்கவே தம் மகன் மாபுஸ்கானை ஒரு படையுடன் அனுப்பிப் பிரெஞ்சியரைத் தாக்கச் செய்தார். சென்னை முற்றுகைக் குள்ளாகியது. நவாபின் படைக்கும் பிரெஞ்சுப் படைக்குமிடையே (ஸான்) செயிண்ட் தோம் என்னுமிடத்தில் போர் நடந்தது. பிரெஞ்சுக்காரர் வெற்றி பெற்றதால் நவாப் சென்னை முற்றுகையைக் கைவிட்டார். "போரிடுதலில் முகம்மதியரே மிகவும் சிறந்தவர்" என்று பலர் கொண்டிருந்த எண்ணம் அப்போரினால் அழிந்தது, அப்போர், ஐரோப்பியருக்கும் உள் நாட்டினருக்கும், "பாஸ்தில் வீழ்ச்சியைப் போன்ற" சிறப்பு வாய்ந்தது.[1] ஆனால் அறிஞர் பெர்னியர் இந்தியப் படைகளின் ஆற்றலின்மையை 17-ம் நூற்றாண்டிலேயே உணர்ந்திருந்தார் என்பதும் ஈண்டு நினைவு கூரத்தகும். 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலேயர் செயிண்ட் டேவிட் கோட்டையில் முகலாயரை முறியடித்ததையும், 1746-க்கு முன்னரே பரடிஸ் இந்தியப் படையைத் தோற்கடித்ததையும் நாம் மறப்பதற்கில்லை. செயிண்ட்தோம் போர், அடையாற்றுச் சண்டை என்னும் வழங்கப்பெறும். "முற்பட்ட 80 ஆண்டுக் காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்த போர்க்கருவி முன்னேற்றத்தின் சிறப்பையும் போர்த் தந்திரங்களின் மதிப்பையும் அப்போர் உறுதியாகத் தெளிவாக்கிறது."[2]

புதுச்சேரி முற்றுகை : சென்னையைக் கைப்பற்றிய பிறகு தியூப்ளே, செயிண்ட் டேவிட் கோட்டையைத் தம் மடிப்படுத்த மும்முறை முயன்றார். ஆனால் அவை பயனளிக்கவில்லை. ஆனால் அவர் கைக்கூலி கொடுத்தும், புகழ்ந்தும், அச்சுறுத்தியும், நவாப்பை அடக்கி ஒடுக்கி வைத்திருந்தார். 1748-ல் பாஸ்கவென் என்ற ஆங்கிலக்

---

* Malleson, Dupleix (1890),
(மால்லிசன் – தியூப்ளே பக். 27.

* 26, பக். 20.

கடற்படைத் தலைவர் புதுச்சேரியை முற்றுகையிட்டார். ஆனால் பிரெஞ்சியர் வன்மையுடன் அந்நகரைக் காப் பாற்றிக் கொண்டனர். அவ்வமயம் தியூப்ளேக்கு உதவி யாயிருந்த அவர் மனைவியின் ஆற்றலும் வீரமும் சிறப் பாகக் கருதத்தக்கன. அவ்வம்மையாரின் விடா முயற்சி இறுதியில் வெற்றியைத் தந்தது. இரண்டு மாதங்கட்குப் பின் ஆங்கிலேயர் முற்றுகையைக் கைவிட்டனர். இது தியூப்ளேயின் முக்கியமானதோர் வெற்றியையும் ஆங்கி லேயரின் தோல்வியையும் குறிக்கிறது. பாஸ்கவென், ஸெயிண்ட் டேவிட் கோட்டைக்குப் பின்வாங்கி, மீண்டும் முற்றுகையிடுவதைப் பற்றி ஆலோசித்துக் கொண்டிருந் தார். ஆனால் அதற்கிடையில் ஐரோப்பாவில் ஆஸ்திரிய வாரிசு உரிமைப் போர் முடிவடைந்தது.

ஐய்லா ஷாப்பெல் உடன்படிக்கையின்படி (Aix-la-chapelle) இருசாராரும் அவரவர்கள் கைப்பற்றிய கைதி களையும் இடங்களையும் திருப்பிக் கொடுத்துவிட வேண்டு மென முடிவு செய்தனர். ஆதலால் சென்னையை ஆங்கிலேயர் மீண்டும் பெற்றனர் (1749). பாஸ்கவென் ஐரோப்பாவுக்குத் திரும்பினார். தியூப்ளே, ஓரளவு தோல்வி யடைந்த போதிலும் அவருடைய புகழ் குறையவில்லை. பிரெஞ்சுக்காரரின் படை வலிமையை இந்தியர் புகழ லாயினர். நடைபெற்ற நிகழ்ச்சிகள் ஆர்க்காட்டு நவாபின் ஆற்றலின்மையை வெளிக்காட்டின. கடற்படையின் சிறப்பை யாவரும் உணரத் தொடங்கினர். அத்துடன் ஆங்கில – பிரெஞ்சுப் போட்டியின் முதல் நிலை முடி வுற்றது.

வாரிசு உரிமைப் போட்டி : ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கு மிடையே நிலைத்த அமைதி நிலவாத வாறு செய்ய சில மாறுதல்கள் இந்நாட்டில் ஏற்பட்டன. ஐரோப்பாவில் அவ்விருவருக்கும் மிடையே அமைதி நிலவிய போதிலும் இந்தியாவில் அவர்கள் பகைமை கொள்ள நேர்ந்தது. 1749-ல் தஞ்சாவூரில் அரசினின்று விலக்கப்பட்ட ஒருவர் மீண்டும் பட்டம் பெறுவதற்கு

ஆங்கிலேயரின் உதவியை நாடினர். அதற்காகத் தேவிக் கோட்டைத் துறைமுகத்தை (கொள்ளிட ஆற்றின் முகத் துவாரத்திலுள்ளது) ஆங்கிலேயர் பரிசாகப் பெறுவதென் றும் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆயினும் தஞ்சை அரசரா யிருந்த பிரதாப சிங்கை நீக்க ஆங்கிலேயரால் இயல வில்லை. ஆனல் அவர் தேவிக்கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டனர். பிரதாபசிங்கும் ஆங்கிலேயரும் செய்து கொண்ட உடன்படிக்கைப்படி தேவிக்கோட்டையை ஆங்கிலேயர் வைத்துக் கொள்வதென்றும் அவர்கள் தஞ்சை அரசருக்கு இடையூறு செய்யக்கூடாதென்றும் முடிவாயிற்று. தம் உதவியை முதலில் நாடியவருக்கு ஆங்கிலேயர் ஓய்வுக்கால ஊதியம் வாங்கிக் கொடுத்தனர்.

ஐதராபாத்தில் ஆஸப் ஜா (நிஸாம்) இறந்தவுடன் குழப்பமேற்பட்டது. அவருக்குப் பல மக்கள் இருந்த மையே அதற்குக் காரணமாகும். அவருடைய இரண்டா வது மகனை நாசிர்ஜங் 1748-ல் தக்கணத்தின் அதிப ரானர். அவருடைய மூத்த மகனை காஸியுத்தீன் தில்லி யிலேயே இருந்து வந்தாரென்பதை நாமறிவோம். நிஸாமின் பெயரனை முஸபர் ஜங், ஐதராபாத் பட்டத் தைப் பெற விரும்பினர். அவ்வாறிருக்க மராட்டியரால் கைதியாக்கப்பட்டிருந்த சந்தா சாகிப் விடுதலை பெற்றுத் திரும்பி வந்து கருநாடக நவாப் பதவியைக் கைக்கொள்ள முயன்று வந்தார். முஸபர் ஜங்கும் சாந்தா சாகிப்பும் தத்தம் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்ள ஒரு கூட்டுறவு அமைத்துக் கொண்டனர். சந்தா சாகிப் தியூப்ளேயின் உதவியை நாடினர். பின்னவர் கருநாடக நவாப் அன்வாருத்தீன் மீது சினங் கொண்டிருந்தார் என்பதும் ஈண்டுக் கருதத்தக்கது. நவாப் ஆங்கிலேய ருக்கு உதவி செய்தமையே (புதுச்சேரி முற்றுகைக் காலத் தில்) அச்சினத்துக்குக் காரணமாகும். சந்தா சாகிப் சதாராவிலிருந்து விடுதலை பெறுவதற்காகப் புதுச்சேரிக் கவர்னர், மராட்டியா சத்ரபதிக்கு 7 லட்ச ரூபாய் கொடுத்த தாகவும் அறிகிறேம். சந்தா சாகிப்பின் மகனை இராசா

சாகிப் பிரெஞ்சுப் படையின் உதவி கொண்டு முஸபர்ஜங்குடனும் தம் தந்தையுடனும் சேர்ந்து கொண்டார். அக் கூட்டுப் படை அன்வாருத்தீனை எதிர்த்து வந்தது (1749).

வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள ஆம்பூர் என்னுமிடத்தில் போர் நடந்தது (1749). அன்வாருத்தின் போரில் இறந்தார். வெற்றிபெற்ற முஸபர் ஜங்கும் சாந்தா சாகிப்பும் முறையே தம்மைத் தக்கணச் சுபேதார் என்றும் கருநாடக நவாப் என்றும் அறிவித்தனர்; தியூப்ளேயின் உதவிக்காக அவருக்குப் பல நிலப் பகுதிகளைப் பரிசாக அளித்தனர். அதற்கிடையில் அன்வாருத்தீனின் இரண்டாவது மகனாகிய முகம்மது அலி, தாம் கவர்னராய் ஆண்டுவந்த திருச்சிராப்பள்ளிக்கு ஓடிவிட்டார். ஆங்கிலேயரின் உதவியை அவர் நாடினார். பிரெஞ்சியர் உள்நாட்டு அரசியற் போர்களில் பங்கு கொண்டு செல்வாக்கைப் பெறுவதைக்கண்ட ஆங்கிலேயர் தாமும் அவ்வாறே செயலாற்ற விரும்பினர். ஆகவே அவர் ஸான்தோமைக் கைப்பற்றி அது முகம்மது அலிக்கே உரியதென்று வாதாடினர். ஆனால் தியூப்ளே அப்பகுதி சந்தா சாஹிப்புக்கு உரியதென்று அறிவித்தார். முகம்மது அலியை ஒழித்துவிட வேண்டுமென்பது தியூப்ளேயின் அவா. ஆகவே திருச்சிராப்பள்ளியை நோக்கி அவர் ஒரு படையை அனுப்பினார். ஆங்கிலேயர் முகம்மது அலிக்கு உதவி செய்யத் தொடங்கினர். திருச்சிராப்பள்ளிக் கோட்டையின் காவல் ஆங்கிலேயப் படை முகவர் (காப்டன்) ஹோப் என்பாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதை நோக்கி வந்த பிரெஞ்சுப் படை தஞ்சாவூரை முற்றுகையிட்டது. தஞ்சை அரசருக்கு ஆங்கிலேயர் ஊக்கமளித்தனர். ஆகவே தஞ்சை அரசர் பிரெஞ்சுப் படையை மூன்று மாதங்கள் வரை செயலற்றிருக்கச் செய்தார். அதற்கிடையில் நாசிர் ஜங் புறப்பட்டு வந்ததால், தஞ்சாவூர் முற்றுகை கைவிடப்பட்டது.

கருநாடகத்தில் நாசிர் ஜங் (1750): கருநாடக நிகழ்ச்சிகளைக் கண்ணுற்ற நாசிர் ஜங் தம் படையுடன்

புதுச்சேரிக்கு அருகிலுள்ள வழுதாவூருக்குச் சென்றூர். ஆங்கிலேயரின் உதவியும் அவருக்குக் கிடைத்தது. பிரெஞ்சுக்காரரும் சந்தா சாகிப்பும் தஞ்சாவூர் முற்று கையை விடுத்துப் புதுச்சேரி புக்கனர். பிரஞ்சுப் படை அவ்வமயம் போர் செய்ய விரும்பாமல் புதுச்சேரிக்கு மீண்டது. அதற்கிடையில் முஸபர் ஜங், பிரெஞ்சியர் தம்மை விட்டுச் சென்றது கண்டு அஞ்சி நாசிர் ஜங்கிடம் அடைக்கலம் புகுந்தார். அவரோ முஸபரைக் கைதி யாக்கினூர். பிரெஞ்சுக்காரருடன் போர் மூளுவதைத் தடுக்க விரும்பிய நாசிர் ஜங் ஆர்க்காட்டிலேயே தங்கி யிருந்தார். அதற்கிடையில் பிரெஞ்சு வீரரான புஸ்ஸி, செஞ்சிக் கோட்டையைத் தம் வசப்படுத்திக் கொண்டார். அச் செயல், பிரெஞ்சியரின் புகழ் மேலோங்குமாறு செய் தது. அதை மீட்க முயன்ற நாசிர் ஜங் போரில் கொல் லுண்டார். கைதியாயிருந்த முஸபர், பிரெஞ்சு ஆதரவி ஞல், தாம் இழந்த அரியணையை மீண்டும் பெற்றூர். அவர் புதுச்சேரிக்குச் சென்று தியூப்ளேயின் அன்பான வரவேற் பைப் பெற்றூர்; கிருஷ்ணு ஆற்றின் தெற்கே உள்ள நாடு களுக்கெல்லாம் தியூப்ளேயை நிஸாமின் பிரதிநிதியாக அமர்த்தினூர். புதுச்சேரி கவர்னரின் ஆளுகைக் குட்பட்ட நிலப்பகுதியையும் விரிவுறச் செய்தார். 1751-ல் புஸ்ஸி யையும் துணைக்கு அழைத்துக்கொண்டு முஸபர் ஜங் ஐதராபாத்துக்குச் சென்றூர். தம் வெற்றிக்கு அறிகுறி யாக தியூப்ளே, நாசிர் ஜங் இறந்த இடத்தில் ஒரு ஊரை அமைத்து அதற்குத் தம் பெயரை வைத்தார். ஆனுல் அவ்விடம் பின்னர், 1752-ல் கிளைவினுல் அழிவுற்றது.

திருச்சிராப்பள்ளி முற்றுகை (1751-4): ஆங்கிலே யர் முகம்மது அலியைக் கைவிடாமல் அவருக்கு உதவி செய்து வந்தனர். பிரெஞ்சியர் ஆற்றிய செயல்களை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. செயிண்ட் டேவிட் கோட்டையின் புதிய ஆங்கிலேய கவர்னரான தாமஸ் சாண்டர்ஸ், உள்நாட்டுத் தலைவர்களுக்கு உதவி செய்வ தன் மூலம் பிரெஞ்சுக்காரரின் வெற்றியைப் பாழ்படுத்தும் முயற்சியை மேற்கொண்டார். ஆனுல் பல நாட்கள் வரை

இருசாராரும் முனைந்து போரிடவில்லை. ஜாக்ஸ் லா என்ற பிரெஞ்சுத் தலைவர் திருச்சிராப்பள்ளியை முற்றுகையிடத் தொடங்கினர். ஆனால் அவ்வமயம் ராபர்ட் கிளைவ் நன்கு பாதுகாக்கப்படாதிருந்த ஆர்க்காட்டைக் கைப்பற்றியதால் (1751) பிரெஞ்சியர் திருச்சிராப்பள்ளி முற்றுகையைக் கைவிட்டனர். அதனால் அவர்களுடைய புகழ் குன்றியது. மைசூர், தஞ்சாவூர் அரசர்களும் முகம்மது அலிக்கு உதவினர். முராரிராவ் கோர்படே அவர் பணியில் அமர்ந்திருந்தார். கிளைவின் ஆர்க்காட்டு வெற்றி ஆங்கிலேயரின் கீழ்த்திசை நடவடிக்கைகளில் ஒரு திரும்பு கட்டத்தைக் (Turning point) குறிக்கும். கிளைவ், சந்தா சாகிப்பின் படையையும் பிரெஞ்சியரையும் ஆர்க்காட்டுக் கருகிலுள்ள காவேரிப்பாக்கத்தில் தோற்கடித்து சென்னைக்கு ஏற்பட்டிருந்த இடையூறைப் போக்கினர் (1752). அவர் அறிவுரையின்படி பிரெஞ்சுத் தலைவர் லா முற்றுகைக் குள்ளானர். ஸ்ரீரங்கத்தில் அவர் நிலைமை வருந்தத் தக்கதாகியது. அவருக்கு உதவி செய்யச் சென்ற தியூப்ளேயின் படையும் வழியில் தோல்வியுற்றது. லா கைதி ஆனர். முகம்மது அலியின் ஆணைப்படி சந்தா சாகிப் கொலையுண்டார். அத்தோல்வி, தியூப்ளேயின் ஊக்கத்தையும் நம்பிக்கையையும் குறைக்கவில்லை. அவர் முகம்மது அலியை அவரது நண்பர்களிடமிருந்து வேறுபடுத்தும் முயற்சியைத் தந்திரமாகக் கையாண்டுவந்தார். ஆங்கிலேயர் அவ்வமயம் செஞ்சியைக் கைப்பற்ற முயன்று தோல்வியுற்றனர். ஆனால் கிளைவ், பிரெஞ்சியரிடமிருந்த கோவளத்தையும் செங்கற்பட்டையும் தம்வசப் படுத்திக் கொண்டார். உறுதி குலையாத தியூப்ளே திருச்சிராப்பள்ளியை மறுபடியும் முற்றுகையிடத் தீர்மானித்தார். முராரிராவையும் மைசூர் அரசரையும் தம் கட்சியில் சேர்த்துக் கொண்டு, 1753-ல் முற்றுகையைத் தொடங்கினர். மெயின் வில்லி என்ற படைத் தலைவரிடம் அப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்நிலையில் தாய் நாட்டினரின் ஆணைப்படி தியூப்ளே ஆங்கிலேயருடன் அமைதி உடன்பாட்டுக்கு இணங்கினர். பாலாற்றின் முகத்துவா

ரத்தினருகிலுள்ள சதுரங்கப் பட்டினம் என்னுமிடத்தில் அமைதிக்கான மாநாடு கூட்டப்பெற்றது (1754). ஆனால் அது தோல்வியில் முடிந்தது. மெயின் வில்லிக்குப் பல இடையூறுகள் ஏற்பட்டு வந்தன. அவருடைய கூட்டாளி கள் நம்பத்தக்கவராக இல்லை. ஆயினும் விடா முயற்சி யுடன் அவர் செயலாற்றி வந்தார்.

தியூப்ளே பிரான்சுக்குத் திரும்ப அழைக்கப்படுதல்: தியூப்ளேயின் பதவியில் அமருவதற்காக கோதயூ (Godeheu) புதுச்சேரியில் வந்திறங்கியவுடன் நிலைமை அடியோடு மாறியது. தியூப்ளே தம் நாடு திரும்பினார். 1755-ல் ஒரு தற்காலிக உடன்பாடு செய்துகொள்ளப் பெற்றது. தியூப்ளேயின் கொள்கையைப் பிரெஞ்சு அரசிய லார் கைவிட்டனர். அவ்வீரர் தம் நாட்டில் மிகவும் துய ருற்றார். 1763-ல் அவர் இறந்தார். இறப்பதற்கு மூன்று நாட்கள் முன்பு அவர் தமது வாழ்க்கைக் குறிப்பில் எழுதியுள்ளதாவது :

“ என்னுடைய நாட்டினர் ஆசியாவில் வன்மை பெறு வதற்காக நான், என்னுடைய இளமை, வாய்ப்புக்கள், ஏன் – வாழ்க்கை முழுவதையுமே தியாகம் செய்தேன். .... என் பணிகள் யாவற்றையும் கட்டுக்கதைகளாக்கி விட்டனர். எனது கோரிக்கைகளை இகழ்ந்து பேசுகின்றனர் மானிட சமூகத்தில் நான் மிகவும் இழிந்தவனாக மதிக்கப் படுகிறேன். வருந்தத்தக்க வறுமை நிலையில் நான் வாடி வதைகிறேன். என்னிடமிருந்த சிறிதளவான சொத்தையும் கைப்பற்றிக் கொண்டனர்.”* இந்திய அரசியலில் இணை யற்ற வீரத்துடன் அருஞ்செயல் ஆற்றிப் புகழ் பெற்றுத் தமக்கும் தம் நாட்டுக்கும் சிறப்பைத் தேடித்தந்த தியூப்ளே யின் முடிவு அத்தகையதாயிற்று. தம் பகைவருக்கு அச்சந்தருவதில் அவரை ஹன்னிபாலுக்கு ஒப்பிடலாம்.

தியூப்ளேயின் கொள்கையும் முறைகளும் : தென் இந்தியாவில் பிரெஞ்சு ஆதிக்கத்தை நிலைநிறுத்த வேண்டு

---

* *26, பக். 104.*

மென்ற தியூப்ளேயின் கொள்கை சிறிது சிறிதாக வளர்ச்சி யுற்றது. நீண்டகாலம் அவர், வாணிகத்தில் முன்னேறு வதையே தம் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். புதுச் சேரியின் கவர்னரானபிறகும் சிறிது காலம் அவர் அக் குறிக்கோளேயே கொண்டிருந்தார். 1746-ல் சென்னை யைக் கைப்பற்றியவுடன் அதன் வாணிகத்தைப் புதுச் சேரிக்கு மாற்றவே அவர் முயன்று அதில் தோல்வியுற்ருர். சந்தா சாகிப் ஆர்க்காட்டு நவாப்பானல் பிரெஞ்சியரின் வாணிக முன்னேற்றத்துக்கு அவர் உதவி செய்வாரென்ற கருத்துடன்தான் அவருக்கு உதவி அளித்தார். தஞ்சாவூர் அரசரிடமிருந்து தேவிக்கோட்டையை ஆங்கிலேயர் கைப் பற்றிக்கொண்ட பொழுது தியூப்ளே யாதும் செய்யவில்லை என்பதையும் நோக்க வேண்டும். ஆதலால் அவர்கள் சாந்தா சாகிப்புக்குப் பகையாக முகம்மது அலிக்கு உதவி புரிந்தபொழுது அவர் வியப்புற்ருர். ஆம்பூர் சண்டைக்குப் பிறகு அவர், முஸபர் ஜங் ஒரு அட்டை (ஒட்டிக்கொள்ளும் ஒருவகைப் புழு)யை ஒத்தவர் என்றும் இயன்ற அளவு விரைவில் அவர் உறவை அகற்றிக்கொள்வதையே தாம் விரும்புவதாகவும் கூறியிருப்பதும் ஈண்டு சிந்திக்கத் தக்கது. 1750-ல் நாசிப் ஜங் இறந்தமையும் முஸபர் ஜங் பட்டத்துக்கு வந்தமையும் தியூப்ளேயின் கொள்கையை மாற்றின. தக்கணத்தில் புதிய சுபேதாரையும் ஆர்க்காட் டில் புதிய நவாபையும் தாமே அமர்த்தியதால், அச் சூழ் நிலை, தென் இந்தியாவில் பிரெஞ்சு ஆதிக்கத்துக்கு வழி வகுக்குமென்று அவர் கருதினர். உள் நாட்டு அரசுரி மைப் போட்டிகளில் தலையிடுவதன் மூலமும் இந்தியருக்கு மேனுட்டு முறையில் படைப்பயிற்சி அளிப்பதன் மூலமும் தமது அதிகாரத்தைப் பெருக்கிக்கொள்ள அவர் முயன்ருர். ஆங்கிலேயரின் அதிகாரத்தை இந்நாட்டில் அழிக்க வேண்டுமென்ற பேரவாவும் அவருக்கு உண்டாயிற்று. அவர்கள் ஆதரவைப் பெற்றுவந்த முகம்மது அலியை அழிக்க வேண்டுமென்பதும் அவர் திட்டமாகும். புஸ்ஸியை ஐதராபாத்திலேயே இருக்கச் செய்தார். புதுச்சேரி அரசாங்கத்துக்குரிய வரிகளை வசூலிப்பதில் அவர் கருத்துச்

செலுத்திஞர். ஆஞல் அவர் கிருஷ்ண ஆற்றின் தென் பகுதி முழுவதற்கும் சுபேதாரின் பிரதிநிதியாக அமர்த்தப் பட்டிருந்தபோதிலும் கருநாடகத்தின் ஆட்சிமுறையை ஏற்றுக்கொள்ளவில்லே. தமது ஆதிக்கத்திற்குத் திருச்சி ராப்பள்ளி தம்வசம் இருக்கவேண்டுமென்பதை அவர் உணர்ந்திருந்தார் ஆஞல் ஆங்கிலேயரின் எதிர்ப்பு காரணமாக அவ்விடத்தைக் கைப்பற்றிக்கொள்ள தியூப்ளே யால் இயலாமற் போயிற்று.

தனிப்பெருந்திறமை : இந்தியர்களேக்கொண்டே இந் தியாவை வெல்லும் நயத்தைத் தொடங்கியவர் தியூப்ளே என்பது அறிஞர் மெக்காலேயின் கருத்து.[1] ஆஞல் 16-ம் நூற்ருண்டில் அல்புகர்க்கும் போர்ச்சுகீசியரும் பொது வாக அக் கொள்கையைப் பின்பற்றினர் என்று அறிஞர் W. W. ஹண்ட்டர் கூறுவர். 'ஆசியாவின் அரசியலிலும் போர் முறையிலும் தியூப்ளே கற்பனைத் திறங்கொண்டு புதியதாக எதையும் கண்டுபிடித்தாரென்று கூறுவதற் கில்லே. சூழ் நிலேயையும் நாம் சிந்தனைக்கு கொண்டுவர வேண்டும். சில முறைகளேப் புதிதாக அவர் கண்டு பிடித்தார் என்று கூறுவதைவிட அவற்றை அவர் வளர்ச்சி யடையச் செய்தார் என்று கூறுவது பொருந்தும் "[2] போர்ச்சுகீயர் மேலேக் கடலோரத்தில் இருந்த நிலேமைக் கேற்ப பின்பற்றிய கொள்கையை, மார்த்தினும் (புதுச்சேரி யைத் தாபித்தவர்) கைக்கொண்டார். தியூப்ளே அதனை விரிவுறச் செய்தார். அவர் திட்டங்களேக் கேட்ட புஸ்ஸி யும் திடுக்கிட்டார். பொறுப்பில்லாமல் அதிகாரம் மட்டும் வகிக்கும் ஒரு முறையைத் தியூப்ளே தொடங்கினுர். கரு நாடகத்தில் அவர் அவ்வாறு அமைத்த இரட்டை ஆட்சி வங்காளத்தில் பின்னர்க் கிளேவ் அமைத்த முறையை ஒத்தது. இத்தகைய முறையை டச்சுக்காரர் ஜாவாத் தீவில் கையாண்டனர்.

---

1 Macaulay, Historical Essays. (மெக்காலே, வரலாற்றுக் கட்டுரைகள்) (The Nelson classics) P. P. 310-11.

2 *60. பக். 89.*

தியூப்ளேயின் தோல்விக்குரிய காரணங்கள் : தியூப்ளேயின் தலைசிறந்த வெற்றிநிலை சில்லாண்டிற் சிதைந்தது. 1751-ம் ஆண்டில் அவர் புகழின் உச்சநிலையில் இருந்தார். இறுதியில் அவர் அடைந்த தோல்விக்கு அவர் கொள்கையிலும் தன்மையிலும் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாகும். முதலாவதாக அவருக்கு இருந்த வள ஆதாரங்கள் வரையறைக்குட்பட்டிருந்தன. அதற்கு ஏற்ப அவர் தமது கொள்கையை அமைத்துக் கொள்ளவில்லை. தம் நிலையைக்கடந்த அளவுக்கு அவர் பேராசையைப் பெருக்கிவந்தார். இந்தியாவிலிருந்த பிரெஞ்சு படைத் தலைவர்களில் புஸ்ஸி மிகவும் தலைசிறந்தவர். ஆனால் அவர் ஐதராபாத்தில் இருக்க வேண்டியிருந்ததால் கருநாடகம் அவருடைய பணியைப் பெறவில்லை. லாரன்சும் கிளைவும் கருநாடகத்தில் ஆற்றலுடன் செயல் புரிந்து வருகையில் அப்பகுதியில் ஒரு புஸ்ஸி இருந்திருப்பாரானல் அங்கே பிரெஞ்சியர் தோல்வியுற்றிருக்க முடியாது என்பதை தியூப்ளே காலங்கடந்த பிறகு உணர்ந்தார். " தியூப்ளே, கருநாடகத்திலேயே தம் கருத்து முழுவதையும் செலுத்தமாற் போனது குறித்துப் பிரெஞ்சுக்காரர் வருந்துவர். பொறுமை யின்றி மிகமிக விரைவாக அவர் செயலாற்றி வந்ததால் யாவற்றையும் இழந்தார்."* அவர் தமது திட்டங்களைச் சிறிதும் ஒளிக்காமல் வெளிப்படையாகவும் பகட்டாரவராத்துடனும் அறிவித்து வந்ததால் அரசியலில் மிகுதியான பயிற்சி இல்லாதவர்கூட அதன் விளைவுகளை உணர்ந்து தற்காப்புக்கான முன்னேற்பாடுகளைச் செய்து கொள்ளமுடியும். ஆகவே ஆங்கிலேயர் தம் நிலைமையை வன்மையுறச் செய்து கொண்டதில் யாதும் வியப்பில்லை. மேலும், " தக்காணத்தைப்போலவே கருநாடகமும் செல்வங் குன்றிக் கிடந்தது கருநாடகத்துக்காக, வேரொரு ஐரோப்பிய நாட்டினருடன் போரிடுதல் அழிவுக்கு காரணமாயிற்று ; தியூப்ளேயின் நோக்கம் கைகூடுவதற்கு கருநாடகமோ தக்காணமோ

---

* *26,* பக். *113.*

போதா : அதற்குச் செல்வம் மல்கிய ஒரு பகுதிதேவை[1] ”
தியூப்ளே அடைந்த தற்காலிக வெற்றி, ஐரோப்பாவில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கு மிடையே அமைதி நிலவிய காலத்திலேற்பட்டது என்பதை நாம் நோக்க வேண்டும். அதனுற்ருன் அவர்களுடைய கப்பற்படைகள் இந்திய அலுவல்களில் பங்கு கொள்ளவில்லை. கடற்படை வலிமையைப் பொறுத்த வரை பிரெஞ்சியர் ஆங்கிலே யரைவிட கீழானவர் என்றும் தியூப்ளேயின் முன் னேற்றம் தடைபட்டதற்கு அதுவே காரணம் என்றும் பிரெஞ்சு வரலாற்றறிஞர் மார்த்தின் கூறுவதும் குறிப் பிடத்தக்கது.[2]

இனி, தியூப்ளேயின் குணங்களில் காணப்படும் குறைபாடுகளும் அவர் தோல்விக்குக் காரணமாகும். அவரிடம் அளவு கடந்த பேரவா இருந்தது; அவர் ஆற்றல் பிறரால் கட்டுப்படுத்தக் கூடியதாக இல்லை. அரச தந்திரமுறையை அவர் அறிந்திருந்தார் ; சிறந்த கற்பனைத்திறமும் அவரிடம் உண்டு ; ஆனால் மிகுந்த தற் பெருமையும் பகட்டாரவாரத்தில் நாட்டமும், சூழ்ச்சி செய் வதில் ஆசையும் அவரிடமிருந்தன. தன்டைக்கம் அவ ரிடம் கிடையாது. கிளைவிடம் அப்பண்பு மிகுதியாக இருந்தது. வெற்றிப் பாதையில் செல்லும்பொழுது சிறிது தங்கி தம் நிலையை உறுதிப்படுத்திக்கொள்ளும் வழக்கம் அவரிடம் கிடையாது. அவர் புஸ்ஸியின் உதவி கொண்டு சலபத்ஜங்கை வங்காளச் சுபேதார் ஆகச் செய்யவும் எண்ணினர்! (1751). எத்தகைய சூழ்நிலையிலும் அவர் நம்பிக்கையை இழக்காமல் மேலும் மேலும் செய லாற்றினர். முகம்மது அலி ஒரு புரட்சிக்காரர் என்ற காரணத்தால் ஆங்கிலேயர் அவருக்கு உதவி செய்ய

---

1. Captain A. T. Mahan, The Influence of Sea power upon History (1890), p. p.258 & 276.

காப்டன் ஏ. டி. மஹன், வரலாற்றில் கடலாதிக்கத்தின் செல்வாக்கு, பக். 258 & 276.

2, 14, V *பக். 140.*

மாட்டார்கள் என்று அவர் எண்ணியது சிறுபிள்ளைத் தன்மையைத்தவிற வேறென்ன? அப்பிரெஞ்சு வீரரிடம் முன்கோபம் இருந்தது. பல பகைவர்களை அவரே தேடிக் கொண்டார். பிறரிடம் வேலைவாங்குவதில் அவர் திறம் படைத்தவர். தாம் மேற்கொண்ட முறை நீதியானது என்ற பெரும் நம்பிக்கை அவரிடமிருந்ததால் அவர் யாவர்க்கும் இணங்காராகி இந்நாட்டிலும் ஐரோப்பாவிலும் பகை விளைவித்துக்கொண்டார். அவருடைய செயல்களுக்குக் கம்பெனியார் சிறிதும் உதவவில்லை. தியூப்ளேயும் தம் கொள்கைகளை அவர்களுக்கு விளக்க வில்லை; தமது பொருளாதார நெருக்கடியைப் பற்றியும் தம் தோல்விகளைப் பற்றியும் அவர் அவர்களுக்கு அறிவிக்கவில்லை. ஆகவே அவர்களுடைய ஆணைகள் தியூப்ளேயின் கொள்கைக்கு முரணாக இருந்தன. அவர் செய்த போர்கள் அவரிடமிருந்த பொருளை மிகுதியாகக் குறைத்துவிட்டன. ஆகவே கம்பெனியின் பணத்திலிருந்து போர்ச் செலவை நிறைவுசெய்ய வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டுவிட்டது. பிற்காலத்தில் தாம் வெற்றி பெற ஆங்கிலேயர் பின்பற்றிய கொள்கையை தியூப்ளேயும் (புஸ்ஸியும்) முன்கூட்டியே உணர்ந்திருந்தார் என்பது உண்மை. தியூப்ளே ஒரு அரச தந்திரி என்பதும் ஆற்றல் வாய்ந்த ஆட்சி வினைஞர் என்பதும் ஏற்றுக் கொள்ளத் தக்கனவே. ஆயினும் "அருஞ் செயலாற்றிய பெரியார் வரிசையில்" அவருக்கு இடமில்லை. அவர் சிறந்த அரசியல் வல்லுநருமல்லர். தியூப்ளே தவறுகளிழைத்த போதிலும் இறுதியில் வீழ்ச்சியுற்ற போதிலும் பிரிட்டிஷ் இந்தியவரலாற்றின் முன்னுரைப் பகுதியில் அவருக்குச் சிறப்பானதோர் இடமுண்டு என்பதில் யாதும் ஐயமில்லை.

———

பகுதி 4

ஆனந்தரங்கப் பிள்ளை (1709—1761)

ஆனந்தரங்கப் பிள்ளை சென்னைக்கு அண்மையிலுள்ள பெரம்பூரில் 1709-ல் பிறந்தார். இவர் தந்தையான திருவேங்கடம் பிள்ளை என்பார் ஒரு பெரிய வணிகர். அவர் புதுச்சேரிக்குச் சென்று தங்கினர். அவர் 1726-ல் இறந்தபின் மகனர் வாணிகத்தொழிலை மேற்கொண்டார். வாணிகம் பெருகியது. அவ்வமயம் பிரெஞ்சுக் கவர்னராக இருந்த லெனுயர் (Lenoir) ஆனந்தரங்கப் பிள்ளையிடம் நன்மதிப்புக்கொண்டிருந்தார். தூமாவும் அவரை ஆதரித்தார். தியூப்ளேயின் ஆட்சிக்காலத்தில் பிள்ளை அவர்களின் பதவி உயர்ந்தது. செல்வாக்கும் பெருகியது. 1746-ல் அவர் தலைமை துபாஷ் பதவியை அடைந்தார். [தோபாஷி இருமொழிகளை அறிந்தவர்; மொழிபெயர்த்து விளக்கம் கூறுபவர்] தியூப்ளேயின் மனைவி அவரை வெறுத்தபோதிலும் அப்பிரெஞ்சு கவர்னர் அவரிடம் அன்பு பாராட்டினர். பிள்ளை அவர்கள் தமிழில் புலமை பெற்றிருந்ததுடன் பாராசீகமொழியையும் பிரெஞ்சு மொழியையும் அறிந்திருந்தார். தியூப்ளேயின் ஆதிக்கம் ஏற்பட்டிருந்த காலத்தில் பிள்ளை அவருடைய ஏஜண்டாகப் பணியாற்றி பெரும் புகழ் பெற்றார். புதுவையில் அவரே தலை சிறந்த இந்திய வணிகராக இருந்தார். அரசியல் செல்வாக்கும் அவருக்கு மிகுதியாக இருந்தது. 3000 குதிரை வீரர்களுக்குத் தலைவரான முகலாய மான்சப்தாரி நிலையை ஆனந்தரங்கப் பிள்ளை பெற்றிருந்தார். பல சிற்றரசர்களும் உயர் வகுப்பினரும் அவருடைய ஆலோசனையைக் கேட்டுவந்தனர். புதுவையில் அக்காலத்தில் மிகச் செல்வாக்கு வாய்ந்த இந்தியர் அவரே என்று கூறலாம். தியூப்ளேயின் வீழ்ச்சி (1754) பிள்ளை அவர்களைத் துயரத்திலாழ்த்தியது. அவர் வீழ்ச்சிக்கு அவர் மனைவியே ஒரு காரணம் என்பது பிள்ளை அவர்களின்

கருத்தாகும். லாலி, பதவிக்கு வந்தவுடன் (1758) பிள்ளை அவர்களின் சிறப்பு மீண்டும் ஓங்கத் தொடங்கியது. ஆனால் அதற்கிடையில், 1761-ல் அவர் இறந்துவிட்டார். அவர் இறந்த பின் நான்கு நாட்களில் ஆங்கிலேயர் புதுச்சேரியை முற்றுகையிட்டுத் தம் வசப்படுத்திக் கொண்டனர். தெலுங்குப் புலவரும் வடமொழிப் புலவரும் பிள்ளை அவர்களை வள்ளல் என்றுபோற்றி யுள்ளனர். இவர் 1736 முதல் 1760 வரை தமிழில் தினசரிக் குறிப்புகள் எழுதி வந்தார். அக்காலத்து வரலாற்றை அறிய அக்குறிப்புகள் மிகவும் பயன்படுகின்றன. குறிப்பாகத் தியூப்ளேயைப்பற்றி நமக்குப் பல செய்திகளை அறிவிக்கின்றன. ஆனால் குறிப்புக்கள் முழுவதும் நமக்குக் கிடைக்கவில்லை. அக்குறிப்புகளை அவர் இல்லத்தில் முதன் முதலில் கண்டுபிடித்தவர் கலுவா மொம்பிரேன் (A Galloi Montburn) என்பாராவர். கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு 1846. இவை பிரெஞ்சிலும் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. பிள்ளை அவர்கள் அரசியல் செய்திகளை ஆழ்ந்து சிந்தித்து ஆலோசனை கூறும் ஆற்றல் வாய்ந்தவர் என்பதை அக்குறிப்புகள் காட்டுகின்றன. ஆசப்ஜாவுக்குப் பிறகு தென் இந்தியாவில் குழப்பம் ஏற்படும் என்று அவர் முன்கூட்டியே கூறியுள்ளார். ஆனால் லாலி கருநாடகத்தில் பிரெஞ்சு ஆதிக்கத்தை நிலைநிறுத்துவார் என்று அவர் கூறியவாறு நிகழ்ச்சிகள் ஏற்படவில்லை. ஆயினும் அக்காலத்து நிகழ்ச்சிகளைக் கூர்ந்து நோக்கிய ஒரு சிறந்த இந்தியரின் கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் அந்த நாட் குறிப்பு அறிவிக்கின்றது.*

---

*C. S. Srinivasachari, Ananda Ranga Pillai. (1940)
(C. S. சீனுவாசாச்சாரி, ஆனந்தரங்கப் பிள்ளை, பக். VII.)

பகுதி 5

புஸ்ஸி

வாழ்க்கை : புஸ்ஸி 1718-ல் ஒரு பிரெஞ்சுப் பெருஞ் செல்வரின் மகனுகப் பிறந்தார். மொரிஷியஸ்ஸிலிருந்த அவர் லாபோர்தனேயுடன் இந்தியாவுக்கு வந்து ஆம்பூர் சண்டையில் (1749) பங்கு கொண்டார். அடுத்த ஆண்டில், தென் இத்தியாவில் மிகவும் வலிமை வாய்ந்ததாக இருந்த செஞ்சிக் கோட்டையைக் கைப்பற்றினுர். அவருடைய வீரமும் படைத்திறமையும் யாவருடைய கருத்தையும் கவர்ந்தன. 1751-ல் அவர் முஸபர் ஜங்கை ஐதராபாத் துக்கு அழைத்துச் செல்லும் பொறுப்புவாய்ந்த பணியைப் பெற்ருர். வழியில் பின்னவர் இறந்தார். புஸ்ஸி தமது படையை தொடர்ந்து சலபத்ஜங்கைத் தக்கண சுபேதா ராக அமர்த்தி அவரை அவுரங்காபாத்துக்கு அழைத்துச் சென்ருர். நிஸாமின் அவைக்களத்தில் புஸ்ஸி ஆதிக்கம் பெற்றிருந்தார். பேஷ்வா பாலாஜிராவுடன் அவர்கொண்ட தொடர்பையும் வடசர்க்கார்ப்பகுதியை அவர் அடைந்தமை யும் முன்னரே கண்டோம். தொந்தரவுகள் நிறைந்த தமது பணியினின்று விடுதலைபெற அவர் இரு முறைகள் முயன்ருர். ஆனுல் அவர் நாட்டுப்பற்று கொண்டு தமது முயற்சிகளைக் கைவிடாது நிறைவேற்ற வேண்டியது இன்றியமையாதது என்று கூறி, தியூப்ளே அவரை ஊக் கினுர். 1758-ல் லாலி, சென்னையைத் தாக்கக் கருதியதால், புஸ்ஸி கீழ்க்கரைக்கு அழைக்கப்பட்டார். வந்தவாசிப் போரில்(1760)புஸ்ஸி கைதியானுர்; ஆனுல் புதுச்சேரிக்குச் சென்றுவிட அனுமதி பெற்ருர். பிரான்சில் நீண்டகாலம் வாழ்ந்த பிறகு மீண்டும் அவர் 1783-ல் இந்தியாவுக்கு வந் தார். 1785ல் புதுச்சேரியில் அவர் வாழ்க்கை முடிந்தது.

பண்புகள் : புஸ்ஸி ஒரு சிறந்த தானைத் தலைவர்; அரச தந்திரி ; மக்களை ஆளும் ஆற்றல் வாய்க்கப் பெற்ற வர்; இளவரசர்களையும் அடக்கும் திறனமைந்தவர். பகட்

டாரவாரத்துக்காக தமது இராணுவத் திறமையை வெளிக் காட்டும் தன்மை அவரிடமில்லை. வேறு முயற்சிகள் பய னளிக்காத பொழுது மட்டுமே அவர் தம் முழுத்திறமை யையும் வெளிக்காட்டினர். செய்திகளை ஆழ்ந்து நோக்கும் அறிவுக் கூர்மை அவரிடமிருந்தது. ஐதராபாத்தில் பிரெஞ்சு ஆதிக்கம் ஏற்பட்டமைக்கு புஸ்ஸியின் ஆற்றல் முக்கியகாரணமாகும். அவர் தியூப்ளேயுடன் ஒத்துழைத் தார்; ஆனல் அவர், பின்னவரின் கைக்கருவி அல்லர். சூழ்நிலையும் தம் கொள்கையும் இடந்தருமாயின் தனித்தே நின்று போராடும் ஆற்றல் அவருக்கிருந்தது.

கொள்கை : வடசர்க்காரின் ஆட்சி முறையைப்பற்றி புஸ்ஸி 1754-ல் தியூப்ளேவுக்குப் பின்வருமாறு எழுதினர். "இம்மாகாணத்தை ஆசியாவின் பழக்கத்தை ஒட்டியே முத லில் ஆட்சிபுரியவேண்டும்; முகலாயர் ஆட்சி முறையை மாற்றிப் பிரெஞ்சு ஆட்சி முறையைப் புகுத்துவதைச் சிறிது சிறிதாகத்தான் நிறைவேற்றவேண்டும். இது மிக வும் இன்றியமையாதது என்பது எனது உறுதியான கருத் தாகும் .... மேலும் வரம்பற்ற அதிகாரத்தை இப்பொழுதே நாம் நிலைநிறுத்தக்கூடாது. சிறிதுசிறிதாகத்தான் அதற்கு நாம் முயலவேண்டும். மக்களுடன் நான் கொண்ட தொடர்பு இதனை வலியுறுத்துகிறது. ஆசியப் பழக்க வழக்கங்களைச் சில காலங்களில் நான் கடைபிடித்து வந்ததால்தான் எனக்கு இதுகாறும் வெற்றி கிடைத்துள்ளது.[1] வங்காளத் தில் கிளைவின் வாழ்க்கைக்கும் தக்கணத்தில் புஸ்ஸியின் வாழ்க்கைக்கும் பல ஒற்றுமைப் பண்புகள் இருப்பதைக் காணலாம். இருவரும் பெரும்பாலும் ஒத்த வாய்ப்புகளைப் பெற்றிருந்தனர்; ஒத்த இடையூறுகளைப் பெற்றிருந்தனர்; கொள்கைகளிலும் பெரும்பாலும் ஒத்திருந்தனர். புஸ்ஸி யின் முறைகளை கிளைவ் கூர்ந்து கவனித்து வந்தார். முன்னவருக்கு ஏற்பட்டதுபோலவே பின்னவருக்கும் இடர்ப்பாடுகள் தோன்றியிருந்ததால், புஸ்ஸி வகுத்த வழி களைக் கிளைவ் தம் நலனுக்காகப் பின்பற்றினர்.[2]

---

1. 14, V, பக். 139. 2. 26, பக். 84.

பகுதி 6.

புதுச்சேரியின் வீழ்ச்சி

கோதயூ, லேரித், லாலி : தியூப்ளேயிக்குப்பின் வந்த கோதயூ, கருநாடகத்தில் அமைதிக் கொள்கையைப் பின்பற்றினர். ஆனால் அது தக்கணத்தில் புஸ்ஸியின் நிலையை மாற்றவில்லை. 1755-ல் ஆங்கிலேயரும் பிரெஞ்சியரும் ஒரு தற்காலிக உடன்பாடு செய்துகொண்டனர். அதன்படி இரு சாராரும் இந்திய அரசியல் செய்திகளில் தலையிடுதல் தடைபட்டது. சில ஆண்டுகள் அவ்வுடன்பாடு நிலைபெற்றிருந்தது. ஆனால் அதைத் தாய்நாட்டினர் உறுதிசெய்வதற்கு முன்னரே ஐரோப்பாவில் ஏழாண்டுப்போர் தொடங்கியது. (1756). கோதயூ, ஏறத்தாழ ஆறுமாதங்கள்தான் இந்நாட்டில் தங்கியிருந்தார். 1755-ல் தி-லேரித் புதுச்சேரியின் புதிய கவர்னராகப் பதவிபெற்றார். ஏழாண்டுப் போர் காலத்தில் இந்தியாவில் ஆங்கில-பிரெஞ்சுப் போராட்டத்தின் மூன்றாவது நிலையைக் காண்கிறோம். 1756-ம் ஆண்டில் தாமஸ் ஆர்தர் கௌண்ட்-தி-லாலி என்பாரைப் பிரெஞ்சு அரசியலார் இந்தியாவில் மன்னரின் பிரதிநிதியாகச் செயலாற்றுமாறு அமர்த்தினர். புதுச்சேரியின் ஆட்சி முறையைச் சீர்திருத்துவதும் ஆங்கிலேயரை இந்தியாவிலிருந்து விரட்டுவதும் அவருடைய கடமைகளாயின. ஆனால் அவர் 1758-ம் ஆண்டில்தான் புதுவை வந்தடைந்தார். அவர் வீரமும் நேர்மையும் வாய்ந்த தளபதி. பிறருடைய ஆலோசனையை அவர் பொருட்படுத்துவது இல்லை. அவர் ஒரு முன் கோபி. அவர் இந்நாட்டில் வந்திறங்குவதற்குள் கிளைவ் சந்திரநாகூரை கைப்பற்றியதுடன் பிளாசிப் போர்க்களத்தில் வெற்றியும் பெற்றிருந்தார் (1757). அதன் விளைவாக வங்காளத்தில் ஆங்கிலேயரின் ஆதிக்கம் நிறுவப்பட்டிருந்தது.

பிரெஞ்சியரின் தாக்குதல்கள் : லாலி சுறுசுறுப்பாகத் தம் பணியைத் தொடங்கி 1758-ல் செயின்ட்

டேவிட் கோட்டையைக் கைப்பற்றினர். அடுத்தப் படியாக அவர் தஞ்சாவூரின் மீது படையெடுத்தார். தஞ்சை அரசர் சந்தா சாகிப்புக்குப் பெரும் பணம் கொடுப்பதாகப் பத்திரம் எழுதிக்கொடுத்திருந்தார். தியூப்ளே அப்பத்திரத்தைப் பின்பு பெற்றார். அத்தொகையை வாங்கும் நோக்கத்துடன் தான் லாலி தஞ்சைக்குச் சென்றார். ஆனல் அச்செயல் அவ்வமயத்துக்கு ஏற்றதன்று. வழியில் அவர் நாகூரைக் கைப்பற்றிச் சூறையாடினர். திருவாரூரில் கொள்ளையடிக்க எதுவுமில்லாததால், கோயில் குருமார் அறுவரைக் கொலை செய்துவிட்டுத் தஞ்சைக்குச் சென்றார். ஆனல் வெடி மருந்துகளும் உணவுப் பொருள்களும் குறைந்து விட்டபடியால், அவர் தஞ்சாவூர் முற்றுகையை விட்டு விட நேர்ந்தது. ஆகவே காரைக்காலுக்குத் திரும்பி, பின் புதுச்சேரி போய்ச் சேர்ந்தார். பயனற்ற அப்படையெடுப்பு அவருடைய புகழைக் குறைத்தது. பிரெஞ்சுக் கப்பற் படைக்குத் தலைமை வகித்த டிஆச் (D'Ahe), என்பாரும் லாலியைப் போலவே நிதான மற்றவர். இரு தலைவர்களுக்குமிடையே கருத்து ஒற்றுமை கிடையாது. கப்பற் படைத் தலைவர், ஜார்ஜ் போகாக் தலைமையின் கீழிருந்த ஆங்கிலேயக் கடற்படையுடன் இருமுறை போரிட்டார். ஆனல் இரண்டு போர்களிலும் வெற்றி தோல்விகளை உறுதியாகக் கூற முடியவில்லை. லாலியின் விருப்பத்திற்கு மாருக டி ஆச், மொரீஷியசுக்குத் திரும்பி விட்டார். சென்னையை முற்றுகையிடத் திட்டமிட்ட லாலி ஐதராபாத்திலிருந்த புஸ்ஸியைத் திரும்ப அழைத்தார். புதுச்சேரிக்கும் சென்னைக்குமிடையே பல இடங்கள் அவரால் கைப்பற்றப்பட்டன. 14—12—1758-ல் லாலி சென்னையை முற்றுகையிடத் தொடங்கினர். சென்னை கவர்னர் ஜார்ஜ் பிகட் அந்நகரை முன்னெச்சரிக்கையாக நன்கு காப்பாற்றி வந்தார். புதுச்சேரியிலிருந்து லாலிக்கு உதவி வரவில்லை. சேர்த்து வைக்கப்பட்ட உணவுப் பொருள்கள் விரைவில் குறைந்தன. பல போர் வீரர்களும் லாலியைக் கைவிட்டனர். 1759-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஆங்கிலக் கப்பல்கள் கரை

நோக்கி வரலாயின. திருச்சிராப்பள்ளியிலிருந்தும் ஒரு படை பிரெஞ்சியரை எதிர்த்துச் சென்றது. லாலி, முற்று கையை விடுத்துப் பின் வாங்கினுர். அவருடைய பெருமை மேலும் குறைந்தது.

ஆங்கிலேயர் தாக்குதல்கள் : ஆங்கிலத் தளபதி போர்டு (Forde) என்பாரின் தலைமையில் வங்காளத்தி லிருந்து புறப்பட்ட ஒரு படை 1758-ல் பிரெஞ்சியரை இராசமஹேந்திரபுரத்தில் முறியடித்தது. அத்தலைவர் மசூலிப் பட்டினத்தைக் கைப்பற்றிக் கொண்டார். அதன் விளைவாக சலபத் ஜங், பிரெஞ்சுக்காரரிடம் வைத்த நம்பிக் கையை இழந்து ஆங்கிலேயருடன் அமைதி உடன்பாடு செய்து கொண்டார் (மே-1759). அதன்படி வட சர்க்கா ரில் மிகுந்துள்ள பிரெஞ்சுப் படைகள் வெளியேற்றப் பட் டன. வட சர்க்கார் மாவட்டங்களான கஞ்சம் விசாகபட்டி னம், கோதாவரி, கிருஷ்ணு, (குண்டூர் மாவட்டம் 1788-ம் ஆண்டிலேயே ஆங்கிலேயருக்கு உரிமையாயிற்று) ஆகி யன ஆங்கிலேயருக்குக் கிடைத்தன. வெற்றி பெற்ற போர்டு, 1759-ல் வங்காளத்துக்குத் திரும்பினுர். அதற் கிடையில் காஞ்சீபுரத்தில் பிரெஞ்சியர் ஆங்கிலேயரைத் தோற்கடித்தனர். எனினும் பொருளாதார நெருக்கடி காரணமாக அவ் வெற்றியின் பயனை வெற்றி வீரர் துய்க்க முடியவில்லை. பிரெஞ்சுப் படையில் கலகமும் மூண்டது. டி ஆச் மூன்ருவது முறையாகப் போகாக்குடன் கடற் போர் நிகழ்த்தித் தோல்வியுற்று (செப்டம்பர் 1759) சோழ மண்டலக் கரையை விடுத்துச் சென்று விட்டார். அதுவே அவருடைய இறுதியான கடற்போர். அதைத் தொடர்ந்து 1760-ம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ம் நாள் அயர்கூட், வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள வந்தவாசி என்னுமிடத்தில் லாலியைத் தோற்கடித்தார். புஸ்ஸி கைதி ஆனுர். ஆகவே 1760-ல் புதுச்சேரி, செஞ்சி, மாஹி, காரைக்கால் ஆகியன மட்டுமே பிரெஞ்சுக்காரர் வசமிருந்தன.

புதுச்சேரியின் வீழ்ச்சி (1761) : லாலி, மைசூரில் இருந்த ஹைதர் அலியுடன் நட்பு உறவு கொண்டார்.

ஆனால் அதனால் முன்னவருக்கு நற்பயன் எதுவும் கிட்ட வில்லை. கூட், புதுச்சேரிக்கு அருகில் உள்ள வில்லிய நல்லூரைக் கைப்பற்றிக் கொண்டு புதுச்சேரியையும் முற்றுகையிட்டார். பிரெஞ்சுத் தலைவர்களுக்கிடையே கருத்து வேற்றுமையும் சச்சரவும் வளர்ந்து வந்தன. லாலி, தி-லேரித் ஆகிய இருவருக்கு மிடையேயும் கருத்து ஒற்றுமை கிடையாது. பொருளாதார நெருக்கடி மிகுந் தது. புதுச்சேரி மக்கள் பசியால் வாடினர். அவ்வமயம் அங்கே ஒரு நாயின் விலை 24 ரூபாய் வரை உயர்ந்ததாம். லாலி விடா முயற்சியுடனிருந்தும் இறுதியில் 1761-ம் ஆண்டு ஜனவரி மாதம் 16-ம் நாள் புதுச்சேரி கீழ்ப்படிந் தது. அவ்வணி நகர் ஆங்கிலேயரால் அடியோடு அழி வுற்றது. பிறகு செஞ்சிக்கும் அக்கதியே நேர்ந்தது. மலை யாளக் கரையிலுள்ள மாஹியும் ஆங்கிலேயர் வசமாயிற்று. 1761, ஏப்ரலுக்குள் இந்தியாவில் ஒரு இடம் கூட பிரெஞ் சியருக்கு உரியதாக நிற்க இல்லை. லாலி கைதியாகி இங் கிலாந்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஏழாண்டுப் போரை முடிவுறச் செய்த பாரிஸ் உடன்படிக்கையின்படி இந்தியாவில் பிரெஞ்சுக்காரர் தியூப்ளேயின் ஆக்கிரமிப் புக்கு முன்னர் பெற்றிருந்த இடங்களை மட்டுமே பெற்ற னர். அவர்களுக்கு வங்காளத்தில் வாணிக உரிமை மட்டுமே வழங்கப்பட்டது. வட சர்க்கார் மாவட்டங்கள் ஆங்கிலேயரைச் சேர்ந்தன. முகம்மது அலியே நவாப் என்பது உறுதி ஆயிற்று. பிரான்சுக்குத் திரும்பிய லாலி சிறைப்பட்டார். 1766-ல் அவர் மீது அரசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டது. அரசியலார் அவர் தலையைக் கொய்தனர். [அவர் பெருஞ் செல்வராக இல்லாதிருந் திருப்பின் அவருக்குத் தூக்குத் தண்டனை கிடைத்திருக் கும்]. அவர் இறந்த பின் அவர் மீது இருந்த குற்றச் சாட்டு தள்ளுபடி செய்யப்பட்டது. லாலி தவறுகளிழைத்த போதிலும் அவருக்கு விதிக்கப்பட்ட கொலைத் தண்டம் முறையற்றதே. ஆனால் அவர் பலரும் தம்மை வெறுக்கு மாறு நடந்து கொண்டார். இந்தியரின் சமய உணர்ச் சியை அவர் மிகவும் இழிவு படுத்தினர் என்பதும் நோக்

கத்தக்கது. அரசியல், ஆட்சி முறை ஆகிய இருவகை அலுவல்களையும் அவர் ஏற்றிருந்தார். அவற்றைச் செவ்வனே நிறைவேற்ற அவரால் இயலவில்லை. ஆங்கிலேயரை இந்தியாவில் எதிர்த்த பிரெஞ்சியரின் தோல்விக்கு அது ஒரு சிறந்த காரணமாகும்.

பகுதி 7

பிரெஞ்சுக்காரரின் தோல்விக்குரிய காரணங்கள்

நிதி நிலைமை : ஆங்கில – பிரெஞ்சுப் போராட்டம் இந்தியாவில் தொடங்கிய காலத்திலேயே (1746) ஆங்கிலக் கம்பெனி பிரெஞ்சுக் கம்பெனியை விட நிதி நிலைமையில் வலிமை பெற்றிருந்தது. தொடக்கம் முதல் ஆங்கிலேயர் தமது வாணிகத்தில் கண்ணுங் கருத்துமாக இருந்தனர். பெரும்பான்மையும் மற்ற துறைகளில் அவர்கள் நாட்டம் செல்லவே இல்லை. அதனால் 18-ம் நூற்றுண்டில் அவர் தம் வாணிகம் தடையின்றி முன்னேறி வந்தது. தாய் நாட்டுக்கு அதனால் இலாபம் கிடைத்து வந்தது. தாய் நாடும் கம்பெனியின் முன்னேற்றத்தில் அக்கரை கொண்டது. பம்பாய், சென்னை, கல்கத்தா ஆகிய மூன்று ஆங்கிலேயக் குடியேற்றப் பகுதிகளும் பல வகைகளில் இந்நாட்டுப் பிரெஞ்சுக் குடியேற்றங்களை விடச் சிறப்பானவை. முன்னவற்றின் எழுச்சி பின்னவற்றை மங்கச் செய்தது. பிரெஞ்சுப் பகுதிகள் 1731 முதல் 1738 வரை வாணிகப் புகழ்பெற்று விளங்கின ; ஆனால், ஆங்கில - பிரெஞ்சுப் போட்டியின் முதல் நிலை தொடங்குவதற்கு முன்னரே அவற்றின் வாணிகச் சிறப்பு குன்றியது. வங்காளத்தில் பிரெஞ்சியர் வாணிகத்தில் ஊக்கங்கொள்ளவே இல்லை. 1731-இல் தியூப்ளே சந்திரநாகூரின் தலைமை இயக்குநராக அமர்ந்த பிறகே அதன் வாய்ப்புக்கள் பெருகின. ஆங்கிலேய வாணிகக் கூட்டுக் குழு சிறப்புறுவதற்கும் பிரெஞ்சுக் கம்பெனியின் சிறப்பு குன்றுவதற்கும் அவ்விரண்டின் ஆட்சி முறைகளே காரணமாகும். தொடக்கம் முதலே பிரெஞ்சுக் கம்பெனி அரசியலாரின் மேற்பார்வையில் இருந்தது. ஆகவே XV-ம் லூயியின் ஆட்சியில் (1715–1774) நாம் காணும் சோம்பேறித்தனமும் ஊக்கமின்மையும் கம்பெனியையும் பீடித்தன. ஐரோப்பாவில் பல இடங்களில் போர் செய்து வந்த

பிரெஞ்சு அரசியலார் இந்தியச் செய்திகளை ஒழுங்காக மேற்பார்வை செய்து உதவி செய்ய இயலாத நிலையி லிருந்தனர். ஆங்கிலக் கம்பெனிக்குக் கிடைத்தது போலப் பிரெஞ்சுக் கம்பெனிக்கு வணிகப் பெருஞ் செல்வரின் உதவி கிடைக்கவில்லை. ஆகவே இந்தியா வில் போர் தொடங்கு முன்னரே அக்கம்பெனியின் செல்வாதாரம் குன்றிவிட்டது. தியூப்ளே கருநாடகத்தில் பிரெஞ்சியரின் அரசியல் ஆதிக்கத்தை ஏற்படுத்துவதில் முனைந்திருந்தார். அது அவர்களுடைய வாணிகத்தை அழித்தது. ஆனால் ஆங்கிலேயரோ போரிலீடுபட்டிருந்த காலத்திலும் தம்முடைய வாணிகத்துக்கு இடையூறு ஏற்படாவண்ணம் கண்ணுங் கருத்துமாய் இருந்து வந்த னர். போர்க்காலத்தில் கூட இந்நாட்டிலிருந்து அவர் கள் ஏற்றுமதி செய்து வந்த பொருள்களின் மதிப்பு உயர்ந்து வந்தது. இந்தியச் சரக்குகளுடன் பிரான்சுக் குச் சென்ற கப்பல் சிலவே. வங்காளம் ஆங்கிலேயர் வசம் இருந்ததால் அவர்கள், நிதி நிலைமையைப் பொறுத்த வரை பிரெஞ்சியரை விட மேலான நிலையைப் பெற்றிருந் தனர். தெற்கில் ஆங்கிலேயருக்கு நெருக்கடி ஏற்பட்ட காலங்களில் வங்காளத்திலிருந்து அவர்களுக்கு உதவி கிடைத்தது. மீர்காசிமிடமிருந்து அவர்கள் பெற்ற பணம் புதுச்சேரி முற்றுகையில் அவர்களுக்கு வெற்றி கிடைக்கச் செய்தது. அதே சமயத்தில் லாலி போதுமான பொரு ளின்மையால் துயருற்றார். ஒரு வாணிகக் குழு ஒரு பேரரசை அமைக்க விரும்பினால் முதற்கண் அடிப் படைக் குறிக்கோளான வாணிக முன்னேற்றத்தில் அது வெற்றிபெற வேண்டும். ஆனால் கருநாடகத்தில் பிரெஞ்சியரோ மிக மிக விரைவில் போரில் ஈடுபட்டு விட்டனர். பிரெஞ்சுக் கம்பெனியின் அழிவுக்கு அது ஒரு சிறப்பான காரணமாகும். பட்டயம் பெற்ற வாணிகக் குழு தொடக்க காலத்திலேயே இராணுவத் துறையில் இறங்குவது பேரிடையூறு விளைவிக்கக் கூடிய செயலாகும் (ராபர்ட்ஸ்)

கப்பற்படை வலிமை : 16, 17-ம் நூற்றுண்டுகளில் போர்ச்சுகீசியரும் டச்சுக்காரரும் கீழ்நாடுகளில் ஆதிக்கம் பெற்ற வரலாற்றை முன்னர்க் கண்டோம். அவ்வரலாறும் ஆங்கிலேயரின் பிற்கால வெற்றிகளும் கடலாதிக்கத்தின் சிறப்பை நமக்குத் தெளிவாக்கும். கடலாதிக்கத்துக்கு வாணிகப் பெருக்கமும் கப்பற்படையும் இன்றியமையாதனவாகும். 1746-ல் லாபோர்தனே ஒரு கடற்போர் நிகழ்த்திய பிறகே சென்னையைக் கைப்பற்றினர். ஆனால் அவர் திரும்பிச் சென்ற பிறகு ஆங்கிலேயரின் கப்பற்படை வலிமை பெற்றது. அதனைற்ருன் தியூப்ளே செயின்ட் டேவிட் கோட்டையைக் கைப்பற்ற முடியாமற் போயிற்று. வங்காளத்தில் பிரிட்டிஷ் ஆட்சி நிலைபெற்றமையும் 1757 முதல் 1759 வரை பிரெஞ்சியரும் டச்சுக்காரரும் ஆங்கிலேயருக்கு முன் தோல்வியுற்றமையும் கடலாதிக்கத்தின் சிறப்பை உணர்த்தும். அச்சிறப்பை நன்கு உணர்ந்திருந்தார் கிளைவ். 1758-9-ல் பிரெஞ்சியர் சென்னையை முற்று கையிட்டனர். ஆங்கிலக் கடற்படை அங்கே சென்றவுடன் முற்றுகையைக் கைவிட்டனர். அம்முற்றுகை, பிரெஞ்சுக் கடற்படைத் தலைவரான டி ஆச்-இன் உதவியின்றித் தொடங்கப்பட்டது என்பதும் நோக்கற்பாலது. அத்தலைவர் சோழ மண்டலக் கரையை விட்டு நீங்கிய பிறகு ஆங்கிலேயருக்கு உறுதியான வெற்றி கிடைத்தது. வந்தவாசிச் சண்டை ஒரு நிலப்போர்தான். எனினும் ஏழாண்டுப் போரில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றமைக்கு அவர்களுடைய கடற்படை வலிமையே காரணமாகும். அவ்வெற்றியின் விளைவாகவே இந்தியாவிலும் அவர்களுடைய ஆதிக்கம் நிலைபெற்றது. அப்போர், தியூப்ளேயும் புஸ்ஸியும் ஆற்றிய செயல்களை அழித்தது. தியூப்ளேயின் எண்ணம் நிறைவேறியிருப்பினும், பிரெஞ்சுக் கப்பற்படையின் மெலிவு, முடிவில் ஆங்கிலேயருக்கு எவ்விதத்திலும் வெற்றி அளித்திருக்கும்.

தரைப்படை வலிமை : தரைப்படையின் அமைப்பு, வலிமை ஆகியவற்றைப் பொறுத்தவரை ஆங்கிலேயரும்

பிரெஞ்சியரும் ஏறத்தாழ ஒரே நிலையில்தான் இருந்தனர். எனினும் படைத் தலைமையை நோக்கின் பிரெஞ்சியர் ஆங்கிலேயருக்குக் கீழான நிலையில்தான் இருந்தனர். லாரன்ஸ், கிளைவ் முதலிய ஆங்கிலேயத் தலைவர்களின் இராணுவ ஆற்றல் மிகவும் போற்றத் தக்கது. பிரெஞ்சுப் படைத்தலைவர்களில் மிகவும் சிறப்பு வாய்ந்தவரான புஸ்ஸி, உள்நாட்டு இடையூறுகளைச் சமாளித்துக்கொண்டு ஐதராபாத்திலேயே நீண்ட காலம் தங்கியிருந்தார். அச் சமயத்தில்தான் கருநாடகத்தில் முக்கியமான போர்கள் நிகழ்ந்து வந்தன. அவர் அங்கிருந்து அழைக்கப்பட்ட பிறகும் தலைமை நிலையைப் பெறவில்லை. லாலியுடன் அவர் சச்சரவிட வேண்டியிருந்தது. லாலியின் குறைபாடு களை முன்னரே குறிப்பிட்டுள்ளோம். ஆகவே பிரெஞ்சு இராணுவ வலிமை இந்தியாவில் முறைப்படி பயன்படுத்தி கொள்ளப்படவில்லை. பிரெஞ்சுத் தலைவர்கள் கருத்து ஒருமைப்பாட்டுடன் ஒத்துழைக்காததால் பல நல்வாய்ப்புக் களை இழந்தனர். இதற்கு மாறாக ஆங்கிலத் தலைவர்களி டம் ஒன்றிய மனப்பான்மை காணப்பட்டது. லாரன்ஸை, கிளைவ் தந்தையெனக் கொண்டாடினர். பின்னவரும் முன்னவரிடம் அன்பு பாராட்டினர்.

ஆட்சிமுறை வேறுபாடு : பிரெஞ்சுக் கிழக் கிந்தியக் கம்பெனி, காலப்போக்கில் அரசியலாரின் ஒரு துறைக்கள மாக மாறியது. ஆகவே தனியார் நிலையத்தில் காணக் கூடிய ஆற்றலும் ஊக்கமும் அதில் கிடையா. இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய அளவுக்குக் கூட்டுக்குழு நிதி வசதியைப் பெற்றிருக்கவில்லை. ஆத லால் மேலும் மேலும் அரசாங்க உதவியை அது நாட வேண்டியிருந்தது. XV-ம் லூயியின் அரசாங்கம் இந்திய அலுவல்களை ஒழுங்காக நிர்வகிக்கவில்லை. பிரான்சு நாட்டு மக்கள், கம்பெனியைப் பற்றிச் சிறிதும் அக்கரை கொள்ளவில்லை. கம்பெனி முதலாளிகளும் அதே நிலையில் தான் இருந்தனர். குடியேற்ற முறையை எதிர்த்த கட்சி, பிரான்சில் இருந்து வந்தது. வால்ட்டேர் அதற்குத்

தலைவராயிருந்தார். ஆங்கிலேயக் கம்பெனியின் நிலைமையோ வேறு வகையானது. அமைப்பிலும் ஆட்சி முறையிலும் இரண்டு கம்பெனிகளும் வேறுபாடுகளைப் பெற்றிருந்ததால் அவற்றின் வளர்ச்சி அவற்றிற்கேற்ப மாறி அமைந்தது.

பகுதி 8

ஐரோப்பியரின் வெற்றிக்குரிய நிலைமைகள்

போர்ச்சுகீசியர், டச்சுக்காரர், பிரெஞ்சியர், ஆங்கிலேயர் முதலிய ஐரோப்பிய நாட்டினர் கீழ்த்திசையில் வாணிகப் போட்டியில் இறங்கிய வரலாற்றை நாமறிவோம். அவர்களின் வெற்றிக்குரிய நிலைமைகளை இனிக் காண்போம். தாம் மேற்கொண்ட முயற்சியில் முழு ஊக்கங்காட்டி இயன்ற அளவு தியாகம் செய்ய முன்வராத எந்த ஐரோப்பிய நாட்டினரும் வெற்றியின் உச்ச நிலையை அடைவதற்கில்லை. மேலும் அவ்வெற்றிக்கு அவர்கள் நாட்டினரும் அரசியலாரும் துணை புரிய வேண்டும். 17-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்தின் அரசர்களோ அந்நாட்டு மக்களோ ஆங்கிலக் கம்பெனிக்கு வேண்டிய அளவு உதவி செய்யவில்லை. ஆனால் டச்சுக்காரரும் ஹாலந்து அரசியலாரும் டச்சுக் கம்பெனி விரும்பிய உதவியை அளித்தனர். ஆதலாற்றான் ஆங்கிலேயக் கம்பெனியை விட டச்சுக் கம்பெனி சிறப்புற்றிருந்தது. 18-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பிரெஞ்சுக் கம்பெனிக்குத் தாய்நாட்டின் ஆதரவு கிடைக்கவில்லை. ஆனால் ஆங்கிலேயக் கம்பெனிக்கோ அவ்வாய்ப்புக்கேடு ஏற்படவில்லை. அடுத்தபடியாக, கீழ்நாட்டில் உயர்நிலை பெற, ஐரோப்பாவில் ஆதிக்கம் பெறுவதும் இன்றியமையாததாயிருந்தது. ஐரோப்பாவில் ஆதிக்கமிழந்த எந்த நாடும் கீழ்த்திசையில் உயர்நிலை பெற முடியாது என்று கூறலாம். மேற்கூறிய சிறப்புக் கூறுகளைப் பெற்றிருந்த இங்கிலாந்து, அவற்றைப் பெறாத போட்டி நாடுகளை வென்றது. மேலும் தேசீயப் பண்பாடும் குறிப்பிடத்தக்க மற்றொரு கூறாகும். தன்னடக்கம், பொறுமை, விடா முயற்சி, ஒத்துழைக்கும் உளப்போக்கு, அடிப்படை ஒற்றுமை, முதலிய பண்புகள் எந்நாட்டவரிடம் உள்ளனவோ அந்நாட்டவர் இறுதியில் வெற்றிபெறுவது உறுதி.

18-ஆம் நூற்றுண்டிலிருந்து, இங்கிலாந்து மக்கள், கிழக்கே சென்ற தம் நாட்டினருக்கு வாய்ப்புக்கேடுகளால் துன்பம் நேராமல் காப்பாற்ற வேண்டுமென்ற உறுதி யுடன் இருந்தனர். இறுதியாக இந்தியாவில் ஆங்கிலேயர் பல நல்வாய்ப்புக்களையும் பெற்றனர் என்பதும் குறிப்பிடத் தக்கது. 1623-ம் ஆண்டு அம்பாய்ஞப் படுகொலையால் இறுதியில் ஆங்கிலேயருக்கே நன்மை கிடைத்தது. ஆங்கிலக் கம்பெனிக்குத் தாய்நாட்டில் இருந்த இடையூறுகள் யாவும் 1708-ல் ஒருவாறு மறைந்தன. இந்தியாவில் உள்நாட்டு நிலைமையும் அவர்களுக்கு அனுகூலமாக மாறி வந்தது. இந்தியாவில் ஏற்பட்ட குழப்பநிலை தொடக்கத்தில் கம்பெனியாருக்கு இடையூருக இருந்த போதிலும் காலப் போக்கில் அவர்களுடைய ஆதிக்கத் திற்கே அது வழி வகுத்தது. மேலும் மூன்ருவது பானிப் பட்டுப் போர் மராட்டியரை மெலிவுறச் செய்து பிரிட்டிஷ் ஆட்சியின் வளர்ச்சிக்கு உதவியது. தவிர, வங்காளப் புரட்சி போன்ற சில எதிர்பாரா நிகழ்ச்சிகள் ஆங்கிலேய ருக்கு அனுகூலமாயின.

பகுதி 9

யூசுப்கான்

போர் வீரர் : கருநாடகத்தில் நடந்த ஆங்கில – பிரெஞ்சுப் போரைக் கற்போர் யூசுப்கான் அல்லது முகம்மது யூசுப் என்பாரைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். இராமநாதபுரம் மாவட்டத்தில் வேளாளர் குலத்தில் உதித்த மதுரநாயகம் பிள்ளை என்பார் முகம்மதியரானார். யூசுப்கான் எனப் பெயர்பெற்ற அவர் 1752-ல் கிளைவின் படையில் ஒரு சிப்பாயாகச் சேர்ந்தார். திருச்சிராப்பள்ளி முற்றுகையின் பொழுது (1752 – 4) அவர் போர் வீரராகப் பணியாற்றினார். அவருடைய வீரம், அறிவுக்கூர்மை முதலிய பண்புகளைப் பற்றி லாரன்ஸ் மிகவும் புகழ்ந்து கூறியுள்ளார். அவர், சிப்பாய்களின் தலைவரானார்; 1755-ல் தங்கப் பதக்கத்தைப் பரிசாகப் பெற்றார். 1756 முதல் 1761 வரை மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களின் கவர்னராக அவர் பணியாற்றினார். அப்பகுதிகள் ஆர்க்காட்டு நவாப்புக்கு உரியனவாயினும் உண்மையில் சென்னை அரசியலாரின் ஆட்சிக்கே உட்பட்டிருந்தன. சோழவந்தானைக் கைப்பற்றிய ஐதர்அலியை 1757-ல் யூசுப் முறியடித்தார். நத்தம் கணவாயில் அப்போர் நடந்தது. ஐதர் ஸ்ரீரங்கப் பட்டணத்துக்குத் திரும்பினார். லாலி சென்னையை முற்றுகையிட்ட பொழுது (1758–59) ஆங்கிலேயருக்கு யூசுப் அரிய உதவியைப் புரிந்தார். அதற்காக அவர், விலை உயர்ந்த வைரங்கள் பதிக்கப்பெற்ற மோதிரத்தைப் பரிசாகப்பெற்றார்.

ஆட்சியாளர் : யூசுப்கானின் ஆட்சி முறை உழவர்களுக்கு நன்மை பயந்தது. அவர் மதுரையில் நெசவுத் தொழிலை ஆதரித்தார்; வெடி மருந்து, துப்பாக்கி, பீரங்கி முதலியன உற்பத்தி செய்வதிலும் கருத்துச் செலுத்தினார்;

வாணிகத்தைப் பெருக்கினர்; மதுரைக் கோயில்களில் குருக்கள்கள் பெற்றிருந்த நிலங்களையெல்லாம் வாங்கிக் கொண்டு, அவர்களுக்கு ஊதியத்தை நிர்ணயித்து வழங்கினர்.

கலகக்காரர் : ஆங்கிலேயர் தமது கொள்கையை மாற்றிக்கொண்டு, யூசுப்கானைத் தமது பணியில் வைத்துக் கொள்ளாமல் ஆர்க்காட்டு நவாப்பின் பணியில் இருக்கச் செய்தனர். இதனால் அவ்வீரருக்குச் சினம் மூண்டது. பிரெஞ்சியரின் உதவியையும் அவர் பெற்றார்; நவாப்புக்கு எதிராகக் கலகம் செய்தார். ஆங்கிலேயர் மதுரையை முற்றுகையிட்டனர். 1764-ல் நவாப்பின் ஆணைப்படி யூசுப் கொல்லுண்டார். நேர்மையும் ஆற்றலும் நிறைந்த அவர் வீரப்போர் புரிந்து மாண்டார். அவருடைய படையினரே நம்பிக்கைக் கேடான முறையில் அவருக்குத் துரோகம் செய்ததாற்றான் அவர் பிடிபட்டார். ஆங்கிலேயரை இரண்டு ஆண்டுகள் எதிர்த்து நின்ற அவருடைய வீரம் போற்றத்தக்கது. ஐதர்அலி, அவரிடமிருந்து சிறந்த படிப்பினையைப் பெற்றார்.

பகுதி 10

ஐதர்அலியும் முதல் மைசூர்ப் போரும்

மைசூர் அரசர்கள் (18-ஆம் நூற்றுண்டு) : சிக்க தேவராயருக்குப் (1672–1704) பின், II-ம் கண்டீரவநரசர் (1704–13) மைசூர் மன்னரானுர். அவருக்குக் காதும் செவிடு, வாயும் ஊமை. பின் போந்த தொட்ட கிருஷ்ண ராஜா (1713-31) ஆற்றலற்றவர். ஆகவே அமைச்சரின் ஆதிக்கம் ஏற்பட்டது. அவ்வமயம் மைசூரை எதிர்த்த சாததுல்லாகானுக்கு அரசியலார் ஒரு கோடி ரூபாய் கொடுத்து அமைதி ஏற்படுத்தினர். VII-ம் சாமராசர் (1731 – 34) ஆட்சிக்காலத்தில் தேவராசர் என்பார் தளவாயாக (படைத்தலைவர்) இருந்தார்; அவர் உறவினர் நஞ்சராசர் சர்வாதிகாரி (நிதி அமைச்சர்) ஆனுர். அவரே பிரதானி (பிரிவி கௌன்ஸிலர்) ஆகவும் பணியாற்றினுர். இவர்கள் அரசரின் அதிகாரத்தைத் தாமே கைக்கொண்டு அரசரைச் சிறைப்படுத்தினர். மன்னரும் மாண்டார். ஐந்து வயதுக் குழந்தை, சிக்க கிருஷ்ண ராசர் (1734–66) மன்ன ரானுர். தேவராசரும் நஞ்சராசரும் முன்புபோலவே ஆட்சியை நடத்தி வந்தனர். பின்னவர் இறந்தபின் முன்னவரின் இளவல் அவர் பதவியைப் பெற்றுர். இவ்வாறு அமைச்சராட்சி நிலவியகாலத்திற்றுன் மைசூரில் ஐதர்அலி முன்னணிக்கு வந்ததைக் காண்கிறேம். 1757க்கும் 1759க்கு மிடைப்பட்ட காலத்தில் தேவராசர் இறந்தார். அவருடைய இளவல் (இவர் பெயரும் நஞ்சராசர்) 1759-ல் ஐதர் அலியால் விரட்டப்பட்டார். இந்த நஞ்சராசர், ஏறத்தாழ 20 ஆண்டுகள் மைசூரில் ஆட்சி நடத்தியவர்.* சிக்க கிருஷ்ணராசர் இறந்தவுடன் அவர் மகன் நஞ்சராசர் (அமைச்சர் நஞ்சராசரல்ல) அரியணை ஏறினுர். அவராட்சிக்

---

* C. Hayavadana Rao, Mysore Gazetteer II, Pt. IV (1930), பக். 2417.

சி. ஹயவதன ராவ், மைசூரைப் பற்றிய தகவல் தொகுதி.

காலத்தில் ஐதர் அமைச்சரைச் சிறைப்படுத்தினர்; 1770-ல் ஐதர் அரசரைக் கொன்றுவிட்டு மன்னரின் உடன் பிறந்தாரான VIII-ம் சாமராசருக்குப் பட்டம் சூட்டினர்; அவரிறந்தபின் IX-ம் சாமராசருக்கு (1776–96) அரியணையைத் தந்தார். அவருக்குப் பிறகு திப்பு சுல்தான் அரசராக யாரையும் அமர்த்தவில்லை. 1799-ல் III-ம் கிருஷ்ணராசர் (5 வயதுக் குழந்தை) என்பாரை ஆங்கிலேயர் மைசூரில் அரசராக்கினர். 1610-ம் ஆண்டு முதல் மைசூர் மன்னர்களும், பின்னர் ஐதர் அலி, திப்புசுல்தான் ஆகியோரும் சீரங்கப்பட்டணத்தையே தலைநகராகக் கொண்டிருந்தனர். 1799-ல் ஆங்கிலேயர், அரசரை மைசூரில்-அமர்த்தினர்.

ஐதர் அலி வாழ்க்கையின் முற்பகுதி : ஐதர், முகம்மது நபி உதித்த குலத்தில் பிறந்ததாகக் கூறப்படுகிறது. கோலார் மாவட்டத்தில் (மைசூர்) உள்ள புதிக்கோட்டை என்னுமிடத்தில் 1722-ல் அவர் பிறந்தார். அவர் தந்தை பதே முகம்மது என்பார் கோலாரில் பௌஜ்தாராக இருந்தவர். 1749-ம் ஆண்டிலேயே ஐதரின் போர்த்திறமை வெளியாயிற்று. அமைச்சர் நஞ்சராசரின் நன்மதிப்பை ஐதர் பெற்றார்; படையின் ஒரு பகுதிக்குத் தலைவராகவும் அமர்த்தப்பெற்றார். 1750-ல் நாசிர் ஜங்குக்கு உதவியாகக் கருநாடகத்தில் புகுந்த மைசூர்ப்படையில் ஐதரும் இருந்தார். நாசிர் ஜங் இறந்தவுடன் ஐதர், மிகுதியாகக் கொள்ளைப் பொருள்களையும் குதிரைகளையும் துப்பாக்கிகளையும் சேர்த்துக்கொண்டு திரும்பினர். 1751–4-ல் திருச்சிராப்பள்ளிக்குச் சென்ற மைசூர்ப் படையில், ஐதர் குதிரைப்படைத் தலைவராகப் பணியாற்றினர். அவ்வமயம் கொள்ளைகள் மூலம் அவர் தமது நிலையை வலிமைப்படுத்திக் கொண்டார். 1755-ல் அமைச்சர் அவரைத் திண்டுக்கல்லுக்குப் பௌஜ்தாராக அமர்த்தினர். 1754 முதல் 1757 வரை உள்ள காலத்தில், நிஸாம் புஸ்ஸியையும் பாலாஜிராவையும் துணைகொண்டு மைசூரில் படையெடுத்தார். திண்டுக்கல்லில் ஐதர் தம் நிலையை வலிமைப்

படுத்திக் கொண்டார்; படைக் கலச்சாலையையும் ஆய்வுக் கூடத்தையும் அமைத்தார்; பீரங்கிப் படையைப் பெருக்கிக் கொண்டார். கொள்ளை முதலிய பல வழிகளால் அவருக்குப் பொருள் கிடைத்தது. 1757-ல் அவர் யூசுப்கானுடன் போரிட்டுத் தோற்றார். சீரங்கப்பட்டணத்தில் ஒரு படைக் கலகம் தோன்றியது. அதை அடக்க, நஞ்சராசரின் வேண்டுகோளின்படி ஐதர், 1758-ல் அங்குச் சென்றார். தமக்குப் போட்டியாயிருந்த ஹரிசிங் என்ற படை வீரரைக் கொன்றார். 1759-ல் கோபால்ராவ் பட்டவர்தன் என்பார் தலைமையில், மராட்டியப்படை மைசூரைத் தாக்கியது. பங்களூர் முற்றுகையை மராட்டியர் கைவிட்டதற்கு ஐதரே காரணமாவர். பின்னர் இருசாராருக்கும் அமைதி உடன்பாடு ஏற்பட்டது. கோபால் ராவுக்குப் பேஷ்வா பாலாஜி ராவ் பின்வருமாறு எழுதினர்: "ஐதர் உமது புகழை அழித்துவிட்டார்." ஐதருக்கு "பதே ஐதர் பஹதூர்" (தைரியம் கொண்ட வெற்றிச் சிங்கம்) என்ற பட்டம் கிடைத்தது.

ஆட்சியைக் கைப்பற்றல் (1761): 1759-ல் ஐதர், அரசரின் உதவிகொண்டு போர் வீரர்களின் ஊதிய நிலுவைத் தொகையைத் தாமே கொடுத்துக் கணக்கு முடித்தார். அதன் காரணமாக அவருக்கு மைசூர் நாட்டின் பெரும்பகுதி உரிமையாயிற்று. நஞ்சராசர் (அமைச்சர்) சீரங்கப்பட்டணத்தினின்று வெளியேறுமாறு கட்டாயப் படுத்தப் பெற்றார். மராட்டிய அந்தணரான கண்டே ராவ், "பிரதானி" ஆனர். 1760-ல் ஐதர், புதுச்சேரியில் இருந்த பிரெஞ்சியருடன் கூட்டுறவு அமைத்துக்கொண்டு ஆங்கிலேயரை எதிர்த்தார். ஆனல் அதற்கிடையில் அவருக்குப் பகையாக மராட்டியரின் உதவிபெற்ற கண்டே ராவ் சூழ்ச்சி செய்து வந்தார். நஞ்சன்கூடு என்னுமிடத்தில் (மைசூர் மாவட்டம்) ஐதருக்குத் தோல்வி நேரிட்டது. அவர், மனத்தளர்ச்சி அடையாமல் தந்திரமான முறைகளைக் கையாளத் தொடங்கினர். நஞ்சராசரும் கண்டே ராவும் ஐதரின் சூழ்ச்சித் திட்டங்களால் ஏமாந்தனர். ஐதர் பின்னவரின் படையை முறியடித்துவிட்டுத் தலைநகரில்

புகுந்து சிக்ககிருஷ்ணராசரைத் தம் கைப்பாவையாக ஆக்கிக்கொண்டார்; கண்டேராவை ஒரு இருப்புக் கூண்டில் அடைத்து அவருக்கு ஓராண்டுக் காலம் உணவு மட்டும் தந்து வந்தார். 1761-ல் மைசூரின் ஆட்சி ஐதரின் கைக்கு வந்துவிட்டது. அவரே அந்நாட்டின் சர்வாதிகாரி ஆனார்.

ஐதரின் வெற்றிகள் (1761–7): ஐதர், பஸலத் ஜங்குக்கு மிகுதியான பொருள்கொடுத்துத் தம்மை சீரா (தும்கூர் மாவட்டம்) வின் நவாப்பாக்கிக் கொண்டார்; ஐதர் அலி கான் பஹதூர் என்ற பட்டமும் பெற்ருர்; அடுத்த படியாக அவர் சீராக்கோட்டையையும் சிதால் துர்க்கம் முதலிய இடங்களையும் தம்வசப்படுத்தினர். ஷிமோகா மாவட்டத்திலுள்ள பெட்னூரை அவர் கைப்பற்றிக்கொண்டதும் ஒரு சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சி யாகும். கேலடி, இக்கேரி, பெட்னூர் என்ற தலைநகரங்களைக்கொண்ட நாயக்கர் அரசு, ஐதரின் வெற்றிகளால் முடிவுற்றது (1763). பெட்னூரின் மீது படையெடுக்காமல் இருப்பதற்காக அவருக்குக் கைக்கூலி அளிப்பதாகக் கூறியதை ஐதர் ஏற்க மறுத்துவிட்டார். பெட்னூர் அரசி வீரம்மாஜி (1756–63) அவருடைய கள்ளக் காதலருடன் – அப்பெண்மணி இழிவான வாழ்க்கை நடத்தி வந்தவர் – ஐதரின் படையைக் கண்டதுமே ஓட்டமெடுத்தார். ஐதருக்கு 120 லட்சம் பொற்காசுகள் (கொள்ளைப் பொருள்) கிடைத்தன. அரசியாரைக் கைப்பற்றிய வெற்றி வீரர்கள், 1767 வரை அவரை மத்தகிரியில் (தும்கூர் மாவட்டம்) சிறைப்படுத்தி இருந்தனர். பின்னர், பேஷ்வா மாதவராவ் அந்த இடத்தைக் கைக்கொண்டபொழுது, அவ்வம்மையார் பூனுவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஆனல் வழியிலேயே அவர் வாழ்க்கை முடிவடைந்தது. ஐதர், பெட்னூருக்கு ஐதர் நகர் என்று பெயரிட்டார். அங்கே பல புதிய கட்டடங்கள் தோன்றின. விரைவில் நாற்றிசையிலுள்ள பல இடங்கள் ஐதரின் ஆட்சிக்கு உட்பட்டன. ஆனல் 1764 முதல் 1765 வரை மராட்டியரால் அவருக்குப் பல இடையூறுகள் விளைந்தன.

1766–7-ல் ஐதர் மலபாரை வென்ருர். அவர் தம் வலிமை யால் வெல்ல முடியாத இடங்களைச் சூழ்ச்சியால் வென்ருர். 1767-ல் சீரங்கப்பட்டணத்தில் நுழைந்து அங்கே கொள்ளை யிட்டார். மாதர் தம் உடல் மேலிருந்த அணிகலன்கள் மட்டுமே கொள்ளையிடப்படவில்லை. அதே ஆண்டில் மைசூரில் படையெடுத்த மாதவ ராவுக்கு ஐதர், தற்காலிக மாக அடங்கினுர். நஞ்சராசர், மராட்டியருடனும் நிஸாமுடனும் சேர்ந்து சூழ்ச்சி செய்வதாக, ஐதர் அவர் மீது குற்றஞ் சாட்டி அவரைச் சிறைப்படுத்தினுர். நஞ்ச ராசர், ஒரு அறிஞர் ; கன்னடத்திலும் வடமொழியிலும் அவர் நூல்களியற்றியுள்ளார். சிவபெருமானிடம் அவ ருக்கு அன்பு உண்டு. அறஞ்செய்வதில் அவருக்கு மிகுந்த ஆர்வ மிருந்தது. 1759-வரை அவர் மைசூரின் ஆட்சியை நடத்தி வந்தார்.

முதல் மைசூர்ப் போர் (1767–9): காரணங்கள். 1759-ல் வட சர்க்கார் மாவட்டங்களை ஆங்கிலேயர் பெற்ற னர் என்பதை முன்பு கண்டோம். 1766-ல் முகலாயப் பேரரசரும், அதை அலகாபாத் உடன்படிக்கையின்படி உறுதி செய்தார். நிஸாம் அலி (1762–1802) 1765-ல் ஆங் கிலேயருடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி நிஸாம் அரசாங்கத்துக்குத் தக்க காலத்தில் தக்க உதவி புரிவதற்காக ஒரு ஆங்கிலேயப் படை நிறு வப்பட வேண்டுமென்று முடிவு ஆயிற்று. இதில் பிற்கா லத்தில் ஏற்பட்ட பாதுகாப்பு முறை உடன்படிக்கை (Subsidiary Alliance)யின் தன்மையை ஓரளவு காண லாம். சுருங்கக் கூறின், ஐதருக்குப் பகையாக நிஸா முக்கு உதவி செய்ய ஆங்கிலேயர் முன் வந்தனர். மேலும் மராட்டியரும், ஐதருக்கு எதிராக நிஸாமுடன் சேர்ந்து கொள்வர் என்று அவர்கள் எதிர்பார்த்தனர். ஆனுல் அவ்வாறு நிகழவில்லை. 1767-ல் நிஸாம் அலி ஐதருடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார். அவ் வொப்பந்தம் ஐதரின் சூழ்ச்சித் திறத்தைக் காட்டுகிறது. அதுவே முதல் மைசூர்ப் போரின் காரணமாகும்.

போர் நடவடிக்கைகள் : ஐதர், நிஸாம் அலி, ஆகியோரின் படைகளை, 1767-ல் கர்னல் ஜோஸப் ஸ்மித் என்ற ஆங்கிலேயர் வட ஆர்க்காடு மாவட்டத்தில் தோற்கடித்தார். திருவண்ணுமலையில் கர்னல் உட் என்பாரும் ஸ்மித்தும் பெற்ற வெற்றி குறிப்பிடத்தக்கது. ஐதரின் மகனுரான திப்பு அவ்வமயம் சென்னையை நோக்கித் தமது குதிரைப் படையுடன் முன்னேறிக் கொண்டிருந்தார். திருவண்ணுமலையில் ஐதருக்கு ஏற்பட்ட தோல்வி காரணமாகத் திப்பு திரும்பி வரலானுர். ஐதர் சில இடங்களைக் கைப்பற்றிய போதிலும் ஆம்பூரில் மீண்டும் அவருக்குத் தோல்வி கிடைத்தது. நிஸாம் இராச்சியத்தில் ஆங்கிலேயர் படையெடுத்தனர். அதனுல் நடுக்கமுற்ற நிஸாம், ஐதரிடமிருந்து பிரிந்து ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்து கொண்டார் (1768). ஆயினும் போர் முடியவில்லை. பங்களூரைக் கைப்பற்ற ஆங்கிலேயர் செய்த முயற்சிகள் வீணுயின. ஐதர் பாரமஹாலில் (சேலம் மாவட்டத்தின் வட கிழக்குப் பகுதி) படை யெடுத்துப் பல இடங்களைக் கைப்பற்றிக் கொண்டார். ஈரோடுக்குச் செல்லும் வழியில் தளபதி நிக்ஸனை முறியடித்து அவ்விடத்தை ஐதர் கைக் கொண்டார். 1769-ல் கருநாடகத்திலும் அவர் படையெடுத்துப் பல அழிவு பாடுகளை விளைத்தார். அவருடைய தானைத் தலைவர் பஸலுல்லா கான், மதுரையையும் திருநெல்வேலியையும் எதிர்த்துச் சென்றுர். ஐதரின் படை தஞ்சாவூரைக் கடந்து கூடலூருக்கும் சென்றது. காப்டன் ப்ரூக் என்பார் மூலம் அமைதிக்கான ஏற்பாட்டைச் செய்ய முயற்சிகள் செய்யப்பட்டன. ஆனுல் ஐதர் அவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்கிடையில் மராட்டியர் மைசூரின் மீது படை யெடுக்க முயற்சித்தனர். அதைக் கேள்வியுற்ற ஐதர் தம் படையின் ஒரு பகுதியைத் திரும்ப அனுப்பி விட்டுத் தாம் சென்னையை நோக்கி முன்னேறினுர். $3\frac{1}{2}$ நாட்களில் 130 மைல்கள், அவர் தமது 6000 குதிரைகளுடன் பயணம் செய்தார். சென்னைக் கவர்னருக்கும் அவருடைய ஆலோசனைக் குழுவினருக்கும் அவர் அறிவித்த நிபந்தனைகள் ஐதரின் பேராசையின்

மையைக் காட்டுகின்றன. இரு சாராரும் அவரவர் கைப் பற்றியிருந்த இடங்களைத் திரும்ப அளிக்க உடன்பட்ட னர். ஆனால் கரூர் மட்டும் ஐதர் வசமே இருந்தது. மேலும் ஆங்கிலேயரும் ஐதரும், தற்காப்புக்காக ஒருவருக் கொருவர் உதவி செய்ய வேண்டுமெனவும் முடிவு செய்த னர். இவ்வாறு மராட்டியருக்கு எதிராக ஆங்கிலேயரின் உதவி தமக்குக் கிடைக்குமாறு ஐதர் ஏற்பாடு செய்தார்.

இப்போரில் ஐதர் வெற்றி பெற்றமைக்கு, ஆங்கிலேய ரிடம் போதுமான குதிரைப் படை இல்லாமையே முக்கிய காரணமாகும். ஐதரிடமோ மிகுதியான குதிரைகளும் கருநாடகத்தை அழிக்கத் தக்க வசதிகளுமிருந்தன. மேலும் தளபதிகள் ஸ்மித், உட் ஆகிய இருவருக்கு மிடையே ஒற்றுமை கிடையாது; பொறாமை நிலவியது. சென்னையிலிருந்த ஆலோசனைக் குழுவினரின் படைத் துறை உதவியாளர் அத் தலைவர்களின் உரிமையான நட வடிக்கைகளைக் கட்டுப்படுத்தி வந்தனர். உடன்பாட்டின் படி ஆங்கிலேயர் ஐதருக்கு உதவி செய்யும் கடப்பாட் டைப் பெற்றனர் ஆனால் மராட்டியர், ஐதரைத் தாக்கிய பொழுது அவர்கள் வாளா விருந்தனர். இதனால் ஐதர் அவர்களுடைய கொடிய பகைவரானார். இப்போர் ஐத ரின், போர்த் தந்திர முறைகளையும், வீரத்தையும் காட்டா நிற்கும். அதே சமயத்தில் சென்னை அரசியலார் செய்த தவறுகளையும் நாம் உணர்கிறோம். அவர்கள், முகம்மது அலியிடம் நம்பிக்கை கொண்டிருந்தது பெருந்தவறாகும். ஐதர் அம் முகம்மது அலியை மதிக்கவே இல்லை.

மராட்டியரின் மைசூர்ப் படையெழுச்சி: (1770 - 2). மாதவராவ் மைசூரில் படையெடுத்த செய்தியை முன் னரே குறிப்பிட்டுள்ளோம். அவர், உடல்நலக் குறைவு காரணமாகத் தம் நாடு திரும்ப நேர்ந்ததால், அப்படை யெடுப்பைத் திரும்பாக் ராவ் தொடர்ந்து நடத்தினார். அவர் 1772-ல் ஐதரை ஒரு இழிந்த ஒப்பந்தத்துக்கு இணங்குமாறு செய்து வெற்றி பெற்றார். ஐதர், ஆங்கி லேயரிடம் உதவிக்காக முறையிட்டார். ஆனால் அது பய

னற்றதாயிற்று. மைசூர் வீரரின் வெகுளி அளவு கடந்ததாயிற்று. அதற்கு இரண்டு ஆண்டுகள் முன்பே ஐதர், மைசூர் அரசரைக் கொன்று விட்டார். மராட்டிய ருடன் அவ்வரசர் மறைமுகமாகச் சேர்ந்து சதிசெய்யத் திட்டமிட்டார் என்பதே மன்னர் மீது சாட்டப்பட்ட குற்ற மாகும். படை யெடுப்பாளர் அகன்றவுடன் ஐதர், மக்களைக் கொடுமைப்படுத்திப் பொருள் சேர்த்துக் கொண்டார்.

பகுதி 11

கருநாடகத்தில் ராபர்ட் கிளைவ்

வாழ்க்கையின் முற்பகுதி: ராபர்ட் கிளைவ், தம் தொழிலில் வெற்றி பெருத வழக்குரைஞரான ரிச்சர்டு கிளைவ் என்பாரின் மகனுராவார். இவர் 1725-ல் இங்கிலாந்தில் ஷ்ராப்ஷைர் என்ற பகுதியில் உள்ள மார்க்கெட் ரேடன் என்னுமிடத்தில் பிறந்தார். ராபர்ட் கிளைவ், அவர் தாய்க்கு மிகவும் கடப்பாடு உடையவர். அவர் குழவிப் பருவத்தில் நோய்வாய்ப்பட்டிருந்த போதிலும் ஆற்றலிலும் மனத் தைரியத்திலும் (ஊக்கத்திலும்) மிக்கோராக இருந்தார். போரை அவர் மனம் நாடியது. இளமைப் பருவத்திலேயே அவருடைய ஆசிரியர் ஒருவர் கூறியதாவது:— "இவர் பிற்காலத்தில், தம் ஆற்றலுக்கேற்ற வாய்ப்புக்களைப் பெற்ருல் இணையற்ற புகழைப் பெற்று விளங்குவார்" கிளைவ், கல்வியில் அதிக கருத்தைச் செலுத்தவில்லை; விளையாட்டில் மனதை மிகுதியாகச் செலுத்திவந்தார். கிளைவின் குறும்புச்செயல்களை விளக்கும் கதைகள் பல உள. சாலையிலுள்ள ஒரு கழிவு நீர்ப்பாதையில், ஒரு சமயம் அவர் தம் உடம்பை அணைபோல் அமைத்துப் படுத்துக்கொண்டாராம். அக்கழிவு நீர் அருகிலிருந்த கடைக்குள் புகவேண்டுமென்ற குறும்பத்தனமான விருப்பமே அதற்குக்காரணமாம். 1737 முதல் 1739 வரை அவர் லண்டன் மாநகர்ப்பள்ளியில் பயின்ருர், பிந்திய ஆண்டில் அப்பள்ளியை விட்டு நீங்கி, வேருெர் பள்ளியில் வாணிகக் கணக்குமுறையைக் கற்றுக்கொண்டார். கிழக்கிந்தியக் கூட்டுக்குழுவில் ஒரு எழுத்தாளர் (Clerk) பதவியைப்பெற வேண்டுமென்று அவர் நோக்கமாயிருந்தது. அவ்வாறே 1742-ம் ஆண்டின் முடிவில் செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் ஒரு எழுத்தாளர் பதவியைப் பெற்ருர். இலவச உணவுடன் ஆண்டுக்கு ஆங்கில நாட்டுப் பொற்காசுகள் ஐந்து ஊதியமாக அவருக்குக்

கிடைத்தது [அப்போது கவர்னரின் ஆண்டு ஊதியம் 300 பொற்காசுகள் ; ஆலோசனைக் குழுவினரின் ஊதியம் 40 முதல் 100 பொற்காசுகள் வரை]. ஏறத்தாழ 15 மாதங்கள் பிரயாணம் செய்தபின் கிளைவ் 1744-ல் சென்னை வந்து சேர்ந்தார். 1746-ல் அந்நகரைப் பிரெஞ்சியர் கைப்பற்றியபொழுது அவர் மாறுவேடம் பூண்டு செயின்ட் டேவிட் கோட்டைக்குத் தப்பி ஓடினார். 1747-ல் தியூப்ளே சென்னையை முற்றுகையிட்டபொழுது கிளைவ் படையின் கொடியைத் தாங்கும் வீரராக இராணுவப்பணி புரிந்தார். 1748-ல் ஆங்கிலேயர் புதுச்சேரியை முற்றுகையிட்ட காலத்தில் அவ்வீரரின் போர்த்திறமை நன்கு வெளியாயிற்று. அவர் படையில் துணைத்தலைவரானார். தேவிக் கோட்டையில் அவர் மீண்டும் தம் திறமையைக் காட்டினார். அவருடைய வீரத்தையும் அறிவுக் கூர்மையையும் லாரன்ஸ் புகழ்ந்து போற்றினார். சிறிது காலம் போர்த் துறையிலிருந்து விலகியிருந்தபிறகு கிளைவ் 1751-ல் படைத்தலைவராக அமர்ந்து திருச்சிராப்பள்ளியை நோக்கிச் சென்றார்.

ஆர்க்காட்டைக் கைப்பற்றல் (1751) : சந்தா சாகிப்பும் பிரெஞ்சியரும் திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டிருந்த செய்தியை முன்னர்ப் பார்த்தோம். அவ்வமயம் ஆர்க்காடு போதுமான காவலற்று இருந்தது. முகம்மது அலி ஆர்க்காட்டின்மீது படையெடுப்பது நன்மை தரும் என்று ஆலோசனை கூறினார். அக் கடமையை கிளைவ் ஏற்றார். 200 ஐரோப்பிய வீரரும் 600 சிப்பாய்களும் அவருடன் சென்றனர். எளிதில் அவர் ஆர்க்காட்டைக் கைப்பற்றினார். இராசா சாகிப்பும் முர்த்தாஸா அலியும் தம்மைத் தாக்கியபொழுது கிளைவ் ஆர்க்காட்டை வீரத்துடன் காப்பாற்றித் தம் நிலைமையை வலிமைப்படுத்திக்கொண்டார். அவருடைய விடாமுயற்சியின் விளைவாக முற்றுகையைப் பகைவர்கள் கைவிட்டனர். ஆர்க்காட்டைக் கைப்பற்றியதைவிட அதைப் பகைவர் வசப்படாமல் காப்பாற்றிக்கொண்டிருந்த அருஞ்செயல்

கிளைவின் புகழைப் பெருக்கியது. அச்செயல் திருச்சிராப் பள்ளியிலிருந்த நிலைமையை மாற்றித் தியூப்ளேயின் புகழைக் குன்றச்செய்தது. பின்னர்க் கிளைவ் தாம் நடத்திய முதற்போரில், ஆரணிக்கு அண்மையில் (ஆர்க்காட்டுக்குத் தெற்கில்) இராசா சாகிப்பைத் தோற் கடித்தார். வெற்றி முழக்கத்துடன் அவர் செயின்ட் டேவிட் கோட்டைக்குத் திரும்பினர்.

1752 முதல் 1756 வரை கிளைவின் செயல்கள் : தியூப்ளே, கிளைவின் வெற்றியைப் பாழாக்கும் நோக்கத் துடன், இராசா சாகிபைச் சென்னையைத் தாக்குமாறு செய்தார். அதைக் கேள்வியுற்ற கிளைவ் உடனே சென்னைக்குச் சென்று 1752-ல் காவேரிப்பாக்கத்தில் பகைவரை வென்று வெற்றி பெற்ருர். அப்போர் ஆங்கிலேயரின் இராணுவச் சிறப்பைப் பெருக்கியது. அதன்பின் அவர் திருச்சிராப்பள்ளியில் லாரன்ஸுடன் ஒத்துழைத்து முடிவில் ஆங்கிலேயர் வெற்றிபெற வழி வகுத்தார். 1752-ல் கோவளம், செங்கற்பட்டு ஆகிய இடங்கள் கிளைவ் வசப்பட்டன. 1753-ல் அவர் மாஸ்கெலேன் என்ற பெண்மணியை மணந்தார். உடனே அவர் தம் உடல்நலக்குறைவு காரணமாக இங்கிலாந்துக்குச் சென்ருர்.

கூட்டுக்குழுவுக்குக் கிளைவ் ஆற்றிய தொண்டுகளைப் பாராட்டித் தாய்நாட்டினர் அவருக்குப் பரிசு வழங்கினர். மீண்டும் அவர் 1755-ல் இந்தியா வந்துசேர்ந்தார். செயின்ட் ஜார்ஜ் கோட்டை ஆலோசனைக் குழுவில் அவருக்கு ஒரு இடம் கிடைத்தது. மேலும் தக்கணத்தில் புஸ்ஸியை எதிர்ப்பதற்காக ஒரு படைப்பகுதியின் தலைமையையும் அவர் பெற்ருர். கிளைவும் வாட்சனும் துலாஜி ஆங்கிரேயை எதிர்த்துப் பேஷ்வாவுக்கு உதவும் நோக்குடன் கெரியாவைக் கைப்பற்றினர். (1756) அதே ஆண்டில் ஆலோசனைக்குழுவில் உதவித்தலைவர் பதவி அவருக்குக் கிடைத்தது. விரைவில் அவர் செயின்ட் டேவிட் கோட்டையின் உதவி கவர்னரானர். அவ்வமயம்

வங்காளத்தில் ஆங்கிலேயரின் அதிகாரத்துக்குப் பல இடையூறுகள் விளைந்துவந்தன. அங்கே நிலையை ஒழுங்குசெய்யக் கிளைவ், சிறப்பான அதிகாரங்களுடன் வங்காளத்துக்கு அனுப்பப்பெற்றார். அவரும் வாட்சனும் 1756-ம் ஆண்டின் முடிவில் அங்கே போய்ச்சேர்ந்தனர். இனி, 1756-ம் ஆண்டில் வங்காளத்தின் நிலைமை எவ்வாறிருந்ததென்று பார்ப்போம்.

பகுதி 12

சிராஜ்-உத்-தௌலாவும் கல்கத்தா இருட்டறைத் துயரநிகழ்ச்சியும்

சிராஜ்-உத்-தௌலா : அலிவர்திகான் என்பார், வங்காளம், பீஹார் நாடுகட்கும் ஒரிஸ்ஸாவின் ஒரு பகுதிக்கும் 1751 முதல் அரசப்பிரதிநிதியாக இருந்தார். 1756-ல் அவர் இறந்தபின் அவருடைய பெயரர் (மகள் வயிற்றுப் பிள்ளை) மிர்ஸா முகம்மது அல்லது சிராஜ்-உத்-தௌலா பட்டமேற்றார். இவர் சிற்றின்பத்தில் மிகுந்த நாட்டம் செலுத்திவந்தார். ஆங்கிலேயரிடம் இவருக்கு நம்பிக்கை இல்லாததால் அவர்களைப் பகைத்துக் கொண்டார். ஆங்கிலேயர் கல்கத்தாவில் பெருத்த செல்வத்துடன் உள்ளனர் என நவாப் சிராஜ் உத்தௌலா எண்ணினார். ஆங்கிலேயரை வெறுத்த அமீன்சந்த் (ஒமிச்சந்த்) என்ற சீக்கிய (?) லேவாதேவிக் காரர், அவர்களைத் தாக்குமாறு நவாப்பைத் தூண்டி வந்தார். நவாப்பின் சினத்திற்குத் தப்பிய சிலர் ஆங்கிலேயரிடம் சரண் புகுந்தனர். இதன்பொருட்டும் அவ்வயலாரைப் பழிவாங்க நவாப் கருதினார். அவர் கல்கத்தாவை ஆங்கிலேயர் வலிமைப்படுத்துவதாகவும், கேள்விப்பட்டார். வில்லியம் கோட்டைச் சுவர்களை வலிமைப்படுத்தக் கூடாதென்று கவர்னர் டிரேக்குக் கட்டளையிட்டார். ஆனால் அவர், பிரெஞ்சியரின் தாக்குதல் ஏற்படக்கூடுமாதலின் ஆங்கிலேயர், தம்மைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டியது இன்றியமையாதது என மறு மொழி கூறினார். இதனாலும் நவாப் ஆங்கிலேய அதிகார வளர்ச்சியைக் கண்டு அஞ்சினார். கருநாடகத்தில் ஐரோப்பியர் செய்ததுபோலவே வங்காளத்திலும் செய்து விடுவர் என்ற எண்ணம் அவருக்கு உண்டாயிற்று. ஆங்கிலேயர் தமது வாணிக உரிமைகளை மீறிச் செயலாற்றிவந்ததாகவே நவாபு கருதினார். சுருங்கக்

கூறின் வங்காளத்தின் அரசியல் பொருளாதார நிலைமை நவாபுக்கும் ஆங்கிலேயருக்குமிடையே போர் தோன்றக் காரணமாயின.

கல்கத்தாவைக் கைப்பற்றுதல் (1756): சிராஜ் - உத் - தௌலா தம் தலைநகராகிய முர்ஷிதாபாத்துக்கு அருகிலுள்ள காஸிம்பஸாரிலிருந்த ஆங்கிலப் பண்டக சாலையைக் கைக்கொண்டார். அதன் பின்னர், கல்கத்தா வின் மேற்சென்று அது காவலின்றி இருந்ததால் அதை யும் கைப்பற்றினர். கவர்னர் டிரேக்கும் ஆலோசனைக் குழு உறுப்பினர் பலரும் ஆற்றிலிருந்த கப்பல்களில் புக்க னர். ஹால்வெல் என்பார் மட்டும் (குழு உறுப்பினர்) ஓரிரண்டு நாட்கள் பகைவரை எதிர்த்து நின்றார். அவரும் அவரைப் பின்பற்றியோரும் சிறைப்பட்டனர்.

இருட்டறைத் துயர நிகழ்ச்சி: சிறைப்பட்ட 146 கைதிகளை கல்கத்தா கோட்டையில் ஓர் இருட்டறையில் அற்றை இரவு அடைத்து வைக்குமாறு நவாபு கட்டளை யிட்டதாகக் கூறப்படுகிறது. அவ்வறை 18 சதுர அடிப் பரப்புக்கு உட்பட்டதெனவும் கூறுவர். மறு நாட் காலை யில் அவர்களில் ஹால்வெல் உட்பட 22 பேர்கள் தான் உயிருடன் வெளிவந்ததாகவும் கூறப்படுகிறது. அத்த கைய கொடுமை நடைபெறவே இல்லை என்று சில ஆசிரி யர்கள் கூறுகின்றனர். அக்காலத்து முகம்மதிய வரலாறு களிலாவது இந்தியக் குறிப்புகளிலாவது அதைப் பற்றிய செய்தி ஒன்றையும் நாம் காண்பதற்கில்லை. 1757-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ஹால்வெல் எழுதிய விளக்க மான செய்திகளே அந் நிகழ்ச்சிக்குச் சான்றாகும். அவர் தம் தாய் நாட்டுக்குத் திரும்புகையில் அவற்றை எழுதி னார். அவை உண்மை அல்ல என்பதற்குப் பல காரணங் கள் கூறப்படுகின்றன. முதலாவதாக அத்தகைய சிறிய அறையில் 146 பேர் அடைக்கப்படுவது என்பது நம்பக் கூடியதாக இல்லை. ஹால்வெல், பொய் கூறுவதற்கு அஞ் சாத ஒருவர். மேலும் அக்காலத்திய வேறு எந்த ஆங் கிலக் குறிப்பும் அந் நிகழ்ச்சியைப் பற்றிக் கூறவில்லை.

சிராஜ் - உத் - தௌலாவைப் பதவியினின்று நீக்கிய விவரங்களைப்பற்றிக் கிளைவ், இயக்குநர்கட்கு (Directors) எழுதிய முடங்கலில் கூட மேற்கூறிய நிகழ்ச்சியைக் குறிக்கவில்லை. தவிர, உயிரிழந்தோரின் உறவினருக்காக எவ்வித நட்ட ஈட்டையும் ஆங்கிலேயர் நவாப்பிடம் கோரவில்லை என்பதும் நோக்கத் தக்கது. மேலும் இருட்டறை என்பது பொது வழக்கில் வில்லியம் கோட்டையையே தான் குறிக்கக் கூடும் என்ற கருத்தும் சிந்திக்கத் தக்கது. இறந்ததாகக் கூறப்பட்ட 123 பேர்களில் 56 பெயர்கள் தான் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இக் காரணங்களால் முற் கூறிய இருட்டறைக் கொடுமை என்பது ஐரோப்பியரால் தம் நலனுக்காகப் புனைந்து வரையப்பட்ட ஒன்று என்று கருதப்படுகிறது. ஐம்பத்து ஆறு பேர்கள் நோயினுலும் காயம் பட்டும் இறந்திருக்கக் கூடும். தப்பித்துக் கொள்ள முடியாதவர்கள் மட்டுமே கப்பல்களில் புகாமல் கோட்டையில் விடப்பட்டனர் என்பதும் சிந்திக்கப் பாலது* ஆனுல் இறந்தவர் எண்ணிக்கை எவ்வாறிருந்த போதிலும் அத்துயர நிகழ்ச்சியே ஏற்படவில்லை என்று கூறுவது பொருந்தாதது என்பாரும் உளர். ஹால்வெல் முழுப் பொய்யைக் கூறுகிருர் என்பதைச் சிலர் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள், சில முடங்கல்களில் கிளைவ் அந்நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிருர் என்றும் சுட்டிக் காட்டுகின்றனர். அக்காலத்திய வரலாறுகளில் குறிக்கப்பெறவில்லை என்ற காரணத்துக்காக அந்நிகழ்ச்சி ஏற்படவே இல்லை என்ற முடிவுக்கு வர அவர்கள் இணங்கவில்லை. தவிர டச்சுக்காரர் அந்நிகழ்ச்சி பற்றிச் சான்று பகர்கின்றனர். ஆயினும் சிராஜ்-உத்-தௌலா அக் கொடுமைக்குக் காரணமல்லர் என்றும் நம்பப்படுகிறது. ஆனுல் இது சம்பந்தமான குற்றவாளிகளை அவர் தக்கபடி தண்டிக்கவில்லை.

---

* *6*, பக். *62*

பகுதி 13

வங்காளத்தில் கிளைவ்
பிளாசி, பிதேரா போர்கள்

நவாப்புடன் உடன்படிக்கை: கல்கத்தாவை ஆங்கிலேயர் இழந்த செய்தி சென்னையை எட்டியவுடன் அங்கிருந்து கிளைவும் வாட்சனும் வங்காளத்துக்குப் புறப்பட்டனர். 1756-ம் ஆண்டின் முடிவில் அவர்கள் வங்காளம் வந்து சேர்ந்தனர். கிளைவின் படை கல்கத்தாவுக்குப் போகும்போழுது வழியிடை மறித்த நவாப்பின் துருப்புக்களை எளிதில் தோற்கடித்துக் கல்கத்தாவை மீட்டு (2—1—1757) ஹுக்ளி நகரைக் கொள்ளையிட்டது. நவாப், உடன்படிக்கையை நாடினர். அதன்படி ஆங்கிலேயர் முதலில் பெற்றிருந்த உரிமைகளை உறுதி செய்தார்; தாம் ஆங்கிலேயரிடமிருந்து கொள்ளை அடித்த அனைத்தையும் திரும்பி அளிக்க இணங்கினர்; ஆங்கிலேயர் தம் விருப்பம் போல் கல்கத்தாவைக் காவற்படுத்திக் கொள்ளலாம்; வங்காளம் முற்றிலும் வழங்கும்படி அவர்கள் ரூபாய் நாணயங்களும் அடிக்கலாம். இருட்டறை நிகழ்ச்சியுடன் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைத் தண்டிப்பது பற்றி அவ்வுடன்படிக்கையில் எதுவும் இல்லாதிருப்பது நோக்கத் தக்கது. அப்பொழுது கிளைவின் நிலைமை பெரும் இடையூறு கட்கு உட்பட்டிருந்தது என்பதை அது காட்டுகின்றது.* அவ்வமயம் ஏழாண்டுப்போர், ஐரோப்பாவில் தொடங்கியிருந்தபடியால் நவாப், பிரெஞ்சுக்காரருடன் சேர்ந்துகொள்ளாமலிருக்க வேண்டுமென்பதை கிளைவ் விரும்பியதாகவும் கூறப்படுகிறது.

சந்திரநாகூரைக் கைப்பற்றுதல் (1757): கிளைவும் வாட்சனும் நவாப்பின் உத்தரவு பெற்றுச் சந்திரநாகூ

---

* *81, பக். 135*

ரைத் தாக்கிக் கைப்பற்றினர். பிரெஞ்சியருக்கு அதனுல் பல இடையூறுகள் ஏற்பட்டன. அவர்கள் ஒடுக்கப்பட்ட தால் நவாப் தமக்கும் பெரிய இடையூறு ஏற்படும் என்பதைக் காலங்கடந்தபின் உணர்ந்தார். பின்னர் பிரெஞ்சியரின் நட்பை நாடித் தக்கணத்திலிருந்த புஸ்ஸியை உதவிக்கு அழைத்தார். ஆங்கிலேயர், தம்மைத் திடீரெனத் தாக்குவர் என்ற அச்சம் அவருக்கு இருந்தது.

ஓமிச்சந்து ஏமாறுதல் : அலிவர்திகான், அவர் காலத்தில் இந்துக்களுடன் ஓரளவு அன்புடன் நடந்துகொண்டார். ஆனுல், சிராஜ்-உத்-தௌலா அக்கொள்கையைப் பின்பற்றவில்லை. மேலும் அவர் தம்மைப் பலர் வெறுக்குமாறு நடந்துகொண்டார் ; அலிவர்தியின் மைத்துனரான மீர்ஜாபரை அவர் வகித்துவந்த பக்ஷி பதவியினின்று நீக்கிவிட்டார். 1756-ல் அவர் தமக்குப் போட்டியாக இருக்கக்கூடிய தமது உறவினரான **ஷௌக்கத் ஜங்** என்பாரைக் கொலை செய்தார். அதற்குப்பின் நவாப்பின் தன்மையிலே ஒரு இழிவான மாறுதலைக் காண்கிறேம். முர்ஷிதாபாத் பெருஞ்செல்வர் பலர் அவரை வெறுத்தனர்; அவரை நீக்கிவிட்டு, மீர்ஜாபரை நவாப்பாக்கச் சதி செய்தனர். கிளைவின் உதவியைச் சதி செய்வோர் நாடினர். இவ்வாறு ஆங்கிலேயர் தமது நண்பராயிருந்த நவாப்புக்கு எதிராக, சதி செய்வோருக்கு உதவவேண்டியதாயிற்று. நெறிதவறின வழியில் முதன் முதல் அடியிடவே பின்பு பல தவறுகளையும் ஆங்கிலேயர் இழைக்க நேரிட்டது. மீர்ஜாபருக்கும் ஆங்கிலேயருக்கும் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி ஆங்கிலேயரின் பழைய உரிமைகள் யாவற்றையும் மீர்ஜாபர் உறுதி செய்தார். சில புதிய உரிமைகளையும் வழங்கினுர். ஆங்கிலேயர் இழந்தவற்றை அவர்களுக்கே திருப்பிக்கொடுக்க உடன்பட்டார். கல்கத்தாவில் அவர்கள் ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டார் ; டாக்காவிலும் காஸிம்பஸாரிலுமிருந்த பண்டகசாலைகளைக் காவற்படுத்தும் உரிமையையும் அளித்தார். ஓடிப்போன பிரெஞ்

* ஷெ பக். 138

சியரின் பண்டகசாலைகளை ஆங்கிலேயரிடம் ஒப்புவிக்கவும் இணங்கினர். ஆங்கிலேயர் படையை அமைப்பதற்காகச் சில நிலப்பகுதிகளையும் பெற்றனர். வங்காளத் தலைநகரில் ஒரு ஆங்கிலேய "ரெஸிடென்ட்" இருப்பதற்கு மீர்ஜாபர் உடன்பட்டார். பிரெஞ்சுக்காரரை அம்மாகாணத்தில் தங்க விடுவதில்லை எனவும் வாக்குறுதி அளித்தார். ஆலோசனைக்குழு உறுப்பினரும் பிறரும் சிறந்த பரிசு களைப் பெற்றனர். ஆங்கிலேயருக்கும் சதிகாரருக்கு மிடையே மத்தியஸ்தராக அமீன்சந்த் (அல்லது ஒமிச் சந்து) செயலாற்றினர். சதி ஆலோசனையினின்று அவரை விலக்க முயற்சி நடந்தது. அதை அறிந்த அவர் சூழ்ச்சியைப்பற்றி சிராஜ்-உத்-தௌலாவுக்கு அறி வித்துவிடுவதாகவும் அங்ஙனம் செய்யாமலிருக்கப் பெரும் பணம் கைக்கூலியாகக் கொடுக்கப்படவேண்டு மென்றும் கூறினர். செயல் நிறைவேறும் வரை ஒமிச்சந்தை அடக்கிவைத்திருக்க வேண்டியது இன்றியமையாத தாயிற்று. ஒமிச்சந்த், நவாப்பின் கருவூலப்பொருளில் 5 சதவீதம் தமக்குக் கைக்கூலியாக வேண்டுமென்று கேட்டார். கிளைவ் இருதலைப்பட்ட உடன்படிக்கை முறையை மேற்கொண்டு வஞ்சகமாக ஒமிச்சந்தை ஏமாற்றத் திட்டமிட்டார். அதன்படி நகல் பத்திரத்தில் ஒமிச்சந்தின் தொகையைப்பற்றி எழுதியிருக்க, மூலபத் திரத்தில் அத்தகைய நிபந்தனை குறிக்கப்படவில்லை. வாட்சன் நகலில் கையொப்பமிட மறுத்துவிட்டார். ஆதலால் அவர் கையெழுத்தைப் போல வேருெருவர் கையொப்பமிட்டார். இந்த மோசம் கிளைவினுல் செய்யப் பட்டதென்பர். கிளைவின் மீது சாற்றப்பட்ட குற்றங்களில் இது முக்கியமான ஒன்ரும். தற்காப்பை எண்ணி கிளைவ் அவ்வாறு செய்தது மன்னிக்கத்தக்க குற்றமே என்று சிலர் கூறுவர். இங்கிலாந்தில் நடந்த விசாரணையின் போது கிளைவ், தம் செயல் முறையானதே என்பதை வற்புறுத்தினர். சூழ்நிலையை ஒட்டித் தாம் தக்கவாறு நடந்துகொண்டதாக அவர், தம் செயலுக்கு நீதி காட்டினர். ஒமிச்சந்தைப் போன்ற போக்கிரியை நூறு

முறைகள் ஏமாற்றினுலும் அதில் தவறில்லை என்பது கிளைவின் கருத்து. ஆனுல் அவர் செயல் நேர்மைக்கு முரணுனதென்பதில் ஐயமில்லை. 18-ம் நூற்ருண்டில் ஆங்கிலேயச் சட்டப்படி, கள்ளக் கையொப்பமிடுதல் ஒரு பெருங்குற்ற மாகுமென்றும் ஈண்டுக் குறிப்பிடத் தக்கது.

பிளாசிப்போர் (23-7-1757) : ஆங்கிலேயர், மீர்ஜா பருடன் செய்துகொண்ட உடன்படிக்கைப்படி சிராஜ்-உத்-தௌலாவைத் தாக்க முற்பட்டனர். கிளைவ், 3200 போர் வீரர்களுடன் முர்ஷிதாபாத்தை நோக்கிச் சென்ருர் அவர்களில் 800 பேர் ஐரோப்பியர் ; பாகீரதி ஆற்றைக் கடந்த கிளைவின் படை முர்ஷிதாபாத்துக்கு அருகில் உள்ள பிளாசி என்னுமிடத்துக்கு சென்றது. ஏறத்தாழ 50,000 வீரர்களைக்கொண்ட நவாப்பின் படை, பகைவரை எதிர்த்தது ; ஆங்கிலேயர்மேல் வெடிகுண்டுகளை பொழிந் தது. கிளைவுக்குத் தொடக்கத்தில் வெற்றியைப் பற்றி மிக்க நம்பிக்கை இல்லை. ஆனுல் விரைவில் நவாப் பின் படையில் குழப்பத்தை விளைத்தனர் ஆங்கிலேயர். நவாப் தலைநகருக்கு விரைந்து ஓடினுர். அவரது படை சிதறுண்டது. நவாப் படையின் பெரும்பகுதிக்குத் தலை வராயிருந்த மீர்ஜாபர், தம் தலைவருக்குத் துரோகம் செய்த தால் ஆங்கிலேயர் அதிக நட்டமெதுவு மின்றி எளிதில் வெற்றி பெற்றனர். மீர்ஜாபரை கிளைவ் வங்காள நவாப் ஆக்கினுர்.

போரின் விளைவுகள் : நவாப் மீர்ஜாபரின் மகனுன மீரான், சிராஜ்-உத்-தௌலாவைக் கொலை செய்தார். இராணுவ சம்பந்தமான வகையில் பிளாசிப் போர் பெருஞ் சிறப்பு வாய்ந்ததன்று. ஆனுல் அதன் அரசியல் விளைவு கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. புதிய நவாப் ஆணை செலுத்தத் தொடங்கிய போதிலும் அவரும் அவர் பின் வந்தோரும் ஆங்கிலேயருக்கு அடங்கிய கைப்பாவை களாகவே இருந்தனர். வங்காளத்தில் கிளைவின் அதி காரம் மேலோங்கத் தொடங்கியது. அம்மாகாணத்தில் ஆங்கிலேயரின் அரசியல் அதிகாரம் பிளாசிப் போரி

லிருந்து ஏற்பட்டதென்று கூறலாம். இருபத்து நான்கு பர்காணங்கள் என்ற பகுதியில் சமீந்தார் உரிமைகளை, மீர்ஜாபர் ஆங்கிலேயருக்கு வழங்கினர். இரண்டு ஆண்டுகட்குப் பின் அப்பகுதி "கிளைவின் ஜாகீர்" ஆயிற்று. அதனால் ஆண்டுக்கு 30,000 பொற்காசுகளை (பவுன்கள்) நிலவரியாக ஆங்கிலேயர் பெற்றனர். பிறகு அப்பகுதி, கம்பெனியின் நேராட்சிக்கு உட்பட்டது முகலாயப் பேரரசரும் அதை உறுதி செய்தார். 1785 வரை, கிளைவின் பிரதிநிதிகள் ஜாகீரின் வருமானத்தைப் பெற்றுவந்தனர். முர்ஷிதாபாத் கருவூலத்தில், எண்ணியவாறு அவ்வளவு பணமில்லை. நான்கு கோடி பொற்காசுகளை (பவுன்கள்) மீர்ஜாபர் எதிர்பார்த்திருந்தார். ஆனால் அதில் 15 லட்சம் காசுகள் மட்டுமே இருந்தன. அவர் ஆங்கிலேயருக்குப் பல வகைகளில் கொடுக்க வேண்டிய தொகையே 27 லட்சத்துக்கு மேலாகும். ஆகவே சிறிது சிறிதாக ஆங்கிலேயருக்கு அவர் பொருள் கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. கிளைவுக்கு மட்டும் 234,000 பொற்காசுகள் கிடைத்தன. ஆலோசனைக் குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும் 50,000 பவுன்கள் முதல் 80,000 பவுன்கள்வரைப் பெற்றனர்.

கிளைவ், கவர்னராகப் பணி புரிதல் : மீர்ஜாபரின் ஆட்சி வலிமையற்றதாகும். அவருடைய அறிவற்ற சில செயல்களுக்காக முகம்மதியப் பெருஞ்செல்வர் அவரை இகழ்ந்தனர். அவருக்குக் கிளைவின் உதவி இன்றியமையாததா யிருந்தது. நவாப்புக்கும் அவருடைய தலைமை அலுவலாளருக்குமிடையே விளைந்த சச்சரவுகளில் கிளைவ் தலையிட்டுவந்தார். 1757-ம் ஆண்டு வங்காளப் புரட்சியில் தம்முடன் ஒத்துழைத்த இந்துக்களை அவர் ஆதரித்தார். 1758-ல் அவர் வில்லியம் கோட்டையின் கவர்னரானர். அவ்வமயம் அலிகவுஹர் என்ற முகலாய இளவரசர், (இவரே பின்னர் II-ம் ஷா ஆலம் 1759-1806 எனப் பட்டம் பெற்றவர்) பீஹாரில் படையெடுத்துப் பாட்னவை முற்றுகையிட்டார். ஆனல்

கிளைவ் அவரை முறியடித்து விரட்டினூர். தில்லியில் முதலமைச்சராக இருந்த II-ம் காஸிஉத்தீன் அச் செயலுக்காகக் கிளைவைப் பாராட்டினூர். முகலாய இளவரசரை அவர் வெறுத்தமையே அதற்குக் காரண மாம். பிளாசிப் போருக்குப் பிறகு கிளைவ், 6000 குதிரை வீரர்களுக்குத் தலைவரான மான்சப்தார் ஆனூர். 1759-ல் அவருக்கு ஒரு ஜாகீர் கிடைத்தது. தில்லி அரசியலார் அவரைத் திவான் ஆக அமர்த்த விழைந்தனர். ஆனூல் அப்பொறுப்பை ஏற்றுக்கொள்ள கிளைவ் அவமயம் இணங்கவில்லை. அச்செயல் அவருடைய அரச தந்திர ஆற்றலைக்காட்டுகிறது.

பிதேராப் போர் (25-11-1759) : வங்காளத்தி லிருந்த டச்சுக்காரர், கிளைவின் அதிகாரவளர்ச்சியைக் கண்டு பொருமை கொண்டனர். ஆகவே, மீர்ஜாபருடன் சேர்ந்து ஆங்கிலேயரை அழிக்க அவர்கள் சூழ்ச்சி செய்ய லாயினர். படேவியாவிலிருந்து அவர்களுக்கு உதவி கிடைத்தது. சில ஆங்கிலக் கப்பல்களை டச்சுக்காரர் கைக் கொண்டனர். கிளைவ், காலந்தாழ்த்தாமல் போர் தொடங் கினூர். படைத்தலைவர் வில்சனும் கர்னல் போர்டும் (Forde) டச்சுக்காரரை முறியடித்து சின்சுராவுக்கு அருகிலுள்ள பிதேரா என்ற ஊரில் உறுதியான வெற்றியைப் பெற்றனர். இந்தியாவில் நடந்த சிறப்பு மிக்க போர்களில் இதுவும் ஒன்ரும். தோல்வியுற்ற டச்சுக்காரர் நட்ட ஈடு தந்தனர்; அரசியலில் ஆங்கிலே யருக்கு இடையூறு செய்வதில்லை என்றும் முடிவு செய் தனர். அவ்வெற்றிக்குப்பின் மூன்று மாதங்கள் கழிந்த வுடன் கிளைவ் இங்கிலாந்துக்குப் பயணமானூர் (1760).

கடலாதிக்கத்தின் சிறப்பு : வங்காளத்தில் ஆங்கிலே யரின் ஆட்சி வேரூன்றுவதற்குக் கிளைவின் முயற்சிகள் காரணமாகும் என்பது உண்மையே. எனினும் ஆங்கி லேயர் கடல் ஆதிக்கம் பெற்றிராவிடின் அவ்வெற்றி அவர்களுக்குக் கிடைத்திருக்க முடியாதென்றே கூறலாம். (பிளாசிப் போருக்குப் பிறகு உயிர்நீத்த) வாட்சன்

நிகழ்த்திய கடற்போர்கள் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந் தன ஆகும். கல்கத்தாவை மீட்பதிலும் சந்திரநாகூரைக் கைப்பற்றுவதிலும் அவர் தம் திறமையைக் காட்டினுர். அவர், நீண்டகாலம் கடற்படை அலுவலாளராகப் பணி யாற்றியவர் ; நற்பண்பு வாய்ந்தவர். இறுதியில் டச்சுக் காரர் இந்நாட்டில் வீழ்ச்சியடைய ஆங்கிலக் கப்பற் படையே சிறந்த காரணமாயிற்று. அதே காலத்தில் ஐரோப்பாவில் நடைபெற்ற ஏழாண்டுப்போரில் ஆங் கிலேயர் வெற்றி பெறுவதற்கு அவர்களுடைய கப்பற் படை வலிமை முக்கிய காரணமாகும் என்பதும் ஈண்டு குறிக்கத்தக்கது.

கிளேவ் தாய் நாடு சேரல் : இராணுவத்துறையிலும் அரசியலிலும் சிறப்பான சில செயல்களைப் புரிந்தபின், 1760-ம் ஆண்டு ஜுலை மாதத்தில் கிளேவ் இங்கிலாந் திற்குச் சென்ருர். அவ்வமயம் அவரிடம் மிகுந்த செல்வ மிருந்தது. ஆண்டுக்கு 40,000 பொற்காசுகளுக்குமேல் அவருக்கு வருமானம் கிடைத்துவந்தது. அரசரும் கம் பெனியாரும் அவருக்குச் சிறப்பான வரவேற்பளித்தனர். 1761-ல் அவர் பார்லிமெண்ட்டின் உறுப்பினரானுர். வங் காளத்தில் ஆட்சிமுறைச் சீர்கேடு தோன்றியதாக மீண்டும், அவர், வில்லியம் கோட்டையின் கவர்னராகப் பதவிபெற்ருர். 1764-ம் ஆண்டில் இங்கிலாந்தினின்று புறப்பட்ட அவர் அடுத்த ஆண்டில் கல்கத்தா வந்து சேர்ந்தார். இனி, கிளேவ் இல்லாத காலத்தில் வங்காளத் தின் நிலையைக் கவனிப்போம்.

பகுதி 14

மீர்ஜாபர் ; மீர்காசிம் ; பக்ஸார் போர்

மீர்ஜாபரின் வீழ்ச்சி (1760): கிளைவ், 1760-ல் வங்காளத்தை விட்டுச்சென்ற பிறகு அவர் பின்பற்றிய பணம் பறிக்கும் கொள்கையை ஆங்கிலேயர் பின்பற்றினர். ஆனால் அதைச்சீராக அமைக்கத்தக்க ஆற்றல் வாய்ந்த கிளைவ் அங்கு இல்லாததால் பல இடையூறுகள் ஏற்பட்டன. II-ம் ஷாஆலம் பீஹாரிலும் வங்காளத்திலும் புதிய படையெடுப்புகளை நிகழ்த்தினர். ஆனால் ஆங்கிலேயர் அவர் வெற்றி பெருமல் தடுத்துவிட்டனர். மீரான் இறந்துவிட்டபடியால் மீர்ஜாபருக்குப் பிறகு யார் நவாப் ஆவது என்ற கேள்வி பிறந்தது. இடைக்கால கவர்னராகப் பதவி வகித்த ஹால்வெல், மீர்ஜாபரை வெறுத்தார். நவாப், டச்சுக்காரருக்கும் ஷா ஆலத்துக்கும் ஆதரவு காட்டியதால் அவர்மீது ஆங்கிலேயர் சினங்கொண்டனர். அவர் தொடர்ந்து பதவி வகிப்பதையே ஹால்வெல் விரும்பவில்லை. பின்போந்த கவர்னர் வான்ஸிட்டார்ட் (Vansittart) தம் முன்னவரின் கொள்கையையே பின்பற்றி, நவாப்பின் மருமகனுகிய மீர்காசிம் என்பாருடன் ஓர் உடன்பாடு செய்துகொண்டார். அதன்படி மீர்ஜாபர் தமது பதவியை இழக்கநேர்ந்தது. மீர்காசிம் நவாப் ஆனுர் (1760). கல்கத்தாவில் தங்கியிருந்த மீர்ஜாபர் ஆங்கிலேயரின் பாதுகாப்பைப் பெற்ருர். அவரைப் பதவியினின்று விலக்கியது நேர்மையற்ற செயல் என்று சில ஆங்கிலேய அலுவலாளர்களே கருதினர்.

நவாப் மீர்காசிம் (1760 – 3): பாரசீகத்தில் தோன்றிய ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மீர்காசிமின் தந்தை வங்காளத்தில் ஒரு ஜாகீர்தாராக இருந்தார். மீர்ஜாபர் பட்டத்துக்கு வந்தபின் அவருடைய மருமகனை மீர்காசி

மின் செல்வாக்குப் பெருகியது. காசிம், கல்வியறிவு வாய்ந்தவர். கணிதத்திலும் சோதிடத்திலும் அவருக்குச் சிறந்த பயிற்சி இருந்தது. இவரே, பிளாசிப் போருக்குப் பிறகு சிராஜ் உத் தௌலாவைத் துரத்திச் சென்று அவரைச் சிறைப்படுத்தினர். அப்பழைய நவாப்பைச் சேர்ந்த பெண்டிரின் அணிகலன்களை எல்லாம் கைப் பற்றிக் கொண்டார். அவர் சில காலம் ரங்கபுரி (வங்காளம்) யின் பௌஜ்தாராகப் பணியாற்றினர். மீர்ஜாபரின் வீழ்ச்சி நிலையைக் கண்ட மீர்காசிம் தாம் அதனுல் நற் பயனடைய முயன்ருர். ஆங்கிலேயரின் உதவியையும் நாடினர். தாம் பதவி பெறுவதற்காகத் தமது மாமனரைக் கொலைபுரியவும் அவர் தயாராக இருந்தார். 1760-ம் ஆண்டு அக்டோபர் மாதப் புரட்சியின் விளைவாக மீர்காசிம் நவாப் ஆனர். உடன்படிக்கையின்படி அவர் ஆங்கிலேய ருக்குக் கொடுக்கவேண்டிய கடன்களைக் கொடுத்ததுடன் பல பரிசுகளையும் வழங்கினர். 2 லட்சம் பொற்காசுகள் வரை, ஆங்கில ஆலோசனைக் குழுவினர் பரிசாகப் பெற் றனர். ஆங்கிலப் படையின் பராமரிப்புக்காக நவாப்பை எதிர்பார்க்காமல் இருக்க ஆங்கிலேயருக்கு, வர்த்தமான புரம் (BURDWAN), சிட்டகாங், மிதுனபுரி என்ற மூன்று மாவட்டங்களையும் புதிய நவாபு அளித்தார். இவ்வேற் பாடு பிற்காலத்திய வெல்ஸ்லியின் பாதுகாப்பு முறை உடன்படிக்கையை ஓரளவு ஒத்துள்ளது. தொடக்கத்தில் மீர்காசிமின் ஆட்சி முறை சிறப்புற்றிருந்தது. நிதி நிலைமையை ஒழுங்கு செய்யப் பல சீர்திருத்தங்களை களை அவர் நிறைவேற்றினர். செலவுகளைக் குறைக்கப் பல முறைகளைக் கையாண்டார். தமது சொந்தச் செலவு களையும் குறைத்துக்கொண்டார், மிகுந்த செலவுக்கு ஒரு காரணமாயிருந்த விலங்குக் காட்சி சாலையைக் கலைத்தார். சில சமீந்தார்களின் நடவடிக்கைகளை வரம்புக்குட்படுத் தினர். ஆங்கிலேயரின் உதவி கொண்டு பாட்னுவிலும் பீஹாரிலும் தமது அதிகாரத்தை நிறுவினர்.

ஆங்கிலேயருடன் போராட்டம் (1762–3): மீர்காசிம் தமது சீர்திருத்தங்களை நிறைவேற்றி வருகையில்

கம்பெனி ஊழியர்களால் அவருக்கு இடையூறுகள் விளைந்தன. உப்பு, வெற்றிலை, புகையிலை முதலிய பொருள்களில் உண்ணாட்டு வாணிகம் புரிந்து வந்த ஆங்கிலேயர் தாம் செலுத்த வேண்டிய வரிகளை நவாப்புக்குக் கொடுக்கவில்லை. தமக்கு அந்த உரிமை இருப்பதாக அவர்கள் முறையற்ற வகையில் வாதாடினர். நவாப், முதலில், ஷா ஆலமும் ஆங்கிலேயரும் ஒன்று சேர்வதைத் தடுப்பதில் தம் கருத்தைச் செலுத்தினார். பிறகு, கம்பெனி ஊழியர்கள் தனித்த முறையில் வாணிகஞ் செய்வதைத் தடுக்க வேண்டுமென்பது அவருடைய திட்டம். 1761-ம் ஆண்டின் முடிவில், பாட்னாவின் ஆங்கிலப் பண்டகசாலையின் தலைவராக எல்லிஸ் என்பார் அமர்ந்தபின் நவாப்புக்கும் ஆங்கிலேயருக்கு மிடையே நிலவிய உறவு மிகுதியாகக் கேடுற்றது. அடுத்த ஆண்டில் நவ்வாப், தம் தலைநகரை முர்ஷிதாபாத்திலிருந்து மங்கீர் என்னுமிடத்துக்கு மாற்றி அதை நன்கு காவல் செய்யமுற்பட்டார். முகலாயப் பேரரசர், மீர்காசிமுக்கு "நவாப் அலி ஜா" என்ற பட்டத்தை வழங்கினார். வான்ஸிட்டார்ட்டும் வாரன் ஹேஸ்டிங்ஸூம் (பின்னவர், 1761-ல் ஆலோசனைக் குழுவின் உறுப்பினராயிருந்தார்) 1762-ம் ஆண்டின் முடிவில் மீர்காசிமிடம் சென்று ஒரு உடன்பாடு செய்துகொண்டனர். அதன்படி ஆங்கிலேயர் 9 சதவீதம் உள்நாட்டு வாணிக வரியைச் செலுத்தவேண்டுமென்றும் (இந்தியர் 40 சதவீதம் உப்பு வரி செலுத்தினர்) சச்சரவுகளைத் தீர்த்து வைக்கும் உரிமை நவாப்புக்கு உண்டு என்றும் முடிவாயிற்று. ஆனால் கல்கத்தாவிலிருந்த ஆலோசனைக் குழுவினர் அவ்வுடன்பாட்டை ஏற்க மறுத்தனர். அவர்கள் மனம் போரையே நாடியது. கவர்னர் கைக்கூலி பெற்றுக்கொண்டு ஆங்கிலேயரின் உரிமைகளை அழிப்பதாக அவர்கள் கூறினர். நவாப்பின் பொன்னாசை நேபாளத்தின் மீது படையெடுக்க அவரைத் தூண்டியது. ஆனால் அப்பேராசை பெருநட்டத்தில் முடிந்தது (1763). பின்னர் நவாப், உள்நாட்டுப் பொருள்கள் மீது இருந்த வரிகளை இரண்டு ஆண்டுக் காலத்துக்கு நீக்கினார். ஆங்கி

லேயர் அதனால் அடங்கிவிடுவர் என்று அவர் கருதினர். ஆனால் முடிவில், சிக்கல்களைத் தீர்க்க போரைத் தவிர வேறு வழி இல்லாமற் போயிற்று. எல்லிஸ் பாட்னாவைக் கைப்பற்றினர். நவாப், கட்டுப்பாடுகளற்று உரிமையுடன் இருக்கவே வேண்டினர். ஆங்கிலேயரோ அப்பேரவா வைக் குலைக்கும் வகையில் பல வாணிக உரிமைகளைக் கோரிவந்தனர். ஆகவே இருசாரார்க்கும் போர் மூண்டது.

மீர்ஜாபர், மீண்டும் நவாப் ஆதல் (1763) : போரில் நவாப்பின் படையைப் பல இடங்களில் ஆங்கிலேயர் முறியடித்தனர். அதன் விளைவாக, மீர்ஜாபரை மீண்டும் நவாப் ஆக்கினர். அவரிடமிருந்துத் தாம் விரும்பிய உரிமைகளைப் பெற்று மகிழ்ந்தனர். அவருடைய சபையில் நிலையாக ஒரு ஆங்கிலேய "ரெஸிடெண்ட்" இருக்க வேண்டுமென்றும் முடிவு செய்தனர். நந்தகுமார் என்பார் தலைமை அமைச்சரானர். நவாப்பிடமிருந்து பொருள் பறிப்பதில் வாரன் ஹேஸ்டிங்ஸும் பங்கு கொண்டார். மீர்காசிம் பாட்னாவுக்கு ஓடினர். மங்கீர் பகைவர் வசப்பட்ட தென்பதை அறிந்தவுடன் அவர், தாம் சிறைப்படுத்தி யிருந்த ஐரோப்பியர்களைக் – எல்லிஸ் உட்பட ஏறத்தாழ 200 பேர் – கொலைசெய்து விடுமாறு ஆணையிட்டார். அவரைத் துரத்தி வந்த ஆங்கிலேயர் பாட்னாவைக் கைப் பற்றினர். மீர்காசிம் அயோத்திக்குச் சென்றுத் தம்மைக் காப்பாற்றிக்கொண்டார்.

மீர்காசிமின் இயல்பு : நவாப் மீர்காசிம், தன்மையில் மீர்ஜாபரைப் போன்றவரல்லர். அவரிடம் ஆற்றலும் இருந்தது ; பேரவாவும் இருந்தது. ஆங்கிலேயருக்குக் கட்டுப்பட்டிருப்பதை அவர் விரும்பினரில்லை. ஆட்சி முறையில் அவருடைய திறமை பாராட்டத்தக்கது. சீர் கேடுகளை நீக்கி அரசியலை நடத்தக்கூடிய ஆற்றல் அவருக்கு உண்டு. அவர் நிதி நிலைமையைச் சீர்படுத்தி னர் ; வருவாய், முறைவழங்கல் முதலிய செய்திகள் தொடர்பான துறைக்களங்களை அவர் சிறந்த முறையில் மாற்றி அமைத்தார் ; பிரபுக்களின் அதிகாரங்களை ஒடுக்

கிறுர். இவை யாவும் எளியசெயல்கள் அல்ல.* பொதுப் பணிகள் ஆற்றும் ஆர்வம் அவரிடமிருந்தது. பிறரைப் பற்றி உணர்ந்து கொள்ளும் அறிவுக் கூர்மையும் பிற ருடைய குறைபாடுகளைத் தம் நலனுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் தந்திர முறையும் அவர்பால் விளங்கின. அவர், கம்பெனிப் படையினின்று விலகியோரைத் தம்கீழ் வேலையி லமர்த்தித் தம் படையினருக்கு ஐரோப்பிய முறைப்படி போர்ப் பயிற்சி அளித்தார்; வெடிமருந்து, துப்பாக்கிகள் முதலியன செய்வதற்கு போர்க்கருவிச்சாலைகளை ஏற் படுத்திஞர், மங்கீரில் அவர் உற்பத்தி செய்த போர்க் கருவிகள், இறக்குமதி செய்யப்பட்ட ஆயுதங்களைவிட மதிப்பில் குறைந்தவைஅல்ல. போர்முறையைப் பொறுத்த வரை, மீர்காசிம், 18-ம் நூற்ருண்டின் இந்தியச் சிற்றரசர் களுக்கு ஒரு முன்னேடியாக விளங்கிஞர். அறிவாற்றல் பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சிக்காகவும் அவர் எடுத் துக்கொண்ட முயற்சிகள் குறிப்பிடத் தக்கன. ஆனுல் மீர் காசிம், தைரியம் வாய்ந்த ஒரு சிறந்த போர் வீரர் அல் லர். தனித் தலைமை பூண்டு நிலைமைகளைச் சமாளிக்கும் திட்பம் அவரிடமில்லை. கொடுந்தன்மை பிறரை ஐயுறும் சஞ்சல மனப்பான்மையும் அவர்பால் மிளிர்ந்தன. பாட்ளு வில் அவர் நிகழ்த்திய கொலை மறக்கற்பாலதன்று, சில சமயங்களில் பேய் போல் கொடுமை இயற்றவும் அவர் தயங்கியதில்லை. அவர் தம்மிடமிருந்த இந்தியக் கைதி களை, மணல் மூட்டைகளுடன் பிணைத்து கங்கை ஆற்றில் தள்ளிக் கொன்ருர். முர்ஷிதாபாத் மகுடத்திற்காகத் தம் மாமனுரையும் கொலை செய்ய அவர் முன் வந்ததை முன் னரே குறிப்பிட்டோம். முறைப்படியும் நேர்மையற்ற வழிகளாலும் அவர் தமது பொருள் வளத்தைப் பெருக்கி ஞர். சமீந்தார்களைக் கசக்கிப் பிழிந்தார். அவர்களோ குடியானவர்களைத் துன்புறுத்தினர். சிற்றின்பத் துறை யில் எளியராயிருந்ததால் அவர் உடல் வலிமை கேடுற் றது. திறமைக் கூறுகள் பலவற்றைப் பெற்றிருந்த

---

* *16*, பக். *309—10*.

போதிலும் அவரை அக்காலத்தவர் பெரும்பான்மையும் வெறுத்தனர். ஆயினும், அவர் தோல்விக்கு, கல்கத்தா வின் ஆங்கிலேய ஆலோசனையாளரில் பெரும்பான்மை யினரின் பேராசையும் இரக்கமற்ற தன்மையும் காரண மாகும் என்பதை மறுப்பதற்கில்லை. பக்ஸார் போர்க்களத் திலிருந்து தப்பியோடிய பிறகு மீர்காசிம், நீண்ட காலம் நாடு கடந்து அலைந்து திரிந்தார். அச்சமயத்திலும் அவர், சோதிடத்தில் தமக்கு இருந்த நம்பிக்கை காரணமாக ஓர ளவு மன அமைதி பெற்றார்.

பக்ஸார் போர் (1764) : அயோத்திக்கு ஓடிய மீர் காசிமும், அந்நாட்டு நவாப் ஷுஜா உத்தௌலாவும், (1754 - 1775) முகலாயப் பேரரசர் II-ம் ஷா ஆலமும் (1759 - 1806) ஒன்று சேர்ந்து ஆங்கிலேயர் வசமிருந்த பாட்னாவின் மேல் படை யெடுத்தனர். ஆனால் அதை அவர்களால் கைப்பற்ற முடியவில்லை. ஆகவே அவர்தம் படைகள் பீஹாரிலுள்ள பக்ஸாருக்குப் (பாட்னாவுக்கும் வாரணாசிக்கு மிடையில்) பின் வாங்கின. ஆங்கிலப் படைத் தலைவர் மேஜர் மன்ரோ, அப்படைகளை, 1764-ம் ஆண்டு அக்டோபர் மாதம், பக்ஸாரில் அறவே தோற்கடித் தார். அயோத்தியை ஆங்கிலேயர் பாழாக்கினர். ஷுஜா உத்தௌலா ரோஹில்கண்டுக்கு ஓடிவிட்டார். மீர் காசிம் அனைவற்றையுமிழந்து வடமேற்கு இந்தியாவுக்கு ஓட்டமெடுத்தார். ஆங்கிலேயர் அலஹாபாத்தையும் சுனார் கோட்டையையும் கைப்பற்றினர். ஷா ஆலம் அவர் கள் பக்கம் சேர்ந்து அமைதி வேண்டினார். அயோத்தி மாகாணத்தில் ஆங்கிலேயர் ஆதிக்கம் நிலவியது. பக் ஸார் போரின் அரசியல் சிறப்பும் இராணுவச் சிறப்பும் குறிப்பிடத் தக்கன. படைத் துறையில் ஆங்கிலேயரே உயர்ந்தவர் என்பதை யாவரும் உணர்ந்தனர். இந்தியா வில் ஆங்கில ஆட்சிக்குக் கால்கோல் நாட்டிய இரு போர் களில் (பிளாசி; பக்ஸார்) பிளாசிப் போரை விட பக்ஸார் போரே மேலான சிறப்புடையது என்பது சில அறிஞர் களின் கருத்தாகும். பக்ஸார் போரின் விளைவுகளைக்

கிளைவ் எவ்வாறு பயன்படுத்திக் கொண்டார் என்பதைப் பிறகு பார்க்கலாம். அயோத்தி நவாப், மீர்காசிமை வங்காளச் சுல்தானாக்க முயன்றதால் பக்ஸார் போர் விளைந்தது என்று கூறுவது தவறு என்றும் முன்னவரின் தன்னலப் போக்கும் பேராசையுமே அப் போருக்குக் காரணமென்று அணிமையில் கருத்துக்கள் வெளியாகி உள்ளன. ஷுஜா உத்தௌலாவின் பேரவாவை அப்போர் சிதறடித்தது.

மீர் ஜாபரின் சாவு: மீர் ஜாபர், தாம் மீண்டும் முடி சூட்டுக் கொண்டது தவறு என்பதை உணர்ந்த பின் 1765-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் மாண்டார். கல்கத்தா ஆங்கிலேயர் அவரை, இறுதிக் காலத்தில் கருணையின்றி நடத்தி வந்தனர். அவருக்குப் பின் அவர் மகன் நிஸாம் உத்தௌலா பட்ட மேற்றார். அவர் ஆங்கிலேயருக்குக் கட்டுப்பட்ட நிலையில் இருந்துவந்தார். பெயரளவுக்கு நவாபை அதிகாரம் வகிக்குமாறு செய்து ஆங்கிலேயர் மேலும் மேலும் பணம் பறிக்கும் முறையை மேற்கொண்டிருந்தனர். தாய்நாட்டு அதிகாரிகள் கூட அம்முறையை வெறுத்தனர். அதைப் பின்பற்றலாகாது என ஆணைகளும் விடுத்தனர் (8-2-1764), ஆனால் பொருளாசையை விட்டுக் கொடுத்தல் அக்காலத்திய ஆங்கிலேயருக்கு எளிதான ஒரு செயலாக இல்லை. வாய்ப்பு இருக்கும்பொழுது வாளா விருப்பரோ?

பகுதி 15.

கிளைவின் இரண்டாம் முறை ஆட்சி ; வெளித்துறைக் கொள்கை.

அலஹாபாத் உடன்படிக்கைகள் (1765) : கிளைவ் 1765-ல் கல்கத்தாவுக்குத் திரும்பியபின் 3—5—1765 முதல் 29—1—1767 வரை இரண்டாம் முறையாக வங்காள கவர்னராயிருந்தார். அவருக்கு முன்பிருந்த வான்ஸி ட்டார்ட் முகலாயப் பேரரசருக்கு அயோத்தியைக் கொடுப் பதாக வாக்களித்திருந்ததைக் கிளைவ் அறிந்தார். அது முட்டாள்தனமான செயல் என்று அவருக்குத் தோன்றி யது. ஆகவே அதை அவர் ஏற்றுக்கொள்ளாமல் புதிய ஏற்பாடு ஒன்றை அமைக்க முற்பட்டார். அதன் பொருட்டு ஷுஜா உத்தௌலாவுடனும் சொல்லாடினர் ; அலஹா பாத்துக்குச்சென்று அயோத்தி நவாப்புடனும் முகலாயப் பேரரசருடனும் இரண்டு ஒப்பந்தங்கள் செய்துகொண்டார் அவற்றின் விளைவாக, பேரரசர் ஷா ஆலம் ஆங்கிலக் கம்பெனிக்கு வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா என்னும் மாகாணங்களின் திவானி (வரி வசூல் செய்யும் உரிமை) யைக் கொடுத்தார் (ஒரிஸ்ஸாவில் மராட்டியருக்கு உரிய ஒரு பகுதி நீங்கலாக மற்ற இடங்களில்தான் ஆங்கிலே யருக்குத் திவானி உரிமை உண்டு). வட சர்க்கார் மாவட் டங்கள் கம்பெனியாருக்கு உரியன என்பதை உறுதி செய்தார் ; ஆர்க்காட்டு நவாப்பின் உரிமை நிலையை ஏற்றுக்கொண்டார். ஆர்க்காட்டு நவாப், தக்கண சுபே தாருக்குக் கட்டுப்பட்டு அடங்கியிருக்க வேண்டியதில்லை என்றும் முடிவு செய்தனர். முகலாயப் பேரரசர் அலஹா பாத், கோரா என்ற இரண்டு மாவட்டங்களையும், ஆங்கி லேயரிடமிருந்து ஆண்டுதோறும் 26 லட்சரூபாயும் பெற் றார். மேற்கண்ட தொகை. வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா மாகாணங்களில் கிடைக்கும் வருமானத்திலிருந்து கொடுக்

கப்படவேண்டியது. ஷுஜா உத்தௌலா, அலஹாபாத், கோரா நீங்கலாக உள்ள அயோத்தி மாகாணத்தைத் திரும்பப் பெற்ருர். இதற்குப் பதிலாக அவர் கம்பெனிக்கு 50 லட்சம் ரூபாய் கொடுப்பதுமன்றி ஆங்கிலேயருடன் தற்காப்பு உடன்படிக்கை செய்து கொள்ளவும் நேர்ந்தது. வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா மாகாணங்களின் ,ஆட்சிப் பொறுப்பு வங்காள நவாப்பிடமிருந்தது. ஆனல் அப் பகுதிகளிலுள்ள ஆங்கிலேயரின் இடங்களில் நவாப் அதி காரம் செலுத்தமுடியாது. மேலும் மேற்கூறிய மாகாணங் களில் கம்பெனியார் வரி வசூல் செய்வர்; நவாபின் அரசி யல் செலவை ஏற்றுக்கொள்வதுடன் ஆண்டுதோறும் அவருக்கு ஆங்கிலேயர் 53 லட்ச ரூபாய் அளிக்கவேண்டும் (அத்தொகை 1766ல் 41 லட்சம், 1769ல் 32 லட்சம்) என்று குறைந்தது. உடன்படிக்கை சமயத்தில் அயர்கூட், கம்பெனியாரின் இராணுவ உதவியுடன் பேரரசரைத் தில்லியில் அமரச் செய்யவேண்டுமென்று கூறிய யோசனை யைக் கிளைவ் ஏற்க மறுத்துவிட்டார். மேலும், கம்பெனி யின் ஆட்சிப் பகுதிகளைக் காப்பாற்றுவதற்கும் உடன் படிக்கைகளின்படி ஆற்றவேண்டிய கடமைகளுக்கு மட்டுமே போர்செய்வதை அவர் விரும்பினுர். ஒரு பொதுவான போர்முறைக் கொள்கையை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

வெளித்துறைக்கொள்கை விளக்கம் : கிளைவ் முதன் முறை வங்காள கவர்னராக இருந்தபொழுது கம்பெனி யின் ஆட்சிப் பகுதிகளைப் பரப்பவேண்டுமென்ற கருத்தைக் கொண்டிருக்கவில்லை. மீர்ஜாபர் அளித்த 24 பர்காணங்களுடன் அமைதிபெறவே அவர்விரும்பி ஞர். வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா மாகாணங்களின் திவானியை அவர் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். அவர் இங்கிலாந்துக்குச் சென்றபிறகு கம்பெனிக்குச் சில புதிய இடங்கள் கிடைத்தன. 1765-ல் அவர் மீண்டும் இந்தியா வந்தபொழுது, அயோத்தி, வங்காள நவாப்பு களும் முகலாயப் பேரரசரும் ஆங்கிலேயருக்கு அடங்கி

யிருந்த நிலையைக் கண்டார். அந்நிலையில் தமது பழைய கொள்கையைப் பின்பற்ற இயலாதென்பதை உணர்ந்து கொண்டார். எனினும் பெரிய இராணுவ முயற்சிகளை மேற்கொண்டு நாடு கவரும் கொள்கையை அவர் அறவே புறக்கணித்துவிட்டார். தியூப்ளேக்கு மகிழ்ச்சி அளித்திருக்கக்கூடிய கொள்கை கிளைவுக்குச் சிறந்ததாகத் தோன்றவில்லை. பின்னரும் ஆங்கிலேயர் தமது ஆட்சியை வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா ஆகிய பகுதிகளைக் கடந்து பரவச்செய்வது தீமை தருவதாகும் என்ற நம்பிக்கை அவரிடமிருந்தது. அவ்வாறு பரவவேண்டுமானல் கம்பெனியின் நிலை மாறவேண்டியது இன்றியமையாததாகும் என்பது அவர் கருத்தாகும். கிளைவ், சூழ்நிலைக்கேற்ப தன்னடக்கத்துடனும் கூர்ந்த அரசியல் அறிவுடனும் நடந்து கொண்டமை, பாராட்டத்தக்கது. அவர், பேரரசரைச் சமாதானப்படுத்தியதும், அயோத்தி மாகாணத்தை நட்பு வாய்ந்த இடைப்படு(Buffer) நாடாக அமைத்ததும், தமது பேராசையைக் குறைத்துக்கொண்டதும் போற்றற்குரிய செயலாகும். கிளைவ், பேராசை கொண்டு, ஆதிக்கப்பரப்ப முயற்சியை வரம்பின்றி மேற்கொண்டிருந்திருப்பாரே ஆயின் அதனல் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் பொதுவாக ஐரோப்பிய நாடுகளிலும் அவருக்கு மிகுந்த எதிர்ப்பு ஏற்பட்டிருக்கக்கூடும். தவிரக் கம்பெனியின் நிதி நிலைமைக்கும் பெரிய இடையூறுகள் ஏற்பட்டிருக்கும். ஆனல் பிற்காலத்தில் சூழ்நிலை மாறியதால் கிளைவின் பழைய கொள்கை புதிய நிலைமைக்கு ஏற்றதாக இல்லை. கிளைவின் கொள்கை எத்துணை அளவுக்குச் சிறப்புடையது என்பது பற்றிக் கருத்து வேறுபாடு உண்டு*. எனினும் அவர் சூழ்நிலைக் கேற்பத் தமது கொள்கையை வரையறைப்படுத்திக் கொண்ட செயல் போற்றத் தக்கது. அலஹாபாத் உடன்படிக்கைகளால் அவர், செயல்முறையில் வங்காளம் பீஹார், ஒரிஸ்ஸா மாகாணங்களில் ஆங்கிலேயரின் அதிகாரத்தை

* 30, முன்னுரை. பக். 11 & 119, பக். 204.

அமைத்தார். மேலும் அவ்வாட்சி நிலைபெற்றிருப்பதற்காகத் "தலையிடாக்கொள்கை" (Non Intervention policy) யைப் பின்பற்றினர். இவைகாரணமாகவே "இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியைத் தாபித்தவர்" என்ற பெருமை கிளைவுக்கு உரியதாகிறது. இவ் விரட்டைக் கொள்கை அரசியலில் கிளைவின் நுண்மாண் நுழை புலத்தைக் காட்டா நிற்கும். திவானியைப் பெற்றதால் இந்தியாவில் கம்பெனியாரின் நிலையும் செயல்களும் ஒழுங்குற்றன. ஆங்கிலேயர், இந்நாட்டின் அமைதியை அழிக்கும் பொறுப்பற்ற அயலவர் என்ற கருத்து நிலைக்கவில்லை. திவானியைப் பெற்றதின் சட்ட முறைச் சிறப்பைப்பற்றி அறிஞர் பர்க் (BURKE) வியந்து பேசுகிறார். ஆகவே, 1765-ம் ஆண்டு, ஆங்கில - இந்திய வரலாற்றில் ஒரு திரும்பு கட்டம் என்று கருதப்படுகிறது.*

---

* *46, பக். 37.*

பகுதி 16

பிரிட்டிஷ் ஆட்சியின் எழுச்சி

எழுச்சிக்குரிய காரணக் கூறுகள்: பிரிட்டிஷ் ஆட்சியை இந்தியாவில் வேரூன்றச் செய்யும் நோக்குடன் தொடக்க காலத்தில் எந்த ஒரு குறிப்பிட்ட கொள்கையையும் ஆங்கிலேயர் பின்பற்றவில்லை என்றும் அதன் எழுச்சிக்கு எதிர்பாராத நிகழ்ச்சிகளே காரணமாகுமென்றும் கூறுவர்.* இக்கருத்தை விளக்கும் வகையில் பிளாசிப் போருக்குப் பிந்திய பத்து ஆண்டுக் காலத்தில் வங்காளத்தின் நிலைமை சான்ருகும் எனவும் கூறப்படுகிறது. அப்போருக்கு முன்பு ஆங்கிலேயர் வாணிகம் ஒன்றிலேயே கருத்தைச் செலுத்தி வந்தனர். 1757 முதல் ஏற்பட்ட வங்காளப் புரட்சிகளை எதிர்பாரா நிகழ்ச்சிகளாகவே நாம் கொள்ள வேண்டும். பொதுவாக அப்பத்து ஆண்டுக் காலத்தில் இந்தியாவின் நிலைமை ஆங்கிலேயருக்கு அனுகூலமாயிருந்தது. 1756-ல் மிகவும் வலிமை பெற்று விளங்கிய பேஷ்வா பாலாஜிராவ் பிரிட்டிஷாருடன் நேச உறவு பூண்டிருந்தது ஈண்டு நினைவு கூரத்தகும். அவர் புஸ்ஸியுடனும் துலாஜி ஆங்கிரேயுடனும் போரிட்டு வந்தார். வங்காளத்தில் கிளைவ் தமது விருப்பம் போல் செயலாற்றப் பேஷ்வாவின் இயல்முறை துணை செய்தது. அடுத்தபடியாக, 1749 முதல் 1757 வரை நிகழ்ந்த அஹமது அப்தலியின் இந்தியப் படையெடுப்புக்கள் முகலாயப் பேரரசை மெலிவுறச் செய்தன. அவருடைய ஐந்தாவது படையெழுச்சி (1759–61) அப்பேரரசைப் பெரும்பாலும் முடிவுறச் செய்தது என்றே கூறவேண்டும். மேலும் மராட்டியரின் முன்னேற்றமும் அதனல் தடையுற்றது. மூன்ருவது பானிப்பட்டுப்போர் (1761) பிரிட்டிஷ் ஆட்சியின் எழுச்சிக்கு வழி வகுத்தது. அத்துயர நிகழ்ச்சி

* *119*, பக். *203*.

அவ்வாட்சிக்கு வித்து ஊன்றியதென்றும், நல்வாய்ப்பின் விளைவாக அவ்வாட்சி வளர்ந்ததென்றும் இன்றியமையாக் காரணங்களால் அது பண்பட்டு உருவாகியதென்றும் வாரன் ஹேஸ்டிங்ஸ் சிறப்பிக்கின்றார்.* கிளைவ் அவ் வாட்சியைத் தாபித்தார். அதன் பின் அதற்கு இரு பெரும் இடையூறுகள் விளைந்தன அவற்றை நீக்கிய வாரன் ஹேஸ்டிங்ஸும் வெல்ஸ்லியும் ஆங்கில ஆட்சியின் "மறுதாபகர்கள்" அல்லது முறையே "இரண்டாம் தாபகர்" மூன்றாம் தாபகர் என்று சிறப்புப் பெறுகின்றனர். ஆங்கில ஆட்சியின் எழுச்சிக்கு எதிர்பாரா நிகழ்ச்சிகள் காரண மாயின என்பது உண்மையே. ஆயினும் அவ்வெழுச் சிக்கு ஏற்ற கொள்கையை அவர்கள் பின்பற்றவில்லை எனக்கூற முடியாது. குறிப்பாக, கிளைவின் கொள்கை நோக்கற்பாலது. அவர், தாம் இரண்டாம் முறையாக வங்காள கவர்னராயிருந்த பொழுது (1765-7). கவன மாகத் தீட்டப்பட்ட ஒரு கொள்கையை அமைத்தார். அதற்குச் "சுற்றரண் காப்புக்கொள்கை" (Ring-Fence Policy) அல்லது "தலையிடாக் கொள்கை" (Non Intervention Policy) என்று பெயர்.

சுற்றரண் காப்புக்கொள்கை (Ring-Fence Policy) கிளைவும் சர் ஜான் ஷோர் வரை அவருக்குப் பின் வந் தோரும் பின்பற்றிய வெளித்துறைக்கொள்கை, சுற்றரண் காப்புக் கொள்கை அல்லது தலையிடாக்கொள்கை, அல்லது வரம்புக்குட்பட்ட பொறுப்புக்கொள்கை எனப் பெயர் பெறும். அதன்படி, கம்பேனியார் தமது ஆட்சிப் பொறுப்பை வரையறைப்படுத்தினர். அவ்வரையறையைக் கடந்து பிறநாடுகளின் அலுவல்களில் அவர்கள் தலையிட வில்லை. பேராசைக்கொண்டு முடிவிலாப் போரிலிறங் கினால், தொடக்க நிலையிலுள்ள பிரிட்டிஷ் ஆட்சி இடை யூறுகளைப்பெறும் என்ற அச்சமே அக்கொள்கைக்குக் காரணமாம். ஆட்சிப்பகுதிகள் பெருகிக்கொண்டு போனால் நிலைமையைச் சமாளிக்க முடியாது என்று அவர்கள்

* *59, பக். 181.*

அஞ்சினர். கம்பெனி, பிற இந்திய நாடுகளுடன் செய்து கொண்ட உடன்படிக்கைகளில், "ஒருவருக்கொருவர் உதவி" "நேசமனப்பான்மை" முதலிய சொற்றொடர்கள் சிறப்புற்றிருக்கக் காணலாம்; "ஒத்தவர்களில் முதல்வராக" (First among equals) இருப்பதையே ஆங்கிலேயர் விரும்பினர். அவர்களுடைய ஆதிக்க வெறியைப்பற்றிய குறிப்பு உடன்படிக்கைகளில் இல்லை. தற்காப்புக்கு வலியப் போர்தொடுக்காமலிருப்பது இன்றியமையாததென்ற கொள்கையை 1784-ம் ஆண்டு ஆங்கிலேயப் பார்லிமெண்டும் ஏற்றுக்கொண்டது. (பிட் இந்தியச் சட்டம் குறிப்பிடுவதாவது :—"இந்தியாவில் நாடுகளைக் கவர்ந்து இராச்சியத்தைப் பெருக்கிக் கொள்ளும் திட்டம், ஆங்கிலேயரின், விருப்பத்திற்கு மாறானது; கொள்கைக்கு முரணானது; பெருமைக்கு இழுக்கானது. அக்கொள்கையை வெல்ஸ்லி கைவிட்டார்; பின்னர் ஹேஸ்டிங்ஸ் பிரபு முடிவாகக் கைவிட்டார். ஆங்கிலேய ஆட்சியின் வளர்ச்சிக்கு அக்கொள்கை உதவியதென்ற செய்தி புறக்கணிக்கத் தக்கதன்று. ஒரு தலைமுறைக்கு மேலாக கம்பெனியார் இந்தியாவில் பின்பற்றிய வெளித்துறை கொள்கையைத் தீர்மானித்த பெருமை கிளைவுக்கு உரியது. செரிமானம் ஆகக் கூடிய அளவுக்கே உணவை உட்கொள்ள வேண்டுமென்பதற்கு ஒப்ப கிளைவ் தமது வெளித்துறைக்கொள்கையை அமைத்திருந்தது குறிக்கப்பாலது. சீர்தூக்கி அமையப்பெற்ற அவர் கொள்கை இந்தியாவில் பிரிட்டிஷ் அரசியல் அதிகாரத்துக்குக் கால்கோல் நாட்டியது.

———

பகுதி 17

ஆட்சி முறை; இரட்டை ஆட்சி

இரட்டை அரசியல்: முகலாயப் பேரரசர், கிளைவுக்கு "திவானி" உரிமையை வழங்குவதற்கு முன்னரே மீர் ஜாபர் இறந்தபின் பட்டமேற்ற வங்காள நவாப் கம்பெனி யாருக்கு "நிஸாமத்" எனப்பெறும் இராச்சியதிகாரத் தைச் செயல்முறையில் கொடுத்திருந்தார். ஆகவே திவானியைப் பெற்ற பிறகு ஆங்கிலேயர், திவான் என்ற முறையிலும் நாஸிம் என்ற முறையிலும் இருவகையான அலுவல்களை ஆற்ற வேண்டியவர்களாயினர். திவான் என்ற முறையில் அவர்கள் மாகாணங்களின் வருமா னத்தை வாங்குவதற்கும் செலவுகள் செய்தற்கும், சிவில் நீதி வழங்குவதற்கும் கடப்பாடுடையர்; நாஸிம் என்ற முறையில் குற்றத்துறை, இராணுவம் ஆகிய அலுவல் களைச் செயலாற்ற வேண்டும். ஆனால் கம்பெனியார் எல்லாக் கடமைகளையும் தாமே நேர் முறையில் ஏற்றுக் கொள்ளத் தயங்கினர். வெளித்துறைக் கொள்கையையும் வெளிநாட்டு வாணிகத்தையும் தாம் மேற்கொண்டனர். ஆனால் வரி வசூல் அதிகாரத்தையும் வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா ஆகியவற்றின் நீதி முறையையும் தாமே நிர் வகிக்க விரும்பவில்லை. அத்தகைய செய்திகளை இந்திய அலுவலாளர்களிடம் ஒப்படைப்பதே சாலச் சிறந்தது என்பது அவர்கள் கருத்து. தாம் வசூலித்த பணத்தில் இராச்சிய நிர்வாகச் செலவுகளும், பேரரசருக்கும் வங்காள நவாப்புக்கும் கொடுக்க வேண்டிய தொகையும் போக எஞ் சியதைத் தமது கருவூலத்தில் சேர்த்துக் கொண்டனர். வங்காளம், பீஹார், மாகாணங்களில் உதவி நவாப்புகள் அமர்த்தப் பெற்றனர். இவர்களை, கம்பெனியாரின் ஒப்பு தல் பெற்று நவாப் நியமித்து வந்தார். இவர்களை நீக்கு வதற்கும் கம்பெனியின் உடன்பாடு தேவையாயிருந்தது மேலும் முர்ஷிதாபாத்திலிருந்த பிரிட்டிஷ் ரெஸிடெண்டும்

பாட்னுவிலிருந்த தலைமை முகவரும் (Agent) உதவி நவாப்புகளின் செயல்களை மேற்பார்வை செய்ய வேண்டியவர்களாயினர். ஆனால் அம் மேற்பார்வையால் சிறந்த பயன் எதுவும் விளையவில்லை. ஆகவே கம்பெனியாரின் வருமானம் குறைந்து வந்தது. சமீந்தார்கள் குடியானவர்களைத் துன்புறுத்தி வந்தனர். இவ்வாறு கம்பெனியாரும் நவாப்பின் பணியாளரும் நடத்தி வந்த அரசியலுக்கு இரட்டை ஆட்சி முறை அல்லது இருதலைப்பட்ட அரசியலமைப்பு என்று பெயர்.

அதன் நன்மை, தீமைகள் : கிளைவ், வங்காளம் பீஹார், ஒரிஸ்ஸா ஆகிய மாகாணங்களில் முழு ஆட்சி முறையையும் ஏற்றுக்கொள்ளாமல் இராணுவ, நிதிச் செய்திகளில் மட்டும் பொறுப்பேற்றுக் கொண்டதற்காக அவருடைய இவ்வாட்சி முறை குறைபாடு உடையதாகக் கருதப்படுகிறது. திவானியைப் பெற்ற பிறகு வரி வசூலை இந்திய அலுவலாளரிடம் விட்டமை குறித்தும் அம்முறை இகழப்படுகிறது. கம்பெனியார் தமது நிலையை வலிமைப்படுத்திக் கொள்வதில் மட்டும் கருத்தாயிருந்தனரே அன்றி மக்களின் நலத்தில் அக்கரை கொள்ளவில்லை. அலுவலாளர்களின் தொந்தரவுகளிலிருந்து பொதுமக்களைக் காப்பாற்றுவது பற்றியும் ஆங்கிலேயர் பொறுப்பேற்கவில்லை. ஆகவே, வங்காளத்தில் ஆங்கிலேயர் கடமைகளையும் பொறுப்புக்களையும் ஏற்காது பணத்தை மட்டும் பெற்றுக் கொண்டனர் என்று சில ஆசிரியர்கள் அவர்கள் மீது குற்றஞ் சாட்டுவர். ஆனால் முழு ஆட்சி முறையையும் அவர்கள் ஏற்றுக் கொள்வதென்பது அக்காலச் சூழ்நிலையில் எளிய செயலன்று என்பதையும் சிந்தித்தல் இன்றியமையாததாகும். கம்பெனி அலுவலாளர் வாணிகத் தொழிலுக்காகவே அமர்த்தப்பட்டவர் என்பதும் நோக்கத் தக்கது. அவர்களுக்கு ஆட்சிமுறை அறிவு சிறிதளவுகூடக் கிடையாது. அவர் தம் உளப்போக்கில் ஓர் அடிப்படை மாறுதலைப் புகுத்திய பிறகே அரசியலில் அவர்களை அமர்த்துதல் நலம் படைப்பதாகும். கம்பெனி

யின் இயக்குநர், வங்காளத்திலிருந்த ஆங்கிலேயப் பணி யாளரின் இயற்கைக் குறைபாடுகளை உணர்ந்திருந்தனர். வர்த்தமானபுரத்தில் ஆங்கிலேயர் வரி வசூல் செய்யும் பணியை மேற்கொண்டிருந்த காலத்தில் அவர்களுக்குச் சிறந்ததோர் உண்மை அனுபவ முறையில் புலப்பட்டது. அதாவது உள்நாட்டு மக்களிடம் வரிகளைச் சிறந்த முறையில் வாங்குவதற்கு உள்நாட்டு அலுவலாளரே தகுதி உடையவர்கள் என்பதாம். வரி செலுத்துவதில் பல ஏமாற்று முறைகளை அம் மாகாணத்தினர் கையாண்டு வந்தனர். அவற்றைக் கண்டு பிடிக்க அயல் நாட்டினரான ஆங்கிலேயரால் இயலவில்லை. இந்த அனுபவத்தை யொட்டியே இரட்டை ஆட்சிமுறை சிறந்ததென முடிவு செய்யப்பட்டது. ஆயினும் அவ்வாட்சி முறையில் சில இயற்கைக் குறைபாடுகள் காணப்பெற்றன. அதிகாரமும் பொறுப்பும் தனித்தனியாகப் பிரிக்கப்பட் டிருந்ததால் வங்காளத்தில் கொடிய ஆட்சிமுறைச் சீர் கேடுகள் பெருகின. எனினும் உள்நாட்டு ஆட்சிக்கும் ஆங்கில ஆட்சிக்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்க்கும் ஒரு பாலம்போல் அம்முறை பயன் விளைத்தது. கிளைவின் செயல் மிகவும் சிறப்புடையது என்று யாரும்கூறமுடியாது. ஆனால் பிற்காலத்தில் ஹேஸ்டிங்ஸ், காரன்வாலிஸ் முத லிய தலைவர்களின் சீர்திருத்தங்களைக் கிளைவ் புகுத்தவில்லை என்ற குற்றத்தை நாம் அவர்மீது சுமத்துவதும் அறி வுடைமை ஆகாது. இரட்டை ஆட்சி முறை வருந்தத்தக்க விளைவுகளுடன் தோல்வியடைந்தது. சிறப்பாக 1767 முதல் 1772 வரை உள்ள காலத்தில் அதன் தோல்வியைக் காண் கிறோம். ஆகவே பிந்திய ஆண்டில் அம்முறையை ஆங்கி லேயர் நீக்கிவிட்டனர். ஆனால் சென்னை மாகாணத்தில் அம் முறை வெல்ஸ்லி காலம் வரை நீடித்து இன்னல் அளித்து வந்தது. ஆங்கிலேயர், ஆற்காட்டு நவாப், மக்கள், யாவருமே பொறுப்பற்று இருந்தனர். அதனால் ஆட்சி முறைச் சீர்கேடுகள் காணப்பெற்றன. ஆயினும் கருநாடகத்தில், ஆங்கில – பிரெஞ்சுப் போராட்டத்துக்குப் பிறகு கம்பெனியின் ஆட்சி வன்மையாக ஏற்பட்டுவிட்ட

தால் ஆட்சி முறைச் சீர்கேட்டினுல் ஆங்கிலேயருக்குத் துன்பமேற்படவில்லை. தமது அதிகாரத்துக்கு இடையூறு ஏற்படாதவரையில் நிலையை மாற்றி அமைக்க ஆங்கிலேயர் விரும்பவில்லை. "இரட்டை ஆட்சி முறை, சென்னையில், சகித்துக்கொள்ளக்கூடியது. ஆனுல் வங்காளத்தில் அவ்வாறன்று".*

---

* *26*, பக். 271 & 237

பகுதி 18

கிளைவின் சீர்திருத்தங்களும் இரண்டாம் முறை வங்காள ஆட்சித்தலைமையும்

சிவில்பணி : கிளைவ் மூன்றும் முறை இந்தியாவுக்கு வரும்பொழுது கம்பெனியின் சிவில், இராணுவ அலுவல் களைச் சீர்திருத்த வேண்டுமென்ற உறுதியான திட்டத்தை மனத்திற் கொண்டிருந்தார். ஊழல்களை ஒழித்து ஆட்சி முறையைத் தூய்மைப்படுத்த அவர் ஆர்வம் கொண்டிருந் தார். அதன்பொருட்டு அவருக்கும் நியமனம் பெற்ற நால்வர் அடங்கிய ஒரு பொறுக்குக் குழு (Select Committee) வுக்கும் அதிகாரம் வழங்கப்பெற்றிருந்தது. கிளைவ் கல்கத்தா வந்து சேருவதற்கு முன்னரே தாய் நாட்டி லிருந்து கம்பெனி ஆலோசனைக் குழுவுக்குச் சில ஆணை கள் வந்திருந்தன. கம்பெனி ஊழியர் பரிசுகள் பெறுவதை யும் உள்நாட்டு வாணிகத்தில் கலந்துகொள்வதையும் அவை தடை செய்தன. ஆனால் அவை நிறைவேற்றப் படவில்லை. ஆகவே, கிளைவ் பதவிக்கு வந்தவுடன் சிவில், இராணுவ அலுவலாளர்கள், "பரிசுகள்" வாங்குவதில்லை என்ற ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினர். ஆகவே அவர்கள் "ஒப்பந்த சிவில் பணி யாளர்" எனப் பெறுவர். கிளைவ், ஆலோசனை சபையில் ஏற்பட்ட காலியிடங்கட்கு வங்காள அலுவலாளரின் உரிமைகளைப் புறக்கணித்துச் சென்னையிலிருந்து அலுவ லரைக் கொணர்ந்து பணியிலமர்த்தினர். இதனுல் வங்காளத்தில் பணியாளர் கலகம் ஏற்பட்டது. ஆனுல் அவர் அதைத் திடமுடன் ஒடுக்கினர். பணியாளரின் ஊதியத்தை உயர்த்தும் செய்தியில் இயக்குநர்கள் கிளைவுடன் ஒத்துழைக்கவில்லை. ஆகவே அதற்கு மாற் ருக, கம்பெனியின் மேல்நிலை அலுவலர், ஒழுங்குபடுத்திய பங்குகள் மூலம் உப்பு வாணிகத்தில் தனியுரிமை பெறு மாறு கிளைவ் செய்தார். ஆனுல் அவ்வேற்பாட்டின்

உண்மைத் தத்துவத்தை உணராத இயக்குநர் அதற்கு உடன்படாமல் 1768-ல் கிளைவின் அத் திட்டத்தை நீக்கினர். அதற்குப் பதிலாக, அலுவலரின் ஊதியத்துக்குத் தக்கவாறு அவர்களுக்கு மாகாண வரித்தொகையினின்று குறிப்பிட்ட அளவு தரகு கொடுக்கும் வழக்கத்தை ஏற்படுத்தினர். கிளைவ், பரிசுக்களையும் மேல்வரவுகளையும் அலுவலர் வாங்கக்கூடாது என்ற பிரசாரம் செய்து வந்த போதிலும் அவரே தொடக்கத்தில் கையாண்ட முறைகளைக் கம்பெனியார் எளிதில் மறந்துவிடுவதற்கில்லை. ஆனால் மாறிவரும் சூழ்நிலைக்கேற்பவும் இயக்குநரின் ஆணைகளையொட்டியும் அவர் தம் கொள்கையை அமைத்துக் கொண்டார். அவர் இரண்டாம் முறை கவர்னராக இருந்த காலத்தில், வேறு சில பண்புகளிலும் தம் வாழ்க்கை நெறியில் புதிய இயலை அமைத்துக்கொண்டதைக் காண்கிறோம். அக்காலத்திய அவர் செயல்கள் அவருடைய சிறந்த அரசியல் வல்லமையைக் காட்டுகின்றன. அவர் புதிய சட்டங்களை நிறைவேற்றியதால் பலர் அவரை வெறுத்துக் குற்றஞ்சாட்டினர். ஆனால் அவற்றை அவர் பொருட்படுத்தவில்லை. தாம் எண்ணியவற்றை எண்ணியாங்கே முடிப்பதில் அவர் தமது கருத்தைச் செலுத்தி வந்தார்.

இராணுவப் புனரமைப்பு: கிளைவின் இராணுவச் சீர்திருத்தங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. அவை அவருடைய உயர்ந்த இராணுவத் திறமையைக் காட்டா நிற்கும். அவர் அமைத்த வங்காளப் படைப் பகுதி ஒவ்வொன்றிலும் 3000 ஐரோப்பியரும் குறிப்பிட்ட அளவு இந்தியச் சிப்பாய்களும் காணப்பெற்றனர். மங்கீர், அலஹாபாத், பங்கிபுரம் (பாட்னா மாவட்டம்) ஆகிய மூன்று இடங்களிலும் மூன்று படைப் பிரிவுகள் இயங்கி வந்தன. மீர்ஜாபர் தமக்கு உதவியாய்ப் போர்க்களத்தில் ஆங்கிலப் போர் வீரர்கள் சண்டையிட்டு வந்த வரையில் இரட்டைப் படி (Double batta) வழங்கி வந்தார். மீர்காசிமும் அதைப் பின்பற்றினர். இயக்குநர்களின் ஆணைப்படி கிளைவ் இரட்டைப்படி கொடுப்பதை நிறுத்தினர். அதனல்

பலர் பதவியினின்று விலகியதை அவர் பொருட்படுத்த வில்லை. அதனுல் விளைந்த கலகத்தை அடக்கி வெற்றி பெற்ருர். பணியின் தன்மைக்குத் தக்கவாறு புதிய முறை யில் படி விகிதத்தை மாற்றி அமைத்தார். கீழ்ப்படியாமை இயக்கத்தைக் கடுமையாக ஒடுக்கி, கிளைவ், கம்பெனி யாருக்குச் சிறந்ததோர் பாடம் கற்பித்தார். போரில் காயமடைந்தோருக்கும் போரில் இறந்தோரின் மனைவியர் கட்கும் உதவிநிதி ஒன்றையும் அவர் அமைத்தார்.

கிளைவின் இரண்டாம் முறை ஆட்சித் தலைமை (1765-7): கிளைவின் வாழ்க்கையில் அவர் இரண்டாம் முறையாக வங்காள கவர்னர் பதவியைப் பெற்றிருந்த காலம் பலவகைகளில் மிகப் பயனுடையதாகும். அதன் விளைவாக அவருடைய அரசியல் வல்லமை நமக்குத் தெளிவாகப் புலனுகிறது. அக்காலப் பகுதியில் அவர் இந்நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சி நிலைபெற வேண்டுமென் பதில் மிகுந்த கருத்தைச் செலுத்தினுர். அவர் முதன் முறை கவர்னராக இருந்த காலப்பகுதிக்கும், இரண்டாம் முறை அப்பதவியை வகித்த காலத்துக்கும் வேறுபாடுகள் உண்டு. கிளைவின் வெளித்துறைக் கொள்கையும் ஆட்சி முறைச் சீர்திருத்த ஆர்வமும் அவ்வேறுபாடுகளைத் தெளிவாக்குகின்றன. முதலில் அவரிடம் காணப்பட்ட தீயபண்பு அடியோடு மறைந்து விடவில்லை எனினும் அவர் தம் பதவிக்காலத்தின் பிற்பகுதியில் பொதுநலத்தில் அக்கரை காட்டினுர். மீர் ஜாபர் அவருக்கு வழங்கிய(1770) ஐந்து லட்ச ரூபாயை அவர் கம்பெனியாரின் நலத்தின் பொருட்டுச்செலவிட்டார். அப்பணத்தைக்கொண்டு போர்ச் சேவை காரணமாகவோ, உடல் நலக்குறைவு காரண மாகவோ துன்புறும் கம்பெனி ஊழியர்களுக்கான ஒரு நிதியை அமைத்தார். "கிளைவின் நிதி" என்று அது பெயர் பெற்றது. அக்காலத்தில் ஊழியர்கள் ஓய்வுக்கால ஊதி யத்தைப் பெறவில்லை. ஆதலால் அந்நிதி மிகவும் நன்மை பயந்தது. மெக்காலே, கிளைவைப்பற்றிக் குறிப் பிட்டிருப்பதாவது :— "கிளைவ் இந்தியாவுக்கு, முதன் முறை சென்றதன் விளைவாக ஆங்கிலப்படையின்

பெருமையையும் சிறப்பையும் கீழ் நாட்டவர் உணரத் தொடங்கினர் ; இரண்டாம் முறை சென்றதன் விளைவாக இந்தியாவில் ஆங்கிலேயரின் அரசியல் ஆதிக்கம் தொடங்கியது ; மூன்ரும் முறை சென்றதன் விளைவாக ஆங்கிலக் கீழ்நாட்டுப் பேரரசின் ஆட்சிமுறை சீர்திருந்தத் தொடங்கியது* " கருநாடகத்தில் தியூப்ளேயின் பேராசையைப் பாழ்படுத்திய பெருமை, லாரன்ஸ், சாண்டர்ஸ், கிளைவ் ஆகிய மூவருக்கும் உண்டு. முந்திய இருவருக்கும் கிளைவ் கடப்பாடுடையவர். அக்காலத்தில் அவர் சிறந்த முறையில் தொழில் பழகிவந்தார். 1757 முதல் 1760 வரை உள்ள காலப்பகுதியில் கிளைவ் வங்காளத்தில் ஆங்கிலேயரின் அரசியலை அமைத்தார். ஆனல் அப்பொழுது அது வலிமையான அடிப்படையில் அமையவில்லை. அக் குறைபாட்டை அவர் தாம் இரண்டாம் முறை கவர்னராக இருந்தபொழுது நீக்கி ஆட்சியை வலிமைப்படுத்தினர். இந்தியாவில் ஆங்கில ராச்சியம் வங்காளத்திலிருந்து தான் பரவியது என்ற கருத்து ஈண்டுச் சிந்திக்கத்தக்கது. கருநாடகத்தில் தியூப்ளே செய்த தவறுகளையும் அளவு கடந்த செயல்களையும் கிளைவ் வங்காளத்தில் செய்யாமல் கவனமாக இருந்தார். ஆயினும் இரட்டை ஆட்சி முறையால் தீமைகள் ஏற்பட்டுவந்தன. ஆதலால் நிலைமையை ஒழுங்குபடுத்த மேலும் சீர்திருத்தங்கள் இன்றியமையாத தாயிருந்தன. அத்தேவையை ஓரளவு வாரன் ஹேஸ்டிங்ஸ் நிறைவு செய்தார்.

---

* (Macaulay, op cit)
(மெக்காலே, ஷ பக். 375-6)

பகுதி 19

கிளைவின் இறுதிக்காலம் (1767—74)

கிளைவ் உடல் நலம் குன்றியதால் 1767-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அவர் இங்கிலாந்துக்குப் புறப்பட்டுச், சூலைமாதம் தம் நாடு சேர்ந்தார். பிறகும் இந்தியச் செய்திகளில் அவர் சிறந்த அக்கரை காட்டிவந்தார். 1768-ம் ஆண்டில் அவர் பிரான்சுக்குச் சென்று சில மாதங்கள் அங்குத் தங்கியிருந்தார். அவர் புஸ்ஸியைக் கண்டபொழுது புஸ்ஸி அவரிடம் கூறியதாவது :—

"பிரபோ, நாங்கள் இந்தியாவை விட்டு விட்டோம் என்று எண்ணாதீர்கள். இப்பொழுது எமது உரிமைகள் மறைந்து கிடக்கின்றன. தக்ககாலம் வரும்பொழுது போரினால் அவற்றை நாங்கள் பெற்றுவிடுவோம்"* 1768-ல் கிளைவ் மீண்டும் பார்லிமெண்ட்டு உறுப்பினராகி அரசியலில் மிகுந்த பங்கு கொண்டார். இங்கிலாந்தின் கட்சி அரசியலில் அவர் ஈடுபடவே அவருக்குப் பல பகைவர்கள் தோன்றினர். அவர்கள் கிளைவின்மீது பல குற்றங்களைச் சுமத்திக் கிளர்ச்சி செய்து சட்டசபையினரை அவருடைய நடத்தையையும் செயல்களையும் பற்றி விசாரணை நடத்தும்படி தூண்டினர். சிராஜ்-உத்-தௌலாவைக் கொலை செய்தவர் கிளைவே என்று சிலர் முழக்கமிட்டனர். 1772-ல் இந்திய அலுவல்களைப் பற்றிய ஒரு மசோதாவைச் சட்டசபை விவாதித்தது. (1773-ம் ஆண்டின் "முறைப்படுத்தும் சட்டத்தின் (Regulating - தோற்றத்தை அதில் காண்கிறோம்) விவாதத்தில் கிளைவின் மீது சாட்டப்பட்ட முக்கிய குற்றங்களாவன : அவர் சிராஜ்-உத்-தௌலாவுடன் மேற்கொண்ட நடவடிக்கைகள் நேர்மையற்றவை; அமீன்சந்தை அவர் ஏமாற்றினார்; பொய்க்கையெழுத்திடக் காரணமாயினார்; வாணிகத் தனி உரிமைகளாலும் வேறு

* 33, II, பக். 365.

பல தவருன வழிகளாலும் பெருத்த பொருளைச் சேர்த்துக் கொண்டார்; தமது அதிகாரங்களைத் தீய வழியிற் செலுத்திஞர் முதலியன. கிளைவ் தற்காப்புக்காக வாதித்தபோது நிகழ்த்திய சொற்பொழிவைக் கேட்டுச் சாத்தாம் பிரபுவே வியப்படைந்தாராம். தாம் நிகழ்த்திய செயல்கள் முறையானவை என்பதற்குக் கிளைவ் பல காரணங்கள் காட்டிஞர். இரண்டு ஆண்டுகள் கிளைவுக்குத் துன்பம் நீடித்து வந்தது. இறுதியில் அவர், தம் நாட்டுக்காக அரும்பாடுகள் பட்டார் என்பதை காமன்ஸ் சபையில் பெரும்பான்மையினர் ஏற்றுக்கொண்டனர். கிளைவ் நோயிஞல் வருந்தி உள்ளத்தின் ஊக்கம் குறைந்து துயரம் பொறுக்கமாட்டாமல் தற்கொலை செய்து கொண்டார் (நவம்பர், 1774).

பகுதி 20

கிளைவின் இயல்பு, போர் வீரத் திறமை, அரசியல் வல்லமை.

இயல்பு : சிலர் கிளைவின் இயல்பை மிகவும் இழித்துக் கூறுவர். அவர்கள், அவரை " அச்சுறுத்திப் பணம் பறிக்கும் ஒரு குட்டிப் பிசாசு " என்றும், கடைக்காரர்களுக்குத் தொல்லை தரும் கொடியோன் என்றும் மன நிறைவு பெருத பேராவலாளன் என்றும், தான் இழைத்த குற்றங்கட்காக எக்காலத்திலும் வருத்தம் தெரிவிக்காத கொடும் பாவி என்றும், குணக்கேடன் என்றும் பலவாருக இழித்துக் குறிப்பிட்டுள்ளனர் ; மேலும், கிறித்தவ வேதத்தின் பத்து கட்டளைகளை அறவே மீறியவன் என்பர். அது மட்டுமன்று ; பதிஞேராவது கட்டளை ஒன்றையும் தாமே தமக்காகப் புதிதாகப் புனைந்து கொண்டவராம். அதாவது " பிறர் உன் குற்றத்தைக் கண்டு பிடித்து விடாமல் உன்னைக் காப்பாற்றிக் கொள் " என்பதாம். தவிர, " ஓமிச்சந்தை ஏமாற்றி ஆங்கிலேயர் ஆட்சியை இந்தியாவில் தாபித்தவர் கிளைவ்; நந்த குமாரைக் கொன்று அவ்வாட்சியின் மறுத்தாபனத்துக்குக் காரணமானவர் வாரன் ஹேஸ்டிங்ஸ்." என்றும் பேசுவர். ஆனல் பொதுவாகக் கூறுமிடத்து மேலே கூறியவை ஒரு சார்புடைய கருத்துக்களாம்; வரலாற்று முறையிலும் ஏற்றுக்கொள்ளத் தக்கவை அல்ல. கிளைவின் ஒழுக்கத்தில் குறைபாடுகள் பல உண்டு. எனினும் அவருடைய தன்மையில் மேன்மை இருந்தது ; செயல்களில் சிறப்பு இருந்தது ; அறிவில் தெளிவு இருந்தது; ஆட்சி முறையில் நன்மை இருந்தது; உள்ளத்தில் ஊக்கமிருந்தது; நெஞ்சில் உறுதி இருந்தது. அறிவில் கூர்மை இருந்தது ; செயலாற்றுந் தன்மையில் விடாமுயற்சி இருந்தது. தம் பெருமைக்கு இழுக்கு நேரும்படி தம்மைப் பிறர் தாக்கிப் பேசுவதை அவர் பொறுத்துக்கொண்டு வாளா இருக்கவில்லை. உறுதி

யான உளத்திட்பமும் மிக்க ஆற்றலும் அச்சமற்ற தன்மையும் அவரிடமிருந்தன. பிளாசிப் போரின் தொடக்கத்தில் அவருக்கு இருந்த ஐயப்பாடு விரைவில் மறைந்து வெற்றிமாலை சூடினார். கம்பெனிப் பணியாளரின் கலகத்தால் அவர் மனங்கலங்கி விடவில்லை. பார்லிமெண்டில் அவர் தம்மீது சாட்டப்பெற்ற குற்றங்களை எதிர்த்து ஆற்றிய சொற்பொழிவுகள் சிறப்பு வாய்ந்தவை. "என்னுடைய பொருள்களை எல்லாம் எடுத்துக்கொள்ளுங்கள் ஆனால் எனது பெருமையை மட்டும் அழித்துவிடாதீர்கள்." என்று அவர் கூறியிருப்பது நோக்கற்பாலது. அச்சொற்பொழிவுகளில் அவருடைய கபடற்ற தன்மையைக் காணலாம். பெருந்தன்மையுடன் அவர் தமது பொருள்களைப் பிறருக்காகவும் செலவிட்டார். சிறப்பாக, அவர் இரண்டாம் முறை கவர்னராக இருந்தபொழுது உதவி செய்யுந் தன்மை அவரிடம் மிகுதியாகக் காணப்பட்டது.

போர்வீரத் திறமை: கிளைவின் இராணுவத் திறமை மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். சாத்தாம் பிரபு அவரைப் பிரஷ்யா நாட்டு மேன்மை மிக்க பிரடெரிக்கோடு ஒப்பிட்டுப் புகழ்ந்துள்ளார்.* ஆனால் கருநாடகத்தில் அவர் கற்பனைத்திறன் வாய்ந்த அருஞ்செயல்களை ஆற்றினாரென்று கூறுவதற்கில்லை. ஆர்க்காட்டைக் கைப்பற்றுவதன்மூலம் திருச்சிராப்பள்ளியை விடுவிக்க அமைந்த திட்டத்தைத் தீட்டியவர் கிளைவ் அல்லர். ஆயினும் ஆர்க்காட்டை அவர் கைப்பற்றிக் காப்பாற்றிய செயல் போற்றற்குரியது. அவர் படைத் தலைவர் லாரன்ஸிடமிருந்து போர்த்திறனை விரைவில் கற்றுணர்ந்தார். கிளைவ் வெற்றி பெற்ற பிளாசிப்போர், இராணுவ முறையில் பெரும் புகழ் வாய்ந்ததன்று. சிறப்பு வாய்ந்த பக்ஸார் போரில் கிளைவ் பங்கு கொள்ளவில்லை. அவர் படை செலுத்துவதில் வியத்தகு, நுண்ணிய இராணுவ தந்திர முறை இருந்த

---

* Macaulay, Op. cit.
(மெக்காலே) ஷெ பக். 348.

தாகப் படைத்தொழில் வல்லுநர் கூறக்காணேம். ஆனால் உறுதி குலையாமல் வீரத்துடன் முன்னேறிக் கிளைவ் வெற்றிகள் பெற்றார். படைத்தலைமை தாங்குவதற்குரிய தகுதி அவருக்கு இருந்தது. அவரது செயலாற்றுந்திறன் பாராட்டத்தக்கதாகும்.

அரசியல் வல்லமை: ஆட்சி முறையைத் தூய்மை யுறச் செய்யக் கிளைவ் கொண்டிருந்த ஆர்வத்தைப்பற்றி முன்னரே குறிப்பிட்டுள்ளோம். இரட்டை ஆட்சி முறை யின் கேட்டைப்பற்றியும் பார்த்தோம். அதைவிடச் சிறந்த ஒரு திட்டத்தை அமைக்க கிளைவுக்குச் சூழ்நிலை இடந்தர வில்லை என்பதை நாம் நோக்கவேண்டும். இந்தியாவில் ஆங்கிலேய இராச்சியத்தைப் பிரிட்டிஷ் அரசியலாரே நேர்முறையில் ஆட்சிபுரிவது நன்மைதரும் என்று கிளைவ், 1759-ஆம் ஆண்டிலும் 1772-ஆம் ஆண்டிலும் ஆதர வளித்துப் பேசியிருப்பது அவருடைய அரசியல் முன் ஞேக்கைக் காட்டுகிறது. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி ஆட்சி கால்கொள்வதற்கு கிளைவின் அரசியல் வல்லமை எவ்வாறு உதவியது என்பதை முன்னர்ப் பார்த்தோம். அவர், தற்காலிக வழிதுறைகள் கண்டுபிடிப்பதில் ஆற்றல் வாய்ந்தவர்; இன்றியமையாதனவற்றைத் தெளிந்து தேர் வதில் திறமைசாலி; செய்திகளை ஆழ்ந்து நோக்கும் கூர்த்த மதிநலம் பெற்றவர். தியூப்ளே, லாலி, வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆகியோரைவிடக் கிளைவ் மிகுந்த நல்ல வாய்ப்பைப் பெற்றவர் (அதிர்ஷ்டசாலி) என்று ஒரு பிரெஞ்சு அறிஞர் (Rambaud) கூறியிருப்பதும் ஈண்டு குறிக்கத்தக்கது.*

---

* *69; பக். 95.*

பகுதி 21

வங்காளத்தில் வெரெல்ஸ்ட், கார்ட்டியர் ஆகியோர் ஆட்சி

இரட்டை ஆட்சி முறை: கிளைவுக்குப் பிறகு 1767 முதல் 1769 வரை வெரெல்ஸ்ட் என்பாரும் 1769 முதல் 1772 வரை கார்ட்டியர் என்பாரும் வில்லியம் கோட்டையின் கவர்னராகப் பணியாற்றினர். அவர்களாட்சி ஆற்றலற்றதாயிருந்தது. அதற்கு இரட்டை ஆட்சியின் குறைபாடுகள் முக்கிய காரணமாகும். கிளைவ் நீக்கிய கேடுகள் மீண்டும் தோன்றின. கொடுங்கொள்ளையிடும் தன்மை பெற்ற அலுவலர் ஆட்சிமுறையை நடத்திவந்தனர். வரி வசூலிக்கும் இந்திய அதிகாரிகளைக் கண்காணிப்பதற்காக ஆங்கில மேற்பார்வையாளர் 1769ல் அமர்த்தப்பெற்றனர். (இவர்களே பின்பு கலெக்டர்கள் எனப் பெயர் பெற்றனர்) ஆனால் அச்சீர்திருத்தத்தினால் நிலைமை மேலும் கேடுற்றது. மேற்பார்வையாளரின் பணிகள் வருமாறு:— வரிவசூல் ஆகும் முறையை விசாரித்து அறிவது; குடியானவர்களின் நலத்திற்கு இன்றியமையாச் செய்திகளைச் சேகரித்தல்; ஒழுங்காக வரித்திட்டம் அமைப்பதற்குத் தேவையான குறிப்புக்களைப் பெறுதல் முதலியனவாம். ஆனால் உண்மையில் அவற்றால் நற்பயன் எதுவும் விளையவில்லை. உழவர்களிற் பலர் வரித்தொல்லைகளுக்கு அஞ்சித் தமது நிலங்களைக் கைவிட்டுக் கொள்ளை அடிக்க முற்பட்டனர். மேற்பார்வையாளர் சிலரும் பணம் பறிக்கும் தந்திரங்களைக் கையாண்டனர்.

கொடிய பஞ்சம்: 1770-ல் வங்காளத்தில் ஒரு கொடிய பஞ்சம் ஏற்பட்டது. அதன் விளைவாக வங்காளம், பீஹார் மாகாணங்களின் பெரும்பகுதிகள் பாழாயின. மக்கட்தொகையில் மூன்றில் ஒருபங்கு அழி

பிரிட்டிஷ் அரசின் எழுச்சி 1708—72



வுற்றது. பல இடங்களில் பிணங்களைக்கூட மக்கள் உண்டனர் என்று கூறப்படுகிறது.

கம்பெனியார் அரிசியைத் தமது வாணிகத் தனிஉரிமைப் பொருளாகக்கொண்டு ஏராளமான இலாபம் பெற்று வந்ததால் மக்களின் துயரம் மிகுதியாயிற்று. வேளாண்மை மூன்றில் ஒரு பங்குக்குக் குறைவுற்றது. பழைய நிலையை அடுத்த கால் நூற்றாண்டுக் காலத்திற்கூட கொண்டுவர முடியாதென்றே தோன்றியது. ஆயினும் 1771-ல் உள்நாட்டு முகவர்களால் (agents) வசூலிக்கப்பட்ட வரித் தொகை 1768-ம் ஆண்டில் வாங்கப்பட்டதைவிட மிகுதியாக இருந்தது! ஆங்கிலேயரின் நேர் ஆட்சியின் கீழிருந்த மாவட்டங்களில், மாகாணத்தின் மற்ற பகுதிகளில் காணப்பட்டது போன்ற சீர்கேடுகள், கிடையா, நொடித்துப்போகக்கூடிய நிலையில் கம்பெனி இருந்தபோதிலும் அதன் பணியாளர்கள் மேலும் மேலும் பணக்காரராகி வந்தனர்.

மாற்றம் : 1771-ல் கம்பெனியின் நிலையில் ஒரு மாறுதலேற்பட்டது, வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா மாகாணங்களில் வரிவசூல் செய்யும் பொறுப்பை நேராகக் கம்பெனியாரே மேற்கொண்டனர். அம்மாறுதலை நிறைவேற்ற இயக்குநர்கள் வாரன்ஹேஸ்டிங்ஸ் என்பாரை வங்காள கவர்னராக அமர்த்தினர். 1767 முதல் 1769 வரை உள்ள காலப்பகுதியில் சென்னை அரசியலாருக்கும் ஐதர் அலிக்கும் போராட்டம் நிகழ்ந்து வந்தது. அலஹாபாத்திலிருந்த முகலாயப் பேரரசர் மராட்டியர் உதவியுடன் 1772ல் தில்லி போய்ச்சேர்ந்தார்.

அதிகாரம் 4

வாரன் ஹேஸ்டிங்ஸ் (1772-85)

பகுதி 1.

ஹேஸ்டிங்ஸ்: ஆரம்ப வாழ்க்கையும் வங்காள ஆட்சியும்

கவர்னரின் பூர்வ சரித்திரம்: வாரன் ஹேஸ்டிங்ஸ், 1732-ல் பைநாஸ்டன் ஹேஸ்டிங்ஸுக்கும் ஹெஸ்டர் வாரனுக்கும் மகனாகப் பிறந்தார். இளமையிலேயே அன்னையை இழந்த இவரைத் தந்தையும் புறக்கணிக்கவே தந்தையின் உடன் பிறந்தாரிடம் வளர்ந்துவந்தார். முதன் முதலில் இவர் வெஸ்ட் மின்ஸ்டர் பள்ளியில் கல்வி கற்ருர். அங்கே அவருடன் எலீஜா இம்பேயும் கௌபரும் பயின்றனர். உழைத்து ஊக்கத்துடன் பயின்ற இவர் 1747-ல் மன்னரின் உதவிச் சம்பளத்துக்காகப் போட்டியிட்ட மாணவர் குழுவில் முதலிடம் பெற்ருர். இரண்டாண்டுகட்குப்பின் அவருடைய சிறிய தந்தை இறந்தபின் ஹேஸ்டிங்ஸின் வாழ்க்கையில் ஒரு திருப்பு கட்டத்தைக் காண்கிருேம். ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் இயக்குநர்களில் ஒருவர், ஹேஸ்டிங்ஸின் சேய்மை உறவினர். அவருடைய ஆதரவு ஹேஸ்டிங்ஸுக்குக் கிடைத்தது. அவர் ஹேஸ்டிங்ஸைத் தமது கம்பெனியில் ஒரு எழுத்தாளராக்க விரும்பிஞர். அதன் விளைவாக வெஸ்ட்மின்ஸ்டர் பள்ளியை விட்டு நீங்கி வாரன்ஹேஸ்டிங்ஸ் வாணிகக் கணக்கு முறையைப் பயின்ருர். 1750-ல் அவர் கல்கத்தாவுக்கு வந்து மூன்று ஆண்டுகள் குமாஸ்தாவாகப் பணியாற்றிஞர். 1753-ல் அவர் காசிம்பஸாருக்கு அனுப்பப்பெற்ருர். இரண்டு ஆண்டுகட்குப்பின் பண்டகசாலை ஆலோசனைக் குழுவில் உறுப்பினர் பதவி அவருக்குக் கிடைத்தது.

சிராஜ்-உத்-தௌலா காஸிம்பஸாரைக் கைப்பற்றிக் கொண்டபொழுது 1765-ல் வாரன்ஹேஸ்டிங்ஸும் கைதி ஆனார். ஜாமீனில் விடுதலை பெற்றதும் அவர் அந்த நவாப்பை ஒழிக்கக் கருதிய ஓர் சதிக் கூட்டத்தைச் சேர்ந்தார். அதனால் முர்ஷிதாபாத்தில் அவர் நிலைமை இடையூறுகட்கு உட்பட்டதாயிருந்தது. ஆதலால் பால்ட்டா (Falta) விலிருந்த ஆங்கிலேயரிடம் அவர் ஓடினார். அங்கே ஆங்கிலக் கைம்பெண் ஒருத்தியை மணந்து கொண்டார். அப்பெண்மணி 1759-ல் இறந்துவிட்டாள். கிளைவின்கீழ் வாரன் ஹேஸ்டிங்ஸ் பணியாற்றினார். 1757-ல் கல்கத்தாவை மீட்டுக்கொண்டபின் ஆங்கிலேய வணிகர் நவாப்புடன் செய்துகொண்ட உடன்படிக்கையில் ஹேஸ்டிங்ஸும் கலந்துகொண்டார். மீர்ஜாபர் நவாப்பானவுடன் ஹேஸ்டிங்ஸ் முர்ஷிதாபாத் ரெஸிடெண்ட்டுக்கு உதவி அலுவலராகச் சென்றார். அதே ஆண்டில் அவரே "ரெஸிடெண்ட்டு" ஆனார். 1761-ல் அவர் ஆலோசனைக் குழு உறுப்பினராகக் கல்கத்தாவுக்கு மாற்றப்பட்டார். வான்ஸிட்டார்ட் கவர்னராக இருந்த பொழுது ஹேஸ்டிங்ஸ் அவருக்குக் கீழ்ப்படிந்து ஒழுகினார். கவர்னரை எதிர்த்த குழு உறுப்பினர்களை ஹேஸ்டிங்ஸ் வெறுத்தார். வான்ஸிட்டார்ட்டும் ஹேஸ்டிங்ஸும் 1762-ல் மீர்காசிமுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை ஆலோசனைக் குழுவின் பெரும்பான்மையினர் ஏற்கவில்லை. வாரன் ஹேஸ்டிங்ஸை மீர் காசிமும் குறை கூறினார்; அவருடைய கூட்டாளியும் (குழு உறுப்பினர்) குறை கூறினார். நவாப்புகளை மாற்றி விட்டு ஆங்கிலேயர் கையாண்ட பொருள் பறிக்கும் முயற்சியில் ஹேஸ்டிங்ஸ் சேரவில்லை. அவ்வமயம் பொருளீட்ட விரும்பியிருந்தால் அவர் மிகுதியாக ஈட்டியிருக்கலாம். ஆனால் அவர் தாம் அதுகாறும் பணி புரிந்த 14 ஆண்டுகளில் 30,000 பவுன்களைத் தான் சேமித்திருந்தார். அவரை ஒத்த பிறருடைய சேமிப்புகளை நோக்கும் பொழுது அத்தொகை மிக மிகக் குறைவானதே. மேலும் அவர் பணச்சேமிப்பு முறை தெரியாதவர் ஆதலால் கைத்தொகையில் பெரும் பாகத்தை

இழந்தார். ஆனால், நேர்மையானவர், அறிவாளி என்ற புகழுடன் அவர் 1764-ல் (பக்ஸார் போருக்குப் பிறகு) இங்கிலாந்துக்குச் சென்றார் ; மீண்டும், கம்பெனியில் ஒரு பதவியைப் பெற அவர் முயன்றது பயன்தராததால், தம் கருத்தை இலக்கியத் துறையில் செலுத்தலானார். பேரறிஞர் ஜான்ஸனின் நட்பு அவருக்குக் கிடைத்தது. 1766-ல் காமன்ஸ் சபையின் பொறுக்குக் குழுவிடம் வாரன் ஹேஸ்டிங்ஸ் கொடுத்த சாட்சி காரணமாக இயக்குநர்கள், அமைச்சுக் குழுவினர் ஆகியோரின் நன் மதிப்பைப் பெற்றார். இந்தியப் பேராசிரியர்களின் உதவி கொண்டு இங்கிலாந்தில் பாரசீக மொழி கற்பிக்கப்பட வேண்டுமென்பதை அவர் வன்மையாகக் கூறி வந்தார். வங்காளத்தில் பல ஆண்டுகள் உண்மையுடனும் திறம்படவும் பணியாற்றிய காரணத்தால், 1768-ல் சென்னை ஆலோசனைக் குழுவில் அவருக்கு இடம் கிடைத்தது. அடுத்த ஆண்டில் அவர் இந்தியாவுக்குப் புறப்பட்டார். வழியில் நோய்வாய்ப்பட்ட பொழுது இவருக்கு இம்ஹாப் (Imhoff) என்ற மாதின் தொடர்பு ஏற்பட்டது. அவள் ஒரு ஜெர்மென் ஓவியக்காரரின் மனைவி. அக் கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் விரும்பவில்லை. ஆகவே, ஹேஸ்டிங்ஸ் 1777-ல் அவளை மணந்தார். நண்பர்களின் மனைவிமார்களைக் கற்பழிக்கும் ஆற்றல்தான் ஹேஸ்டிங்ஸிடம் உண்டு என்று கிளைவ் குறிப்பிட்டிருப்பது போதுமான ஆதாரமற்ற கூற்றாகும். 1769-ல் ஹேஸ்டிங்ஸ் சென்னைக்கு வந்து சேர்ந்தார். அவ்வமயம் முதல் மைசூர்ப் போர் முடிந்து விட்டது. சென்னை மாகாணத்தின் அரசியலில் சிறப்பான பங்கை அவர் பெறவில்லை ஆனால் கம்பெனியின் வாணிக முறையை மாற்றி அமைத்து இலாபத்தைப் பெருக்கியதால் தாய் நாட்டினர் அவரைப் பாராட்டினர். ஆகவே, 1772-ல் வில்லியம் கோட்டையின் கவர்னர் பதவி அவருக்குக் கிடைத்தது.

ஆட்சி முறைச் செய்திகள் : கிளைவ் 1767-ல் இந்தியாவை விட்டகன்ற பிறகு வங்காளத்தில் சீர்கேடுகள்

பெருகின என்பதை நாமறிவோம். அதற்காகக் கம்பெனி யார், தாம் 'திவான்' என்ற முறையில் செயலாற்ற வேண்டியது இன்றியமையாதது எனத் தீர்மானித்தனர். அதனை நிறைவேற்றும் பொறுப்பு வாரன் ஹேஸ்டிங்ஸுக்கு ஏற்பட்டது. பஞ்சத்தால் துயருற்ற மாகாணத்தில் வளமான வாழ்க்கையை அமைக்கும் பெரிய கடமையை அவர் மேற்கொள்ள நேர்ந்தது. அவருக்கு ஏற்பட்டிருந்த சிக்கலான நிலைமையை அவரே சிறப்பித்துள்ளார்:— "நான் வங்காளத்தில் வந்திறங்கியவுடன் ஆங்கில அரசாங்கம் ஒரு பெரிய செல்வம் மிக்க இராச்சியப் பகுதியைப் பெற்றிருந்ததைக் கண்டேன். ஆனால் ஒழுங்கான அமைப்பு மட்டும் அங்கு இல்லை. ஒழுக்க வரையறையில்லாக் குழப்பம் மேலிட்டிருந்தது. அரசியல் அதிகாரம் எந்த மூலத்தானத்திலிருந்து எழுந்ததோ அந்த மூலத்தானத்திலேயே அதைத் திருப்பி அமைக்க வேண்டியிருந்தது. ஒளி மறைவானதும் ஆற்றலற்றதுமான செல்வாக்கினால் நடைபெற்று வந்த அதிகாரத்தை நேர் முறையில் மேற்கொள்ள வேண்டியிருந்தது. பொது வாய்தா வரிகளை வசூலித்து நிர்வாகம் செய்ய ஒரு ஒழுங்கான திறம்பட்ட வழியை வகுப்பதும் இன்றியமையாததாயிருந்தது. சிவில், குற்றத்துறை நீதிமுறை நிர்வாகத்திற்காக நிலையான மன்றங்களை ஏற்படுத்த வேண்டியுமிருந்தது. நிர்வாகம், நீதிமுறை சம்பந்தமான அரசியல் தொடர்புகளை வலுப்படுத்திப் பயனுள்ளதாக்க வேண்டியிருந்தது. பணச் செலவாணி குறையாதபடி பார்த்துக் கொள்வதுடன் இங்கிலாந்துக்கும் செல்வத்தில் ஒரு பகுதியை மாற்ற வேண்டியிருந்தது."* வாரன் ஹேஸ்டிங்ஸிடம் ஆட்சிமுறைத் திறமை மிகுதியாக இருந்தது. வங்காளத்தின் சாதனங்களையும் தேவைகளையும் அவர் நன்கு அறிந்திருந்தார். அவருடைய அதிகாரிகள் பல வழிகளிலும் சிறந்த சீர்திருத்தங்களைச் செய்யுமாறு அவருக்குக் கற்பித்திருந்தனர். இயக்குநர்கள் அவருக்கு அடிக்கடி எழுதியும்

---

* 59, பக். 26.

வந்தனர்:— "தாராளமான மனப்பான்மையுடன் அரசியலை நடத்துக; மிகுதியான செல்வத்தை அனுப்புக; சிறந்த முறையில் நீதியைச் செலுத்துக; சுற்றுவட்டாரத்திலுள்ள அதிகாரிகளிடம் தக்கவழியில் நடந்துகொள்க. மிகுதியாகப் பொருள் அனுப்புக." என்பது போன்ற ஆணைகளை அவர் பெற்றுவந்தார். ஆனால் வாரன் ஹேஸ்டிங்ஸ் தாம் பொறுப்பேற்றிருந்த பெரிய கடமைகளின் இயல்புக்கு ஏற்ப அதிகாரங்களைப் பெற்றிருக்கவில்லை. குற்றம் புரிந்தோர் பலரை அவர் கண்டார். ஆனால் அவர்களோ, இயக்குநர்கட்கோ அல்லது அவர் தம் நண்பர்கட்கோ உறவினராக இருந்தனர்! சில இயக்குநர்கள் இந்தியாவில் தமது பணியாளர் தண்டனை பெறுவதை விரும்பவில்லை. அவர்கள் இழைத்த குற்றங்களைச் சகித்துக்கொள்ள முற்பட்டனர். ஹேஸ்டிங்ஸ், இடையூறு நிறைந்த தமது நிலைமையை உணர்ந்துதான் இருந்தார். குறிப்பாக நிதி நெருக்கடி ஏற்பட்டிருந்ததை அறிவார். பொருளை நாடியே, பிறகு அவர் சில நேர்மையற்ற செயல்களை மேற்கொள்ள நேர்ந்தது. பாட்னாப் படுகொலையின் விளைவாக அனுபவம் வாய்ந்த அலுவலர் பலர் இறந்துவிட்டனர். ஆதலால் ஆற்றலும் தகுதியுமற்ற பல இளைஞர்கள் பணித்துறையில் செயலாற்றி வந்தனர். ஆலோசனைக் குழுவில் பன்னிரண்டு உறுப்பினர் இருந்தனர். அவர்களில் பெரும்பான்மையினரின் உடன்பாட்டைப் பெற்றே ஹேஸ்டிங்ஸ் தமது சீர் திருத்தத்திட்டத்தை நிறைவேற்ற இயலும். ஆனால் ஹேஸ்டிங்ஸ் தமது கூட்டாளிகளிடைத் தமது ஆதிக்கத்தை அமைப்பதில் வெற்றிகண்டார். 1774-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் புதிய ஆலோசனையாளர்கள் வரும் வரையில் அவருடைய செயலாற்றும் உரிமை பெரும்பாலும் கட்டுப்பாடற்றிருந்தது. முறைப்படுத்துஞ் சட்டம் தோன்றும் வரை ஆலோசனைக் குழுவின் உறுப்பினர் மிகுதியாக இருந்ததால் (பன்னிரண்டு) கவர்னரின் ஆதிக்கம் எளிதில் ஏற்பட முடிந்தது. பின்னர் நிலைமை மாறிவிட்டது.

இரட்டை ஆட்சியின் முடிவு: முதன் முதலில் ஹேஸ்டிங்ஸ் இரட்டை ஆட்சியை ஒழித்தார். இயக்குநர் களும் அதற்கு அனுமதி அளித்தனர். நிலவரி வசூல்முறை மாற்றி அமைக்கப்பட்டது. பொருள்துறையிலும் முறை வழங்கலிலும் மாறுதல்கள் தோன்றின. ஹேஸ்டிங்ஸ் தமது விருப்பம்போல் சீர்திருத்தங்களைச் செய்து கொண் டிருக்க முடியவில்லை. ஆதலால் குற்றவாளிகளைக் கண்டு பிடித்துத் தண்டனை அளிக்கும் பொறுப்பு இந்திய அலுவலரிடமே விடப்பட்டிருந்தது. பிறகு, காரன்வாலிஸ் குற்றத்துறையைத் தம் பொறுப்பில் ஏற்றுக்கொண்டார். உதவி நாவாப்புகள் (முகம்மது ரசாகான், ஷிதப்ராய்) இருவரையும் ஹேஸ்டிங்ஸ் பதவியினின்று நீக்கினர். பொதுப்பணத்தை மோசம் செய்தவர்களென அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டது. நீண்ட விசாரணைக்குப் பிறகு அவ்விருவரும் (ரசாகான் வங்காளத்திலும், ஷிதப் ராய் பீஹாரிலும் உதவி நவாப்புகளாக இருந்தவர்கள்) குற்றவாளிகளல்லர் என்று தீர்ப்பு கூறப்பட்டது. நவா பின் அமைச்சராயிருந்து பின்பு இழிவுபடுத்தப்பட்ட மகா ராச நந்தகுமார் அவர்களது வழக்கில் கலந்துகொண்டார். அவர் ஹேஸ்டிங்ஸின் பகைவரானதால் இருவருக்கு மிடையே இருந்த பகைமை முற்றியது.

குறைப்பு: நவாபுக்கு 53 லட்ச ரூபாய் கொடுக்கப் பட்டதாக முன்னர்ப் பார்த்தோம். அத்தொகை பிறகு குறைக்கப்பட்டதால் 32 லட்ச ரூபாயாக இருந்து வந்தது. ஹேஸ்டிங்ஸ் அதையும் பாதிக்குக் குறைத்து விட்டார். நவாபின் குடும்பச் செலவையும் குறைத்தார். மீர்ஜா பரின் மனைவி மனிபீகம் என்பாளை, நவாப்பின் பாது காவலராக அமர்த்தினர். நந்தகுமாரின் மகனரான குருதாஸ் நாவபின் குடும்ப திவான் ஆனர். அவ் வமயம் முகலாயப் பேரரசர் மராட்டியரின் ஆதரவி லிருந்தார். அவர் அவர்களுக்கு, கோரா, அலஹபாத் மாவட்டங்களை, மனமின்றிக் கொடுத்திருந்தார். பேரர சருக்கு அளித்துவந்த 26 லட்ச ரூபாயை ஹேஸ்டிங்ஸ்

நிறுத்திவிட்டார். மேலும் மேற்கூறிய இரண்டு மாவட்டங்களை அயோத்தி நவாப்பிடம் 50 லட்ச ரூபாய்க்கு விற்றார்.

வருவாய் முறை : 1770-ல் முர்ஷிதாபாத்திலும் பாட்னாவிலும் அரசியலார், அரசிறைக் கழகங்களை (Revenue Boards) அமைத்திருந்தனர். இரட்டை ஆட்சி மறைந்தவுடன் அவைகளும் மறைந்தன. அதற்குப் பதிலாக கல்கத்தாவில் புதிய அரசிறைக் கழகம் அமைந்தது. கவர்னரையும் ஆலோசனையாளரையும் உறுப்பினராகக் கொண்ட அக்கழகம் வரி வசூலை மேற்பார்வை செய்து வந்தது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு ஆங்கிலேயக் கலெக்டர் பணி ஏற்றார். அவருக்கு உதவி செய்ய இந்திய திவான் அல்லது நிதி ஆலோசகர்கள் உண்டு. வரி வசூல் செய்யும் பொறுப்பு அவர்களைச் சேர்ந்தது. அரசிறைக் கழகத்தினருக்கு உதவியாக மாதம் 5000 ரூபாய் ஊதியம் பெற்ற ஓர் இந்திய அதிகாரி இருந்தார். முர்ஷிதாபாத்திலிருந்த கருவூலம் கல்கத்தாவுக்கு மாறியது. அதன் அமைப்பும் சீர்திருந்தியது. அரசியல் கணக்குத் துறைத் தலைவர் ஒருவரும் அமர்த்தப் பெற்றார். இவ்வாறு கல்கத்தா, 1772-ல் வங்காளத்தின் தலைநகராயிற்று. சிறிது காலம் பின்னர்ப் பிரிட்டிஷ் இந்தியா முழுவதும் அதைத் தலைநகராய்க் கொண்டனர். நிலங்களின் உண்மை மதிப்பை அறிந்து கொள்வதற்காக அரசிறைக் கழகம், அவற்றை ஐந்தாண்டுக் காலத்துக்கு ஏலத்தின் மூலம் குத்தகைக்கு விட்டு வந்தது. குடியானவர்களுக்கு நன்மை தரும் சில சீர்திருத்தங்கள் பிறந்தன. சில மேல்வரிகளையும் சிலவகைத் தண்டங்களையும் அரசியலார் நீக்கினர்; வாடகை உயர்வதைத் தடுத்து வந்தனர். அவ்வாறெல்லாமிருந்தும் வருவாய்முறை பெருந்தோல்வி யடைந்தது. பல சமீந்தார்கள் தவறுகளிழைத்தனர். ஒழுங்கான முறையில் வரிகள் வசூலாகவில்லை. வரி மதிப்பீடு சரியான படி அமையவில்லை. இதுவே தோல்விக்கு முக்கிய காரணமாகும். ஆட்சியாளர் அதை உணர்ந்து ஆவன செய்யாமல், இயக்குநர்கள் கூறியவாறெல்லாம் ஆட்சி முறையில்

மாறுதல்களைப் புகுத்தி வந்தனர். 1774-ல் புதிய குழுக்கள் சில அமர்த்தப்பெற்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்திய அதிகாரி ஒருவர், கலெக்டருக்குப் பதிலாகச் செயலாற்றத் தொடங்கினர். முன்னரே விதிக்கப்பெற்ற வரித் தொகையை இவர்கள் வசூலிக்க வேண்டும். ஹேஸ்டிங்ஸ், மாவட்டங்களை ஆறு பெரும் பகுதிகளாகப் பிரித்து அவைகளைப் பார்வையிட ஆங்கில ஆணையாளரை அமர்த்தினர். ஒவ்வொரு பகுதியும் ஐந்து உறுப்பினர்களடங்கிய ஒரு மாகாணக் குழுவினுல் நிர்வகிக்கப்பட்டு வந்தது. அவ்வுறுப்பினர்கள் மேன் முறையீடுகளைத் தீர்க்கவும் நில வருவாய்க் கணக்குகளைப் பரிசீலனை செய்யவும் அதிகாரம் பெற்றிருந்தனர்.

முறை வழங்கல்: 1772-ல் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு சிவில் நீதி மன்றமும் ஒரு கிரிமினல் நீதி மன்றமும் அமைந்தன. அவை முறையே கலெக்டர், ஒரு இந்திய அதிகாரி ஆகியோரின் கீழ் செயலாற்றின. அவற்றிற்கு மேற்பட்ட இரண்டு முறையீட்டு நீதி மன்றங்கள் கல்கத்தாவில் அமையப் பெற்றன. அவற்றில் ஸதர் - திவானி (சிவில்) அதலத் (நீதிமன்றம்) என்பது மாகாணம் முழுமைக்கும் உயர்தர சிவில் நீதிமன்றமாகும். அதில் கவர்னரும் அவருடைய ஆலோசனையாளர்களில் இருவரும் நீதிபதிகளாயிருந்தனர். மற்றொரு உயர்நீதி மன்றமாகிய ஸதர் நிஸாமத் (கிரிமினல்) அதலத்தில் கவர்னரும் ஆலோசனைக் குழுவினரும் அமர்த்திய ஒரு இந்திய நீதிபதி தலைமைதாங்கினர். அவ்விரு நீதிமன்றங்களில் முறை வழங்குவோருக்கு உதவிசெய்ய தத்தம் சட்டங்களை விளக்கிக்கூறும் இந்துச்சட்ட வல்லுநரையும் முகம்மதிய மௌல்விகளையும் ஹேஸ்டிங்ஸ் அமர்த்தினர். மேலும் சட்டங்களைத் தொகுக்கவும் அவர் ஏற்பாடு செய்தார். அவுரங்கசீப் காலத்திலேயே நன்கு தொகுக்கப்பட்டிருந்த முகம்மதியச் சட்டங்களைப் பயன் படுத்திக்கொண்டார். பத்து சிறந்த பண்டிதர்களைக் கல்கத்தாவுக்கு வரச்செய்து வடமொழியில் இந்துச்சட்டங்களைத் தொகுக்கச் செய்தார்.

அது பாரசீகமொழியிலும் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டது.* இவ்வாறு, ஹேஸ்டிங்ஸ் தமது பதவிக் காலத்தின் தொடக்கத்திலேயே முறை வழங்கலில் அரிய சீர்திருத்தங்களைப் புகுத்தினர். மேலும் அவருக்கு உரிமை வழங்கப்பட்டிருப்பின் வங்காளத்தில் மேலும் சிறந்த நீதி முறையை அவர் ஏற்படுத்திப் பின் வந்த காரன்வாலிஸ்ஸின் கடமைகளை ஓரளவு குறைத்திருப்பார் என்று கூறலாம். இந்திய இலக்கியத்தில் ஹேஸ்டிங்ஸுக்கு நாட்டமிருந்தது. சில மொழிபெயர்ப்புப் பகுதிகளை அவர் தம் தாய் நாட்டினருக்கு அனுப்பினர். ஆங்கிலேயர் இந்திய நாகரிகத்தைப் பற்றிக் கொண்டிருந்த தவருன கருத்துக்களைத் திருத்த வேண்டுமென்பதே அவர் விருப்பமாகும்.

வாணிகம் முதலிய செய்திகள் : உண்ணுட்டு வாணிகத்துக்கு இடையூருக இருந்த பல வரிகளை ஹேஸ்டிங்ஸ் நீக்கினர். இந்தியர் பொருள்கட்கும் இந்தியரல்லாதார் பொருள்கட்கும் 2½ சதவீதம் என்ற ஒரேவகையான சுங்கவரியை விதித்தார். மீர்காசிமுக்கு சினத்தை மூட்டிய பல சீர்கேடுகள் மீண்டும் தோன்ருத வகையில் சட்டமியற்றினர். நெசவாளரின் இடையூறுகளைப்போக்கி அவர்தம் பொருளாதார நிலை உயர வழி வகுத்தார். உப்பு, அபினி வாணிகத்தில் அரசியலார் தனிக்கருத்துச் செலுத்துமாறு செய்தார். அதனுல் காலப் போக்கில் நற்பயன் விளைந்தது. காசு முறையிலும் அவர் கவனம் சென்றது. அஞ்சற் கட்டணத்தை முன்னதாகவே செலுத்திவிடும் முறையை ஹேஸ்டிங்ஸ் ஏற்படுத்தியது மிகவும் பாராட்டத்தக்கது. இங்கிலாந்தில் 1840-ல் ரோலண்டு ஹில் என்பார் இயற்றிய சீர்திருத்தங்கள் சிலவற்றை ஹேஸ்டிங்ஸ் 1774-ம் ஆண்டிலேயே செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கு மிடையே செங்கடல் வழியாக செய்திப்

---

* அச்சட்டத்தொகுப்பை ஹால்ஹெட் என்பார் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார் (1775).

போக்குவரவு அமைக்கும் சிந்தனை 1778-ல் அவர் மனத்தில் எழுந்தது. 1774-ல் அவர் ஜார்ஜ் போகிள் என்பாரை பூதானுக்கு அனுப்பி இந்திய—திபெத்திய வாணிக வாய்ப்புகளை ஆராய முற்பட்டார். நிலநூல் ஆராய்ச்சியைப் பெருக்க வேண்டுமென்பதும் அவர் நோக்கம். முடிவில் பூதான் மன்னர் ரங்கபுரியுடன் வாணிகம் நடத்தும் உரிமை பெற்றார். கல்கத்தாவின் காவல் அமைப்பை ஹேஸ்டிங்ஸ் வன்மைப் படுத்தினர்; கொள்ளைக்காரர்களைக் கடுமையாகத் தண்டித்தார்; நாட்டில் எங்கும் திரிந்துகொண்டு சிறுவர்களைத் தூக்கிச் செல்வதுபோன்ற முறையற்ற கொடிய செயல்களைச் செய்துவந்த சந்நியாசிக் கூட்டத்தாரை வங்காளத்திலிருந்து விரட்டினர். கல்கத்தாவில் வங்கி ஒன்று ஏற்பட்டது. திருமணவரிகள் நீக்கப்பட்டதாகவும் குறிப்பு உள்ளது. ஆனல் கம்பெனியின் பணித்துறையைச் சீர்திருத்துவது எளிய செயலாக இல்லை. பல தனித்த இடையூறுகள் ஹேஸ்டிங்ஸுக்கு ஏற்பட்டிருந்தன. பிற்காலத்தில் காரன்வாலிஸ் பெற்றிருந்தது போன்ற தாய் நாட்டு ஆதரவு ஹேஸ்டிங்ஸுக்கு கிடைக்கவில்லை. காரன்வாலிஸ், ஊழல்களை ஒழிக்க மிக்க முயற்சிகள் எடுத்துக்கொண்டதாக அறிகிறோம். ஆகவே ஹேஸ்டிங்ஸ் அம்முயற்சியில் நிறைவான வெற்றியைப் பெறவில்லை என்பது தெளிவாகிறது. சில சீர்திருத்தங்களைச் செய்யுமாறும் சிலவற்றைச் செய்யக்கூடாது என்றும் ஆணைகளிட்டு இயக்குநர்கள் ஹேஸ்டிங்ஸைக் கட்டுப்படுத்தி வந்தனர். அவ்வாறிருந்தும் அவர் கவர்னராயிருந்த காலத்தில் (1772–4) அவருடைய ஆற்றல் போற்றத்தக்கதாயிருந்தது என்பதில் ஐயமில்லை. அவர் தலைமை கவர்னராக (கவர்னர்-ஜெனரல்) ஆனபிறகு தமது திட்டங்களை உரிமையுடன் நிறைவேற்ற முடியாத நிலையிலிருந்தார். அவருடைய மிகப்பெருஞ் செயல்கள் அவர் கவர்னராக இருந்தபொழுதுதான் ஆற்றப்பட்டன என்பன சிலர் கருத்து. அவரைப் பற்றிய பின்வரும் குறிப்பு நோக்கத்தக்கது:—

"அவர் பதவி ஏற்குங்காலத்தில் ஆங்கிலேயர் நாட்டுக்கு இன்னல் தருபவர்களாகவும் அழிவுபாடு விளைவிக்கும் மூலகாரணமாகவும் இருந்தனர். அவர்களைச் சீர்திருத்த இயலுமா என்ற ஐயமும் எழுந்தது. ஹேஸ்டிங்ஸ் அவர்களுக்குப் புது வாழ்வு தந்தார். அவர் தம் அரசியலில் ஒழுக்கத்தையும் ஆற்றலையும் புகுத்தினர், வாணிகக் களங்களில் உரிமையும் நீதிமன்றங்களில் அருளும் பெருகச்செய்தார். வருந்தத்தக்க நிலையிலிருந்த உழவரைக் காப்பாற்ற வேண்டுமென்ற ஆர்வம் அவருடைய அரசியல் வல்லமைக்குச் சிறந்த சான்ருகும். வங்காளத்தில் அவர் ஆங்கில ஆட்சியைக் காப்பாற்றினது மட்டுமன்று; வங்காளத்தையே காப்பாற்றினரென்றே சொல்லவேண்டும்." (மாங்டன் ஜோன்ஸ்).

பகுதி 2

ரோஹில்லாப் போர் (1774)

ரோஹில்கண்டின் நிலை : 18-ம் நூற்ருண்டின் முற்பாதியில் ரோஹில்கண்டின் தோற்றத்தைப்பற்றியும் முன்னர்ப்பார்த்தோம். அந்நூற்ருண்டின் நடுப்பகுதியில் சாப்தர் ஜங் மராட்டியரின் உதவிகொண்டு அந்நாட்டைக் கைப்பற்றிஞரென்றும் அறிந்தோம். 1759-ல் மராட்டியர், II-ம் காஸியுத்தீனுடன் சேர்ந்துகொண்டு அந்நாட்டைத் தாக்கினர். அவ்வமயம் சாப்தர் ஜங்கின் மகஞரான ஷூஜா-உத்-தௌலா (1754-75) ரோஹில்லருக்கு உதவிஞர், ஆதலால் படையெடுப்பாளர் பின்வாங்கினர். பானிப்பட்டுப்போருக்குப் பிந்திய பத்து ஆண்டுகளில் ரோஹில்கண்டில் அமைதியும் செழிப்பும் ஓங்கியிருந்தன. அங்கு ஆட்சி புரிந்துவந்த ஹபிஸ் ரஹ்மத்கான் (பி. 1710—இ. 1774) சிறந்த சீர்திருத்தங்களால் நாட்டைச் செழிப்புறச் செய்திருந்தார். ரோஹில்லா அரசை ஏற்படுத்திய அலிமுகம்மது (1748-ல் இறந்தார்) வின் பிள்ளைகளுக்கு அவர் ஹபிஸ் (Hafiz) அல்லது பாதுகாவலராக ஆட்சி நடத்திஞர். அவர் முயற்சிகளால் பெரில்லி சிறந்த வாணிக நகராகத் திகழ்ந்தது ; இந்துக்களும் நன்மை பெற்றனர்.

ரோஹில்லாப் போர் : மாதவராவ், பேஷ்வாவாக இருந்த காலத்தில் (1761—72) மராட்டியர் வட இந்தியாவில் பல இடங்களைத் தாக்கி வந்தனர். முகலாயப் பேரரசரும் அவர்களுடைய பாதுகாவலுக்கு உட்பட்டார். பேரரசர் 1771-ல் அலகாபாத்திலிருந்து புறப்பட்டு மராட்டியர் உதவியுடன் தில்லிக்குச் சென்ருர். அவரைக் கட்டாயப்படுத்தி கோரா, அலகாபாத் பகுதிகளைத் தாம் பெற்றனர். ஹேஸ்டிங்ஸ் அதை விரும்பவில்லை. ரோஹில்லர் பானிப்பட்டுப் போரில் மராட்டியருக்கு எதிராகச் சண்டை

யிட்டனர். அதனுல் பழிதீர்த்துக்கொள்ளும் நோக்குடன் மராட்டியர் 1772-ல் ரோஹில்கண்டில் படை எடுத்தனர். அயோத்தியும் ரோஹில்கண்டும் தமது பொதுப் பகைவரான மராட்டியருக்கு எதிராக உடன்பாடு செய்து கொண்டன. அவ்வுடன்படிக்கை ஆங்கிலப் படைத்தலைவர் ராபர்ட் பார்க்கர் (Barker) என்பாரின் முன்னிலையில் செய்துகொள்ளப்பட்டது. அதன்படி ரோஹில்லரிட மிருந்து அயோத்தி நவாப் நாற்பது லட்ச ரூபாயைப் பெற்றுக்கொண்டு மராட்டியரை ரோஹில்கண்டிலிருந்து அகற்ற வேண்டும் என முடிவாயிற்று. பார்க்கரும் ஷுஜா-உத்-தௌலாவும் சேர்ந்து இருந்ததைக் கண்ட மராட்டியர் தம் படைகளை, ரோஹில்கண்டிலிருந்து மீட்டுக்கொண்டனர். அது 1773-ல் நிகழ்ந்தது. ரோஹில்லர் உடன்படிக்கையில் கண்ட தொகையைக் கொடுக்க மறுத்தனர். அவர்கள், மராட்டியப் படைகள் தாமே அகன்றன என்றும் நவாப் அதன் பொருட்டு எதையுமே செய்யவில்லை என்றும் அதற்குக் காரணம் கூறினர். அதே ஆண்டில் வாரன் ஹேஸ்டிங்ஸ் அயோத்தி நவாப்புடன், வாரணுசியில் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டார் (1773) அதன்படி அயோத்தி நவாப், கோரா, அலகாபாத் மாவட்டங்களைப் பெறுவதென்றும், அதற்குப் பதிலாக அவர் ஆங்கிலேயருக்கு 50 லட்ச ரூபாய் கொடுப்பதென்றும் முடிவாயிற்று. மேலும் நவாப் ரோஹில்கண்டைத் தாக்கிக் கைப்பற்றுவதற்கு ஆங்கிலேயர் உதவிசெய்ய உடன்பட்டனர். அப்போர் முடிந்த பிறகு 40 லட்ச ரூபாயை நவாப் ஆங்கிலேயருக்கு அளிக்க வேண்டும். ஆங்கிலேயப் படை உதவுவதாலுல் அப்படைச் செலவுகளை நவாப் ஏற்றுக்கொள்ள வேண்டும். அயோத்தி ஒரு ''இடைப்படு'' நாடானதால் அதை வலிமையுறச் செய்ய வேண்டுமென்பதும் கம்பெனியின் ஆதிக்கத்தைப் (மராட்டியருக்குப் பகையாக) பெருக்க வேண்டுமென்பதும் ஹேஸ்டிங்ஸின் நோக்கங்களாம். ஆங்கிலேயருக்கு அதனுல் பெரும் பொருள் கிடைத்ததாலும் அவர் அச்செய்திகளில் தலையிட்டார். 1774-ல் ஷுஜா-உத்-தௌலாவின் படையும்

ஆங்கிலச் சேனையும் ரோஹில்கண்டைத் தாக்கின. கர்னல் சாம்பியன் என்பார் ஆங்கிலப் படைத் தலைவராயிருந்தார். ரோஹில்லர் வீரத்துடன் போர் புரிந்தனர். மீரான்பூர் க்ாத்ரா (ஷாஜஹான்புரி மாவட்டம், உ. பி.) என்ற இடத்தில் போர் நிகழ்ந்தது. ரஹ்மத்கான் வீர மரணம் எய்தினார். படையெடுப்பாளர் வெற்றிபெற்றனர். நவாபின் படையினர் ரோஹில்கண்டில் கொள்ளையிட்டனர். அந்நாடு அயோத்தியுடன் இணைக்கப்பட்டது. ரஹ்மத்கானின் மூத்த மகனை பெய்ஸுல்லாகான் தமது தந்தையின் மானியமாகிய இராம்பூரைத் (இராமபுரி) தாமே அனுபவித்துக்கொள்ள உரிமை பெற்றார். அவர் வழியினரே இக்காலத்து இராமபுரி நவாப். ஏறத்தாழ 20,000 ரோஹில்லர்களை நவாப் நாடுகடத்திவிட்டார். ரோஹில்கண்டின் உழவர்கள், வெற்றிபெற்றோரின் கீழ் ஆற்றொணாத் துயருற்று வந்தனர். அப்பகுதியில் பிற்காலத்தில் ஏற்பட்ட ஆட்சி முறை, நிலைமையை மேலும் கேடுறச் செய்தது.

ரோஹில்லர் நவாப்புக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றாமையே அப்போருக்குக் காரணம் என்று கூறுவர். எனினும் அதன் பொருட்டு அந்நாட்டையே வென்று கைப்பற்றுவதென்பது முறையற்ற செயலாகும். தற்காப்பு என்ற போர்வையின் கீழ் எத்தகைய அடாத செயலையும் செய்வது நேர்மையன்று. ரோஹில்கண்டை வெல்வதற்கு நேர்மையான முறையில் தக்க அரசியல் காரணம் எதையும் காட்ட முடியாது. அதனால் அயோத்திக்கும் கம்பெனியாருக்கும் பல நலங்கள் கிடைத்தன. ஆனால் கம்பெனிக்கு அதனால் ஏற்பட்ட பழி மறக்கற்பாலதன்று. வலிமையற்ற எல்லைப்புறத்தை கொண்டிருப்பது இடையூறு தரக்கூடியதுதான் ஆனால் சூழ்ச்சித் திறமுடைய கொள்கையைப் பின்பற்றுவது அதைவிடக் கேடானது.* ரோஹில்கண்டின் மீது படையெடுத்தல் இன்றியமையாதது என்பதற்குத் தக்க ஆதாரம் கிடை

* 59, பக். 48.

யாது. பொருள் ஆசை ஒன்றுதான் ஹேஸ்டிங்ஸை அப் போரில் ஊக்கங்கொள்ளச் செய்தது எனலாம். நாவாப் தோற்றுப்போன நாட்டில் விளைத்த அழிவுபாடுகட்கு ஆங்கிலேயர் நேரடியாகப் பொறுப்பாளிகள் அல்லர் எனினும் அவ்வயலவரின் நட்பு உறவுதான் நவாப்பை மனம் போனவாறு செயலாற்றத் தூண்டியது. போருக்கு முன் ரோஹில்லரின் ஆட்சி முறை மிகவும் சிறப்புற்றிருந் தது. மக்கள் பல நற்பண்புகளுடன் விளங்கினர். ஆனால் பின்னர் ஏற்பட்ட அரசியல் பலவகைகளில் சிறப்பற்றது என்பதில் ஐயமில்லை. ரோஹில்லாப் போரைப்பற்றிய ஹேஸ்டிங்ஸின் கொள்கை, பார்லிமெண்டில் பின்னர், அவர் மீது சாற்றப்பட்ட குற்றங்களில் முதன்மையான தாகும். ஆனால் காமன்ஸ் சபை, அக்குற்றத்திற்கு ஆதார மில்லை என்று முடிவு செய்தது. ஆனால் அத்தீர்ப்பின் காரணமாக, வரலாறு கூறும் உண்மையை நாம் மறந்து விட முடியாது. ஹேஸ்டிங்ஸின் கொள்கையைப் பொது வாக, ஆதரித்துவந்த கம்பெனி உரிமையாளர்கள்கூட அவர் ரோஹில்கண்டுடன் கொண்ட தொடர்பைக் குற்ற மற்றது என்று ஏற்றுக்கொள்ளவில்லை. அறிஞர் பர்க் (Burke) ரோஹில்லரின் நற்பண்புகளையும் அவர்கள் அழிக் கப்பட்ட கொடிய முறைகளையும் ஹேஸ்டிங்ஸின் கருணை யற்ற தன்மையையும் உள்ளத்தை உருக்கும் வகையில் விளக்கியுள்ளார்.* தமக்கு எவ்வித இடையூற்றையும் செய் யாத ரோஹில்லரைத் தாக்கியது ஹேஸ்டிங்ஸின் பெருங் குற்றமென்று கருதப்படுகிறது. மேலும் பொருளாசை யால் அவர் அச்செய்தியில் தலையிட்டார் என்பது உண்மை. தலையிட்ட அவர், மனிதத்தன்மையற்ற கொடிய வழிகளைப் பின்பற்றுமலிருக்குமாறு நவாபைக் கட்டுப் படுத்தி இருக்கலாம். அதையும் அவர் செய்தாரில்லை. ஹேஸ்டிங்ஸே தமது தவற்றைப் பின்னர் உணர்ந்தி ருப்பாரென்று நம்புகிறோம். "ரோஹில்லாப் போரைப்

---

* Burke's Works (Bohr's British Classics), VIII. (1868) P. 428.

பொறுத்தவரை ஹேஸ்டிங்ஸின் தீர்ப்பு தவறானது என்பதில் ஐயமில்லை."[1] ஆயினும் ஹேஸ்டிங்ஸின் ரோஹில்லாப் போர்க் கொள்கையில் வெட்கித் தலைகுனிய வேண்டிய செய்தி எதுவுமில்லை என்று குறிப்பிடுகிறார் வேறொரு அறிஞர்.[2]

---

1. *109*, II. பக் *231.*
2. ஸ்மித், (ஆக்ஸ் போர்டு) இந்திய வரலாறு, பக். *518.* (Smith, Ixford History of India)

பகுதி 3

முறைப்படுத்துஞ் சட்டம் (1773)
(ஒழுங்குமுறைச் சட்டம்)

1773-ம் ஆண்டுக்கு முற்பட்ட அரசியல் அமைப்பு: 17-ம் நூற்றாண்டின் முடிவுவரை, கம்பெனியின் அதிகார வளர்ச்சி தாய்நாட்டு மன்னரின் விருப்பத்தைப் பொறுத்த தாயிருந்தது. ஆனால் அடுத்த நூற்றாண்டில் ஆங்கிலப் பார்லிமெண்ட் கம்பெனியின் செய்திகளில் மன்னரின் தனிச்சிறப்புரிமைகளைக் கட்டுப்படுத்தித் தனது அதிகாரத்தை நிலைப்படுத்தியது. 1770-ம் ஆண்டிலிருந்து கம்பெனியின் செயல்கள் முன்பை விட மிகுதியான அளவுக்குப் பார்லிமெண்டின் கருத்தைக் கவர்ந்தன. 1773-ம் ஆண்டில் நிறைவேறிய முறைப்படுத்துஞ் சட்டம், கம்பெனியின் அரசியலமைப்பு வரலாற்றில் ஒரு புதிய படலத்தைத் தொடங்குகிறது. முதலில், ஒரு கவர்னரின் தலைமையின் கீழ்த் தாய்நாட்டில் 24 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவும் பங்குதாரர்களைக் கொண்ட ஒரு பொதுச் சபையும் செயலாற்றி வந்தன. இந்தியாவில் ஆங்கிலக் குடியேற்றங்கள் மூன்று பிரிவினவாய் இருந்தன (சென்னை, பம்பாய், கல்கத்தா). ஒவ்வொன்றிலும் ஒரு ஆட்சித் தலைவருடன் ஒரு ஆலோசனைக் குழு (அனுபவம் மிக்க வணிகர்களைக் கொண்டது) செயலாற்றி வந்தது. 17-ம் நூற்றாண்டின் முடிவில் தாய்நாட்டிலிருந்த பழைய குழு இயக்குநர் சபை என்ற பெயருடன் ஆணை செலுத்தி வந்தது; பழைய பொதுச்சபை, உரிமையாளர் சபை எனப் பெயர் பெற்றது; அதில் 500 பவுன்கள் மதிப்புள்ள பங்குகளைப் பெற்றவர்கட்கு மட்டும் வாக்கு உரிமை உண்டு.

இயக்குநர் குழுவில் 2000 பவுன்கள் மதிப்புள்ள பங்குகளைப் பெற்றவருக்கே வாக்கு உரிமை இருந்தது. இதன்

24 உறுப்பினர்களும் ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்தெடுக்கப் பெறுவர்; அவர்களே பெரும்பாலும் கம்பெனியின் அலுவல்கள் யாவற்றையும் செயலாற்றி வந்தனர். இவர்கள் தீர்மானங்களை உரிமையாளர் சபை மாற்றிவிட முடியும். இந்தியாவிலிருந்த முப்பகுதிகளும் தனித்தனியே உரிமையுடன் விளங்கின. ஒவ்வொன்றும் தாய்நாட்டுக்குமட்டுமே பொறுப்பு வாய்ந்து விளங்கியது. ஒவ்வொன்றிலும் 12 பேரடங்கிய ஆலோசனைக் குழுவின் உடன்பாடு பெற்று (அதாவது பெரும்பான்மையரின் உடன்பாடு) பெற்று கவர்னர் செயலாற்றி வந்தார்,

பார்லிமெண்ட்டு தலையிடுதல் : பார்லிமெண்ட்டு கம்பெனியின் அலுவல்களில் தலையிடவேண்டியது இன்றியமையாததாயிற்று. அதற்குக் காரணமாயிருந்த சூழ்நிலையை இங்கே எழுதலாம். கிளைவின் வெற்றிகளால் கம்பெனியின் அரசியல் அதிகாரத்திலும் வாணிகத்திலும் மிகுந்த முன்னேற்றம் ஏற்பட்டது. அதைக்கண்ட பார்லிமெண்ட்டு உறுப்பினர்கள் இந்தியச் செய்திகள் கூட்டுக் குழுவின் தனிப்பொறுப்பில் விடத்தக்கவை அல்ல என்பதை உணர்ந்தார்கள். கம்பெனியின் அலுவல்கள் பொதுவாகச் சீர்கேடு அடைந்ததை அவர்கள் கவலையுடன் நோக்கினர். மேலும் சென்னை, பம்பாய் கவர்னர்கள் யாதொரு விதமான தொடர்பும் ஒற்றுமையும் இன்றித் தம் தம் விருப்பம் போல் நடந்து வந்ததையும் உற்று நோக்கினர். கம்பெனி, நாடு கவர்ந்துகொண்டும் பிறரிடமிருந்து பொருள் பறித்துக்கொண்டும் இருந்ததைக்கண்ட பிறகும் அவர்கள் வாளாவிருப்பது எதிர்பார்க்கக் கூடியதன்று. இங்கிலாந்திருந்து இந்தியாவிற்கு வந்த பலர் தம் தாய் நாட்டிற்குத் திரும்புங்கால் மிகுதியான அளவுக்குச் செல்வத்தைக் கொண்டு சென்றனர். ஆங்கிலேய நவாப்புகள் எனச் சிறப்பிக்கப்படும் அவர்களை இங்கிலாந்தின் பொதுமக்கள் வெறுத்தனர். நாவாப்புகள் தமது புதிய செல்வம் காரணமாக அந்நாட்டில் பெரும் போக வாழ்க்கை வாழ்ந்து பிறருக்கு இடையூறு விளைவித்தனர்.

இங்கிலாந்தில் சில பொருளாதாரச் சீர்கேடுகள் தோன்றவும் அவர்கள் காரணமாயினர். "முட்டைகள் முதல் சிதைவுற்ற பரோக்கள்வரை பலவற்றின் விலை உயர்ந்தது. பிறர் பழிக்கத்தக்க வகையில் நவாப்புகள் தமது புதிய செல்வத்தைச் செலவழித்து வந்தனர்." கொடுமையில் கடைப்பட்ட இந்தியச் செல்வம் இங்கிலாந்தின் நாயர்க்கும் பேயர்க்கும் கள்ளுக்கும் பிறவுக்கும் ஆயிற்று. பண்புடைய ஆங்கிலேயர் மனம் அதைக்கண்டு பதைத்தது. இந்தியாவில் கம்பெனியார் இழைத்த கொடுமைகளுக்காக இங்கிலாந்து அமெரிக்காவை இழக்குமாறு கடவுள் நீதி வழங்கினுர் என்று கௌப்பர் கூறியிருப்பது நோக்கற்பாலது. கிளைவ் திவானியைப் பெற்றது முதல் கம்பெனிக்குப் பொற்காலம் தோன்றியதாக எண்ணி அதன் உரிமையாளர்கள் அகமகிழ்ந்தனர். பங்கு ஊதியம் படிப்படியாக உயர்ந்தது 1776-ல் பத்து சதவீதத்துக்கும் அடுத்த ஆண்டில் பனிரண்டரை சதவீதத்துக்கும் அது உயர்ந்தது. கம்பெனி நாடு கவரும் முயற்சியில் ஈடுபடுவது முறையானதா என்ற கேள்வி இங்கிலாந்தில் பிறந்தது. 1777-ல் கம்பெனி இந்தியாவில் ஓங்கிவளரும் தன் இராச்சியத்துக்குக் கப்பமாகத் தாய்நாட்டு அரசியலாருக்கு ஆண்டுக்கு 400,000 பவுன்கள் செலுத்த வேண்டுமென்று பார்லிமெண்ட்டு சட்டமியற்றியது. கிளைவ் அச்சட்டத்தைக் கண்டித்தார். கம்பெனிக்குப் பொருள் நெருக்கடி ஏற்பட்டிருந்த காலத்திலும் அதன் பணியாளர்கள் மிகுந்த செல்வத்தைப் பெற்றுவந்தனர். மைசூர் போர் (1769), வங்காளப் பஞ்சம் (1770), கம்பெனியின் பொருளாதார நெருக்கடி முதலியன பார்லிமெண்டின் தலையீட்டை இன்றியமையாததாக்கின. "**கிளைவ் விசாரணை**" ஆங்கிலேயருக்குக் கம்பெனியின் செய்திகளில்' மிகுந்த அக்கரையைத் தூண்டிற்று. கம்பெனியின் இடையூறுகள் மிகுதியாகவே, இயக்குநர்கள் பார்லிமெண்ட்டை ஒரு பெருந் தொகை கடனுகக் கொடுக்குமாறு கேட்டனர். இதைக் காரணமாகக் கொண்டு பிரதம அமைச்சர் நார்த் பிரபு கம்பெனியின் அமைப்பு முறையை மாற்றுதற்கேற்பப் பல ஆலோசனை

களைப் பார்லிமெண்ட்டில் கொணர்ந்தார். இவற்றை அடிப்படையாகக் கொண்டு 1773-ல் முறைப்படுத்தும் சட்டம் அல்லது ஒழுங்குமுறைச் சட்டம் உருவாயிற்று.

முறைப்படுத்துஞ் சட்டம் (1773): இச்சட்டம் கம்பெனியின் அமைப்பு முறையில் மாறுதல்களை உண்டாக்கியது. ஓராண்டுக்குக் குறைந்தபட்சம் ஆயிரம் பவுன் முதற்பணம் வைத்துள்ள பங்குதாரர்களே உரிமையாளர் சபையில் வாக்குரிமை பெற முடியும்; இயக்குநர்கள் ஓராண்டுக்குப் பதிலாக நான்கு ஆண்டுகள் பதவி வகிக்கலாம். அவர்களில் நான்கில் ஒரு பகுதியினர் ஆண்டு தோறும் பதவியிலிருந்து விலகுவர். வங்காள கவர்னர் அச் சட்டத்தின்படி கவர்னர்-ஜெனரல் அல்லது தலைமைக் கவர்னர் என வழங்கப்பட்டார். அவர் வில்லியம் கோட்டைக்குத் தலைமை கவர்னரே அன்றி இந்தியாவுக்கு அல்ல. அவருக்கு நான்கு உறுப்பினர் அடங்கிய ஆலோசனை சபை உதவி செய்தது. போட்டியில் சமநிலை ஏற்படும் காலத்தில் முடிவு செய்யும் வாக்குத் தலைமை கவர்னருக்கு உண்டு. ஆலோசனையாளரில் பெரும் பான்மையினரின் உடன்பாடு பெற்றே அரசியல் நடை பெற முடியும். வாரன் ஹேஸ்டிங்ஸுக்கு உதவியாக இருந்த நால்வரின் பெயர்கள் வருமாறு: கிளாவரிங் (படைத்தலைவர்), மான்சன், பார்வெல், பிரான்ஸிஸ். இவர்கள் யாவரும் (கவர்னர்-ஜெனரல் உட்பட) ஐந்து ஆண்டுகட்குப் பதவி வகிப்பர். கவர்னர் - ஜெனரலின் ஆண்டு ஊதியம் 25,000 பவுன்கள்; ஆலோசனையாளர்கள் 10,000 பவுன்களைப் பெற்றனர். ஐந்தாண்டுகட்குப் பிறகு அப்பதவியாளரை அமர்த்தும் பொறுப்புக் கம்பெனி யாரைச் சேர்ந்தது. தலைமைக் கவர்னரும் ஆலோசனை யாளரும் மற்ற இராசதானிகளின் மீது அதிகாரம் செலுத்த முடியும். மற்ற இராசதானிகளின் கவர்னர்கள் தாமாகவே போரோ, அமைதி உடன்பாடோ செய்யக்கூடாது. ஆனால் மிக அவசரத் தேவையின் பொருட்டோ அல்லது தாய் நாட்டின் தனி ஆணைகளைப் பெற்றோ அவர்கள் செய

லாற்றுவதற்கு விதிவிலக்குப் பெற்றிருந்தனர். கவர்னர் ஜெனரலுக்குக் கட்டுப்படாத ஒரு தலைமை நீதிமன்றத்தை வில்லியம் கோட்டையில் ஆங்கில மன்னர் அமைத்திருந் தார். ஒரு தலைமை நீதிபதியும் மற்றும் மூன்று நீதிபதி களும் அங்கே முறை வழங்கினர். அம்மன்றத்துக்குச் சிவில் கிரிமினல் அலுவல்களையும் கடற்படைச் செய்திகளை யும் சமயத்தொடர்பான செய்திகளையும் பற்றி விசாரிக்க அதிகாரம் இருந்தது. அந்நீதி சபையின் அதிகாரம் வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா மாகாணங்களில் ஆங்கில ஆட்சிக்குட்பட்ட குடிகளின் மீது பரவியிருந்தது. தலைமை நீதிபதி எலிஜா இம்பே ஆண்டுக்கு எண்ணாயிரம் பவுன் ஊதியம் பெற்றார். மற்ற நீதிபதிகளின் ஆண்டு ஊதியம் ஆறாயிரம் பவுன்கள் ஆகும்.

சட்டத்தின் சிறப்புக்களும் குறைபாடுகளும் : பார்லி மெண்ட் கம்பெனியின் நிலைமையைச் சீர்திருத்தவே இச் சட்டத்தைக் கொண்டுவந்தது. அக்குறிக்கோள் போற்றத் தக்கது என்பதில் ஐயமில்லை. ஆனால் தீர்க்கப்படவேண்டிய இடர்ப்பாட்டின் தன்மையைத் தாய்நாட்டு அரசியலார் போதுமான அளவுக்கு உணரவில்லை. அதனால் பெரும் இடையூறுகளும் கடும் போராட்டமும் விளைந்தன. பின் னர்ச் சட்ட மியற்றுவதற்கு இப் படிப்பினை உதவியாய் இருந்தது. கம்பெனியின் தாய்நாட்டு அரசியலைப் பொறுத் தவரை சிறப்பான குறைபாடு எதுவும் இல்லை. ஆனால் வில்லியம் கோட்டையின் புதிய அரசியல், சில அடிப்படை ஆட்சிமுறைத் தத்துவங்களைப் புறக்கணிப்பதாய் இருந் தது.* இச் சட்டத்துக்கு விளக்கம் கூறுவதில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. அது சட்டத்தின் குறைபாட் டையே காட்டுகிறது. வாரன் ஹேஸ்டிங்ஸ் தலைமைக் கவர்னராக இருந்த காலத்திலேயே அக் குறைபாடுகள் தெளிவாக வெளிப்பட்டன. அவர் நெருக்கடிக் காலங் களில் கூடத் தமது தனி அதிகாரத்தைப் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தார். அவர் ஆலோசனையாள

* *60*, பக். *179.*

ரில் மூவர் அவரை எதிர்த்துத் தொந்தரவு கொடுத்து வந்தனர். ஆகவே 1774-முதல் 1776-வரை வாரன் ஹேஸ்டிங்ஸ் செயலற்று இருக்க நேரிட்டது. பின் மான்சன் இறந்த பிறகு ஹேஸ்டிங்ஸ் தமது முடிவுசெய்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு ஆட்சியை நடத்தினர். 1726, 1753 ஆண்டுகளின் பட்டயங்களின்படி கல்கத்தாவில் (சென்னை, பம்பாயிலுங்கூட) மேயர் நீதிமன்றங்கள் ஏற்பட்டிருந்தன. அதைச் சீர்திருத்தும் வகையில் தான், சட்டப்படி தலைமை நீதிமன்றம் ஏற்பட்டது. இதன் அமைப்பு, மாண்டெஸ்க்யூவின் அதிகாரப் பிரிவினைக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆலோசனைக் குழுவுக்கும் அதற்கும் இடையே உள்ள தொடர்பும் சபையோரின் அதிகாரமும் நீதிபதிகளின் அதிகாரமும் தெளிவுபட வரையறுக்கப்படாமையால் அவர்களுக்கிடையே சச்சரவுகள் உண்டாயின. மேலும் தலைமை நீதிமன்றம் இந்தியக் குடிகள் அனைவர் மீதும் அதிகாரம் செலுத்துவதா அல்லது கம்பெனியின் கீழ்ப் பணியிலமர்ந்துள்ள இந்தியர் மீது மட்டும் செலுத்துவதா என்ற செய்தி தெளிவாக்கப்படவில்லை. யார் யார் பிரிட்டிஷ் குடிகள் யார் யார் கம்பெனியின் பணியாளர் என்ற செய்தியும் வரையறுக்கப்படவில்லை. நீதிமன்றத்தின் சட்டங்கள் இங்கிலாந்தில் அந்நாட்டுச் சூழ்நிலைக் கேற்ப உருவானவை. இந்நாட்டில் அடிப்படை வேறுபாடுகள் பலவற்றைக் கொண்ட சூழ்நிலை காரணமாக அச்சட்டங்கள் நன்மைக்கு மாருகத் தீமையை அளித்தன. கம்பெனியின் அதிகாரிகளைத் தலைமை நீதிமன்றம் கட்டுப்படுத்த முடியும் என்று நீதிபதிகள் கூறியதால், இருசாராருக்கும் போராட்ட மேற்பட்டது. ஆலோசனைக் குழுவின் சட்ட திட்டங்களுக்கு நீதிமன்றத்தின் உடன்பாடு இன்றியமையாததாயிருந்தது. இந்திய நிலைமைக்குப் பொருந்தாத சட்டங்களை ஆலோசனைசபை நிறைவேற்றுமாறு நீதிமன்றம் கட்டுப்படுத்தி வந்தது. ஆலோசனை சபையிலோ உறுப்பினர்களிடம் ஒற்றுமை கிடையாது. மேலும் கவர்னர் - ஜெனரலுக்கு மற்ற இராஜதானிகளைக் கட்டுப்

படுத்தப் போதுமான அதிகாரம் கிடையாது. மூன்று மாகாணங்களும் ஒற்றுமைப்பட்டு முன்னேற வேண்டு மென்பதே முறைப்படுத்தும் சட்ட மியற்றியோரின் நோக்கமாகும். ஆனல் அவ்வாறு நிகழவில்லை. வங்காள அரசியலார் மற்ற இரண்டு மாகாணங்களில் ஆங்கிலேயர் நடத்தும் போர்களுக்கு உதவ வேண்டும். ஆனல் அவர் கள் அப்போர்களைத் தொடங்கவோ முடிக்கவோ முடியாத நிலையில் இருந்தனர். முறைப்படுத்துஞ் சட்டத்தின் பெரிய குறைபாடுகளை 1781, 1784, 1786-ஆகிய ஆண்டுகளில் நிறைவேறிய சட்டங்கள் நீக்கின.

பகுதி 4

குழப்ப நிலை

நீதிபதிகளும் ஆலோசனைக் குழுவினரும் : தலைமை நீதிபதி ஸர் எலீஜா இம்பே (பி-1732—இ-1809) ஆற்றல் வாய்ந்த வழக்கறிஞர் என்பதில் ஐயமில்லை. ஆனால், ஹேஸ்டிங்ஸை ஒப்ப மேன்மை வாய்ந்தவரல்லர்.* நீதிபதிகள் நால்வரில் இருவர் சிறப்பற்றவர்கள். ஆலோசனைக் குழுவினரில் கிளாவரிங் என்பார், நிதான புத்தி இல்லாதவர் ; இடைத்தரமான ஆற்றல் படைத்த வர். ஆனால் அரசரின் அன்புக்குரியவர். இரண்டாவதாக மான்சன் என்பாருக்கு அறிவாற்றலோ ஆட்சிமுறைத் திறமையோ கிடையாது. இனி, பிரான்ஸிஸ், அறிவுத் திறமை பெற்றிருந்த போதிலும் தீவினை அஞ்சாதவர் ; பழிவாங்கும் இயல்புடையவர், உழைப்பில் விருப்ப மில்லாதவர். பார்வெல், திறமைமிக்கவர், பேராசை கொண்டவர். நீதிபதிகளும் பார்வெல் நீங்கலாக உள்ள மற்ற மூன்று ஆலோசனையாளரும் ஒரே சமயத்தில் இந்தியாவுக்கு வந்தனர். அவர்கள் இங்கே வருவதற்கு முன்பே வாரன்ஹேஸ்டிங்ஸிடம் தீராப் பகைகொண்டிருந் தனர். ஹேஸ்டிங்ஸ் ஒரு கொடுமையாளர் என்பது அவர் கருத்து. ஊழல்களுக்கு அவரே பொறுப்பாளி என்று அவர்கள் எண்ணினர். இந்தியரின் பழக்க வழக்கங்களைப்பற்றி அவர்களுக்குத் தெரியாது. கால் செருப்பும், காலுறையும் (Stocking) இல்லாத இந்தியர் கள் தம்முன் நிற்பதைக்கண்ட ஒரு நீதிபதி அந்நிலைமை, கொடிய ஆட்சியின் (வாரன்ஹேஸ்டிங்ஸின்) விளைவே என்றும் தாம் வந்துவிட்டதால் விரைவில் அத்தீமை நீங்கி விடுமென்றும் குறிப்பிட்டாராம். இவ்வாறு அவர்

* Sir James Fitzjames stephen, THE STORY OF NUNCOMAR AND THE IMPEACHMENT OF SIS ELIJAH IMPEY (1885), I, p 34.

களிடம் ஹேஸ்டிங்ஸைப் பற்றிய தவறான எண்ணங்கள் மிகுதியாக இருந்தன. அக்கவர்னர்-ஜெனரல் இணை அற்ற கொடுமையின் சின்னமென்பது அவர்களிடம் வேரூன்றியிருந்த கருத்தாகும். இரண்டாண்டுக் காலம் (1774-6) பிரான்ஸிஸ், கிளாவரிங், மான்சன் ஆகியோர் வாரன் ஹேஸ்டிங்ஸை அடியோடு கட்டுப்படுத்தி விட்டனர்.

ரோஹில்லாப் போர் தொடர்பான குற்றச் சாட்டுகள் : புதிய ஆலோசனைக் குழுவினர் கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்ததும் தமக்கு, 21 துப்பாக்கி வீரர்களுக்குப் பதிலாக 17 துப்பாக்கி வீரர்கள்தான் மரியாதை செலுத்தினர் என்று சினங்கொண்டனர்! அச்சினம், அரசியல் செய்திகளிலும் புகுந்தது. விரைவில் ஆலோசனைச் சபை கலகத்தின் உறைவிடமாகியது. பிரான்ஸிஸ், கிளாவரிங், மான்சன் ஆகிய மூவரும் இணைந்து ஹேஸ்டிங்ஸையும் பார்வெல்லையும் எதிர்த்து நின்றனர். ரோஹில்லாப் போர் முறையற்றது, கொள்கைக்கு முரணானது என்று முழக்கமிட்டனர்; அயோத்தியில் ஆங்கில "ரெஸிடென்ட்" ஆக இருந்த மிடில்ட்டன் என்பாரை உடனே திரும்ப அழைத்தனர். நவாப் அளிக்க வேண்டிய 40 லட்ச ரூபாயை உடனே கொடுக்குமாறு கேட்டனர்; புதிய 'ரெஸிடென்ட்' ஒருவரை அயோத்தியில் அமர்த்தினர். பிரான்ஸிஸ், ஹேஸ்டிங்ஸைப்பற்றிய செய்திகள் யாவற்றையும் துருவித்துருவித் தேடித் தாய் நாட்டில் பலருக்கு அவருடைய தீய பண்புகளை உணர்த்தும் வகையில் முடங்கல்கள் எழுதினார். ஹேஸ்டிங்ஸ் தமது நிலைமையைக் காப்பாற்றிக்கொள்ளும் முயற்சியில் மிக்க கருத்தைச் செலுத்த வேண்டியிருந்தது.

பைஸாபாத் (Fyzabad) உடன்படிக்கை : அயோத்தி நவாப் ஷுஜா-உத்-தௌலா 1775ல் இறந்தார். அவருக்கு 31 பெண்டிர் மூலம் பிறந்த 49 மக்கள் இருந்தனர். "கிளைவ் முதல் காரன்வாலிஸ் வரை, எந்தக் கவர்னரின் கீழும் வங்காளியர் பெற்றிராத மிகுதியான செழிப்பையும்

மகிழ்ச்சியையும் ஷுஜா-உத்-தௌலாவின் கீழ் அவர் நாட்டினர் பெற்றிருந்தனர்.''* அவருக்கு முறையாகப் பிறந்த மகன் அஸப்-உத்-தௌலா, பின்னர் நவாப் ஆனார். அவர் தீய வழிகளில் ஒழுகிவந்தார். அந்நிலையில் கம்பெனியார் அவருடன், வாரணசி உடன்படிக்கைக்குப் பதிலாகப் புதியதோர் உடன்படிக்கையை பைஸாபாத் (பைஸாபாத் மாவட்டம், உ. பி.) என்னுமிடத்தில் செய்து கொண்டனர். அது முந்திய உடன்படிக்கையைவிட அவர்களுக்கு மிகுதியான நன்மைகளை அளித்தது. அதன் படி காஸிப்பூர், வாரணசி மாவட்டம் ஆகிய பகுதிகளின் வரிகள் கம்பெனிக்குக் கிடைத்தன. ஹேஸ்டிங்ஸ் அச் செயலை எதிர்த்தார். ஆனால் பயனில்லை. கவர்னர் ஜெனரல் ஆதரவளித்துப் பேகியதால் வாரணசியின் இராசா செயிட்சிங் உரிமைநிலை பெற்றார். ஆனால் அவர் ஆண்டுக்கு 22½ லட்ச ரூபாயைக் கம்பெனிக்குக் கொடுத்து வரவேண்டும். இவ்வாறு அயோத்தியை வலிமைப்படுத்த வேண்டுமென்று ஹேஸ்டிங்ஸ் கொண்டிருந்த கொள்கை கைவிடப்பட்டது. அயோத்தி நவாப் தமது தலைநகரைப் பைஸாபாத்திலிருந்து லக்னௌவுக்கு மாற்றிவிட்டார்.

கவர்னர்-ஜெனரல்மீது குற்றச்சாட்டு: ஹேஸ்டிங்ஸின் மீது அவருடைய பகைவர்கள் பல குற்றங்களைச் சாட்டினர். அவ்வாறு செய்வதில் பிரான்ஸிஸ்ஸுக்கு மிகுந்த மனமகிழ்ச்சி இருந்தது. ஹேஸ்டிங்ஸ் மீர்ஜாபரின் மகனை நவாப்குடும்பத்துக்குத் திவானாக்கியதற்காகவும் மீர்ஜாபரின் மனைவியை அம்மகனுக்குப் பாதுகாவலராக்கியதற்காகவும் அவர் 3½ லட்ச ரூபாய் கைக்கூலி பெற்றுக் கொண்டதாக மகாராசா நந்தகுமார் கவர்னர்-ஜெனரல்மீது குற்றஞ்சாட்டினார். அதைச் சான்றுகளுடன் மெய்ப்பிப்பதாகவும் முன்வந்தார். ஆலோசனைக் குழுவில் பெரும்பான்மையினர் அதை வரவேற்றனர். ஆனால் ஹேஸ்டிங்ஸ் தாம் ஒரு ஆட்சித் தலைவர் என்றும் கீழ் மகன் ஒருவனால் குற்றவாளி எனக் கூண்டில் நிறுத்தப்படுவது முறையற்ற

* *109,* II பக். *311*

செயலென்றும் வாதாடினர். அவர் கூறியதை மற்ற மூவரும் ஏற்கவில்லை. உடனே சபைக் கூட்டத்தைக் கலைத்துவிட்டு பார்வெல்லுடன் கவர்னர்-ஜெனரல் வெளியேறினர். மற்ற குழுவினர் கிளாவரிங்கின் தலைமையில் கூடி ஹேஸ்டிங்ஸ் குற்றவாளிஎன்பதை வெளிக்காட்டினர். ஹேஸ்டிங்ஸின்மீது குற்றங்கள் இருந்தபோதிலும் ஆட்சி முறையைப் பொறுத்தவரை குழுவினர் மூவரும் நடந்து கொண்ட முறை நேர்மையானதன்று. யாவரும் ஒத்துழைத்து அரசியலை நடத்துமாறு ஆணைபெற்று வந்த போதிலும் அவர்கள், கவர்னர்-ஜெனரலின் அதிகாரத்தைக் குறைத்து அவரைப் பதவியினின்று விலகச் செய்யவும் முயன்று வந்தனர்.

பகுதி 5.

நந்தகுமாரின் துயர முடிவு

நந்தகுமாரின் வாழ்க்கையும் தன்மையும்: நந்தகுமார் ஓர் அந்தணர்; 1756-ல் சிராஜ்-உத்-தௌலாவின் கீழ் ஹூக்ளி பௌஜ்தாராகப் பணியாற்றினர். பிறகு ஆங்கிலேயர் அவரை வரிவாங்கும் உயர்அதிகாரியாக அமர்த்தினர். 1763-ல் மீர்ஜாபர் மீண்டும் நவாப் ஆனவுடன் நந்தகுமார் அவருடைய பிரதம அமைச்சரானர். ஆனல் பிறகு, தம்மிடம் அவர் பகைமை பாராட்டுவதாக ஆங்கிலேயர் ஐயுற்றனர். இரண்டாண்டுகள் சென்றதும் அவருடைய பதவியில் முகம்மது ரஸாகான் அமர்ந்தார். 1764-ல் நந்தகுமாருக்கு மகாராசா என்ற பட்டத்தை முகலாயப்பேரரசர் வழங்கினர். நீக்கப்பட்ட உதவி நவாப்புகளின் விசாரணையில், இயக்குநர்களின் ஆணைப்படி நந்தகுமார் கலந்து கொண்டசெய்தியை முன்னரே குறிப்பிட்டுள்ளோம். அவ்விருவர்களை விடுதலை செய்ததும் அவ்விரு பதவிகளை அழித்தமையும் நந்தகுமாருக்கு வருத்தமளித்தன. அவருடைய மகன் நவாப் குடும்ப திவானனர். ஹேஸ்டிங்ஸுக்கும் நந்தகுமாருக்கும் இடையே பகைமை நீடித்து வந்தது. ஒருவரை ஒருவர் அளவு கடந்து வெறுத்தனர். நந்தகுமார் ஹேஸ்டிங்ஸின்மீது கொணர்ந்த குற்றத்தைப்பற்றி மேலே பார்த்தோம். நந்தகுமார் சிறந்த குடியிற்றேன்றிய செல்வர் என்றும் அறிவும் பண்பாடும் நிறைந்தவர் என்றும் அறிஞர் பர்க் கூறுவர்.* ஆனல் அவர் அக்காலத்துச் சூழ் நிலையால் உருவாக்கப் பெற்றவர். சதி செய்வதில் திறமைசாலி; ஊக்கமுள்ளவர்; பெருமிதம் படைத்தவர்; தந்திரசாலி, துரோக சிந்தனை கொண்டவர், பழி வாங்கும் விருப்பம் கொண்டவர்; தீவினை அஞ்சாதவர். ஆனல் அவர் தமது ஆற்றலினலும் விடா முயற்சியாலும்

* Burke's Works, VII. P. 281.

உயர்நிலைக்கு வந்தார். ஏழ்மை நிலையிலிருந்து அவர் பெருஞ் செல்வரானார். அவரிடம் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் பணமிருந்தது.

நந்தகுமார் தூக்கிலிடப்படுதல் : 1775-ம் ஆண்டு மார்ச் மாதம் நந்தகுமார் ஹேஸ்டிங்ஸின் மீது பெருங் குற்றம் சாட்டினார். அதே ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஹேஸ்டிங்ஸும் பார்வெலும், நந்தகுமார் சதி செய்த தாகக் குற்றஞ் சாட்டினர். நீதிமன்றத்தில் நந்தகுமார் தண்டனை பெறுவதற்கு முன்னரே அவர் மீது, பொய்க் கையெழுத்திட்ட மற்றொரு குற்றம் சாட்டப்பட்டது. மோகன் பிரசாத் என்பானின் தூண்டுதலின் மேல் நந்த குமார் ஒருவரை 50 000 ரூபாய் ஏமாற்றப் பொய்க் கையொப்பமிட்டாரென்பதே அவர் மீது எழுந்த குற்ற மாகும். ஆங்கிலச் சட்ட முறைப்படி அவர் குற்றவாளி என்பது உறுதி ஆனதால் தூக்கிலிடப்பட்டார் (5-8-1775). தூக்கு மேடையிலும் நந்தகுமார் ஆடவர்க்குரிய வீரத் துடன் விளங்கினாராம்.

பலதிறப்பட்ட கருத்துக்கள் : நந்தகுமார் தூக்கி லிடப்பட்டது, ஆங்கிலேயரின் பெருமைக்கு ஒரு இழுக்கா கும் என்பது எட்மண்ட் பர்க் அவர்களின் கருத்து. சுமத் தப்பட்ட குற்றம் உண்மையானதன்று எனவும் நீதி சரி யானபடி வழங்கப்படவில்லை என்றும் அவர் பேசியுள் ளார்.[1] நந்தகுமார் துயரநிகழ்ச்சி, ஹேஸ்டிங்ஸின் பெரு மையை மிகுதியாக மாசுபடுத்தி விட்டது என்பார் ஜேம்ஸ் மில்.[2] குற்றச்சாட்டுக்கு மூலகாரணம் ஹேஸ்டிங்ஸ்தான் என்றும், நீதிபதி இம்பே அரசியல் கருத்தை மனத்திற் கொண்டு நேர்மையற்ற வகையில் முடிவு கூறினார் என் றும் மெக்காலே குறிப்பிடுகிறார்.[3] நந்தகுமார் கொலையைக் கண்டித்துப் பேசுகிறார் ஹென்றி - பெவரிட்ஜ். ஆனால்

1. *14, பக். 235.*
2. *110, பக். 2.*
3. Macaulay, Op. cit, pp. 412 & 415.

அதற்கு மூலகாரணம் ஹேஸ்டிங்ஸ்தான் என்பதை உறுதியாகக் கூறச் சான்றில்லை என்றும் அவர் கூறுவர்[1]. இனி ஸர் ஜேம்ஸ் ஸ்டீபன் (1885) "நந்தகுமாரும் இம்பேயும்" என்ற நூலில், ஹேஸ்டிங்ஸும் ஸர் எலீஜா இம்பேயும் சேர்ந்து சூழ்ச்சி செய்து நந்தகுமாரைத் தூக்கிலிட்டனர் என்று கூறுவது தவறு என்றும் விசாரணை நேர்மையான முறையில் நடைபெற்றது என்றும் விளக்குகிறார்[2]. குற்றவாளியின் சார்பிலும் நீதிமன்றத்தில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டதை அவர் எடுத்துக்காட்டுகிறார். ஆயினும் கொலைத்தண்டம் குற்றத்திற்கு ஏற்றதன்று என்று அவர் முடிவு கூறியுள்ளார்.

கவர்னர்-ஜெனரலுக்கும் பொய்க் கையெழுத்து வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று கூறுவது பொருத்தமுடையதன்று என்பர் லயால் (1889). தண்டனை மிக்க கடுமையானது என்பதும் அவர் கருத்தாகும்.[3] வி.ஏ. ஸ்மித் (1919) ஹேஸ்டிங்ஸை ஆதரித்துப் பேசுகிறார். நீதிமன்றம் ஒரு முடிவுக்கு வந்துள்ளபொழுது மற்ற செய்திகளை அத்துடன் பிணைப்பது பொருத்தமற்றதாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.[4] நீதிபதிகள் சூழ்ச்சிசெய்து கொலை செய்தனர் என்று கூறமுடியாத பட்சத்திலும் நீதிமன்றம் தவறிழைத்தது என்றுதான் கூறவேண்டுமென அறிஞர் P. E. ராபர்ட்ஸ் கூறுவர் (1921).[5] மேலும் அவர் கூறுவதாவது "நீதிபதிகள் கடுமையாக முறை வழங்கினர்; ஹேஸ்டிங்ஸின் நடத்தை பழித்துரைக்கக் கூடியதே." சபையின் உறுப்பினர்கட்குத் தம்மைக் காக்குமாறு நந்தகுமார் முறையிட்டதை அவர்கள் செவியில் ஏற்றுக்கொள்ளாதது அவர்களுடைய இரக்கமற்ற தன்மையைக் காட்டுகிறது என்பதையும் அவ்வறிஞர் குறிப்பிடுகிறார். இதே

1. 8, பக். 384.
2. 110, II பக். 84,
3. 59, பக். 70.
4. Smith, Op. cit., PP. 526-7.
5. 81, பக். 186.

நந்தகுமாரை அவர்கள் முதலில் தம் நலனுக்கு பயன் படுத்திக்கொண்டதை நாம் ஈண்டு நினைவிற்கொள்ள வேண்டும். நந்தகுமார்மீது ஏற்பட்ட வழக்குக்கு மூல காரணம் வாரன்ஹேஸ்டிங்ஸ்தான் என்றும் கொலைத் தண்டனைக்குக் காரணம், கவர்னர்-ஜெனரலை நந்தகுமார் எதிர்த்துக்கொண்டதுதான் என்றும் எட்வர்டு தாம்ஸனும் G. T காரட்டும் தமது நூலில் உணர்த்துகின்றனர். மேலும் பொய்க் கையொப்பமிட்ட கிளைவுக்கு இங்கிலாந்தில் பிரபுக்கள் தொகுதியில் இடங்கிடைத்தது; ஆனால் அதே குற்றம் செய்த ஒரு இந்தியனுக்குக் கொலைத் தண்டம் கிடைத்தது என்ற குறிப்பும் சிந்திக்கத்தக்கது.

முடிவுரை : நந்தகுமார் குற்றவாளி என்பதில் ஐய மில்லை. நீதிமன்ற விசாரணையும் பெருமளவுக்கு நேர்மை யானதே. ஆனால் பொய்க் கையொப்ப மிட்டதற்குக் கொலைத் தண்டம் விதிக்கும் நாகரீகமற்ற ஆங்கிலச்சட்டம் நந்தகுமார் வழக்கில் பின்பற்றப்பட்டது முறையன்று என்பது சிறந்த சட்டவல்லுநரின் கருத்தாகும். நந்தகுமார் குற்றமியற்றியது 1770-ம் ஆண்டில்; அதாவது தலைமை நீதிமன்றம் அமைவதற்கு முன்னரே. மேலும் இந்தியக் குடிகளின்மீது நீதிமன்றத்துக்கு அதிகாரம் உண்டா என் பதே ஐயப்பாட்டுக்குரிய செய்தியாகும். பொய்க்கையொப்ப மிட்டதற்கு கொலைத்தண்டம் விதிப்பதென்பது இந்திய மரபுக்குப் புறம்பானதாகும். ஆதலால் கொடுக்கப்பட்ட தண்டனை, சட்ட இணக்கத்துக்கும் நேர்மைக்கும் பொருத்த மானதென்று கூறுவதற்கில்லை. கொலைத்தண்டனை நிறை வேற்றப்படுவதைத் தற்காலிகமாகத் தள்ளிவைக்கவும் குறைக்கவும் தலைமை நீதிமன்றத்துக்குத் தன்யுக்த அதிகாரமுண்டு. அவ்வாறிருந்தும் நீதிபதிகள் முறை வழங்குவதில் கருணையுடன் நடந்துகொள்ளவில்லை. கவர்னர்-ஜெனரல், வழக்கில் ஈடுபட்டிருந்தார் என்று கூற நேர்முகச்சான்று கிடையாது. எனினும், அவருடைய நடத்தை ஐயப்பாட்டுக்குரியதே. 1775-ம் ஆண்டு மே மாதத்துக்கு முன்னர் நந்தகுமார் மீது வழக்குத்

தொடரும் தீர்மானம் தோன்ற வில்லை என்பது நோக்கற் பாலது. ஹேஸ்டிங்ஸூம் நந்தகுமாரும் பகைவர்கள் என்பதை நன்கு உணர்ந்த மோஹன்பிரஸாத் அதன் காரணமாகவே அவ்வழக்கை அமைத்திருக்கக் கூடும்.* இந்தியர்களுக்குத் தண்டனை அளிப்பதில் அவர்களுடைய கருத்துக்களுக்கும் பழக்கங்கட்கும் கொடுமை செய்யக் கூடாது என்று உரை நிகழ்த்தியவர் ஹேஸ்டிங்ஸ். அவர் நந்தகுமாருக்காகச் சிறிது அருள்பாலித்திருப் பாரே ஆயின் அதுமிகவும் பாராட்டத்தக்கதாய் இருந் திருக்கும். ஆனால் ஹேஸ்டிங்ஸின் ஆதரவிலிருந்த ஒருவர் அக்குற்றவாளிக்கு விதிக்கப்பட்ட தண்டனையை மாற்றுவதற்கு இடமேற்படுவதைத் தடுக்க முயற்சித்து வந்ததாகக் கூறப்படுகிறது. மேலும் பள்ளித்தோழர் களாயிருந்த ஹேஸ்டிங்ஸ், இம்பே ஆகிய இருவரின் நட்பும் நெருங்கியதொடர்பும் புறக்கணிக்கத் தக்கனவல்ல. முறைவழங்குவோர் தமது செயலால் பொதுமக்கள்பால் ஏற்படும் உள்ளக்கிளர்ச்சியை முன்கூட்டி உணர்ந்து நீதி செலுத்த வேண்டியது இன்றியமையாததாகும். மேலும் சட்ட நீதி என்பதுடன் தரும நியாயம் என்பதையும் அவர்கள் அனுசரிக்கவேண்டும். விரைவாக ஏற்பட்டு வந்த நிகழ்ச்சிகளும் சூழ்நிலையும் நீதியைப்பற்றி ஐயப் பாட்டை எழுப்புகின்றன. ஆனால் அது சட்டமுறையில் சான்றுகளுடன் மெய்ப்பிக்கப்பட முடியாமல் போனாலும் பொது மக்கள் உள்ளத்தில் எளிதில் பதிந்துவரும் கருத் துக்கு நாம் சிறப்பளிக்க வேண்டும். சூழ்திறம், நேர்மை, அருள் முதலியவற்றுடன் கலக்காத சட்ட நுணுக்கம் மட்டும் சிறந்த நீதிமுறையோ உண்மையான அரசியல் வல்லமையோ ஆகமுடியாது. வங்காளத்தில் சிறப்புற்று ஓங்கிய ஒரு ஆடவர் (நந்தகுமார்) தமது எழுபதாவது வயதில் செய்துகொண்ட முறையீடுகளைப் பொருட் படுத்தாமலிருந்தது பிரான்ஸிஸ் முதலியோரின் ஈவு இரக்கமற்ற தன்மையைக் காட்டுகிறது. அவருடைய

* 59, பக். 72.

மரணம் ஒரு சிறு செய்தி என்று புறக்கணித்துவிடக் கூடியதன்று. இங்கிலாந்தில் 1787-ல் ஸர் எலீஜா இம்பே, காமன்ஸ் சபையினரால் துரோகக் குற்றஞ் சாட்டப்பட்டுப் பார்லிமெண்டில் விசாரணை நடந்தது. நந்தகுமாரைக் கொலைசெய்தது அவர் மேல் சாட்டப்பட்ட தலையாய குற்றமாகும். ஆனால் அவர், தம் கட்சியைத் திறம்பட விளக்கிக் கூறி விடுதலை பெற்றார் (1788). 1809-ல் அவர் இறந்தார்.

பகுதி 6

ஹேஸ்டிங்ஸின் நிலைமையும் ஆலோசனை சபை-நீதிமன்றப் போராட்டமும்

நந்தகுமார் விசாரணை நடந்துவந்த காலத்தில் வாரன் ஹேஸ்டிங்ஸ் பதவியினின்று விலகி விடுவதற்குக் கூட எண்ணினார். ஆலோசனை சபையில் அவருக்கு இருந்த பெரும்பான்மையினரின் எதிர்ப்பே அதற்குக் காரணமாகும். ஆனால் நந்தகுமார் கொலையுண்டபின் கவர்னர்-ஜெனரலுக்கு ஏற்பட்டிருந்த இடையூறுகள் ஓரளவு நீங்கின. சில செய்திகளில் ஆலோசனைச் சபையினர் அவருடன் ஒத்துழைத்தனர். பிரான்ஸிஸ் தமக்கு நந்தகுமார் உயிருடனிருந்து உதவுவதைவிட தூக்கிலிடப்பட்டதன் மூலம் தமது குறிக்கோளுக்கு நிலையான பயனளிப்பாரென நம்பியிருந்தார். ஆகவே தக்க சமயம் நேரும் பொழுதெல்லாம் அவர் ஹேஸ்டிங்ஸைத் தாக்கிப் பேசி அவர் பெருமையைக் குறைக்க முயன்று வந்தார். 1776-ல் மான்சன் இறந்தார். அதன்பின் சபையில் ஹேஸ்டிங்ஸ் உட்பட நால்வர் தான் இருந்தனர். பார்வெல், தலைவரை ஆதரித்தார். கவர்னர்-ஜெனரல் தமது முடிவுசெய் வாக்கைப் பயன் படுத்திக்கொண்டு தமது நிலையைக் காப்பாற்றி வந்தார். அயோத்தியுடன் அரசியலார் மீண்டும் ஒரு புதிய உடன்பாடு செய்துகொண்டனர் (1777). மறுபடியும் மிடில்டன் அங்கே 'ரெஸிடென்ட்' ஆனார். அயோத்தி நவாப்பின் படைகளைப் பராமரிக்கும் பொறுப்பைக் கம்பெனியார் ஏற்றனர். சில மாவட்டங்களின் வரித்தொகை அவர்களது தனி உரிமையாயிற்று. அவ்வேற்பாடு பிற்காலத்தில் வெல்ஸ்லி அமைத்த பாதுகாப்பு முறை உடன்படிக்கையை ஓரளவு ஒத்தது. ஆனால் அத்திட்டத்தைப் பிரான்ஸிஸ்ஸும் கிளாவரிங்கும் எதிர்த்தனர். இடையூறுகள் மிகுதியாகி வந்ததால் ஹேஸ்டிங்ஸ் 1777ல்

பதவியினின்று விலகிவிடுவதாக அறிவித்தார். அவரை விரும்பாத நார்த்பிரபு (ஆங்கிலப் பிரதமர்)வும் இயக்குநர்களும் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டனர். ஆனல் முறைப்படுத்துஞ் சட்டத்தின்படி ஆலோசனைக்குழுவில் மூத்த உறுப்பினரான கிளாவரிங்தான் கவர்னர்-ஜெனரலாக வரவேண்டும் (அதாவது சட்டமியற்றப்பட்டதிலிருந்து 5 ஆண்டுக் காலத்துக்குள் அம்முறை பின்பற்றப்படவேண்டும்). ஆனல் இயக்குநர்கள் வெலர் என்பாரை அமர்த்தினர். இதனல் சட்டமுரண்பாடு ஏற்பட்டதென்று கூறி ஹேஸ்டிங்ஸ் தாம் பதவியினின்று விலக மறுத்தார். இயக்குநர்களின் ஆணை புறக்கணிக்கப்பட்டதால் அச்செய்தி தலைமை நீதிமன்றத்துக்கு விசாரணைக்கு வந்தது. அம்மன்றம் ஹேஸ்டிங்ஸ் பதிவியினின்று விலக வேண்டியது இன்றியமையாததன்று என முடிவு செய்தது. ஆங்கில மன்னருக்கும் அதனல் சினமுண்டாயிற்று. ஆனல் கம்பெனியின் உரிமையாளர்கள் ஹேஸ்டிங்ஸை ஆதரித்தனர். மேலும் அக்காலத்திலிருந்த உலக நிலையின் காரணமாகவும் தாய்நாட்டிலிருந்து ஹேஸ்டிங்ஸுக்கு மிகுதியான தொந்தரவு ஏற்படவில்லை.

அதன்பின் கிளாவரிங் இறந்தார் (1777). அவரிடத்தைப் பெற்ற வெலர், பிரான்ஸிஸ்ஸை ஆதரித்தார். ஆயினும் கவர்னர்-ஜெனரலுக்கு முடிவுசெய் வாக்கு உரிமையும் பார்வெலின் உதவியும் வலிமை அளித்தன. 1779-ல் கிளாவரிங்குக்கு பதிலாகப் படைத்தலைவராக அமர்ந்த ஸர் அயர் கூட், பிரான்ஸிஸ்ஸை ஆதரிக்கவில்லை. 1780-ல் பிரான்ஸிஸ் இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றபின் ஹேஸ்டிங்ஸுக்குச் சபையினரால் பெரும் இடையூறுகள் ஏற்படவில்லை. ஆயினும் அவராட்சியின் இறுதிப்பகுதியில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. ஹேஸ்டிங்ஸும் ஆலோசனையாளரின் கருத்தையொட்டி ஒழுகி வந்தார். பிரான்ஸிஸ்ஸுக்கும் ஹேஸ்டிங்ஸுக்குமிடையே அடிப்படைக்கருத்து வேற்றுமை இருந்தது. முடிவாக ஹேஸ்டிங்ஸின் கொள்கையே வெற்றிபெற்றது. ஆனல் பிறகு காரன்வாலிஸ், சர்ஜான்ஷோர் காலங்களில்

பிரான்ஸிஸ்ஸின் கொள்கைகள் பின்பற்றப்பட்டதைக் காண்கிறோம். பிரான்ஸிஸ்ஸின் கொள்கைகளாவன :— இந்தியச் சிற்றரசர்கள் செய்திகளில் தலையிடாமை; போர் ஊக்கமற்ற – அமைதியான – வெளித்துறைக் கொள்கை ; நிலையான நிலவரி ஏற்பாடு முதலியனவாம். அவர் இங்கிலாந்துக்குத் திரும்பியபிறகு ஹேஸ்டிங்ஸையும் இம்பேயையும் துரோகக் குற்றஞ்சாட்டும் முயற்சியில் ஈடுபட்டார்.

முறைப்படுத்துஞ் சட்டத்தின் விதிகளிற் சில, தெளிவற்றும் சில, குறைபாடுகளுடன் கூடியதாகவும் இருந்ததால் ஆலோசனைக் குழுவுக்கும் நீதி மன்றத்துக்கும் போராட்டம் விளைய அவை காரணமாயின. அவ்விரு துறைகளின் அதிகார வரம்பு தெளிவாக அறிவிக்கப் படவில்லை. ஹேஸ்டிங்ஸும் இம்பேயும் நெருங்கிய நண்பர்களாதலால் போராட்டமேற்படுவதைத் தடுக்க தொடக்கம்முதல் ஹேஸ்டிங்ஸ் முற்பட்டிருந்தார். ஆயினும் சில முக்கியமான செய்திகளில் சச்சரவுகள் தடுக்கப்படக்கூடியதாக இல்லை. தலைமை நீதிமன்றம், வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா மாகாணங்களில் உள்ள மக்கள் யாவரின் மீதும் அதிகார உரிமை பாராட்டியது. ஆனால் ஆலோசனைக்குழு அதை மறுத்தது. சமீந்தார்கள் ஆங்கிலேயரின் குடிகள் அல்லர் என்றும் நவாபின் குடிகளே என்றும் வாதிக்கப்பட்டது. தலைமை நீதி மன்றத்துக்கு ஆங்கிலக்குடிகளின்மேல் அதிகாரமுண்டு. ஆனால் முறைப்படுத்தும் சட்டத்தில் சொற்றொடர்கள் தெளிவுபட அமையாததால் அவற்றிற்கு விளக்கம் கூறுவதில் கருத்துவேற்றுமை வலிமையடைந்தது. இதனால் நீதிபதிகட்கும். வரிவசூல் முதலிய துறைக்களங்களின் அலுவலர்க்கும் சச்சரவுகள் ஏற்பட்டன. 1777-9-ல் பாட்னா வழக்கில் தலைமை நீதிமன்றம், கம்பெனியின்கீழ் முறை வழங்கும் துறையில் பணியாற்றும் இந்திய அலுவலரின் தவறுகளை விசாரிக்கத் தனக்கு உரிமை உண்டு என்ற முறையில் நீதி வழங்கியது. காஸிஜுரா வழக்கில் (1779-80) முன்னர் கூறியவாறு வங்காளம்

முதலிய மூன்று மாகாணங்களிலும் யாவரின்மீதும் நீதி முறை அதிகாரம் செலுத்த நீதிமன்றம் முற்பட்டது. இப் போராட்டத்தை நீக்கும் வகையில் ஹேஸ்டிங்ஸ், இம் பேயை"ஸதர் திவானி அதலத்" தலைவராகஆக்கி அவருக்கு நாட்டின் நீதிமன்றங்கள் யாவற்றின்மீதும் அதிகாரம் செலுத்தும் உரிமையை வழங்கினர். அதன்பொருட்டு அந்நீதிபதி ஆண்டுக்கு 6000 பவுன்கள் ஊதியமாகப் பெற்ருர். தாய்நாட்டு அரசியலாரைக் கலந்து ஆலோசியா மல் ஒரு முக்கியமான சீர்திருத்தம் ஏற்பட்டிருப்பது நோக்கத்தக்கது. அதனுல் இங்கிலாந்தில் பெரிய எதிர்ப்பு எழுந்தது. அதனுல் இம்பே, தாய் நாட்டுக்குத் திரும்ப அழைக்கப்பட்டார். அவர்மீது துரோகக்குற்ற விசாரணை நடந்தது. இம்பே, நீதித்துறையில் மிகவும் புகழ்வாய்ந்தவர். 1780—1-ல் அவர் கடும் உழைப்பின் விளைவாக ஒரு நடைமுறை விதித்தொகுப்பைத் தயாரித் தார் (1787-ல் அதுமாற்றப்பட்டது.). ஆகவே இந்தியச் சட்டத்தொகுப்பாளர்களில் முதல்வர் என்ற சிறப்பு அவருக்கு உரியதாகும்.*

———

* *110*, பக். *245*.

பகுதி 7

நாஞ பட்னிஸ்; மகாதஜி சிந்தியா; முதல் மராட்டியப் போர் (1775—82)

1772-முதல் 1774 வரை மராட்டியர் செய்திகள் : மராட்டியர், பானிப்பட்டுத் தோல்விக்குப் பிறகு விரைவில் மீண்டும் நன்னிலே அடைந்தனர். நான்காவது பேஷ்வா மாதவராவ் 1772-ல் இறந்தார். அவருக்கு மகனில்லாததால், அவருடைய உடன் பிறந்தாரான நாராயணராவ் (பி.1755) பட்டம் பெற்ருர். அவருடைய சிறிய தந்தையான இரகுநாதராவும் அவர்மனைவி (இரகுநாதராவின் மனைவி) கொடிய ஆனந்திபாயும், புதிய பேஷ்வாவின் பகைவர்களாயினர். ஆனந்திபாயின் சூழ்ச்சியின் விளைவாக1773-ல் நாராயணராவ் கொல்லுண்டார். ஆகவே இரகுநாதராவ்பேஷ்வா ஆனுர். சத்திரபதியும் முறைப்படி அதை ஏற்றுக்கொண்டார். பேஷ்வாவுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் எதிர்ப்பு வலிமை அடைந்து வந்தது. நிஸாம் அலியும் ஐதர் அலியும் வெளிப்புறத்தில் அவர் நாட்டைத் தாக்கினர். நிஸாமைத் தோற்கடித்து, ஐதருடன் உடன்பாடு செய்துகொண்டபின் இரகுநாதராவ் உள்நாட்டு இடையூறுகளை நீக்கிக்கொள்ளப் பூனுவுக்கு விரைந்து வந்தார். கொலையுண்ட நாராயணராவின் தாய் கோபிகாபாய், மனைவி கங்காபாய், அலுவலாளர் நாஞ பட்னிஸ் முதலியோர் இரகுநாதராவை எதிர்க்கத்தக்க ஏற்பாடுகள் செய்து வந்தனர். நாஞ பட்னிஸூம் மற்றும் பதினெருவரும் - இவர்களுக்கு வரலாற்றில் பாராபாயி அல்லது பனிரண்டு சகோதரர்கள் என்று பெயர் – ஒன்றுகூடி நாராயணராவின் குழந்தைக்குத்தாமே பாதுகாவலராக இருந்து, அரசப்பிரதிநிதிகளாக ஆட்சிபுரியத் திட்டமிட்டனர். அவர்கள் அக்குழந்தைக்கு II-ம் மாதவராவ் (1774–95) என்று பட்டமும் சூட்டினர்.

சூரத் உடன்படிக்கை (1775): இரகுநாதராவ் (அல்லது இரகோபா) பம்பாயிலிருந்த ஆங்கிலேயருடன் சேர்ந்து தம் உள்நாட்டுப் பகைவரை எதிர்க்க முடிவு செய்தார். ஆனால் ஆங்கிலேயர் கேட்டபடி அவர் உதவிக்குக் கைம்மாருகப் பஸ்ஸீன் சால்செட் பகுதிகளைக் கொடுக்க விருப்பமில்லாததால் உடன்படிக்கை நிறைவேறவில்லை. அதற்கிடையில் ஆங்கிலேயர், தாமே முற்பட்டுச் சால்செட் தீவைக் கைப்பற்றிக்கொண்டனர். மேலும் பூனு அரசியலார் இரகுநாதரின் எண்ணங்களைப் பாழாக்குவதில் முனைந்திருந்தனர். சோர்வடைந்த இரகுநாதர் பஸ்ஸீனை ஆங்கிலேயருக்குத்தர இசைந்தார். சூரத்தில் அவ்விரு சாராருக்கும் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி சால்செட், பஸ்ஸீன் இரண்டும் ஆங்கிலேயர் வசமாயின. அவர்கள் இரகுநாதருக்கு ஐரோப்பியருமுள்ளிட்ட ஒரு படையைக் கொடுத்து உதவ ஒப்பினர். படையின் செலவுகளை இரகோபா ஏற்க வேண்டும். அதன்பிறகு பூனு அரசாங்கத்தின் படையை ஆங்கிலேயர், பல இடையூறுகட்குப்பின் தோற்கடித்தனர். சில மராட்டியத் தலைவர்கள் இரகோபாவின் கட்சியில் சேர்ந்தனர். அந்தச்சமயத்துக்குமட்டும் இரகுநாதராவின் எண்ணம் நிறைவேறியது.

புரந்தர் உடன்படிக்கை (1776): அவ்வாறிருக்கையில் சூரத் உடன்படிக்கை, முறைப்படுத்துஞ் சட்டத்துக்கு முரணானது என்று வங்காளத் தலைமை அரசியலார் அறிவித்தனர். இரகோபாவுக்கு ஆதரவாகப் போரிடுதல் முறையற்றது என்றும் தான்தோன்றித்தனமானது என்றும் இடையூறுகளை விளைக்கக்கூடியது என்றும் அவர்கள் கருதினர். ஆலோசனைக் குழுவினர், பம்பாய் அரசாங்கத்தைத் தன் முயற்சிகளைக் கைவிடுமாறு ஆணையிட்டனர். (கவர்னர்-ஜெனரலுக்கு அத்தகைய ஆணையிடுவதில் விருப்பமில்லை). பம்பாய் அரசியலார் தம் செயல் சிறப்பானதே என்று வாதிட்டனர். அதை ஏற்றுக்கொள்ளாத தலைமை அரசாங்கம் பூனுவிலிருந்த

பிரதிநிதி அரசியலாருடன் இரகோபாவுக்குப் பகையாக ஓர் உடன்படிக்கை செய்துகொண்டது. அதுவே புரந்தர் உடன்படிக்கையாகும். அதன்படி ஆங்கிலேயர் இரகோ பாவை விடுத்துப் பூனு அரசாங்கத்துக்கு உதவிபுரிய வேண்டும். அதற்குக் கைம்மாருக அவர்கள், 12 லட்ச ரூபாயையும் சால்செட்டையும் பெற்றனர். இரகுநாத ராவுக்கு மாதம் ரூ. 25,000 கொடுத்துவர மராட்டியர் (பூனு) இணங்கினர். இரகோபாவுக்கு பம்பாய் ஆங்கிலேயரின் ஆதரவு இருந்ததால் சூரத்திலேயே அவர் தங்கியிருந்தார். அதற்கிடையில் இயக்குநர்கள், சூரத் உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டு செய்தி அனுப்பினர். கல்கத்தா தலைமை அரசாங்கத்தின் முயற்சி வீணுயிற்று. இரகோபா, பம்பாய்க்குப் பயணமானுர்.

மராட்டிய உள்நாட்டுச் செய்திகள் (1776–8): சிறிது காலம் உள்நாட்டு இடையூறுகளையும் எதிர்த்துநிற்க வேண்டிய பொறுப்புப் பூனு அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருந்தது. ஐதர் கூட்டி என்ற இடத்தை 1776-ல் கைப்பற்றிக் கொண்டு முராரிராவ் கோர்படே என்ற மராட்டிய வீரரைக் கைதியாக்கினுர். கோலாப்பூரின் II-ம் சாம்பாஜி 1760-ல் இறந்தபின் அவர் மனைவி ஜிஜிபாய், தமது வளர்ப்புப் பிள்ளையான IV-ம் சிவாஜி (1762–1812) யின் பிரதிநிதியாக ஆட்சி நடத்தினுள். அவ்வம்மையார் பூனு அரசாங்கத்துடன் பகைமை பாராட்டினுர். ஐதருடனும் இரகோபாவுடனும் கூட்டுறவு அமைத்துக்கொண்டார். ஆனுல் 1778-ல் பூனுப்படை அவரைத் தோற்கடித்தது. அதன் விளைவாக அவர் பூனு அரசியலாருக்கு அடங்கியிருக்க ஒப்பினுர். 1777-ல் இராமராசர் இறந்தார். தாராபாய்க்குப் பிறகு அச்சத்திரபதியிடம் மாதவராவ் அன்பு பாராட்டி வந்தார். அவருக்குப்பின் அவருடைய (இராமராசரின் வளர்ப்பு மகனை II-ம் சாகு (அல்லது இளைய சாகு) சத்திரபதி ஆனுர். (1777–1808).

நானு பட்னிஸின் உயர்நிலை: பானிப்பட்டுப் போர்க்களத்திலிருந்து நானு பட்னிஸ் தப்பி ஓடிய செய்தியை

முன்னர்ப் பார்த்தோம். 1762ல் அவர் தனிமுறைச் செயலாளராகவும் 1768-ல் இரகுநாதராவின் சிறைக்காவலராகவும் பணியாற்றிப் புகழ்பெற்றார். அவர், பேஷ்வா மாதவராவுக்கு மிகவும் கடப்பாடுடையவர். நாராயணராவ் நானாவிடம் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார். அவர் கொலையுண்ட பத்தாம் நாளில் நானா மற்றவர்களுடன், இரகோபாவைப் பழிக்குப்பழி வாங்குவதற்குச் சூளுரை கூறினார். 1774-ல் பூனாவில் அரசப் பிரதிநிதிக்குழு ஏற்படுவதற்கு அவர் சிறந்த காரணமாவார். சவாய் மாதவராவைப் பேஷ்வாவாக அமர்த்திய பிறகு அவர் இரகோபாவின் திட்டங்களை அழிக்க முற்பட்டார். அதைத் தொடர்ந்து ஆங்கிலேயருடன் புரந்தர் உடன்படிக்கையும் செய்துகொண்டார். அதன்பின் அவர் தம் நாட்டின் உள்நாட்டு அலுவல்களில் கருத்தைச் செலுத்தலானார். 1777-ல் செயிண்ட் லூபின் என்ற பிரெஞ்சுத் தூதுவர் பூனாவில் நானா பட்னிஸ்ஸின் சிறப்பான வரவேற்பைப் பெற்றார். அவ்வமயம் பூனாச்சபையில் உட்குழப்பம் மேலிட்டது. நானாவை வெறுத்த சிலர் அவருக்குப் பகையாகச் சதி செய்து அவரை ஒழித்து விட்டுஇரகோபாவைப் பதவியில் அமர்த்த முயன்றனர். ஆனால் அது பயனுறவில்லை. மகாதஜி சிந்தியா அவ்வமயத்தில் நானாவுக்கு உதவியாயிருந்தார். பின்னர் பிரதிநிதிசபை மாற்றி அமைக்கப்பட்டது.

மகாதஜி சிந்தியா: ஏறத்தாழ 1733ல் பிறந்த மகாதஜி சிந்தியா, பானிப்பட்டுப் போரின் முன்பும் அப்போர்க்களத்திலும் பாலாஜிராவுடன் ஒத்துழைத்தார். அப்போரின் விளைவாக அவர் கால் முடமாயிற்று. மாதவராவ் இரகுநாதராவின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாது, மகாதஜி சிந்தியா தமது தந்தையின் ஜாகீரைப் பெறுவதற்கு அனுமதித்தார் (1769). அதே ஆண்டில் மகாதஜி, மராட்டியரின் வட இந்தியப் படையெழுச்சியில் பங்குகொண்டார். இவரும் துக்கோஜி ஹோல்கரும் 1772-ல் முகலாயப் பேரரசரைத் தில்லிக்கு அழைத்துச் செல்லக் காரண

மாயினர். 1774-ல் மராட்டியர் ரோஹில்லரைத் தோற் கடித்தமைக்கும் மகாதஜி சிறப்பான காரணமாவர். நாஞ வுக்கு இவர் செய்த உதவியும் குறிப்பிடத்தக்கது.

வார்கான் ஒப்பந்தம் (1779): செயிண்ட் லூபின் பூஞவுக்குச் சென்றதால், நாஞ, ஆங்கிலோயருக்குப் பகை யாகப் பிரெஞ்சியருடன் சதி சூழ்ச்சி செய்கின்ருர் என்று வதந்தி பரவியது. ஆகவே ஆங்கிலேயர் நாஞவைப் பகைக்கலாயினர். இரகோபாவுடன் புதிய உடன்படிக்கை செய்துகொள்ளப் பம்பாய் அரசாங்கத்துக்குத் தாய் நாட்டினர் ஆதரவு தந்தனர். ஆதலால் அவரையே பூஞ வில் பேஷ்வாவின் பிரதிநிதியாக அமர்த்தப் பம்பாய் ஆங்கிலேயர் தீர்மானித்தனர். ஆங்கிலேயப் படையை எதிர்க்க நாஞ தக்க முன்னேற்பாடுகளைச் செய்தார். ஹோல்கர், சிந்தியா ஆகியோரின் உதவி அவருக்குக் கிடைத்தது. நாஞவின் படைகளைக் கண்டு ஆங்கிலேயரே அச்சமுற்றனர். ஆங்கிலப்படை ஊக்கங்குன்றி, வார்கான் அல்லது வாட்கான் என்ற இடத்தில் நாஞ பட்னிஸின் படைக்குக் கீழ்ப்படிந்தது. ஆங்கிலேயரை நம்புவதிற் பயனில்லை என்றுணர்ந்த இரகோபா சிந்தியாவிடம் சென்று பாதுகாப்பைக் கோரினுர். மராட்டியரின் தாக்குதல் களால் துயருற்ற ஆங்கிலேயர் வார்கானில் ஒரு ஒப்பந் தத்தைச் செய்துகொண்டனர். மகாதஜி சிந்தியா ஒப்பந் தத்தை ஏற்றுக்கொண்டார். அதன்படி 1773-ம் ஆண்டு முதல் ஆங்கிலேயர், தாம் கைக்கொண்ட இடங்கள் யாவற்றையும் இழந்தனர். மகாதஜி சிந்தியா, 41,000-ரூபாயையும் புரோச் பகுதியின் வரித்தொகையையும் பெற்ருர். வங்காளத்திலிருந்து வந்த படைகளைத் திருப்பி அனுப்பவும் ஆங்கிலேயர் உடன்பட்டனர், இரண்டு ஆங்கிலேயர்களைப் பிணையாக மராட்டியரிடம் நிறுத்திவைக்கவும் இசைந்தனர். ஆஞல் பம்பாய், கல்கத்தா அரசாங்கங்கள் அவ்வொப்பந்தத்தை ஏற்க மறுத்தன. ஆயினும் மகாதஜி சிந்தியாவுக்குக் கொடுக்க வேண்டியதைமட்டும் வழங்க இணங்கின. முடிவாக

ஆங்கிலேயரின் படையெழுச்சி அறிவற்ற ஓர் செயலாகும் அதில் தொடர்புகொண்ட முதன்மைத் தலைவர்களை, இயக்குநர்கள் பதவியினின்று நீக்கினர். இரகோபாவை, மகாதஜி சிந்தியா தமது காவலுக்கு உட்படுத்தி ஜான்ஸியில் வைத்திருக்க வேண்டுமென்றும் அதுசம்பந்தமான செலவுகளைப் பூனு அரசாங்கம் கொடுக்குமென்றும் ஏற்பாடாயிற்று. ஆனுல் செல்லும் வழியிலேயே இரகோபா தப்பி ஓடிவிட்டார். புரோச்சிலிருந்த ஆங்கிலேயர் அவரை வரவேற்றனர்.

கோடார்ட்டின் (Goddard) வெற்றியும் தோல்வியும் : வாரன்ஹேஸ்டிங்ஸ், கோடார்ட் என்பாரின் தலைமையின் கீழ் ஒரு படையை அனுப்பியிருந்தார். அப்படை வந்து சேருவதற்கு முன்னரே வார்கான் ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆதலால் ஹேஸ்டிங்ஸ் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. கோடார்ட் 1779-ல் சூரத் வந்துசேர்ந்தார். அவருடைய வீரச் செயல்கள் ஆங்கிலேயரின் படைப்பெருமையைப் பெருக்கின. பிரெஞ்சுக்காரரின் ஆதிக்கம் மகாராட்டிரத்தில் ஏற்படாவண்ணம் தடைசெய்ய வேண்டுமென்பது ஹேஸ்டிங்ஸின் கருத்தாகும். நானுபட்னிஸ், நிஸாம் அலியுடனும் ஐதர் அலியுடனும் கூட்டுறவுகள் அமைத்துக் கொண்டு ஆங்கிலேயரை எதிர்க்க முன்னேற்பாடு செய்துவந்தார். ஆங்கிலேயர் தம்முடன் உறவாட வேண்டுமெனின் முதலில் இரகோபாவையும் சால் செட்டையும் தம்மிடம் ஒப்படைக்கவேண்டுமென்று வற்புறுத்தினுர். இவ்வாறு போர் மீண்டும் தொடங்கியது. கோடார்ட், 1780-ல் தபை என்ற இடத்தைக் கைக் கொண்டார் ; கெயிக்வாரின் பதே சிங்குடன் நட்பு உறவு கொண்டார் ; அகமதாபாத்தை அழிக்க முற்பட்டார். மகாதஜி சிந்தியாவும் துக்கோஜி ஹோல்கரும் ஆங்கிலத் தளபதியைத் தாக்க முன்வந்தனர். ஆனுல் அவர்கள் திரும்பிச்செல்ல நேர்ந்தது. சிந்தியா தங்கியிருந்த இடத்தை கோடார்ட் தாக்கினுர். அவர் மகாராட்டிரத்தை விடக் குஜராத் பகுதியே போர்ச்செயல்கள் நிகழ்த்த ஏற்ற

இடமாகக் கொண்டார். குஜராத்திலிருந்த சிந்தியா, ஹோல்கர் இருவரையும் திரும்பச்செய்வதற்காக அவர்கள் கருத்தை மத்திய இந்தியாவுக்கு மாற்ற எண்ணி ஹேஸ்டிங்ஸ், காப்டன் பாப்ஹாம் என்பார் தலைமையில் வங்காளத்தினின்று ஒரு படையை அனுப்பினர். அத்தலைவர் கோஹட் (குவாலியருக்கு அருகில்) இராணுவுக்கு உதவி செய்யத்தொடங்கினர். அந்த இராணு பேஷ்வாவுக்கு அடங்காமல் உரிமைபெற விரும்பினர். அவர்கள் தீவிரமாகப் போரிட்டு சிந்தியாவுக்கு உரிய குவாலியர் கோட்டையை முற்றுகையிட்டுக் கைப்பற்றினர். அச்செயல் ஆங்கிலேயரின் பெருமையை உயர்த்தியது; சிந்தியாவை மாளவத்துக்கு மீளவைத்தது. அதே காலத்தில்தான் ஐதர் அலி கருநாடகத்தில் ஆங்கிலேயரைத் துன்புறுத்திவந்தார். கோடார்ட், பஸ்ஸீனைக் கைப்பற்றினர். அது மராட்டியருக்குப் பெருந்தோல்வியே. எனினும் நாஞ மனஉறுதி குன்றவில்லை. ஆங்கிலேயர் விடுத்த அமைதி யோசனையை ஏற்க மறுத்துவிட்டார். மேலும் மேலும் வன்மையான போருக்கான முன்னேற்பாடுகளைச் செய்துவந்தார். அம் முயற்சிகளின் விளைவாக 1781-ல் பரசுராம் பாவோ பட்வர்த்தன், ஹரிபாட்கே, துக்கோஜி ஹோல்கர் முதலியவர்கள் கோடார்டை கல்யாண் பகுதிக்குத் தெற்கில் தோற்கடித்தனர். ஆனல் அதற்கிடையில் சிந்தியா, ஆங்கிலேயரால் சிப்ரியில் (சிவபுரி, குவாலியர் நாடு) முறியடிக்கப்பட்டார். வாரன் ஹேஸ்டிங்ஸின் முயற்சியால் முதோஜி பான்ஸ்லே மராட்டியக் கூட்டரசினின்றும் பிரிந்தார். சிந்தியா நாஞ பட்னிஸுக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே மத்தியஸ்தராக இருக்க விரும்பி 1781-ல் ஆங்கிலேயருடன் உடன்பாட்டுக்கு வர இசைந்தார். அவ்வுடன்படிக்கை காப்பாற்றப்படுவதற்குத் தாமே பொறுப்பும் ஏற்றுக்கொண்டார்.

சால்பை உடன்படிக்கை 1782 : கோடார்ட் தோல்வியுற்றபிறகு ஆங்கிலேயருக்கு நிபந்தனைகள் விதிக்க நாஞ பட்னிஸ் முற்பட்டார். ஆனல் மகாதஜி சிந்தியாவும்

நாகபுரி பான்ஸ்லேயும் ஆங்கிலேயரின் சார்பாகப் பேச்சு வார்த்தை நடத்தினர். அச்சமயத்தில் ஐதரைப் பல இடங்களில் ஸர் அயர் கூட் தோற்கடித்தார். அச் சூழ்நிலை காரணமாக நாஞ மகாதஜியின் நிபந்தனை களுக்கு இணங்கினர். 1782-ல் சால்பை (குவாலி யருக்கும் ஜான்ஸிக்கும் இடையில்) என்னும் இடத்தில் ஆங்கிலேயருக்கும் மராட்டியருக்கும் இடையே உடன் படிக்கை ஏற்பட்டது. அதன்படி ஆங்கிலேயர் புரந்தர் உடன்படிக்கைக்குப்பிறகு வென்ற நாடுகள் அனைத் தையும் மராட்டியர்களுக்குத் திரும்பக் கொடுத்துவிட வேண்டும். (ஆகவே சால்செட் ஆங்கிலேயர் வசமே இருந்தது); சிந்தியாவின் பணிகளுக்காக புரோச் கிடைத்தது. இரகோபா மாதமொன்றுக்கு ரூ 25000 உபகாரச்சம்பளம் பெற்ருர். சிந்தியாவின் இராச்சியத் தில் அவர் தங்கினர். அவருக்கு ஆங்கிலேயர் உதவி செய்யக்கூடாது; ஆங்கிலேயரின் ஐரோப்பியப் பகைவர் களுடன் பேஷ்வா நட்புறவு கொள்ளலாகாது; மேலும் ஐதர் ஆங்கிலேயரிடமிருந்தும் நவாப்முகம்மது அலியிட மிருந்தும் வென்ற இடங்களைத் திரும்ப அளிக்கும் பொறுப்பை மராட்டியர் ஏற்கவேண்டும். இவ்வுடன் படிக்கையை நாஞ 1783-ல்தான் உறுதி செய்தார். இதனல் ஆங்கிலேயருக்கு மிகுந்த நன்மைகள் ஏற்படாத போதிலும் அவர்களுக்கும் மராட்டியர்களுக்கும் இடையே ஏறத்தாழ இருபது ஆண்டுகட்கு சமாதானம் நிலவியது.

முதல் மராட்டியப் போரின் முடிவுகள் : இப்போரின் விளைவாக மகாதஜி சிந்தியா மிகவும் சிறப்பான நிலையை அடைந்தார். அதுமுதல் அவர் பூனவிலிருந்த பேஷ்வா வுக்கும் நாஞ பட்னிஸுக்கும் அடங்கி நடக்காமல் உரிமையுடன் செயலாற்றத் தொடங்கினர். வட இந்திய அரசியலில் அவருடைய சிறப்பு உயர்ந்தது. அப்போரில் ஹேஸ்டிங்ஸ், காலத்துக்கேற்றவாறு நடந்துகொண்ட தால் ஆங்கிலேயருக்கேற்பட்டிருந்த போர் இடையூறுகள் நீங்கின. பானிபட்டுப் போரும் பேஷ்வா மாதவராவின்

சாவும் மராட்டியரை வலிமை குன்றச்செய்துவிடவில்லை என்பதை இப்போர் காட்டுகிறது. இப்போரில் சிறப்பான பங்கு கொண்ட நானாபட்னிஸின் ஆற்றல் பாராட்டத் தக்கது. சால்பாய் உடன்படிக்கை இரகோபாவின் பேர வாவை அழித்தது.

இரகோபாவின் சாவு (1784) : தொடக்க காலத்தில் இரகோபா மராட்டியரின் லாகூர் படையெழுச்சியிலும் உத்கீர் போரிலும் பங்கு கொண்டார். பானிப்பட்டுப் போருக்குப்பிறகு அவர் தீமை எதையும் செய்யாவண்ணம் மாதவராவ் கட்டுப்படுத்திவந்தார். 1772-ல் பின்னவர் இறந்தபின் இரகோபா தம் விருப்பம் போல் செயலாற்ற முற்பட்டார். அவர் மனைவி ஆனந்திபாய் தன் கண வனையே மிகவும் கட்டுப்படுத்திவந்தாள். படைத்திறமை மிகுதியாக இருந்த போதிலும் பெருமிதமும் சூழ்ச்சித் தன்மையும் ஊசலாடும் மனத்தன்மையும் இரகோபாவிடம் இருந்தன. தன் மனைவியின் கெடுமதியினாலும் அவர் கேடுற்றார். அவர் ஆங்கிலேயர் உதவியை நாடி இங் கிலாந்தின் மன்னர் III-ம் ஜார்ஜுக்கு முடங்கல் வரைந் ததும் அறிஞர் பர்க்கின் நல்லெண்ணத்தைப் பெற்றதும் குறிப்பிடத்தக்த நிகழ்ச்சிகளாம். 1784-ல் இரகோபா உயிர் நீத்தார்.

பகுதி 8

ஐதர் அலியும் சென்னை அரசாங்கமும்; இரண்டாம் மைசூர்ப்போர்—முற்பகுதி 1780-2

ஐதரின் விரைவான முன்னேற்றம் (1772–9) : 1772 வரை ஐதரின் வாழ்க்கையை முன்னர் வரைந்தோம். அவ்வாண்டில்தான் அவர் பேஷ்வா மாதவராவுக்கு அடங்கினர். அப்பேஷ்வா இறந்தபின் மராட்டிய அரசியலில் குழப்பம் மேலிட்டது. அந்நிலைமை ஐதரின் முன்னேற்றத்துக்கு அனுகூலமாயிற்று. 1773-ல் குட நாட்டில் அரசுரிமைப் போராட்டம் தோன்றியது. ஐதர் அதைப்பயன்படுத்திக்கொண்டு மெர்க்காராவுக்குச் சென்று, நூற்றுக்கணக்கான மக்களைக் கொலை செய்து மன்னரைக் கைதியாக்கிச் சீரங்கப்பட்டணத்துக் அழைத் துச்சென்றார். அதே ஆண்டில் அவர் கள்ளிக்கோட்டை யைக் கைக்கொண்டு மலையாள நாட்டை மீட்டும் வென்றார். முன்னர் அவர் மராட்டியரிடம் இழந்த இடங்களை 1774-ல் மீட்டுக்கொண்டார், இரகோபாவுக்கு ஐதரின் ஆதரவு கிடைத்தது. குடகில் ஏற்பட்ட கலகத்தை அடக்கிவிட்டு ஐதர், 1775-ல் சீரங்கப்பட்டணம் திரும்பினர்.; அவ் வாண்டில் மன்னர் VIII-ம் சாமராசர் இறக்கவே, அவருடைய இடத்தில் IX-ம் சாமராசரை (1775–96) அமர்த்தினர். பெல்லாரியும் கூட்டியும் அவர் வசப்பட்டன. கூட்டியின் தலைவரான முராரிராவ் கோர்படே (ஆர்க் காட்டில் கிளைவுக்கு உதவிசெய்தவர்) ஐதருக்கு அடங்கி அழிந்தார். (1776). மறைந்துபோன விசயநகர அரசின் பிரதிநிதி யென்று தம்மைக் கூறிக்கொண்ட ஆனெகுந்தி அரசர், 1776-ல் ஐதரால் நாடிழந்தார். மராட்டியரையும் ஐதர் வென்று கிருஷ்ண ஆறுவரை உள்ள நிலப் பகுதியைக் கைக்கொண்டயின் 1678-ல் அவர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டார். அடுத்த ஆண்டில் அவர் துரோகச்செயல் புரிந்து சிதால்துர்க்கத்தைத் தம்

வசப்படுத்திக்கொண்டார். அவ்விடத்தின் இளைஞர்களை முகம்மதியர்களாக்கி அவர்களைக்கொண்ட புதியபடை யொன்றை அங்கே நிறுவினர். மலையாளத்தில் தாம் கைப்பற்றிய ஷெயிக் அயஸ் என்ற நாயரை, முகம்மதிய ராக்கி அவரையே சிதால்துர்க்கத்தின் கவர்னராக அமர்த் தினர். பிறகு கடப்பை அவர் வசப்பட்டது. அதன்பின் சீரங்கப்பட்டணம் திரும்பிய அவர் சிவில் துறைக்களங் களைச் சீர்திருத்தினர். காவல் துறை வலிமையடைந்தது. 1779-ல் நானாபட்னிஸ், ஆங்கிலேயருக்குப் பகையாக ஐதருடனும் நிஸாம் அலியுடனும் கூட்டுறவு அமைத்துக் கொண்டார்.

சென்னை கவர்னர்கள்: அக்காலத்தில் சென்னை அரசாங்கம் சீர்கேடுற்று இருந்தது. கவர்னர்களின் நிலை உறுதியற்றதாயிற்று. ஆலோசனைக் குழுவினரில் நேர்மை யும் திறமையும் வாய்ந்த உறுப்பினர் இல்லை. அரசிய லாருக்கு வேண்டிய வன்மை அவர்களிடம் கிடையாது என்று இயக்குநர்களே குறிப்பிட்டுள்ளனர். செயிண்ட் ஜார்ஜ் கோட்டையின் கவர்னர்களின் பெயர்களும் கால முறையும் வருமாறு: பிகட் (1755-63); பால்க் (1763-7); பூர்ஷியர் (1767-70); தியூப்ரே (1770-3); விஞ்ச் (1773-5); மறுபடியும் பிகட் (1775 - 6); ஸ்ட்ராட்டன் (1776 - 7); ஒயிட் ஹில் (1777-8); ரம்போல்ட் (1778-80); மீண்டும் ஒயிட் ஹில் (1780); ஸ்மித் (1780-1); மக்கார்த்னே (1781-5). இரட்டை ஆட்சி முறையால் அரசியலில் சீர் கேடுகள் விளைந்தன. நவாப் முகம்மதி அலியின் இயல்பும் அவர் தொடர்பு கொண்ட அலுவலாளர்களின் நடத்தை யும் அக்கேடுகளை மேலும் பெருக்கின. கம்பெனியின் அலுவலாளர்கள் யாவரும் சென்னையில், நவாப் முகம்மது அலி வாலாஜாவுக்குப் பணம் கடன் கொடுப்பதன் மூலம் தங்களுடைய நல்வாய்ப்புக்களைப் பெருக்கி வந்தனர். ஆண்டுக்கு 36 சத வீதம் கூடச் சில சமயங்களில் நவாப் பிடமிருந்து வட்டி வாங்கப்பட்டது. பிறகு சிறிது சிறிதாக வட்டித்தொகை குறைந்து 10 சதவீதமாயிற்று. தாம்

பெற்ற கடன் தொகையைக் கொண்டு நவாப், கருநாடகத்தில் ஆங்கிலப் – பிரெஞ்சுப் போர்களை நிகழ்த்தி வந்தார். ஆர்க்காட்டு நவாப்பின் கடன் தொகைகளைப்பற்றிப் பார்லிமெண்டில் தாம் நிகழ்த்திய சில சொற்பொழிவுகளில் பர்க் குறிப்பிட்டிருப்பது நோக்கற்பாலது (1775). கடன் கொடுத்தவர்களுக்குத் தலைமையாயிருந்த பால் பென்பீல்டு (Paul Benfield), நவாப் தமக்குப் பெருந்தொகை தர வேண்டுமென்று வழக்காடினார். அவர் கம்பெனியில் ஒரு கீழான அலுவலர். நவாப் கடன்காரர்களுக்குத் தம் நாட்டையும் அடகு வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. சில மாவட்டங்களில் வரியை வாங்கிக்கொள்ளும் அதிகாரத்தையும் அவர் கடன் கொடுத்தோருக்கு அளித்தார். இக்கடன் சம்பந்தமான ஊழல்களும் வங்காளத்தில் மீர் காசிம் காலத்தில் உள்நாட்டு வாணிகத்தில் தலையிட்டு வந்ததும் ஆங்கில – இந்திய ஆட்சி முறையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க பழிச்செயல்களாம். கருநாடக நவாப் வாலாஜா, பெயரளவில் உரிமையுடனிருந்த போதிலும், தமது கடன்பட்ட நிலை காரணமாகச் சென்னை அரசியலாரைக் கட்டுப்படுத்தி எதையும் செய்ய இயலாத நிலையில் இருந்தார்.

தஞ்சாவூர் அரசர்: பிரதாப் சிங்கின் மகனான துலாஜி 1763 முதல் 1787 வரை தஞ்சையில் அரசாண்டார். அவர் நாட்டைக் கைப்பற்ற வேண்டுமென்ற பேராசை நவாப் முகம்மது அலி வாலாஜாவுக்கு இருந்தது. 1762-ம் ஆண்டிலேயே கவர்னர் பிகட்டின் முயற்சியால் நிகழ்ந்த உடன்படிக்கையின்படி நவாபுக்குத் தஞ்சை அரசர் ஆண்டு தோறும் கப்பம் கட்ட உடன்பட்டனர். ஆனால் அவ்வாறு அவர் ஒழுங்காகக் கப்பம் கட்டுவதில்லை யென்றும், மராட்டியருடனும் ஐதர் அலியுடனும் சேர்ந்து சதி செய்கிறார் என்றும், நவாப், அவர் மீது குற்றஞ்சாட்டினார். அதன் விளைவாக சென்னை அரசியலாரின் உதவியுடன் 1771, 1773 ஆகிய ஆண்டுகளில் தஞ்சை மீது இரண்டு படையெடுப்புக்கள் நிகழ்ந்தன. தஞ்சை, நவாப் வச

மாகியது. அதன் அரசர் குடும்பத்துடன் சிறைப்பட்டார். தஞ்சாவூரின் நீண்ட கால வரலாற்றில் 1773 முதல் 1776 வரை உள்ள காலப்பகுதியில்தான் முகம்மதியர் ஆட்சியைக் கைப்பற்றித் தொந்திரவுகள் கொடுத்து வந்ததைக் காண்கிறோம். அக்காலத்தில் அந்நாட்டின் வரிகளை, நவாப்பின் கடன்காரர்கள் வசூலித்துக்கொண்டனர். பென்பீல்டு முதலியோர், தம்மால் இயன்றவரை, உழவர்களிடமிருந்து பொருள் பறித்தனர். அந்நிகழ்ச்சிகளை இங்கிலாந்தில் இருந்த இயக்குநர்கள் அறிந்தவுடன் சினங்கொண்டனர். தஞ்சை அரசரை நாடிழக்கச்செய்தது நீதியற்ற கொடுஞ்செயலென்று அறிவித்தனர். சென்னைக் கவர்னர் விஞ்ச் என்பவரைப் பதவியினின்று விலக்கினர். தஞ்சையை மீண்டும் அதன் அரசரிடம் ஒப்படைத்துவிடுமாறு ஆணையிட்டனர். 1776-ல் பிகட் மீண்டும் கவர்னராகி அவ்வாணையை 1776-ல் நிறைவேற்றினர். நவாப் கவர்னருக்குக் கைக்கூலி கொடுத்து அச்செயலை நிறைவேற்ருமலிருக்க முயன்றது பயனுறவில்லை. நவாப்புக்குக் கடன் கொடுத்திருந்த ஆங்கிலேயர் கவர்னருடன் பகைமை பாராட்டினர். பால் பென்பீல்ட் தமக்கு 23 லட்ச ரூபாய் நவாப்பிடமிருந்து கிடைக்க வேண்டுமென்று வழக்காடினர். அவ்வழக்கை ஆலோசனைச் சபையில் பெரும்பான்மையினர் ஆதரித்தனர். சச்சரவுகள் மிகுந்தன. கவர்னர் தமது எதிரிகளைச் சபையினின்று அகற்றினர். அவருக்கு எதிராகச் சூழ்ச்சி நடந்தது. அதில் நவாப்பும் பென்பீல்டும் முக்கிய பங்கு கொண்டிருந்தனர். அதன் முடிவாக 1776-ல் பிகட் சிறைப்பட்டார். அடுத்த ஆண்டில் அவர் சிறையிலேயே இறந்துவிட்டார். அந்நிகழ்ச்சிகளில் தொடர்புகொண்ட ஆங்கிலேயச்சபையினர் தாய்நாட்டுக்குத் திரும்ப அழைக்கப்பட்டனர்; அவர்கள் காசுத்தண்டம் கொடுக்க நேர்ந்தது. பென்பீல்டு மட்டும் தப்பினர். இச் செய்திகள்யாவும் அக்காலத்துச் சென்னை அரசியலின் தன்மையைக் காட்டுகின்றன.

ஸர் தாமஸ் ரம்போல்ட் : 1778 முதல் 1780 வரை சென்னைக் கவர்னராயிருந்த ரம்போல்ட் (Rumbuld) அவருக்கு முன்பிருந்த கவர்னர்களைப் போலவே முறை யற்ற செயல்களை மேற்கொண்டர். வடசர்க்காரில் அவர் சமீந்தார்களுடன் ஒரு நிலவரி ஏற்பாடு அமைத்தார். அதனால் அவருக்கு மிகுதியான பொருள்கிடைத்தது. ஆறு மாத காலத்தில் அவர் 4½ லட்சரூபாய் சம்பாதித்துத் தாய்நாட்டுக்கு அனுப்பியதாகக் கூறப்படுகிறது. அவர் நிஸாமின் உடன் பிறந்தாரான பஸலத்ஜங்கிடமிருந்த குண்டூரைத் தாம் வாங்கிக்கொண்டார். அதனால் நிஸா முக்கு வருத்தமேற்பட்டது. மேலும் நிஸாமுக்கு ஆங்கி லேயர் தரவேண்டிய கப்பத்தையும் நிறுத்திவிட முயன்றார். நெருக்கடியான ஒரு சமயத்தில் நிஸாமுடன் பகைமை கொள்வது தவருன கொள்கை என்பது வாரன்ஹேஸ்டிங் ஸின் கருத்தாகும். ஆகவே அவர் சென்னை அலுவல் களில் தலையிட்டதால் அவருக்கும் கவர்னருக்கும் சச்சரவு ஏற்பட்டது. முடிவாக பஸலத்ஜங், குண்டூரைத் திரும்பப் பெற்றார். நிஸாம், சென்னை ஆங்கிலேயரிடம் நம்பிக்கை இழந்தார். அதேசமயத்தில் ஐதருடன் போர் தொடரும் போலிருந்தது. 1780-ல் ரம்போல்டு இங்கிலாந்துக்குத் திரும்பினர். இயக்குநர்கள் அவரை 1781-ல் பதவியி னின்று விலக்கினர்.

இரண்டாம் மைசூர்ப் போரின் காரணங்கள் : ஐதர் ஆங்கிலேயருடன் நட்பு உறவு கொண்டிருக்கவேண்டு மென்றுதான் எண்ணினர். ஆனால் அவர்கள் தாம் அவ ருடன் 1769-ல் செய்துகொண்ட உடன்படிக்கையை மீறிய தால் ஐதருக்குப் பெரிய குறை இருந்தது. 1773 முதல் 1778 வரை அவர், அவ்வுடன்படிக்கையைப் புதுப்பிக்கப் பலவாறு முயன்றும் அது பயனளிக்கவில்லை. ஐதரின் பகைவரான முகம்மது அலி வாலாஜா, ஆங்கிலேயருக்கும் அம்மைசூர் வீரருக்கும் உடன்பாடு ஏற்படாத வகையில் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி வந்தார். நவாப்பின் குறைகளைத் தீர்க்க இங்கிலாந்திலிருந்து லின்ட்ஸே

(Lindsay) என்ற தூதுவர் சென்னைக்கு வந்திருந்தார். அவர், ஐதருக்குப் பகையாக மராட்டியருடன் நட்பு கொள்ளுமாறு ஆங்கிலேயருக்கு அறிவுரை கூறினர். ஆகவே அந்நிலையில் ஐதர் போருக்கான முன்னேற்பாடு களைச் செய்யத் தொடங்கினர். அவர் புதுச்சேரி கவர்ன ருடன் சேர்ந்து கூட்டுறவு அமைத்துக்கொண்டார். 1778-ல் இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்கும் போர் மூண்டது. ஆதலால் சந்திரநாகூர், புதுச்சேரி, மாஹி முதலிய இடங்களை ஆங்கிலேயர் கைப்பற்றலாயினர். (1779). ஐதருக்கு ஐரோப்பாவிலிருந்து மாஹி வழியாகப் போர்த் தளவாடங்கள் வந்துகொண்டிருந்தன. அம் மைசூர் வீரர் மலையாளத்தை வென்றூர் என்று முன்னர்ப் பார்த்தோம். அதன் காரணமாக அவர் மாஹி தமது காவலுக்கு உட்பட்டது என்று வாதித்தார். அதைப் பொருட்படுத்தாமல் சென்னை அரசியலார் மாஹியை முற்றுகையிட்டுக் கைப்பற்றினர் (1779). மேலும், ஐத ருக்குக் குண்டூர் சர்க்காரைக் கைக்கொள்ளவேண்டு மென்ற எண்ணமிருந்தது. ஆங்கிலேயர் அதைத் தம் வசப்படுத்த முற்பட்டனர். அவ்வாறிருக்கச் சென்னை அரசியலார் நிஸாம் அலியைப் பகைத்துக்கொண்டனர் என முன்னர்க் கூறினேம். 1779-ல் ஐதர், நிஸாம் அலி யுடனும் மராட்டியருடனும் கூட்டுறவு அமைத்துக் கொண்டார். ரம்போல்டுக்குப்பின் கவர்னராக வந்த ஒயிட் ஹில் ஆற்றலற்றவர். கைக்கூலி வாங்குவதில் திறமைசாலி. சென்னையில் படைத்தலைவராக இருந்த சர் ஹெக்டர் மன்ரோ (பக்ஸார் போரில் வெற்றிபெற்றவர்) அவ்வமயம் தக்க முன்னேற்பாடுகளைச் செய்யாமல் துணிவற்று இருந்தார். ஐதர் கருநாடகத்தில் படை யெடுத்து வரும்பொழுது (ஜூலை – 1780) இடையூறுகள் மிக்க பொறுப்பை ஏற்று நிர்வகிக்கத்தக்க தலைவர்கள் சென்னையில் இல்லை.

போர் : கருநாடகப் படையெழுச்சி 1780 : ஆங்கி லேயர் இந்தியாவில் ஐதர், நிஸாம், மராட்டியர், முதலிய

பல பகைவர்களை ஒரே காலத்தில் எதிர்க்கவேண்டி யிருந்தது. அப்பகைவர்கள் பிரெஞ்சுக்காரரின் உதவி யையும் பெற்றிருந்தனர். அக்காலத்தில்தான் அமெரிக்க உரிமைப்போர் (1775-83) நடந்துவந்தது. ஆங்கில வீரர் பர்காயன் 1777-ல் சாரடோகாவில் சரணடைந்தார். இங்கிலாந்துடன் 1778-ல் பிரான்ஸும் 1779-ல் ஸ்பெயி னும் 1780-ல் ஹாலந்தும் போர்தொடுத்தன. வடக்கு ஐரோப்பிய நாடுகள் இங்கிலாந்துக்குப் பகையாக ஒன்று சேர்ந்தன. ஆகவே ஆங்கிலேயருக்கு அது ஒரு நெருக் கடியான காலமாகும் ஐதர் சென்னையைக் கடல் வழியாக வும் நிலவழியாகவும் முற்றுகையிடத் திட்டமிட்டார். அத் திட்டப்படி பிரெஞ்சியர் கடலில் ஆங்கிலேயரை எதிர்க்க வேண்டும்; ஐதர் பழவேற்காட்டிலிருந்து புதுச்சேரிவரை உள்ள நிலப்பகுதியைத் தாக்கி அழிக்க முற்பட்டார். கருநாடகத்தில் அவர் படை வெற்றிமேல் வெற்றி அடைந்தது. அவர் இழைத்த அழிவுபாடுகளை அறிஞர் பர்க் இயற்கையான தமது ஆற்றலினால் விளக்கியுள்ளார். வரும் வழிகளில் எல்லாம் அவ்வீரர் கொள்ளையடித்தாராம். பல இடங்கள் கோரமான வகையில் தீக்கிரையாயின. கோயில்கள் அழிந்தன. வீடுகள் எரிந்தன. திக்கற்ற மக்கள் அங்குமிங்கும் ஓடித் தவித்தனர். உயிர்தப்பியவர் களைப் பஞ்சம் வாட்டியது. ஆண், பெண், சிறுவர் யாவரும் கருணையின்றிக் கொல்லப்பட்டனர். தந்தை தாயாரைப் பிரிந்து தவிக்கும் குழந்தைகள் ஒருபக்கம்; கணவன்மாரைப் பிரிந்து தவிக்கும் மனைவியர் ஒருபுறம் – எங்கும் ஒரே கோரமான காட்சி புலப்பட்டதாம். சிறந்த அரண்களுடன் அமைந்த நகரங்களுக்குட் சென்றவர்கள் தான் தப்பிப் பிழைத்தனர். ஐதர் சென்ற வழியெல்லாம் கரும்புகைப்படலம் கண்ணுக்கெட்டியவரையில் காணப் பட்டதாம். அவருடைய படையில் 90,000 வீரர்கள் இருந்தனர். அவர்களுக்குப் பிரெஞ்சியர் தக்க பயிற்சி அளித்திருந்தனர். ஒற்றர்முறை சிறப்பாக அமைந் திருந்தது. படை உணவுத்துறையைப் பூர்ணையர் ஒழுங்கு செய்துவந்தார். பூர்ணையர், 1732-ல் சிதம்

பரத்துக்கு அருகில் உள்ள குஞ்சிமேட்டில் மத்வ அந்தண குலத்தில் பிறந்தவர். மைசூரில் அவர் நிதி அமைச்சராஞர். 1811 வரை அவர் மைசூர் நாட்டுக்கு ஆற்றிய பணிகள் போற்றத்தக்கவை. ஹெக்டர் மன்ரோ 1778-ல் புதுச்சேரியைக் கைப்பற்றிக்கொண்டு காஞ்சீபுரத்துக்குச் சென்ருர். அவரைச் சேரவேண்டு மென்ற நோக்குடன் ஒரு ஆங்கிலப் படை பெய்லி என்பாரின் தலைமையில் வந்து கொண்டிருந்தது. அதை ஐதர் போலிலூர் அல்லது பளூரில் முறியடித்தார் (1780). அச்சங்கொண்ட மன்ரோ சென்னைக்குத் திரும்பி ஓடிவந்தார். ஆங்கிலப் படையைத் தோற்கடித்த ஐதர் ஆர்க்காட்டைக் கைப் பற்றினூர். வந்தவாசியைக் கைக்கொள்ள அவரால் இயலவில்லை. அவ்விடம் உதவித்தலைவர் பிளிந்த் என்பாரால் சிறந்த முறையில் காக்கப்பட்டுவந்தது. சென்னை அரசியலார் அந்நெருக்கடியான நிலையில் கல்கத்தாவிலிருந்து உதவியைக் கோரினர். வாரன்ஹேஸ் டிங்ஸ், கருநாடகத்துக்கு ஸர் அயர் கூட்டை அனுப் பினூர். அவ்வீரர் 1781-ல் செங்கற்பட்டு, வந்தவாசி முதலிய பல இடங்களைக் காப்பாற்றிப் புகழடைந் தார். பின்னர்க் கூட், புதுச்சேரியையும் கூடலூரையும் நோக்கிச் செல்லானூர். ஐதர் அவருடன் போரிடுவதைத் தவிர்த்து உள்நாட்டுக்கு மீண்டு தஞ்சையைத் தாக்கினூர். பல சிறுவர்களைக் கைப்பற்றி அவர்களை முகம்மதியராக்கச் சீரங்கப்பட்டணத்துக்கு அனுப்பிவைத்தார். கூட், சிதம் பரத்தைத் தாக்க முயன்றும் அது முடியாமல் பறங்கிப் பேட்டைக்குச் சென்று அங்கே ஐதரைத் தோற்கடித்தார் (ஜூலை, 1771). ஐதர் பெரும் நட்டங்களை அடைந்தார். அவர் ஆங்கிலேயர் கையில் சிக்காமல் தப்பி ஓடிவிட்டார். மீண்டும் அவர் போலிலூரில் இருந்த பெய்லியைத் தாக்கினூர். ஆனூல் அச்சண்டை முடிவான வெற்றியைத் தரவில்லை. போர் முடிவுக்கு வராததைக்கண்டு கூட் மனத்தளர்ச்சி அடைந்தார். பதவியினின்று விலகி விடவும் தீர்மானித்தார். ஆனூல் கவர்னர் மக்கார்த்னே அவருக்கு ஊக்கமளித்து மீண்டும் விடாமுயற்சியுடன்

செயலாற்றத் தூண்டினுர். ஐதர் வேலூரை முற்றுகை யிட்டிருந்ததால் அதை விடுவிப்பதற்காகக் கூட் ஷோலிங் கர் என்னுமிடத்தில் போரிட்டு ஐதரைத் தோற்கடித்தார் மைசூர்ப் படைக்குப் பெருமளவுக்குச் சேதமேற்பட்டது. அவ்வமயத்தில் இங்கிலாந்துக்கும் ஹாலந்துக்கும் போர் மூண்டதால் மன்ரோவும் கர்னல் பிரெய்த்வெயிட் என் பாரும் நாகப்பட்டினத்தைக் கைப்பற்றினர். 1782-ல் சர் எட்வர்ட் ஹூக்ஸ் என்ற ஆங்கிலேயர் திரிகோண மலையைத் தம் வசப்படுத்தினுர். அடுத்த மாதத்தில் திப்பு (ஐதரின் மகன்) பிரெய்த்வெயிட்டைக் கும்பகோணத் துக்கு அருகில் தோற்கடித்து அவரைக் கைதி ஆக்கினுர்.

ஐதர் தம் தவறை ஒப்புக்கொள்ளல் : திப்புவின் வெற்றி ஐதருக்குப் பெருமகிழ்ச்சியைத் தரவில்லை. தாம் முதலில் எண்ணியவாறு தென் இந்தியாவிலிருந்து ஆங்கிலேயரை விரட்டிவிடுவதென்பது இயலாத செயல் என்பதை அவர் உணர்ந்தார். கூட்டின் வெற்றிகள் அவருடைய உள்ளத்தைத் தளர்ச்சியடையச் செய்தன. அவர் எதிர்பார்த்தபடி போதுமான பிரெஞ்சு உதவியும் அவருக்குக் கிடைக்கவில்லை. மேலும் வாரன்ஹேஸ்டிங்ஸ் போர்த்தந்திர முறையைக் கையாண்டு நிஸாமையும் மராட்டியரையும் ஐதரிடமிருந்து பிரித்துவிட்டார். நாகபுரி பான்ஸ்லே மராட்டியக் கூட்டரசினின்று பிரிந்தார். சிந்தியா ஆங்கிலேயரின் நண்பராஞர். அவர் பூனு அரசியலாருக்கும் ஆங்கிலேயருக்கு மிடையே அமைதி உடன்பாடு செய்துவைக்கவும் முற்பட்டார். அச்சூழ் நிலையில், ஆங்கிலேயரை அழித்துவிடமுடியும் என்ற ஐதரின் எண்ணம்தான் அழிந்தது. பூர்ணையரிடம் அவ்வமயம் அவர் கூறியதாவது : நான் ஒரு பெரிய தவறு இழைத்துவிட்டேன் : ஆங்கிலேயருக்கும் எனக்கும் இடையே மனக்குறைகள் இருந்தன என்பது உண்மையே. ஆனல் போர் ஏற்படுவதற்குப் போதுமான காரணம் கிடையாது. ஆடவரில் துரோகியான முகம்மது அலியைப் பொருட்படுத்தாமல் நான் ஆங்கிலேயரை எனது நண்பர்

களாகச் செய்துகொண்டிருக்கலாம். அவ்வாறு செய்யாதது என் தவறே. நான் பெய்லியைத் தோற்கடித்தேன்; பிரெய்த்வெயிட் தோற்றுர். ஆனுல் எத்தனை பெய்லிகள், எத்தனை பிரெய்த்வெயிட்டுகள் தோற்றுலும் ஆங்கிலே யரை அழித்துவிட முடியாது என்பதை உணர்கிறேன். அவர்களுடைய ஆக்க மூலத்தை (Resources) நிலப்பகுதி யில் நான் அழித்துவிடுவேன். ஆனுல் கடலை என்னுல் வற்ற அடிக்க முடியாதே.''*

சப்ரன்(Suffren) ஹூக்ஸ்(Hughes) போர் (1782-3): பிரெஞ்சுக் கடற்படைத் தலைவரான சப்ரன், சிறந்த ஆற்றல் வாய்ந்தவர்; கூர்ந்த அறிவாளி; இடையூறு களையும் வாய்ப்புக் கேடுகளையும் எதிர்த்து நிற்கும் வீரம் படைத்தவர். 1782-ல் அவர் சோழ மண்டலக்கரைக்குச் சேர்ந்தார். அவ்வமயம் அரசியல் நிலை அவர் எதிர்பார்த்த வாறு இல்லாமல் மாறி விட்டது. நிலப்பகுதியில் அடிப் படை நிலையம் எதுவும் அவருக்கு இல்லை. தாய்நாட்டி லிருந்து உதவி வருவதற்கும் வசதி கிடையாது. அவ்வா றிருந்தும் அவர் ஆங்கிலக் கப்பற்படைத் தலைவரான ஹூக்ஸுடன் அரிய போர்கள் நடத்திஞர். சோழ மண்டலக் கரையிலும் இலங்கையிலும் ஐந்து முறைகள் அவ்விரு தலைவர்களும் கடுமையாகப் போரிட்டனர். ஆனுல் சப்ரன் திரிகோணமலையைக் கைப்பற்றிக்கொண்ட செயல் மிகவும் சிறப்புவாய்ந்ததாகும் (ஆகஸ்ட், 1782). ஐந்தாம் முறை போரிட்டபின் ஹூக்ஸ் சென்னைக்குப் பின்வாங்கிஞர். அதைக்கண்ட ஆங்கிலேயர் அச்சமுற்ற னர். ஆனுல் இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்குமிடையே அமைதி ஏற்பட்டுவிட்டதாகச் செய்திகிடைத்ததால் அவ் வச்சம் நீங்கியது. மற்ருெரு ஆங்கிலக் கடற்படைத் தலைவர் ராட்னி, செயிண்ட்ஸ் தீவுகளுக்கு அருகில் (மேற்கு இந்தியத் தீவுகள்-மார்ட்டினீக் அருகில்) டி-கிரேஸைத் தோற்கடித்ததால் ஆங்கிலேயரின் கடலாதிக்கம் மீண்டும் உறுதி ஆயிற்று. மேலும் ரிச்சர்டு பிக்கர்ட்டன் மிகுதியான

* *11, பக். 101*

போர்க்கருவிகளுடன் இந்தியாவுக்கு வந்துசேர்ந்தார். அதன் விளைவாகவும் ஆங்கிலேயரின் கடலாதிக்கநிலை பிரெஞ்சியருடையதைவிட உயர்வானது என்பது தெளிவாயிற்று. ஆயினும் சப்ரனின் பெருமையைப்பற்றி நாம் குறைத்து மதிப்பிடுவது தவருகும். ஆங்கிலேய கடற்படை வீரர்கள் பெற்றிருந்த நல்வாய்ப்புக்கள் அவருக்கு இல்லை என்பது சிந்திக்கத்தக்கது.

ஐதரின் சாவு (1782) : சப்ரனின் வருகை ஐதருக்கு ஆறுதலளித்தது. அதன்பின் அவர் கருநாடகத்தை விட்டு நீங்கி மேற்குக்கரையில் முழுக்கருத்தையும் நாட்டினர். அவரும் பிரெஞ்சியரும் கூடலூரைக் கைப்பற்றினர். ஆனால் எதிர்பார்த்தவாறு தக்க காலத்தில் புஸ்ஸி வந்து சேரவில்லை. ஐரோப்பாவிலிருந்து 1781ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் புறப்பட்ட அவர் 1783-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தான் வந்துசேர்ந்தார். அதனால் பெரிய தரைப் போர் எதுவும் நிகழவில்லை. சப்ரன் நிகழ்த்திய போர்கள் முடிவான வெற்றியைத் தரவில்லை. மைசூர்ப்படை தெளிச்சேரியை (மலையாளத்தில் ஆங்கிலேயரால் நன்கு பாதுகாக்கப்பட்ட வர்த்தகசாலை) முற்றுகையிட்டது. ஆனால் ஆங்கிலேயர் அதை மீட்டனர். இதனால் முன்னர் ஐதருக்குத் தோற்ற நாயர்கள் மலையாளம் முழுவதிலும் கலகம் செய்யலாயினர். குடகிலும் ஐதருக்கு எதிர்ப்பு ஏற்பட்டது. ஐதருக்கும் கூட்டுக்கும் ஆரணியில் போர் நடந்தது. அதுவும் முடிவான வெற்றியைத் தரவில்லை கூட், உடல்நலக்குறைவு காரணமாக வங்காளத்துக்குப் புறப்பட்டார். அச்சமயத்தில் சென்னையில் கொடிய பஞ்சம் ஏற்பட்டிருந்தது. கர்னல் ஹம்பர்ஸ்டோன் என்பார் பம்பாய்ப் படைகளுடன் பாலக்காட்டை எதிர்த்துச் சென்றார் ; அவர் ஐதரின் தானைத்தலைவரை முறியடித்தார். அவர் முன்னேற்றத்தைத் தடுக்கமுயன்ற திப்புவும் தெற்கு மலையாளத்திலுள்ள பொன்னணியில் தோல்வியடைந்தார். அவ்வமயம் ஆர்க்காட்டின் வடக்கில் தங்கியிருந்த ஐதருக்கு முதுகில் பிளவை உண்டாகி 1782-ம் ஆண்டு

டிஸம்பர் மாதத்தில் சித்தூருக்கு அருகில் இறந்தார். செய்தி வெளிப்பட்டால் பெருங் குழப்பம் விளையுமென்று உணர்ந்த பூர்ணையர் அச்சாவைப் பற்றி வெளியிடாமல் எல்லாம் இரகசியமாகவே வைத்திருந்தார். அவ்வமைச்சர் அவ்வுடலத்தைக் கோலாருக்கு அனுப்பிவைத்தார். படையினருக்கு மிகுதியான கொடைகள் வழங்கித் திப்பு, மைசூரின் தலைவரானர். ஐதரின் இரண்டாவது மகனை கரீமை அரியணையில் அமர்த்த முயற்சி நடந்தது. ஆனல் திப்பு அம்முயற்சி வெற்றியடையாமற் செய்தார். ஐதரைப் பற்றிய மூலக் குறிப்புகள், பாரசீகமொழி, கன்னடம், மராட்டி, தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், பிரெஞ்சு, டச்சு, போர்ச்சுகீசியமொழி ஆகிய ஒன்பது மொழிகளில் உள்ளன.

பகுதி 9

ஐதரைப் பற்றிய மதிப்பீடு

இயல்பு: ஐதருக்கு எழுதப்படிக்கத் தெரியாது. தமது கையெழுத்தைக்கூடச் சரியாகப் போட அவர் அறியார். ஆயினும் அவர் இந்துஸ்தானி, கன்னடம், மராட்டி, தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகளில் உணர்ச்சி விளக்கத்துடன் பேசும் ஆற்றல் பெற்றிருந்தார். அவர் ஓர் முதல்தரமான போர் வீரர்; சிறந்த குதிரை வீரர்; கத்தியையும் துப்பாக்கியையும் வியத்தகு வகையில் அவர் பயன்படுத்தி வந்தார். சாட்டையால் அடிப்பதில் அவருக்கு விருப்பமதிகம். கத்தியைவிட எழுதுகோல் சிறந்தது என்ற கொள்கை அவருக்கு ஏற்புடைத்தன்று. கடமையில் தவறு செய்தவர்களை - அலுவலர் உட்பட - சாட்டையாலடிப்பது அவர் வழக்கம். திப்புவும் அவரிடம் கசையடி பெறுவதுண்டு. கருணையற்ற முறையில் ஐதர் பல நிலப்பகுதிகளை அழித்தார். அங்கு வாழும் மக்களின் துயரங்களைப் பற்றி அவருக்கு அக்கறை கிடையாது. எனினும் அவரிடம் உண்மையாக நடந்துகொண்டு அவரைப் பின் பற்றுபவர்களை அவர் அன்பாகவும் தாராள நோக்குடனும் நடத்தினர். பொதுவாக விலங்குத்தனமாக நடந்து கொள்பவர் என்றோ மனித உருவில் உள்ள பேய் என்றோ நாம் ஐதரைக் குறிப்பிடுவது முறையன்று. சமயப்பொறை அவரிடம் இல்லை என்றும் கூற முடியாது. அவருடைய பணியாளர், உதவியாளர் முதலியவர்களுடைய சமயக் கருத்துக்கள் எவ்வாறிருந்தபோதிலும் அதை அவர் பொருட்படுத்துவதில்லை. ஆனல் அவர் வலுக்கட்டாயமாகப் பலரை முகம்மதியராக்கினர் என்ற குறிப்புக்கள் நமக்குக் கிடைத்துள்ளன. அவர் வெளியிட்ட பொன், செப்புக்காசுகளில் அவருடைய பெயரின் முதலெழுத்தும், சிவன், பார்வதி, திருமால் ஆகிய கடவுளுருவங்களும்

உள்ளன.[1] அவருடைய நினைவு ஆற்றல் போற்றற் குரியது. "ஒரே காலத்தில் அவர், முடங்கலைப் பிறர் வாசிக்கக் கேட்டுக்கொண்டே ஆணைகளையும் பிறப்பிப்பார். அதே சமயத்தில் அவர் கண்கள் நாடகக்காட்சியைப் பார்த்துக்கொண்டிருக்கும்".[2] ஐதருக்குச் சிற்றின்பத்தில் மிகுந்த நாட்டமுண்டு. அவருடைய உவளகத்தில் 600 பெண்டிர் இருந்தனர். எனினும் அதனால் அரசியலுக்கு எவ்வித இடையூறும் ஏற்படா வண்ணம் கண்காணித்து வந்தார். நேர்த்தியான ஆடைகளை அணிந்துகொள்வதி லும் முகத்தை அழகாக வைத்துக்கொள்வதிலும் அவர் மிகுந்த கருத்துச் செலுத்தினர். ஆனல் அணிகலன்களில் அவருக்கு விருப்பமில்லை. பகட்டாரவாரங்களை அவர் விரும்பினர். தமது அருஞ் செயல்களைத் திப்பு அழித்து விடுவார் என்ற எண்ணம் அவருக்கு இருந்தது. ஆயினும் தமது மகனிடம் அவருக்கு அளவு கடந்த அன்பு உண்டு. ஆங்கிலேயரை அவர் வெறுத்தார். அவ்வெறுப்பைத் தமது மகனும் பெறுமாறு செய்தார்.

ஆக்கச்சார்பான ஆற்றல்: ஐதர் வீரமும் ஆற்றலும் வாய்ந்த ஒரு படைத்தலைவர். போரினல் ஏற்படும் சோர்வைப் பொறுத்துக்கொள்ளும் வன்மை அவரிடம் மிகுதியாக இருந்தது. படைகளை விரைவாக முன்னேறச் செய்வதிலும் குதிரைப் போர்த்தந்திர முறைகளிலும் அவருக்கு மிக்க வல்லமை இருந்தது. அவர் போதுமான அளவுக்கு இராணுவ முன்னேற்பாடுகளைச் செய்திருந் தார். ஆனல் முற்றுகையிடுங் காலங்களில் அவருக்குப் பிரெஞ்சியரின் உதவி தேவையாயிருந்தது. ஐரோப்பிய ரின் போர்ப் பயிற்சி முறையின் சிறப்பை அவர் உணர்ந் திருந்தார். கடற்படைச் செய்திகளிலும் அவர் கருத்துச் செலுத்தினர், அவருடைய பண்புகளுக்கேற்பவே அவ ருக்கு வெற்றிகள் கிடைத்தன. மைசூரின் எல்லைகளை

1. J. R. Henderson, The Coins of Haidar Ali and Tipu Sultan (1921) p. 4.

2. 11, பக். 110.

அவர் எல்லாப் பக்கங்களிலும் பெருக்கினர். ஆட்சி முறையில் நேர்மாருன ஒரு அரசியலே அவர் அமைத்தார். ஐதர் பிறருடைய தகுதியை ஆராய்ந்து தக்கவர்களைப் பணியில் அமர்த்தும் ஆற்றல் வாய்ந்தவர் என்பதைப் பூர்ணையாரின் உயர்நிலை காட்டுகிறது. அவர் சீரங்கப் பட்டணத்திலிருந்து அடிக்கடி வெளியிடங்கட்குச் சென்ற போதிலும் ஆட்சி முறையை அவர் நன்கு மேற்பார்வை செய்து வந்தார். கணக்கு முறையிலும் பொதுவாக ஆட்சி முறை அலுவல்களிலும் அவருக்குத் தனி நாட்டம் இருந்தது. அவருடைய போர்த்திறமை, அரசியலறிவு, ஆட்சி முறை ஆற்றல் முதலியவற்றைப் பற்றிப் பிரெஞ்சு ஆசிரியர்கள் மிகைப்படுத்திப் புகழ்ந்துள்ளனர். எனினும் அப்பண்புகள் போற்றத்தக்கன என்பதில் ஐயமில்லை. அவருடைய ஊக்கமும் வலிமையும் இந்தியாவில் அக்காலம் வரை இணையற்றவை என்று அறிஞர் T. மன்ரோ புகழ்கிருர்.* போர்களின் விளைவாகவே அவர் உயர்நிலைக்கு வந்தார். அப்போர்ப் பண்பைச் சிறப்புற வளர்த்து, அவர் ஆங்கிலேயரும் அச்சமடையும்படி அருஞ் செயலாற்றினர். அவரிடம் பல குறைபாடுகள் இருந்தன என்பது உண்மையே. கடுமையாகவும் கொடுமையாகவும் அவர் நடந்து கொண்டது யாவருமறிந்த செய்தியாகும். எனினும் அவரிடம் தைரியம் திகழ்ந்தது. கற்பனைத்திறம் மிளிர்ந்தது. ஊக்கமும் துணிவும் பொலிந்தன. போர்த் தந்திர ஆற்றல் விளங்கியது. அவருடைய ஆக்க மூலங்கள் செழிப்புற்றிருந்தன. பெரும்பாலும் தோல்வியால் அவர் மனம் சோர்வடைவதில்லை. தாம் கொண்ட கருமமே கண்ணுயிருக்கும் நற்பண்பு அவரிடமிருந்தது. ஒளிவு மறைவு இல்லாத ஒரு கொள்கையை பின்பற்றி அவர் ஆங்கிலேயரை அழிக்க முயன்ருர். சுருங்கக் கூறின் ஐதரின் திறமைக் கூறுகள் ஆக்கச் சார்பனவை; அழிவுச் சார்பானவை அல்ல. அவருக்கு ஏற்பட்ட இடையூறுகள் அவருக்கு மன எழுச்சியை அளித்தன.

---

* *101*, பக். *258*.

ஐதரின் தோல்விக்கு காரணங்கள் : ஐதருக்குப் போதுமான அளவு பிரெஞ்சு உதவி கிடைக்கவில்லை. ஆங்கிலேயருக்குப் பகையாக ஏற்பட்ட கூட்டுறவு நிலையற்றதாய் இருந்தது. மேலும் வாரன் ஹேஸ்டிங்ஸ் தக்க சமயத்தில் தமது போர்த் தந்திர முறைகளைக் கையாண்டு சென்னை அரசியலாருக்கு உதவி செய்ய முன்வந்தார். பிரான்ஸ் நாடு இந்தியாவைப் புறக்கணித்துவிட்டு அமெரிக்காவிலேயே தன் கருத்தைச் செலுத்தி இருந்தது. புஸ்ஸி காலங்கடந்து இந்தியாவுக்கு வந்தமை பற்றி முன்னரே குறிப்பிட்டோம். ஐதர் சென்னைப் படைகளுடன் போரிட்டுக் கொண்டிருந்த சமயத்தில் பிரான்ஸ் சோழ மண்டலக்கரைக்கு உதவி அனுப்பி இருந்தால், செயின்ட் ஜார்ஜ் கோட்டை ஐதர் வசப்பட்டிருக்கும் என்று உறுதியாகக் கூறலாம். பகைவர்களை எதிர்த்துநிற்கும் வலிமை ஆங்கிலேயரிடம் அவ்வமயம் இல்லை என்பதை ஸர் அயர் கூட் கல்கத்தாவுக்கு அனுப்பிய செய்தியில் (மார்ச்சு 1781) தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

பகுதி 10

திப்பு சுல்தானும் மக்கார்த்னேயும்: இரண்டாம் மைசூர்ப் போரின் பிற்பகுதி (1783-84)

திப்புவின் வாழ்க்கையின் முற்பகுதி: திப்பு 1753-ல் ஐதருக்கும் பகர்-உன்-நீஸாவுக்கும் மகனாராகப் பிறந்தார். ஆர்க்காட்டுப் பக்கிரி ஒருவரின் பெயரே அவருக்கு இடப் பட்டது. அவர் தம் தந்தை ஆங்கிலேயருடன் செய்த முதற்போரில் பங்குகொண்டார். (1767-69); 1780-ல் ஆர்க்காட்டு முற்றுகையிலும் அவர் தம் தந்தைக்கு உதவினார். பிரெய்த்வெய்ட் அவரிடம் தோல்வியடைந்த செய்தியை முன்னர்ப் பார்த்தோம். பொன்னணியில் ஹம்பர்ஸ்டோன் திப்புவைத் தோற்கடித்தார். தமது தந்தை இறந்த செய்தி கேட்டதும் திப்பு கோலாருக்கு விரைந்து சென்று தந்தையின் இறுதிச்சடங்குகளைச் செய்துமுடித்தார். 1783-ம் ஆண்டின் தொடக்கத்தில் ஆரணிக்கும் வேலூருக்கும் இடையே இருந்த மைசூர் படையின் தலைவராகத் தம்மை அமர்த்திக்கொண்டார். ஸர் அயர் கூட்டுக்குப் பின் ஆங்கிலப் படைத்தலைவரான ஸ்டூவர்ட் திறமையற்றவர். திப்பு வருவதற்குள் ஆங்கி லேயர் மைசூர்ப்படையைச் சிதற அடித்திருக்கலாம். ஆனால் ஸ்டூவர்ட் அந்நற்சமயத்தை நழுவவிட்டார். ஆகவே இரண்டாம் மைசூர்ப் போர் தொடர்ந்து நீடித்தது.

இரண்டாம் மைசூர்ப் போர் (தொடர்ச்சி): பம்பாய் அரசியலார் மாத்யூஸ் என்னும் படைத்தலைவரின்கீழ் ஒரு சேனையை மங்களூரையும் பெட்னூரையும் எதிர்க்கு மாறு அனுப்பினர். 1783-ல் அவ்விடங்கள் கைப்பற்றப் பட்டன. ஆனால் திப்பு அப்பகுதிகளை மீட்கத் தீவிரமாக முயன்றார். பல மாதங்கள்வரை மங்களூர் திப்புவை வீரத்துடன் எதிர்த்து நின்றது. அதற்கிடையில் புஸ்ஸி கூடலூருக்கு வந்துசேர்ந்தார். அவரும் சப்ரனும்

நிகழ்த்திய போர்கள் முடிவான வெற்றியை அளிக்க வில்லை. புஸ்ஸி, ஸ்டூவர்ட்டுக்குப் பல இடையூறுகளை இழைத்து வந்தார். அந்நிலையில் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையே உடன்படிக்கை ஏற்பட்டது. (வர்ஸே அல்லது பாரிஸ் உடன்படிக்கை 1793). அச் செய்தி ஸ்டூவர்ட்டுக்கு ஆறுதல் அளித்தது. மக்கார்த்னே யும் அமைதியை நாடிவந்ததால் போரை முடிவுறச் செய்வதற்கான ஏற்பாடுகள் நடந்துவந்தன. பிரெஞ்சியர் புதுச்சேரியை மீண்டும் பெற்றனர். ஸப்ரன் பிரான் சுக்குத் திரும்பினர். இவ்வாறு ஐதருக்கு உதவ எண்ணிய பிரெஞ்சியரின் இறுதி முயற்சி பயனற்றதாயிற்று. திப்பு கருநாடகத்தை விட்டகன்று மேலைக்கடல் ஓரத்தில் தம் கருத்தை ஊன்றி இருந்தார்.

மங்களூர் உடன்படிக்கை : பிரெஞ்சியருடன் போர் முடிவுற்றது. ஆனல் திப்பு மங்களூர் முற்றுகையைத் தொடர்ந்து நடத்தியதால் ஆங்கிலேயர் அவரை எதிர்க்க முற்பட்டனர். 1783-ல் கரூர், திண்டுக்கல் ஆகிய இடங் கள் ஆங்கிலேயரின்கீழ் வந்தன. மேலும் கர்னல் புலர்ட்டன் (Fullarton) என்பாரின் தலைமையில் அனுப்பிய படை பாலக்காடு கோயம்புத்தூர் முதலிய இடங்களைக் கைப்பற்றிக்கொண்டு சீரங்கப்பட்டிணத்தை எதிர்த்துச் சென்றது. அதற்கிடையில் ஆங்கிலேயர் மங்களூரை இழந்தனர். அதைத் தம்வசப்படுத்திய திப்பு அங்கிருந்து முப்பதாயிரம் இந்தியக் கிறுத்தவர்களை மைசூருக்கு அனுப்பி , முகம்மதியர்களாகச் செய்தார். திப்புவும் ஆங்கிலேயரும் அமைதியை விரும்பியதால் மங்களூரில் இரு சாராருக்கும் இடையே உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி இரு சாராரும் அவரவர் வென்ற நாடுகளையும் கைப்பற்றிய கைதிகளையும் திருப்பிக் கொடுத்துவிட இசைந்தனர். பெரும்பாலும் இவ்வுடன்படிக்கை சால்பாய் உடன்படிக்கையை ஒத்ததாகவே உள்ளது. திப்பு தாமே வெற்றிவீரர் என்ற ஆணவம் காரணமாக, உடன் படிக்கைப்படி தம்மிடமிருந்த எல்லாக் கைதிகளையும்

விடுதலை செய்யவில்லை. கைதிகளைத் திப்பு இழிவு படுத்தினார் என்பதை விளக்கும் மிகைப்படுத்தப் பெற்ற கதைகள் உள்ளன. மங்களூர் உடன்படிக்கை வாரன் ஹேஸ்டிங்ஸுக்குச் சினத்தை உண்டாக்கியது.

மக்கார்த்னே : (1781–5). 1781-முதல் 1785-வரை சென்னை கவர்னராக இருந்த மக்கார்த்னே பிரபு நற் பண்பு வாய்ந்தவர். அவரிடம் தெளிவான கருத்துக்கள் இருந்தன. அக்காலத்துக்கு இயல்பான தீய குணங்கள் அவரிடம் இல்லை. வாலாஜா முகம்மது அலி அளித்த பரிசுகளை வாங்க அவர் மறுத்து விட்டார். மைசூர் இடை யூறுகளை நீக்குவதற்கு அங்கே சுல்தானை நீக்கிவிட்டு இந்து ஆட்சியை மீண்டும் நிலை நிறுத்துவது சிறந்த வழி என்பது கவர்னரின் கருத்து. இக் கொள்கையைப் பின் னர் வெல்ஸ்லி பின்பற்றினார் என்பது நோக்கத்தக்கது. மக்கார்த்னேயின் உள்துறைக் கொள்கை பல நன்மை களை விளைத்தது. ஆனால் வெளித்துறைக் கொள்கையோ சிறப்பு வாய்ந்ததன்று. அதற்குக் காரணம் இந்திய நிலை மைகளை அவர் நன்கு உணராமைதான். அவருக்கும் வாரன் ஹேஸ்டிங்ஸுக்கும் நல் உறவு கிடையாது. கவர் னர்-ஜெனரலுக்கு அவரிடம் மிகுந்த பொறாமையே இருந் தது. ஒருவர் கொள்கையை மற்றவர் விரும்பி ஏற்க வில்லை. தம் கொள்கையைத் தாய் நாட்டினரும் புறக் கணித்ததைக் கண்ட மக்கார்த்னே 1785-ல் பதவியினின்று விலகி விட்டார். தம் கொள்கை, நலம் பயக்கத்தக்கது என்ற தீவிரமான நம்பிக்கை அவரிடம் இருந்தது. ஒழுங்கு முறைச் சட்டம் கவர்னர்-ஜெனரலுக்கும் சென்னை கவர்ன ருக்கும் இடையே அதிகார வரம்பைத் தெளிவாக்காததால் மேலே குறிப்பிட்டது போன்ற இடையூறுகள் ஏற்பட்டன. தாய் நாட்டுக்குத் திரும்பிய பின் 1786-ல் மக்கார்த்னே யுக்கு வில்லியம் கோட்டையின் கவர்னர்-ஜெனரல் பத வியை அளிக்க கம்பெனி அதிகாரிகள் முன்வந்தனர். ஆனால் அதை ஏற்க அவர் மறுத்துவிட்டார். 1806-ல் அவர் வாழ்க்கை முடிவடைந்தது.

பகுதி 11

இராமபுரியின் பெய்ஸுல்லாகான் (1780 - 1)
(Faizullah Khan)

1774-ல் நடந்த ரோஹில்லாப் போருக்குப் பிறகு இராமபுரி மட்டும் உரிமையுடன் பெய்ஸுல்லாகானின் கீழ் வந்தது என்று முன்னர்ப் பார்த்தோம். அத்தலைவர் சிறந்த ஆட்சிமுறை வினைஞர். அவர் தம் நாடு செழிப்புற்றோங்க முயற்சி எடுத்துக் கொண்டார். உடன்படிக்கையின்படி (1774) அவருடைய படையில் 5000 வீரர்களுக்கு மேல் இருக்கக்கூடாது. மேலும் அயோத்தி நவாப்புக்கு போர்க் காலத்தில் உதவி யளிக்கவும் அவர் கடமைப்பட்டிருந்தார். அக்கடமையை அவர் ஒழுங்காக நிறைவேற்றவில்லை யென்று 1780-ல் ஹேஸ்டிங்ஸ் அவர் மீது குற்றம் சாட்டினர். அக்குற்றச்சாட்டு முறையானதன்று. ஆயினும் அக்குற்றத்தைக் காரணமாகக் கொண்டு ஹேஸ்டிங்ஸ் பெய்ஸுல்லாவுக்கு இடையூறுகள் அளிக்கலானர். இந்நிகழ்ச்சி வாரன் ஹேஸ்டிங்ஸின் உளப்போக்கைக் காட்டுகிறது. போர் நெருக்கடியின் பொருட்டு பொருள் பெறுவதற்குப் பல முறைகளையும் அவர் கையாண்டார் என்று அறியக்கிடக்கிறது.

———

பகுதி 12

வாரணாசியின் செயிட்சிங் (1781)

மராட்டியருடனும் ஐதருடனும் நிகழ்த்திய போர்களால் கம்பெனியின் செல்வம் மிகுதியாகக் குறைந்தது. ஆதலால் வாரன்ஹேஸ்டிங்ஸ் பல்வேறு வழிகளை மேற்கொண்டு பொருளீட்ட முனைந்தார் என்று மேலே பார்த்தோம். அம்முறைகளில் ஒன்று வாரணாசி மன்னரிடம் அவர் பொருள்பெற்றமை ஆகும். 1770-ல் பல்வந்த்சிங் இறந்தபின் அவர் மகனார் செயிட்சிங் வாரணாசி மன்னரானார். பைஸாபாத் உடன்படிக்கை (1775) யின்படி வாரணாசி அரசு, கம்பெனியின் கீழ் வந்தது. அவ்வுடன்படிக்கையை முதலில் கவர்னர்-ஜெனரல் எதிர்த்தார். ஆயினும் ஆலோசனை சபையின் பெரும்பான்மையினர் அதை நிறைவேற்றிவிட்டனர். எனினும் வாரன்ஹேஸ்டிங்ஸின் விருப்பத்திற்கிணங்க, வாரணாசி அரசர் உரிமையுடன் இருப்பதென்றும் ஆண்டுக்கு 22½ லட்ச ரூபாய் மட்டும் ஆங்கிலேயருக்குச் செலுத்துவதென்றும் முடிவாயிற்று. 1778-ல் ஹேஸ்டிங்ஸ், அவ்வரசரிடமிருந்து (மராட்டியப்) போர்ச் செலவுக்காக, கப்பத் தொகையன்றி மேலும் ஒரு 5 லட்ச ரூபாய் கொடுக்கும்படி கேட்டார்; தொகையையும் பெற்றுக்கொண்டார். அவ்வாறே அடுத்த இரண்டு ஆண்டுகளிலும் அரசரிடமிருந்து பணம் கேட்டு வாங்கினார். மன்னர், தாம், உடன்படிக்கையின்படி கப்பத்தொகை மட்டுந்தான் கொடுக்கவேண்டுமென்றும் அடிக்கடி பொருள் கேட்பது முறையன்று எனவும் வாதித்தார். அவர் கூறியதை ஹேஸ்டிங்ஸ் சிறிதும் பொருட்படுத்தவில்லை. மேலும் கீழ்ப்படியாமை என்ற குற்றத்தையும் அவர்மீது சாட்டினார்; தம் படையினரை வாரணாசிக்கு அனுப்பிவைத்தார். அப்படைச் செலவுக்காக செயிட்சிங் 20,000 ரூபாய் கொடுக்கவேண்டியதாயிற்று. அமைதியை விழைந்த அவ்வரசர் பணிந்து

2 லட்ச ரூபாயை ஹேஸ்டிங்ஸுக்கு அனுப்பிவைத்தார் அதையும் வாங்கிக்கொண்டு, கவர்னர்-ஜெனரல் முதலில் தாம் கேட்ட உதவித்தொகையான 5 லட்சத்தை வற்புறுத்திப் பெற்றுக்கொண்டார். தவிர 1780-ல் ஹேஸ்டிங்ஸ், 2000 குதிரை வீரர்களை அல்லது குறைந்தபட்சம் 1000 குதிரை வீரர்களையாவது அனுப்பிவைக்குமாறு செயிட்சிங்குக்குச் செய்தி அனுப்பினர். அரசர் 500 குதிரைப் படையினரையும் 500 காலாட் படையினரையும் உடனே அனுப்ப இணங்கினர். தாம் கேட்டபடி கொடுக்காததால் ஹேஸ்டிங்ஸுக்கு சினமுண்டாயிற்று. ஆகவே அக்குற்றத்துக்காக அரசர்மீது 50 லட்ச ரூபாய் தண்டம் விதிக்க எண்ணினர்: அதை வசூலிக்கவேண்டித் தாமே வாரணசிக்குச் சென்று, மன்னிப்புக் கோரிய செயிட்சிங்கைச் சிறைப்படுத்தினர். அதைப் பொருத மன்னர் படையினர் கலகம் செய்து சில ஆங்கிலச் சிப்பாய்களையும் அலுவர்களையும் கொலைசெய்தனர். செயிட்சிங் தப்பி ஓடினர். ஹேஸ்டிங்ஸ் சுனர் கோட்டைக்குச் சென்று தம் நிலையை வலிமைப்படுத்திக்கொண்டு பின் கலகத்தை அடக்கினர். தப்பி ஓடிய மன்னர் குவாலியருக்குச்சென்று தங்கியிருந்து பின் 1810-ல் உயிர்நீத்தார். அவருடைய மருகனை மஹிப் நாராயணரை ஹேஸ்டிங்ஸ் வாரணசி அரசராக்கினர் (செப்டம்பர் 1781). அவர் செலுத்த வேண்டிய கப்பத்தொகையை 40 லட்சத்துக்கு உயர்த்தினர் ஆனல் அத்தொகையைச் செலுத்தக்கூடிய நிலையில் அந்நாடு இல்லை. அத்தகைய தொந்தரவுகளினல் சீர்கேடுற்ற வாரணசி மீண்டும் நன்னிலை எய்த நீண்ட காலம் ஆயிற்று.

வாரன் ஹேஸ்டிங்ஸின் செயலை அறிஞர் பர்க் கடுமையாகக் கண்டித்துப் பேசியுள்ளார். "உலகம் உள்ளவரையில் உலகில் உண்மை உள்ளவரையில் ஹேஸ்டிங்ஸ் இழைத்த கொடுமையையும் கொள்ளையையும் மக்கள் மறக்க மாட்டார்கள்."* வாரணசியில் ஏற்பட்ட புரட்சிக்

* Burke's Works, VIII, pp. 52-3.

கலகத்துக்கும் அதன் தீய விளைவுகளுக்கும் ஹேஸ்டிங்ஸ் தான் பொறுப்பாளியாவர் என்பது பர்க்கின் கருத்து. "அக்காலத்தில் சிந்திய ஒவ்வொரு சொட்டு குருதிக்கும் அவரே பொறுப்பாவர். அவர் காரணமாகவே பலர் அங்கே உயிர் நீத்தனர்." செயிட்சிங் உரிமை உள்ள ஒரு அரசரே அன்றி சமீந்தாரல்லர். ஆதலால் கம்பெனிக்குப் பொறுப்பு வாய்ந்தவரல்லர் என்று கூறப்படுகிறது. ஆனால் ஹேஸ்டிங்ஸ் அவரை ஒரு சமீந்தாராக மதித்தார் என்று கொண்டாலும், மற்ற சமீந்தார்களிடம் அவர் அவ்வாறு பொருள் பறித்தாரா என்ற கேள்வி எழுகிறது. மேலும் 1775-ம் உடன்படிக்கைப்படி கப்பத்தொகை தவிர அதிகப் படியாக வேறெதையும் அவர் செலுத்தவேண்டியதில்லை என்று ஏற்பட்டிருந்தது. கம்பெனிக்கு ஏற்பட்ட பெரிய இடையூறுகள்தான் ஹேஸ்டிங்ஸைப் பணம் பறிக்கச் செய்தன என்று நேர்மை விளக்கம் செய்யப்பட்டது. எவ் வகையிலும் செயிட்சிங், முறைப்படி, – நேர்மையான வகையில் – நடத்தப்படவில்லை என்பது உண்மை. தமது பகைவரான கிளாவரிங்கின் ஆதரவைப்பெறச் செயிட்சிங் முயன்றதால் அவ்வரசரைப் பழிதீர்த்துக்கொள்ள ஹேஸ் டிங்ஸ் திட்டமிட்டார் என அறிகிறோம். ஒன்றன்பின் ஒன்றாகத் தாங்கமுடியாத சுமையைச் செயிட்சிங்கின் மீது சுமத்திய மனிதத்தன்மையற்ற செயல், சட்டத்துக்குப் புறம்பான செயல், பின்னரும் 50 லட்ச ரூபாய் தண்டம் விதிக்க அவர் திட்டமிட்டது கொடுமையினும் கொடுமை யான செயலாகும். ஆனால் அவர் அதை எண்ணினாரே தவிர நிறைவேற்றவில்லை. "வாரணாசிக் கலகத்துக்கு ஹேஸ்டிங்ஸ்தான் பொறுப்பாளியாவர்."* அரசர் முதலி லேயே கலகம் செய்யத் திட்டமிட்டருந்தார் என்ற கோட் பாடு ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று. ஏனெனின் ஹேஸ் டிங்ஸ், போதுமான படையுடன் அங்கே செல்லவில்லை என்பதை நாமறிவோம். வருந்தத்தக்க நிகழ்ச்சிகட்குப் பிறகும் கவர்னர்-ஜெனரல் எண்ணியவாறு பொருளையும்

* *59,* பக். *126.*

பெறமுடியவில்லை. மிகுதியாக்கப்பட்ட கப்பத்தைக் காலப் போக்கில்தான் அரசரால் செலுத்த முடிந்தது. வாரணாசி யில் வறுமைதான் விளைந்த பயன். தாம் பின்பற்றிய அமைதி உணர்வற்ற முரட்டுத்தனமான கொள்கையால் ஹேஸ்டிங்ஸின் பெருமை குன்றியது. அவர் காமன்ஸ் சபையினரால் துரோகக் குற்றஞ் சாட்டப்பட்டமைக்கு மூல காரணம் அதுவே யாகும். அந்நிகழ்ச்சி, ஹேஸ்டிங்ஸ் அரசியல் வல்லமையைப் பொறுத்தவரை குறைபாடு உடையவரே என்பதைக் காட்டுகிறது. அச்செயலால் போதுமான பொருளைப் பெறாததால் அவர் கருத்து அயோத்தி பீகங்கள் தவறுக்கு ஊக்கமளித்தது. செயிட் சிங்கின் வாழ்க்கையைப் பற்றிய ஒரு 'சம்பு' வடமொழியில் உள்ளது.

பகுதி 13

பைஸாபாத் (Fyzabad) பீகங்கள் (1782)

அயோத்தி நவாப் அஸப்-உத்-தௌலாவின் தந்தை சேர்த்துவைத்த ஏறக்குறைய இரண்டுகோடி ரூபாய் களும் பல ஜாகீர்களும் அவருடைய தாயும் பாட்டியு மான – அதாவது ஷுஜா-உத்-தௌலாவின் மனைவியும் தாயுமான – பாகுபீகம், பர்ராபீகம் என்பாரிடம் இருந்தன. அவ்விருவரும் அயோத்தி பீகங்கள் எனப் பெறுவர். அச் சொத்துக்களில் அஸப்-உத்-தௌலாவுக்கு உரிமை இல்லை என்றும் ஒரு உயிலின்படி அவை தமக்கே உரியன என் றும் கூறிவந்தனர். அப்பொருள்க்ள் பைஸாபாத்தில் இருந்தன. அஸப்-உத்-தௌலா, தம் தந்தையைப் போலன்றித் தீய வழிகளில் ஒழுகிவந்தார். அச் சொத்துக் கள் தமக்கே உரியன என்பது அவர் கருத்து. அவர் வழக் காடியதன் விளைவாக ஒரு உடன்பாடு ஏற்பட்டது. அதன் படி முதலில் கொடுக்கப்பட்டிருந்த 25 லட்ச ரூபாயுடன், பீகங்கள் மேற்கொண்டு 30 லட்ச ரூபாயை நவாப்புக்குக் கொடுத்தனர். அதற்குமேல் அவரும் கம்பெனியாரும் பீகங்களிடம் யாதொருவித தொகையும் கேட்பதில்லை என்ற நிபந்தனைக்குக் கட்டுப்பட்டு நவாப்பும் கம்பெனி யாரும் வாக்குறுதி அளித்தனர். முதலில் அதை ஏற்றுக் கொள்ளாத கவர்னர்-ஜெனரல் 1778-ல் அச்செயலுக்கு ஒப்புதல் அளித்தார். 1781-ல் அயோத்தி நவாப், ஹேஸ் டிங்ஸைச் சூனரில் கண்டு அவருக்குப் பத்து லட்ச ரூபாய் பரிசாகக் கொடுத்தார். ஹேஸ்டிங்ஸ் அத்தொகையைத் தமக்கே வழங்கிவிடும்படி இயக்குநர்களை வேண்டிக் கொண்டார். ஆனால் அது கம்பெனியைச் சேர்ந்த தொகைதான் என்று அவர்கள் கூறிவிட்டனர். நவாப்புக் கும் ஹேஸ்டிங்ஸுக்கும் இடையே சூனரில் ஒரு உடன் படிக்கை ஏற்பட்டது (1781) அதன்படி நவாப் தமது அரசி யலையும் நிதி நிலையையும் சீர்படுத்துவதாகவும் தீய நண்

பர்களிடமிருந்த ஜாகீர்களை மீட்டுக் கொள்வதாகவும் ஆங்கில 'ரெஸிடென்ட்'டின் மேற்பார்வையின்கீழ் சிக்கனமாக இருப்பதாகவும் உடன்பட்டார். அதற்குப் பதிலாக நவாப் இன்றியமையாததாயிருந்தால் எந்த ஜாகீரையும் மீட்டுக் கொள்ளலாமென்று ஹேஸ்டிங்ஸ் உடன்பாடு அளித்தார். ஆகவே கம்பெனியின் பாதுகாப்புப் பீகங்களுக்கு இல்லாமற் போயிற்று. அஸப்-உத்-தௌலா கம்பெனிக்கு ஒன்றரை கோடி ரூபாய் கடன் கொடுக்க வேண்டியிருந்தது. ஆதலால் அக்கடனைத் தீர்ப்பதற்காக அவர் பீகங்களின் சொத்துக்களையும் ஜாகீர்களையும் கைப்பற்றிக் கொள்ளக் கம்பெனியாரின் உடன்பாட்டைக் கோரினுர். ஆங்கில ரெஸிடென்ட் மிடில்ட்டன் என்பாரின் தூண்டுதலால்தான் நவாப் அக்கோரிக்கையை விடுத்தார். ஹேஸ்டிங்ஸுக்குப் பீகங்களின்மீது வெறுப்பு இருந்தது. அவர்கள் தமக்குப் பகையாகச் செயிட்சிங் செய்திகளில் தலையிட்டனர் என்று அவர் கூறிவந்தார். ஆதலால் தாம் முதலில் பீகங்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை மீறி அவர்களைத் தாக்கிப் பொருள் பறிக்க முடிவு செய்தார். 1782-ம் ஆண்டின் தொடக்கத்தில் நவாப்பும் ரெஸிடென்ட்டும் படைகளுடன் பைஸாபாத்துக்குச் சென்றனர். பீகங்களின் மாளிகை முற்றுகைக்குட்பட்டது. அவர்களுடைய பேடி அமைச்சர்கள் இருவர்கள் கைதிகளாயினர். சொத்துக்களில் பெரும் பகுதி கைப்பற்றப்பட்டது. ஜாகீர்களையும் அப்பெண்டிர் இழந்தனர். ஆனுல் அச்செயலைப் பழித்துரைத்த இயக்குநர்களின் ஆணைப்படி 1784-ல் பீகங்கள் இழந்த ஜாகீர்களை மீண்டும் பெற்றனர். கம்பெனிக்குச் சேர வேண்டிய கடனை நவாப் தாம் கொள்ளையிட்ட பொருள்களினின்று கொடுத்து விட்டார்.

ஆற்றலற்ற பெண்டிர்களை முற்றுகையிட்டு அவர்கள் வசமிருந்த பொருள்களைக் கைப்பற்றிய செயல் ஹேஸ்டிங்ஸின் தவறுகளில் மிகவும் முக்கியம் வாய்ந்தது என்று பர்க் அவர் மீது குற்றஞ் சாட்டுகிருர். முஸ்லிம் சட்டப்படி

ஷுஜா-உத்-தௌலாவின் சொத்துக்களில் ஒரு பகுதியே பீகங்களுக்கு உரியதாகும் – அதாவது எட்டில் ஒரு பங்கு அவர் மனைவிக்கும் ஆறில் ஒரு பங்கு தாயாருக்கும் உரியதாகும். 'ஆனால் அந்நவாப் தமது தனிச் சொத்துக் களைப் பொதுச் சொத்துக்களினின்று பிரித்து வைத்துக் கொள்ளவில்லை. மேலும் பீகங்களின் சொத்து உரிமைக்கு ஆதாரமாகக் கூறப்பட்ட உயில் காண்பிக்கப்படவே இல்லை. அச்சூழ்நிலையில் இராச்சியத்தின் பொருள் தேவை புறக்கணிக்கப்படக்கூடியதன்று. ஆயினும் 1775-ல் கம்பெனியார் பீகங்களுக்கு வாக்குறுதி அளித்ததும் முக்கியமானதாகும். ஹேஸ்டிங்ஸ் அவ்வாக்குறுதியை மீறியதற்குக் காரணமாக பீகங்கள், செயிட்சிங் கலகத்தில் கலந்து கொண்டனர் என்று அவர்கள் மீது குற்றஞ் சாட்டுகிறார். ஆனால் அக்குற்றச்சாட்டு பிற்காலத்தில் தோற்றுவிக்கப்பட்டதாகத் தோன்றுகிறது. அக்குற்றத் துக்குத் தக்க ஆதாரமிருந்தால் அவர்களை அது பற்றி விசாரணை செய்திருக்க வேண்டியதே முறையாகும். நீதி பதி இம்பே, கவர்னர்-ஜெனரலை நீதிக்கு மாறாகக் காப் பாற்ற எண்ணி லக்னௌவில் பல வாக்குமூலங்களைத் தயாரித்தார். முதலாவதாக நீதிபதியின் அச்செயலே நீதிக்குப் புறம்பானதாகும். அந்த வாக்குமூலங்களிலும் பீகங்களைப் பற்றிய குறிப்பு சிறப்புவாய்ந்ததன்று. தவிர அவ்வாக்கு மூலங்களில் நவாப்பின் பெயரும் இடம் பெறுகிறது. ஆனால் கவர்னர்-ஜெனரல் அதைப்பற்றி அக்கறைகொள்ளவில்லை. தமக்கு அனுகூலமாக உள்ளதை மட்டும் எடுத்துக்கொண்டார் போலும்!. நவாப், ஹேஸ் டிங்ஸுக்குப் பத்துலட்ச ரூபாய் கொடுத்தார். அதைக் கைக்கூலி என்றே நாம் கருதவேண்டி இருக்கிறது. மிகுதியான ஊதியத்தையும் பலவகைப் படிகளையும் பெற்றுவந்த ஒரு உயர்ந்த அதிகாரி, அத்தொகை தமக்கே வேண்டுமென்று இயக்குநர்களைக் கேட்டுக் கொண்டாரென்று பார்த்தோம். அவருடைய தகுதிக்கு அது ஏற்றதன்று. மேலும் ஒழுங்குமுறைச் சட்டம் அவ் வாறு பரிசு பெறுவதைத் தடை செய்கிறது என்பதையும்

நாம் நோக்க வேண்டும். பைஸாபாத் தீச் செயல்களுக்கு ஹேஸ்டிங்ஸின் பொறுப்பினைப் பற்றியும் நிகழ்ச்சி விவரங்களைப் பற்றியும் கருத்து வேற்றுமை இருக்கலாம். எவ்வாறிருப்பினும் கவர்னர் - ஜெனரல், பீகங்களிடம் நடந்து கொண்ட முறை அவருடைய தகுதிக்குச் சிறிதும் ஏற்றதன்று.

பகுதி 14

பார்லிமெண்ட்டு சட்டங்கள் 1781 முதல் 1784 வரை

1781-ம் ஆண்டுச் சட்டம்: கம்பெனியின் செயல்களைச் சீர்திருத்த ஆங்கிலப் பார்லிமெண்ட்டுப் பல சட்டங்களைப் பிறப்பித்து வந்ததைக் காண்கிறோம். 1781-ல் அது இரண்டு குழுக்களை அமர்த்தியது. அவற்றில் ஒன்று இந்தியாவில் நீதி பரிபாலனத்தைப் பரிசீலனை செய்யவும் மற்றயது மைசூர்ப் போர் பற்றி விசாரணை நடத்தவும் அமைந்தவையாகும். முதல் குழுவின் தலைவர் பர்க். இரண்டாவது குழுவின் தலைவர் ஹென்ரி தண்டாஸ். அக் குழுவினர் வெளியிட்ட அறிக்கைகள் மிகவும் சிறப்பு வாய்ந்தவை. அவற்றின் அடிப்படையில் சீர்திருத்தங்கள் எழுந்தன. 1781-ம் ஆண்டுச் சட்டம், கல்கத்தா தலைமை நீதி மன்றத்துக்கும் ஆலோசனைக் குழுவுக்கும் ஏற்பட்ட சச்சரவுகளை நீக்கும் வகையில் சில திருத்தங்களைப் புகுத்தியது. பெரும்பான்மையும் ஆலோசனைக் குழுவின் சார்பாகவே அத்திருத்தங்கள் இருந்தன. அதன்படி கல்கத்தா மக்கள் யாவரும் நீதிமன்றத்தின் அதிகார வரம்புக்கு உட்பட்டவராவர். ஆனால் இந்துக்களும் முகம்மதியர்களும் வாரிசு உரிமை முதலிய செய்திகளில் அவரவர் சட்டங்களின்படியே முறை வழங்கப் பெறுவர். கவர்னர்-ஜெனரலும் அவரது சபையும் தமது அரசியல் தகுதியில் (Public Capacity) செய்யும் செயல் எதற்கும் தலைமை நீதிமன்றத்தின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டவரல்லர். மேலும் வரிவசூல், சமீந்தார் செய்திகள், கம்பெனியைச்சேர்ந்த முறைவழங்கும் அலுவலர் செய்திகள் முதலியவற்றில் நீதிமன்றத்தின் அதிகாரம் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டது. கவர்னர்-ஜெனரலும் அவரது சபையும் மாகாண நீதி மன்றங்களிலிருந்து முறையீடுகளைப் பெறமுடியும். ஹேஸ்டிங்ஸ் முன்னர்

விரும்பியவாறு கம்பெனியின் நீதிமன்றங்களும் தலைமை நீதிமன்றமும் ஐக்கியப்படுவதை இச்சட்டம் ஏற்கவில்லை. பழையசட்டப்படி கவர்னர்-ஜெனரல் சபையின் ஆலோசனைப்படி வெளியிட்ட விதிகள் தலைமை நீதிமன்றத்தில் பதிவு செய்யப்படவேண்டும். அந்த நிபந்தனையை இப் புதிய சட்டம் நீக்கிவிட்டது. அக்காலந் தொடங்கி சட்டமியற்றல், நிர்வாக அதிகாரியின் பொறுப்பாகும். ஆலோசனை சபை அதற்கு ஒப்புதல் அளிக்கவேண்டும். இதன் விளைவாக "வங்காளச் சட்டதிட்டங்கள்" வளர்ச்சியுற்றன. இவ்வாறு 1773-ம் ஆண்டு முறைப்படுத்துஞ் சட்டத்தின் குறைபாடுகள் ஓரளவு நீங்கின. பொதுவாக ஆணவச் செயல்கள் காரணமாக தலைமை நீதிமன்றம் தன் உரிமைகள் சிலவற்றை இழந்தது.

பாக்ஸ் (Fox) இத்தியச் சட்டம் (1783): ஹென்றி தண்டாஸ் தயாரித்த 45 தீர்மானங்களும் ஆங்கில-இந்திய ஆட்சிமுறையைக் கண்டித்தன (1782). வாரன் ஹேஸ்டிங்ஸைத் திரும்ப அழைக்க முயற்சி தோன்றியது. ஆனால் அவர் உரிமையாளர் சபையின் ஆதரவைப் பெற்றிருந்ததால் அது பயனளிக்கவில்லை. இம்பே, திரும்ப அழைக்கப்பட்டார். அவ்வமயத்தில் கம்பெனி, பார்லிமெண்ட்டிடம் நிதி உதவி கோரியதால் ஒழுங்குபடுத்தும் சட்டத்தைத் திருத்த ஒரு வாய்ப்பு ஏற்பட்டது (1783). தண்டாஸ், கவர்னர்-ஜெனரலின் அதிகாரத்தைப் பெருக்கி அவருடைய ஆதிக்கத்தை நிலைநிறுத்தவேண்டுமென்ற நோக்கத்துடன் கொணர்ந்த மசோதாவுக்குப் பார்லிமெண்ட்டில் ஆதரவு கிடைக்கவில்லை. அந்நிலையில் ஹேஸ்டிங்ஸின் பகைவரான பிரான்ஸிஸ் பர்க்கைத் தூண்டினர்; பர்க், பாக்ஸை முடுக்கினர். 1783-ல் பாக்ஸ் ஒரு மசோதாவைத் தயாரித்தார். அதன்படி இயக்குநர் சபையும் உரிமையாளர் சபையும் நீக்கப்பட்டு அவைகளுக்குப் பதிலாக ஆணையாளர்கள் அடங்கிய இரண்டு புதிய சபைகள் அமையவேண்டும். அவைகளில் ஒன்று (ஏழு உறுப்பினர்களைக்கொண்டு) அரசியல் அலுவல்

களைக் கவனிக்கவேண்டும். பழைய உரிமையாளர்களி னின்று பொறுக்கப்பட்ட ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட மற்றொரு சபை, வாணிகச்செய்திகளில் கருத்தைச் செலுத்தவேண்டும். கம்பெனியின்மீது அரசாங்கத்தின் அதிகாரத்தை அம்மசோதா உறுதிப்படுத்தியது. புதிய கமிஷனர்களைப் பார்லிமெண்ட்டு அமர்த்தும். பின்னர் காலி ஏற்படும்பொழுது அமைச்சர்களுடைய உடன்பாட்டுடன் மன்னர் புதிய கமிஷனர்களை அமர்த்துவார். புரட்சித்தன்மை பெற்ற அம்மசோதாவை வில்லியம் பிட் எதிர்த்தார். ஆயினும் காமன்ஸ் சபையில் அது நிறைவேறியது. ஆனால் மேல்சபையில், அரசர் மூன்றாம் ஜார்ஜ் தலையிட்டு அதை நிறைவேறாமற் செய்தார். அதன் விளைவாக அப்பொழுது இங்கிலாந்தில் ஏற்பட்டிருந்த பாக்ஸ் - நார்த் கூட்டு மந்திரி சபையை மன்னர் கலைத்தார்.

பிட் இந்தியச் சட்டம் 1784 :- அதற்குப் பின் பிட் தலைமை அமைச்சரானார். அவரும் அவர் சபையினரில் பெரும்பான்மையினரும் வாரன் ஹேஸ்டிங்ஸிடம் நட்புக் கொண்டவர்கள். கலைக்கப்பட்ட அமைச்சுக் குழுவினர் புதிய அமைச்சர்களின் கொள்கைகளைத் தீவிரமாக எதிர்த்தனர். பிட், பார்லிமெண்டைக் கலைத்துப் பின் பெரும்பான்மையினரின் வாக்குகளைப் பெற்று 1784-ல் தமது புதிய மசோதாவைக் கொணர்ந்தார். அது எளிதில் நிறைவேறிச் சட்டமாகியது. அச்சட்டப்படி புதிய சபை ஒன்று இங்கிலாந்தில் தோன்றியது. இந்தியா சம்பந்தமான அரசியல் செய்திகள் யாவற்றையும் மேற்பார்வை செய்ய அதற்கு அதிகாரமுண்டு. ஆகவே மேற்பார்வை சபை என அது பெயர் பெற்றது. அரசரால் அமர்த்தப்பெற்ற ஆறு ஆணையாளர்கள் - கருவூலத் தலைவர், (இந்தியக்) காரியதரிசி, நான்கு பிரிவி கௌன்ஸிலர்கள் - ஆகியோர் - அதன் உறுப்பினர்களாவர். இதற்காக அவர்களுக்குத் தனித்த ஊதியம் கிடையாது. அச்சபைக்கு இந்தியாவில் ஆங்கிலேயரின் கொள்கையைக் கட்டுப்படுத்த அதிகாரமுண்டு. அச்சபையின் அனுமதியின்றி இயக்குநர் சபை

இந்தியாவுக்கு எவ்வித ஆணையையும் அனுப்பக்கூடாது. இயக்குநர்களுக்குள்ளேயே "இரகசியக் குழு" ஒன்று அமைந்தது. அதன் உறுப்பினர்கள் மூன்றுக்கு மேற் படாமல் இருப்பர். இக்குழு மேற்பார்வை சபைக்கு உதவி செய்யும். இயக்குநர்கட்கு மேற்பார்வை சபையின் ஆதரவு இருக்கும்பொழுது உரிமையாளர் சபை முன்னவரைக் கட்டுப்படுத்த இயலாது. இந்தியாவில் கவர்னர்-ஜெனர லின் ஆலோசனைச் சபையில் நால்வருக்குப் பதில் மூன்று உறுப்பினர்களே இருக்க வேண்டும். அவர்களில் ஒருவர் படைத் தலைவராயிருக்க வேண்டும். கவர்னர்-ஜெனர லுக்கு, முடிவுசெய் வாக்கை அளிக்கும் தன் உரிமை மட்டுமே உண்டு. இராசதானிக் கவர்னர் சபைகளிலும் கவர்னரைத் தவிர மூன்று உறுப்பினர்கள் இருத்தல் வேண்டும். அம் மூவருள் ஒருவர் இராசதானித் தானைத் தலைவராயிருத்தல் வேண்டும். கவர்னர்-ஜெனரல், கவர் னர்கள், ஆலோசனையாளர் ஆகிய யாவரையும் இயக்கு நர்கள் அமர்த்த வேண்டும். அவர்களைத் திரும்ப அழைக்க அவர்களுக்கும் அரசருக்கும் உரிமை உண்டு. கவர்னர் களுக்கும் முடிவுசெய் வாக்கு உரிமை உண்டு. இராச தானிகளின் மீது கவர்னர்-ஜெனரலின் அதிகாரம் பெருகி யது. அவ்வதிகாரம் "போர், அமைதி ஏற்பாடுகள், இந் திய அரசர்களின் அலுவல்கள், வரி வசூல், படை அமைப்பு முதலிய செய்திகளைத் தழுவியதாகும். மேலும் அச்சட் டத்தில் நாடு கவரும் கொள்கை ஆங்கிலேயரின் நோக்க முறைக்கு ஏற்றதன்று எனவும் குறிப்பிட்டிருந்தது.

சிறப்பு: பிட்டின் சட்டம், தண்டாஸ்ஸின் மசோதா வுக்கும் பாக்ஸின் மசோதாவுக்கும் இடையான நிலையில் உள்ளது. பாக்ஸின் மசோதாவிலும் ஒழுங்குபடுத்துஞ் சட்டத்திலும் உள்ள குறைபாடுகள் இதில் கிடையா. பிட், இயன்ற அளவுக்குப் பழைய அமைப்பை மாற்றுமலிருக் கவே முயன்ருர். இயக்குநர்களும் கம்பெனி அதிகாரி களும் அதனுல் மகிழ்ச்சியுற்றனர். இச் சட்டம் இருதலைப் பட்ட ஆட்சியைத் தோற்றுவித்தது. அதாவது மேற்

பார்வை சபையும் இயக்குநர் சபையும் ஒருசேர இந்திய அலுவல்களைக் கவனித்தன. விவரங்களில் பல மாறுதல்கள் ஏற்பட்டபோதிலும் அடிப்படைக் கொள்கையைப் பொறுத்தவரை பிட் இந்தியச் சட்டத்தின் பண்பு 1858-ம் ஆண்டுவரை நீடித்தது. கம்பெனியின்மீது ஏற்பட்ட அரசியல் கட்டுப்பாடு பயனுள்ளதாகவே இருந்தது. மேற்பார்வை சபையின் அதிகாரம் ஓங்கிநின்றது. அதில் சருவூலத் தலைவரும், தேசீயக் காரியதரிசியும் நீங்கலாக உள்ள மூத்த (சீனியர்) ஆணையாளர்தான் தலைவர் (பிரஸிடென்ட்) என வழங்கப்பட்டார். அவர் அக்கால அரசியலில் பிற்காலத்து இந்தியக் காரியதரிசி (இந்திய அமைச்சர்) யின் நிலையிலிருந்தார். இயக்குநர் சபை, இரண்டாவதான நிலையைப் பெற்றிருந்தபோதிலும் செயல் முறையில் மிகுதியான அளவுக்குக் கம்பெனியைக் கட்டுப்படுத்தி வந்தது. சட்டத்தில் நாடுகவரும் நோக்கம் இல்லை என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மையில் அத்தகைய கொள்கை பின்பற்றப்படவில்லை – பின்பற்ற முடியவில்லை. கவர்னர்-ஜெனரல், செய்திப் போக்குவரவு இடையூறுகள் காரணமாக, கவர்னர்களைப் பெரிதும் கட்டுப்படுத்த முடியாத நிலையிலிருந்தார். அச்செய்தியைப் பொறுத்தவரை ஓரளவுதான் சட்டத்தின் கொள்கை பின்பற்றப்பட்டது. இறுதியாக மூன்று இராசதானிகளிலும் ஆலோசனைக் குழுவினரில் பெரும்பான்மையோரின் அரசியலே நடைபெற்று வந்தது. அதைப் புறக்கணிக்கும் அதிகாரத்தை 1786-ல் கவர்னர்-ஜெனரல் பெற்றார்; 1793-ல் கவர்னர்கள் பெற்றனர்.

பகுதி 15

ஹேஸ்டிங்ஸ் பதவிக் காலத்தின் இறுதிப் பகுதி (1780-5)

கவர்னர்-ஜெனரலும் ஆலோசனைக் குழுவும் : முறைப்படுத்துஞ் சட்டப்படி ஹேஸ்டிங்ஸ் 5 ஆண்டு கட்குப் பதவி வகிக்கவேண்டும். புதிய அரசியல் 1774-ல் தொடங்கியது. ஆகவே அவர் பதவிக் காலம் 1779-ல் முடிவுற்றது. அதன் பிறகும் ஒவ்வொரு ஆண்டும் அவர் புதிய நியமனம் பெற்று வந்ததால் 1785-ல் தாமாகப் பதவியினின்று நீங்கும் வரை கவர்னர்-ஜெனரலாக இருந்துவந்தார். 1780-ல் பிரான்ஸிஸ் தம் நாடு திரும்பிய பின், வெலரும் கூட்டும் ஹேஸ்டிங்ஸின் கூட்டாளிகளாக இருந்தனர். பின்னவர் ஐதருடன் போரிடச்சென்று விட்டார் (1781-2). வெலர் ஹேஸ்டிங்ஸை ஆதரித்தார். பிறகுவந்த மக்பர்ஸனும் ஸ்டேபிள்சும், கவர்னர்-ஜெனரலுடன் பெரும்பாலும் ஒத்துழைத்தனர். ஆகவே ஹேஸ்டிங்ஸ் தம் விருப்பம்போல் உரிமையுடன், செயிட்சிங், அயோத்தி பீகங்கள் ஆகியோருடன் முன்னர் நாம் குறிப்பிட்டுள்ளவாறு நடந்துகொண்டார். பிறகு மக்பர்ஸனும் ஸ்டேபிள்சும் மறைமுகமாக ஹேஸ்டிங்ஸுக்குச் சில இடையூறுகள் விளைக்கலாயினர். ஆனல் அவர்கள் பிரான்ஸிஸ்ஸையும் கிளாவரிங்கையும் போல நடந்து கொள்ளவில்லை. கூட்டாளிகளுடன் ஒத்துழைத்துச் செயலாற்றும் பண்பு பொதுவாக ஹேஸ்டிங்ஸிடம் நிலையாக அமையவில்லை. அவருடைய ஆதிக்க மனப்பான்மை கூட்டுறவு முறைப் பணிக்கு ஏற்றதன்று. இம்பே, மக்கார்த்னே ஆகியோர்கூட ஹேஸ்டிங்ஸிடம் சச்சரவிட நேர்ந்ததைக் காண்கிறோம்.

நிலவரித்திட்டம் : அரசியல் முறையில் முன்னேற்றத்தைக் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணம் ஹேஸ்டிங்

சுக்கு உண்டு. ஆனால் அவர் முதன் முதலில் கொண்டு வந்த நிலவரி ஏற்பாடுகள் தோல்வியடைந்தன. அரசியலார், சமீந்தார்கள் முதலியோரின் உரிமை, அதிகாரம் ஆகியனபற்றி வேறுபாடான கொள்கைகள் நிலவியதால் குழப்ப மேற்பட்டுவந்தது. நிலங்களை ஏலம் போடுவதோ அல்லது குத்தகைக்கு ஆயுட்காலம் முழுவதும் விடுவதோ சிறந்த வழி என்று ஹேஸ்டிங்ஸ் கூறினார். ஆனால் அவர் சபையினர் வரியை நிலையாகத் தீர்மானம் செய்துகொள்வது சிறப்புடையது என்று அறிவித்தனர். இயக்குநர்கள் இருவிதக் கொள்கைகளையுமே புறக்கணித்தனர். பின்னர் சமீந்தார்களோடு வருடாந்தர ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அதனாலும் நிலைமை சீர்திருந்தவில்லை. கேடும் விளைந்தது. நிலவரிச் சம்பந்தமான அதிகாரங்களை மையப்படுத்தவே ஹேஸ்டிங்ஸ் முயன்றார். 1781-ல் புதிய சீர்திருத்தங்கள் தோன்றின. மாகாணச் சபைகள் நீக்கப்பட்டு அவற்றின் அதிகாரங்கள் கல்கத்தாவிலிருந்த நில வருவாய்க் குழுவுக்கு மாற்றப் பெற்றன. அக்குழுவில் ஆங்கிலேய அதிகாரிகட்கு உதவியாக ஒரு இந்திய திவான் (கங்கா கோவிந்த சிங்) இருந்தார். பல்வேறு மாவட்டங்களுக்கும் " கலெக்டர்கள் " அமர்த்தப்பட்டனர். ஆனால் அவ்வேற்பாடுகள் நற்பயனை அளிக்கவில்லை. உழவர்கள் கொடுமையாக நடத்தப் பெற்றனர். முடிவாக இத்துறையில் ஹேஸ்டிங்ஸுக்குப் போதுமான ஆற்றல் இல்லை எனலாம்.

இறுதிக் காலம் : ஹேஸ்டிங்ஸின் ஆட்சி முறைக்கு வன்மையான எதிர்ப்பு ஆங்கிலப் பார்லிமெண்ட்டில் இருந்து வந்தது என்பதை அவர் உணர்ந்தார். ஆயினும் அவர் திரும்ப அழைக்கப் பெறுமைக்கு உரிமையாளர் சபையில் அவருக்கு ஆதரவு இருந்ததே காரணமாகும். அவருக்குப் பல வகைகளில் உதவியாக இருந்த அவரது அன்புக்குரிய மனைவி 1784-ல் இங்கிலாந்துக்குப் புறப்பட்டாள். ஹேஸ்டிங்ஸும் அவளுடன் இங்கிலாந்துக்குச்

செல்லுவதையே விரும்பினர். ஆனல் அவ்வமயம் திப்பு சுல்தானுடன் போர் நடந்துவந்தது. மேலும் அயோத்தியில் மீண்டும் குழப்பமான நிலைமை ஏற்பட்டிருந்தது. ஆகவே 1785-ம் ஆண்டின் தொடக்கம் வரை அவர் இந் நாட்டில் தங்கியிருக்க நேர்ந்தது. பிட் இந்தியச் சட்டத்தைப்பற்றி அவர் கேள்விப்பட்டவுடன் கம்பெனியின் மேலதிகாரிகள் தாம் பதவியினின்று விலகுவதை விரும்பி எதிர்பார்க்கின்றனர் என்று நம்பினர். ஆகவே 1785-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் அவர் கல்கத்தாவினின்று தம் நாட்டுக்குப் புறப்பட்டார்.

பகுதி 16

துரோகக் குற்ற விசாரணை

குற்றங்கள்: ஹேஸ்டிங்ஸ் 1785-ம் ஆண்டு ஜூன் மாதம் இங்கிலாந்துக்குப் போய்ச் சேர்ந்தார். அவருக்கு அவ்வமயம் தமது அருஞ்செயல்களுக்காகத் தாய்நாட்டினர் மிகவும் பாராட்டுவர் என்ற எண்ணமே இருந்தது. ஆனால் பர்க், பாக்ஸ், பிரான்ஸிஸ் ஆகியோர், ஹேஸ்டிங்ஸின்மீது குற்றஞ்சாட்டத் தயாராயினர். அவர்மீது 22 குற்றச் சாட்டுகளை பர்க் பார்லிமெண்டில் சமர்ப்பித்தார். அவை களில் சிறப்பானவை வருமாறு:— ரோஹில்லாப் போர்க் கொடுமைகள், செயிட் சிங்கிக்கு இழைக்கப்பட்ட அநீதி, அயோத்தி பீகங்களின் அவலநிலை, ஹேஸ்டிங்ஸின் உள் துறை, வெளித்துறைக் கொள்கைகளில் காணப்பட்ட குற்றங்கள், கைக்கூலி பெற்றமை, கோரா, அலஹாபாத் மாவட்டங்களை விற்றமை, அயோத்தியின் உள்நாட்டு அலுவல்களில் தலையிட்டமை, அதன் வருந்தத்தக்க நிலை, மராட்டியப் போர், வங்காளத்தில் நிலவரித் திட்ட ஊழல் கள், முகம்மது ரஸாகானையும் பெய்ஸுல்லாகானையும் கேவலப்படுத்தியது, முதலியனவாம்

காமன்ஸ் சபையில் சொற்போர்: 1786-ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் நாள் பர்க், காமன்ஸ் சபையில் சொற் போரைத் தொடங்கினர். குற்றமற்ற, உதவியற்ற ரோஹில்கண்டு மக்களை அடியோடு அழிக்கும் நோக் குடன் ஹேஸ்டிங்ஸ் ஆங்கிலத் துருப்புக்களைக் கூலிக்கு அமர்த்திக் கொண்டார் என்ற குற்றச்சாட்டுடன் பர்க் தமது சொற்போரைத் தொடங்கினர். இயக்குநர் சபை அதைக் குற்றமாகக் கருதவில்லை என்ற காரணத்தால் பெரும்பான்மையினர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. பிறகு பாக்ஸும் ஷெரிடனும் முறையே செயிட் சிங் செய்தியையும் அயோத்தி பீகங்களைப் பற்றிய

கொடுமையையும் விளக்கினர். அதன் விளைவாக காமன்ஸ் சபை, ஹேஸ்டிங்ஸை துரோகக் குற்ற விசாரணை செய்யவேண்டுமெனத் தீர்மானித்தது. ஹேஸ்டிங்ஸ் சிறைப்படுத்தப்பட்டு, பின் ஜாமீனில் விடுதலை பெற்றார். 20 தலைவர்களடங்கிய துரோகக் குற்ற விசாரரணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. அதில் பர்க், பாக்ஸ், ஷெரிடன், சர் கில்பர்ட் எலியட் (பிற்கால மிண்டோ பிரபு) முதலியவர்கள் இருந்தனர். விசாரணைக்கு மூலகாரணமான பிரான்ஸிஸ் அதில் இடம் பெறவில்லை.

விசாரணை (1788–95) : காமன்ஸ் சபை, ஹேஸ்டிங்ஸைத் துரோகக்குற்றஞ்சாட்டி, மேல்சபையின் (லார்டுகள் சபை) முன்நிறுத்தியது. வழக்கு விசாரணை வெஸ்ட்மின்ஸ்டர் மாளிகையில் நடந்தது. 1788-ல் அது தொடங்கியது. சான்ஸலர் பிரபு தர்லோ (ஹேஸ்டிங்ஸின் பள்ளித்தோழர்) விசாரணை மன்றத்தில் தலைமைதாங்கினார். பல சிறந்த வழக்கறிஞர்கள் ஹேஸ்டிங்ஸ் குற்றமற்றவர் என்று வாதாடினர். 22 குற்றங்களில் ரோஹில் லாப்போர், மாராட்டியப்போர் ஆகியவற்றைப்பற்றிய இரண்டையும் காமன்ஸ்சபை ஏற்றுக்கொள்ளாததால் 20 குற்றங்கள் மட்டுமே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. விசாரணையின் சிறப்பைத் தக்க முறையில் மெக்காலே வருணித்துள்ளார். இங்கிலாந்தில் அதுகாறும் வளர்ச்சி அடைந்துள்ள பண்பாட்டையும் அரசியல் முன்னேற்றத்தையும் மக்களுரிமைச் சிறப்பையும், அறிவுப் பெருக்கத்தையும் பிற நாகரிகப் பண்புகளையும் அந்த விசாரணை நமக்குக் காட்டுகிறது.

பர்க்கின் தொடக்கவுரை ; பர்க் (பி. 1729, இ. 1798) தமது தொடக்கவுரையை 4 நாட்கள் நிகழ்த்தினார். அவருடைய சொல்வன்மை, ஹேஸ்டிங்ஸையே சிறிது நேரம் தாம் குற்றவாளிதான் என்று உணரவைத்தது என்று நாம் கூறலாம்.

“ கனவான்களே, இன்று நாம் இங்குக் கூடியிருப்பது ஹேஸ்டிங்ஸ் என்ற இந்த ஒருவருடைய செய்தியைப்

பற்றிமட்டும் சிந்திக்கவா ? இல்லை—பல இலட்சக்கணக் கான மக்களின் தலைவிதி இந்த ஒருவருடன் தொடர்பு கொண்டிருப்பதை உணருங்கள். இவர் குற்றவாளியா அல்லரா என்பது முக்கிய கேள்வி அன்று ; இலட்சக் கணக்கான மக்கள், மக்களாய்த் துன்புற்றுழன்று நொந்து மனம் வாடி, வதங்கவேண்டுமா அல்லது இன்புற்றிருக்க வேண்டுமா என்பதுதான் நமக்குமுன் உள்ள கேள்வி........ நீடு நினைந்து சிந்தியுங்கள் .... இக்குற்றவாளியின் மீது நாங்கள் குற்றம் சுமத்துகிறோம். குற்றங்கள், ஒன்றல்ல இரண்டல்ல, பல சுமத்துகிறோம்; பொறாமை அன்று, கோபத்தால் அன்று, கொடு நெஞ்சங்கொண்டு அன்று, நேர்மை உள்ளத்துடன்தான் செய்கிறோம். குற்றச்சாட்டுகளின் அடிப்படையைக் கூர்ந்து நோக்குங் கள். இவர் புரிந்த தீமைகளுக்கு அடிப்படைக் காரணங் களைச்சிந்தியுங்கள். ஒரு சிறிது நல்லெண்ணமும் அவற்றில் கலந்திருப்பதாகத் தெரியவில்லை. அவை இவருடைய துரோக சிந்தனையால் எழுந்தவை ; பொறாமையால் பிறந்தவை ; கைக்கூலி வாங்கும் கயமை மனப்பான்மையால், பண்பாடற்ற தன்மையால் எழுந் தவை ; அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் ஆகியவற்றின் அடிப்படையில் எழுந்தவை. அறத்தை அழித்து மறத்தை மாண்புறச் செய்யும் செயலால் எழுந் தவை. அன்பகத்தில்லா ஆட்சிக்கொள்கையின் அடிப் படையில் எழுந்தவை. நடுவுநிலைமை நீங்கிய நெஞ்சிற் கிளர்ந்தவை. யான், எனது என்னும் ஆணவத்தால் தோன்றியவை. பிறரை எள்ளிநகையாடும் இழிகுணத் தால் எழுந்தவை. இவர்செயல்கள் அந்தோ ! கொடுமை ! கொடுமை! இக்கயவரின் கொடுஞ்செயல் உலகில் அறத்தை அழித்துவிடும் ; மறத்தை மாண்புறச் செய்யும். நேர்மையை நசுக்கிவிடும் ; உண்மையை ஒழித்துவிடும் ; நன்மையை நீக்கிவிடும் ; தீமையைத் தீவிரமாக்கும். அன்பெனும் பண்பை ஆழஅமுக்கி அழுத்திவிடும். அவனியை அருளற்று இருள் சூழ்ந்ததாக்கிவிடும். அகத்தில் மாசுபடர்ந்துவிட்டதால் அறஞ்சாரின்பத்தை

அணுவளவும் இவர் அறிந்திலர். இந்தியாவில் உள்ள தீமைகள் யாவும் உருவெடுத்து வந்தாற்போன்ற இவரை உங்கள்முன் துரோகக் குற்றஞ்சாட்டுகிறோம். கீழ் நாட்டுக் குற்றவாளிகட்குத் தலைவர் எனத்தக்க இவரை உமது நீதிக்குமுன் நிறுத்துகின்றோம். கொடுமைக் கெல்லாம் கொடுமையானவற்றின் தலைவர்க்கெல்லாம் தலைவரானவரைத் தங்கள் முன் கொண்டுவந்துள்ளோம். இவருக்குப்பின் இந்தியாவில் கொடுமை என்பதே இருக் காது. ஏன்? எல்லாக் கொடுமைகளையும் இவரே இழைத்துவிட்டாரே. ஆங்கில நாட்டில் உரிமையின் அடிப்படையில் வளர்ந்துவந்துள்ள சிறப்பு வாய்ந்த சட்ட மன்றத்தின் சார்பாக இவர்மீது துரோகக் குற்றஞ்சாட்டு கிறேன். இவர், சட்டசபையின் சிறப்பைச் சீர்குலைத்தார். அது கொண்டிருந்த நம்பிக்கையை அழித்தார். பிரிட்டிஷ் பெருமக்களின் மாண்பை மண்ணோடு மண்ணாக்கினார். அவர்கள் சார்பாகவும் உரிமைகளையும் உடமைகளையும் இழந்த இந்தியரின் சார்பாகவும் இவர்மீது துரோகக் குற்றஞ்சாட்டுகிறேன். மானிட சமூகத்தின் சார்பாக இவரைக் கூண்டிலேற்றுகிறேன். மக்களினம் அடைந்த துயரத்தால் உந்தப்பட்டு தங்கள் முன் இவர்மீது துரோகக் குற்றஞ்சாட்டுகிறேன்."

விசாரணையின் தன்மை: பர்க்கின் சொற்பொழிவு மிகைப்படுத்தப்பட்டதாகவும் வரம்பு மீறியதாகவுமிருந்தது எனினும் அது உணர்ச்சியைத் தூண்டியது. பாக்ஸ் அம்முறையைப் பின்பற்றுமல் செயிட்சிங் சம்பந்தமான நடவடிக்கைகளை நன்கு விளக்கினார். ஷெரிடன், அயோத்தி-பீகங்களின் அவலநிலையை அழகுற எடுத்துக் காட்டினார். அவர் பேச்சைக் கேட்க மிகுதியான அளவுக்கு மக்கள் கூடினர். மாளிகைக்குள் நுழைய அனுமதிச் சீட்டுகள் கொடுக்கப்பட்டன. அனுமதிச்சீட்டு ஒன்றின் விலை 50 கினிகள் (ஆங்கிலநாட்டுப் பொற்காசுகள்). ஷேக்ஸ்பியரின் துன்பியல் நாடகத்தைக் காண எவ்வளவு

* Burke's Works, VII

19

ஆர்வம் இருக்குமோ அத்துணை ஆர்வத்துடன் ஷெரிடனின் பேச்சைக் கேட்க மக்கள் குழுமினர். அவரது சொற்பொழிவின் சில பகுதிகள் ஷேக்ஸ்பியரின் சொற்றொடர்களை ஒத்த சிறப்பு வாய்ந்தவை. அவர் பேச்சு முடிந்ததும் பர்க் அவரை வியந்து போற்றித் தழுவிக் கொண்டார். சான்றுகளைத் தயார் செய்து முறைப் படுத்துவதில் பலவகை இடையூறுகள் இருந்ததால் விசாரணை மிகவும் தாமதமாகவே நடைபெற்றுவந்தது அது ஏழு ஆண்டுகள் நீடித்தது. ஆனால் நீதிபதிகள் அமர்ந்து விசாரணை நடத்திய காலம் மொத்தம் 148 நாட்கள்தான். 1791-ல் குற்றஞ் சாட்டுவோரின் சொற்பொழிவுகள் ஒருவாறு முடிவுற்றன. ஹேஸ்டிங்ஸ் அதன்பின் தமது செயல்களின் தன்மையை விளக்கினர். தாம் தீய எண்ணத்துடன் எதையும் செய்யவில்லை என்று அவர் நன்கு விளக்கித் தமக்கு ஏற்பட்டிருந்த இன்னல்களை உணர்த்தினர். சுயநலத்தைக் கருதி எதையும் செய்யவில்லை என்பதையும் எடுத்துக்காட்டினர். அவர் சம்பாதித்த தொகை 100,000 பவுன்களுக்கு மேற்படவே இல்லை என்றும் விசாரணையின் பொருட்டு அவர் தமது சொத்துக்களை அடமானம் வைக்க நேர்ந்தது எனவும் விளக்கிக் கூறினர். 1794-ல் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்குத் திரும்பிய காரன்வாலிஸ், ஹேஸ்டிங்ஸ் இந்தியாவில் அடைந்திருந்த பெருமைக்குச் சான்று பகன்றார். அதற்குப் பிறகும் பர்க் தமது கட்சியை முதலில் கூறியதுபோலவே வற்புறுத்திப் பேசினர். அவர், குற்றச்சாட்டுகளைத் தொகுத்துக் கூறிய முடிவுரை ஒன்பது நாட்கள் நிகழ்ந்தது. ஹேஸ்டிங்ஸுக்கு வாரணசியில் இந்தியர் கோயில் கட்டினர் என்ற செய்தி அவர் காதில் விழுந்தது. அதற்கு அவர் இறுத்த பதிலாவது :— "அவர்கள் (அந்தணர்கள்) நலம் செய்யும் கடவுளர்க்கு மட்டும் கோயில் எடுப்பவர்களல்லர். பெரியம்மை, வாந்திபேதி போன்ற கொடிய நோய்களின் தலைமைக் கடவுளர்க்கும் கோயில்கள் எடுப்பது அவர்கள் வழக்கம். அம்முறையில் ஹேஸ்டிங்ஸுக்குக் கோயில் எடுப்பது பொருத்த

மானதே. ஹேஸ்டிங்ஸின் அவ்வுரிமையை நான் மறுக்க வில்லை "* 1795-ம் ஆண்டில் நீதிசபை தீர்ப்புகூறியது. சபையின் உறுப்பினர்களில் 29 பேர்களே வாக்களித்தனர். அதில் பெரும்பான்மையினர் ஹேஸ்டிங்ஸ் குற்றவாளி அல்லர் என்று முடிவு செய்தனர்.

அந்நீண்டகால விசாரணை ஹேஸ்டிங்ஸின் மனதை மிகவும் புண்படுத்தியது; அவரது அமைதியைக் குலைத்தது. அவர் செல்வம் அழிந்தது. அதன் பொருட்டு அவர் 100,000 பவுன்கள் செலவழித்தார். இங்கிலாந்தில் நிலவிய கட்சி அரசியல் கருத்து வேறுபாடுகள்தான் ஹேஸ்டிங்ஸின் இன்னல்களுக்குச் சிறப்பான காரணமாகும். தம் நாட்டினர் இந்தியாவில் புரிந்த தவறுகளுக்கெல்லாம் ஹேஸ்டிங்ஸே பழியை ஏற்றுக்கொள்ளும் நிலைமை ஏற்பட்டிருந்தது. சொற்பொழிவாளர்கள் தமது முழுச் சொல்வன்மையையும் காட்டி மக்கள் உணர்ச்சியை எழுப்பினர். பர்க் தாம் அறிந்த பழிச்சொற்களை எல்லாம் பயன்படுத்தி ஹேஸ்டிங்ஸைத் தாக்கிப் பேசினர். ஹேஸ்டிங்ஸின் கொடுமைகளை விளக்கத் தகுதி வாய்ந்த அடைமொழிகள் ஆங்கில மொழியில் இல்லை என்றும் அவர் வருந்தினர். விசாரணை நடந்த ஏழாண்டுக் காலத்தில் ஹேஸ்டிங்ஸ் அடைந்த மனத்துயரே அவருக்கு ஏற்ற தண்டனையாகக் கருதப்பட்டது. அவர் ஆற்றிய அருஞ் செயல்களையும் அவருக்கு இந்தியாவில் ஏற்பட்டிருந்த இடையூறுகளையும் அவ்வமயம் இங்கிலாந்தில் தெளிவாக அரசியலார் உணரவில்லை. அவருடைய ஆதரவின் கீழ் இங்கிலாந்து யாதொரு நட்டமும் அடையவில்லை. ஆங்கிலேயரின் ஆதிக்கத்தைக் கீழ்த்திசையில் பெருக்க அவர் மிகவும் உதவினர். ஆயினும் குற்ற விசாரணை முறையற்றது அன்று. அதனால் பல நன்மைகள் விளைந்தன. பல தவருன கருத்துக்களை அது நீக்கியது. ஆங்கிலேயர் இந்திய ஆட்சிமுறை பற்றிப் பின்பற்ற

* Macaulay, op. cit. p. 483.
மெக்காலே ஷை

வேண்டிய கொள்கையை அது உணர்த்தியது, கிழக் கிந்தியக் கம்பெனியார் ஒழுங்காக நடந்துகொள்ள அவ் விசாரணை ஒரு வழிகாட்டியாக இருந்தது; ஒரு எச்சரிக்கை யாகவும் இருந்தது.

ஹேஸ்டிங்ஸின் சாவு: ஹேஸ்டிங்ஸ் பெருத்த இடை யூறுகளுக்குப் பிறகு கம்பெனியிலிருந்து 4000 பவுன்கள் ஆண்டுப் படியைப் பெற்ருர். 1806-ல் மீண்டும் கவர்னர்-ஜெனரலாக அவர் முயன்று தோல்வியுற்ருர். 1814-ல் அவர் ஒரு பிரிவி கௌன்ஸிலர் ஆனுர். அவர் தாம் இறக்கும் காலத்தில் கம்பெனியார், தமக்குக் கொடுத்து வந்த ஆண்டுப் படியை தமது மனைவிக்குக் கொடுத்துவர வேண்டும் என்று விண்ணப்பம் செய்துகொண்டார் (1818). ஆனுல் இயக்குநர்கள் அதற்கு உடன்பட வில்லை. 1818-ம் ஆண்டு ஆகஸ்டு 22-ம் நாள் ஹேஸ்டிங்ஸ் உயிர் நீத்தார்.

பகுதி 17

வாரன் ஹேஸ்டிங்ஸைப் பற்றிய மதிப்பீடு

இயல்பு : ஹேஸ்டிங்சின் இயல்பு, அருஞ் செயல்கள், குறைபாடுகள் ஆகியவற்றை மதிப்பிடுகையில் அவர் எச்சூழ்நிலையில் தம் நாட்டிலிருந்து இந்தியாவுக்கு வந்தார் என்பதை நாம் மனத்திற் கொள்ளவேண்டும். அவர் சிறப்பான கல்வியறிவு பெறுவதற்கு முன்னரே இந் நாட்டுக்கு வந்துவிட்டார். தமது பெற்றோர்களின்கீழ்த் தக்க பயிற்சியையும் அவர் பெறவில்லை. தன் முயற்சியால் உயர்ந்தவர்களில் அவரும் ஒருவர். அவர் வங்காளத்தில் பணியாற்றிய காலத்தின் தொடக்கப் பகுதியில் அவரைப் பற்றிக் குறை கூறுவதற்குச் சிறப்பாக எதுவும் இல்லை. கம்பெனியின் நலத்திற்காகவே அவர் பல வழிகளில் பொருள் ஈட்டினர். ஆனல் அதன் பொருட்டு அவருடைய செயலும் முறையானதென்று கூறிவிடுவதற்கில்லை. இன்றியமையாமை என்ற காரணத்தினல் கொடுமை இழைப்பது ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. நேர்மை முறையைப் பொறுத்தவரை ஹேஸ்டிங்ஸின் குறைபாடுகளை ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளோம். கூட்டாளிகளுடன் ஒத்துழைத்து வெற்றிபெறும் ஆற்றல் அவரிடம் இல்லை. தமது பொதுவான குறிக்கோளினுலும் தமது வெற்றிகளினுலும் தாம் பின்பற்றிய வழிகளில் கண்டிக்கத்தக்க தன்மையை மறைக்க அவர் முயன்ருர். அதிகாரப்பேராசை அவரிடம் இருந்தது. அதைப் பிறர் குறைக்க முயல்வதைக் கண்டு வெகுண்டார். தம் நிலைமைக்குக் கீழானவர்கள் அம் முயற்சியில் ஈடுபடுவதை மிகவும் வெறுத்தார். தம்மைத் தாம் சோதித்துக்கொள்ளும் உயரிய பண்பு அவரிடம் இல்லை. தம் மீது குற்றம் சுமத்துவோரின் கருத்துக்களையும் ஆய்ந்து உணரவேண்டும் என்று அவர் கருதினர் இல்லை. குறைபாடுகள் பல இருந்தபோதிலும் அவர் பெருமைப்படுத்துதற்குரியவரே. மிகுதியான

ஆற்றலும் சீர்திருத்தங்களில் மிக்க ஊக்கமும் அவரிடம் இருந்தன. அவரிடம் நுண்திறம் கிடையாது. ஆனல் மிகுந்த பொறுமையும் வன்மையான துணிபும் இருந்தன. எளிதில் தம் முயற்சியைக் கைவிட அவர் இணங்கவில்லே. அவர் தம் பதவியை உறுதியாகப் பற்றிக்கொண்டிருந்தார். தம் பகைவர்கள் அப்பதவியில் வருவதை இயன்றவரை தடுக்கவே அவர் முயன்ருர். வாழ்க்கையே அவருக்கு ஒரு கல்விச் சாலேயாக அமைந்தது எனலாம். ஆழ்ந்து சிந்தித்து வல்லமையுடன் செயலாற்றவேண்டும் என்பதே அவர் விருப்பம். அவர் தம் பகைவர்களின் செயல்களுக்குப் பொறுமையுடனும் வீரத்துடனும் ஈடுகொடுத்து வந்தார். தவறிழைத்து இன்னல்களில் சிக்கிக்கொண்ட காலங்களிலும் திறமையுடன் அவர் நடந்துகொண்டதைக் காண்கிருேம். வங்காளத்தைப்பற்றி அவர் நன்கு உணர்ந்திருந்தார். இந்திய நாகரிகத்தின் சிறப்புக் கூறுகளே அவர் வியந்து போற்றினுர். பாரசீக மொழி, வங்காளி மொழி ஆகியவற்றில் அவருக்குத் தேர்ச்சி இருந்தது. வேறு சில மொழிகளேயும் அவர் ஓரளவு கற்றிருந்தார். சமஸ்கிருதமும் இந்திய மெய்விளக்கத் துறையும் அவர் கருத்தை மிகுதியாகக் கவர்ந்தன. நூல்களேப் படிப்பதில் அவருக்கு ஆர்வம் இருந்தது. இலக்கியம் கலே முதலியவற்றிலும் அவர் சிந்தனே சென்றது. நிலநூல் ஆராய்ச்சியையும் கல்வியையும் அவர் ஆதரித்தார். ஆகவே அவர் செயல்கள் பலதிறப்பட்டன. வாழ்க்கையில் ஒரு பகுதியில்மட்டுமே அவர் அக்கறை கொண்டிருக்கவில்லே. அச்செய்தியைப் பொறுத்தவரை அவரைப் பண்பாடுடைய மகன் என்றே சொல்லவேண்டும். அவர் தம் நண்பர்களிடம் பெருந்தன்மையுடன் நடந்துகொண்டார்; தம் மனேவியை மிகுதியான அளவுக்குக் காதலித்தார். பல பண்புகளில் அவர் உயர்ந்தவரே. அவருடைய குறைபாடுகளேப் பற்றிச் சிந்திக்குமுன் நாம் அவருக்கு ஏற்பட்டிருந்த இடையூறுகளேயும் உணரவேண்டும். குற்றம் காண்போர் அவர் செயல்களேத் துருவித்துருவி ஆய்ந்தனர் என்பதும் நோக்கற்பாலது. அவருக்கு

இந்நாட்டில் ஏற்பட்டிருந்த இடையூறுகள் மிகப் பெரியவை. அவர் பெற்றிருந்த அதிகாரங்களோ போது மானவையல்ல. ஹேஸ்டிங்ஸின் பெருமை அவர் இயல்பில் காணப்படும் இழுக்கை நீக்கக்கூடும்.

அரசியல் வல்லமை : ஹேஸ்டிங்ஸ் தொடக்கம் முதல் அரசியல் வல்லமையுடன் செயலாற்றினுர். கம்பெனியின் நலன்களைக் காப்பதே தமது முதல் கடமையாகக் கொண் டார். ஊழல்களை நீக்குவதில் வன்மையான ஊக்கம் அவருக்கு இருந்தது. அவர் கவர்னராய் இருந்த பொழுது வங்காளத்தில் ஆற்றிய செயல்கள் சிறப்பு வாய்ந்தவை. வங்காளத்தை மராட்டியரிடமிருந்து காப் பாற்றவேண்டும் என்ற நோக்கமே அவர் ரோஹில்லாப் போரில் ஈடுபட்டதற்குக் காரணமாகும். பிரான்ஸிஸூம் அவரைச் சேர்ந்தோரும் கடுமையாக எதிர்த்தபோதிலும் ஹேஸ்டிங்ஸ் அதற்கு அடங்கிவிடாமல் தம் திட்டத்தை நிறைவேற்றுவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தார். மராட்டியப் போரையும் மைசூர்ப் போரையும் முடிவுறச் செய்தபோது அவருடைய அரசியல் தந்திரமுறையைக் காண்கிருேம். ஆனுல் அவர் சென்னை பம்பாய் அரசியலார் களை நடத்திய முறையைப் பாராட்டுவதற்கில்லை. சிறிய செய்திகளை அவர் பொருட்படுத்தாமல் பிரிட்டிஷ் இந்தியா வைக் காக்கும் நோக்கத்தில் மிகவும் தீவிரமாக இருந்தார். அதேசமயத்தில் ஆங்கிலேயர், உலகில் வேறு இடங்களில் சிறப்பான வகையில் நடந்துகொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. 1774 முதல் 1780 வரை அவருக்கு ஏற்பட்டிருந்த ஆலோசனைக் குழுவினரின் எதிர்ப்பு இல்லாதிருந்திருக்குமாயின் அவருடைய சாதனைகள் மேலும் பெரியனவாய் இருக்கும் என்று கூறப்படுகிறது. அது உண்மையே. ஆனுல் அவர் உரிமையுடனும் வலிமையுடனும் விளங்கிய காலத்தில்தான் அவர்மீது சாட்டப்பட்ட குற்றங்களுக்கு ஆதாரமான செயல்கள் நிகழ்ந்தன என்பதையும் நாம் நோக்கவேண்டும் (ரோஹில்லாப் போர், செயிட்சிங் செய்தி, பைஸாபாத்

பீகங்கள் துயரம்). கட்டுப்படுத்தப் பெருத அதிகாரம் அவருக்கு மேலும் நீண்ட காலம் கிடைத்திருக்குமாயின் அதனுல் தீமைகள் விளைந்திருக்கக்கூடும் என்றும் எண்ண இடமுள்ளது. உண்மையில் நாடுகளை இணைத்துக் கொள்வதை அவர் விரும்பவில்லை. சால்செட்டைப் பெற வேண்டுமென்று அவர் விரும்பினுர். ஆனுல் வாரணுசியை இணைத்துக்கொள்ள வேண்டுமென்பது ஆலோசனைக் குழுவின் தீர்மானமாகும். கிளைவ் ஏற்படுத்திய " சுற்றரண் காப்புக் கொள்கையையே " பின்பற்ற இவர் விரும்பினுர். அவருக்கு மேலும் உரிமை கிடைத்திருக்குமாயின் பிற்கால வெல்ஸ்லியின் சில சாதனைகளை அவரே ஆற்றியிருப்பார் என்று வாதிக்கலாம். ஹேஸ்டிங்ஸின் அரசியல் வல்லமையைக் குறித்து எத்தகைய குறை இருந்தபோதிலும் இந்தியாவில் பிரிட்டிஷ் அதிகாரத்தைக் காப்பாற்றி அதை மீண்டும் நிலை நிறுத்திய பெருமை அவருக்கு உண்டு. அவருடைய அரசியல் திறமையில் அவர் தம் அரசியல் முன் உணர்வுகளைக் காண்கிருேம். அயோத்தியுடன் அவர் செய்துகொண்ட உடன்பாடு பிற்காலத்திய வெல்ஸ்லியின் பாதுகாப்புமுறைத் திட்டத்தை ஓரளவு ஒத்திருந்தது. பிரெஞ்சியரால் பிரிட்டிஷ் இந்தியாவுக்கு ஏற்படக்கூடும் தீமையை அவர் நன்கு உணர்ந்திருந்தார். மகாதஜி சிந்தியாவுடன் அவர் கொண்ட தொடர்பு நற்பயனை விளைத்தது. சீக்கியரின் உள்ளார்ந்த வலிமையையும் அவர் உணர்ந்திருந்தார்.[1] 1775-ல் இந்தியச் சிற்றரசர்களுடன் பிரிட்டிஷ் அரசாங்கம் நேர் தொடர்பு கொள்ளவேண்டும் என்று அவர் அறிவுரைக்கூறினுர்.[2] ஆட்சிமுறைக் கொள்கையைப் பொறுத்தவரை 19-ம் நூற்ருண்டின் முற்பகுதிக் கருத்துக்களை ஹேஸ்டிங்ஸ் முன் கூட்டியே உணர்ந்து செயலாற்ற முனைந்தார். குற்றங்கள் பல இருந்தபோதிலும் ஹேஸ்டிங்ஸ் சிறப்பு வாய்ந்தவரே'' என்ற பிரெஞ்சு அறிஞரின் குறிப்பு (Achille Bioves, 1904) ஈண்டு குறிப்பிடத்தக்கது.

---

1 *100, பக். 178.*

2 Smith op. Cit (*ஸ்மித்*) ஷெ பக். *516-7*

ஆட்சி முறைத் திறமை : ஹேஸ்டிங்ஸின் ஆட்சி முறைத் திறமையைக் காட்டும் அவரது செயல்களை ஆங்காங்குக் குறிப்பிட்டுள்ளோம். அவற்றால் பெரும்பயன்கள் விளையாதபோதிலும் காரன்வாலிஸின் அருஞ்செயல்களுக்கு அவர் வழிகாட்டினார் என்று கூறலாம். முதல் கவர்னர்-ஜெனரலின் நிலவரிக்கொள்கை வங்காளத்துக்குச் செழிப்பை விளைவிக்கவில்லை. ஆனால் அடிக்கடி நிலவரிச் செய்திகளைக் கவனமாக விசாரணைசெய்ய வேண்டுமென்ற அவரது குறிக்கோள் போற்றத்தக்கது. நிலையான நிலவரித்திட்டக் கொள்கையை அவர் ஏற்கவில்லை. ஆனால் அவரது நீதி பரிபாலன அமைப்போ சிறப்பானது. அதைக் காரன்வாலிஸ் நிறைவுபடுத்தினார். இயன்றவரை இந்தியச் சட்டங்களையும் இந்தியர்களையும் பயன்படுத்திக் கொள்வதையே ஹேஸ்டிங்ஸ் விரும்பினார். கம்பெனியின் நீதிமன்றங்களைத் தலைமை நீதிமன்றத்துடன் இரண்டறக் கலக்கவேண்டுமென்று அவர் கொண்ட எண்ணம் பாராட்டத்தக்கது. ஆனால் நீதிமன்றம் நிர்வாக அதிகாரிக்குக் கட்டுப்படவேண்டும் என்ற அவருடைய கொள்கை ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. அதனால் நீதிமன்றத்தின் உரிமையும் நேர்மையும் அழிவுறும். நிலைபெற்று உள்ளவற்றில் சிறப்பானதை ஆதரிக்கவேண்டும் என்பது ஹேஸ்டிங்ஸின் கொள்கை. அவருடைய ஆட்சி முறையினால் மகிழ்ச்சி தரக்கூடிய நன்மைகள் உடனடியாக ஏற்படவில்லை. நிலைமையை ஒழுங்குசெய்யக் காரன்வாலிஸின் சீர்திருத்தங்கள் தேவையாயின.

கல்வி கலை, இவற்றிற்கு ஆதரவு : ஹேஸ்டிங்ஸ் கல்வியையும் கலையையும் நன்கு போற்றிப் பேணிவந்தார். பொதுவாகக் கீழ்த்துறைக் கலைகளை அவர் விரும்பிப் போற்றினார். மஹாபாரதக் கதைகளில் அவருக்கு ஈடுபாடு இருந்தது. பகவத்கீதையையும் அவர் வியந்து போற்றினார். பயனை எதிர்பாராமல் கடமையைச் செய்தல் என்ற அந்நூற் கருத்து அவர் உள்ளத்தைத் தொட்டது.

அந்நூல் எக்காலத்துக்கும் சிறந்த ஒரு கருவூலமாகும் என்பது அவருடைய முடிந்த முடிபாகும். கீழ்நாட்டு இலக்கியத்தையும் கருத்துக்களையும் ஐரோப்பியர் அறிய வேண்டும் என்பது அவர் விருப்பம். அதன் மூலம் மேல் நாடுகளையும் கீழ்நாடுகளையும் இணைக்க அவர் முயன்ருர். பகவத்கீதையை சார்லஸ் வில்கின்ஸ் என்பார் ஆங்கிலத்தில் மொழிபெயர்தார். 1784-ல் ஹேஸ்டிங்ஸ் அதற்கு வழங்கிய முன்னுரையில் கீதை போன்ற இந்திய நூல்களின் பெருமையை அழகாகச் சிறப்பித்துள்ளார். வில்கின்ஸ் ஏறத்தாழ 1768 முதல் 1786 வரை இந்தியாவில் இருந்தார். மேலும் சர் வில்லியம் ஜோன்ஸ் ஹால்ஹெட், ஆண்டர்சன் முதலிய பேரறிஞர்களை ஹேஸ்டிங்ஸ் இத்துறையில் ஊக்கினுர். ஹால் ஹெட்டின் இந்துச் சட்டத்தொகுப்பைப்பற்றி முன்னர்க் குறிப்பிட்டோம். அவர் ஒரு வடமொழி இலக்கண நூலை வெளியிட்டார். ஜோன்ஸ் (பி. 1746 - இ 1794) ஒரு பன்மொழிப் புலவர். எபிரேய, கிரேக்க, இலத்தீன், அராபிய, பாரசீக, பிரெஞ்சு, ஸ்பானிய, இத்தாலிய மொழிகளை அவர் நன்கு கற்றிருந்தார். வேறு சில மொழிகளிலும் அவருக்குப் பழக்கம் இருந்தது. அவர் எழுதிய பாரசீக இலக்கண நூல் 1772-ல் வெளியாகியது. அவர் 1783-ல் தலைமை நீதிபதியாகக் கல்கத்தாவுக்கு வந்தார். வடமொழியில் மிக்க புலமை அவருக்கு இருந்தது. 1784-ல் அவர் வங்காளத்தில் ஆசிய சங்கம் ஒன்றை நிறுவ உதவினுர். 1781-ல் ஹேஸ்டிங்ஸ் கல்கத்தாவில் ஒரு முகம்மதியக் கல்லூரியை ஏற்படுத்தினுர். ஹேஸ்டிங்ஸின் ஆதரவின்கீழ் மேஜர் ரன்னல் என்பாரும் அவரைச்சார்ந்த சிலரும் வங்காளத்தையும் இந்துஸ்தானத்தையும் நில அளவு செய்தனர். சயத் குலாம் உசெய்ன் கான் என்ற அறிஞர் 1783-ல் அக்காலத்து வரலாற்று நூல் ஒன்றை எழுதி அதை ஹேஸ்டிங்ஸுக்கு உரிமையாக்கினுர். நில நூல் ஆராய்ச்சியில் ஹேஸ்டிங்ஸுக்கு ஊக்கம் இருந்தது. 1774-ல் ஜார்ஜ் போகிள் என்பாரையும் 1783-ல் சாமுவல் டர்னர் என்பவரையும் நிலநூல் ஆராய்ச்சியை முன்

னிட்டு அவர் திபெத்துக்கு அனுப்பினூர். அதற்குப் பிறகு கர்சான் பிரபு காலத்தில்தான் (1903) பிரிட்டிஷ் இந்திய அரசியலார் அந்நாட்டில் அக்கரை கொண்டனர். ஓவியக் கலேயிலும் ஹேஸ்டிங்ஸ் கருத்தைச் செலுத்திஞர். பாரன் இம்ஹாப் என்ற கலேஞரை அவர் ஆதரித்தமை குறிப் பிடத்தக்கது. ஸொபானி (Zoffany) என்ற புகழ் வாய்ந்த ஓவியக் கலேஞர் 1783 முதல் 1790 வரை இந்தியா வில் இருந்தார். 1780-ல் வங்காள கெஜட் என்ற செய்தித் தாள் தோன்றியது. அதன் ஆசிரியர் ஹிக்கி, ஹேஸ் டிங்ஸ், இம்பே முதலியவர்களே அச்செய்தித்தாள் குறை கூறியதால் 1782-ல் கவர்னர் - ஜெனரல் அவ்வெளி யீட்டை நிறுத்திஞர். ஹிக்கி சிறைப்படுத்தப்பட்டு அப ராதம் செலுத்த நேர்ந்தது. 1784-ல் கிளாட்வின் என் பார் "கல்கத்தா கெஜட்" என்ற செய்தித்தாளே வெளி யிட்டார். அதற்கு அரசியலாரின் ஆதரவு கிடைத்தது. ஹிக்கியின் வெளியீடே இந்தியாவில் ஆங்கிலத்தில் தோன்றிய முதல் செய்தித்தாளாகும். "லண்டன் கெஜட்" 1666-ல் தோன்றியது என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

கவர்னர்-ஜெனரல்களின் வரிசையில் ஹேஸ்டிங் ஸுக்கு உரிய இடம்: ஹேஸ்டிங்ஸின் பல திறப்பட்ட செயல்களே முன்னர்க் கண்டோம். அவற்றைப்பற்றி வர லாற்றறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது. ஹேஸ்டிங்ஸின் ஆட்சி முறையைவிடக் காரன்வாலிசின் ஆட்சி முறை சிறந்தது என்பார் அறிஞர் பெவரிட்ஜ்[1]. ஆனுல் பொதுவான இக்கருத்து முதல் கவர்னர் - ஜெனர லின் பெருமையைக் குறைப்பதாக இல்லே. சில பண்பு களில் - சிறப்பாக அறஞ்சார்ந்த பண்பில் - ஹேஸ்டிங்ஸ் காரன்வாலிசுக்குத் தாழ்ந்தவரே எனலாம். அறிஞர் ஸ்மித், ஹேஸ்டிங்ஸை மிகவும் புகழ்ந்து பேசுகிருர். அறிஞர் ராபர்ட்சும் ஹேஸ்டிங்ஸுக்கு இந்திய வரலாற்றில் மிக உயர்ந்த நிலேயை அளிக்கிருர்.[2] இந்தியாவில் பணியாற்

1. 8, பக். 654.
2. 14, V பக். 312.

றிய ஆங்கிலேயர்கள் யாவரிலும் மிகச் சிறந்தவர் ஹேஸ்டிங்ஸ் என்பது ராம்ஸே மூர் அவர்களின் கருத்து.* அறிஞர் ஸ்டீபன் "ஒருவருக்குக் கிடைத்துள்ள சாதனங்களையும் அவர் செயல்களின் முடிவுகளையும் ஒப்பிட்டு ஆராய்ந்து அவருடைய ஆற்றலை மதிப்பிடும் நிலையில், 18-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த மிகச் சிறந்த ஆங்கிலேயர் ஹேஸ்டிங்ஸ் என்று நான் கருதுகிறேன்" என்று குறிப்பிடுகிருர். ஹேஸ்டிங்ஸைப் பற்றிப் பிரெஞ்சியர் ஒருவரின் மதிப்பீட்டை முன்னரே குறிப்பிட்டுள்ளோம். அக்கருத்துப் பெரும்பாலும் உண்மையே. ஹேஸ்டிங்ஸுக்குப் பேர் இடையூறுகள் பல இருந்தன. பார்லிமெண்ட்டுச் சபையினர் அவர் செயல் ஒவ்வொன்றையும் பரிசீலனை செய்து வந்தனர். அந்நிலையிலும் நிலையான சில சாதனைகளை அவர் புரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் உள்ளத்தில் தெளிவு இருந்தது. இடையூறுகளை வீரத்துடன் எதிர்க்கும் ஆற்றல் இருந்தது. இந்தியாவையும் இந்தியர்களையும் அவர்தம் பண்பாட்டையும் ஹேஸ்டிங்ஸ் நேசித்தார். ஆனுல் அதைவிட மிகுதியாகக் கம்பெனியிடமும் தம் நாட்டிடமும் அன்பு பாராட்டினுர். ஆக்கச் சார்பான அவர் முயற்சிகள் குறிப்பிடத்தக்கவை. இந்தியாவின் கவர்னர்-ஜெனரல்களின் வரிசையில் பெருமை வாய்ந்த இடம் அவருக்கு உண்டு. அதேசமயத்தில் அவருடைய சில குறைபாடுகளையும் நாம் பொருட்படுத்தாமல் இருப்பதற்கில்லை.

---

* 67, பக். 443.

வாரன் ஹேஸ்டிங்ஸ் காலத்து இந்தியா 1772—85



அதிகாரம் 5

(1785-6) முதல் (1786-98) வரை

இந்திய வரலாறு

பகுதி 1

மக்பர்ஸன் (1785-6) காரன்வாலிஸ் (1786-93)

மக்பர்ஸன் கவர்னர்-ஜெனரலாதல்: ஸர் ஜான் மக்பர்ஸன், நவாப் முகம்மது அலியிடம் முகவராக (ஏஜண்டு) பணியாற்றியவராவர். பின்னர்ச் சென்னையில் ஆங்கிலக் கம்பெனியில் பணியாற்றினர். 1776-ல் பிகட் அவரைப் பதவியினின்று நீக்கிவிட்டார். பிறகு அவர் இங்கிலாந்துக்குத் திரும்பி பார்லிமெண்ட்டில் உறுப்பினரானர். நவாபுக்கும் அவருக்கும் தொடர்பு நீடித்தது. 1781-ல் கல்கத்தா ஆலோசனைக் குழுவில் மக்பர்ஸன் மூத்த (சீனியர்) உறுப்பினரானர். தொடக்கத்தில் அவர் ஹேஸ்டிங்ஸை ஆதரித்தார். ஆனல் பின்னர் அவர் கவர்னர்-ஜெனரலுக்குப் பகையாக ஸ்டேபிள்ஸனுடன் சேர்ந்துகொண்டார். ஹேஸ்டிங்ஸ் பதவியினின்று விலகியவுடன், இவர் 1785-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் 1786-ம் ஆண்டு செப்டம்பர் வரை பதிலி (acting) கவர்னர்-ஜெனரலாகப் பதவி வகித்தார்.

வெளித்துறைத் தொடர்புகள்: அவ்வமயம் முகலாயப் பேரரசர். மகாதஜி சிந்தியாவின் ஆதரவில் இருந்து வந்தார். தில்லியில் பின்னவரின் ஆதிக்கம் ஓங்கி இருந்தது. வங்காளத்தில் பிரிட்டிஷார் குடியேற்றங்களை அமைத்திருப்பதற்காகப் பேரரசருக்கு அவர்கள் வரி செலுத்த வேண்டுமென்று மகாதஜி கோரினர். மக்பர்ஸன், அக்கோரிக்கையைப் புறக்கணித்ததுடன் சிந்தியாவை அச்

செயலுக்காக மன்னிப்புக் கேட்கவும் செய்தார். நான பட்னிஸ், திப்புவுக்குப் பகையாக ஆங்கிலேயரின் உதவியை நாடினர். ஆனல் கவர்னர்-ஜெனரல் உதவி அளிக்க மறுத்துவிட்டார். 1786-ல் மேற்பார்வைக்குழு (Board of Control) சென்னை கவர்னருக்கு கருநாடகத்தின் வரிகள் செலுத்தப்படவேண்டியதில்லை என்று தீர்மானித்தது. அதை எதிர்த்து கவர்னர் மக்கார்த்னே, மக்பர்ஸனிடம் முறையிட்டார். அவ்வாணையை உடனே நிறைவேற்றுமல் இருக்குமாறு வேண்டினர். ஆனல் கவர்னர் - ஜெனரல் அதற்குச் செவிசாய்க்கவில்லை. ஆதலால் கவர்னர், பதவியினின்று விலகினர். அக்காலத்தில் அயோத்தியின் நிலைமை மேலும் சீர்கேடடைந்து வந்தது.

ஆட்சிமுறை ; மக்பர்ஸன் ஆட்சிமுறைச் செலவுகளைக் குறைத்தார். ஆனல் நற்பயன் எதுவும் விளையவில்லை. பணியாளர் ஊதியம் குறைந்த சிக்கனமுறையால் ஒரு கோடி ரூபாய்வரை அரசாங்கத்துக்குக் கிடைத்தது. மற்றைப்படி ஆட்சித் தலைமையை ஏற்கும் தகுதி அவருக்குக்கிடையாது. அவர்காலத்தில் (1786-ல்) ஷோர் என்பார் நிலவரித்திட்டத்தைச் சீர் திருத்தினர். அவர் மாகாணத்தை 35 சிறிய மாவட்டங்களாகப் பிரித்தார். (1787-ல் அவை 23 ஆகக் குறைக்கப்பெற்றன) அவை அக்பருடைய சர்க்கார்களை ஒத்தவை. ஒவ்வொரு மாவட்டமும் ஒரு 'கலெக்டரின் கீழ் வந்தது. அவர், வரிவாங்கும் பொறுப்பையும் வரித்திட்டத்தை அமைக்கும் கடமையையும் பெற்றிருந்தார். கல்கத்தாவிலிருந்த வருவாய்க்குழு, வருவாய்த்துறைக் கழகமாக (ரெவின்யூ போர்டு) மாற்றப்பட்டது. (இவ்வாறு தான் நம்கால ரெவின்யூ போர்டு தோன்றியது). கலெக்டர்களை மேற்பார்வை செய்யும் அதிகாரம் அதற்கு உண்டு. இதை அடிப்படையாகக் கொண்டுதான் பிறகு நிலையான நில வரித்திட்டம் அமைந்தது.* ஆகவே, திவானியை ஆங்கிலேயர் பெற்றதிலிருந்து 20 ஆண்டுகட்குப்

* 2, பக். 38-40.

பின்னரே சிறப்புவாய்ந்த ஒரு நிலவரித் திட்டம் அமைந்ததைக் காண்கிரேம்.

காரன்வாலிஸ் வாழ்க்கையின் முற்பகுதி : சார்லஸ் காரன்வாலிஸ், 1738-ல் எர்ல்கோமான் காரன்வாலிசுக்கு மகனுகப் பிறந்தார். அவர் ஒரு போர் வீரராகிச் சில ஆண்டுகள் ஐரோப்பாவில் சுற்றிவந்தார் ; சிலகாலம் அவர் இத்தாலி நாட்டில் ஒரு இராணுவக் கழகத்தில் தங்கியிருந்தார் ; 1760-ல் காமன்ஸ் சபை உறுப்பினரானுர் தம் தந்தை இறந்தபின் அவருடைய எர்ல்கோமான் பதவி காரன்வாலிசுக்குக் கிடைத்தது. லார்டுகள் சபையில் அவர் அமெரிக்கா நாடுகளில் வரிவிதிக்கும் கொள்கையை எதிர்த்தார். அவ்வாறிருந்தும் 1776-ல் அமெரிக்காவில் ஆங்கிலப்படைத் தலைவராக அவர் பணியாற்ற நேர்ந்தது. முதலில் அவர் வெற்றிபெற்றபோதிலும் 1781-ல் யார்க் டவுனில் அவருக்குப் பெருந்தொல்வி கிடைத்தது. அதன் விளைவாக அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் உரிமை பெற வழி ஏற்பட்டது. அத்தோல்வியால் காரன்வாலிசின் புகழ் குறையவில்லை. இங்கிலாந்தின் அரசியலார் அவருக்கு ஆதரவுகாட்டினர். அவர் ஒரு சிறந்த தானைத் தலைவர் என்ற நம்பிக்கை அவர்களிடமிருந்தது. பேராற்றலும் நுண்ணிய அறிவும் அவரிடமிருந்ததால் 1782-ம் ஆண்டிலேயே அவருக்கு வில்லியம் கோட்டையின் கவர்னர்-ஜெனரல் பதவியை அளிக்க அதிகாரிகள் முன் வந்தனர். ஆனுல் அதை அவர் ஏற்க மறுத்துவிட்டார். மீண்டும் 1785-ல் அவரை அப்பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டினர். அப்பொழுதும் மறுத்துவிட்டார், 1786-ல் மூன்ரும் முறைதான் அவர், சில நிபந்தனைகளின் பேரில் அப்பதவியை ஏற்ருர்.

கவர்னர்-ஜெனரலின் நிலை : காரன்வாலிஸ், 1786-ல் ஆண்டு செப்டம்பர் மாதம் கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்தார். அவர் விதித்த நிபந்தனைகளின்படி 1786-ல் பிட் இந்தியச் சட்டத்தில் சில மாறுதல்கள் புகுத்தப்பட்டன. ஆலோசனைசபை, தமக்கு மாருய்க்கருத்தைத் தெரிவித்

தால், இன்றியமையாததாயின் அதை மீறித் தம் விருப்பப் படிச் செயலாற்ற கவர்னர்-ஜெனரலுக்குஅதிகாரம் வழங் கப்பெற்றது. மேலும் கவர்னர்-ஜெனரலாகவும் படைத் தலைவராகவும் இருந்தார். 1791-ல் அவருடைய அதி காரங்கள் மீண்டும் பெருகின. தவிர, அவருக்கு இங்கி லாந்தின் பிரதம அமைச்சர், மேற்பார்வைக் குழுவினர் முதலியோரின் ஆதரவு மிகுதியாக இருந்தது. இயக்கு நர்களுக்கு அவரிடம் மிக்க நம்பிக்கை இருந்தது. அவர் களுடைய விருப்பத்திற்கிணங்கவே காரன்வாலிஸ் இந்தி யாவுக்கு வந்தார். இத்தகைய சிறந்த சூழ்நிலை வாய்ப் பினைப் பெற்றதனோடு அவர் இயல்பும் போற்றத்தக்கது. கடமை உணர்ச்சி, உழைப்பில் விருப்பம், நேர்மைப்பண்பு, உறுதி, தன்னலமற்ற சேவை உணர்வு முதலிய குணப் பண்புகள் அவரிடம் குடிகொண்டிருந்தன. இதனால் அவர் ஆட்சிமுறையில் நிலையான தொண்டினைப் புரிந்து புகழ் பெற்றார். அவர், இயக்குநர்களின் அறிவுரைகளையும் பிட் இந்தியச் சட்டத்தின் பிரிவுகளையும் உணர்ந்து தமது உறுதியான கருத்துக்களையும் பயன் படுத்தி நிலையான நிலவரித் திட்டம், முதலிய பல சீர்திருத்தங்களை நிறை வேற்றினர். வலியப் போர் தொடங்காக் கொள்கையை அவர் விரும்பி ஏற்றார். ஆனால், இந்தியாவிலிருந்த சூழ் நிலை அவரைப் பிற உள்நாட்டுச் செய்திகளிலும் ஓரளவு தலையிடும்படி தூண்டியது.

———

பகுதி 2

திப்பு சுல்தானும் மூன்றுவது மைசூர்ப் போரும் (1790—2)

1784-க்குப் பின் திப்புவின் செயல்கள் : மங்களூர் உடன்படிக்கை திப்புவின் செருக்கைப் பெருக்கியது. மத மாற்றம் செய்வதில் அவர் முனைந்தார். குடகில் எழுந்த கலகத்தை அடக்கியபின் அங்கிருந்த பலரை முகம்மதிய ராகச் செய்தார். 1786-ல் அவர் சுல்தான் பட்டத்தைச் சூட்டிக்கொண்டார். நிஸாமையும் மராட்டியரையும் வென்ற பின் ஆங்கிலேயரைத் தாக்கவேண்டுமென்பதே அவர் திட்டம் ஆகும். 1779-ல் ஆங்கிலேயருக்குப் பகையாக அவர் மராட்டியருடன் சேர்ந்ததற்குப் பரிசாக துங்கபத்திரையி லிருந்து கிருஷ்ணு ஆறுவரை உள்ள நிலப்பகுதியை மைசூருடன் இணைக்கும் உரிமை பெற்றுர். தார்வார் மாவட்டத்திலுள்ள நர்குந்த்தின் தலைவரைத் திப்பு மேலும் மேலும் கப்பம் செலுத்துமாறு துன்புறுத்தி வந்தார். அதைப் பொருத அவர், நாஞபட்னிஸ்ஸிடம் உதவி வேண்டி முறையிட்டார். சினங்கொண்ட திப்பு நர்குந்த் தலைவரைச் சூழ்ச்சியால் வென்று அவரையும் அவர் குடும் பத்தினரையும் விரட்டி விட்டார். அவருடைய மகளை மட்டும் திப்பு தமது உவளகத்தில் கட்டாயப்படுத்திச் சேர்த்துக்கொண்டார். பெல்காம் மாவட்டத்திலுள்ள கிட் டூரையும், சுல்தான் சூழ்ச்சியால் கைப்பற்றிக்கொண்டார். கிருஷ்ணுவுக்கும் துங்கபத்திரைக்கும் இடையிலிருந்த பல இந்துக்களை அவர் முகம்மதியராக்கும் செயலில் ஈடு பட்டார். அதை விரும்பாத பலர் தற்கொலை புரிந்து கொண்டனர். நாஞபட்னிஸ் திப்புவை எதிர்க்க ஆங்கி லேயரின் உதவியை நாடினுர். ஆனுல் உதவி கிடைக்க வில்லை. ஆகவே அவர் நிஸாமுடன் கூட்டுறவு அமைத் துக்கொண்டார். மராட்டியருக்கும் திப்புவுக்கும் போர் தொடங்கியது. ஆனுல் இருதிறத்தாரும் ஒரு முடிவு ஏற்

படும்வரை போர் செய்யவில்லை. விரைவில், (1787-ல்) அவர்களிடை ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது. அதனால் மராட்டியருக்குச் சில நிலப்பகுதிகள் கிடைத்தன. நிஸாமுக்கு அதோனி கிடைத்தது. அதன்பின் திப்பு பல கோயில்களைக் கொள்ளையடித்துப் பலரை மதம் மாறச் செய்தார். அவர் 1785-ல் கான்ஸ்டாண்டிநோபிளுக்கும் 1787-ல் பாரிஸுக்கும் தூதுக்குழுவினரை அனுப்பினர். அச்செயல், ஆங்கிலேயருக்குப் பகையாகத் தம்மை வலிமைப் படுத்திக்கொள்ளும் அவருடைய அரசதந்திர முறையைக் காட்டுகிறது. ஆனால் அத்தூதுக் குழுக்களால் அவர் எதிர்பார்த்த நற்பயன் ஒன்றும் விளையவில்லை.

மூன்றாவது மைசூர்ப் போர்: (1790 – 2) திப்புவின் வலுக்கட்டாயச் செயல்களைக் கண்ட காரன்வாலிஸ் முன்னெச்சரிக்கையாகவே இருக்க முற்பட்டார். சுல்தானின் செயல்கள் இந்தியாவில் மட்டுமல்லாமல் உலக நிலையிலேயே சிக்கல்களை உண்டுபண்ணுமென்று அவர் உணர்ந்தார். 1768-ம் ஆண்டு உடன்படிக்கையில் குண்டூரை ஆண்டு வந்த பஸலத் ஜங் இறந்த பின்பு அதை ஆங்கிலேயர் பெறுவது என்று கண்டிருந்தது. 1782-ல் பஸலத் இறந்தார். உடனே நிஸாம் குண்டூரை ஆங்கிலேயருக்குக் கொடுக்காமல் ஏதோ சில காரணங்களைக் காட்டி வந்தார். குண்டூரை அவர்கள் பெறுவதற்கு அவர்கள் நிறைவேற்ற வேண்டிய வேறு ஒரு கடமையையும் நிஸாம் சுட்டிக் காட்டினர். அதாவது அவரிடமிருந்து ஐதர் கைப்பற்றிய சில மாவட்டங்களை அவர் மீட்டுக்கொள்ள ஆங்கிலேயர் உதவ வேண்டுமென்பதாம். அவ்வாறிருக்கையில் 1769-ம் ஆண்டின் சென்னை உடன்படிக்கையின் படியும் 1784-ம் ஆண்டின் மங்களூர் உடன்படிக்கையின் படியும், மைசூர் சுல்தான், தமது ஆட்சிக்குட்பட்டதாகக் கூறிய நிலப் பகுதிகள் மீது, பாராட்டிய உரிமையை ஆங்கிலேயர் ஏற்றுக் கொண்டனர். இவ்வாறு காரன்வாலிஸ் ஒரு சிக்கல் நிறைந்த நிலைமைக்குள்ளாகியிருந்தார். அதனைத் தீர்க்க அவர் 1788-ல் நிஸாமுடன் புதிய

உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டார். பிட் இந்தியச் சட்டப்படி காரன்வாலிஸ் தாமே போரை மேற்கொள்ளக்கூடாது. எனினும் கம்பெனிக்குப் பகையாக வுள்ள எந்த அதிகாரத்தையும் எதிர்க்க நிஸாமுக்கு அவர் படை உதவி செய்வதாகக் கூறினர். அதே சமயத்தில் ஆங்கிலேயருடன் நேசமாயிருப்போரின் பட்டியலிலிருந்து திப்புவின் பெயரை அகற்றி விட்டார். நிஸாம் குண்டூரை ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிட்டார். திப்புவுக்கு அச்செயல்கள் காரணமாகச் சினம் மூண்டது.

திப்புப் போரிட முற்பட்டார். 1789-ல் திருவாங்கூரைத் தாக்கினர். மங்களூர் உடன்படிக்கையின்படி திருவாங்கூர் ஆங்கிலேயரின் பாதுகாப்பில் இருந்தது. கிராங்கனூர், ஆயக்கோட்டை ஆகிய இரண்டு இடங்களையும் திருவாங்கூர் அரசர் தம்மிடம் ஒப்படைக்க வேண்டுமென்பதே திப்புவின் கோரிக்கை. அவைகளை டச்சுக்காரரிடமிருந்து திருவாங்கூர் அரசர் வாங்கியிருந்தார். அவ்விடங்கள் கொச்சி அரசருக்கு உரியன வென்றும் அவர் தமது மானியக்காரர் என்றும் அவைகளை அவர் டச்சுக்காரருக்கு விற்க முடியாதென்றும் திப்பு வாதிட்டார். அக்காரணத்தினல் திருவாங்கூரின் காவல் வரிசைகளை அவர் தாக்கினர். அவ்வரிசை 30 மைல் நீளமுள்ளது. ஆனல் அது தோல்வியில் முடிந்தது. திப்பு கம்பெனிக்குப் பகையாகப் போர் தொடுத்துவிட்டதாகவே காரன்வாலிஸ் கருதினர். சென்னை அரசியலாருக்குப் போர் முன்னேற்பாடுகளைச் செய்யுமாறு ஆணை விடுத்தார். ஆனல் வலிகுன்றியிருந்த சென்னை அரசாங்கம் அவ்வாணைக்குக் கீழ்ப்படிந்து எதுவும் செய்யவில்லை. அதன் விளைவாக, ஹாலந்து என்ற சென்னை கவர்னர் பதவியினின்று விலக நேர்ந்தது ; பம்பாயிலிருந்த தளபதி மெடோஸ் என்பார் புதிய கவர்னரானர் அவரைச் சென்னை கவர்னராகவும் படைத் தலைவராகவும் காரன்வாலிஸ் அமர்த்தினர். (1790 – 2). திப்பு மீண்டும் திருவாங்கூரைத் தாக்கிக் கிராங்கனூரைக் கைப்பற்றிக் கொண்டார். காரன்வாலிஸ்

மராட்டியருடனும் நிஸாமுடனும் முக்கூட்டுறவு அமைத்துக் கொண்டு மைசூர்ப் படையை எதிர்க்கத் தொடங்கினூர். மெடோஸ், கோயம்புத்தூர், திண்டுக்கல், பாலக்காடு முதலிய இடங்களைக் கைப்பற்றிக் கொண்டார். ஆனால் விரைவில் முன்னேறி வந்த திப்புவின் படை ஆங்கிலேயரை மைசூர்ப் பீடபூமியில் விரட்டியடித்தது. சென்னைப் படையும் வங்காளப் படையும் ஒன்று சேர்ந்தன. பம்பாயிலிருந்தும் படை உதவி கிடைத்தது. ஆங்கிலேயர், திப்புவின் தானைத் தலைவர் ஹுசெய்ன் அலியை கள்ளிக் கோட்டையில் முறியடித்தனர். திப்பு, கருநாடகத்தில் படையெடுத்து திருவண்ணாமலையை 1791-ல் தம் வசப்படுத்தினார். அவர் புதுச்சேரி கவர்னரின் மூலம் பிரெஞ்சு மன்னர் 16-ம் லூயிக்கு விடுத்த தூது நற்பயனளிக்கவில்லை. காரன்வாலிஸ் சென்னைக்கு வந்து தீவிரமாகப் போர் நடத்த முற்பட்டார். அவர் வேலூரிலிருந்து புறப்பட்டுப் பங்களூருக்குச் சென்று அதைக் கைப்பற்றினார். திப்பு அப்போரில் தோல்வியடைந்தார். ஆனால் உணவுத்தேவை, படைச்சாதனங்களின் குறைவு முதலியன காரணமாக காரன்வாலிஸ் முன்னேறமுடியாமல் பின்வாங்கினார். நிஸாம் படைகளும் அவ்வமயம் அவருடன் சேர்ந்ததால் உணவுப் பொருள் தேவை மிகுதியாயிற்று. மராட்டியரிடமிருந்து தக்க சமயத்தில் உதவி கிடைத்தது. மேலும் அபர்க்ராம்பி என்பாரின் தலைமையில் மற்றொரு ஆங்கிலப்படை காரன்வாலிசுக்கு உதவி செய்தது. ஆகவே அவர் முன்னேறிப் பாராமஹால் கோட்டைகளைத் தம்மடிப்படுத்தினார். 1792-ல் காரன்வாலிஸ் தக்க பாதுகாப்புடன் தமது மூன்றாவது படையெழுச்சியைத் தொடங்கிச் சீரங்கப்பட்டணத்தை முற்றுகையிட்டார். திப்பு அச்சங் கொண்டு, காரன்வாலிசுக்குப் பணிந்து அவர் கூறும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள உடன்பட்டார்.

சீரங்கப்பட்டண உடன்படிக்கையின்படி திப்பு, தமது இராச்சியத்தில் பாதியை இழந்தார். போர்ச்செலவுக்காக மூன்றுகோடி ரூபாய் கொடுத்துவிட இசைந்தார். மேலும்

தமது இரண்டு குமாரர்களேயும் ஆங்கிலேயரிடம் பிணே யாகக் கொடுத்தார். போரில் நிஸாமின் படைகளால் காரன்வாலிசுக்கு நற்பயன் எதுவும் கிடைக்கவில்லே. மராட்டியர் அளித்த உதவியும் மிகுந்த சிறப்பு வாய்ந்த தன்று. எனினும் முக்கூட்டுறவு உடன்படிக்கைப்படி புதிதாகக் கிடைத்த நிலப்பகுதிகளே மூவரும் சரிசமமாகப் பிரித்துக்கொள்ளக் காரன்வாலிஸ் உடன்பட்டார். போர்ச் செலவுத்தொகையாகப் பெற்ற பணத்தையும் மூவரும் பிரித்துக்கொண்டனர். துங்கபத்திரைக்கு வடக்கில் உள்ள பகுதியை மராட்டியர் பெற்றனர்; நிஸாமுக்கு அந்த ஆற்றுக்கு வடக்கிலும் தெற்கிலும் உள்ள சில இடங்கள் (கடப்பை உட்பட) கிடைத்தன. ஆங்கிலேயர், திண்டுக் கல், பாராமஹால், மலேயாளம் என்ற பகுதிகளேப் பெற் றனர். குடகு திப்புவிடமிருந்து கைப்பற்றப்பட்டது. அதன் அரசர், ஆங்கிலேயரின் மானியக்காரராளுர். சுல்தானின் அதிகாரங்கள் மிகுதியாகக் குறைக்கப்பட்டன. அவர் கொடுக்கவேண்டிய தொகை முழுவதையும் பெற்றுக் கொண்டபின் 1794-ல் ஆங்கிலேயர் திப்புவின் குமாரர் களே அவரிடம் அனுப்பினர். திப்புவை அடியோடு அழித்திருந்தால் மறுபடியும் ஒரு மைசூர்ப் போர் ஏற்பட்டி ராதென்றும் அவ்வாறு செய்யாதது காரன்வாலிஸ் இழைத்த தவறு என்றும் சிலர் கருதுகின்றனர். ஆளுல் அது நேர்மையான செயலன்று.

சுற்றரண் காப்புக்கொள்கை: சுற்றரண் காப்புக் கொள்கையே மிகவும் சிறப்புடையதென்பது காரன் வாலிசின் கருத்தாகும். இந்தியாவிலிருந்த பெரிய நாடு களேச் 'சக்திச்சமநிலே'க் கொள்கையின் அடிப்படையில் அமைத்துப் பிரிட்டிஷ் இராச்சியத்தை நிலேபெறச் செய்ய வேண்டுமென்று அவர் விரும்பிளுர். நடைமுறை நிலே மையை மாற்றும் நாட்டம் அவருக்கு இல்லே. ஆளுல் திப்புவின் வலுக்கட்டாயச் செயல்கள் காரணமாக அவர் தலேயிடாக்கொள்கையைப் பின்பற்ற இயலாது என்பதை உணர்ந்தார். அதளுல் அவர் முக்கூட்டுறவை அமைத்

ததைக் கண்டோம். மைசூர்ப் போருக்குப் பிறகு வென்ற நாடுகளைச் சரிசமமாகப் பிரித்த அவரது செயலும் நோக்கத்தக்கது. வலியப் போர் தொடுக்காமல் இருக்கும் கொள்கையை அவர் ஆதரித்தார். அயோத்தியின் நலங்களுக்கு ஊறு செய்யத்தக்க எந்தச்செயலையும் மேற் கொள்ளக்கூடாது என்றும் அவ்வாறு செய்தால் கம் பெனியார் அதைத் தமக்குப் பகையாகச் செய்யப்பட்ட தாகக் கொள்வர் என்றும், கவர்னர்-ஜெனரல் மகாதஜி சிந்தியாவுக்கு எச்சரிக்கை விடுத்தார். ஆகவே, காரன் வாலிஸ், தலையிடாக்கொள்கையை வன்மையாக ஆதரித்த போதிலும், குறுகிய முறையில் அதற்கு விளக்கம்கூறி ஆங்கிலேயரின் பெருமைக்கு இழுக்கு நேருமாறு செய் வதை அவர் விரும்பவில்லை. அவர் நிகழ்த்திய மைசூர்ப் போரை 1793-ல் பிலிப் பிரான்ஸிஸ் கண்டித்தார். ஆனல் பார்லிமெண்ட்டு அப்போர் முறையானதே என்று அதனை ஏற்றுக்கொண்டது. காரன்வாலிசைப் பாராட்டும் வகை யில் அரசர் அவருக்கு 'மார்க்குவிஸ்' என்ற பட்டம் வழங் கினர். அக்கவர்னர்-ஜெனரலின் அறிவுத்திறமையிலும் நேர்மையான நடத்தையிலும் தாய்நாட்டினருக்கு மிக்க நம்பிக்கை இருந்தது.

பகுதி 3

கருநாடகம், அயோத்தி, நேபாளம்

தஞ்சாவூர் : 1787-ல் காலஞ்சென்ற தஞ்சை அரசரின் உடன்பிறந்தாரான அமரசிங்குக்கும் (1787—99) அரசரது தத்து மகனை சரபோஜி என்பாருக்கும் அரசுரிமைப்போரட்டம் ஏற்பட்டது. காரன்வாலிஸ் அச்செய்தியைச் சென்னை அரசியலார் பரிசீலனை செய்யுமாறு ஆணையிட்டார். வாரிசு உரிமையை நிர்ணயிக்கச் சென்னை அரசாங்கம் தஞ்சாவூர் பண்டிதர்களைக்கொண்ட ஒரு குழுவை அமைத்தது. அக்குழுவின் கருத்திற்கிணங்க அமரசிங்தான் அரசுரிமையைப் பெறவேண்டும் என்று தீர்மானமாயிற்று.

நவாப் வாலாஜா : 1787-ல் சென்னை அரசியலார் வாலாஜா முகம்மது அலியுடன் ஒரு புதிய உடன்படிக்கையைச் செய்து கொண்டனர். அதனுல் நற்பயன் எதுவும் விளையவில்லை. முன்பு போலவே பொருள் நெருக்கடி அவருக்கு இருந்துவந்தது. மூன்ருவது மைசூர்ப்போர் காலத்தில், கருநாடக வரிகளைக் கவர்னர்-ஜெனரல் வாங்கிக்கொண்டார். 1792-ல் அவர் நவாப்புடன் புதியதோர் உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி போர்க்காலத்தில் மட்டும் கருநாடகக் கண்காணிப்பு முழுவதையும் ஆங்கிலேயரிடம் ஒப்படைக்க நவாப் உடன்பட்டார். மேலும் ஆங்கிலப்படை யொன்றின் செலவுக்காக ஆண்டுதோறும் நவாப் ஒரு நிலையான தொகையைச் செலுத்தவும் ஒப்புக்கொண்டார். ஆனுல் இந்த உடன்படிக்கை நவாபின் திறமையின்மையால் முழுவதும் நிறைவேறவில்லை. அவருக்கு மீண்டும் முன்புபோல கடன் தொந்திரவுகள் ஏற்பட்டன. நவாப்பின் சிக்கல்களை நீக்கக் காரன்வாலிஸ் கூர்ந்த அரசியல் அறிவுடன் எதையும் செய்யவில்லை. அவர் ஐரோப்பாவுக்குப் புறப்

பட்டுப் போகுந் தறுவாயில் (1793) இங்கிலாந்துக்கும் பிரான்சுக்குமிடையே போர் மூண்டதால், புதுச்சேரி முதலிய பிரெஞ்சுப்பகுதிகளை ஆங்கிலேயர் கைப்பற்றினர்.

அயோத்தி : காரன்வாலிஸ் அயோத்தியின் பொருள் நிலையைச் சீர்திருத்துவதில் கருத்துச் செலுத்தினர். ஆங்கிலேயரைத் தவிரப் பிற ஐரோப்பியர், நவாப்பிடமிருந்து எவ்வித நலனையும் அடையாதவாறு அவர் ஏற்பாடுகள் செய்தார். அங்கே தலைமை அமைச்சராக இருந்த ஐதர் பெக் கான் ஆற்றல் வாய்ந்தவர். ஆதலால் காரன்வாலிஸ் அவரிடம் நம்பிக்கைகொண்டிருந்தார். ஆனால் நவாப் அஸப்-உத்-தௌலா தீநெறியிற் சென்று பொருளை வீணாக்கி வந்தார். குடிகளிடமிருந்து பெற்ற பொருளை அவர் ஆடம்பர வாழ்க்கைக்காகவும் தீய செயல்களுக்காகவும் பயன்படுத்தி வந்தார்.

நேபாளம் : நேபாளத்தில் சீனர் படையெடுத்ததால் நேபாள அரசாங்கம் ஆங்கிலேயரிடம் உதவி கோரியது. ஆனால் காரன்வாலிஸ் அதற்குச் செவிசாய்க்க வில்லை. ஆனால் கவனர்-ஜெனரல் அந்நாட்டுக்கு ஒரு வாணிகத் தூதுக்குழுவை அனுப்பினர். அது பயனற்றதாயிற்று.

பகுதி 4

நிலையான நிலவரித் திட்டம் (1793)

முன்னேற்பாடுகளும் நிலையான திட்டமும்: வாரன் ஹேஸ்டிங்ஸ் நிலவரி சம்பந்தமான ஐந்து வருட ஏற்பாட்டைத் (Quinquennial Settlement) திட்டமிட்டார். பிறகு வருடாந்திர ஏற்பாடுகளிட்டார். ஆனால் அவை யாவும் நற்பயன் அளிக்கவில்லை. வரித்தொகை நிலையாகக் குறைந்துகொண்டே வந்தது. மக்களுக்கும் அதனால் நன்மை ஏற்படவில்லை. நிலத்தில் சிறிதேனும் பொறுப்பின்றி அரசியலாரை ஏமாற்றிக் குடியானவர்களைத் துன்புறுத்தும் நிலையற்ற நிலவாரக்காரர்களை ஆதரிப்பது தீமை பயப்பதாகும் என்பதை இயக்குநர்கள் நன்கு உணர்ந்தனர். பழைய சமீந்தார்களுடன் நிலையான ஓர் ஏற்பட்டைச் செய்துகொள்வதையே அவர்கள் விரும்பினர். காரன்வாலிஸ், இயக்குநர்களின் அக் கருத்துக்களை அறிந்துகொண்டுதான் இந்நாட்டுக்கு வந்தார். நிலையான ஒரு திட்டத்தை அமைக்குமுன் பத்துவருட ஏற்பாடு ஒன்றைப் புகுத்தலாம் என்பது இயக்குநர்களின் கருத்தாகும். ஆனால் காரன்வாலிஸ் உடனடியாக எதையும் செய்ய விரும்பாமல், அச்செய்தியைத் தக்க முறையில் ஆராய்ந்து, விசாரணைகள் நடத்தி ஒரு ஏற்பாட்டை அமுலுக்குக் கொண்டுவர முற்பட்டார். அவருக்கு, அச்சிக்கலான செய்திகளில் ஜேம்ஸ் கிராண்ட், ஜொனதன் டங்கன், ஷோர், முதலியவர்களின் உதவியும் ஒத்துழைப்பும் கிடைத்தன: ஷோர், 1769-ம் ஆண்டு முதல் வங்காளத்தில் ஒரு சிவில் அலுவலராக இருந்தவர். 1787-ல் வருவாய்த் துறைக் கழகத்தின் (Board of Revenue) தலைவரானார். அவர் திறமைவாய்ந்த ஆட்சி முறை வினைஞர். பொதுக் காரியங்களில் தீநெறியை அறவே வெறுப்பவர்; அவர் 1789 வரை இந்தியாவில் தங்கியிருந்தார். 1787 முதல் 1789வரை நிலவரி சம்பந்தமான ஆராய்ச்சி நடைபெற்றது.

கிராண்ட்டும் ஷோரும் வரித்திட்டம் நிலையாக அமைவதை விரும்பவில்லை. ஆனால் காரன்வாலிஸ் நிலையான அமைப்பையே சிறந்ததாகக் கருதினார். பத்து வருட ஏற்பாடு, குத்தகைக்கு விடுவது போலத்தான் சிறப்பற்றதாயிருக்கும் என்று அம்முறையையும் அவர் ஏற்கவில்லை. "நிலையான திட்டம், சமீந்தார்களுக்கு நம்பிக்கையை அளிக்கும் ; விளைவைப் பெருக்கும்; அரசியலையும் நிலைபெறுவிக்கும்." என்பதை அவர் விளக்கிக் கூறினார். மேலும் இயக்குநர்களின் ஆணையையும் அவர் நிறைவேற்றவேண்டியிருந்தது. அவர் கருத்தை டங்கன் ஏற்றுக்கொண்டார். ஆகவே நிலையான நிலவரித்திட்டம் அமைந்தது. 1790-ல் ஏற்பட்ட புதிய திட்டம் பத்து ஆண்டுகட்கு அமுலில் இருக்குமென்று அறிவிக்கப்பட்டது. தாய்நாட்டு அரசியலாரின் ஒப்புதலைப் பெறவேண்டியிருந்ததால்தான் அவ்வாறு அறிவிக்கப்பெற்றது. 1793-ல் இயக்குநர்களும் மேற்பார்வைக் குழுவினரும் புதிய திட்டத்தை ஏற்றுக்கொண்டதால் அவ்வாண்டு முதல் நிலையான நிலவரித் திட்டம் செயல்முறைக்கு வந்தது. சமீந்தார்களின் சார்பாக இருந்து அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்பது காரன்வாலிசின் கருத்தாகும் என்று நம்பப்படுகிறது. ஆனால் அவரே கூறியிருக்கும் பின்வரும் சொற்றொடர் சிந்திக்கத்தக்கது :— " நிலம், யார் வசமிருந்தாலும் அதைப்பற்றி அரசியலாருக்கு அக்கரை இல்லை; நிலத்தை வைத்திருப்போர் அதை நன்கு பயன்படுத்தவேண்டும்; வரியை ஒழுங்காகச் செலுத்த வேண்டும். இதுதான் அரசாங்கத்தின் நோக்கமாகும்."

இத்திட்டத்தின் உடனடியான விளைவுகள் : இத்திட்டத்தினால் வரி செலுத்துவதில் நிலையான ஓர் ஏற்பாடு அமைந்ததால் அரசியலார் தமக்கு உரிய தொகையைப் பற்றி உறுதியான நம்பிக்கையுடனிருக்க இயலும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதனால் வேளாண்மையைச் சீர்திருத்தவும் வருவாய்த்துறை ஆட்சிமுறையில் செலவுகளைக் குறைக்கவும் முடியும் என்று அரசியலார் எண்ணி

னர். நிலையான வரித்தொகை மிகவும் கூடுதலாக இருப்பதாகச் சமீந்தார்கள் வருத்தம் தெரிவித்தனர். வரி செலுத்தப்படாமல் இருந்தால் அக்குற்றவாளிகளின் நிலங்களை ஏலம் விட்டு அரசியலார் விற்க முடியும் என்று சட்டம் கூறியது. அதைச் சமீந்தார்கள் எதிர்த்தனர். வறுமைக் காலங்களிலும் குடியானவர்கள் கீழ்ப்படியாமல் இருந்தால் அக்காலத்திலும் சமீந்தார்களின் நிலை இடையூறுகட்கு உட்பட்டது. முன் கூறியவாறு நிலங்களை விற்பதில் பல சிக்கல்கள் எழுந்தன. முதலாவதாக அவற்றை வாங்கப் பல சமயங்களில் ஒருவரும் முன்வரவில்லை. ஆகவே வரித்தொகை நிலுவை மிகுதியாக இருந்துவந்தது அத்திட்டம் ஒழுங்காக வளர்ச்சி அடைய ஏறத்தாழ 15 ஆண்டுகள் சென்றன. ஆனால் உழவர்கள், வழக்கமாக உள்ள உரிமைகளைப் பெற்றுவந்தனர். அவர்களுக்குப் போதுமான பாதுகாப்பு சட்டத்தின் மூலம் 19-ம் நூற்றாண்டின் பிற்பாதியில்தான் கிடைத்தது. (1859-ம் ஆண்டின் குடிவாரச் சட்டங்கள்) அரசியலார் தாம் எதிர்பார்த்த குறைந்த அளவு வரித்தொகையை காலப்போக்கில்தான் பெற்றனர். வேளாண்மையில் ஓரளவு பெருக்கம் தோன்றியது. ஆனால் "வேளாண்மை முறையில் உடனடியான நற்பயன் எதையும் நிலையான நிலவரித் திட்டம் விளைவிக்கவில்லை." * மேலும் வருவாய்த்துறை ஆட்சிமுறைச் செலவு சிறிது சிறிதாகப் பெருகியே வந்தது. அதில் சிக்கல்களும் உண்டாயின.

முடிவான பயன்கள் : இப்புதிய திட்டத்தின் விளைவாகச் சமீந்தார்கள் பெருத்த இலாப மடைந்தனர். வரித்தொகையில் பத்தில் ஒரு பங்காக இருந்த இலாபம், பத்தில் ஒன்பது பங்காகப் பெருகியது. இடையிடையே வரித்திட்டத்தை மாற்றுவதால் ஏற்படும் தீமைகள் மறைந்தன. வங்காளம் பொருளாதாரத் துறையில் செழிப்புற்றது. உழவுத் தொழிலின் வளர்ச்சிக்குத் தடையாயிருந்த கட்டுப்பாடுகள் நீங்கின. அரசியலைக் கருதுமிடத்துப் பிரிட்டிஷ்

---

* 2, பக். 80.

ஆட்சிக்குச் சமீந்தார்களின் ஆதரவு கிடைத்தது. அவ்வரசுக்கு அவர்கள் கீழ்ப்படிந்திருப்பதில் மகிழ்ச்சி கொண்டனர். வறுமைக் காலங்களில் பொதுமக்களின் துயரைக் களைவதில் அவர்கள் அரசியலாருடன் ஒத்துழைத்தனர். மேலும் அவர்களது அன்புப் பணிகள் பொருளாதாரச் சமூக வளர்ச்சிக்கு உதவின. ஆனால் புதிய திட்டத்தால் ஏறத்தாழ 300 லட்ச ரூபாய் வருமானத்தை அரசியலார் இழக்கவேண்டியிருந்தது. அதனால் ஏற்பட்ட வரிச் சுமையைப் பொதுமக்கள் ஏற்க நேர்ந்தது. ஆகவே நிலையான நிலவரித் திட்டம் சமீந்தார்களுக்கு நன்மை அளித்தது; உழவரின் உரிமைகளைத் தற்காலிகமாகத் தள்ளி வைத்தது; அரசியலாரின் வருமானத்தைக் குறைத்தது.

சிறப்பும் குறைபாடும்: இந்நிலவரித் திட்டத்தைச் சர் ஜான் மால்காம், மார்ஷ்மேன் முதலியோர் சிறப்பித்துப் புகழ்ந்துள்ளனர். அறிஞர் டட் (Dutt) கூறுவதாவது: பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய மக்களுக்குச் செய்த நன்மைகளில், நிலையான நிலவரித் திட்டம் மிகவும் சிறப்பான ஒன்றாகும்.'' இந்தியாவின் பொருளாதார இடர்ப்பாடுகளுக்கெல்லாம் அத்திட்டம் ஒரு சஞ்சீவி போன்றது என்பார் அவ்வறிஞர். மற்ற மாகாணங்களிலும் அத்திட்டம் ஓரளவு புகுத்தப்பெற்றது. ஆனால் அதற்கு ஹேஸ்டிங்ஸ் பிரபு காலத்திலிருந்தே எதிர்ப்பு வளரத் தொடங்கியது. அந்நிலவரித் திட்டம் வரலாற்று முறையில் மட்டுமே சிறப்பு வாய்ந்தது. பிறரால் பின்பற்றப்படுவதற்கு ஏற்ற சிறப்பு அதனிடம் இல்லை என்பது பேடன் பவல் என்பவரின் கருத்தாகும். அது தோன்றுவதற்கு வங்காளத்தில் காணப்பட்ட துயர நிலைதான் காரணம் என்பது தெளிவு. வங்காளத்தை ஆங்கிலேயர் பெற்றமை ஒரு அருஞ்செயலாகப் புகழப்படுகிறது. ஆனால் அது அவர்களுக்கு ஒரு பெரும் சுமையாக மாறிவிட்டது. நீண்டகால ஆராய்ச்சிக்குப் பிறகும் இடர்ப்பாடுகளை நீக்கத்தக்க ஒரு திட்டம் எளிதில் உருவாகவில்லை. காரன்வாலிசும் இயக்குநர் சபையும் சிக்கல்களை ஒழிக்க ஒரு திட்டத்

தைக் கொணர்ந்தனர். பிரிட்டிஷ் அரசியல் நோக்கத்தின்படி இத்திட்டம் எவ்வாரிருப்பினும் அரசியலாரின் வருமானம் இதனுல் குறைந்தது என்பதனே மனத்திற் கொள்ளவேண்டும். பொருளாதாரத் துறையிலும் தேசீய நோக்க முறையிலும் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரின் சார்பாக நாட்டின் பொது வருமானம் குறைவது சிறப்புடையதன்று. அக்குறிப்பிட்ட வகுப்பினர் வழிவழியாக வரி வசூல் அதிகாரிகளாக இருந்தவர்கள்தான். தவருன முறையில் அவர்கள் நிலக்கிழார் எனக் கருதப்பட்டனர். காரன்வாலிசுக்குச் "சிறப்பான இந்திய ஆட்சிமுறையை நிலேநாட்டியவர்" என்ற புகழ் உண்டு. அப்புகழுக்கு அவர் மற்ற துறைகளில் செய்த சீர்திருத்தங்கள் காரணமேயன்றி அவருடைய நிலவரித் திட்டமன்று.

பகுதி 5

முறைவழங்கலும் பிற சீர்திருத்தங்களும்

முறைவழங்கலும் காவல் அமைப்பும் : ஆட்சி முறையில் சிக்கனத்தைக் கடைப்பிடித்துச் சிக்கல்களை நீக்கித் தூய்மையைப் பெருக்குவதே காரன்வாலிஸ் மேற்கொண்ட சீர்திருத்தங்களின் நோக்கமாகும். நீதித் துறையிலும் காவல் முறையிலும் சீர்திருத்தங்கள் செய்ய அவருக்கு உதவியாயிருந்தவர் சர் வில்லியம் ஜோன்ஸ் என்பாராவர். அவர் ஒரு நீதிபதி ; கீழ் நாட்டுப் பண்பாளர் ; ஆற்றல் வாய்ந்தவர். குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்காகப் புதிய முறையில் அலுவலர் அமர்த்தப் பெற்றனர். இந்தியருக்கும் அதில் பங்கு உண்டு. அச் சீர்திருத்தத்தின் மூலம் கிளைவின் இரட்டை ஆட்சி அடியோடு முடிவடைய வழி ஏற்பட்டது. காரன்வாலிஸ், வரி வாங்கும் அதிகாரத்தையும் சிவில் நீதிமுறையையும் பிரித்து ஒவ்வொன்றுக்கும் தனித்தனி அலுவலரை அமர்த்தினார். சிவில் நீதிமன்றங்களையும் புதிய முறையில் மாற்றி அமைத்தார். கல்கத்தாவில், ஸதர் திவானி அதலத், ஸதர் நிஸாமத் அதலத் என்ற பெயருள்ள இரண்டு உயர் நீதிமன்றங்கள் முறையே சிவில், கிரிமினல் முறையீடுகளை ஆராய்ந்து முடிவு கூறிவந்தன. கவர்னர்-ஜெனரலும் அவருடைய ஆலோசனையாளருமே அவ்விரு நீதிமன்றங்களின் தலைவர்களாவர். அவைகளுக்கு அடுத்தபடியாக கல்கத்தா, டாக்கா, முர்ஷிதாபாத், பாட்னா, ஆகிய இடங்களில் நான்கு அப்பீல் (முறையீடு) நீதிமன்றங்கள் இருந்தன. ஒவ்வொன்றிலும் மூன்று ஐரோப்பிய நீதிபதிகள் முறைவழங்கினர். அவர்களுக்கு உதவிசெய்ய இந்தியச் சட்ட அறிஞர்கள் உண்டு. அம்மன்றங்களுக்குக் கீழாக மாவட்ட நீதிமன்றங்களும் நகர நீதிமன்றங்களும் இருந்தன. ஒவ்வொன்றிலும் ஒரு ஐரோப்பிய நீதிபதி இருந்தார். அவர்களுக்கும் இந்தியச் சட்ட வல்லுநரின் உதவி

உண்டு. நீதிமுறை அமைப்பின் அடித்தளத்தில் முன்சீபுகள் எனப்படும் இந்திய நீதிபதிகள் சிறு குற்றங்களை விசாரணை செய்துவந்தனர். பிரிட்டிஷ் குடிகளைத் தவிர மற்ற யாவரும் மேற்கூறிய நீதிமன்றங்களுக்குக் கட்டுப்பட்டவராவர். பிரிட்டிஷ் குடிகள், தலைமை நீதிமன்றத்துக்குமட்டுமே கட்டுப்பட்டவர்கள். நான்கு மாகாண நீதிமன்றங்களின் நீதிபதிகளும் "சுற்றுமுறைவர்" (Circuit Judges) என்ற முறையில், மாவட்டங்கள்தோறும் நீதிவழங்குவதற்காகச் சுற்றிவந்தனர். மாவட்ட நீதிமன்ற முறைவர்களுக்குக் குற்றவிசாரணை செய்யும் அதிகாரமும் உண்டு. அவர்கள் சிறிய வழக்குகளில் முறை வழங்கினர். மற்ற வழக்குகளில் சுற்றும் நீதிபதிகளின் முன்னர்க் குற்றவாளிகளை விசாரணைக்காக அனுப்பினர். சுற்றும் நீதிபதிகள் இக்காலத்திய செஷன்சு முறைவரை ஒப்பர். மாவட்ட நீதிபதிகளுக்குக் காவல்முறை (போலீசு) அதிகாரமுண்டு. ஒவ்வொரு மாவட்டமும் பல காவல்துறை வட்டங்களாகப் பிரிக்கப்பெற்றது. அவற்றிற்குத் தாணுக்கள் என்று பெயர். ஒவ்வொன்றின் பரப்பு ஏறத்தாழ 20 சதுர மைல்களாகும். அதன் தலைவர் தரோகர் எனப்படும் ஒரு இந்தியராவர். காவல்துறை அமைப்பு திறமை வாய்ந்ததாக இருந்தது என்று கூறுவதற்கில்லை. தரோகருக்கு வரம்பு மீறிய அதிகாரங்கள் இருந்தன. மக்களுக்கு அவரால் மிகுதியான துன்பம் ஏற்பட்டது. நீதிமன்றங்களில், கிரிமினல் வழக்குகளில் சீர்திருத்தப்பெற்ற முகம்மதியச் சட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. சிவில் வழக்குகளில் வழக்காடுவோரின் மதத்துக்கு ஏற்ற இந்து அல்லது முகம்மதியச் சட்டங்களைப் பின்பற்றினர். இந்துவும் முஸ்லீமும் வழக்காடினால் தருமநியாயப்படி நீதிபதி தீர்ப்புக் கூறுவார். ஸர் எலிஜா இம்பே அமைத்த விதிகளின் தொகுப்பைக் காரன்வாலிஸ் செம்மைப் படுத்தினார். சர் வில்லியம் ஜோன்சின் மேற்பார்வையில் சட்டங்கள் தொகுக்கப்பெற்றன. வாரிசு உரிமை, திருமணம் முதலிய செய்திகளில் மட்டுமே இந்தியர் வழக்குகளில் இந்து, முஸ்லிம் சட்டங்கள் பயன்படலாயின.

வாணிகக் கழகம்: 1774 முதல் கம்பெனியின் வாணிக முதலீடுகளை வாணிகக் கழகம் (Board of Trade) செயலாட்சி புரிந்துவந்தது. 1786வரை அதில் 11 உறுப்பினர்கள் இருந்தனர். அதன்பின் ஐவர் மட்டுமே இருந்தனர். 1787-ல் காரன்வாலிஸ், சார்லஸ் கிராண்ட்டின் உதவி கொண்டு அத்துறையில் காணப்பட்ட கேடுகளை நீக்கினார். நெசவாளரும் இந்தியத் தொழிலாளிகளும் அதனால் நன்மை பெற்றனர். கவர்னர் - ஜெனரலின் வாணிகக் கழகச் சீர்திருத்தங்கள் நிலையான நற்பயனை அளித்தன. கம்பெனியின் வாணிகப்பகுதியின் பணியாளர் யாவரும் அக்கழகத்துக்குக் கீழ்ப்படியவேண்டியதாயிற்று. தலைமை ஆலோசனைக்குழு வாணிகக் கழகத்தைக் கட்டுப்படுத்தியது. காரன்வாலிஸ் நேர்மையான பணியாளருக்குக் குறைவின்றி ஊதியம் அளித்துவந்ததால், கைக்கூலி வாங்குதல் முதலிய கேடுகள் பெரும்பாலும் நீங்கின.

சிவில் பணித்துறைச் சீர்திருத்தம்: சிவில் அலுவலர் துறையைத் தூய்மைப்படுத்தியது, காரன்வாலிஸ் செய்த சீர்திருத்தங்கள் யாவற்றிலும் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். அவர், ஆற்றலும் நேர்மையும் பொருந்திய பணியாளரையே அமர்த்திவந்தார். சிவில் பணித்துறையில் பழைய கொள்கைகள் அடியோடு மறைய வேண்டுமென்பதே அவருடைய தீர்மானமாகும். முன்னர், கம்பெனியின் பணியாளருக்கு ஊதியம் மிகக் குறைவு; ஆனால் வரி வாங்கித்தருவதில் அவர்களுக்குத் தரகு உண்டு; தனிப்பட்ட முறையில் வாணிகத்தையும் அவர்கள் செய்துவந்தனர். தவிர, தங்களுடைய உறவினர் பெயராலும் நண்பர்கள் பெயராலும்கூட வாணிகம் நடத்திவந்தனர். தங்கள் நலன்களைப் பெருக்கிக்கொள்வதற்காக, அவர்கள் தமது பணித்துறைச் சார்பான அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொண்டனர். ஊதியம் குறைவாகவும் மேல்வரும்படிக்கான வாய்ப்புக்கள் மிகுதியகாவுமிருந்ததால் மேற்கூறிய தீமைகள் ஏற்

பட்டன. வாரணசியில் 'ரெஸிடெண்ட்' ஆக இருந்தவர் ஆண்டுக்கு 12,000 ரூபாய் முறையான ஊதியத்தையும் 4 லட்ச ரூபாய் அளவுள்ள தனிப்பட்ட வருமானத்தையும் ஓரளவு மேல்வரும்படிகளையும் பெற்றுவந்தார் என்பது ஈண்டு நினைவுகூரத்தக்கது. அக்கேடுகளை ஒழிக்கக் காரன்வாலிஸ், வங்காளத்திலிருந்த கம்பெனிப் பணியாளருக்குப் போதுமான ஊதியத்தைக் கொடுத்து வருமாறு இயக்குநர்களைத் தூண்டினர். மேலும் தகுதிக்குத் தக்கவாறே அவர் பதவிகளையும் வழங்கினர். இங்கிலாந்தின் இளவரசரும் (பிற்கால IV-ம் ஜார்ஜ்) இயக்குநர்களும் பரிந்து உரைத்த சில செய்திகளை அவர் அடியோடு புறக்கணித்துவிட்டுத் தமது நேர்மைக் கொள்கையை நிலைநிறுத்தினர். பணித்துறை திறமை மிக்க வேண்டுமாயின் இந்தியர்களை அதனின்று இயன்ற வரை விலக்குதல் இன்றியமையாததாகும் என்பது காரன்வாலிசின் கருத்து. ஆதலால் அரசியலில் பெரிய பதவிகள் இந்தியருக்குக் கிடைக்கவில்லை. இந்நாட்டு மக்களுக்குப் போதுமான ஊதியமும் கொடுக்கப்படவில்லை. 1786 முதல் 1788 வரை காரன்வாலிஸ் விடாமுயற்சியும் பேரூக்கமும் கொண்டு உழைத்ததின் விளைவாகப் பணியாளர் தகாதமுறையில் பொது மக்களிடமிருந்து பணத்தைச் சம்பாதித்துக் கொள்ளும் தீமை ஒழிந்தது. அவர், கம்பெனியின் பணித்துறையை, வாணிகம், முறைவழங்கல், வரிவசூல் என்ற முப்பகுதிகளாகப் பிரித்தார். கலெக்டர்களின் முறைவழங்கும் அதிகாரத்தை நீக்கினர். ஆட்சிமுறையில் கலெக்டர்களின் நிலை மிக உயர்வாக இருந்தது. அவர்களுக்கு வரிவசூல் அதிகாரம் மட்டும்தான் இருந்தது. நிலையான நிலவரித் திட்டமியற்றும் அலுவல் எதுவும் அவர்களுக்குக் கிடையாது அவர்கள் வருவாய்த்துறைக் கழகத்திற்கும் (ரெவின்யூ போர்டு) முடிவாக ஆலோசனைக் குழுவுடன் கூடிய கவர்னர்-ஜெனரலுக்கும் கீழ்ப்படிந்தவர்களாயினர். அவர்களின் அரசியல் நிலை தெளிவாக அமைக்கப்பட்டிருந்தது. அப்பதவியின் பெருமையும் உயர்ந்தது. பலர் அப்பத

வியை நாடினர். அவர்கள் அலுவல் குறைந்தது ; ஆனால் ஊதியம் பெருகிற்று. காரன்வாலிஸ் காலத்தியச் சீர் திருந்திய ஒப்பந்தப் பணித்துறை முறையினின்று தோன்றி வளர்ந்ததே இக்காலத்து இந்திய ஆட்சிப்பணி (I. A. S.) ஆகும்.

காரன்வாலிஸ் சட்டத்தொகுப்பு : 1793-ம் ஆண்டுச் சட்டதிட்டங்களைத் தொகுத்ததின் மூலம் "**காரன் வாலிஸ் சட்டத்தொகுப்பு**" தயாராகியது. இது ஆட்சிமுறை, நீதிபரிபாலனம், காவல்முறை, வாணிகம், நிதி முதலிய பல செய்திகளையும் நிறைவான அளவுக்குத் தன்னுள் அடக்கியது. ஆட்சிமுறையையும் சிவில் நடைமுறையையும் அரசியலாரின் அதிகார முறையையும் இது தெளிவாக விளக்கியது. இதை ஜார்ஜ் பார்லோ என்பார், இம்பேயின் நடைமுறை விதித்தொகுப்பின் துணை கொண்டு தயாரித்தார். நீதிவழங்கும் முறை, வருவாய்த் துறையினின்று பிரிக்கப்படும் அதிகாரப் பிரிவினைக் கொள்கையை அத்தொகுப்பில் நாம் காண்கிறோம். மேலும் சட்ட ஆதிக்கக்கொள்கை (Principle of Rule of Law) காரன்வாலிஸ் காலத்தில் தோன்றியது. அதாவது எவ்வளவு பெரிய அலுவலராக இருந்தபோதிலும் சட்டப்படி அவர்கள்மீது குற்றஞ்சாட்ட யாவருக்கும் உரிமை உண்டு என்பதாம். நிர்வாக அதிகாரிகள் சட்ட வரம்பை மீறாமல் கட்டுப்படுத்தப் பெற்றனர். இவ்வாறு காரன்வாலிஸ், 18-ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் போற்றப்பட்டு வந்த அதிகாரப் பிரிவினைக் கொள்கையையும், ஆங்கில நாட்டு நீதி முறையின் அடிப்படைக் கொள்கையையும் வங்காள நாட்டுக்கு அளித்தார். ஆனால் அதே சமயத்தில் அவர் இங்கிலாந்தின் பழைய குடியேற்ற முறைக் கொள்கையையும் வங்காளத்தில் ஓரளவு பின்பற்றினார் என்பதும் குறிக்கத்தக்கது; அதாவது அயல் நாட்டவர் ஆங்கிலப் பேரரசின் நலனுக்காகச் சுரண்டப்படும் கொள்கையே இதுவாம்.

ஆட்சிமுறையின் குறைபாடுகள் : சட்டத்தொகுப்பானது சட்டங்களை விளக்கிக் கூறியது; ஆனால் சட்டத்தைச் செயல்முறையில் கொண்டுவரும் பணியாளர் தொகுதியைப் பற்றிக் காரன்வாலிஸ் போற்றத்தக்க கருத்தைப் பெற்றிருக்கவில்லை. வெறும் சட்டங்களினால் மட்டும் ஒழுங்கான நீதி அமைந்துவிட முடியாது. காவல் துறை திறம்பட அமையவில்லை. பொதுமக்கள் அதனால் இன்னலுற்றனர். ஆட்சிமுறையின் உயர்தரப் பணிகளிலிருந்து இந்தியர்களை விலக்கியது, காரன்வாலிஸ் இழைத்த பெருந்தவறாகும். அவர்கள் அப்பணிகளுக்கேற்ற தகுதி வாய்ந்தவர் அல்லர் என்பது அவர் கருத்தாகும். ஆதலால் ஆட்சி முறையின் ஒருபகுதி (கீழான பகுதி) சீர்திருத்தப்படாமல் இருந்தது. சிறு அலுவலாளருக்குப் போதுமான ஊதியம் கிடையாது. அவர்களுக்கு ஊக்கமளிக்கவும் காரன்வாலிஸ் விரும்பவில்லை. அந்நிலையில் அவர்களிடம் நேர்மையை எதிர்பார்ப்பதற்கில்லை. சில இந்திய அலுவலாளருக்கு மாத ஊதியம் ரூ. 7000 கொடுப்பது மிக அதிகமானது என்று கருதுவதற்கில்லை என்று வாரன் ஹேஸ்டிங்ஸ் கூறினார். ஆனால் காரன் வாலிசோ, இந்தியர் மாதமொன்றுக்கு ரூபாய் ஐம்பதுக்கு மேல் பெறுவதற்குத் தகுதிவாய்ந்தவரல்லர் என்று கருதினார். தரோகருக்கு மாதஊதியம் ரூபாய்25. தவிர,அவர் கைப்பற்றிய கொள்ளைக்காரன் குற்றவாளி என்பது உறுதியானால் அவருக்கு அதன் பொருட்டு பத்து ரூபாய் கிடைக்கும். மேலும் திருடர்களிடமிருந்து மீட்கப்பட்ட பொருள்களுக்குத் தக்கவாறு தரோகருக்குத் தரகு (கமிஷன்) கொடுக்கப்பட்டது. ஐரோப்பிய நீதிபதி மாதமொன்றுக்கு 2500 ரூபாய் ஊதியம் பெற்றார். ஆனால் இந்திய முன்சீப்போ ஊதியமெதையும் பெறாமல் வழக்குகளின் மதிப்புக்குத் தக்கவாறு சிறிதளவு தரகு (கமிஷன்) பெற்று வந்தார். ஆகையால் வழக்குகள் பெருகினாற்றான் அவருக்கு நன்மை ஏற்படும் என்ற நிலை இருந்தது. வழக்குகளைப் பெருக்குவதையே அவர் தமது குறிக்கோளாகக் கொள்ளவேண்டியிருந்தது! வழக்குகளைத் தீர்ப்பதில்

மிக்க தாமதம் இருந்து வந்தது. சில சமயங்களில் தாமதம் காரணமாக நீதிமுறையினுல் பயனே இல்லாமலும் போகியது. ஆட்சி முறையில் உள்நாட்டினரின் ஆற்றலைப் பயன் படுத்திக்கொள்வதற்கேற்ற வாய்ப்பு கிடையாது போயிற்று. அத்துடன் ஆட்சி முறையைச் செம்மையாக நடத்தப் போதுமான ஐரோப்பியரும் இந்தியாவில் இல்லை. சாதாரணமாக ஏறத்தாழப் பத்து லட்சம் மக்கள் உள்ள ஒரு மாவட்டத்தில் ஒரு சில ஐரோப்பிய அலுவலாளரே இருந்தனர். இவர்கள் மட்டுந்தான் காரன்வாலிசு புதுக்கிய சிவில் பணித்துறையைச் சேர்ந்தவர்களாவர். ஆட்சி முறையில் பயன்படுத்தப் பெருதிருந்த இந்தியரின் ஆற்றல் வேறு வழிகளில் விரும்பத்தகாத வழிகளில் செல்லத் தொடங்கியது. ஆகவே கொடுமைப்படுத்தல், கைக்கூலி பெறுதல் முதலிய தீய விளைவுகளைக் காண்கிருேம். இந்தியருக்கு ஏற்பட்ட அத்தகைய முறையற்ற செயலைப் பற்றிக் காரன்வாலிஸ் கவலைகொள்ளவில்லை. பின்னர், சர் தாமஸ் மன்ருே, சர் சார்லஸ் மெட்காஃப் (Metcalf) வில்லியம் பெண்டிங் முதலியவர்கள் அக்குறைபாட்டை நீக்க முற்பட்டனர்.

பகுதி 6

பார்லிமெண்ட் சட்டங்கள் - 1793-ம் ஆண்டு பட்டயச் சட்டம்

பிட் இந்தியச் சட்டத்தின் சில குறைபாடுகளை நீக்கும் வகையில் ஆங்கிலேயப் பார்லிமெண்ட்டு 1785ம் ஆண்டில் ஒரு திருத்தமுறைச் சட்டத்தை (Amending act) நிறைவேற்றியது. அதன்படி கவர்னர்-ஜெனரல், தமக்கு மாருய் ஆலோசனைக்குழுவிற் பெரும்பான்மையினர் கொள்ளும் கருத்தை மீறி, இன்றியமையாததாயிருக்குமாயின், தம் விருப்பப்படி செயலாற்றும் உரிமை பெற்ருர். மேலும் அவரே படைத்தலைவராக இருக்கவும் அனுமதி பெற்ருர். காரன்வாலிசை மகிழ்விப்பதற்காகவே அவர் விருப்பப்படி அம்மாறுதல்கள் ஏற்பட்டன. அவை, கல்கத்தாவில் வல்லாட்சியை அமைக்கும் என்று பர்க் அம்மாறுதல்களை எதிர்த்தார். ஆனுல் எதிர்ப்பு பயனுறவில்லை. இயக்குநர் சபைக்கும் மேற்பார்வை சபைக்கும் இடையே உள்ள அதிகார வரம்பைப்பற்றிக் கருத்து வேறுபாடு இருந்துவந்தது. அதனுல் 1788-ம் ஆண்டில் அவற்றின் அதிகாரங்களை விளக்கிக் கூறும் வகையில் ஒரு சட்டம் தோன்றியது. அதன்படி பிட் இந்தியச் சட்டத்தின் குறிக்கோள், கம்பெனியின் அதிகாரங்களை அரசாங்கம் கட்டுப்படுத்த வேண்டுமென்பதுதான் உறுதியாயிற்று. 1773-ஆம் ஆண்டு ஒழுங்குபடுத்துஞ் சட்டத்தின்படி பட்டயம் 1793-ல் புதுப்பிக்கப்பட்டது. அப்பட்டயச் சட்டம் சில சிறிய திருத்தங்களை மட்டுமே புகுத்தியது. மேற்பார்வை சபையின் இளைய (Junior) உறுப்பினர்கள் இருவரும் பிரிவி கவுன்ஸிலர்களாக இருக்க வேண்டுமென்பது இன்றியமையாததன்று என்பது அவற்றில் ஒரு திருத்தமாகும். மேலும் அச்சபையின் உறுப்பினர்கள் இந்தியாவின் வருவாய்ப் பணத்தினின்று ஊதியம் பெறத் தொடங்கினர். வங்காளத்தில் படைத்தலைவர், சிறப்பாக

அவ்வாறு அமர்த்தப்படாத பட்சத்தில் ஆலோசனைக்குழு வின் உறுப்பினராக இருக்கமுடியாது என்பது மற்றொரு திருத்தமாகும். கவர்னர்களின்மீது கவர்னர்-ஜெனரல் செலுத்தும் அதிகாரங்கள் விரிவுற்றன. அதுபற்றிய சில செய்திகளும் தெளிவாயின. கவர்னர்-ஜெனரலுக்குக் கொடுக்கப்பட்டது போலவே கவர்னர்களுக்கும் ஆலோசனை சபையை மீறும் அதிகாரம் கிடைத்தது. கவர்னர்-ஜெனரல் வங்காளத்தில் இல்லாத காலங்களில் அவர் அமர்த்தும் ஒரு உதவித்தலைவர் அவருக்காகப் பணியாற்றி வருவர். கவர்னர்-ஜெனரல், சென்னை அல்லது பம்பாயில் தங்கியிருக்கும் காலங்களில் அப்பகுதிகளின் கவர்னர்களின் அதிகாரங்களை அவர் மீறமுடியும். கம்பெனியின் வாணிகத் தனிச்சிறப்புரிமைக்குப் பார்லிமெண்டில் எதிர்ப்பு இருந்தது. அப்படியிருந்தும் அவ்வுரிமையை மேலும் 20 ஆண்டுகட்கு மேற்கூறிய சட்டம் நீட்டித்தது. அடிமை வாணிக எதிர்ப்பு இயக்கத்தின் தலைவரான வில்லியம் வில்பர் போர்ஸ் (Wilber force) இங்கிலாந்தின் மதத்தூதுவர்களும் ஆசிரியர்களும் இந்தியாவுக்கு வந்து தொண்டாற்ற வேண்டுமென்று கோரினர். ஆனால் அவர் முயற்சியை அரசியலார் ஆதரிக்கவில்லை. பாதிரிமார்களின் சொற்பொழிவுகளால் இந்தியாவில் கலகம் ஏற்படக்கூடும் என்று அவர்கள் அஞ்சினர். மேலும் இந்தியாவில் தடையற்ற வாணிகம் நிலவவேண்டும் என்ற கோரிக்கையையும் அரசியலார் ஏற்கவில்லை. இந்திய வாணிகத்தில் எல்லோரும் பங்கெடுத்துக்கொண்டால் கம்பெனியின் இலாபம் குறைந்துவிடும் என்ற அச்சம் அவர்களுக்கு இருந்தது. ஆகவே பட்டயச் சட்டம் (1793) அக்கால ஆங்கிலேயரின் குறுகிய நோக்கத்தையே காட்டுகிறது.

பகுதி 7

காரன்வாலிசின் இயல்பும் அருஞ்செயல்களும்

இயல்பு : காரன்வாலிஸ், நாட்டுப்பற்றுமிக்க ஒரு சிறந்த ஆங்கிலேயர் என்பதில் ஐயமில்லை. இவர் இந்தியச் செய்திகளைக் கம்பெனியின் குறுகிய நோக்கத்துடனல்லாமல் ஆங்கிலேயரின் பரந்த தேசிய நோக்குடன் கவனித்தார். இந்தியாவில் ஆங்கிலப் பணியாளரின் தீய குணங்களை அவர் வெறுத்தார். நேர்மை அவரிடம் இருந்தது. நல்லொழுக்கம் நிறைந்த வாழ்க்கையையே அவர் விரும்பினார். சுயநலப் பேராசை அவரிடம் கிடையாது. வேறொருவரின் ஆதரவை நாடியோ அல்லது அவர்களுக்கு அஞ்சியோ அவர் செயலாற்றவில்லை. அவர், அரசியலிலும் ஆட்சிமுறையிலும் சமயத்துக் கேற்றவாறு தம் கொள்கையை மாற்றிக் கொள்பவர் அல்லர். மேலோருக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்பது அவர் தன்மையில் நாம் காணும் அடிப்படைச் சிறப்புப் பண்பு ஆகும். பிரிட்டிஷ் அரசியலார் தாம் ஏற்றுக் கொண்ட கொள்கைகளிலிருந்து காரன்வாலிஸ் வேறுபட்டுச் செயலாற்றிய காலங்களில்கூட அவருடைய நல்லெண்ணத்தில் அரசாங்கத்துக்கு மிக்க நம்பிக்கை இருந்தது. ஆதலால் அவர் தம் நாட்டுக்காக, அமெரிக்கா, ஐரோப்பா, இந்தியா, அயர்லாந்து ஆகிய நாடுகளிலும் பணியாற்ற நேர்ந்தது. வில்லியம் கோட்டையின் கவர்னர் - ஜெனரல் பதவியை அவர் இரண்டு முறைகள் ஏற்க மறுத்துவிட்டாரென்பதை நாம் முன்னர்ப் பார்த்தோம். தமது கடமைகளை ஒழுங்காகவும் மனச்சான்றுக்கு மாறுபடாமலும் செய்யக்கூடிய நிலையை ஏற்படுத்திக்கொண்டு தான் அவர் அப்பதவியை ஏற்க முன்வந்தார். திறமை ஒழுக்கம் முதலிய பண்புகள் இந்தியாவில் குறைந்து விடக்கூடாது என்பது தான் அவர் கருத்தாகும். ஆனால் செய்தித்தாள் ஆசிரியர்களை இன்றியமையாததாயின்

நாடுகடத்திவிடவும் அவர் தயாராக இருந்தார் என்பது குறிக்கற்பாலது. பல பண்புகளில் வாரன் ஹேஸ்டிங்சுக்கும் காரன்வாலிசுக்கும் வேற்றுமை உண்டு. முன்னவரின் கற்பனைத் திறனும் ஆற்றலும் பின்னவருக்குக் கிடையாது. ஆனால் காரன்வாலிஸ் ஒழுக்கப் பண்புகள் மிக்கவர் ; இவருடைய தன்மையின் மேன்மைக்கும், பொதுநலச் சேவைப் பண்புக்கும் சான்றாக இவர் ஆற்றிய அருஞ்செயல்கள் அமைந்துள்ளதைக் காணலாம். காரன் வாலிஸ், புறப்பகட்டை விரும்பாமல் இடைவிடாது உழைத்தார். வாழ்க்கையில் அவருக்குச் சிறந்த அனுபவம் இருந்தது. அவர், வெற்றிகளையும் தோல்விகளையும் நோக்கிய விதமே அதற்குச் சான்றாகும். தன்னலத்தைத் தியாகம் செய்து அவர் கடமையாற்றி வந்தார். அவருடைய சொந்த வாழ்க்கை தூய்மை நிறைந்ததாகவும் பெருமை பொருந்தியதாகவும் இருந்தது. பகட்டான ஆரவாரங்களை அவர் நாடவில்லை. செலவுகளில் மிகவும் சிக்கனமாயிருந்தார். தகுதியற்ற பரிந்துரைகள் (சிபார்சுகள்) மேலிடங்களிலிருந்து வந்தாலும் அவற்றை அவர் பொருட்படுத்துவதில்லை. இந்தியச் சிற்றரசர்களிடமிருந்தும் பிறரிடமிருந்தும் பரிசுகள் பெற்றுக் கொள்வதை அவர் அடியோடு வெறுத்தார். சீரங்கப்பட்டணத்திலிருந்து கிடைத்த பரிசுத் தொகையில் தமக்குரிய பங்கைக் கூட அவர் கொடுத்துவிட்டார். வாரன் ஹேஸ்டிங்சைப் போலன்றி இவர், நிதி சம்பந்தமான சிறிய செய்திகளில் கூடத் தவறிழைக்காமல் கவனமாக இருந்து வந்தார்.

அருஞ்செயல்கள் : காரன்வாலிஸ், போற்றற்குரிய ஆற்றல் படைத்த ஒரு சிறந்த போர் வீரர். அமெரிக்காவில் தோல்வியுற்ற போதிலும் மைசூரில் அவர் அடைந்த வெற்றிகள் குறிப்பிடத்தக்கன. அவர் ஒழுங்கை விரும்பினார். அதை நிலை நாட்டவும் உழைத்தார். தம் கீழ் இருந்த அலுவலரை ஆதரித்தார். பழிவாங்கும் நோக்கம் அவரிடம் இருந்தது இல்லை. அவருடைய ஆட்சிமுறையில் குறைபாடுகள் உண்டு என்பது உண்மை. அவரது

நிலேயான நிலவரித் திட்டம் சிறப்புடையதன்று என்பதையும் பார்த்தோம். ஆயினும் அவர், வாணிகம், நீதி முறை, சிவில் அலுவல் முதலிய துறைகளில் நிறைவேற்றிய சீர்திருத்தங்கள் புகழத்தக்கவையாகும். ஆட்சி முறையைப் பொறுத்தவரை காரன்வாலிஸ், வாரன் ஹேஸ்டிங்சுக்கு ஓரளவு கடப்பாடுடையவர்தான். மேலும் முன்கூறியது போல அவர் வேறு சிலரின் உதவியையும் பெற்ருர். ஆயினும் ஆட்சிமுறைக் கொள்கைக்குக் காரன் வாலிஸ் ஒரு வழிகாட்டியாக இருந்து அதன் சில பண்பு களே வலிமைப்படுத்திஞர். அவருடைய நிலவரித்திட்டத் துக்குப் பிற்காலத்தில் எதிர்ப்பு இருந்தது. இந்தியரை ஆட்சிமுறையின்று விலக்கியதும் வாரன்ஹேஸ்டிங்சின் ஒரு சில சிறந்த கொள்கைகளேப் பின்பற்ருதிருந்ததும் காரன்வாலிசின் தவறுகள் என்று கூறப்படுகிறது. காரன்வாலிஸ் தமது கற்பனேத் திறன்கொண்டு புதிய சிறந்த கருத்துக்களேத் தோற்றுவிக்கவில்லே. எனினும் இவர் செயல்திறன்மிக்க ஓர் ஆட்சியாளர். ஆகவே வெறும் கோட்பாடுகளே கொண்டவரைவிட இவர் சிறந் தவராவர். இவரது நிதி நிருவாகம் கம்பெனியின் பொருள்நிலேயை வலிமைப்படுத்தியது. அதனுற்ருன், கிழக்கிந்தியச் செய்திகளேப்பற்றி மிகுதியான முன்னுய்வு இன்றியே எளிதில் 1793–ம் ஆண்டுப் பட்டயச் சட்டம் நிறைவேறியது. திப்புவினுல் இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சிக்கு ஊறு விளேயுமென்பதைக் காரன்வாலிஸ் உணர்ந்து அதைத்தடுக்க அக்காலத்துக்குத் தக்கச் சில முன்னேற்பாடுகளேச் செய்தார் தலேயிடாக் கொள்கை யைப் பின்பற்றுவதைத் தம் கடமையாகக் கொண்ட போதிலும் அதையும் வேறு சில செய்திகளேயும் அவர் குறுகிய முறையில் நோக்கவில்லே. வாரன்ஹேஸ்டிங்ஸ் காலத்திலேற்பட்டிருந்த ஆட்சிமுறைக் குழப்பத்தை நீக்கிய பெருமை காரன்வாலிசுக்கு உண்டு. அவ் வருஞ்செயல் காரணமாக கம்பெனியின் நிலே சிறந்த முறையில் வலிமையடைந்தது. கம்பெனியாரின் வாணிக உளப்போக்கை மாற்றி அவர்களேப் புதிய ஆட்சிமுறைப்

பொறுப்புக்களை மேற்கொண்டு நேர்மையுடனும் ஒழுங்காகவும் செயலாற்றத் தூண்டினர் காரன்வாலிஸ். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் சிறப்புப் பண்பாகிய திறமையான தூய ஆட்சிமுறை மரபைத் தோற்றுவித்தவர் இவர் என்று கூறலாம். தமது குணவியல்பினுலும், பிறரின் ஒத்துழைப்பாலும் தாய் நாட்டினரின் ஆதரவாலும் காரன்வாலிஸ் தமது ஆட்சிமுறையில் வெற்றி பெற்ருர். இவர், இந்திய ஆட்சிப்பணி (I. A. S.) யின் தந்தையாவர்; திறமையும் தூய்மையும் வாய்ந்த ஆட்சி முறையைத் தோற்றுவித்தவருமாவர்.

———

பகுதி 8

மகாதஜி சிந்தியாவின் உயர்நிலை, இயல்பு, பெருமை

மகாதஜியின் உயர்நிலை : மகாதஜி சிந்தியாவைப் பற்றி ஓரளவு முன்னர்ப் பார்த்தோம் தில்லியில் அவருடைய ஆதிக்கம் நிலவியது. பூனா அரசியலாரும் அவரை எளிதில் கட்டுப்படுத்த முடியவில்லை. கவர்னர்-ஜெனரலும் மகாதஜியிடம் நல்லெண்ணம் பூண்டிருந்தார். முகலாயப் பேரரசர் அவரைப் பேஷ்வாவின் துணைவராக (Deputy) அமர்த்தினார். பேரரசுப் படையின் தலைமைப் பதவியும் அவருக்குக் கிடைத்தது. தில்லி, ஆக்ரா மாகாணங்களின் ஆட்சித்தலைமையையும் அவர் பெற்றார். அம் மாகாணங்களின் வரித்தொகையிலிருந்து மாதம் ஒன்றுக்கு 65000 ரூபாயை மட்டும் பேரரசர் தமது செலவுக்காகப் பெற்றுக்கொண்டார் (1784).

அரசியல் துறையிலும் படைத்துறையிலும் மகாதஜி சிந்தியாவின் பெருமை உயர்ந்துவந்தது. அவர் தம் நாட்டுப் போர்முறையை விடுத்து ஐரோப்பியர்களைக் கொண்டு தமது காலாட் படைக்குப் பயிற்சி அளித்து வந்தார். அவ்வாறு படைப் பயிற்சி அளிப்பதற்காக அவரிடம் பணியில் அமர்ந்திருந்தவர்களில் கௌண்ட் பெனட்-டி-பாயின் (பி. 1751–இ. 1830) என்ற ஐரோப்பியர் சிறப்பு வாய்ந்தவராவர். அப்போர் வீரர் 1768 முதல் 1774 வரை பிரெஞ்சுப் படையில் பணியாற்றி வந்தார். பிறகு ருஷிய நாட்டு II-ம் காத்ரைனின் கீழ் ஒரு படைத்தலைவராயிருந்தார். இவருக்கும் அப்பேரரசிக்குமிடையே காதல் தொடர்பும் உண்டு. துபாயின் இந்தியாவின் நிலைமையைக் கேட்டறிந்துகொண்டு 1778-ல் சென்னைக்கு வந்துசேர்ந்தார். பிறகு கல்கத்தாவுக்குச் சென்றார். 1784-ல் மகாதஜி சிந்தியா இவரைத்

தம் பணியில் அமர்த்திக்கொண்டார். அப்போர் வீரரின் அறிவும் கற்பனைத் திறனும் சிந்தியாவின் கருத்தை மிகவும் கவர்ந்தன.

மகாதஜியின் பெரிய படையின் செலவுகளுக்காக அவருக்கு மிகுதியான பொருள் தேவையாயிருந்தது. ஆகவே அவர் இராசபுத்திரர்களைக் கப்பம் செலுத்த ஆணையிட்டார். அவர்கள் மறுக்கவே இருசாராருக்கு மிடையே போர் மூண்டது. ஜெயபுரியும் ஜோதிபுரியும் சேர்ந்து சிந்தியாவை எதிர்த்தன. இராசபுத்திரருக்கு உதவிசெய்த ஆக்ராவின் கவர்னர் முகம்மது பெக் போரில் மடிந்தார். அவருடைய மருகரான இஸ்மெயில் பெக் 1787-ல் சிந்தியாவை முறியடித்தார். குலாம் காதர் என்ற ரோஹில்லாத் தலைவர் தில்லியை நோக்கிச் சென்றதால் மராட்டியர் பின் வாங்கினர். வலிமை குன்றிய முகலாயப் பேரரசரிடமிருந்து அவர் அமீர்-உல்-உமாரா என்ற மிகச் சிறப்பு வாய்ந்த பட்டத்தையும் பெற்றார். அவரும் இஸ்மெயில் பெக்கும் ஆக்ராவை முற்றுகையிட்டனர். அதை மீட்கச் சிந்தியா செய்த முயற்சியையும் தோற்கடித்தனர். அதற்கிடையில் குலாம் காதர் தம்முடைய ஜாகீரைச் சீக்கியரிடமிருந்து காப்பாற்ற உடனே செல்லவேண்டியிருந்தது. துபாயின், 1788-ல் பத்பூர்சிக்ரியில் இஸ்மெயில் பெக்கை முறியடித்தார்.

அதன்பின் துபாயின், சிந்தியாவின் பணியினின்று நீங்கி லக்னௌவில் அவுரி வாணிகத்தை மேற்கொண்டார், அந்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு இஸ்மெயில் பெக்கும் குலாம் காதரும் தில்லிக்குச் சென்றுத் தமது ஆதிக்கத்தை நிறுவ முயன்றனர். ஆனால் பேரரசர் அவர்களை உட்புகாதவாறு தடுத்தார். சினங்கொண்ட அவ்விருவரும் 1788-ல் பேரரசரின் அரண்மனையைக் கொள்ளையிட்டுப் பேரரசரையும் அரியணையினின்று அகற்றினர். குலாம் காதர் பேரரசரை நையப்புடைத்து அவர் கண்களையும் உடைவாளால் குத்திக் குருடாக்கினர். தில்லியில் கொடுமையும் குழப்பமும் நிலவின. போர்வீரர்கள் நகரைச்

சூறையாடினர். அரச குடும்பப் பெண்டிர் அல்லலுற்றனர். குலாமின் அத்தீய செயல்கள் இஸ்மெயில் பெக்குக்கே அருவருப்பை விளைவித்தன குலாம் காதரிழைத்த கொடுமைகளை அவராலேயே பொறுத்துக்கொள்ள முடிய வில்லை. ஆகவே அவர் சிந்தியாவின் உதவியை நாடினார். (1788). அதைக்கண்ட குலாம் ஓட்டமெடுத்தார். சிந்தியா, அவரைக் கைப்பற்றிப் பழிக்குப் பழிவாங்கினார். அவர் வட மதுரையில் குலாம் காதரைக் குருடாக்கிச் சித்திரவதை செய்து கொன்றார் (1789). அவ்வமயம் நானாபட்னிசும் சிந்தியாவுக்கு உதவிசெய்துவந்தார். ஆனால் அவர் சிந்தியாவிடம் உண்மையில் வெறுப்புக்கொண்டிருந்த போதிலும் தில்லியில் முகம்மதியர் ஆதிக்கம் மீண்டும் ஏற்படக்கூடாது என்ற காரணத்தால்தான் அவருக்கு உதவிபுரிந்தார் என்பது தெளிவு. குருடராயிருந்த ஷா ஆலத்தைச் சிந்தியா மீண்டும் அரியணையில் அமர்த்தினார் (1789). குலாம் காதருக்குரிய தோஆப் மானியங்களும் அவரைச் (சிந்தியாவை) சேர்ந்தன.

சிந்தியா, துபாயினை மீண்டும் இராணுவத்திற் சேரு மாறு செய்தார். அதற்கிடையில் இஸ்மெயில் பெக் இராச புத்திரருடன் இணைந்து மகாதஜியை எதிர்த்து வந்தார். துபாயின் 1790-ல் அப்பகைவர்களைப் பதான் (ஜெயபுரி, இராசபுதனம்) என்னுமிடத்தில் தோற்கடித்துவிட்டு அச் மீரத்தைத் தம்மடிப்படுத்தினார். மெர்ட்டாவில் ஜெயபுரி, ஜோதிபுரிப் படைகள் தோல்வியுற்றன (1791). ஜோதி புரியில் துபாயின் நுழைந்தவுடன் உதயபுரி இராணா போன்ற பெரும் இராசபுத்திரத் தலைவர்கள் அடிபணிந் தனர். சிந்தியாவின் மனக்களிப்புப் பெருகியது. பிரெஞ்சு வீரரின் துணைகொண்டு சிந்தியாவின் படை மேலும் மேலும் வலிமையடைந்தது.

சிந்தியா தமது படையை நானாபட்னிசுக்கு உதவியாக மூன்றாவது மைசூர்ப் போரில் திப்புவை எதிர்க்க அனுப்புவ தாக முன்வந்தார். ஆனால் அதை நானா ஏற்றுக்கொள்ள வில்லை. அவர் உள்ளத்தில் சிந்தியாவிடம் வெறுப்பு

உணர்ச்சி இருந்ததே அதற்குக் காரணமாகும். வட இந்தியாவில் சிந்தியாவின் ஆதிக்கத்தைக்கண்டு பூனு அரசியலார் பொருமைகொண்டனர். 1792-ல் மகாதஜி பூனுவுக்குச் சென்ருர். வாய்ப்புக் கிடைத்தால் நானு பட்னிசை விரட்டி விட்டு மராட்டியத் தலைவர்களின் கூட்டுறவுக்குத் தம்மையே தலைவராக அமைத்துக்கொள்ளும் எண்ணமும் அவருக்கு இருந்திருக்கக்கூடும். ஆனுல் அக்கருத்தை அவர் வெளிப்படுத்தவில்லை. பேஷ்வாவின் முன்பு அவர் பணிவாக நடந்து கொண்டார் தம் குல முதல்வர் பேஷ்வாவின் செருப்பைத் தாங்கும் வழிவழி உரிமையைப் பெற்று பணிவு காட்டியது போலவே சிந்தியாவும் பேஷ்வாவின் செருப்புக்களை மாற்றி புதிதாகத் தாம் வைத்திருந்த செருப்புக்களை அவருக்கு அளித்தார். வெளிப்படையான பகைமையைத் தடுக்க அவர் நடித்த நாடகம் இது !

நானு பட்னிசுக்குச் சிந்தியாவின் மீது நம்பிக்கை இல்லை. ஆகவே அவர் துக்கோஜி ஹோல்காருடன் கூட்டுறவு அமைத்துக் கொண்டார். ஆனுல் துக்கோஜியை 1792-ல் துபாயின் முறியடித்துவிட்டார். அவ்வெற்றி பூனுவில் சிந்தியாவின் நிலைமையை வலிமைப்படுத்தியது. எனினும் இளையவரான பேஷ்வாவுக்கு நானுவிடத்தில் தான் அன்பும் நம்பிக்கையு மிருந்தன. ஆயினும் சிந்தியாவின் பேராவல் நிறைவேற வாய்ப்புக் கிடைத்தது. ஆனுல் அதற்குள் 1794-ல் அவர் இறந்தார். அவருக்குப் பிறகு அவர் உடன் பிறந்தாரின் பேரனுன தௌலத் ராவ் சிந்தியா பட்டத்துக்கு வந்தார். அவருக்கு அப்பொழுது வயது 13 தான். நானுவுக்கு ஏற்பட்டிருந்த பேரிடையூறு நீங்கிற்று. துபாயின் 1796-வரை சிந்தியாவின் பணியில் அமர்ந்திருந்தார். பிறகு அவர் தம் நாட்டுக்குத் திரும்பினுர். அங்கே அவர் தாம் நேர்மையாக ஈட்டியிருந்த பொருள்களை அறவழியில் செலவிட்டுப் பின் 1830-ல் தமது எண்பதாவது வயதில் இறந்தார். அவர் உழைப்பும் ஊக்கமும் கொண்ட ஒரு போர் வீரர் ; சிந்தி

யாவின் நலத்தில் அவர் மிக்க கருத்துச் செலுத்தினர். ஆங்கிலேயருடன் நட்பு உறவு கொள்ளுமாறு அவர் சிந்தியாவுக்கு அறிவுரை கூறிவந்தார். ஆங்கிலேய ரிடம் அவ்வீரருக்கு அன்பு இருந்தது. பிரெஞ்சுக்காரர் இந்தியாவை வெல்லமுடியும் என்ற கருத்தை ஒப்புக் கொள்ளவில்லை. அவர் நாட்டினர் பெற்றிருந்த புரட்சி ஊக்கம் அவருக்குக் கிடையாது. இந்தியாவில் இருந்த ஐரோப்பிய இராணுவ வீரர்களில் அறிவுத் திறமையிலும் நேர்மைத் தன்மையிலும் முறையே மிகச் சிறந்தவராகவும் நமது கருத்தைக் கவரத்தக்கவராகவும் துபாயின் விளங்கு கிருர்.*

மகாதஜியின் இயல்பு : வலிமை வாய்ந்த உடலமைப் பும் நடுத்தர உயரத்தையும் பெற்ற மகாதஜி சிந்தியா ஒரு சிறந்த போர் வீரர். வட இந்தியாவில் மராட்டியரின் ஆதிக்கத்தின் சிறப்பையும் ஐரோப்பிய முறையில் போர்ப் பயிற்சி பெற வேண்டியதன் இன்றியமையாமையையும் நன்கு உணர்ந்திருந்தார். அரசியல் அறிவு நுட்பமும் தனிச் சிறப்புத் திறமையும் அவர் பால் பொலிந்தன. அவர் பிறரிடம் அன்பாக நடந்து கொள்வார்; கபடின்றிப் பேசுவார் ; களிப்புடன் பிறருடன் கலந்து பழகுவார். ஆனல் தமது பேராசையையும் உண்மையான குறிக் கோளையும் தமது மனத்திலேயே ஒளித்து வைத்துக் கொள்ளக் கூடிய திறமை அவரிடமிருந்தது. இராணுவத் துறையில் தோல்வி ஏற்பட்டால் அதனல் அவர் மன முடைந்து ஊக்கமிழந்து விடுவதில்லை. அவர் ஒரு கொடுமையாளரல்லர் ; ஆயினும் தண்டனை அளிப்ப தில் கடுமை காட்டினர் ; பழி தீர்த்துக் கொள்ளவும் தயங்குவதில்லை. கணக்கு முறையையும் அரசிறை பற்றிய செய்திகளையும் அவர் அறிந்திருந்தார். ஆனல் அரசியலிலேயே மிகவும் ஈடுபட்டிருந்ததால் அவைகளைப்பற்றி அதிகமாகக் கருத்துச் செலுத்தமுடிய வில்லை. எளிய பழக்கவழக்கங்கள் அவரிடமிருந்தன.

---

* *80*, பக். *221*.

ஆனால் முரட்டுத்தனமும் இருந்தது. சினங்கொண்டால் அவர் தம்மை மறந்து கடுமையாகச் செயலாற்ற முற்பட்டு விடுவார். பலபண்புகளில் நானாபட்னிசுக்கும் இவருக் கும் வேற்றுமை உண்டு. சுருங்கக்கூறின் மகாதஜியிடம், ஆற்றல், அரசதந்திரத் திறமை, உண்மை நிலையை உணர்ந்து ஒழுகும் பண்பாடு, முதலிய பண்புகள் இருந்தன. அதனாற்றான் அவர் ஆங்கிலேயருக்கு எதிரி லேயே தமது நிலையைப் பாதுகாத்துக்கொள்ள முடிந்தது. ஆங்கிலேயரின் வலிமையை அவர் நன்கு உணர்ந்து, சால்பாய் உடன்படிக்கைக்குப் பிறகு அவர்களுடன் நட்பு உறவுகொள்ளவே விரும்பினார். அவர்களிடமிருந்து சிந்தியா சில முறைகளைக் கற்றுக்கொண்டார். தமது பேரவாவை நிறைவேற்றித் தரத்தக்க அலுவலரைப் பணியில் அமர்த்திக்கொள்ளும் திறமை அவரிடமிருந்தது. 1782-ம் ஆண்டுக்கு முன்னர் மராட்டியரின் பொது நலத்தையே அவர் மனம் நாடியது. ஆனால் பிறகு அவர் வடஇந்தியாவில் தமது ஆதிக்கத்தை நிலைப்படுத்து வதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்தார். அதில் அவர் வெற்றிபெற்றார். ஆனால் பூனாவில் அவருடைய ஆதிக்கம் நிலைபெறவில்லை. நாட்டு நலனைக்கருதியே அவர் இர கோபாவுடன் பகைத்தார். ஆனால் முதல் மராட்டியப் போருக்குப் பிறகு பெரும்பான்மையும் ஆங்கிலேயருடன் அவர் நட்பாக இருக்கவே விரும்பினார். பூனா அரசியலார் தமது வைதீக மனப்பான்மை காரணமாக சிந்தியாவை வெறுத்தனர். அவ்வெறுப்பு அவரைப் புதிய வழியில் தமது முன்னேற்றத்தை நாடத்தூண்டியது.

பெருமை : மகாதஜியின் பெருமைக்குச் சான்றாக அவருடைய முப்பெருஞ்செயல்கள் குறிப்பிடத்தக்கவை. அவர் மராட்டியரின் போர்முறையைக் கைவிட்டு மேனாட்டு முறையில் ஒரு பெரும்படையை அமைத்தார். தமது ஆதிக்கத்தைத் தில்லியில் ஏற்படுத்தி முகலாயப் பேரரசரைத் தமக்கு அடங்கச்செய்தார்; இராசபுத்திரரை முறியடித்ததுடன் சட்லெஜ் ஆற்றுக்கு இப்பால் உள்ள

சீக்கியரைத் தமது அதிகாரத்துக்கு உட்படுத்தினர். செயலளவில் அவர் பூனு அரசாங்கத்துக்கு அடங்காமலேயே இருந்துவந்தார். நானுபட்னிசுக்கும் வாரன் ஹேஸ்டிங்சுக்குமிடையே அமைதித் தொடர்பை அமைத்த அவர் செயல் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். தக்கணத்தில் நானுவின் ஆதிக்கத்தை அவர் அச்சுறுத்தினர். ஆனல் அதை அழிக்கவில்லை. தமது திட்டம் நிறைவேறு முன் அவர் இறந்துவிட்டார். சில பண்புகளில் சிந்தியாவை விட நானு சிறப்புடையவரே. ஆதலால் அவ்விருவரின் அறிவாற்றலும் ஆக்கமூலங்களும் ஒன்ருகச் சேர்ந்திருப்பின் மராட்டியரின் புகழ் மிகுதியான அளவுக்கு ஓங்கியிருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனல் அவ்விரு தலைவர்களும் உள்ளத்தால் ஒன்றவில்லை. அதன் காரணமாக இருவரிடத்துமிருந்தும் குறைபாடுகள் ஓங்கி அவர்கள் ஆற்றிய செயல்கட்கே தீமை உண்டாயிற்று. அவ்விருவரின் மறைவுக்குப்பின் மராட்டியரின் சிறப்பு குன்றுவதற்கான வழி ஏற்பட்டது. அதன் விளைவாக 19-ம் நூற்ருண்டின் தொடக்கத்தில் மராட்டியரின் வீழ்ச்சியைக் காண்கிருேம். மகாதஜியின் சாவு நானுபட்னிசின் அதிகாரத்தைப் பெருக்கியது. அவர் 1795-ல் மராட்டியத் தலைவர்களை நிஸாமுக்குப் பகையாக, ஒன்று சேர்த்தார். இதனல் மராட்டியரின் பெருமை சிறப்புற்றது. ஆயினும் மகாதஜி, மராட்டிய வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளார். அவருடைய சிறந்த பண்புகள், தேர்ச்சிபெற்ற படை, வாரன் ஹேஸ்டிங்சுக்கு ஏற்பட்டிருந்த இடையூறுகள், காரன் வாலிஸ் ஓரளவு தலையிடாக் கொள்கையைப் பின்பற்றியமை முதலியவை மகாதஜி சிந்தியாவின் வெற்றிக்குரிய காரணங்களாகும்.

பகுதி 9

ஷோர் (1793 - 8)

வெளித்துறைக் கொள்கை : காரன்வாலிசுக்குப் பிறகு கவர்னர் - ஜெனரலாக அமர்ந்த சர் ஜான் ஷோர், வங்காளத்தில் சிவில் துறையில் பணியாற்றியவராவர். ஆட்சிமுறையில் அவருக்கிருந்த திறமை போற்றத் தக்கது. கம்பெனியின் பணியில் உள்ளவரைக் கவர்னர் - ஜெனரலாக்குவது சிறப்புடையதன்று என்ற கோட் பாட்டையுடைய காரன்வாலிஸ், ஷோரின் திறமையை வியந்து, தமது கொள்கைக்கு மாருன வகையில், அவரையே கவர்னர் - ஜெனரலாக்குமாறு பரிந்துரைத்து தண்டாசுக்கு முடங்கல் வரைந்தார். ஷோர் தலையிடாக் கொள்கையை கடுமையான முறையில் பின்பற்றி வந்தார். காரன்வாலிசைப்போல் பரந்த முறையில் அக்கொள் கையை மேற்கொள்ளவில்லை. அதன் விளைவாக ஆங்கிலேயரின் பெருமை இந்நாட்டில் குன்றியது. 1795-ல் மராட்டியர் நிஸாமை எதிர்த்தனர். அதற்கு முன் நிஸாம் ஆங்கிலேயரின் உதவியை நாடினுர். குண்டூர் சர்க்காரை அவர் ஆங்கிலேயருக்குக் கொடுத்ததுடன் அவர்களைத் தமது நட்பினராகவும் கொண்டிருந்தார். அவ்வாறிருந் தும் ஷோர், தாம், பிட் இந்தியச் சட்டப்படி 'நொதுமல்' கொள்கையையே பின்பற்றப் போவதாக அறிவித்துவிட் டார். கம்பெனியாருடன் நேச உறவுபூண்ட திருவாங் கூரைத் திப்புத் தாக்கியவுடன் காரன்வாலிஸ் அச்சுல்தா னுடன் போர் தொடுத்தாரென்பதை நாம் கவனிக்க வேண்டும். ஷோர் உதவிக்கு வராததால் மராட்டியக் கூட்டரசுத் தலைவர்கள் கர்டா என்னுமிடத்தில் எளிதில் நிஸாமைத் தோற்கடித்தனர். ஆனுல் அத்தலைவர்களி டையே ஒற்றுமையில்லாத காரணத்தால் அவ்வெற்றியால் மிகுதியான பயன்களை அவர்கள் அடையவில்லை. நிஸாம், கம்பெனியின்மீது கொண்டிருந்த நம்பிக்கையை இழந்

தார். மராட்டியரும் திப்புவும் ஆங்கிலேயரின் ஆற்றல் அழிந்து வருவதாக முடிவு செய்தனர். இந்தியாவில் ஆங்கிலேயரை எதிர்க்கும் உணர்ச்சி பெருகியது. இந்தியச் சிற்றரசர்கள், ஐரோப்பியரின் உதவி கொண்டு தமது படைகளைச் சீர்திருத்த முற்பட்டனர். ஆங்கிலேயரை வலியத் தாக்க வேண்டுமென்ற எண்ணமும் அவர்களுக்குத் தோன்றியது. இவ்வாறு ஷோரின் தலையிடாக் கொள்கை பிரிட்டிஷாரின் சிறப்புக்கு ஊறு விளைத்தது. இதனுல் அவருடைய ஆட்சிமுறையிலும் பல குறைபாடுகள் ஏற்பட்டதைக் காண்கிறோம்.

கருநாடக நவாப்: நவாப் வாலாஜா 1795-ல் இறந்தார். அவர், கம்பெனியாருக்கு இடையருத் துன்பம் அளித்து வந்தவர். சூழ்ச்சி நிறைந்த அவருடைய ஆட்சிமுறையில் சீர்கேடுகள் பெருகி யிருந்தன. அவரை ஆதரித்தவர்களும் தமது நலங்களைக் கருதி, ஆட்சிமுறை அழிவுபாட்டுக்கு ஆவன எல்லாம் செய்துவந்தனர். மீர் காசிம் காலத்தில் வங்காளத்தில் ஆங்கிலேயர், ஆட்சிமுறையில் தலையிட்டு அடாப் பழிச்செயலை ஆற்றியது போலவே சென்னை அரசியலாரும் நவாப் வாலாஜா காலத்தில் செய்துவந்தனர். அந்த நவாப்புக்குப் பின் II-ம் வாலாஜா பட்டமேற்ருர். 1792-ம் ஆண்டு உடன்படிக்கை ஒழுங்காக நிறைவேற்றப்படாததால் சென்னைக் கவர்னர் ஹோபர்ட், தம்மிடம் அடமானமாக வைக்கப்பெற்றிருந்த கருநாடக மாவட்டங்களைத் தம் ஆட்சிக்கு உட்படுத்தினுர். நவாப் அம்மாறுதலை விரும்பாமல் தமது எதிர்ப்பை அறிவித்தார். கவர்னர் - ஜெனரலும் அச்செயலை ஆதரிக்கவில்லை. நவாப்புக்குக் கடன் கொடுத்தவர்கள் 36 சதவீதம்வரை வட்டி வாங்கிக்கொண்டு செல்வத்தில் திளைத்து வந்தனர். இவ்வாறு கருநாடகத்தில் வருந்தத் தக்க நிலை தொடர்ந்துவந்தது.

தஞ்சாவூர்: தஞ்சையில் அரசுரிமைப் போராட்டம் முடிவுறவில்லை. ஷோர் வாரணசிப் பண்டிதர்கள் சிலரை அச்சிக்கலை நீக்கி விளக்கந் தருமாறு அழைத்தார். அவர்

கள், முதலில் ஏற்பட்ட தீர்மானத்தை மாற்றிவிட்டு சரபோஜியின் உரிமையை ஆதரித்துப் பேசினர். ஆனால் அமரசிங்கின் சீர்கேடான ஆட்சியை அழிக்க எவ்வித முயற்சியும் செய்யவில்லை.

இராணுவத்துறை அலுவலரின் கீழ்ப்படியாமை (1795-6): ஊதியத்தைப் பொறுத்தவரை சிவில் பணியாளர் பெற்றுவந்த சில நன்மைகள் இராணுவத்துறையினருக்குக் கிடைக்கவில்லை என்ற குறை பின்னவருக்கு இருந்துவந்தது. வங்காளப்படையினர் அதனால் மன அமைதி அற்றிருந்தனர். மேலான நிலையைப் பெற்றிருந்த அரசரின் படையினரையும் கம்பெனிப் படையினரையும் ஒன்றாக இணைக்கக் காரன்வாலிஸ் ஒரு திட்டம் வகுத்தார். . ஆனால் அதை இயக்குநர் சபையும் மேற்பார்வை சபையும் ஏற்க மறுத்துவிட்டன. ஆதலால் 1795-ல் படையில் கலகம் தோன்றியது. தாமே ஆட்சியைக் கைப்பற்றிவிட முடியும் என்று படை வீரர்கள் முழக்கம் செய்தனர். கிளைவைப் போலில்லமாமல் ஷோர் அவர்களுக்கு அடங்கிவிட்டார். அவர்கள் எதிர்பார்த்ததற்குக் கூடுதலாகவே படைவீரர்கள் நன்மை பெற்றனர். அதனால் கம்பெனியின் கருவூலத்தில் மிகுதியாகப் பொருள் குறைந்துவிட்டது. ஷோரின் ஆற்றலற்ற அச்செயல் அவர் பதவியினின்று நீக்கப்படுவதற்குக் காரணமாயிற்று. 1797-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மீண்டும் காரன்வாலிஸ் கவர்னர்-ஜெனரலானார். கலகக்காரப்படை வீரர்களின் பிரதிநிதிகள் லண்டனில் முயற்சி செய்ததன் விளைவாகத் தண்டாஸ் பல சலுகைகளைக் கலகக்காரருக்கு வழங்கியதை அறிந்ததும் காரன்வாலிஸ், பதவியினின்று விலகிவிட்டார்.

இராமபுரி: ரோஹில்லாத் தலைவரான இராமபுரி பெய்ஸுல்லா கான் 1794-ல் இறந்தார். அவருடைய மூத்த மகனார் முகம்மது அலி கான் பினனர்ப் பட்டமேற்றார். அவருடைய உடன் பிறந்தாரான குலாம் முகம்மது அவரைக் கொலைசெய்துவிட்டார். ஆனால் குலாம் தமது படைத்தலைவரான சர் ராபர்ட் அபர்கிராம்பியாலேயே

சிறைப்பட்டார். பிறகு முகம்மது அலியின் மகனுர் அகமது அலி இராமபுரியின் அரசரானுர்.

அயோத்தி: அயோத்தியில் அமைச்சராயிருந்த ஐதர் பெக், 1704-ல் இறந்த பிறகு ஆட்சிமுறையை அந் நாட்டில் சீர்திருத்துவதற்குத் தகுதிவாய்ந்தவர் எவரு மில்லை. அங்கே கேடுகள் பெருகின. நவாப் அஸப்-உத்-தௌலாவை லக்னௌவில் கண்டு பேசிய ஷோர் ஆட்சி முறைச் சீர்திருத்தத்தின் இன்றியமையாமையை வற் புறுத்திக் கூறினுர். அதனுல் பயன் எதுவும் விளையவில்லை. நவாப் தாமாகவும் நிலைமையைச் சீர்திருத்த முன்வர வில்லை; பிறர் கூறுவதைக் கேட்கவும் அவருக்கு விருப்ப மில்லை. சிற்றின்பத்தில் திளைத்துக் களித்திருப்பதுதான் அரச வாழ்வு என்று அவர் கருதினுர் போலும்! அவர் சிறந்த கட்டடங்களை எடுத்தபோதிலும், கலை ஆர்வம் கொண்டிருந்தபோதிலும் அவ்ராட்சியில் மக்கள் மாளாத் துயரெய்தினர். 1797-ல் அவர் இறந்தார். வஸீர் அலி என்பார் அவருடைய மகனுகக் கருதப்பட்டார். ஆதலால் ஷோர், அவர் அரியணை பெறுவதை ஏற்றுக்கொண்டார். ஆனுல் விரைவில் அப்புதிய நவாப் இழிகுலத்திற்ரேன் றியவரென்றும் ஆங்கிலேயரின் பகைவர் என்றும் கவர்னர்-ஜெனரல் நம்பினுர். ஆதலால் அவர் வாரணுசிக்குச் சென்று அஸப்-உத்-தௌலாவின் உடன் பிறந்தாரான ஸாதத் அலியிடம் அவரை நவாப்பாக்குவதாகக் கூறினுர். இருவருக்கு மிடையே புதிய உடன்படிக்கை ஏற்பட்டது. 1798-ல் ஷோர் மீண்டும் லக்னௌவுக்குச் சென்று வஸீர் அலியை நீக்கிவிட்டு ஸாதத் அலியை நவாப் ஆக்கினுர் புதிய உடன்படிக்கைப்படி அயோத்தியின் பாதுகாப்புப் பொறுப்பைக் கம்பெனி ஏற்றுக்கொண்டு அதற்காக ஆண்டுக்கு 76 லட்ச ரூபாய் பெற்றது. தவிர அலகாபாத் கோட்டையையும் ஆங்கிலேயர் பெற்றனர். மேலும் நவாப் கம்பெனியின் மூலமாகவே பிற அரசியலாருடன் தொடர்பு கொள்ள இசைந்தார். இவ்வாறு அயோத்தியில் ஆங்கி லேயர் உயர்நிலை அடைந்தனர். வஸீர், ஓய்வுக்கால

ஊதியம் பெற்றுக்கொண்டு வாரணாசியில் வாழ்ந்தார். ஷோர், அயோத்தியில் ஆற்றல் வாய்ந்த கொள்கையைப் பின்பற்றியதற்கு ஆப்கானியரிடம் அவருக்கு ஏற்பட்டிருந்த அச்சம் ஒரு காரணமாகலாம். அவ்வமயம் அகமது ஷா அப்தலியின் பெயரர் ஸாமன் ஷா 1796-ல் லாகூரைத் தம் வசப்படுத்தியிருந்தார். ஆதலால் ஆப்கானியப் படையெடுப்பு ஏற்படக்கூடும் என்ற எண்ணம் கவர்னர்-ஜெனரலுக்கு இருந்தது.

ஷோரின் ஆட்சித்திறமை : ஷோர், கவர்னர்-ஜெனரலாவதற்கு முன்னரே காரன்வாலிசுக்கு ஆட்சிமுறையில் உதவி செய்துவந்தார். இவர் 1795-ல் நிலையான நில வரித்திட்டத்தை வாரணாசியிலும் அமைத்தார். ஆயினும் திட்டத்தின் நிலையான தன்மை நன்மைபயக்கக்கூடியது அன்று என்ற கருத்தை அவர் கொண்டிருந்தார். இவரிடம் அன்பும் நேர்மையும் விளங்கின. மனச்சான்றுக்குக் கட்டுப்பட்டே இவர் செயலாற்றுவர். இவரை ஓர் உண்மைக் கிறித்துவர் என்று கூறலாம். தாம் பதவியினின்று விலகிய பிறகு இவர் ஏசுநாதரின் வாழ்க்கைச் செய்தியைப் பரப்பும் முயற்சியில் கூடுமானவற்றையெல்லாம் செய்துவந்தார். தஞ்சாவூரிலும் அயோத்தியிலும் அரசுரிமைப் போராட்டம் ஏற்பட்டபொழுது தம்முடைய மனச்சான்று உறுத்தியதால் ஷோர், அச்செய்திகளில் தலையிட்டு இயன்றதைச் செய்தார். நவாப் வஸீர் அலியை நீக்கிய அவர் செயல் துணிவு வாய்ந்த ஒன்றும். அந்த நவாப்பிடம் பல குண்டர்கள் இருந்ததால் தமது உயிருக்குத் தீமை விளையக்கூடும் என்று அவர் உணர்ந்தபோதிலும் எண்ணியதை எண்ணியவாறே செய்துமுடித்தார். அவருடைய அச்செயலை இயக்குநர்களும் பாராட்டினர். ஷோர், உண்மை, நேர்மை, ஆற்றல் முதலிய நற்குணங்கள் வாய்க்கப் பெற்றிருப்பினும் ஆட்சித்தலைமையைப் பெறும் தகுதி உடையவரல்லர். ஏனெனின் எதிர்பாராத நிகழ்ச்சிகள் அவரைத் திகைக்கச் செய்துவிடும். இடையூறுகள்

நிறைந்த நிலைமையைத் தனிமையில் தாங்கும் வீரம் அவரிடமில்லை. குறிப்பிட்ட கொள்கைகளைப் பின்பற்று வாரேயன்றி அவற்றின் விளைவுகளைப்பற்றிப் போதுமான அளவுக்கு ஆய்ந்து உணரும் திறமை அவரிடமில்லை. தமது குறைபாடுகளை அவரே உணர்ந்திருந்தார். ஆகவே அரசியலில் இரண்டாவதான நிலையைப் பெறு வதற்குரிய தகுதிமட்டுமே அவருக்கு உண்டு. அவர் கவர்னர்-ஜெனரலாக இருந்தபொழுது ஆற்றிய செயல் களும், பின்பற்றிய கொள்கையும் அவருக்குப்பின் வந்த வருக்கு வன்மையான இடையூறுகளை அளித்தன.

———

பகுதி 10

நானா பட்னிஸ்; உயர்நிலை, இயல்பு, அரசியல் வல்லமை

வாழ்க்கை : (1762-94). 1762 முதல் நானாவின் வாழ்க்கை, முதல் மராட்டியப்போரில் அவர் கொண்ட பங்கு (1775-82), 1786-7-ல் திப்புவுடன் அவர் போராடியது, மூன்றாம் மைசூர்ப் போரில் (1790-2) அவர் ஆங்கிலேயருக்கு உதவியது, முதலியவற்றை முன்னர்க் குறிப்பிட்டோம். 1782க்குப் பிறகு வடஇந்தியாவில் மகாதஜி சிந்தியாவின் ஆதிக்கம் ஏற்பட்டிருந்தது. அக்காலத்தில் பட்னிஸ் அவருடன் நட்பு உறவு கொண்டிருக்கவில்லை. ஆயினும் 1790வரை அவர்கள் ஒருவருக்கொருவர் உள்ளன்பு இன்றி ஒத்துழைத்துவந்தனர். பிறகு அவர்களிடையே நிலவிய தொடர்பு பழுதுற்றது. மூன்றாவது மைசூர்ப் போரில் நானா, சிந்தியாவின் உதவியை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். 1792-ல் நானாவின் கூட்டாளியான ஹோல்காரை துபாயின் முறியடித்தார். 1792 முதல் 1794 வரை நானாவும் சிந்தியாவும் பூனாவில் ஒருவருக்கு எதிராக மற்றவர் சூழ்ச்சி செய்துவந்தனர். 1794-ல் மகாதஜி இறந்தபின் நானா மராட்டியப் பேரரசின் தலைவரானார்.

கர்டாப் போர் (1795): நானா பட்னிஸ் தமது அதிகாரங்களைப் பெருக்கும் வழிகளை மேற்கொண்டார். அவர் ஐதராபாத் நிஸாம் அலியைத் தமக்குச் சேரவேண்டிய சௌத், சர்தேஷ்முகியின் பாக்கித்தொகைகளைக் கொடுக்கும்படி மீண்டும் உரிமையுடன் கேட்டபோது நிஸாம் ஒரு முடிவுக்குவரக் காலந்தாழ்த்தினார். மேலும் நிஸாம் தமது படையை வலிமைப்படுத்தினார். ஐதர் அலியிடம் புஸ்ஸியிடமும் பணியில் அமர்ந்திருந்த பிராங்காய்-டி-ரெய்மண்ட் என்ற ஒரு பிரெஞ்சு வீரரின் உதவியும்

அவருக்குக் கிடைத்தது. ரெய்மண்ட் பயிற்றிய தேர்ந்த படைகொண்டு மராட்டியரை எளிதில் வென்றுவிடலாம் என்று நிஸாம் நம்பினர். ஆகவே தாம் மராட்டியருக்குப் பொருள் கொடுப்பதற்குப் பதிலாக அவர்கள்தான் தமக்கு 2 கோடி ரூபாய்க்குமேல் அளிக்கவேண்டுமென்று அறிவித்தார். மேலும், நாஞவை அவர் இழிவுபடுத்தினர். ஆதலால் நாஞ போருக்கான பெரிய முன்னேற்பாட்டைச் செய்யத்தொடங்கினர். மராட்டியக் கூட்டரசுத் தலைவர்களிடை அதுகாறும் போற்றத்தக்க ஒற்றுமை நிலவவில்லை. ஆயினும் இப்போரில் யாவரும் கலந்துகொண்டு நாஞவுடன் ஒத்துழைத்தனர். அவ்வாறு யாவரும் ஒன்ருக இணைந்து செய்த இறுதிப்போர் அதுதான். தௌலத் ராவ் சிந்தியா, துக்கோஜி ஹோல்கார், கோவிந்தராவ் கெயிக்வார் (1793–1800) நாகபுரியின் II-ம் ரகூஜி பான்ஸ்லே முதலியவர்கள் தம்தம் படைகளுடன் வந்தனர். அப்பெரும் படைக்கு, பரசுராம்பாவோ பட்வர்த்தன் தலைமைதாங்கினர். மராட்டியர் அகமதாபாத்தின் அருகில் உள்ள கர்டாவில் நிஸாமை எதிர்த்துப் போரிட்டனர். பிரெஞ்சு வீரர் பெரான் (Perron) சிந்தியாவின் படையிலும் ரெய்மண்ட் நிஸாமின் படையிலும் இருந்து போரிட்டது குறிப்பிடத்தக்கது. விரைவில் கர்டா பகைவர் வசப்பட்டது. நிஸாமுக்கு ஆங்கிலேயர் (ஷோர்) உதவ மறுத்தனர் என்பதை முன்னர்ப் பார்த்தோம். ஆகவே மராட்டியத் தலைவர்கள் எளிதில் வெற்றியுற்றனர். நிஸாம், நாஞவின் நிபந்தனைகளை ஏற்க இணங்கினர். நாஞவை இழிவு படுத்திய ஐதராபாத் திவான் மஷீர்-உல்-முல்க்கை பேஷ்வாவிடம் நிஸாம் ஒப்படைத்துவிட்டார். ஆண்டுக்கு 35 லட்ச ரூபாய் வருவாய் கிடைக்கக்கூடிய நிலப்பகுதியையும் மராட்டியர் பெற்றனர். போர்ச் செலவுத்தொகையின் பொருட்டும் திறை பாக்கிக்காகவும் நிஸாம் 3 கோடி ரூபாய் கொடுத்தார். இவ்வெற்றியால் மராட்டியர் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தனர். நிஸாமுக்கு அது பெருந்தோல்வியாகும். மராட்டியப் படையுடன் இணைந்திருந்த முரட்டுக் குதிரைவீரர்களான பிண்டாரிகள் தம்

விருப்பம்போல் கொள்ளையடித்து மகிழ்ந்தனர். இப் போரினால் நானாவின் புகழ் உச்சநிலையை எய்தியது. அயலவர் உதவியின்றி அவ்வெற்றி மராட்டியருக்குக் கிடைத்தது குறித்து அவர்கள் மிகுதியாகக் களிப்படைந் தனர்.

II-ம் பாஜிராவ் பேஷ்வா ஆதல் (1796): இன்பத் துக்குப்பின் துன்பம் வருவது இயற்கை என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக, மராட்டியரின் வெற்றியைத் தொடர்ந்து பேஷ்வா சவாய் மாதவராவ் (1774–95) எதிர்பாராத வகை யில் இறந்த நிகழ்ச்சி அமைகிறது. அப்பேஷ்வாவுக்கு 21 வயது ஆனபிறகும் அவர் வலிமைவாய்ந்த அமைச்சர் நானாபட்னிசுக்குக் கட்டுப்பட்டே இருந்துவந்தார். 1795-ம் ஆண்டு அக்டோபர் மாதம் அவர் அரண்மனையின் மேல் அடுக்கிலிருந்து கீழே விழுந்து உயிர் நீத்தார். தம் நிலையைப்பற்றி அவர் கொண்டிருந்த வெறுப்பினால் அவர் தற்கொலை செய்துகொண்டதாகக் கூறுவாருமுளர். எதிர்பாராமல் இடறி விழுந்துவிட்டதாகவும் கருத்து நிலவுகிறது. அச்சாவு நானாவுக்குப் பல இடையூறுகளைக் கொடுத்தது. இரகோபாவுக்கும் ஆனந்திபாயிக்கும் பாஜிராவ் (II,) சிம்னாஜி அப்பா (II) என்ற இரு குமாரர் களும் அமிருதராவ் என்ற எடுப்புப்பிள்ளையும் இருந்தனர். பாஜிராவை நானா சிறையில் அடைத்து வைத்திருந் தார். அச்செயலைப் பேஷ்வாவே வெறுத்தார். நானா, சூழ்நிலையையொட்டி அந்தப் பாஜிராவையே பேஷ்வா ஆக்கினார். மற்றைய தலைவர்கள் தலையிட்டுக் குழப்பம் விளைவுதவற்குமுன் தம்முடைய நிலையை வலிமைப்படுத் திக்கொள்ள நானா அவ்வாறு செய்தார். சிம்னாஜி அப்பாவைச் சிந்தியாவும் நானாவின் எதிர்க்கட்சியினரும் ஆதரித்தனர். நானா எதிர் சூழ்ச்சிசெய்து இறுதியில் தமது நிலையை உறுதிப்படுத்திக்கொண்டார். 1796-ல் II-ம் பாஜி ராவ் பேஷ்வா ஆனார். நானா முன்புபோலவே தலைமை அமைச்சராக அதிகாரம் செலுத்தத் தொடங்கினார். II-ம் பாஜிராவைப் பேஷ்வாக்களில் ஒரு பதடி என்பர் அறிஞர்.

நானாவின் வீழ்ச்சிநிலை : பேஷ்வா பாஜிராவும் நானாபட்னிசும் ஒருவரை ஒருவர் உள்ளூர வெறுத்து வந்தனர். சூழ்நிலைதான் அவர்களைத் தற்காலிகமாக ஒன்றுசேர்த்தது. அச்சூழ்நிலை மாறியவுடன் அவர் களிடை நீறுபூத்த நெருப்புப் போல இருந்த பழைய வெறுப்பே தலைகாட்டலாயிற்று. நானாவின் விழுமிய நண்பராயிருந்த துக்கோஜி ஹோல்கார், 1797-ல் இறந்த பின், அவருக்கு வாய்ப்புக் கேடுகள் பெருகின. சிறிது காலம் ஹோல்கார் இராச்சியத்தைத் தௌலத்ராவ்சிந்தியா மேற்பார்வை செய்துவந்தார். பாஜிராவ் நானாவின் அதிகாரத்தைக் குலைக்கத் தீர்மானித்துச் சிந்தியாவின் உதவிபெற்று அவ்வமைச்சரைச் சிறைபிடித்தார். இதனால் சிந்தியா பூனாவில் சர்வாதிகாரம் பெற்றார். அவரைச் சேர்ந்தவர்கள் தம் விருப்பம்போல் பூனாவில் கொள்ளை இட்டனர். பேஷ்வா, அவற்றைத் தடுக்கவில்லை. சிந்தி யாவுக்குத் தாம் கொடுக்கவேண்டிய தொகையை அக் கொள்ளைகள் மூலம் ஈடுசெய்ய அவர் எண்ணினார். நாதிர்ஷாவிடம் தில்லி இன்னலுற்றது போலவே 1798-ல் பூனா ஆற்றொணாத்துயரத்துக்கு உட்பட்டது. எரியும் கொள்ளியில் எண்ணெய் ஊற்றுவதைப்போல அவ்வமயம் மற்றொரு கலகம் தோன்றியது. சிவாஜியின் குடும்பத்தைச் சேர்ந்த பான்ஸ்லே அரசர்களின் வழியில் வந்த II-ம் சாகு (1777-1808) சதாராவில் ஆண்டு கொண்டிருந்தார் அவர் தமது முன்னோரின் பெருமையை மீண்டும் நிலைநாட்ட விரும்பிப் பேஷ்வாவுக்கு எதிராகக் கலகம் செய்தார். பரசுராம் பட்வர்த்தன் அக்கலகத்தை அடக்கி முன்பு போலவே சாகுவைச் சதாராவில் கட்டுப் பட்டிருக்கச் செய்தார். அதற்கிடையில் மகாதஜி சிந்தியா வின் நான்கு மனைவியரையும் தௌலத்ராவ் விரோதித்துக் கொண்டார். அந்நால்வரும் பேஷ்வாவின் பக்கம் சேர்ந்து கொண்டனர். பாஜிராவின் படைகளுக்கும் தௌலத் ராவின் படைகளுக்குமிடையே போர் மூண்டது. பாஜி ராவ், சிந்தியாவை ஒழிப்பதற்காக நிஸாம் அலியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டார். ஊக்கங் குன்றாத சிந்தி

யாவோ அதற்காக அஞ்சாமல் நானாவைச் சிறையிலிருந்து விடுவித்து நிஸாம் அலியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை ஒழிக்கச்செய்தார். நிஸாம் அலியும் சிந்தியாவுக்குக் கட்டுப்படவேண்டிய நிலையில் இருந்தார். ஆகவே பாஜிராவ் தமது பகைவர்களைத் தோற்கடிப்பது எளிதன்று என உணர்ந்து அமைதியை நாடினார். 1798-ல் நானா மீண்டும் தலைமை அமைச்சரானார். ஆனால் அவர் தமது பழைய உயர்நிலையைப்பெற முடியவில்லை. அந்நிலையில்தான் திப்புவின் வீழ்ச்சி (1799) ஏற்பட்டு, மராட்டிய நாட்டில் குழப்பம் மேலிட்டது; வெல்ஸ்லி கவர்னர்-ஜெனரலாகப் பதவி ஏற்றார் (1798). 1800-ல் நானாவின் வாழ்க்கை முடிவடைந்தது. மராட்டியத் தலைவர்களின் கூட்டரசு உள்நாட்டுப் போராட்டத்தினாலும் சூழ்ச்சித் திட்டங்களாலும் மெலிவுற்று வந்தது. பேஷ்வாப் பதவிக்கு இருந்த சிறப்பும் குன்றிவந்தது. அதைத்திறமையோடு ஆதரித்து வந்த நானா பட்னிசின் சாவுக்குப் பிறகு மராட்டிய நாட்டில் துயரங்கள் மிகுதியாயின.

நானாவின் இயல்பு: நானா பட்னிஸ் ஒரு வைதீக அந்தணர்; சிறந்த உழைப்பாளி; சிக்கனமாக வாழ்ந்தவர்; சொற்களைக் கருதி நடப்பவர் அவர் மெலிந்து நீண்ட உடலமைப்பைப் பெற்றிருந்தார். பயனில்லாத சொற்களைப்பேசி அவர் காலத்தை வீணாக்குவதில்லை. மறைச் செய்திகளைக் கவனமாகக் காப்பாற்றும் இயல்பு அவரிடமிருந்தது. திறமையை அவர் விரும்பிப் போற்றினார். கணக்குமுறையிலும் செயலாண்மைத்துறைச் செய்திகளிலும் அவருக்குத் தனித்திறமை இருந்தது. நுணுக்கமான விவரங்களை அறிந்துகொள்வதில் அவருக்கு ஆர்வம் இருந்தது. பொது ஆவணங்களில் அவர் கொண்ட விருப்பம் குறிப்பிடத்தக்கது. ஒரு ஆவணக் களரித் தலைவரைப்போலப் பதிவுகளை ஒழுங்காக முறைப்படுத்தி வைப்பது அவர் வழக்கம். மராட்டியரின் முழு வரலாற்றையும் எழுதவேண்டுமென்ற எண்ணம் 1783-ல்

அவருக்குத் தோன்றியது. ஆனால் அது நிறைவேற வில்லை. அப்பணியை 1810-ல் ஸ்காட் வாரிங் என்பாரும் 1826-ல் கிரேண்ட் டவ்ஃ (Grant duff) என்ற அறிஞரும் செய்து முடித்தனர். சிறந்த படங்கள் பலவற்றை நானா சேகரித்து வைத்திருந்தார். கலையை ஆய்ந்துணர்ந்து குணம், குறைகளை எடுத்துக்காட்டும் ஆற்றல் ஓரளவு அவரிடமிருந்தது. அவருடைய அறிவுத்திறமை போற்றற் குறியதே. மகாதஜி சிந்தியாவுக்கும் இவருக்கும் உடலமைப்பிலும் உளப் பண்பாட்டிலும் வேற்றுமை உண்டு. மாதவராவின்கீழ் அவர் உயர்நிலை எய்தினா ரென்பதை நாமறிவோம். அவருடைய ஆட்சிமுறைக் கொள்கைகளை நானா பின்பற்ற விழைந்தார். நானாவின் அரசியல் வல்லமையின் பயனைப் பின்னர் கூறுவோம். அவர் காலத்துத் தலைவர்களுடன் ஒப்பிடுமிடத்து நானா நடுத்தரமான கொள்கைகளைப் பெற்ற ஒரு அரசியல் அறிஞர் எனலாம். தக்கணத்தில் ஆதிக்கம் பெறுவதையே அவர் தமது குறிக்கோளாகக் கொண்டார். நாட்டுப் பற்று அவரிடமிருந்தது. தமது வீழ்ச்சி நிலையிலும் கூட (1797—1800) மகாராட்டிரத்தின் நலத்தில் அவர் கருத்துச் செலுத்தினார். ஆங்கிலேயரின் ஆற்றலையும் இயல்பையும் அவர் நன்கு உணர்ந்திருந்ததால் அதற்கேற்ப அவர் களுடன் பழகிவந்தார். அவர்களுடைய ஆதிக்கம் மகா ராட்டிரத்தில் ஏற்படாமல் இருப்பதற்காக அவர் கடுமை யாக உழைத்தார். சொன்ன சொல்லைக் காப்பாற்றும் இயல்பு அவரிடமிருந்தது. அச்செய்தியைப் பொறுத் தவரை அவருடைய பகைவர்களும் அவரை நம் பினர். பெருந்தன்மையுடன் இரக்கப்பண்பும் அவரிடம் மிளிர்ந்தது. பொதுத்துறையிலும் தனித்த முறையிலும் அவர் ஆற்றிய பணிகள் வியத்தகு வகையில் பெரியனவே. ஆனால் அளவுக்கு மிஞ்சிய அதிகாரப் பேராசை அவரிட மிருந்ததால் அவர் பல இடையூறுகட்கு உட்பட்டு மன அமைதியை இழக்கவேண்டியதாயிற்று. அவர் கர்டாப் போர் (1795) முடிந்த உடனேயே அரசியலிலிருந்து விலகியிருப்பாரே ஆயின் அவருடைய பெருமைக்கும்

புகழுக்கும் எவ்வித பழுதும் நேர்ந்திராது. துன்பம் அவருடைய உள்ளத்தைத் தடுமாறச் செய்துவிடும், மனத்தின் சமநிலையை அழித்துவிடும். இச்செய்தியைப் பொறுத்தவரை நானா, சிந்தியாவுக்குக் கீழ்பட்டவரே, என்பது தெளிவு. நானா பட்னிசைக் கண்டு பிறர் மரியாதை செலுத்தினர்; அவருக்குப் பலர் அடங்கினர்; ஆனால் அன்பினால் அன்று; அச்சத்தால்தான். அவர் அத்துணைக் கடுமையாக நடந்துகொள்வார். அவரைக் கொல்லப் பல முயற்சிகள் நடந்தன; ஆனால் பயனுற வில்லை. நானா தமது பகைவர்களை இரக்கமின்றித் துரத்திச் செல்லுவது வழக்கம். வணக்க இணக்கத் தன்மை அவரிடமில்லை. எடுத்துக்காட்டாக, இரகோ பாவை அவர் துன்புறுத்தியது குறிப்பிடத்தகும். இரகோ பாவின் மகனை பாஜிராவிடமும் அவர் கொடுமையாக நடந்துகொண்டதால் இறுதியில் பல தீமைகள் ஏற் பட்டதைக் கண்டோம். பாஜிராவ் ஒரு கொடுங்கோல ராகவே மாறிவிட்டார். நானாவிடம் சிறப்பாகக் குறிப்பிடத் தக்க இராணுவ வலிமை கிடையாது. ஒருசமயம் அவர் தமது கோழைத்தனத்தையும் வெளிக்காட்டிவிட்டார். வடஇந்தியாவில் சிந்தியா ஆற்றிவந்த செயல்களின் சிறப்பை நானா உணரவில்லை. பட்னிஸ் பதவியில் இருந்த அவர், பன்னிருவர் குழுவின் கட்டுப்பாட்டை மீறி மராட்டியப் பேரரசின் தலைவரானார். சிறந்த ஒற்றர் களை அவர் பணியில் அமர்த்தி அவர்கள் மூலம் தமது பகைவர்களை அழித்துவந்தார். சவாய் மாதவராவிடம் அவருக்கு மிக்க அன்பு இருந்தபோதிலும் அவருடைய ஆற்றலை எல்லாம் அடக்கிவைத்திருந்தார். பெண்வழிச் செல்லும் பேதமை அளவுக்கு மிஞ்சி அவரிடமிருந்தது. அவருக்கு ஒன்பது மனைவியர் இருந்தனர் அவர் இறக்குந் தறுவாயில் அவருக்கு வயது ஏறத்தாழ 60. அப்பொழுது இருந்த அவருடைய இரு மனைவியருள் ஒருத்திக்கு வயது 14, மற்றொருத்தியின் வயது 9. 1777-ல் நாராயண ராவ் இறந்தபின் அவருடைய மனைவி கங்காபாயுடன் நானா கூடா ஒழுக்கம் பூண்டிருந்தார். அப்பெண்மணி

தமக்குக் கூடா ஒழுக்கத்தாலேற்பட்ட கருவைச் சிதைக்க முயன்று அதனால் இறந்துவிட்டதாகக் கதைகள் கூறுகின்றன. அதேபோல சவாய் மாதவராவ், தாம் உண்மையில் நானுவுடைய மகன்தான் என்று அறிந்தவுடன் அதைப்பொருது தற்கொலே செய்துகொண்டதாகவும் கதை உளது. ஆனல் இக்கதைகளில் உண்மை இல்லே என்றும் சிலர் கூறுவர், இறுதியாக நானு தமக்குரிய சொத்துக்களே மிகவும் பெருக்கிக்கொண்டார். கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களே அவர் தமக்கென ஈட்டிக்கொண்டதாக அறிகிரோம். நானுவை "மராட்டிய மாக்கிவெல்லி" என்று சிலர் கூறுவர். ஆனல் அக்கூற்றுப் பொருத்தமுடையதன்று.

அரசியல் வல்லமை : நாம் இதுகாறும் பார்த்துவந்த நானுவின் அருஞ்செயல்கள் யாவும் அவருடைய அரசியல் வல்லமையைக் காட்டா நிற்கும். அவர், பம்பாய் அரசியலாரும் இரகோபாவும் செய்த திட்டங்களேத் தோற்கடித்தார்; வாரன் ஹேஸ்டிங்சின் பேரவாவை மட்டுப் படுத்தினர்; (சால்பாய் உடன்படிக்கையுடன் ஹேஸ்டிங்ஸ் அமைதிபெற்றதைக் கண்டோம்), காரன்வாலிசுடன் இணேந்து திப்புவை எதிர்த்தார்; அப்போரில் சிறிதளவு உதவிசெய்துவிட்டுப் பெரும் பயனே அடைந்தார்; மராட்டியத் தலேவர்களே ஒன்றுகூட்டி, கர்டாவில் நிஸாமை முறியடித்தார்; மகாதஜி சிந்தியாவை எதிர்த்துத் தம் நிலேயைப் பூனுவில் காப்பாற்றிக்கொண்டார்; ஆங்கிலேயரிடமிருந்து மகாராட்டிரத்தின் உரிமையைப் பாதுகாத்தார். அவர் இறந்தபின் இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகவே பஸ்ஸீன் உடன்படிக்கைப்படி (1802) பேஷ்வா ஆங்கிலேயரின் ஆதரவில் இருக்க நேர்ந்தது என்பது ஈண்டுக் குறிப்பிடத்தகும். சுருங்கக்கூறின் நானு 20 ஆண்டுகளுக்கு மேலாக மராட்டிய இராச்சியத்தில் ஆதிக்கம் செலுத்தினர். பொருள் துறையிலும் அரசதந்திர ஆற்றலிலும் அவருக்குச் சிறப்பு இருந்தது. எனினும் அவர் தமது படையைச் சீர்திருத்தி அமைப்பதில் கருத்தைச் செலுத்தவில்லே.

அது அவர் இழைத்த பெரிய தவறுகும். மகாதஜியும் இவரும் ஒன்றுசேர்ந்து தம் நாட்டுக்கு உழைத்திருப்பார்களே ஆயின் சிறந்த பயன்கள் ஏற்பட்டிருக்கும். நாஞ, அவரிடமிருந்த அதிகாரப் பேராசையையும் பொருள் நாட்டத்தையும்விடத் தம் நாட்டுப்பற்றையே பெரிதாகி எண்ணி இருப்பாராயின் அவருக்கு வரலாற்றில் மேலும் சிறப்பான இடம் கிடைத்திருக்கும். அரசியலைப் பிறரும் நடத்துவதற்கு அவர் வாய்ப்பளித்திருந்தால் அது அவருக்கு நன்மையை அளித்திருக்கும். அவர் இறந்தபின் மராட்டிய நாடு குழப்பத்திற்குட்பட்டு, முடிவாக 1818-ல் வீழ்ச்சியுற்றது.

———

பகுதி 11

சீக்கியர்

சீக்கியர் உரிமைப் போர்: பஞ்சாபின் முகலாய கவர்னர் 1716-ல் சீக்கிய பண்டாவைக் கொலை செய்தார் என்ற செய்தியை முன்னர்ப் பார்த்தோம். 1738-ஆம் ஆண்டிலும் அதுபோலவே மனிசிங் என்ற சீக்கியத் தலைவர் கொல்லுண்டார். இந்நிகழ்ச்சிகள் சீக்கியரை ஊக்குவித்தன. விடாமுயற்சியுடன் அவர்கள் தமது படையை வலிமைப்படுத்திக்கொண்டு எதிரிகளைத் தாக்கச் சிறிது சிறிதாக முற்பட்டனர். நாதிர் ஷாவின் படையெழுச்சி (1738–9) பஞ்சாபு மாகாண அரசியலின் வலிமையைக் குன்றவைத்தது. அங்கே கொள்ளையடிப்பதற்கான வாய்ப்புகள் பெருகின. அந்நிலையைச் சீக்கியர் தமது நலனுக்குப் பயன்படுத்திக் கொண்டனர். நாதிர் ஷாவின் படை, திரும்புங் காலத்தில் அதையும் சீக்கியர் தாக்கிச் சூரையாடினர். 1748-ல் அப்தலியின் படையையும் அவ்வாறே செய்தனர். 1752-ல் முகலாயப் பேரரசர் பஞ்சாபை அப்தலிக்கு அளித்தார். அதுமுதல் 1761 வரை சீக்கியர் போராட்டம் நிகழ்த்தி வந்ததால் அவர்தம் அதிகாரம் வலிமையடைந்தது. அவர்கள், கொரில்லாப் போர் முறையைப் பின்பற்றி ஆப்கானியப் படையெடுப்பாளருக்கு பல இடையூறுகளை விளைவித்துவந்தனர். 1762ல் அப்தலி மீண்டும் பஞ்சாபுக்கு வந்தார்; சீக்கியரைக் கடுமையாகத் தாக்கி முறியடித்தார்; அமிர்தசரசு கோயிலை அழித்தார். ஆனால் அவர் தம் நாடு திரும்பியபின் மறுபடியும் சீக்கியர் வலிமை பெற்று சர்ஹிந்தை அழித்தனர். 1764-ம் ஆண்டின் அப்தலிப் படையெழுச்சி வெற்றிபெறவில்லை. சீக்கியர் லாகூரைக் கைப்பற்றினர். அமிருதசரசிலிருந்து அவர்கள் தமது வெற்றிக்கு அறிகுறியாகக் காசுகளை வெளியிட்டனர். 1767-ல் அப்தலியின் இறுதிப் படையெழுச்சி நிகழ்ந்தது. அவர் திரும்பும் பொழுது சீக்கியரை

வெல்லுதல் எளிதன்று என்பதை உணர்ந்தார். அவர்கள் தமது தோல்விகளால் மனத்தளர்ச்சி அடையாமல் அவற்றை, வெற்றிக்கு வழிகாட்டியாக அமைத்துக் கொண்டு முன்னேறினர். 1748 முதல் 1767 வரை அப் தலிக்கு எதிராகப் பல சூழ்ச்சிகள் செய்வதில் சீக்கியர் யர் ஈடுபட்டனர். அவர்கள் நடத்திய உரிமைப் போராட் டத்தில் தலைவராக இருந்தவர் ஜஸ்ஸா சிங் அஹ்லு வாலியா என்பாராவர். 1773-ம் ஆண்டில் அவர்கள் பஞ்சா பின் தலைவர்களாக விளங்கினர். அகமது அப்தலியின் மகனர் தைமூர் ஷா (1773 – 93) சீக்கியர்களைத் தொந்தி ரவு செய்யாமல் விட்டுவிட்டார். அவர் மகன் ஸாமன் ஷா (1793 – 1800) பஞ்சாபில் படையெடுத்தார். ஆனால் ஆப் கானித்தானத்தில் அவருக்கு இடையூறுகள் தோன்றி யிருந்ததால் அப்படையெடுப்பே பயனற்றதாயிற்று. அந்நிலையில் சீக்கியத் தலைவர் இரஞ்சித் சிங் முன்னணிக்கு வந்தார்.

சட்லெஜ் ஆற்றின் தெற்கில் இருந்த சீக்கியர் : சட் லெஜ் ஆற்றின் தெற்கில் இருந்த பாட்டியாலா, நாபா முதலிய சீக்கிய இராச்சியங்கள், தில்லியின் நஜீப்-உத்- தௌலாவுக்குப் பலவாறு இடையூறுகளை விளைவித்தன. 1764 முதல் 1770 வரை அக்காரணத்தால், நஜீபின் வாழ்க்கையே வருந்தத்தக்கதாயிற்று. கங்கை - யமுனை (தோஆப்) இடையாற்றுப் பகுதியிலும் தில்லிக்கு அருகில் உள்ள இடங்களிலும் சீக்கியர் கொள்ளையடித்தனர். ஸபீதா கானுடன் அவர்கள் நேச உறவு பூண்டு தமது கொள்ளைத் திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றி வந் தனர். தில்லிக்கும் பேரிடையூறுகள் ஏற்பட்டன. சீக்கி யருக்குச் சில தோல்விகளேற்பட்ட போதிலும் அவர்களது முன்னேற்றம் குறிப்பிடத்தக்கதாகும். " சீக்கியரும் மராட்டியரும்தான் வங்காளத்திலிருந்து ஆங்கிலேயரை விரட்டமுடியும் என்பது முகலாயரின் பொதுவான கருத் தாகும் " என்று 1784-ல் புஸ்ஸி, பிரெஞ்சு அமைச்சருக்கு

எழுதியிருப்பது நோக்கத் தக்கது.* சீக்கியர், ஒரு சிறந்த தலைவரின் கீழ் அடக்கமுடியாத வலிமை பெற்றுவிடுவர் என்றும் ஆங்கிலேயரின் நன்மையின் பொருட்டு அவர்களின் (சீக்கியரின்) வளர்ச்சியைத் தடுக்கவேண்டியது இன்றியமையாதது என்றும் 1784-ல் வாரன் ஹேஸ்டிங்ஸ் கூறியிருப்பதும் கருதத்தக்கது. மகாதஜி சிந்தியா, சட்லெஜ் வரை தமது ஆதிக்கத்தைப் பரப்ப முயன்றார். அவ்வாற்றுக்கு இப்பால் உள்ள நாடுகளுடன் அவர் செய்து கொண்ட உடன்படிக்கை பயனளிக்கவில்லை. சீக்கியரை எதிர்த்து அவர் மேற்கொண்ட போர் நடவடிக்கைகள் ஓரளவுதான் வெற்றி அளித்தன. தௌலத் ராவ் சிந்தியாவின் தானைத் தலைவர் பெரான், சீக்கியரின் முன்னேற்றத்தைத் தடை செய்தார். 1802-ல் அவர், சட்லெஜ்ஜின் தென் பகுதி சீக்கிய நாடுகளை வென்று அவற்றைத் தம்முடைய தலைவர் தௌலத் ராவ் சிந்தியாவுக்குத் திறை செலுத்துமாறு செய்தார். சிந்தியாவுக்குப் பின் அங்கே ஆதிக்கம் பெற்ற ஆங்கிலேயர், இரஞ்சிட் சிங்குடன் போராட வேண்டியிருந்தது.

கல்சாவின் அமைப்பு : 18-ம் நூற்றாண்டில் சீக்கியர், குடியாட்சி முறையில், ஒரு அரசியல், இராணுவ, சமய அமைப்பை ஏற்படுத்தியிருந்தனர். உடன் பிறந்தாருணர்ச்சியும் பொதுநலக் கோட்பாடும் அவ்வமைப்பின் அடிப்படைக் கொள்கைகளாம். அதற்குக் கல்சா என்று பெயர்.

கல்சா : ஒத்த நிலையை உடைய பனிரண்டு சங்கங்களை (மிசுல்கள்)க் கொண்டது. ஒவ்வொரு சங்கம் அல்லது இனத்துக்கும் சர்தார் என்னும் தலைவர் இருந்தார். அவர் ஓர் இராணுவ அதிகாரி. சங்கங்கள் யாவும் உரிமையுடன் இயங்கிவந்தன. எனினும் பொதுச்செய்திகளைப் பொறுத்த வரை கல்சாவின் கட்டுப்பாட்டுக்கு அவை உட்பட்டவை. கல்சாவின் ஆட்சிமுறை குடியாட்சிக் கொள்கையை

---

* *100*, பக். *181*.

அடிப்படையாகக்கொண்டது. ஒப்புணர்ச்சியும் உடன் பிறந்தார் உணர்ச்சியும் அதன் முக்கிய நோக்கங்கள் ஆகும். சர்தார்கள் யாவரும் ஒத்தநிலையைப் பெற்றிருந் தனர். ஆனல் சங்கங்களில் சில பெரியனவாகவும் சில சிறியனவாகவும் இருந்தன. சர்தார்களில் ஒருவரைக் கல்சாவின் தலைவராகத் தேர்ந்தெடுத்து வந்தனர். அவர் அதிகாரம் ஓரளவுக்குக் கட்டுப்பட்டிருந்தது. சங்கங் களிலும் அத்தகைய அமைப்பு இருந்தது. சங்க உறுப் பினர்கள் யாவரும் அரசியல் சமூகம் சமயம் முதலிய வற்றில் ஒரேவகையான உரிமைகளைப் பெற்றிருந்தனர் ஏற்றத்தாழ்வுகளுக்குக் கல்சாவில் சிறிதும் இடம் கிடை யாது. ஒரு சர்தாரின் பெருமை அவருடைய தன்மை யையும் படை வலிமையையும் பொறுத்ததாகும். குடிப் பிறப்புக்கோ செல்வப் பேற்றுக்கோ அந்நிலையத்தில் மதிப்புக்கிடையாது. படைத்துறைப் பணிக்குத்தான் உயர்ந்த மதிப்பு இருந்தது. வலுக்கட்டாயமாக எவரை யும் படையில் சேர்ப்பதில்லை. மக்கள், ஒரு சர்தாரின் தலைமையினின்று நீங்கி வேருெரு சர்தாரின் ஆட்சியின் கீழ் வரமுடியும். போரில் பங்குகொண்ட யாவருக்கும் அதில் பெற்ற பொருள்களில் சமமான பங்கு உண்டு.

சர்வத் கல்சா என்னும் தேசீயசபை அமிர்தசரசில் ஆண்டுக்கு இருமுறை கல்சா தலைவரின் தலைமையின் கீழ்க் கூடி அச்சமஷ்டியின் பொதுக்கொள்கையை ஆராய்ந்து வந்தது. சீக்கியர் அல்லாத அயலவர் இன்னல் கொடுத்துவந்த காலங்களில்தான், கல்சா, மக்கள் யாவரை யும் ஒன்றுபடுத்தி வந்தது. 1767-க்குப் பிறகு உள்நாட்டுச் சச்சரவுகளில் தலைவர்களிடையே தன்நலப்பற்றுத் தீவிர மாக இருந்தது. சீக்கியரின் நாட்டுப்பற்றும் குன்றியது. குடியாட்சிமுறை நிலமானிய முறையாக மாறியது. சீக்கியரின் உரிமைக்கோ ஊறுவிளைந்தது. அச்சூழ்நிலை இரஞ்சித் சிங்கின் எழுச்சிக்கு வழிவகுத்தது.

கல்சா படை: கல்சா படையில் குதிரை வீரர்கள் மிகுதியாக இருந்தனர். காலாட் படைக்குச் சிறப்பில்லை.

பீரங்கிப்படை இருந்தபோதிலும் அதற்கும் சிறப்புக் கிடையாது. படையினர் முறையாகப் பயிற்சிபெறவில்லை. வீர உணர்ச்சியும் உற்சாகமுமே அடிப்படைச் சிறப்புக் களாக விளங்கின. இரஞ்சித்சிங் படையமைப்பை அடியேடு மாற்றிய வரலாறு பின்னர் பேசப்படும்.

இரஞ்சித் சிங் (பி. 1780–இ. 1839): பிற்காலத்தில் சிறந்த சீக்கியத் தலைவரான இரஞ்சித் சிங் மஹா சிங்குக்கும் இராசகௌரிக்கும் மகனாராகப் பிறந்தவராவார். சீனுப்,ராவி ஆறுகளுக்கு இடையே உள்ள குஜ்ரன்வாலா மாவட்டத்திலிருந்த சங்கத்துக்கு 1792-ல் அவர் தலைவ ரானார். 1799-ல் அவர் லாகூரைக் கைப்பற்றிப் பின்னர் மகாராசா என்ற பட்டத்தைப் புனைந்துகொண்டார். 1802-ல் அமிர்தசரசு இவர் வசப்பட்டது. ஆங்கிலேயருக் கும் இவருக்கும் ஏற்பட்ட தொடர்புபற்றிப் பின்னர்க் கூறுவோம்.

பகுதி 12

பண்பாடும் சமூக வாழ்க்கையும்

அஸப்-உத்-தௌலா லக்னௌவில் எடுத்த கட்டடங்கள் சிறப்பு வாய்ந்தவை என்று முன்னர்ப் பார்த்தோம். இந்தூரில் அகல்யாபாய் ஹோல்கார் எடுத்த மாளிகைகளும் மாண்புடையன. வாரன் ஹேஸ்டிங்ஸ் கல்கத்தாவில் கட்டிய இல்லத்தில் கட்டடக்கலைச் சிறப்பு விளங்குகிறது. சௌதா, மீர் என்ற இரண்டு உருதுக் கவிஞர்கள் முறையே ஏறத்தாழ 1771-ம் ஆண்டிலும் 1782-லும் தில்லியிலிருந்து லக்னௌவுக்குச் சென்றனர். சிறந்த வரலாற்று அறிஞரான குலாம் ஹூசெய்னைப் பற்றி முன்னர்க் குறிப்பிட்டோம். தபசூல் ஹூசெய்ன் என்ற கணித நூல் வல்லுநரும் அக்காலத்தில் வாழ்ந்தார். வில்கின்ஸ், ஹால்ஹெட், ஜோன்ஸ் முதலிய அறிஞர்கள் கீழ்நாட்டு வரலாறு, மொழி ஆகியவற்றில் ஆராய்ச்சி செய்துவந்தனர், ஒப்புச் சட்ட இயலில் (Comparative law) குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தவர் சர் வில்லியம் ஜோன்ஸ். அவருடைய கீழ்நாட்டு ஆராய்ச்சித் திட்டம் போற்றத்தக்கது. இந்தியத் தாவரங்கள், இசை, மருத்துவம் கணிதம் முதலியனவும் அவ்வாராய்ச்சியில் இடம் பெற்றன. ஏறத்தாழப் பத்து ஆண்டுகள் அவர் பல்வேறு துறைகளில் சுறுசுறுப்பாக உழைத்தார். கிரேக்கர் குறிப்பிடும் சந்திரகாட்டஸ் என்பார்தான் சந்திரகுப்த மோரியர் என்பதை விளக்கிக்காட்டிய பெருமை அவருக்குண்டு. சாகுந்தலம் இதோபதேசம் மாணவ தர்மசாத்திரம் வேதங்களின் சில பகுதிகள் ஆகியவற்றை அவர் மொழி பெயர்த்தார். 1784-ல் இந்திய இசையைப்பற்றி அவர் எழுதிய கட்டுரை குறிப்பிடத் தக்கது. 1794-ல் அவர் இறந்தார். 1781-ல் கல்கத்தாவில் ஒரு முஸ்லீம் கல்லூரி தோன்றியது. வாரணசியில் 1792-ல் ஒரு வடமொழிக் கல்லூரியும்

இந்தியா 1785—98



சுகர்சகியா மிசில்
அமிருதசரசு
லாகூர்
சர்ஹிந்து
நாபா
பாடியாலா
சர்தானு
மீரட்
ராம்பூர் (ராம்பூர்)
டில்லி
மதுரா
ஆக்ரா
சிக்ரி
மெர்த்தா
ஜோதிபுரி
அஜ்மீர்
ஜெய்புரி
குவாலியர்
லக்னௌ
லக்கேரி
கணவாய்
அலகாபாத்
வாரணசி
பாட்னு
உதய்புரி
மூர்ஷிதாபாத்
டக்கா
உச்சயினி
பரோடா
இந்தூர்
கல்கத்தா
நாக்புரி
ஆமதுநகர்
கர்டா
பம்பாய்
வடசர்க்கார்
பூனு
சதாரா
ஐதராபாத்
கோலாப்பூர்
வாதாபி
குண்டூர்
வேலூர்
ஆர்க்காடு
கிட்டூர்
தார்வார்
பங்களூர்
சென்னை
மங்களூர்
சீரங்கப்பட்டணம்
குடகு
பாராமகால்
மைசூர்
மலபார்
திருவண்ணமலை
புதுச்சேரி
சத்யமங்கலம்
கள்ளிக்கோட்டை
கோயம்புத்தூர்
தஞ்சாவூர்
பாலக்காடு
திண்டுக்கல்
கிராங்கனூர்
கொச்சி
திருவாங்கூர்
X போர்க்களங்கள்
..... = காரன்வாலிஸ் காலத்து இந்தியாவின் உத்தேச எல்லை
S. XAVIER

ஏற்பட்டது. கீழ்நாட்டுக் கலைகளை ஆதரிக்கும் கொள்கையைச் சார்லஸ் கிராண்ட்ஸ் எதிர்த்தார். மேனாட்டுக் கலைகளை ஆங்கில மொழியில் கற்பதுதான் இந்தியருக்கு நன்மையைத் தரும் என்று அவர் வற்புறுத்திவந்தார். வங்காளத்தில் அச்சகத்தோற்றத்தைப் பற்றி முன்னரே குறிப்பிட்டோம். 1785-க்கும் 1794-க்கும் இடையே சென்னையிலும் பம்பாயிலும் செய்தித்தாள்கள் வெளியாகிவந்தன.' தொடக்கத்தில் ஆங்கிலேயர் இந்தியர்களைப் பொருட்படுத்தி அவர்களுடன் தொடர்பு கொள்வதை விரும்பவில்லை. ஆனால் 18-ம் நூற்றாண்டில் நிலைமை மாறியது; இருசாராருக்கும் இடையே நெருங்கிய சமூகத் தொடர்பு ஏற்பட்டது. காரன்வாலிசுக்கு இந்தியரின் ஆற்றலில் நம்பிக்கை கிடையாது. இந்தியரின் தன்மையைப்பற்றி அவர் இழிவாகக் கருதினார். ஐரோப்பியப் பெண்டிர் மிகுதியாக இந்தியாவுக்கு வரத்தொடங்கினர். ஆயினும் சில இந்தியப் பழக்க வழக்கங்களை ஆங்கிலோ-இந்தியர் பின்பற்றினர். 18-ம் நூற்றாண்டின் முடிவில் கல்கத்தாவில் இருந்த ஆங்கிலோ-இந்திய சமூகம் குடி, சூதாட்டம் முதலியவற்றை மேற்கொண்டு அதே காலத்து லண்டன் சமூகத்தைவிடக் கேடுற்ற நிலையில் இருந்தது.

அதிகாரம் 6

வெல்ஸ்லி முதல் ஹேஸ்டிங்ஸ் வரை
(1798 — 1823)

பகுதி 1

வெல்ஸ்லியின் கொள்கை (1798 - 1805)

வெல்ஸ்லி வாழ்க்கையின் முற்பகுதி: பழைய ஐரிஷ் பெருஞ் செல்வர் குடும்பத்தில் 1760-ல் ரிச்சர்டு வெல்ஸ்லி பிறந்தார். காரட் வெல்ஸ்லி என்ற அவரது தந்தை சிறப்பு வாய்ந்த இசைவாணர். வெல்ஸ்லியின் அன்னையும் பண்பாடு மிக்க அம்மையாராவார். அவருடைய இளவல்களில் வில்லியம் என்பார் பார்லிமெண்ட் உறுப்பினராக இருந்து புகழ் பெற்றவர்; ஆர்தர் என்பவர் பிற்காலத்தில் வெல்லிங்டன் டியூக் என்ற சிறப்புப் பட்டத்தைப் பெற்ருர். மூன்ருமவரான கெரால்ட், டர்ஹாமில் சமயத் துறையில் உயர்அதிகாரியாக விளங்கிஞர். இறுதியாக உள்ள ஹென்றி (பிற்காலத்தில் கௌலிப் பிரபு) பிரிட்டிஷ் அரசியல்தந்திரத் துறையில் பெரும் புகழ் பெற்றவராவார். ரிச்சர்டு வெல்ஸ்லி முதலில் ட்ரிம் (Trim) பள்ளிக்கூடத்திலும் பிறகு ஹாரோ பள்ளியிலும் கல்வி பயின்ருர். பள்ளியில் நடத்தைத் தவற்றிற்காக அவர் தமது பத்தாவது அகவையிலேயே ஈட்டனுக்குச் செல்ல நேர்ந்தது. அங்கே அவர் பண்டைய கிரேக்க இலத்தீனிய இலக்கியங்களைக் கற்றுப் புலமை பெற்ருர். ஆக்ஸ்போர்ட் கிரைஸ்ட் சர்ச்சுக் கல்லூரியில் அவருடைய புலமை மேலும் வளர்ச்சியுற்றது. 1781-ல் தம் தந்தை இறக்கவே அவர் பட்டம் பெருமலேயே அக்கல்வி நிலையத்தைவிட்டு நீங்கிஞர். தந்தையின் பிரபுப் பட்டம் இவருக்குக் கிடைத்தது. மார்னிங்டன் பிரபு என்று

வெல்ஸ்லி அழைக்கப்படலானர். 1784-ல் இவர் இங்கிலாந்தின் காமன்ஸ் சபை உறுப்பினரானர். 1793-ல் மேற்பார்வைக் கழகத்தில் இவருக்கு இடம் கிடைத்தது. பொதுச் செய்திகளில் விரிநிலை தழுவிய நோக்கம் அவருக்கு உண்டு. எனினும் பிரெஞ்சுப் புரட்சியின் காரணமாகப் பார்லிமெண்ட்டுச் சீர்திருத்தத்தை அவர் எதிர்த்தார். முன்னேற்றக் கருத்துக்கள் அவரிடம் இருந்தன. பிரெஞ்சு ஜாகோபீனியக் கொள்கையைக் கடுமையாகத் தாக்கி 1794-ல் அவர் நிகழ்த்திய சொற்பொழிவு புகழ்வாய்ந்ததாகும். கீழ்த்தரச் சமூக நிலையில் இருந்த ஒரு பிரெஞ்சு மாதை வெல்ஸ்லி மணந்தார். இந்தியாவின் நிலையைப் பற்றி அவர் மிகுதியான அளவுக்குப் படித்து அறிந்து கொண்டிருந்தார். பிட், தண்டாஸ் ஆகியோருடன் அவருக்கு நெருங்கிய பழக்கம் இருந்தது. 1797-ம் ஆண்டின் தொடக்கத்தில் ஆர்தர் வெல்ஸ்லி (ரிச்சர்டு வெல்ஸ்லியின் இளவல்) உதவிப் படை அதிகாரியாகக் கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்தார். அதே ஆண்டில் ரிச்சர்டு வெல்ஸ்லி சென்னைக் கவர்னரானர். பிறகு இவர், காரன்வாலிஸ் பதவியினின்று விலகியவுடன் கவர்னர்-ஜெனரலாகப் பணியேற்ருர். 1798-ல் இவர் கல்கத்தாவுக்குச் சென்ருர். இவருடைய இளவல் ஹென்றி இவருக்கு அரசியல் செயலாளராக இருந்தார். இவர் கடலில் வரும்பொழுதே இந்தியாவைப்பற்றிய நிலைமையை நன்கு அறிந்து கொண்டிருந்தார்.

இந்திய அரசியல் நிலையும் வெல்ஸ்லியின் கொள்கையும் : இடர்ப்பாடுகளைத் தரும் நிலைமையை ஆழ்ந்து ஆய்ந்து உணர்ந்து கூர்ந்த அறிவுடன் செயயாற்றும் திறமை வெல்ஸலியிடம் இருந்தது. அவர் பொதுச் செய்திகளை ஐயம் திரிபுற அறிந்து அவற்றிற்கேற்பச் சிறந்த திட்டங்களை வகுத்தார். குறிக்கோளை அடைவதில் விடாமுயற்சி அவரிடம் இருந்தது. இந்திய ஐரோப்பிய அரசியல் தொடர்பைத் தெளிவாக உணர்ந்து அவர் இந்தியாவில் பிரிட்டிஷ்

ஆட்சியை அதற்கு ஏற்பட்ட இடையூறுகளிலிருந்து (உள்நாட்டு, வெளிநாட்டு) காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டார். அவர் இந்நாட்டுக்கு வந்தபோது இந்தியா வின் அரசியல்நிலை கம்பெனியின் நலனுக்கு ஏற்றதாக இல்லை. அந்நிலைக்கு ஏற்ப அவர் தம் கொள்கையை அமைத்துக்கொண்டார். இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பிரெஞ்சியரால் இடையூறுகள் தொடர்ந்து வந்ததை அவர் உணர்ந்தார். இயல்பாகவே அவர் பிரெஞ்சுக்காரர்மீது பகைமை பூண்டிருந்தார். பிரெஞ்சுப் புரட்சியையும் அவர் எதிர்த்தார். அக்காலத்தில் நெப் போலியன் தம் பேரரசைக் கிழக்கிலும் விரிவுறச்செய்ய முயன்றுவந்தார். 1798-ல் அந்த பிரெஞ்சு வீரர் எகிப்தில் படையெடுத்திருந்தார். நீல நதிக்கரையில் நெல்சன் அடைந்த வெற்றி நெப்போலியனின் கீழ்நாட்டுப் பேராசையை அழித்தது. அந்த ஆங்கிலேயக் கடற் படைத் தலைவர் (நெல்சன்) 1775-ல் பம்பாய்க்கு வந்திருந்தார் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. நெப்போலியன் திரும்பிவிட்டபோதிலும் இந்தியாவில் ஆங்கிலேயர் அச்சமற்று இருக்கமுடியவில்லை. அந் நிலையில் கவர்னர்-ஜெனரலாக அமர்ந்த வெல்ஸ்லி அக்காலத்துக்கு ஏற்ற கொள்கையைப் பின்பற்றி இந்தியாவில் பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்கு இடையூறு ஏற்படாவண்ணம் தக்க முன்னேற்பாடுகளைச் செய்ய லானார். தமது முன்னவர் பின்பற்றிவந்த தலையிடாக் கொள்கை அக்காலத்துக்கு ஏற்றதன்று என்பது அவர் கருத்து. இந்திய இராச்சியங்களுக்கு இடையே வல்ல மைச் சமநிலையைச் சிறப்புற அமைப்பதென்பது இயலாத செயல் என்பதையும் அவர் உணர்ந்திருந்தார். யாவ ருக்கும் மேலான தலைமை நிலையைக் கம்பெனி அடைய வேண்டும் என்பது அவர் குறிக்கோளாய் அமைந்தது.

இனி 1798-ம் ஆண்டில் வடஇந்தியாவின் அரசியல் நிலையை இங்கே சுருங்கக் கூறலாம். வடமேற்கு இந்தியாவில் ஸமான் ஷா தமது ஆக்கிரமிப்புக் கொள்கை

யால் ஆங்கிலேயருக்கு இன்னல் விளைத்துவந்தார். அயோத்தியின் சாதத்அலி உள்நாட்டு ஆட்சி முறையைச் சீர்திருத்த இயலாமல் தம் நாட்டைக் காவலற்ற நிலையில் வைத்திருந்தார். பதவியிலிருந்து நீக்கப்பட்ட விஸீர்அலி ஆங்கிலேயருக்கு எதிராக இடையூறுகளை விளைவித்து வந்தார். அவர் 1799-ல் வாரணாசியிலிருந்த ரெஸிடெண்டையும் வேறு சில ஆங்கிலேயரையும் கொன்றுதள்ளினார். ஆனால் ஆங்கிலேயர் அவரைக் கைப்பற்றிக் கல்கத்தாவில் சிறைப்படுத்தினர். 1817-ல் வேலூரில் அவர் இறந்தார். அவ்வமயம் இருந்த இந்தியச் சிற்றரசர்களில் மிகவும் வலிமை வாய்ந்தவர் தௌலத் ராவ் சிந்தியா ஆவர். அவருடைய ஆட்சிப்பகுதி உச்சயினியும் குவாலியரு மாகும். அவருக்குப் பெரானின் உதவி கிடைத்திருந்தது. இராசபுத்திரர்களும் முகலாயப் பேரரசரும் அவருக்கு அடங்கி இருந்தனர். வடஇந்தியாவிலும் தக்கணத்திலும் அவர் ஆதிக்கம் நிலைத்திருந்தது. 1797-ல் இந்தூரின் துக்கோஜி ஹோல்கார் இறந்துவிட்டதால் முறையற்ற வகையில் அவருக்குப் பிறந்த ஜஸ்வந்த் ராவ் தலைமை நிலையை அடையக்கூடிய தறுவாயிலிருந்தார். பரோடாவில் கோவிந்தராவ் கெய்க்வார் சிந்தியாவுடனும் பேஷ்வாவுடனும் பகைமை பூண்டிருந்தார். நாகபுரியில் II-ம் ரகூஜி பான்ஸ்லே ஆங்கிலேயருக்கு எதிராகச் சூழ்ச்சிகள் செய்துவந்தார். பூனாவில் இரண்டாம் பாஜி ராவ் பேஷ்வாவாக அமர்ந்ததையும் நானாவின் சிறப்புகள் குன்றிவந்ததையும் முன்னரே குறிப்பிட்டுள்ளோம். அங்கே கலகங்கள் கடுமையாக இருந்தன. ஆகவே மராட்டிய இராச்சியத்தில் ஒற்றுமை இன்மையைக் காண்கிறோம். நிஸாம் 1795 முதல் ஆங்கிலேயருடன் பகைமை கொண்டிருந்தார். அவர் படையினருக்குப் பிரெஞ்சு வீரர் பயிற்சியளித்துவந்தனர். கருநாடகத்தில் 1795-ல் நவாப்பாக வந்த உம்தத்-உல்-உமாராவின்கீழ் ஆட்சிமுறைக் குழப்பம் பெருகிற்று. நாவாப்பு சென்னையிலேயே வாழ்ந்துவந்தார். திப்புவுடன் ஆங்கிலேயருக்குப் பகையாகச் சூழ்ச்சி செய்வதில் அவர் கருத்துச்

சென்றது. முன்னர்க் குறிப்பிட்டதுபோல் சென்னை அரசியலார் ஆற்றலற்று இருந்தனர். 1798-ல் கிளைவ் பிரபு (ராபர்ட் கிளைவின் மகனுர்) சென்னை கவர்னராகப் பதவியேற்ருர்.

வெல்ஸ்லி அக்காலத்துக்கு மட்டும் ஏற்ற ஒரு தற்காலிகக் கொள்கையை அமைத்துக்கொள்ளவில்லை. அவருடைய கொள்கை நிலையாகப் பிரிட்டிஷ் ஆதிக்கத்தை இந்தியாவில் ஏற்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அப்பொழுது இந்நாட்டில் நிலவிவந்த கேடுகளை ஒழித்து ஆட்சிமுறையைச் சீர்திருத்தக் கூடிய வல்லமை ஆங்கிலேயருக்கு மட்டுமே உண்டு என்பது அவருடைய உறுதியான நம்பிக்கை. அக்கருத்தை ஒட்டியே நாடுகளை இணைத்துக்கொள்ளும் அவர் செயல் சிறப்புடையதாகக் கருதப்படுகிறது. ஆனுல் அவர் அமைத்த பாதுகாப்பு முறை உடன்படிக்கைத் திட்டம் ஆட்சிமுறைச் சீர்கேட்டைப் பெருக்கியது, என்பதும் குறிப்பிடத்தக்கது. வெல்ஸ்லி. போர்களில் வெற்றி பெற்று பிரிட்டிஷ் இராச்சியத்தை விரிவுறச் செய்தார். மேலும் அமைதியான உடன்படிக்கைகளின் மூலம் அவர் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தைப் பெருக்கினுர்.

பாதுகாப்புமுறை உடன்படிக்கைத் திட்டம் அல்லது துணைபுரி உடன்படிக்கைத் திட்டம்: (Subsidiary System) நிஸாம், அயோத்தி நவாப்பு முதலிய இந்தியச் சிற்றரசர்களுடன் வெல்ஸ்லிக்கு முன்னர் இருந்த தலைவர்கள் ஒருவகை உடன்பாடுகளைச் செய்துகொண்டதை நாம் முன்னர்ப் பார்த்தோம். அவ்வுடன்பாடுகளின்படி அதில் சேர்ந்த நாடுகள் குறிப்பிட்ட தொகையை ஆங்கிலேயருக்கு அளித்தன. அந்நாட்டுச் சிற்றரசர்களுக்கு ஆங்கிலேயர் படை உதவி அளித்துவந்ததால் அத்தொகை அவர்களுக்குக் கிடைத்தது. ஆங்கிலேயர் பெரும்பான்மையும் அத்துணைப்படைகளை அந்தந்த இராச்சியத்தின் வெளிப்புறத்திலேயே தங்கச் செய்திருந்தனர். மேற்கூறிய தொகை மாதந்தோறும் அல்லது

ஆண்டுதோறும் செலுத்தப்பட்டுவந்தது. சிற்சில காலங்களில் சிற்றரசர்கள் பணத்திற்குப் பதிலாக நிலப் பகுதிகளையும் கொடுத்துவந்தனர். தொகை ஒழுங்காக செலுத்தப்படாததால் சில சமயங்களில் இடையூறுகள் ஏற்பட்டன. அத்தகைய ஒரு முறையை வெல்ஸ்லி விரிவடையச்செய்து உறுதியாக்கினர். ஐதராபாத், மைசூர், லக்னௌ, பேஷ்வா, பான்ஸ்லே, சிந்தியா ஆகியோரின் இராச்சியங்கள் முதலியன வெல்ஸ்லியின் புதிய திட்டத்தின்கீழ் வந்தன. அப்பாதுகாப்புமுறை உடன்படிக்கையின்படி அதனை ஏற்றுக்கொண்ட நாடு ஆங்கிலேயர் அல்லாத பிற ஐரோப்பிய அரசர்களுடன் எத்தகைய தொடர்பும் வைத்துக்கொள்ளக்கூடாது. குறிப்பாகப் பிரெஞ்சுக்காரருடன் தொடர்புகொள்வது தடுக்கப்பட்டது. ஒரு பிரிட்டிஷ் ரெஸிடெண்டும் ஆங்கிலேயத் துணைப் படையினரும் உடன்படிக்கையைச் சேர்ந்த நாட்டில் இருந்துவரலாயினர். அப்படைச் செலவுக்காகச் சிற்றரசர் ஆங்கிலேயருக்கு நிலப்பகுதி வழங்கவேண்டும். ஆங்கிலேயரது அனுமதியின்றிச் சிற்றரசர்கள் எந்த ஐரோப்பியரையும் தமது பணியில் அமர்த்திக்கொள்ளக்கூடாது. மேலும் அவர்கள் வேறு எந்த இந்திய அரசர்களுடனும் அனுமதியின்றி எவ்வகைத் தொடர்பையும் கொள்ளக்கூடாது. உள்நாட்டுச் செய்திகளில் துணைப்படை தலையிடக்கூடாது என்பதும் அத்திட்டத்தின் ஒரு நிபந்தனையாகும். இவ்வாறு கம்பெனியாரின் படைக்குத் தேவையான யாவும் அவர்களுக்கு எளிதில் கிடைத்தன. பிரெஞ்சியரை எதிர்க்கக்கூடிய வலிமை கம்பெனிக்குக் கிடைத்தது. அதே சமயத்தில் சிற்றரசர்கள் அவர்களுடைய உள்நாட்டு, வெளிநாட்டுப் பகைவர்களிடமிருந்து காப்பாற்றப்பெற்றனர். உள்நாட்டுக் கலகமோ அயலவர் படை எழுச்சியோ ஏற்படக்கூடும் என்ற அச்சம் சிற்றரசர்களுக்கு இல்லை. ஆனால் அவர்கள் உரிமை நிலை மறைந்தது. அரசியல் இராணுவச் செய்திகளில் கம்பெனியையே நம்பவேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டது.

கம்பெனியார் பெற்ற நன்மை: மேற்கூறிய உடன் படிக்கைத் திட்டம் கம்பெனியின் ஆக்க மூலங்களை மிகுதி யாக்கியது; திறமையைப் பெருக்கியது. அதே சமயத்தில் பாதுகாப்பைப் பெற்ற சிற்றரசர்கள் வலிமை குன்றினர். கம்பெனியின் ஆட்சிக்குட்பட்ட நிலப்பகுதிகளில் போர் அழிவுபாடுகள் ஏற்படுவதற்கில்லை. மேலும் நாட்டை இணைத்துக்கொண்டனர் என்ற பழிச்சொல் இல்லாம லேயே ஆங்கிலேயர் தம் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டனர். தாய்நாட்டினர் குறை கூறுவதற்கும் பிற ஐரோப்பிய நாடுகளின் பொருமை வளர்வதற்கும் இட மில்லை. இந்தியாவில் ஆங்கிலேயரின் நிலை வலிமை யடைந்தது. இந்தியாவில் அமைதியை நிலைநாட்டும் பொறுப்பும் அவர்களுக்கு ஏற்பட்டது. ஆனால் அதே சமயத்தில் ஆட்சிமுறைச் சுமையை ஏற்கவேண்டிய பெரும் கடமை அப்போது அவர்களுக்கு இல்லை. இந் தியாவில் இருந்த பிரிட்டிஷ் பேரரசை இந்தியப் பிரிட் டிஷ் பேரரசாக மாற்றியது 1802-ம் ஆண்டில் பஸ்ஸீ னில் நிகழ்ந்த பாதுகாப்புமுறை உடன்படிக்கை என்று உள்ள கூற்று குறிப்பிடத்தக்கது. துணைபுரி உடன் படிக்கைகள் யாவற்றிலும் மேற்கூறிய உடன்படிக்கை தான் மிகவும் சிறப்பு வாய்ந்தது எனலாம்.

திட்டத்தின் குறைபாடுகள்: ஆங்கிலேயரின் படை கள் காவல் பொறுப்பை ஏற்றுக்கொண்டதால் இந்தியச் சிற்றரசர்கள் தமது படைகளில் இருந்த தேர்ச்சிபெற்ற ஆயிரக்கணக்கான போர்வீரர்களை நீக்கிவிட்டனர். வேலையை இழந்த அவர்கள் தாமும் துன்புற்றனர். பிற ரையும் துன்புறுத்தினர். மத்திய இந்தியாவில் இதனால் குழப்பம் விளைந்தது. வேலையற்ற வீரர்கள் கொள்ளைக் கூட்டத்தினரைச் சேர்ந்தனர். பிண்டாரிகளின் வலிமை பெருகியது. அதனால் உரிமை வாய்ந்த சிறிய நாடுகளுக்கு இன்னலேற்பட்டது. இந்திய நாடுகள் ஐரோப்பிய நாடு களுடன் (இங்கிலாந்து நீங்கலாக) தொடர்பு கொள்ள முடியாததால், அவை தனிப்படுத்தப்பட்டன. தனிப்படுத்

தப்பெற்ற நிலை, பின்னர் ஆங்கிலேயருக்கே அனுகூலமாயிருந்தது. பாதுகாப்புக்கு உட்பட்ட அரசுகள் இந்தியச் சிற்றரசர்களுடன் தொடர்பு கொண்டு சூழ்ச்சிகள் செய்வதை வெல்ஸ்லி தமது திட்டத்தால் தடுத்து அதில் வெற்றிபெற்ருரென்று கூறமுடியாது.. மேலும், பாதுகாப்பைப்பெற்ற நாடுகளின் தலைவர்கள் ஆட்சிமுறையில் பொறுப்பற்றிருக்கத் தொடங்கினர். கொடிய ஆட்சிமுறையால் உள்நாட்டுக் கலகம் விளையும் என்ற அச்சம் அவர்களுக்கு இல்லை. கலகத்தை அடக்கத் துணைப்படை இருந்ததால் அச்சமின்றி, பொறுப்பின்றி அவர்கள் செயலாற்றினர். ஆகவே ஆட்சிமுறைச் சீர்கேடுகள் பெருகின. பொறுப்பும் அதிகாரமும் வேறுபடுத்தப்பட்டிருந்ததால் பல தீமைகள் விளைந்தன. உள்நாட்டு அவலநிலை ஆங்கிலேயருக்குத்தான் அனுகூலமாயிருந்தது. அடுத்த அரை நூற்ருண்டில் மெலிவுற்றுவந்த சிற்றரசுகள் பிரிட்டிஷாருடன் இணைந்துகொள்வதே சாலச் சிறந்தது என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. துணைப்படைமுறை, இணைக்கும் கொள்கைக்கு வழி வகுத்தது. வெல்ஸ்லியின் திட்டத்தின் குறைபாடுகளை அவர் காலத்துச் சிலர் உணராமலில்லை. துணைப்படைமுறை, இந்திய நாட்டின் படையைச் சிறப்பற்றதாக்கிவிடும்; காவலின் பொருட்டு இந்தியர் ஆங்கிலேயரையே நம்பவேண்டியதாயிருக்கும்; இத்தகைய நிலைவிரும்பத் தக்கதன்று என்ற கருத்துக்களை ஆர்தர் வெல்ஸ்லியே 1803-ல் குறிப்பிட்டிருக்கிருர். இம்முறை, உள்நாட்டு அரசியலை ஆற்றலற்றதாக்கிவிடும்; கொடுமை நிறைந்ததாக்கிவிடும்; மக்களின் முன்னேற்றைத் தடுத்துவிடும் என்று சர் தாமஸ் மன்ரோ 1817-ல் எழுதியுள்ளார். “ஒரு நாட்டின் உள்துறை அமைப்பைச் சீர்கேடு அடையச்செய்து துணைப்படை கொண்டு துண்டாடுவதைவிட நேர் முறையில் அதை வென்று தம்முடன் இணைத்துக் கொள்வதுதான் ஆங்கிலேயரின் பண்பாட்டுக்கும் தகுதிக்கும் ஏற்ற செயல்” என்று அவ்வறிஞர் குறித்திருப்பதும் நோக்கத்தக்கது.

இறுதியாகப் படைச் செலவுக்காகச் சிற்றரசர்கள் செலுத்த வேண்டிய தொகை மிகுதியாக இருந்தது. இந்திய நாடுகளின் பொருளாதார நிலைக்கு ஏற்ற வகையில் அத்தொகை குறிக்கப்படவில்லை. துணைப்படையினரோ அளவுக்கு மீறி ஊதியம் பெற்றனர்.

பகுதி 2

திப்புவும் நான்காம் மைசூர்ப் போரும் (1799)

1792-க்குப் பின் திப்புவின் நிலை: 1792-ம் ஆண்டு உடன்படிக்கைப்படி திப்பு, தாம் செலுத்த வேண்டிய பணத்தை இரண்டு ஆண்டுகளுக்குள் கொடுத்துவிட்டுப் பிணையாக அனுப்பியிருந்த தம் குமாரர்களை மீட்டுக் கொண்டார். அவ்வுடன்படிக்கையால் தமக்கு ஏற்பட்டிருந்த இழிவு அவர் மனத்தை மிகவும் உறுத்திவந்தது. விரைவில் அக்குறையை நிறைவு செய்வதற்காகத் தமது இராணுவத்தை வலிமைப்படுத்தியும் பொருள்வளத்தைப் பெருக்கியும் வந்தார். 1796-ல் அரசர் IX-ம் சாமராசர் இறந்தார். திப்பு, பெயரளவுக்கு ஒரு அரசனை அமர்த்தி வைப்பதில் பயனில்லை என்று கருதினர் போலும். புதிதாக யாரையும் அவர் அரசராக்க வேண்டாமென்று தீர்மானித்துவிட்டார். அரண்மனையை அவர் சூறையாடினர். அதே ஆண்டில் அவர் காபூலுக்கு ஒரு தூதுக் குழுவை அனுப்பினர். ஆங்கிலேயருடைய பகைவர்கள் அனைவருடனும் நட்புகொள்ள வேண்டுமென்பதே அவருடைய எண்ணம். அக்கருத்துடன் பாரசீகத்துக்கும் அரேபியாவுக்கும் அவர் முடங்கல்கள் எழுதி அனுப்பினர். சிறப்பான இந்திய நாடுகளை இணைத்து ஆங்கிலேயருக்கு எதிராக ஒரு கூட்டுறவை அமைப்பதில் முனைந்தார். பிரெஞ்சுக்காரரின் உதவியைப் பெறுவதற்கான முயற்சிகளைச் செய்தார். பிரெஞ்சுப் புரட்சிக் கருத்துக்களைப் பாராட்டி சீரங்கப்பட்டணத்தில் விழாக்கள் நடந்தன. பிரெஞ்சுக் குடியரசுக் கொடியும் அங்கே பறந்தது.

வெல்ஸ்லியின் போர் முன்னேற்பாடுகள்: திப்பு, பிரெஞ்சியருடன் இணைந்து ஆங்கிலேயரை எதிர்க்கத் திட்டமிடுவதை உணர்ந்த வெல்ஸ்லி உடனே அச்சுல்தானுடன் போர் தொடுக்க விரும்பினர். ஆனல் அக்

கொள்கையைச் சிலர் ஆதரிக்கவில்லை. திப்புவை ஒடுக்கக் கூடாது என்றும் அவரை மராட்டியருக்கும் நிஸாமுக்கும் எதிரிட்ட ஒரு தடையாக ஓம்ப வேண்டுமென்றும் சென்னை அரசியலார் கருத்துத் தெரிவித்தனர். ஆனால் வெல்ஸ்லி அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். அதற்கு மாறாக நிஸாமுடனும் மராட்டியருடனும் ஒப்பந் தங்கள் செய்து கொண்டு திப்புவை எதிர்க்க வேண்டு மென்பதே அவருடைய திட்டமாகும். 1798-ல் அவர், நிஸாமுடன் பாதுகாப்பு உடன்படிக்கைத் திட்டம் செய்து கொண்டார். நிஸாமிடமிருந்த பிரெஞ்சுப் படையினர் வெளியேறினர். 1790-ம் ஆண்டு முக்கூட்டுறவை மீண்டும் அமைக்க வேண்டுமென்று வெல்ஸ்லி மராட்டி யரை வேண்டினர். ஆனால் அவர்கள் அதற்கு இணங்கவில்லை. கவர்னர் - ஜெனரல் திப்புவுக்கு எழுதிய முடங்கலில், எகிப்தில் ஆங்கிலேயர் அடைந்த வெற்றி ய்யச் சுட்டிக்காட்டி அவரைப் பிரெஞ்சியரோடு சேருவதை விடுக்குமாறு அறிவுரை கூறினர். திப்பு அதற்குத் தெளிவான பதில் எதையும் அளிக்கவில்லை. ஆகவே வெல்ஸ்லி சென்னைக்கு வந்து (1798-ம் ஆண்டின் இறுதி நாள்) தமது ஆற்றலின் காரணமாகக் கிளைவ் பிரபுவின் ஒத்துழைப்பைப் பெற்றார். அதற்கிடையில் கான்ஸ் டாண்டிநோபில் சுல்தான் சலீம், திப்புவுக்கு எழுதிய முடங்கலில் இஸ்லாமுக்குப் பகைவரான பிரெஞ்சியருடன் நட்புகொள்ள வேண்டாம் என்று திப்புவுக்கு அறிவுரை கூறினர். ஆனால் திப்புவோ, ஆங்கிலேயர்தான் இஸ்லா முக்கு மிகக்கொடிய பகைவர்கள் என்று பதிலளித்து விட்டுத் தமது கொள்கையையே விடாது பின்பற்றினர். வெல்ஸ்லி 1799-ல் திப்புவுடன் போர்தொடுத்தார்.

நான்காம் மைசூர்ப் போர் (1799): ஆங்கிலேயர் கிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் மைசூரைத் தாக்கினர். தளபதி ஸ்டூவர்ட்டின் கீழிருந்த பம்பாய்ப் படை குடகு எல்லைப்புறத்தில் திப்புவைத் தோற்கடித்தது. ஹாரிஸ் என்பவரின் தலைமையில் இருந்த சென்னைப் படையும்

மாலவல்லி (மைசூர் மாவட்டம்) என்ற இடத்தில் வெற்றி பெற்றன. அந்த இடத்தில் போரை எதிர்பார்க்காத திப்பு தோல்வியுற்றுப் பின்வாங்கினுர். ஹாரிஸ் காவிரியைக் கடந்து, சீரங்கப்பட்டணத்தை மூற்றுகையிடத் தொடங்கினுர். போர் கடுமையாக நடைபெற்றது. சுல்தான் அமைதியை நாடி விண்ணப்பித்துக்கொண்டார். வெல்ஸ்லி அவரது நாட்டில் பாதியும் இரண்டு கோடி ரூபாயும் பிணையாக அவருடைய நான்கு குமாரர்களையும் கொடுக்குமாறு திப்புவைக் கேட்டார். சுல்தான் அதற்கு இணங்கவில்லை. இழிவான நிலையில் உயிர்வாழ்வதைவிட உண்மை வீரனைப் போல் போர்புரிந்து அதில் இறத்தலே மேலாகும் என்ற முடிவுக்கு அவர் வந்துவிட்டார். அவரிடம் பல்லாண்டுகளாகக் கைதியாயிருந்த சர் டேவிட் பாயர்ட், கடும் போரிட்டுத் தலைநகரின் கோட்டைச் சுவர்களைத் தகர்த்து வழியுண்டாக்கினுர். திப்பு, போரில் பல காயங்களடைந்து இறுதியில் போர்வீரன் ஒருவனுல் சுடப்பட்டு இறந்தார். ஆகவே வியப்புறத்தக்க வகையில் போர் இரண்டு மாதங்களிலேயே முடிந்துவிட்டது. வெல்ஸ்லியின் திட்டப்படியே நிகழ்ச்சிகள் நிறைவேறின. திப்புவின் மகனுரான படே ஐதரும் அமைச்சர் பூர்ணையரும் பணிந்துவிட்டதால் பகைவர்களின் சினத்துக்கு இலக்காகாது தப்பினர்.

பகுதி 3

திப்பு சுல்தானின் இயல்பும் தோல்வியும்

இயல்பு: திப்பு, நடுத்தரமான உயரமும், குறுகுறுப்பான விழிகளும், கருடனது போன்ற மூக்கும் குறுகிய கழுத்தும் பருத்த உடலும் கொண்டவர். அவர் தாடி வளர்த்துக்கொள்ளவில்லை; எளிய உடையையே அணிந்து வந்தார்; எப்பொழுதும் தூய்மையாகவே இருக்க விரும்பினர். வைதீகத்தன்மையும் சமயப்பற்றும் அவரிடமிருந்தன. வீண்செலவு செய்வதை அவர் வெறுத்தார். அவருக்கு 13 ஆண் மக்களும் பல பெண்மக்களும் இருந்தனர். எனினும் பெண்டிரை அவர் குப்பைக்குச் சமமாக மதித்தார். ஆனல் தம் அன்னையிடம் அவருக்கு மிக்க அன்பு இருந்தது. அவருடைய அறிவுரைகளுக்குத் திப்பு சிறப்பு அளித்தார். போற்றத்தக்க ஆற்றலும் முறையாகச் செயலாற்றும் ஊக்கமும் திப்புவிடமிருந்தன. அவர், சிறப்பிக்கத்தக்க உடல் வலிமையும் உள்ள வலிமையும் பெற்றிருந்தார். அவர் சுறுசுறுப்பானவர்; பொது அறிவு மிக்கவர்; அரசியல் திறன் உள்ளவர்; கல்வி அறிவு பெற்றவர்; மேனுட்டுக் கல்வியில் ஆர்வம் கொண்டவர்; இந்துஸ்தானி, கன்னடம், பாரசீகம் ஆகிய மூன்று மொழிகளிலும் நன்கு பேசுவார். அறிவுத்துறையில் அனைத்தையும் தாம் அறிந்துவிட்டதாக அவருக்கு ஒரு எண்ணம் இருந்தது. அவரிடம் ஆழ்ந்த அறிவு இல்லாத போதிலும் அகன்ற அறிவு இருந்ததாகக் கூறலாம். சமயம், விஞ்ஞானம், மருத்துவம், பொறிஇயல், ஆட்சி முறைப்பிரிவுகள், முதலிய பலவற்றைப் பற்றியும் அவர் கருத்துத் தெரிவிப்பது வழக்கம். அவர் எழுதியுள்ள முடங்கல்கள் அளவிறந்தன. சிறந்ததோர் நூல் நிலையத்தை அவர் அமைத்தார். அதில், மதம், கடவுள் கொள்கை விளக்கம் வரலாறு, அறநூல், சட்டநூல், மெய்விளக்கநூல், வானசாத்திரம், கணிதம், பூதநூல்,

மொழிநூல், முதலிய பலதிறப்பட்ட செய்திகளைப் பற்றிய கையெழுத்துப் பிரதிகள் இருந்தன. திப்புவிடம் அறிவாற்றலுடன் திண்மையும் தீரமும் விளங்கின. தமது இறுதிக்காலத்தில்கூட அவர் தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்காக தம்மிடமிருந்த பிரெஞ்சுப் போர்வீரர்களைப் பகைவர்களிடம் காட்டிக்கொடுக்க மறுத்துவிட்டார் என்ற செய்தி அவருடைய பண்பாட்டைக் காட்டுகிறது. அவரிடம் அன்பாயிருந்தவரிடம் அவரும் அன்பாயிருந்தார். ஹன்னிபால் உரோமானியரை வெறுத்தது போலவே திப்பு ஆங்கிலேயரை வெறுத்துவந்தார். திப்பு, புலியைத் தமது அடையாளமாகக் கொண்டிருந்தது பொருத்தமானதேயாம். திப்பு, கொடிய கொள்கை வெறியர் என்றும் பேய்த்தன்மை நிறைந்தவர் என்றும் சிலர் கருதுவர். அவர் தமது அன்னையின் சொல்லையும் மீறி மலையாளத்திலும் குடகிலும் மதவெறி காரணமாகக் கொடுமைகள் இழைத்ததாக அறிகிறோம். தமது வைதீக இஸ்லாமியப் பற்றுக்கு உண்மையாக அவர் ஒழுகியதைக் காண்கிறோம். பூர்ணையயரையும் அவர் முகம்மதியராக்க முயன்றாராம். ஆனால் திப்புவின் தாய் அதைத் தடுத்து விட்டார். ஆங்கிலேயக் கைதிகளிடம் சுல்தான் காட்டிய கொடுமை வெறுக்கத்தக்கது. ஆங்கிலப் பெண்டிர் தமது இல்லங்களில் குழந்தைகளை அச்சுருத்தி அடக்க திப்புவின் பெயரைப் பயன்படுத்திவந்ததாகக் கூறப்படுகிறது. பண்டைக்கால உரோமானியத் தாய்மார்கள், ஹன்னிபால் என்ற பெயரை அவ்வாறு பயன்படுத்தியதாக அறிகிறோம். குற்றவாளிகளைக் கூண்டில் அடைத்தும், நோயினாலும் பட்டினியாலும் சாகச்செய்தும் திப்புத் துன்புறுத்தினர். கட்டாய மதமாற்றம், கழுத்தை இறுத்திக் கொல்லுதல், நஞ்சூட்டுதல், கழுத்தை வெட்டுதல், உறுப்புக்களைக் களைதல், கழுவிலேற்றுதல், சித்திரவதை, யானைகளைக் கொண்டு இடறச்செய்து கொல்லுதல், புலிகளின் குகைகளில் தள்ளுதல் முதலிய பலவகை தண்டனைகளைக் குற்றவாளிகட்கும் கைதிகட்கும் திப்பு வழங்கிவந்தார். அவரிடம் தற்பெருமை மிகுதியாக உண்டு. தாமறியாதது

ஒன்றுமில்லை என்பது அவர் கருத்து. பிறரை ஐயுறும் மனப்பான்மை அவரிடமிருந்தது. சொன்ன சொல்லைக் காப்பாற்றும் உறுதி அவரிடமில்லை. வஞ்சகம் துரோகம் முதலிய தீய முறைகளைக் கையாள அவர் தயங்கியதில்லை.

போர் வீரத்திறன்: போரிடுதலில் அவரது தந்தையிடம் இருந்த ஆற்றலில் ஒரு சிறு பகுதியே திப்புவிடம் இருந்தது. விரைவாகப் படைகளைச் செலுத்தவும் தந்திர முறைகளைக் கையாளவும் அவர் அறிந்திருந்தார். ஆனால் சிறிது சிறிதாக அவருடைய போர்த்திறமை குன்றிவந்தது. தமது ஆற்றலில் அளவுக்குமீறிய நம்பிக்கை அவருக்கு இருந்ததால் பல கேடுகளை அடைந்தார். பீரங்கிப் படையை அவர் வலிமைப்படுத்தியபோதிலும் குதிரைப் படையைப் புறக்கணித்தார். அவரது படைத்திறமையில் பல குறைபாடுகள் இருந்தன.

ஆட்சிமுறைத் திறமை: மாறுதல்களைச் செய்ய வேண்டுமென்ற ஆர்வம் திப்புவிடம் மிகுதியாக இருந்தது. படை, வங்கிமுறை (Bank), அளவைகள், வாணிகம் காசுமுறை, ஆண்டுமுறை முதலிய பல செய்திகளில் அவர் சீர்திருத்தங்களைச் செய்தார். கட்குடியை ஒழிக்கச் சட்டமியற்றினர். புதிய பொன், வெள்ளி, செப்புக்காசுகளை வெளியிட்டார். 12 இடங்களில் காசடிக்கும் சாலைகள் இருந்தன. அவற்றில் தார்வார், குத்தி, கள்ளிக்கோட்டை பெரோக், சீரங்கப்பட்டணம், பங்களூர் முதலிய இடங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. அவருடைய காசுகளில் காணும் அரேபிய எழுத்துக்கள் அணிபெற்று விளங்குகின்றன. அவர் தம் தந்தை வெளியிட்டதைவிட மிகுதியான அளவுக்குக் காசுகளை அச்சடித்தார். திப்புவின் சீர்திருத்த ஆர்வம் நமக்கு அவர் காலத்திய பிரெஞ்சுப் புரட்சி வீரரின் ஆர்வத்தை நினைப்பூட்டுகிறது. அவர் தமது சிவில், இராணுவ அலுவலரை பெரும்பாலும் நம்புவதில்லை. மிக விவரமான ஆணைகளை அவர்களுக்கு இட்டுவந்தார். ஒரு கப்பற்படை தயாரிப்பதிலும் அவர் தம் கருத்தைச் செலுத்தினர். பழைய வரிமுறையையே

திப்பு பின்பற்றிவந்தார். போர்களாலும், மேற்பார்வைக் குறைவாலும் உழவர்கள் மிக்க துயருற்று வந்தனர். மக்களை மகிழ்விக்கவோ அமைதிப்படுத்தவோ சுல்தான் அக்கரை கொள்ளவில்லை. கொடுங்கோன்மை காரணமாக இந்துக்களும் முகம்மதியரும் அவரை வெறுத்தனர். சுருங்கக் கூறின் திப்புவின் செயல்கள் அழிவுச்சார்பானவை; ஆக்கச்சார்பானவை அல்ல.

ஐதருடன் ஒப்பிடுதல்: திப்பு சுல்தான், ஐதரைவிட மிகுதியாகக் கல்வி பயின்றவர்; மிகுதியாகச் சமயப்பற்றுக் கொண்டவர்; மிகுதியாக ஒழுக்கம் பூண்டவர். ஆயினும் போர்த்திறமையிலும் ஆக்கச்சார்பான ஆற்றலிலும், அவர் தம் தந்தையைவிடக் கீழானவரே. மதச்செய்திகளில் ஐதருக்குச் சகிப்புத்தன்மை உண்டு. அவர் திப்புவைப்போல அவ்வளவு கொடியவரல்லர். இருவருக்குமிடையே பல சிறப்பான வேறுபாடுகள் இருக்கக் காண்கிறோம். தந்தையிடமிருந்த பெருந்தன்மை தனயனிடமில்லை. ஆங்கிலேயரை ஐதர் வெறுத்ததைவிட மிகுதியான அளவுக்குத் திப்பு வெறுத்தார். ஐதர், உயர்வான அதிகாரங்களைச் சிறந்த அரசியல் வல்லமையுடன் செயலாற்றிவந்தார். திப்புவிடம் தனித்தன்னுதிக்க பண்பு திகழ்ந்தது. அவுரங்கசீபைப் போலவே திப்பு, அளவு கடந்து செயல்களைப்புரிந்து நாட்டில் வெறுப்பை வளர்த்தார். ஐதரிடமிருந்ததைவிட அதிகமாகவே ஊக்கமும் முயற்சியும் திப்புவிடம் இருந்தன. ஆனால் சிறு மாறுதல்களைச் செய்து ஐதர் கண்ட முன்னேற்றத்தைப் பெரிய மாறுதல்கள் செய்த திப்புக் காணமுடியவில்லை. "ஐதர் முன்னேற முயலும் அரசராகிச் சிறு மாறுதல்களை செய்தார்; திப்பு மாறுதலிடும் மன்னனாகி ஒருவித முன்னேற்றமும் செய்தாரில்லை" என்ற குறிப்பு நோக்கத்தக்கது. முன்னவரிடம் உறுதியான பேரறிவு இருந்தது. பின்னவர் நிலையற்ற சிற்றறிவே படைத்திருந்தார். அரசியலுக்குத் தக்க அலுவலரைத் தேர்ந்தெடுப்பதிலும் பிறருடைய இயல்பை அறிந்துகொள்வதிலும் ஐதருக்கு

இருந்த ஆற்றல் அவர் மகனுருக்குக் கிடையாது. மதக் கொள்கையின் அடிப்படையில் அலுவலரைத் தேர்ந்தெடுக்கும் வழக்கம் ஐதரிடம் இல்லை. ஆனால் திப்புவிடம் உண்டு; இருவருமே கொடுங்கோலர்கள்; தவறிழைக்கத் தயாங்காதவர்கள். ஆனால் அத்தன்மை ஐதரிடம் குறைவாகவும் திப்புவிடம் மிகுதியாகவும் இருந்தது. ஐதரைவிடத் திப்புக் கொடியவர் எனலாம். ஆங்கிலேயரிடம் ஐதர் தோல்வியடைந்தமைக்குக் காரணமாயிருந்த சூழ்நிலையை முன்னர்ப் பார்த்தோம். ஆனால் திப்புத் தோல்வியடைந்ததற்குப் பெரும்பாலும் அவரே காரணமாவர். ஐதர் படைத்ததைத் திப்பு அழித்தார் என்ற கூற்றை மறுப்பது எளிதாக இல்லை. "ஐதரின் நடத்தை எஞ்ஞான்றும், கவனம், அனுபவம், அறிவு ஆகியவற்றை ஒட்டியே நிகழும்; திப்புவின் நடத்தையோ அவற்றை வெட்டியே நிகழும்; என்று முகம்மதிய வரலாற்றறிஞர் மீர் ஹுசெய்ன் அலி கான் குறிப்பிட்டிருக்கிறர்.

பகுதி 4

வெல்ஸ்லியும் மைசூரும்

திப்புவின் வீழ்ச்சிக்குப்பின் அவருடைய இராச்சியத்தில் வெற்றிபெற்ற வெல்ஸ்லியின் ஆதிக்கம் நிலவியது. ஆனால் அந்நாட்டின் பெரும் பகுதியைக் கம்பெனி எடுத்துக்கொள்வது மானக்கேடான செயலாகுமென்பது கவர்னர்-ஜெனரலின் கருத்தாகும். திப்புவின் வலிமையை அழிக்கவேண்டு மென்பதுதான் அவர் போர் தொடுத்ததின் நோக்கம். திப்புவின் குடும்பத்தினர் வழிவழியாகப் பிரெஞ்சுக்காரரோடு நட்பாடிய காரணத்தால் அவர்களை அரச பதவியில் அமர்த்த ஆங்கிலேயருக்கு விருப்பமில்லை. ஆகவே, முன்பு ஐதரால் உரிமையினின்று நீக்கப்பட்ட பழைய இந்து அரசகுடும்பத்தினருக்கே திப்பு இராச்சியத்தின் நடுப்பகுதியைக் கொடுக்க அவர்கள் தீர்மானித்தனர். மற்றைய பகுதிகளை ஆங்கிலேயரும் நிஸாமும் தமக்கிடையே பங்கிட்டுக்கொண்டனர். மராட்டியருக்கு ஒரு பகுதியை அளித்தனர். ஆனால் அத்துடன் இணைக்கப்பட்ட நிபந்தனைகளை விரும்பாததால் மராட்டியர் தமக்கு அப்பகுதி வேண்டாமென்று கூறிவிட்டனர். ஆதலால் அப்பகுதியையும் ஆங்கிலேயரும் நிஸாமும் தமக்கிடையே பகிர்ந்துகொண்டனர். முடிவாக ஆங்கிலேயர் பெற்ற இடங்களாவன:—கன்னடநாடு, (வடக்கு, தெற்கு கன்னட மாவட்டங்கள்), வைநாடு (மலபார் மாவட்டத்தின் ஒரு பகுதி), கோயம்புத்தூர் தாராபுரம் (கோயம்புத்தூர் மாவட்டம்), மைசூர் இராச்சியத்தின் கிழக்கில் உள்ள சில சிறு பகுதிகள், சீரங்கப்பட்டணம் முதலியனவாம். நிஸாம் அடைந்த பகுதிகள் வருமாறு :—குத்தியைச் சுற்றியுள்ள பகுதி (அனந்தப்பூர் மாவட்டம்), குர்ரம்கொண்டா (சித்தூர் மாவட்டம்), சித்தல்துர்க்கம் மாவட்டத்தில் ஒரு பகுதி ஆகியனவாம். ஆனால் 1800-ல் நிஸாம் ஆங்கிலேயருடன் புதிய பாதுகாப்புமுறை உடன்படிக்கை செய்துகொண்ட

தால் அதன்படி மேலே குறித்த இடங்களை அவர் ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிட நேர்ந்தது. வெல்ஸ்லி 1799ல் கிருட்டினராச உடையார் என்ற 5 வயது சிறுவனை மைசூர் மன்னராக்கினர். அச்சிறுவர் முன்னர் மைசூரில் ஆண்டு கொண்டிருந்த இந்து அரசகுடும்பத்தைச் சேர்ந்தவர். மைசூர், புதிய இந்து நாட்டின் தலைநகராகியது. பூர்ணையர் அரசரின் திவான் ஆனர். 1811 வரை அவர் சிறப்பான தொண்டுகளாற்றி வந்தார். சர் பாரி க்ளோஸ் மைசூரில் ஆங்கில ரெஸிடெண்ட் ஆக அமர்த்தப்பெற்றார். 1799-ல் மைசூருடன் ஆங்கிலேயர் செய்துகொண்ட பாது காப்புமுறை உடன்படிக்கைப்படி மைசூரின் அரசியல் முழுவதையும் ஆங்கிலேயர் தம் கண்காணிப்பில் வைத்துக் கொண்டனர். மைசூர் அரசர் கொடுக்கவேண்டிய படைச் செலவுத் தொகையை, போர் முதலிய நெருக்கடிக் காலங்களில் கவர்னர்-ஜெனரல் தம் விருப்பம்போல் அதிகப்படுத்தும் உரிமைபெற்றிருந்தார். மேலும் உள்நாட்டுஇடையூறுகள் மிகுதிப்பட்ட காலங்களில், ஆங்கிலேயரே மைசூரின் அரசியலை நேரடியாக மேற்கொள்ளவும் உடன்படிக்கை இடந்தந்தது. திப்புவின் குடும்பத்தினர் வேலூருக்குச் சென்று அங்கே உதவி ஊதியம் பெற்றுக்கொண்டு வாழ்ந்து வந்தனர். திப்பு சிறைப்படுத்தியிருந்த தூந்தைய வாஹ் என்ற மராட்டியக்கொள்ளைக்காரன், சீரங்கப் பட்டண முற்றுகைக் காலத்தில் தப்பி ஓடிவிட்டான். அவன் மைசூரில் ஐதர் செய்ததைப்போலவே தானும் தனது ஆதிக்கத்தை நிறுவ பெருமுயற்சி செய்துவந்தான். 1800-ல் கர்னல் வெல்ஸ்லி அவனை முறியடித்தார். மைசூரின் அமைதியைக் குலைத்த அவன் தோல்வியுற்று இறந்தான். மைசூரில் இந்து அரசை மீண்டும் நிலை நாட்டிய பெருமை (கர்னல்) ஆர்தர் வெல்ஸ்லியைச் சாரும்.*

திப்புவைத் தோற்கடித்து, மைசூரைப் பங்கிட்டுப் புதியதோர் உடன்படிக்கையைச் செய்து கொண்ட புகழ்

---

* *14*, V, பக். *346*.

வெல்ஸ்லிக்கு உண்டு. ஆயினும் அவருக்குச் சிறந்த முறையில் உதவி அளித்து வந்த இராணுவ, சிவில் துறைப் பணியாளர்களேயும் நாம் மறப்பதற்கில்லை. தளபதி ஹாரிஸ், ஸ்டூவர்ட், பாயர்ட், கர்னல் வெல்ஸ்லி, ஹென்றி வெல்ஸ்லி, பாரி கிளோஸ், தாமஸ் மன்ரோ, ஜான் மால்கம் முதலியவர் ஆற்றிய பணிகள் பாராட்டத் தக்கவை. சீரங்கப்பட்டணத்திலிருந்து கிடைத்த பொருள்களில் பத்து லட்ச ரூபாயையும் வேறு பல விலை உயர்ந்த பரிசுகளேயும் வெல்ஸிக்குக் கம்பெனியார் கொடுக்க முன்வந்தனர். ஆனால் அதை ஏற்க அவர் மறுத்துவிட்டார். அச்செயல் அவருடைய இயல்பின் பெருமையைக் காட்டுகிறது. அதை அறிந்த இயக்குநர்கள் வெல்ஸ்லிக்கு ஆண்டு ஒன்றுக்கு 5000 பவுன்கள் வீதம் 20 ஆண்டுகளுக்குப் படி வழங்கத் தீர்மானித்தனர். கவர்னர் - ஜெனரல் ஆற்றிய அருஞ் செயலுக்காகப் பார்லிமெண்ட்டு அவருக்கு நன்றி தெரிவித்தது. அரசர், ஐரிஷ் பிரபுப் பட்டமான மார்க்குவிஸ் என்பதை வெல்ஸ்லிக்குச் சூட்டினார். ஆனால் கவர்னர் - ஜெனரல் அதனால் மனநிறைவு பெறவில்லை. தமது தகுதிக்கேற்ற பட்டம் வழங்கப்படவில்லை என்ற குறை அவருக்கு இருந்தது. அவர் 1781-ல் தம் தந்தை வழியாக ஐரிஷ் எர்ல் கோமான் பட்டம் பெற்றார்; 1797-ல் ஆங்கிலப் பிரபுக்கள் தொகுதியில் பாரன் (Baron) என்ற பட்டத்தைப் பெற்றார்; 1799-ல் மார்க்குவிஸ் (ஐரிஷ்) பட்டம் அவருக்குக் கிடைத்தது. அதைவிட உயர்ந்ததான ஆங்கில டியூக் பட்டத்தை அவர் மனம் நாடியது. பிரதம அமைச்சர் பிட் அவர் காலத்தில் தாராள மனப்பான்மையுடன் பலருக்கு தகுதியற்றவர்களுக்குக் கூட மிக உயர்ந்த பட்டங்களை வழங்கி வந்தார். அவ்வாறிருக்க வெல்ஸ்லியின் ஆற்றல் உயர்ந்த முறையில் பாராட்டத்தக்கது என்பதில் ஐயமில்லை. ஆனால் கிடைத்த பட்டத்தை அவர் இழிவாகக் கூறியதால் அரசருக்குச் சினமுண்டாகிவிட்டது. ஆதலால் அவருக்கு மேற்கொண்டு எந்தப் பட்டமும் வழங்கப்படவில்லை.

அதைப் பொருட்படுத்தாமல் இருக்கக்கூடிய உளப் பண்பாடு வெல்ஸ்லிக்கு இல்லை. உயரிய பண்புகள் அவரிடமிருந்த போதிலும் பகட்டை அவர் உள்ளம் நாடியது. மேலும் தமக்கு உதவி செய்தவர்களின் பெருமையையும் தாய்நாட்டு அரசியலார் தக்க முறையில் பாராட்டவில்லை என்ற குறையும் வெல்ஸ்லிக்கு உண்டு.

———

பகுதி 5

தஞ்சாவூர், சூரத், கருநாடகம், பரூக்காபாத்

தஞ்சாவூர் (1799) : அமரசிங்கை நீக்கிச் சரபோஜி தஞ்சை அரியணையில் அமர்ந்த செய்தியை முன்னர்ப் பார்த்தோம். வெல்ஸ்லி தஞ்சாவூர் அரசியலைத் தாம் கைக்கொள்ள விரும்பினர். ஆகவே 1799-ல் அவர் சரபோஜியுடன் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டார். சரபோஜி, பாதிரியார் ஷ்வார்ட்ஸின் மாணவராவர் ; பண்பாடுமிக்கவர் ; அவரது பழக்க வழக்கங்கள் பாராட்டத் தக்கன. இயல்பாக தமக்கு அமைந்திருந்த ஆற்றலை அவர் கல்வி, கேள்விகளால் பெருக்கிக்கொண்டார். பிரெஞ்சு, ஆங்கில இலக்கியங்களை நன்கு கற்றிருந்தார். ஷேக்ஸ்பியர் நாடகங்களில் ஊன்றிக் கருத்தைச் செலுத்தி யிருந்தார். ஆங்கிலத்தில் செய்யுட்கள் இயற்றும் ஆற்ற லும் அவருக்கு இருந்தது. அவர் விழுமிய புத்தக நிலையம் ஒன்றை அமைத்திருந்தார். அவர் தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, மராத்தி முதலான மொழிகளிலுள்ள ஏட்டுச்சுவடிகளைத் தேடிக்கொணர்ந்து அரண்மனையில் 'சரஸ்வதிமால்' எனப்படும் புத்தகச்சாலையில் வைத்தார். இப்புத்தக நிலையம் உலகில் சிறந்ததொன்றும். பேரறிஞர் பர்னல் தாம் தயாரித்துள்ள புத்தகநிலையப்பட்டி அட்ட வணையில் இதையும் குறிப்பிடுகிருர். பெரும்பாலும் வட மொழி நூல்களே இங்கு உள்ளன. வேதம், வேதாந்தம், மருத்துவம், நாட்டியம் முதலிய பல செய்திகளைப்பற்றிய கையெழுத்துப் பிரதிகளை நாம் இங்கு காணலாம். இப் பொழுதும் தஞ்சாவூர் அரண்மனையில் சரபோஜியின் பெயரிடப்பட்டு அப்புத்தக நிலையம் விளங்குகிறது. அவ் வரசர் தஞ்சை இராசராசேச்சுரத் திருக்கோயிலுக்குப் புரிந்த திருப்பணிகள் எல்லாம் அங்குள்ள கல்வெட்டுக் களில் கூறப்பட்டுள்ளன. ஒரு கல்வெட்டில் மராட்டிய அரசர்களின் குடிவழி வரையப்பெற்றிருத்தல் குறிப்பிடத்

தக்கதாகும். சரபோஜியின் உருவச்சிலையை அரண்மனைக் கொலு மண்டபத்தில் இன்றும் பார்க்கலாம். அவர், ஒரு காட்சிச்சாலை, அச்சகம், முதலியவற்றையும் அமைத்தார். குதிரைகளின்மீது அவருக்கு மிக்க விருப்பமிருந்தது. கற்றோரை அவர் ஆதரித்தார்; எளியோரிடம் கருணை காட்டினார். சரபோஜியுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைப்படி இராச்சியத்தின் அரசியல் நிர்வாகத்தை ஆங்கிலேயர் ஏற்றுக்கொண்டனர். தஞ்சைக் கோட்டையும் அதன் அக்கம் பக்கங்களையும் மட்டும் அரசர், தம் ஆதீனத்தில் வைத்துக்கொண்டார்; ஆங்கிலேயரிடமிருந்து 4 லட்ச ரூபாய்ப் படியாகவும் பெற்றார். அமர்சிங்குக்கு ஒரு லட்ச ரூபாய் ஓய்வுக்கால ஊதியம் கொடுக்கப்பட்டது. அமரசிங்கின் ஆட்சிக் காலத்திலிருந்த சீர்கேடுகள் மறைந்தன. தஞ்சை அம்மாறுதலால் நன்மை அடைந்தது. மேலேகண்ட உடன்படிக்கையை இயக்குநர்கள் விரும்பவில்லை. எனினும் வெல்ஸ்லி தமது முயற்சியினாலேயே அதை நிறைவேற்றினார். 1833-ல் சரபோஜி இறந்தார். பின், பட்டமேற்ற அவர் மகனார் சிவாஜியின் வாழ்க்கை 1855-ல் முடிவடைந்தது. அவருக்கு 20 மனைவியர் இருந்தபோதிலும் மகன் ஒருவருமில்லை. இரண்டு பெண் மக்கள் மட்டும் பிறந்தனர். டல்ஹௌசியின் ஆட்சிக் காலத்தில் இயக்குநர்களின் தீர்மானப்படி தஞ்சையின் அரசப்பதவி மறைந்தது.

சூரத் (1800) : சூரத் கோட்டையின் காவல் பொறுப்பைக் கம்பெனியார் 1759-ல் ஏற்றுக்கொண்டனர். 1799-ம் ஆண்டின் தொடக்கத்தில் நவாப்பு இறக்கவே, அச்சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு, கவர்னர்-ஜெனரல், 1800-ல் அந்நகரின் முழு நிர்வாகத்தையும் தம் வசப்படுத்திக் கொண்டார். பின் பட்டமேற்ற புதிய நவாப்பு, வெறும் பட்டத்தோடும், ஆண்டுதோறும் கொடுக்கப்பட்ட ஒரு லட்சம் ரூபாயோடும் மேல்வருவாயில் ஐந்தில் ஒரு பங்கோடும் மனமகிழ்ச்சிபெற வேண்டியதாயிற்று. 1817 முதல் ஒன்று சேர்க்கப்பட்ட திரட்டு நிதியாக அவர் 1½

லட்ச ரூபாய் பெற்றுவந்தார். சூரத்தை இணைத்துக் கொண்ட இச்செயல் முறையற்றது என்று பலர் கருதினர். பம்பாய் கவர்னர் "ஜொனுதனும்" அவ்வாறே எண்ணினுர். ஆயினும் வெல்ஸ்லியின் ஆணையை நிறைவேற்ற வேண்டிய கடமை அவருக்கு இருந்தது. கம்பெனியின் நலங்களைப் பெருக்கவேண்டுமென்ற குறிக்கோளுடன் தான், கவர்னர்-ஜெனரல் அச்செயலைப்புரிந்தார். எனினும் அதற்கு அவர், முகலாயப் பேரரசுக்குக் கீழ்ப்படிந்திருந்த எவ்வித அரசாட்சியையும் கம்பெனி ஏற்றுக் கொள்வது முறையானதே என்று நேர்மை விளக்கம் கூறினுர்.

கருநாடகம் (1801): 1792-ம் ஆண்டு உடன்படிக்கைப்படி கருநாடக நவாப்பு, போர்க்காலங்களில் கருநாடக அரசியல் முழுவதையும் அங்கிலேயர் வசம் கொடுத்து விடுவதாகவும், ஆங்கிலப் படையொன்றின் செலவுக்காக ஆண்டுதோறும் கட்டணம் செலுத்துவதாகவும் ஒப்புக் கொண்டார் என்பதை முன்னர்ப் பார்த்தோம். வயது முதிர்ந்த நவாப்பினுல் அக்கட்டணத்தை ஒழுங்காகச் செலுத்தமுடியவில்லை. அவருக்குக் கடன் தொல்லைகள் மிகுதியாயின. கருநாடகத்தில் அமைந்திருந்த இரட்டை ஆட்சி, சீர்கேடுகளைப் பெருக்கின. 36 சதவீதம் வட்டிக்காக நவாப்பு ஆங்கிலேயரிடமிருந்து கடன்பெற்று வந்தார். வங்காளத்தில் கிளைவின்கீழ் இரட்டையாட்சியில் மக்கள் துன்புற்றதைவிட அதிகமாகவே கருநாடக மக்கள் துயருற்று வந்தனர். அரசியல் சீர்கேடுகளை ஒழித்துவிட வெல்ஸ்லி முயன்ருர். ஆனுல் தொடக்கத்தில் முயற்சி பயனளிக்கவில்லை. நவாப் உம்தத்-உல்-உமாராவும் அவருக்குக் கடன் கொடுத்திருந்தவர்களும் அம்முயற்சியை எதிர்த்தனர். திப்புவின் தோல்விக்குப் பிறகு சீரங்கப்பட்டணத்தில் இருந்த சில முடங்கல்களை ஆங்கிலேயர் கைப்பற்றினர். நவாப்பும் இறந்துபோன அவர் தந்தையும் மைசூர் சுல்தானுடன் ஆங்கிலேயருக்கு எதிராகச் சூழ்ச்சி செய்ததாக அம்முடங்கல்கள் அறிவிக்

கின்றன என்று வெல்ஸ்லி கூறினர். உம்தத்-உல்-உமா ராவைப் பொறுத்தவரை அவர் துரோகச் செயல்புரிந்தார் என்பதற்குப் போதுமான சான்றில்லை. எனினும் கவர்னர்-ஜெனரல் அச்செய்தியை விசாரிக்க ஒரு குழுவை அமர்த்தினர். நவாப்பு, ஆங்கிலேயருடன் செய்துகொண்ட உடன்படிக்கைகளை மீறினர் என்றே அக்குழு முடிவு செய்தது. ஆகவே நவாப்பு தமது பட்டத்தை இழந்துவிட வேண்டுமென்று கவர்னர்-ஜெனரல் அறிவித்தார். ஆனல் 1801-ம் ஆண்டில் நவாப்பு இறந்துவிட்டார். அவருடைய உயிலின்படி அவரது இளைய மகனர் அலி ஹுசெய்ன் பதவியேற்கவேண்டும். ஆனல் அச்சிறுவனுக்கும் இறந்துபோன நவாபின் மருகன் ஒருவனுக்கும் போராட்ட மேற்பட்டது. அந்நிலைமை ஆங்கிலேயேருக்கு அனுகூல மாயிருந்தது. அவர்கள், தாமிட்ட நிபந்தனைகளை யேற்க மறுத்த அலி ஹுசெய்னை புறக்கணித்து ஒதுக்கி, அவற்றைத் தடையின்றி யேற்றுக்கொண்ட மருகனை நவாப் பாக்கினர். கருநாடக அரசியல் நிர்வாகம் அனைத்தும் கம்பெனியின் வசமாயிற்று. ஆகவே கிழக்கு மலைத் தொடருக்கும் வங்காள விரிகுடாவுக்கு மிடைப்பட்டு நெல்லூர் மாவட்டத்திலிருந்து கன்னியாகுமரி வரை உள்ள நிலப்பகுதி ஆங்கிலேயர் ஆட்சியின்கீழ் வந்தது. புதிய நவாப்பு III-ம் வாலாஜா (1801-20) "நவாப்" என்ற பட்டத்தை மட்டும் பெற்றிருந்தார். கருநாடகத்தின் தேறிய வருமானத்தில் ஐந்தில் ஒரு பங்கையும் உதவி ஊதியமாகப் பெற்ருர். கருநாடகத்தில் ஆட்சிமுறையையும் மக்களின் நலத்தையும் பொறுத்தவரை ஆங்கிலேயரின் ஆட்சி போற்றத்தக்கதாக இருந்தபோதிலும், வெல்ஸ்லி கையாண்டமுறை நேர்மையானதன்று.

பரூக்காபாத் (1802) : ஆங்கிலேயர் அயோத்தியுடன் 1801-ல் செய்துகொண்ட உடன்படிக்கைப்படி பரூக்காபாத் உட்பட்ட நிலப்பகுதியைக் கம்பெனியார் பெற்றனர். பரூக்காபாத் நவாப்புகள் ஆங்கிலேயருக்கு அடங்கியே ஆட்சிபுரிந்து வந்தனர். அவ்வாறிருந்தும் கம்பெனியின்

நேர் ஆட்சி அங்கு ஏற்பட்டால்தான் நன்மை ஏற்படும் என்று வெல்ஸ்லி கருதினர். எதிர்த்துப் போரிட முடியாத நிலையில் இருந்த இந்திய நாடுகள் யாவற்றையுமே ஆங்கிலேயரின் ஆட்சி முறையின்கீழ் கொண்டுவர வேண்டுமென்பதே அக்கவர்னர்-ஜெனரலின் கொள்கையாயிருந்தது. ஆகவே பருக்காபாத் 1802 முதல் கம்பெனியின் ஆட்சிக்கு உட்பட்டது. நவாப்பு ஆண்டுக்கு ஒரு லட்ச ரூபாய் உதவி ஊதியம் பெற்றுவந்தார்.

பகுதி 6

ஐதராபாத், லக்னௌ

ஐதராபாத்: 1798-ல் நிஸாம் ஆங்கிலேயருடன் பாதுகாப்புமுறை உடன்படிக்கையைச் செய்துகொண்டார் என்பதை முன்னர்ப் பார்த்தோம். அதன்படி நிஸாம் தாம் பெற்ற துணைப்படைக்காக ஆங்கிலேயருக்கு ஆண்டுக்கு 24 லட்ச ரூபாய் கொடுக்க இசைந்தார். 1800-ல் இருசாராருக்குமிடையே ஒரு புதிய உடன்படிக்கை ஏற்பட்டது. இதன்படி ஐதராபாத்தை உள்நாட்டு, வெளிநாட்டு இடையூறுகளிலிருந்து காப்பாற்றும் பொறுப்பை ஆங்கிலேயர் ஏற்றுக்கொண்டனர். மூன்ருவது, நான்காவது மைசூர்ப் போர்களின் விளைவாக நிஸாமுக்குக் கிடைத்த நிலப்பகுதிகள் யாவற்றையும் பெல்லாரி, அனந்தப்பூர் மாவட்டங்கள், கடப்பையின் சில பகுதிகள் – அவர் கம்பெனிக்கு வழங்கினர். அவற்றுக்குக் "கொடுக்கப்பட்ட மாவட்டங்கள்" என்றே பெயர் அமைந்தது. இவ்வாறு சர் ஜான் ஷோரின் தலையிடாக் கொள்கையால் ஐதராபாத்தில் ஏற்பட்டிருந்த நிலைமை அடியோடு மாறியது. மைசூர், முற்றிலும் ஆங்கிலேயரது நிலப்பகுதிகளால் சூழப்பட்டது. நிஸாம் இராச்சியத்தில் மராட்டியரின் அதிகாரம் ஓங்க முடியாத நிலைமை அமைந்தது. ஆங்கில நாட்டு எல்லை துங்கபத்திரை வரை பரவியது.

லக்னௌ (1801): சர் ஜான் ஷோர், 1798-ல் அயோத்தி நவாப்பு சாதத் அலியுடன் உடன்படிக்கை செய்துகொண்டாரென்று முன்னர்ப் பார்த்தோம். அதனுல் அயோத்தி நாட்டு விவகாரங்களில் இருந்த சிக்கல்கள் நீங்கிவிடவில்லை. ஐரோப்பிய வணிகர் அந்நாட்டில் பல கேடுகளை விளைத்து வந்தனர். நவாப்பு ஆங்கிலேயருக்குக் கொடுக்கவேண்டிய பணத்தை ஒழுங்காகச் செலுத்தி வந்தார். ஆனுல் அதற்காக அவர் உள்நாட்டில் மக்களைக்

கட்டாயப்படுத்தி வரிகள் வாங்கவேண்டியிருந்தது. காபூல் அரசர் ஸாமன்ஷா 1798–9-ல் பஞ்சாபில் தங்கியிருந்தார். அவர் அயோத்தியில் படையெடுக்கக் கூடுமென்று வெல்ஸ்லி கருதினார். ஆதலால் அயோத்தியின் காவலை வலிமைப்படுத்தவேண்டுமென்றும் அங்கே இருந்த ஆங்கிலப் படையை அதிகப்படுத்தவேண்டுமெனவும் அவர் அறிவித்தார். அதன் பொருட்டு நவாப்பு செலுத்தவேண்டிய தொகை 76 லட்சத்திலிருந்து 126 லட்சத்துக்கு உயர்த்தப்பட்டது. நவாப்பு முதலில் அதற்கு உடன்பட்ட போதிலும் பிறகு அதைத் தம்மால் செலுத்த இயலாது என்று கூறினார். கவர்னர்-ஜெனரல் சூழ்ச்சி செய்வதாக நம்பிய அவர் தாம் பதவியினின்று விலகிவிடுவதாகவும் அச்சுறுத்தினார். அது மிகவும் சிறந்த செயல்தான் என்று வெல்ஸ்லி மறு பதிலிறுத்தார். மேலும் புதிய நவாப்புப் பேருக்கு மட்டும் ஆட்சி செய்வாரென்றும் அரசியல் நிர்வாகம் முழுவதையும் கம்பெனியே ஏற்றுக்கொள்ளுமென்றும் அறிவித்தார். நவாப்பு தாம் கூறியபடி பதவியினின்று விலகவில்லை. உடனே வெல்ஸ்லி, அயோத்தியின் காவலைக் கருதி ஆங்கிலத் துருப்புக்களை அங்கே அனுப்பினார். அச்செயல், 1798-ம் ஆண்டு உடன்படிக்கைக்கு முரணானது என்றும் அதனால் அயோத்தியில் உள்நாட்டுக் குழப்பம் ஏற்படக்கூடுமென்றும் நவாப்பு பணிவுடன் விண்ணப்பித்துக்கொண்டார். கவர்னர்-ஜெனரல் அதைப் பொருட்படுத்தாமல் தமது திட்டப்படியே செயலாற்றுவதில் முனைந்தார். நவாப்பு வேறுவழியின்றி, ஆங்கிலேயரைப் பகைத்துக்கொள்வதால் ஏற்படும் கேட்டை உணர்ந்து 1801-ல் ஒரு புதிய உடன்படிக்கைக்கு இசைந்தார். அதன்படி அவர், அயோத்தியில் இருந்த ஆங்கிலப் படையின் செலவுக்காகவும் இனி உண்டாகும் காவற் செலவுக்காகவும் கவர்னர்-ஜெனரல் கேட்ட நிலப்பகுதிகள் யாவையும் கொடுத்தார். மேலும் கங்கையாற்றிலும் மற்ற ஆறுகளிலும் ஆங்கிலேயர் உரிமையுடன் கப்பற் போக்குவரவு செய்ய அனுமதித்தார். நவாப்பின் படைவலிமை அழிந்தது. உடன்படிக்கைப்படி ஆங்கிலேயருக்கு ரோஹில்

கண்டும் கங்கை, யமுனை ஆற்றிடைக்குறை (தோ ஆப்) யின் தென்பகுதி, முதலிய இடங்கள் கிடைத்தன. நவாப் பின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதி ஏறத்தாழ பாதி அளவுக்கு குறைந்துவிட்டது. அவர் கம்பெனியாரின் ஆலோசனைப் படியே ஆட்சி செலுத்தும் கடமையைப் பெற்ருர். ஆட்சி முறையைச் சீர்திருத்தி மக்களுக்கு நன்மை செய்வதாகவும் ஒப்புக்கொண்டார்.

வெல்ஸ்லியின் அயோத்தி நடவடிக்கைகள் கம்பெனி யாருக்கு நன்மையாக முடிந்தன என்பதில் ஐயமில்லை. அயோத்தியின் காவலைச் சிறந்த முறையில் அமைக்க வேண்டுமென்றும் அந்நாட்டு அரசியலை ஒழுங்குபடுத்த வேண்டுமென்றும் கவர்னர்-ஜெனரல் கொண்ட விருப்பம் போற்றத்தக்கதே. ஆனுல் பிட் இந்தியச் சட்டமும் வேறு சில சட்டங்களும் கம்பெனியின் ஆட்சிக்குரிய நாடுகளின் பெருக்கத்தைத் தடை செய்தன என்று நாமறிவோம். அவ்வாறிருந்தும் வெல்ஸ்லி தமது கொள்கை அச்சட்டங் களுக்கு முரணனதில்லை என்று வாதித்தார். சீர்கேடுகளை ஒழித்துக் கம்பெனியின் அதிகாரத்தைப் பெருக்கவேண்டு மென்பதே அவர் விருப்பம். அயோத்தியைப் பொறுத்த வரையில் ஆட்சிமுறை மாற்றத்தால் நன்மையே விளைந் தது. எனினும் நவாப்பிடம் ஆங்கிலேயர் நடந்துகொண்ட முறை கண்டிக்கத்தக்கது. நவாப்பு,ஆங்கிலேயரை எதிர்த்து எதையும் செய்யவில்லை. அவ்வாறிருந்தும் அவரை 1798-ம் ஆண்டு உடன்படிக்கையில் இல்லாத நிபந்தனைகளை ஏற்குமாறு வெல்ஸ்லி வற்புறுத்தினர். நவாப்பு கூறிய விளக்கம் முறையற்றதன்று. ஆங்கிலேயருக்குக் கிடைத்த "கொடுக்கப்பட்ட மாகாணங்களில்" சீர்திருத்தங்கள் தோன்றின. வங்காளத்திலிருந்த ஆட்சிமுறை 1803-ல் அம்மாகாணங்களில் ஏற்பட்டது. ஆனுல் நிலையான நில வரித்திட்டம் மட்டும் அங்கே அமுல் செய்யப்படவில்லை. புதிய பகுதிகளில் உதவி கவர்னராக ஹென்றி வெல்ஸ்லி (கவர்னர்-ஜெனரலின் இளவல்) பதவியேற்ருர் (1801-3). மிகுதியான அனுபவம்பெற்ற வேறு சிலரைப் புறக்

கணித்துவிட்டு தமது இளவலை அப்பதவியில் அமர்த்திய வெல்ஸ்லியின் செயல் தீவிரமாகக் கண்டிக்கப்பட்டது. இயக்குநர்கள் அதை முறை அற்றசெயல் என்று கூறினர். ஆகவே 1803-ல் ஹென்றி வெல்ஸ்லி இந்தியாவை விட்டுப்புறப்பட்டார். வெல்ஸ்லிக்கு அதனால் மிக்க மனத்துயர் ஏற்பட்டது. வாரன் ஹேஸ்டிங்ஸை, இங்கிலாந்தின் சட்டசபை (லார்டுகள் சபை) குற்றமற்றவர் என்று தீர்ப்பளித்துவிட்டதால் பீகங்களைக் கொள்ளை அடிப்பது முறையான செயல்தான் என்று அயோத்தி நவாப்பு கருதி பாகு பீகமிடம் (அசப்-உத்-தௌலாவின் தாயார்) இருந்த சொத்துக்களைக் கைப்பற்ற முயற்சித்தார். ஆனால் வெல்ஸ்லி அம்முயற்சியைத் தடைசெய்துவிட்டார். அவ்வம்மையார் இறுதியில் தமது சொத்துக்களைக் கம்பெனியாருக்கே அளித்தார்.

பகுதி 7

பிரெஞ்சுக்காரருக்கு எதிரான நடவடிக்கைகள்

இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆட்சி நிலைபெறுவதற்குப் பிரெஞ்சியரும் இந்நாட்டுச் சிற்றரசர்களும் இடையூறாக இருந்தனர். ஆகவே வெல்ஸ்லி, மேலே கூறியவாறு கொள்கைகளை அமைத்துக்கொண்டார். ஆங்கில ஆட்சியின் வளர்ச்சிக்கு, இந்தியாவின் நிலைமையை மட்டும் ஆராய்ந்து ஆவன செய்தால் போதாது என்று அவர் உணர்ந்தார். கம்பெனியின் வளர்ச்சி உலக நிலையையும் பொறுத்ததாயிருந்தது. அக்காலத்தில்தான் ஐரோப்பாவில் நெப்போலியன் உயர்நிலை பெற்றுவந்தார். ஆகவே, பிரெஞ்சியர் இந்தியாவில் படையெடுப்பதைத் தடுக்கத் தக்க முயற்சிகளை வெல்ஸ்லி எடுத்துக்கொண்டார். நெப்போலியன், பிரஞ்சு-ருஷியப் படைகளை இணைத்து மத்திய ஆசியாவைக் கடந்து இந்தியாவில் படையெடுக்கச் சூழ்ச்சி செய்தார். அந்நிலையில், பாரசீக மன்னர் பிரெஞ்சுக்காரரோடு நட்பு கொள்ளாதவாறு தடைசெய்தல் இன்றியமையாதது என்று வெல்ஸ்லி கருதினர். மேலும் ஸாமன் (ஆங்கிலேயரின் பகைவர்) ஷாவுக்குத் தொந்திரவு கொடுக்குமாறு பாரசீக ஷாவைத் தூண்டவேண்டுமென்றும் அவர் திட்டமிட்டார். ஆகவே 1800-ல் அவர் ஜான் மால்கம் என்பார் தலைமையில் பாரசீகத்துக்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பிவைத்தார். அதன் விளைவாக பாரசீக ஷாவுடன் ஆங்கிலேயர் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டனர். அதன்படி பிரெஞ்சியரும் ஸாமன் ஷாவும் தாக்க நேர்ந்தால் அப்போது ஆங்கிலேயரும் பாரசீகரும் ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டுமென்று முடிவு செய்தனர். அடுத்தபடியாக, 1801-ல் வெல்ஸ்லி பிரெஞ்சுப் போர்போன், மொரீஷஸ் தீவுகளின்மேல் படையெடுக்க எண்ணினர். பிரெஞ்சுப் போர்க் கப்பல்களுக்கு

அவை காவல் இடங்களாயிருந்ததே, வெல்ஸ்லியின் அம் முயற்சிக்குக் காரணமாம். ஆனால் ஆங்கிலக் கப்பற்படை ஒத்துழைக்காததால் அவர் தமது எண்ணத்தைக் கைவிட நேர்ந்தது. பிறகு படேவியாவைத் தாக்குவதற்கும் அவர் முயன்றார். மேலும் எகிப்தை வெல்லுவதற்கு ஒரு படையைத் தயாரித்துக் கெய்ரோவுக்கு அனுப்பி வைத்தார். ஆனால் அதற்கு முன்னரே அலெக்ஸாந் திரியாவில் பிரெஞ்சியரை ஆங்கிலேயர் முறியடித்திருந் தனர் (1801). ஆதலால் வெல்ஸ்லியின் படை இந்தியா விக்குத் திரும்பிவிட்டது. ஆயினும் அப்படையெடுப்புச் சிறப்புவாய்ந்ததாகும். 1802-ம் ஆண்டின் தொடக்கத் தில் வெல்ஸ்லி பதவியினின்று நீங்க விழைந்தார். ஆனால் இயக்குநர்கள் அவரைத் தொடர்ந்து பணியாற்று மாறு தூண்டினர். இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் மிடையே ஏமியன்ஸ் என்ற இடத்தில் உடன்படிக்கை ஏற்பட்டதால் பிரெஞ்சுக்காரரிடமிருந்தும் டச்சுக்காரரிட மிருந்தும் கைப்பற்றப்பட்ட இடங்களை அவரவர்களிடம் திருப்பி அளித்துவிட வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப் பட்டது. ஆனால் வெல்ஸ்லிக்கு அந்த உடன்படிக்கை நிலைத்திருக்கும் என்ற நம்பிக்கை இல்லை. ஆதலால் தாய்நாட்டிலிருந்து கிடைத்த ஆணைகளை அவர் நிறை வேற்றவில்லை. இச்செய்தி வெல்ஸ்லியின் ஆழ்ந்த முன்னேக்கையும் தீரத்தையும் காட்டுகிறது.

———

பகுதி 8

இரண்டாவது மராட்டியப் போர் (1803 - 5)

II-ம் பாஜிராவ் : மராட்டியர் ஒற்றுமைப்பட்டிருக்க வேண்டுமென்ற கொள்கையை விடாது தழுவியிருந்த நாஞ பட்னிஸ் இறந்தபின் மராட்டிய நாட்டில் குழப்பம் மேலிட்டது. பேஷ்வா பாஜிராவ் (II), தௌலத்ராவ் சிந்தியாவின் அடிமைபோலானுர். அவர், தம் நிலையை மாற்றிக்கொள்ள ஜஸ்வந்த்ராவ் ஹோல்காரின் உதவியை நாடினுர். ஹோல்கார், சிந்தியாவின் நாடுகளைக் கொள்ளை யடித்தார். சிந்தியா, பூனுவை விட்டுப் புறப்பட்டார். முதலில் இவர் உச்சயினிக்கு அருகில் தோல்வியுற்ற போதிலும், பின்னர் இந்தூரில் ஹோல்காரைத் தடுத்து வெற்றிபெற்ருர் (1701). பாஜிராவ், சிந்தியாவின் ஆதிக்கக் கட்டுப்பாட்டினின்று விலகி உரிமையுடன் செயலாற்றத் தொடங்கினுர். தமது பகைவர்களை எல்லாம் பழிவாங்க வேண்டுமென்ற எண்ணத்துடன் பலரைக் கொன்ருர். அவருடைய அடாத செயல்கள் மக்களுக்கு வெறுப்பையே வளர்த்தன. ஜஸ்வந்த்ராவ் ஹோல்காரின் உடன்பிறந்தானை, அவர், யானையின் காலால் இடற வைத்துக் கொன்ருர். அதைக்கேட்ட ஜஸ்வந்த்ராவ் வெகுண்டு பூனுவின் மேல் நேரே படையெடுத்து வந்தார். ஹோல்காருக்கும் பேஷ்வாவுக்கும் பூனுவுக்கருகில் போர் நடந்தது. சிந்தியாவின் படையில் ஒரு பகுதி சதாசிவ ராவ் பாஸ்கரின் தலைமையில் பேஷ்வாவுக்கு உதவியது. ஆனுல் முடிவில் ஜஸ்வந்த்ராவ் வெற்றிபெற்ருர் (1802). பேஷ்வா தலைநகரிலிருந்து ஓடி முடிவில் பஸ்ஸீனை அடைந்து ஆங்கிலேயரின் ஆதரவின்கீழ் அமர்ந்தார். பூனு, ஹோல்காரின் ஆதிக்கத்துக்கு உட்பட்டது. அவர், பாஜிராவின் சுவீகார சகோதரனுகிய அமிருதராவைப் பேஷ்வாவாக அமர்த்திவிட்டுப் பூனுவைக் கொள்ளையடிப் பதில் தமது கருத்தைச் செலுத்திவந்தார். செல்வர்கள்

யாவரும் தமது சொத்துக்களை இழக்கநேர்ந்தது. பலர் சித்திரவதைக்கு உள்ளாயினர்.

பஸ்ஸீன் உடன்படிக்கை (1802): மேலே கண்ட போர் தொடங்குவதற்கு முன்னரே பேஷ்வா ஆங்கிலேய ரின் உதவியை நாடினார். ஆனால் அப்போது அவர், ஆங்கிலேயர் கூறியபடி பாதுகாப்புமுறை உடன்படிக் கையை ஏற்க இணங்கவில்லை. 1798, 1799, 1800 ஆகிய மூன்று ஆண்டுகளில் அவர் அத்தகையதோர் ஏற்பாட்டை ஏற்க மறுத்து வந்தார். பின் ஏற்பட்ட துயர நிகழ்ச்சி பாஜி ராவை ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்து கொள்ளத் தூண்டியது. ஆகவே, பஸ்ஸீனில் (டிஸம்பர், 1802) இரு சாராருக்குமிடையே, பாதுகாப்புமுறை உடன் படிக்கை ஏற்பட்டது. அதன்படி 26 லட்ச ரூபாய் வருமானத்தைத் தரக்கூடிய நிலப்பகுதியைப் பேஷ்வா ஆங்கிலேயருக்குக் கொடுத்தார். முதலில் பூனாவுக்கு அருகில் உள்ள இடங்கள் கொடுக்கப்பட்டன. ஆனால் பிறகு, 1803-ல் ஆங்கிலேயர் அவற்றுக்குப் பதிலாக பண்டல்கண்டில் உள்ள மாவட்டங்களைப் பெற்றனர். ஆங்கிலத் துணைப்படை பேஷ்வாவின் இராச்சியத்தில் நிறுவப்பட்டது. ஆங்கிலேயரின் அனுமதியின்றி பேஷ்வா வேறு யாருடனும் அரசியல் தொடர்பு கொள்ளக்கூடாது. பேஷ்வா, தமக்கும் நிஸாமுக்கும், தமக்கும் கெயிக்வாருக் கும் உள்ள சச்சரவுகளை ஆங்கிலேயரின் துணைகொண்டு தீர்த்துக்கொள்ள வேண்டும். பேஷ்வா பெயரளவுக்கு மராட்டியக் கூட்டரசின் தலைவரானார். வெல்ஸ்லியின் கொள்கை, மராட்டிய நாட்டிலும் சிறந்த வெற்றியை அடைந்தது. ஆனால், 1801-ல் இங்கிலாந்தில் மேற்பார் வைக் கழகத்தின் தலைவராக அமர்ந்த காஸல்ரீ பிரபு பஸ்ஸின் உடன்படிக்கையை மிகுதியாகக் குறைகூறி னார். அவ்வுடன்படிக்கை முறையற்றது என்பதற்கு அவர் கூறிய காரணங்கள் வருமாறு: பிரெஞ்சியரின் தாக்குதல்களும் திப்புவினால் இடையூறுகளும் மறைந்த பிறகு வெல்ஸ்லியின் பழைய கொள்கையின் அடிப்

படையில் எந்த ஏற்பாடும் இன்றியமையாததன்று; மேலும் மராட்டியர், கம்பெனிக்கு எவ்வித இன்னுலும் விளைவிக்கவில்லை. தவிர அவ்வுடன்படிக்கை பல போர் களுக்கு இடந்தரும். சிந்தியா, பான்ஸ்லே, ஹோல்கார் முதலியவர்கள் போர் தொடுப்பது உறுதி. இங்கிலாந்தில் ஆங்கிலேயருக்குரிய இடங்கள் அளவுகடந்து பெருகி விட்டன. அவற்றை வலிமையடையச் செய்யவேண்டு மாயின், பிறரை வலியத்தாக்கும் கொள்கையை அறவே விட்டுவிட வேண்டும். இறுதியாக பஸ்ஸீன் உடன் படிக்கை, 1784, 1793 ஆகிய ஆண்டுகளில் இயற்றப் பெற்ற சட்டங்களுக்கு முரணனது; அது 1800-ல் கவர்னர்-ஜெனரலுக்கு அனுப்பப்பட்ட கட்டளைகளுக்கு முரணனது அன்று. வெல்ஸ்லி தமது செயல் இன்றியமையாததே என்று வாதித்தார். பிரெஞ்சியரால் இடையூறு மறைந்து விட்டதென்று கூறியதை அவர் ஏற்க மறுத்தார். தவிர நிஸாமுடன் செய்துகொண்ட உடன்படிக்கைப்படி மராட்டியருடன் போர்தொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று அவர் கூறினர். பஸ்ஸீன் உடன்படிக்கை மேலும் போரைப் பெருக்கு வதைவிட அதைத் தடுக்கவே உதவும் என்பது கவர்னர்-ஜெனரலின் கருத்தாகும். மராட்டிய தலைவர்கள் பலர் அவ்வுடன்படிக்கையால் மராட்டியரின் உரிமைக்குப் பேரிடையூறு ஏற்பட்டதை உணர்ந்தனர். 1803-ல் பேஷ்வா பாஜிராவைத் தளபதி வெல்ஸ்லி பூனுவுக்கு உடன் அழைத்துச்சென்று அங்கே அவர் ஆட்சியை நிலை நாட்டினர். அமிருதராவ் தலைநகரினின்று வெளியேறி வாரணுசிக்குச் சென்றுவிட்டார். கம்பெனியார் அவருக்கு 8 லட்ச ரூபாய் ஓய்வுக்கால ஊதியம் கொடுத்தனர். 1824-ல் அவர் இறந்தார்.

போரின் காரணங்களும் நோக்கமும்: பஸ்ஸீன் உடன்படிக்கையைச் செய்துக்கொள்வதற்கு முன்னர் பேஷ்வா, தம்முடன் ஆலோசித்து தமது உடன்பாட்டைப் பெறவில்லை என்று சிந்தியாவும் ஹோல்காரும் சினங்

கொண்டனர். இருவரும் இணைந்து போரிடுவதென்று முடிவுசெய்தனர். அவர்கள் அம்முயற்சியை விட்டுவிட வேண்டுமென்று கவர்னர்-ஜெனரல் கட்டளையிட்டார். ஆனால் அக்கட்டளையை அவர்கள் பொருட்படுத்தவில்லை. ஆகவே ஆங்கிலேயரும் போர் தொடங்கினர். அவ்வமயம் பெரான், பெயரளவுக்குச் சிந்தியாவிடம் பணியில் அமர்ந்திருந்தபோதிலும் உண்மையில் அவர் உரிமையுடன்தான் விளங்கினார். அவரை முதலில் முறியடிக்க வேண்டுமென்பது வெல்ஸ்லியின் திட்டம். முகலாயப் பேரரசரையும் இராசபுத்திரரையும் தமது ஆதிக்கத்தின்கீழ் வைத்திருந்தார் பெரான். பெரானின் அதிகாரம் அழிவுற்றால் முகலாயப் பேரரசர் தமது ஆதரவுக்கு உட்படுவார் என்ற எண்ணம் கவர்னர்-ஜெனரலுக்கு உண்டு. ஆகவே ஆக்ராவையும் தில்லியையும் தாக்க வேண்டுமென்றும் இராசபுத்திர நாடுகள் சிலவற்றையும் தம்வசப்படுத்திச் சீக்கியருடன் தொடர்புகொள்ள வேண்டுமென்றும் வெல்ஸ்லி திட்டங்கள் வகுத்தார். மேலும் ஒரிஸ்ஸாவின் கடலோரப் பகுதிகள் ஆங்கிலேயராட்சிக்கு உட்பட்டிருந்தால் சென்னையிலிருந்து வங்காளத்துக்குப் போக்குவரவு, எவ்வித இடையூறுமில்லாமல் இருக்கும் என்ற பேரவாவும் அவருக்கு இருந்தது. ஆகவே இப்போர் வட இந்தியாவிலும் தென் இந்தியாவிலும் நடைபெற்றது. தளபதி லேக் வட இந்தியாவிலும் தானைத் தலைவர் வெல்ஸ்லி தென் இந்தியாவிலும் போர் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

தளபதி வெல்ஸ்லி: தளபதி வெல்ஸ்லி, 1803-ல் ஆமதுநகரைக் கைப்பற்றித் தக்கணப் படையெழுச்சியைத் தொடங்கினார். நருமதைக்குத் தெற்கே இருந்த சிந்தியாவின் படைகள் தீவிரமாக அவரை எதிர்த்தன. சிந்தியாவின் படையையும் அத்துடன் சேர்ந்த பான்ஸ்லேயின் படையையும் ஆங்கிலத் தளபதி, அஸ்ஸே என்ற இடத்தில் (ஐதராபாத்தில் அஜந்தாவுக்கு அருகில்) முறியடித்துப் பெரிய வெற்றியைப் பெற்றார். தக்கண

வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ள வெற்றிகளனைத்திலும் அவ்வெற்றியே மிகவும் சிறந்தது ஆகும் என்று அறிஞர் கிராண்ட் டஃப் (Grant Duff) கூறுகிறார். சிந்தியாவின் பிரெஞ்சுப்படை அங்கே தோல்வியுற்றதென்பது குறிப்பிடத் தக்கது. அதன் பிறகு வெல்ஸ்லி பர்ஹான்பூரையும் அசிர்காரையும் கைப்பற்றினர். அடுத்த மாதத்தில் சிந்தியாவையும் பான்ஸ்லேயையும் ஆர்கான் (பேராரில் உள்ளது) என்ற இடத்தில் மறுபடியும் தோற்கடித்தார்; அத்துடன் அமைதிபெருது அவர் வலிமை வாய்ந்த கோட்டையாகிய கவில்கரைக் கைப்பற்றிப் பான்ஸ்லேயின் தலைநகராகிய நாகபுரியை நோக்கிச் செல்லத் திட்டமிட்டார்.

தளபதி லேக்: இந்துஸ்தானத்தில் படைத் தலைவராயிருந்த லேக், 1803-ல் அலிகாரைக் கைக்கொண்டார். பெரான், சிந்தியாவின் பணியினின்று விலகினர். அவருக்கு ஆங்கிலேயரிடன் போரிட விருப்பமில்லை. தம்மிடமிருந்த பெருஞ்செல்வத்துடன் தமது நாட்டுக்குத் திரும்பிச் செல்வதையே அவர் மனம் விரும்பியது. இயல்பிலும் ஆற்றலிலும் அவர் துபாயினுக்குக் கீழ்பட்டவரே. பெரானுக்குப்பின் படைத்தலைவரான லூயி போர்குவின் தில்லிக்கு அருகில் தோல்வியுற்றார். லேக், பேரரசுத் தலைநகருக்குள் II-ம் ஷா ஆலத்தைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். பெயரளவில் ஷாஆலம் பேரரசராக விளங்கினர். மாதம் 90,000 ரூபாயை ஆங்கிலேயர் அவருக்குக் கொடுத்துவந்தனர். லேக், போரைத் தொடர்ந்து நடத்தி ஆக்ராவைக் கைப்பற்றினர். பின் நிகழ்ந்த லாஸ்வாரி (இராசபுதனத்தில்)ப் போரில், மிகுதியான கொலைகளுக்குப் பிறகு சிந்தியாவின் எஞ்சிய பிரெஞ்சுப்படைகளைத் தோற்கடித்தார். சிந்தியா, தில்லியையும் யமுனையின் இருமருங்கிலுமிருந்த தமது நாடுகளையும் இழந்தார். தக்கணத்தில் அவரது இராச்சியம் மறைந்ததை முன்னர் பார்த்தோம். லேக்குக்கு ஏற்பட்டிருந்ததைவிட மிகுதியான இடையூறுகள் தளபதி வெல்ஸ்லிக்குத் தெற்கில்

ஏற்பட்டிருந்தன என்பதில் ஐயமில்லை. ஆங்கிலேயரின் படையெழுச்சிகளின் விளைவாக புரோச், கட்டாக் முதலிய இடங்களும் அவர்கள் வசப்பட்டன. எங்கும் முடிவான தோல்விகளையே கண்ட சிந்தியாவும் பான்ஸ்லேயும் அமைதியை நாடினர். இவ்வாறு சில மாதங்களிலேயே இரண்டு பெரிய மராட்டியத் தலைவர்கள் அடக்கப்பெற்றனர்.

ஆங்கிலேயரின் விரைவான வெற்றிக்குக் காரணங்கள் : ஆங்கிலேயர் மிக விரைவாக வெற்றிகள் அடைந்தமைக்குப் பல காரணங்கள் உண்டு. முதலாவதாக கவர்னர்-ஜெனரலின் ஆற்றல் குறிப்பிடத்தக்கது.

> " கலங்காது கண்டவினைக்கண் துளங்காது
> தூக்கம் கடிந்து செயல் "

என்ற திருக்குறளுக்கு ஒரு எடுத்துக்காட்டாக வெல்ஸ்லி மனங்கலங்காமல் ஆராய்ந்து துணிந்து ஏற்ற தொழிலை சோர்வு கொள்ளாமல் காலம் தாழ்த்தாமல் செய்யும் திறமை பெற்றிருந்தார். ஆகவே அவருடைய திட்டமிட்ட செயல்களின் முன் பகைவர்கள் விரைவில் ஒடுங்கினர். அந்நிகழ்ச்சி,

> " வகையறிந்து தற்செய்து தற்காப்பமாயும்
> பகைவர் கண் பட்ட செருக்கு "

என்ற குறளை நமக்கு நினைவூட்டுகிறது.

வெல்ஸ்லி, செய்யும் வகையை அறிந்து, தம்மை வலிமைப்படுத்திக்கொண்டு தற்காப்பைத் தேடிக்கொண்டார். பகைவரிடத்தில் ஏற்பட்டிருந்த செருக்கு அழிந்தது. அவர் அமர்த்திருந்த இரு பெரும்படைத் தலைவர்களும் பாராட்டத்தக்க வீரமும் துணிவும் ஆற்றலும் படைத்தவர்கள். அவர்கள் பகைவரை அடுத்தடுத்துத் தாக்கி அவர்களை ஒன்று சேரவோ அல்லது தம்மை நிலைப் படுத்திக்கொள்ளவோ முடியாதவாறு திணற வைத்தனர். மேலும் வங்காளப் படையும் சென்னைப் படையும் வலிமை

மிக்க குதிரைப்படை வீரர்களைக் கொண்டிருந்தன. மாராட்டியர் மேனுட்டு முறையில் தமது படையைப் பயிற்றுவித்திருந்தனர். எனினும் ஆங்கிலேயருக்கு எதிராகப் போரிட்டு வெற்றிபெறும் அளவுக்கு அவர்கள் வலிமை பெறவில்லை. மராட்டியரின் உள்நாட்டு போராட்டம் அவர்களுடைய ஆற்றலை மிகுதியாகக் குறைத்துவிட்டது. சிந்தியாவே, ஹொல்காரோடு சண்டையிட்டு மெலிவுற்றிருந்தார்.

சிந்தியாவுடனும் பான்ஸ்லேயுடனும் உடன்படிக்கைகள் : வட இந்தியப் படையெழுச்சிகளும் தென் இந்தியப் படையெழுச்சிகளும் தனித்தனி தலைவர்களின் கீழ் ஒரே காலத்தில் நடைபெற்றன. ஆனல் அமைதி உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளும் பொறுப்புத் தளபதி வெல்ஸ்லியிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்தது. II-ம் ரகூஜி பான்ஸ்லேயுடன் 1803-ல் தேவகான் என்ற இடத்தில் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி மகாநதியின் கழிமுகப் பகுதியும், கட்டாக், பாலாசூர், வார்தாவின் மேற்பகுதியும் ஆங்கிலேயருக்குக் கிடைத்தன. **சர்ஜி அர்ஜன்கான்** உடன்படிக்கைப்படி, சிந்தியா, உத்தரப்பிரதேசத்தின் மேற்கு மாவட்டங்களையும், தில்லி, ஹிஸ்ஸார் மாவட்டங்களின் பல பகுதிகளையும், ஆமதுநகரம், புரோச், அஜந்தா குன்றுகளுக்குத் தெற்கில் உள்ள வேறு சில மாவட்டங்களையும் ஆங்கிலேயருக்குக் கொடுத்தார்; முகலாயப் பேரரசர்மீது தாம் வகித்துவந்த அதிகாரத்தைக் கைவிட்டார். ஆங்கிலேயர் உதவும் துணைப்படைக்குச் சிந்தியா தொகை எதையும் கொடுக்கவேண்டியதில்லை. 1804-ல் சிந்தியாவுடன் ஆங்கிலேயர் செய்து கொண்ட மற்ருெரு உடன் படிக்கைப்படி, ஆங்கிலப்படை சிந்தியாவின் இராச்சியத்தின் வெளிப்புறத்தில்தான் தங்கியிருக்க வேண்டுமென்று முடிவாயிற்று. இவ்வாறு வெல்ஸ்லி செய்துகொண்ட மற்ற துணைபுரி உடன்படிக்கைகளுக்கும் சிந்தியாவுடன் செய்துகொண்ட உடன்படிக்கைக்கும் இரண்டு வேறுபாடுகள் காணக்கிடக்கின்றன. கம்பெனிக்

குக் கிடைத்த இடங்களில், நிஸாம் அலியின் மகனுர் சிகந்தர் ஜா (1802-29), பேராரில் சில மாவட்டங்களையும் அஜந்தாக் குன்றுகளின் தென்பகுதியையும் (ஜால்ஞ உட்பட) பெற்றுக்கொண்டார்; பேஷ்வா, ஆமதுநகர மாவட்டத்தைப் பெற்ருர். ஜெயபுரி, ஜோதிபுரி, பூந்தி (Bundi) முதலிய இராசபுத்திர நாடுகளுடனும் பரதபுரி ஜாட் அரசரோடும் ஆங்கிலேயர் உடன்படிக்கைகள் செய்து கொண்டனர். ஆனால் அவை, முன் கண்டது போலத் துணைபுரி உடன்படிக்கைகள் அல்ல. இவ்வரசர்களிடமிருந்து கப்பமொன்றும் வாங்கப்படவில்லை. உள்நாட்டு உரிமையில் தலையிடும் உரிமையையும் ஆங்கிலேயர் பெறவில்லை. கோஹட் இராணுவுடன் செய்துகொண்ட உடன்படிக்கையால் கம்பெனிக்குப் புகழ்பெற்ற குவாலியர் கோட்டை கிடைத்தது. இவ்வெற்றிகளினுல் கவர்னர்-ஜெனரல் மிக்க களிப்புற்ருர். ஆனால் இதனுல் நிலையான அமைதி ஏற்பட்டுவிட்டதென்று அவர் எண்ணியது தவருகும்.

ஜஸ்வந்த்ராவ் ஹோல்கார் : ஆங்கிலேயரின் அதிகாரவளர்ச்சியைக் கண்டு பொருமையடைந்த ஹோல்கார் தம்மை மீண்டும் வலிமைப்படுத்திக்கொண்டார். தம்மிடம் ஆங்கிலேயருக்கு எப்பொழுதும் அச்சம் உண்டு என்ற எண்ணம் அவர் மனத்தில் வேரூன்றிருந்தது. அவர் இராசபுத்திர நாடுகளிலிருந்து கப்பம் வாங்கும் உரிமையைக் கொண்டாடினுர். தோ-ஆப் பகுதியில் தம் குடும்பத்தினர் நீண்ட காலமாக ஆட்சிபுரிந்து வந்த பகுதிகள் தமக்கே உரியன என்றும் கூறிவந்தார்; தமது செயல்களால் இந்துஸ்தான மக்களை அச்சுறுத்தினுர். தம்மிடம் பணியில் அமர்ந்திருந்த 3 ஆங்கிலேயர், தம் மினத்தவருடன் போரிட மறுத்ததால் அவர்களைக் கொலை செய்தார். ஆங்கிலேயர் அவருடைய நட்பை விரும்பினுல் தாம் விரும்பிய அனைவற்றையும் தமக்கு அளிக்க வேண்டுமென்று செய்தி விடுத்தார். ஆனால் ஆங்கிலேயர் அவர் கூற்றை ஏற்கவில்லை. அவர் ஜெயபுரியில் கொள்ளையிடத்

தொடங்கியதும் ஆங்கிலேயர் அவருடன் போர்தொடுத்தனர் (ஏப்ரல் 1804). லேக் மீண்டும்படைத் தலைமை தாங்கி ஹோல்காரை விரட்டினூர். கர்னல் **வில்லியம் மான்ஸன்** என்ற மற்ெருரு தளபதியும் ஹோல்காரின் முன்னேற்றத்தைத் தடுத்து நின்ருர். அவர் முன்பின் ஆலோசியாமல் சம்பல் ஆற்றைக் கடந்து இராசபுதனத்தில் நுழைந்தார். ஆனால் உடனே பின்வாங்க நேரிட்டது. அதற்கிடையில் பரோடாவிலிருந்து கர்னல் முர்ரேயின் படை உச்சயினிக்குச் சென்றது. மான்ஸன் இழைத்த தவற்றினுல் இருபடைகளும் ஒன்று சேரவில்லை. முர்ரே திரும்பிச்செல்ல நேர்ந்தது. மான்ஸனை முறியடித்த ஹோல்கார் தில்லிக்கு அருகில் சென்ருர். ஆனால் அவரால் அதைக் கைப்பற்ற முடியவில்லை. **லேக்**, பருக்காபாத்தில் ஹோல்காரை முறியடித்தார். அதற்குச் சில நாட்கள் முன்னரே, ஹோல்காரின் படை, ஆங்கிலப்படையினிடம் டிக் (Dig) (இராசபுதனத்தில்) என்னுமிடத்தில் தோற்றது. அதன்பிறகு பரதபுரி அரசர் ஹோல்காருடன் சேர்ந்து கொண்டு அவருக்கு உதவி செய்தார். இதனால் வெகுண்ட **லேக்** பரதபுரியை முற்றுகையிடச் சென்ருர். ஆனால் நான்கு முறைகள் முயன்றும் அவரால் அதைக் கைப்பற்ற இயலவில்லை. அவர் முன்னர்ச் சிறப்பான வெற்றிகளைப் பெற்றபோதிலும் தளபதி வெல்ஸ்லியுடன் ஒப்பிடுங்கால், கீழ்ப்பட்டவரே ஆவர்.

மான்ஸனும் லேக்கும் அடைந்த தோல்விகள், ஆங்கிலேயரின் பெருமையைக் குறைத்தன. ஹோல்காரின் வெற்றி நீடித்திருக்காது என்பதை கவர்னர்–ஜெனரல் உணர்ந்திருந்தார்; எனினும் தோல்விகளால் அவருடைய கொள்கையின் சிறப்புக் குன்றியது. ஆகவே அவர் அமைதியை நாடினூர். பரதபுரி அரசருடன் உடன்பாடு செய்துகொள்ளப்பட்டது. ஆனந்த ராவ் கெயிக்வாருடன் (1800--19) ஆங்கிலேயர் பாதுகாப்புமுறை உடன்படிக்கையைச் (Subsidiary Alliance) செய்து கொண்டனர். கத்தியவாரில் கெயிக்வாரின் உரிமையை

ஒப்புக்கொண்டனர். அந்நிலையில் வெல்ஸ்லியின் கொள்கைக்கும் செயல்களுக்கும் இங்கிலாந்தில் எதிர்ப்பு ஏற்பட்டது. தாய்நாட்டினர் அவரைத் திரும்ப அழைத்துக் கொள்ளத் தீர்மானித்தனர். அதை அறிந்த வெல்ஸ்லி தாமே பதவியினின்று விலகிவிட்டார். 1805-ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம், அவர் இந்தியாவைவிட்டுப் புறப்பட்டார்.

———

பகுதி 9

ஆட்சிமுறை

கல்வி : காரன்வாலிஸ் சிவில் பணித்துறையைத் தூய்மைப்படுத்திஞர்; வெல்ஸ்லியோ அப்பணித்துறை யாளருக்குத் தக்க பயிற்சி அளிப்பதில் கருத்தைச் செலுத் திஞர். பேரரசுக்குரிய பொறுப்புக்களை உணர்ந்த வெல்ஸ்லி கம்பெனியின் பணியாளர், ஆட்சிமுறையைப் பற்றி நன்கு கற்றுக்கொள்ள வேண்டுமென்பதை வற் புறுத்திவந்தார். தாய்நாட்டில் கல்வி பயின்று இங்கே வந்த பிறகு அப்பணியாளர், இந்திய, மொழிகள், சட்டங் கள், வரலாறு, பழக்கவழக்கங்கள், ஆகியவற்றைக் கற்க வேண்டியது இன்றியமையாததென்பது அவர் கருத் தாகும். அந்நோக்கத்துடன் 1800-ல் கல்கத்தாவில் வில்லியம் கோட்டைக் கல்லூரியை நிறுவிஞர். கம்பெனி யின்கீழ்ப் பணியேற்குமுன் யாவரும் அக்கல்லூரியில் மூன்று ஆண்டுகள் கல்வி கற்கவேண்டும். அத்திட்டத்தை வாரன் ஹேஸ்டிங்ஸும் புகழ்ந்தார். அக்கல்லூரியில் ஐரோப்பியப் பேராசிரியர்களும் 80 இந்தியப் பண்டிதர் களும் பணியாற்றினர். அங்கே கல்வி பயின்றவர்களின் எண்ணிக்கை கல்வி கற்பித்தவர்களின் எண்ணிக்கையை விடக் குறைவாக இருந்தது இயக்குநர்கள் அக்கல்லூரி திட்டத்தை விரும்பவில்லை. வெல்ஸ்லி தாமாகவே அச் செயலைப்புரிந்தார். பிறகு இயக்குநர் சபையின் ஆணைப் படி 1802-ல் அக்கல்லூரி மூடப்பட்டது. இதஞல் இயக்குநர் சபைக்கும் மேற்பார்வைக் கழகத்துக்கும் கருத்துவேறு பாடு ஏற்பட்டது. முடிவில் ஆங்கிலச் சட்டவல்லுநர் முன்னவரின் செயலையே ஆதரித்தனர். இயக்குநர்கள், அக்கல்லூரியை வங்காள சிவில்துறை அலுவலருக்குப் பயன்படும் கீழ்க்கலைப் பள்ளிக்கூடமாக மாற்றினர். 1806-ல் வெல்ஸ்லியின் கருத்துக்களையொட்டி இங்கிலாந் தில் கிழக்கிந்தியக் கல்லூரியைத் தோற்றுவித்தனர்.

முறைவழங்கலும் வாணிகமும் : வெல்ஸ்லி, கல்கத்தாவில் இருந்த சதர் திவானி அதலத் (உயர்தர முறையீட்டு நீதி மன்றம்) தைச் சீர்திருத்தினர். கவர்னர்-ஜெனரலும் ஆலோசனைக் குழுவினரும் அங்கே நீதிபதிகளாக இருந்த நிலை ஒழிந்தது. கம்பெனியின் திறமை வாய்ந்த சிவில் அலுவலரிலிருந்து தேர்ந்தெடுத்தவர்களே அங்கு நீதிபதிகளாக வந்தனர். புகழ்பெற்ற கீழ்நாட்டு ஆராய்ச்சியாளரான H. T. கோல்புரூக் அந்நீதி மன்றத்தின் தலைவரானர். வெல்ஸ்லி, தடையற்ற வாணிகத்தைப் பரிந்து போற்றினர். ஆனல் அதை இயக்குநர் சபை எதிர்த்தது; வெல்ஸ்லிமீது அதற்காகக் குற்றமும்சாட்டியது.

ஆட்சிமுறைச் செய்திகள் : வெல்ஸ்லி இந்திய அச்சகங்களைக் கடுமையாகக் கட்டுப்படுத்தினர்; செய்தித்தாள்களைத் தணிக்கை செய்துவந்தார். நிர்வாக அரசியல் காவல்முறை முதலிய ஆட்சிமுறைச் செய்திகளில் அவருக்குச் சிறந்த பயிற்சி இருந்தபோதிலும் சிக்கல் நிறைந்த உள்நாட்டு வெளிநாட்டு அரசியலில் அவர் தமது முழுக்கருத்தையும் ஊன்ற வேண்டியிருந்ததால், ஆட்சிமுறைத் துறையில் அவர் மிகுதியாக அருஞ்செயலாற்றவில்லை. மேலும் அவருடைய சில கருத்துக்களையும் திட்டங்களையும் இயக்குநர்கள் ஆதரிக்கவில்லை. இரு சாராருக்குமிடையே கருத்துவேறுபாடு மிகுதியாக இருந்தது. பிற்காலத்தில் இந்தியாவில் ஆட்சிமுறைப் பொறுப்பை ஏற்ற சிலர் வெல்ஸ்லியுடன் தொடர்புகொண்டு ஊக்கம் பெற்றனர் என்ற செய்தி குறிப்பிடத்தக்கது. சீர்திருத்த ஆர்வத்தைப் பிறரிடம் புகுத்திய பெருமை வெல்ஸ்லிக்கு உரியது. வாரன் ஹேஸ்டிங்ஸ் தொடங்கிய பிரிட்டிஷ் இந்திய ஆட்சி அமைப்புமுறை காரன்-வாலிஸ்ஸின்கீழ் வளர்ச்சி அடைந்தது. அவ்வளர்ச்சிக்கு அடுத்தபடியாக உதவியளித்தவர் வெல்ஸ்லி. இவருடைய செயல்கள் ஆங்கிலேயர் இந்நாட்டில் சிறப்பான ஆதிக்கம் பெற மிகுதியும் உதவின.

---

* 67, பக். 205.

பகுதி 10

வெல்ஸ்லியின் பிற்கால வாழ்க்கை ; படைத்தலைவர் வெல்ஸ்லி

வெல்ஸ்லி பதவியிலிருந்து விலகுதல்: 1802-ம் ஆண்டிலேயே வெல்ஸ்லி தமது கவர்னர்-ஜெனரல் பதவியினின்றும் விலக எண்ணினார் என்றும் பிறகு அவ் வெண்ணத்தைக் கைவிட்டார் என்றும் முன்னர்ப் பார்த்தோம். அவர் நடத்திய போர்கள் கம்பெனியின் கடன்களை மிகுதியாக்கின. 1797-ல் கம்பெனியின் கடன்கள் 17,000,000 பவுன்கள் ; 1806-ல் அவை, 32,000,000 பவுன்களாக வளர்ந்தன. அவர் இணைத்த நாடுகளினின்று வருவாய் கிடைத்தபோதிலும் காலப்போக்கில் தான் அவற்றைப் பெறமுடியும். இயக்குநர்கள், வணிகர்களானபடியால் வாணிக நோக்கத்துடன் தான் நிலைமையை மதிப்பிட்டனர். தமது பொருள்கள் குறைந்து வருவதைக் கண்டு வருத்தமுற்றனர் ; அஞ்சினர். இந்தியாவில் நாடுகவரும் கொள்கையை அவர்கள் எதிர்த்தமைக்குக் காரணம் வாணிகத்தால் இலாபம் பெற வேண்டுமென்ற எண்ணம்தான். ஆகவே ஆங்கிலேயர் தம்மை அறியாமலேயே இந்தியாவில் அவர்கள் ஆட்சியை வேரூன்றச்செய்தனர் என்று புலனாகிறது. 1784, 1793 ஆகிய ஆண்டுகளின் சட்டங்கள் கம்பெனியின் ஆட்சிப் பகுதியின் பெருக்கத்தைத் தடைசெய்தன. அவ்வாறிருந்தும் அவற்றை மீறி இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சிப் பகுதி, பாதுகாப்பு நிலையைக் கடந்து விரிவுற்றுவருவதாகத் தாய்நாட்டில் கருத்துக்கள் பரவிவந்தன. இயக்குநர்கள், வெல்ஸ்லியுடன் கருத்து வேறுபாடு கொண்டனர். சிவில் பணித்துறையாளருக்குக் கல்விப்பயிற்சி, கம்பெனியாரின் வாணிகத் தனிச்சிறப்புரிமை, **ஹென்ரி வெல்ஸ்லியைத்** துணைக் கவர்னராக்கியது, முதலிய செய்திகளில் அவ்விருசாராருக்கும் கருத்தொற்றுமை இல்லை. மேலும்

கவர்னர்-ஜெனரல், தங்களைக் கலந்து ஆலோசியாமலும், தங்களிடம் அறிவிக்காமலும் பல செயல்களைப் புரிந்து வருவதாக இயக்குநர்கள் குற்றங்கூறினர். கல்கத்தா ஆலோசனைக் குழுவினரையும் கவர்னர்களையும் அதிகார மற்றவர்களாக்கிவிட்டார் வெல்ஸ்லி என்றும் சினங் கொண்டனர். இயக்குநர்களையும் மேற்பார்வைக் கழகத் தினரையும் அவர் பொருட்படுத்துவதில்லை என்பது அவர் மீது ஏற்பட்ட மற்றொரு குற்றச்சாட்டாகும். சுருங்கக் கூறின், வெல்ஸ்லி, அளவுக்கு மிஞ்சிச் செலவு செய்கிறார் என்றும் (கல்கத்தாவில் அவர் கட்டியுள்ள பெரிய அரசியல் நிலையம் (கவர்மண்ட் ஹவுஸ்) அவருடைய பகட்டாரவார விருப்பத்துக்குச் சான்றாகும்) சர்வாதி காரக்கொள்கையைப் பின்பற்றுகிறார் என்றும் இயக்கு நர்கள் கூறினர். மேலேகுறித்த கட்டடத்தைப் பற்றித் தம் தாய்நாட்டினருக்கு அறிவிக்காமலேயே கவர்னர்–ஜெனரல் மூன்று ஆண்டுகள் (1798—1801) கடத் திவிட்டார். வெல்ஸ்லி, இயக்குநர்களைப் பலவாறு இழித்துக் கூறியதாகவும் அறியக்கிடக்கிறது. தமது பணிகளின் பெருமையை அவர்கள் உணரவில்லை என்பது வெல்ஸியின் கருத்து. மேலும் தமது சிறந்த திட்டங்களை அவர்கள் தடுத்துவிடுகின்றனர் என்றும் கவர்னர்-ஜெனரல் குறைகூறினார். அந்நிலையில் ஹோல்காருடன் நிகழ்த்திய போரில் ஆங்கிலேயர் அடைந்த தோல்விகள் (1804-5), வெல்ஸ்லிக்குத் தாய்நாட்டில் ஏற்பட்டிருந்த எதிர்ப்பை வலிமைப்படுத்தின. பிட் உள்ளிட்ட பலர் வெல்ஸ்லியின் செயலைக் கண்டித்தனர். அவரைத் திரும்ப அழைக்கவும் தீர்மானம் நிறைவேறியது. உடனே வெல்ஸ்லி பதவியினின்று நீங்கிவிட்டார்.

அவருடைய பிற்கால வாழ்க்கை: இங்கிலாந் துக்குத் திரும்பிச்சென்ற உடனேயே வெல்ஸ்லியின் மனைவி, அவரைவிட்டு நீங்கினாள். (அவர் மனைவி 1816-ல் இறந்தாள்). 1806 முதல் 1808 வரை அவர்மேல், பார்லி மெண்டில் பல எதிர்ப்புக்கள் தொடர்ச்சியாகத் தோன்

றின. அயோத்தியைப் பொறுத்த் அவர் கொள்கை, இந்தியாவில் நாடுகளை இணைத்துக்கொண்டமை, கரு நாடகத்தைக் கைக்கொண்டமை முதலிய செய்திகளைக் காமன்ஸ் சபையினர் பரிசீலனை செய்தனர். முடிவில் அச்சபை வெல்ஸ்லியின் பணிகளுக்காக அவரைப் பாராட்டிப் புகழ்ந்தது. ஆனால் 1807-ல் இயக்குநர் களும் மேற்பார்வைக் கழகத்தினரும் அவருடைய கொள் கையை வன்மையாகக் கண்டித்தனர். வெல்ஸ்லி, 1809-ல் ஸ்பெயினுக்கு அரசியல் தூதராகச் சென்றார்; திரும்பிய பிறகு 1810 முதல் 1812 வரை அயல்நாட்டுச் செயலாள ராகப் பணியாற்றினர். கத்தோலிக்கருக்கு உரிமை அளித்தல், பார்லிமெண்டுச் சீர்திருத்தம் முதலிய விரிநிலை தழுவிய செய்திகளை அவர் ஆதரித்தார்; தீபகற்பப் (தீவக்குறைப்) போர் ஊக்கத்துடன் நடைபெறவேண்டு மென்று அதை ஆதரித்தார். 1822 முதல் 1828 வரை அவர், அயர்லாந்தில் லார்டு-லெப்டினண்ட் பதவியை ஏற்றிருந்தார். 1825-ல் அவர் ஒரு அமெரிக்க அழகியை மணந்தார். 1836-ல் இயக்குநர்கள் தமது தவற்றை உணர்ந்து, அவர் இந்தியாவில் ஆற்றிய சிறந்த பணி களுக்காக அவருக்கு நன்றி தெரிவித்தனர்; 20,000 பவுன் களைப் பரிசாகத் தந்தனர்; ஐந்து ஆண்டுகட்குப் பிறகு அவருடைய நினைவுக்கு அறிகுறியாகச் சலவைக்கல்லால் ஒரு சிலையும் எழுப்பத் தீர்மானித்தனர். வெல்ஸ்லி 1842-ல் இறந்தார்.

படைத்தலைவர் வெல்ஸ்லி: இரண்டாவது மராட் டியப் போரில் போற்றத்தக்க பங்குகொண்ட பின் தளபதி வெல்ஸ்லி, 'நைட்' பட்டத்தைப் பெற்றார் (சர் ஆர்தர் வெல்ஸ்லி). 1805-ல் இவர் இந்தியாவை விட்டுப் புறப் பட்டார்; 1809 முதல் 1814 வரை தீவக்குறைப் போரில் (Peninsular war) வியத்தகு வகையில் வெற்றிகள் அடைந்தார்; நெப்போலியனின் வீழ்ச்சியையும் கண்டார். 1814-ல் அவருக்கு வெல்லிங்டன் டியூக் என்ற பட்டம் கிடைத்தது. வேறு பல பட்டங்களையும் அவர் பெற்றார்.

காமன்ஸ் சபை அவருக்கு 400,000 பவுன்களைப் பரிசாகக் கொடுத்தது. 1815-ல் வாட்டர்லூ போரில் நெப்போலியனை முடிவாக முறியடித்த அழியாப்புகழ் அவருக்கு உரியது. 1828 முதல் 1830 வரை அவர் இங்கிலாந்தில் பிரதம அமைச்சராயிருந்தார். விரிநிலை தழுவிய சீர்திருத்தங்களை எதிர்த்ததால் அவரை மக்கள் வெறுக்கத் தொடங்கினர். அரசியலில் அவர் தலையிட்டது தவருகும். அத்துறையில் அவருக்கு வெற்றி கிடைக்கவில்லை. பார்லிமெண்டு சீர்திருத்தத்தை எதிர்த்த காரணத்தால் அவருடைய அமைச்சர் சபை வீழ்ந்தது. பார்லிமெண்ட்டுச் சீர்திருத்த மசோதா எதிர்ப்பை அவர் 1832-ல் தான் கைவிட்டார். ஆனல் அது காலங்கடந்த செயலாயிற்று. 1846-ல் அவர் அரசியலை விட்டு நீங்கி 1852-ல் இறந்தார்.

பகுதி 11

கவர்னர்-ஜெனரல் வெல்ஸ்லியின் சிறப்பு

இயல்பு : ரிச்சர்டு வெல்ஸ்லி சிறந்த புலமை படைத்த அறிஞர்; பண்டைய கிரேக்க, இலத்தீனிய இலக்கியங்களைக் கற்றவர்; இலத்தீன் செய்யுட்களில் தனித்திறமை வாய்ந்தவர்; அதற்கான ஒரு போட்டியில் வெற்றிபெற்றுச் சான்ஸலர் பரிசை 1780-ல் பெற்றவர்; டெமாஸ்தனீஸ், சிசரோ தாந்தே (Dante), ஷேக்ஸ்பியர் முதலியவர்களின் நூல்களை நன்கு கற்றவர்; சொற்போர் நிகழ்த்துவதில் குறிப்பிடத்தக்க ஆற்றல் அவரிடமில்லை. எனினும் அவர் எழுதியுள்ள முடங்கல்களும் குறிப்புக்களும் அவருடைய அறிவுத்திறமையை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. அவர், விரிந்த நோக்கமும் பல செய்திகளைப்பற்றித் தெளிந்த கருத்தும் படைத்திருந்தார்; கலையையும் விரும்பிப் போற்றினர்; நகர அமைப்புத் திட்டங்களில் கருத்துச் செலுத்தினர்; இந்திய விலங்குகளையும் பறவைகளையும் பற்றி அறிந்துகொள்வதில் ஆர்வம் கொண்டிருந்தார்; பேரறிஞர் பிரான்ஸிஸ் புக்கானின் என்பாரை அதுபற்றி ஆராயச்செய்தார்; உழவுத்தொழிலையும் கால்நடைப் பராமரிப்பையும் போற்றினர். கல்வியில் அவர் கொண்டிருந்த அக்கரையைப்பற்றி முன்னர்க் குறிப்பிட்டோம். சிவில் பணியாளர் பயிற்சி முறையில் சமயத் தொடர்பான மேற்பார்வைக்கு வழிவகுத்திருந்தார். சமயத்துறையிலும் சமூக வாழ்க்கையிலும் பகட்டாரவாரங்களை அவர் நாடினர். சதி என்னும் உடன்கட்டை ஏறும் வழக்கத்தைக் கண்டிக்க முயன்றார். உடல்வலிமை குறைந்திருந்தபோதிலும் அவரிடம் மனவலிமை இருந்தது. ஊக்கத்துடன் செயல்களைத் தொடங்கும் அவரது ஆற்றல் வியக்கத்தக்கதே ஆம். அவர், கடமையை நழுவ விடுபவரல்லர்; பெரிய பொறுப்புக்களையும் கடமை உணர்ச்சியுடன் ஏற்றுக்கொள்வார். எத்தகைய தோல்வியையும் தம்முடைய பொறுப்பின்கீழ்

ஏற்றுக்கொள்ளும் சிறந்த உளத்திட்பம் அவரிடமிருந்தது. தமது கூட்டாளிகளுடன் சேர்ந்து பணிபுரிவதைவிடத் தமக்குக் கீழ்ப்பட்டவர்களுடன் இணைந்து பணியாற்றுதலில் அவருக்கு மிகுந்த விருப்பமிருந்தது. எனினும் அவருடன் பணியாற்றிய யாவரையும் அவர் தக்கமுறையில் சிறப்பித்து அவர்களுடைய நல்லெண்ணத்தைப் பெற்ருர். பிறர், தாமே வலிந்து தரும் பரிசுகளையும் மறுக்கும் பண்பாடு அவரிடமிருந்தது. போரில் வெற்றிக்குப்பின் தமக்குக் கிடைத்த பரிசுத்தொகையையும் அவர் ஏற்கவில்லை என்பதைக் கண்டோம். சட்டமுறையான அமைப்பைப் போற்ற வேண்டுமென்று அவர் எண்ணுவதில்லை; அவரிடம் பேரரசுப்பேரவா இருந்தது என்பதும் உண்மை; ஆயினும் மக்களின் நலத்தை மதிக்காத மனப்பான்மை அவரிடம் இல்லை. பொதுச்செய்திகளில் இவர், ஆர்தர் வெல்ஸ்லியைவிடப் பரந்த நோக்குக் கொண்டவர். இயக்குநர்களையும் பிற மேலதிகாரிகளையும் வெளிப்படையாகவே குறைகூறுவதற்கு வெல்ஸ்லி அஞ்சுவதில்லை; தாம் கூறும் இழிவுச் சொற்கள் அவர்கள் மனத்தைப் புண்படுத்துமே என்று சிறிதும் சிந்திப்பதில்லை. அவர், தம் உடன்பிறந்தார் இருவருக்கு இந்நாட்டில் பல நல் வாய்ப்புக்களை அமைத்துக்கொடுத்தார்; அவருடைய முதல் திருமணம் மரபு ஒழுக்கத்துக்கு முரணுனது; இரண்டாவது திருமணம் அவருடைய 65-வது வயதில் நடைபெற்றது. உலக இன்பத்தை அவர் உள்ளம் விரும்பியது. தற்பெருமை அவருக்கு உண்டு; இயக்குநர்களைக்கூட அவர் பொருட்படுத்தாததைக் கண்டோம். இந்தியச் சிற்றரசர்களை அவர் மதிப்பதில்லை. அவரிடம் நாட்டுப் பற்றும் பேரவாவும் தந்நலமும் கலந்து விளங்கின. இங்கிலாந்து மன்னர் அக்காலத்தில் வழங்கிவந்த பட்டங்களின் உண்மைப் பயனை ஆழ்ந்து சிந்தித்து உணராமல் வெல்ஸ்லி அவற்றில் மிக்க நாட்டங்கொண்டிருந்தார். அதனுல் அவர் மன அமைதியும் குன்றியது. முடிவாக வெல்ஸ்லியின் பெருமைசால் இயல்பும் அறிவாற்றலும் விடாமுயற்சியும் கூர்ந்த அரசியல் அறிவும், அவர்

இந்தியாவில் பிரிட்டிஷ் பேரரசை நிறுவ உதவியாக இருந்தன.

சாதனைகள் : வெல்ஸ்லி, பேரரசுக் கோட்பாட்டை ஆதரிப்பவர்; சிறந்த அரசியல் வல்லுநர்; அவரது அரசியலறிவு விரிவானது; அரசியல் கருத்துக்கள் தெளிவானவை; விரிவானவை. இந்தியச் செய்திகளை அவர், உலகச்சூழ்நிலையின் அடிப்படையிலேயே நோக்கி வந்தார். இந்தியாவில் பிரிட்டிஷ் இராச்சியத்தின் விரைவான வளர்ச்சியைத் தொடங்கியவர் இவரே. இவர் மனக்கண்முன் எப்பொழுதும் ஐரோப்பிய அரசியல்நிலை விளங்கிவந்தது. இந்திய அரசியல், இராணுவச் செய்திகள் – இவற்றின் எல்லாக் கூறுகளையும் இவர் ஆழ்ந்து கற்றுணர்ந்து அவற்றிற்கேற்பத் திட்டங்கள் வகுத்தார். வெல்ஸ்லி, கேடுகளின் அறிகுறிகளை மட்டும் நீக்கிவிட்டு அமைதி பெறுபவரல்லர்; கேடுகளையே ஒழிக்க முனைபவர். இச்செய்தியில் இவரை, நோயின் அறிகுறிகளை மட்டும் நீக்கி அமைதிபெருது நோயையே நீக்கும் மருத்துவருக்கு ஒப்பிடலாம். இக்கவர்னர்-ஜெனரல் சிக்கல்களைக் குறுக்கு வழியில் தீர்ப்பவரல்லர். இடையூறுகளின் அடிப்படையை உணர்ந்து அதனை அழிக்கும் அரசியல் வல்லமை அவருக்கு இருந்தது. அறியாமைக்கும் முன்னேற்றத் தடைகளுக்கும் அவர் இடங்கொடுப்பதில்லை. திப்புவையும் மராட்டியரையும் வெல்ல அவர் முறையாக அமைத்திருந்த திட்டங்கள் ஆழ்ந்து சிந்திக்கத்தக்க பெருமை வாய்ந்தன என்பதில் ஐயமில்லை. அவர் தமது உதவியாளரிடம் நம்பிக்கைகொண்டு அவர்கள் தமது கடமைகளை வெற்றியுடன் செய்து முடிப்பதற்கு இன்றியமையாத அதிகாரங்களை அவர்களுக்கு வழங்கியிருந்தார். சட்ட முறைமையை விடத் திறமைக்கே அவர் சிறப்பளித்தார். ஆதலால் ஆலோசனைக் குழுவையும் சென்னை, பம்பாய் அரசாங்கங்களையும் வெல்ஸ்லி தமது கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தினர். அவர் தமது கொள்கையையும் அதன் நிறைவேற்றத்தையும் பொறுத்தவரை முழுப் பொறுப்பையும் தாமே ஏற்றுக்

கொண்டார்; இராணுவத் தோல்விக்குக் காரணமாயிருந்த எவரையும் வெல்ஸ்லி துன்புறுத்துவதில்லே. அளவுக்கு மீறிச் செயலாற்றினுர் என்று அவர் மீது குற்றஞ்சாட்ட முடியும் ; ஆனுல் செய்ய வேண்டியதைச் செயலாற்ற வில்லே என்று யாரும் குறைகூற முடியாது. இந்தியச் சிற்றரசர்கள் சிலருக்கு அவர் தக்க முறையில் நீதி வழங்க வில்லே என்பது உண்மையே. மேலும் பாதுகாப்புமுறை உடன்படிக்கைக் கொள்கையில் உள்ள குறைபாடுகளேயும் மறுப்பதற்கில்லே. பாதுகாக்கப்பட்ட நாடுகளில் உண் ணுட்டுச் சீர்கேடுகள் பெருகின. வெல்ஸ்லி, வெற்றி பெற, வெளிப்படையான வழிகளேயே வகுத்துக்கொண் டார். ஊசலாடுந் தன்மை அவரிடமில்லே. அவர் தவறி ழைத்தாலும் இழைக்கலாம் ; ஆனுல் உறுதியற்ற - ஐயப் பாட்டுக்குரிய - முடிவுசெய்யப்படாத, செயலேப் புரிவ தில்லே. இன்னலுற்ற காலத்திலும் நம்பிக்கையை இழக் காமல் வீரத்துடன் எதிர்த்துநின்று போராடும் பேராண்மை அவருக்கு இருந்தது. சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்ற பேரார்வம் அவரிடமுண்டு. ஆட்சி முறைத் துறையில் அவருடைய கருத்துக்கள் சிறப்பு வாய்ந்தவை. அவற்றை அவரிடம் கற்று ஊக்கம்பெற்ற பல அலுவலர் பிற்காலத்தில் மிகச் சிறப்பான நிலேயை அடைந்தனர் என்று அறிகிரேம். வெல்ஸ்லி, கொடிய மைசூர் சுல்தானே வென்ருர் ; மராட்டியக் கூட்டரசின் தலேவரை அடக்கினுர் ; மற்ற மராட்டியத் தலேவர்களே மயங்கவைத்தார் ; நிஸாமைக் கம்பெனியுடன் இறுகப் பிணேத்தார் ; அயோத்தியின் காவலே வலிமைப்படுத்தி ஞர்; கருநாடகத்தில் நீடித்திருந்த கொடுங்கோன்மையை ஒழித்தார் ; ஏறத்தாழ இக்கால முறையை ஒட்டிச் சென்னே மாநிலத்தை அமைத்தார்; ஆக்ரா மாகாணத்தை ஏற்படுத்திஞர். அவருடைய பணிகளின் சிறப்பை, இயக் குநர்கள், முதலில் உணராதபோதிலும் முப்பது ஆண்டு கட்குப் பிறகு முற்றும் உணர்ந்து மனம், மொழி, மெய்க ளால் நன்றி பாராட்டினர். மான்ஸனும் லேக்கும் அடைந்த தோல்விகள் காரணமாக வெல்ஸ்லி பதவியினின்று விலக

நேரிட்டது. அவ்வாறு ஏற்படாமல் மேலும் தொடர்ந்து அவர் பதவியில் இருந்திருப்பாராயின் மேலும் பல செயல்கள் ஆற்றியிருப்பாரென்று கூறலாம். அவர், கம்பெனியை அதன் இந்தியப் பகைவர்களிடமிருந்தும் பிரெஞ்சியரிடமிருந்தும் காப்பாற்றினர் ; பிரிட்டிஷ் இந்தியப் பேரரசை நிறுவினர் ; கம்பெனியாரின் நிலப்பகுதிகளை இரு மடங்காகப் பெருக்கினர் ; அக்கால உலகநிலையில் தம் செயல்களால் பிரிட்டனுக்கு அரிய நன்மை புரிந்தார் ; தமது உடன் பிறந்தாருடன் ஒத்துழைத்துத் தீபகற்பப் போரில் நெப்போலியனை முறியடிக்க உதவினர். வெல்ஸ்லி இந்தியாவில் வெற்றிபெற அவருடைய ஆற்றலும் பண்புகளும் உதவியாயிருந்தன என்பது உண்மையே. ஆயினும் அவர் புகழ்பெற்ற பல தலைவர்களின் உதவியைப் பெற்றமையும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கதாகும். ஹாரிஸ், ஸ்டூவர்ட், ஆர்தர் வெல்ஸ்லி, லேக் முதலிய படைத்தலைவர்களும் மால்கம், மெட்காஃப், மன்ரோ, எல்பின்ஸ்டன் முதலிய சிவில்துறைப் பணியாளரும் செய்த அருஞ்செயல்களை நாம் மறப்பதற்கில்லை. கவர்னர்-ஜெனரல் என்ற முறையில் அவர் பெற்றிருந்த மிகுதியான அதிகாரங்களும், பிட், தண்டாஸ், காஸல்ரீ முதலியோரின் ஆதரவும், வெல்ஸ்லிக்கு உதவியாயிருந்தன. ஒரு வாணிக நிலையமாயிருந்த கிழக்கிந்தியக் கம்பெனியை அதன் குறிக்கோளுக்கு மாருகவே ஒரு பேரரசாக அமைத்தார் வெல்ஸ்லி.[1] அவர், இந்தியாவின் கவர்னர்-ஜெனரல்களில் மிகவும் சிறப்புற்றவர்களில் ஒருவராவர்; வாரன்ஹேஸ்டிங்ஸுடனும் டல்ஹௌசியுடனும் ஒப்பிடத்தக்க பெருமை இவருக்கு உண்டு. "கம்பெனியின் குலத்தில் ஒரு அக்பர்" என்று வெல்ஸ்லி புகழப்படுகிருர்.[2] "வெல்ஸ்லி, வியத்தகு அருஞ்செயலாற்றிய சிறந்த ஆட்சியாளர்; அவருடைய ஆற்றல் புகழத்

1. 45, பக். 206.

2. 64 II, பக். 179.

தக்கது."* பிரிட்டிஷ் இந்திய ஆட்சியாளர்களில் மிகவும் சிறப்புடையவரான வாரன் ஹேஸ்டிங்ஸுக்கு, வெல்ஸ்லிக்குக் கிடைத்திருந்த நல்வாய்ப்புக்கள் இல்லை என்பதையும் நோக்கவேண்டும்.

---

* *80. பக். 307-8.*

பகுதி 12

காரன்வாலிஸ் (1805); பார்லோ (1805-7)

காரன்வாலிஸ்: 1793-ல் இந்தியாவை விட்டகன்ற காரன்வாலிஸ், தமது தாய்நாட்டில் மிகுந்த பாராட்டுகளைப் பெற்ருர். அவர் 1794-ல் ஐரோப்பாவுக்கு ஒரு தூதுவராக வும் சென்று திரும்பினுர். மூன்று ஆண்டுகட்குப் பின் அவரை அரசியலார் இந்தியாவில் கவர்னர்-ஜெனரலாக அமர்த்தினர்; ஆனுல் அதை அவர் அவ்வமயம் ஏற்றுக் கொள்ளவில்லை. பின்னர் அதற்காக வருந்தினுர். 1798 முதல் 1801 வரை அவர் அயர்லாந்தில் "லார்டு-லெப்டி னண்ட்" டாகப் பணிபுரிந்தார். பின்னர்ப் பிரான்சுக்குச் சென்று நெப்போலியனைக்கண்டு 1802-ல் ஏமியன்ஸ் உடன்படிக்கையை முடித்துவைத்தார். தமது 67-வது வயதில் வில்லியம் கோட்டையின் கவர்னர்-ஜெனரல் பதவியை மீண்டும் ஏற்றுக்கொண்டார். 1805-ம் ஆண்டின் இறுதியில் கல்கத்தா வந்து சேர்ந்தார்.

கவர்னர்-ஜெனரல் பதவி (1805): முன்னர் குறித்த வாறு மான்ஸனும் 'லேக்'கும் அடைந்த தோல்விகள், வெல்ஸ்லியின் முன்னேற்றக் கொள்கைக்கு ஊறு விளைத் தன. காரன்வாலிஸ், தமது பழைய "சுற்றரண் காப்புக் கொள்கையை" மீண்டும் பின்பற்ற முற்பட்டார் (இக் கொள்கையை இறுதியாகக் கைவிட்டவர் ஹேஸ்டிங்ஸ் பிரபு). புதிய கவர்னர்-ஜெனரல், பாதுகாப்புமுறை உடன்படிக்கைகளைக் குறை கூறினுர். அக்கொள்கையின் விளைவாகச் சிறப்பற்ற அரசர்கள் மேலான ஆதரவைப் பெறுகின்றனர் என்று வருத்தம் தெரிவித்தார். எவ்வகை யிலாவது மராட்டியப் போரை முடிவுறச் செய்யவேண்டு மென்ற கட்டளையைப் பெற்றே அவர் இந்தியாவுக்கு வந்தார். காரன்வாலிஸ்ஸின் திட்டங்களாவன: ஜஸ்வந்த் ராவ் ஹோல்காருடன் உடன்பாடு செய்து கொள்ளல்; குவாலியரையும் கோஹட்டையும் தௌலத்ராவ் சிந்தியா

வுக்குக் கொடுத்து அவரை அமைதியுறச் செய்தல்; ஆக்ரா நீங்கலாக, யமுனையின் மேற்குப்புறத்தில் உள்ள நிலப்பகுதிகள் அனைத்தையும் கைவிடல்; இராசபுத்திர நாடுகளுடன் செய்துகொண்ட கூட்டுறவுகளைக் கலைத்தல், முதலியனவாம். இக்கொள்கையை, லேக் கடுமையாக எதிர்த்தார். அதனால் பிரிட்டிஷாரின் சிறப்புக்குத் தீமை ஏற்படும் என்றார். தம் ஆணைகளைச் செவ்வனே நிறை வேற்றப் பிரயாணம் செய்துகொண்டிருந்த காரன்வாலிஸ் 1805-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், காஸிப்பூரில் (வாரணாசிக்கு அருகில்) இறந்தார்.

பார்லோ (1805–7): காரன்வாலிஸ்ஸுக்குப் பின் அவர் பதவியை சர் ஜார்ஜ் பார்லோ ஏற்றார். இவர் ஆலோசனைக் குழுவில் முதல்வராக இருந்தவர்; தொடர்ச்சி யாக மூன்று கவர்னர்-ஜெனரல்களிடம் (காரன்வாலிஸ், ஷோர், வெல்ஸ்லி) பணியாற்றியவர்; வங்காளச் சிவில் பணித்துறையில் 28 வருட அனுபவம் வாய்ந்தவர்; காரன் வாலிஸ் சட்டத்தொகுப்பைத் திட்டப்படி எழுதியவர்; வெல்ஸ்லியின் கொள்கை வெற்றிபெற அவருக்கு உதவியவர்; மாறிவரும் சூழ்நிலைக்கேற்பத் தமது செயல் களை அமைத்துக்கொள்ளும் ஆற்றல் பெற்றவர். ஆனால் ஒரு பேரரசின் செயலாட்சிப் பொறுப்பை மேற்கொள்ளு வதற்குத் தேவையான உளத்திட்பம் அவரிடமில்லை. ஆதலால் தமது முன்னவரின் தலையிடாக் கொள்கை யையே பார்லோ பின்பற்றினார். அவரது திட்டங்களை நிறைவேற்றவும் முற்பட்டார். 1805-ம் ஆண்டு அக்டோ பரில் குவாலியரையும் கோஹட்டையும் சிந்தியாவுக்குக் கொடுத்து அவருடன் உடன்படிக்கை செய்துகொண்டார். இருவர் நாடுகளுக்குமிடையே சம்பல் ஆறு எல்லையாக அமைவதென்றும் முடிவாயிற்று. இராசபுத்திரர்களுடன் கம்பெனி எவ்வித உடன்படிக்கையும் செய்துகொள்வ தில்லை என்றும் தீர்மானிக்கப்பட்டது. ஹோல்காரைப் பொறுத்தவரை, ஆங்கிலேயர் இழந்த இராணுவ மேன் மையை மீண்டும் நிறுவ லேக் முயற்சி செய்துவந்தார்.

பியாஸ் ஆறுவரை ஹோல்காரைத் துரத்தியடித்தார். ஹோல்கார் சீக்கியரது ஆதரவை நாடி முறையிட்டார். அவ்வமயம் சீக்கியத் தலைவர்கள் (சர்தார்கள் அல்லது மிசில்கள்) சட்லெஜ் ஆற்றின் இருமருங்கிலும் தமது அதிகாரத்தை நிறுவியிருந்தனர். லேக் லாகூரிலிருந்த இரஞ்சித்சிங் என்ற இளைய சீக்கியத் தலைவரோடு 1805-ம் ஆண்டின் தொடக்கத்தில் உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி அமிருதசரஸில் அவ்வமயம் அடைக்கலம் புகுந்திருந்த ஹோல்காருக்கு எவ்வித உதவியும் செய்வதில்லை என்றும், அவரைப் பஞ்சாபைவிட்டு நீங்கும்படி வற்புறுத்துவதாகவும் இரஞ்சித்சிங் வாக்குறுதி அளித்தார். ஆங்கிலேயர், சீக்கிய மகாராசா இரஞ்சித்சிங்கின் ஆட்சிப் பகுதிக்கு இடையூறு செய்வதில்லை என்று உடன்பட்டனர். ஹோல்கார் வேறு வழியின்றிப் பார்லோவுடன் அமைதியை நாடினர். பார்லோவின் வற்புறுத்தல் காரணமாக லேக், ஹோல்காருடன் 1806-ல் உடன்படிக்கைக்கு இசைந்தார். அதன்படி ஹோல்கார், தாம் முதலில் பெற்றிருந்து, பின் இழந்த நாடுகளை மீண்டும் அடைந்தார். அவரே இத்தகைய நன்மை தமக்குக் கிடைக்குமென்று எதிர்பார்த்திருக்கமாட்டார் என்று கூறலாம். மேலும் கவர்னர்-ஜெனரல், ஜெயபுரி, பூந்தி (Bundi), மற்ற இராசபுத்திர நாடுகள், ஆகியவற்றுடன் முன்னர்ச் செய்துகொண்ட உடன்படிக்கைகள் அனைத்தையும் ஒழித்தார். அதன் விளைவாக, வெல்ஸ்லியுடன் பாதுகாப்பு உடன்படிக்கை செய்துகொண்டு, ஹோல்காருக்கு எதிராக ஆங்கிலேயருக்கு உதவிசெய்த ஜெயபுரி அரசர் ,நடுச்சந்தியில் விடப்பட்டார்! பார்லோவின் கொள்கை, கண்டிக்கத் தக்கதாயிற்று. ஹோல்காரின் ஆக்கிரமிப்புக்குப் பல சிறு நாடுகள் உட்படக்கூடியநிலை ஏற்பட்டது. மறுபடியும் மராட்டியருடன் போரிடவேண்டியதும் இன்றியமையாததாயிற்று. மேலும் பார்லோவின் செயல்கள், பிண்டாரியரின் வலிமைப் பெருக்கத்துக்கும் காரணமாயின. II-ம் ஷா ஆலம், 1806-ல் இறந்தார். அவருக்குப்பின் அவர் மகன் II-ம் அக்பர் (1806–37) பட்டமேற்றூர்.

பார்லோ பின்பற்றிய கொள்கை மாளவத்திலும் இராசபுதனத்திலும் குழப்பம் விளைத்தது. ஆனால் அவருடைய உறுதி, ஐதராபாத்தில் ஆங்கிலேயரின் நிலைமையை வலிமைப்படுத்தியது. சிகந்தர் ஜா (நிஸாம் அலியின் மகனர்), ஹோல்காருடனும் சிந்தியாவுடனும் ஆங்கிலேயருக்கு எதிராகச் சூழ்ச்சி செய்தார் ; பிரிட்டிஷாரை ஆதரித்த மீர் ஆலம் என்ற பிரதம அமைச்சரைத் துன்புறுத்தினர். பார்லோ, ஐதராபாத்தின் செய்திகளில் தலையிட்டு, மீர் ஆலத்தை மறுபடியும் அதிகாரத்தில் அமர்த்தினர். பஸ்ஸீன் உடன்படிக்கையில் ஒரு சிறிய மாறுதலைக்கூட செய்ய பார்லோ மறுத்துவிட்டார். பேஷ்வாவுக்கு அனுகூலமாக அவ்வுடன்படிக்கையை மாற்ற வேண்டுமென்பது இயக்குநர்கள் விருப்பம். ஆனால் அதையும் கவர்னர்-ஜெனரல் பொருட்படுத்தவில்லை. இவ்வாறு ஐதராபாத்திலும் பூனாவிலும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை நிலைபெறச் செய்ய பார்லோ முயன்றார். அவராட்சியில் கம்பெனியின் நிதிநிலைமை சீர்திருந்தியது. பணம், மிகுதியாகச் சேர்ந்தது. பூரி ஜகன்னாதர் கோயில் – அங்கே இருந்த 300 நடனப் பெண்டிர் உட்பட, – பார்லோவின் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததால் அவருக்கு மிகுந்த வருமானம் கிடைத்தது. யாத்திரை வரியை மீண்டும் விதித்தும் அவர் பொருள் பெற்றார். அவருடைய கொள்கையை இயக்குநர்கள் கண்டித்தனர் ; ஆனால் மேற்பார்வைக் குழுவினர் ஆதரித்தனர்.

பகுதி 13

வேலூரில் புரட்சிக்கலகம் (1806)

1806-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் வேலூரில் (வட ஆர்க்காடு மாவட்டம்) ஐரோப்பியரை எதிர்த்து இந்தியச் சிப்பாய்கள் கலகமிட்டனர். அவ்வமயம் வில்லியம் பெண்டிங்க் பிரபு சென்னைக் கவர்னராக இருந்தார். அவருடைய ஒப்புதலைப் பெற்று சென்னைப் படைத்தலைவர் சர் ஜான் கிரேடக், சிப்பாய்கள் மேற்கொள்ள வேண்டிய சில புதிய விதிகளை நிறைவேற்றினார் (1805 - 6). அவை சிப்பாய்களின் மத உணர்ச்சிகளைப் புண்படுத்தும் முறையில் இருந்தனவாம். எடுத்துக்காட்டாக, நெற்றியில் திருநீறு பூசிக்கொள்ளுதல், போன்ற சமயச் சின்னங்களைச் சில காலங்களில் சிப்பாய்கள் கைவிடும்படி கட்டாயப்படுத்தப் பெற்றனர் ; காதணிகளும் தடை செய்யப் பெற்றன. சிப்பாய்கள், ஒரு தனிப்பட்ட வகையில் மீசையைக் கோலஞ் செய்து கொள்ளுமாறும், ஐரோப்பியரின் தொப்பி போன்ற தலைப்பாகை ஒன்றை அணிந்து கொள்ளுமாறும், வற்புறுத்தப் பெற்றனர். புதிய விதிகள், சிப்பாய்களைக் கிறித்தவராக்குவதற்கான ஒரு முயற்சி என்று பலர் கருதினர். அவ்வமயம் வேலூரில் இருந்த திப்புவின் குமாரர்களுடைய உதவியுடன் முகம்மதியர் ஆட்சியை மீண்டும் நிறுவச் சிப்பாய்கள் முயன்றதாகக் கிரேடக் கூறினார். ஆனால், கலகத்துக்குக் காரணம் மேலே கூறிய விதிகள் தான் என்று சர் தாமஸ் மன்ரோ விளக்குகிறார். புரட்சிக் கலகத்தில் நூற்றுவருக்கு மேற்பட்ட ஐரோப்பியர் கொல்லுண்டனர். விரைவில் தளபதி ஜில்லெஸ்பியின் தலைமையில் ஆர்க்காட்டிலிருந்து உதவிப் படை சென்றது. 300-க்கு மேற்பட்ட கலகக்காரர்கள் கொலையுண்டனர். எதிர்ப்புக்குக் காரணமாயிருந்த புதிய விதிகள் நீக்கப்பட்டன. திப்புவின் குடும்பத்ினரை ஆங்கிலேயர் கல்கத்தாவுக்கு அனுப்பினர் சென்னைக் கவர்னரும் படைத் தலைவரும்

இங்கிலாந்துக்குத் திரும்ப அழைக்கப்பெற்றனர் (1807). மக்களின் மத உணர்ச்சிகளை மதித்து நடக்கவேண்டியது இன்றியமையாதது என்பதை பார்லோ, வேலூர் கலகத்துக்குப் பிறகு உணர்ந்தார். இவர் வங்காளத்தில் செராம்பூர் கிறித்தவ மதபோதகர்களின் செயல்களுக்குச் சில தடைகளை விதித்தார். 1806-ம் ஆண்டுக் கலகம், 1857-ம் ஆண்டு இந்தியக் கிளர்ச்சிக்கு ஒரு முன்னோடியாக அமைந்தது.

பகுதி 14

மிண்டோ (1807-13) வாழ்க்கையின் முற்பகுதியும் கொள்கையும்

வாழ்க்கையின் முற்பகுதி : சர் கில்பர்ட் எலியட், என்னும் மிண்டோ எர்ல் கோமான் 1751-ல் பிறந்தவர்; சிறந்த கல்வி அறிவு பெற்றவர்; தெளிந்த, நடுத்தரமான கொள்கைகளை உடையவர்; பர்க்குடன் இணைந்து வாரன் ஹேஸ்டிங்ஸின்மீது துரோகக் குற்றஞ்சாட்டியவர்; சர் எலிஜா இம்பேயைக் காமன்ஸ் சபையில் தாக்கிப் பேசியவர்; 1806-ல் இவர் மேற்பார்வைக் கழகத்தின் தலைவரானார். பார்லோ, இயக்குநர்களின் ஆதரவைப் பெற்றிருந்தபோதிலும் அக்காலத்துப் பிரதம அமைச்சர், வெல்ஸ்லியின் கொள்கையைப் பின்பற்றக்கூடிய ஒருவரைக் கவர்னர்-ஜெனரலாக்க விரும்பினார். அமைச்சர் சபை, லாடர்டேல் என்பாரை ஆதரித்தது. லாடர்டேல், தடையற்ற வாணிகத்தை விரும்பியவர். ஆதலால் இயக்குநர்கள் அவரை விரும்பவில்லை. இறுதியில் மிண்டோ பிரபு, தாமே கவர்னர்-ஜெனரல் பதவியை ஏற்க இசைந்தவுடன் முதலில் இருந்த சச்சரவு முடிவுற்றது. மிண்டோ, 1807-ம் ஆண்டு ஜூலை மாதம் கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்தார். பார்லோ மறுபடியும் ஆலோசனைக் குழுவின் உறுப்பினரானார்.

கொள்கை : தலையிடாக் கொள்கையைப் பின்பற்ற வேண்டுமென்ற கட்டளையைப் பெற்றே மிண்டோ இந்நாட்டுக்கு வந்தார். ஆனால் முழு அளவுக்கு அக் கொள்கையைக் கடைப்பிடிப்பதென்பது இயலாத செயல் என்பதை அவர் விரைவில் உணர்ந்தார். ஆகவே தலையிடாமை முறைக்குத் தீங்கு இல்லாமலும் இந்நாட்டில் பிரிட்டிஷ் நலங்களுக்குக் கேடு வராமலும் செயலாற்ற முற்பட்டார். பொதுவாக அவர் ஆட்சி அமைதியானதா

யிருந்தது. சுற்றரண் காப்புக்கொள்கையைப் பயனற்ற தாக்கும் வகையில் இந்தியாவில் அரசியல் நிகழ்ச்சிகள் ஏற்பட்டிருந்ததை அவர் அறிந்துகொண்டார். எனினும் அக்கொள்கையை வன்மையாக எதிர்த்துச் செயலாற்றும் எண்ணம் அவருக்கில்லை. அவர், பாரசீகம், ஆப்கானித் தானம், பஞ்சாபு, ஆகிய நாடுகளுக்குத் தூதுக்குழுவினரை அனுப்பினர் ; மொரீஷஸுக்கும் ஜாவாவுக்கும் படைகளை அனுப்பினர் ; இரஞ்சித்சிங்குடன் அமிருதசரஸில் உடன் படிக்கை செய்துகொண்டார் ; ஆனால் அது பாதுகாப்பு முறை உடன்படிக்கை அன்று. இந்தியாவில் ஆங்கில ஆட்சியின் தொடக்ககாலத்தில் சிறப்புடையதாயிருந்த ஒரு கொள்கையை 19-ம் நூற்றாண்டில் பின்பற்றுவ தென்பது எளிதாக இல்லை. ஆகவே பல இடையூறுகளுக் கிடையேதான் மிண்டோ, பழைய கொள்கையை அடியோடு அழிவுறுமல் காப்பாற்றிவந்தார். பிரெஞ்சுக் காரரால் ஏற்பட்ட அச்சம் அவர் காலத்திலும் தொடர்ந்து வந்தது. நெப்போலியன், 1807-ல் ஐரோப்பாவில் சிறப் பான ஆதிக்கம் பெற்ற பேரரசராக விளங்கினர். அவ் வமயம், இந்தியாவின்மேல் பிரெஞ்சுக்காரர் படையெடுக் கக்கூடும் என்ற அச்சம் மிண்டோவுக்கு இருந்தது. ஆத லால் அவர், பாரசீக ஷாவுடன் உடன்பாடுசெய்துகொள்ள ஜான் மால்கம் என்பாரை தெஹிரானுக்கு அனுப்பினர். இங்கிலாந்திலிருந்தும் பாரசீகத்துக்கு அரசியல் தூதர் சென்றிருந்தார். அவர் 1809-ல் பாரசீகத்துடன் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி, தம் நாட் டின் வழியாக எந்த ஐரோப்பியப் படையும் செல்லாவண் ணம் தடுப்பதாக ஷா வாக்குறுதி அளித்தார். கைம்மாறாக பாரசீகத்தை யாராவது எதிர்த்தால் ஆங்கிலேயர் ஷாவுக்கு உதவ உடன்பட்டனர். 1808-ல், மிண்டோ, காபூலுக்கு எல்பின்ஸ்டன் என்பாரை அனுப்பினர். ஆனல் அவர் ஷா ஷுஜாவைப் பெஷாவரிலேயே கண்டுவிட்டார். இரு வரும் 1809-ல் உடன்படிக்கைசெய்து கொண்டனர். ஆங் கிலேயருக்குப் பகையாக ஆப்கானித்தானத்தின் வழியாக எப்படை வந்தாலும் தடுத்துவிடுவதாக ஷா ஷுஜா ஒப்

புக்கொண்டார். ஆனால் அந்த ஷாவே விரைவில் தமது பட்டத்தை இழந்து அலைய வேண்டியதாயிருந்தபடியால் அவ்வுடன்படிக்கையால் பயனெதுவும் ஏற்படவில்லை. பிரெஞ்சுக்காரரைப் பற்றிய மிண்டோவின் அச்சம் மேலும் இரண்டு உடன்படிக்கைகள் செய்துகொள்ள அவரைத் தூண்டியது. அவற்றில் ஒன்று, சிந்து அமீர்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கை; மற்றொன்று 1809-ல் இரஞ்சித்சிங்குடன் ஏற்பட்டது. 1810-ல் ஐரோப்பாவின் அரசியல் நிலையில் மாறுதல் ஏற்பட்டது. பிரெஞ்சுக்காரர் இந்தியாவின்மேல் படையெடுக்கக்கூடிய நிலையில் இல்லை என்பது தெளிவாயிற்று. ஆதலால் மேலேகூறிய உடன் படிக்கைகளில் இறுதியாக உள்ளதைத்தவிர மற்றவை, செயல்முறைக்கு வரவில்லை. எனினும் இவை மிண்டோ வின் அரசியல் திறமையைக் காட்டுகின்றன.

பகுதி 15

அமிருதசரஸ் உடன்படிக்கை (1809)

சீக்கியத் தலைவர் இரஞ்சித்சிங், சட்லெஜ் ஆற்றுக்கு மேற்கேயுள்ள நாடுகளைத் தம் ஆட்சிக்கு உட்படுத்தியிருந்தார். 1806-ல் அவர் லூதியானவைக் கைப்பற்றினர். சட்லெஜின் கிழக்கில் உள்ள நாடுகளையும் கவர்ந்து ஒரு தேசீய இராச்சியத்தைத் தோற்றுவிக்க வேண்டுமென்பது அவருடைய குறிக்கோளாயிருந்தது. 1806-ல் லாகூரில் அவருடன் ஆங்கிலேயர் செய்துகொண்ட உடன்படிக்கையைப் பற்றி முன்னர்க் குறிப்பிட்டோம். அது சீக்கிய இராச்சியத்தின் கிழக்கெல்லையைத் தெளிவாகக் குறிப்பிடவில்லை. தாம் சட்லெஜின் கிழக்கிலும் தமது அதிகாரத்தைச் செலுத்தமுடியும் என்றே இரஞ்சித்சிங் நம்பியிருந்தார். 1808-ல் கீழ்ப்பகுதி சீக்கியர் மிண்டோவிடம் முறையிட்டனர். இரஞ்சித்சிங் பிரெஞ்சுக்காரருடன் இணைந்துகொள்ளாமலிருக்க வேண்டுமென்றே எண்ணம் மிண்டோவுக்கு இருந்தது. அதே சமயத்தில் தம்மிடம் முறையிட்டுக் கொண்ட கீழ்ப்பகுதி சீக்கியநாட்டினருக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டியதும் இன்றியமையாததாயிருந்தது. அந்நிலையில் 1808-ல் சார்லஸ் மெட்காஃபை அவர் இரஞ்சித்சிங்கிடம் அனுப்பினர். நீண்டகாலம் உடன்படிக்கை முன்னேற்பாட்டுப் பேச்சுக்கள் நடந்தன. ஐரோப்பாவில் இருந்த அரசியல் நிலையை அவ்வப்போது அறிந்துவந்த மிண்டோ, நெப்போலியன் ஸ்பெயினில் பல இடையூறுகளைப் பெற்றுவந்தார் என்பதைத் தெரிந்துகொண்டு, இரஞ்சித்சிங்குக்கு எளிதில் இணங்காமல் தமது நிபந்தனையை வற்புறுத்தினர். முடிவில் 1809-ல் அமிருதசரஸ் உடன்படிக்கை நிறைவேறியது. இவ்வுடன்படிக்கைக் கூறுகள் பதினைந்தே வரிகளைக் கொண்டது. பிற்காலத்தில் சிறிதும் மீறப்படவில்லை என்ற சிறப்பு அதற்கு உரியது. அதன்படி இரஞ்சித்சிங் தம் செயல்கள் அனைத்தையும்

சட்லெஜின் மேற்கிலேயே அடக்கிக்கொள்ள உடன்பட்டார். கம்பெனியுடன் ஒத்த நிலை அவருக்குக் கிடைத்திருந்தது. அவர் தாம் சாகும்வரை தாம்கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றினார். அமிருதசரஸ் உடன்படிக்கை, வெல்ஸ்லி, ஹேஸ்டிங்ஸ்பிரபு ஆகியோரின் கொள்கைக்கு மாறானதாயும் பழைய முறையை ஒட்டியதாகவும் இருப்பது நோக்கத்தக்கது. இரஞ்சித்சிங்கின் பேரவா நிறை வேறுவதற்கு அவ்வுடன்படிக்கை பெரிதும் தடை ஆயிற்று. ஆயினும் அவர் ஆங்கிலேயருடன் பகைமை கொள்வதை விரும்பவில்லை. அச்செயல் அவரது கூர்ந்த அரசியல் அறிவைக் காட்டுகிறது.*

---

* *102, பக். 185-6*

பகுதி 16

மத்திய இந்தியா; இராசபுதனம்

ஆங்கிலேயர் தலையிடுதல்: மிண்டோ பிரபுவின் ஆட்சியின் முற்பகுதியில் பண்டல்கண்டில் குழப்பம் மேலிட்டது. 1803-ம் ஆண்டிலே பேஷ்வா, கம்பெனி யாருக்குப் பண்டல்கண்டில் சில மாவட்டங்களைக் கொடுத் தார் என்பது ஈண்டு நினைவுகூரத்தகும். குழப்பம் காரணமாக மிண்டோ 1807-ல் தம் கருத்தை அப்பகுதியில் செலுத்த வேண்டியதாயிற்று. அவர் கலகக்கார இராச புத்திரத் தலைவர்களை எளிதில் தோற்கடித்து, அஜைகார் கலிஞ்சர் என்ற கோட்டைகளைக் கைப்பற்றிக்கொண்டார். உரிமைவாய்ந்த பட்டாணியத் தலைவரான அமீர்கான் என்பார், தமக்கென ஒரு இராச்சியத்தை அமைத்துக் கொண்டிருந்தார். அவர் ஜஸ்வந்தராவ் ஹோல்காரின் நண்பராவர். பான்ஸ்லேயின் நாடுகளை அவர் தாக்கி வந் தார்; 1809-ல் ஜபல்பூரையும் கைப்பற்றிச் சூறையாடினர். பான்ஸ்லேயுக்கு உதவி செய்யவேண்டிய கடப்பாடு ஆங்கிலேயருக்கு இல்லை. மேலும் அமீர்கான், ஆங் கிலேயருடன் உடன்படிக்கை செய்து கொண்டிருந்த ஹோல்காரின் பிரதிநிதியெனச் செயலாற்றி வந்தார். நிலைமை அவ்வாறிருந்தும் மிண்டோ, பான்ஸ்லேயுக்கு உதவி அனுப்பினர். அதன் விளைவாக, பான்ஸ்லே, அமீர்கானை இருமுறைகள் தோற்கடித்தார். கவர்னர்-ஜெனரலின் அச்செயல் ஹோல்காருக்கும் ஆங்கிலேயருக் கும் பகைமையை உண்டாக்கவில்லை; அவ்வமயம் மற் ெறாரு மராட்டியப் போரையும் தோற்றுவிக்கவில்லை.

கிருட்டினகுமாரியின் துயரநிகழ்ச்சி: (1810) இராச புத்திர அரசர்கள் தமது பொதுப் பகைவருக்கு எதிராக ஒன்று சேர இயலவில்லை. அவர்கள் உதயபுரி ராணுவின் மகளாகிய கிருட்டினகுமாரி என்ற பேரழகியை அடை வதற்காகத் தமக்குள்ளேயே போரிட்டு வலிமை குன்றி

யிருந்தனர். அவள் பொருட்டு 1807-ம் ஆண்டின் தொடக்கத்தில் ஜோதிபுரி அரசருக்கும் ஜெயபுரி அரசருக்குமிடையே போர் நிகழ்ந்தது. முதலில் ஜோதிபுரி அரசர் பீம்சிங் அப்பெண்மணியை மணந்துகொள்வது என்று உறுதி செய்யப்பட்டிருந்தது. ஆனால் அவர் இறந்துவிட்டார். பிறகு அப்பெண்ணைச் ஜெயபுரியின் ஜகத்சிங் மணந்துகொண்டார். பிறகு ஜோதிபுரியின் மன்னராக அமர்ந்த மான்சிங், கிருட்டினகுமாரி தமக்கே உரியவள் என்று வாதிட்டார். அரியணையைப் பொறுத்தே முதலில் திருமண உறுதி செய்யப்பட்டதென்றும் அதை மாற்றக்கூடாது என்றும் தாமே, பீம்சிங்கின் இடத்தில் அமர்ந்திருப்பதால் அப்பெண்ணைத் தாம் அடைவதுதான் முறையானது என்றும் அவர் சச்சரவிட்டார். அதன் விளைவாக ஏற்பட்ட போரில் இராசபுத்திர நாடுகளும் வேறு சில அரசுகளும் கலந்து கொண்டன. முடிவில் மான்சிங் தோல்வியுற்றார். அந்நிகழ்ச்சிகளை யெல்லாம் கண்ட கிருட்டினகுமாரி, அவளுடைய தந்தை கூறியபடி, நஞ்சு அருந்தி மாண்டாள். பெற்றெடுத்த தந்தையே தம் மகளை நஞ்சுண்ணுமாறு செய்தார்! அவளுக்கு அப்பொழுது வயது 16. அத்துயர நிகழ்ச்சி உதயபுரி இராணாவின் புகழையும் குறைத்தது. "கிருட்டினகுமாரி, கிரேக்க ஹெலனைப் போல, தனது குலத்துக்கும் எதிரிகளின் குலத்துக்கும் கூற்றமாயினள்."

ஜஸ்வந்த்ராவ் ஹோல்கார்: ஆங்கிலேயருடைய பெரிய பகைவரான ஜஸ்வந்த்ராவ் ஹோல்கார் 1806-ல் அவர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டபின் பைத்திய வெறிகொண்டு உறவினரையும் உடன் பிறந்தாரையும் கொன்று தள்ளினார், 1811-ல் அவர் இறந்தார். முடிவில் அவர் தோல்வியுற்ற போதிலும் அவருடைய வீரமும் விடாமுயற்சியும் போற்றத்தக்கன. அவருக்கு முறையற்ற வகையில் பிறந்த மால்ஹர்ராவ் II என்பாரை அவருடைய காமக் கிழத்தியான துளசிபாய் வளர்ப்புப் பிள்ளையாகக்கொண்டார், ஜஸ்வந்தின் சாவுக்குப்பின் மால்ஹர்ராவ் (4-வயதுக்குழந்தை) பட்டமேற்றார்.

பகுதி 17

திருவாங்கூர், சென்னை, புரட்சிக்கலகங்கள்

திருவாங்கூர்(1809-9): திப்பு, திருவாங்கூரைத் தாக்கியதால் (1790) மூன்ருவது மைசூர்ப் போர் தொடங்கியது என்பதை நாமறிவோம். 1795-ல் ஆங்கிலேயர் திருவாங்கூர் அரசருடன் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டனர். அதன்படி அந்நாட்டில் நிறுவப்பட்டிருந்த பிரிட்டிஷ் படையின் செலவுக்கு அரசர் ஆங்கிலேயருக்குப் பணம் கொடுக்க வேண்டும்; அத்தொகை, ஆண்டுக்கு 8 லட்சம் ரூபாய் என்று 1805-ல் முடிவு செய்யப்பட்டது. திருவாங்கூர் திவான் வேலுத்தம்பி ஆங்கிலேயருடன் கருத்து வேற்றுமை கொண்டிருந்தார். அவர்களிடம் அவருக்கு வெறுப்பும் இருந்தது. 1809-ல் அவர் ரெஸிடெண்ட் மெக்காலேயை, கொச்சியில் தாக்கி அவரை விரட்டினுர். கலகம் மூண்டது. மலபாரிலிருந்த ஆங்கிலப் படைவீரர்கள், கொல்லத்திலும் வேறுசில இடங்களிலும் இருந்த திருவாங்கூர்ப் படையினரை முறியடித்தனர். 1810-ம் ஆண்டின் தொடக்கத்தில் ஏறத்தாழ 30 ஐரோப்பியப் போர்வீரர்களும் ஒரு அலுவலாளரும் ஆலப்புழையில் கொல்லுண்டனர். சென்னையிலிருந்து சென்ற ஆங்கிலப் படை திருவாங்கூர் காவல் வரிசைகளைக் கைப்பற்றியது. மலபார்ப் படைத்தலைவர் சேம்பர்ஸ் திருவனந்தபுரத்தை நோக்கி முன்னேறிச் சென்ருர். வேலுத்தம்பி தற்கொலை புரிந்து கொண்டார்.

சென்னைப் படைக்கலகம் (1809): கவர்னர்-ஜெனரலாக இருந்த பார்லோ 1807-ம் ஆண்டின் முடிவில் சென்னைக் கவர்னராகப் பணியேற்ருர். அவர் தமது இயல்பினுலும் செயல்களாலும் மக்கள் தம்மை வெறுக்குமாறு செய்துகொண்டார். அரசியலாரின் செலவுகளைக் குறைக்க அவர் சில திட்டங்களை வகுத்தார். இராணுவ

அதிகாரிகள், கூடாரக் குத்தகைகள்மூலம் மாதந்தோறும் குறிப்பிட்ட வருவாயைப் பெற்றுவந்தனர். அக்குத்தகை முறையைக் கவர்னர் நீக்கினர். அச்செயலை இராணுவ அலுவலர் எதிர்த்தனர். பார்லோவும் அவர்கள் மீது கடும் நடவடிக்கைகளெடுத்தார்; சில அலுவலரை நீக்கினர். இதனல் படைத்துறை அலுவலர் கலகம் மசூலிப்பட்டினத்தில் தொடங்கி வேறு பல இடங்களுக்குப் பரவியது. கலகத்தை அடக்குவதில் கவர்னர் உறுதியுடன் ஈடுபட்டார்; கலகக்காரருக்குப் பணிந்து போவதை அவர் விரும்பவில்லை. அந்நிலையில் மிண்டோ சென்னைக்கு வந்து கலகத்தை அடக்கும் பணியில் ஈடுபட்டு வெற்றிப் பெற்றர். இக்கலகத்தைப் பற்றி இங்கிலாந்தில் நீண்ட விவாதம் நடந்தது. முடிவில் 1813-ல் பார்லோ திரும்ப அழைக்கப்பட்டார்.

பகுதி 18

கடல் கடந்த படையெழுச்சிகள்

மிண்டோவின் ஆட்சிக்காலத்தில் இந்தியாவிலிருந்து ஆங்கிலப்படைகள், கடல் கடந்து சென்று சில சிறப்பான வெற்றிகளைப் பெற்றன. 1809-ல் சென்னையிலிருந்து ஒரு படை புறப்பட்டு சீனுவில் காண்டனுக்கு அருகில் இருந்த போர்ச்சுகீசியப் பகுதியைக் கைப்பற்றியது. ஆனால் சீனர் அச்செயலை வன்மையாக எதிர்த்த காரணத்தால் அப்படை இந்தியாவுக்குத் திரும்பிவிட்டது. பிரெஞ்சியருக்குரிய போர்பன், மொரீஷஸ் தீவுகளில் தனி மனிதர்களின் போர்க்கப்பல்கள் கூடின. ஆங்கிலேயரின் வாணிகத்துக்கும் அதனுல் இடையூறு ஏற்பட்டது. அதனுல் இந்திய அரசியலார் இங்கிலாந்தின் உதவியையும் பெற்று அத்தீவுகளைத் தாக்கினர். பல பெரும் இடையூறுகளுக்குப் பிறகு 1810-ல் ஆண்டின் முடிவில் அவற்றைக் கைப்பற்றினர். அடுத்தபடியாக, டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் நெப்போலியனின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தன. சென்னையிலிருந்து சென்ற ஒரு படை அம்பாய்னுவைக் கைக்கொண்டது (1810-ல்). நறுமணத் தீவுகளும் ஆங்கிலேயருக்கு அடங்கின. 1811-ல் மிண்டோவும் சென்னைப் படைத்தலைவரும் ஜாவாவில் உள்ள படேவியாவுக்குச் சென்று அதைத் தம்மடிப்படுத்தினர். வேலூர்க் கலகத்தை அடக்கிய ஜில்லெஸ்பி, படேவியாவுக்கு அண்மையிலுள்ள கார்னீலிஸ் கோட்டையைத் தாக்கினுர். விரைவில் ஜாவாவும் அதைச்சார்ந்த நாடுகளும் ஆங்கிலேயரின் கீழ் வந்தன. ஆனுல் நெப்போலியன் போர்களை முடிவுறச் செய்த உடன்படிக்கைப்படி போர்பன் தீவை, பிரெஞ்சியர் மீண்டும் பெற்றனர். கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்த பிரெஞ்சுப் பகுதிகளும் ஜாவாவும் டச்சுக்காரருக்குக் கொடுக்கப்பட்டன. மொரீஷஸ் மட்டுமே ஆங்கிலேயர் வசம் தங்கியது.

பகுதி 19

பிண்டாரிப் பேரிடர்

பிண்டாரியரின் அட்டூழியச் செயல்கள் : பிண்டாரி என்ற சொல், பெந்தா (வைக்கோல் கட்டு) அல்லது பிண்டா (குடிவகைகளில் ஒன்று) என்பதினின்று தோன்றியதாகக் கருதப்படுகிறது. வைக்கோல் போர்கள், பயிர்கள் முதலியவற்றைக் கொள்ளையடிக்கும் கூட்டத்தினரே பெந்தாரியர் என்று கூறுவர் சிலர். "பிண்டா" வை உட்கொள்பவர்கள் என்றும் வேருெரு வகையாக விளக்கம் கூறலாம். அவர்கள் கொள்ளையடிப்பதையே குலத்தொழிலாகக் கொண்டவர்கள் ; 18-ம் நூற்ருண்டில் மராட்டியப் படையில் சேர்ந்திருந்தனர். ஹோல்காரும் சிந்தியாவும் அவர்களைத் தமது படைகளில் அமர்த்தியிருந்தனர். இந்து, முஸ்லிம் பிரிவுகள் பலவற்றினின்றும் சேர்க்கப்பட்ட மக்கள், பிண்டாரியர் கூட்டத்தில் காணப்பெற்றனர். நீக்கப்பட்ட போர்வீரர்கள், வேலையில்லாதவர், குற்றவாளிகள், வாங்கிய கடனைத் திருப்பித்தரமுடியாதவர்கள் முதலிய பல்வேறு வகையினரும் மேலும்மேலும் சேர்ந்ததால் பிண்டாரியரின் எண்ணிக்கை பெருகியது. அவர்களில் பெரும்பான்மையினர் குதிரை வீரர்களாயிருந்தனர். அதனுல் அவர்கள் விரைவில் எங்கும் செல்லமுடிந்தது. தீங்கிழைத்துவிட்டுத் தப்பி ஓடவும் முடிந்தது. ஏறத்தாழ 4000 அல்லது 5000 பிண்டாரியர் கூட்டமாகச் சேர்ந்து சென்று கொள்ளைகளை நிகழ்த்துவது வழக்கம். அவர்கள் விளைத்துவந்த அழிவு பாடுகளை அளவிட்டுக் கூறமுடியாது. மக்களைச் சித்திரவதை செய்தனர் ; பெண்டிரை இழிவுபடுத்திக் கொன்றனர் ; பெற்ருேர் முன்னிலையில் குழந்தைகளைக் கொலை புரிந்தனர் ; தாம் எடுத்துச்செல்ல முடியாத பொருள்களை அழித்தனர் ; வீடுகளைத் தீக்கிரையாக்கினர். பிண்டாரியப் பெண்டிரும் கொடுமை இழைக்கத் தயங்கியதில்லை.

" பிண்டாரியர், ஆடவர்மீதும் பெண்டிர்மீதும் இழைத்த தாக அறியப்படும் அட்டூழியங்களை நம்பவேமுடியவில்லை. அவர்களது முன்னேற்றம் அழிவுபாட்டின் முன்னேற்ற மாகும். அவர்களால் கொள்ளையடிக்கப்பட்டுத் துன்புற் றோர் தமது பிழைப்பைக் கருதி அவர்களுடனேயே சேர்ந்தனர். இதனால் பிண்டாரியரின் தொகை மேலும் மேலும் பெருகியது ".* கம்பெனியார் வெல்ஸ்லியின் கொள்கைப்படி செய்துகொண்ட பாதுகாப்புமுறை உடன்படிக்கைகள், ஆயிரக்கணக்கான போர்வீரர்கள் உள்நாட்டுப் படைகளினின்று நீக்கப்படுவதற்குக் காரண மாயின என்று பார்த்தோம். அவ்வாறு நீக்கப்பெற்ற வீரர்கள் பிண்டாரியக் கூட்டத்தைச் சேர்ந்தனர். தலை கொய்வதையே தம் தனிச்சிறப்புரிமையாகக் கொண்ட அத்தீயோர் " தலையிடாக் கொள்கை " நிலவிய காலத்தில் தமது வலிமையைப் பெருக்கிக்கொண்டதில் வியப்பில்லை. பட்டாணியக் கொள்ளைக்காரர்களும் அவர் களுடன் இணைந்தனர். சிந்தியாவும் ஹோல்காரும் அவர் களுடன் கூட்டுறவு அமைத்துக்கொண்டதும் குறிப்பிடத் தக்கது. அவர்கள் யாவரும் புரிந்த செயல்கள் மத்திய இந்தியாவையும் இராசபுதனத்தையும் குழப்பத்தின் உறை விடங்களாக்கின. பிண்டாரியர், கம்பெனியாருக்கு உரிய மீர்ஸாப்பூர் மாவட்டத்தையும் (உ. பி.) தென் பீஹாரையும் முதன்முதலாக 1812-ல் தாக்கிக் கொள்ளையிட்டனர். அவர்களுடைய கொடுமைகளைப்பற்றி மிண்டோ, இயக்கு நர்களுக்கு எழுதி அவர்களைத் திட்டமிட்டு அடக்கவேண்டி யதன் இன்றியமையாமையை உணர்த்தினர். ஒரு புதிய கொள்கையை உருவாக்கி அவர்களை அழிக்க வேண்டு மென்றும் அறிவித்தார்.

கடற்கொள்ளை: கடற்கொள்ளைக் கூட்டத்தினரை அடக்குவதற்காக, மிண்டோ அரேபியாவின் கடலோரப் பகுதிக்குப் படையை அனுப்பினர். அக்காலத்துக்கு மட்டும் அவருடைய முயற்சி வெற்றியளித்தது. கோலாப்

---

* *102* – பக். *259*.

உரிமை நீங்கினுல் இந்தியருக்கும் தீமை ஏற்படும்; பிரிட்டிஷ் அரசியலமைப்புக்கும் தீமை உண்டாகும் என்று 1812-ல் கம்பெனியார் வற்புறுத்திக் கூறினர். எனினும் இறுதியில் தனியுரிமையை எதிர்த்தவர்கள் வெற்றி பெற்றனர். வில்பர்போர்ஸ் கட்சியினர் இந்தியாவில் கிறித்தவ சமயப் பரப்புக் குழுவினரின் உரிமைக்காக முயன்று வந்தனர். கம்பெனியாரும் அதன் முன்னுள் பணியாளரும் அம்முயற்சியை எதிர்த்தனர். அதனுல் தீமை விளேயும் என்பது அவர் தம் கருத்து. எனினும் அச்சமயப் பரப்புக் குழுவினர் சில சலுகைகளேப் பெற்றனர். இந்தியாவில் ஆட்சி முறையைப் பிரிட்டிஷ் மன்னரே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் சிவில் பணித்துறையில் சேருவதற்குத் தேர்வுப் போட்டிகள் அமைக்கவேண்டுமென்றும் எழுந்த தீர்மானங்கள் நிறைவேறவில்லே. 1813-ல் காமன்ஸ் சபை 13 தீர்மானங்களே நிறைவேற்றியது. அவற்றை அடிப்படையாகக்கொண்டு பட்டயச் சட்டம் (1813) உருவாகியது.

பட்டயச் சட்டம் (1813): இச்சட்டம் கம்பெனியின் பட்டயத்தை மேலும் 20 ஆண்டுகளுக்குப் புதுப்பித்தது. ஆனுல் தேயிலே நீங்கலாக உள்ள மற்ற இந்தியப் பொருள்களில் வாணிக உரிமை பிரிட்டிஷ் மக்கள் யாவருக்கும் கிடைத்தது. சீன வாணிகம் மட்டும் கம்பெனியின் தனிஉரிமையாகத் தொடர்ந்து இருந்துவந்தது. இயக்குநர்கள் ஆதரிக்கும் செயல்கள்யாவும் மேற்பார்வைக் குழுவினர், அரசர் ஆகியோரின் ஒப்புதலேப் பெற வேண்டும். கம்பெனியின் ஆட்சிக்குரிய பகுதிகளில் பிரிட்டிஷ் அரசரின் ஆதிக்கம் உறுதியாயிற்று. கிறித்தவ மதப் பாதிரிகள் சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுப் பிரசாரம் செய்யும் உரிமையைப் பெற்றனர். ஐரோப்பிய மக்களின் நன்மைக்காகக் கல்கத்தாவில் மேற்றிராணியார் ஒருவரின் தலேமையில் ஒரு மாதா கோயிலும் எழுந்தது. இந்தியாவில் இருந்த ஆங்கிலேய அரசியலார், இந்தியரின் நலத்தில் கருத்தைச் செலுத்த வேண்டுமென்றும்

பூர் அரசரிடமிருந்து மாளவத்தைப் பெறுவதற்காக மிண்டோ அவருடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார். வெங்கூர்லாவும் அவருக்குக் கிடைத்தது. கடற் கொள்ளையை அடக்க அப்பகுதிகள் பயன்படுமென்பது தான் கவர்னர்-ஜெனரல் அவற்றைப் பெற்றதன் நோக்கமாகும். 1811-ல் அப்பகுதிகளின், தலைவர்களைத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமாறும் செய்தார். ஆகவே 1812-ம் ஆண்டில்தான் இந்தியாவில் பிரிட்டிஷார் கடற் கொள்ளையை அழிக்கும் முயற்சியில் போதுமான அளவுக்குத் தமது கருத்தைச் செலுத்தலாயினர்.

பகுதி 20

பார்லிமெண்ட்டுச் சட்டங்கள்; பட்டயச் சட்டம் (1813) மிண்டோவின் பணிகள்

பார்லிமெண்ட்டுச் சட்டங்கள்: (1797; 1800) 1793-ம் ஆண்டு பட்டயச் சட்டத்துக்குப் பிறகு பார்லிமெண்ட்டு நிறைவேற்றிய சட்டங்களில் 1797-ம் ஆண்டுச் சட்டமும் ஈண்டுச் சிறப்பாகக் குறிக்கத் தக்கன. கம்பெனி அல்லது அதன் இந்திய அரசியலாரின் அனுமதியின்றி ஆங்கிலேயர் இந்தியச் சிற்றரசர்களுக்குக் கடன் கொடுப்பதை 1797-ம் ஆண்டுச் சட்டம் தடை செய்தது. தலைமை நீதி மன்றத்தின், கீழ்ப்பதவி முறைவர்களின் எண்ணிக்கையையும் அச்சட்டம் குறைத்தது. சென்னையில் தலைமை நீதிமன்றம் அமைவதற்கு 1800-ம் ஆண்டுச் சட்டம் அதிகாரம் வழங்கியது.

பார்லிமெண்ட்டின் விசாரணை: வெல்ஸ்லியின் கொள்கையின் விளைவாகக் கம்பெனிக்குப் பொருள் வகையான இடையூறுகள் ஏற்பட்டன. ஆதலால் காமன்ஸ் சபை, இந்தியச் செய்திகளை விசாரிப்பதற்காக ஒரு பொறுக்குக் குழுவை அமர்த்தியது. அக்குழு 1808 முதல் நான்கு ஆண்டுகள் விசாரணை நடத்திய பிறகு 1812-ல் அறிக்கை வெளியிட்டது. இந்திய நிலவரித் திட்டங்கள், நீதிமுறை, காவல் ஏற்பாடுகள் முதலியவற்றைத் தெளிவாக அறிய அவ்வறிக்கை ஒரு சிறந்த சான்றாக அமையும்.* கம்பெனியின் இந்திய வாணிகத் தனிச்சிறப்புரிமை ஒழிய வேண்டும் என்ற தீர்மானத்தைக் கம்பெனியார் கடுமையாக எதிர்த்தனர். தடையின்றி ஐரோப்பியர் இந்தியாவில் நுழைந்து வாணிகம் செய்தால் முடிவில் இந்தியாவையே ஆங்கிலேயர் இழந்து விடுவர் என்பது எதிர்ப்பாளரின் வாதம். கம்பெனியின் வாணிகத் தனி

* 46. பக். 73.

அவர்களது சமய உரிமையைக் காப்பாற்ற வேண்டுமென்றும் வற்புறுத்தப் பெற்றனர். இந்தியக் கல்வி வளர்ச்சிக்காகவும் விஞ்ஞான அறிவுப் பெருக்கத்துக்காகவும் ஆண்டுக்கு ஒரு லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது. கம்பெனிப் பணியாளரின் பயிற்சிக்காக முன்னேற்பாடுகள் தோன்றின. எழுத்தாளர்கள் (கம்பெனியின்) இங்கிலாந்தில் அமைந்திருந்த கல்லூரியில் பயிற்சி பெற்றனர்.

மிண்டோவின் பணிகள்: ஐரோப்பாவில் நெப்போலியன் உயர்நிலை பெற்று பல கடும்போர்களை நிகழ்த்தி வந்த காலத்தில்தான் மிண்டோ, இந்தியாவில் பதவி வகித்தார் என்பதை நாம் நோக்கவேண்டும். மிண்டோ ஏற்பாடு செய்த கடற் படையெழுச்சிகள் குறிக்கத்தக்க வெற்றிகளைப் பெற்றன. கடற்கொள்ளையை அழிக்க அவர் எடுத்துக்கொண்ட முயற்சியும் பாராட்டத்தக்கது. அவர், இரஞ்சித்சிங்குடன் செய்துகொண்ட உடன்படிக்கை மிகவும் சிறப்பு வாய்ந்தது. ஆங்கிலேயரின் செல்வாக்கு சட்லெஜ் ஆறுவரை பரவியது. கிறித்தவப் பாதிரிகள் தமது மனம் போனவாறு எல்லாம் செயலாற்றாமல் அவர்களை மிண்டோ கட்டுப்படுத்தினர். 'தலையிடாக் கொள்கை' மிண்டோவின் முழு வெற்றிக்கு ஒரு இடையூறாக இருந்தது. எனினும் சில செய்திகளில் (பண்டல்கண்டு, அமீர்கான்) அவர் அக்கொள்கையை ஒட்டியே, தம்மால் இயன்றதைச் செய்யத் தவறவில்லை. பிண்டாரியப் பேரிடரின் விளைவுகளை அவர் உணர்ந்தபோதிலும், தாய்நாட்டினரின் நோக்கம் காரணமாக எதையும் செய்ய முடியாத நிலையிலிருந்தார். அவர் காலத்திலேயே கூர்க்கரின் ஆக்கிரமிப்பும் தொடங்கியது. அவருடைய ஆட்சிமுறை, தலையிடாக்கொள்கை பயனற்றது என்பதைத் தெளிவாகக் காட்டியது. செய்தித்தாள் தணிக்கை முறையைத் தொடர்ந்து பின்பற்ற வேண்டியது இன்றியமையாததாகும் என்பது மிண்டோவின் கருத்தாகும். அவர் 1814-ம் ஆண்டில்தான் இங்கிலாந்துக்குத் திரும்பிச்செல்ல எண்ணியிருந்தார். ஆனால் அதற்கிடையில் ஆங்கில இளவரசர் (பிற்கால IVம் ஜார்ஜ்)

தமது தனிப்பற்றுக்குரிய ஹேஸ்டிங்ஸ் பிரபுவைக் கவர்னர்-ஜெனரலாக்க விரும்பியதால், மிண்டோவின் பதவிக்காலம் 1813-ம் ஆண்டியேயே முடிவுற்றது. மிண்டோ, தெளிந்த அறிவு பெற்றவர் ; பண்பாடு உடையவர் ; புலமை மிக்கவர் ;. அமைதியாகவும் உறுதியாகவும் அதிகாரம் செலுத்தும் ஆற்றல் வாய்ந்தவர். ஆனல் அக்காலத்துக்கு ஒவ்வாத ஒரு கொள்கையைத் தூய்மையானது என்று அவருடைய மேலதிகாரிகள் கருதியதால் மிண்டோ முழு அளவுக்கு வெற்றிபெற முடியவில்லை. அவர் 1813-ல் இந்தியாவை விட்டகன்ருர் ; அடுத்த ஆண்டில் உயிர் நீத்தார்.

பகுதி 21

ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் கொள்கை (1813-23)

கவர்னர்-ஜெனரலின் பூர்வ சரிதம்: பிரான்ஸிஸ் ராடன் ஹேஸ்டிங்ஸ், பெருஞ் செல்வர் குடும்பத்தில் 1754-ல் பிறந்தார்; ஹாரோவில் கல்வி பயின்ருர்; அமெரிக்க உரிமைப்போரில் (1775-81) சிறந்த பங்கு கொண்டார்; 1783-ல் பாரன் ராடன் (Baron Radon) என்று பட்டம் பெற்ருர்; ஏழு ஆண்டுகட்குப் பிறகு தம் தந்தையின் பட்டம் (மாய்ராவின் எர்ல் கோமான்) இவருக்குக் கிடைத்தது. பிறகு ஐரோப்பாவில் சில போர்களில் ஈடுபட்டார். தமது செல்வத்தை யெல்லாம் இவர் செலவழித்து விட்டபோதிலும் ஆங்கில இளவரசரின் (பிற்கால IV-ம் ஜார்ஜ்) தனிப்பற்றுக்குரியவராஞர். பரந்த அனுபவம் காரணமாக இவருக்குச் செய்திகளைச் சிறந்தமுறையில் ஆய்ந்து முடிவு செய்யும் ஆற்றல் இருந்தது. பேரவா நிறைந்த வெல்ஸ்லியின் கொள்கையை இவர் எதிர்த்தார். ஆனல் இந்தியாவுக்கு வந்தபின் இங்கே இருந்த நிலைமையைக் கண்டு இந்நாட்டில் ஆங்கிலேயர் தலைமைநிலையைப் பெறவேண்டியது இன்றியமையாதது என்ற முடிவுக்கு வந்தார்.

இந்தியாவின் நிலைமை (1813): மத்திய இந்தியாவிலும் இராசபுதனத்திலும் பொறுக்கமுடியாத குழப்பநிலை இருந்ததைப்பற்றி முன்னர்க் குறிப்பிட்டோம். மராட்டியர், பட்டாணியர், பிண்டாரியர் முதலியோர் தமக்கிடையேயும் பிறரிடத்திலும் போர்புரிந்து, கொள்ளைகளடித்தும் வந்தனர். தௌலத்ராவ் சிந்தியாவுக்குப் பொருள் நெருக்கடி ஏற்பட்டது. அவர் தமது படையைக் காப்பாற்ற கொள்ளை முறையைப் பின்பற்றலாஞர். அவர் நாட்டுமக்கள் குழப்பம் காரணமாக ஆற்ரெணுத் துயருற்றனர். இந்தூரில் துளசிபாய், அமீர்கான், முதலியோரின்கீழ் சீர்கேடுகள்

பெருகியிருந்தன. உள்நாட்டுக் கலகங்கள் தோன்றின. பேஷ்வா, ஆங்கிலேயரின் அதிகாரத்தினின்று தம்மை விடுவித்துக்கொள்ள சூழ்ச்சிகள் செய்துவந்தார். மராட்டிய நிலமானியக்காரர்கள் பேஷ்வாவை வெறுத்தனர். பிண்டாரியரும் அவருக்கு இடையூறுகள் செய்துவந்தனர். பெரும்பான்மையும் மராட்டிய நாடுகள் ஆங்கிலேய ஆதிக்கத்தை அழிக்க வேண்டுமென்ற குறிக்கோளுடன் இருந்தன. பிரிட்டிஷ் பேரரசின் கொள்கையை உணராத சிற்றரசுகள் ஆங்கிலேயரின் ஆட்சி முறையைக் கண்டித்து வந்தன. சுருங்கக்கூறின் மராட்டியராலும் பிண்டாரியராலும் ஏற்பட்டிருந்த இடர்ப்பாடுகளைத் தீர்க்க ஆங்கிலேயரால் மட்டுமே இயலும் என்ற நிலைமை ஏற்பட்டிருந்தது. மேலும் கூர்க்கரின் வலுக்கட்டாயச் செயல்கள் இடையூறுகளை மிகுதிப்படுத்தின. வெல்ஸ்லிக்கு ஏற்பட்டிருந்ததைப் போலவே ஹேஸ்டிங்ஸ் பிரபுவுக்கும் பெரும் இடர்ப்பாடுகள் நிறைந்த சூழ்நிலை உண்டாகியிருந்தது. முன்னவருக்குப் பிரெஞ்சியரால் அச்சம் ஏற்பட்டிருந்தது. பின்னவருக்குக் குழப்பம் மிகுதியினுல் பேரிடர் தோன்றியிருந்தது. வெல்ஸ்லியின் கொள்கையை அரசியலார் தொடர்ந்து பின்பற்றியிருந்தால் அத்தகைய இடர் நிறைந்த நிலைமை ஏற்பட்டிருக்காது எனலாம். குழப்பம் தலைவிரித்தாடியதற்குத் தலையிடாக் கொள்கை சிறந்த காரணமாகும். ஆகவே, வெல்ஸ்லியின் கொள்கையை முற்றுப்பெறச் செய்யவேண்டிய பொறுப்பை ஹேஸ்டிங்ஸ் மேற்கொண்டார்.

கொள்கை : ஹேஸ்டிங்ஸ் ஊக்கத்துடன் முன்னேற்றக் கொள்கையைப் பின்பற்றினுர்; விரிந்த அளவுக்குப் போர்கள் நிகழ்த்தினுர்; ஆங்கில இந்திய வரலாற்றில் உடன்படிக்கைப் படைப்போர்களில் மிகச் சிறந்தவராக விளங்கினுர்; இந்தியாவில் அமைதியை நிறுவினுர்; இந்நாட்டில் பிரிட்டிஷ் அதிகாரத்தைத் தலைமை நிலையில் வைத்தார்; கிளைவின் காலத்தில் தொடங்கிய சுற்றரண் காப்புக் கொள்கையை அறவே விடுத்து நாட்டைப்

பெருக்கும் புதிய கொள்கையைப் பின்பற்றினர். ‘ தலையிடாக் கொள்கை ’ என்ற தளையிலிருந்து தாய்நாட்டினர் ஹேஸ்டிங்ஸை விடுவித்தனர். மத்திய இந்தியாவிலும் இராசபுதனத்திலும் நிலவிய குழப்பம் தாய்நாட்டு அரசியலாரின் கண்களைத் திறந்து விட்டது. சிறப்பாக, பிண்டாரியரின் தொல்லைகள் குறிப்பிடத்தக்கவை. அவர்கள் ஏறத்தாழ 500 மைல் நீளமும் 400 மைல் அகலமும் உள்ள பரந்த நிலப்பரப்பில் செய்துவந்த அழிவுபாடுகளைக் கேட்டறிந்த பின்னும் அரசியலார் தமது பழைய கொள்கையைப் பின்பற்றுவது என்பது இயலாத தொன்றும். ஹேஸ்டிங்ஸ், உடன்படிக்கை செய்துகொள்வதில் மிக்க ஆற்றல் வாய்ந்தவர். இந்தியச் சிற்றரசுகளுடன் அவர் புதிய முறையில் உடன்படிக்கைகள் செய்து கொண்டார். ‘‘ சிற்றரசுகளுடன் கூட்டுறவுக் கொள்கை ’’ என்று ஹேஸ்டிங்ஸ் தமது கொள்கையைச் சிறப்பித்துக் கூறினர். ஆனல் அக்கால அரசியலில் கூட்டுறவு என்பது இராணுவத் தொடர்பான செய்திகளை மட்டுமே பொறுத்தது என்பதை நினைவிற் கொள்ளவேண்டும். ஆங்கிலேயரின் ஆதரவிலிருந்த நாடுகள் தமக்கிடையே தனித்த முறையில் எவ்வகையான தொடர்பும் வைத்துக்கொள்ளலாகாது என்பதை ஹேஸ்டிங்ஸ் வற்புறுத்தினர். ஆங்கில அரசியலார் மூலமாகவே அவற்றுக்கிடையே தொடர்பு நிலவ முடியும். இத்தகைய கொள்கையைச் “சிற்றரசுகளைத் தனிப்படுத்தும் கொள்கை” என்றும் கூறலாம்.* அக்கொள்கை, பிரிட்டிஷ் அரசியலாருக்குச் சிற்றரசுகள் கீழ்ப்படிய வேண்டும் என்பதை வற்புறுத்துகிறது. பாதுகாப்பைப் பெற்ற நாடுகளின் வெளித்துறைச் செய்திகளை ஆங்கிலேயரே கட்டுப்படுத்தினர். ஆனல் அவர்கள், அவற்றின் உள்துறைச் செய்திகளில் தலையிடுவதில்லை. சிற்றரசுகளிடையே சச்சரவு ஏற்பட்டால் தலைமை அரசியலார் அவற்றைத் தீர்த்து அமைதி ஏற்படுத்தினர். எந்த இரண்டு சிற்றரசுகளும் ஆங்கிலேயரின் அனுமதி

* 57, அதிகாரம் 4.

யின்றித் தமக்கிடையே எவ்வகைத் தொடர்பும் கொள்ளக் கூடாது. மேலும் இராணுவத்துறையில் சிற்றரசுகளுக் கும் ஆங்கில அரசுக்குமிடையே கூட்டுறவு முறையில் தொடர்பு உண்டு. இத்தகைய நிபந்தனைகளைக்கொண்ட கொள்கையை ஹேஸ்டிங்ஸ் உருவாக்கினுர். பெரும் பான்மையும் இக்கொள்கை, வெல்ஸ்லியின் பாதுகாப்பு முறை உடன்படிக்கையை ஒத்திருந்தது. ஆனுல் மேலே கூறியவற்றில் இறுதியான இரண்டு நிபந் தனைகள் ஹேஸ்டிங்ஸ் பிரபுவினுல் புதிதாக அமைக்கப் பட்டவை. வெல்ஸ்லியின் கொள்கையை ஹேஸ்டிங்ஸ் வலிமைப்படுத்தி நிறைவுசெய்தார் என்று கூறலாம். சிற்றரசுகளைத் தனிப்படுத்தல், அவற்றின் உள்துறைச் செய்திகளில் தலையிடாமை முதலிய ஹேஸ்டிங்ஸின் கொள்கைகளை அவர் பின்வந்தோர் 1857 வரை பின்பற்றினர். வெல்ஸ்லியும் ஹேஸ்டிங்ஸும், பாதுகாப்பு நாடுகளைப் பொறுத்தவரை பின்பற்றிய கொள்கையில் உள்ள சிறப்பான குறைபாடு ஈண்டுக் குறிக்கத்தகும். சிற்றரசர்கள் உள்துறைச் செய்திகளில் கொடுங்கோ லோச்சுவதைத் தடுக்க அக்கொள்கையில் எத்தகைய பாதுகாப்பும் கிடையாது. ஹேஸ்டிங்ஸ் செய்துகொண்ட உடன்படிக்கைகள் பெரும்பான்மையும் சிற்றரசுகளை ஆங்கிலேயருக்குக் கீழ்ப்படுத்தின; அவைகளைத் தனிப் படுத்தின. ஆனுல் அவர் நேபாளத்துடன் 1816-ல் செய்துகொண்ட உடன்படிக்கை, அவருடைய மற்ற உடன்படிக்கைகளிலிருந்து ஓரளவு வேறுபடுகிறது. அதைப்பற்றி அடுத்த பகுதியில் அறிந்துகொள்வோம்.

பகுதி 22

கூர்க்கருடன் போர் (1814-16)

கூர்க்கரின் ஆதிக்கப் பெருக்கம் : இடைக்காலந் தொடங்கி நேபாளத்தில் வாழ்ந்திருந்த கூர்க்கர்கள் அந் நாட்டில் குடியேறிய இராசபுத்திரரின் கால்வழியினராவர். காட்மாண்டுவின் வடமேற்கில் உள்ள கூர்க்காவின் தலைவ ரான பிருதிவிநாராயணர் (கூர்க்கரின் தலைவர்) காட் மாண்டு, பாட்கான் ஆகிய இரண்டு சிற்றரசுகளையும் கவிழ்த்துவிட்டுத் தம்முடைய ஆட்சியை நேபாளப் பள்ளத்தாக்கில் நிறுவினர் (1768) என்ற செய்தியை, இந்தியவரலாறு, இரண்டாம் பாகத்தில் குறிப்பிட்டோம். மலைச்சாதியினரான கூர்க்கர் படையெடுப்பதில் பேரார்வம் கொண்டவர்கள். அவர்தம் இராணுவ அமைப்பு பழுதற்ற தாயும் வலிமை வாய்ந்ததாகவும் இருந்தது. சீனப் பேரரசின் மீதும் அவர்கள் படையெடுத்துச் சென்றனர். ஆனால் தோல்வியடைந்து சீனுவுக்குக் கப்பம் கட்டுவதாக ஒப்புக்கொண்டனர். பின்னர் அவர்கள் தமது இராச்சி யத்தை சிக்கிம், சட்லெஜ்வரை விரிவுறச்செய்தனர். சிறப்புவாய்ந்த கூர்க்கத் தளபதி அமரசிங் பஞ்சாபில் கங்ராவை நான்கு ஆண்டுகள் (1809–'13) முற்றுகை யிட்டார். ஆனால் இரஞ்சித்சிங்கிடம் தோல்வியுற்றார். நேபாளத்துக்குப் பக்கத்தில் ஆங்கில இராச்சியத்தின் எல்லை 700 மைல்கள் வரை பரவியிருந்தது. இதனால் கூர்க்கர்களின் ஆக்கிரமிப்பு ஆங்கிலேயர் நாட்டில் அடிக் கடி ஏற்பட்டது. 1813-ல் ஆங்கிலேயருக்குரிய நாட்டின் ஒரு பகுதியை கூர்க்கர் தம் வசப்படுத்தினர். தம்மை ஆங்கிலேயர் எதிர்த்து வெல்லமுடியாது என்ற நம்பிக்கை அவர்களுக்கிருந்தது. கங்கையின் வடக்கிலுள்ள மாகா ணங்கள் யாவற்றையுமே கைப்பற்றிக்கொள்ளவேண்டு மென்ற எண்ணமும் அவர்களுக்கு உண்டு. 1814-ல் அவர்கள் திடீரென்று ஒரு ஆங்கிலேயக் காவல்

நிலையத்தை (போலீஸ் ஸ்டேஷன்)த் தாக்கி 19 பேரைக் கொன்றுவிட்டார்கள். ஆதலால் ஹேஸ்டிங்ஸ் அவர்கள்மீது போர் தொடுத்தார் (நவம்பர் 1814).

போர் : ஹேஸ்டிங்ஸ், அயோத்தி நவாப்பிடமிருந்து 2 கோடி ரூபாய் கடன் வாங்கி போருக்கான ஏற்பாடுகளைச் செய்தார் ; கூர்க்கரை வெல்ல நான்கு படைகளை நான்கு தலைவர்களின் கீழ் அனுப்பினர். போர் மிகவும் கடுமையாக நடந்தது. முதலில் கூர்க்கர்களைத் தோற்கடிக்க முடியவில்லை. மலைப் பகுதிகளில் போரிடும் முறையை ஆங்கிலப் படைத் தலைவர்கள் அறியவில்லை. பாட்னுவிலிருந்தும் கோரக்பூரிலிருந்தும் காட்மாண்டுவை நோக்கிச் சென்ற ஆங்கிலப் படைகள் வருந்தத்தக்க வகையில் தோல்வியுற்றன. மற்ருெரு படையைச் செலுத்திச் சென்ற தளபதி ஜில்லெஸ்பி (வேலூரிலும் ஜாவாவிலும் வெற்றி மாலைகள் சூடியவர்) தோல்வியுற்றுக் கொலையுண்டார். ஹேஸ்டிங்ஸ் பிரபு கூறிய அறிவுரையை அவர் புறக்கணித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆங்கிலேயரின் தோல்விகள் எதிரிகளுக்கு மிக்க ஊக்கமளித்தன. ஆனுல் லூதியானுவிலிருந்து (பஞ்சாபு) புறப்பட்டுச் சென்ற படையின் தலைவர் ஆக்டர்லோனி கூர்க்கர்களை எதிர்த்து வெற்றி பெற்று ஆங்கிலேயரின் பெருமையை நிலைநாட்டினுர். கூர்க்கத் தலைவர் அமரசிங்கைப் புறமுதுகு காட்டச் செய்தார் ; மாலூன் கோட்டையை முற்றுகையிட்டுக் கைப்பற்றினுர் (1815) கூமான் மலைப் பகுதியையும் தம் மடிப்படுத்தினுர். 1816-ல் மக்வான்புரியில் நடந்த போரில் கூர்க்கர் தோற்ருேடிப்போனதால் ஆக்டர் லோனி நேபாளத்தின் தலைநகரான காட்மாண்டுவைக் கைக்கொண்டார். ஆதலால் கூர்க்கர், 1816-ல் சகௌலி என்னுமிடத்தில் ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்து கொள்ள முன்வந்தனர்.

உடன்படிக்கை (மார்ச்சு, 1816): கூர்க்கர்கள் இறுதியில் தோல்வியுற்ற போதிலும் அவர்கள் வீரத்துடனும் உறுதியுடனும் போரிட்டது பாராட்டத்தக்கது. உடன்

படிக்கை செய்துகொண்ட பிறகு அதை அவர்கள் உண்மையுடன் காப்பாற்றி வந்தனர். அதை மாற்ற வேண்டும் என்ற எண்ணம் ஆங்கிலேயர்பால் எழாமல் இருக்கும்படி அவர்கள் நடந்து கொண்டனர். அது அவர்களுடைய சிறந்த பண்பைக் காட்டுகிறது. வடக்குப் பீஹாரில் உள்ள **சகௌளலி** என்னுமிடத்தில் ஏற்பட்ட உடன்படிக்கைப்படி ஆங்கிலேயர் காளி ஆற்றின் மேற்குப் பகுதியைப் பெற்றனர். இதனுல் கூமான் மலைப் பகுதியும் (நைனிடால், அல்மோரா, கார்வால்; மாவட்டங்கள், சிம்லா மாவட்டத்தின் சில பகுதிகள்) தாரையில் பெரும் பகுதியும் (நேபாளத்துக்குக் கிழக்கில்) அவர்களுக்குக் கிடைத்தன. மேலும் கூர்க்கர்கள் சிக்கிம் நிலப்பகுதியை விட்டு வெளியேறவும் காட்மாண்டுவில் ஒரு பிரிட்டிஷ் ரெஸிடெண்டை ஏற்றுக் கொள்ளவும் ஒப்புக் கொண்டனர். ஆங்கிலேயர் புதிதாகப் பெற்ற பகுதிகளில், சிறப்பு வாய்ந்த நைனிடால், அல்மோரா, சிம்லா போன்ற (கோடைகால வாழ்க்கைக்கு ஏற்றவை) இடங்கள் இருக்கின்றன என்பதினின்று அதன் மதிப்பை அறியலாம். இவ்வாறு, நேபாளம் இக்காலத்தில் உள்ள உருவைப் பெற்றது. ஹேஸ்டிங்ஸ் கூர்க்கருடன் போர் நிகழ்த்தி வெற்றி பெற்றமைக்காக மார்க்குவிஸ் பட்டத்தைப் பெற்ருர். (1816). இதற்கு முன்னரே ஆக்டர்லோனி, பாரன் (Baron) என்ற பெருமகன் பட்டத்தைப் பெற்றதும் ஈண்டு குறிக்கத்தகும்.

பகுதி 23

புரட்சிக்கலகங்கள்; பிண்டாரியர் அழிவு

புரட்சிக்கலகங்கள் (1816–7) : பெரில்லியில் (உ, பி.) அரசியலார் நகராண்மைக்கழகச் செலவுகளைக் கருதி இல்லங்களுக்கு வரிவித்தனர் (1816). அவ்வரித்தொகை ஆண்டுக்கு நான்கு ரூபாய்க்குமேல் இல்லை. அவ்வாறிருந்தும் அங்கே இருந்த ரோஹில்லர் அதுகாறும் அத்தகைய வரியைச் செலுத்தியதில்லை. ஆதலால் அதை எதித்துப் புரட்சிக்கலகத்தைத் தொடங்கினர். அண்மையிலிருந்த நகரங்களின் மக்களும் கலகக்காரருடன் சேர்ந்தனர். ஆங்கில அரசியலார் கடும் போராட்டத்துக்கு பிறகு கலகத்தை அடக்கினர். அந்நிகழ்ச்சியில் பலர் மாண்டனர். அடுத்து, ஹத்ராஸ் (அலிகார் மாவட்டம், உ. பி.) என்ற வலிமை வாய்ந்த கோட்டையின் தலைவராயிருந்த ஒரு ஜாட் சமீந்தார் (பரதபுரி அரசரின் உறவினர்)அப்பகுதியில் ஆங்கிலேயருக்குப் பகையாக அமைதியைக் குலைத்து வந்தார். அதிகாரிகள் பதினைந்து மணி நேரம் துப்பாக்கிக்குண்டுகளை வீசி அக்கலகத்தை அடக்கினர். அவ்வெற்றி, தோஆப் பகுதியிலிருந்த மற்ற சமீந்தார்களையும் அடங்கச் செய்தது ; (பிண்டாரியருடன் போர் தொடங்கும் தருணத்தில்) பிரிட்டிஷாரின் இராணுவச்சிறப்பை நிலைநாட்டியது. ஏறத்தாழ அதேகாலத்தில் கட்டாக்கில் ஒரு கலகம் தோன்றியது. அங்கே மக்கள், மிகுதியான வரிகளால் துன்புற்றனர். மாராட்டியர் விதித்திருந்ததைவிட 30 சதவீதம் கூடுதலான நிலவரியை அவர்கள் செலுத்த வேண்டியிருந்தது. மேலும் உப்பு, கம்பெனியாரின் தனியுரிமை வாணிகப் பொருளானபடியால் அதன் விலை ஆறுமடங்கு கூடிவிட்டது. வங்காள அதிகாரிகளும் மக்களைத் துன்புறுத்தினர். சினங்கொண்ட மக்கள் கலகத்தைத் தொடங்கினர். முதலில் அவர்கள் வெற்றிபெற்றனர். ஆனால் விரைவில் ஆங்கிலேயர்

கலகத்தை அடக்கிவிட்டனர். மக்களின் குறைகளையும் அரசியலார் நீக்கினர்.

பிண்டாரியர் தொல்லை (1815-7) : பிண்டாரியரின் தொல்லைகளைப்பற்றியும் மிண்டோ, அவர்களைப்பற்றித் தாய்நாட்டு அதிகாரிகளுக்கு எழுதியதைப் பற்றியும் முன்னர்ப் பார்த்தோம். ஹேஸ்டிங்ஸ் பிரபுவும் அம் முயற்சியிலீடுபட்டார். ஆனால் தாய்நாட்டு அரசியலார், இருந்த நிலைமையை மாற்ற விரும்பவில்லை. பிண்டாரியரை அழித்தால் மராட்டியருடன்—குறிப்பாக சிந்தியாவுடன்—போராட்ட மேற்படும் என்றெண்ணி அதைத் தடுக்கவே முற்பட்டனர். ஆனால் பிண்டாரியரோ, ஆங்கிலேயர் ஆற்றலற்றவர்கள் என்றெண்ணித் தமது தீச்செயல்களை மிகுதிப்படுத்தலாயினர்; அவர்கள் 1815-ல் நிஸாம் இராச்சியத்தில் புகுந்து கொள்ளையடித்துப் பெரும் செல்வத்தை எடுத்துச்சென்றனர்; 1816-ல் வடசர்க்காரிலும் அதுபோலவே செய்தனர். 300-க்கு மேற்பட்ட ஊர்களைச் சூறையாடினர். அக்கோர நிகழ்ச்சி 10 நாட்கள் நீடித்தது. கப்பெனியாருக்குரிய நாட்டிலிருந்து 25 லட்ச ரூபாய்க்குமேல் கவர்ந்து சென்றனர். கம்பெனியாருக்குரிய நாட்டின் மக்களில் 3000 பேருக்குமேல் சித்திரவதைக்குள்ளாயினர்: ; 150-க்கு மேல் கொல்லுண்டனர். ஏறத்தாழ 500 பேர் காயமுற்றனர். II-ம் ரகூஜி பான்ஸ்லே இறந்தபின் அரசப்பிரதியாக அமர்ந்த அப்பா சாகிப்புடன் ஆங்கிலேயர் பாதுகாப்புமுறை உடன்படிக்கை செய்துகொண்டனர். மேற்பார்வைக் குழுவின் தலைவரான ஜார்ஜ் கானிங், பிண்டாரியரை அடக்க இன்றியமையாததான நடவடிக்கைகளைக் மேற்கொள்ளுமாறு ஹேஸ்டிங்ஸுக்கு அதிகாரம் அளித்தார். 1816-7-ல் பிண்டாரியர் பிரிட்டிஷாரின் காவல் திட்டங்களைக் குலைத்தனர்; கஞ்சம் மாவட்டத்தில் படையெடுத்தனர்; பான்ஸ்லே, நிஸாம் ஆகியோரின் இராச்சியங்களும் மேலைக்கடலோரமும் அவர்களுடைய ஆக்கிரமிப்புக்கு உட்பட்டன.

அழிவு : ஹேஸ்டிங்ஸ், பிண்டாரியரை ஒழிப்பதற்கு விரிவான, துணிவான, முடிவான திட்டங்களை வகுத்தார். அவற்றை நிறைவேற்றும் நோக்கத்துடன் 1817-ல் கல்கத்தாவை விட்டுப் புறப்பட்டார். பிண்டாரியரைத் தண்டிப்பதற்குத்தான் அவருக்கு அதிகாரம் இருந்தது. புதிதாக உடன்படிக்கைகள் செய்துகொள்ள அவருக்கு அதிகாரமில்லை. ஆயினும் தமது பொறுப்பிலேயே கூட்டுறவு அமைத்துக்கொண்டு ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை இந்தியாவில் விரிவுறச்செய்து அமைதியை நிலைநாட்ட ஹேஸ்டிங்ஸ் முனைந்தார்; அதற்காக விரிவான முன்னேற்பாடுகளைச் செய்தார்; மூன்று தலைமை மாகாணங்களிலிருந்தும் படைகளைத் திரட்டினர்; பாதுகாப்புக்குட்பட்ட சிற்றரசர்களின் படைகளையும் ஒன்றுசேர்த்தார். பிண்டாரியருடன் தொடங்கும் போரின் விளைவாக ஒரு மராட்டியப்போரும் ஏற்படக்கூடும் என்று அவர் எண்ணியதால் அதையும் சமாளிப்பதற் கேற்றவாறு தம் வலிமையைப் பெருக்கிக்கொண்டார்; குவாலியருக்குச் சென்று சிந்தியாவுடன் உடன்படிக்கை செய்துகொண்டார். மேலும் தில்லியில் மெட்காஃப் 19 இராசபுத்திர நாடுகளுடனும் (உதயபுரி, ஜோதிபுரி, ஜெயபுரி, கோடா, பூந்தி முதலியன) போபாலுடனும் உடன்படிக்கைகள் செய்துகொண்டார். பட்டாணிய அமீர்கானை மகிழ்விப்பதற்காக அவருக்கு இராசபுதனத்தில் ஒரு நிலப்பகுதியை (தாங்க்) பரிசாகக் கொடுத்தார். இவ்வாறு ஹேஸ்டிங்ஸ் முன்னேற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கையில் படையினர் தங்கிய இடங்களில் வாந்திபேதி தொத்துநோய் பரவி நூற்றுக் கணக்கான போர்வீரரும் வேறுபலரும் இறந்தனர். மேலும் அவ்வமயத்தைப் பயன்படுத்திக்கொண்டு பேஷ்வா ஆங்கிலேயரை எதிர்த்துக் கலகம் செய்தார்; அவரைப் பின்பற்றிப் பான்ஸ்லேயும் பிறகு ஹோல்காரும் கலகங்களைத் தொடங்கினர் (1817). பிண்டாரியர் போரும் மராட்டியப் போரும் இறண்டறக் கலந்தன. எனினும் குழப்பமடையாமலிருப்பதற்காக மராட்டியப் போரைத் தனியாக அடுத்த பகுதியில் குறிப்பிடுகிறோம். ஆங்கிலேயர்,

இரண்டு மாத காலத்தில் (டிசம்பர் 1817, ஜனவரி 1818) பிண்டாரியரின் அமைப்பைக் குலைத்தனர். பிண்டாரியத் தலைவர்களான சித்து, கரீம்கான், வாசில் முகம்மது ஆகியோர் மாளவத்திலிருந்துகொண்டு மராட்டியரின் உதவியைக் கோரினர். ஆனால் ஆங்கிலேயர் மராட்டியரின் உதவி பிண்டாரியருக்குக் கிடைக்காமற் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்கள். 1,13,000-க்கு மேற்பட்ட வீரர்களையும் 300 துப்பாக்கிகளையும் கொண்ட பெரிய படையின் ஒரு பகுதி ஹேஸ்டிங்ஸின் தலைமையில் இந்துஸ்தானத்தில் போரிட்டது. மற்றொரு படைப் பகுதி தளபதி ஹிஸ்லாப் என்பாரின்கீழ் பகைவர்களை எதிர்த்தது. பிண்டாரியரின் முக்கிய இடமாகிய மாளவத்தை ஆங்கிலேயப்படை சூழ்ந்துகொண்டது. மராட்டியரின் உதவியைப் பிண்டாரியர் பெறமுடியவில்லை. வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் ஆங்கிலப் படைகள் மாளவத்தைத் தாக்கின. பிண்டாரியர் சம்பல் ஆற்றைக் கடந்து ஓடினர். எதிர்ப்பதில் பயன் இல்லை என்று பிண்டாரியத் தலைவர்கள் உணர்ந்தனர். கரீம்கான் ஆங்கிலேயரிடம் அடைக்கலம் புகுந்து பஸ்தி மாவட்டத்தில் ஒரு பண்ணையைப் பெற்று அமைதியுற்றார். தப்பி ஓட முயன்ற வாசில் முகம்மது, தோல்வியுற்றுத் தற்கொலை புரிந்துகொண்டார். மிகக் கொடியவரான சித்து, தம்மைக் காப்பாற்றிக்கொள்ள ஒரு காட்டுக்கு ஓடி அங்கே ஒரு புலிவாய்ப்பட்டு மாண்டார் (ஏப்ரல் 1819). பிண்டாரிகள் அடியோடு அழிந்தனர்.

பகுதி 24

மூன்ருவது மராட்டியப் போர் (1817-19)

பேஷ்வா : II-ம் பாஜிராவ், 1813 முதல் தமது தனிப் பற்றுக்குரிய திரயம்பக்ஜி என்ற ஒரு தீயவன் கூறியவா றெல்லாம் ஒழுகி வந்தார்; ஆங்கிலேயரை மேலும் மேலும் வெறுத்து அவர்களுடன் பகைமை பூண்டார். ஆங்கி லேயரை விட்டுப் பிரிந்து உரிமை பெறுவதற்கு தக்க சம யத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். பேஷ்வாவுக் கும் கெயிக்வாருக்கும் இடையே இருந்த கருத்து வேறு பாடுகளை நீக்கி நட்பு உறவு ஏற்படுத்தும் பொருட்டு பின் னவரின் பிரதம அமைச்சர் கங்காதர சாத்திரி 1815-ல் பூனுவுக்குச் சென்ருர். பூனுவில் இருந்த ஆங்கில ரெஸி டெண்ட் மௌண்ட்ஸ்டூவர்ட் எல்பின்ஸ்டன், சாத்திரி யாருக்குப் பாதுகாப்பு அளிப்பதாக வாக்குறுதி கொடுத்தி ருந்தார். அவ்வாறிருந்தும் திரயம்பக்ஜி, சூழ்ச்சி செய்து துரோகமான முறையில் சாத்திரியாரைக் கொலை செய்து விட்டார். உடனே ரெஸிடெண்ட்டின் ஆணைப்படி திரயம்பக்ஜி சிறைப்பட்டார். அடுத்த ஆண்டில் அவர் சிறையிலிருந்து தப்பி ஓடிவிட்டார். பேஷ்வா, ஆங்கிலே யருக்குப் பகையாகச் சிந்தியா, பான்ஸ்லே, அமீர்கான் ஆகியோருடன் சூழ்ச்சி செய்வதில் முனைந்தார். ஆனுல் ஆங்கிலேயர் 1816-ம் ஆண்டில் நாகபுரியுடன் உடன்பாடு செய்துகொண்டனர். பாஜிராவின் சூழ்ச்சித் திட்டம் வெளியாயிற்று. ஆதலால் பழைய பஸ்ஸீன் உடன் படிக்கை மட்டும் அந்நிலையில் போதாது என்பதை உணர்ந்த ரெஸிடெண்ட் பேஷ்வாவைக் கட்டாயப் படுத்தி 1817-ல் அவருடன் பூனுவில் மற்ருெரு உடன் படிக்கையைச் செய்து கொண்டார். அதன்படி மராட்டியக் கூட்டரசின் தலைமைப் பதவியைப் பேஷ்வா இழந்தார் ; கெயிக்வார் உரிமை பெற்ருர் ; ஆங்கிலேயருக்குக் கொங் கணமும் வேறு சில இடங்களும் கிடைத்தன. இத்தகைய

உடன்படிக்கையை ஆங்கிலேயர் செய்து கொள்வதற்கு அப்பொழுது இருந்த அரசியல் நிலைதான் காரணமாகும். பிண்டாரியருடன் ஆங்கிலேயர் போர் தொடங்கும் காலத்தில் பின்னவருக்கு உதவி செய்வதாகப் பேஷ்வா வாக்குறுதி அளித்தார். அவ்வாறிருந்தும் பிண்டாரியர் போர் தொடங்கிய பிறகு ஆங்கிலேயரைப் பேஷ்வா எதிர்க்க முற்பட்டார். பூனா ரெஸிடெண்ட் தங்குமிடத்தைத் தீக்கிரையாக்கினார் ; தாக்கப்பட்ட ஆங்கிலேயர் கர்க்கி (பூனாவுக்கு அருகில்) என்ற இடத்துக்குப் பின்வாங்கினர். விரைவில் பூனாவுக்குத் திரும்பிய தளபதி ஸ்மித் அத்தலை நகரைத் தம் வசப்படுத்தினார். பேஷ்வா சதாராவுக்கு ஓடி விட்டார்; ஸ்மித், அவரைப் பின்தொடரவே பேஷ்வா ஜுன்னாருக்கு ஓடிப் பிறகு தெற்கே திரும்பினார். 1818-ம் ஆண்டின் தொடக்கத்தில் பூனாவுக்கு அண்மையில் உள்ள கொரிகான் என்ற இடத்தில் ஆங்கிலேயர், பேஷ்வாவின் படையினரை முறியடித்தனர். அங்கு மிங்கும் ஓடிக் கொண்டிருந்த பேஷ்வாவை, தளபதி மன்ரோ வழிமறித்துத் துன்புறுத்தினார். ஸ்மித், சதாராவைக் கைப்பற்றிக் கொண்டு ஆஷ்டா என்ற ஊரில் பேஷ்வாவைத் தோற்கடித்தார். பேஷ்வாவின் படையைச் சேர்ந்த பாபு கோகலே இறந்தார்; பிரதாப்சிங் ஆங்கிலேயர் வசம் சிக்கிக் கொண்டார். மறுபடியும் பாஜிராவ் ஓட்டமெடுத்தார். நாகபுரியில் அடைக்கலம் புக எண்ணினார். ஆனால் அங்கே நிலைமை மாறிவிட்டதால் பல இடங்களுக்குச் சென்றபின் தபதி ஆற்றைக்கடந்தார். இறுதியில் வேறு வழியின்றி இந்தூருக்கு அருகில் சர் ஜான் மால்கமின் பெருந்தன்மையைப் பயன்படுத்திக்கொண்டு அவரிடம் அடைக்கலம் புகுந்தார். பேஷ்வாவின் அதிகாரம் அழிந்தது.

பான்ஸ்லே : நாகபுரியில் மன்னரின் இளமை காரணமாக அப்பாசாகிப் அரசப்பிரதிநிதியாக ஆட்சிபுரிந்தார். 1816-ல் ஆங்கிலேயர் அவருடன் பாதுகாப்புமுறை உடன்படிக்கை செய்துகொண்டனர். II-ம் ரகூஜி பான்ஸ்லே

யின் மகனைக் கொன்றுவிட்டு அப்பாசாகிப் 1817-ல் தாமே பட்டதுக்கு வந்தார்; இவர் ஆங்கிலேயரைப் பகைத்துக் கொண்டு பேஷ்வாவுக்கு உதவுவதாக வாக்குறுதி அளித்தார்; பிண்டாரியத் தலைவரான சித்துவுடனும் உடன்பாடு செய்துகொண்டார். பாஜிராவ் 1817-ல் கலகம் செய்தவுடனே இவரும் ஆங்கிலேயருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார்; ரெஸிடெண்ட் ஜென்கின்ஸைத் தாக்கினார். ஆனால் நாகபுரிக்கருகில் உள்ள சீதாபல்டியில் ஆங்கிலேயருக்கு அடிபணிந்தார். அவருடைய படை நாகபுரியில் தோல்வியுற்றது. பிறகும் பேஷ்வாவுடன் இணைந்து சூழ்ச்சி செய்வதில் அப்பாசாகிப் தம் கருத்தைச் செலுத்தினார். அதனால் சிறைப்பட்டார். சிறையிலிருந்து தப்பி ஓடிப் பல இடங்கட்குச் சென்று பல ஆண்டுகளைக் கழித்தார். இறுதியில் லாகூருக்குச் சென்று இரஞ்சித் சிங்கின் அன்பான ஆதரவைப் பெற்றார். நாகபுரியில் II-ம் ரகூஜி பான்ஸ்லேயின் பெயரர் III-ம் ரகூஜி பான்ஸ்லே அரியணையேறினார். அவருடைய பாட்டி அரசப் பிரதிநிதி ஆனார்.

ஹோல்கார்: ஜஸ்வந்த்ராவ் ஹோல்கார் 1811-ல் இறந்தபின் II-ம் மால்ஹார்ராவ் (1811–33) பட்டத்துக்கு வந்தாரென்றும் அவருடைய வளர்ப்புத் தாய் துளசிபாய் ஜஸ்வந்தின் காமக்கிழத்தியாயிருந்தவர் என்றும் முன்னர்ப் பார்த்தோம். துளசிபாய், உடலழகு, கவர்ச்சித் தன்மை, வீரம், அறிவுத்திறமை முதலியன வாய்க்கப் பெற்றவர்; ஆனால் அவரிடம் பழிக்குப்பழிவாங்கும் இயல்பு இருந்தது; அருள் பொருந்திய நெஞ்சம் இல்லை; ஒழுக்கம் இல்லை; தீவினைக்கு அஞ்சும் தன்மையில்லை. மால்ஹார்ராவ் பட்டத்துக்கு வரும்பொழுது 4 வயதுக் குழந்தையானதால் துளசிபாய் அரசியலை நடத்தினார். அவருடைய ஆட்சிமுறையை அமீர்கானும் அவர் துணைவர் கபூர்கானும் கட்டுப்படுத்திவந்தனர். அவ்விருவரும் பட்டாணியப்பிரிவினர். அரசியலில் மராட்டியப் பிரிவினர் என்றும் பட்டாணியப் பிரிவினர் என்றும்

இரண்டு தன்னலக் கும்பல்கள் அதிகாரம் செலுத்த முற்பட்டதால் குழப்பம் மேலிட்டது. துளசிபாயின் உயிருக்கே இடையூறு ஏற்படும்போலிருந்ததால் அவர் இராசபுதனத்தில் உள்ள கோடா இராச்சியத்துக்குச் சென்று அடைக்கலம் புகுந்தார். அந்நாட்டுத் திவான் கணபத் ராவுடன் அவர் முறைகேடான தொடர்பு கொண்டமை பழிக்கத்தக்கதாகும். துளசிபாய், ஆங்கிலேயருடன் நட்புக் கொள்வதை ஆதரித்தவர் ; ஆனால் இந்தூரில் ஆதிக்கம் பெற்றிருந்த கபூர்கான் ஆங்கிலேயருக்கு எதிராக கலகக் காரப் பேஷ்வாவுடன் சேர்ந்துகொண்டார் (நவம்பர் 1817). குழப்பம் மேலிட்டுத் துளசிபாய் கொல்லுண்டார். இந்தூர் ஹோல்காரின் படைகளை எதிர்த்துச்சென்ற சர் தாமஸ் ஹிஸ்லாப், சர்ஜான் மால்கம் என்ற ஆங்கிலப் படைத் தலைவர்கள் உச்சயினிக்கு வடக்கில் உள்ள மஹித்பூரில் வெற்றிபெற்றனர், அம்முடிவான வெற்றியின் விளைவாக இந்தூரில் குழப்பம் முடிவுற்றது. அந்த இராச்சியத்தில் மக்களினத்தையே அழிக்க இருந்த சீர்கேடுகளை நீக்கிய பெருமை ஆங்கிலேயருக்குரியது.

போரின் முடிவு : 1818-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் பாஜிராவ் பிரிட்டிஷாருக்குப் பணிந்தார். மராட்டியக் கோட்டைகள் பலவற்றை ஆங்கிலேயர் கைப்பற்றினர். அசிர்கார் கோட்டை 20 நாட்கள் முற்றுகைக்குப்பின் வீழ்ந்தது. ஹேஸ்டிங்ஸ் தமது அரசதந்திர ஆற்றலினால் சிந்தியா, இப்போரில் தலையிடாதவாறு செய்திருந்தார். ஆகவே சிந்தியாவைத் தவிர மற்றைய மூன்று மராட்டியத் தலைவர்களும் தோல்வியடைந்து ஆங்கிலேயருடன் மீண்டும் அமைதி உடன்படிக்கைகள் செய்து கொண்டனர்.

பகுதி 25

II-ம் பாஜிராவ்; தௌலத்ராவ் சிந்தியா; மராட்டியரின் தோல்விக்குக் காரணங்கள்

II-ம் பாஜிராவ் (1796–1817) வாழ்க்கையும் இயல்பும்: II-ம் பாஜிராவைப்பற்றி இதுகாறும் நாம் அறிந்த செய்திகள் வருமாறு:— பாஜிராவ் பேஷ்வா ஆவதற்குத் தடையாயிருந்த இடையூறுகள்; அவர் நாளு பட்னிஸைத் துன்புறுத்தியமை; அவர் தௌலத்ராவ் சிந்தியாவுக்கு அடங்கியமை, 1798-ல் அவர் பூனைவைக் கருணையின்றிச் சூறையாடியமை; 1802-ல் அந்நகரைக் கோரக்காட்சிகள் நிறைந்ததாகச் செய்தமை; ஜஸ்வந்த்ராவ் பேஷ்வாவை தோற்கடித்தமை; பேஷ்வா பூனுவிலிருந்து ஓடிச் சென்று பஸ்ஸீனில் ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்து கொண்டமை (1802); அவர் பூனுவில் பிரிட்டிஷாரின் உதவியுடன் பேஷ்வா பதவியை மீட்டுக்கொண்டமை (1803); தீயவரான திரயம்பக்ஜியுடன் நெருங்கிய உறவு கொண்டமை; ஆங்கிலேயருக்குப் பகையாகப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டமை; 1817-ம் ஆண்டுக் கலகம் எழுந்தமை; ஆங்கிலேயர் பேஷ்வாவை மூன்று இடங்களில் தோற்கடித்தமை; 1818-ல் பேஷ்வா பிரிட்டிஷாருக்கு அடங்கினமை. அவருடன் பேஷ்வாப் பதவியும் முடிவுற்றது. அவர் தமது நாடு முழுவதையும் இழந்து ஆண்டு ஒன்றுக்கு எட்டுலட்ச ரூபாய் வீதம் உதவி ஊதியம் பெற்றுப் பித்தூருக்கு (கங்கையாற்றங்கரையில் கான்பூருக்கு அருகில்)ச் சென்றுவிட்டார், மராட்டியக் கூட்டரசைத் தொலைத்து விட்ட அவர் பின்னர் 32 ஆண்டு கட்குமேல் உயிரோடிருந்தார். அக்காலத்தில் அவர் தம் விருப்பப்படியெல்லாம் சிற்றின்பத்தைத் துய்த்து வந்தார். ஆசியாவின் மிகச் சிறந்த நடனப்பெண்டிர் பலர் அவரைச் சூழ்ந்து இன்பமளித்து வந்தனர். பூனுவிலிருந்தபொழுது அவருக்கு ஆறு மனைவியர் உண்டு.

பித்தூரில் அவர், மேலும் ஐந்து பெண்டிரை மணம்புரிந்து கொண்டார். ஆனால் அவருக்கு ஒரு மகன்கூட இல்லை. 1827-ல் அவர், ஒரு ஏழைப்புரோகிதரின் மகனை தொந்துபந்த் (நானாசாகிப்) என்பாரை வளர்ப்புப் பிள்ளையாக்கிக்கொண்டார். இந்த நானாசாகிப் 1857-ம் ஆண்டு படைக்கலகத்தில் சிறப்பான பங்கைப் பெற்றார். பாஜிராவ், 1851-ல் தமது 76-வது வயதில் இறக்கு மளவும் ஆங்கிலேயருடன் நேச உறவு பூண்டிருந்தார். அவர் அழகிய உடலமைப்பு வாய்க்கப் பெற்றிருந்தார். கவர்ச்சித் தன்மையும் கல்வியறிவும் அவரிடமிருந்தன. சமயப்பற்று உண்டு; வடமொழியில் சிறந்த தேர்ச்சி யிருந்தது. அவர் வடமொழிக் கல்வியை ஆதரித்தார். ஆனால் பேராசையும் கோழைத்தனமும் பழிவாங்கும் மனப் பான்மையும் சிற்றின்பத்தில் பேரார்வமும், துரோகச் சிந்தனையும், பொய்கூறும் பழக்கமும் அவரிடமிருந்தன. மக்களைக் கசக்கிப் பிழிந்து பொருள்பறித்து அதை வீண் செலவுக்குப் பயன்படுத்தினார். எனினும் கோயில்களுக்கு நன்கொடைகள் வழங்கினார்; அந்தணர்களுக்கு மிகுதி யாகப் பொருள் வழங்கினார்; அடிக்கடி யாத்திரையை மேற்கொண்டு அளவுகடந்து செலவு செய்தார். இரகோபா தம் நாட்டினருக்கு எதிராக ஆங்கிலேயருடன் நட்பு கொண்டார். ஆனால் அவர் மகனார் பாஜிராவோ இரு இனத்தவரையுமே பகைத்துக்கொண்டார். பாஜிராவ் இழைத்த கொடுமைகள் சொல்லுந்தரமல்ல. மக்களின் எல்லாப் பிரிவினரையுமே அவர் துன்புறுத்தினார். அவ ரிடம், உறுதித்தன்மை சிறிதும் இல்லை. அரசியல் முன் னோக்கும் கிடையாது. அவர்பால் மிளிர்ந்த தீய குணங் களை நீக்கி அவரைத் திருத்துவதென்பது இயலாத செயலாயிருந்தது. இராணுவத்துறையிலோ சிவில்துறை யிலோ எவ்வகை ஆற்றலையும் அவர் படைத்திருக்க வில்லை. ஆகவே அவரும் தௌலத்ராவ் சிந்தியாவும் சேர்ந்து மராட்டிய இராச்சியத்தின் அழிவுக்குக் காரண மாயினர் என்று கூறலாம்.

சதாராவின் பிரதாப்சிங் : சதாராவில் 1808-ல் II-ம் சாகு இறந்தவுடன் அவர் மகனுர் பிரதாப்சிங் பட்டமேற் ருர். அவரை ஆங்கிலேயர் ஆஷ்டா (1818) போருக்குப் பிறகு II-ம் பாஜிராவின் ஆதிக்கத்தினின்று விடுவித்தனர். அதன்பின் ஆங்கிலேயர் அமைத்த புதிய சதாரா இராச் சியத்தின் மகாராசாவாக பிரதாப்சிங் பட்டம் சூட்டிக் கொண்டார். சதாரா மாவட்டத்தின் பெரும்பகுதியும் அக்கம் பக்கத்திலுள்ள சில இடங்களும் அந்நாட்டுக் குட்பட்டன. படைவீரர் J.C. கிராண்ட் டஃப் (Grant Duff) சதாராவில் ரெஸிடெண்ட்டாகப் பணியாற்றிஞர். 1826-ல் வெளிவந்த மராட்டியர் வரலாறு என்னும் புகழ் பெற்ற நூலே ஆக்கியவரும் இவரே. பேஷ்வாவுக்கு உரியதா யிருந்த நிலப்பகுதிகள் – பம்பாய் மாகாணத்தின் வடக்கு, தெற்கு, மத்தியப் பகுதிகள்,- சதாராவுடன் இணைந்தன. ஆனல் அங்கே இருந்த மானியக்காரர்கள் தமது ஜாகீர் களே மீண்டும் பெற்றனர். பூனவில் ரெஸிடெண்ட்டாக இருந்த மௌண்ட்ஸ்டூவர்ட் எல்பின்ஸ்டன் 1819 முதல் 1827 வரை பம்பாயின் கவர்னராக இருந்து புதிதாக வெல்லப்பெற்ற பகுதிகளின் அரசியல் அமைப்பை மேற் பார்வை செய்துவந்தார்.

தௌலத்ராவ் சிந்தியா (1794–1827): மகாதஜி சிந்தியாவுக்குப்பின் பட்டமேற்ற தௌலத்ராவ் சிந்தியா, பிரெஞ்சுப் படை வீரர்களான துபாயின், பெரான் ஆகி யோரின் உதவியைப் பெற்றிருந்தார் என்பதை முன்னர்ப் பார்த்தோம். அவர், கர்டா போரில் பிற மராட்டியத் தலேவர்களுடன் ஒத்துழைத்தார். நானுவின் ஆதிக்கக் குலேவு, ஆற்றலற்ற பாஜிராவ் பட்டமேற்றமை, துக்கோஜி ஹோல்காரின் சாவு, ஆகிய நிகழ்ச்சிகள் தௌலத்ராவின் அதிகார வளர்ச்சிக்கு உதவின. ஆனல் ஜஸ்வந்த்ராவ் ஹோல்கார், சிந்தியாவின் கருத்தை மாளவத்தை நோக்கித் திரும்பச் செய்துவிட்டுப் பூனவில் தமது ஆதிக்கத்தை நிறுவினர் (1802). பெரான், உரிமையுடன் செயலாற்றி வந்ததைத் தௌலத்ராவ் தடுக்கவில்லே. சிந்தியா, இரண்

டாவது மராட்டியப் போரில் அடைந்த தோல்வியைப் பற்றி முன்னரே குறிப்பிட்டுள்ளோம்; அவர் தமது நாட்டின் பெரும் பகுதியையும் புகழ்வாய்ந்த தலைமை நிலையையும் இழந்தார். அவ்வாறிருந்தும் கம்பெனியின் தாய் நாட்டு அதிகாரிகளுக்கு அவரைப்பற்றிய அச்சம் இருந்தது. அவருடன் போராட்டமேற்படுவதைத் தடுக்கவே அவர்கள் முயன்றனர். ஆனால் சிந்தியாவின் செயல்கள் அவருடைய நாட்டுக்குத் தீமையையே விளைத்தன. அவர் மக்களைக் கொள்ளையடித்துக் கொடுமைப் படுத்தினார். 1817-ல் ஹேஸ்டிங்ஸ் அவருடன் குவாலியரில் உடன்படிக்கை செய்து கொண்டார். மூன்றாவது மராட்டியப் போரில் சிந்தியா சிறப்பான பங்கைப் பெறவில்லை. அதற்கு ஹேஸ்டிங்ஸின் அரசதந்திர ஆற்றலே காரணமாகும். சிந்தியா, பிண்டாரியருக்குத் தாம் வாக்குறுதி கொடுத்தது போல உதவி செய்யவில்லை. முன்னரே வெல்ஸ்லி சிந்தியா இராச்சியத்தின் பரப்பைக் குறைத்திருந்தார் என்று நாமறிவோம். குவாலியரும் உச்சயினியும் வேறு சில பகுதிகளும் மட்டுமே அவர் (சிந்தியாவின்) ஆட்சிக்குட்பட்டிருந்தன. அவருடன் கம்பெனியார் செய்து கொண்ட புதிய உடன்படிக்கைப்படி ஆச்மீர் - மீர்வாரா (இராசபுதனத்தில்) பகுதியை அவர் ஆங்கிலேயருக்குக் கொடுத்தார். எஞ்சிய பகுதிகளைத் தௌலத்ராவ் சிந்தியா, 1827-ல் தாம் இறக்கும் வரையில் ஆட்சி புரிந்து வந்தார்.

நாகபுரி, இந்தூர், பரோடா, கோலாப்பூர் : நாகபுரி பான்ஸ்லேயிடமிருந்து ஆங்கிலேயர் சாகரையும் நர்மதையை அடுத்த நிலப் பகுதிகளையும் பெற்றனர். தாமோ, ஜபல்பூர் மாவட்டங்களும் நரசிங்கபுரம் ஹோஷங்காபாத் மாவட்டங்களின் சில பகுதிகளும் அதில் உட்பட்டன. சம்பல்பூர் மாவட்டத்தை ஒரு அரசர் பெற்றார். ஆனால் பின்னர், டால்ஹௌஸி அதைத் தம்முடன் இணைத்துக் கொண்டார். ஹோல்கார் தமது நாட்டில் பாதியை இழந்தார். அவர் இழந்த பகுதிகளை அமீர்கானும் கபூர்கானும்

பிறரும் மந்தேசர் (உச்சயினியின் வடமேற்கில்) உடன் படிக்கைப்படித் (1818) தமக்கிடையே பிரித்துக் கொண்டனர். 1805-ல் கெயிக்வார் செய்து கொண்ட பாதுகாப்பு முறை உடன்படிக்கை, 1817-ல் மற்ருெரு துணை உடன் படிக்கையால் வலிமை பெற்றது. பிண்டாரிய, மராட்டியப் போர்கள் நிகழ்ந்த காலங்களில் கெயிக்வார், ஆங்கிலேயரிடம் பணிவன்புடன் ஒழுகினுர். அதனுல் சில சலுகைகளையும் பெற்ருர். 1819-ல் ஆனந்தராவ் கெயிக்வார் இறந்தவுடன் அவருடைய உடன் பிறந்தாரான சயாஜி ராவ் (1819–47) பட்டமேற்ருர். 1820-ம் ஆண்டில் கத்தியவாரில் ஆங்கிலேயரின் முழு ஆதிக்கமும் நிலை பெற்றதைக் காண்கிருேம். கோலாப்பூரில் IV-ம் சிவாஜி இறந்த பிறகு சாம்பு (1812–21) அரியணை யேறினுர். இவர் ஆங்கிலேயரிடம் பற்றுறுதி கொண்டிருந்தார். 1811-ம் ஆண்டு உடன்படிக்கைப்படி சில நிலப்பகுதிகளையும் அவர்களிடமிருந்து அடைந்தார். இவருக்குப் பின் பட்டம் பெற்ற இவருடைய உடன் பிறந்தாரான ஷாஜி 1837ல் இறந்தார். 1820-ல் ஆங்கிலேயர் கோவாவுக்கு அருகில் உள்ள கடலோரப் பகுதியை, ஒரு உடன்படிக்கைப்படி பெற்றனர். அதனுல் அவர்கள், மிண்டோவின் முயற்சியைத் தொடர்ந்து செயலாற்றி மேலைக் கடலோரத்தில் கடற் கொள்ளையை ஒழித்தனர். ஹேஸ்டிங்ஸ், சிற்றரசுகளைத் தனிப்படுத்தும் கொள்கையைப் பின்பற்றி உடன்படிக்கைகள் செய்து கொண்டாரென்பதை முன்னர்ப் பார்த்தோம். நேபாளத்தை மட்டும் ஆங்கிலேயர் கீழ்ப்படுத்தித் தனிப்படுத்தவில்லை என்பது நோக்கத்தக்கது.

மத்திய இந்தியாவும் இராசபுதனமும்: பிண்டாரிய, மராட்டியப் போர்களின் விளைவாக மேற்கூறிய மராட்டிய நாடுகளில் பிரிட்டிஷ் அதிகாரம் ஏற்பட்டதுடன், மத்திய இந்தியா, இராசபுதனம், கத்தியவார், கட்ச் ஆகிய பகுதிகளில் பிரிட்டிஷ் காப்பரசும் விரிவுற்றது. இவ்வாறு அப் பகுதிகளில் ஹேஸ்டிங்ஸின் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு ஆங்கிலேயர் நிறைவேற்றிய உடன்

படிக்கைகள் பலப்பல. அரசியல் அமைப்பைச் சீர்படுத்தும் பொறுப்பை மத்திய இந்தியாவில் மால்கம் அவர்களும் இராசபுதனத்தில் சார்லஸ் மெட்காஃப், ஆக்டர்லோனி, டாட் (Tod) ஆகியோரும் ஏற்றுக் கொண்டனர். இறுதியாக உள்ள டாட் (Tod) (பி. 1782 – இ. 1835) இராசஸ்தானைப்பற்றி எழுதியுள்ள வரலாறு சிறப்பு வாய்ந்தது. அந்நூல் 1829க்கும் 1832க்கு மிடைப்பட்ட காலத்தில் வெளியாயிற்று. மேற்கூறிய ஆங்கிலேயத் தலைவர்களின் முயற்சிகளால் அப்பகுதிகளில் நிலவிய கொடிய குழப்பம் மறைந்து அமைதியும் ஒழுங்கும் ஏற்பட்டன. கட்சில் ஒரு புரட்சிக்கலகம் தோன்றியது. ஆங்கிலேயர் அதை அடக்கி அந்நாட்டு மன்னனை நீக்கிவிட்டுப் புதிய அரசனுக்குப் பட்டம் சூட்டினர். அப்புதிய அரசன் ஒரு குழந்தை. ஆகவே அங்கே இருந்த ஆங்கில ரெஸிடெண்ட் அவரைக் கட்டுப்படுத்திச் செயலாற்றி வந்தார் (1819). அதே ஆண்டில் கட்சில் நிலஅதிர்ச்சி ஏற்பட்டு மக்கள் மிகுதியாகத் துன்புற்றனர்.

மராட்டியரின் தோல்விக்குக் காரணங்கள் : சிவாஜி முதல் II-ம் பாஜிராவ் வரை மராட்டியர் வரலாற்றை நாமறிவோம். சிறப்பு வாய்ந்த பல ஆண், பெண், தலைவர்களையும், ஆட்சியாளர்களையும், படைத்தலைவர்களையும், அரசியல் வல்லுநர்களையும் துறவிகளையும் அவ்வரலாற்றில் நாம் காண்கிறோம். மராட்டியர், 17-ம் நூற்றாண்டில் முகலாயர் ஆதிக்கத்தினின்று விடுதலை பெற்று அடுத்த நூற்றாண்டில், அரசியல் இராணுவத்துறைகளில் சிறப்பான உயர்நிலையை எய்தினர். சில மராட்டியத் தலைவர்கள் கொள்ளைகளை நிகழ்த்திப் பல அட்டூழியங்களைப் புரிந்தனர் என்பது உண்மை. எனினும் அதைக் காரணமாகக் கொண்டு மராட்டிய நாடு ஒரு கொள்ளைக்கார நாடு என்று கூறிவிடுவது பொருத்தமானதன்று. மூன்றாவது பானிப்பட்டுப் போரினால் மராட்டியருக்குக் கெடுதி நேர்ந்ததைப் பற்றி முன்னர்ப் பார்த்தோம். ஆனால் அப்போர் அவர்களுடைய ஆற்றலை அழித்து

விடவில்லை. அப்போருக்குப் பிறகுதான், "பேஷ்வாக்களில் மிகச்சிறந்தவர்" தோன்றினர். பிறகு நானா பட்னிஸும் மகாதஜி சிந்தியாவும் மராட்டிய நாட்டின் புகழை நிலைநாட்டினர். வாரன் ஹேஸ்டிங்ஸின் கீழிருந்த ஆங்கிலேயரைக்கூட அவர்கள் எதிர்த்து நின்றனர். 1800-ல் நானா பட்னிஸ் இறந்தபிறகு மராட்டியரின் விரைவான வீழ்ச்சியைக் காண்கிறோம். 1802-ம் ஆண்டு பஸ்ஸீன் உடன்படிக்கை, 1818-ல் பேஷ்வா ஆங்கிலேயரிடம் அடைக்கலம் புகுவதற்கான வழியை வகுத்தது. மராட்டியரின் இறுதி வீழ்ச்சிக்குரிய சில காரணங்களை ஈண்டு சிந்திப்போம். "பேஷ்வா II-ம் பாஜிராவ், தௌலத்ராவ் சிந்தியா என்ற இன்பநாட்டமுடைய இரு இளைஞர்களின் ஆற்றலின்மையே மராட்டியரின் வீழ்ச்சிக்குச் சிறப்பான காரணம் என்று நான் உறுதியாகக் கூறுவேன். அவர்கள், தற்செயலாகத் தோன்றிய நல்வாய்ப்புக்களின் விளைவாக மராட்டிய நாட்டில் ஆதிக்க நிலை பெற்றனர். அவர்களுடைய அட்டூழியச் செயல்களால் பூனா துன்பமுற்றது; மக்களின் வாழ்க்கை பல வகைகளில் கேடுற்றது. அவர்களுடைய கொள்ளையும் கொடுங்கோன்மையும் காரணமாகத் தொலைவில் இருந்த மக்களும் ஆற்றொணுத்துயருற்றனர். ஆட்சிமுறையை வெறுத்த சர்தார்களும் ஜாகீர்தாரர்களும் — குறிப்பாகத் தென் மராட்டிய நாட்டில் இருந்தவர்கள் — ஆங்கிலேயரின் பாதுகாப்பை வலிந்து வலிந்து நாடினர்."*. II-ம் பாஜிராவின் வளர்ப்புச் சகோதரரான அமிருதராவ், பேஷ்வாவாக வந்திருப்பின் முன்னவரைவிடப் பலவகைகளில் சிறந்தவராயிருந்திருப்பர் என்று கூறலாம். பரந்து விரிந்த ஒரு நாட்டின் வீழ்ச்சிக்கு தனிப்பட்ட ஒருவர் அல்லது இருவரின் தீயபண்புகள் மட்டுமே காரணமாகும் என்று கூறமுடியாது. மராட்டியப் படைஅமைப்பு முறையில் பல குறைபாடுகள் இருந்தன என்பதை முன்னரே பார்த்தோம். நிலமானிய முறையின் சீர்கேடு

* *86, பக். 161-2*; 87, III, பக். *518.*

கள் அதில் விளங்கின. இராணுவத்துறையில் விஞ்ஞான முன்னேற்றத்தைப் போதுமான அளவுக்கு மராட்டியர் ஆதரிக்கவில்லை. மராட்டியர், கொரில்லாப் போர்த் தந்திரமுறைகளைக் கையாண்டு மலைக்கோட்டைகளில் தமது வலிமையைப் பழுதுருமல் காப்பாற்றி வந்தார்கள் என்றும் அவர்களை வெல்லுவது இயலாத செயல் என்றும் வெல்ஸ்லி நம்பினுர். ஆனுல் மராட்டியரோ படைத் துறையில் கலப்பு முறையைப் பின்பற்றினர்; தமது பழைய படைஅமைப்பு முறையில் இருந்த சிறப்புப் பண்பு களைக் கைவிட்டனர். பரந்துவிரிந்த இந்தியப் பேரரசை நிறுவ வேண்டுமென்ற பேரவா பழைய சிறந்த பண்பு களை அழித்தது. மேலும் இராணுவத்துறையிலும் பிற பண்புகளிலும் காலத்துக்கேற்றவாறு முன்னேற்றமடை யாத எந்த மக்களும் அழிவது திண்ணம். தம்மையும் தமது நிலையங்களையும் புதிய சூழ்நிலைக்கும் தேவைக்கும் ஏற்றவாறு அமைத்துக்கொண்டு மேனுட்டினரை எதிர்க் காமல், மராட்டியர் தமது பழைய கருத்துக்களையும் செயல் களையும் போற்றிவந்தனர். முன்னேறும் மக்களின் வழி அதுவன்று. வழக்காருக வந்த தமது சமயத்தையும் மரபு முறையான கல்வியையும் அவர்கள் அளவுகடந்து போற்றினர்; புதிய தேவைக்கேற்பச் சமூக ஒற்றுமை யையும் ஆற்றலையும் பெருக்கிக் கொள்ளவில்லை. பொது வாக அவர்களுடைய படை அமைப்புமுறையும் குறிப் பாகப் பீரங்கிப்படையும் அவர் தம் இராணுவத்தோல்விக் குக் காரணமாம். அவர்கள் தமது இராணுவப் பயிற்சியின் பொருட்டும் படைத்துறைத் தேவைகளின் பொருட்டும் அயலவரை நம்பியிருக்க வேண்டியிருந்தது. அயலவரின் உதவிபெற்ற பிறகும் மராட்டியப்படை ஆங்கிலப்படைக் குக் கீழ்ப்பட்டதாகவே இருந்தது. சிவில் துறையிலும் அதுபோன்ற நிலைமைதான் இருந்தது. மராட்டியத் தலைவர்கள் தமக்கிடையே போராட்டம் நிகழ்த்திவந்தனர்; மக்களும் தமக்கிடையே கலகம் செய்துவந்தனர். இந் நிலைமை அவர்களை மெலிவுறச்செய்தது. இரண்டாவது மராட்டியப் போரின் தொடக்கத்தில் ஜஸ்வந்த்ராவ்

ஹோல்கார் தனித்து நின்ருர்; சிந்தியாவும் பான்ஸ்லேயும் தோற்ற பிறகே ஆங்கிலேயரை எதிர்த்துச் சென்ருர். மூன்ருவது போரில் சிந்தியா மற்ற மராட்டியத் தலைவர்களுடன் சேரவில்லை. பயனற்ற பேஷ்வாவையும் ஒற்றுமையற்ற மராட்டியத் தலைவர்களையும் எதிர்த்து நின்றது யார்? வெல்ஸ்லியும் ஹேஸ்டிங்ஸும் சிறப்புவாய்ந்த வேறு பல படைத்தலைவர்களும் என்பது நோக்கப்பாலது. நாடு சிறப்புற்ரோங்க வேண்டுமாயின் ஒற்றுமை இன்றியமையாதது; நாட்டின் உரிமையைக் காப்பாற்றுவதற்கு ஏற்ற வகையில் இராணுவம் அமைந்திருக்க வேண்டும். இந்த அடிப்படைத் தேவைகளைப் புறக்கணித்து இவற்றை அழிக்கக்கூடிய இடைக்காலப் பண்புகளைப் போற்றிஞல் அழிவுதான் விளையும். இந்த உண்மையை வேறுபல இந்திய நாட்டினரைப் போலவே மராட்டியரும் உணரவில்லை. நாட்டுக்குப் பேரிடையூறு ஏற்பட்டகாலை நாட்டுணர்ச்சியால் உந்தப்பட்டு மக்கள், தலைவர்கள் யாவரும் ஆர்த்தெழுந்து ஒற்றுமையுடன் ஆக்கச்சார்பான அலுவல்களில் கருத்தூன்ருவிட்டால் உரிமையும் சிறப்பும் அவர்களிடம் எவ்வாறு நிலவும்? சுருங்கக் கூறின், இராணுவத் திறமை, அரசியல் வல்லமை, அரசதந்திர ஆற்றல் முதலிய அனைத்திலும் தம்மைவிட மேலான நிலையிலிருந்த ஆங்கிலேயருக்கு மராட்டியர் பணிந்தனர். மராட்டியரின் தோல்விக்கு பிரிட்டிஷ் தொழிற்புரட்சி காரணமாகும் என்று கூறப்படுகிறது.*

---

* 117 பக். 407

பகுதி 26

லக்னௌ ; ஐதராபாத்

லக்னௌ : அயோத்தி நவாப்பு சாதத் அலி 1814-ல் இறந்தார். பின்னர் ஆட்சிபுரிந்த அவர் மகனுரான காஸியுத்தீன் ஐதர் (1814–27) ஐரோப்பியக் கலைகளையும் கீழ்நாட்டுத் தத்துவ முறைகளையும் ஆதரித்தார். இறந்துபோன நவாப்பு 1801-ம் ஆண்டு உடன்படிக்கையைப் பொருட்படுத்தாமல் தமது விருப்பம்போலவே பழைய முறையில் ஆட்சிபுரிந்து வந்தார். இன்றியமையாததான சீர்திருத்தங்களைக்கூட அவர் நிறைவேற்றவில்லை. தமக்கென எட்டுக் கோடி ரூபாய் சேர்த்து வைத்திருந்தார். ஹேஸ்டிங்ஸ் அவரிடம் அன்பாக நடந்துகொண்டார். அதனுல் நவாப்பு இறக்குந்தறுவாயில் ஒருகோடிரூபாயைக் கம்பெனிக்குக் கொடுக்க முன்வந்தார். அவருக்குப் பின் வந்தோரிடம் ஹேஸ்டிங்ஸ் இரண்டு கோடி ரூபாய் கடனுகப் பெற்று கூர்க்கருடன் போர் நடத்தினுர். அத்தகைய நிலை காரணமாக நவாப்பு ஆங்கிலேயரிடம் அச்சமில்லாமலும் சீர்திருத்தங்களைப்பற்றிச் சிந்தியாமலும் இருந்து வந்தார். 1819-ல் ஹேஸ்டிங்ஸின் தூண்டுதலால் நவாப்பு, 'அரசர்' என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டார். அச்செயல் முகலாயப் பேரரசரை இழிவு செய்ததாகும். கவர்னர்-ஜெனரல் முகலாயப் பேரரசருக்குப் பரிசுகள் கொடுக்கும் வழக்கத்தை ஹேஸ்டிங்ஸ் நிறுத்திவிட்டார். ஆனுல் 1835 வரையில் கம்பெனியார் வெளியிட்ட காசுகளில் முகலாயப் பேரரசரின் தலைமை அதிகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இருந்தும் இந்தியாவில் ஆங்கிலேயரின் தலைமைநிலை ஏற்பட்டுவிட்டதென்ற கருத்துடனேயே ஹேஸ்டிங்ஸ் முகலாயப் பேரரசரிடம் அவ்வாறு நடந்து கொண்டதைக் காண்கிறேம். அயோத்தி நவாப்பைப் போலவே நிஸாமும் புதிய பட்டத்தைச் சூட்டிக்கொள்ளலாமென்று ஹேஸ்டிங்ஸ் அறிவித்தார். ஆனுல் அந்தக் கருத்தை நிஸாம் ஏற்கவில்லை.

ஐதராபாத் : நிஸாம், பொதுச் செய்திகளில் அக்கரை கொள்ளாமலேயே இருந்து வந்தார். முப்பதாண்டுக் காலம் அவரிடம் தலைமை அமைச்சராகப் பணியாற்றிய மீர்ஆலம் 1808-ல் இறந்தார். அவருக்குப் பின்போந்த அமைச்சர் சந்துலால் ஆற்றல் வாய்ந்தவராக இருந்த போதிலும் வீண் செலவுகள் பலவற்றை ஆதரித்து வந்தார். நிஸாமின் கடன்கள் பெருகின, 1800-ம் ஆண்டு உடன்படிக்கைப்படி ஆங்கிலேயருக்குப் போர்க்காலத்தில் உதவிசெய்வதற்காக நிஸாம் தமது செலவிலேயே ஒரு படையை அமைக்கவேண்டிய கடமையைப் பெற்றிருந்தார். (ஐதராபாத் துணைப்படை என்ற அந்த இராணுவம், பாதுகாப்புமுறை உடன்படிக்கைப்படி அமைந்த படையினின்றும் வேறானது என்பது ஈண்டுக் குறிக்கத்தகும்). அப்படை அமைப்பைச் சீர்திருத்த வேண்டுமென்று ஆங்கில ரெஸிடெண்ட் வற்புறுத்தினர். அதன்பொருட்டு நிஸாம் 30 லட்ச ரூபாய் செலவிட்டார். அரசியலாரின் கடன்கள் இவ்வாறெல்லாம் பெருகிவந்தன. ஐதராபாத்தில் ஒரு பிரிட்டிஷ் வங்கி (Bank) ஏற்பட்டிருந்தது. நிஸாமுக்குக் கடன் தொகைகள் கொடுக்குமாறு ஹேஸ்டிங்ஸ், வங்கி அதிகாரிகளுக்கு உத்திரவு அளித்தார். ஐதராபாத்தின் பொருள் நிலைமையை உணராமல் ஹேஸ்டிங்ஸ் ஆழ்ந்த சிந்தனையின்றி அச்செயலைப் புரிந்தது வருந்தத்தக்கதேயாம். பிரிட்டிஷ் வங்கி நொடித்துவிட்டது. அதை அறிந்த இயக்குநர்கள், கவர்னர்-ஜெனரலும் அவரது ஆலோசனைக்குழுவும் பின்பற்றிய கொள்கையைத் (பிரிட்டிஷ் வங்கியைப்பற்றிய செய்தியில்) தவறு என்று அறிவித்தனர். அதனால் வருத்தமுற்ற ஹேஸ்டிங்ஸ் 1821-ம் ஆண்டில் தமது பதவியினின்று நீங்கிவிட முடிவுசெய்தார். ஆயினும் 1823-ம் ஆண்டு ஜனவரி மாதம் வரையில் கவர்னர்-ஜெனரலாக இருந்துவிட்டுப் பிறகு இங்கிலாந்துக்குச் சென்றார். ஐதராபாத்தில் புதிய ரெஸிடெண்ட்டாக அமர்ந்த ‘மெட்காஃப்’ (Metcalfe) ஆற்றிய பணிகள் போற்றத்தக்கன. பொதுவாகவே இந்தியச் சிற்றரசர்கள் நாடுகளில் இருந்த ஆங்கில ரெஸிடெண்டுகள் பிரிட்டிஷ்

ஆட்சியின் வளர்ச்சிக்குச் சிறந்த தொண்டுகள் ஆற்றினர், ஆங்காங்கு இருந்த நிலைமைகளை அறிந்து அரசதந்திர முறையில் ஆவன செய்வதற்கு அவர்கள் உதவி இன்றி யமையாததாயிருந்தது. வாரன் ஹேஸ்டிங்ஸ், காரன் வாலிஸ், வெல்ஸ்லி, ஹேஸ்டிங்ஸ் பிரபு ஆகியோர் தமது கொள்கைகளை உருவாக்கி வெற்றியுடன் நிறைவேற்ற ரெஸிடெண்டுகள் மிகவும் உதவியாயிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

———

பகுதி 27

ஆட்சிமுறை

நிலவரித் திட்டங்கள் : ஹேஸ்டிங்ஸ் பிரபு கவர்னர்-ஜெனரலாக இருந்த காலத்தில் ஆங்கில ஆட்சிப் பகுதிகள் பெருகியதுடன் ஆட்சி முறையிலும் முன்னேற்றம் தோன்றியது. பல பண்புகளில் – சிறப்பாக நிலவரித் திட்டத்தில் – காரன்வாலிஸின் முறைக்கு எதிரான கொள்கையை அரசியலார் பின்பற்றினர். நிலையான நிலவரித் திட்டத்தை 1795-ல் வாரணசியிலும் 1802 முதல் 1805 வரை உள்ள காலப்பகுதியில் வட சர்க்கார் மாவட்டங்களிலும் புகுத்தினர். சென்னை மாகாணத்தில் வேறுவகையான இரண்டு முறைகளை ஏற்படுத்தினர். அவை, கிராமத் திட்டம், ரயத்துவாரித் திட்டம் எனப்பெறும். சர் தாமஸ் மன்ரோவின் முயற்சியால் முடிவில் ரயத்துவாரித் திட்டம் நிலைபெற்றது. அதன்படி சமீந்தார்களுடனோ அல்லது கிராமத்துடனோ எவ்வித ஏற்பாடும் செய்துகொள்ளாமல் தனித்தனிக் குடியானவர்கள் எவ்வளவு வரியை அரசியலாருக்குச் செலுத்த வேண்டுமென்பது தீர்மானிக்கப்பட்டது. இம்முறைப்படி அரசியலாருக்கும் குடியானவருக்கும் நடுவில் இடையீட்டாளர் யாரும்கிடையாது. குடியானவர்கள் செலுத்தவேண்டிய வரியை நிலையாகத் தீர்மானிக்க வேண்டுமென்று மன்ரோ கருதினர். ஆனால் இயக்குநர்கள் அதை ஏற்கவில்லை. அடிக்கடி வரியை மாற்றி அமைக்கவேண்டுமென்பதே அவர்கள் நோக்கமாகும். தொடக்க காலத்தில் வரித்தொகையைக் கூடுதலாகவே முடிவு செய்தனர். ஆனால் பிற்காலத்தில் அது குறைக்கப்பெற்றது. அக்காலத்தில் பம்பாயில் எல்பின்ஸ்டன், ஊர் (கிராம) அமைப்புத் திட்டங்களில் ஊக்கங் காட்டினர். அவர் குடியானவர்களுடன் நிலவரி ஏற்பாடு செய்துகொள்வதையும் ஒவ்வொரு கிராமத்தின் படேல் மூலமாக வரிவசூல் செய்வதையும் ஆதரித்தார். ஆனால் இரண்

டாவதாகக் கூறியுள்ளதை இயக்குநர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. அடுத்த காலப்பகுதியில் பம்பாயில் ரயத்துவாரி முறை உருவாகியது. மன்ரோ அமைத்த ரயத்துவாரித் திட்டம், பிற்காலத்தில் பல பண்புகளில் மாறுதலடைந்தது. ரயத்துவாரித் திட்டத்தின் வளர்ச்சியில், தொடக்க காலம், இடைக்காலம், பிற்காலம் என்ற மூன்று நிலைகளைக் காண்கிறோம். இத்திட்டத்தின்கீழ்ச் சராசரியில் ஒரு குடியானவனுக்கு ஏறத்தாழ 6½ ஏக்கர் நிலம் இருந்தது.* நிலவரித் திட்டத்தில் சமீந்தார் முறையை மன்ரோ எதிர்த்தார்.

முறை வழங்கலில் சீர்திருத்தங்கள்: காரன்வாலிஸின் சட்டத்தொகுப்பில் ஆங்காங்கு மாறுதல்கள் புகுத்தப்பெற்றன. வங்காளத்தில் நிலவிய காவல் முறையை, அரசியலார், வலிமைப்படுத்தியதுடன் பிற இடங்களுக்கும் அதைப் பரப்பினர். ஹேஸ்டிங்ஸ், சிவில் நீதிமன்றங்களைப் பெருக்கினர். குற்றத்துறை நீதிமன்றங்களிலும் சீர்திருத்தங்கள் தோன்றின. இந்திய முன்சீப்புகளின் சிறப்பு உயர்ந்தது. இந்தியர், உயர் பதவிகளுக்கு ஏற்றவரல்லர் என்ற கருத்து சிறிது சிறிதாக மறையத் தொடங்கியது. முறை வழங்கலும் வரி வாங்கும் அதிகாரமும் உறுதியாகப் பிரிக்கப்படும் கொள்கையை அரசியலார் கைவிட்டனர். மாவட்டக் கலெக்ட்ர்களை மாஜிஸ்ட்ரேட்டுகளாகவும் பணியாற்றச் செய்தனர். இவ்வாறு காரன்வாலிஸின் ஆட்சிமுறைக்கு எதிர்ப்பு நிலவியதைக் காண்கிறோம். குடியானவர்களின் நலத்திலும் ஹேஸ்டிங்ஸ் கருத்தைச் செலுத்தினர்; அவர்களுடைய உரிமைகளை வரையறுத்து அவற்றுக்கு மேலும் தீமை ஏற்படாவண்ணம் தடைகள் விதித்தார். ஆனல் இவற்ருல் குடியானவரின் நிலைமையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் தோன்றவில்லை.

கல்வி: தொடக்கத்தில் கம்பெனி கல்வித் துறையில் கருத்தைச் செலுத்தவில்லை என்பதை நாமறிவோம். இந்

* *14,* VI பக். *46.*

தியாவில் கல்விப் பெருக்கத்தினுல் தமது நலத்துக்கு இடையூறு ஏற்படும் என்று கம்பெனியார் கருதினர். ஆனுல் ஹேஸ்டிங்ஸ் பிரபு அக்கொள்கையை வன்மையாகக் கண்டித்தார். செய்திகளை விரிவாக உணர்ந்தால், இந்தியர், அதிகாரத்துக்குக் கீழ்ப்படிய மறுப்பர் என்ற தவருன கொள்கையைத் தமது அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை என்று ஹேஸ்டிங்ஸ் 1816-ல் அறிவித்தார். நேர்மையற்ற முறையில் சிற்சில நல்வாய்ப்புக் களைப் பெறுவதற்காக மக்களின் கல்வி அறிவைப் பெருக்காமல் கட்டுப்படுத்தி வைத்திருப்பது பிரிட்டிஷாரின் உணர்ச்சிக்குச் சிறிதும் ஏற்றதன்று எனவும் அவர் கூறியுள்ளார்.* சமயப் பரப்புக் குழுவினரும் பிறரும் நாட்டு மொழிக் கல்விக்கான பள்ளிக்கூடங்கள் நிறுவுவதை ஹேஸ்டிங்ஸ் ஆதரித்தார். இந்திய மக்களின் முயற்சியால் 1817-ல் கல்கத்தாவில் ஒரு இந்துக் கல்லூரி தோன்றியது. ஆங்கிலமும் மேனுட்டு விஞ்ஞானமும் அங்கே கற்பிக்கப் பெற்றன. ஹேஸ்டிங்ஸ் பிரபு அதன் ஆதரவாளராக இருந்தார்.

கருத்து வெளியீட்டு உரிமையைக் கட்டுப்படுத்தும் முறை,ஹேஸ்டிங்ஸுக்கு உடன்பாடன்று. 1799ம் ஆண்டு முதல் இருந்து வந்த செய்தித்தாள் தணிக்கை முறையை ஹேஸ்டிங்ஸ் 1817-ல் நீக்கினுர். அதன் விளைவாகப் பத்திரிகைத் தொழிலில் ஒரு புதிய வளர்ச்சி ஏற்பட்டது. செய்தித் தாள்களில் குறைகள் வெளிப்படையாக விளக்கப்படுவதை ஹேஸ்டிங்ஸ் வரவேற்ருர். சட்டப்படி, சில செய்திகளைப் பற்றிப் பத்திரிகை ஆசிரியர்கள் விவாதிக்கக் கூடாது என்று தடைகள் இருந்தபோதிலும் அவர் அவற்றை அமுல் செய்யவில்லை. அவருக்கு முன்னர் இருந்த சில கவர்னர் - ஜெனரல்கள், பத்திரிகை ஆசிரியர்களை நாடுகடத்தவும் தயங்கவில்லை. ஆனுல் ஹேஸ்டிங்ஸ் அத்தகைய இயல்பு படைத்தவரல்லர். இவருடைய இக்கொள்கையை இயக்குநர்கள் ஆதரிக்கவில்லை.

* *64, II*, பக். 357.

கருத்து வெளியீட்டு உரிமையைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதே அவர்கள் நோக்கம். அச்சூழ்நிலையில் ஹேஸ்டிங்ஸின் விரிநிலை தழுவிய கொள்கை மிகவும் போற்றத்தக்கதாகும். 1818ல் வங்காளத்தில் சமாசார தர்பான் என்ற வார வெளியீடு தோன்றியது. அதன் ஆசிரியரான J. C. மார்ஷ்மேன் என்பாரை (பி. 1794 - இ. 1877) ஹேஸ்டிங்ஸ் பாராட்டினார். அவ்வாசிரியர் செராம்பூரிலிருந்த பாதிரிகளில் ஒருவராவர்; 1852-ல் இங்கிலாந்துக்குத் திரும்பினார். மூன்று பாகங்களில் அவர் எழுதிய இந்திய வரலாறு (1867) என்ற நூல் மிகச் சிறப்புவாய்ந்ததாகும். டால்ஹௌஸி காலம்வரை உள்ள நிகழ்ச்சிகளை அதில் காணலாம். அவர் தரும் செய்திகளின் சில கருத்துக்களை இந்நூலிலும் பல இடங்களில் குறித்துள்ளோம்.

பகுதி 28

ஹேஸ்டிங்ஸின் இயல்பும் அவர் முடித்த செயல்களும்

ஹேஸ்டிங்ஸின் இறுதிக்காலம்: 1823-ம் ஆண்டின் தொடக்கத்தில் ஹேஸ்டிங்ஸ் இந்நாட்டை விட்டகன்றார். அடுத்த ஆண்டில் மால்ட்டாவின் கவர்னராகப் பணியாற்றத் தொடங்கினார். இயக்குநர்களும் கம்பெனி உரிமையாளர்களும் 1822-ல் அவரைப் புகழ்ந்து பாராட்டிய போதிலும் பின்னவர் அவரை, ஐதராபாத் கடன்களைப் பற்றிய செய்தியில் தொடர்பு கொண்டமைக்காக வன்மையாகக் கண்டித்தனர். ஆனால் ஹேஸ்டிங்ஸ், தூய்மையற்றவரென்றோ கைக்கூலி பெற்றாரென்றோ யாரும் கூறவில்லை. 1826-ல் அவர் இறந்தார்.

இயல்பு: ஹேஸ்டிங்ஸ் இந்நாட்டில் செயலாற்ற தொடங்கியபொழுது (1814) அவருக்கு வயது 60. அதன் பின் ஒன்பது ஆண்டுகள் அவர் பணியாற்றினார். கடமைப் பற்று அவரிடமிருந்தது. தட்ப வெப்ப நிலையைப் பொருட்படுத்தாது அவர் ஊக்கத்துடன் முறைப்படி ஓய்வின்றி உழைத்தார். மனச்சான்றுக்குப் பகையாக அவர் செயலாற்றுவதில்லை. மக்களிடம் இயல்பாக இருக்கக்கூடிய குறைபாடுகளை உணர்ந்து அதற்கேற்ப அவர்களிடம் நடந்துகொண்டார். சிறப்பாக இந்தியச் சிற்றரசர்களிடம் அவர் ஒழுகிய முறை குறிப்பிடத்தக்கது. பிறருடைய இயல்பை எளிதில் உணரும் ஆற்றல் அவருக்கு இருந்தது. பல சிறந்த அலுவலாளர் அவருக்கு உதவி புரிந்தனர். அவர் ஒரு போர்வீரர் மட்டுமல்லர். கல்வியைப்பற்றியும் கருத்து வெளியீட்டு உரிமையைப் பற்றியும் அவர் கொண்டிருந்த விரிநிலை தழுவிய நோக்கத்தை முன்னர்ப் பார்த்தோம். வாரன் ஹேஸ்டிங்ஸ், வெல்ஸ்லி, டல்ஹௌஸி ஆகியோரைப் போல ஹேஸ்

டிங்ஸ் பிரபு ஒரு சிறந்த மேதை என்று கூறமுடியாத போதிலும் இவருடைய திறமைக் கூறுகள் போற்றத் தக்கன. ஐதராபாத் கடன்களைப் பற்றியமட்டில் இவர் ஆழ்ந்த சிந்தனையின்றித் தவறிழைத்துவிட்டபோதிலும் இவருடைய நேர்மையான உள்ளத்தைப்பற்றி ஐயுறு வதற்கில்லை. தனிப்பட்ட முறையில் தமக்கென அவர் முறையற்ற வகையில் சிறிதும் பொருள் சேர்த்துக் கொள்ளவில்லை.

இராணுவத் திறமை : ஹேஸ்டிங்ஸ் ஒரு சிறந்த படைத்தலைவராயிருந்தார். அவர் அமைத்த போர் சூழ்ச்சித் திட்டங்கள் வெற்றியையே அளித்தன. போர்க்களத்தில் அவர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் ஒன்றுகூடத் தோல்வியுறவில்லையாம். 120 கோட்டைகளை அவர் கைப் பற்றினர். அவற்றில் பல, பிறர் எளிதில் உட்புக முடியாதவை ; சில, தாக்குதலுக்கு அசையாதவை.* அவர், கூர்க்கரின் ஆணவத்தை அடக்கினர் ; பிண்டாரியரை அழித்தார் : மராட்டியரின் படைவலிமையைச் சிதறடித் தார்.

அரசியலில் சாதனைகள் : ஹேஸ்டிங்ஸ் புதிதாக இணைத்த விரிவான நிலப்பகுதிகள், தலைமை அதிகாரி களான ஆங்கிலேயரின் அதிகாரத்தை வலிமையடையச் செய்தனர். பம்பாய் மாகாணத்தைப் படைத்தவர் இவரே. இவர் அமைத்த கூட்டுறவுகள் விரிவானவை. அவற்றின் விளைவாக நாட்டில் அமைதி ஏற்பட்டது. சிறப்பாக மத்திய இந்தியாவும் இராசபுதனமும் மிகுதியான அள வுக்கு நன்மையைப் பெற்றன. சிற்றரசுகளைத் தனிப்படுத் தும் அவருடைய கொள்கை 1857-ம் ஆண்டு படைக்கலகம் வரை நீடித்தது. அதன்பின் கட்டுப்பாடுகள் தளர்த்தப் பெற்று அக்கொள்கை விரிவுற்றது. அவராட்சியின் முடிவில் பஞ்சாபும் சிந்தும் மட்டுமே பிரிட்டிஷ் அதிகாரத் துக்குட்படவில்லை. ஆனல் இரஞ்சித்சிங் ஆங்கிலேயர்

* 64, II பக். 368.

உடன் நேச உறவு பூண்டிருந்தார். இவ்வாறு ஹேஸ்டிங்ஸ், வெல்ஸ்லியின் கொள்கையை நிறைவு செய்தார். 1819-ல் அவர் சிங்கப்பூரைக் கைப்பற்றிக்கொண்டு அதைச் சீனு முதலிய கீழ்நாடுகளுக்குச் செல்லும் கப்பல்களுக்கு அனுகூலமான துறைமுகமாக்கினுர். ஜாவாவில் ஆட்சியாளராயிருந்த ராஃபள்ஸ் (Raffles 1781—1819) என்பார் பல கலைகளிலும் ஆர்வங்கொண்ட சிறந்த அறிவாளியாவர்.

ஆங்கில இந்திய வரலாற்றில் ஹேஸ்டிங்ஸுக்கு உரிய இடம்: ஹேஸ்டிங்ஸ், கவர்னர்-ஜெனரலாக இருந்த பொழுது ஏற்பட்டிருந்த ஆட்சிமுறை முன்னேற்றத்தைப் பற்றி முன்னரே பார்த்தோம். " கவர்னர்-ஜெனரல்களில் மிகச்சிறந்தவருக்கு அடுத்தபடியான நிலையை ஹேஸ்டிங்ஸ் பெறுகிருர் ".* 1822-ல் பிரிட்டிஷ் இந்தியாவின் நிதி நிலைமை சிறப்புற்றிருந்தது. கம்பெனி 4½ கோடி ரூபாய் வரை புதிய கடன்களைப் பெற்றபோதிலும் அரசியலாரின் ஆண்டு வருமானம் கூடுதலாக இருந்ததால் பணப்பெருக்கம் இருந்தது. ஹேஸ்டிங்ஸ், பழைய கால்வாய் ஒன்றை பழுதுபார்த்ததின் மூலம் தில்லி மக்களுக்குத் தேவையான நீர் கிடைக்கும்படி செய்தார். சாலைகளை அமைத்தும், கால்வாய்களை வெட்டியும், பாலங்கள் கட்டியும் மக்களின் நலத்தில் கருத்துச் செலுத்தினுர். கல்கத்தா மக்களின் உடல் நலத்துக்கான தேவைகளை நிறைவேற்றினுர். இவர் தமது செயல் மூலம் வெல்ஸ்லியின் ஆக்க வேலைகளை நிறைவேற்றி உறுதியாக்கினுர்.

---

* 81, பக். 291.

பகுதி 29

மன்ரோ

வாழ்க்கை : தாமஸ் மன்ரோ, 1761-ல் கிளாஸ்கோ நகரில் பிறந்தார் ; கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தில் கணி தத்திலும் இரசாயன நூலிலும் (Chemistry) சிறந்த தேர்ச்சிபெற்ருர்; வரலாற்று நூல்களையும் இலக்கியங்களை யும் மிகவும் விரும்பிப்போற்றினர்; புளூடார்க், ஷேக்ஸ்பியர், ஆதம் ஸ்மித், ஹியூம் ஆகிய பேரறிஞர்களின் நூல்களை ஆர்வத்துடன் பயின்ருர் ; 1780-ல் சென்னைக்கு வந்தார் ; அது முதல் 1792 வரை மைசூர்ப் போர்களில் போர்வீர ராகப் பணியாற்றினர்; 1792 முதல் 1789 வரை பாராம ஹாலிலும் (சேலம் மாவட்டம்) 1799 முதல் 1800 வரை கன்னட நாட்டிலும் பணியாற்றினர் ; 1800 முதல் 1807 வரை "கொடுக்கப்பட்ட மாவட்டங்களில்" கலெக்டராகச் செயலாற்றினர் ; அவ்வமயத்தில்தான் தமது 'ரயத்து வாரி' நிலவரித் திட்டத்தை உருவாக்கினர் ; 1807-ல் தாய்நாட்டுக்குச் சென்று பிறகு 1814-ல் மீண்டும் வந் தார். இரண்டு ஆண்டுகள், நீதிமுறை ஆணைக்குழு (கமிஷன்)வின் தலைவராயிருந்தார். 1817-முதல் 1818வரை மூன்ருவது மாராட்டியப்போரில் ஒரு படைப்பகுதியின் தலைவராகப் பணியாற்றினர். அச்சமயத்தில்தான் "படைத் தலைவர்" என்ற பட்டம் அவருக்குக் கிடைத்தது; 1819-ல் மீண்டும் இங்கிலாந்துக்குச் சென்று "நைட்" பட்டம் பெற்ருர். சர் தாமஸ் மன்ரோ 1820 முதல் 1827 வரை சென்னை கவர்னராகப் பதவி வகித்தார். அக்காலத்தில் நடந்த பர்மியப் போரில் (1824–6) கவர்னர்-ஜெனரலுடன் ஒத்துழைத்தார். அடுத்தபடியாக அவரே கவர்னர்-ஜெனர லாக வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனல் 1827ல் கர்நூல் மாவட்டத்தில், வாந்திபேதி தொத்துநோய் காரண மாக உயிர்நீத்தார். பொதுமக்கள்முயன்று அவருடைய உருவச்சிலையைச் சென்னையில் 1839-ல் அமைத்தனர்.

இயல்பும் சிறப்பும் : மன்ரோவிடம் பல நற்பண்புகள் அமைந்திருந்தன. கல்வி, அறிவுக்கூர்மை, கற்பனைத் திறன், இந்தியரிடம் அன்பு, அடக்கம், அறப்பண்பு, உண்மை, எளிய வாழ்க்கை, நேர்மை, வீரம், ஆட்சிமுறைத் திறன், அரசியல் வல்லமை முதலிய பல பண்புகள் அவர் பால் பொலிந்தன. புகைவண்டித்தொடர் இல்லாத அக் காலத்தில் அவர் அடிக்கடி பயணங்களை மேற்கொண்டது வியந்து போற்றத்தக்கதாகும். அப்பயணங்களின் மூலம் அவர் சென்னை மாநில மக்களின் இயல்பு, தேவைகள் முதலியவற்றைப் பற்றித் தெளிவாக அறிந்து கொண்டார். தாம் சிறந்த முறையில் தொண்டாற்ற இயலும் என்ற நம்பிக்கை இருந்தால்தான் எப்பணியையும் அவர் ஏற்றுக் கொள்வார். தன்னலப்பண்பு சிறிதும் அவரிடம் கிடை யாது. அறிவாற்றல், அரசியல் திறமை முதலியவற்றுடன் அவருக்குச் சிறந்த பெருமை அளித்தது அவருடைய உள்ளத்தின் உயர்வுதான். "மக்களின் தந்தை" "மாண் டவ ரிஷி" என்னும் புகழுரைகள் அவருக்குத் தகும். வெல்ஸ்யின் பாதுகாப்புமுறை உடன்படிக்கைத் திட் டத்தை அவர் குறை கூறினார். அத்திட்டம், நிலவரி ஏற்பாடுகளுக்குத் தீமை செய்யும் என்பது அவர் கருத் தாகும். பஞ்சாயத்து ஆட்சிமுறையை மீண்டும் கொண்டு வர அவர் முயன்றார். ஆனால் அம்முயற்சி வெற்றிபெற வில்லை. திப்புவின் வீழ்ச்சிக்குப் பிறகு, குழந்தையை மைசூர் மகாராசாவாக்கிய செயலை மன்ரோ கண்டித்தார். 1822-ல் கல்வித் திட்டங்களில் அவர் தமது கருத்தைச் செலுத்தினார். கல்வியைப் பொறுத்தவரை எவ்வளவு செலவு செய்தாலும் அவை யாவும் சிறந்த முதலீடு என்று அவர் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. மக்களின் கல்விக் காக அரசியலார் எவ்வளவு பணம் செலவு செய்தாலும் அதனால் நாட்டுக்கு நன்மையே தவிர தீமை கிடையாது என்பது அவர் கருத்தாகும்* பணித்துறைகளில் இந்தியர் அமர்த்தப்பட வேண்டுமென்று அவர் வற்புறுத்திக் கூறி

* 12, பக். 78.

ஞர். இந்தியருக்குப் பணித்துறைகளில் அதிகாரம் வழங்கா விட்டால் ஏற்படக்கூடும் தீமையை அவர் நன்கு உணர்ந்து கூறியுள்ள சொற்றொடர்கள் பாராட்டத்தக்கன.[1] இங்கி லாந்தில் அயலாராட்சி ஏற்பட்டு அவர் அவர்கள், ஆங்கி லேயர் இந்நாட்டில் பின்பற்றிய கொள்கையை (உள் நாட்டினருக்கு அதிகாரம் கொடுக்காமலிருந்தால்) அங்கே பின்பற்றுவாரே ஆயின் ஏற்படும் கேடுகளைச் சிந்தித்துப் பார்க்கும்படி மன்ரோ அறிவுறுத்தினர். இந்தியர்களிடத் தில் குறைபாடுகள் இருக்கலாம்; ஆனல் அத்தகைய குறைபாடுகள் வேறு நாட்டவர்களிடம் கிடையாதா என்ற கேள்வியை அவர் எழுப்பினர். மேலும் அயலராட்சி மக்களின் இயல்பைக் கெடுத்துவிடும் என்ற உணர்ச்சி அவரிடம் இருந்தது. இந்தியரின் நற்பண்புகளையும் அவர் அறிந்திருந்தார். அங்கில அலுவலாளர்கள் இந்தியாவில் கிறித்தவ சமயத்தைப் பரப்புவதில் ஈடுபடு வதை அவர் வன்மையாகக் கண்டித்தார் உரிமையாட்சி பெறுவதற்கு இந்தியர்களுக்குப் பயிற்சி கொடுப்பதே பிரிட்டிஷ் இந்திய ஆட்சியின் நோக்கமாக இருக்கவேண்டு மென்று 1824-ல் அவர் குறிப்பெழுதியுள்ளார்.[2] இந்தியர் களிடம் காணப்படும் தீய பண்புகளை ஒழித்து அவர்க ளுடைய அறிவைப் பெருக்கி, தாங்களாகவே அரசியலை நடத்தக்கூடிய அளவுக்கு அவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும்; தங்களது அரசியலைக் காப்பாற்றிக்கொள்ள வும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கவேண்டும்; தக்க காலம் வரும்பொழுது. ஆங்கிலேயர் இந்தியாவை இந்தியர்களிடமே ஒப்படைத்துவிடவேண்டும் என்பது போன்ற அரிய கருத்துக்களை மன்ரோவின் குறிப்பில் நாம் காண்கிறோம். காமன்ஸ் சபையில் ஜார்ஜ் கானிங், மன் ரோவை "இணையற்ற பண்பாளர்" என்று சிறப்பித்து அவரை வானளாவப் புகழ்ந்தார்.[3] பயனற்ற பல கவர்னர்

1. 12, பக். 181 & 191.
2. 67 – பக். 284-5.
3. 12, பக். 175.

கள் ஆட்சி புரிந்த சென்னை, மன்ரோவைக் கவர்னராகக் கொண்டமை, இம்மாநில மக்களின் நல்வாய்ப்பே என்று என்று கூறலாம். கம்பெனியின் மிகச்சிறந்த பணியாளர் களில் மன்ரோவும் ஒருவராவர். உளத்திட்பமும் கற்பனைத் திறனும் பெருந்தன்மையும் செய்திகளின் அடிப்படையை உணரும் ஆற்றலும் அவரிடமிருந்தன.*

---

* *64,* II பக். *412.*

பகுதி 30

எல்பின்ஸ்டன் (Elphinstone), மால்கம் (Malcolm)

எல்பின்ஸ்டன் : எல்பின்ஸ்டன் பிரபுவின் மகனுரான மௌண்ட்ஸ்டுவர்ட் எல்பின்ஸ்டன் 1779-ல் பிறந்தார்; எடின்பரோவில் கல்வி பயின்ருர்; 1795-ல் வங்காளப் பணியாளர் தொகுதியில் சேர்ந்தார்; வெல்ஸ்லியின் தனி முறைச் செயலாளராக (Private Secretary) இருந்த பிறகு 1804-ல் நாகபுரியில் ரெஸிடெண்ட்டாகப் பணியேற்ருர். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு ஷா ஷுஜாவிடம் தூதுவ ராகச் சென்ருர். 1811-ம் ஆண்டு முதல் பூனுவில் ரெஸி டெண்ட்டாக இருந்தார். காபூல் இராச்சியத்தைப் பற்றி அவர் எழுதிய நூல் 1815-ல் வெளிவந்தது. 1819 முதல் 1827 வரை பம்பாயில் அவர், கவர்னராக இருந்தபொழுது ஆட்சித்துறையில் ஏற்படுத்திய சீர்திருத்தங்கள் போற்றத் தக்கன. சிவில் துறையில் இந்தியர்களே அமர்த்த வேண் டியது இன்றியமையாதது என்பது அவர் கருத்து. அவர் கல்வி வளர்ச்சியை ஆதரித்தார்; விரிநிலே தழுவிய நோக்குடன் அரசியலே நடத்திஞர்; சட்டங்களேத் தொகுத் தார். நாட்டு மொழி வளர்ச்சிக்காக 1820-ல் ஒரு சங்கத்தை நிறுவிஞர்; உயர்தரக் கல்வி வளர்ச்சிக்காகத் திட்டம் வகுத்தார்; ஆனுல் 1828 வரை அத்திட்டம் உருவாகிப் பயன்தரவில்லே. அவர் பெயரைத் தாங்கும் கல்வி நிலேயம் 1842-ல் தோன்றியது. உள்நாட்டு முறைகளே அவர் வியந்து போற்றிஞர்; பஞ்சாயத்து முறையின் சிறப்பை யும் நன்கு உணர்ந்திருந்தார்; ஊர்களில் படேல்கள் மூலம் வரி வாங்கும் முறையை நிலேபெறச் செய்ய முயன்ருர். மன்ரோவைப் போலவே எல்பின்ஸ்டனும் சமீந்தார் முறை நிலவரித் திட்டத்தை வெறுத்தார். 1827-ல் எல்பின்ஸ்டன், கவர்னர் பதவியைத் துறந்து விட்டுத் தம் நாட்டுக்குத் திரும்பிஞர்; பின்னர், அரசியலில் பங்குகொள்ள விரும்ப வில்லே. 1835-ல் வில்லியம் பெண்டிங்கு விலகியவுடன்

கவர்னர் - ஜெனரல் பதவியை எல்பின்ஸ்டனுக்கு அளிக்க அரசியலார் முன்வந்தனர். ஆனால் அவர் அதை ஏற்க மறுத்துவிட்டார். அவர் எழுதிய இந்திய வரலாறு என்ற சிறந்த ஆங்கில நூல் 1841-ல் வெளியாயிற்று. 1859-ல் அவர் இறந்தார். எல்பின்ஸ்டன் ஆக்கிய " கிழக்கில் பிரிட்டிஷ் ஆட்சியின் எழுச்சி " என்ற ஆங்கில நூல் 1887-ல் பதிப்பிக்கப்பெற்றது. பிரிட்டிஷ் இந்திய வரலாற்றில், 19-ம் நூற்றாண்டில் ஏறத்தாழ ஒரே காலத்தில் மன்ரோ, எல்பின்ஸ்டன், மல்காம், மெட்காஃப் ஆகிய நால்வரும் சிறந்த முறையில் ஆட்சித்துறைப் பணிகளை மேற்கொண்டு புகழ்பெற்றனர்.

மால்கம்: ஜான் மால்கம் ஸ்காட்லாந்தில் லாங்ஹோம் என்னு மிடத்தில், 1769-ல் பிறந்தார்; தமது பதின்மூன்றாவது வயதில் சென்னைப் படையில் பணியேற்றார். நான்காவது மைசூர்ப் போரில் அவர் சிறப்பான பங்கைப் பெற்றார். 1800, 1808, 1809 ஆகிய மூன்று ஆண்டுகளில் மும்முறைகள் பாரசீகத்துக்குத் தூதுவராகச் சென்றார்; 1812-ல் ' நைட் ' பட்டம் பெற்றார். 1817-ல் மஹித்புரியில் போரிட்டு II-ம் பாஜிராவ் தோற்ற பின்பு அவரைப் பெருந்தன்மையுடன் நடத்தினர். இந்தியர்களுடன் அவர் நெருங்கிப் பழகி அவர் தம் நம்பிக்கைக்கு உரியவரானார். ஐதராபாத்தில் புஸ்ஸி மக்களின் போற்றுதலைப் பெற்றதைப் போலவே மால்கம் மத்திய இந்தியாவில் புகழ் பெற்றார். 1827-முதல் 1830-வரை அவர் பம்பாய் கவர்னராகப் பணியாற்றினர். இந்தியர் சிறந்த கல்வியைப்பெற வேண்டியது இன்றியமையாததென்று அவர் 1828-ல் வற்புறுத்திக் கூறினர். அவர்களுடைய ஆற்றல் ஆட்சி முறைக்குப் பயன்படும் என்பது அவருடைய திண்ணமான எண்ணமாகும். 1829-ல் பம்பாய் அரசியலாருக்கும் பம்பாய்த் தலைமை நீதிமன்றத்துக்கு மிடையே (1823-ல் ஏற்பட்ட நீதிமன்றம்) போராட்டம் விளைந்தது. வாரன் ஹேஸ்டிங்ஸைப் போல மால்கமும் நீதிமன்றத்தின் சில உரிமைகளை எதிர்த்தார். தாய்

நாட்டு அதிகாரிகளின் ஆதரவும் அவருக்கு கிடைத்தது. 1830-ம் ஆண்டின் முடிவில் மால்கம் தம் நாட்டுக்குத் திரும்பினர் ; 1831-ல் பார்லிமெண்ட்டு உறுப்பினரானர் ; 1833-ல் அவர் வாழ்க்கை முடிவடைந்தது. அவர் எழுதியுள்ள ஆங்கில நூல்களாவன:— "பாரசீகத்தின் வரலாறு" (1815) ; மத்திய இந்திய வரலாறு (1823) ; 1784-முதல் 1823-வரை இந்தியாவின் அரசியல் வரலாறு (1826) ; ராபர்ட் கிளைவ் பிரபுவின் வாழ்க்கை (1836).

———

பகுதி 31

கல்வி வளர்ச்சியும் இராம் மோகன்ராயும்

கோல்புரூக் : சர் வில்லியம் ஜோன்ஸ், கீழ்நாட்டுக் கலைகளின் பல்வேறு துறைகளிலும் ஆழ்ந்த கருத்தைச் செலுத்தினர் என்பதை முன்னர்ப் பார்த்தோம். வட மொழிக் கல்வியில் ஆழ்ந்த ஊக்கம் காட்டிய பெரியார் கோல்புரூக் (பி. 1765–இ. 1837) என்பாராவர். இவர் முதலில் கம்பெனியில் ஒரு எழுத்தாளராகப் பணியாற்றினர். பின்னர், சட்டத்துறையில் அலுவலாளரானர். 1799-க்கும் 1801-க்கும் இடைப்பட்ட காலத்தில் இவர் நாகபுரிக்கு அரசியல் தூதுவராகச் சென்றிருந்தார். பிறகு கம்பெனியின் சதர் நீதிமன்றங்களின் தலைவராகவும் வில்லியம் கோட்டைக் கல்லூரியில் சமஸ்கிருதம், இந்துச்சட்டத்துறைத் தலைமைப் (கௌரவப்) பேராசிரியராகவும் பணியாற்றினர். 1807 முதல் 1814 வரை கோல்புரூக் ஆலோசனைக் குழுவின் உறுப்பினராயிருந்தார். இவர், இந்து சமய இலக்கியம், மெய்விளக்கத்துறை நூல்கள், பண்டைய இந்திய கணிதமுறை, இந்திய வானசாத்திரம் முதலிய வற்றை நன்கு கற்றுணர்ந்தார். சிறந்த சமஸ்கிருத வல்லுநரான கோல்புரூக், இந்துச் சட்டத்தொகுப்பு வடமொழி இலக்கணம், "வேதங்களைப்பற்றிய கட்டுரைகள்," "சமணர்", என்ற தலைப்புப் பெயர்களையுடைய நூல்களை ஆக்கியுள்ளார். 1823-ல் லண்டனில் ஆசியச் சங்கம் ஒன்றை நிறுவினர்.

உருதுச் செய்யுள் : லக்னௌவின் சாதத்அலி, சிறந்த உருதுக்கவிஞரான சையது இன்ஷாவை ஆதரித்தார். அப்புலவர் ஏறத்தாழ 1757-ல் பிறந்தார்; 1798 முதல் 1810 வரை லக்னௌவில் அறிவுத்துறையில் தலைசிறந்த நிலையைப் பெற்று விளங்கினர்; 1817-ல் அவர்

காலம் முடிவுற்றது.[1] அக்காலத்தில் ஆக்ராவில் வாழ்ந்த **நசீர்** என்ற புலவர், முகம்மதியர், இந்துக்கள், சீக்கியர் முதலிய யாவருடைய உள்ளத்தையும் கவர்ந்தார். "மக்களின் கவிஞர்" என்று அவர் பாராட்டப்படுகிருர்.

கல்வி : கல்வித்துறையில் வெல்ஸ்லி, ஹேஸ்டிங்ஸ் பிரபு, மன்ரோ, எல்பின்ஸ்டன், மால்கம் ஆகியோர் கொண்டிருந்த ஊக்கத்தைப்பற்றி முன்னரே பார்த்தோம். கல்கத்தாவில் இந்துக் கல்லூரி நிறுவுவதற்கான இயக்கத்துக்குக் கவர்னர்-ஜெனரலும் தலைமை நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியும் ஆதரவு அளித்தனர். இராம் மோகன் ராயும் டேவிட் ஹேர் (Hare) என்பாரும் அந்த இயக்கத்துக்கு ஊக்கமளித்தனர். ஹேர், கல்கத்தாவில் நிலையாகத் தங்கி வங்காளத்தில் கல்வியும் ஒழுக்கமும் வளர்ச்சி அடைய விடாமுயற்சியுடன் தமது வாழ்நாட்கள் முழுவதையும் செலவழித்தார். முதலில் வித்தியாலயம் என்று பெயர் பெற்ற கல்கத்தா இந்துக் கல்லூரி பிற்காலத்தில் மாநிலக் கல்லூரியாக வளர்ச்சியடைந்தது.

இராம் மோகன்ராய் (பி. 1774 - இ. 1833)[2] : இராம் மோகன்ராய் ஓர் வங்காள அந்தணர்; இளமையிலேயே பாரசீகம், அராபி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்ருர்; 1790-ம் ஆண்டிலேயே அவர், உருவ வழிபாட்டு முறையை இகழ்ந்துகூறிச் சிறு புத்தகங்களை வெளியிட்டார்; உபநிடதங்கள் அம்முறையை ஏற்கவில்லை என்பதை விளக்கினுர்; இந்துமதத்தில் ஒரே கடவுள் கோட்பாடும், உண்மை ஒழுக்கமுமே சிறப்பான அடிப்படைப் பண்புகள் என்பதையும் எடுத்துரைத்தார். அவர் பிரெஞ்சு, இலத்தீன், கிரேக்க, எபிரேய ஆங்கில மொழிகளையும் கற்ருர்; 1805 முதல் 1814 வரை ஆங்கிலக் கம்பெனியில் பணியாற்றினுர்; மேனுட்டுக் கல்வியை இந்தியர் கற்கவேண்டியது இன்றியமையாதது என்பதை

1. *121. பக். 98-101.*
2. *121, பக். 93.*

கட்டை ஏறும் பழக்கம் ஒரு புண்ணியச் சடங்காகக் கருதப் பட்டது. ஆனால் சிற்சில காலங்களில் சில வைதீகப் பண்டிதர்கள் கூட அப்பழக்கத்தைக் கண்டித்தனர். எடுத் துக் காட்டாக கி. பி. 7-ம் நூற்றாண்டில் பாணபட்டர், அத் தகைய தற்கொலை ஒரு தவறான செயல் என்று அறிவித் தார். சில முகம்மதிய அரசர்களும் அப்பழக்கத்தைத் தடை செய்தனர். ஆனால் இந்தியாவில் இடைக்காலத்தி லும் புதிய காலத்தின் முற்பகுதியிலும் அக்கொடுமை நிலவி வந்தது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. பதினா றும் நூற்றாண்டில் அல்புகர்க் கோவாவில் அப்பழக்கத்தை ஒழித்தார். 19-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் அரசியலா ருக்குத் தெரிந்தே நூற்றுக் கணக்கான பெண்டிர் உடன் கட்டை ஏறியதாக அறிகிறோம். வெல்ஸ்லியும் மிண்டோ வும் அப் பழக்கத்தைக் கண்டிக்க முயன்றனர். உடன் கட்டை ஏறுதல் தன் விருப்பு ஆர்ந்ததாக இருக்க வேண்டுமே யல்லாது வலுக்கட்டாய முறையில் அமையக் கூடாது என்ற கருத்துடன் மிண்டோ சதியை நெறிப் படுத்த முயன்றார். ஹேஸ்டிங்ஸ் பிரபுவும் ஆமெர்ஸ்ட்டும் அக்கொடிய பழக்கத்தை விரும்பவில்லையாயினும் அதை ஒழித்தால் வங்காளப் படையினரிடை அமைதியின்மை விளையக்கூடும் என்று அஞ்சினர். இராம் மோகன்ராயும் துவாரகநாத் தாகூரும் (இரவிந்திரநாத தாகூரின் பாட்டனார்) அப்பழக்கத்தைச் சாத்திர விரோதமான தென்று கருதினர். பெண்டிங்கு அதுபற்றித் தீவிரமாக ஆலோசனை செய்தார் ; வங்காளப் படைத்துறை அலு வலரின் கருத்துக்களைக் கேட்டறிந்தார்; தலைமைக் குற்றத் துறை நீதிமன்ற முறைவர்களின் உள்ளக்கிடக்கை யையும் உணர்ந்து கொண்டார் ; அப்பழக்கத்தை ஒழிப்பதால் ஏற்படக்கூடும் விளைவுகளைப் பலருடனும் கலந்து விவாதித்தார். இறுதியில் அக்கொடிய முறை ஒழிய வேண்டியது இன்றியமையாதது என்ற முடிவுக்கு வந்தார். ஆனால் வில்ஸன் போன்ற ஆங்கிலேய அறிஞர் கள் சதி ஒழிப்பை விரும்பவில்லை. அது இந்துக்களின் சமயச் சடங்கு என்று அவர்கள் கருதினர். இராம்

மோகன்ராய் அப்பழக்கத்தை எதிர்த்துத் தீவிரமாகப் பிரசாரம் செய்துவந்தார். அதனுல் அவருடைய உயிருக்கே ஏற்பட இருந்த இன்னல்களைக்கூட அவர் பொருட்படுத்தவில்லை. ஆனுல் சட்டத்தின்மூலம் அதை ஒழிப்பதை அவர் விரும்பவில்லை. அதனுல் அரசியலாருக்கும் மக்களுக்கும் இடையே பகைமை ஏற்படும் என்பது அவர் கருத்து. பெண்டிங்கு 1829-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ம் நாள் சதியைப் பற்றிய தமது அரிய கருத்தை வெளியிட்டார். "என்னுடைய சொந்த நலனை நோக்குமிடத்து இந்துக்களுடைய பழக்கவழக்கங்களில் தலையிடாமல் இருப்பதே சிறந்தது என்பதை நான் அறிவேன்; ஆயினும் நாகரிகம் கருணை ஆகியவற்றைக் கருதும் பொழுது உடன்கட்டை ஏறும் வழக்கத்தைச் சட்டத்தின் மூலம் ஒழிப்பதே சிறப்புடையதாகும்" என்ற அவருடைய கருத்து குறிப்பிடத்தக்கது. இந்துக்களின் நலனையே தமது குறிக்கோளாகக் கொண்ட அவர் 1829-ம் ஆண்டில் டிசம்பர் மாதம் நான்காம் நாள் சதியைச் சட்ட விரோதமாக்கினுர். அச்சட்டப்படி சதிக்கு உதவி புரிபவர்களும் தண்டனைக்கு உள்ளாயினர். இந்துக் கைம்பெண்களை உயிருடன் புதைப்பதோ எரிப்பதோ பெரிய குற்றமாயிற்று. உடன்கட்டை ஏறுமாறு பிறரை வற்புறுத்துபவர்களுக்குக் கொலைத்தண்டனை விதிக்கப்பட்டது. பெண்டிங்கு 1830-ல் சென்னை பம்பாய் மாகாணங்களிலும் சதி ஒழிப்புச்சட்டத்தை நிறைவேற்றினுர். அச்சட்டத்தை எதிர்த்து ஆயிரக்கணக்கான வங்காளியர் பெண்டிங்கிடம் விண்ணப்பித்துக் கொண்டனர். கவர்னர் - ஜெனரல் அவர்களைப் பிரிவி கௌன்ஸிலுக்கு முறையிட்டுக் கொள்ளுமாறு ஆணையிட்டார். ஆனுல் பிரிவி கௌன்ஸிலிலும் அம்முறையீடு தள்ளப்பட்டுவிட்டது (1832). காலப்போக்கில் சுதேச இராச்சியங்களிலும் சதி ஒழிந்தது. ஆகவே பெண்டிங்கின் சட்டம் வெற்றி பெற்றது. மிகுந்த எதிர்ப்புக்களுக்கிடையே அப்பழக்கத்தை ஒழித்தது பெண்டிங்கு பிரபு செய்த பெரிய சீர்திருத்தமாகும்.

வற்புறுத்திக் கூறிவந்தார்; 1819-ல் அவர் ஒரு வங்காளப் பத்திரிகையைத் தொடங்கினர். பல்வேறு துறைகளிலும் சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமென்ற ஆர்வம் அவருக்கு மிகுதியாக இருந்தது. 1816-க்கும் 1819-க்கும் இடைப் பட்ட காலத்தில் அவர் உபநிடதங்களையும் பாதரா யணரின் வேதாந்த சூத்திரங்களையும் ஆழ்ந்து பயின்று அவை கூறும் உண்மைச் செய்திகளை விளக்கினர். அவருடைய கருத்துக்கள் நூல்கள் வாயிலாகவும் வெளி வந்தன. 1820-ல் "ஏசுநாதரின் கட்டளைகள்" என்னும் அவருடைய நூல் வெளிவந்தது. அதில் ஆசிரியர், ஏசுநாதரின் ஒழுக்கக் கோட்பாடுகளைப் போற்றியும் அவருடைய கடவுட்டன்மையை மறுத்தும் விரிவுரை எழுதியுள்ளார். அவர் கிறித்தவரின் மும்மைக் கொள்கை (திருனிட்டிக் கொள்கை) யையும் இந்து சமயச் சீர்கேடு களையும் தீவிரமாகத் தாக்கிப் பேசினர். அவருடைய கொள்கைகளை விரும்பாத அவர் பெற்றோரும் குடும்பத் தினரும் அவரை வெறுத்தனர். வைதீக மனப்பான்மை கொண்ட வேறு பலரும் இராம் மோகனை எதிர்த்தனர். இப்பொழுது, சமயம், சமூகம், கல்வி, ஆகிய துறை களில் இந்து சமுதாயத்தில் காணப்படும் முன்னேற்றத் தின் புது முயற்சியாளர், இராம் மோகன்ராய் ஆவர்.*

---

* 31, பக் 29.

பகுதி 32

செராம்பூர் பாதிரிகளும் பத்திரிகைத் தொழிலும்

செராம்பூர் பாதிரிகள் : 18-ம் நூற்றுண்டின் முடிவில் கல்கத்தாவுக்கு வந்த சில பாதிரிகள் அங்கே மக்கள் தமது வருகையை விரும்பவில்லை என்றுணர்ந்து அருகிலிருந்த டேனிஷ் நகரமான செராம்பூருக்குச் சென்று தங்கினர். அங்கே அவர்கள் சில பள்ளிக்கூடங்களையும் ஒரு அச்சகத்தையும் ஏற்படுத்திக் கிறித்தவ சமயத்தைப் பரப்பும் முயற்சியிலீடுபட்டிருந்தனர். செராம்பூரில் சமயப்பரப்புக் குழுவை நிறுவிய வில்லியம் கரே (பி. 1761) 1834-ல் தாம் இறக்கும் வரை அந்த நிலையத்துக்காகத் தொண்டு ஆற்றினர். விவிலிய நூலை, வங்காள மொழியில் மொழி பெயர்த்தார் ; வில்லியம் கோட்டைக் கல்லூரியில் 1801 முதல் 1830 வரை சமஸ்கிருதம் வங்காளி ஆகிய துறைகளின் பேராசிரியராகப் பணியாற்றினர். இந்தியச் செடி வகைகளையும் விலங்குகளையும் பற்றி அறியும் ஆர்வம் அவருக்கு இருந்தது. அவருடைய மனைவியார் பெண் கல்வி வளர்ச்சிக்கான முயற்சியிலீடுபட்டார். ஜோஷுவா மார்ஷ்மேன் (பி. 1768. இ. 1837) என்ற பாதிரியார் கல்வித்துறையிலும் வங்காளப் பத்திரிகைத் தொழிலும் ஊக்கங்கொண்டு உழைத்து வந்தார். அவருடைய மகனுரான ஜான் கிளார்க் மார்ஷ்மேனின் (பி. 1794. இ. 1877) அருஞ்செயல்களைப் பற்றி முன்னரே குறிப்பிட்டுள்ளோம். செராம்பூர் அச்சகத்தின் மேற்பார்வையாளராயிருந்த வில்லியம் வார்டு என்பார் அச்சுத்தொழிலில் மிக்க தேர்ச்சிபெற்றவராவர். இந்துக்களின் நாகரிகத்தைப் பற்றி அவர் எழுதிய நூல் 1811-ல் வெளிவந்தது. அது மூன்று பாகங்களைக் கொண்டது. கரே, ஜோஷுவா. மார்ஷ்மேன், வில்லியம் வார்டு ஆகியோர் "செராம்பூரின் மூவர் " என்று சிறப்பிக்கப்படுகின்றனர்.

பத்திரிகைத் தொழில் : பத்திரிகையாளர் உரிமையைப்பற்றி ஹேஸ்டிங்ஸ் பிரபு கொண்டிருந்த கருத்துக்களை முன்னரே கண்டோம். 1815-ல் கல்கத்தா கெஸட் அரசியலாரின் கெஸட்டாகியது. J. S. பக்கிங்ஹாம் என்பார், 1818-ல் கல்கத்தா பத்திரிகை (ஜர்னல்) என்ற வெளியீட்டைத் தொடங்கினர். இடைக்காலக் கவர்னர்-ஜெனரலாக இருந்த ஜான் ஆதம் 1823-ல் அவரை நாடுகடத்திவிட்டார். கங்காதர பட்டாசாரியார் என்பார் 1816-ல் முதல் வங்காளச் செய்தித்தாளை தொடங்கினர். பின் வெளிவந்த சமாசார தர்ப்பனத்தைப் பற்றி (1818) முன்னர்க் குறிப்பிட்டோம். 1822-ல் இரண்டு பார்சியப் பெரியார் குஜராத்தி மொழியில் ஒரு செய்தித்தாளை வெளியிடத் தொடங்கினர். "பம்பாய்ச் சமாச்சாரம்" என்ற அவ்வெளியீடு "இந்தியாவில் நிலைத்துள்ள மிகப்பழமையான உள்நாட்டுச் செய்தித்தாள்" ஆகும்.*

———

* *121,* பக். *93.*

பகுதி 33

இலங்கை

இலங்கையை ஆங்கிலேயர் வெல்லுதல் : இலங்கையில் 1658-ல் டச்சுக்காரரின் ஆதிக்கம் ஏற்பட்டதென்றும் அவர்கள் 1766-ல் கண்டி அரசருடன் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டனர் என்றும் முன்னர்க் (இந்திய வரலாறு-இரண்டாம் பாகத்தில்)கண்டோம். 1793-ல் பிரெஞ்சுப் புரட்சிப்போர் தொடங்கியது. அதை அடுத்து ஹாலந்து ஆங்கிலேயருக்குப் பகையாக பிரான்சுடன் இணைந்தது. அதனால், சென்னைக் கவர்னராயிருந்த ஹோபர்ட் பிரபு இலங்கை டச்சுக்காரரைத் தாக்க ஒரு படையை 1795-ல் அனுப்பினார். அப்படையின் தலைவராயிருந்த ஜேம்ஸ் ஸ்டுவர்ட், திரிகோணமலை, பட்டிகோலா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களைக் கைப்பற்றினார். 1796-ல் கொழும்புவும் ஆங்கிலேயர் வசமாயிற்று. பிரடெரிக் நார்த் என்ற ஆங்கிலேயர் இலங்கையின் கவர்னராகப் பணியேற்றார் (1798-1805). அத்தீவு ஒரு முடியரசுக் குடியேற்ற நாடாகியது (Crown Colony). அக்கவர்னர் 1802 வரை வில்லியம் கோட்டை கவர்னர்-ஜெனரலின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவராக இருந்தார். 1802-ல் ஏமியன்ஸ் உடன்படிக்கைப்படி இலங்கை, பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட்ட நாடாகியது. கண்டி அரசர் விக்கிரம இராசசின்ஹா என்பார் (1798-1815) ஆங்கிலேயரை எதிர்த்தார். ஆங்கிலப் படைத் தலைவர் நார்த் என்பாரையும் தோற்கடித்தார். கண்டி அரசரின் கொடுங்கோன்மை அளவு கடந்ததாயிற்று. அவர் சில ஆங்கிலேயரின் உடலுறுப்புக்களைக் களைந்து அவர்களை துன்புறுத்தினார். இலங்கையின் கவர்னர் சர் ராபர்ட் பிரௌன்ரிக் (1812-22) 1815-ல் கண்டியைக்கைப்பற்றிக்கொண்டார்; அதன் அரசரை வேலூருக்கு அனுப்பிவிட்டார். அவ்வரசர் அங்கே 1832-ல் உயிர்நீத்தார். இவ்வாறு இலங்கை முழுவதும் ஆங்கிலேயரின் ஆட்சியின்கீழ் வந்தது.

பகுதி 34

பர்மா

பர்மாவில் 1752-ல் தௌங்கூ குல ஆட்சி முடிவுற்றது என்று முன்னர்ப் பார்த்தோம். பிறகு அலாம்ப்ரா (அல்லது அலௌங்பயர்) (1752–60) தமது குலத்தின் ஆட்சியை பர்மாவில் நிறுவினுர். அக்குலம் 1752 முதல் 1885 வரை ஆட்சிபுரிந்தது. தலேங்குகள் அலாம்ப்ராவை எதிர்த்துத் தோல்வியுற்றனர் அதன் விளைவாக அவர்கள் 1753-ல் ஆவாவை விட்டகன்றனர். அலாம்ப்ரா, 1755-ல் புரோம், தாகன் என்ற இடங்களைக் கைப்பற்றினுர்; இரண்டாவதாக உள்ள நகரத்துக்கு இரங்கூன் என்ற புதிய பெயரை இட்டார். (ரங்கூன் என்ற சொல்லுக்குக் கலகத்தின் அல்லது சச்சரவின் முடிவு என்று பொருள்) அதே ஆண்டில் அஸ்ஸாமில் உள்ள மணிபுரியையும் முதன் முதலாகத் தாக்கிக் கொள்ளையிட்டார்; 1756-ல் சிரியாமைக்கைக் கொண்டார். பிரெஞ்சியர், தலேங்குகளுக்கு உதவிசெய்த குற்றத்திற்காக அலாம்ப்ரோவிடம் தண்டனை பெற்றனர் புதுச்சேரியிலிருந்த இரண்டு கப்பல்களைப் பர்மிய அரசர் கைப்பற்றிக் கொண்டார்; சிரியாமை அவர் தீக்கிரையாக்கி விட்டு இரங்கூனைச் சிறந்த துறைமுகமாக்கினுர். 1757-ல் பெகுவைத் தாக்கித் தலேங்குகளை அடியோடு அழித்தார்; 1758–9-ல் மறுபடியும் மணிபுரியைச் சூறையாடினுர். அந்நகர மக்கள் ஆற்ெறுணுத் துயருற்றனர். ஆங்கிலேயர் 1753-ல்·நீக்ரெய்ஸ் தீவில் (பஸ்ஸீன் மாவட்டம், பர்மா) குடியேறியிருந்தனர். 1757-ல் பர்மிய அரசர் அதை ஏற்றுக்கொண்டார். அவர்கள் தலேங்குகளுக்கு உதவி செய்வதாக அவர் கருதினுர். (ஆனுல் அக்கருத்து தவறுனது). ஆதலால் அவர் பல ஆங்கிலேயரையும் இந்தியரையும் கொன்ருர் (1759). 1760-ல் தென்ஞசரீமைக் கைப்பற்றிக்கொண்டு, அவர் அயோத்தி

யாவை (சையாம்) முற்றுகையிட்டார்.; அங்கிருந்து திரும்புகையில் உயிர்நீத்தார். அலாம்ப்ரா, ஒரு ஊர்த் தலைவராக இருந்தவர்; இவர் பல வெற்றிகளைப் பெற்று இறுதியில் பர்மாவின் தலைவரானார். இவருக்குப்பின் இவருடைய இரண்டு குமாரர்களும், பெயரனும் முறையே ஒருவர் பின் ஒருவராகப் பட்டமேற்றனர். ஆங்கிலக் கம்பெனியார் 1760-ல் பர்மாவுக்கு ஆல்வ்ஸ் என்ற தலைவரை அனுப்பினர். முன்னர்ச் சில ஆங்கிலேயரைப் பர்மிய அரசர் கொன்றதற்காக நட்ட ஈடு கோரவே அவர் சென்றார். ஆனால் அம்முயற்சி பயன்தரவில்லை. ஆனால் இரங்கூனில் ஆங்கிலக் கம்பெனியின் கிளை நிலையம் ஒன்று ஏற்பட்டது. 1764-ல் பர்மியர் மறுபடியும் மணிபுரியைத் தாக்கினர். அடுத்த ஆண்டு முதல் ஆவா பர்மாவின் தலைநகராயிற்று. வாரணாசியிலிருந்த ஒன்பது அந்தணர்களைப் பர்மிய அரசர் வரவழைத்தார்; பல சமஸ்கிருத நூல்களைப் பர்மிய மொழியில் மொழிபெயர்க்கச் செய்தார். 1767-ல் ஆறாவது முறையாக அயோத்தியா முற்றுகைக்குள்ளாயிற்று. முடிவில் பர்மியர் அதைக் கைப்பற்றினர். பிறகு பாங்காக், சையாமின் தலைநகராயிற்று. சினர் பர்மாவில் படையெடுத்தனர் (1765-9). ஆனால் பர்மியர் படையெடுப்பாளரை எதிர்த்துத் தம் நாட்டைக் காப்பாற்றினர். 1775-க்கும் 1782-க்கும் இடைப்பட்ட காலத்தில் பர்மியர் பல படையெடுப்புக்களை நிகழ்த்தி மணிபுரி, கச்சார், செயிந்தியா (அஸ்ஸாம்) முதலிய இடங்களை அழித்தனர்.

அலாம்ப்ராவின் மூன்றாவது மகனான போதாவ்பயர் (1782–1819) தலைநகரை அமரபுரத்துக்கு (ஆவாவிலிருந்து 6 மைல் தொலைவில் உள்ளது) மாற்றினார் (1783); 1785-ல் அரக்கானை வென்றார். குருமாரின் உரிமைகளை ஆய்ந்து அறிவதன் பொருட்டு இவ்வரசர் ஏறத்தாழ 600 வெட்டெழுத்துக் குறிப்புகளைச் சேகரித்தார். அக்குறிப்புக்கள் நன்கொடைகளைப் பற்றியவை. இவர், 1784, 1803, ஆகிய ஆண்டுகளில் வரிவிதிக்கும் பொருட்டு

நிலங்களை அளவிடச் செய்தார். 1785—6-ல் இம் மன்னர் சையாமில் படையெடுத்துத் தோல்வியுற்றார். இவர் பல கோயில்களை எடுத்தார். அதுகாறும் ஆங்கிலேயர் பர்மாவுக்கு வாணிகத்தொடர்பான தூதுக்குழுவினரையே அனுப்பி வந்தனர். ஆனால் பர்மியர் பல இடங்களைக் கைப்பற்றி வந்ததால் அரசியல் சம்பந்தமாகவும் ஆங்கிலத் தூதுவர் பர்மாவுக்குச் செல்ல நேர்ந்தது. அத்தகைய தூதர்களை, வில்லியம்கோட்டைக் கவர்னர்-ஜெனரல்கள், 1795, 1797, 1802, 1803, 1809, 1811 ஆகிய ஆண்டுகளில் பர்மாவுக்கு அனுப்பினர். ஆனால் இவற்றால் மிகுந்த செலவு ஏற்பட்டதே தவிர நன்மை எதுவும் உண்டாகவில்லை 1798-ல் பல அரக்கானியர் சிட்டகாங்குக்குள் புகுந்தனர். பர்மிய அரசியலார் அவர்களைத் திருப்பி அனுப்பிவிடுமாறு ஆங்கிலேயருக்குச் செய்தி அனுப்பினர். ஆனால் அம்மக்கள் கொடுங்கோன்மையினின்று விடுதலை பெற்றுத் தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஓடி வந்தவர்கள் என்று காரணங் காட்டி அவர்களைத் திருப்பி அனுப்ப ஆங்கிலேயர் உடன்படவில்லை. பர்மியர் போர் தொடுத்துவிடுவதாக அச்சுறுத்தினர். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை. 1813-ல் மணிபுரியில் உள்நாட்டுப் போர் தோன்றியது. அங்கே இருந்த ஒரு இளவரசர் பர்மியரின் உதவியைப் பெற்று அரியணை யேறினார். இவ்வாறே அஸ்ஸாமில் அஹோம் இராச்சியத்தில் உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டபொழுதும் பர்மியர் அங்கே படையெடுத்துச் சென்றனர். இதனால், செயல்முறையில், மணிபுரியிலும் அஸ்ஸாமின் பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கிலும் பர்மியரின் அதிகாரம் வலிமையடைந்து வந்தது. 1817-ல் பர்மியர் பேஷ்வாவுடன் சேர்ந்து சூழ்ச்சி செய்தனர். அடுத்த ஆண்டில், ஆங்கிலேயரின் இடங்கள் சிலவற்றின்மீது உரிமை கொண்டாடினர். அரக்கானை, அவர்கள் கைப்பற்றிக்கொண்டதால் அத்தகைய உரிமை எழுந்தது. அதாவது சிட்டகாங் ஒரு காலத்தில் அரக்கானுக்கு, அடங்கியிருந்ததாம். தவிர அரக்கானியர் டக்காவிலும் முர்ஷிதாபாத்திலும் கொள்ளையடித்தனராம்! ஆதலால் அரக்

இந்தியா 1798—1823



கானின் புதிய தலைவர்களான பர்மியர் மேலே கூறிய உரிமையை வற்புறுத்தினர். 37 ஆண்டுகள் ஆட்சிக்குப் பின் போதாவ்பயர், 1819-ல் தமது எழுபத்தைந்தாவது வயதில் இறந்தார். அவருக்கு 122 மக்களும் 208 பேரக் குழந்தைகளும் இருந்தனர். இம்மன்னர், " பாயின்னௌங் (1551–81) நீங்கலாக உள்ள பர்மிய அரசர்கள் யாவரிலும் மிக வலிமைவாய்ந்தவர் "* என்று சிறப்பிக்கப்படுகிறார். இவருக்குப் பின் வந்தோர், பிரிட்டிஷ் இந்திய அரசியலாருடன் போராட்டம் நிகழ்த்திய வரலாற்றை அடுத்த அதிகாரத்தில் காண்போம்.

---

* *41*, பக். *293*,

அதிகாரம் 7

(1823 முதல் 1848 வரை)

இந்திய வரலாறு

பகுதி 1

ஜான் ஆதம்

1823-ம் ஆண்டு ஜனவரியிலிருந்து ஆகஸ்டு மாதம் வரை (ஆமெர்ஸ்ட் கவர்னர்-ஜெனரலாக வரும் வரையில்) ஜான் ஆதம் என்பவர் பதிலி (Acting) கவர்னர்-ஜெனரலாகப் பணியாற்றினுர். இவர் ஆலோசனைக் குழுவின் முதல்வராக இருந்தவர்; மிக்க அனுபவம் வாய்ந்தவர்; திறமை பெற்றவர் ; ஆனுல் தாராளமான உளப்போக்கு கொண்டவரல்லர் ; கருத்து வெளியீட்டு உரிமையை எதிர்ப்பவர்; ஹேஸ்டிங்ஸுக்கு நேர்மாருக இவர், செய்தித்தாள் வெளியிடும் ஆசிரியர்களின் உரிமையைக் கடுமையாகக் கட்டுப்படுத்தினுர். கல்கத்தா போதுஇதழ் (Journal) என்ற வெளியீட்டை, 1818 முதல் 1822 வரை உள்ள காலப்பகுதியில் மக்கள் ஆர்வத்துடன் படித்து ஆதரித்து வந்தனர். அதைத்தொடங்கி, வெளியிட்டு வந்து வந்த ஆசிரியர் J. S. பக்கிங்ஹாம் என்பாராவர். 1823-ல் அரசியலார், முன்கூட்டியே உரிமம் (Licence) பெருமல் எதையும் அச்சிடக்கூடாது என்று சட்டமியற்றினர். ஆனுல் பக்கிங்ஹாம் தமது பழைய முறையைக் கைவிடவில்லை.

> ''நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
> மேற்சென்று இடித்தற் பொருட்டு''

என்ற குறளுக் கிணங்க எழுதி வருவதே தமது கடமை என்று செயலாற்றி வந்தார். அதன் விளைவாக அரசிய

லார் அவருடைய செய்தித்தாளின் உரிமைத்தை நீக்கி அவரையும் நாடுகடத்தினர். இங்கிலாந்துக்குச் சென்ற பின் அவ்வாசிரியர் அங்கே தமது பத்திரிகைத் தொழிலே நடத்திவந்தார். இவர், தமக்கு இந்தியாவில் ஏற்பட்ட முறைக்கேட்டைத் தாம் பார்லிமெண்ட்டில் உறுப்பினராக இருந்தபொழுது யாவருமறிய அம்பலமாக்கினர். அதைப் பற்றி விசாரணை நடந்தது (1834). முடிவில் கம்பெனியார் பக்கிங்ஹாமுக்கு ஆண்டுக்கு 200 பவுன்கள் ஓய்வுக்கால ஊதியம் அளிக்க இணங்கினர். பக்கிங்ஹாம் 1855-ல் இறந்தார்.

பகுதி 2

ஆமெர்ஸ்ட் (1823 - 8)

முதல் பர்மியப் போர் (1824 - 6)

ஆமெர்ஸ்ட் : வில்லியம் பிட் என்னும் பெயருடைய ஆமெர்ஸ்ட் பிரபு 1773-ல் பாத் என்ற இடத்தில் பிறந்தவர் ; அவருடைய முன்னேற்றத்தில் அக்கரைகொண்டு அவரை ஆதரித்தவர்களில் சாத்தாம் பிரபும் ஒருவராவர். பிரிட்டிஷ் அரசியலாரின் சார்பாக ஆமெர்ஸ்ட் 1816-7-ல் சீனுவுக்குச் சென்று திரும்பினர். நெப்போலியனைச் செயிண்ட் ஹெலினுவில் கண்டு பேசும் உரிமை அவருக்குக் கிடைத்தது.* இவர் 1823-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இந்தியாவுக்கு வந்து கவர்னர்-ஜெனரல் பதவியை ஏற்றுக்கொண்டார். விரைவில் பர்மாவுடன் போர் தொடுக்க வேண்டியது அவருக்கு இன்றியமையாததாயிற்று. ஆனல் போரைத் திறமையுடன் நடத்தும் ஆற்றல் அவருக்கு இல்லை. அவர் தமது பதவிக்கால முழுவதிலும் இந்தியச் செய்திகளைத் தக்க முறையில் உணர்ந்துகொள்ளாமலே போய்விட்டார்.

முதல் பர்மியப் போர்(1824-6);காரணங்கள்: பர்மாவில் போதாவ்பயர்வுக்குப்பின் அவருடையபேரர் பாகீதா(1819-37) அரியணை ஏறினர். இவ்வரசரும், தமது இராச்சியத்தின் அளவைப் பெருக்கவே முயன்று பெரிதும் உழைத்தார். பர்மியர் 1819-ல் மணிபுரியையும் அஸ்ஸாமின் அஹோம் இராச்சியத்தையும் வென்றனர் ; 1821-ல் வடகிழக்கு எல்லைப்புறத்தையும் கடந்துபிரிட்டிஷ் இந்தியாவின் உட்புகுந்தனர். இரண்டு ஆண்டுகட்குப் பிறகு, சோதிடரின் அறிவுரையைக் கேட்டுப் பர்மிய அரசர் தமது தலைநகரை அமரபுரத்திலிருந்து ஆவாவுக்கு மாற்றினர்.

---

* 79, பக். 20.

அலாம்ப்ராவும் அவர் பின் வந்தோரும், ஏறத்தாழ அரை நூற்றுண்டுக்குள் தமது இராச்சியத்தைப் பெருக்கி வந்ததின் விளைவாகப் பர்மாவின் எல்லை பிரம்மபுத்திரைப் பள்ளத்தாக்கையும் கடந்து விரிவுற்றது. பொதுவாகப் பர்மியர் எல்லோரும் கொடியவரில் கொடியவராயும் செருக்கு மிக்கோராயும் வெளி உலகைப்பற்றிய அறிவு சிறிதும் இல்லாதவராயும் இருந்தனர். தம்மை எவரும் வெல்லமுடியாது என்றும் கருதிவந்தனர். ஆங்கிலே யரைப் பற்றியும் இந்தியரைப் பற்றியும் மிக இழிவான கருத்தே அவர்கள் கொண்டிருந்தனர். ஆங்கில அரசியல் தூதுவர்களை அவர்கள் பொருட்படுத்துவதில்லை. பிரிட் டிஷ் இந்திய அரசியலாரை இழிவுபடுத்தும் வகையில் அவர்கள் இராச்சியத்தில் பர்மியர் உரிமை கோரினர். கவர்னர்-ஜெனரல்கள் இந்திய நாட்டு நிகழ்ச்சிகளில் மிகவும் ஈடுபட்டிருந்ததால் பர்மியர்களிடம் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையோடேயே பழகி வந்தனர். இவர்களுக்குப் பர்மியரின் ஆக்கமூலங்களைப் பற்றித் தெளிவாகத் தெரியாது. பர்மியரோ, ஆங்கிலேயரின் கொள்கையைக் கண்டு அவர்கள் ஆற்றலற்றவர்கள் என்று முடிவு செய்துகொண்டு மேலும் மேலும் செருக் குற்றனர். மகாபந்துலா என்ற படைத்தலைவர் ஒருவர் பர்மாவில் இருந்தார். அவர் ஏறத்தாழ 1780-ல் பிறந் தவர் எனலாம். அவருடைய பண்புகளையும் வீரத்தையும் பர்மியர் போற்றிப் புகழ்ந்து களிப்புற்றிருந்தனர். அவரைப் பின்பற்றியோர் அவரை பெருவீரரென வாழ்த்தி வழிபடவும் முற்பட்டனர். பர்மியர், 1823-ல் ஷாபுரித் தீவைக் (சிட்டகாங் மாவட்டம், வங்காளம்) கைப்பற்றினர்; 1824-ல் கச்சாருக்குள் புகுந்தனர். அங்கே இருந்த ஆங்கிலப்படை அவர்களை எதிர்த்தது. மகாபந்துலா, வங்காளத்திலிருந்த ஆங்கிலேயரை விரட்டும் நோக்கத் துடன் அரக்கானுக்குத் தம் படையுடன் சென்றுர். அவர், ஆங்கில கவர்னர்-ஜெனரலைக் கைதியாக்கிப் பர்மியத் தலைநகருக்கு அனுப்பிவிடுவதாகக் கூறி அதன் பொருட் டுப் பொன் விலங்குகளையும் உடனெடுத்துச் சென்றுராம்.

ஆதலால் 1824-ம் ஆண்டு மார்ச்சு மாதம் ஆங்கிலேயர் அவருடன் போர் தொடுக்கவேண்டியதாயிற்று.

போர் நிகழ்ச்சிகள் : 1824-ம் ஆண்டு மே மாதத்தில் மகாபந்துலா, சிட்டகாங்குக்குத் தெற்கே உள்ள இராமு என்ற இடத்தில் ஆங்கிலப் படைத்தலைவர்களில் ஒருவரான நாட்டன் என்பாரை முறியடித்தார். அதற்கிடையில் ஆங்கிலேயர் இரங்கூனைக் கைப்பற்றும் நோக்கத்துடன் கப்பற்படை ஒன்றை அனுப்பிவைத்தனர். அப்படை ஏறத்தாழ 11000 சிப்பாய்களைக் கொண்டிருந்தது. அவர்களில் பெரும்பான்மையினர் சென்னையிலிருந்து சென்றவர்களாவர். அப்படையின் தலைவர் சர் ஆர்ச்சிபால்டு காம்பெல் என்பவர். அவர் அப்படையுடன் வடக்கு அந்தமான் தீவில் உள்ள காரன்வாலிஸ் துறைமுகத்திலிருந்து புறப்பட்டு இரங்கூனுக்குச் சென்று எளிதில் அந்நகரைக் கைப்பற்றிக்கொண்டார். அப்படையெழுச்சியின் பொருட்டுச் சென்ற ஆங்கிலக் கப்பல்களில் ஒரு சிறிய நீராவிக்கப்பலும் இருந்ததாம். கீழ்நாட்டுப் போர்களின் வரலாற்றில் அப்பொழுதுதான் முதன் முதலாக நீராவிக்கப்பல் பயன்படுத்தப் பெற்றதைக் காண்கிறோம். இரங்கூனிலிருந்த ஆங்கிலப்படை நோய், உணவுப் பற்றுக்குறை, மழை முதலிய பல இன்னல்களுக்குட்பட்டிருந்த சமயத்தில் சென்னை கவர்னர் மன்றோ அப்படையினருக்கு அரிய உதவி செய்தாரென்பது குறிக்கத்தக்கது. ஆங்கிலேயர், கடற்படை உதவிகொண்டு தென்னசரீம் மாகாணத்தைக் கைப்பற்றினர். அதன்பிறகு அங்கிருந்து அவர்களுக்குத் தேவையான பொருள்கள் கிடைத்தன. 1824-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மகாபந்துலு இரங்கூனைத் தாக்கினர். ஆனால் அவருக்குத் தோல்விதான் கிடைத்தது. அஸ்ஸாமிலிருந்த பர்மியரையும் 1825-ல் ஆங்கிலேயர் வெளியோட்டி வெற்றிக் கொடி நாட்டினர். கச்சாரிலிருந்தும் பர்மியர் வெளியேற நேர்ந்தது. அந்நிலையில், கச்சார், மணிபுரி, அரக்கான் முதலிய பகுதிகளின் வழியாக பர்மாவில் படை

யெடுக்க முயன்ற ஆங்கிலேயரின் முயற்சி வீணாயிற்று. எனினும் 1825-ல் மணிபுரி அவர்கள் வசமாயிற்று. மகாபந்துலு அவ்வமயம் இரங்கூனைப்பற்றியே கருதி வந்த காரணத்தால், வடகிழக்கு எல்லைப்புறத்தில் ஆங்கிலேயரின் நிலை சிறிது சிறிதாக வலிமை அடைந்து வந்தது. 1825-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தானுப்யூ என்ற இடத்தில் நடந்த போரில் முதலில் ஆங்கிலேயர் தோல்வியுற்றனரெனினும் பிறகு மகாபந்துவைக் கொன்றுவிட்டுப் புரோமைக் கைப்பற்றினர். அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் பாகன் என்னுமிடத்தில் காம்பெல், பர்மியரைத் தோற்கடித்துத் தலைநகரை நோக்கி முன்னேறினர். அதைக் கண்ட பர்மியர் அமைதி உடன்பாட்டுக்கு இசைந்தனர். பாகனுக்கும் ஆவாவுக்கும் மிடையே உள்ள யாண்டபூ என்னுமிடத்தில் இரு சாராரும் உடன்படிக்கை செய்துகொண்டனர்.

முடிவு: யாண்டபூ உடன்படிக்கை (1826): இவ்வுடன்படிக்கையின்படி ஆங்கிலேயர், அஸ்ஸாம், அரக்கான், தென்னசரீம் நிலப்பகுதிகளையும் ஒரு கோடி ரூபாயையும் பெற்றனர். மணிபுரி, கச்சார் செயிந்தியா பகுதிகள் பர்மியரிடமிருந்து விடுதலை பெற்று ஆங்கிலக் கம்பெனிக்குக் கீழ்ப்பட்ட காப்பரசு நாடுகளாயின. மேலும் 1830-ம் ஆண்டு முதல் ஆவாவில் ஒரு பிரிட்டிஷ் ரெஸிடெண்ட் இருந்துவந்தார். வாணிக உடன்படிக்கைப்படி (1826) பிரிட்டிஷ் வணிகருக்குப் பாதுகாப்பு அளிப்பதாக பர்மியர் வாக்குறுதி அளித்தனர். ஆங்கிலேயர் பெற்ற மேற்கூறிய நிலப்பகுதிகள் பிற்காலத்தில் சிறப்புப்பெற்று விளங்கின. அஸ்ஸாமிலிருந்து தேயிலையும் அரக்கானிலிருந்து அரிசியும் தென்னசரீமிலிருந்து மரங்களும் கிடைத்தன. போர்முறையில் ஆங்கிலேயரைவிடப் பர்மியர் கீழ்ப்பட்டவர்களெனினும் மரங்களின் உதவி கொண்டு தற்காப்புக்காகப் பின்னவர் கையாண்ட முறைகள் முன்னவருக்குப் பல இடையூறுகளை விளைவித்தன. மேலும் பர்மாவின் நில அமைப்பைப்பற்றியும் ஆக்க

மூலங்களைப்பற்றியும் ஆங்கிலேயர் தெளிவாக அறிந்து கொண்டிருக்கவில்லை. போரும் விரைவில் முடிவதாக இல்லை. ஆங்கிலேயரின் போர்ச்செலவுகளும் பெருகி வந்தன. இப்போருக்காக அவர்கள் செலவிட்ட தொகை ஏறத்தாழ 13 கோடி ரூபாயாகும். ஆங்கில சிவில் துறை, இராணுவத்துறை அதிகாரிகள் இப்போரைப் பாராட்டத்தக்க முறையில் நடத்தினர் என்று கூறுவதற்கில்லை. சர் தாமஸ் மன்ரோ, தக்க சமயத்தில் உதவி செய்திராவிடின் இரங்கூன் படையெழுச்சி தோல்வியே அடைந்திருக்கக் கூடும். ஆங்கிலேயர் முன்னெச்சரிக்கையுடன் இருந்திருப்பின் உயிர் இழப்பையும் பொருள் நட்டத்தையும் ஓரளவுக்குத் தடுத்திருக்க முடியும். இறுதியில் அவர்கள் வெற்றிபெற்ற போதிலும் போர் நிகழ்ச்சிமுறையைக் குறித்துத் தாய்நாட்டினர் குறைகூறினர் என்பதும் நோக்கற்பாலது. ஆயினும் 1827-ல் ஆமெர்ஸ்ட்டுக்கு அரக்கான் (எர்ல்) கோமான் என்ற பட்டம் கிடைத்தது. அக்கவர்னர்-ஜெனரலின் நினைவுக்கு அறிகுறியாக, மர்ட்டாபனுக்குத் தெற்கில் ஆமெர்ஸ்ட் நகரம் விளங்கிவருவதைக் காண்கிறோம்.

பாரக்பூர் படைக்கலகம் (1824): கல்கத்தாவுக்கு அண்மையிலுள்ள பாரக்பூரில் வங்காளச் சிப்பாய்கள் மன அமைதியற்றிருந்தனர். அவர்களுக்கிருந்த பல குறைகளைப் பற்றி அதிகாரிகள் சிறிதும் அக்கரை கொள்ளவில்லை. இராமு போர்க்களத்தில் ஆங்கிலேயர் அடைந்த தோல்வி ஆங்கிலேயரது ஆற்றலில் சிப்பாய்கள் ஐயம் கொள்ளச் செய்தது. ஆதலின் கடலைக்கடந்து சென்று பர்மியரைத் தாக்குவதற்கு அவர்கள் விரும்பவில்லை. அந்நிலையில் அவர்கள் கலகத்தைத் தொடங்கினர். ஆனால் அதிகாரிகள் அக்கலகத்தை அருளற்ற வகையில் அடக்கினர். பல கலகக்காரர்கள் உயிர் இழந்தனர்.

பரதபுரியைக் கைப்பற்றுதல் (1826): கவர்னர்-ஜெனரலின் உடன்பாட்டைப் பெற்று பல்வந்த்சிங் என்ற குழந்தை அரசர் பரதபுரியின் பட்டத்தைப் பெற்றார்.

ஆனால் அவருடைய உறவினனான துர்ஜன்சால் என்ற துரோகி அவரை அரியணையினின்று நீக்கிவிட்டுத் தானே அரசாளத் தொடங்கினான்; ஆங்கிலேயர், பர்மியப் போரில் இன்னலுற்றிருந்ததால் அந்நிலையைத் தமக்கு நல் வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டான். அவனை எதிர்க் கச் சர் டேவிட் ஆக்டர்லோனி முயன்றார். ஆனால் கவர்னர்-ஜெனரல் அவரை ஆதரிக்கவில்லை. இதன் விளைவாக ஆக்டர்லோனி பதவியினின்று விலகிவிட்டார். 1825-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் மீரட்டில் அவர் வாழ்க் கையும் முடிவடைந்தது. துர்ஜன்சால் பரதபுரியில் தமது வலிமையைப் பெருக்கி வந்தார். அவ்வலிமையைக் குலைக் கும் முயற்சியை அடுத்தபடியாக சர் சார்லஸ் மெட்காஃப் மேற்கொண்டார். அவர் விருப்பப்படியே 1826-ல் காம் பெர்மீர் என்ற என்ற படைத்தலைவர், பரதபுரிக் கோட்டை யைத் தாக்கி அதைத் தம் வசப்படுத்திக்கொண்டார். இதே கோட்டையைக் கைப்பற்ற 1805-ல் லேக் பிரபு முயன்று தோல்வியுற்றாரென்பது ஈண்டு நினைவு கூரத் தகும். இறுதிவரை துர்ஜன்சால் போரிட்டுத் தோல்வி யுற்றார். இருசாராருக்கும் பொருள் இழப்பு மிகுதியாக ஏற் பட்டது. ஆங்கிலேயர், துர்ஜன்சாலை வாரணாசியில் சிறைப்படுத்திவிட்டுக் குழந்தை அரசரை மீண்டு அரி யணையில் அமர்த்தினர். கம்பெர்மீர், 50 லட்ச ரூபாய் கொண்ட பரதபுரிக் கருவூலத்தைத் தம்வசப்படுத்தி அதில் 6 லட்ச ரூபாயைத் தம் பங்காக எடுத்துக்கொண்டார். இச்செயல் அவருக்கு இழிவையே தேடிக்கொடுத்தது. படைத்தலைவரை மெட்காஃபும் குறைகூறினார்.

கவர்னர்-ஜெனரல் ஆமெர்ஸ்ட் : ஆமெர்ஸ்ட், மிக்க ஆற்றல் வாய்ந்தவர் என்று கருதுவதற்கில்லை. அவர் நடத்திய பர்மியப் போரினால் ஆங்கிலேயர் பெரும் பொருளை இழந்தனர். 1824-ல் ஆங்கிலேயர், கிழக் கிந்தியத் தீவுகளில் சில இடங்களை டச்சுக்காரரிடம் கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக இந்தியாவில் இருந்த டச்சுக் குடியேற்றப் பகுதிகளை பெற்றனர். தொடக்கத்தில்

ஆமெர்ஸ்ட், கருத்துவெளியீட்டு உரிமையை ஆதரிக்காத போதிலும் பிற்காலத்தில் செய்தித்தாள் ஆசிரியர்களின் உரிமையைப் போற்றினுர். இதனுல் அவ்வாசிரியர்கள் கவர்னர்-ஜெனரலைப் பாராட்டினர். 1826–7-ல் ஆமெர்ஸ்ட் தமது வட இந்தியச் சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்டு தில்லிக்கும் சிம்லாவுக்கும் சென்ருர். கோடைக்காலத்தில் சிம்லாவுக்குச் சென்று தங்கிய முதல் கவர்னர்-ஜெனரல் இவரே ஆவர் (1827). தமது மகளின் நோய் காரணமாக இவர் 1828-ல் தமது பதவியைத் துறந்து இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்ருர். அவ்வாண்டின் மார்ச்சு மாதத்திலிருந்து ஜூலை மாதம் வரை பட்டர்வொர்த் பேலே (Butterworth Bayley) என்பார் பதிலி (acting) கவர்னர்-ஜெனரலாகப் பதவி வகித்தார். இவர் ஆலோசனைக் குழுவில் முதல்வராக இருந்தவர். அவருக்குப் பிறகு வில்லியம் பெண்டிங்கு பிரபு கவர்னர்-ஜெனரலாக வந்தார். ஆமெர்ஸ்ட்டுப் பிரபுவின் மனைவி, சிறந்த இயல்பும், தைரியமும், அறிவின் திறமையும் வாய்ந்தவர். அவர் தமது கணவனுர் இந்தியாவில் ஆட்சி செய்ததைப்பற்றி எழுதியுள்ள குறிப்புக்கள் பாராட்டத்தக்கவை.* அப்பெண் மணி 1837-ல் இறந்தார். ஆமெர்ஸ்ட் பிரபு 1839-ல் மீண்டும் திருமணம் செய்துகொண்டு 1857 வரை உயிர் வாழ்ந்தார்.

---

* 79. பக். 54.

பகுதி 3

பெண்டிங்கு (1828-35)

பாதுகாப்புக்குட்பட்ட அரசுகள்

பெண்டிங்கு வாழ்க்கையின் முற்பகுதி: வில்லியம் காவெண்டிஷ் பெண்டிங்கு பிரபு 1774-ல் பிறந்தார். போர்ட்லண்டு டியூக் எனப்படும் இவருடைய தந்தையார் 1783-ம் ஆண்டிலும் பிறகு 1807 முதல் 1809 வரையிலும் பிரிட்டிஷ் பிரதம அமைச்சராக இருந்தார். பெண்டிங்கு, போர்த்தொழிலை மேற்கொண்டு பிளாண்டர்ஸ் (Flanders) இத்தாலி முதலிய நாடுகட்குச் சென்று வந்தார். 1800-ல் நெப்போலியன் மாரெங்கோ போர்க்களத்தில் வெற்றி பெற்றபொழுது பெண்டிங்கும் அங்கே இருந்தார். 1803-ல் இவருக்குச் சென்னையில் கவர்னர் பதவி கிடைத்தது. இவர், தமது ஆலோசனைக் குழுவினரிடமும் உச்ச நீதிமன்றத்தின் (சென்னையில் 1800-ல் அமைக்கப்பட்டது) தலைமை நீதிபதியிடமும் கருத்துவேற்றுமை கொண்டிருந்தார். வருவாய்த் திட்டத்தைப் பொறுத்தவரை, பெண்டிங்கு, மன்ரோவின் கொள்கையை ஆதரித்தார். 1806-ல் வேலூரில் கலகம் மூண்டதின் விளைவாக அடுத்த ஆண்டில் பெண்டிங்கைத் தாய்நாட்டு அரசியலார் திரும்ப அழைத்தனர். அச்செயல் முறையற்றது என்பதில் ஐயமில்லை. பெண்டிங்கு தீபகற்பப் போரில் பங்குகொண்டு, கொரூனு போர்க்களத்தில் தமது ஆற்றலைக் காட்டினார் (1809). இரண்டு ஆண்டுகட்குப் பிறகு ஆங்கில அரசியலார் அவரைச் சிஸிலிக்கு அனுப்பினர். அங்கே அவர்கள் ஒரு சிறந்த அரசியல் அமைப்பைப் படைத்தார். 1812-ல் அவர், இத்தாலியின் உரிமைப் போராட்டத்தில் அக்கரை கொண்டு அதில் தமது கருத்தைச் செலுத்தினர். 1814-ல் ஜினேவாவைக் கைப்பற்றினர். அது முதல் இத்தாலி நெப்போலியனின் ஆதிக்கத்தினின்று விடுதலை பெற்றது. இத்தாலிய நாட்டின் ஒற்றுமையைப் பற்றி அவர் கொண்ட

எண்ணம் பிற்காலத்தில் நிறைவேறியதைக் காண்கிறோம். ஆனால் பெண்டிங்கின் இத்தாலிய நாட்டுக் கொள்கையை அக்காலத்து ஆங்கில அரசாங்கம் விரும்பி ஏற்கவில்லை. 1819-ல் அவ்வரசாங்கம் மீண்டும் அவருக்குச் சென்னை கவர்னர் பதவியை அளிக்க முன் வந்தது. ஆனால் அவர் அதை ஏற்க மறுத்து விட்டார். பின்னர் 1828-ல் அவர் கவர்னர்-ஜெனரலாக இந்தியாவுக்கு வந்தார்.

பாதுகாப்பைப் பெற்ற இராச்சியங்கள் : ஐதராபாத், லக்னௌ, தில்லி: பெண்டிங்கின் சிறந்த சீர்திருத்தங் களைக் கூறுவதற்கு முன்னர்த் தமது ஆதரவிலிருந்த இந் திய நாடுகளைக் குறித்து ஆங்கிலேயர் கொண்டிருந்த கொள்கையைப் பற்றியும், கவர்னர் - ஜெனரல் தம்முடன் இணைத்துக் கொண்ட நாடுகளைப் பற்றியும் அவருடைய வெளித்துறைக் கொள்கை, 1833-ம் ஆண்டுப் பட்டயச் சட்டம் ஆகியவற்றைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம். வெல்ஸ்லியும் ஹேஸ்டிங்ஸ் பிரபுவும் பின்பற்றிய காப்ப ரசுக் கொள்கை, ஆங்கிலேயரின் பாதுகாப்பைப் பெற்ற சிற்றரசுகளில் நிலவிய ஆட்சிமுறைச் சீர்கேடுகளை நீக்க வில்லை என்பதை முன்னரே கண்டோம். கம்பெனியின் செலவுகளைக் குறைக்க வேண்டுமென்றும் காப்பரசுகளின் உள்துறைச் செய்திகளில் தலையிட வேண்டாமென்றும் இயக்குநர்கள், பெண்டிங்குக்குக் கட்டளைகள் விடுத்திருந் தனர். அவ்வாறிருந்தும் தலையிடாக் கொள்கையை முழு அளவுக்குப் பின்பற்றுவதென்பது இயலாத செயல் என் பதை பெண்டிங்கு உணர்ந்தார். ஆயினும் தலையிடாக் கொள்கையின் தீமைகள் பெண்டிங்கு காலத்திலும் தொடர்ந்து விளைந்து வந்தன. ஆனால் அத்தீமைக்குக் கவர்னர்-ஜெனரல் காரணமாவார் என்று கூற முடியாது.

ஐதராபாத்தின் சிகந்தர் ஜா (1802–29) இறந்த பின் நசீர்-உத்-தௌலா (1829–57) பட்டமேற்றார். சந்துலா லின் சீர்கேடான ஆட்சிமுறை தொடர்ந்து நடந்தது. 1843-ல் தான் அவர் பதவியினின்று விலகினார். கவர்னர்-

ஜெனரல், 1831-ல் லக்னௌவுக்குச் சென்று அயோத்தி நாட்டில் சீர்திருத்தங்களை நிறைவேற்ற வேண்டுமென்று அதன் அரசருக்கு எச்சரிக்கை விடுத்தார். அவ்வாறு செய்யாவிடின் அவ்வரசருக்கு ஏற்படக்கூடும் இன்னலை யும் சுட்டிக் காட்டினார். ஆனால் அயோத்தி அரசர் நசீர் உத்தீன் ஐதர் (1827-37), தாமாகவே நற்செயல் புரியா தது மட்டுமன்றி, அமைச்சர் மேதி அலி செய்யும் சீர்திருத் தங்களுக்கு இடையூறுகளையும் விளைவித்து வந்தார். அவ் வமைச்சருக்கு ஆங்கிலேயரின் உதவியும் கிடைக்கவில்லை. தலையிடாக் கொள்கை காரணமாக ஆங்கில ரெஸிடெண் டும் வாளாவிருந்தார். ஆகவே அயோத்தியின் நிலைமை கேடுற்றிருந்தது. அதைக் கேள்வியுற்ற இயக்குநர்கள், அந்நாட்டின் அரசியலைப் பெண்டிங்கே மேற்கொள்ளலா மென்று ஆணை பிறப்பித்தனர். ஆனால் பெண்டிங்கு, தமது ஆட்சிக்காலத்தின் இறுதியில்தான் அவ்வாணை யைப் பெற்றார். ஆகவே அவர் அச்செய்தியை அயோத்தி அரசருக்கு அறிவித்துத் தாம் தற்காலிகமாக அவ்வாணை யை நிறைவேற்றாமலிருப்பதாகவும் விரைவில் அயோத்தி யின் நிலைமை மாறி நன்மை ஏற்படும் என்று எதிர்பார்ப்ப தாகவும் கூறினார். இனி, தில்லியில் அவ்வமயம் II-ம் அக்பர் முகலாயப் பேரரசராக வீற்றிருந்தார். தாம் ஆங்கிலேயரிடமிருந்து பெற்றுவந்த படித்தொகையை மிகுதியாக்கிக்கொள்ள வேண்டுமென்ற நாட்டம் அவ ருக்கு இருந்தது. அதன்பொருட்டு அவர் 1830-ம் ஆண்டின் இறுதியில் இராம் மோகன்ராயை இங்கிலாந் துக்கு அனுப்பினார். மோகன் ராய்க்கு "இராசா" என்ற பட்டத்தையும் பேரரசர் வழங்கியிருந்தார். இராசா இராம் மோகன்ராய் இங்கிலாந்துக்குச் சென்றதால் நற்பயன் எதுவும் விளையவில்லை. பேரரசரின் செயல் கவர்னர்-ஜெனரலுக்குச் சினத்தையே ஊட்டியது.

பரோடா, இந்தூர், போபால், குவாலியர்: கெயிக் வார், பிரிட்டிஷாருடன் பகைமை பாராட்டி வந்தார். தாந்தியா ஜோக், பரோடாவில் ஒழுங்கான அரசியலை

அமைத்திருந்தார். ஆனால் அவர் இறந்த பின் அந் நாட்டில் உள்நாட்டுக் கலகம் மூண்டது. 1833-ல் ஆங்கிலேயர் தலையிட்டு அக்கலகத்தை அடக்கினர். அதே ஆண்டில் இந்தூரின் II-ம் மல்ஹார்ராவ் ஹோல்கார் இறந்தார். அவருடைய தத்துப்பிள்ளையான மார்த் தாண்டராவ் பட்டம் பெற்றார். ஆனால் உள்நாட்டில் அவருக்குப் போட்டியும் எதிர்ப்பும் எழுந்தன. முடிவில் அவருடைய உறவினரான அரிராவ் 1835-ல் அவருக்கு எதிராக நின்று வெற்றி பெற்றுத் தம்மையே நாட்டின் தலைவராக்கிக் கொண்டார். 1843-ல் அவர் வாழ்க்கை முடிவடைந்தது, போபாலிலும் நவாப்புக்கு எதிர்ப்பு ஏற்பட்டிருந்தது. நவாப்பின் மாமியாரே அவரைப் பதவியினின்று நீக்க முயன்று அதில் வெற்றியும் பெற்றார். அங்கு அதனால் குழப்பநிலையே ஏற்பட்டது. பெண்டிங்கு இங்கிலாந்துக்குச் சென்றபிறகு ஆங்கிலேயர்கள் அக் குழப்பநிலைக்கு ஒரு முடிவு கண்டு அமைதியை நிலை நாட்டினர். இனி, குவாலியரின் தௌலத்ராவ் சிந்தியா 1827-ல் இறந்துவிட்டார். அவருக்கு மக்கள் இல்லை. ஆகவே அவருடைய மனைவியார் பெய்ஸாபாய் காட்கே ஒரு பிள்ளையைத் தத்து எடுத்துக்கொண்டார். அப் பிள்ளை ஜாங்கோஜிராவ் சிந்தியா (1827-43) என்ற பட்டம் பெற்றார். ஆனால் அவருக்கு அரசியல் அதிகாரம் எதையும் கொடுக்காமல் பெய்ஸாபாய் தாமே ஆட்சியை நடத்திவந்தார். ஆகவே ஜாங்கோஜி, 1832-ல் ஆங்கிலேயரின் உதவிபெற்று அடுத்த ஆண்டில் தமது அரசநிலையை உறுதிப்படுத்திக் கொண்டார். அதன் விளைவாகப் பெய்ஸாபாய் அரசியலிலிருந்து விலகி, முடிவில் 1862-ம் ஆண்டில் இறந்தார்.

ஜோதிபுரி, ஜெயபுரி : ஜோதிபுரியிலும் உள்நாட்டுக் குழப்பம் மேலிடவே 1834-ல் ஆங்கில ரெஸிடெண்ட் தலையிட்டு அக்கேட்டினைக் களைந்தார். ஜெயபுரியிலோ மிகுதியான அளவுக்குச் சீர்கேடுகள் பெருகின. சோட்டா ராம் என்ற அமைச்சர், குழப்பநிலைக்கு முக்கிய காரண

மாயிருந்தார். பெண்டிங்கின் ஆட்சி முடிவுற்ற பிறகு, குழப்பம் அதன் உச்சநிலையை எய்தியது. சோட்டாராம், ஆங்கில ரெஸிடெண்டைத் தாக்கித் துன்புறுத்தியதுடன் அவ்வாங்கிலேயரின் துணைவரையும் கொலைசெய்தார். தலையிடாக் கொள்கையின் தீமையை ஆங்கிலேயர் இதன் பிறகு நன்குணர்ந்தனர்.

சதாரா, சிக்கிம் : ஆங்கிலேயர், 1829-ல் சதாரா மாவட்டத்திலுள்ள மகாபலீசுவரம் என்ற மலைப்பகுதியைப் பிரதாபசிங்கிடமிருந்துப் பெற்றுக் கொண்டு அவருக்கு அதற்குப் பதிலாக வேறு நிலப்பகுதியைக் கொடுத்தனர் ; 1830-ல் அவர்கள் பாட்டியாலா மகாராசாவிடமிருந்து ஒரு நிலப்பகுதியைப் பெற்றதால் அதன் விளைவாக சிம்லா மாவட்டம் அதன் முழு உருவையும் பெற்றது. 1835-ல் சிக்கிம் அரசர், வங்காளத்திலுள்ள டார்ஜிலிங்கைப் பிரிட்டிஷாருக்கு அளித்தார். மலைப்பகுதிகளை வளம்பெறச் செய்வதில் பெண்டிங்கு மிக்க கருத்துச்செலுத்தினர். உதகமண்டலத்தையும் அவர் மறக்கவில்லை. இனி, “ தலையிடாக் கொள்கையை, பெண்டிங்கு, அறவே கைவிட்டசெய்தியை அடுத்த பகுதியில் பார்ப்போம்.

பகுதி 4

மைசூர், குடகு

மைசூர் : III-ம் கிருட்டினராசரின் கீழ் (1799–1868) மைசூரில் இந்து ஆட்சி நிலைபெற்ற தென்பதை நாமறிவோம். அவ்வாட்சி உறுதிபெறப் பூர்ணையர் ஆற்றிய பணிகள் பாராட்டத்தக்கவை. அவர் 1811-ல் பதவியினின்று விலகி ஓய்வுபெற்ருர். பிறகு அரசரே ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டார். ஆனால் இராச்சியம் சிதைவுறத் தொடங்கியது. 1825-ல் சென்னை கவர்னர் சர் தாமஸ் மன்ரோ மைசூருக்குச் சென்று அதன் அரசருக்கு ஆட்சிமுறையைப்பற்றி அறிவுரை கூறினுர். ஆனால் அரசர் அதை உணர்ந்து நடக்கவில்லை. 1830-ல் நாகர் வாழ்ந்த பகுதியில் குடியானவர்கள் கலகம் செய்தனர். சென்னைப்படையின் உதவிகொண்டு அரசியலார் அக்கலகத்தை அடக்கினர். குடியானவர்களின் குறைகளை நீக்குவதாகவும் வாக்குறுதி அளித்தனர். இது காரணமாக 1831-ல் பிரிட்டிஷ் ஆணையாளர் ஒருவர் மைசூரின் ஆட்சிப்பொறுப்பு முழுவதையும் ஏற்ருர். அரசர் செலவுப்படியை மட்டும் பெற்றுவந்தார். 1831 முதல் 1881 வரை மைசூர் மக்கள் பிரிட்டிஷ் ஆட்சியின் விளைவாகப் பல நன்மைகளைப் பெற்றனர்.

கச்சார், செயிந்தியா நாடுகளை இணைத்துக் கொள்ளல் : 1832-ல் கச்சார் அரசர் கொல்லுண்டார். அவருக்கு முறைப்படி வாரிசு யாரும் இல்லை. கச்சார் மக்களும் அரசராட்சியால் துன்புற்று வந்தனரே அன்றிச் சிறப்பெய்தவில்லை. ஆகவே அவர்களுடைய உடன்பாட்டைப் பெற்று ஆங்கிலேயர், அந்நாட்டைப் பிரிட்டிஷ் இந்தியாவுடன் இணைத்துக்கொண்டனர். இந்நாடு, அளவில் மிகச்சிறியதே ; எனினும் பிற்காலத்தில் இங்கு மிகுதியாகத் தேயிலை பயிராக்கப்பெற்றது. 1832-ம் ஆண்டிலேயே செயிந்தியாவின் மன்னர் இறந்தார். அவருக்

குப் பின்வந்தவர், தமது செயல்களால் ஆங்கிலே யருக்குச் சினமூட்டினர். அவர், கம்பெனியின் ஆட்சிக் குட்பட்ட சிலரைக் காளிதேவிக்குப் பலியிடுவதற்காகக் கடத்திச்சென்றராம். பெண்டிங்கு அவ்வரசருக்கு ஓய் வுக்கால ஊதியம் கொடுத்துவிட்டுச் செயிந்தியாவைத் தம்மடிப்படுத்தினர்.

குடகு: காரன்வாலிஸ் ஆட்சிக்காலத்தில் குடகு நாடு கம்பெனியாரின் மானியப் பகுதியாயிற்று. 1820-ல் அதன் அரசராக அமர்திருந்த வீரராசர் என்பார் மிக்க கொடியவர்; பேய்த்தன்மை பொருந்தியவர்; ஆங்கி லேயருடனும் வன்மையாகப் பகைத்துக்கொண்டார்; பங்களூரையும் கைப்பற்ற முயன்றூர். அவரைச் சிர்திருத்து வதற்காக ஆங்கிலேயர் முயன்றதெல்லாம் வீணயிற்று. அவர் கவர்னர்-ஜெனரலேயும் சென்னைக் கவர்னரையும் இழிவுபடுத்திக் கடிதங்கள் எழுதினர்; கம்பெனியாருடன் போர்தொடுக்கவும் முன்னேற்பாடுகளைச் செய்துவந்தார். அவ்வமயம் (மார்ச்சு, 1834) உதகமண்டலத்தில் இருந்த பெண்டிங்கு குடகின்மீது படையெடுக்க வேண்டியது இன்றியமையாததென்பதை உணர்ந்தார். கர்னல் லின்சே என்பாரை அனுப்பி அரசரின் தலைநகரான மெர்க்காரா வைக் கைப்பற்றச் செய்தார். குடகுப்படையினரும் ஆங் கிலப் படைகளை வன்மையாக எதிர்த்தனர். ஆனல் வீர ராசரின் வீரம் விரைவில் மறைந்தது; அவர் எதிரிகளுக்கு அடிபணிந்தார். மக்கள் விருப்பப்படி குடகு நாட்டை ஆங்கிலேயர் பிரிட்டிஷ் இந்தியாவுடன் இணைத்துக் கொண்டனர். அரசர் முதலில் வேலூரிலும் பின்பு வார ணசியிலும் வாழ்ந்தார். 1852-ல் அவர் இங்கிலாந்துக்குச் செல்லப் பிரிட்டிஷார் அனுமதித்தனர். அவ்வரசருக்கு மகன் இல்லை. ஒரே ஒரு மகள் மட்டும் இருந்தாள். அவள் கிறித்தவச் சமயத்தைச் சார்ந்து 1860-ல் பிரிட்டிஷ் படைத் தலைவர் ஒருவரைத் திருமணம் செய்து கொண்டாள். குடகு அரசரின் வாழ்க்கை ஏறத்தாழ 1862-ல் இங்கிலாந்திலேயே முடிவுற்றது.

பகுதி 5

வெளித்துறைக் கொள்கை

ருஷியா, இந்தியாவின்மீது படையெடுக்கக்கூடும என்ற அச்சம் பெண்டிங்குக்கு இருந்தது. இக்கருத்தை அடிப்படையாகக்கொண்டே அவர் தமது வெளித்துறைக் கொள்கையை உருவாக்கி வந்தார். இந்தியப்படையின் ஆற்றலின்மையையும் அவர் உணர்ந்திருந்தார். ஆகவே பஞ்சாபுடனும் சிந்து நாட்டுடனும் நெருங்கிய தொடர்பு கொள்வதற்காகவும் முயன்றுவந்தார். அவ்வமயம் இரஞ்சித்சிங்கின் பெருமை ஓங்கியிருந்தது (1831). பல சீர்திருத்தங்களின் மூலம் அவர் தமது ஆட்சியை உறுதிப்படுத்திவந்தார். பஞ்சாப்பின் சிங்கம் என்ற புகழ் அவருக்கு நிலைத்திருந்தது. 1831-ல் அலெக்சாந்தர் பர்னஸ் (Burnes) என்ற ஆங்கில வீரர், இரஞ்சித்சிங்கை லாகூரில் கண்டு அவரிடம் இங்கிலாந்தின் அரசர் IV-ம் வில்லியம் அனுப்பிய கடிதங்களைக் கொடுத்தார். பஞ்சாபு வீரரும் நேசப்பான்மையுடன் அவற்றைப் பெற்றுக்கொண்டார். பெண்டிங்கு, சட்லெஜ் ஆற்றங் கரையில் உள்ள ரூபார் (அம்பாலா மாவட்டம்) என்னுமிடத்தில் இரஞ்சித்சிங்கைச் சந்தித்தார். அதன் விளைவாக இருசாராருக்கு மிடையே 1832-ல் நாவாய்ச் செலவுபற்றிய உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி சிந்து, சட்லெஜ் ஆற்றுப் பகுதிகளில் ஆங்கிலேயருக்கு வாணிக உரிமை கிடைத்தது. சிந்து நாட்டு அமீர்களுடன் 1832-ல் ஆங்கிலேயர் செய்து கொண்ட உடன்படிக்கைப்படி, இரு சாராரும் ஒருவர் மற்றவருடைய நாட்டைக் கைப்பற்றுவதில்லை என்றும், சிந்து ஆற்றுப் பகுதியில் பிரிட்டிஷாருக்கு வாணிக உரிமைகள் நிலைபெற்றிருக்க வேண்டுமென்றும் ஒத்துக் கொண்டனர். சிந்து ஆற்றைப் பிரிட்டிஷ் இந்தியாவைச் சேர்ந்த ஒரு அகழியாக அமைக்க வேண்டுமென்பதும் சீக்கியருடனும் சிந்து நாட்டுடனும் தற்காப்புக்காக உடன்

படிக்கைகள் செய்து கொண்டு ஆப்கானித்தானத்துடன் நேச உறவு அமைத்துக்கொள்ள வேண்டுமென்பதும் வில்லியம் பெண்டிங்கின் நோக்கங்களாம். இதன் விளைவாக 1838-ல் முக்கூட்டு உடன்படிக்கை ஏற்பட்டதைக் காண்கிறோம். இந்தியச் சிற்றரசர்களுடன் அவர் கொண்ட தொடர்பிலும் அவருடைய வடமேற்கு எல்லைப்புறக் கொள்கையிலும், பெண்டிங்கு, தமது தாய்நாட்டு அரசியலாரின் கருத்தை யொட்டியே நடந்து வந்தார்.

பகுதி 6

பட்டயச் சட்டம் (1833)

தோற்றம் : பார்லிமெண்டு, 1833-ல் இயற்றிய சட்டத்தின்படி பம்பாயில் ஒரு தலைமை நீதிமன்றம் ஏற்பட்டது. பிறகு 1830-ல் கம்பெனியின் பட்டயத்தைப் புதுப்பிப்பதற்காக ஒரு பொறுக்குக் குழுவைப் பார்லிமெண்டு அமைத்தது. அக்குழுவினர் 1833-ல் தமது அறிக்கையை வெளியிட்டனர். 1830 முதல் 1834 வரை இங்கிலாந்தில் பிரதம அமைச்சராக இருந்தவர் கிரே (எர்ல்) கோமான் என்பாராவர். அக்காலத்தில் விக்குக் கட்சியினர் சீர்திருத்தங்களில் மிக்க ஆர்வம் காட்டி வந்தனர். 1832-ல் பார்லிமெண்டுச் சீர்திருத்த மசோதா நிறைவேறியது. அச்சூழ்நிலையில்தான் 1833-ம் ஆண்டுப் பட்டயச் சட்டமும் உருவாயிற்று. அதில் விக்குகளின் பரந்த நோக்கத்தைக் காணலாம். சட்டமியற்றியோர் பெண்டிங்கின் ஆட்சி முறைச் சீர்திருத்தங்கள் தன்மையை எவ்வாறு அமைய வேண்டும் என்று உணர்ந்திருந்தமையும் புலனாகிறது. மெக்காலே (சட்டசபை உறுப்பினர்) ஜேம்ஸ் மில் (பி. 1773. இ. 1836) முதலியவர்களின் அடிப்படைக் கருத்துக்களும் அச்சட்டத்தில் பொதிந்துள்ளன.

சட்டத்தின் கூறுகள் : 1773-ஆம் 1784-ஆம் ஆண்டுகளின் சட்டங்களுடன் ஒத்த நிலையில் கருதத்தக்க அரசியல் சிறப்பு 1833-ம் ஆண்டுப் பட்டயச் சட்டத்துக்கு உண்டு. இப்புதிய சட்டம் கம்பெனியின் வாணிகத் தனியுரிமையை அறவே ஒழித்தது ; தடையற்ற வாணிகப் பெருக்கத்துக்கு வழி வகுத்தது ; ஆனால் கம்பெனியின் ஆட்சி அலுவல்களைக் குறைக்கவில்லை ; கம்பெனி, பிரிட்டிஷ் அரசின் சார்பாக இயங்கும் பொறுப்பாட்சி நிலையம் என்பதையும் வற்புறுத்தியது. மேலும் இச்சட்டத்தின்படி வில்லியம் கோட்டையின் கவர்னர்-

ஜெனரலே இந்தியாவின் கவர்னர்-ஜெனரலானுர்; இவரே வங்காள கவர்னருமாவர். பிரிட்டிஷ் ஆதிக்கத்தின்கீழ் இந்தியநாடுகள் ஒற்றுமைப்பட்டிருந்ததைப் பார்லிமெண்டு ஏற்றுக்கொண்டது. ஆலோசனைக் குழுவில் முதலில் மூவர் இருந்தனர் என்பதை நாமறிவோம். புதிய சட்டத்தின்படி அவர்களுடன் சட்டத்துறை உறுப்பினர் ஒருவரும் அமர்ந்து வாக்களிக்கும் உரிமையைப் பெற்றுர். ஆனுல் இவர் சட்டமியற்றுதல் சம்பந்தமான செய்திகளில் மட்டுமே தலையிடமுடியும். 1773-ம் ஆண்டு முதல், வங்காளம், சென்னை, பம்பாய் ஆகிய மூன்று மாகாணங்களின் நிர்வாக அதிகாரிகள் தனித்தனியே ஒழுங்கு விதிகளை இயற்றி வந்தனர். அவற்றுக்கு முறையே, வங்காள, சென்னை, பம்பாய் ஒழுங்குவிதிகள் எனப் பெயர்கள் அமைந்தன. அதிகாரத்தைப் பன்முகப் படுத்தும் அம்முறையை 1833-ம் ஆண்டுச் சட்டம் ஒழித்தது. அதற்குப் பதிலாக கவர்னர் - ஜெனரலும் அவரது ஆலோசனைக் குழுவினரும் சட்டமியற்றும் அதிகாரத்தைப் பெற்றனர். அவர்கள் இயற்றியவற்றுக்கு, ஒழுங்கு விதிகள் அல்லது ரெகுலேஷன்கள் என்ற பெயருக்குப் பதிலாக சட்டங்கள் என்றே பெயர் பெற்றன. மக்களின் உரிமைகள், உணர்ச்சிகள், பழக்கவழக்கங்கள் முதலியவற்றின் அடிப்படையில் இந்தியச் சட்டங்களைத் தொகுக்கவேண்டுமென்ற எண்ணமே, மேற்கூறிய மாறுதலுக்குக் காரணமாம். 1833-ம் ஆண்டுப் பட்டயச் சட்டத்தின் 87-ம் பிரிவு, சமயம், பிறப்பிடம், குலம், சாதி முதலிய காரணங்களைக்கொண்டு இந்திய மக்களுக்குக் கம்பெனியின் ஆட்சிமுறை அலுவலகங்களில் பதவிகள் பெறும் உரிமையை நீக்கக்கூடாது என்று குறிப்பிடுகிறது.* ஐரோப்பியரின் நலங்களுக்கும் இந்திய மக்களின் நலங்களுக்குமிடையே போட்டி ஏற்படுங்காலத்தில் பின்னவரின் நலங்களிலேயே கருத்தைச் செலுத்தவேண்டுவது இன்றியமையாதது என்ற கொள்கையைப் பார்லி

---

* 67, பக். 304.

மெண்டுக் குழுவினர் தமது அறிக்கையில் ஆதரித்திருப்பதும் ஈண்டுக் குறிக்கத்தக்கது.* ஆதிக்கநிலையில் உள்ள அரசியலார் தாம் வென்ற மக்களிடத்து அத்தகைய கொள்கையைப் பின்பற்ற வேண்டுமென்று கூறும் மேற்கூறிய அறிக்கைக்குறிப்பு வரலாற்றில் இணையற்ற புகழ் வாய்ந்ததாகும். ஆனால் 19-ம் நூற்றாண்டில் அரசியலார் அக்கொள்கையைச் செயல்முறையில், நிறைவேற்ற விரையவில்லை என்பதும் நோக்கத்தக்கது.

விளைவுகள் : 1833-ம் ஆண்டுச் சட்டத்தின்படி பெண்டிங்கு பிரபுவே, வில்லியம் கோட்டையின் இறுதி கவர்னர்-ஜெனரலும் இந்தியாவின் முதல் கவர்னர்-ஜெனரலுமாவர். புதிய ஆலோசனைக்குழு 1834-ல் உதகமண்டலத்தில் கூடியது. அதில் சட்ட உறுப்பினராக இருந்த பெரியார் மெக்காலே என்பவராவர் (1834-8). இவருடைய முயற்சியால் பிற்காலத்தில் ஏற்பட்ட தண்டனை விதித் தொகுப்பும் (Indian Penal Code) நடைமுறை விதித் தொகுப்பும் (Procedure Code) சிறப்பு வாய்ந்தவை. பர்க், பெந்தாம் ஆகியோரின் கொள்கை வழியே மெக்காலே இந்தியாவில் செயலாற்றினார். இவர், இந்நாட்டில் கல்வி, சட்டம், நீதிமுறை முதலியவற்றின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார்; இயன்றவரை சட்ட ஆதிக்கக் கொள்கையின் சிறப்பியல்புகளை நிலைநிறுத்த முயன்றார். சிறப்பு உரிமைகளையும் ஆட்சி முறையில் ஊழல்களையும் எதிர்த்துப் போராடினார். தலைமை நீதிமன்றத்துக்கு முறையிட்டுக் கொள்ளும் சிறப்புரிமை முதலில் ஐரோப்பியருக்கு மட்டுமே இருந்தது. இந்தியர்களுக்கு அவ்வுரிமை கிடையாது. ஐரோப்பியருக்கு மட்டும் இருந்த நிலையை 1836-ம் ஆண்டுச் சட்டம் நீக்கியது. அச்சட்டத்தின்படி, எவ்வித விதிவிலக்குமின்றி யாவரும் கம்பெனியின் சிவில் நீதிமன்றங்களுக்குக் கட்டுப்பட்டவர்களாவர். முறை வழங்குவதில் இருந்த இனவேற்றுமை ஓரளவு ஒழிந்தது. (கிரிமினல் வழக்குகளில் ஐரோப்பியருக்கு இருந்த தனிச்சலுகை

* *67, பக். 305.*

களை ஒழிக்க 1884-ல் ஏற்பட்ட முயற்சி (இல்பர்ட் மசோதா) தோல்வியுற்றது) குழந்தைகள் அணிகலன்களை அணிந்து கொள்வதால் கள்வர்கள் அவர்களைச் சில சமயங்களில் கொல்லுவதற்கும் துணிகின்றனர் என்ற காரணத்தால் குழந்தைகள் அவற்றை அணிந்துகொள்ளக்கூடாது என்று சட்டமியற்றச் சென்னை அரசியலார் கருதினர். ஆனால் அம்முயற்சியை மெக்காலே எதிர்த்தார். பெற்றோர்கள் தமது செல்வங்களைத் தம் விருப்பம்போல் பயன்படுத்திக் கொள்ளும் உரிமையைக் கட்டுப்படுத்தக்கூடாது என்பது மெக்காலேயின் கோட்பாடாகும். சுருங்கக்கூறின் அவர், பெருந்தன்மைக் கொள்கைகளை ஆதரித்தார். அவருடைய வாழ்க்கையில் அவர் இந்தியாவில் தங்கியிருந்த ஆண்டுகள் மிக மேன்மை வாய்ந்த காலப்பகுதியாகும். 1833-ம் ஆண்டுச் சட்டத்தின் விளைவாக, சென்னை பம்பாய் மகாணங்களைக் கவர்னர்-ஜெனரலுக்குக் கட்டுப்படுத்தும் நிலை முழுஉருவம் பெற்றது. அச்சட்டம், ஆக்ராவை ஒரு தலைமை மாகாணமாக்க வழி வகுத்தது. ஆனால் அது நிறைவேறவில்லை. 1835-ம் ஆண்டுத் திருத்தச் சட்டப்படி அம்மாகாணம் ஓர் உதவிக் கவர்னரின்கீழ் வந்தது. சென்னை, பம்பாய் இவற்றின் ஆலோசனைக் குழூஉக்கள் ஒவ்வொன்றிலும் இருந்த பொதுமுறை உறுப்பினர்களின் எண்ணிக்கை மூன்றிலிருந்து இரண்டுக்குக் குறைந்தது. இந்தியரின் நலத்தில் அரசியலார் கண்ணுங் கருத்துமாய் இருக்கவேண்டியது இன்றியமையாதது என்பதை விளக்கி ஜேம்ஸ் மில் எழுதிய குறிப்புக்களையும் இயக்குநர்கள் கவர்னர்-ஜெனரலுக்கு 1833-ல் அனுப்பிவைத்தனர்.

பகுதி 7

பெண்டிங்கு நிறைவேற்றிய சீர்திருத்தங்கள்

பெண்டிங்கு தம் பெயர் அழியாத வகையில் பல சிறந்த சீர்திருத்தங்களைச் செய்துள்ளார். இவர், வீண் செலவுகளை வெறுத்தார்; மக்களின் நலத்திலேயே கருத்தைச் செலுத்தினர். சூழ்ச்சி நிறைந்த அரச தந்திர முறையில் நாட்டை விரிவுறச் செய்வதைக்காட்டிலும் தம் ஆளுகைக்கு உட்பட்ட குடிகளின் நலத்தையும் ஒழுக்கத்தையும் உயர்த்துவதே மிக்க சிறப்புடையதாகும் என்பது அவர் கருத்தாகும். "இந்தியரின் இன்பம் என்ற அடிப்படையிலேயே பிரிட்டிஷாரின் பெருமை வளரவேண்டுமென்ற சிறந்த குறிக்கோள் 1804-ம் ஆண்டிலேயே பெண்டிங்கிடம் விளங்கியது. ஆனல் 1807-ம் ஆண்டிலிருந்து 20 ஆண்டு காலம் அவர் இந்தியாவுடன் தொடர்பற்றிருக்க நேர்ந்தது. அக்காலப் பகுதியில், மன்ரோ, எல்பின்ஸ்டன், மால்கம், மெட்காஃப் ஆகியோர் இந்திய ஆட்சிமுறையில் புதிய கொள்கைகளைப் பரப்பிவந்தனர். பெண்டிங்கு கவர்னர்-ஜெனரலாக இருந்தபொழுது மெட்காஃபின் ஒத்துழைப்பு மிகுதியாக அவருக்குக் கிடைத்தது. ஆனல் அவ்வமயம், மன்ரோ இறந்துவிட்டார்; எல்பின்ஸ்டனும் மால்கமும் பதவியில் இல்லை. அறிவாற்றல் மிக்க அரசியல் வல்லுநர்களாகிய இவர்கள் யாவரும், காரன் வாலிஸும் அவரைப் பின்பற்றியோரும் இழைத்த தவறுகளை நன்கு உணர்ந்தனர்; உள்நாட்டு நிலையங்களின் சிறப்பை உணர்ந்து அவற்றை ஆதரித்தனர்; வாரன் ஹேஸ்டிங்ஸின் சிறந்த கொள்கையைப் பின்பற்றி மக்களின் முன்னேற்றத்தில் கருத்தைச் செலுத்தினர். பெண்டிங்கின் காலத்தில் அரசியலார் இந்தியமுறைகளுக்கு ஓரளவுச் சிறப்பு அளித்தபோதிலும், இந்தியரின் பழைய வழிகளைக் கண்மூடித்தனமாக ஆதரிக்கவில்லை என்பதும் குறிக்கத்தக்கது. இந்திய நாகரிகத்தில் உள்ள

மிகச்சிறந்த பண்புகளைப் போற்ற வேண்டுமென்பதே அவர்தம் நோக்கமாகும். அதேசமயத்தில் மேனாட்டு நாகரிகத்தின் சிறந்த ,பண்புகளையும் இங்கே புகுத்த முயன்றனர். ஆங்கிலமொழியின் சிறப்பைப் பற்றி மெக்காலே விரிவாகப் பறைசாற்றினார். ஆயினும் முன்னேற்றத்தில் நாட்டம் கொண்டு உழைத்த தலைவர்கள்யாவரும் அன்பு, அடக்கம், அறிவாற்றல் முதலிய பண்புகளுடன் ஒழுகிவந்தனரென்பதை நாம் மறப்பதற்கில்லை. அதே காலத்தில் இங்கிலாந்திலும் பெருந்தன்மை கொள்கைகளை அரசியலார் ஆதரித்து வந்தனர் என்பதும் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது. இனி, பெண்டிங்கின் சீர்திருத்தங்களை, பொருளமைப்பு, நிலவரித்திட்டம், முறைவழங்கல், சமூகச் சீரமைப்பு, கல்வி, முதலிய தலைப்புக்களின்கீழ் விளக்கிக் கூறுவோம்.

பொருளமைப்பு: முதல் பர்மியப் போரின் விளைவாக அரசியலாரின் செலவு மிகுதியாகப் பெருகியிருந்ததால் பெண்டிங்கு, செலவுகளை மட்டுப்படுத்துவதற்கான வழிகளைப் பின்பற்றினார். இயக்குநர்களின் ஆணைப்படி சிவில், இராணுவ அலுவலர்களின் ஊதியம் குறைக்கப்பட்டது. படைத்தலைவர் உட்பட்ட பலர், தமது வருமானம் குறைந்து விட்டதால் கிளர்ச்சி செய்ய முற்பட்டனர்; ஆனால் கவர்னர்-ஜெனரல் தமது பொறுமையால் அம் முயற்சி ஓங்காது தடுத்துவிட்டார். சினங்கொண்ட பலர் செய்தித்தாள்கள் மூலம் பெண்டிங்கைத் தாக்கிப் பேசினர். அந்நிலையிலும் கவர்னர்-ஜெனரல் அடக்குமுறையைக் கையாளாமல் பொறுமையைக் கடைப்பிடித்தார்; கருத்து வெளியிடும் உரிமையை ஆதரித்துப் பேசினார். ஆனால் அலுவலர்களின் ஊதியம் சம்பந்தமாக இயக்குநர்கள் தமது முடிவான கருத்தை 1830-ல் அறிவித்தபின் அம் முடிவைப்பற்றி இந்தியப்பத்திரிகையாளர்கள் விவாதிக்கக் கூடாது என்று பெண்டிங்கு ஆணையிட்டார். கருத்து வெளியிடும் உரிமையை அவர் கட்டுப்படுத்தியது அந்த ஒரே சமயத்தில்தான் என்பது குறிப்பிடத்தக்கது. அந்

நிலையிலும் இயக்குநர்களின் பொருட்டே அவ்வாறு அவர் செயலாற்ற வேண்டியிருந்தது என்பதை நாம் நினைவிற் கொள்ளவேண்டும். படைத்துறை ஆலுவரின் படியைக் குறைப்பதற்கு இயக்குநர்கள் இயற்றிய ஆணை சிறப்பு புடையதன்று. அதனுல் அரசியலாருக்குக் கிடைத்த தொகை 2 லட்ச ரூபாய்க்கும் குறைவானதே ஆம். படை வீரரின் பணிவன்பை அரசியலார் இழந்தனர். பெண் டிங்கு 1828-ல் சிவில்துறையிலும் இராணுவத்துறையிலும் செலவுகளைக் குறைப்பதற்காக இரண்டு குழூஉக்களை அமைத்தார்; மூன்று தலைமை மாகாணங்களிலும் இருந்த இராணுவ நிலையங்களின் எண்ணிக்கையைக் குறைத்தார்; முறைவழங்கலில் சிக்கனத்தைக் கையாளும் பொருட்டு மாகாண முறையீட்டு நீதிமன்றங்களை மூடினுர். அதனுல் நீதிபரிபாலனமும் செம்மையுற்றது. சிவில் பணித்துறையில் சிலர் அளவுகடந்த ஊதியம் பெற்று வந்தனர். அம்முறையைப் பெண்டிங்கு ஒழித்தார். தேவைக்கு மிகுதியாக இருந்த சில பதவிகளையும் போக் கினுர். அச்சீர்திருத்தத்துக்குப் பிறகு இந்தியச் சிவில் துறைப் பணியாளர், உலகில் அவர்களை ஒத்தவர்கள் பெற்றுவந்ததைவிட மிகுதியான அளவுக்கே ஊதியம் பெற்றுவந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆலோ சனைக்குழுவினர் தொடங்கி எழுத்தாளர் (குமாஸ்தா) வரையில் உள்ள 416 சிவில்துறைப் பணியாளரும் ஆண்டு ஒன்றுக்கு 90 லட்ச ரூபாய் மொத்த வருமானம் பெற்றுவந்தனராம். இக்கணக்குப்படி ஒவ்வொருவரின் சராசரி ஆண்டு ஊதியம் 20,000 ரூபாய்க்கு மேலாகும்.* கம்பெனியின் ஊழியர்கள் யாவரும் தமது கடமைகளைச் செவ்வனே ஆற்றுவதற்கான விதிகளைப் பெண்டிங்குப் பிறப்பித்தார். தலைமை அதிகாரிகள் தமக்குக் கீழ்ப் பட்டவர்களின் நடத்தையைப் பற்றி இரகசியக்குறிப்பு களைத் தயாரித்து அனுப்பவேண்டுமென்றும் கவர்னர்-ஜெனரல் ஆணையிட்டார். இதனுல் அலுவலரிடம் அமைதி

---

* 64, III, பக், 2.

யின்மை தோன்றியது. பெண்டிங்கு அதைப் பொருட் படுத்தவில்லை. அவர் இந்தியர்களைப் பணியில் அமர்த்தி யதன் மூலமும் சிக்கனத்தைக் கையாண்டார். 1833-ல் அவர் வடமேற்கு மாகாணங்களில் (அயோத்தி நீங்கலாக உள்ள உத்திரப்பிரதேசம்) ஆரம்பித்த நிலவரித் திட்டங் களின் விளைவாகக் காலப்போக்கில் வருமானம் பெரு கியது. சிலர் தமது நிலங்களுக்கு வரி செலுத்தாமல் அரசியலாரை ஏமாற்றிவந்தனர். அச்செய்தியைப் பற்றிப் பெண்டிங்கு நன்கு விசாரணை நடத்தி வரிகளைப் பெற்றார். இவ்வாறு கண்டிப்பாக வரி வசூல் செய்துவந்தால் அரசாங் கத்துக்கு ஆண்டுக்கு ஏறத்தாழ 300,000 பவுன்கள் அதிக வருமானம் கிடைத்தது. பெண்டிங்கு அபினைக் கம்பெனி யாரின் தனியுரிமை வாணிகப் பொருளாக்கியதாலும் வருமானம் பெருகியது. அலுவலரின் எண்ணிக்கையைக் குறைத்ததால் பெண்டிங்கைப் பலர் எதிர்த்தனர். ஆனால் அவர் அதைப் பொருட்படுத்தாமல் விடாமுயற்சியுடன் உழைத்தார். அவர் ஆட்சித் தொடக்கத்தில் கருவூலத்தில் 1 கோடி ரூபாய்வரை பற்றாக்குறை இருந்தது. 1835-ம் ஆண்டில் 1½ கோடி ரூபாய் மிகுதிப்பாடு (Surplus) காணப் பட்டது.

நிலவரித் திட்டம்: வடமேற்கு மாகாணங்களில் புதிய நிலவரித் திட்டத்துக்கான ஏற்பாட்டை, பெண்டிங்கு 1833-ல் செய்யத் தொடங்கினார். அத்திட்டப்படி அரசிய லார் குடியானவர்களுடன் 30 ஆண்டுக் காலத்துக்கு நீடிக்கும் ஒரு உடன்பாட்டைச் செய்துகொண்டனர். சில இடங்களில், உள்நாட்டுப் பழக்கத்தை ஒட்டி நில உரிமை யாளரிடமும், ஊர்ப்பொதுச் சமுதாயத்தினிடமும் முப்பது ஆண்டுக்கால ஒப்பந்தங்களைச் செய்து கொண்டனர். அவ்வேற்பாடுகளை, ராபர்ட் பர்டு (Bird) என்ற நிதி நிபுணர் 1833-க்கும் 1843-க்கு மிடைப்பட்ட காலத்தில் ஒழுங்காக அமைத்து வந்தார். அவ்வேற்பாடு "கம் பெனியாரின் பொருள்துறைச் சாதனைகளில் மிகவும் சிறப்புவாய்ந்த ஒன்றும்".* பர்டு அலகாபாத்தில்

* 64, III, பக். 48.

1832-ல் முதன் முதலாக ஏற்பட்ட வருவாய்த்துறைக் கழகத்தின் (Board of Revenue) உறுப்பினரானார். அவருடைய ஏற்பாடுகள் அப்பகுதியின் மக்களுக்குப் பல நன்மைகளை விளைவித்தன. அவர் தொடங்கிய அருஞ்செயலை துணைக் கவர்னர் ஜேம்ஸ் தாம்ஸன் (1843-53) முற்றுபெறச் செய்தார்.

முறைவழங்கல்: பெண்டிங்கின் நீதிபரிபாலனச் சீர்திருத்தங்களும் பாராட்டத்தக்கவை. அவர் மக்களுக்கு மிக்க பயனளிக்காமலிருந்த சில நீதிமன்றங்களை ஒழித்து விட்டார். மாகாண நீதிமன்றங்கள் மறைந்தன. நீதி வழங்கும் முறை முழுவதையுமே அவர் பரிசீலனைசெய்து சில மாறுதல்களைப் புகுத்தினார். அலகாபாத்தில் ஒரு சதர் திவானியும் (சிவில் வழக்கு மன்றம்) நிஸாமத் அதலத்தும் (கிரிமனல் வழக்கு மன்றம்) ஏற்பட்டன. செஷன்சு நீதி மன்றத்தின் வேலையை மாவட்ட நீதிபதியே கவனிக்கத் தொடங்கினார். துணை நீதிபதிகளையும் பெண்டிங்கு அமர்த்தினார். வழக்குகளை ஆராய்ந்து அறம் வழங்கும் துறை வேருகவும் நிர்வாகத்துறை வேருகவும் அமைய வேண்டும் என்ற அதிகாரப் பிரிவினைக் கொள்கையை அவர் பின்பற்றவில்லை. கலெக்டர் மாவட்டக் குற்றத் துறை நீதிபதியாகவும் பணியாற்றினார். இந்திய நீதிபதிகளின் எண்ணிக்கையும் அவர்களுடைய ஊதியமும் அதிகார வரம்பும் பெருகின. நீதி மன்றங்கள் யாவற்றிலும் பாரசீக மொழிக்குப் பதிலாகத் தாய்மொழி பயன்படுத்தப் படுவதை அரசியலார் அனுமதித்தனர். பெண்டிங்கு 1831-ம் ஆண்டுமுதல் முறைவழங்கும் துறையில் இந்தியர்களை அமர்த்தும் கொள்கையைப் போற்றினார். ஆயினும் மிக உயர்ந்த இந்திய நீதிபதிக்கு மாத ஊதியம் 500 ரூபாய்தான் கிடைத்தது. பிறகு அத்தொகை 750க்கு உயர்ந்தது. சிறிது சிறிதாக மற்ற துறைக்களங்களிலும் இந்தியரின் ஆற்றல் சிறப்புறுவதற்கு வாய்ப்புக்கள் தோன்றின. இவ்வாறு பொறுப்புவாய்ந்த பணிகளில் இந்தியரை அடியோடு புறக்கணிக்கும் காரன்வாலிஸின்

கொள்கை மாறிவந்தது. உள்நாட்டவருக்குத் தக்க வாய்ப்புக்கள் அளித்து அவர்களைச் சிறப்படையச் செய்யவேண்டுமென்ற ஆர்வம் பெண்டிங்கிடம் இருந்தது.

சமூகச் சீர்திருத்தங்கள் : நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளைப் பெண்டிங்கு சிறிது சிறிதாகச் செய்துவந்தார். நாட்டின் பல பாகங்களில் மக்களைத் துன்புறுத்திவந்த கொள்ளைக் கூட்டத்தினர் பலர் இருந்தனர். அவர்களில் தக்கர்கள் என்பார் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவராவர். அவர்கள் வழிவழியாக வழிப்பறிக்காகக் கொலைசெய்வதை ஒரு தனிப்பட்ட கலையாகப் பயின்று வந்தனர். ஒவ்வொரு பிரயாணியையும் கொலை செய்யும் போதும் அவர்கள் தமது குலக்கடவுளுக்கு ஒரு விருப்பமான பலிகொடுத்ததாக எண்ணினர். தக்கர்கள் பிறர் அறியாதபடி தமக்குள் ஒரு சங்கத்தை அமைத்திருந்தனர். அவர்களில் இந்து சமயத்தவரும் முகம்மதியரும் இருந்தனர். ஆனால் அவர்கள் யாவரும் துர்க்கை அல்லது காளியையே வழிபட்டு வந்தனர். பல கொண்டாட்டங்களையும் சடங்கு முறைகளையும் அவர்கள் கடவுளின் பெயரால் நடத்துவது வழக்கம். இதன் பயனாகத் தமது கொடிய தொழிலை நடத்த அவர்கள் மேலும் மேலும் இளைஞர்களைச் சேர்த்துக்கொண்டனர். அக் கூட்டத்தினர் யாவரும் தமது இரகசியங்களைப் பிறருக்கு வெளியிடுவதில்லை என்று சூளுரைகூறி அதனைப் பின் பற்றிவந்தனர். பிறர் அறியாவண்ணம் அவர்கள் தமக்கே உரிய குழூஉக்குறிகள் மூலம் ஒருவருக்கொருவர் கருத்தை வெளியிட்டு வந்தனர். அவர்களிற் பெரும்பான்மையினர் உழவர் என்று தம்மைக் கூறிக்கொண்டு சில தலைவர்களின் மறைமுகமான உதவியையும் பெற்றனர். ஐம்பது அல்லது நூறுபேரடங்கிய சிறுசிறு கூட்டங்களாக அவர்கள் செல்வது வழக்கம். கூட்டத்தினர் தம்மை வணிகர் என்றோ யாத்திரிகர் என்றோ கூறிக்கொண்டு பிறரை ஏமாற்றினர். போர்க்கருவிகள் இல்லாத காரணத்தால் அவர்களைக் குற்ற மற்றவர்கள் என்று பலர் எண்ணிவிட்டனர். தக்கர்

கள் வழிப்போக்கர்களைத் தந்திரமாக மயக்கி அவர்களுடைய நம்பிக்கைக்கு உரியவர்களாகிப் பின் தக்க சமயம் பார்த்து அவர்களைக் கொன்று அவர்தம் உடைமைகளைக் கைப்பற்றிக்கொண்டனர். தாம் செய்யும் தொழில் முறையானது என்றும் தமது குலக்கடவுளுக்கு மகிழ்ச்சி ஊட்டுவது என்றும் அவர்கள் நம்பினர். நற்குறிகளைக் கண்டுதான் அவர்கள் தமது தொழிலைச் செய்யப் புறப்படுவது வழக்கம். தம்மிடம் சிக்சியவர்களுடைய கழுத்தை இறுக்கி அவர்களைத் திக்குமுக்காடச்செய்து கொன்று தக்கர்கள் தம் கொடிய தொழிலை நடத்திவந்தனர். அதற்காக அவர்கள் ஒரு சிறு துணியை அல்லது தாம் அணியும் தலைப்பாகைத் துணியைப் பயன்படுத்தினர். அச்செயலைப் புரிவதற்கெனவே சிலர் தனித் தேர்ச்சி பெற்றிருந்தனர். கொல்லுண்டோரின் உடல்களை அக்கொலைகாரர்கள் குழிதோண்டிப் புதைத்துவிடுவர். தக்கர்கள் இதற்கேற்ற தொழில்களில் தேர்ந்திருந்தனர்போலும். வழிப்போக்கர்களைச் சிக்கவைத்தல் முதல் குழிதோண்டிப் புதைப்பது வரையுள்ள பல தந்திர முறைகளைக் கையாளுவதற்கெனத் தனித்தனியாகத் தேர்ச்சி பெற்ருேர் அவர்களுடைய சங்கத்தில் இருந்தனர். இத்தகைய ஆறலைக்கும் கள்வரால் மக்கள் துன்புற்றனர். தக்கர்களைப் பற்றிய ஒரு நூலை மெடோஸ் டெய்லர் எழுதினர். அது 1839-ல் வெளியாயிற்று. அது ஓர் கற்பனை நூலாக இருப்பினும் வரலாற்று உண்மைகள் அதில் பொதிந்துள்ளன. பதின்மூன்ரும் நூற்ருண்டின் இறுதியிலேயே தக்கர்கள் இருந்ததாக நமக்குக் குறிப்பு கிடைத்துள்ளது. முகலாயப் பேரரசர்கள் காலத்திலும் சில இடங்களில் தக்கர்கள் தமது தொழிலை நடத்தியதாக, பிரெஞ்சு,ஆங்கிலப் பிரயாணிகள் குறிப்பிடுகின்றனர். ஆனல் பதினெட்டாம் நூற்ருண்டில் தான் அக்கூட்டத்தினரின் எண்ணிக்கை மிகுதியாயிற்று. அரசியல் குழப்பநிலையே அதற்குக் காரணமாகும். மைசூர்ப் போர்களுக்குப் பிறகு அத்தீயோர் பெரும்பாலும் மத்திய இந்தியாவிலும் இராசபுதனத்திலும் தமது தொழிலை மேற்கொண்டிருந்தனர். பிரிட்டிஷ் இந்திய

அரசியலார் அவர்களை அடக்க முறையான நடவடிக்கை எதையும் 1829-ம் ஆண்டுக்கு முன்னர் எடுக்கவில்லை. அவ்வாண்டில்தான் குற்றம் ஒப்பியவர் (அப்புரூவர்) ஒருவர் மூலம் தக்கர்களைப் பற்றிய இரகசியங்கள் வெளிப் பட்டன. உடனே பெண்டிங்கு அவர்களை அடக்குவதற்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டார். அதற்கெனத் தனி அலுவலரை அமர்த்தி அவர்களுக்கு மிகுதியான அதிகாரங்களை வழங்கினர். 1829-க்கும் 1835-க்கு மிடைப் பட்ட காலத்தில் ஏறத்தாழ 2000 தக்கர்களைப் கைப்பற்றி னர். அவர்களிற் பலரைத் தூக்கிலிட்டனர் ; பலரை நாடு கடத்தினர். அக்கொடியவர்களை ஒழிக்கும் முயற்சியில் அறிஞர் சர் வில்லியம் ஸ்லீமென் என்பாரின் ஈடுபாடு போற்றத்தக்கது. " தக்கீஸ்லீமென் " என்ற பட்டப் பெயரும் அவருக்குக் கிடைத்தது. குற்றஞ் சாட்டப்பட்ட தக்கர்களின் குழந்தைகளுக்கும் குற்றம் ஒப்பியவருக்கும், நற்பயிற்சி அளிக்கும் பொருட்டு ஜபல்பூரில் ஒரு தொழிற் கல்விக்கூடம் தோன்றியது. இந்தியாவிலிருந்த கொடிய வரில் கொடியவர்களாயிருந்த தக்கர் கூட்டத்தவரை அழித் தமை, பெண்டிங்கின் மிகச் சிறந்த அரிய சாதனைகளில் ஒன்றும்.*

சதி : சதி என்ற சொல் கற்புடைய பெண்மணியைக் குறிக்கும். கணவன் இறந்தபின் மனைவியும் உடன்கட்டை ஏறித் தன்னை மாய்த்துக் கொள்ளும் பழக்கத்தையும் இச் சொல் குறிப்பிடுகிறது. மறுமையைப் பற்றிப் பண்டைக் காலத்தவர் கொண்டிருந்த சில மிலேச்சத்தனமான கொள்கைகளின் விளைவாக உடன்கட்டை ஏறும் வழக்கம் இந்தியாவில் தோன்றியிருந்தது. இறந்தவர்களுடைய ஆன்மா மறு உலகில் பிரயாணம் செய்யும் பொழுது தடை படாமலிருப்பதற்காக அவர்கள் உடல்களுடன் படகுக்கார ருக்குரிய கூலியையும் சேர்த்துப் புதைப்பதைச் சில நாட் டினர் வழக்கமாகக் கொண்டிருந்தமையும் ஈண்டு நினைவு கூரத் தக்கதாம். இந்தியாவில் ' சதி ' என்ற உடன்

* 10 பக். 75

கல்வி : மெக்காலே இந்தியாவுக்கு வந்துசேர்ந்த பொழுது இந்நாட்டின் கல்வி முறையைப்பற்றி அறிஞர் களிடையே கருத்து வேறுபாடு நிலவிவந்தது. பொதுக் கல்விக் குழு அல்லது கல்விக் கழகத்தில் இருந்த பத்து உறுப்பினர்களிடையே, கல்விக்குரிய மானியங்களை எப்படி பயன்படுத்திக் கொள்வது என்பது பற்றியும் உயர்தரக் கல்வி எம்மொழியில் பயிற்றுவிக்கப்படவேண்டு மென்பது பற்றியுமே இக்கருத்து வேற்றுமை சிறப்பாக எழுந்தது. சமஸ்கிருதமும் அராபிய மொழியும் பயிலும் மாணவர்களுக்கும் அம்மொழிகளில் நூல்கள் வெளியிடு பவர்களுக்கும் பொருளுதவி அளிக்கவேண்டும் என்ற கருத்தை வில்ஸன் முதலிய அறிஞர்கள் ஆதரித்தனர். ஆனால் சார்லஸ் ட்ரவிலியான் முதலிய சில அறிஞர்கள் மேனாட்டுக் கல்வி முறையையே ஆதரித்தனர். ஆங்கில மொழி வழியாகவே கல்வி கற்பிக்கவேண்டுமென்பது அவர்கள் வாதம். 30 அல்லது 35 வயதுள்ள மாணவர் களுக்குப் பொருள் உதவி அளிக்கும் பழக்கத்தை அவர் கள் இகழ்ந்து கூறினர். சமஸ்கிருதத்திலும் அராபி யிலும் நூல்கள் வெளிவருவதையும் அவர்கள் விரும்ப வில்லை. மெக்காலே கல்விக் கழகத்தின் தலைவராக அமர்ந்தபின் கீழ்நாட்டுக் கல்வியைக் கண்டித்தும் ஆங்கிலக் கல்வியைச் சிறப்பித்தும் 1835-ல் குறிப்புக்கள் எழுதியுள்ளார். ஆங்கிலக் கல்வியின் சிறப்பை நாம் மறுப்பதற்கில்லை. ஆனால் கீழ்நாட்டுக் கல்வியின் உயர் வை அவர் தக்கமுறையில் உணர்ந்தார் என்பதற்கில்லை. “சமஸ்கிருதம் அல்லது அரேபிய மொழியை நான் கற்ற தில்லை. ஆனால் அம்மொழிகளில் உள்ள சிறந்த நூல் களின் மொழிபெயர்ப்புக்களைப் படித்திருக்கிறேன். மேலும் கீழ்நாட்டு மொழிகளில் சிறந்த தேர்ச்சி பெற்றவர் களுடன் சொல்லாடி இருக்கிறேன். அவர்களில் எவரும், இந்திய அராபிய நாடுகளின் உள்நாட்டு இலக்கி யங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்தாலும் சிறந்ததோர் ஐரோப்பிய நூல்நிலையத்திலுள்ள ஒரு சுவர்நிலைத் தட்டுப் (Shelf) புத்தகங்களுக்கு இணையாகும் என்று கூற

முடியாது[1] என்று அவர் கூறினர். இந்திய இலக்கியம், மெய்விளக்கத்துறை, மருத்துவம், வானசாத்திரம் ஆகிய எதிலும் எவ்வித சிறப்பையும் மெக்காலே காணவில்லை. வாரன் ஹேஸ்டிங்ஸ், ஜோன்ஸ், கோல்புரூக், வில்சன் முதலிய அறிஞர்கள் மெக்காலேயின் அறியாமையைக் கண்டு வியந்திருப்பர் என்பதில் ஐயமில்லை. 1835-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் அரசியலார் வெளியிட்ட தீர்மானத்தின்படி ஆங்கிலம் அரசாங்க மொழியாகியது. இந்தியக் கல்லூரிகளிலும் பாடசாலைகளிலும் கல்வி கற்பிக்க ஆங்கிலமே சிறப்பாகப் பயன்பட வேண்டுமென்று மெக்காலே, பெண்டிங்கு, மெட்காஃப் முதலியோர் முடிவு செய்தனர். இதனுல் பல நன்மைகள் விளைந்தன என்பதில் ஐயமில்லை. பணித்துறைகளில் மேலும் மேலும் இந்தியர்கள் புகுவதற்கும் வாய்ப்பு ஏற்பட்டது. ஆங்கிலம் உயர்நிலை எய்துவதற்கு வங்காளியர் ஆற்றிய செயல்களும் ஓரளவு காரணமாயின என்பதும் நோக்கத்தக்கது. முன்னேற்றக் கருத்துள்ள சில வங்காளியத்தலைவர்கள் ஆங்கிலக் கல்வியில் தாம் கொண்ட ஆர்வம் காரணமாக 1817-ம் ஆண்டிலேயே கல்கத்தாவில் இந்துக் கல்லூரியை நிறுவியிருந்தனர். அங்கே ஒரு சமஸ்கிருதத் கல்லூரியை நிறுவ வில்சனும் பிறரும் முயன்றபொழுது இராம் மோகன்ராய் அம்முயற்சியை எதிர்த்தார். வடமொழிக் கல்வியைவிட மேனாட்டுக் கல்வியே சிறப்புடையதாகும் என்ற தம் கருத்தை மோகன்ராய் விளக்கிக் கூறினர். வடமொழிக் கல்வியால் இந்தியர் முன்னேற்றம் தடைப்படும் என்பது அவரது முடிவான கருத்தாகும்.[2] 1823-ல் இராம் மோகன்ராய் வெளியிட்ட கருத்தை அவர் இறந்த பிறகு 1835-ல் அரசியலாரால் ஏற்றுக்கொண்டதைக் காண்கிறோம். இந்தியாவுக்குவந்த பல பாதிரிமார்களும் கல்வி வளர்ச்சிக்கு உதவினர். 1829-ல் இந்தியாவுக்கு வந்துசேர்ந்த பேரறிஞர் அலெக்ஸாந்தர் டஃப் கல்வி வளச்சியில் கொண்டிருந்த ஈடுபாடு பாராட்டத்தக்கது.

---

1. *10*, பக். *153*.
2. *14*, VI பக். *105*.

பெண்டிங்கு 1835-ல் கல்கத்தாவில் ஒரு மருத்துவக் கல்லூரியை நிறுவினர். அங்கிருந்து இரண்டு மாணவர்கள் மேற்படிப்புக்காக 1844-ல் லண்டன் மாநகரம் சென்றனர். துவாரகநாத் தாகூர் அம்மாணவர்களுக்குப் பொருளுதவி செய்தார்.

முன்னேற்றத்துக்கான பிறசெயல்கள் : பெண்டிங்கு கருத்து வெளியீட்டு உரிமையை ஆதரித்தார். பத்திரிகாசிரியர்கள் எச்செய்தியைப்பற்றியும் நேர்மையான வகையில் விவாதிக்கலாம் என்பது அவர் கருத்து. பெரும்பான்மையும் அவர் செய்தித்தாள் ஆசிரியர்களுக்கு உரிமையை வழங்கி இருந்தார். 1823-ல் ஜான் ஆதம் பிறப்பித்திருந்த செய்தித்தாள் சட்டத்தைப் பெண்டிங்கு இங்கிலாந்திற்குச் சென்றபிறகு சர் சார்லஸ் மெட்காஃப் நீக்கிவிட்டார். இங்கிலாந்திற்கும் இந்தியாவிற்குமிடையே நீராவிக்கப்பல் போக்குவரவு அமையவேண்டுமென்பது பெண்டிங்கின் பேரார்வமாகும். லண்டனிலிருந்து இரண்டு மாத காலத்துக்குள் பம்பாய்க்கு வந்து சேருவதற்கான ஏற்பாட்டைச் செய்ய அவர் விரும்பினர். இவர் 1829-ல் செங்கடல் வழியாகச் சூயஸ் பகுதிக்கு ஒரு நீராவிக்கப்பலை அனுப்பினர். அக்கடற்செலவு ஒரு மாத காலத்துக்குள் முடிந்தது. சூயஸுக்கும் லண்டனுக்கும் தொடர்பு ஏற்படுவதற்கும் அச்சாதனை வழிவகுத்தது. இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே விரைவான செய்திப் போக்கு அமையுமானல் இந்தியர்கள் இங்கிலாந்தின் அதிகாரிகளிடமே தமது குறைகளை முறையிட்டுக் கொள்வதற்குச் சிறந்த வாய்ப்புக்களைப் பெறுவர் என்றுப் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியச் செய்திகளில் மிகுதியான அக்கரை எடுத்துக்கொள்ளும் என்றும் பெண்டிங்கு 1837ல் காமன்ஸ் சபையில் கூறியதாக அறிகிரேம். இவருடைய தீவிரமான உழைப்பின் விளைவாக 1842-ல் இந்துஸ்தான் நீராவிக்கப்பல் சென்னைக்கு வந்து சேர்ந்தது. 1869-ல் சூயஸ் கால்வாய் ஏற்படுவதற்கு முன்னர், செங்கடற் பகுதியிலிருந்து ஆயிரக்கணக்கான ஒட்டகங்களின்மீது

அலெக்ஸாந்திரியாவுக்கு மக்கள் பிரயாணம் செய்துவந்தனர். இங்கிலாந்திலிருந்து கடிதங்கள் பம்பாய்க்கு வர ஏறத்தாழ ஒன்றரை மாதங்கள் ஆகும். கடிதம் ஒன்றுக்கு அஞ்சற் கட்டணம் ஏறக்குறைய ஒன்றரை ரூபாயாக இருந்தது. காரன்வாலிஸையும் ஹேஸ்டிங்ஸையும் போலவே பெண்டிங்கும் படைத்தலைவராக இருந்தார் (1833 முதல்). சிப்பாய்களுக்குக் கசையடி கொடுக்கும் பழக்கத்தை 1833ல் இவர் நிறுத்தினர். ஆனல் இந்தியாவிலிருந்த அரசப் படையின் ஐரோப்பியப் போர்வீரர்களுக்கு மட்டும் கசையடி கொடுப்பது ஒரு தண்டனையாகத் தொடர்ந்து வந்தது.

பண்பாட்டுப் பெருக்கம் : நாகரிகமற்ற சில மக்கட் கூட்டத்தினரைப் பண்பாடடையச் செய்த பெருமை சில ஆங்கிலத் தலைவர்களைச் சாரும். பீஹாரில் இராசமஹால் குன்றுகளிலிருந்த நாகரிகமற்ற மக்கட் கூட்டத்தினரை வங்காளச் சிவில்துறை அலுவலராக இருந்த அகஸ்டஸ் க்ளீவ்லண்ட் அன்புடன் ஆதரித்து நாகரிகப் பாதையை நோக்கி முன்னேறச் செய்தார். அப்பெரியார் 1784-ம் ஆண்டில் தமது முப்பதாம் வயதிலேயே இறந்துவிட்டார். அதுபோலவே ஜேம்ஸ் ஔட்ராம் என்பார் 1825-க்கும் 1830-க்கும் இடைபட்ட காலத்தில் தக்க முறைகளைக் கையாண்டு காண்டேஷ் நாட்டு பிலர்களை (Bhils) அமைதியாக முன்னேறச் செய்தார். அவர்களை முன்னேறச் செய்வதில் விலங்குத்தனமான வலுக்கட்டாய முறைகள் பயன்படா என்பதை இவர் நன்கு உணர்ந்திருந்தார். படைவீரர் ஹால் என்பாரும் அவருக்கு பின்வந்த டிக்ஸின் என்பாரும் 1835-ல் ஆஜ்மீர், மீர்வாரா பகுதியில் இருந்த மெர் கூட்டத்தினரை (Mers)ப் பண்பாடடையச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். அம்மக்களுக்கு நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. அம்மக்களிடம் நிலவிய கொடிய பழக்கங்கள் (பெண் குழந்தைகளைக் கொன்றுவிடும் பழக்கம், பெண்டிரை விற்றல் முதலியன) சிறிது சிறிதாக மறையலாயின.

சில மூட நம்பிக்கைகளின் விளேவாக இந்துக் குழந்தைகளேக் கடலில் எறிந்துவிடும் பழக்கம் வங்காளத்தில் நிலவி வந்தது. சிலர் தமது குடும்பத்தின் நன்மையைக் கருதி அப்பழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். அரசியலார் 1802-ல் அப்பழக்கத்தைச் சட்டவிரோத மாக்கினர். பெண் குழந்தைகளேக் கொல்லும் பழக்கம். மிகுதியாக இராசபுதனம், பஞ்சாபு, மாளவம், கட்சு, கத்தியவார் முதலிய நாடுகளில் நிலவியது. நாகரீகம் வாய்ந்த மக்கள் கூட அப்பழக்கத்தைப் பின்பற்றி வந்தனர். பெண் குழந்தைகளில் மூன்றில் இரண்டு பங்கினர். உணவு கொடுக்கப்படாமலோ நஞ்சூட்டப்பெற்ருே கொல்லப்பட்டுவந்தனர். 1789 முதல் வாரணுசியில் ரெஸிடெண்டாக இருந்த ஜோனதன் டங்கன் என்பார் அக்கொடிய செயலேத்தடுக்க முயற்சித்தார். ஒரே மரபுக்குழு அல்லது கோத்திரத்தைச் சேர்ந்தவர்களிடை மணவினே நிகழாவண்ணம் தடுப்பதற்காக இராசபுத்திரர்கள் அக்கொடிய பழக்கத்தை மேற்கொண்டிருந்தனர் என்று அறிஞர் டாட் (Tod) குறிப்பிடுகிருர். மேலும் பெண்கள் பூப்பெய்திய பிறகும் மணம் புரிந்துகொள்ளாமல் இருப்பது மிகவும் இழிவாகக் கருதப்பட்டதாம். திருமணங்கள் நடத்த மிகுதியான செல்வமும் தேவையாயிருந்தது. அந்நிலேயில் குடும்பத்தின் பெருமையைக் காப்பாற்றுவதற்காக ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் உள்ள பெண்குழந்தைகளே அவர்கள் கொன்று வந்தனர். டங்கனின் முயற்சிகளேப் பின்பற்றி பத்தொன்பதாம் நூற்ருண்டில் பரோடாவில் ரெஸிடெண்டாக இருந்த வால்கர் ஆழ்ந்த அக்கரை காட்டி வந்தார். பெண்டிங்கு காலத்தில் வில்கின்ஸன் வில்ஃப்பி முதலியவர்கள் ஆற்றலுடனும் ஊக்கத்துடனும் அத்துறையில் உழைத்து ஓரளவு வெற்றிகண்டனர். குழந்தைகளேக் கொல்லும் பழக்கம் சிறிது சிறிதாகத்தான் மறைந்து வந்தது.

பகுதி 8

பெண்டிங்கின் இயல்பு, அரசியல் வல்லமை, ஆட்சித்திறமை

பெண்டிங்கின் இறுதிக்காலம் : பெண்டிங்கு, 1835-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் இந்தியாவை விட்டகன்ருர். 1837-ல் அவர் காமன்ஸ் சபையில் உறுப்பினரானுர். விரிநிலைக்கொள்கையை (லிபரல்) ஆதரித்தார். 1839-ல் பாரிஸ் நகரில் அவர் வாழ்க்கை முடிவுற்றது.

இயல்பு : பெண்டிங்கு கபடமற்றவர், நேர்மையானவர், நன்மை செய்யும் விருப்பமுடையவர், பகுத்தறிவுத் திறன் படைத்தவர் என்றெல்லாம் அவருடன் சேர்ந்து பணியாற்றிய மெட்காஃப் அவரைப் புகழ்ந்துள்ளார்.* பெண்டிங்கிடம் கருணைபொருந்திய உள்ளமும் விரிந்த நோக்கமும் உயர்ந்த பண்பும் அறச்செயலாற்றுவதில் மனேதைரியமும் இருந்தன. தாம் நன்மைபயக்கக் கூடியது என்று தீர்மானித்த செய்திகளை அவர் விடா முயற்சியுடன் எதிர்ப்புக்களைப் பொருட்படுத்தாது நிறைவேற்றினர். ஆயினும் செய்தித்தாள் ஆசிரியர்கள் கருத்துக்கள் வெளியிடுவதை அவர் தடுக்க விரும்பவில்லை. அவர் தமது பதவிக்கே ஏற்பட இருந்த இடையூறுகளைப் பொருட்படுத்தாது சதியை ஒழித்தார். சிறந்த அரசியல் முன்னேக்கு அவர்பால் பொலிந்தது. இத்தாலியர் ஒற்றுமைப்பட்டு வாழவேண்டுமென்ற கருத்தை அவர் கொண்டிருந்தார் என்று முன்னர்ப் பார்த்தோம். ஆங்கிலேயரின் பெருமை இந்தியருடைய நலத்தை அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டுமென்பதே அவருடைய நோக்கமாகும். அவர் கடமையை ஆற்றுவதில் சிறிதும் வழுவுவதில்லை; பொதுச் செய்திகளைப் பரந்த நோக்குடன் பரிசீலனை செய்தார்; முன்னேற்றத்தில் முழு ஆர்வம்

---

* 10, பக். 66.

காட்டினர். காலத்தின் முன்னேற்றத்துக்குத் தக்கவாறு வசதிகளைப் பெருக்க அவர் தவறவில்லை. சிம்லா, டார் ஜிலிங் முதலிய கோடைகால வாழ்விற்கேற்ற இடங்களின் வளர்ச்சியிலும் அவர் கருத்துச் செலுத்தினர். சிம்லாவி லிருந்து உதகமண்டலம் வரை உள்ள பல இடங்களைப் பார்வையிடுவதற்காக அவர் பல பயணங்களை மேற்கொண் டார். பர்மா, மலாயா நாடுகளுக்கும் அவர் சென்று திரும் பினர். அரசியலார் மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ள வேண்டுமென்பது அவருடைய கொள்கையாகும். அரசாங்கத்துக்குரிய கட்டிடங்களில் சமூகத் தொடர்பான நிகழ்ச்சிகளை அனுமதித்த முதல் கவர்னர்-ஜெனரல் பெண் டிங்கே ஆவர். ஐரோப்பியருக்கும் இந்தியருக்குமிடையே தொடர்புகள் ஏற்பட அந்நிகழ்ச்சிகள் உதவுமென்று அவர் நம்பினர். நற்பண்புகள் மிக்க அவருடைய மனைவி யாரும் இந்நாட்டில் சிறந்த தொண்டுகளாற்றி வந்தார்.

அரசியல் வல்லமை: இந்தியாவில் பிரிட்டிஷ் பேரரசு என்றும் நிலைபெற்றிருக்கும் என்ற எண்ணம் மெட்காஃ புக்குக் கிடையாது. ஆனல் பெண்டிங்குக்கோ அத்தகைய அவநம்பிக்கை சிறிதும் இல்லை. ஆங்கில ஆட்சிக்கு ஏற் படக்கூடும் இடையூறுகளை நன்னம்பிக்கைகொண்டு தவிர்க்கவே இவர் முயன்ருர். இவருடைய வெளித்துறைக் கொள்கையின் விளைவாக ஆப்கானியப் போர் ஏற்பட்டது என்று சிலர் கூறுவர். ஆனல் அப்போரை பெண்டிங்கே நடத்தியிருந்தால் ஆக்லண்டு இழைத்த தவறுகளைப் புரிந்திருக்கமாட்டார் என்றே கூறலாம். பாதுகாப்பைப் பெற்ற சிற்றரசுகளின் உள்துறைச் சீர்கேடுகளை ஒழிக்கப் பெண்டிங்கால் மிகுதியாக எதையும் செய்யமுடியவில்லை என்பது உண்மை. எனினும் மைசூரிலும் குடகிலும் இவர் ஆற்றிய செயல்கள் முடிவானவை. இவர் இரஞ்சித் சிங்குடன் கொண்ட தொடர்பு காரணமாக அச்சீக்கியத் தலைவருக்கும் பிரிட்டிஷாருக்குமிடையே நெருங்கிய நட்பு ஏற்பட்டது. சிங்கப்பூரின் சிறப்பைப் பெண்டிங்கு நன்கு உணர்ந்தார் (1819-ல் அது ஆங்கிலேயருக்குக் கிடைத் தது). ஆதலால் ஸ்ட்ரெயிட் குடியேற்ற நாடுகளின் தலை

நகரைப் பினங்கிலிருந்து 1830-ல் சிங்கப்பூருக்கு மாற்றினார் (1824-ம் ஆண்டு உடன்படிக்கைப்படி ஆங்கிலேயர் டச்சுக்காரரிடமிருந்து மலாக்காவைப் பெற்றனர்). ஸ்ட்ரெயிட் குடியேற்றப் பகுதிகள் 1867-ம் ஆண்டு வரை வங்காள மாகாணத்துடன் இணைக்கப்பட்டிருந்தன. பிறகு அவை அரசாள் குடியேற்றங்களாயின (Crown colony).

ஆட்சிமுறைத் திறமை : பெண்டிங்கு அமைதியை வளர்ப்பதற்கு மேற்கொண்ட திட்டங்களை முன்னர்ப் பார்த்தோம். அவற்றின் சிறப்பை உணரும் யாவரும் அக்கவர்னர்-ஜெனரலின் குறிக்கோளை வியந்து போற்றுவரென்பதில் ஐயமில்லை. அவர் நிதி நிலைமையை ஒழுங்குறச் செய்தார்; பணித்துறைகளைச் சீர்திருத்தினார்; மிகுதியாக இந்தியர்களை அவற்றில் புகுத்தினார் ; தக்குகளை அடக்கினார்; சதியை ஒழித்தார்; கல்வித்துறையில் சிறப்பான மாறுதல்களை உண்டாக்கினார். முன்னேற்றத்தை விரைவுபடுத்தும் திட்டங்களில் ஆழ்ந்த கருத்தைச் செலுத்தினார்; அன்புப்பணிகளில் ஆர்வத்துடன் உழைத்தார்; வென்றோர், வெல்லப்பட்டோர் என்ற இரு கட்சிகளையும் இணைப்பதற்கான முயற்சிகளைச் செய்துவந்தார். மக்களை மகிழ்வித்து அவர் தம் நிலையை உயர்த்துவதன்மூலம் பிரிட்டிஷ் ஆட்சியை இந்நாட்டில் நிலையாக அமைக்க அவர் முயன்றார். கல்கத்தாவில் இந்தியரும் ஐரோப்பியரும் பெண்டிங்கின் உருச்சிலை ஒன்றை நிறுவினர். அதன்பீடத்தில் மெக்காலே அக்கவர்னர்-ஜெனரலைப் பற்றிக் கூறிய புகழுரை பொறிக்கப்பெற்றுள்ளது. அப்புகழுரை குறிக்கும் செய்திகள் பெரும்பாலும் உண்மை என்றே கூறலாம். மெட்காஃபும் இந்தியரின் நலத்தில் நாட்டமுள்ள எல்லன்பரோ பிரபுவும் (மேற்பார்வைக் குழுவின் தலைவர்) பெண்டிங்குக்கு அரிய உதவி புரிந்தனர். மக்களின் நலத்தில் அரசியலார் அக்கரை கொள்ள வேண்டுமென்பதைப் பெண்டிங்கு செயல்முறையில் வற்புறுத்தி இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் அடிப்படையை வலிமைப்படுத்தினார்.

பகுதி 9

மெட்காஃப் (1835-6)

மெட்காஃப் கல்கத்தாவில் 1785-ல் பிறந்தார். வில்லியம் கோட்டைக் கல்லூரியில் பயின்றார். அக்காலத்திலேயே தாம் ஒரு கவர்னர்-ஜெனரலாக வேண்டுமென்ற விருப்பம் அவருக்கிருந்தது. கல்லூரிப்படிப்பை முடித்துக்கொண்ட பின் அவர் வெல்ஸ்லியின்கீழ் அரசியல் துறையில் ஈடுபட்டார். 1808-9-ல் மெட்காஃப் இரஞ்சித்சிங்கிடம் தூதுவராகச் சென்று அமிருதசரஸ் உடன்படிக்கைக்கு ஏற்பாடு செய்ததை முன்னர்ப் பார்த்தோம். ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் ஆட்சிக்காலத்தில் இராசபுத்திரர்களுடன் அவர் செய்து கொண்ட கூட்டுறவுகளும் குறிப்பிடத்தக்கவை. 1822-ல் "பாரன்" பெருமகன் பட்டம் அவருக்குக் கிடைத்தது. சர் சார்லஸ் மெட்காஃப் ஐதராபாத்தில் ரெஸிடெண்ட்டாக இருந்தபொழுது வில்லியம் பாமர் கூட்டுக் குழுவின் பொருளமைப்புச் சீர்கேடுகளைக் கண்டு பிடித்தார். இவர் பரதபுரியின் செய்திகளில் (1825–6) தலையிடுமாறு ஆமெர்ஸ்ட் பிரபுவுக்கு அறிவுரை கூறினார். மெட்காஃப் 1829-ல் கல்கத்தா ஆலோசனைக் குழுவின் துணைத்தலைவரானார்; பெண்டிங்கின் கொள்கையை நிறைவேற்றுவதில் அவருக்கு பெருந்துணை புரிந்தார். சிறப்பாகக் கல்வித் துறையிலும் பத்திரிகைத் தொழில் துறையிலும் மெட் காஃபின் பணிகள் குறிப்பிடத்தக்கன. இவர் 1834-ல் ஆக்ரா மாகாணத்தின் காவல் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்; அடுத்த ஆண்டில் பதிலி கவர்னர்-ஜெனரலாகப் பணி ஆற்றினார். 1823-ல் பத்திரிகை ஆசிரியரின் உரிமையைக் கட்டுப்படுத்திய சட்டம் மெட்காஃபினால் நீக்கப்பெற்றது. பத்திரிகாசிரியர்கள் தாம் பெற்ற இவ்வுரிமையை 1878-வரையில் அனுபவித்து வந்தனர். மெட்காஃப் பத்திரிகையாளர் உரிமையைப் போற்றிய செயலைப் பாராட்டிக் கல்கத்தா பொதுமக்கள் தமது மகிழ்ச்சிக்கு அறிகுறியாக

மெட்காஃப் மண்டபம் ஒன்றை நிறுவினர். இவருடைய பரந்த கொள்கையை ஆதரித்து மெக்காலேயும் இவருடன் ஒத்துழைத்தார். 1836-ல் ஆக்லண்டுப் பிரபு இந்தியாவுக்கு வந்து சேர்ந்தவுடன் மெட்காஃபை வடமேற்கு மாகாணங்களின் உதவி கவர்னராகப் பணியாற்றுமாறு அதிகாரிகள் வேண்டினர். இயக்குநர்கள், பத்திரிகாசிரியர்கள் உரிமைகள் பற்றிய மெட்காஃபின் சட்டத்தை வெறுத்தபடியால் அவர்களுக்கும் மெட்காஃபுக்கும் இருந்த நல்லுறவு மறைந்து வந்தது. ஆகவே மெட்காஃப் பதவியைத் துறந்து தாய்நாட்டுக்குச் சென்றார். 1839-ல் ஆங்கிலேய அரசியலார் அவரை ஜமெய்க்காவின் கவர்னராக்கினர். 1842-ல் அவர் கானடாவின் கவர்னர்-ஜெனரலானர். 1845-ல் அவருக்குப் பிரபுக்கள் தொகுதியில் இடம் கிடைத்தது. அடுத்த ஆண்டில் அவர் வாழ்க்கை முடிவடைந்தது.

மெட்காஃப் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இந்தியாவில் பணியாற்றினர். மன்ரோ எல்பின்ஸ்டன், மால்கம், ஆகியோருடன் இவரும் இணைந்து செயலாற்றினர். இவர் தமது சிறந்த ஆற்றல், பரந்த நோக்கம், அன்பு, இந்தியரைப் போற்றும் தன்மை முதலிய பண்புகள் காரணமாகக் கம்பெனியின் பணித்துறையின் சிறந்த அணிகலனாக விளங்கினர். இந்தியாவின் பழைய உள்நாட்டு நிலையங்களை இவர் மிகவும் வியந்தார். கிராமங்கள் யாவும் சிறு சிறு குடியரசுகளாக விளங்குகின்றன என்றும் இந்தியரின் முன்னேற்றத்துக்கு அடிப்படையான சாதனங்களாக அவை அமையுமென்றும் அவர் 1830-ல் குறிப்பிட்டுள்ளார்.* ருஷியருக்கு அஞ்சி மிக விரைவான முயற்சி எதையும் மேற்கொள்ள அவர் விரும்பவில்லை. மக்களுக்கு நன்மையைச் செய்யும் எளிய ஆட்சிமுறையமைப்பையே அவர் மனம் நாடியது. ஐரோப்பியரும் இந்தியரும் ஒத்துழைக்க வேண்டுமென்பதே அவர் விருப்பம்.

---

* 85, பக். 122.

பகுதி 10

இரஞ்சித்சிங் (பி. 1780-இ. 1839)

வாழ்க்கை : 1809-வரை இரஞ்சித்சிங்கின் வாழ்க்கையைப் பற்றி முன்னர்ப் பார்த்தோம். இவர் 1799-ல் லாகூரைக் கைப்பற்றினர்; 1801-ல் மகாராசாவானர். 1802-ல் அமிர்தசரஸைக் கைப்பற்றினர்; 1806, 1809, ஆகிய ஆண்டுகளில் ஆங்கிலேயருடன் உடன்படிக்கைகள் செய்து கொண்டார்; பிறகு கங்ராவை வெல்லுவதற்காகக் கூர்க்கர்களுடன் போரிட்டு வெற்றி பெற்ருர். இவர் 1813-ல் ஆப்கானியரை வென்று அட்டாக்கைக் கைப்பற்றினர்; அடுத்த ஆண்டில் ஷாஷுஜாவினிடமிருந்து கோஹினூரைக் கைக்கொண்டார். அடுத்த இரண்டு ஆண்டுகளில் இவர் மலைநாட்டுத் தலைவர்கள் பலரை அடக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். இரஞ்சித்சிங் 1818-ல் மூல்தானைக் கைப்பற்றிக்கொண்டு அடுத்த ஆண்டில் காச்மீரத்தின் தலைவரானர்; 1823-ல் ஆப்கானியரை முறியடித்துவிட்டுப் பெஷாவரைக் கைக்கொண்டார். இவருக்கும் பெண்டிங்குக்கும் நல்லுறவு நீடித்தது. பர்ன்ஸ் லாகூருக்குச் சென்றதையும் 1832-ல் ஆங்கிலேயருக்கும் சீக்கியருக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையையும் முன்னரே கண்டோம். இரஞ்சித் 1833-ல் ஷாஷுஜாவுடன் கூட்டுறவு அமைத்துக்கொண்டார். 1835-ல் பெஷாவரில் படையெடுத்த தோஸ்து முகம்மதைச் சீக்கிய அரசர் முறியடுத்தார். 1838-ல்ஆங்கிலேயர், ஷாஷுஜா, இரஞ்சித்சிங் ஆகியோர் ஒரு முக்கூட்டு உடன்படிக்கையைச் செய்துகொண்டனர். சீக்கிய அரசர் பெரோஸ்பூரில் (பஞ்சாபு) ஆக்லண்டைக் கண்டார். 1839-ல் இரஞ்சித்சிங் பக்கவாத நோயினல் துன்புற்று இறந்தார். இவர் தம்மிடமிருந்த கோஹினூரைப் பூரி ஜகந்நாதர் ஆலயத்தில் சேர்ப்பித்ததும் குறிப்பிடத்தக்கது.

சீக்கிய இராச்சியத்தின் எல்லையமைப்பு : இரஞ்சித் சிங் இறந்தபொழுது சீக்கியநாடு பின்வரும் பகுதிகளைத் தன்னுட்கொண்டிருந்தது :- சட்லெஜுக்கும் சிந்துவுக்கும் இடைப்பட்ட பகுதி, காஷ்மீர், ஜம்மு, ஹஸாரா, பெஷாவர் கோஹட் பன்னூ மாவட்டங்கள், சிந்து ஆற்றுக்கும் சூலைமான் மலைத்தொடருக்கும் இடைப்பட்ட பகுதி முதலியனவாம். இரஞ்சித்சிங் பஞ்சாபை வென்றது போற்றற்குரிய ஒரு சாதனை என்பதில் ஐயமில்லை.

இராணுவ அமைப்பு : குதிரை வீரர்களையே சிறப்பாகக் கொண்டிருந்த கல்சா படையில் இரஞ்சித்சிங் ஓர் அடிப்படையான மாறுதலைப் புகுத்தினர். காலாட் படைக்கும் பீரங்கிப் படைக்கும் அவர் புதிதாகச் சிறப்பளித்தார். இவையே சீக்கியப்படையின் அடிப்படை ஆதாரமாயின. படைவீரரின் திறத்தை உயர்த்த ஐரோப்பிய முறைகளையும் புகுத்தினர். ஆங்கிலேயருடன் போர் ஏற்பட்டால் அவர்களை எதிர்க்கத்தக்க ஆற்றல் தம் படையினரிடம் இருக்க வேண்டுமென்று இரஞ்சித்சிங் விரும்பினர். ஆனல் அத்தகைய போர் ஏற்படுவதையும் தடுத்துக்கொண்டார். நெப்போலியனின்கீழ் சிறந்த முறையில் பணியாற்றிய தளபதி வென்ச்சுரா என்ற இத்தாலியரையும், தளபதி அல்லார்டு என்ற பிரெஞ்சுக்காரரையும் இரஞ்சித்சிங் தம் பணியில் அமர்த்திக்கொண்டார். கோர்ட், கார்டினர் என்ற அயல் நாட்டு வீரர்களும் சீக்கியர் படையில் இருந்தனர். பணித்துறையில் தக்கவர்களை அமைத்துக்கொள்ளும் ஆற்றல் இரஞ்சித்சிங்கிடம் இருந்தது. இவர் புதிய படைத்திட்டங்களை வெறுத்த சீக்கிய சர்தார்களைத் தம் திறமையால் மாற்றி புதிய முறையை ஏற்றுக்கொள்ளுமாறு செய்தார். பிறருக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமையத் தாமே இராணுவ உடைகளை அணிந்துகொண்டு பல வகை இராணுவப் பயிற்சிகளையும் செய்துவந்தார். முதலில் சீக்கியக் குதிரை வீரர், குதிரைப்படை ஒன்றையே சிறப்புடையதாகக் கருதி காலாட் படையைப் புறக்கணித்து வந்தனர். அக்கொள்கையை மாறச்செய்த பெருமை

இரஞ்சித்சிங்குக்கு உரியது. இத்தலைவர் காலாட் படையை யும் பீரங்கிப் படையையும் யாவரும் விரும்புமாறு செய்தார். மெட்காஃபின்கீழ் இருந்த சிப்பாய்களின் ஒழுக்க முறை களை இரஞ்சித்சிங் நன்கு கற்றுணர்ந்தார். இச்சீக்கிய அரசரிடம் பொருளாசை மிகுதியாக இருந்தது. தம் படை வீரர்களுக்குக்கூட இவர் காலந் தாழ்த்தியே ஊதியம் கொடுப்பது வழக்கமாயிருந்தது.

சிவில் துறை அமைப்பு: இரஞ்சித்சிங் ஒரு இராணுவ வல்லாட்சியை அமைத்திருந்தார். அவர் ஆட்சியின்கீழ் மிசுல்கள் சிதறுண்டு கிடந்தன. சர்வத் கல்சா என்ற சீக்கியத் தேசீய சபை 1805-ம் ஆண்டுக்குப் பிறகு கூடவே இல்லை. பஞ்சாபில் இரஞ்சித்சிங்கின் ஆணையே சட்டமாக இருந்தது. ஆயினும் அவ்வல்லாட் சியை மக்கள் வெறுக்கவில்லை. ஏனெனில் அவர்கள் அதனால் உள்நாட்டு அமைதியையும் அயலவர் படை யெழுச்சியினின்று பாதுகாப்பையும் பெற்றனர். அரசியல் திறமையாகவும் அமைந்திருந்தது, வெறுக்கத்தக்க வல் லாட்சியினின்று இரஞ்சித்சிங் தன் நாட்டைக் காப்பாற்றி வந்தார். மரபாக அமைந்த பழக்கவழக்கங்களும் அமைச் சர்களின் செல்வாக்கும் அரசரை ஓரளவு கட்டுப்படுத்தின. அரசியலார் மக்களின் நலத்தில் கருத்தைச் செலுத்திய தால் மக்கள் மகிழ்வெய்தினர். ஆட்சித்துறை அலுவலர் களைப் பொறுக்குவதில் இரஞ்சித் பின்பற்றிய கொள்கை பாரட்டத்தக்கது. அவர் தம் படையில் சீக்கியர்களைச் சேர்த்தார்; ஆனால் சிவில் பணித்துறைகளில் இந்துக் களையும் முகம்மதியர்களையும் அமர்த்தினர். அறிவாற்றல் துறையில் சீக்கியர்கள் மிகச் சிறப்புடையவர்கள் அல்லர் என்பது அவருடைய கருத்தாகும். பணியாளர்களின் சமயக் கருத்துக்களைப்பற்றி அவர் கவலை கொள்ளவில்லை. திறமை ஒன்றையே அவர் பெரிதாகக் கருதினர். இராசா தீனநாத் என்பார் பொருள் அமைச்சராகப் பணியாற்றி னர். பக்கிரி அஸிஸ்-உத்-தீன் வெளித்துறை அமைச்ச ராய் இருந்தார். இவர் ஆற்றிய செயல்களும் போற்றத்

தக்கவை. ஏறத்தாழ இருபது ஐரோப்பிய அலுவலர்களை இரஞ்சித்சிங் தமது சிவில் இராணுவத் துறைகளில் அமர்த்தி இருந்தார். அயலவர்கள் யாவரும் சிறந்த முறையில் ஊதியம் பெற்று இரஞ்சித்சிங்கின் நம்பிக் கைக்கு உரியவர்களாய் இருந்தனர். நிலவருமானத்தில் சராசரிக்கு ஐந்தில் இரண்டு பங்கை அரசியலார் வரி யாகப் பெற்றுவந்தார்கள். மக்கள் வரிகளைக் கூலங்களா கவே செலுத்தினர். நாடு பல மாவட்டங்களாப் பிரிந் திருந்தது. ஒவ்வொரு மாவட்டத்திலும் கார்தார்கள் என்ற அதிகாரிகள் வரிவசூல் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தனர். நிதி நிலைமையை ஒழுங்கு படுத்த வேண்டுமென்ற விருப்பம் இரஞ்சித்சிங்கிடம் இல்லை. அதற்குப் போதுமான காலமும் அவருக்குக் கிடைக்க வில்லை. கார்தார்கள் மாவட்டங்களில் குற்றத்துறை அதிகாரிகளாகவும் தீர்வைத்துறை மேர்பார்வையாளர் களாவும் பணியாற்றினர். வாணிகப் பொருள்கள் மீதும் உழவுப் பொருள்கள் மீதும் அரசியலார் மிகுதியாக வரிகள் விதித்து வந்தனர். பஞ்சாபு, பிரிட்டிஷாருடன் இணைந்த பிறகே பொருளாதாரத்துறையில் முன்னேறியது.

இரஞ்சித்சிங்கின் இயல்பு : இரஞ்சித்சிங், அரசியல் வல்லமையும் இராணுவத் திறமையும் ஆளும் திறமையும் உளத்திட்பமும் வாய்ந்தவர். ஆனால் அவர் ஒழுக்கத்தால் உயர்ந்தவரல்லர். பிறருடைய இயல்பை எளிதில் உணரும் ஆற்றல் அவருக்கு உண்டு. அவர் மக்களின் இயல்பை உணர்ந்து அதற்கேற்பச் செயலாற்றிவந்தார். செயல்முறைக்கு ஒவ்வாத திட்டங்களை அவர் எண்ணுவ தில்லை. தேசீயச்சார்பான பேரவா அவரிடமிருந்தது. சீக்கியரின் ஒருபகுதியினர் பிரிட்டிஷ் பாதுகாப்புக்கு அடங்கியிருந்ததால் சீக்கியர் யாவரையும் ஒன்றுபடுத்தி ஒரு குடைக்கீழ் கொண்டுவர வேண்டுமென்ற அவர் விருப்பம் நிறைவேறவில்லை. இரஞ்சித், குட்டை யானவர், அழகிய தோற்றம் படைத்தவரல்லர்; எளிய உடைகளையே அணிந்துவந்தார்; கொடிய வைசூரியின்

அடையாளங்கள் பல அவர் முகத்தில் இருந்தன. மனோதிடமும் விடாமுயற்சியும் அவர்பால் பொலிந்தன. போரினால் ஏற்படும் களைப்பை அவர் சிறிதும் பொருட் படுத்துவதில்லை. குதிரைகளிடத்து அவருக்குத் தனிப் பற்று உண்டு. அவர் பாரசீகத்திலிருந்தும் அராபியாவி லிருந்தும் விலங்குகளைத் தருவித்திருந்தார். லைலி என்ற சிறந்த பெண் குதிரை ஒன்றைப் பெறுவதற்காக அவர் 30,000 பவுன்களைச் செலவழித்தாரென அறிகிறோம். அவர் கட்சியினர் அடக்கத்துடன் அவரைப் பின்பற்றி வந்தனர். இரஞ்சித்சிங் சீக்கியரின் பெருமையை நிலை நாட்டினாரெனினும் அவர் எழுதப் படிக்கத் தெரியாதவர்; தன்னலக்காரர்; பேராசை பிடித்தவர்; தீமை செய்ய அஞ் சாதவர்; துரோகச் செயல்புரியத் தயங்காதவர்; கோஹி னூரையும் லைலி குதிரையையும் அவர் மிகுந்த அளவுக்கு விரும்பிப் போற்றினார். அவ்விரண்டையும் நேர்மையற்ற வகையில் முறையே ஷாஷுஜாவிடமிருந்தும் பெஷா வரின் ஆப்கானியக் கவர்னரிடமிருந்தும் பெற்றார். போர், காதல் ஆகிய செய்திகளில் அவர் நன்றென்றும் தீதென் றும் பகுத்தறிவதில்லை. ஆங்கிலேயருடன் அவர் உண்மை யாக நடந்துகொண்டமை வியப்புக்குரியதேஆம். அவரிடம் மூட நம்பிக்கைகள் உண்டு. ஆனால் அவர் மதக்கொள்கை களைக் பொருட்படுத்துவதில்லை. அதனாற்றான் சமயத்தைக் கருதாது இயல்புக்குத் தக்கவாறுப் பணியாளர்களை அமர்த்திவந்தார். அவர் சமயப் பற்றற்றவராயிருந்த போதிலும் செயலாற்றத் துணிவதற்கு முன்னர் சீக்கி யரின் புனித நூலான கிரந்தம் கூறும் செய்தியை அறிந்து கொள்ளும் வழக்கம் அவருக்கு உண்டு. அவருக்கு அணி கலன்களில் ஆர்வம் இல்லை; ஆனால் கள்ளுண்பதில் களிப்பு இருந்தது. அதிலும் தமக்கெனத் தனிமுறையில் தயாரிக்கப்பெற்ற கடுமையான கள்ளையே அவர் உண்டு வந்தார்.* அளவுக்கு மிஞ்சிய குடி காரணமாகவே அவ ருக்கு பக்கவாத நோய் ஏற்பட்டு அவர் வாழ்க்கையும் முடி

* 37, பக் 105.

வுற்றது. அவருக்குப் பதினெட்டு மனைவியர் இருந்தனர். ஆனால் கரக்சிங் என்ற ஒரே ஒரு மகன்தான் இருந்தான். அவனும் அவருக்கு முறைப்படி பிறந்த மகன்தானா என்பதும் ஐயப்பாட்டுக்கு உரிய செய்தியாகும். இரஞ்சித்சிங் ஒரு ஆங்கிலப் பெண்மணியை மணந்துகொள்ள முயன்றார். ஆனால் அம்முயற்சி தோல்வியுற்றது. அவருடைய உவளகத்தில் ஜிண்டான் என்ற பெண்ணொருத்தி யிருந்தாள். அவளை கி.பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த உரோமப் பேரரசர் கிளாடியஸ்ஸின் மனைவியான மெஸ்ஸாலினாவுக்கு ஒப்பிடலாம்.(மெஸ்ஸாலினா தீய ஒழுக்கம் பூண்டவள்; கொடுமையே உருவானவள் ; காமத்துக்கு அடிமையானவள்; பேரரசர் இல்லாதபொழுது தான் விரும்பிய ஒருவனை மணம்புரிந்துகொண்டவள்; பேரரசர் அவளைக் கொலை செய்துவிட்டார்.) இரஞ்சித்சிங், சிற்றின்பத்தில் அளவு கடந்த நாட்டம் செலுத்தினார். காச்மீரம், பாரசீகம், பஞ்சாபு முதலிய நாடுகளிலிருந்து வந்த ஏறத்தாழ 150 அழகிய பெண்மணிகள் அவரைச் சூழ்ந்து அவரைக் களிப்புக் கடலில் ஆழ்த்திவந்தனர். தீய ஒழுக்கத்துடன் பொருளாசையும் மிகுதியாக அவரிடமிருந்தது. 12 கோடி ரூபாய்க்கு மேல் அவர் சேர்த்து வைத்திருந்தார். அறஞ்செய்யும் விருப்பம் அவரிடமிருந்தது. தமக்குக் கீழ்ப்பட்டவர்களிடமும் தம்மால் துன்பமடைந்தோரிடமும் அவர் கருணை காட்டினார், அவர் ஒரு கொடுங்கோலரோ குருதி வெறி கொண்டவரோ அல்லர்.

அரசியல் வல்லமையும் பெருமையும்: இரஞ்சித்சிங்கின் உள்துறை, வெளித்துறைக் கொள்கைகள் அவருடைய அரசியல் வல்லமையைக் காட்டா நிற்கும். இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆதிக்கநிலையைப் பற்றிய ஐயப்பாடு அவருக்கு 1809-ம் ஆண்டிலேயே சிறிதும் கிடையாது. அக்காலத்திலிருந்து 30 ஆண்டுக்காலம் அவர்களுடன் அவர் தொடர்ந்து நட்பு பூண்டிருந்தார். அந்நட்பைக் காப்பாற்றிக்கொள்வதற்காகச் சிற்சில காலங்களில் அவர் தமது கருத்துக்களையும் மாற்றிக்கொண்ட

தைக் காண்கிறோம். எடுத்துக்காட்டாக மூவர் உடன் படிக்கையைக் குறிப்பிடலாம். மேலும் சட்லெஜுக்கும் யமுனைக்கும் இடைப்பட்ட பகுதியில் தாம் கொண்டாடிய உரிமையையும் சிந்து நாட்டில் படையெடுத்து அதை வெல்லும் தமது திட்டத்தையும் அவர் ஆங்கிலேயரின் பொருட்டே கைவிட்டார். அரசியலை உறுதிப்படுத்தலும் சீக்கியரின் உண்மைத் தேவைகளை நிறைவேற்றலும் ஐரோப்பிய முறையில் படையைச் சீர்திருத்தி அமைத்தலும் இரஞ்சித்சிங்கின் உள்துறைக் கொள்கையின் பண்புகளாம். அவர், திறமை ஒன்றையே கருத்திற் கொண்டு அலுவலரை அமர்த்தினரென்பதும் குறிப்பிடத் தக்கது*. இரஞ்சித், தமது மக்களை ஒற்றுமைப்படுத்தி வலிமையுறச் செய்தார்; தமக்கென ஒரு பேரரசை அமைத்துக்கொண்டார் ; அதை அறிவாற்றலுடனும் உறுதியாகவும் நீண்டகாலம் ஆட்சி புரிந்தார் ; முப்பது ஆண்டுகள் ஆங்கிலேயருடன் நேசமாகவே பழகிவந்தார் ; அவர் சீர்திருத்தி அமைத்த படை அவருக்குப் பிறகும் குறிப்பிடத்தக்க சிறப்பும் வலிமையும் பெற்று விளங்கியது.

---

* *102, அதி. 10.*

பகுதி 11

ஆக்லண்டு (1836-42); முதல் ஆப்கானியப் போர் (1838-42)

ஆக்லண்டு : ஜார்ஜ் ஈடன், பாரன் ஆக்லண்டு என்பார் 1784-ல் பிறந்தார்; விக்கு கட்சியைச் சேர்ந்து சீர்திருத்தங்களை ஆதரித்தார்; இங்கிலாந்து நாட்டின் கடற்படைத் தலைமை அதிகாரி ஆனார். பிறகு 1836-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் கவர்னர்-ஜெனரலாக இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார். பெண்டிங்கின் ஆட்சிமுறையைத் தொடர்ந்து நிர்வகிக்கத்தக்க தகுதி அவரிடமுண்டு. ஆனால் வெளித்துறைக் கொள்கைத் தொடர்பான பல இடர்ப்பாடுகள் அவர் மனத்தைக் குழப்பிவிட்டன. அவ்வமயம் இங்கிலாந்தின் அயல்நாட்டு அமைச்சராக இருந்த பாமர்ஸ்ட்டன் ருஷியா இந்தியாவில் படையெடுப்பதைத் தடுக்க முற்பட்டிருந்தார். ஆதலால் ஆக்லண்டு ஆப்கானிய அரசியலில் தலையிடவேண்டியது இன்றியமையாததாயிற்று.

ஆக்லண்டும் ஆப்கானித்தானமும் : இந்தியாவுக்கு வடமேற்கில் உள்ள ஆப்கானித்தானத்தின் தலைவர்கள் அடிக்கடி இந்தியாவில் படையெடுத்தனர் என்பதை நாமறிவோம். அகமதுஷா அப்தலி அல்லது துரானி இறந்தபின் ஆப்கானிய நாட்டு அரியணையைப் பெற பல போட்டிகளேற்பட்டு உள்நாட்டுப் போர் மூண்டது. அகமதுஷாவின் பெயரர் ஸாமன்ஷா 1793 முதல் 1800 வரை ஆட்சி நடத்தினர். இவர் பஞ்சாபிலும் படையெடுத்தார். ஷாஷுஜா என்பார் அரியணையைத் தாமே கைப்பற்றிக்கொண்டு 1803 முதல் 1809 வரை ஆட்சி புரிந்தார். இவருடன் ஆங்கிலேயர் 1809-ல் ஒரு உடன்பாடு செய்து கொண்டனர். 1826-ல் பாரக்ஸே குலத்தைச் சேர்ந்த தோஸ்து முகம்மது என்பார் ஆப்கானிய

அரியணையைக் கைப்பற்றிக்கொண்டு அமீர் என்ற பட்டத்தையும் பூண்டார். அரியணையை இழந்த ஷா ஷுஜா ஆங்கிலேயரிடம் அடைக்கலம் புகுந்து லூதியானவில் வாழ்ந்துவந்தார். அந்நிலையில் ருஷியர், ஆப்கானித்தானத்தின் வழியாக இந்தியாவின்மீது படையெடுக்க முயலலாம் என்று ஆங்கிலேயர் அச்சங் கொண்டிருந்தனர். ஆக்லண்டு இந்தியாவுக்கு வந்த சமயத்தில் ஆப்கானித்தானத்தில் குழப்பம் மேலிட்டிருந்தது. ருஷியர்களும் பாரசீகர்களும் ஒன்று சேர்ந்து ஆப்கானித்தானத்தின் மீது படையெடுக்க ஏற்பாடு செய்து கொண்டிருந்தனர். தோஸ்து முகம்மதுவின் ஆட்சி ஆப்கானித்தானம் முழுவதும் நிலையாக நிறுவப்பட்டிருக்கவில்லை. ஆப்கானித்தானத்தின் மேற்குப் புறத்தில் உள்ள ஹீரட்டைக் கைப்பற்றுவதற்குப் பாரசீகர்கள் முயன்று கொண்டிருந்தனர். ஷாஷுஜா, தாம் இழந்த பதவியை மீண்டும் அடைவதற்கு இந்தியாவின் உதவியை நாடினர். இங்கிலாந்திலிருந்து வந்த உத்திரவின்படி ஆக்லண்டு ஆப்கானிய அரசியலைக் கட்டுப்படுத்த முனைந்தார். அந்நாட்டில் ருஷியரும் பாரசீகரும் செல்வாக்குப் பெறுவதைத் தடுக்க வேண்டு மேன்பதே அவருடைய குறிக்கோளாயிற்று. 1837-ல் கவர்னர்-ஜெனரல், அலெக்சாந்தர் பர்ன்ஸ் என்பாரைக் காபூலுக்கு அனுப்பி தோஸ்து முகம்மதுவுடன் பேச்சு வார்த்தை நடத்த ஏற்பாடு செய்தார். தோஸ்து முகம்மதுவுக்கும் ஆங்கிலேயருடன் நேச உறவு கொள்ள வேண்டுமென்பதே விருப்பம். ஆனல் அவர் பெஷாவரை இரஞ்சித்சிங்கிடமிருந்து மீட்டுக் கொள்வதற்குஆங்கிலேயரின் உதவியை நாடினர். மேலும் ஹீரட்டை முற்றுகையிட்டிருந்த பாரசீகருக்கு எதிராகப் பிரிட்டிஷார் தமக்கு உதவவேண்டுமென்றும் அவர் கோரினர். தூதுவர் பர்ன்ஸ் அமீருக்குக் கருணை காட்ட விரும்பினர். ஆனல் ஆக்லண்டு, தோஸ்து முகம்மதுவின் கோரிக்கைகளுக்குச் செவி சாய்க்கவில்லை. அதே சமயத்தில் காபூலில் ஒரு ருஷியத் தூதுவரும் தோஸ்து முகம்மதுவுடன் பேச்சு வார்த்தை நடத்தி வந்தார். முடிவில் அமீர், ருஷியாவுடன்

சேர்ந்து கொண்டார். 1838-ல் பர்ன்ஸ் காபூலிலிருந்து திரும்பினுர். ஆங்கிலேயர் இரஞ்சித்சிங்குடனும் ஷா ஷுஜாவுடனும் லாகூரில் ஒரு முக்கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்டனர்.* பிரிட்டிஷ் கடற்படை ஒன்று பாரசீக வளைகுடாவுக்குச் சென்றதன் விளைவாகப் பாரசீகர் ஹீரட் முற்றுகையைக் கைவிட்டனர். மேலும் ருஷியர் ஆப்கானித்தானத்திலிருந்த தமது முகவர்களை (Agents)த் திரும்ப அழைத்துக் கொள்ளவும் இணங்கினர். இவ்வாறு ஆங்கில அரசதந்திர முறை பயனளித்த போதிலும் ஆக்லண்டு ஆப்கானித்தானத்தில் படையெடுத்து தோஸ்து முகம்மதுவை நீக்கிவிட்டு ஷாஷுஜாவை ஆப்கானிய அரசராக்க வேண்டுமென்ற கொள்கையை விடாப்பிடியாகப் பின்பற்றினுர். பல ஆங்கிலத் தலைவர்கள் அக்கொள்கையைக் கண்டித்ததையும் அவர் பொருட்படுத்தவில்லை.

ஆப்கானியப் படையெழுச்சி: போலன், கைபர் கணவாய்களின் வழியாக ஆப்கானித்தானத்தில் படையெடுப்பதென்று கவர்னர்-ஜெனரல் 1838-ல் திட்டம் வகுத்தார். பம்பாய், வங்காளப் படைகளைப் பின்தொடர்ந்து ஷாஷுஜா, அலெக்சாந்தர் பர்ன்ஸ் முதலியோர் சிந்து நாட்டின் வழியாகச் சென்றனர். பம்பாயிலிருந்து சென்ற சர் ஜான் கீன் அப்படைகளின் தலைவராயிருந்தார். பஞ்சாபிலிருந்து காபூலுக்குச் சென்ற சீக்கியப் படையைப் பின்தொடர்ந்து ஷாஷுஜாவின் மகனுரான தைமூர் சென்றுர். தம் நாட்டின் வழியாக ஆங்கிலப் படைகள் செல்வதற்கு அனுமதி கொடுக்க இரஞ்சித்சிங் மறுத்துவிட்டார் என்ற செய்தி ஈண்டு நோக்கத்தக்கது. சிந்து நாட்டின் வழியாக ஆங்கிலப் படைகளைச் செலுத்தியது அந்நாட்டு அமீர்களுடன் பிரிட்டிஷார் செய்து கொண்டிருந்த உடன்படிக்கைக்கு முரணுன செயலே ஆகும். போலன் கணவாய் வழியாகச் சென்ற இருபடைகளும் பல இடையூறுகட்குப் பிறகு குவெட்டா போய்ச் சேர்ந்

* 70, பக். 75.

தன. 1839-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அப்படைகளைத் தலைவர் கீன், காந்தாரத்துக்குச் செலுத்தினர். கசினி, முற்றுகைக்குட்பட்டவுடனே தோஸ்து முகம்மது காபூலிலிருந்து ஓடிவிட்டார். காபூல் பிரிட்டிஷார் வசப்பட்டது. சீக்கியப்படையும் அவ்வமயம் அங்கே போய்ச் சேர்ந்தது. அவ்வெற்றியின் காரணமாக ஆக்லண்டுக்கு (எர்ல்) கோமான் என்ற பட்டம் கிடைத்தது.

ஆப்கானியப் புரட்சிக்கலகம் : விரைவில், ஆப்கானித்தானத்திலிருந்த ஆங்கிலேயருக்குப் பல இடையூறுகள் விளைந்தன. இரஞ்சித்சிங் உயிருடன் இருக்கும் வரையில் அவருடைய ஆதரவு ஆங்கிலேயருக்கு ஓரளவு உதவியாயிருந்தது. ஆனால் அவர் 1839-ல் இறந்தபின் அரசபதவிக்குப் போட்டி ஏற்பட்டதால் சீக்கியர்களுக்குள்ளேயே போராட்டமேற்பட்டது. அவர்களை அடக்க ஆங்கிலேயரால் இயலவில்லை. பிரிட்டிஷாருக்கு அவர்களால் எவ்வித உதவியும் கிடைக்கவில்லை. ஷாஷுஜா திறமையற்றவர். அவர் ஆப்கானிய அரசராக இருப்பதை ஆப்கானியர்கள் விரும்பவில்லை. ஆங்கிலப்படையின் உதவியில்லாமல் அவரால் ஒரு நாள்கூடத் தம் பதவியை வகிக்கமுடியவில்லை. ஆக்லண்டு தமது படையின் ஒரு பகுதியை அங்கேயே விட்டுவைக்க வேண்டியது இன்றியமையாததாயிற்று. அதன் பொருட்டு மிகுதியான செலவுகளையும் ஏற்கவேண்டியிருந்தது. 1840-ம் ஆண்டின் இறுதியில் தோஸ்து முகம்மது ஆங்கிலேயரிடம் அடைக்கலம் புகுத்தார். அவரை அவர்கள் கல்கத்தாவுக்கு அனுப்பி வைத்தனர். பிரிட்டிஷார் ஆப்கானியத் தலைவர்களுக்குப் பொருள் உதவி செய்து புதிய ஆட்சியை அவர்கள் ஆதரிக்குமாறு செய்திருந்தனர். செலவுகளைக் குறைக்கும் பொருட்டு ஆங்கிலேயர் அவ்வுதவியை நிறுத்தியவுடன் ஆப்கன் தலைவர்கள் கொள்ளையடிக்கத் தலைப்பட்டனர் ; தம் நாட்டுக்கும் இந்தியாவுக்குமிடையே இருந்த செய்திப் போக்குவரவு வசதிகளை அழித்தனர். அங்கே பிரிட்டிஷ் படையின் தலைவராயிருந்த (1841-ல்)

தளபதி எல்ஃபின்ஸ்டன் வயது முதிர்ந்தவர்; நோயாளி; நடக்கவும் இயலாதவர் படைத்தலைவராயிருக்கக் கூடிய தகுதி நிரம்பப்பெற்ற நாட் என்பாரை அப்பதவியில் அமர்த்துவதற்கு ஆக்லண்டு மறுத்துவிட்டார் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. மேலும் காபூலில் அரண் களுடன்கூடிய சிறப்புவாய்ந்த பகுதியில் ஷாஷுஜாவின் உவளகப்பெண்டிர் தங்கியிருந்தனர். ஆனால் துருப்புக் களோ நகருக்கு வெளிப்புறத்தில். எவ்வித வசதிகளு மற்றுப் பகைவர்களின் தாக்குதல்கட்கு இலக்காகிக் கொண்டு மிக்க துயருற்றன. அச்சீர்கேட்டுக்கு இடங் கொடுத்தமை ஆங்கிலேயரிழைத்த மற்றொரு தவறாகும். சில ஆங்கில அலுவலர் ஒழுக்கக்கேடான முறையில் நடந்துகொண்டதால் காபூல் மக்களுக்கு சினம் மூண்டது ஆகவே ஆங்கிலேயர் மேலும் போர் புரிந்து சீக்கியரையும் பிறரையும் வெல்லத் திட்டமிட்டிருக்கையில் ஆப்கானியக் கலகம் பெருகிவந்தது. அலெக்சாந்தர் பர்ன்ஸ் காபூலில் கொலையுண்டார். ஆங்கிலப் படைத்தலைவர்களிடை, நடவடிக்கைத் திட்டம்பற்றி கருத்துவேற்றுமையும் ஏற் பட்டது. உணவுப்பொருள் கிடங்குகளைக் கலக்கக்காரர் கள் வேறுவழியின்றி 1841-ம் ஆண்டின் இறுதியில் ஆங் கிலேயர் ஓர் உடன்படிக்கைக்கு இணங்கினர். அதன்படி ஆப்கானித்தானத்திலிருந்து அவர்கள் வெளியேற நேர்ந் தது. தோஸ்து முகம்மதுவின் மகனுரான அக்பர்கான் ஆங்கிலேயரை எதிர்ப்பதில் சிறப்பான பங்கைப் பெற்றார்.

பிரிட்டிஷ் படை திரும்புதல் (1842): 1842-ம் ஆண்டின் முதல் நாளன்று இறுதி உடன்படிக்கை ஏற் பட்டு, பிரிட்டிஷ் படை இந்தியாவுக்குத் திரும்பி வரத் தொடங்கியது. அப்படைக்கு இடையூறு ஏற்படா வண்ணம் காப்பாற்றுவதாக ஆப்கானியர் உறுதி அளித்தனர். ஆனால் அவ்வுறுதிமொழியை நிறைவேற்றவில்லை. மேலும் அப்படையினர், வழியில் பல துன்பங்களுக்குள்ளாயினர்; ஆப்கானியர் அவர்களைத் தாக்கிச் சூறையாடினர்; இரக்கமின்றிப் பல ஆங்கிலேயரின் தலைகளைக் கொய்தனர்.

தமது கூட்டத்தவரின் கொடுமைகளை அடக்க அக்பர்கானு லேயே இயலவில்லை. ஆங்கிலேயர் சிலர் தமது பெண்டி ருடனும் குழந்தைகளுடனும் அவரிடம் பிணையாக நின்று விட்டனர். ஆங்கிலப்படை நிலைகுலைந்தது; எழுத்துக் கடங்காத கொடுமைகட்கு உள்ளாயிற்று. காபூலுக்குச் சென்ற 16,000 பேர்களில் ஒரே ஒருவன்தான் தப்பிப் பிழைத்து ஜலாலாபாத்துக்குச் செய்தி கொண்டுவந்தான். அவனும் வருந்தத்தக்க நிலையில் தளர்வுற்றுத் தள்ளாடி வந்தானும்.* 120 பேர் அக்பர்கானின் கைதிகளாயிருந் தனர்.

ஆக்லண்டின் ஆப்கானியக் கொள்கை : பாமர்ஸ்டன் ருஷியருக்கு எதிரான கொள்கையை ஆதரித்தார். அதே கொள்கையைத்தான் ஆக்லண்டும் பின்பற்றினுர். ஆனுல் சூழ்நிலைக்கேற்றவாறு அக்கொள்கையைக் கவர்னர்-ஜெனரல் உருவாக்கியிருக்கவேண்டும். இவருடைய முனைப்பான நடவடிக்கைகளின் விளைவாகவே துயர நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. தோஸ்து முகம்மது ஆற்றல் வாய்ந்தவர். கொடிய ஆப்கானியர்களை அடக்கும் திறமை அவருக்கு உண்டு. அவர் ஆங்கிலேயருக்கு எக்கெடுதியும் செய்யவில்லை. ருஷியாவுடனே, பாரசீகத்துடனே அல்லது வேறு எந்த நாட்டுடனே பேச்சுவார்த்தைகள் நடத்த அவருக்கு இயல்பான உரிமை உண்டு. ஷாஷுஜாவோ ஆற்றலற்றவர். ஆப்கானியர்கள் அவரை விரும்பவில்லை. அவர்கள் தமது உரிமையில் அயலவர் தலையிடுவதை வெறுத்தனர். ஆகவே அந்நிலையில் ஆங்கிலேயர் மேற் கொண்ட நடவடிக்கைகள் தவறுனவை என்றே கூற வேண்டும். கவர்னர்-ஜெனரல் தாம் மேற்கொண்ட கொள்கையை ஒழுங்காக நிறைவேற்றவுமில்லை. அதன் விளைவுகள் பிரிட்டிஷாரின் சிறப்பைக் குன்றச் செய்தன. ஹீரட் முற்றுகையைப் பாரசீகர் கைவிட்டபிறகும் ஆக் லண்டு விடாப்பிடியாகத் தமது கொள்கையை நிறைவேற் றத் துணிந்தது அவருடைய அறிவின் குறைவையே

* *81, பக். 321.*

காட்டுகிறது. போர்த்துறையில் ஹீரட்டின் சிறப்பைப் பற்றியும் இந்தியாவுக்கு ருஷியரால் ஏற்படக்கூடும் அச்சத்தைப்பற்றியும் மிகைப்படுத்தப்பெற்ற கருத்துக்களை ஆக்லண்டு பரப்பிவந்தார். பொறுப்பு வாய்ந்த ஆங்கில அதிகாரிகள் பெரும்பான்மையும் அரசியல் வல்லமையுடன் செயலாற்றவில்லை. அவர்கள் ஆழ்ந்து சிந்திக்காத மக்கட் கூட்டத்தைப் போலவே நடந்துகொண்டதைக் காண்கிறோம். தோஸ்து முகம்மதுவைப்பற்றி ஆக்லண்டு கொண்ட கருத்து, அரசியல் அறிஞர்களால் தகுதியுடையதென்று ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. ஆகவே முதலாம் ஆப்கானியப் போரின் துயர விளைவுகளுக்கு ஆக்லண்டே முக்கிய காரணமாவர் என்று கூறலாம். அக்காலத்திலேயே தமது கொள்கையைப் பலர் குறை கூறி வந்ததை அவர் சிறிதும் பொருட்படுத்தவில்லை. ஆணவத்துடன் அவர் ஆற்றிய செயல் உலக நீதிக்கு முரணானது ; சிறந்த அரசதந்திர முறைக்கு ஏற்றதன்று ; அதனால் ஆப்கானியரும் சிந்து நாட்டு அமீர்களும் துயருற்றனர்.

இந்தியச் சிற்றரசர்கள் : அயோத்தி அரசர் நேர்மைக் கேடான வாழ்க்கை நடத்தி வந்தார். அவரிடம் பணியில் அமர்ந்திருந்த ஆங்கில அம்பட்டனொருவன் மாதமொன்றுக்கு 400 ரூபாய் ஊதியத்தையும் தனிப்பட்ட பல பரிசுகளையும் பெற்று வந்தான் என்ற செய்தி ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. அவனுக்கு முன்பிருந்த அம்பட்டன், பணியிலிருந்து விலகிய பொழுது ஏறத்தாழ 14 லட்ச ரூபாய்வரை பொருளைச் சேர்த்திருந்தானும். அரசர் 1837-ல் இறந்த பிறகு பட்டமேற்ற முகம்மது அலி (1837–42)யுடன் ஆக்லண்டு ஒரு உடன்படிக்கையைச் செய்து கொண்டார். அதன்படி அயோத்தியில் சீர்திருத்தங்களைப் புகுத்த வேண்டுமென்று ஆங்கிலேயர், வற்புறுத்தினர். அவ்வாறு செய்யாவிட்டால் அரசர் தமது அதிகாரங்களை இழக்க நேரிடும் என்றும் கவர்னர்-ஜெனரல் அறிவித்தார். ஆனால் அவ்வுடன்படிக்கையை இயக்கு

நர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இச்செய்தியைக் கவர்னர்-ஜெனரல் அயோத்தி அரசருக்குத் தெரிவிக்காமலேயே இருந்துவிட்டார். பேரசர் II-ம் அக்பரும் 1837-ல் இறந்தார். பின்னர் அவருடைய மகனுரான II-ம் பகதூர் ஷா (1837–57) பட்டமேற்ருர். சதாராவின் பிரதாபசிங் ஆங்கிலேயருக்கு எதிராகச் சூழ்ச்சி செய்த காரணத்தால் 1839-ல் தமது பட்டத்தை இழந்தார். அவருடைய உடன் பிறந்தாரான ஷாஜி அல்லது அப்பாசாகிப் அவருக்குப் பின் பட்டமேற்ருர். கர்னூல் நவாபு ஆங்கிலேயருடன் பகைத்துக் கொண்டதன் விளைவாக அவர் நாட்டைப் பிரிட்டிஷார் 1842-ல் தம்முடன் இணைத்துக் கொண்டனர்.

ஆக்லண்டின் ஆட்சி முறை : அமைதிக் கொள்கையைப் பின்பற்றுவதற்கேற்ற சிறந்த தகுதி ஆக்லண்டிடம் உண்டு என்பதில் ஐயமில்லை. ஆனுல் நலந்தரும் ஆட்சிமுறையில் சிறந்த கருத்தைச் செலுத்துவதற்குப் போதுமான காலம் அவருக்குக் கிடைக்கவில்லை. அவர் ஆட்சிக் காலத்தில் கோயில்களில் அரசியலாரின் கட்டுப்பாடுகள் நீங்கின ; யாத்திரிகர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த வரியும் நீங்கியது. மேலும் கோயில் திருவிழாக்களில் ஆங்கில அலுவலர்கள் பங்கு கொள்வதை அரசியலார் தடை செய்தனர். சென்னை மாகாணத்தில் இந்துக் கோயில்களுக்கு அரசியலாரின் பரிசுகளும் கிடைத்தன. இந்துக் கடவுளருக்கு அரசியல் முறையில் மரியாதைகள் செய்யப்பட்டன என்றும் அறிகிரேம். சென்னையில் இந்தியரின் சமயச் சார்பான செய்திகளில் பிரிட்டிஷ் அலுவலர்கள் ஊக்கங்கொண்டு ஒத்துழைத்தனர். அதைக்கண்ட வைதீகக் கிறித்தவர்கள் சென்னை மாகாணத்தில் அறியாமை சூழ்ந்திருப்பதாக கூறினராம். 1837–8-ல் வட இந்தியாவில் பஞ்சம் ஏற்பட்டது. அவ்வமயம் துயருற்ரேருக்கு அரசியலார் சில வசதிகளைச் செய்து தந்தனர். ஆப்கானியப்போருக்கு முன்பு கம்பெனியாரிடம் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் மிகுதிப்படியாக இருந்தது. ஆனுல் அப்போரின் விளைவாக அவர்கள் அதை இழந்ததுமன்றி 2 கோடி

ரூபாய் பற்றுக்குறையும் ஏற்பட்டுவிட்டது. கம்பெனியின் கடன்கள் பெருகின. 1842-ம் ஆண்டின் முற்பகுதியில் ஆக்லண்டு இந்தியாவை விட்டகன்ருர். அவருடைய கட்சியினரான விக்குகள் அவரை ஆதரித்துவந்ததால் அவர் தமது தோல்வியின் காரணமாகத் துயருறவேண்டிய நிலை ஏற்படவில்லை. மீண்டும் அவர் இங்கிலாந்தின் கடற்படைத் தலைமை அதிகாரி ஆனர். 1849-ல் அவர் வாழ்க்கை முடிவடைந்தது.

பகுதி 12

எல்லன்பரோவும் (1842-4) முதல் ஆப்கானியப் போரின் தொடர்ச்சியும் (1842)

எல்லன்பரோ பிரபு : எல்லன்பரோ, 1790-ல் பிறந்தார்; கேம்பிரிட்ஜ் செயிண்ட் ஜான் கல்லூரியில் பயின்ருர்; 1813-ல் பார்லிமெண்டின் உறுப்பினராஞர். மேற்பார்வைக் குழுவின் தலைமைப்பதவியை இவர் மும்முறை வகித்தார். இந்திய ஆட்சியைப்பற்றி முன்னேற்றக் கருத்துக்கள் இவர்பால் விளங்கின. ஆக்லண்டைவிட இவர் மேலானவர் என்பதில் ஐயமில்லை. இவருடைய ஆற்றல், சொல்வன்மை, அரசியல் வல்லமை முதலியவை போற்றத்தக்கன. ஆஞல் பகட்டாரவாரத்தில் இவருக்கு மிக்க விருப்பமுண்டு. 1842-ம் ஆண்டு பிப்ரவரி மாத இறுதியில் இவர் இந்தியாவுக்குக் கவர்னர்-ஜெனரலாக வந்துசேர்ந்தார். தமது முதற்கடமையாக இவர் ஆப்கானித்தானத்தில் பிரிட்டிஷாரின் பெருமையை நிலைநாட்டி அங்கிருந்த ஆங்கிலேயர்களை வெளியேற்ற முற்பட்டார்.

முதல் ஆப்கானியப் போரின் முடிவு (1842) : ஆப்கானித்தானத்தைக் கைப்பற்றும் முயற்சி பயனற்றது என்பதை எல்லன்பரோ நன்கு உணர்ந்தார். ஆஞல் மறுபடியும் ஆப்கானியப் படைகளைத் தோற்கடித்துவிட்டு அதன்பின்னர்த் தாமாகவே அந்நாட்டிலிருந்து திரும்பி வந்தால்தான் ஆங்கிலேயரின் பெருமைக்கு ஏற்பட்ட இழுக்கு நீங்குமென்றும் அவருக்குத் தோன்றியது. முதலில் அவர், ஷாஷுஜாவுக்காக ஆங்கிலேயர் தமது படைகளையும் பேரரசையும் இடையூறுகட்கு உட்படுத்த மாட்டார்கள் என்று அறிவித்தார். ஆப்கானியர்கள் ஆங்கிலேயருக்கு இழைத்த தீமைக்காகப் பழிக்குப்பழி வாங்க ஆவல் கொண்டிருந்த போலக், நாட் என்ற

படைத்தலைவர்களோ போரிலேயே நாட்டம் செலுத்தி வந்தனர். அவர்கள் கருத்தை உணர்ந்த எல்லன்பரோ தாம் முதலில் பிறப்பித்த ஆணையை மாற்றி, போலக்கும் நாட்டும் காபூல் செல்வதற்கு உத்தரவு கொடுத்தார். போலக் ஜலாலாபாத்துக்குச் சென்று அங்குப் பகைவரால் சூழப்பட்டிருந்த ஆங்கிலப்படைகளுக்குத் தேவையான உதவியைச் செய்தார். அங்கிருந்து அவர் காபூலுக்குச் செல்லும்வழியில் ஜக்தாலக், டெஸின் என்ற இடங்களில் ஆப்கானியர்களை முறியடித்தார். காபூலில் அவருக்குக் குறிப்பிடத்தக்க எதிர்ப்பு எதுவும் இல்லை. ஷாஷுஜா முன்பாகவே கொல்லப்பட்டுவிட்டார். தளபதி நாட், கசினியிலிருந்த அரண்களை அழித்துத் தரைமட்டமாக்கி விட்டு போலக்குடன் சேர்ந்துகொண்டார். அவர்கள் காபூலில் பால ஹிஸ்ஸார் என்ற பெரிய கடைத்தெருவை வெடிமருந்தைப் பயன்படுத்தி அழித்தனர். பகட்டை விரும்பிய எல்லன்பரோவின் ஆணைப்படி, போரின் வெற்றிக்கு அடையாளமாக கசினி முகம்மதுவின் சமாதியின் வாயிற் கதவுகளை அவர்கள் எடுத்துவந்தனர். அவை 800 ஆண்டுகட்கு முன் கசினி முகம்மது எடுத்துச்சென்ற சோமநாதர் கோயிலின் வாயிற் கதவுகள் என்று ஆங்கிலேயர் பெருமையுடன் பறைசாற்றினர். ஆனால் அவை "அண்மைக்காலத்தில் செய்யப்பட்ட போலிகள்" என்ற உண்மை பிறகு வெளியாயிற்று. எல்லன்பரோவின் செயலைக்கண்டு யாவரும் நகைத்தனர். ஷாஷுஜாவை அவரைச் சேர்ந்த மக்களே கொன்றனர் என்ற செய்தியை அறிந்த பின்னர் தோஸ்து முகம்மதுவை இந்திய அரசியலார் விடுதலை செய்தனர். அவர் தமது இராச்சியத்தைத் திரும்பப் பெற்று அமீர் ஆனார்.

போரின் விளைவுகள் : ஆப்கானியப் போரின் விளைவாக ஆங்கிலேயர் 20,000 மக்களையும் 15 கோடி ரூபாயையும் இழந்தனர். மேலும் பிரிட்டிஷாரின் இராணுவச் சிறப்புக்குப் பழுது ஏற்பட்டது. அக்குறையை நிறைவு செய்யும் வகையில் ஆங்கிலேயர் பிறகு சிந்து நாட்டிலும்

பஞ்சாபிலும் வெற்றியடைந்தனர். ஆப்கானியர் பிரிட்டி ஷாரை மிகுதியாக வெறுக்கத்தொடங்கினர். ஆக்லண்டு பின்பற்றிய முற்போக்குக் கொள்கைக்கு எதிர்ப்பு ஏற்பட்டது. தோஸ்து முகம்மது ஆங்கிலேயருக்குப் பகையாக இரண்டாவது சீக்கியப் போரில் பங்குகொண்டார். ஆனால் பிறகு 1855, 1857 ஆகிய ஆண்டுகளில் அவருடன் ஆங்கிலேயர் உடன்படிக்கைகள் செய்துகொண்டனர். அவர் சிப்பாய்க் கலகத்தின்பொழுது ஆங்கிலேயருக்கு எவ்வித இடையூறும் செய்யவில்லை. இறுதியாக முதலாம் ஆப்கன் போர், ஆங்கிலேயர் சிந்து நாட்டை இணைத்துக்கொள்வதற்கும் சீக்கியருடன் போர் நடத்துவதற்கும் வழிவகுத்தது. ஒரு குற்றம் மற்றொரு குற்றத்துக்கு வழிவகுத்ததைக் காண்கிறோம்,

பகுதி 13

சிந்து நாட்டைச் சேர்த்துக்கொள்ளல்
சிந்தியாவுடன் போர் (1843)

சிந்து நாட்டைச் சேர்த்துக்கொள்ளல் (1843) : பலூசித்தானத்து குடி ஒன்றைச் சேர்ந்த மீர்கள் அல்லது அமீர்கள் சிந்து நாட்டை ஆட்சிபுரிந்து வந்தனர். அக் குலத்தவர் மூன்றுபிரிவினர்களாகிச் சிந்துநாட்டைத் தமக்கிடை.யே பங்கிட்டு ஆட்சிபுரிந்து வந்தனர். ஆங்கிலேயர் பல ஆண்டுகளாக அந்நாட்டின்மீது தமது கருத்தைச் செலுத்தியிருந்தனர். 1809-ல் மிண்டோ பிரபு அமீர்களுடன் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டார். அதற்குப் பதினோர் ஆண்டுகளுக்குப் பிறகே அவ்வுடன்படிக்கை உறுதிப் பட்டது. 1832ல் பெண்டிங்கு செய்துகொண்ட வாணிக உடன்படிக்கையின்படி சிந்து நாட்டுக்குள் போர்க்கருவிகளை எடுத்துச்செல்லுதல் தடையுற்றது. 1838-ம் ஆண்டு முதல் சிந்து நாட்டுத் தலைநகரான ஐதராபாத்தில் ஒரு பிரிட்டிஷ் ரெஸிடெண்டு இருந்துவந்தார். ஆக்லண்டு 1832-ம் ஆண்டு உடன்படிக்கையைச் சிறிதும் மதிக்காமல் சிந்து நாட்டின் வழியாகப் படைகளைச் செலுத்தி ஆப்கானியரைத் தாக்கச் செய்தார் என்று முன்னரே கண்டோம். 1839-ல் ஆங்கிலேயர் அமீர்களைக் கட்டாயப்படுத்தி அவர்களுடன் பாதுகாப்புமுறை உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டனர். அதன்படி அமீர்கள் ஆண்டுக்கு மூன்று ல்ட்ச ரூபாயையும் ஷாஷுஜாவுக்குச் செலுத்த வேண்டிய கப்பம் என்ற பெயரால் ஒரு பெருந்தொகையையும் ஆங்கிலேயருக்குச் செலுத்தக் கடமைப்பட்டனர். இவ்வாறு சிந்து நாட்டின் உரிமைநிலை அழிந்து வந்தது. கராச்சியையும் பிரிட்டிஷார் தம் வசப்படுத்தினர். முதலாம் ஆப்கானியப் போர்க் காலத்தில் அமீர்கள் ஆங்கிலேயருக்கு அடங்கியே ஒழுகினர். ஆயினும் முன்னவரின் மீது பல குற்றங்களைப் பின்னவர் சுமத்தினர். எல்லன்

பரோ, 1842-ல் சர் சார்லஸ் நேப்பியர் என்பாரின் தலைமையில், சிந்து நாட்டுக்கு ஒரு படையை அனுப்பினர். அப்படைத்தலைவர் முரட்டுத்தனம் படைத்தவர். மேலதிகாரிகளையும் மதியாமல் தமது உளப்போக்கின்படியே செயலாற்றும் துணிவு வாய்ந்தவர். அவர் அமீர்களின் மீது புதிய உடன்படிக்கையைச் சுமத்தினர். அவர்கள் தரவேண்டிய பொருளுக்குப் பதிலாக நிலப்பகுதிகளையே பெறுவதற்கு முயன்றார். அமீர்களுக்கு இருந்த காசு அடிக்கும் உரிமையையும் பறிக்க முற்பட்டார்; அவர்கள் உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு முன்பே வலுக்கட்டாயமாக நிலப்பகுதிகளைக் கைப்பற்ற முனைந்தார். அவர் தம் கோட்டைகளில் ஒன்றை அளித்தனர். அவருடைய அளவுகடந்தசெயல்கள் அமீர்களுக்கு ஆற்ருெணுச் சினத்தை மூட்டின. நல்வாய்ப்பற்ற அவர்கள் தம் நாட்டின் பெருமையையும் உரிமைகளையும் இழப்பதைக்காட்டிலும் போர் புரிவதே மேல் எனக்கருதினர்; சினங்கொண்டு பிரிட்டிஷ் ரெஸிடெண்ட் தங்குமிடத்தைத் தாக்கினர். நேப்பியர் எதிர்பார்த்திருந்த வாய்ப்பு அவருக்குக் கிட்டிவிட்டது. போர் மூண்டது. மியானி என்ற இடத்தில் நேப்பியர் அமீர்களைத் தோற்கடித்தார். தாபா என்னுமிடத்திலும் சிந்து நாட்டவரை ஆங்கிலேயர் முறியடித்தனர். வெற்றிவீரர்கள் ஐதராபாத்தில் கொள்ளையடித்தனர். நேப்பியர் 70,000 பவுன் மதிப்புள்ள கொள்ளைப் பொருள்களைப் பெற்றார். 1843-ல் ஆங்கிலேயர் சிந்து நாட்டைத் தம்முடன் இணைத்துக்கொண்டு அமீர்களை நாட்டைவிட்டு விரட்டினர். ரெஸிடெண்டாயிருந்த அவுட்ராம் என்பார்கூட நேப்பியரின் கொள்கையைக் கண்டித்தார். ஆனால் அக்கொள்கையைக் கவர்னர்-ஜெனரல் ஆதரித்தார். சிந்துநாடு ஆங்கிலேயருடன் சேர்ந்தால் மக்களுக்கு நன்மை ஏற்படும் என்ற ஒரே கருத்துடன் நேப்பியர் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டார். 1847 வரை அவரே அந்நாட்டின் கவர்னராகப் பணியாற்றினர். அவருடைய ஆட்சிமுறை உறுதியாகவும் சிறப்புடையதாகவும் அமைந்தது. ஆனால்

ஆங்கிலேயர் அந்நாட்டைக் கைப்பற்றிய செயல் நேர்மைக்கு முரணானது. மேலும் அந்நாட்டுச் செய்திகள் முழுவதையும் கவர்னர்-ஜெனரல் அறிந்துகொள்ளவில்லை. 15 ஆண்டு காலத்தில் பிரிட்டிஷார் 2½ கோடி ரூபாய் வரை இழக்க நேர்ந்தது. சிந்துப் படையெழுச்சி ஆங்கிலே யரின் சிறப்புக்கு ஓர் இழுக்கை விளைவித்தது. ஆனால் அது இந்தியாவில் பிரிட்டிஷ் பேரரசின் எல்லையைப் பெருக்கியது.* அச்செயலை இங்கிலாந்தில் இயக்குநர் களும் வேறுசிலரும் கண்டித்தனர். ஆனால் அமீர்களுக்கு அந்நாட்டைத் திரும்ப அளிக்க யாரும் முன்வரவில்லை.

குவாலியருடன் போர் (1843): ஜங்கோஜிராவ் சிந்தியா 1843-ல் இறந்தபின் அவருடைய தத்துப்பிள்ளை யான ஜயஜிராவ் பட்டமேற்றார். அவருக்கு அப்பொழுது வயது ஒன்பதுதான் ஆகியிருந்தது. ஆதலால் அவரு டைய மாமனை கிருஷ்ணராவ் என்ற மாமாசாகிபு பிரதிநிதியாக இருந்து ஆட்சி நடத்தினர். அவ்வேற் பாட்டை எல்லன்பரோவும் ஒப்புக்கொண்டார். ஜங் கோஜிராவின் மனைவி - பதின் மூன்று வயதுப் பெண் - தாதாசாகிப் என்பாரின் அறிவுரைப்படி கிருஷ்ண ராவைப் பதவியினின்று நீக்கி விட்டார். இதன் விளை வாகக் குவாலியரில் சூழ்ச்சிக் கலகம் பெருகியது: படை வீரர்கள் தம் விருப்பம் போல் செயலாற்றத் தொடங்கினர்; சீக்கியப் படையும் கட்டுக் கடங்கவில்லை. மகாராஜா ஷெர் சிங் என்பார் கொலையுண்டார். அந்நிலையில் மராட்டியப் படையும் சீக்கியப் படையும் ஒன்று சேர்ந்து பிரிட்டிஷா ருக்கு இன்னல் விளைவிக்கக்கூடுமென்ற அச்சம் கவர்னர்-ஜெனரலுக்கு ஏற்பட்டது. ஆகவே அவர் குவாலியரின் உள்நாட்டுச் செய்திகளில் தலையிட்டார். மேலும் 1804-ம் ஆண்டுப் பாதுகாப்பு முறை உடன்படிக்கையைச் சிந்தியா ஒழுங்காக நிறைவேற்றவில்லை. ஆகவே, 1843-ம் ஆண் டின் இறுதியில் எல்லன்பரோ தமது படைத் தலைவருடன் சம்பல் ஆற்றைக் கடந்து குவாலியருக்குச் சென்றார்.

* *64, III பக். 251*

அமைதியான ஒரு ஏற்பாட்டைச் செய்து கொள்ள வேண்டுமென்பது தான் அவர்களுடைய நோக்கமாயிருந்தது. ஆனால் அவர்களுடன் பிரிட்டிஷ் படையும் சென்றதால் அவர்கள் போர் தொடுப்பதாகவே சிந்தியாவின் போர்வீரர்கள் கருதினர். மகாராசபுரம், பணியார் என்ற இடங்களில் நடந்த இரண்டு போர்களில் குவாலியர் படைகள் தோல்வியுற்றன. இப்போரை நான்காவது மராட்டியப் போர் என்று கூறுவது மரபன்று. போருக்குப் பின் குவாலியர் பாதுகாப்புமுறை உடன்படிக்கையை உறுதியாக ஏற்றுக்கொண்டது. அந்நாட்டுப் படையினால் தமக்கு ஏற்படக்கூடும் இடையூறுகளை ஆங்கிலேயர் விலக்கிக் கொண்டனர். குவாலியரில் உள்நாட்டுப் படையினரின் எண்ணிக்கையைக் குறைத்துவிட்டு ஆங்கிலேயர் தமது படையை அங்கே நிறுவினர். மகாராசாவின் இளமை காரணமாகப் பிரிட்டிஷ் ரீஜண்டு அந்நாட்டு ஆலோசனைக் குழுவைக் கட்டுப்படுத்தி வந்தார். கவர்னர்-ஜெனரல் குவாலியரைத் தம்முடன் இணைத்துக் கொள்ளவில்லை. எனினும் அவர் அந்நாட்டில் பின்பற்றிய கொள்கையைத் தாய்நாட்டினர் வெறுத்தனர் அவர்கள் எல்லன்பரோவைத் திரும்ப அழைத்தமைக்கு இது ஒரு சிறப்பான காரணமாகும்.

எல்லன்பரோவின் ஆட்சிமுறையும் பிற்கால வாழ்க்கையும் : 1843-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பிரிட்டிஷ் இந்தியாவில் அடிமை முறை ஒழிந்தது. பிரிட்டிஷ் பேரரசில் அடிமை முறையைத் தடை செய்யும் சட்டத்தைப் பார்லிமெண்டு 1833-ம் ஆண்டிலேயே நிறைவேற்றியது. அடிமைகளின் தலைவர்கள் இழப்பீட்டைப் பெற்றனர். ஆனால் இந்தியாவில் அடிமை விடுதலை இயக்கத்துக்கு எதிர்ப்பு எதுவும் இல்லாததால் இழப்பீட்டைப் பற்றிய சிந்தனையே எழவில்லை. சீட்டுப் போட்டுப் பரிசுகள் கொடுக்கும் "லாட்டரி" முறையையும் எல்லன்பரோ ஒழித்தார். அவருக்கு முன்பு அம்முறையைப் பல கவர்னர்-ஜெனரல்கள் விரும்பிப் போற்றி வந்தனர். மாகாணத்

தலைநகரங்களில் அம்முறை மிகுதியாகப் பரவியிருந்தது. எல்லன்பரோவின் ஆணைப்படி அரசியலார் அம்முறையைக் கைவிட்டனர். இவராட்சியில் உள்நாட்டுக் காவல் முறை சீர்திருத்த மடைந்தது. இவர் விக்டோரியா மகா ராணி (1837-1901)யின் அன்புக்கு உரியவராயிருந்த போதிலும் இயக்குநர்கள் இவரைத் திரும்ப அழைக்க முடிவு செய்தனர். இவர் முதலில் மேற்பார்வைக் குழுவின் தலைவராயிருந்தவர் என்பதை நாமறிவோம். அப்பொழுது இயக்குநர்சபை அவருக்கு அடங்கியிருந்தது. கவர்னர்-ஜெனரலானபின், தாம் இயக்குநர் சபைக்குக் கட்டுப்பட்டவர் என்பதை மறந்து எல்லன்பரோ தமது பழைய மேலான நிலையை மனத்திற்கொண்டே இயக்குநர்கட்குச் செருக்குடன் கடிதங்கள் எழுதுவது வழக்கமாயிருந்தது. இதனால் அவர்களுக்கு இவர்மீது வெறுப்பு ஏற்பட்டது. மேலும் இக்கவர்னர்-ஜெனரல் இராணுவத்துறையில் மிகுதியான அக்கரை கொண்டு இயக்குநர்களின் அன்புக்குரிய சிவில்துறைப் பணியாளரை இழிவாக நடத்தி வந்தார் என்ற குற்றச்சாட்டும் தோன்றியிருந்தது. போர் விருப்பமுள்ள இவருடைய கொள்கைகளை இயக்குநர்கள் அறவே வெறுத்தனர். அமைதிக்கொள்கையை நாடிய அவர்கள், எல்லன்பரோவின் நாடு இணைக்கும் முறையையும் விரும்பவில்லை. ஆகவே அவர்கள் ஹார்டிஞ்சு என்பாரை இந்திய கவர்னர்-ஜெனரலாக அனுப்பிவைத்தனர். 1844-ல் எல்லன்பரோ இங்கிலாந்துக்குத் திரும்பினர். எல்லன்பரோ (எர்ல்) கோமான் என்ற முறையில் அங்கே அவர் சில பதவிகளை வகித்துப் பின் 1871-ல் உயிர் நீத்தார்.

பகுதி 14

ஹார்டிஞ்சு (1844-8) ; முதல் சீக்கியப் போர் (1845-6)

சர் ஹென்றி ஹார்டிஞ்சு : ஹென்றி ஹார்டிஞ்சு 1785-ல் பிறந்தார் ; 1799-ல் இராணுவத்தில் சேர்ந்தார் ; தீபகற்பப் போரில் பங்குகொண்டு சில வெற்றிகளைப் பெற்றார் (1811) ; 1815-ல் நைட் பட்டம் அவருக்குக் கிடைத்தது. அதே ஆண்டில் அவர் தமது இடது கையை இழந்தார். 1816-ல் அரசியலார் அவருக்கு நெப்போலியனின் வாளைப் பரிசாக அளித்தனர். 1820 முதல் 1844 வரை ஹார்டிஞ்சு, பார்லிமெண்டு அலுவல்களில் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தார். அக்காலத்தில் அவர் உயர்ந்த சில அரசியல் பதவிகளையும் வகித்தார். அவரிடம் இராணுவத் திறமையும் அரசியல் ஆற்றலும் கலந்து விளங்கின என்ற செய்தி பாராட்டத்தக்கது.* 1844-ம் ஆண்டு ஜுலை மாதத்தில் இவர் இந்தியாவுக்குக் கவர்னர்-ஜெனரலாக வந்தபொழுது இவருக்கு வயது அறுபதாகி விட்டது.

இரஞ்சித்சிங்குப்பின் பஞ்சாபின் நிலை (1839) : இரஞ்சித்சிங் 1839-ல் இறந்தார். அவருக்குப் பின் பட்டம் பெற்றவர்கள் வலிமை வாய்ந்தவரல்லர். அவருடைய மகனுரான கரக்சிங் ஆங்கிலேயரின் உதவியைக் கொண்டே மூன்று ஆண்டுக்காலம் தம் நிலைமையைக் காப்பாற்றிவந்தார். அரசப்பதவியும் அமைச்சராட்சியும் நிலைகுலைந்திருந்தன. குழப்பம் மேலிட்டது. கொலையும் கொடுமையும் மிகுந்தன. கல்சா படையினர் தம் விருப்பம் போல் செயலாற்றிவந்தனர். சீக்கியர் தோஸ்து முகம்மதுவுடன் சேர்ந்து சூழ்ச்சி செய்வதாக ஆங்கிலேயர் ஐயுற்றனர். கரக்சிங்கும் அவர்மகனும் 1840-ல் இறந்

* *40, பக். 50.*

தனர். அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் ஷெர்சிங் என்பார் பட்டமேற்ருர். இவரைப் பலர் இரஞ்சித்சிங்கின் மகன் என்று கருதினர். இவரால் தமது படையைக் கட்டுப்படுத்த இயலவில்லை. 1842-ல் கரக்சிங்கின் மனைவியாரும் 1843-ல் ஷெர்சிங்கும் வேறுபலரும் கொல்லுண்டனர். படைவீரரின் ஆதிக்கமே நாட்டில் நிலவியது. பலரால் இரஞ்சித்சிங்கின் மற்ருெரு மகன் என்று கருதப்பட்ட துலீப்சிங் என்ற ஐந்து வயது சிறுவனைச் சீக்கியப் படையினர் 1843-ல் மகாராசாவாக்கினர். ஜிண்டான் என்ற ஆடலணங்கே துலீப்சிங்கின் தாயார் என்று மக்கள் கருதினர். அவ்வம்மையார் அரசப்பிரதிநிதியாக அமர்ந்தார். அவருக்குத் தம் காதலரான அமைச்சர் லால்சிங்கின் உதவி கிடைத்தது. ஆனுல் நாட்டில் உண்மை அதிகாரம் படைத்தலைவர் தேஜ்சிங் என்பாரிடமும் இராணுவத்துறைப் பஞ்சாயத்துக்களிடமும் இருந்துவந்தது.

முதலாம் சீக்கியப் போர்(1845-6): பஞ்சாபின் குழப்ப நிலையைக் கண்ட ஆங்கிலேயர் சட்லெஜ் ஆற்றுப்பகுதியில் தமது எல்லைப்புறத்தின் காவலை வலிமைப்படுத்திக் கொள்வதில் கருத்தைச் செலுத்தினர். பிரிட்டிஷார் தம் மீது வலியப் போர் தொடுக்கக் கூடுமென்ற அச்சம் சீக்கியருக்கு ஏற்பட்டது. அவ்வாறு போர் தோன்றின் தமது உரிமையை எவ்வாற்ருனும் காப்பாற்றிக் கொள்ளவேண்டுமென்ற முடிவுக்குச் சீக்கியர் வந்தனர். இராணிப் பிரதிநிதி, சீக்கியச் சேனையைக் கட்டுப்படுத்த இயலாத நிலையிலிருந்தார். அவர் தமது நலத்தைக் கருதி அச்சேனையை ஆங்கிலேயருடன் பொருதவிட்டு அதன் ஆணவத்தை அடக்கத் திட்டமிட்டார். அதன் விளைவாகத் தேஜ்சிங்கும் லால்சிங்கும் சீக்கியப் படையுடன் 1845-ல் சட்லெஜைக் கடந்து, தில்லியில் சூறையாடச்சென்றனர். அப்பொழுதும் சீக்கியச்சேனை எந்தத் தளபதிக்கும் அடங்கியிருக்கவில்லை. ஹார்டிஞ்சு, பிரிட்டிஷ் இந்தியாவில் சீக்கியர் படையெடுத்தமை முறையற்ற செயல் என்று அறிக்கை விடுத்து அவர்களை எதிர்க்க முற்பட்டார். போர் கடுமை

யாக நடைபெற்றது. 54 நாட்கள் நான்கு இடங்களில் கொடிய போர் நிகழ்ந்தது. இந்தியாவில் அதற்குமுன் ஏற்பட்ட எந்தப் போரையும்விட மிகுதியான அளவுக்கு இப்போர்களில் வன்மையான எதிர்ப்பும் கொலைக்களரியும் விளைந்தனவாம்.*ஆங்கிலப் படைத்தலைவர் சர் ஹியூ கஃப் சீக்கியப்படையை முதன் முதலில் முட்கியில் (பிரோஸ்பூர் மாவட்டம்) கண்டு அதை முறியடித்தார். ஆனால் அப் போரில் சர் ராபர்ட் சேல் என்ற ஆங்கிலத் தலைவர் இறந்துவிட்டார். அடுத்த படியாக பிரோஸிஷாரில் (பிரோஸ்பூருக்கும் முட்கிக்கும் இடையில் உள்ளது) நடந்த போரில் ஆங்கிலத் தளபதி ப்ராட்புட் (Broadfoot) உயி ரிழந்தார். ஆனால் முடிவில் கஃப், லால்சிங்கைத் தோற் கடித்தார். எனினும் அவ்வமயம் பிரிட்டிஷ் படை வருந்தத் தக்க நிலையிலிருந்தது. தேஜ்சிங் அவ்வாய்ப்பைப் பயன் படுத்திக் கொள்ளத் தவறிவிட்டார். 1846-ம் ஆண்டின் தொடக்கத்தில் அலிவால் (லூதியானாவுக்கு அருகில்) என்னுமிடத்தில் ஆங்கிலத் தலைவர் சர் ஹாரி ஸ்மித், சீக்கி யரை வென்று சிறப்பானதோர் வெற்றியை அடைந்தார். அதைத் தொடர்ந்து ஸ்மித், கஃப் என்ற இருதலைவர்களும் லாகூர் மாவட்டத்திலுள்ள சோப்ரானுக்கருகில் சீக்கியரை முடிவாக முறியடித்துக் கொடுமையாகப் பழிதீர்த்துக் கொண்டனர். போர்க்களத்திலிருந்த கவர்னர்-ஜெனரல் பிரிட்டிஷ் படையைப் பின்தொடர்ந்து லாகூருக்குச் சென்று அதைத் தம் வசப்படுத்திக்கொண்டார். 1846-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் அவ்விடத்திலேயே சீக்கிய ருடன் ஓர் உடன்படிக்கையையும் செய்துகொண்டார். அதன்படி ஆங்கிலேயர், ஜலந்தர் தோஆப் (சட்லெஜுக் கும் பியாஸுக்கு மிடைப்பட்ட பகுதி), காச்மீரம், ஹஸாரா என்னுமிடங்களைப் பெற்றனர். அரைக்கோடி ரூபாயைச் சீக்கியர் போர்ச் செலவுக்கு ஈடாக ஆங்கிலேயருக்குக் கொடுத்தனர். சீக்கியர் படை, அளவிற் குறைந்தது. அவர்கள் ஆங்கிலேயரின் உடன்பாடு இன்றி எந்த

* 64, III, பக். 271.

ஐரோப்பியரையும் தமது பணியில் அமர்த்திக்கொள்ளக் கூடாது என்று முடிவாயிற்று. பிரதம அமைச்சராகப் பணியேற்ற லால்சிங்கின் அறிவுரைப்படி மகாராசா துலீப் சிங் ஆட்சிபுரிய இணங்கினர். ஹென்றி லாரன்ஸ் என்ற ஆங்கிலேயர் பஞ்சாபில் ரெஸிடெண்டாக நியமனம் பெற்ருர். ஜம்முவின் அரசராயிருந்த குலாப் ஒருகோடி ரூபாயைக் கொடுத்துவிட்டு ஆங்கிலேயரிடமிருந்து காச்மீரத்தைப்பெற்ருர். குலாப் முதலில் இரஞ்சித்சிங்கின் பணியாளாயிருந்தார் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. வெற்றிபெற்ற கவர்னர்-ஜெனரலுக்கு வைகௌண்ட் ஹார்டிஞ்சு என்ற பட்டம் கிடைத்தது. படைத்தலைவர் கஃப், பாரன் என்னும் பெருமகன் பட்டத்தைப் பெற்ருர். லால்சிங் குலாப்சிங்குக்குள திராகச் சூழ்ச்சி செய்ததால்,ஆங்கிலேயர் முன்னவரைப் பதவியினின்று விலக்கினர். சீக்கிய சர்தார்களின் வேண்டுகோளின்படி ஆங்கிலேயர் லாகூரில் இரண்டாவது உடன்படிக்கையையும் 1846-ம் ஆண்டின் முடிவில் செய்துகொண்டனர். அதன்படி எட்டுத் தலைவர்களடங்கிய அரசப்பிரதிநிதிக்குழு, லாரன்ஸின் தலைமையில் பஞ்சாபில் செயலாற்றத்தொடங்கியது. அரசரின் இளமைப்பருவம் காரணமாக லாகூரையும் பிறகோட்டைகளையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பைப் பிரிட்டிஷார் ஏற்றுக்கொண்டனர். அதற்காக அவர்களுக்கு அரசர் 22 லட்ச ரூபாய் கொடுக்க இசைந்தார். செயல்முறையில் பஞ்சாபில் லாரன்ஸின் ஆட்சியே அமைந்திருந்தது. அவர் பல சீர்திருத்தங்களை நிறைவேற்றினர். சிறப்பாக சதி ஒழிப்பும் குழந்தைக் கொலைத்தடையும் குறிப்பிடத்தக்கவை. அரசி ஜிண்டான், மேலும் சூழ்ச்சி செய்துவந்ததால் 1847-ல் ஆங்கிலேயர் அவரை லாகூரை விட்டு விரட்டினர். பஞ்சாபில் ஏற்பட்ட புதிய ஆட்சியால் உள் நாட்டுத் தலைவர்கள் மனஅமைதி பெற்றுவிடவில்லை, சீக்கியப்படையினரும் வெறுப்புற்றிருந்தனர். ஆகவே மற்ரெரு போர் ஏற்படும் சூழ்நிலை அங்கே காணப்பட்டது. 1848-ம் ஆண்டின் தொடக்கத்தில் லாரன்ஸும் ஹார்டிஞ்சும் தம் நாட்டுக்குத் திரும்பிச் சென்றனர்.

ஆட்சிமுறை : சிப்பாய்களுக்குக் கசையடி கொடுத்து ஒழுக்க முறையை நிலைநாட்டும் பழக்கத்தை ஹார்டிஞ்சு மறுபடியும் புகுத்தினர். அப்பழக்கம் நீக்கப்பட்ட செய்தியை நாம் முன்னர்ப்பார்த்தோம். நீக்கப்பட்டிருந்ததால் நன்மை ஏற்படவில்லை என்று உணர்ந்த ஹார்டிஞ்சு மீண்டும் அதைச் செயல்முறைக்குக் கொணர்ந்தார். கம்பெனியின் படைகளின் அளவை இவர் குறைத்தமை துணிவான செயலே என்று கூறவேண்டும். அதனல் நன்மையும் விளைந்தது. ஹார்டிஞ்சு, சதியையும் குழந்தைக் கொலையையும் ஒழிக்குமாறு இந்தியச்சிற்றரசர்களைத் தூண்டினர். ஒரிஸ்ஸாவில் கோண்டர் என்ற கூட்டத்தினர் உழவுத்தொழில் வளர்ச்சியடைவதற்காக மனித பலி கொடுக்கும்வழக்கத்தைப் பின்பற்றி வந்தனர். அதை எதிர்ப்பதற்காக ஹார்டிஞ்சு ஓர் இயக்கத்தைத் தொடங்கினர். மேலும் இந்தியாவில் புகைவண்டித்தொடர் அமைப்பதைப்பற்றி ஓரளவுக்குக் கருத்தைச் செலுத்தினர். கங்கை யமுனை ஆறுகளுக்கிடைப்பட்ட நிலத்தைப் பண்படுத்திச் செழிப்பாக்குவதற்காகக் கால்வாய்கள் அமைக்கும் முயற்சியிலும் ஈடுபட்டார். ஆனல் அவ்வேலை 1856-ல் தான் முடிவுற்றது. ஹார்டிஞ்சு, பொதுப்பணித்துறை அலுவலரை அமர்த்துவதில் திறமை ஒன்றையே பெரிதாகக் கருதிச் செயலாற்றினர். இச்செய்தியைப் பொறுத்தவரை அவர் நேர்மையற்ற வகையில் நடந்துகொண்டார் என்று யாரும் அவர்மீது குற்றம் சாட்டுவதற்கில்லை. கல்வி நிலையங்களில் சிறப்பான வெற்றியுடன் தேர்வு பெறும் மாணவர்களுக்குப் பொதுப் பணித்துறையில் பதவிகள் வழங்கவேண்டுமென்று தீர்மானம் நிறைவேறுவதற்கு ஹார்டிஞ்சு சிறந்த காரணமாவர். இவர் ஆக்ராவில் தாஜ்மஹாலையும் தில்லிக்கு அருகில் குதுப்மினரையும் சீர்திருத்தினர். முதன் முதலாக அக்கட்டடங்களைப் புகைப்படம் எடுத்தவர் இவரேயாகும். ஹார்டிஞ்சு இராணுவச் செலவுகளில் சிக்கனத்தைக் கையாண்டார் ; கல்வி வளர்ச்சிக்காகப் மிகுதியாக பொருளைச் செலவழித்தார் ; அஸ்ஸாமில் தேயிலைச் சாகுபடி வளர்ச்சியை ஆதரித்து

ஒரு புதிய கைக்தொழிலேயும் நிறுவினுர். ஆட்சித்துறை யில் வேறு பல சிறிய சீர்திருத்தங்களேயும் நிறைவேற் றினுர். அயோத்தியில் அரசர் அஜ்மத் அலி (1842-7)க்குப் பிறகு வஜீத் அலி (1847-56) பட்டமேற்ருர். 1847-ல் கவர்னர்-ஜெனரல் அவருக்கு, ஆட்சிமுறையைச் சீர் திருத்த வேண்டுமென்று அறிவுரை கூறினுர். அவ்வாறு அவர் செய்யத் தவறுவாராயின் பிரிட்டிஷாரே அயோத்தி யின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொள்ள நேரும் என் றும் எச்சரித்தார். தரங்கம்பாடி, செராம்பூர் முதலிய டேனிஷ் குடியேற்றப் பகுதிகளே ஆங்கிலேயர் 1845-ல் 12½ லட்ச ரூபாய் விலேகொடுத்து வாங்கிக்கொண்டனர்.*

வைகௌண்ட் ஹார்டிஞ்சு : வயது முதிர்ந்த காலத் திற்கூட ஹார்டிஞ்சு, ஹேஸ்டிங்ஸ் பிரபுவைப் போலவே ஆற்றலுடனும் ஊக்கத்துடனும் முறையாகப் பணியாற்றி னுர். போர்த்துறையில் மட்டுமின்றி சிவில்துறையிலும் அவ ருக்கு ஆர்வம் இருந்தது. சலனபுத்தி யென்பது அவரிடம் சிறிதும் கிடையாது. அவர் அருள் நிறைந்த உள்ளம் படைத்தவர்; நடுநிலேயுடன் ஆராயும் இயல்பு கொண்டவர். அவர், பஞ்சாபைத் தம் நாட்டுடன் இணைத்துக்கொள்ள வில்லே என்பது நோக்கத்தக்கது. தமது ஏற்பாட்டினுல் குறைந்தது ஏழு ஆண்டுகளுக்காவது இந்தியாவில் அமைதிக்கு இடையூறு ஏற்படாது என்ற நம்பிக்கை அவ ருக்கு இருந்தது. இவர், வெல்லிங்டனுக்குப் பிறகு 1852ல் இங்கிலாந்தின் படைத்தலேவராஞர். 1856-ல் இவருடைய வாழ்க்கை முடிவடைந்தது.

---

* *65*, பக். *116-121*.

பகுதி 15

கல்வி வளர்ச்சி

நாம் பார்த்துவரும் காலப்பகுதியில் (1823–1848) அரசியலார், கல்வி வளர்ச்சியில் சிறந்த ஊக்கம் கொண்டிருந்தனர். டேவிட் ஹேர் என்பார், 1800-ல் தமது 25-வது வயதில் கல்கத்தாவுக்கு வந்துசேர்ந்தார். அதுமுதல் 1816 வரை கைக்கெடிகாரத்தொழில் மூலம் தாம் ஈட்டிய பொருள்களை எல்லாம் கல்வி வளர்ச்சிக்காகச் செலவிட்டு வந்தார். கல்வி, அச்சகத்தொழில் முதலிய தொடர்பான விரிநிலை தழுவிய இயக்கங்களில் சிறந்த பங்குகொண்டு 1842-ல் தாம் இறக்கும் வரை உழைத்தார். வங்காளத்தில் பொதுமக்கள் பெண் கல்வியை ஆர்வத்துடன் போற்றவில்லை. கவர்னர்-ஜெனரலின் ஆலோசனைக் குழுவில் உறுப்பினராயிருந்த ட்ரிங்க்வாட்டர் பெத்யூம் என்பார், 1849-ல் பெண்களுக்காகப் பள்ளிக்கூடமொன்றை நிறுவி அதற்குப் பொருள் உதவி அளித்துவந்தார். சென்னை மாகாணத்தில் மிகுதியான பாதிரிமார்கள் கல்விநிலையங்கள் பலவற்றை அமைத்தனர். கீழ்நாட்டுக் கல்வியை மெக்காலே புறக்கணித்தார் என்பதைக் கண்டோம் அவருடைய அக்கொள்கைக்குச் சிறிது சிறிதாக ஆதரவு குறைந்துவந்தது. வங்காளத்தின் ஆசியச் சங்கம், கீழ்நாட்டு நூல்களை வெளியிடுவதற்கு மானியங்களைப் பெற்றது. 1835-ல் கல்கத்தாவிலும் 1845-ல் பம்பாயிலும் மருத்துவக் கல்லூரிகள் தோன்றின. 1847-ல் ரூர்க்கி (உ. பி.) என்னுமிடத்தில் தாம்சன் பொறித்தொழிற் கல்லூரி ஏற்பட்டது. செய்தித்தாள் தொழிலைப்பற்றிய அரசியலார் கருத்துக்களை நாம் முன்னரே கண்டோம்.

பகுதி 16

முகம்மதிய சமய, இலக்கியப் பணிகள்

1831-ல் இறந்த சையது அஹமது என்ற முகம்மதிய சமயச் சீர்திருத்த வீரர் முஸ்லிம் மதத்தில் தூய்மைக் கொள்கையைப் பரப்பி வந்தார். அப்துல் வஹாப் (இறப்பு–1791) என்பாரின் பெயரால் இயங்கி வந்த வாஹாபி சீர்திருத்த இயக்கத்தின் கருத்துக்களை மெக்காவில் சையது அஹமது நன்கு கற்றுணர்ந்தார். மௌலானு அப்துல் காதர் தேஹ்லவி என்பார் குரானை 1803-ல் உருது உரைநடையில் மொழி பெயர்த்தார். இம்மொழி பெயர்ப்பு 1822-ல் வெளியாயிற்று. அவ்வாசிரியர் 1826-ல் இறந்தார். வைதீக முகம்மதியர்கள் அம்மொழிபெயர்ப்புச் செயலை ஆதரிக்க மறுத்துவிட்டனர். இனி, மௌல்வி கரமத் என்ற பெரியார் இஸ்லாமில் ஏற்பட்டிருந்த மூட நம்பிக்கைகளை எதிர்த்தார் ; வாஹாபிக் கொள்கைகளையும் மறுத்தார். ஆயினும் இவர், சையது அஹமதை இஸ்லாமியச் சீர்திருத்த வாதி என்று ஏற்றுக் கொண்டார். லக்னௌவில் புகழ்பெற்ற உருதுக் கவிகள் பலர் இலக்கியத் துறையில் தொண்டாற்றி வந்தனர். சிறப்பாக, அனிஸ் (1801-74), தபீர் (1803-75), என்போர் குறிப்பிடத் தக்கோராவர். உருது நாடகக் கலையில் அமநத் என்பார் ஓர் புது முயற்சியாளராக விளங்கினர். அக்கலையை அயோத்தி நாட்டு வஜீத் அலி ஆதரித்தார். நாம் பார்த்துவரும் காலப் பகுதியில்தான் நீதி மன்றங்களில் பாரசீக மொழிக்குப் பதிலாக வங்காள மொழியைப் பயன்படுத்தி அயல் நாட்டுப் பாதிரிமார்களும் வங்காளியரும் வங்காள மொழி வளர்ச்சிக்கு ஊக்கமளித்து வந்தனர்.

பகுதி 17

வில்சன், இராம் மோகன்ராய் (தொடர்ச்சி), தேவேந்திர நாத் தாகூர்

வில்சன் : வில்சனைப் பற்றி முன்னரே குறிப்பிட்டிருக்கிறோம். சதி ஒழிப்பில் அவர் பங்கு கொண்டார். இவர் 1786-ல் பிறந்தவர் ; உதவி அறுவை மருத்துவராக இந்தியாவுக்கு வந்தார்; கல்கத்தாவில் நாணயம் அச்சடிக்கும் சாலையிலும் பணியாற்றினார். 1833-ல் இவர் இங்கிலாந்துக்குத் திரும்பி ஆக்ஸ்போர்டில் வடமொழிப் பேராசிரியரானார். பின்னர், கிழக்கிந்தியா நிலையத்தில் இருபது ஆண்டுகட்கு மேலாகப் புத்தகநிலையத் தலைவராகப் பணியாற்றி வந்தார். இவர் ஓர் வரலாற்றறிஞராகவும் கீழ்த் திசைப் பண்பாளராகவும் விளங்கினார். இவர், 1813-ம் ஆண்டிலேயே காளிதாசரின் மேகதூதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார் ; 1819-ல் வடமொழி - ஆங்கில அகராதி ஒன்றைத் தயாரித்தார். 1840-ல் விஷ்ணு புராணத்தை மொழி பெயர்த்தார் ; 1841-ல் வடமொழி இலக்கண நூல் ஒன்றை எழுதினார். ஜேம்ஸ் மில் எழுதிய பிரிட்டிஷ் இந்திய வரலாற்றைத் தொடர்ந்து எழுதியதுடன், வில்சன் அந்நூலுக்கு விளக்கக் குறிப்புகளும் எழுதினார். அந்நூலின் ஐந்தாவது பதிப்பு, பத்து தொகுதிகளில் 1858-ல் வெளியாயிற்று. 1860-ல் இவர் இறந்தார்.

இராசாராம் மோகன்ராய் : கல்வி, சமூக வளர்ச்சிக்கு இராசாராம் மோகன்ராயின் தொண்டுகளை முன்னரே குறிப்பிட்டுள்ளோம். இவர் டேவிட் ஹேர், துவாரகா நாத் தாகூர் ஆகியோருடன் நெருங்கிய தொடர்பு கொண்டார். தமது இளமைப் பருவத்திலேயே இவர், சமயத்துறையில் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தார். இந்து சமயத்தில் ஏற்பட்டிருந்த சீர்கேடுகளை அறிந்த இவரது உள்ளம் கொதித்தது. தூய உபநிடதக் கருத்துக்கள் இவர்

மனத்தைக் கொள்ளை கொண்டன. மேலும் இவர் கிறித்தவ, முகம்மதிய சமயங்களின் சிறந்த பண்புகளைப் பாராட்டினர். மோகன்ராய் 1828-ல் பிரம்ம சமாஜத்தை நிறுவினர். உபநிடதங்கள் கூறும் நிர்குணப் பிரம்மக் கருத்தைப் போற்றிப் பேணுவதற்காகவும், மக்கள் யாவரையும் சமயம் என்ற பிணைப்பால் ஒன்றுபடுத்தவுமே அச் சமாஜம் தோன்றியது. மதம் அல்லது சமயத்தைக் குறிக்கும் ஆங்கிலச் சொல் (Religion), சொல்லிலக்கண முறைப்படி (மக்களை) ஒன்றுபடுத்தும் ஒரு பிணைப்பு என்று அமைகிறது. ஆகவே மக்களை வேறுபடுத்தும் எச்செயலும் சமயத்துக்கு இழுக்கைத் தருவதாகும். ராய், 1830-ம் ஆண்டின் முடிவில் இங்கிலாந்துக்குச் சென்றார் ; 1831-ல் பார்லிமெண்டின் பொறுக்குக் குழுவின்முன் இந்தியச் செய்திகள் சிலவற்றுக்குச் சான்றுகள் காட்டி விளக்கிக் கூறினர். அவ்வமயம் அவர், நீதிமன்றங்களில் பாரசீக மொழிக்குப் பதிலாக ஆங்கில மொழியே அமைய வேண்டுமென்பதையும் பஞ்சாயத்துக்களின் சிறப்பையும், நீதித்துறையும் நிர்வாகத்துறையும் பிரிந்திருத்தல் இன்றியமையாதது என்பதையும், ஆட்சித்துறையில் உயர்பதவிகளை இந்தியருக்கு அளிக்க வேண்டுமென்பதையும் வற்புறுத்திக் கூறினர். 1833-ல் பிரிஸ்டலில் (Bristol) ராயின் வாழ்க்கை முடிவுற்றது.

தேவேந்திரநாத் தாகூர் : ராய் இறந்தபின் பிரம்ம சமாஜம் மெலிவுற்றது. அதை மறுபடியும் சிறப்புறச் செய்த பெருமை தேவேந்திரநாத் என்பாரைச் சாரும். இவரே இரவீந்திரநாத் தாகூரின் தந்தையாவர். இவர் 1842-ல் சமாஜத்தில் சேர்ந்தார். அதற்கு மூன்று ஆண்டுகள் முன்னரே இவர், தத்துவபோதினி சபையை ஏற்படுத்திச் சமய உண்மைகளைப் பரப்பிவந்தார். இவர், ராயைப் போலவே உபநிடதங்களை வியந்து போற்றினர் ; ஆனல் அவர் போற்றிய கிறித்தவ மதக்கருத்துக்களை விரும்பவில்லை. தேவேந்திரநாத் (பி. 1817 – இ. 1905), சமயப் பரப்புக் குழூஉக்களை அமைத்து இந்தியாவில்

கிறித்தவ மதம் பரவிவருவதைத் தடுக்கவேண்டுமென்ற குறிக்கோளைக் கொண்டிருந்தார். யாத்திரை செய்தலிலும் சமயச்சடங்கு முறைகளிலும் இவருக்கு நம்பிக்கை இல்லை. வேதங்கள் கூறுவதை யாரும் மறுக்கக்கூடாது என்ற கொள்கையை இவர் ஏற்கவில்லை.

வைதீகக் கொள்கையினர் எதிர்ப்பு : கடவுளுணர்வையும் மக்கட் பணியையும் சிறந்த முறையில் கற்பிப்பதற்காக 1843-ல் கல்கத்தாவில் ஒரு இந்துச் சங்கம் தோன்றியது. அதைப் பின்பற்றியே பிற்காலத்தில் பிரம்ம ஞான சபை ஏற்பட்டதைக் காண்கிறோம். சமயத்துறையில் புதிய கருத்துக்கள் பரவுவதை வங்காளத்தில் வைதீக இந்துக்கள் எதிர்க்க முற்பட்டனர். அவர்கள், பெண்டிங்கின் சதி ஒழிப்புச் சீர்திருத்தத்தை எதிர்த்துப் பிரிவி கௌன்ஸிலுக்கு முறையிட்டனர். ஆனால் அம் முயற்சி 1832-ல் தோல்வியுற்றது. 1821-ல் தோன்றிய 'சந்திரிகா' என்ற செய்தித்தாள் உடன்கட்டை ஏறும் முறையைப் புகழ்ந்து சிறப்பித்து வந்தது. சமய, சமூகச் சீர்திருத்தங்களை வெறுத்த காசிப்பிரசாத் கோஷ் என்பார். 1838-ல் " **தரும சபை** "யை நிறுவினார்.

பகுதி 18

தொழில் துறையில் இந்தியாவின் தளர்ச்சி

பொருளாதாரத் துறையில் பிரிட்டிஷ் இந்திய வரலாற்றை முப்பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. கிளைவ் முதல் டல்ஹௌசி வரை–பதினெட்டாம் நூற்றூண்டின் பிற்பாதியும் பத்தொன்பதாம் நூற்றூண்டின் முற்பாதியும்.

2. டல்ஹௌசி முதல் கர்சான்வரை–19-ம் நூற்றூண்டின் பிற்பாதி.

3. கர்சான் முதல் இக்காலம் வரை–20-ம் நூற்றூண்டு. இவற்றில் முதற் பகுதியில் ஏற்பட்ட முயற்சிகளின் விளைவாக இரண்டாம் பகுதியில் பொருளாதார மாறுதல்கள் ஏற்பட்டன. அதை அடுத்து ஏற்பட்ட 20-ம் நூற்றூண்டின் தொழிற் புரட்சியின் பயனுக இன்று இந்தியா உலகில் தொழில் வளம்பெற்ற தலை சிறந்த நாடுகள் எட்டில் ஒன்றூகத் திகழ்கிறது. இந்நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டுவந்த காலத்தில் பொருளாதார நிலைமை வருந்தத்தக்கதாயிருந்தது. அதே காலத்திற்றூன் இங்கிலாந்தில் தொழிற்புரட்சி பரவியதையும் காண்கிறோம். 18-ம் நூற்றூண்டின் முற்பகுதியில் ஆங்கிலத் தொழிலாளர் கிளர்ச்சி செய்ததின் விளைவாக, இந்தியப் பட்டுக்களையும் கள்ளிக்கோட்டைத் துணியையும் (காலிகோ) பயன்படுத்தக்கூடாது என்று அரசியலார் சட்டங்களியற்றினர்: இங்கிலாந்தில் அயல்நாட்டுப் பருத்தித்துணி இறக்குமதி செய்வதை அந்நாட்டு அரசாங்கம் தடை செய்தது. அதனூல் அந்நாட்டில் நூற்பு இயந்திரங்கள் கண்டுபிடிப்பதற்கான பேரூக்கம் பிறந்தது. மேலே கூறிய இறக்குமதி தடைக்குப்பின் மிகக்குறுகிய காலத்தில் ஜான் கே நெசவுக்கான எறிகுழலைக் கண்டுபிடித்தார். பிறகு ஹார்கிரீவ்ஸ், ஆர்க்ரைட், க்ராம்டன் முதலியோர் சிறப்பு வாய்ந்த

நூற்பு இந்திரங்கள் பலவற்றைக் கண்டுபிடித்து நூற்புத் தொழிலை நம்பமுடியாத அளவுக்கு எளிதில் மேலோங் கச் செய்தனர். ஆங்கிலேயர் வங்காளத்திலிருந்தும் கருநாடகத்திலிருந்தும் பெற்ற செல்வம் அவர்களுடைய மூலதனத்தைப் பெருக்கியது. அதனால் அவர் தம் தொழில்களும் முன்னேற்ற மடைந்தன. மேலும் அவற்றைச் செழிப்புறச்செய்ய இந்தியாவிலிருந்து மூலப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆதலால் பிரிட் டிஷ் தொழில்வளப் பெருக்கத்துக்கு அவர்கள் இந்தியா வுடன் கொண்டதொடர்பு சிறப்பானதொரு காரணமாகும். இங்கிலாந்து 18-ம் நூற்றூண்டின் நடுப்பகுதிவரை விவ சாய நாடாகவே இருந்தது. இந்தியாவோ, 19-ம் நூற்றூண் டின் தொடக்கம்வரை, ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகக் கைத்தொழிலிலும் வேளாண்மையிலும் சிறப்புற்றேங்கி யிருந்தது. இத்தகைய இந்தியா சென்ற நூற்றூண்டில் ஒரு விவசாய நாடாகவே விளங்கியதைக் காண்கிறேம். கைத் தொழில் திறமையோ, அதற்கான முயற்சியோ இந்நாட் டவரிடம் கிடையாது என்று யாரும் கூற முடியாது. ஆகவே இந்தியக் கைத்தொழில்கள் வளமடையாமல் இருந்தமைக்கு ஆங்கிலேயர் இந்நாட்டில் பின்பற்றிய பொருளாதாரக் கொள்கையே காரணமாகும். 17-ம் நூற் றூண்டில் வங்காளத்தின் நிலையைப் பற்றி நாமறிவோம். அந்நாட்டுச் செழிப்பைப் பெர்னியர் சிறப்பிக்கின்றூர். கருநாடகத்திலும் வங்காளத்திலும் "ஆங்கிலேய நவாப்பு கள்" பின்பற்றிய கொள்கைகள் அப்பகுதிகளின் மக்களின் நிலையைப் பொருளாதாரத் துறையில் துயர் மிகுந்ததாக் கின. 1770-ம்ஆண்டு வங்காளப் பஞ்சம் மக்களை ஆற் றெணுத் துன்பத்தில் ஆழ்த்தியது. அக்காலத்தில் ஏழை இந்தியர்கள் அடைந்த இன்னல்களைத் தம் நலனுக்குப் பயன்படுத்திக்கொண்டு கம்பெனியின் பணியாளர்கள் மனிதத் தன்மையற்ற முறையில் நடந்து கொண்டனர். அச்செயல் கொடுமையினும் கொடுமை யானதாகும். கம்பெனியின் ஆட்சிக்குட்பட்ட நாட்டில் மூன்றில் ஒரு பகுதியில் கொடிய விலங்குகள்தான் வாழ்

கின்றன என்று 1789-ல் காரன்வாலிஸ் கூறியது ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும். வங்காள நெசவாளர்கள், கம்பெனியின் அலுவலாளரிடம் அடைந்த துன்பங்களைக் கூறிமுடியாது. முன்னவரின் முகவர்கள் (agents) பின்னவரிடம் சில காலங்களில் உடல் சார்ந்த தண்டனைகளைக் கூடப் பெற்றனராம். சுருங்கக் கூறின் வங்காளத்தின் பருத்தி உற்பத்தி கேடுற்றது. டக்காவிலிருந்து மெல்லிய துணி வகைகள் இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்தல் 19-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் அடியோடு தடையுற்று நின்றது. அந்நூற்றாண்டின் நடுப் பகுதியில் இங்கிலாந்தில் பருத்தி நெசவுத் தொழில் மேன்மையுற்றது. அவ்வமயம் அமெரிக்காவும் எகிப்தும் இந்தியாவுடன் போட்டியிட்ட காரணத்தால் இந்நாட்டிலிருந்து இங்கிலாந்துக்குப் பருத்தி ஏற்றுமதியாவதும் குறையலாயிற்று. சுருங்கக் கூறின் நாம் கூறிவரும் காலப்பகுதியில் இந்தியா, அதன் பழைய தொழில் மேன்மையை இழந்து மூலப்பொருளை ஏற்றுமதி செய்துவந்தது. டச்சுக்காரரும் ஆங்கிலேயரும் இந்தியாவுக்கு வந்ததின் விளைவாகப் பதினேழாம் நூற்றாண்டிலேயே இந்நாட்டின் கப்பற்கட்டுந் தொழில் கேடுற்றது. பிறகு பிரிட்டிஷார் இந்நாட்டுடன் கொண்ட தொடர்பும் இயக்குநர்களின் கொள்கையும் அத்தொழிலை அழிவுறச்செய்தன. இந்தியாவில் 19-ம் நூற்றாண்டின் முற்பாதியில் ஏற்பட்ட பஞ்சங்களின் எண்ணிக்கை ஏழாகும். இவ்வாறு அடிக்கடி பஞ்சம் தோன்றியமைக்கு இந்தியத் தொழில்களின் சிதைவும், இந்திய மூலப்பொருள் ஏற்றுமதியும், ஆங்கிலேயரால் உருவாக்கப்பட்ட பொருள்களின் இறக்குமதியும் காரணங்களாம். தேயிலை, காப்பிக்கொட்டை, சணல் முதலிய மூலப்பொருள்கள், டல்ஹௌசியின் காலத்துக்குப் பிறகுதான் வாணிகத் துறையில் சிறப்பெய்தின. இந்தியப் படைக்கலகத்துக்கு முற்பட்ட காலத்தில் இந்நாட்டில் ஒற்றுமை, அமைதி, ஒழுங்கு முதலியவற்றுக்கான முயற்சிகள் சிறப்புற்றிருந்தன. பொருளாதார முன்னேற்றத்துக்கு இவை இன்றியமையாதன. மேலும் வாணிகப் பெருக்கத்துக்கு

இடையூருக இருந்த உள்நாட்டுத் தடைகள் நீக்கப் பெற்றன. டல்ஹௌசியின் ஆட்சிமுறைச் சீர்திருத்தங் களின் விளைவாகப் 19-ம் நூற்ருண்டின் பிற்பாதியில், பொருளாதார மாறுதலுக்கான அடிப்படை மேலும் வலிமையடைந்தது. இந்நாட்டில் இருப்புப்பாதைகளை அமைத்த செயல், இந்தியப் பொருளாதார வரலாற்றில் ஒரு புதிய காலத்தைத் தொடங்கச் செய்கிறது.*

---

* L. C. A. Knowles, The Economic Development of the British overseas Empire, I (1928,) (L. C. A. நோல்ஸ், கடல் கடந்த பிரிட்டிஷ் பேரரசின் பொருளாதார வளர்ச்சி, I, பக். 297.)

இந்தியா 1823—48

ஹீரட்
ஜலாலாபாத்
காபூல்
கண்பமக்
)(கைபர் கணவாய்
ஹசாரா
பெஷாவர்
அட்டாக்
கசினி
காங்ரா
அமிர்தசரஸ்
சோப்ரான்
ஜலந்தர்
இடையாறு நாடு
லாகூர்
பிரோஸ்பூர்
சிம்லா
ரூபர்
லூதியானா
ரூர்க்கி
அலிவால்
முட்கி
பிரோஷ்ஷார்
முல்தான்
காந்தகார்
குவெட்டா
)(போலன் கணவாய்
தில்லி
கைர்ப்பூர்
பரதபுரி
ஆக்ரா
ஜெயபுரி
ஜோதிபுரி
மகாராஜபுரி
குவாலியர்
பன்னியார்
மெர்
மியானி
ஐதராபாத்
கராச்சி
லக்னௌ
டார்ஜிலிங்
சதியா
கோல்பாரா
செயிந்தியா
கச்சார்
மணிபுரி
அலகாபாத்
வாரணசி
சந்தலர்
போபால
ஜபல்பூர்
செராம்பூர்
பாரக்பூர்
கல்கத்தா
சிட்டகாங்
ஆவா
யாண்டபூ
பாகன்
பரோடா
இந்தூர்
பிலர்கள்
சாகர்தீவு
கோண்டர்
ஷாபுரித் தீவு
பம்பாய்
புரோம்
மகாபலேஷ்வர்
சதாரா
ஐதராபாத்
தானிப்யூ
கர்னூல்
நாகர்
சென்னை
மொர்க்காரா
மைசூர்
வேலூர்
கார்ன்வாலிஸ் துறைமுகம்
உதகமண்டலம்
தரங்கம்பாடி
X போர்க்களங்கள்
)(கணவாய்
இரஞ்சித்சிங் நாட்டின் உத்தேச எல்லை

அதிகாரம் 8

டல்ஹௌசியும் இந்தியப் படைக் கலகமும் (1848 — 58)

பகுதி 1

டல்ஹௌசியின் கொள்கை

கவர்னர்-ஜெனரலின் பூர்வ சரிதம் : பிற்காலத்தில் டல்ஹௌசி எனப் பெயர் பெற்ற ஜேம்ஸ் ஆண்ட்ரூ பிரௌன் ராம்சே 1812-ம் ஆண்டில் ஸ்காட்லாந்தில் பிறந்தார். இவருடைய தந்தையாரான ஜார்ஜ் ராம்சே என்பார் டல்ஹௌசி (எர்ல்) கோமானாக இருந்தார். ஜார்ஜ் ராம்சே ஒரு போர் வீரராக வாட்டர்லூ போர்க்களத்தில் போரிட்டுப் புகழ்பெற்றார். பிறகு கானடாவில் கவர்னர்-ஜெனரலாயிருந்தார்; பின்பு, 1829 முதல் 1832 வரை இந்தியாவில் படைத்தலைவராகப் பணியாற்றினார். ஜேம்ஸ், 1822 முதல் 1829 வரை ஹாரோவிலும் பிறகு ஆக்ஸ்போர்டிலும் கல்வி பயின்று 1833-ல் பட்டம் பெற்றார். 1837-ல் இவர் பார்லிமெண்டில் உறுப்பினராயிருந்தார். 1836-ல் அழகும் அறிவும் பொருந்திய சூசன்ஹே என்ற பெண்மணியை மணந்து கொண்டார். தம் தந்தையிறந்தவுடன் இவர் டல்ஹௌசி (எர்ல்) கோமான் ஆனார். பிரதம அமைச்சராயிருந்த சர் ராபர்ட் பீல் என்பார் டல்ஹௌசியிடம் அன்பு பாராட்டினார். டல்ஹௌசி 1843-ல் வாணிகக் கழகத்தின் துணைத் தலைவராகவும் 1845-ல் அதன் தலைவராகவும் பணியேற்றார். இங்கிலாந்தில் இருப்புப்பாதை அமைக்கும் தொழில் முன்னேற்றமடைய இவர் செய்த உதவி குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் அத்தொழில் அரசியலாரின் கட்டுப்பாட்டுக்கு உட்பட வேண்டுமென்ற இவருடைய கருத்தைப் பலர் ஏற்கவில்லை. பழமை

வாதியான பீல் 1846-ல் பதவியினின்று விலகியபின் விக்குக் கட்சியைச் சேர்ந்த ஜான் ரஸ்ஸல் பிரபு பிரதம அமைச்சரானுர். இவரே, 1847-ல் டல்ஹெளசிக்கு இந்திய கவர்னர்-ஜெனரல் பதவியை அளித்தார். 1848-ல் டல்ஹெளசி, தமது 36-வது வயதில் கல்கத்தா வந்தடைந்தார். இந்திய கவர்னர்-ஜெனரல்கள் யாவரிலும் மிக இளமையானவர் இவரே.

கொள்கை : டல்ஹெளசியின் ஆட்சி பலவகைகளில் சிறப்பு வாய்ந்ததாகும். முக்கியமாக, நாடு இணைக்கும் இவருடைய கொள்கை குறிப்பிடத்தக்கது. இவர் கம்பெனியுடன் மேலும் மேலும் நாடுகளை இணைத்தமைக்குப் பல காரணங்களுண்டு. அவற்றை, ஆட்சிமுறை, பேரரசுக் கொள்கை, வாணிகம், பொருளமைப்பு என்ற நான்கு தலைப்புக்களில் நாம் விளக்க முடியும். இந்தியச் சிற்றரசுகள் சிலவற்றில் சீர்கேடுகள் பெருகியிருந்ததால் அவற்றை நீக்கி மக்களுக்கு நலந்தரும் புதிய ஆட்சியை அமைக்கவேண்டுமென்ற குறிக்கோள் டல்ஹெளசியிடமிருந்தது. எடுத்துக்காட்டாக அயோத்தியை நாம் குறிப்பிடலாம். பிரிட்டிஷ் இந்தியப் பேரரசுக்குச் சிறந்த எல்லைப்புறக் காவல் இருக்க வேண்டுமென்ற கருத்துடன் அவர் பஞ்சாபை இணைத்துக்கொண்டார். பிரிட்டிஷ் இந்தியாவை ஒற்றுமைப்படுத்தி உறுதியுறச் செய்யும் நோக்கத்தால் அவர், சென்னைக்கும் பம்பாய்க்குமிடையே உள்ள சதாராவையும் பம்பாய்க்கும் கல்கத்தாவுக்குமிடையே உள்ள நாகபுரியையும் தம்முடன் சேர்த்துக் கொண்டார். மக்களின் நலத்துக்கான பெருவீதத் திட்டங்களை அவர் தீட்டியிருந்ததால் பேரரசின் பெருக்கம் அதற்கு அனுகூலமாயிருந்தது. அதே சமயத்தில் புதிய நாடுகளால் கம்பெனிக்குப் பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட நன்மைகளையும் அவர் புறக்கணிக்கவில்லை. எடுத்துக்காட்டாகத் தெற்குப் பர்மாவின் இணைப்பினுல் கம்பெனியின் வாணிகம் பெருகியது. பொருள்வளம் சிறந்தது. ஆனுல் நாடுகளை இணைக்கும் ஒரே குறிக்

கோளுடன்தான் டல்ஹௌசி இந்நாட்டுக்கு வந்தார் என்று நாம் கூற முடியாது. வாணிகப் பெருக்கமும் பொருளாசையுமே அக்கொள்கையின் அடிப்படைக் காரணங்கள் என்றும் நாம் எண்ணுவதற்கில்லை. டல்ஹௌசி உயர்ந்த உள்ளம் படைத்த அரசியல் அறிஞர் என்பதில் ஐயமில்லை. ஆயினும் பொருளாசை அவரிடம் உண்டு. கம்பெனியின் ஆண்டு வருமானத்துடன் 40 லட்சம் பவுன்களை மிகுதியாகச் சேர்த்ததாக அவரே குறிப்பிடுகிறார். மேலும் பேரார், நாகபுரி ஆகிய இடங்களை அவர் இணைத்துக்கொண்டதன் மூலம் கம்பெனிக்குச் சிறப்புவாய்ந்த பருத்தி விளையும் நிலப்பகுதிகள் கிடைத்தன.[1] நாடுகளை இணைத்துக்கொள்வதிலோ புதிய வருமானத்தைப் பெறுவதிலோ, கம்பெனியார், தமக்கு முறையாகக் கிடைக்கும் எந்த வாய்ப்பையும் நழுவ விடக்கூடாது என்பது டல்ஹௌசியின் கொள்கை. இக்கொள்கையே பிரிட்டிஷாருக்கும் இந்தியருக்கும் நன்மையைத் தருவது என்பது அவருடைய தெளிந்த முடிபாகும். தாம் இணைக்கும் நாடுகள் எங்கும் நலந்தரும் ஆட்சியை அமைக்க வேண்டியது அரசியலாரின் கடமை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.[2]

விளக்கம் : டல்ஹௌசி இணைத்துக்கொண்ட நாடுகளில் சிறப்பானவை, பஞ்சாபு, தென்பர்மா, மத்திய மாகாணங்களிற் பல, அயோத்தி முதலியனவாம். அக்கவர்னர்-ஜெனரல் இந்தியச் சிற்றரசுகள் அனைத்தையுமே ஒரே குடைக்கீழ் கொண்டுவந்திருப்பாரேயாகில் மிகவும் சிறப்புடையதாய் இருந்திருக்கும் என்று கூடச் சில தேசீயவாதிகள் கருதலாம். ஆனால் வரலாற்றறிஞர்கள் அவ்வாறு நோக்குவதில்லை. சர் ஜான் சீலி என்பார் டல்ஹௌசி ஓர் குற்றவாளி என்று கூறுவதுடன் அவரைப் பிரஷ்ய நாட்டு மகாபிரடெரிக்குடனும் ஒப்பிடுகிறார். ஆனால் ஆங்கிலேயர் அயோத்தி போன்ற நாடுகளில்

---

1. 50, I, பக். 292.
2. 42, பக். 34.

உள்ள சீர்கேடுகளைப் பார்த்துக்கொண்டிருப்பாரே ஆயின் கடமையைப் புறக்கணித்த குற்றம் அவர்களுக்கு ஏற்படும் என்று, டல்ஹௌசி கருதினர். இலட்சக்கணக்கான மக்கள் துன்பமடைவதைத் தடுக்காமலிருப்பது மனிதப் பண்பாடன்று என்றும் அவர் உணர்ந்தார்.[1] மக்களின் நலத்தைப் பேணும் அரசுதான் நிலைத்திருக்கக்கூடிய தகுதியைப்பெறும் என்ற அவருடைய கருத்தும் போற்றத் தக்கதே. ஆகவே, இந்தியச் சிற்றரசர்களைவிடப் பிரிட்டி ஷாரே மக்களைச் சிறந்த முறையில் ஆளக்கூடியவர்கள் என்ற முடிவின்பேரில் அவர் ஆங்கிலப் பேரரசைப் பெருக்கலானர். சிற்றரசுகளை அமைதியான முறையில் இணைத்துக்கொள்ள அவருக்கு. " நாடிழக்கும் கொள்கை அல்லது அவகாசியிலிக் கொள்கை (Doctrine of Lapse) சிறந்த வாய்ப்பை அளித்தது. இனி இங்கே நாம் சிற்ற ரசுகளில் சீர்கேடுகள் பெருகுவதற்கு யார் காரணமாயினர் என்பதையும் கருதவேண்டும். "சிற்றரசுகளைத் தனிப் படுத்தும் கொள்கையை ஆங்கிலேயர் உறுதியாகப் பின்பற்றியதன் விளைவாகப் பிரிட்டிஷ் பாதுகாப்பைப் பெற்ற இந்திய நாடுகளில் கேடுகள் பெருகின என்ற கருத்தை நாம் மறுப்பதற்கில்லை. தமது செயல்களால் இந்தியச் சிற்றரசர்கள், மக்கள் ஆகியோர் உள்ளத்தில் எத்தகைய உணர்ச்சி விளையும் என்பதை டல்ஹௌசி சிந்திக்கவே இல்லை. உள்ளக் கிளர்ச்சிக்குச் சிறப்பளித்த ஹென்றி லாரன்ஸ், ஸ்லீமன், ஔட்ராம் முதலியவர் களுடைய கருத்துக்களையும் அவர் புறக்கணித்தார். ஆத லால், "டல்ஹௌசிக்குக் கற்பனைத்திறன் கிடையாது; மற்றவர் உள்ளக்கிடக்கையை உய்த்துணரும் ஆற்றல் இல்லை; பிறருடைய இயல்பை ஒட்டி ஒழுகும் உயர் பண்பு கிடையாது." என்று சர் ஜான் கேயீ என்ற அறிஞர் கூறுகிறார். ஆனால் இக்கூற்றைச் சிலர் மறுப்பர்.[2] சிறந்த முறையில் அமைந்த அயலார் ஆட்சியைவிடக் கேடுற்ற தமது சொந்த ஆட்சியை மேலானதாகக் கருது

---

1. *43*, பக். *176*.
2. *56*, I, பக், *121*.

வோர் உண்டு. அத்தகையோர் மீது அயலாராட்சியைச் சுமத்துவதில் இடையூறுகள் உள. டல்ஹௌசியின் முன்பிருந்தோர், அம்முறையை இயன்ற அளவுக்குக் கைக்கொள்ளாமலேயே இருந்துவந்தனர் என்பதை நாம் பார்த்தோம். டல்ஹௌசியோ, நாடு இணைப்பதில் மிக்க ஊக்கம் கொண்டவர்; பிரிட்டிஷ் இராச்சியம் பெருகுவதில் பேரார்வம் படைத்தவர். ஆகவே இவருடைய கொள்கையில் ஓரளவு புதிய தன்மையைக் காண்கிறோம். நலந்தரும் ஆட்சியை அமைக்கும் பெரிய முயற்சியில் அவர் மூழ்கியிருந்ததால், தமது கொள்கை இறுதியில் எத்தகைய விளைவுகளை உண்டாக்கும் என்று அவர் அமைதியாகச் சிந்திக்கவே இல்லை. இதனால் நாட்டில் அமைதியின்மை ஏற்பட்டு 1857-ல் படைக்கலகம் தோன்றியது. அவ்வரலாற்றைப் பிறகு பார்க்கலாம்.

பகுதி 2

இரண்டாவது சீக்கியப் போர் (1848-9)
பஞ்சாபில் பிரிட்டிஷ் ஆட்சி

பழிக்குப் பழிவாங்கும் போர்: 1846-ல் ஏற்பட்ட இரண்டாம் லாகூர் உடன்படிக்கைக்குப் பிறகு பஞ்சாபில் பிரிட்டிஷ் ஆட்சியின் விளைவாக மக்களின் நிலை உயர்ந்தது. ஆயினும் சீக்கிய சர்தார்களிற் பலர் அயலாராட்சியை வெறுத்தனர். ஹென்றி லாரன்ஸ் இங்கிலாந்துக்குச் சென்ற பிறகு நாட்டில் அமைதியின்மை பெருகிற்று. புதிதாக அமர்ந்த ரெஸிடெண்ட் அக்காலத்திலிருந்த நெருக்கடியான சூழ்நிலையை உணர்ந்து ஒழுகாததால் மக்கள் வெகுண்டு எழுந்ததைத் தக்க சமயத்தில் தடுக்கவில்லை. முல்தானின் சீக்கிய கவர்னரான மூல்ராஜ் இரண்டு ஆங்கில அலுவலாளரைக் கொன்றுவிட்டு அங்கே மதப் போரைக் கிளப்பினர் (1848). அவ்வமயம் ஆங்கிலேயர் போருக்குத் தயாராக இல்லை. போர் தொடுக்க வேண்டியது இன்றியமையாததில்லை என்றே டல்ஹௌசியும் கருதினர். எனினும் மூல்ராஜ் கலகத்தைத் தொடங்கியதால், உதவிப் படைத்தலைவர் ஹெர்பர்ட் எட்வர்ட்ஸ், அவரை இரண்டு முறைகள் தோற்கடித்தார்; முல்தானையும் முற்றுகையிட்டார். அதற்கிடையில் கலகம் பஞ்சாபு முழுவதிலும் தீயைப்போல் பரவிக்கொண்டிருந்தது. முல்தான் முற்றுகையையும் ஆங்கிலேயர் கைவிட நேர்ந்தது. சீக்கியர், ஆப்கானித்தானத்தின் தோஸ்து முகம்மதுவுக்குப் பெஷாவரைக் கொடுத்து அவருடைய உதவியைப் பெற்றனர். அந்நிலையைக்கண்ட டல்ஹௌசி "பகைவர்கள் போரை விரும்புகிறார்கள் போலும். பழிக்குப் பழிவாங்கும் நோக்குடன் நாங்களும் போர்தொடுக்கிறோம்" என்றுகூறி அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

சிலியன்வாலா, குஜரத் போர்கள்: எட்வர்ட்சுக்கு உதவிபுரிய சிக்கியத் தலைவர் ஷெர்சிங்கின் தலைமையில்

ஆங்கிலேயர் ஒரு படையை அனுப்பினர். ஆனால் அத் தலைவர் எதிரிகளுடன் சேர்ந்துகொண்டு ஆங்கிலேயருக் குத் துரோகமிழைத்துவிட்டார். கஃப் பிரபு (முன்னாள் சர் ஹியூ கஃப்) ஒரு பெரிய படையுடன் ரவி ஆற்றைக் கடந்து இராம் நகரில், 1848-ல் கலகக்காரர்களுடன் போரிட்டார். அது ஒரு முடிவில்லாத போராகவே நடந்து வந்தது. அடுத்த ஆண்டின் தொடக்கத்தில், குஜரத் மாவட்டத்திலுள்ள சிலியன்வாலா என்னுமிடத்தில் இரு சாராருக்கும் கொடிய போர் நடைபெற்றது. ஆங்கிலேயர் பக்கலில் இறந்தவர்களும் காயப்பட்டவர்களும் மிகுதியாக இருந்தனர் என்பதை அறிந்த தாய்நாட்டு அரசியலார், கஃப் பிரபுவைப் படைத்தலைமையிலிருந்து நீக்கிச் சர் சார்லஸ் நேப்பியரை அனுப்பினர். ஆனால் அவர் வந்து சேருவதற்கு முன்பாகவே, கஃப் குஜரத்தில் சீக்கியர்மீது ஒரு சிறந்த வெற்றியைப் பெற்றுத் தமது பெருமையைக் காப்பாற்றிக்கொண்டார். இப்போரில் மிகுதியான அளவுக் குச் சீக்கியரை ஆங்கிலேயர் சுட்டுவீழ்த்தினர். அதனால் துப்பாக்கிப்போர் என்றே இதற்குப் பெயர் ஏற்பட்டது. இதற்கு முன்பே முல்தானைப் பிரிட்டிஷார் கைப்பற்றினர். 1849-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் ஷெர்சிங் அடைக்கலம் புகுந்தார். மற்ற சீக்கியத் தலைவர்களும் ஒவ்வொருவராகச் சரணடைந்தனர். டல்ஹௌசி, பஞ்சாபைப் பிரிட்டிஷ் இராச்சியத்துடன் சேர்த்துக்கொண்டார். அச்செயலை, அவ்வமயம் இந்தியாவுக்கு மீண்டும் வந்திருந்த ஹென்றி லாரன்ஸ் விரும்பவில்லை. பிரிட்டிஷ் குடிகளில் இருவர் கொலையுண்டதால் பஞ்சாபு முழுவதுமே ஆங்கிலேயருக் குக் கிடைப்பதற்கு வழிஏற்பட்டது. கோஹிநூரை விக்டோரியா மகாராணிக்கு அளிப்பதற்காக ஆங்கிலேயர் அதனைக் கைப்பற்றினர். துலீப்சிங்குக்கு (பி. 1838– இ. 1893), ஆண்டுக்கு 5 லட்ச ரூபாய் ஓய்வுக்கால ஊதியம் கிடைத்தது. சில ஆண்டுகட்குப் பிறகு அவர் கிறித்தவ ராக மாறி இங்கிலாந்தில் ஒரு நிலக்கிழாராக வாழ்ந்து வந்தார். பாரிசு நகரில் அவர் வாழ்க்கை முடிவுற்றது. எகிப்தியப் பெண்மணி ஒருத்திக்குப் பிறந்த அவருடைய

இரண்டாவது மகன் 1926-ல் இறந்துவிட்டார். அத்துடன் இரஞ்சித்சிங்கின் ஆண்வழி மரபு முடிவடைந்தது.[1] 1849ல் டல்ஹௌசி, 'மார்குவிஸ்' என்ற பட்டத்தைப் பெற்ருர்.

பஞ்சாபு ஆட்சிமுறை: புதிதாகக் கிடைத்த பஞ்சாபில் ஒழுங்கான ஆட்சி அமைப்பை ஏற்படுத்துவதில் டல்ஹௌசி அக்கறை எடுத்துக்கொண்டார். அங்கே இவர் அமைத்த ஆட்சி முறை, பழைய மாகாணங்களின் ஆட்சி முறையினின்று வேறுபடுகிறது. 1849-ல் படைத்தலைவரான சர் சார்லஸ் நேப்பியர் பஞ்சாபில் இராணுவ ஆட்சி ஏற்பட வேண்டுமென்ருர். வங்காளத்தில் இருந்ததைப் போன்ற ஆட்சியே அங்கும் அமையவேண்டுமென்ற கருத்தை வேறு சிலர் வெளியிட்டனர். டல்ஹௌசி இரு வகையான கருத்துக்களையும் மறுத்துவிட்டு அவ்விரண்டும் கலந்த ஒரு புதிய முறை ஆட்சியைப் பஞ்சாபில் நிறுவினுர். அத் திட்டப்படி பஞ்சாபு, பல சிறு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொன்றிலும் உதவி ஆணையாளர்கள் நியமனம் பெற்றனர். அவர்களும் அவர்களுடைய துணைவர்களும் மக்களுடன் நெருங்கிப் பழக வாய்ப்பு ஏற்பட்டது. வரி வாங்குதலும் முறை வழங்கலும் ஒரே அதிகாரியிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்தன. அதிகாரமும் பொறுப்பும் ஒருமுகப்பட வேண்டு மென்பதே அவ்வமைப்பின் நோக்கமாகும். மேலும் டல்ஹௌசி, உள்நாட்டு மக்கள் கருத்துகட்கு இணங்கச் சட்டங்களையும் ஒழுங்கு விதிகளையும் எளிமையாகச் செய்தார்.[2] மூன்று ஆணையாளர்களடங்கிய ஒரு கழகம் பஞ்சாபின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றது. அவர்களில் சர் ஹென்றி லாரன்சும், கவர்னர்-ஜெனரலின் இளவல் ஜான் லாரன்சும் முக்கியமானவர்கள். 1853-ல் டல்ஹௌசி, அக்கழகத்தை நீக்கி விட்டுத் தம் இளவலையே தலைமை ஆணையாளராக அமர்த்தினுர். ஆயினும் கவர்னர்-ஜெனரலின் அதிகாரமே பஞ்சாபில் சிறப்புற்றிருந்தது. அவராட்சியின் விளைவாக

1. 98, பக். 80.
2. 1, பக். 60.

அம் மாகாணம் பல நன்மைகளை அடைந்தது. அங்கே இருந்த பழைய படை மறைந்து, மக்கள் பலர் புதிய ஆங் கிலப் படையில் சேர்ந்து வந்தனர். உள்துறை, வெளித் துறைப் பாதுகாப்புப் பொறுப்பை ஆங்கிலேயர் சிறந்த முறையில் நிறைவேற்றினர். சர்தார்களும் மற்ற நில மானியத் தலைவர்களும் தமது அதிகாரங்களை இழந்தனர். ஆட்சி முறையில் விரைவான முன்னேற்றம் காணப்பெற் றது. முறைவழங்கல், சிவில்துறை, குற்றத்துறை, நிலவரித் திட்டம் (கிராம முறை) வாணிக வளர்ச்சி, வேளாண்மை முதலிய செய்திகளில் பல சீர்திருத்தங்க ளேற்பட்டன. பெஷாவரை இணைக்கும் பெரிய சாலை ஒன்று அமைக்கப் பட்டது. மேனாட்டு, உள்நாட்டுக் கல்வி முறைகள் ஆத ரவு பெற்றன. அடிமை முறை, குழந்தை விற்பனை, குழந்தைக் கொலை, சதி, கொள்ளை முதலிய கேடுகளை அரசாங்கம் ஒழித்தது. தக்குகள் அடங்கி ஒடுங்கினர். சமூகத் துறையில் சிறந்த முன்னேற்றத்துக்கு வழி ஏற் பட்டது. திருமணச் செலவுகள் குறைந்தன. அரிய சீர் திருத்தங்கள் எல்லாம் பஞ்சாபில் மிகக் குறுகிய காலத்தில் நிறைவேறின என்பது சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. டல்ஹௌசி, தாமே நேர்முகமாக அம் மாகாண ஆட்சி முறையில் அக்கரை கொண்டு ஆர்வத்துடன் உழைத்த தால் அங்கே விரைவில் முழு அமைதி ஏற்பட்டது. சீக் கியப் படை அழிவுற்றதும் ஆங்கிலேயரை எதிர்க்கப் பஞ் சாபில் யாரும் இல்லை. இரண்டாவது பர்மியப் போரிலும் படைக்கலகம் ஏற்பட்ட பொழுதும் அம் மாகாணம் ஆங்கி லேயருக்கு உதவியளித்தது. 1859-ல் சர் ஜான் லாரன்ஸ் பஞ்சாபின் உதவிக் கவர்னரானார்.

பகுதி 3

கோஹிநூர் வரலாறு

கோஹிநூரைப் பாண்டவர்கள் அணிந்திருந்ததாக வீரகாவியக் கதை குறிப்பிடுகிறது. வரலாற்றைப் பொறுத்தவரை அவ் வைரத்தை மீர் ஜம்லா, ஷாஜஹானுக்குப் பரிசாகக் கொடுத்தாரென்று அறிகிறோம். கோஹிநூர் 756 காரட்டுகள் (Carats) எடையுள்ளது. 1665-ம் ஆண்டளவில் அதை வெட்டி அதன் எடையை 268 காரட்டுகளுக்குக் குறைத்தனர் (தவர்னியர்). நாதிர்ஷா அதை முகம்மது ஷாவிடமிருந்து கைப்பற்றி அதற்குக் கோஹிநூர் அல்லது ஒளியின் மலை என்று பெயர் கொடுத்தார். அவருடைய பெயரரான ஷாரூக் அதை அகமது அப்தலிக்கு அளித்தார். பிறகு அதை ஸாமன்ஷாவும் அவரிடமிருந்து ஷா ஷுஜாவும் பெற்றனர். பின்னவர் அதை இரஞ்சித் சிங்குக்குக் கொடுக்க நேர்ந்தது. அச் சீக்கிய அரசர் அதைப் பூரி ஜகந்நாதர் ஆலயத்துக்கு வழங்கி விட்டதாக எழுதி வைத்தார். ஆனால் துலீப் சிங் அதற்கு உரியவரானார். பஞ்சாபை வென்ற காரணத்தால் அது டல் ஹௌசிக்குக் கிடைத்தது. 1849-ல் அதன் எடை 186 காரட்டுகள் தான். ஜான் லாரன்ஸிடமிருந்த அவ் வைரம் எப்படியோ தவறிக் குப்பைத் தொட்டியை எட்டி விட்டது. பிறகு அதைக் கண்டு பிடித்து லாகூரிலிருந்து பம்பாய்க்கு அனுப்பினர்.* ஆங்கிலேயர் கோஹிநூரை விக்டோரியா மகாராணிக்குப் பரிசாக வழங்கினர். 1851-ல் லண்டன் கண்காட்சி சாலையில் அவ் வைரம் வைக்கப்பட்டிருந்தது. அதை ஆங்கிலேயர் மறுபடியும் வெட்டியதால் இப்பொழுது அதனுடைய எடை ஏறத்தாழ 116 காரட்டுகள் தான். பிரிட்டிஷ் மன்னர்களுக்குரிய மணிமுடியில் இவ் வைரம் பதிக்கப்பெற்று விளங்குகிறது.

---

* - 91 - *அதி. 16.*

பகுதி 4

இரண்டாவது பர்மியப் போர் (1852)

1826-ம் ஆண்டு யாண்டபூ உடன்படிக்கைப்படி ஆவாவில் ஒரு பிரிட்டிஷ் ரெஸிடெண்ட் இருந்து வந்தார். அதே ஆண்டின் வாணிக உடன்படிக்கை ஒன்றின்படி பிரிட்டிஷ் வணிகர் பாதுகாப்பைப் பெற்றனர். முதல் ரெஸிடெண்டை ஆங்கிலேயர் 1830-ல் அமர்த்தினர். பர்மாவின் அரசரான தர்ராவதி (1837-45) தமது முன்னோர் செய்து கொண்ட யாண்ட பூ உடன்படிக்கை தம்மைக் கட்டுப்படுத்தாது என்று கூறினர். ஆங்கில ரெஸி டெண்டையும் பர்மியர் இழிவுபடுத்தினர். ஆதலால் அவர் 1840-ல் ஆவாவிலிருந்து வெளியேறினர். தர்ராவதி மன மாருட்ட மடைந்ததால் அவருடைய மகனுரான பாகன் (1845-53) பட்ட மேற்ருர். இரங்கூனிலிருந்த பர்மியக் கவர்னர் பிரிட்டிஷ் வணிகர்களை முறையற்ற வகையில் நடத்தினுர். இதனுல் 1851-ல் ஆங்கிலேய ருக்குப் பொருள் இழப்பும் ஏற்பட்டதாம். அந்நிலையில் டல்ஹௌசி பர்மிய நிகழ்ச்சிகளில் தலையிட முற்பட்டார். முதலில் அவர் ஆங்கிலேயரின் குறைகளை நீக்கும் பொருட்டு லாம்பர்ட் என்ற கப்பற்படைத் தலைவரை அனுப்பி வைத்தார். பர்மிய மன்னர், அக் குறைகளைக் களைந்து விடுவதாக வாக்குறுதி கொடுத்தார். ஆனுல் அவ் வாறு செய்தார் இல்லை. அவருடைய கப்பல் ஒன்றை லாம்பர்ட் கைப்பற்றிக் கொண்டார். இரங்கூன் கவர்னர் ஆங்கிலேயரைத் தாக்க வெடி மருந்தைப் பயன்படுத்தினுர். கவர்னர்-ஜெனரல் அனுப்பிய இறுதி எச்சரிக்கையைப் பர்மிய அரசியலார் பொருட்படுத்தவில்லை. உடனே டல்ஹௌசி தமது பர்மியப் படையெழுச்சியைத் தொடங்கினுர். முதல் பர்மியப் போரினுல் ஆங்கிலேயருக்கு ஏற்பட்ட படிப்பினைகளை அவர் மனத்திற்கொண்டு தக்க முறையில் திட்டங்கள் வகுத்தார். 1852-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்

தில் ஆங்கிலப்படை பர்மாவுக்குப் போய்ச் சேர்ந்தது. படைத் தலைவர் காட்வின், மர்ட்டாபனைக் கைக்கொண்டார். இரங்கூனும் தாக்குதலுக்குட்பட்டது. பஸ்ஸீனையும் ஆங்கிலேயர் கைப்பற்றினர். டல்ஹௌசியே இரங்கூனுக்குச் சென்று அங்கே சில வாரங்கள் தங்கினர். புரோம், பெகு முதலிய நகரங்களும் ஆங்கிலேயர் வசப்பட்டன, ஆனல் படை ஆவாவை நோக்கிச் செல்வதைக் கவர்னர்-ஜெனரல் விரும்பவில்லை. அவர் பர்மிய அரசருடன் உடன்படிக்கை செய்துகொள்ள முயன்றார். ஆனல் அம்முயற்சி பயனுற வில்லை. அதன்விளைவாக அவர் தென் பர்மாவைத் தம்முடன் இணைத்துக்கொண்டார். பெகு மாகாணத்தின் தலைவராகப் பிரிட்டிஷ் ஆணையாளர் ஒருவரை அமர்த்தினர். அவரே 1862-ல் பிரிட்டிஷ் பர்மாவின் தலைமை ஆணையாளரானர். அவருடைய ஆற்றல் காரணமாக ஆங்கிலேயரின் ஆட்சிமுறை அங்கே வெற்றியடைந்தது. உரிமையுடன் இருந்த வடபர்மாவுக்கும் கடலுக்கும் தொடர்பற்றுப் போய் விட்டது.

பகுதி 5

இறுதிப் பட்டயச் சட்டம் (1853)

1833-ம் ஆண்டின் பட்டயச் சட்டத்தைப்பற்றி முன்னர்ப் பார்த்தோம். அதற்குப்பிறகு 1835-ல் பார்லிமெண்டு இயற்றிய சட்டத்தின்படி வடமேற்கு மாகாணங்கள் உதவி கவர்னர் ஒருவரின்கீழ் வந்தன. அடுத்த ஆண்டில் சர் சார்லஸ் மெட்காஃப் அப்பதவியை ஏற்ருர். 1833-ம் ஆண்டின் சட்டம், வில்லியம் கோட்டையின் கவர்னரே இந்திய கவர்னர்-ஜெனரலாக இருக்கவேண்டுமென்று குறிப்பிட்டது. அவ்வேற்பாடு சிறப்புடையதாக விளங்காததால் 1853-ம் ஆண்டுப் பட்டயச் சட்டப்படி அம்முறையானது மாறி வங்காளம் ஒரு உதவி கவர்னரைப் பெற்றது. இப்புதிய ஏற்பாட்டின்படி பதவியில் அமர்ந்திருந்த முதல் இந்திய கவர்னர்-ஜெனரல் டல்ஹௌசியே ஆவர். மீண்டும் பார்லிமெண்டு தீர்மானிக்கும் வரையில் கம்பெனியின் அதிகாரங்கள் தொடர்ந்து வந்தன. கம்பெனி, பிரிட்டிஷ் அரசரின் பொறுப்பாட்சி வாய்ந்த நிலையம் என்ற கொள்கையைப் புதிய சட்டமும் வற்புறுத்தியது. மேலும் இயக்குநர்களின் எண்ணிக்கை இருபத்துநான்கிலிருந்து பதினெட்டுக்குக் குறைந்தது. அவர்களில் அறுவர் பிரிட்டிஷ் அரசரால் அமர்த்தப் பெற்றனர். மேற்பார்வைக் கழகத்தின் கட்டுப்பாட்டுக்கு அடங்கியே கம்பெனியார் அலுவலர்களை அமர்த்தமுடியும். தேர்வுப் போட்டி முறையைப் பின்பற்றியே ஒப்பந்தச் சிவில் பணித்துறை அலுவலரை அமர்த்தவேண்டுமென்று மேற்பார்வைக் கழகம் விதித்தது. கவர்னர் ஜெனரலின் ஆலோசனைக் குழுவிலிருந்த சட்ட உறுப்பினர் சாதாரண உறுப்பினரானர். இக்குழுவில் மொத்தம் நான்கு உறுப்பினர்கள் இருந்தனர். சட்டமியற்றும் பொருட்டுமட்டும் இக் குழு அளவில் பெருகிற்று. கவர்னர்-ஜெனரல், படைத்தலைவர், மேலே கூறிய

ஆலோசனைக்குழுவினர் நால்வர், வங்காளத்தலைமை நீதிபதி, தலைமை நீதிமன்ற முறைவர்களில் ஒருவர், வங்காளம், சென்னை, பம்பாய், வடமேற்கு மாகாணங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளாக நான்கு சிவில் பணியாளர்கள் என்ற இப்பன்னிருவர்களும் புதிதாக அமைந்த சட்டசபையின் (Legislative Council) உறுப்பினர்களாயினர். இறுதியாகக் கூறிய நால்வரும் பணித்துறையில் குறைந்தது பத்து ஆண்டுகளாவது அனுபவம் வாய்ந்தோராக இருக்கவேண்டும். இவர்களில் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஊதியம் ரூ. 5000. பார்லிமெண்டைப்போலவே சட்டக் கவுன்ஸிலும் செயலாற்றியது. இக்கவுன்ஸில், நிர்வாக அதிகாரிகளின் கொள்கையைப்பற்றிக் கேள்விகள் கேட்கவும் முற்பட்டது. இதனை அவ்வமயம் தாய் நாட்டு அரசியலார் விரும்பவில்லை. ஆதலால் 1861-ல் அவர்கள் சட்டக்கவுன்ஸிலின் அதிகாரத்தைக் குறைத்து விட்டனர். அதற்குப்பிறகு அக்கவுன்ஸிலுக்குச் சட்டமியற்றும் அதிகாரம் மட்டுமே நிலைத்தது.

பகுதி 6

அவகாசியிலிக் கொள்கை (The Doctrine of Lapse)

கொள்கை : பிள்ளையில்லாத ஒருவர் தமது குலம் அழியாமலிருப்பதற்காக வேறு யாரையேனும் தத்து எடுத்துக்கொள்ளும் முறையை இந்துச்சட்டம் ஏற்றுக் கொள்கிறது என்பதை டல்ஹௌசி அறிந்தார். ஆனால் பிரிட்டிஷ் அதிகாரத்துக்கு அடங்கிய சிற்றரசர்கள் ஆங்கிலேயரின் அனுமதியின்றிச் சுவீகாரமாக எவரையும் எடுத்துக்கொள்ளலாகாது என்று அவர் முடிவுசெய்தார். தத்து எடுத்துக்கொள்ள அனுமதி கொடுப்பதா இல்லையா என்பது ஆதிக்கநிலையில் உள்ள அரசியலாரின் விருப் பத்தைப் பொறுத்ததென்று அவர் வலியுறுத்திக் கூறினர். வாரிசு இல்லாத காரணத்தால், சட்டப்படி சுவீகாரம் செய்துகொள்ள ஆங்கில அரசியலாரின் அனுமதியைப் பெறவேண்டிய சிற்றரசர்களின் நாடுகளையும் வருமானத் தையும் பெற்றுக்கொள்வதற்குக் கிடைக்கும் வாய்ப்புக் களை ஆங்கிலேயர் தவறவிடக்கூடாது என்பது தமது திட்டமான கருத்தாகும் என்று டல்ஹௌசி இயக்குநர் களுக்கு எழுதியுள்ளார். அவர்காலத்தில் ஆங்கிலேய ருடன் பாதுகாப்புமுறை உடன்படிக்கை செய்துகொண் டிருந்த பல சிற்றரசுகள் இருந்தன. அவ்வுடன்படிக்கை களை டல்ஹௌசி வெறுத்தார். முடிந்திருந்தால் அந்த இராச்சியங்கள் அனைத்தையும் பிரிட்டிஷ் இந்தியாவுடன் அவர் இணைத்திருப்பார். அந்நாடுகள் பலவற்றில் அரசர் கள் நாட்டுச்செல்வத்தைப் பாழாக்கி வந்தனர் என்றும் உள்நாட்டு அரசியலைப் புறக்கணித்துவந்தார்கள் என்றும் அவர் உணர்ந்தார். ஆங்கில ஆட்சியால் மக்களுக்கு நன்மையே ஏற்படும் என்பது அவருடைய உறுதியான நம்பிக்கையாகும். ஆகவே ஆங்கில ஆட்சியை இயன்ற வரையில் எங்கும் பரப்புவதற்கு அவர் முயன்றார். மக்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பிரிட்டிஷ் ஆட்சியைப்

பரப்பிவிடவேண்டுமென்பதே அவருடைய நோக்கமாகும். ஆகவே பிரிட்டிஷ் ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்ட சிற்றரசர் யாரேனும் பின்வழியினர் இன்றி இறந்துபோனல் அவருடைய இராச்சியத்தை ஆங்கிலேயர் இணைத்துக் கொள்வர் என்பதும் அவ்வரசர் யாரையேனும் தத்து எடுத்துக்கொள்ள விரும்பினல் அதற்கு ஆங்கிலேயரின் அனுமதியை முன்கூட்டியே பெறவேண்டுமென்பதும் அவகாசியிலிக் கொள்கையின் கூறுகளாகும்.

இணைக்கப்பெற்ற நாடுகள்: டல்ஹௌசி, வாய்ப்புக்கள் ஏற்பட்டபொழுதெல்லாம், மேலே கூறிய கொள்கையைப் பயன்படுத்திப் பல சிற்றரசுகளைத் தம்முடன் இணைத்துக்கொண்டார். இக்கொள்கைக்கு முதன்முதல் இரையானது சதாரா. இவ்விராச்சியத்தை மகாராசா சத்திரபதியும் அவரது மக்களும் பின்வழியினரும் நிலையாக ஆளுவதென்று ஆங்கிலேயர் முன்னரே ஒரு உடன்படிக்கைப்படி ஒப்புக்கொண்டிருந்தனர். அவ்வாறிருந்தும் டல்ஹௌசி, அவ்வுடன்படிக்கைக்குத் தமக்கு அனுகூலமான வகையில் விளக்கம் செய்துவிட்டு அதன் அரசர் குழந்தை இல்லாமல் இறந்தபொழுது (1848) அவ்விராச்சியத்தைப் பெரும்பாலும் தம்முடன் இணைத்துக்கொண்டார். இறக்குந் தறுவாயில் அரசர் செய்துகொண்ட சுவீகாரத்தைக் கவர்னர்-ஜெனரல் தள்ளுபடி செய்துவிட்டார். இக்கொள்கையை ஒட்டியே டல்ஹௌசி, செயித்புரி (உ. பி.), சம்பல்புரி (ஒரிஸ்ஸா) (1849), சட்லெஜுக்குத் தெற்கிலுள்ள பகாட் (1850), மத்திய மாகாணத்தைச் சேர்ந்த உதயபுரி (1852), ஜான்சி (1853), நாகபுரி (1854) முதலிய சிற்றரசுகளைப் பிரிட்டிஷ் இந்தியாவுடன் சேர்த்துக்கொண்டார். 1860-ல் உதயபுரியும் 1862-ல் பகாட்டும் விடுவிக்கப்பெற்றன. 1853-ல் ஜான்சி அரசர் கங்காதர ராவ் இறந்தபின் அந்நாட்டை ஆங்கிலேயர் இணைத்துக் கொண்டதை இராணி லட்சுமிபாய் எதிர்த்தார். 1857-ம் ஆண்டுப் படைக் கலகத்தில் அவ்வம்மையாரின் வீரச் செயல்களைக் காண்கிறோம். நாகபுரியில் ஆட்சி செய்து

வந்த III-ம் ரகூஜி பான்ஸ்லே களியாட்டங்களில் மூழ்கி அரசியலைப்பற்றி அக்கரை கொள்ளாமலே இருந்தார். மகப்பேறு இன்றி அவர் 1853-ல் இறந்தார். அவர் யாரையும் சுவீகாரம் செய்துகொள்ள விரும்பவில்லை என்று டல்ஹௌசி குறிப்பிட்டுள்ளார். மத்திய மாகாணங்களின் பெரும் பகுதியைத் தன்னுள் கொண்ட நாகபுரி நாட்டை இணைத்துக்கொண்டதால் ஆங்கிலேயருக்குச் சிறந்த நன்மைகள் ஏற்பட்டன. நாகபுரி, ஏறத்தாழ 80,000 சதுர மைல் பரப்பை உடைய நாடு. நாற்பது லட்சம் மக்கள் அங்கே வாழ்ந்தனர். அந்நாட்டிலிருந்த சிறந்த பருத்தி விளையும் நிலங்கள் ஆங்கிலேயருக்குக் கிடைத்தன. கல்கத்தாவிலிருந்து பம்பாய்க்குச் செல்லும் நிலவழியின் முழு உரிமையும் அவர்களுக்குக் கிடைத்தது. 1861-ம் ஆண்டிலிருந்து அப்புதிய மாகாணத்தைத் தலைமை ஆணையாளர் ஒருவர் நிர்வகித்துவந்தார். அங்கே சிறந்ததொரு நிலவரித்திட்டம் அமைந்தது. நாகபுரியை இணைத்துக் கொண்டபிறகு அரசகுடும்பத்தாருக்குரிய பொருள்களை ஆங்கிலேயர் ஏலத்தில் விற்ருர்கள். இச்செயல் மராட்டியரின் மனத்தில் ஆங்கிலேயர்பால் கொடும் பகையை மூட்டியது. சம்பல்புரியின் அரசரை, மூன்ரும் மராட்டியப் போருக்குப் பிறகு ஆங்கிலேயர் பெருந்தன்மையுடன் நடத்தினர். ஆதலால் ஆங்கில ஆட்சிமுறையின் நன்மைகள் தம் மக்களுக்குக் கிடைக்கவேண்டுமென்ற கருத்துடன் அவர் யாரையும் தத்து எடுத்துக்கொள்ளவில்லையாம்.

கொள்கை விளக்கம் : டல்ஹௌசி, தமது கொள்கைக்கு ஆதரவாக முகலாய வழக்கத்தை எடுத்துக்காட்டி ஒருவாறு அமைதிப்படுத்த முயன்ருர். முகலாயர் சிறப்புற்றிருந்த காலத்தில் பிள்ளையில்லாத குறுநில மன்னர்கள் தத்து எடுத்துக்கொள்ளப் பேரரசரின் உத்தரவைப் பெறுவது வழக்கம். குறிப்பிட்ட தொகையைக் கொடுத்தும் அவர்கள் தடையின்றி அவ்வுத்தரவைப் பெற்று வந்தனர். ஆங்கிலேய அரசியலாரின் அனுமதிபெற்றே

அவர்களுக்கடங்கிய சிற்றரசர்கள், தத்து எடுத்துக் கொள்ளலாமென்று டல்ஹௌசி ஆணையிட்டார். அனுமதி கொடுக்காமலிருக்கவும் அவர்களுக்கு அதிகாரமிருந்தது. டல்ஹௌசிக்கு முன்னர் சிற்றரசர்கள் தாம் தத்து எடுத்துக்கொள்வதற்கு முன்னே அல்லது பின்னே ஆங்கில அரசாங்கத்தின் அனுமதியைப் பெறும் வழக்கம் இருந்தது. இச்செய்தியைப் பற்றிச் சட்டமெதுவு மில்லையென்றும் தத்துப்பிள்ளை பட்டத்துக்கு உரியவரல்லர் என்றும் கூறுவது முறைமையன்று என்று பம்பாய் கவர்னராயிருந்த சர் ஜார்ஜ் கிளெர்க் குறிப்பிட்டிருப்பதும் ஈண்டு நோக்கத்தக்கது. டல்ஹௌசி பின்பற்றிய கொள்கையை அவரே புதிதாகப் படைத்தாரென்று கருதுவதற்கில்லை. அது முறையற்றது என்றும் கருதுவதற்கில்லை. ஆனால் அக்கொள்கையின் விளைவாகக் குறுகிய காலத்தில் பலநாடுகள் இணைக்கப்பட்டதால் அது பலருக்கு அச்சத்தைத் தந்தது. ஐந்நூற்றுக்கு மேற்பட்டிருந்த இந்தியச் சிற்றரசுகளில் ஏழுநாடுகளில்மட்டுமே டல்ஹௌசி, தமது கொள்கையைப் பயன்படுத்தினரென்றும் எதிர்பாராத விதமாக அவராட்சிக் காலத்தில் பல சிற்றரசர்கள் பிள்ளையில்லாமல் இறந்தனர் என்றும் சிலர் விளக்கிக்கூறுவர். மேலும் கவர்னர்-ஜெனரல் இக்கொள்கையைப் பிரிட்டிஷ் ஆட்சியைச் சார்ந்திருந்த சிற்றரசுகளில்தான் நிறைவேற்றினர் என்பர். ஆனால் திறைசெலுத்தும் நாட்டுக்கும் (Tributary State) சார்பு நாட்டுக்கும் (Dependent State) இடையே உள்ள வேறுபாட்டை ஆங்கிலேய அதிகாரிகளே தெளிவாக உணரவில்லை என்று அறிகிறோம். கரவலி என்ற ஒரு இராசபுத்திரச் சிற்றரசைக் கைப்பற்ற டல்ஹௌசி ஏற்பாடு செய்தார். ஆனால் அது ஒரு சார்பு நாடன்று எனவும் அவகாசியிலிக்கொள்கை அதற்குப் பொருந்தாது. எனவும் இயக்குநர்கள் கூறிவிட்டதால் அந்நாடு சேர்க்கப்படாமல் தப்பியது. ஆனால் நாம் முன்னர்ப் பார்த்த "சிற்றரசுகளைத் தனிப்படுத்தும் கொள்கையை" ஆங்கிலேயர், சார்புநாடுகள், திறை செலுத்தும் நாடுகள் ஆகிய இருவகை இராச்சியங்

களிலும் பின்பற்றினர் என்பதும் நோக்கத்தக்கது. சதாரா, ஜான்சி, நாகபுரி ஆகிய நாடுகளை இணைத்துக் கொண்டதால் பிரிட்டிஷாருக்குப் பல நன்மைகள் ஏற்பட்டன. ஆனால் மற்ற நான்கு நாடுகள் ஆங்கிலேயருடன் சேர்ந்ததால் பின்னவருக்கு இடையூறுகளே தோன்றின. சிற்றரசுகள் பலவற்றில் சீர்கேடுகள் காணப்பட்டதால் அக்கேடுகளை நீக்கவேண்டுமென்ற உயர்ந்த குறிக்கோளும் டல்ஹௌசிபால் இருந்தது என்பதை நாம் மறப்பதற்கில்லை. எனினும் கவர்னர்-ஜெனரல், நாடு கவரும் முறையில் கருத்தூன்றியிருந்தார் என்றும் அவகாசியிலிக்கொள்கையை அவர் அதற்கேற்ற ஒரு கருவியாகப் பயன்படுத்திக்கொண்டார் என்றும் பெரும்பான்மையான மக்கள் கருதத்தொடங்கினர். இக்கொள்கையை ஆங்கிலேயர் 1857-ம் ஆண்டுப் படைக் கலகத்துக்குப் பிறகு 1859-ல் கைவிட்டனர்.*

---

* 116, பக். 306

பகுதி 7

டல்ஹௌசியும் வேறு சில சிற்றரசர்களும்

சிக்கிம் அரசர் இரண்டு ஆங்கிலேயர்களை இழிவு படுத்திய காரணத்தால் 1850-ல் டல்ஹௌசி ஒரு சிறு நிலப்பகுதியைப் பெற்றுக்கொண்டார். பேஷ்வாப் பதவியை ஒழித்தபிறகு, இறுதிப் பேஷ்வா II-ம் பாஜிராவுக்கு ஆங்கிலேயர் எட்டுலட்ச ரூபாய் ஓய்வுக்கால ஊதியம் கொடுக்க ஏற்பாடு செய்திருந்தனர் என்பதை நாமறிவோம். அவர் 1851-ல் இறந்தபிறகு அவருடைய தத்துப் பிள்ளையான நாணு சாகிபுக்கு அந்த ஊதியத்தைக் கொடுக்க ஆங்கிலேயர் உடன்படவில்லை. நாணு சாகிபு ஆங்கிலேயர் மீது பழிதீர்த்துக்கொள்ளப் பிற்காலத்தில் படைக்கலகத்தில் கலந்துகொண்டார். ஐதராபாத் நாடு, பாதுகாப்பு முறை உடன்படிக்கைப்படி ஆங்கிலேயருக்கு ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தக் கடமைப்பட்டிருந்தது. ஆனால் பல ஆண்டுகளாக நிஸாம் அதைச் செலுத்தாமல் பாக்கிவைத்திருந்தார். ஆகவே நிஸாம் நசீர்-உத்தீனுடன் (1829-57) டல்ஹௌசி, 1853-ல் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டார். அதன்படி பேராரையும் வேறு சில நிலப்பகுதிகளையும் ஆங்கிலேயர் பெற்றனர். பிறகு பேராரைத்தவிர மற்ற பகுதிகளை நிஸாமுக்குத் திருப்பிக்கொடுத்துவிட்டனர். கருநாடக நவாப்பும், தஞ்சை அரசர் சிவாஜியும், 1855-ல் வாரிசுகள் இல்லாமல் இறந்துவிட்டனர், கவர்னர்-ஜெனரல், எவரையும் அவர்களுடைய பின் வழியினர் என ஏற்க மறுத்துவிட்டார். அவர்களுக்குரிய பட்டங்களையும் ஒழித்தார். ஆனால் பிறகு 1867-ல் நவாப்புக் குடும்பத்தைச் சேர்ந்த உரிமையாளர் ஒருவருக்கு "ஆர்க்காட்டு இளவரசர்" என்ற பட்டத்தையும்

உதவி ஊதியத்தையும் அளித்தார். பிற்காலத்தில் இந்த இளவரசர் சென்னை மாகாணத்தின் முதற்பெருஞ் செல்வர் என்ற சிறப்புக்கு உரியவரானார்.* முகலாயப் பேரரசரின் பட்டத்தை ஒழிப்பதற்கு டல்ஹௌசிக்கு மேலதிகாரிகளின் அனுமதி கிடைக்கவில்லை.

---

* *107*, பக். *102*.

பகுதி 8

புரட்சிக் கலகங்கள்

பஞ்சாபில் இருந்த சிப்பாய்களுக்குக் கொடுத்து வந்த கூடுதலான படித்தொகைகளை ஆங்கிலேயர் நிறுத்தி விட்டதால் 1849—50-ல் அவர்கள் கலகம் செய்தனர். அதனை அடக்கும் முறையில், படைத்தலைவர் நேப்பியருக்கும் டல்ஹௌசிக்குமிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டது. அதன் விளைவாக முன்னவர் பதவியினின்று விலகிவிட்டார் (1850). இராசமகால் குன்றுகளில் வாழ்ந்த சந்தலர் என்பவர்கள் நாகரிகத்தில் முன்னேருதவர்கள். இக்கூட்டத்தினர் 1855-ல் கலகம் செய்தனர். நில உரிமையாளரும் பண லேவாதேவிக்காரர்களும் அவர்களைத் துன்புறுத்தினர் என்பதே அவர்களுக்கு ஏற்பட்டிருந்த குறையாகும். அக்கூட்டத்தினரில் ஏறத்தாழ 30000 பேர்கள் சினங்கொண்டு எழுந்து ஊர்களை நாசமாக்கினர். பல இந்தியர்களையும் ஐரோப்பியர்களையும் கருணையின்றிக் கொலை செய்தனர். அவர்கள்பால் சிக்கிய ஆடவர், பெண்டிர், குழந்தைகள் முதலிய யாவரும் கொலலுண்டனர். ஆங்கில அரசியலார் படைகளைத் தருவித்து அக் கலகத்தை அடக்கினர். இதனுல் அரசாங்கத்துக்குச் சிறந்த படிப்பினை கிடைத்தது. இன்றியமையாச் சீர்திருத்தங்களை அரசியலார் நிறைவேற்ற முற்பட்டனர். பீஹாரில் உள்ள சந்தலப் பர்காணங்கள் என்ற பகுதியில் சீர்திருந்திய ஆட்சி முறை அமைந்தது. இனி, மலையாள நாட்டில் மாப்பிள்ளைமார் என்ற முகமதிய வகுப்பினர் 1836-க்கும் 1855-க்கும் இடையே 22 முறைகள் கலகம் செய்ததைக் காண்கிரேம்.1849-ல் மஞ்சேரியிலும் அங்காடிபுரத்திலும் கடும் போர் நிகழ்ந்தது. 1852-ல் இந்துப்பெண்டிரும் குழந்தைகளும் கொடுங் கொலைக் குள்ளாயினர்.

1854-ல் அரசியலார், மாப்பிள்ளைமார்களிடமிருந்த போர்க் கத்திகள் அனைத்தையும் பறிமுதல் செய்தனர். அடுத்த ஆண்டில் கலகக்காரர்கள் மலையாளக் கலெக்டரையே கள்ளிக்கோட்டையில் கொன்றுவிட்டனர். அவர்களுடைய கொடுமைகளை அடக்க அரசாங்கம் 1854, 1859 ஆகிய ஆண்டுகளில் சட்டங்களியற்றியது. ஆனால் அவற்றால் சிறந்த நற்பயன் விளையவில்லை.

பகுதி 9

அயோத்தியை இணைத்துக் கொள்ளல்

அயோத்தியின் வரலாறு: கிளைவ், அலகாபாத்தில் உடன்படிக்கை செய்து கொண்டதுமுதல் அயோத்தி நவாப்புகளுக்கும் ஆங்கிலேயருக்கு மிடையே நிலவிவந்த தொடர்பைப்பற்றி ஆங்காங்குக் குறிப்பிட்டுள்ளோம். அயோத்தியை வலிமைப்படுத்தும் நோக்கத்துடனே வாரன் ஹேஸ்டிங்ஸ் ரோஹில்லாப் போரை நடத்தினர். அதன் விளைவாக ரோஹில்கண்டு, அயோத்தி நாட்டுடன் இணைந்தது. அக் கவர்னர்-ஜெனரல் அயோத்தியுடன் பல உடன்படிக்கைகள் செய்து கொண்ட பிறகும் அங்குச் சீர்கேடுகள் நீங்கவில்லை. அயோத்தி நவாப்பைச் சீர் திருத்தக் காரன்வாலிஸ் எடுத்துக் கொண்ட முயற்சி களும் வீணாயின. ஷோர், அந்நாட்டில் பிரிட்டிஷ் ஆதிக் கத்தை நிறுவிய போதிலும் உள்நாட்டுக் கேடுகள் மறைய வில்லை. வெல்ஸ்லி 1801-ல் செய்து கொண்ட உடன் படிக்கை, அயோத்தியில் மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு ஆட்சிமுறையை அமைக்குமாறு நவாப்பை வற்புறுத்தியது. நவாப்பு, மிண்டோவின் அறிவுரைகளை யும் புறக்கணித்தார். 1819-ல் ஹேஸ்டிங்ஸ் பிரபு அவரிட மிருந்து 2 கோடி ரூபாய் பெற்றுக்கொண்டு அவருக்கு அரச பட்டம் கிடைக்கச் செய்தார். பெண்டிங்கு அவருக்கு எச்சரிக்கை விடுத்தாரென்பதையும் முன்னர்ப் பார்த் தோம். ஆக்லண்டு, 1837-ம் ஆண்டில் அவருடன் உடன் படிக்கை செய்து கொண்டார். ஆனல் அதை இயக்குநர்கள் ஏற்கவில்லை. 1847-ல் ஹார்டிஞ்சும் அயோத்தி அரச ருக்கு எச்சரிக்கை விடுத்தார். லக்னௌவில் ரெஸிடெண் டாக இருந்த சர் வில்லியம் ஸ்லீமென் (1849–56), அயோத்தி மக்கள் வருந்தத்தக்க நிலையில் இருப்ப தாக 1851-ல் அறிக்கை விடுத்தார். ஆனல் அது காரண மாக அந்நாட்டை ஆங்கிலேயர் இணைத்துக் கொள்வதை

யும் அவர் சிறப்புடையதாகக் கருதவில்லை. அவ்வாறு செய்வதால் இந்தியாவில் பிரிட்டிஷாரின் பெருமைக்கு இழுக்கு நேரும் என்பது அவர் எண்ணமாகும். "பன்னிரண்டு அயோத்திய நாடுகளைப் பெறுவதை விட இந்தியாவில் நற்பெயர் வாங்குவது சாலச் சிறந்ததாகும்" என்ற அவருடைய குறிப்பு நோக்கத்தக்கது. அயோத்தியில் குழப்பம் மிகுந்து வந்ததை சர் ஜேம்ஸ் ஔட்ராம் கண்ணுற்றார். அந்நாட்டு அரசர் வஜீத் அலி (1847–56) சிற்றின்பத்திலும் களியாட்டங்களிலும் மூழ்கிக் கிடந்தார். அவர் தமது தனிப்பற்றுக்குரிய யாழ்வாசிப்போர் ஒருவரைத் தலைமை நீதிபதியாக்கினார். தலைமைப் பாடகர் ஒருவரிடம் அரசியல் அதிகாரங்கள் அனைத்தையும் ஒப்புவித்திருந்தார்.[1]

இணைக்கப்படுதல் : உடன்படிக்கையையும் மீறி மக்களுக்கு மேலும் மேலும் துன்பமிழைத்துவந்த அயோத்தி மன்னரின் அடாத செயல்களைத் தொடக்கத்திலேயே கட்டுப்படுத்தாமலிருந்தது ஆங்கிலேயர் இழைத்த தவறாகும் என்ற கருத்து பலருக்குத் தோன்றியது.[2] ஆனால் அயோத்தி நவாப்புகளும் அரசர்களும் நீண்டகாலமாக, ஆங்கிலேயருக்கு அடங்கியே ஒழுகினர். ஆதலால் அந்நாட்டை இணைத்துக்கொள்வதற்கு டல்ஹௌசியே முதலில் விரும்பவில்லை. 1855-ல் அவர் அந்நாட்டின் அவலநிலையைத் தெளிவாக உணர்ந்தார். தாய்நாட்டு அதிகாரிகள் அந்நாட்டைக் கம்பெனியார் இணைத்துக்கொள்வதே சிறந்தது என்று கருதினர் ; டல்ஹௌசியே அச்செயலை நிறைவேற்ற வேண்டுமென்றும் விரும்பினர். கவர்னர்-ஜெனரல் நவாப்பை வழிக்குக் கொண்டுவர நிதானமான முறைகளையே கையாண்டார். ஒரு பெருந்தொகையை உதவி ஊதியமாகப் பெற்றுத் தாம் பெயரளவில் நவாப்பாயிருக்க ஒத்துக்கொண்டதாக ஒரு நகல் உடன்படிக்கையில் கையொப்பமிடவேண்டுமென்று

---

1. *64, III, பக். 421.*
2. *43 பக். 172*

38

நவாப்புக்குத் தெரிவித்தார். ஆனால் இவ்வுடன்படிக் கையை ஏற்க அயோத்தி அரசர் மறுத்தார். உடனே டல் ஹௌசி 1856-ல் அந்நாட்டைக் கைப்பற்றி அதை ஆங் கில நாடுகளுடன் சேர்க்கும்படி ரெஸிடெண்ட் ஔட் ராமுக்கு ஆணையிட்டார். ஆங்கிலேயர், வஜீத்அலிக்கு ஆண்டுக்குப் பன்னிரண்டு லட்ச ரூபாய் ஓய்வுக்கால ஊதியம் கொடுக்கத் தொடங்கினர்; அவருடைய குடும்பத் தினருக்கும் தக்க வாழ்க்கை வசதிகளை அமைத்துத் தந்தனர். புதிதாக இணைக்கப்பட்ட அயோத்தியில் ஒரு தலைமை ஆணையாளர் ஆட்சிசெய்யத் தொடங்கினர். அங்கே புதிய நிலவரித்திட்டங்கள் நிறைவேறின. இவற்றால் அயோத்தியின் நில உரிமையாளர் பலருக்கு இடையூறுகள் தோன்றின. அவர்கள் சினங்கொண்டு 1857-ம் ஆண்டுப் படைக்கலகத்தில் பிரிட்டிஷாரை எதிர்த் தனர். அக் கலகத்துக்குப் பிறகு அவர்களை மகிழ்விப்பதற் காக ஆங்கிலேயர் 1856-ம் ஆண்டு நிலவரித்திட்டத்தை மாற்றி அமைத்தனர்.

விளக்கம் : கிளைவ் காலத்திலிருந்தே அயோத்தியில் ஆட்சி நடத்திய ஷீயா அரசர்கள் பண்பாட்டு வளர்ச்சிக்கு ஓரளவு தொண்டாற்றியபோதிலும் அந்நாட்டு மக்கள் நிலை வருந்தத்தக்கதாகவே இருந்து வந்தது. நீண்ட காலமாக ஆங்கிலேயரும் பொறுமையைக் கடைப்பிடித்தே ஒழுகினர் இறுதியில் டல்ஹௌசியின் செயல் முறை யானதுதானா என்ற கேள்வியை வரலாற்றறிஞர்கள் பலர் எழுப்பி வெவ்வேறு விதமாக முடிவுகட்டி யுள்ளனர். அங்கே நிலவிய குழப்பநிலையை விரிவாக எழுதி அறிக்கைகளை அனுப்பிய ஸ்லீமன், ஔட்ராம் ஆகி யோரும் அந்நாட்டை இணைத்துக்கொள்ளும் கொள் கையை ஆதரிக்கவில்லை. அயோத்தி அரசர்கள் ஆங்கி லேயர்பால் பணிவன்புடன் நடந்துகொண்டு வந்தனர். ஆதலால் அவர்பால் கடுமையில்லாத வேறு முறையைக் கையாண்டிருக்க வேண்டுமென்றும் சிலர் கூறுவர். ஆனால் அயோத்தியில் சீர்கேடுகள் பெருகிவந்தன என்

பதைப்பற்றிக் கருத்து வேறுபாட்டுக்கே இடமில்லை. அவற்றை நீக்குதல் ஆங்கிலேயரின் சிறந்தகடமை என்பதிலும் ஐயமில்லை. ஆனால் அந்நாட்டை அடியோடு இணைத்துக்கொண்டதால் அரசியல் துறையில் அமைதி யின்மைக்கே வழி ஏற்பட்டது. மேலதிகாரிகளின் ஆணை யையே டல்ஹௌசி நிறைவேற்றியதால் இவர் குற்ற மற்றவர் என்றும் சிலர் கூறுவர். ஆனால் இவர் கண் மூடித்தனமாக அதிகாரிகளுடைய விருப்பப்படியே நடப் பவரல்லர். டல்ஹௌசியின் ஆட்சிமுறைக் கொள்கைக்கு அவரே பொறுப்பாளியாவர் என்று நாம் உறுதியாகக் கூறலாம். அவருடைய அறிக்கைகளை நம்பியே மேலதி காரிகள் ஆணை பிறப்பித்தனர் என்றும் நாம் கருதலாம். பல நாடுகளை இணைத்துக்கொண்டபிறகு அயோத்தி யையும் தம்முடன் சேர்த்துக்கொண்டதால் டல்ஹௌசி யின் கொள்கை இந்நாட்டில் ஐயப்பாட்டையும் அச்சத் தையும் விளைவித்தது. இதனால் 1857-ல் படைக்கலகம் ஏற்பட்ட செய்தியைப் பின்னர்ப் பார்ப்போம். அக்கலகத் தில் அயோத்தி சிறந்த பங்கு கொண்டது.

———

பகுதி 10

ஆட்சிமுறை

மத்திய அரசு : நாடு இணைக்கும் டல்ஹௌசியின் கொள்கையின் விளைவாகப் பிரிட்டிஷ் இந்தியப் படமே மாறுதலடைந்தது. 1854-ல் வங்காளத்தில் துணைக் கவர்னர் நியமனம் பெற்றதால் கவர்னர்-ஜெனரல் மத்திய அரசுச்செய்திகளில் மிகுதியான கருத்தைச் செலுத்த வாய்ப்பு ஏற்பட்டது. அரசியலிலும் இராணுவத் துறையிலும் கல்கத்தாவின் நடுநாயகத்தன்மை சிறிது சிறிதாக மறையத்தொடங்கியது. உயர் அதிகாரங்களைக் கொண்ட தலைமை அரசாங்கம் சிம்லாவிலும் மீரட்டிலும் அமையத் தொடங்கியது. வங்காளப் பீரங்கிப் படையின் தலைமை நிலையமும் அவ்விடங்களில் நிலைபெற்றதைக் காண்கிறோம். டல்ஹௌசியின் ஆற்றலும் ஊக்கமும் ஆட்சிமுறையைச் செம்மைப்படுத்தின. கடமையாற்றுவதில் பிறபணியாளர் யாவருக்கும் அவரே ஒரு எடுத்துக்காட்டாக விளங்கினார். அவராட்சியில் சிறந்த சீர்திருத்தங்கள் தோன்றின. அவர் தலைமையில் மத்திய அரசு உணர்வு ஒளிர் வல்லரசாகத் திகழ்ந்தது (Enlightened Despotism). மக்களின் நலத்திலும் முன்னேற்றத்திலும் அரசியலார் ஆழ்ந்த கருத்தைச் செலுத்தினர்.

மாகாண ஆட்சி அமைப்பு : பஞ்சாபில் இராணுவ வலிமையுடன் சிவில் நீதிமுறையும் கலந்த ஒரு புதுவகை ஆட்சிமுறை ஏற்பட்டதென்று முன்னரே பார்த்தோம். அங்கே சிவில் துறைப்பணியாளரும் இராணுவ அலுவலரும் ஆட்சிமுறையை நடத்திவந்தனர். வங்காளச் சட்ட திட்டங்கள், தாம் புதிதாக அமைத்த நான்கு மாகாணங்களுக்குப் பொருந்தா என்று டல்ஹௌசி கருதினார். ஆதலால் அவற்றை ஆங்காங்கே உள்ள மக்களின் பழக்க வழக்கங்கட்கு இணங்க இயன்றவரை எளிதாக்

கும் முயற்சியிலீடுபட்டார். இவ்வாறு வரிவசூல், நீதி முறை ஆகிய துறைகளில் சட்டதிட்டங்கள் புதியமுறையில் அமைந்தன. இம்முறையைத் தோற்றுவித்தவர் டல்ஹௌசி அல்லர். எனினும் இத்திட்டத்தைச் சிறந்த முறையில் அமைத்து ஆதரித்த பெருமை டல்ஹௌசிக்கு உண்டு. மேலும் இவர்காலத்துக்குப் பிறகுதான் இது முழுவளர்ச்சியடைந்தது. புதிய மாகாணங்களில் ஆணையாளரும் தலைமை ஆணையாளரும் ஆட்சி புரிந்தனர். பஞ்சாபில் மட்டும் சிறிதுகாலம் மூன்று ஆணையாளர்கள் செயலாற்றினர். இவர்கள் யாவரும் கவர்னர்-ஜெனரலுக்கும் அவருடைய ஆலோசனைக் குழுவுக்கும் கட்டுப்பட்டிருந்தனர். மாவட்ட அதிகாரிகள், நிர்வாகம், வரிவசூல், நீதிமுறை, நாடுகாவல் முதலிய செய்திகளைக் கவனித்துவந்தனர். இம்முறை, அதிகாரப் பிரிவினைக் கொள்கையை ஆதரித்த காரன்வாலிசின் கொள்கையினின்று வேறுபடுகிறது. காலப்போக்கில் மேலே குறித்த ஆணையாளர்களும் தலைமை ஆணையாளர்களும் துணைக் கவர்னர்களாவும், பிறகு கவர்னர்களாவும் மாறினர்.

பகுதி 11

இருப்புப்பாதை, தந்திமுறை, அஞ்சல்முறை

இருப்புப்பாதைகள் : சமூக முன்னேற்றத்தை விரைவுறச்செய்த இருப்புப்பாதைகள், தந்திமுறை, மலிவான அஞ்சல் முறை முதலியன டல்ஹௌசியின் காலத்தில் ஏற்பட்டன. பொருளாதார வளர்ச்சியில் இருப்புப்பாதைகளின் சிறப்பைப்பற்றி முன்னரே குறிப்பிட்டுள்ளோம். டல்ஹௌசி இங்கிலாந்தில் வாணிகக் கழகத்தின் தலைவராக இருந்து பெற்ற அனுபவம் இந்தியாவில் அவருக்கு மிக உதவியாக இருந்தது. இந்திய இருப்புப் பாதைகளைப் பற்றிய போற்றத்தக்க அவருடைய குறிப்பு 1853-ல் தோன்றியது. இது அவர்தம் முன்னோக்கை அறிவிக்கின்றது. இந்தியாவில் இருப்புப்பாதைகள் அமைப்பதற்கான திட்டங்களை லண்டனிலிருந்த சில கூட்டுக்குழுவினர் டல்ஹௌசிக்கு அனுப்பியிருந்தனர். அத்திட்டங்களைப் பற்றிக் கருத்து வேறுபாடு மிகுதியாக இருந்தது. நிலையாக இந்நாட்டில் இருப்புப்பாதைகளை ஏற்படுத்திக் காப்பாற்றுவது இயலாத செயல் என்று சிலர் கருதினர். இந்திய மக்கள்தொகையிற் பெரும்பான்மையினர் சாதிக் கட்டுப்பாட்டுக்கு அடங்கியவர்களாகையால் புதிதாக அமையும் புகைவண்டிகளில் பிரயாணம் செய்யமாட்டார்கள் என்றும் அதனல் பொருள் இழப்பீடு ஏற்படக்கூடும் என்றும் சிலர் அஞ்சினர். அந்நிலையில் டல்ஹௌசி ஆங்கிலக் கூட்டுக்குழுவினருக்கு உறுதிமொழி கொடுத்து ஊக்கமளித்தார். அவர்களுக்குக் குறைந்த அளவு 5 சதவீதமாவது வட்டி அளிப்பதாகவும் ஒப்பந்தக்கால முடிவில் இந்திய அரசியலாரே இருப்புப்பாதைகளை விலைக்கு வாங்கிக்கொள்வர் என்றும் வாக்குறுதி அளித்தார். இருப்புப்பாதைகளைப் பொறுத்தவரை அரசியலாரின் கட்டுப்பாட்டையும் வரையறுத்தார். விரைவில் இந்தியாவில் இருப்புப்பாதை அமைக்கும் தொழில்

வளர்ச்சியுற்றது. இந்துக்களும் தமது பழக்க வழக்கங்களை மாற்றிக்கொண்டு புகைவண்டிகளில் பிரயாணம் செய்யத் தொடங்கினர். டல்ஹௌசி 1853-ல் பம்பாயிலிருந்து தாணுவுக்குச் செல்லும் முதல் இருப்புப்பாதையைத் திறந்து வைத்தார். 1854-5-ல் ஹௌராவிலிருந்து இராணிகஞ்சுக்கும், 1856-ல் சென்னையிலிருந்து அரக்கோணத்துக்கும் இருப்புப்பாதைகள் ஏற்பட்டன. உலகத்திலேயே முதல் இருப்புப்பாதை 1825-ம் ஆண்டில் இங்கிலாந்தில் ஸ்டாக்டன்னிலிருந்து டார்லிங்டன் என்னுமிடத்தை இணைத்துப் போடப்பட்டதென்பதும் ஈண்டு நினைவுகூரத்தகும். இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் இருப்புப்பாதைகள் அமைக்க வேண்டுமென்பதுதான் டல்ஹௌசியின் திட்டமாகும். அவருக்குப்பின் வந்தவர்களும் அத்திட்டத்தைப் பின்பற்றினர். இச்செய்தியில் ஊக்கத்துக்குச் சிறந்த காரணம் அவருக்குப் பிரிட்டிஷ் தொழில் வளர்ச்சியிலும் வாணிகப் பெருக்கத்திலும் இருந்த அக்கரைதான் என்று கூறவேண்டும். இந்தியப் பொருளாதார முன்னேற்றம் அவருடைய நோக்கமன்று. இங்கிலாந்துக்கு மிகுந்த பருத்தி தேவையாக இருந்தது. அதன் பொருட்டு இந்தியாவில் பருத்தி விளைவைப் பெருக்குவதற்கு இருப்புப்பாதைகள் உதவியாக இருக்குமென்று அவர் கருதினர். உற்பத்தியான பருத்தி, பல்வேறு இடங்களிலிருந்து விரைவில் துறைமுகங்கட்குச் செல்லப் புகைவண்டித் தொடர்கள் பயன்பட்டன.* இந்நாட்டில் இரும்பு, எஃகு உற்பத்தியில் ஆங்கிலேயர் சிறந்த ஊக்கங் காட்டி யிருப்பாரே ஆயின் அதனல் பல நன்மைகள் ஏற்பட்டிருக்கும். இங்கிலாந்தைப் போலவே இந்தியாவும் செழிப்புற்றேரேங்கியிருக்கும் என்று கூறலாம். 1855-ல் ஏற்பட்ட சந்தலர் கலகத்தை அடக்க ஹௌரா–ராணிகஞ்சு இருப்புப்பாதை மிக உதவியாயிருந்தது.

தந்தி முறை : டல்ஹௌசி காலத்தில் மின்சாரத் தந்தி முறையும் இந்நாட்டில் ஏற்பட்டது. புயல், இடி

* *43*, பக். *194*.

முதலியவற்ருல் அதற்கு விளைந்த இடையூறுகள் பலப்பல. கல்கத்தா மருத்துவக் கல்லூரியில் இரசாயனத் துறைப் பேராசிரியராயிருந்த பேரறிஞர் ஓஷாநெஸ்ஸி என்பாரும் தம் உழைப்பாலேயே பயிற்சி பெற்ற வேறு சில மின் துறை அறிஞர்களும் அவ்விடையூறுகளை நீக்க முயன்று வெற்றிபெற்றனர். 1853-க்கும் 1858-க்கும் இடையே ஏறத்தாழ 4000 மைல்கள் நீளமுள்ள தந்தித் தொடர்கள் கல்கத்தாவையும் பெஷாவரையும், பம்பாயையும் சென்னையையும் இணைத்தன. 1857-ல் ஏற்பட்ட படைக் கலகத்தை அடக்குவதற்குத் தந்திமுறை மிகவும் பயனுள்ளதாயிற்று. கலகக்காரர்களில் ஒருவர் கொலை செய்யப் படுவதற்கு முன்னர், "எம்மை இறுத்திக் கொல்லும் சாபக்கேடு இந்தத் தந்திக் கம்பிதான்" என்று கூறியதும் இங்கே குறிப்பிடத் தக்கது.*

அஞ்சல் முறை: கம்பெனியார் அமைத்திருந்த அஞ்சல் முறையைப் பரிசீலனை செய்ய 1850-ல் அரசியலார் ஒரு ஆணைக் குழுவை ஏற்படுத்தினர். அதன் முயற்சிகளின் விளைவாக இந்தியா முழுவதுக்கும் ஒரே விதமான குறைந்த கட்டணத்துக்குக் கடிதங்கள் எடுத்துச் செல்லப்பட்டன. அரைத் தோலாவுக்கு மேற்படாத எடையுள்ள கடிதம் இந்தியாவுக்குள் எங்கே செல்ல வேண்டுமாயினும் அரை அணுத் தபால் தலை வாங்கி ஒட்டி அனுப்பிஞல் போதும். அஞ்சல் அட்டை (Post card) ஒன்றின் விலை கால் அணுத்தான். கட்டணத்துக்குப் பதிலாக முன் கூட்டியே அஞ்சல் தலைகளை வாங்கிக் கடிதங்கட்கு ஒட்டும் பழக்கம் அப்போதுதான் ஏற்பட்டது. இச் சீர்திருத்தங்கட்கு முன்னர்க் கல்கத்தாவிலிருந்து பம்பாய்க்கு ஒரு கடிதம் போய்ச் சேர வேண்டுமாளுல் சுமார் ஒரு ரூபாய் செலவாயிற்று. புதிய அஞ்சற் சட்டத்தின்படி அதற்குச் செலவு அரை அணுத்தான் ஆகும். இது போலவே இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கு மிடையே கடிதப் போக்குவரத்து செலவும் மிகுதியாகக் குறைக்கப்பட்டது. அரை

---

* *43, பக். 199.*

அவுன்ஸ் எடையுள்ள கடிதத்துக்கு ஆறு பென்சுகள் கட்டணம் செலுத்திஞல் போதுமானதாயிற்று. அதற்கு முன்னர் இதே ஆறு பென்சுகள் கட்டணத்துக்கு ஒரு கடிதம் பெஷாவரிலிருந்து லாகூருக்குத்தான் செல்ல முடியும் என்று டல்ஹௌசியே பெருமையுடன் குறிப்பிட்டிருக்கிஞர்.* இவர் கவர்னர்-ஜெனரலாயிருந்த காலத்தில் **753** அஞ்சல் நிலையங்கள் ஏற்பட்டன. அஞ்சல் முறை ஒரு பொது இயக்குநரின் கீழ் மையப்படுத்தப் பெற்றது. இங்கிலாந்தில், பென்னி அஞ்சல் முறையை ரோலண்டு ஹில் என்பார் 1840-ல் தொடங்கிஞர் என்பதும் ஈண்டு நினைவுகூரத் தக்கதாகும்.

---

* ***56, II*** பக். ***205.***

பகுதி 12

கல்வியும் வேறுபல பொதுநலச் சீர்திருத்தங்களும்

கல்வி: டல்ஹௌசி கல்வித் துறையிலும் மிக்க ஊக்கங் காட்டினர். 1843 முதல் 1853 வரை வடமேற்கு மாகாணங்களின் துணைக் கவர்னராயிருந்த ஜேம்ஸ் தாம்சன் தயாரித்த உள்நாட்டுக் கல்விமுறைத் திட்டத்தை யும் அவர் ஏற்றுக் கொண்டார். பெண் கல்வி வளர்ச்சியிலும் கவர்னர்-ஜெனரலுக்கு ஆர்வ மிருந்தது. ட்ரிங்க்வாட்டர் பெத்தூன் (Drinkwater Bethune) நிறுவிய பெண் பள்ளிக்கூடத்துக்கு அவரிறந்தபின் டல்ஹௌசி உதவி புரிந்தார். மேற்பார்வைக் குழுவின் தலைவராயிருந்த சர் சார்லஸ் உட் (பிற்கால வைகௌண்ட் ஹாலிபாக்ஸ்) 1854-ல் தயாரித்து அனுப்பிய இந்தியக் கல்வித் திட்டத்துக்கு டல்ஹௌசியின் முழு ஆதரவு கிடைத்தது. அத்திட்டம், இந்தியாவின் அறிவுத்துறைப் பட்டயம் என்று புகழப்படுகிறது. இதில் ஆரம்பக் கல்வி, நடுத்தரக் கல்வி, உயர்தரக் கல்வி, ஆகியவற்றின் வளர்ச்சிக்கான திட்டங்களைக் காணலாம் மூன்று தலைமை மாகாணங்களிலும் தனித்தனியாக மூன்று பல்கலைக் கழகங்கள் அமைய வேண்டுமென்றும் அதில் குறிக்கப் பெற்றுள்ளது. சாதிமதத்தைப் பாராமல் கல்வித் துறையில் தனியார் முயற்சிகளுக்கு அரசியலார் பொருள் உதவி செய்ய வேண்டுமென்ற கொள்கையையும் அத்திட்டத்தில் காண்கிறோம். கவர்னர்-ஜெனரல் அத்திட்டத்தை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றத் தொடங்கினர். இப்புதிய திட்டம் மெக்காலேயின் திட்டத்தைப்போலன்றி ஆங்கிலத்தோடு தாய்மொழிகளையும் ஆதரித்தது. பொதுக்கல்வித் துறைக்களங்கள் ஏற்பட்டன. கல்கத்தா, பம்பாய், சென்னைப் பல்கலைக் கழகங்கள் 1857-ல் தோன்றின.

கால்வாய்களும் சாலைகளும்: இந்தியாவில், குறிப்பாக வட இந்தியாவில் பஞ்சங்களினால் மக்கள் துயருறுவதைத் தடுக்க, கால்வாய் வெட்டுதல், நீர்ப்பாசனம், சாலை அமைத்தல் முதலிய பொதுச் செயல்கள் இன்றியமையாதனவாகும். நிலத்தைப் பண்படுத்துவதென்பது மக்களை நாகரிகமடையச் செய்வதாகும். மக்கள் வாழ்க்கை செழிப்படையக் கால்வாய்களும் சாலைகளும் சிறப்பாக உதவி செய்யக் கூடியன. இக்கருத்துக்களை டல்ஹௌசி நன்கு உணர்ந்திருந்தார். 1854-ம் ஆண்டுக்குள் எல்லா மாகாணங்களிலும் மராமத்துத் துறைக்களங்கள் ஏற்பட்டுவிட்டன. சாலைகளை அமைப்பதும் பழுது பார்ப்பதும் அவற்றின் சிறப்பான கடமைகளாயின. கல்கத்தாவிலிருந்து தில்லிவரை சென்ற "கிராண்டு டிரங்கு சாலை" பெஷாவர் வரை நீட்டிக்கப்பெற்றது. அதன்பொருட்டு நூற்றுக்கு மேற்பட்ட பெரிய பாலங்களைக் கட்ட நேர்ந்தது. பஞ்சாபில் நீர்ப்பாசனத்துக்காக இரவி, சட்லெஜ், பியாஸ் ஆறுகளுக்கிடைப்பட்ட பகுதியில் சிறப்பு வாய்ந்த கால்வாய் ஒன்றை வெட்டியுள்ளனர். இவ்வேலை 1851-ல் தொடங்கி 1859-ல் முடிவுற்றது. இதைச் செய்துமுடித்த வீரர் ராபர்ட் நேப்பியர் என்பாராவர். அவர் 1870-ல் இந்தியப்படைத்தலைவராகப் பணியாற்றினார். பஞ்சாபை ஆங்கிலேயர் இணைத்துக்கொண்டபின் அம்மாகாணத்தில் நேப்பியர் பொறியமைப்பாளராக இருந்தார். டக்காவிலிருந்து அரக்கான், சிம்லா, சினி முதலிய இடங்கட்குச் செல்லும் தனித்தனிச்சாலைகளையும் டல்ஹௌசி அமைத்தார். கங்கைக் கால்வாயைத் தோண்டும் வேலை 1854-ம் ஆண்டில்தான் முடிவுபெற்றது. சென்னை மாகாணத்திலும் சிப்பாய்க் கலகத்துக்கு முற்பட்ட காலத்திலேயே பல நீர்ப்பாசன வசதிகள் அமைந்தன. பழைய கால்வாய்களையும் அரசியலார் பழுது பார்த்தனர். நீர்ப்பாசன வசதிகளை அமைப்பதில் இந்தியாவில் ஆங்கிலேயர் கையாண்ட நவீன முறைகள் மிகச் சிறப்புவாய்ந்தவை. காவிரியாற்றில் மேலணை, கீழணைகளைக் கட்டும் வேலையை 1836-ல் தொடங்கினர். 1846-ல் கோதாவரி அணைக்

கட்டும் 1850-ல் கிருஷ்ணு அணைக்கட்டும் தொடங்கப் பெற்றன. பெரியாறு அணைக்கட்டைப் பற்றிய கருத்து 1798-ம் ஆண்டிலேயே இராமநாதபுரம் அரசருடைய மனத்தில் தோன்றியது. ஆனால் 1895-ம் ஆண்டில்தான் அவ்வணைக்கட்டு வேலை முடிவுபெற்றது.

வாணிகம், படை, பொருளமைப்பு முதலியன : டல் ஹௌசி, கராச்சி, பம்பாய், கல்கத்தா, இரங்கூன் துறை முகங்களைச் சீர்திருத்தி அமைத்தார். கல்கத்தா, பம்பாய் நகரங்களின் வாணிகம் விரிவுற்றுச் செழித்தோங்கியது. கடலோர வாணிகத்துக்கு இருந்த இடையூறுகள் நீங்கின. உள்நாட்டில் நீராவியால் இயங்கும் நாவாய்கள் பெருகின. ஹூக்ளி ஆற்றின் குறுக்கே கல்கத்தாவுக்கும் ஹௌரா வுக்குமிடையே ஒரு பாலம் அமைப்பதற்கும் டல்ஹௌசி முயன்றார். அவர் படை உணவுத்துறையையும் பிற இராணுவத்துறைக்களங்களையும் போற்றத்தக்க வகையில் சீர்திருத்தினர்; இராச்சியத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஆங்காங்கு இருந்த நிலைமைகளுக்குத் தக்கவாறு இந்தியத் துருப்புக்களை மாற்றி அமைத்தார்; கூர்க்கப்படையினரின் எண்ணிக்கையைப் பெருக்கினர் ; பஞ்சாபில் புதிய வகைப் படைகளை அமைத்தார். ஐரோப்பியப் படையினர் இந்தியாவிலிருந்து வெளியேறுவதை இவர் விரும்ப வில்லை. அவர்களின் எண்ணிக்கை பெருகவேண்டு மென்றும் வற்புறுத்தினர். டல்ஹௌசி பல பொது வேலைகளில் ஈடுபட்டுப் பொருளைச் செலவழித்தபோதிலும் 1850 முதல் 1853 வரை உள்ள காலப்பகுதியில் அரசிய லாருக்குச் செலவைவிட வரவு கூடுதலாகவே இருந்தது. பொதுவேலைகளை 'நிறைவேற்றும் பொறுப்பைப் பெற்றி ருந்த இராணுவக்கழகம் அக்கடமையைப் புறக்கணித்து வந்தது. மக்களுக்கு நன்மை தரும் செயல்களில் அது கருத்தைச் செலுத்தவில்லை. ஆகவே டல்ஹௌசி பொது மராமத்து வேலைகளுக்காகத் தனித்துறைக்களத்தை அமைத்துப் புகழ்பெற்றார். இவர் காலத்துக்கு முன்னர் அரசியலார் தமது வருமானத்தில் அரைச் சதவீதத்தைக்

கூட மராமத்து வேலைக்காகச் செலவு செய்வதில்லை. ஆனால் டல்ஹௌசி ஆண்டுதோறும் இரண்டு கோடி முதல் மூன்று கோடி ரூபாய்வரை செலவுசெய்துவந்தார். இவர் காலத்தில் வருமானமும் ஏறத்தாழ 24 கோடியிலிருந்து 30 கோடிக்குப் பெருகியது. பொது வேலைகளுக்காகக் கடன் வாங்குவதின் சிறப்பைப்பற்றியும் அதில் முதலீடு செய்வதன் நன்மையைப்பற்றியும் கவர்னர்-ஜெனரல் விளக்கிக் கூறினார். சுருங்கக்கூறின் இவர் மராமத்துத் துறைக் களத்தை இக்கால முறையில் அமைத்தார்; பொறி அமைப்புப் பணித்துறைக்கு அடிகோலினார். இறுதியாக, உடன் கட்டை யேறுதல் குழந்தையைக் கொல்லுதல், ஒரிஸ்ஸாவில் கோண்டர்கள் மனிதபலி கொடுத்தல் முதலிய பழக்கங்களை ஒழிப்பதற்குத் துணைசெய்தார். இத்தகைய கொடுமைகளைத் தடைசெய்ய ஜான் காம்பெல் என்பாரும் பிறரும் 1847 முதல் 1854 வரை உழைத்து வெற்றிபெற்றனர்.

பகுதி 13

டல்ஹௌசியின் இயல்பும் சாதனைகளும்

டல்ஹௌசியின் இறுதிக்காலம் : டல்ஹௌசி இந்தியாவுக்குப் பதவியேற்க வரும்பொழுதே அவருடைய உடல் நலம் சிறந்திருக்கவில்லை. அதைப் பொருட்படுத்தாது அவர் ஓயாது உழைத்தார். இவர் அரசியலில் தமது தலைவராயிருந்த சர் ராபர்ட் பீல் 1850-ல் இறந்த செய்தி கேட்டுக் கதறி அழுதார். மூன்று ஆண்டுகட்குப் பிறகு டல்ஹௌசியின் மனைவியும் அவருடைய வெளித் துறைச் செயலாளராயிருந்த சர் ஹென்றி எலியட் என்பாரும் இறந்தனர். இந்நிழ்ச்சிகள் கவர்னர்-ஜெனரலைத் துயரத்திலாழ்த்தின. இவர் 1855-ல் கடுமையாக நோய் வாய்ப்பட்டார். 1856-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் தாய் நாட்டுக்குத் திரும்பினார். கம்பெனியார் இவருக்கு ஆண்டுக்கு 5000 ரூபாய் ஓய்வுக்கால ஊதியமளித்தனர். 1857-ல் இந்தியாவிலேற்பட்ட படைக்கலகம் டல்ஹௌசி மனத்துயரை வளர்த்தது. அவருடைய ஆட்சிமுறையைப் பலர் கடுமையாகக் கண்டித்தனர். பிற்காலத்தில் தான் டல்ஹௌசியின் ஆட்சிமுறைச்சிறப்பை யாவரும் உணரலாயினர். அவர் தம் செயல்கள் முறையானவை என்று விளக்கிக்கூற முன்வரவில்லை. தம் செயல்களின் சிறப்பைக் காலப்போக்கில் யாவரும் உணர்வர் என்ற உறுதியான நம்பிக்கை அவரிடமிருந்தது. அவர் தம்மிடமிருந்த கடிதங்களைத் தாமிறந்தபின் 50 ஆண்டுக்காலம் வரை வெளியிடக்கூடாது என்றும் ஆணையிட்டிருந்தார். டல்ஹௌசி 1860-ம் ஆண்டின் முடிவில் தமது 49-வது வயதில் காலமானார்.

அவருடைய இயல்பு : டல்ஹௌசி, போற்றத்தக்க ஆற்றலும் வியக்கத்தக்க உழைப்பு ஆர்வமும் ஊக்கமும் படைத்தவர். இப்பண்புகளை அவருடைய உடல் நலக்

குறைவோ, குடும்பத்துன்பங்களோ, தட்பவெப்ப நிலையோ சிறிதும் குறைத்துவிடவில்லை. அலுவலகத்தில் அவர் தொடர்ந்து எட்டுமணி நேரம் பணிபுரிவதுண்டு. அவர் அளவுக்குமீறி உண்பதில்லை ; மிகுதியாகக் கள் குடிப்பது மில்லை. களியாட்டங்களில் அவருக்கு விருப்பம்கிடை யாது. பல கடிதங்களை மிக விரைவாக இவர் எழுதி விடுவ துண்டு. இதனால், வெளிநாட்டுச் செயலாளர் சர் ஹென்றி எலியட்டுக்கு மிகுந்த ஓய்வுகிடைத்தது. எலியட் அந்த ஓய்வுக்காலத்தை, இந்து முசுலிம் வரலாற்றைக் கற்று எழுதுவதில் பயன்படுத்தினார். இவர் எழுதியுள்ள வரலாறு எட்டு தொகுதிகளாக உள்ளது. இந்நூலிலிருந்து பல எடுத்துக்காட்டுகளை நாம் தந்துள்ளோம். டல்ஹௌசி இந்தியாவுக்கு வருவதற்கு முன்னர் இந்நாட்டுச் செய்தி களைப்பற்றி, வெல்ஸ்லி முதலியோர் அறிந்திருந்தது போல, எதையும் தெரிந்து கொண்டிருக்கவில்லை. அவ் வாறிருந்தும் மிகமிகக் குறுகிய காலத்தில் இந்தியாவைப் பற்றி அவர் அறிந்து சிறந்த தேர்ச்சி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. பேரரசுத்துறை அரசியல் வல்லுநர் களுக்கு இருக்கவேண்டிய சிறப்புப் பண்புகள் டல்ஹௌசி யிடம் உண்டு. இவருடைய அறிவுத்திறமை போற்றத்தக் கது. பகுத்தறிவுகொண்டு ஆய்ந்தபிறகே இவர் ஒரு முடிவுக்கு வருவது வழக்கம். அரசியல் துறையில் சிறந்த முன்னோக்கையும் இவர் படைத்திருந்தார். குறிப்பிடத் தக்க உளத்திட்பம் இவர்பால் பொலிந்தது. இவர் தாம் முறையானது என்று கருதியவற்றை, விளைவுகளைப் பொருட்படுத்தாது, மனோதைரியத்துடன் நிறைவேற்றி விடுவார். டல்ஹௌசி, சமய உணர்வு வாய்ந்தவர் ; நாட்டுப்பற்றுக் கொண்டவர் ; தாய்நாட்டின் பேரரசு நிலையைக் காப்பாற்றும் ஆர்வம்படைத்தவர். இவர் தமது மனச்சான்றுக்கு மாறாக நடப்பதில்லை. இவரிடம் பணி ஆற்றியவர்கள் இவருடைய உயர் பண்புகளைக்கண்டு தாமாகவே இவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கமுற்பட்டனர். டல்ஹௌசி, இயக்குநர்களுக்கு அடங்கியே செயலாற்றி வந்தார். இவர் இந்தியச் சிற்றரசர்களை மிகுதியாகப்

பொருட்படுத்தவில்லை. எனினும் இந்நாட்டு மக்களின் நலத்துக்காக உழைத்தார். பிறர் இயல்பை எளிதில் உணர்ந்துகொள்ளும் ஆற்றல் இவரிடமிருந்தது. உயர்ந்த குறிக்கோளைக் கொண்ட இவர், அதன் வெற்றிக்காக விடா முயற்சியுடனும் நேர்மையுடனும் உழைத்து வந்தார். அரைகுறையான செயல்களால் இவர் மன அமைதிபெறுவதில்லை. பிறர் குற்றமிழைப்பதைக் கண்டும் வாளா இருக்கும் தன்மை இவரிடம் கிடையாது. பிறர் இவருக்கு மரியாதை அளித்தனர். ஆனால் இவரிடம் அன்பு பராட்டவில்லை. திறமைக்குறைவு உள்ளவர்களை இவர் வெறுத்தார். பிறருடைய அனுபவத்தைக்கொண்டு பயனடையும் பண்பு டல்ஹௌசியிடம் கிடையாது. நாடுகளை இணைத்துக்கொள்ளும் முயற்சியில் இவர் சிறந்த அரசியலறிஞர்களின் கருத்துக்களையும் பொருட்படுத்துவதில்லை. இவர், தமக்குக் கீழ்ப்பட்டவர்களின் உதவிகொண்டு அருஞ்செயல்களாற்றினார். ஆனால் தமது கூட்டாளிகளுடன் ஒத்துழைப்பதில்லை. தம்முடைய முடிபுக்கு மாறான கருத்து ஒன்று இருக்கக்கூடும் என்று அவர் எண்ணுவதே இல்லை. தம்முடைய கொள்கைகள் எளிய மக்கள் உள்ளத்தில் எத்தகைய விளைவுகளை உண்டாக்கும் என்பதைப்பற்றி அவர் சிந்திப்பதில்லை. முன்னேற்றத்தில் அளவுக்குமிஞ்சிய ஆர்வம் அவரிடமிருந்தது. ஆகவே அவர் உள்ளத்தை அறிந்துகொள்ள முடியாத மக்கள் அவருடைய செயல்களால் துன்பமுற்றனர்.

சாதனைகள் : டல்ஹௌசி பிரிட்டிஷ் இந்தியாவின் அளவைப் பெருக்கி வலிமைப்படுத்தியதுடன் அதன் முன்னேற்றத்துக்கான வழியையும் வகுத்தார். இவ்வாறு இவருடைய செயல்களை மூன்றுவகைகளாகப் பிரிக்கலாம். இவர், வாரன் ஹேஸ்டிங்சும் வெல்ஸ்லியும் ஆற்றிய செயல்களை ஒற்றுமைப்படுத்தினார்.* நாட்டின் பல பகுதிகளுக்கும் இவர் தாமே நேரில்சென்று பார்வையிட்டார். தவிர, பர்மாவுக்கும் ஸ்ட்ரெயிட் குடியேற்றங்கட்கும் கூடச்

* *56, II பக். 417.*

சென்றுவந்தார். மாகாணச் செய்திகளைப்பற்றி தனித் தனியாக ஆண்டு அறிக்கைகள் வெளியிடுவதற்கு இவர் ஏற்பாடு செய்தார். இவற்றைக் கொண்டு மேலதிகாரிகள் முன்னேற்றத்துக்கான திட்டங்களைத் தீட்டினர். ஆட்சி முறைச் சீர்கேடுகள் கவர்னர்-ஜெனரலுக்கு எவ்வாறு வெறுப்பை அளித்தனஎன்று முன்னர்ப் பார்த்தோம். மக்களின் நலம்பெருக இவர் செய்த தொண்டுகளையும் நாமறிவோம். முன்னேற்றத்துக்கான பலவழிகளை இவர் தொடங்கினர். இருப்புப்பாதை, தந்தி முறை, மலிவான, ஒரே வித மான அஞ்சல்முறை முதலியவற்றை இந்தியாவில் படைத்தவர் இவரே. பொதுக்கட்டடத் துறைக்களத்தை அமைத்த பெருமையும் இவருக்குரியது. இவர்காலத்தில் சட்டக் கவுன்சில் செயலாற்றியது. ஆங்கிலப் பார்லிமெண்டின் முறையைச் சட்டக் கவுன்சிலில் புகுத்திவிட்டதாகத் தாய் நாட்டினர் டல்ஹௌசியின் மீது குற்றஞ்சாட்டினர். "நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த தன்மை" இவருக்கு உண்டு. டல்ஹௌசி, "வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை ஆராய்வார்" என்று கூறல் பொருந்தும். இவர், அன்பு, அறிவு, தேற்றம் ஆகிய இம்மூன்று பண்புகளையும் பெற்றிருந்தார். எவ்வகையால் ஆராய்ந்து தெளிந்த பிறகும் செயலை மேற்கொண்டு செய்யும்போது அச்செயல் வகையால் வேறுபடும் மக்களில் டல்ஹௌசி.யும் ஒருவரல்லர். செய்யும் வழிகளை அறிந்து இடையூறுகளைத் தாங்கிச் செய்துமுடிக்கும் வல்லமை இவருக்கு உண்டு. இவர் எழுதிய கடிதங்களும் அரசியற் குறிப்புக்களும் இவருடைய சொல்வன்மையையும், செய்திகளைத் தெளிவாக விளக்கும் தன்மையையும் காட்டுகின்றன.* 1857-ம் ஆண்டுப் படைக்கலகத்துக்கு இவர் பொறுப்பாளியா என்பது பற்றிப் பின்னர்க் குறிப்பிடுவோம். முன்னேற்றம், பண்பாட்டுப் பெருக்கம் ஆகியவற்றில் டல்ஹௌசி அளவுக்குமீறி விரைவாகச்சென்றுவிட்டாரென்று பெரும்பான்மையும் கருதப்படுகிறது. பையவே முன்

* 81, பக். 357.

னேறும் பண்பு இவரிடமில்லை. இவரிடமிருந்த சில குறைபாடுகளின் விளைவாக இவருடைய இந்திய ஆட்சிமுறைக்கே இடையூறுகள் ஏற்பட்டன. இவர்பால் விளங்கிய தீய பண்பு பெருகுவதற்கு இவர்தம் உடல்நலக் குறைவும் ஒரு காரணமாம். இந்தியப் பண்புகளைவிடப் பிரிட்டிஷ் பண்புகள் சாலச்சிறந்தவை என்ற கருத்து டல்ஹௌசியிடமுண்டு. இவர் குறைபாடுகளற்றவர் அல்லர். எனினும் மற்றெவரைக் காட்டிலும் இவரையே நாம் புதிய கால இந்தியாவைப் படைத்தவர் என்று கூறலாம்.

பகுதி 14

டல்ஹௌசியை, கர்சான், வாரன் ஹேஸ்டிங்ஸ் வெல்ஸ்லி ஆகியோருடன் ஒப்பிடுதல்

டல்ஹௌசி, கர்சான் என்ற இருவரிடமும் ஓரளவு ஒற்றுமைப் பண்புகள் இருப்பதைக் காண்கிறோம். இருவரிடமும் சிறந்த பண்புகளும் குறைபாடுகளும் உண்டு. உயர்ந்த குறிக்கோள்களோடேயே இருவரும் உழைத்தனர். இருவரிடமும் இளமைக்குரிய ஆற்றலும் பேரூக்கமும் அறிவுத்திறமையும் பொலிந்தன. தமது ஆலோசனையாளரும் இந்தியர்களும் கூறிவந்த கருத்துக் களுக்குச் செவிசாய்த்துச் சிறப்பளிக்கும் உளப்போக்கு இவ்விருவரிடமும் கிடையாது. இவர்களிடம் அப்பண்பு இருந்திருக்குமே ஆயின் இவர்கள் மேலும் பல அருஞ் செயல்களை ஆற்றியிருப்பர் என்று கூறலாம். மக்களுக்கு வழிகாட்டுவதுடன் ஓரளவு மக்களாலும் வழிகாட்டப்பட்டு ஒழுகும் தலைவனையே சிறந்த அரசியல் அறிஞன் என்று கருத முடியும். அரசியல் கருத்துக்களை—அவை சிறந்தவை யாக இருப்பினும்—பிறர் மீது வலுக்கட்டாயமாகத் திணிப் பது அறிவுடைமை ஆகாது. அரசியல் வல்லுநர்கட்கு இயல்பாகவே இணைவிணக்கப் பண்பு அமைந்திருக்க வேண்டும். அவர்கள் குறிப்பிட்டதோர் கொள்கையையே விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டிருத்தலாகாது. நோயா ளிக்காக ஒரு குறிப்பிட்ட மருந்து உண்டு; அம்மருந்தைக் கொடுக்கும் மருத்துவன், தான் அந்த நோயாளியின் பொருட்டுத்தான் செயலாற்றுகின்றான் என்பதையும் மருத்துவனுக்காக நோயாளி படைக்கப்படவில்லை என்ப தையும் உணர வேண்டும். இது போலவே தான் அரசி யல் அறிஞனும் மக்கள் செய்தியில் நடந்து கொள்ள வேண்டும். மக்களைப் புறக்கணித்துவிட்டுக் கொள்கை யிலேயே முழுக்கருத்தையும் ஊன்றி நிற்பது அறி வுடைமை ஆகாது. தாம் ஆற்றிவரும் ஒவ்வொரு செய

லும் தமக்குக் கீழ்ப்பட்ட மக்கள் மனத்தில் எத்தகைய விளைவுகளை உண்டாக்கும் என்று அறிந்து ஒழுகுபவனே சிறந்த அரசியல் வல்லுநனுவன். மாறுதல்களுக்கு இணங்கும் தன்மை சாதாரண மக்களிடத்தில் சிறிது சிறிதாகத் தான் வளர்ச்சியடையும் என்ற உண்மையை டல்ஹௌசியும் கர்சானும் பெரும்பாலும் உணரவில்லை. மேலும், சாதாரண மக்கள் புதியமுறைகளைக் கண்டு அஞ்சுவர். ஆதலால் அவர்களுடைய நம்பிக்கைக்கு உரியவர்களைக் கொண்டே அம் மக்களின் மனத்தை மாற்ற முயலவேண்டும். அவர்கள் தூய்மையானதாகக் கருதும் எதையும், இகழக்கூடாது. அவர்கள்பால் நிறைந்த தவறுன கருத்துக்களைச் சிறிது சிறிதாகத் தான் விடா முயற்சியுடன் சிறந்த அரசியல் வல்லுநர்களைக் கொண்டு நீக்க வேண்டும். இவ்வுண்மைகளை டல்ஹௌசியும் கர்சானும் முழு அளவுக்கு உணரவில்லை. எனினும், டல்ஹௌசியின் சாதனைகள் இந்தியாவின் மிகச் சிறந்த கவர்னர்-ஜெனரல்களின் வரிசையில் வைத்து எண்ணத்தக்க பெருமையை அவருக்குத் தந்துள்ளன. இவரை நாம் வாரன் ஹேஸ்டிங்சுடனும் வெல்ஸ்லியுடனும் ஒப்பிடலாம். வெல்ஸ்லியை விட டல்ஹௌசி மிகச் சிறந்தவர் எனலாம். ஏனெனின் முன்னவரைவிடப் பின்னவர் அரசியலில் மிகுதியாக ஆழ்ந்த கருத்தைச் செலுத்தினர். ஆனல் வாரன் ஹேஸ்டிங்ஸ் டல்ஹௌசியை விட மேலானவர். முன்னவரிடம் பெருந்தன்மையுடன் கூடிய மனிதப் பண்பு இருந்தது. பின்னவரிடம் அது கிடையாது. தவிர, ஹேஸ்டிங்ஸ் தமது கூட்டாளிகளின் உள்ளத்தையும் தாம் ஆளும் மக்களின் தன்மையையும் உணர்ந்து செயலாற்றினர். ஆனல் டல்ஹௌசி அவ்வாறு செய்தாரில்லை.* ஆயினும் டல்ஹௌசி கடமையின் பொருட்டுத் தம் வாழ்நாட்களையே தியாகம் செய்தார். சீர்திருத்தத்திலும் முன்னேற்றத்திலும் இவருக்கு இருந்த ஆர்வம் மிகுதியாகப் போற்றத்தக்கது. இப்பண்புகள் டல்ஹௌசிக்கு இணையற்ற தனிச் சிறப்பை அளித்து அழியாப் புகழை விளைவித்தன.

* 67, பக். 337.

பகுதி 15

கானிங்கு (1856 - 8)

கவர்னர் - ஜெனரலின் முன்வரலாறு: சார்லஸ் ஜான் கானிங்கு 1812-ல் பிறந்தார். இவருடைய தந்தை யாரான ஜார்ஜ் கானிங்கு 1827-ல் பிரிட்டிஷ் பிரதம அமைச்சராக இருந்து புகழ் பெற்றவராவர். ஜான் கானிங்கு ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டம் பெற்ருர். அங்கே இவர் டல்ஹௌசியுடனும் தொடர்பு கொண்டார். 1836-ல் இவர், பார்லிமெண்டு உறுப்பினரானுர்; அடுத்த ஆண்டில் 'வைகௌண்டு' என்ற பட்டம் பெற்ருர். 1852-ம் ஆண்டு முதல் இவர் இங்கிலாந்தின் அஞ்சல் துறைத் தலைவராகப் பணியாற்றி ஞர். அவ்வமயம் இவராற்றிய தொண்டுகள் போற்றத் தக்கன. டல்ஹௌசிக்குப் பிறகு இவரே இந்திய கவர் னர்-ஜெனரலானுர். 1855-ம் ஆண்டில் இவராற்றிய ஓர் சொற்பொழிவில் இந்தியாவைப்பற்றி இவர் குறிப்பிட்ட ஒரு செய்தி ஈண்டுக் கருதத்தக்கது. "நிகழ்ச்சிகள் எவ்வ ளவு அமைதியாகத் தோன்றினுலும் இந்தியாவில் எச்சம யத்திலும் எதுவும் நேரக்கூடும்; ஒரு மனிதனின் கையை விடப் பெரிதாயில்லாத ஒரு சிறிய மேகம் தோன்றி, வர வரப் பெரிதாகி, இறுதியில் வெடித்து நமக்கு அழிவையும் உண்டாக்கக் கூடுமென்பதை நாம் மறக்கலாகாது.* இக் குறிப்பு, இந்தியப் படைக் கலகத்தின் முன்னறிகுறிகளை அவர் ஓரளவு உணர்ந்திருந்தார் எனக் காட்டுகிறது. 1856-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் கானிங்கு கல்கத்தா வந்துசேர்ந்தார்.

பாரசீகமும் ஆப்கானித்தானமும்: 1855-ம் ஆண்டி லேயே சர் ஜான் லாரன்ஸ், ஆப்கானித்தானத்தின்

---

* 20, பக். 36.

தோஸ்து முகம்மதுவுடன் ஒரு நேச உடன்படிக்கை செய்துகொண்டிருந்தார். அடுத்த ஆண்டில் பாரசீக ஷா, ஹீரட்டைக் கைப்பற்றிக்கொண்டதால் கானிங்கு, தாய் நாட்டு அரசியலாரின் விருப்பப்படி பாரசீகத்துடன் போர் தொடுத்தார். பாரசீக வளைகுடாவை நோக்கிச்சென்ற ஒரு பிரிட்டிஷ்படை, புஷையரைக் கைக்கொண்டு பகைவர்களைத் தோற்கடித்தது. 1857-ல் கானிங்கு, ஆப்கானிய அமீர் தோஸ்து முகம்மதுவுடன் மற்றொரு உடன்படிக்கையைச் செய்துகொண்டார். அதன்படி அமீர் ஆங்கிலேயருடன் முழுநட்பும் கொள்வதாக வாக்களித்தார். படைக்கலகத்தின்பொழுது அந்நட்பு ஆங்கிலேயருக்கு மிகவும் பயனுள்ளதாயிற்று. சர் ஜேம்ஸ் ஔட்ராம் பாரசீகத்தில் படையெடுத்து வெற்றி பெற்றார். 1857-ல் பாரசீகர் ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்துகொண்டனர். அதன்படி அவர்கள் ஹீரட்டை விட்டு வெளியேறியதுடன் ஆப்கானித்தானத்தின் தனி உரிமையையும் ஏற்றுக்கொண்டனர். பிற்காலத்தில் ஆப்கானித்தானத்தைப்பற்றி ஏதேனும் இடையூறுகள் நேர்ந்தால் அவற்றை ஆங்கிலேயருக்கு அறிவித்து அவர்களைக் கொண்டே நீக்கிக்கொள்ளவும் உடன்பட்டனர்.

அயோத்தி : அயோத்தியை ஆங்கிலேயர் இணைத்துக்கொண்டபின் அங்கு ஆட்சிமுறைப் பொறுப்பைச் சர் ஜேம்ஸ் ஔட்ராம் ஏற்றிருந்தார். பிறகு ஜாக்சன் என்பார் அம்மாகாணத்தின் தலைமை ஆணையாளரானார். 1857-ல் அப்பகுதி சர் ஹென்றி லாரன்ஸின் தலைமையின் கீழ்வந்தது.

குறிப்பிடத்தக்க இரண்டு சட்டங்கள் : படைக்கு ஆள் சேர்ப்பதைப்பற்றி 1856-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் கானிங்கு ஒரு சட்டத்தைப் பிறப்பித்தார். அதன்படி, இந்தியாவில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் போர்ப் பணியாற்ற விருப்பமுள்ளவர்களை மட்டுமே அரசியலார் தமது படையில் சேர்த்துக்கொள்வர் என்று அறிவிக்கப் பெற்றது இதனால் வைதீக மனப்பான்மை காரணமாகக்

கடலைக்கடக்க விரும்பாத இந்துக்கள் படையில் சேர முடியாது போயிற்று. ஏறத்தாழ அதேசமயத்தில் நிறைவேறிய மற்றொரு சட்டம் இந்துக் கைம்பெண்டிர் மறுமணம் புரிந்துகொள்வதை அனுமதித்தது. அம்மணவினையின் விளைவாகப் பிறக்கும் குழந்தைகட்கு முறைப்படி எல்லா உரிமைகளும் உண்டு என்றும் அச்சட்டத்தில் கண்டிருந்தது. இச்சட்டங்கள் வைதீக இந்துக்களுக்குச் சினத்தை உண்டாக்கின. அவர்கள், இச்சட்டங்கள் மூலம் ஆங்கிலேயர் இந்து சமயக் கொள்கைகளையும் பழக்கவழக்கங்களையும் அழிக்க முற்படுகின்றனர் என்று கருதினர். கிறித்தவ மதத்தைப் பரப்புவதற்காகவே கானிங்கு இந்தியாவுக்கு வந்திருப்பதாகவும் மக்களிடையே கருத்து நிலவியது.

பகுதி 16

படைக் கலகத்தின் தன்மையும் அதன் காரணங்களும்

தன்மை : "படைக் கலகத்தின் காரணங்கள் எளிதாக அறிந்துகொள்ளக் கூடியனவல்ல".[1] இதன் காரணங்களைப்பற்றி ஐரோப்பிய நூலாசிரியர்கள் மிக்க மாறுபாடான கருத்துக்களைக் கொண்டுள்ளனர். சர் ஜான் லாரன்சு கூறுவதாவது:— இக் கலகம் இராணுவத் தொடர்பானதே ஆகும். இந்தியாவில் ஆங்கிலேய ராட்சியை ஒழிக்க வேண்டுமென்ற நோக்குடன் அது தொடங்கவில்லை ; மனக்குறை கொண்டிருந்த மக்கள் சிப்பாய்களின் துயர நிலையை ஒரு நல்வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டனர். தோட்டாக்களின் மேல் கொழுப்புத் தடவப்பட்டிருந்தது என்ற வீண் பழிதான் கலகத்துக்கு உடனடிக் காரணமாகும்.[2] ஆனால் சர் ஜேம்ஸ் ஔட்ராம், "அது இந்துக்களின் மனக் குறைகளைப் பெரிதாக்கிப் பயன்படுத்திக் கொள்ள முகம்மதியர் செய்த சதியாலோசனையின் விளைவு" என்றும் "மக்களின் புரட்சிக்கு அது ஓர் முதற்படி" என்றும் கூறுவர். 1857-ம் ஆண்டுக் கலகத்துக்குப் பல காரணங்கள் உண்டு என அறிஞர் **கீன்** விளக்குகிறார். சிறப்பாக, டல்ஹௌசியின் கொள்கைகள், சிற்றரசர்கள், போர் வீரர்கள், மக்கள் ஆகியோரின் மனக்குறைகளைப் பெருக்கின என்றும், தோட்டாக்களில் கொழுப்புத் தடவப்பட்டிருந்தது என்ற செய்தி வெடி மருந்துக்குத் தீயிட்டது போல் கலகத்தைக் கிளப்பியது என்றும் அவர் கருதுகிறார். இக் கலகம், பெரும்பாலும் ஓர் உரிமைப் போரே என்று எட்வர்டு தாம்சன் கூறியுள்ளார். இக் கருத்தை, V. D. சவர்கார், தாமெழுதிய

---

1. 1, பக். 74-5
2. 1, பக். 74-5.

"1857-ம் ஆண்டு இந்திய உரிமைப் போராட்டம்" என்ற சிறந்த நூலில் வலியுறுத்தி விளக்குகிறார். ஆனால் பலர் லாரன்சின் கருத்தை யொட்டியே விளக்கம் கூறுகின்றனர். ஓரிரண்டு இடங்களில் தான் கிளர்ச்சி, புரட்சிக் கலகம் என்று சொல்லக்கூடிய அளவுக்குப் பெருகியது என்பது ஹோம்ஸ் (Holmes) என்பாரின் கருத்தாகும்.[1] கலகத்தின் காரணங்களை விளக்கும் அறிஞர் மார்ஷ்மென், தோட்டாக்களில் கொழுப்புத் தடவப்பட்டதாகக் கூறப்படும் செய்திக்கே சிறப்பளிக்கின்றார்.[2] கலகத்துக்கு முக்கிய காரணம் இராணுவத் தொடர்பான செய்திகளே என்பது ராபர்ட்சின் முடிபாகும்.[3] "இதை, ஓரளவு, மக்களின் புரட்சிக் கலகம் என்று கூறலாம்; ஆனால், தொடக்கத்தில் இராணுவத் தொடர்பானதே ஆகும்" என்பார் அறிஞர் ஸ்மித். "இது ஒரு படைக்கலகமே தான்; தேசீய எழுச்சியன்று. அதனால் தான் இக்கலகம் வெற்றி பெறவில்லை." என்ற கருத்தை அறிஞர் வீட்ச் தெரிவிக்கின்றார்[4] (வீட்ச், "பேரரசும் குடியரசும்"). இதனை வேலூர் கலகத்துடன் ஒப்பிடுவதற்கில்லை. ஏனெனின் 1857-ம் ஆண்டு எழுச்சிக்கு முன்னரே இந்தியாவில் பெரும்பாலும் அமைதியின்மை நிலவியதென்பதை நாமறிவோம். இதனை, அறிஞர் லேயல் "சிப்பாய்க் கலகம்" என்றே குறிப்பிடுகிறார். 1857-ம் ஆண்டுக் கிளர்ச்சி, சாதாரணச் சிப்பாய்க் கலகத்தைவிடப் பெரியது என்பதில் ஐயமில்லை. ஆனால் இதை ஓர் தேசீயக் கலகம் என்று கூறுவது எளிதன்று. ராலின்சன், இதனை ஓர் "அரசியல் கிளர்ச்சி" என்று குறிப்பிடுகிறார்.[5] "முதல் உரிமைப் போராகவோ இக்கால முறையில் அமைந்த தேசீயக் கலகமாகவோ இதனைக் கருத முடியாத போதிலும் இப் படைக்கலகம் பழைய அமைப்பை நிலை குலையச் செய்தது .... ஆர்வம், பயனற்ற

1. *42*, பக். *538*.
2. *64*, III, பக். *453*.
3. *81*, பக். *361*.
4. G. S. Veitch, Empire and Democracy பக். *38*.
5. *78*, பக். 10*3*.

தன்மை, என்ற இரண்டையும் பொறுத்தவரை, இப்படைக் கலகத்தைப் பிரெஞ்சு நாட்டு ஃப்ராண்டே (Fronde) (உள்நாட்டுப் போர்)க்கு ஒப்பிடலாம்; ஆனல் இத்தாலிய நாட்டுப் புத்துணர்ச்சி இயக்கத்துக்கு ஒப்பிட முடியாது.[1] 1857-ம் ஆண்டுக் கிளர்ச்சியில் இராணுவத் தொடர்பான அம்சங்கள் பல இருந்தபோதிலும் மக்களின் தேசீய உணர்ச்சியும் அதில் இடம்பெருமல் இருக்க முடியாது என்று அறிஞர் சௌதுரி விளக்குகிருர்.[2]

காரணங்கள் : பிரிட்டிஷ் ஆட்சி விரைவாகப் பெருகியதால் ஏற்பட்ட விளைவுகள் : டல்ஹௌசியின் அவகாசியிலிக் கொள்கையும், பொதுவாக நாடு இணைக்கும் அவரது கொள்கையும் சிற்றரசர்களுக்கும் அவர்தம் மக்களுக்கும் மிகுதியாக அமைதியின்மையையே விளைத்தன. தீமை செய்ய அஞ்சாமல் பேரரசுக் கொள்கையைப் பின்பற்றிச்செல்வதே ஆங்கிலேயரின் நோக்கமாகும் என்று இந்தியர் அஞ்சினர். அயோத்தி அரசர்கள் ஆங்கிலேயரிடம் பணிவன்புடன் ஒழுகியபோதிலும் அந்நாட்டைப் பிரிட்டிஷார் கைப்பற்றிக்கொண்டனர். அடங்கியிருப்பதற்கு அதுதான் பரிசு போலும் என்ற எண்ணமும் பரவியது. பழைய அரசியல் எல்லைகளின் அடையாளங்களையெல்லாம் ஆங்கிலேயர் அழித்துவந்தனர். அதை நன்கு உணர்ந்த இந்திய மன்னர்களின் மனத்தில் நடுக்கம் தோன்றியது. ஐதராபாத் உட்பட, இந்தியச் சிற்றரசுகளை அழித்துவிடுவதே சாலச்சிறந்ததாகும் என்ற கருத்து சர் சார்லஸ் நேப்பியர் போன்ற அலுவலரிடம் விளங்கியது. முகலாயப் பேரரசரின் நிலை சீர்கேடுற்று வந்தது. பிரிட்டிஷார் நானுசாகிப்பை நடத்திய விதம் அவர்களுக்கு முறையானதாக இருந்தபோதிலும் இந்துக்களுக்கு இழிவாகவே புலப்பட்டது. சிற்றரசர்களின் கீழ் மிக உயர்ந்த நிலையை எய்தக்கூடும் ஆற்றல் வாய்ந்த இந்தியர்கள் தமது நல்வாய்ப்புக்கள் அனைத்

1. *105, பக். 181-2.*
2. *17, பக். 299.*

தையும் பிரிட்டிஷ் பேரரசின் வளர்ச்சியால் இழந்தனர். ஆங்கிலேயர், தாம் இணைத்துக்கொண்ட பகுதிகளில் அமைத்த புதிய நிலவரித்திட்டங்கள் ஆங்காங்கே ஊன்றி நின்ற உரிமையாளருக்கு (Vested interests)த் துன்பத்தைக் கொடுத்தன. இவ்வாறு பிரிட்டிஷ் ஆட்சியால் பலர் இடையூறுகளைப் பெற்றனர். இந்தியாவில் ஆங்கிலேயர், தமது ஆட்சிமுறையை இந்நாட்டு மக்கள் எவ்வாறு நோக்குகின்றனர் என்று அறிந்துகொள்வதற்கான ஏற்பாடு எதையும் செய்யவில்லை. சர் சையது அகமதுகான் (பி. 1817-இ, 1898) என்ற அலிகார் அறிஞர் தாம் எழுதிய "இந்தியக் கலகத்தின் காரணங்கள்" (1859) என்னும் நூலில், அரசியலார் மக்களைக் கலந்து ஆலோசிக்கவில்லை என்பதை வலியுறுத்திக் கூறுகிறார்.[1] மேலும் ஆங்கிலேயர் இந்தியர்களிடமும் இந்தியர் ஆங்கிலேயர்களிடமும் போதுமான அளவுக்கு நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. அந்நம்பிக்கையின்மை வளர்ந்துகொண்டே வந்து 1857-ல் மிக்க வலிமை பெற்றது. பிரிட்டிஷாரிடம், இந்தியர்களைவிடத் தாம் இனத்தில் உயர்ந்தவர் என்ற செருக்கும் இருந்தது.[2]

இந்தியரின் உணர்ச்சிக் கோட்பாடுகளுக்கு இடையூறுகள்: ஆங்கிலேயர் இந்நாட்டில் புரிந்த சமூகச் சீர்திருத்தங்களை முன்னர்ப் பார்த்தோம். பாதிரிமார்கள் இந்திய மதங்களைப் பலவாறு கண்டித்துவந்தனர். 1856-ல் கைம்பெண் மறுமணச்சட்டம் பிறந்தது. இவை யாவும் வைதீக மக்களின் மனத்தைப் புண்படுத்தின. இந்தியரைக் கிறித்தவராக்கும் நோக்குடன் கானிங்கு இந்நாட்டுக்கு வந்திருப்பதாக அவர்கள் அஞ்சினர். அச்சூழ்நிலையில் முன்னேற்றத்துக்குரிய ஏற்பாடுகள் அனைத்தையும் கண்டு ஐயுற்றனர். பல சீர்திருத்தங்கள் ஒருசேர அமைவதால் சாதாரண மக்களுக்கு ஐயப்பாடு பெருகுவது இயல்பு என்பதை ஐரோப்பிய வரலாறு

1. *121, பக். 192-3.*
2. *121, பக். 182, 185.*

நமக்கு எடுத்துக்காட்டுகிறது. பழமைப்பற்றுள்ள இந்தியர் பலர் மேனாட்டு முறைகள் இந்நாட்டில் விரைவாகப் பரவுவதை வெறுத்தனர். அந்நிலையில், பிளாசிப்போருக்குப்பின் நூறு ஆண்டுகட்கு மேலாகப் பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் நீடித்திராது என்ற பழைய குருட்டு நம்பிக்கை மீண்டும் பரவி வந்தது.

சிப்பாய்களின் நிலை : பெரும்பாலான சிப்பாய்கள் ஊதியமும் பிறவசதிகளும் மிகக் குறைவாகவே இருந்தன என்று எண்ணி மன அமைதியற்றிருந்தனர். அந்நிலையில் அவர்களுக்குப் புதிய அச்சம் தோன்றுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டது. சிப்பாய்களில் பெரும்பான்மையினர் அந்தணர்களாகவும் இராசபுத்திரர்களாகவுமிருந்தனர். புதிய படைச் சட்டங்களின் விளைவாக, அவர்கள் தமது மதக் கொள்கைகட்கும் சாதிக் கட்டுப்பாடுகட்கும் இடையூறு நேருமென்று அஞ்சினர். அயோத்தியிலிருந்து வந்து வங்காளப் படையில் சேர்ந்திருந்த போர் வீரர்கள் கம்பெனியாரிடம் மனஅமைதியற்றிருந்ததில் வியப்பில்லை. தோட்டாக்களைத் துப்பாக்கிகளில் போடுவதற்கு முன்னர் அவற்றின் முனைகளை வாயில் வைத்துக் கடிப்பது அக்காலத்துப் பழக்கமாயிருந்தது. சிப்பாய்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த தோட்டாக்கள் சிலவற்றின்மீது மாட்டுக் கொழுப்பும், பன்றிக் கொழுப்பும் தடவப்பட்டிருந்தது என்ற செய்தி பரவியதால் இந்து சிப்பாய்களும் முகம்மதியப் போர் வீரர்களும் அச்செயல் தம்மதக் கோட்பாடுகளுக்கு முரண்பட்டது என்று கம்பெனியின் மீது சீற்றமும் வெறுப்பும் கொண்டனர். இந்துக்களுக்குப் பசு ஒரு புனிதமான விலங்காகும். முகம்மதியர்கள் பன்றியைத் தூய்மையற்றதென்று கருதுவர். ஆகவே இந்தியச் சிப்பாய்கள், தம்மைத் தம்முடைய மதக்கட்டுப்பாடுகளை விடுத்துக் கிறித்துவராகச் செய்வதற்கு ஆங்கிலேயர் முயலுவதாக எண்ணி அஞ்சினர். தோட்டாக்களை வாயில் வைத்துக் கடிக்க வேண்டுமென்ற ஆணையை அரசியலார் நீக்கி விட்டனர். ஆயினும் முதற்கண் ஏற்பட்ட வெறுப்

பும் அச்சமும் சிப்பாய்களிடத்து நிலைத்துவிட்டன. படைகளில் இந்தியர்களின் எண்ணிக்கை மிகுதி; ஐரோப்பியரின் எண்ணிக்கை குறைவு. இந்தியப் படையினரை அவர்களுடைய வைதீகக் கொள்கைகட்கு மாறாக வெளிநாடுகட்கு அனுப்பும் ஆணைகளையும் ஆங்கிலேயர் பிறப்பித்தனர். முதலாம் ஆப்கானியப் போரிலும், கிரிமியாப் போரிலும் (1854-5) ஆங்கிலப் படையினரின் பெருமை குன்றியதால் அந்நிலையை இந்தியச் சிப்பாய்கள், தமக்கு ஒரு நல்வாய்ப்பாகப் பயன் படுத்திக் கொள்ள முற்பட்டனர்.

பகுதி 17

டல்ஹௌசியின் பொறுப்பு

இந்தியப் பெருங்கலகத்தின் போது, டல்ஹௌசி தான் அதற்குப் பொறுப்பாளி என்று அவர்மீது ஆங்கிலேயர் சீற்றங் கொண்டனர். ஆனால் பிற்காலத்தில், இதுபற்றி, பிரிட்டிஷாரின் கருத்து மாறுதலடைந்தது. டல்ஹௌசியே, கலகத்துக்கு முழுப் பொறுப்பாளியாவர் என்ற கருத்தை அவர்கள் பிறகு ஏற்கவில்லை. இனி, அரசியல், ஆட்சிமுறை, இராணுவம் முதலிய துறைகளில் டல்ஹௌசி எத்துணை அளவுக்கு அக் கலகத்துக்குப் பொறுப்பாளியாவர் என்று சிந்திப்போம். இவர், அயோத்தியையும் ஜான்சியையும் இணைத்துக் கொண்டதால் அயோத்தியில் அமைதியின்மை பெருகியதுடன் லட்சுமி பாயும் பிரிட்டிஷாரின் பகைவரானார். மேலும் பேஷ்வாவின் தத்துப்பிள்ளை நானாசாகிப்பையும் டல்ஹௌசி தமது விரோதியாக்கிக் கொண்டார் இக்கவர்னர்-ஜெனரல் பின்பற்றிய நாடு இணைக்கும் கொள்கை, ஊன்றிய உரிமைகளைப் (vested interests) பெற்றிருந்த பலருக்கு இடையூறாக இருந்தது. சிற்றரசர்களின் கீழ் சீர்கேடுகள் நிறைந்திருந்தன என்பது உண்மையே. சமீந்தார்கள் கொடுமை புரிந்தனர் என்பதையும் மறுப்பதற்கில்லை. ஆனால் இந்தியரின் ஆட்சிமுறை என்ற காரணத்தால் மக்கள் அத்துயரங்களைப் பொறுத்துக் கொண்டனர். ஆனால் சதாரா, நாகபுரி, பர்மா முதலிய நாடுகளை ஆங்கிலேயர் இணைத்துக் கொண்ட போதிலும் அப்பகுதிகளில் கலகம் இல்லை என்பதும் குறிப்பிடத் தக்கது. மேலும் கலகத்தை அடக்குவதற்குப் பஞ்சாபு உதவி புரிந்தது என்பதையும் நாம் நோக்க வேண்டும். அயோத்தியை ஆங்கிலேயர் இணைத்துக் கொண்டதால் அங்கே அமைதியின்மை ஏற்படாதிருக்க அந்நிகழ்ச்சிக்குப் பிறகு பிரிட்டிஷார் அங்கே பின்பற்றிய கொள்கைதான் கலகத்துக்கு

ஒரு காரணமாகும் என்ற வாதமும் உண்டு. அம்மாகாணத்தின் வருமானம் முழுவதையும் அந்நாட்டினரின் நலத்துக்காகவே செலவழிக்க வேண்டுமென்று சர் வில்லியம் ஸ்லீமனும் சர் ஹென்றி லாரன்சும் கூறினர். ஆனால் டல்ஹௌசியோ' ஆங்கிலேயருக்கும் அவ்வருமானத்தில் ஒரு பங்கு கிடைக்கவேண்டுமென்று விரும்பினர். மேலும் இவர், குடியானவர்களுக்கு நன்மைசெய்வதில் ஆர்வம் கொண்டு அயோத்தியின் தாலுக்தார்களின் உரிமைகளை அறவே புறக்கணித்துவிட்டார். ஆகவே அவர்களும் ஆங்கிலேயரின் பகைவர்களாயினர். டல்ஹௌசியின் நாடு இணைக்கும் முறை, சில செய்திகளைப் பொறுத்த வரை நன்மைபயக்கக் கூடியதாக இருப்பினும் வேறுசில செய்திகளைப் பொறுத்தவரை தீமையே பயந்தது. அவர் கொள்கைகளின் விளைவாக உரிமை இழந்த யாவரும் தமது துயரத்துக்கு மூலகாரணம் டல்ஹௌசியே என்று கருதினர். ஆகவே, படைக்கலகத்துக்கு முன்பு அமைதியின்மை நிலவியது. அமைதியின்மைக்கு டல்ஹௌசி பொறுப்பாளியாவர் என்பது உண்மையாயின் படைக் கலகத்துக்கும் அவர் மறைமுகமாகக் காரணமாவர் என்றே கூறவேண்டும். இவருடைய சீர்திருத்தங்கள் வைதீக இந்துக்களுக்கு வெறுப்பை அளித்தன என்பதை முன்னரே பார்த்தோம். பழமைப்பற்று மிக்கோரைச் சிறிது சிறிதாகத்தான் சீர்திருத்த முயலவேண்டும் என்ற உண்மையை டல்ஹௌசி நன்கு உணரவில்லை. மற்றொரு கருத்தையும் ஈண்டு நாம் குறிப்பிடவேண்டும். டல்ஹௌசியின் ஆட்சிமுறை இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை வலிமைப்படுத்தியதால்தான், கலகம் நேர்ந்தபோழுது பலர் ஆங்கிலேயருக்கு உதவிபுரிந்தனர். டல்ஹௌசி, சேர்த்து வைத்த பொருள்கள், கலகத்தை அடக்குவதற்கு ஓரளவு உதவியாயிருந்தன என்றும் கூறுவர். மேலும் ஒரு சிலரின் எதிர்ப்பை ஆதாரமாகக் கொண்டு, நாம், முன்னேற்றத்தில் ஆர்வம் கொண்ட தலைவர்களைக் குறை கூறுவது முறைமையன்று எனவும் ஓரளவு அழிவு பாடின்றி முன்னேற்றத்தை நாம் எதிர்பார்க்கலாகாது

என்றும் அழிவுபாட்டை எதிர்த்தால் முன்னேற்றத்தையும் எதிர்ப்பதாகும் என்றும் வாதிப்பர். ஆனால், அழிவுபாடு ஏற்படாமலேயே முன்னேற்றத்தைக் காண்பது மிகவும் சிறப்புடையதாகும் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. சிப்பாய்களின் மனக்குறைகளைப்பற்றி நேப்பியர் டல்ஹௌசிக்கு அறிவித்து அவரை எச்சரித்தார். ஆனால் கவர்னர்-ஜெனரல் அதைப் பொருட்படுத்தவில்லை. உள்நாட்டுப்படையில் இருந்த ஒழுங்கின்மையை டல்ஹௌசி உணர்ந்து, அதனை நீக்கவில்லை. ஆதலால் படைக்கலகத்துக்கு அவர் ஓரளவு பொறுப்பாளியாவர்.[1] படையில் ஐரோப்பியர் இந்தியரைவிடக் குறைவாக இருந்தமை அமைதியின்மைக்கு ஒரு காரணமாகக் கூறப்படுகிறது. இத்தீமையை உணர்ந்தே டல்ஹௌசி தாய் நாட்டினருக்கு முன்கூட்டியே சில அறிவுரைகளைக் கூறினராம். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி வலிமைபெற, மிகுதியான ஐரோப்பியப் போர் வீரர்கள் இருக்கவேண்டுமென்பதே அவருடைய கருத்து என்றும் அறிகிறோம்.[2] ஆனால் அக்கருத்து, செயல்முறையில் அமையவில்லை. காரன்வாலிஸ் காலத்தில் ஒரு ஐரோப்பியருக்கு மூன்று அல்லது நான்கு இந்தியர் என்ற விகிதாசாரப்படி படை அமைந்திருந்தது. ஆனால் டல்ஹௌசி காலத்திலோ ஒரு ஐரோப்பியருக்கு ஏறத்தாழ ஆறு இந்தியர்கள் என்ற முறையில் படை அமைப்பைக் காண்கிறோம். மேலும் சிறந்த ஐரோப்பிய இராணுவ அலுவலர்களை டல்ஹௌசி சில புதிய மாகாணங்களின் ஆட்சித்துறைப் பணிகளில் அமர்த்திக்கொண்டதாலும் நிலைமை கேடுற்றது. முடிவாகக் கூறுமிடத்து டல்ஹௌசியின் கொள்கையின் விளைவாகப் பல நன்மைகள் விளைந்தன என்பது உண்மையே; ஆயினும் 1857-ம் ஆண்டுப் படைக் கலகத்துக்கு முன்னர் நிலவிய அமைதியின்மைக்கும் அக்கொள்கை ஓரளவு காரணமாகும். இனி, கலகம் எவ்வாறு பரவியது என்பதைக் கூறுவாம்.

---

1. 42, , பக். 538.
2. 43, பக். 223.

பகுதி 18

படைக் கலக நிகழ்ச்சிகள் (1857—8)

தோட்டாக்களில் கொழுப்பு தடவப்பட்டிருக்கிறது என்ற செய்தி, 1857-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில், கல்கத்தாவுக் கருகில் உள்ள டம் டம் (Dum—Dum) என்னுமிடத்திலிருந்து விரைவில் பரவியது. மார்ச்சு மாதத்தில் பாரக்பூரில் (கல்கத்தாவுக்கருகில்) ஒரு அந்தணச் சிப்பாய் தமது மேலதிகாரியைக் கொன்று விட்டார். அதைத்தொடர்ந்து அங்கே கலகம் மூண்டது. வேறுசில இராணுவத்தளங்களிலும் குழப்பம் மேலிட்டது. அடுத்த மாதத்தில் மீரட்டில், தோட்டாக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய 90 சிப்பாய்களில் ஐவர் மட்டுமே ஆணைக்குக் கீழ்ப்படிந்தனர். மற்ற 85 பேரும் அவற்றைத் தொடக் கூட மறுத்துவிட்டனர். அக்குற்றத்துக்காக அவர்கள் பத்து ஆண்டுக்காலச் சிறைவாசத் தண்டனை பெற்றனர். உடனே, மூன்று பட்டாளங்களின் சிப்பாய்கள் ஆர்த்தெழுந்து தமது அதிகாரிகளைக் கொன்றுவிட்டுச் சிறைப்பட்டோரை விடுதலைசெய்தனர். தந்திக்கம்பிகளையும் அவர்கள் அறுத்தனர். கலகக்காரர்கள் தில்லிக்குச்சென்று ஐரோப்பியர் பலரைக் கொன்றுவிட்டு அந்நகரைக் கைப்பற்றினர். அவர்களை அடக்க அரசியலாரால் இயலவில்லை. ஒரு தந்திக் குமாஸ்தா, தாம் இறக்குந்தறுவாயில் கலகத்தைப்பற்றிய செய்தியை லாகூருக்கு அறிவித்தார். உதவித் தளபதி வில்லஃபி, கலகத்தை அடக்க முடியாமல், வெடிமருந்துக் களஞ்சியத்தைக் கொளுத்தி விட்டார். கலகக்காரர்களிடம் அது சிக்கிவிடக்கூடாது என்பதே அவருடைய நோக்கமாகும். அச்செயலின் விளைவாகப் பலர் இறந்தனர். கலகக்காரர்கள் பழைய முகலாயர் அரண்மனைக்குள் சென்று எண்பது வயதான II-ம் பஹதூர்ஷாவை, இந்தியாவின் முகலாயப் பேரரசர் என்று பறைசாற்றினர். ஜூன்மாதத் தொடக்கத்தில்

கலகம் ரோஹில்கண்டு, அயோத்தி முதலிய இடங்களுக்குப் பரவியது. ஜான்சியில் ஐரோப்பியர் கொலையுண்டனர். அங்கே, லட்சுமிபாய் என்ற 22-வயதுப் பெண்மணி அரியணையேறினாள். அவள் தனது சக்களத்தியின் உதவியுடனும் கலகக்காரரின் ஒத்துழைப்புடனும் ஆங்கிலேயரைத் தீவிரமாக எதிர்க்கத் திட்டமிட்டாள். கலகக்காரர் பலர் தில்லிக்குச் சென்றனர். பலர், கான்பூரையும் லக்னௌவையும் முற்றுகையிட்டனர். ஆங்கிலேயரின் கொடிய பகைவராயிருந்த நானா சாகிபு, கான்பூரில் கலகம் தோன்றியவுடன், கலகக்காரர்களுக்குத் தலைவரானார். அவரை நம்பியிருந்த ஐரோப்பியர் பலர் கொல்லுண்டனர். அவ்வமயம் ஏறத்தாழ 125 ஐரோப்பியப் பெண்டிரும் குழந்தைகளும் கோரமான வகையில் கொலைசெய்யப் பட்டனர். பழிவாங்கச் சென்ற ஆங்கிலப்படைத் தலைவர் ஹென்றி ஹாவ்லாக் நானா சாகிபை முறியடித்து விட்டுக் கான்பூரில் நுழைந்தார். பல கலகக்காரர்கள் அழிந்தனர். செப்டம்பர் மாதத்தில் ஆங்கிலேயர் தில்லியையும் மீட்டுக் கொண்டனர். முகலாயப் பேரரசர் கைதியானார். அவருடைய இரண்டு பிள்ளைகளும் பேரனும் கொல்லுண்டனர். அம்மாதத்திலேயே ஹாவ்லாக்கும் சர் ஜேம்ஸ் ஔட்ராமும், கலகத்தை அடக்க லக்னௌவுக்குச் சென்றனர். அந்நகரமும் விரைவில் அவர்களால் மீட்கப் பட்டது. ஆனால் சென்னை இராணுவ அதிகாரி நெயில், கலகத்தை அடக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருந்த பொழுது இறந்துவிட்டார். இவருடைய உருவச்சிலை ஒன்றை அரசியலார் சென்னை மௌண்டு ரோடில் நிறுவியிருந்தனர். அதை விரும்பாத பலர் சத்தியாக்கிரகம் செய்ததால், 1937-ம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ம் நாள் காங்கிரசு அமைச்சர்கள் அச்சிலையை அங்கிருந்து அகற்றிப் பொருட்காட்சிச் சாலைக்கு அனுப்பிவிட்டனர். ஹாவ்லாக், ஔட்ராம் இருவரையும் கலகக்காரர்கள் லக்னௌவிலேயே முற்றுகையிட்டனர். இங்கிலாந்திலிருந்து வந்த படைத்தலைவர் காம்பெல் என்பார் அவர்களை விடுவித்தார். ஆனால் ஹாவ்லாக் அதே மாதத்தில்

இறந்துவிட்டார். நாஞ சாகிப்பின் துணைவராயிருந்த தாந்தியா தோபி என்ற மராட்டிய அந்தணர், கான் பூரைக் கைப்பற்றிக்கொண்டார். டிசம்பர் மாதத்தில் காம்பெல் அவரைத் தோற்கடித்து விட்டு அந்நகரை மீட்டார். நேபாளத்திலிருந்தும் ஆங்கிலேயருக்கு உதவி கிடைத்தது. 1858-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில்தான் லக்னௌ முடிவாக ஆங்கிலேயருக்கு அடங்கியது. பெரில்லி நகரில் ஓராண்டுக்காலமாக கலகம் பரவி யிருந்தது. காம்பெல் அதையும் தம் வசப்படுத்தினுர். அயோத்தியில் ஆங்கிலேயருக்கு வலிமையான எதிர்ப்பு இருந்தது. இங்கிலாந்திலிருந்து இந்நாட்டுக்கு வந்த சர் ஹியூ ரோஸ் என்பார் மத்திய இந்தியாவிலும் பண்டல் கண்டிலும் ஏற்பட்டிருந்த கலகங்களை அடக்குவதில் முனைந்திருந்தார். லட்சுமிபாய், தாந்தியா தோபியின் உதவியையும் பெற்றிருந்தார். அவ் வீரப் பெண்மணி ஆண் உடை அணிந்து கடுமையாகப் போரிட்டுவந்தாள். இறுதியில் போர்க்களத்திலேயே அவளுடைய ஆவி பிரிந்தது. கலகக்காரர்களை அடக்கி வெற்றி பெற்ருர் ரோஸ். கலகத்தலைவர்களில் லட்சுமிபாயே ஒப்பும் மிக்குமில்லாத வலிமையும் வீரமும் வாய்ந்தவர் என்று ஹியூ ரோஸே குறிப்பிட்டிருக்கிருர்.[1] அழகும் ஆற்றலும் ஒருங்கே அமையப்பெற்ற அப்பெண்மணி, மராட்டிய அந்தணர் குலத்தைச் சேர்ந்தவர். சூழ்நிலை காரணமாக அவர் நாஞ சாகிபுடன் இணைந்து போரிட நேர்ந்தது. எடுத்த கருமத் தில் வெற்றி அல்லது சாவு என்ற நோக்கத்துடன் அவர் போரிட்டு இறந்தார். ஜான்சியில் ஐரோப்பியர் கொலை யுண்டபொழுது லட்சுமிபாய் அக் கொலைச் செயலில் பங்கு கொள்ளவில்லை என்று அறிஞர் கின்கெய்டு குறிப்பிடு கிருர். அப்பெண்மணி, ஆங்கிலப் பேரரசரின் ஆட்சிக்கு உட்பட்ட குடி அல்லர். ஆதலால் அவரைக் கலகக்காரர் என்று குறிப்பிடுவது முறையன்று எனவும் அவ்வறிஞர் விளக்குகிருர்.[2] ஹியூ ரோஸ், குவாலியர் கோட்டை

---

1. *42,* பக். *520.*
2. *53,* பக். *13.*

யைத் தம் வசப்படுத்திக்கொண்டபின் ஒருவாறு கலகம் ஓய்ந்தது. 1858-ம் ஆண்டு ஜூலை மாதத்தில், கலகங்கள் பெரும்பாலும் முடிவுற்றன. கானிங்கு, அமைதி ஏற்பாட்டு அறிக்கையை வெளியிட்டார். 1859-ம் ஆண்டில்தான், ரோஸ், தாந்தியா தோபியைக் கைப்பற்றினர். ஆங்கிலேயர் அத் தலைவரைத் தூக்கிலிட்டனர். அவ்வாண்டின் முடிவில் பெரும்பாலும் அமைதி நிலவியது.

பகுதி 19

கலகம் தோல்வியுற்றமைக்குக் காரணங்கள்

தில்லியையும் லக்னௌவையும் ஆங்கிலேயர் மீட்டுக் கொண்டவுடனேயே, படைக்கலகத்தின் தோல்விக்கான அறிகுறிகளைக் காண்கிறோம். கலகக்காரர்களிடையே ஒற்றுமைப்பட்ட நோக்கம் கிடையாது ; கருத்து வேறுபாடும் நிலவியது. ஒன்றிச் செயலாற்றுவதற்கானதொரு திட்டத்தை அவர்கள் வகுக்கவில்லை. அவர்களில் ஒருவருக்கொருவர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க வகையில் ஒத்துழைக்கவில்லை. ஆகவே இங்குமங்குமாகச் சென்ற ஒரு சில பிரிட்டிஷ் படைகளே கலகத்தை அடக்கிவிட்டன.

> *'' நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை*
> *தலைமக்கள் இல்வழி இல் ''*

என்ற குறளுக்கிணங்கத் தலைவர் ஒருவரின் கீழ்ச் செயலாற்ருத கலகக்காரர்கள் எளிதில் சிதறுண்டனர். போர் செய்யும் வீரமும் எதிர்ப்பைத் தாங்கும் ஆற்றலும் இல்லையானுலும் படை தன்னுடைய அணிவகுப்பால் பெருமை பெறும் என்பார் திருவள்ளுவர். இத்தகைய அணிவகுப்பையும் இந்தியப் படைக் கலகக்காரரிடம் நாம் காண்பதற்கில்லை. கலகக்காரர்கள், பலவகையான பெரிய தவறுகளை இழைத்து வந்தனர். அவர்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க பெருமையைப் பெற்றவர், லட்சுமிபாய் ஒருவரே ஆவர். கலகம் காட்டுத் தீப் போல் பல இடங்களில் பரவியதெனினும் குறிப்பிட்ட ஒரு சில இடங்களில் மட்டுமே அது கடுமையாக இருந்தது. பஞ்சாபு, ரோஹில்கண்டு, வடமேற்கு மாகாணங்கள், அயோத்தி, மேற்குப் பீஹார், வங்காளம், பண்டல்கண்டு, மத்திய இந்தியா முதலிய பகுதிகளில் கலகங்கள் மூண்டன. ஆனுல் ஆப்கானித்தானம், சிந்து, இராசபுதனம், மத்திய வங்காளம், கிழக்கு வங்காளம், தென் இந்தியா

முதலிய பகுதிகளில் (கோலாப்பூர் நீங்கலாக) கலகம்
கிடையாது. சிற்றரசர்களில் பெரும்பான்மையினர் ஆங்கி
லேயரிடம் பணிவன்புடனிருந்தனர். சிறப்பாக, சிந்தியா,
ஹோல்கார், சீக்கியத் தலைவர்கள் முதலியோர் பிரிட்டிஷா
ருக்கு அடங்கியே இருந்தனர். சிந்திய அவ்வமயம் கல
கத்தைத் தொடங்கியிருந்தால் மராட்டிய நாடுகள் யாவுமே
அவருடன் சேர்ந்திருக்கக் கூடும் என்ற கருத்து நோக்
கற் பாலது * தோஸ்து முகம்மது. தாம் ஆங்கிலேயருடன்
செய்து கொண்ட உடன்படிக்கைப்படி அவர்களுடன் அன்
புடையவராகவே இருந்து வந்தார். சென்னைப் படையும்
பம்பாய்ப் படையும் கலகத்தில் எவ்வித அக்கரையையும்
காட்டவில்லை. குவாலியரின் சர் தினகர் ராவும் ஐதராபாத்
சர் ஸலர் ஜங்கும் இரண்டு ஆண்டுகள் நீடித்திருந்த அக்
கலகத்தில் ஆங்கிலேயருக்கு உதவி புரிந்தார்கள்.
நேபாளத்தின் ஜங் பகதூரும் பிரிட்டிஷாருக்கு உதவினர்.
சில பிரிட்டிஷ் தளபதிகள் தொடக்கத்தில் தவறுக
ளிழைத்த போதிலும் சர் ஹென்றி லாரன்சு, சர் ஜான்
லாரன்சு, ஔட்ராம், ஹாவ்லாக் நிக்கல்சன், நெயில், எட்
வர்ட்ஸ் முதலிய படை வீரர்களின் ஆற்றல் தக்க சமயங்
களில் கலகத்தை அடக்க உதவியாயிருந்தது. பின் வந்த
காம்பெல், ரோஸ் முதலிய தலைவர்களின் திறமையும்
போற்றத் தக்கது. பிரிட்டிஷாரின் கடல் வலிமை காரண
மாகத் தாய்நாட்டிலிருந்து உதவி அனுப்புவதில் அளவு
கடந்த கால தாமதம் ஏற்படவில்லை. கலகம் தொடங்கு
வதற்கு முன்னரே பாரசீகப் போர் முடிவடைந்தமை,
ஆங்கிலேயருக்கு ஒரு நல்வாய்ப்பாக அமைந்தது. இந்தி
யாவில் ஏற்பட்டிருந்த தந்தி முறையும் கலகத்தை அடக்கு
வதற்கு மிகவும் பயனுள்ளதாயிருந்தது. ஹென்றி
லாரன்சு லக்னௌவிலும், ஜான் லாரன்சு பஞ்சாபிலும்,
ஜார்ஜ், இராசபுதனத்திலும், பாராட்டத்தக்க அருஞ்செயல்
களை ஆற்றி வந்தனர்.

---

* 81, பக். 379.

பகுதி 20

கம்பெனியின் முடிவு

படைக் கலகத்தின் விளைவாக இங்கிலாந்தில் கவலை யும் பரபரப்பும் ஏற்பட்டன. இந்திய அரசியல் நிர்வாகத் தைக் கம்பெனியாரிடம் இனிமேலும் விட்டு வைப்பது தவ ருகும் என்ற கருத்து அந்நாட்டில் வலிமை யடைந்தது. 1855-முதல் 1858-வரை பாமர்ஸ்டனின் தலைமையில் செய லாற்றி வந்த விக்கு அமைச்சர்சபை, இந்தியாவில் கம்பெனியின் ஆட்சியை மாற்றிவிட முடிவு செய்தது. கம் பெனியார், 1858-ம் ஆண்டின் தொடக்கத்திலேயே தம்மு டைய ஆட்சியை மாற்ருமலிருக்க வேண்டி விண்ணப்பித் துக் கொண்டனர். அப்பெரிய விண்ணப்பத்தைத் தயா ரித்த பெருமை ஜான் ஸ்டூவர்ட் மில் என்ற பேரறிஞரைச் சாரும். கம்பெனியின் சாதனைகளை யெல்லாம் அவர் அதில் விளக்கிக் கூறியிருந்தார். இந்திய ஆட்சி முறை யில் சீர்கேடுகளிருந்தால் அவைகளுக்குக் கம்பெனியார் பொறுப்பாளிகளல்லர் என்றும் அவ் விண்ணப்பத்தில் கண்டிருந்தது. இந்தியத் துரைத்தனச் செயல் முறையில் முடிவு செய்யும் அதிகாரத்தை ஆங்கில அரசியலாரே நீண்ட காலமாக வகித்து வந்ததால் நடந்தவற்றிற்கும், செய்ய வேண்டியவற்றைச் செய்யாமலிருந்தமைக்கும் அவர்களே முழுப் பொறுப்பாளிகளாவர் என்பதையும் கம்பெனியார் எடுத்துக் காட்டினர். பிரிட்டிஷ் அரசியலார், தாமே, ஆட்சி முறையை நேராக ஏற்றுக்கொண்ட பிறகு தான் அமெரிக்க ஐக்கிய நாடுகளை இங்கிலாந்து இழந்தது என்ற உண்மையையும் இயக்குநர்கள் விளக்கினர். ஆனல் இம்முறையீடுகள்யாவும் பயனற்றவை ஆயின. பாமர்ஸ்டன், கம்பெனி ஆற்றிய சிறந்த பணிகளை மறுக்க வில்லை. எனினும் அதுகாறும் அமைந்திருந்த இரட்டை ஆட்சிமுறையில் இயல்பாகவே பல கேடுகள் இருந்தன என்று அவர் எடுத்துக்கூறினர். அதிகாரப்பொறுப்பை,

மேற்பார்வைக் கழகத்தினரும் இயக்குநர்களும் கவர்னர்-ஜெனரலும் தமக்கிடையே பிரித்துக்கொள்ளும் முறையால் ஏற்பட்ட இடையூறுகளையும் அவர் விளக்கினர். வேறு சில அறிஞர்கள் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆற்றலற்ற தன்மையையும் அது இழைத்த கேடுகளையும் வற்புறுத்திக் கூறினர்.

ஜான் கம்பெனியின் ஆட்சிமுறையில் பல குறைபாடுகள் உண்டு என்பதில் ஐயமில்லை. வாணிகப் பெருக்கமே அதன் சிறந்த குறிக்கோளாயிருந்தது. வரவைப் பெருக்கி செலவைக் குறைக்கவே கம்பெனியார் முயன்றனர். ஆயினும் அவர்கள் ஒரு கீழ்நாட்டுப் பேரரசை நிறுவினர் என்பதனையும் நோக்க வேண்டும். ஆங்கிலேயர் அல்லாத மற்ற ஐரோப்பியரால் அச்செயலை ஆற்ற இயலவில்லை. கம்பெனியின் ஆட்சியில் சில காலங்களில் கொடுமைகள் மிகுந்திருந்தன எனினும், கிளைவ் முதல் டல்ஹௌசி வரை உள்ள காலப்பகுதியில் இந்நாட்டில் ஏற்பட்டுவந்த முன்னேற்றத்தையும் நாம் மறப்பதற்கில்லை. கம்பெனியார், தமது ஆட்சி அழிவுறும் அளவுக்குத் தீச்செயல்களைப் புரியவில்லை என்பது உண்மையே. ஆயினும் சூழ்நிலை மாற்றங் காரணமாகப் பிரிட்டிஷ் அரசியலாரின் இந்தியக் கொள்கையில் மாறுதல் ஏற்பட்டிருந்தது. படைக்கலகம் தோன்றியிராவிடின் கம்பெனியின் ஆட்சி முன்புபோலவே தொடர்ந்து நீடித்திருக்கும் என்று நாம் கூறமுடியாது. சிறிது சிறிதாகக் கம்பெனியின் அதிகாரத்தைக் குறைத்துப் பார்லிமெண்டின் கட்டுப்பாடுகளை மிகுதியாக்க வேண்டுமென்பதே பிரிட்டிஷ் அரசியலாரின் கொள்கையாயிருந்தது என்பதைப் பட்டயச்சட்டங்கள் நமக்கு அறிவிக்கின்றன. ஆகவே கம்பெனியின் அரசியல் அதிகாரம் முடிவுறுவதற்குப் படைக்கலகம் காரணமன்று. ஆனல் அச்செயலை உடனே நிறைவேற்றுவதற்கு அக்கலகம் ஒரு சிறந்த வாய்ப்பை அளித்தது. இம்மாறுதலால் பெரும்பாலும் நன்மையே ஏற்பட்டது என்று கூறலாம். ஆனல் அதிகாரமாற்றத்தின் அடிப்படை

நோக்கங்களில் ஒன்று நிறைவேறவே இல்லை. 1858-ம் ஆண்டுக்குப் பிறகும் நீண்டகாலம்வரை பார்லிமெண்டு இந்திய நிகழ்ச்சிகளில் குறிப்பிடத்தக்க அக்கறை கொண்டு அவற்றுக்குத் தக்கமுறையில் சிறப்பளிக்கவில்லை. இந்திய நாட்டு அலுவல்களில் பார்லிமெண்டு பொறுப்பற்றிருந்தது என்பதை ராம்சே மாக்டனல்டு சிறப்பிக்கின்றார்.* 1858-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் பார்லிமெண்டில் நிறைவேறிய சட்டத்தின்படி இந்திய அரசியல் நிர்வாகத்தின் பொறுப்பு, கம்பெனியாரிடமிருந்து பிரிட்டிஷ் அமைச்சர்குழுவுக்கு மாறியது. முடிவாகக் கூறுமிடத்து இம் மாறுதல் வரவேற்கத்தக்கதேயாம். இனி 1858-ம் ஆண்டுச் சட்டத்தைப்பற்றி அறிந்து கொள்வோம்.

———

* *85, பக். 156.*

பகுதி 21

இந்திய அரசியல் நிர்வாகச்சட்டமும் விக்டோரியா பேரரசியின் அறிக்கையும் (1858)

இந்திய அரசியல் நிர்வாகச் சட்டம் (ஆகஸ்டு, 1858): இப்புதிய சட்டத்தின்படி, இயக்குநர் சபையும் மேற்பார் வைக்கழகமும் மறைந்தன. அவற்றின் அதிகாரங் களைப் பார்லிமெண்டுக்குக் கட்டுப்பட்டவரான இந்தியா அமைச்சர் ஒருவர் ஏற்றுக்கொண்டார். மற்ற பிரிட்டிஷ் அமைச்சர்களைப் போலன்றி இவர், இந்தியாவின் வருமா னத்திலிருந்தே ஊதியம் பெற்றுவந்தார். இவருக்கு உதவி செய்யப் பதினைந்து பேர்களடங்கிய சபை ஒன்று அமைந் தது. நெருக்கடியான காலங்களில் அவ்வாலோசனைச் சபையைப் பொருட்படுத்தாமலேயே இந்தியா அமைச்சர் செயலாற்றமுடியும். 1784-ல் பிட் இந்தியச் சட்டப்படி அமைந்த இரட்டை ஆட்சி, இவ்வாறு 1858-ல் முடி வடைந்தது. இந்திய அரசியல் பொறுப்பைப் பிரிட்டிஷ் பேரரசியே முறைப்படி ஏற்றுக்கொண்டார். அந்நாட்டு அரசியலமைப்புப்படி அப்பொறுப்பு உண்மையில் பார்லி மெண்டுக்கே உரியதாயிற்று. இம்மாறுதலைத் தெளிவாக் கும் வேறு சிலசட்டங்கள் 1861-ல் தோன்றின, 1858-ம் ஆண்டு நவம்பர்மாதம் முதல்நாளன்று புதிய சட்டம் செயல்முறைக்கு வந்தது.

அரசியாரின் பேரறிக்கை (1—11—1858) : விக்டோ ரியாப் பேரரசியார் 1858-ல் இந்தியச் சிற்றரசர்களுக்கும் தலைவர்கட்கும் மக்களுக்கும் ஓர் அறிக்கை விடுத்தார். இந்திய அரசியலார் அவ்வறிக்கையை இந்திய மொழி களில் மொழிபெயர்த்துப் பல இடங்களில் வாசிக்கச் செய்தனர். அவ்வறிக்கைப்படி கானிங்குப்பிரபுவே இந்தி யாவின் முதல் அரசப் பிரதிநிதி ஆனார். இந்தியச் சிற்றரசர்களுடன் ஆங்கிலேயர் செய்துகொண்ட உடன்

படிக்கைகளைப் பேரரசியார் ஏற்றுக்கொண்டார். இந்திய மன்னர்களின் உரிமைகள் யாவும் உறுதிப்பட்டன. மேற்கொண்டு இராச்சியத்தை விரிவடையச்செய்தல் அரசியலாரின் நோக்கமன்று என்பதும் தெளிவாயிற்று. படைக்கலகத்தின்போது ஆங்கிலேயரைக் கொலைசெய்தவர்களைத் தவிர அதில் பங்கெடுத்துக்கொண்ட மற்ற யாவரையும் அரசியார் மன்னித்துவிட்டார். மக்களின் மதம், பழக்க வழக்கங்கள் முதலியவற்றில் அரசியலார் தலையிடுவதில்லை என்றும் மகாராணியார் உறுதி மொழி கூறினர். யாவரும் ஒத்த உரிமைகளைப் பெறுவர் என்றும், சாதிமத வேறுபாட்டைப் பாராது தகுதியுடையவர்களுக்கே அரசியலில் பதவிகள் அளிக்கப்படும் என்றும் அறிக்கை குறிப்பிடுகிறது. அவகாசியிலிக் கொள்கை நீக்கப்பட்டது. வாரிசு இல்லாத சிற்றரசர்கள் தமது விருப்பம்போல் சுவீகாரம் செய்துகொள்ளும் உரிமையை மீண்டும் பெற்றனர். "இந்திய மக்களின் நலமே எமது வலிமை; அவர்கள் அமைதியுற்றிருப்பதே எமது அமைதிக்கு வழியாகும்; அவர்களுடைய நன்றியறிவே எமக்குத் தலைசிறந்த கைம்மாறு" என்ற சொற்றொடர், பேரறிக்கையின் முடிவில் காணக்கிடக்கிறது.* இத்தகைய இன்மொழிகளால் பேரரசியார் இந்தியரின் அன்பைப் பெற்றார். இவருடைய பேரறிக்கை இந்தியாவின் சிறந்த உரிமைப் பட்டயமாகக் கருதப்படுகிறது. ஆனால் இவ்வறிக்கையில் முன்னரே சட்டங்களிலும் வழக்காற்றிலும் இல்லாத சிறந்த புதிய கருத்து எதுவும் இல்லை என்பதும் குறிக்கத் தக்கது. எனினும் பேரரசியார் நேர்முகமாக விடுத்த இவ்வறிக்கை இந்தியருக்கு நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் அளித்தது.

---

* 50, I பக். 386.

பகுதி 22

படைக் கலகத்தின் வேறு சில விளைவுகள்

இந்தியச் சிற்றரசர்கள் : அவகாசியிலிக் கொள்கையும் நாடு இணைக்கும் கொள்கையும் தீமை பயக்கக் கூடியன என்பதை ஆங்கிலேயர், படைக்கலகத்தின் விளைவாக உணர்ந்தனர். ஆட்சிமுறைச் சீர்கேட்டைக் காரணமாகக் கொண்டு சிற்றரசுகளைக் கவர்ந்துகொள்ளும் வழக்கத்தையும் அவர்கள் விட்டொழித்தனர். தக்க காலங்களில் சிற்றரசுகளின் உள்நாட்டு அலுவல்களில் தலையிட்டுச் சிற்றரசர்களுடன் ஒத்துழைக்கும் கொள்கையைப் பிரிட்டிஷார் பின்பற்றத் தொடங்கினர். ஒவ்வொரு சிற்றரசரும் தம்தம் நாட்டு மக்களின் நலத்தில் கருத்தைச் செலுத்தக் கடமைப்பட்டிருந்தனர். அவர்கள் அவ்வாறு செய்யத்தவறினல் ஆங்கிலேயர் தலையிட்டு ஆவன செய்வர். இம்முறை எவ்வாறு பின்பற்றப்பட்டதென்பதைப் பின்னர்ப் பார்ப்போம்.

முகலாயப் பேரரசர் : II-ம் பஹதூர் ஷாவைக் குற்றவாளி என்று ஆங்கிலேயர் தீர்மானித்தனர். ஆதலால் அவரை 1858-ல் இரங்கூனுக்கு அனுப்பிவிட்டனர். அங்கே அவர் 1862-ல் தமது 87-வது வயதில் இறந்தார். முகலாயர் குலம் இவ்வாறு முடிவடைந்தது.

முடிவுரை : படைக் கலகத்தை அடக்கிய காரணத்தால் பிரிட்டிஷ் இராணுவத்தின் சிறப்பு உயர்வடைந்தது. இந்நாட்டில் ஆங்கிலேயரின் நிலையும் வலிமையடைந்தது. அரசியலார் தில்லியை வடமேற்கு மாகாணங்களிலிருந்து பிரித்துப் பஞ்சாபுடன் இணைத்தனர். விரிநிலைக் கொள்கையும் முன்னேற்றமும் பொருந்தியதோர் புதிய காலம் இந்தியாவில் படைக் கலகத்துக்குப் பிறகு தொடங்குகிறதென்று சில அறிஞர்கள் கூறுவர். ஆனல் அம்

இந்தியா 1848—58


ஹீரட்
பெஷாவர்
சிலியன்வாலா
குஜரத்
ராம்நகர்
லாகூர்
சினி
சிம்லா
கலகா
முல்தான்
பாரி இடையாற்றுநாடு
தில்லி
மீரத்
ரிட்ஜ்
பெரில்லி
படேகார்
லக்னௌ
கான்பூர்
கரௌலி
குவாலியர்
கல்பி
ஜான்ஸி
அலகாபாத்
ஜெயபூர்
சாகர்
சிக்கிம்
சந்தலர்
டக்கா
ராணிகஞ்சு
பாரக்பூர்
டம்டம்
கல்கத்தா
உதயபூர்
சம்பல்பூர்
கராச்சி
நாகபூர்
பேரார்
கோண்டர்
பாமொ
ஷவெபோ
மாண்டலே
அமரபுரா
ஆவா
பாகன்
வடபர்மா
(கைப்பற்றப்பட்டது 1886)
அரக்கான்
புரோம்
தென் பர்மா
பெகு
இரங்கூன்
மார்ட்டாபன்
பஸ்ஸீன்
ஆமெர்ஸ்ட்
தெனாசரிம்
டாவாய்
க்ரா
க்ரா பூசந்தி
பஸ்ஸீன்
தாணா
பம்பாய்
சதாரா
ஐதராபாத்
அரக்கோணம்
சென்னை
ஆர்க்காடு
உதகமண்டலம்
கோத்தகிரி
கள்ளிக்கோட்டை
கூனூர்
மஞ்சேரி
அங்காடி புரம்
மாப்பிள்ளைமார்கள்
தஞ்சாவூர்
X போர்க்களங்கள்
முதன்முதல் போடப்பட்ட புகைவண்டிப் பாதைகள்
கோடிட்ட இடங்கள் படைக்கலகம் நடந்த முக்கிய இடங்கள்
டல்ஹௌஸி காலத்து பிரிட்டிஷ் இந்தியாவின் உத்தேச எல்லை
S. XAVIER

முன்னேற்றம் விரைவில் ஏற்பட்டுவிடவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கதாகும். படைக் கலகத்துக்குப் பிற்பட்ட 50 ஆண்டுக் காலத்தில் இந்திய அரசியல் அமைப்பு வளர்ச்சியில் விரைவான முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதை நாம் பின்னர்க் காண்போம்.

அதிகாரம் 9

1858-முதல் இந்திய வரலாறு

பகுதி 1

அரசப்பிரதிநிதி கானிங்கு (1858 - 62)

வெள்ளையர் படைக்கலகம்: 1858-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கானிங்கு, புதிய சட்டத்தின்படி அரசப் பிரதி நிதி ஆனார். அடுத்த ஆண்டில் அவருக்கு (எர்ல்) கோமான் பட்டம் கிடைத்தது. புதிய அரசியலமைப்புப்படி கம்பெனியாரின் பணியாளர் யாவரும் பிரிட்டிஷ் அரசியாரின் பணியாளராயினர். கம்பெனியின் ஆட்சிக்குட் பட்டிருந்த ஐரோப்பியப் படையினர் தம்முடைய உடன் பாட்டைப் பெருமலேயே அம் மாறுதலை நிறைவேற்றிய மைக்காக அரசியலாரின் மீது சீற்றங் கொண்டனர். ஆகவே ஏறத்தாழ 16000 ஐரோப்பிய வீரர்கள் கலகம் செய்தனர். இதற்கு வெள்ளையர் படைக் கலகம் என்று பெயர் (மே, 1859). இதன் விளைவாக 10,000 படை வீரர் கள் பணித்துறையிலிருந்து வெளியேறினர். அடுத்த ஆண்டில் கம்பெனியாரின் படை பேரரசியாரின் படை யுடன் இணைந்து இரண்டறக் கலந்தது.

புதிய சட்டங்கள் (1861): அரசியல் அமைப்பைப் பொறுத்த சில புதிய சட்டங்கள் கானிங்கின் காலத்தில் தோன்றின. அவற்றில் 1861-ல் நிறைவேறிய மூன்று சட்டங்கள் சிறப்பாக ஈண்டுக் குறிப்பிடத் தக்கவை. புதிய இந்திய சிவில் பணிச் சட்டம், பல பதவிகளை, ஒப்பந்தச் சிவில் பணியாளருக்கென ஒதுக்கியது. அடுத்தபடியாக இந்தியக் கவுன்சில்கள் சட்டம், கவர்னர்-ஜெனரலின் ஆலோசனைக் குழுவினரின் எண்ணிக்கையை நான்கி லிருந்து ஐந்துக்கு உயர்த்தியது. பிரிட்டிஷார் இந்நாட்

டில் சட்டமியற்றலைப் பொறுத்தவரை 1773-முதல் 1833-வரை, அதிகாரத்தைப் பன்முகப்படுத்தும் கொள்கை (Decentralisation) 1833-முதல் 1861-வரை, (அதிகாரத்தை) மையப்படுத்தும் கொள்கையையும் (Centralisation) பின்பற்றினர். 1861-ம் ஆண்டுச் சட்டம், மீண்டும் அதிகாரத்தைப் பன்முகப்படுத்தும் கொள்கைக்கு வழி வகுத்தது. இதன்படி சென்னையிலும் பம்பாயிலும் சட்டமியற்றும் அதிகாரம் பெற்ற சபைகள் மீண்டும் அமைந்தன. மேலும் மற்ற மாகாணங்களிலும் சட்டக் கவுன்சில்கள் தோன்றின. வங்காளம் 1862-ம் ஆண்டிலும், வட மேற்கு மாகாணங்களும் அயோத்தியும் 1886-ம் ஆண்டிலும், பஞ்சாபு 1897-இலும் சட்ட சபைகளைப் பெற்றன. கவர்னர்-ஜெனரலின் நிர்வாக சபையிலும் சில மாறுதல்கள் ஏற்பட்டன. இச்சபையின் உறுப்பினரின் எண்ணிக்கை அதிகரித்தது. மத்திய சட்டக் கவுன்சில் என்று அதற்குப் பெயர் உண்டு. அதில் கவர்னர்-ஜெனரல் ஆறுக்குக் குறையாமலும் பன்னிரண்டுக்கு மேற்படாமலும் புதிய உறுப்பினர்களை அமர்த்தினர். அவர்களில் பாதிப் பேர் அரசியல் பணிகளில் இல்லாதவர்களாக இருக்கலாம். பிரிட்டிஷ் இந்தியா முழுவதுக்கும் சட்டமியற்றும் அதிகாரம் அச் சபைக்கு உண்டு. ஆனால் பொருளமைப்பு, சமயம், படை, அயல்நாட்டுத் தொடர்பு முதலிய செய்திகளில் சட்ட மியற்றுவதற்குக் கவர்னர்-ஜெனரலிடம் முன்னதாகவே அனுமதி பெற வேண்டும். மசோதாக்கள் ஒவ்வொன்றும் அவருடைய உடன்பாட்டையும் பிரிட்டிஷ் மன்னரின் ஒப்புதலையும் பெற்ற பிறகே சட்டமாகும். இனி, இந்திய உயர்நீதி மன்றச் சட்டப்படி (1861) பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய மூன்று மாகாணங்களிலும் மூன்று உயர்நீதி மன்றங்கள் அமைந்தன. அவைகளுக்கு சிவில், கிரிமினல் அதிகாரங்களுண்டு. ஒவ்வொன்றிலும் ஒரு தலைமை நீதிபதியும் பதினைந்துக்கு மேற்படாமல் நீதிபதிகளும் இருந்து வந்தனர். 1866-ல் அலகாபாத்தில் ஓர் உயர்நீதி மன்றம் ஏற்பட்டது.

சீர்திருத்தங்கள் : கானிங்கு, படைக் கலகத்தின் போது ஆங்கிலேயருக்கு உதவி அளித்த அனைவருக்கும் விருதுகளும் நன்கொடைகளும் உதவி ஊதியமும் வழங்கி அவர்களை மகிழ்வித்தார். ஐதராபாத்தில் நசீர் உத்-தௌலாவுக்குப் பிறகு அப்ஸல் உத்-தௌலா (1857–69) பட்டமேற்றார். 1853-ல் அரசியலார் நிஸாமிடமிருந்து இணைத்துக் கொண்ட மாவட்டங்களை (பேரார் நீங்கலாக)க் கானிங்கு 1860-ல் அவருக்குத் திரும்ப அளித்து விட்டார். இதனால் ஆனகுந்திஅரசர் நிஸாமின் ஆட்சிக்கு உட்பட்டவரானார்.

கானிங்கு அரசியல் அலுவல்களைப் பல இலாகாக்களாகப் பிரித்தார். நிர்வாக சபையின் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஒரு இலாக்காவோ ஒன்றுக்கு மேற்பட்ட இலாக்காக்களோ கிடைத்தன. அவரவருடைய இலாகாக்களைப் பொறுத்தவரை அவரவர்களே அரசாங்கத்தின் பெயரால் ஆணைகளைப் பிறப்பிக்கலாம். இவற்றினிடையே கருத்து வேறுபாடு ஏற்படும் காலங்களிலும் முக்கிய அரசியல் கொள்கைகளைத் தீர்மானஞ் செய்ய வேண்டிய காலங்களிலும், சபையின் உறுப்பினர்கள் யாவரும் ஒன்று கூடி ஆலோசித்தனர். கானிங்கு, சில பொருளாதாரச் சீர்திருத்தங்களையும் நிறைவேற்றினார். 1859-ம் ஆண்டு வங்காளக் குடிவாரச் சட்டம் குடியானவர்களுக்குப் பல நன்மைகளைச் செய்தது. அச் சட்டம் பிறகு வேறு சில மாகாணங்களிலும் நிறைவேறியது. அஸ்ஸாமில் தேயிலையையும் நீலகிரியில் காப்பிக் கொட்டையையும் மிகுதியாகப் பயிராக்குவதற்கு ஐரோப்பியர் ஆதரவு பெற்றனர். அவுரிப் பயிர்த்தொழிலை மேற்கொண்டிருந்த ஐரோப்பியரால் வங்காளக் குடியானவர்கள் பல இன்னல்களைப் பெற்றனர். கானிங்கு, இராணுவச் செலவைக் குறைப்பதற்கும் சிக்கனத்தைக் கையாளுவதற்கும் திட்டங்கள் வகுத்தார் ; ஏற்றுமதி வரிகளை நீக்கி இறக்குமதி வரிகளைக் குறைத்தார். 1837-ல் மெக்காலே தயாரித்த இந்தியத் தண்டனை விதித்தொகுப்பு சில மாறுதல்களுடன் 1860-ல் அமுலுக்கு வந்தது. 1861-ல்

கிரிமினல் (குற்ற இயல்) நடைமுறை விதித் தொகுதியும் 1859-ல் சிவில் நடைமுறை விதித் தொகுதியும் செயல் முறைக்கு வந்தன. சிப்பாய்க் கலகத்தை அடக்க அரசியலார் ஏறத்தாழ நான்குகோடி பவுன்களைச் செலவழித்ததால் அரசியலாரின் பொருளாதார நிலை தாழ்ந்திருந்தது. 1857-க்கும் 1861-க்கும் இடையே அரசாங்கத்தின் பற்றுக்குறைத் தொகை 36-கோடி ரூபாய்க்கு உயர்ந்திருந்தது. நிலைமையைச் சீர்திருத்துவதற்கு இந்திய அரசியலாருக்கு உதவிசெய்ய இங்கிலாந்திலிருந்து ஜேம்ஸ் வில்சன் என்பார் 1859-ல் கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்தார். அவருக்குப் பின் சாமுவெல் லேய்ங் என்ற பொருள்துறை வல்லுநர் இந்தியாவில் செயலாற்றினர். இவர்களுடைய நன் முயற்சிகளால் 1862ல் பற்றுக்குறை ஒழிந்தது. இராணுவச் செலவுகள் குறைந்தன. அரசியலார் சுங்கவரிகளைப் புதுப்பித்தனர். வருமானவரியையும் வேறுசில வரிகளையும் விதித்தனர். 1861-ல் ஆக்ரா, இராசபுதனம், பஞ்சாபு ஆகிய மாகாணங்களில் பஞ்சம் ஏற்பட்டது. அக்காலத்தில் மக்களின் துயரைக் களைவதற்கான ஏற்பாடுகளை அரசியலார் செய்தனர். பஞ்சத்தின் காரணத்தை அறிய விசாரணை நடைபெற்றது. அவ்விசாரணைக் குழுவினர் நிலையான நிலவரித்திட்ட மொன்றை இந்தியா முழுவதுக்கும் அமைக்க வேண்டுமென்று அறிவுரை கூறினர்.

கானிங்கின் இயல்பு : கானிங்கு, படைக் கலகத்தின் பொழுது சீற்றங்கொள்ளாமலும் வீரத்துடனும் வியத்தகு வகையில் நடந்துகொண்டார். ஆங்கிலேயரில் பலர் கலகக்காரர்கள்மீது பழிதீர்த்துக் கொள்ள விரும்பினர். ஆனல் கானிங்கு, கருணையுடனும் முறைப்படியும் நடந்துகொள்ள முடிவுசெய்தார். அதைக்கண்ட அவர்கள் "கருணையுள்ள கானிங்கு" என்று கவர்னர்-ஜெனரலை ஏளனம் செய்தனர். இவர் தமது கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றினர். ஓயாது உழைத்ததால் இவருடைய உடல் நலம் கெட்டுவிட்டது. அதனல் இவரது ஆயுட்காலமும்

குறைந்தது. கானிங்கு உயர்ந்த உள்ளத்தைப் படைத்திருந்தார். நன்கு சீர்தூக்கிப் பாராமல் எவ்வித முடிவுக்கும் அவர் வருவதில்லை. மனச்சான்றுக்கு விரோதமாகவும் நடுவுநிலை தவறியும் இவர் ஒழுகுவதில்லை. இறுதிவரையில் தமது தீர்மானத்தைத் கடைப்பிடிக்கும் திறமை இவருக்கு உண்டு. இவர் கொள்கையை விரும்பாத பலர் இவருக்கு எதிராகச் செயலாற்றினர். இவரைத் திரும்ப அழைக்கச்செய்யவும் முற்பட்டனர். அந்நிலையிலும் கானிங்கு பெருந்தன்மையுடன்தான் நடந்து கொண்டார்.* கானிங்குக்குத் தன்னலப் பேராசை கிடையாது. வெளிப்பகட்டை இவர் மனம் நாடவில்லை படைக்கலகத்தின் தொடக்கத்தில் இவர் சிலதவறுகளை இழைத்தபோதிலும், இறுதியில் அக்கலகத்தை அடக்கி வெற்றிபெற்றார். அதன் பிறகு அமைதியை நிலைநாட்ட இவர் செய்த தொண்டுகள் பாராட்டத்தக்கன. இவருடைய ஆட்சியின் தொடக்கத்தில் கல்கத்தா, பம்பாய், சென்னைப் பல்கலைக் கழகங்கள் தோன்றின. கானிங்கு, 1862-ல் இங்கிலாந்துக்குத் திரும்பினார். அதே ஆண்டில் அவருடைய வாழ்க்கையும் முடிவுற்றது.

---

* *20, பக். 153.*

பகுதி 2

எல்ஜின் (1862-3)

ஜேம்ஸ்புரூஸ் என்ற எல்ஜின் (எர்ல்) கோமான், 1811-ல் பிறந்தார்; 1842 முதல் 1846 வரை ஜெமெய்காவில் கவர்னராயிருந்தார். 1847 முதல் 1854 வரை கானடாவின் கவர்னர்-ஜெனரலாகப் பதவிவகித்தார். இவர் 1862-ல் அரசப்பிரநிதியாக இந்தியாவுக்கு வந்தார். இவர் இங்கே பணியாற்றியகாலம் 20 மாதங்களே ஆம். அக்காலத்தில் வாகாபிகள் என்ற முரட்டு ஆப்கானிய வகுப்பினர் வடமேற்குஎல்லேயில் தொந்தரவு செய்து வந்தனர். அவர்களே அடக்க எல்ஜின், படைகளே அனுப்பினுர். 1863-ல் தளபதி சேம்பர்லின் என்பாரை அப்பகைவர்கள் அம்பாலக் கணவாயில் (வடமேற்கு எல்லே மாகாணத்தில்) முறியடித்தனர். பிரிட்டிஷ் படையினர் திரும்பிவிடுவ தென்று முதலில் எண்ணினர். ஆனுல் அக்கருத்தைப் படைத்தலேவர் சர் ஹியூ ரோஸ் ஏற்றுக் கொள்ளவில்லே. அந்நிலேயில் அரசப்பிரதிநிதி பஞ்சாபிலேயே காலமானுர். எனினும் ஆங்கிலேயர், படையெடுப்பைக் கைவிடவில்லே. சென்னேக் கவர்னர் சர் வில்லியம் தெனிசன், பதிலி கவர்னர்-ஜெனரலாகப் பணியாற்றினுர். அவ்வாண்டின் (1863) இறுதியில் வாகாபியர் தோல்வியுற்றனர். எல்லேப்புறத்தில் தொந்தரவு ஏற்பட்ட காரணத்தால் பிரிட்டிஷ் அரசியலார் 1864ம் ஆண்டின் தொடக்கத்தில் சர் ஜான் லாரன்சை அரசப் பிரதிநிதியாக்கினர்.

பகுதி 3

லாரன்சு (1864—69)

லாரன்சு : வாழ்க்கையின் முற்பகுதி : ஜான் லாரன்சு 1811-ல் பிறந்தார்; 1830-ல் இந்தியாவுக்கு வந்தார். 1831 முதல் 1839 வரை கம்பெனியின்கீழ்ப் பணியாற்றி வந்தார்; 1840-ல் இங்கிலாந்துக்குச் சென்று, இரண்டு ஆண்டுகட்குப் பிறகு மீண்டும் இந்நாட்டுக்கு வந்தார். 1846 வரை இவர் தில்லியில் நீதிபதியாகப் பணியாற்றினார். அவ்வாண்டில் ஜலந்தர் (தோ ஆப்) இடையாறு பகுதியில் ஆணையாளராக அமர்ந்தார். பிறகு இவருக்குப் பஞ்சாபில் ஆணையாளர் பதவி கிடைத்தது. படைக் கலகத்தின்பொழுது இவர் அம் மாகாணத்தில் ஆற்றிய செயல்கள் பாராட்டத்தக்கன. இவர் அனுப்பிய படை தில்லியைக் கைப்பற்றியது. 1859-ல் லாரன்சு பஞ்சாபின் உதவி கவர்னரானார். தில்லியும், 1858 முதல் அவருடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. 1859-ல் இவர் இங்கிலாந்துக்குச் சென்றபொழுது, இவரை ஆங்கிலேயர் "இந்தியாவைக் காப்பாற்றியவர்" என்று புகழ்ந்தனர். இந்தியா அமைச்சரின் அலோசனைக்குழுவில் லாரன்சும் உறுப்பினரானார். 1864-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இவர் அரசப்பிரதிநிதியாகக் கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்தார்.

பூதானுடன் போர் : 1826-ம் ஆண்டிலிருந்து பிரிட்டிஷ் இந்தியாவுக்கும் பூதானுக்குமிடையே நெருங்கிய தொடர்பு நிலவியது. இந்தியாவின் கிழக்குப்புற எல்லைக்கு அண்மையில் இமயமலையைச் சார்ந்த நாடு பூதான். அது திபேத்துக்கு உட்பட்டிருந்தது. பூதானியருக்கும் ஆங்கிலேயருக்குமிடையே எல்லைத் தகராறுகள் ஏற்பட்டு வந்தன. பூதானியரின் தாக்குதல்களால் அஸ்ஸாமிலும் வங்காளத்திலுமிருந்த சில ஆங்கிலேயர்களுக்கு இடை

யூறுகள் நேர்ந்தன. அமைதியான முறையில் பேச்சு நடத்த ஆங்கிலேயர் ஆஷ்லி ஈடன் என்பவரைப் பூதானுக்கு அனுப்பினர். ஆனால் அவரைப் பூதானியர் இழிவு படுத்தினர்; மேலும் கூச் பீஹாருக்கு வடக்கில் உள்ள கணவாய்களைத் தங்களுக்குக் கொடுத்துவிடுமாறும் ஆங்கிலேயரைக் கட்டாயப்படுத்தினர். ஆதலால் லாரன்சு பூதான்மீது படையெடுத்தார். 1865-ம் ஆண்டின் தொடக்கத்தில் நடந்த முதல் ஆங்கிலப் படையெழுச்சி தோல்வியுற்றது. ஆனால் அவ்வாண்டின் இறுதியில் சர் ஹென்றி டூம்சு என்பார் பூதானியரை முறியடித்து அவர்களை உடன்படிக்கைக்கு இணங்கச்செய்தார். உடன்படிக்கைப்படி அவர்கள் ஆங்கிலேயருக்கு 180 மைல் நீளமும் 20 முதல் 30 மைல் அகலமும் உள்ள நிலப்பகுதியைக் கொடுத்து விட்டனர். அப்பகுதியில் இன்று நேர்த்தியான தேயிலைத் தோட்டங்கள் இருக்கின்றன. அக்காலந்தொடங்கி ஆங்கிலேயருக்கும் பூதானியருக்குமிடையே நிலையான நட்பு நிலைபெற்றது.

வடமேற்கு எல்லைப்புறக் கொள்கை: ருஷியா மத்திய ஆசியாவில் தனது ஆதிக்கத்தைப் பரப்ப முயன்று வந்தது. அதைத் தடுக்க லாரன்சுக்கு விருப்பமில்லை. மத்திய இந்தியாவில் ருஷியாவின் முயற்சிகளில் தலையிட ஆங்கிலேயருக்கு உரிமை கிடையாது என்பதே அவருடைய கோட்பாடாகும். அப்பேரரசுடன் எல்லைத் தொடர்பான ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டியது பிரிட்டிஷாரின் கடமை என்ற கருத்தும் அவருக்கு இருந்தது.

ஆப்கானித்தானத்தின் அரசர் தோஸ்து முகம்மது 1863-ல் இறந்தார். அவருக்குப் பதினாறு பிள்ளைகள் இருந்தனர். அவர்களுக்கிடையே பட்டத்துக்காகப் போட்டி ஏற்பட்டது. அந்த நிகழ்ச்சியில் லாரன்சு தலையிட மறுத்து விட்டார். மேலும் இவர், போட்டியில் வெற்றிபெறும் இளவரசரை ஆதரிக்கப்போவதாகவும் வெளிப்படையாக அறிவித்தார். முடிவில் ஷெர் அலி என்பார் போரில்

வெற்றி பெற்று ஆப்கானிய அமீர் ஆனுர் (1864). அரசப்பிரதிநிதி அவருக்குப் பரிசுகள் வழங்கினர். இந்தியாவின் பாதுகாப்புக்கு, ஆப்கானித்தானத்தை ஆங்கிலேயர் தம் வசப்படுத்தவேண்டியது இன்றியமையாததன்று என்பது லாரன்சின் கருத்தாகும். ருஷியப் படையெழுச்சியினின்று இந்தியாவைக் காப்பாற்றப் பின்வரும் சாதனங்கள் போதுமானவை என்பது லாரன்சின் கொள்கையாகும். அச்சாதனங்களாவன :— (1) சிறந்த இந்தியப்படை. (2) வலிமை வாய்ந்த பொருளமைப்பு. (3) இந்தியச் சிற்றரசர்களின் ஒத்துழைப்பு. (4) இந்திய மக்களின் உளமார்ந்த உதவி முதலியனவாம். மேலும் ஆப்கானியரைப் பகைத்துக்கொள்வதால் இந்தியாவின் காவலமைப்பு கேடுறும் என்பது லாரன்சின் கருத்தாகும். ஆங்கிலேயர் தமது எல்லையைக்கடந்து அயலாரை எதிர்ப்பது சிறப்புடையதன்று என்று அவர் எண்ணினுர். லாரன்சு, தமது கொள்கையை "இணையற்ற செயலின்மை "[1] எனக் குறித்துள்ளார். இவருடைய ஆப்கானியக் கொள்கையை மேயோவும் நார்த்புருக்கும் பின்பற்றினர். அதனுல் நன்மையே விளைந்தது. ஆனுல் பிறகு லிட்டன் இக் கொள்கையைக் கைவிட்டதால் தீமையே விளைந்தது. ஆகவே, மீண்டும் லாரன்சின் கொள்கையையே ரிப்பன் பின்பற்றலானுர்.

ஆட்சிமுறை : இருப்புப்பாதை, கால்வாய், பொதுப் பணிகள் முதலியவற்றைப் பொறுத்தவரை லாரன்சு, டல்ஹௌசியின் கொள்கையையே பின்பற்றி ஆக்கவேலையில் ஈடுபட்டார். ஆட்சிமுறை, அரசியாரின் பேரறிக்கையை ஒட்டியே அமைந்திருந்தது. லாரன்சின் காலத்தில் அமைதி நிலவியது ; குறிக்கத்தக்க மிகுதியான நிகழ்ச்சிகள் கிடையா. ஆனுல் பிற்காலத்தில் உருவாகிய சில செயல்களுக்கு இவருடைய காலத்தில் வித்தும் இடப்பெற்றது[2] . இவர் வேளாண்மையில் அக்கறைகொண்டு

1. - 71 - பக். 171.

2. 1, பக். 16.

உழவர்களை ஆதரித்தார். பஞ்சாபிலும் அயோத்தியிலும் 1868-ம் ஆண்டுக் குடிவாரச் சட்டங்களின் விளைவாக அம் மாகாணங்களின் குடியானவர்கள் பலநன்மைகளைப் பெற்றனர். இருந்தாலும் அச்சட்டங்களுக்கு வன்மை யான எதிர்ப்பு இருந்தது. அரசப்பிரதிநிதி தமது உறுதி யினாலும் ஆற்றலினாலும் எதிர்ப்பினை அடக்கிவிட்டார். 1866–7-ல் ஒரிஸ்ஸாவில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. 1865-ல் மழையில்லாமற் போனதே அதற்குக் காரண மாகும். பஞ்சத்துடன் வெள்ளமும் மக்களைத் துன்புறுத்தி யது. ஏறத்தாழ 20 லட்சம் மக்கள் உயிர்விட்டனர். அவ் வமயம் வங்காள அரசியலார் தக்க முறையில் மக்களுக்கு உதவி செய்யவில்லை. இதற்காக லாரன்சு பிற்காலத்தில் மிகவும் வருந்தினர். அப்பஞ்சம் அரசியலாருக்கு ஒரு படிப்பினையைக் கற்பித்தது. அதன்பிறகு லாரன்சு பஞ் சத்தைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளை ஆராய்ந்து செய லாற்றத் தொடங்கினர். அதன் பொருட்டே, லாரன்சு, சாலைகள், கால்வாய்கள் முதலிய பொதுநன்மைக்கான வேலைகளில் மிகுதியாக ஈடுபட்டார். வறுமைக்காலங் களில் மக்களுக்கு இலவசமாக உதவிபுரிய வேண்டு மென்பதை அரசாங்கக் கொள்கையாகச் செய்த பெருமை லாரன்சுக்கு உரியது. 1868–69-ல் ஏற்பட்ட இரண்டாம் பஞ்சம், பண்டல்கண்டிலும் இராசபுதனத்திலும் பரவியது. அரசியலார் அவ்வமயம் மக்களுக்குச் செய்த உதவி போற்றத்தக்கது. லாரன்சின் ஆட்சிக்காலத்தில் சர் ரிச்சர்டு டெம்பிள் என்பார் மத்திய மாகாணங்களில் புதிய நிலவரித் திட்டத்தை அமைத்தார். லாரன்சின் பதவிக் காலத்தில் செலவுகள் மிகுதிப்பட்டதால் அரசியலாருக்கு $2\frac{1}{2}$ கோடி ரூபாய் பற்றுக்குறை ஏற்பட்டது. பொதுப் பணிகளுக்காகக் கடன்வாங்கும் கொள்கையை இவர் ஆதரித்தார்.

லாரன்சின் இயல்பும் பணிகளும் : லாரன்சு எளிய நிலையிலிருந்து, தமது உழைப்பால் மிக உயர்ந்தநிலையை எய்தினர். இவருடைய உடன்பிறந்தாரான ஹென்றி

யிடமிருந்த சில சிறந்த பண்புகள் இவருக்கு இல்லை. எனினும் இவர் போற்றற்குரிய ஒரு பெரியார் என்பதில் ஐயமில்லை. ஜான் லாரன்சு, சிவில் பணித்துறையில் சிறந்த பணிகளாற்றினர். பெருந்தன்மையும் மக்களுக்கு நலஞ்செய்யும் ஆர்வமும் இவருக்கு உண்டு. குடியான வரிடம் இவர் மிக்க அன்பு பூண்டொழுகினர். பகட்டார வாரத்தை இவர் நாடவில்லை. தமக்குக் கீழ்ப்பட்டவரின் கருத்தை ஊன்றிக் கருதிப்பாராமல் அவர்களை அடக்கி ஆளும் இயல்பு இவரிடமிருந்தது. ஒன்றுபட்ட முயற்சி யின் (Team work) சிறப்பை இவர் உணரவில்லை. தக்க முறையில் மேற்பார்வை செய்து, செயல்களை நிறைவேற்றிக்கொள்ளும் ஆற்றலும் இவரிடம் கிடையாது. அரசப்பிரதிநிதி என்ற முறையில் லாரன்சின் திறமை போற்றத்தக்கதாக இல்லை எனினும் இவர், படைக் கலகத்துக்கு முன்னரும் பின்னரும் பஞ்சாபில் அருஞ்செயல்களாற்றினர். இவருடைய, வடமேற்கு எல்லைப் புறக்கொள்கை, சிறப்பு வாய்ந்தது என்பதில் ஐயமில்லை. லாரன்சு, 1869-ம் ஆண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்துக்குப் புறப்பட்டார். அதே ஆண்டில் இவருக் குப் "பாரன்" என்ற பட்டமும் கிடைத்தது. இவர் 1870 முதல் 1873 வரை லண்டன் பள்ளிக்கூடக் கழகத்தின் தலைவராயிருந்தார். அந்நாட்டு அறநிலையங்களிலும் சமயப் பணிகளிலும் லாரன்சுக்கு மிக்க அக்கறை இருந் தது. இவர் லிட்டன் பிரபுவின் ஆப்கானியக் கொள்கையை இங்கிலாந்தின் மேல்சபையில் கண்டித்துப் பேசினர். இவர் அவ்வமயம் கூறியவாறே, அக்கொள்கையினல் பின்னர் இடையூறுகள் விளைந்தன. 1879-ல் ஜான் லாரன்சு காலமானர். இவர் தமது வாழ்க்கை முழுவதிலும் எளிய பழக்க வழக்கங்களை மேற்கொண்டு, தமது கடமை கள் அனைத்தையும் இறைவனுக்குச் செய்யும் திருப்பணி களாக எண்ணி மனச்சான்றுக்குத் தடையின்றி ஒழுகி வந்தார்.

பகுதி 4

மேயோ (1869-72)

மேயோ : ரிச்சர்டு செளத்வெல் பூர்க் என்ற மேயோ (எர்ல்) கோமான், 1822-ல் டப்ளின் நகரில் பிறந்தார்; 1847-ல் பார்லிமெண்டு உறுப்பினரானார். பின்னர் அயர் லாந்தின் தலைமைச் செயலாளராகவும் பணியாற்றினார். பழமைவாதக் கட்சியைச் சேர்ந்த டிஸ்ரேலி இவரை இந்தியாவின் அரசப்பிரதிநிதியாக்கினார். மேயோ, 1849-ல் கல்கத்தா வந்துசேர்ந்தார்.

வடமேற்கு எல்லைப்புறக் கொள்கை : லாரன்சின் ஆப்கானியக் கொள்கையையே மேயோ பின்பற்றினார். அமீர் ஷெர் அலி, ஆங்கிலேயருடன், நிலைத்த தெளிவான உடன்படிக்கையைச் செய்துகொள்ள விரும்பினார். மேயோ 1869-ல் அம்பாலாவில் ஷெர் அலியைக் கண்டு அவரைச் சிறப்பாகப் பெருமைப்படுத்தினார். ஆனால் ஆப்கானித் தானம் முழுவதுக்கும் ஷெர் அலி மன்னராவதற்குப் பிரிட்டிஷார் உதவிபுரிய வேண்டுமென்று அந்த அமீர் கேட்டுக்கொண்டார். மேயோ, அதை ஏற்கவில்லை. ஆயினும் அமீரை மகிழ்விப்பதற்காக அரசப் பிரதிநிதி சில வாக்குறுதிகளைக் கொடுத்தார். இந்நிகழ்ச்சி மேயோவின் அரசதந்திர ஆற்றலைக் காட்டுகிறது. 1869-ல் கல்கத்தாவி லிருந்து ருஷியாவுக்கு ஒரு தூதுக்குழுச் சென்றது. அதன்விளைவாக ருஷியர் ஆக்ஸஸ் ஆற்றுக்குத் தெற்கில் உள்ள ஆப்கானித்தானத்தில் படையெடுப்பதில்லை என்று உறுதிமொழி கூறினர். இவ்வாறு மேயோ, ஷெர் அலியின் நட்பைப் பாதுகாத்துக்கொண்டதுடன் வட மேற்கு எல்லைப்புறத்தில் போரையும் தடுத்துப் புகழ் பெற்றார்.

ஆட்சி முறை : மேயோ, பொருள்துறை வல்லுநர் களின் உதவிகொண்டு நிதிநிலைமையில் ஏற்பட்டிருந்த

பற்றுக்குறையை நீக்கியதுடன், ஏறத்தாழ ஆறுகோடி ரூபாயைச் சேர்த்துவைத்தார். சிலமாகாணங்களில் உப்பு வரியை உயர்த்தினர்; மூன்று சதவீத வருமான வரியை யும் விதித்தார். செலவுகளைக் குறைத்தார். பொருள் அமைப்புத் திட்டத்தில் அதிகாரத்தைப் பன்முகப் படுத்தும் கொள்கையைப் பின்பற்றினர். இவரது ஆட்சிக்காலம்வரை மாகாண அதிகாரிகள் தமது வரவு செலவுத் திட்டங்களை இந்திய அரசியலாருக்கு அனுப்பவேண்டியிருந்தது. மாகாணங்களில் செலவிடப்படாமல் மீதியிருந்த தொகை கள் மத்திய அரசாங்கத்தாரைச் சேர்ந்துவிடும். இதனால் மாகாண அதிகாரிகள் வீண் செலவுகளைச் செய்யத் தலைப் பட்டனர். பிரிட்டிஷ் இந்தியா முழுவதிலும் செலவுகளைக் கட்டுப்படுத்துவதென்பது மத்திய அரசியலாருக்கு எளி தாக இல்லை. தொடர்ச்சியாகக் கிளர்ச்சி செய்தால் தாம் கேட்பதில் பெருவாரியான தொகைகளைப் பெறக் கூடும் என்ற நம்பிக்கையில் மாகாண அரசாங்கத்தார் மிகுதியான தொகைகளுக்குத் திட்டம்போட்டு வந்தனர். இக் கேடுகளை ஒழிக்க, 1870-ல் மேயோ சில சீர்திருத்தங்களைச் செய் தார்; சில வரிகளையும் சில செலவுக் கூறுகளையும் மாகாண அரசியலாரின் தனிக் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வந் தார். அவற்றில் மிச்சம் பிடித்த தொகைகள் அவர்களுக்கே உரியனவாயின. இது, சிக்கனத்துக்குக் காரணமாயிற்று. மேலும் ஆண்டு தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை மத்திய அரசியலார், மாகாணங்களுக்கு மானியமாக வழங் கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. அம்மானியத் தொகையை மாகாணங்கள் தம் விருப்பம் போல் பயன்படுத்திக் கொள் ளலாம். ஆனல் 5 ஆண்டுகட்கு ஒரு முறை மேலே கூறிய திட்டத்தை அரசியலார் பரிசீலனை செய்து இன்றியமையா மாறுதல்களைப் புகுத்தும் கடமையையும் பெற்றனர். 1877-ல் லிட்டன், அத் திட்டத்தை மேலும் சீர்திருத்தினர். மேயோ, வேளாண்மைக்கும் வாணிகத்துக்கு மென ஒரு துறைக்களம் ஒன்றை அமைத்தார்; இந்தியாவில் புள்ளி விவரங்களையும் தயாரித்தார்; இராச்சிய இருப்புப் பாதை களையும் அமைத்தார்; துறைக்களங்களில் வீண் செலவு

களைக் குறைத்துத் திறமையை நிலைநாட்ட முயன்றார். இவர், பொதுப்பணித் துறைக்களத்தையும் அயல்நாட்டு அலுவல்களையும் தாமே மேற்பார்வை செய்து வந்தார். தமது ஆலோசனையாளர் கூறும் கருத்துக்களைச் செம்மையாக ஆராய்ந்து அவற்றின் நற்பண்புகளை ஏற்றுக்கொள்ள மேயோ தவறுவதில்லை. இவருடைய ஆட்சி முறையின் வெற்றிக்கு அது ஒரு முக்கிய காரணமாகும்.*

மேயோ, இந்தியச் சிற்றரசர்களுடன் அன்புகொண்டு ஒழுகினார். கத்தியவார் முதலிய சில இடங்களில் சீர்கேடுகளை ஒழிக்க உதவினார். ஆஜ்மீரில் மேயோக் கல்லூரி ஒன்று ஏற்பட்டது. சிற்றரசர்களும் பெருஞ் செல்வரின் குல வழியினரும் கல்வியறிவைப் பெற வேண்டுமென்ற அக்கறை அரசப் பிரதிநிதிக்கு இருந்தது. இவருடைய நற்பண்புகளும், ஊக்கமும், ஆற்றலும், உழைப்பும் மக்களை இவர்பால் அன்பு கொள்ளச் செய்தன. இவருடைய வெளித்துறை உள்துறைக் கொள்கைகள் வெற்றியடைந்தன என்றே கூற வேண்டும். சிறைச்சாலைச் சீர்திருத்தத்தில் மேயோவின் கருத்து மிகுதியாக ஊன்றியிருந்தது. அந்தமான் தீவுகளைச் சிறந்த முறையில் ஆளவும் இவர் முற்பட்டார். 1869-ல் ஷெர் அலி என்ற ஆப்கானியன் ஒருவன் தனது பகைவனைக் கொன்ற குற்றத்துக்காக அந்தமானுக்கு அனுப்பப்பட்டிருந்தான். அவன் அதனால் சீற்றங்கொண்டு, மேயோ அங்கே, பார்வையிடுவதற்காகச் சென்ற பொழுது அவரைக் கொன்று விட்டான். பிறகு இவனுக்குத் தூக்குத் தண்டனை கிடைத்தது. 1872-ம் ஆண்டு மே மாதத்தில் நார்த்புருக்கு அரசப் பிரதிநிதியாக வரும் வரையில் சென்னை மாகாணக் கவர்னர் அப் பதவியை வகித்து வந்தார்.

---

* *44*, பக். *96*.

பகுதி 5

நார்த்புரூக்கு (1872 - 6)

தாமஸ் ஜார்ஜ் பாரிங் என்ற நார்த்புரூக்குப் பிரபு 1826-ல் பிறந்தார். இவர், இங்கிலாந்தின் கப்பற் படைத் தலைவராகவும் துணை அமைச்சராகவும் பணியாற்றிய பின்னர் 1872-ல் இந்தியாவின் அரசப் பிரதிநிதியானார்.

ஆப்கானித்தானம் : லாரன்சும் மேயோவும் வகுத்த ஆப்கானியக் கொள்கையையே, நார்த்புரூக்கும் தொடர்ந்து பின்பற்றினார். ஆனால் இவருக்கும் ஷெர் அலிக்கும் நல்லுறவு நீடிக்கவில்லை. அவ்வமயம் ருஷியர்கள் துருக்கித்தானத்திலும் தமது ஆட்சியை ஏற்படுத்தியிருந்தனர். ருஷியர் தம் எல்லையைக் கடந்து பரவி வருவதனைக் கண்டு அஞ்சிய ஷெர் அலி ஆங்கிலேயருடன் மீண்டும் உடன்படிக்கையை நாடினார். நார்த்புரூக்குக்கும் அவ்வாறு கூட்டுறவு அமைத்துக்கொள்வதில் விருப்பமிருந்தது. ஆனால் லண்டனிலிருந்த அதிகாரிகள் அம்முடிவை ஏற்கவில்லை. ஆகவே, ஷெர் அலி ருஷியருடன் நட்பு உறவுகொள்ள முற்பட்டார். அவ்வமயம் இங்கிலாந்தில் டிஸ்ரேலி தலைமை அமைச்சரானவுடன் வெளித்துறைக் கொள்கையில் புதியமுறையைக் கையாண்டார். ருஷியர்களால் இந்தியாவுக்கு இடையூறு நேரக்கூடுமென்றே ஆங்கில அரசியலார் கருதினர். ஆதலால் அவர்கள் ஆப்கானித்தானத்துக்கும் ருஷியாவுக்குமிடையே தொடர்பு ஏற்படுவதைத் தடுக்க முயன்றனர்; அம்முயற்சி வெற்றிபெறாததால் இந்தியாவின் வடமேற்கு எல்லைப்புறத்தில் பிரிட்டிஷ் படைகளை மிகுதியாக்கினர்; ஷெர்அலியின் இராச்சியத்தில் பிரிட்டிஷ் பிரதிநிதிகளை அனுப்புவதற்கான முயற்சியை நார்த்புரூக்கு மேற்கொள்ள வேண்டுமென்பதும் அவர்கள் விருப்பமாகும். ஆனால் இப்புதிய கொள்கையை அரசப்

பிரதிநிதி வெறுத்தார். இதன் விளைவாக இவர் பதவியி னின்றும் விலகிவிட்டார்.

பரோடா: II-ம் மல்ஹார்ராவ் கெயிக்வார் (1870-4) ஆளத்தொடங்கியதிலிருந்தே பரோடாவில் சீர்கேடுகள் பெருகின. அவர் இழைத்த கொடுமைகள் பலப்பல. மக்கள் மிகத் துயருற்றனர். அதை அறிந்த பிரிட்டிஷ் அரசியலார், கெயிக்வாரை, ஒன்றரை ஆண்டுக்காலத்துக் குள் தமது ஆட்சி முறையைச் சீர்திருத்த வேண்டுமென்று எச்சரித்தனர். ஆனால் கெயிக்வார் அதையும் பொருட் படுத்தவில்லை. மேலும் அவர், பிரிட்டிஷ் பிரதிநிதியை நஞ்சிட்டுக் கொல்லவும் முயன்றார் என்றும் அறிவிக்கப் பெற்றது. 1875-ல் கொலை செய்ய முயன்ற குற்றத்திற் காகக் கெயிக்வாரை இந்திய நீதிபதிகளும் ஆங்கிலேய நீதி பதிகளும் கொண்ட ஒரு தனி நீதிமன்றம் விசாரித்தது. ஆங்கிலேய நீதிபதிகள் மூவரும் கெயிக்வார் குற்றவாளியே எனத் தீர்ப்பு கூறினர். ஆனால் இந்திய நீதிபதிகள் மூவரும் குற்றம் நிரூபிக்கப்படவில்லை என வழக்கைத் தள்ளிவிட்டனர். இந்நிலையில் இங்கிலாந்து அரசாங்கம் கொடுங்கோல், நெறிதவறிய நடத்தை முதலியவைகளைக் காரணமாகக் காட்டிக் கெயிக்வாரை அரியணையிலிருந்து நீக்கிவிடுமாறு அரசப்பிரதிநிதிக்கு ஆணைபிறப்பித்தது. அதன்படி கெயிக்வார் நீக்கப்பட்டார்; அவருடைய உடன் பிறந்தவரின் மனைவி எடுத்த தத்துப்பிள்ளையே III-வது சயாஜிராவ் என்ற பெயருடன் அரியணையில் அமர்த்தப் பட்டார். அத்துடன் சர் டி. மாதவராவ் பரோடாவின் புதிய திவானானார். சயாஜிராவ் அப்பொழுது இளைஞராயிருந்த படியால் மன்னர் பேராட்சிக்குழு ஒன்றும் நிறுவப்பட்டது. பரோடா விவகாரத்தில் ஆங்கிலேய அரசாங்கம் இவ்வாறு நடந்துகொண்ட முறையைக் காணுமிடத்து, டல்ஹௌசி நாட்டுச் சிற்றரசர்களிடம் கடைப்பிடித்து வந்த பழைய கொள்கை கைவிடப்பட்டது தெளிவாகும்; புதிய கொள்கை யில் கொடுங்கோல் நடைபெறும் சுதேச நாடுகளின் உள்விவகாரங்களில் தயங்காது தலையிடுவதும் அடங்கும் என்பதும் தெளிவாகும்.

ஆட்சி முறை: மேயோவின் சீர்திருத்தங்களாலும் சூயஸ் கால்வாய்ப் போக்குவரத்து தொடங்கியதாலும் இந்தியாவின் நிதிநிலைமை சீருற்றது. ஆங்கிலேயரின் கட்டற்ற வாணிகக் கொள்கை இந்திய அரசாங்கத்தை ஓரளவு வயப்படுத்தியது. 1864-ல் இறக்குமதிவரி பத்து சதவீதத்திலிருந்து ஏழரை சதவீதத்திற்குக் குறைந்தது. 1875-ல் இது மீண்டும் ஐந்து சதவீதமாகக் குறைந்தது. மேலும் பெரும்பாலான ஏற்றுமதி வரிகளை நார்த்புரூக்கு நீக்கிவிட்டார்; அதனால் வரி மூன்று சதவீதமாயிற்று. மான்செஸ்டரிலிருந்து இறக்குமதியாகும் துணிகள்மீது விதிக்கப்பட்ட வரி ஐந்து சதவீதமே; அதனையும் நீக்குமாறு இங்கிலாந்தில் அப்பொழுதிருந்த கன்செர்வடிவ் அமைச்சவையானது அரசப்பிரதிநிதியிடம் வற்புறுத்தியது. ஆனால் அவர் அதை உறுதியாக மறுத்தார். அவ்வாறு செய்தால் இந்தியாவின் நிதிநிலைமைக்கே கேடாம் என்று விளக்கினார்; மான்செஸ்டரின் தொழில் நலத்திற்காக இந்தியாவின் நலம் புறக்கணிக்கப்படுகின்றது என்ற எண்ணம் இந்தியரிடையே ஏற்படும் என்றும், அத்தகைய எண்ணம் ஆங்கிலேய ஆட்சிக்கு ஏற்றது அல்லவென்றும் எடுத்துக்காட்டினார். இந்தியாஅமைச்சரை மகிழ்விப்பதற்காகத் தமது கோட்பாடுகளை விட்டுவிட முடியாதென்று உறுதியாக நின்றார். உப்புவரி குறைய வேண்டும் என்றே ஏழைமக்கள் விரும்பினர்; நார்த்புரூக்கு அதனைக் குறைத்து அவர்களுக்கு உதவவில்லை. ஆனால் வருமான வரியை நீக்கிச் செல்வர்களுக்கே உதவினார். இருந்தபொழுதிலும், ஆங்கில அரசாங்கத்திற்கு எப்பொழுதும் விசுவாசமாக இந்தியர் இருக்கவேண்டுமானால் வரிகளை உயர்த்தக்கூடாது என்ற உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார் நார்த்புரூக்கு. 1873-4-ல் பீகாரில் ஏற்பட்ட பஞ்சத் துயரத்தை நீக்க அரசாங்கம் அகன்ற மனப்பான்மையுடன் ஈடுகொடுத்தது. இரண்டு ஜில்லாக்களில் தான் பஞ்சத்தின் கொடுமை மிகுதி. என்றாலும் $6\frac{1}{2}$ கோடி ரூபாய் வரை அரசாங்கம் பஞ்ச நிவாரணத்திற்காகச் செலவிட்டு ஏராளமான மக்களைக் காப்பாற்றியது.

பாராளுமன்றச் சட்டங்களும் அரசகுடும்பத்தினரின் இந்திய சுற்றுப் பயணங்களும்: 1874-ம் ஆண்டில் நிறைவேறிய இந்திய கவுன்சில்ஸ் சட்டப்படி, பொது மராமத்துத் துறை அலுவல்களைக் கவனிக்க, அரசப்பிரதிநிதியின் நிர்வாகக் குழுவில் ஆரும் உறுப்பினர் புதிதாக நியமிக்கப்பட்டார். 1869-ம் ஆண்டிலேயே இந்தியா அமைச்சரின் நிர்வாகக் குழுவினரின் காலம் பத்து ஆண்டுகள்தான் என்று வரையறுக்கப்பட்டது. என்றுலும் 1876-இல் பழைய வரையறுக்கப்படாத முறை ஓரளவு பின்பற்றப்பட்டது. 1869-ல் எடின்பர்க் கோமகனும் 1875–76-ல் இளவரசர் ஏழாம் எட்வர்டும் இந்தியாவில் சுற்றுப் பயணங்கள் செய்தனர்.

நார்த்புரூக்கின் இயல்பும் பிற்கால வாழ்வும்: அவரது மனப்பாங்கையும் அனுபவத்தையும் நோக்கினல் நார்த்புரூக்கு முன்னெச்சரிக்கையான ஆட்சியாளராகத் தக்கவர் எனலாம். ஆனல் அவரிடத்தில் சீர்திருத்த வெறியார்வம் இருந்ததில்லை; சிப்பாய்க் கலகத்திற்குப் பிறகு இந்திய அரசாங்கம் அளவிற்கு மீறிய சீர்திருத்தப் போக்கில் சென்றதாகவே அவர் கருதினர். மேயோவின் தனிச் சிறப்புக் குணங்கள் நார்த்புரூக்கிடமில்லை. இருப்பினும் நார்த்புரூக்கு சிறந்த நிதியறிஞராக விளங்கினர்; தமது கோட்பாடுகளின்படியே ஆட்சி செலுத்தினர்; அவரது ஆப்கன் கொள்கையும் நிதிக் கொள்கையும் இதனை நன்கு விளக்குகின்றன. நார்த்புரூக்கு தனிப்பட்ட காரணங்களுக்காகப் பதவி துறந்தாரென்பது பெயரளவே ஆம்; உண்மையில் அவருக்கும் இந்தியா அமைச்சருக்கும் ஆப்கன் விவகாரத்திலும் நிதியமைப்பு விஷயங்களிலும் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளே காரணமாகும். 1876-ம் ஆண்டு ஏப்ரல்மாதம் இந்தியாவை விட்டுச் சென்றபின் நார்த்புரூக்கு முதலாம் நார்த்புரூக் கோமான் (Earl) பட்டம் பெற்றார். அதன்பின் 1880-லிருந்து 1885-வரை இங்கிலாந்தின் கடற்படை அமைச்சராக இருந்து 1904-ல் காலமானர்.

பகுதி 6

லிட்டன் (1876 - 80)

லிட்டன் பிரபு : வாழ்க்கையின் முற்பகுதி : எட்வர்ட் இராபர்ட் 1834-ம் ஆண்டு நவம்பர் மாதம் பிறந்தார். இவருடைய தந்தை, புல்வெர் லிட்டன், ஒரு நாவலாசிரியர். ஹாரோவில் கல்வி பயின்றபின் லிட்டன் இங்கிலாந்து அரசாங்கத்தின் அயல்நாட்டுத் துறையில் 1852-இலிருந்து பணியாற்றினர். அவ்வமயம் ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் சுற்றுப்பயணங்கள் செய்து மிக்க அனுபவமடைந்தார். 1873-ல் தமது தந்தை இறந்த பின் லிட்டன் பாரன் (Baron) பட்ட மடைந்தார். முதலில் சென்னைக் கவர்னர் பதவியை வழங்கியபொழுது உடல்நல மின்மையைக் காரணமாகக் காட்டி லிட்டன் அதை ஏற்க மறுத்து விட்டார். ஆனல், பின்னர் டிஸ்ரேலி அரசப்பிரதிநிதி பதவியை அளித்தபோது லிட்டன் அதை ஒப்புக் கொண்டார். இதற்குக் காரணம் மத்திய ஆசியாவில் ருஷியர் தங்களது செல்வாக்கைப் பரப்பி வரும் சமயத்தில் லிட்டனைப் போன்ற திறமையும் வெளிநாட்டுத் துறையில் அனுபவமும் மிக்க ஒருவர் இந்திய அரசாங்கத்தின் தலைவராக இருக்க வேண்டுமென்று டிஸ்ரேலி உணர்ந்ததுதான். 1876-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் லிட்டன் கல்கத்தாவிற்கு வந்து சேர்ந்தார். 1877-ல் உதகமண்டலத்தைச் சுற்றிப் பார்த்த லிட்டன் பின்வருமாறு கூறினர் : "இதைப் பார்த்த பின் இது ஒரு விண்ணுலகென உறுதிப்படுத்துகிறேன்." *

ஆப்கானித்தானம் : ஆப்கானிய விவகாரங்களில் ஏகாதிபத்தியக் கொள்கையைக் கடைப்பிடிக்குமாறு லிட்டனுக்கு இங்கிலாந்து அரசாங்கம் கட்டளையிட்டிருந்தது. ஆனல் அக் கொள்கையின் விபரங்களைத் தீர்மானிக்க

---

* *13*, பக். 27.

லிட்டன் முழு உரிமை பெற்றிருந்தார். மேலும் ஆப்கானிஸ்தானத்தில் பிரிட்டிஷ் ரெஸிடெண்சி ஒன்றை நிறுவுவதற்கு ஷெர் அலி இணங்குவாராளுல், அவருடைய பழைய ஏற்பாடுகளை ஒத்துக்கொள்ள லிட்டனுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. விக்டோரியா அரசி, பேரரசிப் பட்டம் சூட்டிக் கொண்டதின் முக்கியத்தை ஆப்கானிய மன்னரிடம் காட்ட வேண்டுமென்று இந்திய அரசாங்கம் கருதியது. ஆனால் பிரிட்டிஷ் தூதுவர் எவரையும் ஏற்றுக் கொள்ளத் தமக்கு விருப்பமில்லை யென்று 1876-ல் அமீர் தெரிவித்து விட்டார். இதன் காரணமாக அரசப் பிரதிநிதி ஷெர் அலிக்கு ஒரு எச்சரிக்கை விடுத்தார். ஆனால் அமீருக்குப் பிரிட்டிஷ் தூதின் நோக்கம் தெரிவிக்கப்படவில்லை என்ற காரணத்தால் அரசப்பிரதிநிதியின் எச்சரிக்கையை அவருடைய நிர்வாகக் குழு உறுப்பினர் மூவர் ஒத்துக்கொள்ள மறுத்து விட்டனர். இதன்பின் அக்டோபர் மாதத்தில் லிட்டன் ஆப்கானியப் பிரதிநிதியிடம் சிம்லாவில் பேசிய விதம் ஆப்கானியருக்கு ஆத்திரமூட்டக் கூடியதாக விருந்ததேயன்றி நட்பைப் பெறக்கூடியதாக வில்லை. காலட் நாட்டுத் (Khan of Kalat) தலைவனிடம் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி பிரிட்டிஷ் படையொன்று நவம்பர் மாதத்தில் குவெட்டா நகரைக் கைக்கொண்டது. இது அமீருக்கு ஒரு அச்சுறுத்தலாகும். இந் நிகழ்ச்சிக்குப் பின் 1877-ம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து மார்ச்சு வரை பெஷாவரில் பிரிட்டிஷ் பிரதிநிதிகளும் ஆப்கன் பிரதிநிதிகளும் அடங்கிய ஒரு மகாநாடு நடந்தது. ஆனால் ஆப்கானியர் பிரிட்டிஷ் ரெஸிடெண்சி ஏற்படுத்துவதில் சிறிதும் விட்டுக்கொடுக்காததால் மகாநாடு பயனற்றுப் போய்விட்டது. பிரிட்டிஷ் ரெஸிடெண்டு ஒருவருக்குக் கட்டுப்பட்டு ஆளும் அமீரை ஆப்கானியர் விரும்பார்; அத்தகைய மன்னரை அரியணையிலிருக்கவும் விடமாட்டார்கள் என்பதை லிட்டன் புரிந்து கொள்ளவில்லை. மேலும் அமீர் தமது பிரதிநிதி ஒருவரை இந்தியாவிற்கு அனுப்பிவைத்தார். இச்செயல் ஆப்கானிஸ்தானத்தில் பிரிட்டிஷ் ரெஸிடெண்சி ஒன்றை நிறுவும் ஏற்பாட்டிற்கு

இணங்கியதாகவே ஆகும் என்று லிட்டன் வாதாடினர். இதிலிருந்து ஆங்கிலேயரின் உண்மையான நோக்கம்பற்றி ஆப்கானியருக்கு மிகுந்த ஐயமெழுந்தது. இஃது இவ்வாறிருக்க ஐரோப்பிய அரசியலில் 1878-ல் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் இங்கிலாந்திற்கும் ருஷியாவிற்கும் பகையை வளர்த்தன. அதன் காரணமாக அப்பொழுது இங்கிலாந்தின் முதல் அமைச்சராக இருந்த டிஸ்ரேலி, மால்டா (Malta)த் தீவிற்கு இந்தியச் சிப்பாய்கள் அடங்கிய படையொன்றை அனுப்பிவைக்குமாறு கட்டளையிட்டார். அதன்படியே இந்திய அரசாங்கமும் செய்தது. இதன்பின் ருஷியா ஆப்கானிஸ்தானத்திற்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பியது. ஆனல் ஆப்கானிய மன்னர் இதை விரும்பாததோடன்றித் தமது எதிர்ப்பையும் தெரிவித்தார். ஆயினும் தமது போக்கின்பயனுகத் தாம் அரியணையிலிருந்து நீக்கப்படலாம் என்றும் தமது எதிரி அப்துர் ரஹ்மான் அமீராகக் கூடுமென்றும் ஷெர் அலி அச்சங்கொண்டார். ருஷியருடன் முடிவாக ஒரு உடன்படிக்கையையும் செய்துகொண்டார். இந்நிலையில் லிட்டன் ருஷியாவுக்கெதிராகக் காபூலுக்கு ஒரு தூதுக்குழுவை அனுப்ப முடிவுசெய்தார். தமது முடிவை அமீருக்கும் தெரிவித்தார். ஆனல் அமீர் அதற்குப் பதில் எதுவும் தெரிவிக்கவில்லை. அவ்வாண்டு ஆகஸ்டு மாதம் அமீரின் செல்லப் பிள்ளையான அப்துல்லா ஜான் மரணமடைந்தான். அடுத்தமாதம் பிரிட்டிஷ் தூதுக்குழு பெஷாவரைவிட்டுக் காபூலுக்குப் புறப்பட்டது. இதற்குள் ருஷிய தூதுக்குழு காபூலைவிட்டுப் புறப்பட்டுவிட்டது. இருப்பினும் ஆப்கானிய அதிகாரி ஒருவர் வழிமறித்ததால் பிரிட்டிஷ்குழு பெஷாவருக்கே திரும்பிவிட்டது. லிட்டன் இந்நிகழ்ச்சியைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. பிரிட்டிஷ் தூதுக்குழு ஆப்கானிஸ் தானத்திலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டதாக லிட்டன் கருதினர். எனவே மேற்கொண்டு அரசியல் தந்திர முயற்சிகள் செய்வதில் பயனில்லை என எண்ணி ஆப்கானிஸ்தானத்துடன் போரிட லிட்டன் முடிவுசெய்தார். லிட்டனின் ஆப்கானியக்

கொள்கையை இங்கிலாந்தில் லாரன்ஸ் பிரபு கண்டித்தார். ஆப்கானிஸ்தானத்தின் வெளிநாட்டுத் தொடர்பினால் ஏற்பட்ட மாறுதல்களுக்கு ருஷியாவே காரணம்; எனவே அதனிடம் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்; அதை விட்டுவிட்டு அமீரை அச்சுறுத்துதல் நியாயமில்லை; மேலும் சுதந்திர மன்னரான அமீருக்கு யாரை வேண்டுமானாலும் தமது நட்பினராகக் கொள்ள உரிமை உண்டு—இவ்வாறு லாரன்ஸ், லிட்டன் போக்கைக் கண்டித்தார். எப்படியும் ருஷியத் தூதுக்குழு ஆப்கானிஸ்தானத்தை விட்டுச் சென்றபின் இந்திய அரசாங்கம் நேர்மைக்குப் புறம்பான தனது போக்கை விட்டுவிட்டு ஷெர் அலியிடம் நட்பை வளர்த்துக்கொண்டிருக்க வேண்டும். ஆனால் இந்திய அரசாங்கம் அவ்வாறு நடக்கத் தவறிவிட்டது. இதைப்பற்றிக் கிளாட்ஸ்டன் இங்கிலாந்தின் பாராளுமன்றத்தில் பேசினார்; முதல் ஆப்கன் போரின் துன்ப இயல் நாடகத்தின் ஒத்திகை பார்க்க விருப்பதாகவும் இரண்டாம் ஆப்கன்போர் முதல் ஆப்கன் போரின் மறு பதிப்பாகவே இருக்குமென்பதில் தமக்குச் சிறிதுகூட ஐயமில்லையெனவும் கூறினார்.

இரண்டாவது ஆப்கானியப் போர் (1878—80): 1878-ம் ஆண்டு நவம்பர் மாதம் போர்நிலை அறிக்கை வெளியாயது. அதைப்பின்பற்றி மூன்று ஆங்கிலேயப் படைகள் ஆப்கானிஸ்தானத்தின்மேல் படையெடுத்தன. காபூலுக்கும் காந்தகாருக்கும் இடையேயுள்ள பகுதியில் ஆப்கானியர் எதிப்பு பேரளவில் இல்லை. ஆதலின் அது விரைவில் ஆங்கிலேயர் வசமாயிற்று. ருஷியாவினிடமிருந்து உதவி எதுவும் கிடைக்காததால் ஷெர் அலி தம் நாட்டைவிட்டு ஓடிவிட்டார். அதன்பிறகு அவர் பல நாள் உயிருடனில்லை; 1879-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் காலமானார். ஷெர் அலி ஆப்கானிஸ்தானத்தை நன்கு ஆண்டவர். ஆயினும் இரு பேரரசுகளின் மோதலுக்கு அவர் பலியானார். ஷெர் அலி இறந்தபின் அவருடைய மகன் யாகுப்கான் பட்டமேற்றான். அதே ஆண்டு மே

மாதம் அவன் ஆங்கிலேயரின் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு அவர்களுடன் கண்டமக் (ஆப்கானிஸ்தானத்தில் ஜலாலாபாத் அருகே) என்ற விடத்தில் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டான். அதன்படி அமீர் அயல் நாட்டு விவகாரங்களில் ஆங்கிலேயர் சொற்படி நடக்க வேண்டும்; பிரிட்டிஷ் ரெஸிடெண்டு ஒருவர் காபூலில் இருப்பதற்கு அனுமதிக்க வேண்டும்; மேலும் தனது நாட்டின் சில மாவட்டங்களை ஆங்கிலேயர்களுக்குக் கொடுத்துவிட வேண்டும். இதற்குப் பதிலாக ஆங்கிலேயர் ஆப்கானிஸ்தானத்தை வெளியார் படையெடாதபடி காத்தல் வேண்டும். தவிர அமீருக்கு ஆண்டிற்கு ஆறு லட்சரூபாய் உதவித்தொகையைக் கொடுக்க வேண்டும். இங்கிலாந்தின் முதல் அமைச்சர் இந்தியா பூகோள முறையான எல்லையைப் பெற்றதென மட்டின்றி மகிழ்ந்தார். ஆனால் மின்னுவதெல்லாம் பொன்னல்ல என்பதுபோல உண்மை அவ்வாறில்லை. 1879-ம் ஆண்டு ஜூலைமாதம் பிரிட்டிஷ் ரெஸிடெண்டு சர் லூயி கெவக்னரி காபூலை அடைந்தார். ஆனால் அடுத்த செப்டம்பர்மாதத் தொடக்கத்தில் அவரையும் அவரை அடுத்த ஆங்கிலேயர்களையும் ஆப்கானியர் கொன்றனர். மீண்டும் ஆங்கிலேயப் படை ஒன்று ஆப்கானிஸ்தானத்திற்குள் விரைந்தது. ஜெனரல் ராபர்ட்ஸ் கலகக்கரர்களைக் காபூல் அருகே அக்டோபரில் முறியடித்தார். பின்னர், காபூலைக் கைப்பற்றிக்கொண்டு பழிகாரர்கள் மீது வஞ்சம் தீர்த்துக்கொண்டார். யாகுப்கான் சிறைப்பட்டு இந்தியாவிற்கு அனுப்பப்பட்டார். ஆனால் ஆங்கிலேயர் காபூலை வைத்திருப்பதில் இக்கட்டுகள் மிகுந்துவந்தன. கடைசியாகக் காபூலுக்கும் காந்தகாருக்கும் இடையே உள்ள பகுதியைக் கைப்பற்றினர். அதன் பின்னும் ஆங்கிலேயர் சங்கடமான நிலையிலேயே இருந்தனர். ஆப்கானிஸ்தானம் முழுவதையும் கைப்பற்றும் ஏற்பாடு ஏதும் இல்லை. ஆனால் காபூலில் ஓர் அரசாங்கத்தை ஏற்படுத்தாமல் ஆப்கானிஸ்தானத்தை விட்டு வெளியேறல் ஆங்கிலேயரின் பெருமைக்கே இழுக்காகும். இந்நிலையில் லிட்டன் காந்தகாரைத் தனியாகப்

பிரித்துப் பழைய அமீரின் உறவினனை ஷெர்அலிகான் என்பானுக்குக் கொடுத்தார் (ஏப்ரல் 1880). காபூல் பகுதியை அப்துர் ரஹ்மானுக்குக் கொடுப்பதாக முடிவு செய்தார். ஆனால், இத்தகைய முடிவினை நிறைவேற்று தற்கு முன்னரே இங்கிலாந்தில் பேகன்ஸ்பீல்டு அமைச் சரவை கவிழ்ந்தது. கிளாட்ஸ்டன் முதலமைச்சர் பதவி ஏற்றார். அதன் பயனாக லிட்டன் தம் பதவியைத் துறந்து 1880-ம் ஆண்டு மே மாதம் இங்கிலாந்திற்குப் பயணமானார்.

ஆட்சிமுறை

பஞ்சக்கொள்கை : மழைக் குறைவால் 1876 லிருந்து 1878 வரை இந்தியாவின் பலபகுதிகளிலும் ஒரு கொடிய பஞ்சம் நிலவியது. அதனால் புஞ்சைப் பயிர்களும்கூட விளையவில்லை. பஞ்சத்துடன் காய்ச்சல், பேதி முதலிய கொடிய நோய்களும் சேர்ந்து மக்களை வாட்டின. இவற்றால், சென்னை, மைசூர், ஐதராபாத், பம்பாய் முதலிய இடங்களும், மத்திய இந்தியா, பஞ்சாபு முதலியவற்றில் சிலபகுதிகளும் துன்பத்துக்கு உள்ளாயின. இதன் காரண மாக ஐம்பது லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் உயிர் துறந் தனர். இந்தவகையில் இந்தியாவில் ஏற்பட்டபஞ்சங்களில் இதுவே மிகக்கொடியதாகும். இப்பஞ்சத்தால் அரசாங்கம் இரண்டு கோடி ரூபாய்க்கு மேலான நிலவரியை இழந்தது. பஞ்ச நிவாரணக் கொள்கைகளும் முறைகளும் தெளிவா காத நிலையிலிருந்தன ; அதனால் நாட்டின் பல்வேறு பகுதி களிலும் பலவாறான நிவாரண முறைகள் பின்பற்றப் பட்டன. சென்னை மாகாணம் பின்பற்றிய முறை வீண் செலவு முறையாம், பயனற்ற முறையுமாம் என்று கண்டிக்கப்பட்டது. அதனால் அரசப்பிரதிநிதி இதனை ஆராயச் சர் ரிச்சர்டு டெம்பிள் என்பவரைச் சென்னை மாகா ணத்திற்கு அனுப்பிவைத்தார். பின்னர்த் தாமே நிலைமை யைக் கண்டறிய இங்கு வந்தார். மொத்தத்தில் பதினொரு கோடி ரூபாயைப் பஞ்ச நிவாரணத்திற்கு அரசாங்கம் செலவிட்டிருந்தும் இப்பஞ்சத்தில் ஏராளமான மக்கள்

உயிர்துறந்தனர். எனவே மிக்க பயனுள்ள பஞ்சநிவாரண முறைகளைப்பற்றி அரசாங்கம் ஆராயத் தொடங்கியது. அரசப்பிரதிநிதியும் இதுபற்றித் தம்முடைய கருத்துக் களைத் தெரிவித்தார். 1878-ல் முதல் பஞ்ச நிவாரண ஆய்வுக்குழு (First Famine Commission) ஒன்று நிறுவப் பட்டது. 1880-ல் அது தனது பரிவுரைகளைத் தெரிவித்தது. அவைகளை அரசாங்கம் பொதுவாக ஏற்றுக்கொண்டது. அதன்படி உடல்வன்மையுடைய ஏழைகளுக்கு வேலையும் கூலியும் கொடுக்கவேண்டும்; அவ்வாறு வேலை செய்ய முடியாதவர்களுக்கு மட்டும் உதவித்தொகை அளிக்க வேண்டும் என்று முடிவாகியது. மேலும் பஞ்சத்திற்கு இலக்காகக் கூடிய பிரதேசங்களில் புகைவண்டிப் பாதை அமைத்தல், கால்வாய் வெட்டுதல், பாதுகாப்பு வேலைகள் செய்தல், பஞ்சநிவாரணப் பணிகள் முதலியவைகளுக்காக ஆண்டுதோறும் வரவு செலவுத் திட்டத்தில் ஒன்றரைக் கோடி ரூபாய் ஒதுக்கப்படுதல் வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. 1883-ல் பஞ்சநிவாரணச் சட்டத்தொகுதி செயலுக்கு வந்தது. இவ்விதம் மிக்க பயனுள்ள முறை யில் பஞ்ச நிவாரண ஏற்பாடுகள் உருவாயின. சுருங்கக் கூறினல் இன்றைய இந்திய அரசாங்கத்தின் பஞ்ச நிவாரணக் கொள்கையைத் தொடங்கிவைத்தது லிட்டன் பிரபுவே எனலாம்.

பொருளமைப்பு: உப்பு வரியை விதிப்பதில் இருந்த ஏற்றத்தாழ்வுகள் நீங்கின. பொருளமைச்சராக வந்த சர் ஜான் ஸ்டராச்சி கட்டுப்பாடற்ற வாணிகக் கொள்கை யையே பின்பற்றினர். அதன்படி இறக்குமதி வரிகள் பல நீங்கின. 1877-ல் பொருளமைப்புத் திட்டத்தில் அதிகாரத் தைப் பன்முகப்படுத்தும் கொள்கையே வெற்றிபெற்றது. 1879-ல் லங்காஷயரிலிருந்து இறக்குமதியான முரட்டுத் துணிகள்மீது இருந்த ஐந்து சதவீத இறக்குமதி வரி நீங்கியது. இங்கிலாந்து நாட்டுப் பொதுமக்கள் சபையார். (House of Commons) இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே நிறைவேற்றிய தீர்மானத்தை ஒட்டியே இவ்வரி நீக்கப் பட்டது. ஆயினும் அரசப்பிரதிநிதியின் நிர்வாகக்குழு

இதற்கு இணங்கவில்லை. இருப்பினும் அரசப்பிரதிநிதி தமது சிறப்பதிகாரத்தைக் கொண்டு நிர்வாகக்குழு உறுப்பினர் பெரும்பாலோரின் கருத்தையும் புறக்கணித்து இந்த முடிவுக்கு வந்தார். இந்தியர்களுக்கெனச் சட்டப்படியான சிவில் பணித்துறை (Statutory Civil Service) இதே ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இது தவிரப் பழைய ஒப்பந்த சிவில் பணித்துறையிலும் (Covenanted Civil Service) லண்டனில் நடைபெறும் போட்டித் தேர்வில் வெற்றிபெற்ற இந்தியர் சேரலாம். ஆனால் புதிதாக ஏற்பட்ட சிவில் பணித்துறை சிறிது காலத்திற்குப் பிறகு ஒழிக்கப்பட்டது.

செய்தித்தாள் சட்டம்: நாட்டுமொழிச் செய்தித்தாள்கள் மக்களிடையே துரைத்தனத்தின்மேற் பகைமையை வளர்த்து வந்தன என்று அரசியலார் கருதினர். இதனைத் தடுக்க நாட்டுமொழிச் செய்தித்தாள் சட்டம் (The Vernacular press Act) 1878-ல் வந்தது. அரசப்பிரதிநிதியின் நிர்வாகக்குழு உறுப்பினர் மூவர் இதை எதிர்த்தனர். இருந்த பொழுதிலும் இச்சட்டம் நான்கு ஆண்டுகள் வரை அமுலில் இருந்தது. இச்சமயத்தில்தான் சில நாட்டுமொழிச் செய்தித் தாள்கள் ஆங்கிலச் செய்தித்தாள்களாக வெளிவந்தன. அம்ரித பஜார் பத்திரிகா (The Amrita Bazaar Patrika) 1868 வரை வங்காளி மொழியில் வெளிவந்தது. ஆனால் அந்த ஆண்டிலிருந்து ஆங்கிலச் செய்தித்தாளாக வெளிவரத் தொடங்கியது. அதேபோல பல ஆண்டுகளாக வார வெளியீடாக வந்த ஹிந்துப் (The Hindu) பத்திரிகையும் 1889-லிருந்து ஆங்கில நாள் செய்தித்தாளாக வெளிவரலாயிற்று.

விக்டோரியா பேரரசி: 1876-ம் ஆண்டு அரசபட்டங்களின் சட்டப்படி (Royal Titles Act) விக்டோரியா அரசி இந்தியப் பேரரசி ஆனார். 1877-ல் ஏராளமான பொருட்செலவில் தில்லியில் நடந்த தர்பார் ஒன்றில் அரசப்பிரதிநிதி இதனை வெளியிட்டார். அச்சமயத்தில் கொடிய பஞ்சம் ஒன்றால் மக்கள் பெரிதும் வருந்தியது குறிப்பிடத்தக்க

தாகும். அதே ஆண்டில் இந்தியப் பேரரசு அணிவகிப்பு 'The Order of the Indian Empire' ஒன்றும் நிறுவப் பட்டது.

லிட்டனின் இயல்பும் தொண்டுகளும்: லிட்டன் அனுபவமிக்க அரசியல் தூதர்; சிறந்த அறிவும் திறமை யும் பெற்றவர்; மேலும் தருக்க முறையாக ஆராயக் கூடிய சிந்தனையாளர்; தங்குதடையின்றி விரைந்து பேசும் பேச்சாளர்; தெளிவுமிக்க இலக்கிய எழுத்தாளர்; தமக்கெனக் குறிப்பிடத் தகுந்ததொரு இலக்கிய நடை யைப் படைத்துக்கொண்டவர். அதேசமயத்தில் அளவிற்கு மீறிய வெளிப்பகட்டில் பற்றுக்கொண்டவர்; கட்டுக் கடங்காத கற்பனையாளர். அவருடைய சிந்தனையிலிருந்து பயனுள்ள கருத்துக்கள் சில தோன்றின. அவற்றில் சில வற்றை அவருக்குப்பின் வந்தோர் பயனுடன் பின் பற்றினர். அப்துர் ரஹ்மானை ஆப்கானிய நாட்டு அமீராகத் தேர்ந்தெடுத்தது அவர்தான். இந்திய அரசாங்கத்தின் நேரான ஆட்சிக்குள்ளடங்கிய வட மேற்கு எல்லைப்புற மாகாணம் ஒன்றை நிறுவ வேண்டு மென்றவரும் அவரே. தங்க நாணயமுறை இந்தியா விற்கு ஏற்றதென்பதை உணர்ந்தவரும் அவரே. மேலும் ஆங்கிலேயப் பெருமக்களுக்கு அளிக்கப்படுவதைப் போன்ற பட்டங்கள் இந்தியர்களுக்கு அளித்தல்வேண்டும் என்றும், அரசப்பிரதிநிதிக்கு ஆலோசனைகூற இந்தியச் சிற்றரசர்களைக்கொண்ட பிரிவி கவுன்சில் ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் கருதினர். இப்படிப் பல வகை களில் லிட்டன் சிறந்தவராக விளங்கியபோதிலும் அவரு டைய இந்திய ஆட்சி ஓரளவிற்குத்தான் வெற்றியடைந் தது. நிர்வாகத்துறையில் சில பிரிவுகளில் லிட்டன் சிறந்த பணியாற்றினர். எடுத்துக்காட்டாக, அவரது பஞ்ச நிவாரணக் கொள்கையைக் கூறலாம். அதை அவருக்குப் பின் வந்தோர் யாவருமே பின்பற்றினர். ஆனல் ஆப்கா னிய விவகாரத்தில் அவர் இழைத்த தவறுகள் அவர் ஒரு சிறந்த ஆட்சியாளர் என்ற பெயருக்கே இழுக்கைத்

தேடின எனலாம். இவ்வாறு உறுதியாகக் கூறுவதற்கு ஏற்ற சான்றுகள் மேலும் மேலும் கிடைத்துக்கொண்டே வருகின்றன. தவிர, அவர் காலத்தில் ஏற்பட்ட பஞ்சத்தால் ஏராளமான மக்கள் மடிந்தனர்; அளவிற்கு மீறிய மக்கள் சொல்லொணுத் துயருற்றனர். அதனுல் மிக்க பயனுள்ள பஞ்ச நிவாரணக் கொள்கையைப் பின்பற்றத் தொடங்கியபொழுதிலும் பஞ்சத்தின் கொடுமையை மறக்கவியலாது. மற்றும் நாட்டுமொழிச் செய்தித்தாள்களுக்கு எதிராக அவர் நிறைவேற்றிய சட்டத்தைப் பாராட்டுவதற்கில்லை. இவற்றில் எல்லாம் அனுபவமிக்க தமது நிர்வாகக்குழு உறுப்பினர் கூற்றைப் புறக்கணித்தது அவருடைய பெருங்குறையே ஆம். அவருடைய கொள்கை குறைபாடற்றது என்று கூறுவார் முடிபினை ஏற்றுக்கொள்ள முடியாது. அவர் இழைத்த தவறுகள் புறக்கணிக்க வியலாதவை. 1880-ல் கோமான் (Earl) பட்டம் பெற்ற லிட்டன் 1891-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பாரிஸ் நகரில் காலமானுர்.

பகுதி 7

ரிப்பன் (1880 - 84)

ரிப்பன் பிரபு: வாழ்க்கையின் முற்பகுதி: ஜார்ஜ் பிரடெரிக் சாமுவெல் ராபின்சன் 1827-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பிறந்தவர்; 1859-ல் தமது தந்தை இறந்ததும் எர்ல் (Earl) பட்ட மடைந்தார்; 1852-லிருந்து பல ஆண்டுகள் லிபரல் (Liberal) கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர். ரிப்பன் அரசப்பிரதிநிதி ஆகும் முன் இந்தியா உதவி அமைச்சர் (1861), இந்தியா அமைச்சர் (1866) முதலிய பல பதவிகளில் அமர்ந்திருந்தவர். 1871-ல் ரிப்பன் மார்க்கிஸ் (Marquis) பட்டம் பெற்ருர்; 1874-ல் கத்தோலிக்கச் சமயப் பிரிவில் சேர்ந்தார். கத்தோலிக்கரான இவரை அரசப்பிரதிநிதி யாக்கிய பொழுது இங்கிலாந்தில் பலர் கலங்கிக் குறை கூறலாயினர். ஆயினும், இங்கிலாந்து அரசாங்கம் அதைப் பொருட்படுத்தவில்லை. 1880-ம் ஆண்டு ஜூன் மாதம் ரிப்பன் அரசப் பிரதிநிதிப் பதவியை ஏற்றுக் கொண்டார். மிக விரைவில் தமது பதவிக்குரிய அதிகாரத்தை உணர்ந்தார். அதைப்பற்றி அவரே "அரசப் பிரதிநிதியின் அதிகாரம் மிகவும் அதிகமானது; நான் எதிர் பார்த்ததைவிட மிகுதியாகவுள்ளது. அதற்கு ஏற்றவர் என்று எவரையும் கூறுதற்கில்லை" என்று கூறியுள்ளார்.* ரிப்பன் லிபரல் கட்சியைச் சேர்ந்த மிக முற்போக்கான குடியரசுக் கொள்கையினர். சுய ஆட்சியில் நம்பிக்கை கொண்டவர்; சுய ஆட்சியில் இந்தியர் தேர்ச்சியடைவதற்காகத் துரைத்தனத்தின் ஆட்சித் திறமையைக்கூட ஓரளவிற்குத் தியாகம் செய்யவும் முன் வந்தார். தமது பதவிக்காலத்தில் இந்தியரிடையே மிக்க செல்வாக்குடன் திகழ்ந்தார்; ஆயினும் இந்தியாவில் இருந்த ஆங்கிலேயர்கள் அவரது

---

* 74, பக். 85.

ஆட்சி முறையை முழுதும் போற்றவில்லை. சிலவற்றைக் கடுமையாக எதிர்த்தார்கள்; ஓரிடத்தில் அத்தகைய எதிர்ப்பு அவரை அவமதிக்கும் அளவிற்கும் சென்றது. பதவி ஏற்றதும் ரிப்பன் ஆற்றிய முதல்செயல் ஆப்கானிய விவகாரத்தில் லிட்டன் பின்பற்றிய கொள்கையை மாற்றியதுதான்.

ஆப்கானிஸ்தானம்: 1880ம் ஆண்டு ஜுலை மாதம் அப்துர் ரஹ்மானை (பி. 1830) காபூல் அமீராக ரிப்பன் ஒப்புக்கொண்டார். ஆப்கானிஸ்தானத்தில் பிரிட்டிஷ் ரெஸிடெண்சி ஏற்படுத்தும் முயற்சியையும் கைவிட்டார். ஆனால் ஆங்கிலேயர் கைப்பற்றிய சில ஜில்லாக்கள் அவர்கள் வசமே இருந்தன. அமீர் நாட்டை வெளியார் படையெடாதபடி காக்க ஆங்கிலேயர் உதவிபுரிய வேண்டும். அமீர் ஆங்கிலேயரைத் தவிர வேறு எந்த வெளியாரிடமும் எத்தகைய அரசியல் தொடர்பும் கொள்ளக்கூடாது. இதுவே புதிய ஏற்பாடு. ஹீரட் பகுதி ஷெர் அலியின் மகனை அயூப்கானிடமிருந்தது. காந்தகார் பகுதி ஷெர் அலிகானிடமிருந்தது. அந்த ஜுலை மாதத்திலேயே காந்தகாரைப் பிடிப்பதற்காக அயூப்கான் மெய்வாண் (காந்தகார் அருகே) என்னுமிடத்தில், ஜெனரல் பரோஸ் தலைமையிலிருந்த ஆங்கிலப் படையைக் கடுமையாகத் தாக்கித் தோற்கடித்தான். ஆனால், அடுத்த மாதத்தில் ஜெனரல் ராபர்ட்ஸ் அயூப்கானைத் தோற்கடித்துக் காந்தகாரைக் கைப்பற்றிக் கொண்டார். 1881-ல் ஆங்கிலேயர் காந்தகாரை அப்துர் ரஹ்மானுக்கே கொடுத்துவிட்டனர். இந்த ஏற்பாடு ஆங்கிலேயருக்கும் அப்துர்ரஹ்மானுக்கும் இருந்த தொடர்பை மிகவும் வலுப்படுத்தியது. ஆயினும் இங்கிலாந்துநாட்டுப் பிரபுக்கள் சபையில் லிட்டன் போன்ற ஏகாதிபத்திய வாதிகள் இதைக் கடுமையாகக் கண்டித்தனர். காந்தகார் மீது ஆங்கிலேயருக்கு எவ்வித உரிமையும் கிடையாதென்றால் இந்தியாவில் மட்டிலும் என்ன உரிமையுண்டு என்று அவர்கள் வாதாடினர். நிற்க, அயூப்கான் அப்துர் ரஹ்மானுக்குத் தொடர்ந்து

தொந்தரவளித்து வந்தான். 1881-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் அயூப்கான் ஆங்கிலேயரிடம் பெருந்தோல்வியுற்றுப் பாரசீக நாட்டைத் தஞ்ச மடைந்தான். இதன் விளைவாக அப்துர் ரஹ்மான் ஆப்கானிஸ்தானம் முழுவதற்கும் அமீ ரானுர். 1883-ல் அமீருக்குத் தந்துவந்த உதவித் தொகை 12 இலட்சமாக வரையறுக்கப் பெற்றது.

மைசூர் : பெண்டிங்கு பிரபு காலத்தில் ஆங்கிலேயர் மைசூரின் ஆட்சிப்பொறுப்பு முழுவதையும் ஏற்றுக் கொண்டதைப் பார்த்தோம். அதைத் திருப்பிப் பெறுவ தற்காக உடையார் குலத்தோர் ஹார்டிஞ்சுப் பிரபு காலத் திலும் டல்ஹௌசி பிரபு காலத்திலும் மிக மிக முயன்ற னர். ஆனுல் முயற்சி பயனளிக்கவில்லே. பிரிட்டிஷ் ஆணேயாளர்களின் ஆட்சியில் குறிப்பாக, சர் மார்க் குபன் காலத்தில் (1834-61) மைசூர் பெரிதும் முன்னேற்ற மடைந்தது. 1867-ல் III-ம் கிருஷ்ணராஜாவின் தளரா முயற்சியால், பிரிட்டிஷ் அரசாங்கம் மைசூரின் ஆட்சிப் பொறுப்பைப் பழைய அரசகுல வழியினருக்கே திருப்பிக் கொடுத்துவிட முடிவு செய்தது. இதற்குப் பெரிதும் காரணமாக இருந்தவர்கள் அப்பொழுதைய இந்திய அமைச்சரும், சர் ஜான் லாரன்சும் ஆவர். ஆனுல் III-ம் கிருஷ்ணராஜா அடுத்த ஆண்டிலே (1868) இறந்து விட்டதால் அந்த முடிவு செயல்வடிவாக உறுதிபெறக் காலந் தாழ்த்தது. அவருடைய தத்துப் பிள்ளேயான சாம ராஜேந்திர உடையார் ஆட்சிமுறையில் நன்கு பயிற்சி பெற்று 1881-ல் மைசூரின் ஆட்சிப் பொறுப்பை அடைந் தார். அதே ஆண்டில் சீரங்கப்பட்டணத்தையும் ஆங்கி லேயர் மைசூருக்குத் திருப்பிக் கொடுத்தனர். இதன்பின் 1913-ல் பிரிட்டிஷ் அரசாங்கம் மற்றைய இந்தியச் சிற்ற ரசர்களிடம் செய்து கொண்டதைப் போன்றதோர் உடன் படிக்கையை மைசூர் அரசரிடமும் செய்து கொண்டது. இவ்வாறு, மைசூர் ஆங்கிலேயரின்கீழ், ஒரு சிற்றரசாக விளங்கியது.

ஆட்சிமுறை

பொருளமைப்பு: ரிப்பன் காலத்தில் அரசாங்கத்தின் வரவுசெலவுத் திட்டத்தில் நிகர மிச்சம் மிகுதியாகவே இருந்தது. அதைக் கொண்டு அரசாங்கம் கட்டுப்பாடற்ற வாணிகக் கொள்கையை மும்முரமாகப் பின்பற்றியது. 1882-ல் கிட்டத்தட்ட எல்லா இறக்குமதி வரிகளும் ஒழிந்தன. மேலும் எல்லா மாகாணங்களிலும் உப்பு வரி குறைந்தது. பிரிட்டிஷ் இந்தியா முழுவதும் நிலையான நிலவரி ஏற்பாட்டினைச் செயல்முறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று 1862-ல் செய்த முடிவினை 1883-ல் கைவிட்டனர். விலைவாசியில் ஏற்றம் இருந்தாலொழிய நிலவரியை மிகுதிப்படுத்தக் கூடாதென்று ரிப்பன் ஏற்பாடு செய்ய விரும்பினுர்; இந்திய அமைச்சரோ அதனை ஒப்புக் கொள்ளவில்லை.

குடிக் கணக்கெடுப்பு: மேயோ பிரபு அரசப் பிரதிநிதியாக இருந்தபொழுது 1872-ல் ஒரு குடிக்கணக்கு எடுத்தார்கள். ஆனால் அது முடிவுபெருத குடிக்கணக்கு. அதன்படி இந்தியாவின்மொத்த மக்கள் தொகை 20·6 கோடி, 1881-ல் முதல் முறையாக எடுத்த கணக்கெடுப்பின்படி மக்கள்தொகை 25 கோடி ஆகும்.

செய்தித்தாள்கள், கல்வி, தொழிலாளர் நலச் சட்டங்கள்: லிட்டன் பிரபு இயற்றிய நாட்டுமொழிச் செய்தித்தாள் சட்டத்தை ரிப்பன் நீக்கிவிட்டார். இதனால் இந்தியர்களிடம் ரிப்பனுக்கிருந்த செல்வாக்கு மேலும் வளர்ந்தது. இந்தியர்களுடைய கல்விநிலையை ஆராய்ந்து முன்னேற்றத்திற்குரிய வழிவகைகளைக் கண்டு கூற W. W. ஹண்டர் தலைமையின்கீழ் ஒரு கல்விக்குழு ஏற்பட்டது. ஆரம்பக் கல்வி புறக்கணிக்கப் பட்டிருந்ததை அரசாங்கத்திற்கு அது நன்கு உணர்த்தியதுடன் முனிசிபாலிட்டிகள், ஜில்லா போர்டுகள் முதலியவற்றின் கண்காணிப்பில் ஆரம்பக் கல்வி இருக்கவேண்டுமெனப் பரிவுரை வழங்கியது. ஆரம்பக் கல்விக்கு ஊக்கமளிப்

பதும் அதன் செலவிற்கான பொறுப்பு முழுவதையும் ஏற்றுக்கொள்வதும் அரசாங்கத்தின் கடமையென அக்குழு வற்புறுத்தியது. உயர்நிலைப்பள்ளிப் படிப்பினைப் பொறுத்தவரை தனிப்பட்டோர் பள்ளிகளுக்கு உதவித்தொகையை அரசாங்கம் அளிக்கும் கொள்கையை வற்புறுத்தியது. மேலும் ஒவ்வொரு ஜில்லாவிலும் அரசாங்கம் ஒரு மாதிரிப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தவேண்டுமென்றும் அக்குழு எடுத்துக்கூறியது. 1881-ல் முதன் முதலாகத் தொழிற்சாலைச் சட்டம் (Factory Act) ஒன்று நிறைவேறியது. அதன்படி ஏழுவயதிற் குட்பட்டவர்களை எந்தத் தொழிற்சாலையிலும் வேலைக்கு வைத்துக்கொள்ளக் கூடாது; தவிர, ஏழுவயதிற்கும் பன்னிரண்டு வயதிற்கு முட்பட்டவர்களிடம் ஒரு நாளைக்கு ஒன்பதுமணி நேரத்துக்குமேல் வேலைவாங்கக்கூடாது. வங்காளம், அயோத்தி, பஞ்சாபு முதலிய மாகாணங்களில் குடியானவர் சட்டங்கள் (Tenancy Acts) இயற்ற ரிப்பன் பெரிதும் காரணமாக இருந்தார்.

தல சுயஆட்சி: 1850 வரை தல சுய ஆட்சி மாகாணத் தலைநகர்களில் மட்டுமே நடைபெற்று வந்தது. மேயோவின் பன்முகப் பொருளமைப்புத் திட்டத்தால் அது வளர்ச்சியடைந்தது. ஆயினும் இன்றுள்ள தலசுய ஆட்சிமுறைக்கு அடிகோலியவர் ரிப்பன்தான். அவர் காலத்தில் நகராண்மைக் கழகங்கள் உரிமை பல பெற்றன. மேலும் அவற்றின் தலைவர்கள் கூடியமட்டும் அதிகாரிகள் அல்லாதவர்களாக இருக்கவேண்டும் என்பது அவர் கொள்கை. இங்கிலாந்தில் இருந்ததைப் போன்று மாவட்டக் கழகங்களும் (ஜில்லா போர்டுகளும்) வட்டார ஆட்சிக் கழங்களும் (தாலூக்கா போர்டுகளும்) அமைய வேண்டும் என்றும், அவற்றிலும் அதிகாரிகள் அல்லாதவர் மிகுதியாகவிருத்தல் வேண்டும் என்றும், தேர்தல் முதலியவற்றைப் பின்பற்ற வேண்டுமென்றும் வற்புறுத்தினர். சுகாதாரம், கழிவுநீர் அகற்றல், குடிதண்ணீர் அளித்தல் ஆரம்பக் கல்வி முதலான

மக்களின் பொது வாழ்நலங்களைப் பற்றிய பொறுப்பு முழுவதும் இவ் வட்டார ஆட்சிக் கழகங்களிடமே விடப்பட்டது. இவற்றின் பொருளமைப்பு நிலையையும் ஆராய்ந்தனர். மாவட்ட ஆட்சிக்கழங்களே தங்கள் எல்லைக்குட்பட்ட சாலைகளை அமைத்தல், அவற்றை நல்ல முறையில் வைத்திருத்தல், சுகாதாரத்தைக் காத்தல் கல்வியைப் பரப்புதல், பஞ்சநிவாரணப் பணி ஆற்றல் முதலியவற்றிற்குப் பொறுப்பாயின. ஆனல், இத்தலத்தாபனங்கள்மீது அரசாங்கத்தின் கட்டுப்பாடு இருந்தது. சில செய்திகளில் அரசாங்கத்தின் அனுமதியின்றி இவைகள் எதுவும் செய்யமுடியாது. இவைகள் தங்கள் பணிகளைச் சரிவர நிறைவேற்ருவிடில் அரசாங்கம் தலையிட்டு அப்போதைக்கு இவற்றை மூடிவைக்கவும், இவைகளின் பணிகளை வேறு அதிகாரிகள் மூலம் ஆற்றிக் கொள்ளவும் அரசாங்கத்திற்கு உரிமை உண்டு. ரிப்பன் தம்முடைய தல சுய ஆட்சித்திட்டம் மக்களுக்கு அரசியற் பொதுக்கல்வியாக விளங்கவேண்டு மென்று கருதினர். ஆட்சித்திறமை இதன் பயனுகக் குறையும் என்று சிலர் அஞ்சினர். மக்களின் சுயஆட்சி வளரவேண்டி இத்தகைய குறை ஏற்பட்டாலும்கூட கவலை இல்லை என்று கருதினர். காலப்போக்கில் தலத்தாபனங்கள் மக்களின் அரசியல் அனுபவத்தால் திறமையாகப் பணிபுரியவரும் என்று ரிப்பன் திடமாக நம்பினர்.

இல்பர்ட் மசோதா கலவரம்: (1883—4) ரிப்பன் காலத்தில் சட்ட அமைச்சராக இருந்தவர் C. P இல்பர்ட் என்பார். இந்திய மாஜிஸ்டிரேட்டுகளும் நீதிபதிகளும் ஐரோப்பியர்களை வழக்குகளில் விசாரிக்கமுடியாதிருந்தது. இந்தத் தடையை நீக்குவதற்கு இல்பர்ட் ஒரு மசோதாவை உருவாக்கினர். நீதித்துறையில் உயர்ந்த பதவிகளை வகித்துவந்த இந்தியர்களுக்கும் எதிராக இவ்வினப் பாகுபாடு இருந்துவந்தது. இதனை நீக்க வேண்டியது மிகவும் நேர்மையானதே. ஆயினும் இந்தியாவில் அப்பொழுதிருந்த ஐரோப்பியர் இந்த முயற்சியை

எதிர்த்து ஒரு போராட்டமே நடத்தினர். இதன் விளைவாக இனவேற்றுமை யுணர்ச்சி கடுமையாக வளர்ந்தது. உத்தியோகச் சார்பற்ற ஐரோப்பியர் அரசப்பிரதிநிதியைக் கூட இதன்பொருட்டு எதிர்த்தனர். கடைசியாக மசோதாவைத் திருத்த அரசாங்கம் ஒத்துக்கொண்டது. திருத்தப்பட்ட மசோதாப்படி இந்திய அதிகாரிகள் ஐரோப்பியரின் வழக்குகளை விசாரிக்க அதிகாரம் பெற்றனர். ஆனால் ஐரோப்பியர் வற்புறுத்தினல், இந்தியர், ஐரோப்பியர் அல்லது அமெரிக்கர்களைக் கொண்ட தீர்ப்புச் சான்றோர் குழுவுடனேயே (Jury) வழக்கை விசாரிக்கவேண்டும். இக்குழுவில் பாதிபேர் இந்தியரல்லாதாராகவே (ஐரோப்பியராகவோ அல்லது அமெரிக்கராகவோ) இருத்தல் வேண்டும். இந்த உரிமை வெள்ளையருக்குமட்டும் உரியதாகும். எனவே எந்தக் குறிக்கோளுடன் மசோதா உருவாகியதோ அந்தக் குறிக்கோள் நிறைவேறவில்லை என்றே கூறவேண்டும். சுருங்கக்கூறின் இனப்பாகுபாடு தொடர்ந்து இருந்துவரலாயிற்று.

ரிப்பனுடைய செல்வாக்கு : தமது ஆட்சிமுறையாலும் கத்தோலிக்கச் சமயப்பிரிவினைச் சேர்ந்ததாலும் ரிப்பன் இந்தியாவிலிருந்த ஆங்கிலேயரின் வெறுப்புக்கே ஆளானர். அதே சமயத்தில் இந்தியர்களிடம் காட்டிய அரசியல் அனுதாபத்தாலும் அவர்கள் முன்னேற்றத்தில் கொண்ட ஈடுபாட்டாலும் இந்தியர்களின் அன்பை அவர் கவர்ந்துவிட்டார். நீதி நிர்வாகத்தில் மனக்கசப்பை உண்டுபண்ணக்கூடிய இனவேற்றுமையை நீக்க முயன்றதும் நாட்டுமொழிச் செய்தித்தாள் சட்டத்தை நீக்கியதும் மக்களின் நலத்திற்கான சீர்திருத்தங்களைச் செய்ததும் இந்தியரிடையே ரிப்பனுடைய செல்வாக்கை மிக மிக உயர்த்தின. ரிப்பன் காலத்தில் மைசூர் ஆட்சி பழைய அரச குலத்தினர் கைக்கு மாறியது மிகப் பொருத்தமேயாம். உள் நாட்டு ஆட்சி முறையிலும் அரசியல் சமூக முன்னேற்றத்திலும் ரிப்பன் காட்டிய ஊக்கம் பெண்டிங்கு பிரபுவையே நமக்கு நினைவூட்டுகிறது. 1885-ல் இந்திய

தேசீய காங்கிரசு தோன்றியது. ரிப்பன் கடைப்பிடித்த கொள்கையின் முதற் பயனே இது என்று கூறலாம். 1884-ம் ஆண்டு ரிப்பன் பதவி துறந்தார்; அது இந்தியருக்குப் பெரியதொரு வருத்தத்தையே விளைவித்தது. அன்று முதல் இந்தியர் அவரை மறவாது நன்றியுடன் என்றும் எண்ணி வரலாயினர். இந்தியாவைவிட்டுச் சென்றபின் ரிப்பன் இங்கிலாந்து நாட்டு அமைச்சர் குழுவில் பல பதவிகள் பூண்டிருந்து 1909-ம் ஆண்டு ஜூலை மாதம் காலமானர்.

பகுதி 8

டஃப்ரின் (1884—1)

டஃப்ரின் பிரபு : வாழ்க்கையின் முற்பகுதி : டஃப்ரின் 1826-ம் ஆண்டு பிறந்தார். 1801-ல் தமது தந்தை இறந்த பின் பாரன் (Baron) பட்டத்திற்குரியவரானர். 1860-ல் சிரியாவில் சமயத்தின் காரணமாய் நடந்த படுகொலைகளை விசாரிக்க இவரைப் பிரிட்டிஷ் அரசாங்கம் அங்கு அனுப்பியது. 1864-லிருந்து 1866 வரை இவர் உதவி இந்தியா அமைச்சராக இருந்தார். பின்னர் 1868-லிருந்து 1872 வரை பிரிட்டிஷ் அமைச்சர் குழுவில் ஒருவராக விளங்கினர். அப்பொழுது இவருக்கு (எர்ல்) கோமான் பட்டம் வழங்கப் பட்டது. அதன்பின் கானடா நாட்டுக் கவர்னர்-ஜெனரல் பதவியில் 1868-ம் ஆண்டுவரை அமர்ந்திருந்தார். அடுத் தாற்போல் ருஷியாவிலும் துருக்கியிலும் இங்கிலாந்து நாட்டுத் தூதுவராக விளங்கினர். 1884-ல் இந்தியாவின் அரசப்பிரதிநிதியாகுமுன் எகிப்தில் பிரிட்டிஷ் சிறப்பு ஆணையாளராகவும் சிறிதுகாலமிருந்தார் இவற்றை யெல்லாம் பார்த்தால் டஃப்ரின் மிகுந்த அனுபவம் பெற்ற சிறந்த அரசியல் அறிஞர் என்பது விளங்கும். டஃப்ரின் சிறந்த ஆட்சியாளராக விளங்குவதற்கான பல தகுதிகளையும் பெற்றிருந்தார். செயல் மாட்சி, சொல் லாற்றல், சொல்நயம், எவரையும் எளிதில் கவரக்கூடிய வசிய ஆற்றல், எதையும் நன்கு ஆராய்ந்து முடிவுசெய்யக் கூடிய திறமை, உறுதிப்பாடு முதலியவைகளுக்கு டஃப்ரின் பெயர் போனவர்.

ருஷியாவும், ஆப்கானிஸ்தானமும் : 1881-ம் ஆண்டு வரை மத்திய ஆசியாவில் ருஷிய ஆதிக்கம் பெருகி வந்த தைக் கண்டோம். 1884-ல் ருஷியர் ஆப்கானிஸ்தானத் தின் எல்லைக்குச் சுமார் 150 மைல் அப்பாலிருந்த மெர்வ் (Merv) என்னுமிடத்தைக் கைப்பற்றினர். இவ் வெற்றி

ருஷிய ஆதிக்கப் பெருக்கத்தின் உச்ச நிலையைக் குறிப்ப தாகும். ருஷிய ஆதிக்கப் பெருக்கத்தை அச்சத்துடன் கண்டு வந்தவர்கள் கலக்கமுற்றனர். எனவே இப்போது ருஷிய ஆப்கானிஸ்தான எல்லைகளை வரையறுப்பது இன்றியமையாததாயிற்று. அதே ஆண்டு ருஷிய பிரிட்டிஷ் ஆணையாளர்கள் இதன்பொருட்டு சராக்ஸ் என்னுமிடத்தில் கூடிப் பேசினார்கள். இந்நிலையில் ஆப்கானியர் பாஞ்ச்டே (Panjdeh) என்னும் பாலைவன இடைச்சோலையைக் கைப்பற்றினர். ஆனால் விரைவில் அவர்களை அவ்விடமிருந்து ருஷியர் துரத்திவிட்டனர். இதனால் ருஷியாவிற்கும் இங்கிலாந்திற்கும் போர் மூளக் கூடிய நிலை ஏற்பட்டது. இந்தியாவிலும் இங்கிலாந்திலும் போர் ஆயத்தங்கள் செய்யப்பட்டன. இத்தருணத்தில் அமீர் அப்துர் ரஹ்மான் அரசப்பிரதிநிதியை ராவல் பிண்டியில் கண்டு இதைப்பற்றிப் பேசலானார். இதன் விளைவாகப் பாஞ்ச்டேமீது தான் கொண்டாடிய உரிமையை விட்டு விடவும், அதற்குத் தென்மேற்கிலிருந்த சுல்பிகார் என்னுமிடத்தை அதற்குப் பதிலாகக் கொள்ளவும் அமீர் ஒப்புக்கொண்டார். இவ்விதம் டஃப்ரின் தமது அரசியல் தந்திரத்தாலும், நிதானத்தாலும், ஆப்கானிஸ்தானத்தின் வழியாக ருஷியாவுடன் ஏற்படக்கூடிய ஒரு போரைத் தவிர்த்துவிட்டார் என்றே கூறலாம். அதன்பின் எல்லைக் குழு ஒன்று இரு நாடுகளுக்குமான எல்லையை வரையறுத் தது. கடைசியாக 1887-ல் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் என்னுமிடத்தில் செய்துகொண்ட உடன்படிக்கையோடு இச் சிக்கல் முடிவடைந்தது. இந்தியாவில் செய்த போர் ஆயத்தங்களின் விளைவாகப் "பேரரசு பணிப்படை" ஒன்று நிறுவப்பட்டது (1889). ஆப்கானிஸ்தானச் சிக்கலைத் தீர்த்து டஃப்ரின் வெற்றியடைந்ததற்கு அவருடைய குணங்களே காரணமாகும். அமீரின் நோக்கத்தைத் தாம் நன்கு உணர்ந்ததுடன், தம்முடைய நற்குணங்களையும் ஆங்கிலேயருடைய வலிமையையும் அமீர் நன்கு உணரச் செய்தார். இவ்வெற்றியை ஷெர் அலியிடம் மேயோ கொண்ட வெற்றிக்கு ஒப்பாகக் கூறலாம்.

மூன்றாவது பர்மியப் போர் (1885)

பேகன் மன்னருக்குப்பின் அவர் உடன்பிறந்தார் மிண்டான் (1853-78) பர்மாவின் அரியணை ஏறினார். அவர் காலத்தில் மாண்டலே பர்மாவின் தலைநகராயிற்று. புத்த துறவிகளின் கூட்டமொன்றை அவர் நடத்தினார். ஐரோப்பியர் பலர் அவர்கீழ்ப் பணியாற்றினர். தமக்குமுன் ஆண்ட மன்னர்களைப் போலன்றி அவர் மேல்நாடுகள் பலவற்றுடனும் அரசியல் உறவு கொண்டார். மிண்டானுக்குப் பின் தீபா என்பவர் பட்டத்திற்கு வந்தார் (1878-85). 1879-ல் இவர் தம் உறவினர் எண்பதின்மரைக் கொலை செய்தார். அதே ஆண்டு இவரது பகை காரணமாகப் பிரிட்டிஷ் ரெஸிடென்சி நீக்கப்பட்டது.

வட பர்மாவில் கொடுங்கோலோச்சிய இவர் தம் நாட்டில் பிரெஞ்சுக்காரர்களை வரவேற்று அவர்களுடன் ஒரு வாணிக உடன்பாடு செய்துகொண்டார் (1885). அது சாதாரண வாணிக உடன்படிக்கை போலன்றி மிக விரிவானதாகவும், பல வகைகளில் முக்கியமானதாகவும் இருந்தது. டஃப்ரினுக்கு இதைக்கண்டு வாளாவிருக்க முடியவில்லை. அதற்குக் காரணங்களும் இல்லாமல் இல்லை. அப்பொழுது பர்மாவின் மூன்றில் இரு பகுதியை ஆங்கிலேயர் ஆண்டுவந்தனர். எஞ்சிய ஒரு பகுதிக்குங் கூடத் தங்களுக்கு ஒருவகை உரிமை இருப்பதாக ஆங்கிலேயர் கருதி வந்தனர். சுதந்திர மன்னனை தீபாவுடன் பிரெஞ்சுக்காரர்கள் உடன்படிக்கை செய்துகொள்ள உரிமை உண்டு என்பதனை ஆங்கிலேயர் மறுப்பதற்கில்லை. ஆனால் வட பர்மாவில் பிரெஞ்சுக்காரர் ஆதிக்கத்தை ஏற்படுத்தச் செய்த முயற்சியையே ஆங்கிலேயர் தடை செய்ய விரும்பினர். இந்நிலையில் பர்மாவுடன் வாணிகம் செய்துகொண்டிருந்த ஆங்கிலேய வியாபாரக் கம்பெனி ஒன்றிற்குத் தீபா ஒரு பெருந்தொகையை (£ 230,000) அபராதமாக விதித்தார். இதனால் பகை நிலைமை முற்றத்தொடங்கியது. கம்பெனி அபராதம்பற்றி மேற்கொண்டு விசாரணை நடத்துமாறு அரசப்பிரதிநிதி

தீபாவை வேண்டிக்கொண்டார். தீபாவோ அவ்வேண்டு கோளை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆதலின் அரசப் பிரதிநிதி தீபாவிற்கு இறுதி எச்சரிக்கையொன்று விடுத் தார். அதன்படி மாண்டலேயில் பிரிட்டிஷ் தூதுவர் ஒருவர் இருக்கத் தீபா அனுமதிக்கவேண்டும் என்றும், தவிர ஆங்கிலேயருக்கு இணக்கமான வெளிநாட்டுக்கொள் கையைப் பின்பற்றவேண்டும் என்றும் வேண்டிக்கொண் டார் தீபா இவ்வெச்சரிக்கையைப் புறக்கணித்துவிட்டார். எனவே, ஜெனரல் ஹாரி பிரெண்டர்காஸ்ட் தலைமையில் ஆங்கிலேயப் படை ஒன்று வட பர்மாமீது படையெடுத்தது (நவம்பர் 1885). இரண்டு வாரத்திற்குள் பிரிட்டிஷ் கடற் படை ஒன்று மாண்டலேயை அடைந்தது. நவம்பர் மாத இறுதியில் தீபா ஆங்கிலேயரிடம் சரணடைந்தார். அவரை யும் அவர் குடும்பத்தாரையும் சென்னைக்கு அனுப்பினர். பின்னர்ப் பம்பாய் மாகாணத்திலுள்ள இரத்தினகிரிக்குக் கொண்டு சென்றனர். 1886-ம் ஆண்டு முதல் நாள் வட பர்மா ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டதை அரசப் பிரதிநிதி அறிவித்தார். பர்மாமீது ஒருவித ஆதிபத்திய உரிமை கொண்டாடிய சீனாவும் அதற்கு உடன்பட்டது, இவ்விதம் மூன்றாவது பர்மியப் போர் விரைவில் முடிந் தது என்றாலும் கொள்ளைக் கூட்டத்தினரும் வேலை இழந்த பர்மியப் போர் வீரர்களும் பல விடங்களில் ஐந் தாண்டு காலம்வரை அமைதியைக் குலைத்தே வந்தனர். 1897-ல் வட பர்மாவும், தென் பர்மாவும் ஒரு லெப்டினண்ட் கவர்னர் ஆட்சியின்கீழ் வந்தன. மூன்றாவது பர்மியப் போர் நடத்தியதில் ஆங்கிலேயர்பால் நீதியோ நேர் மையோ இருந்தது இல்லை. எனினும் ஆங்கிலேயர் ஆட்சியின்கீழ்ப் பர்மா விரைவாகவே முன்னேறத் தொடங்கியது.

ஆட்சிமுறை

குடியானவர் சட்டங்கள், குடியானவர் நலத்தைக் காப்பதற்கென எழுந்த சட்டங்கள் நிலையான நிலவரி ஏற்பாட்டிற்கு முரணானவை என்று சிலர் கருதினதை டஃப்ரின் ஏற்றுக்கொள்ளவில்லை. அத்தகைய சட்டங்கள்

காரன்வாலிசின் நோக்கங்களுக்கு உகந்தவை என்றும் கருதினர். 1885, 1886, 1887 முதலிய ஆண்டுகளில் இயற்றப்பட்ட சட்டங்களால் வங்காளம், அயோத்தி, பஞ்சாபு முதலிய மாகாணங்களில் இருந்த குடியானவர் மிகவும் பயனடைந்தனர்.

காங்கிரசின் தோற்றமும் இதர நிகழ்ச்சிகளும் : ஆங்கிலேய ஆட்சிமுறை பற்றி இந்தியப் பொதுமக்கள் கொண்டிருந்த கருத்தை அரசாங்கம் அறியவேண்டியதின் அவசியத்தை டஃப்ரின் நன்குணர்ந்தவர். இந்திய தேசீய காங்கிரசு டஃப்ரின் அரசப்பிரதிநிதியாக இருந்த பொழுதுதான் ஆரம்பமாகியது. அதன முதற்கூட்டம் 1885-ம் ஆண்டு பம்பாயில் நடந்தது. தொடக்கத்தி லிருந்தே காங்கிரசு இந்திய நிர்வாகத்தை இந்தியர் மய மாக்கல் வேண்டும் என்றும், பிரதிநிதித்துவ ஆட்சி முறையை வளர்க்க வேண்டும் என்றும் வலியுறுத்தியது. காங்கிரசு கோரிய சீர்திருத்தங்களை டஃப்ரின் ஓரளவு ஆதரித்தார். அதுபற்றி டஃப்ரின் 1886-ல் பின்வருமாறு எழுதியுள்ளார்; " தீவிரத் தேசீயவாதிகளின் கோரிக்கை களை விட்டுவிட்டு முற்போக்குத் தேசியவாதிகளின் குறிக் கோள்களைக் கவனிக்குமிடத்து அவை அபாயமானவை அல்ல; அளவிற்கு மிஞ்சியவையும் அல்ல. நான் கண்ட இந்தியர்களுள் நல்லறிவும் திறமையுமுடையவர்கள் குறிப் பிடத்தக்க எண்ணிக்கையிலிருக்கின்றனர்கள். அவர்களின் ஒத்துழைப்பை அரசாங்கம் திடமாக நம்பிச் செயலாற்ற லாம். அரசாங்கத்தை அவர்கள் ஆதரிப்பதால் அரசாங் கம் இயற்றிய சட்டங்களைப்பற்றி மக்கள் எளிதாக அறிய வழியேற்படும். மேலும் சட்டசபையைக் கட்டாயப்படுத்தி அரசாங்கம் சட்டங்கள் இயற்றிவருகிறதென்ற தப் பெண்ணம் மாறும். தேசியவாதிகளின்கட்சி ஒன்று இருக்கு மானல் கொந்தளிக்கும் கடலிடையே நாற்புறமும் அலைக ளால் தாக்கப்பட்டு நிற்கும் பாறையின் நிலையைப் போன்று அரசாங்கம் தனித்திருக்கும் நிலை நீங்கும் "*.

* 58, பக். 427-8.

சட்டசபையை மாற்றியமைக்கும் விஷயத்தில் அரசப் பிரதிநிதி கொண்டிருந்த கருத்துக்கள் 1892-ல் நிறை வேறிய இந்திய கவுன்சில்ஸ் சட்டத்தில் இடம் பெற்றன. 1886-ல் குவாலியர் கோட்டையை சிந்தியாவிற்குத் திருப்பிக்கொடுத்தார். அடுத்த ஆண்டு விக்டோரியாஅரசி யினுடைய ஆட்சியின் பொன் விழா இந்தியா முழுவதும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

டஃப்ரினது பிற்கால வாழ்க்கை : தலையாய அரசியல் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு வேண்டிய தகுதிகளனைத் தும் டஃப்ரினிடம் அமைந்திருந்தன. அவற்றில் அவர் கொண்ட வெற்றியையும் நாம் கண்டோம். இந்திய உள் நாட்டு ஆட்சிமுறையுடன் அவர் ஓரளவிற்கே தொடர்பு கொண்டிருந்தார். அன்றியும் அவர் இந்தியாவில் பதவியி லிருக்கும்பொழுதே அயர்ச்சியுற்றவரானார். மீண்டும் பிரிட் டிஷ் அரசாங்க வெளிநாட்டுப் பணித்துறையில் சென்று சேரவே விரும்பினார். 1888-ம் ஆண்டு டிசம்பர் மாதம் டஃப்ரின் இந்தியாவை விட்டுப் புறப்பட்டார். அதற்கு முன்பே அவருக்கு மார்க்கிஸ் (Marquis) என்ற பட்டம் வழங்கப்பட்டது. பின்னர் இத்தாலியிலும் பிரான்சிலும் பிரிட்டிஷ் தூதராகப் பணியாற்றினார். கடைசியாக 1902-ம் ஆண்டு டஃப்ரின் உலகைவிட்டு மறைந்தார்,

பகுதி 9

லாண்ஸ்டவுன் (1888 - 94)

லாண்ஸ்டவுன் 1845-ம் ஆண்டு பிறந்தவர்; 1866-ல் மார்க்கிஸ் பட்டம் பெற்ருர்; 1880-ல் உதவி இந்தியா அமைச்சராக விருந்தார்; 1883லிருந்து 1888 வரை கானடாவின் கவர்னர்-ஜெனரல் பதவியை வகித்தார்; 1888-ம் ஆண்டு டிசம்பர் மாதம் இத்தியாவின் அரசப் பிரதிநிதியானுர்.

லாண்ஸ்டவுனும் இந்திய சிற்றரசுகளும் : 1889-ம் ஆண்டு அரசப்பிரதிநிதி காஷ்மீர நாட்டின் மன்னனைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு அந்நாட்டு ஆட்சிப்பொறுப் பைத் தாமே ஏற்றுக்கொண்டார். அதன்பின் 1905-ல் தான் காஷ்மீர மன்னன் தனது அதிகாரத்தைத் திரும்பப் பெற முடிந்தது. பிரிட்டிஷ் காப்பரசான மணிபுரியில் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தில் அந்நாட்டுப் படையின் தளபதியே அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டான். மேலும் அவன் மணிபுரியில் செய்திகளில் ஆங்கிலேயர் தலையிடுவதை எதிர்த்தான்; ஆங்கிலேயர் நால்வரை நம்பிக்கைகேடான முறையில் கைது செய்ததும் அன்றி அவர்களைக் கொன்றும் விட்டான். அந்நால்வரில் அஸ்ஸாமின் பிரதம ஆணையாளராக இருந்த குன்டனும் (Quinton) ஒருவர் ஆவார். 1891-ல் பிரிட்டிஷ் அரசாங்கம் மணிபுரியில் தனது அதிகாரத்தை நிலைநிறுத்தியது. படைத்தளபதியும் அவனுடைய துணைவர்களும் கொலைக் குற்றத்திற்காகத் தூக்கிலிடப்பட்டார்கள். அதன்பின் பல ஆண்டுகள் வரை மணிபுரி ஆங்கிலேயரின் நேரடியான ஆட்சியின்கீழ் இருந்துவந்தது. 1907-ம் ஆண்டு அந் நாட்டு இளவரசனுக்கே அரசு திருப்பி வழங்கப்பட்டது 1892-ல் கொடுஞ்செயல் புரிந்து வந்த காலட் (Kalat) நாட்டுத் தலைவன் ஆங்கிலேயரின் தூண்டுதலால் பதவியி லிருந்து நீங்கினுன். அவன் மகன் அரசனுனுன்.

எல்லைப்புறக் கொள்கை: இருபதாம் நூற்றுண்டு இந்தியாவின் வடமேற்கு எல்லைப்புறச் சிக்கலைப்பற்றிச் சர் ஆல்பிரட் ஹாமில்டன் கூறுமிடத்து அது மூன்றுவித செய்திகள் அடங்கிய ஒரு பெருஞ் சிக்கல் என்று கூறு கிருர். அவற்றுள் முதலாவது யாதெனில் இந்தியா விற்கும் ஆப்கானிஸ்தானத்திற்கும் உள்ள அரசியல் தொடர்புகளே அன்றி ஆப்கானிஸ்தானத்திற்கு அப்பால் நிகழ்ந்தாலும் இந்தியாவின் பாதுகாப்பைப் பாதிக்கக் கூடிய செய்திகள். இது மிக முக்கியமானதாகும். இரண்டாவது, பஞ்சாபிற்கும் ஆப்கானிஸ்தானத்திற்கும் இடையே உள்ள பகுதியில் வசிக்கும் ஆப்ரிதியர், வசீரியர், மொமணியர், ஷின்வாரியர், ஒரக்ஷைரியர், மஹ்சூதியர் முதலிய முரட்டுக் கூட்டத்தினரை அடக்கியாள்வதாம். மூன்ருவது, வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தின் ஆட்சி முறையாகும். இவற்றுள் இரண்டாவது ஒரு சிறு சிக்கலே என்ருலும் தீர்த்துவைப்பதற்கு மிகமிக அருமை யானது. இந்தியாவிற்கும் ஆப்கானிஸ்தானத்திற்கும் இடையே உள்ள எல்லை தெளிவாக வரையறுக்கப்படு முன்னரும் அந்த எல்லைப்புற மக்கள் இந்திய அரசாங் கத்தின் ஆட்சியின்கீழ் வரவில்லை என்பதனையும் நினைவில் வைக்கவேண்டும். அம்மக்களிடத்தே ஆதிபத்தியக் கொள் கையைப் பின்பற்றுவதா அல்லது எது எவ்வாருயினும் தலையிடாது வாளாவிருக்கும் கொள்கையைப் பின்பற்று வதா என்பதைப்பற்றி இந்திய அரசாங்கம் பலமுறை ஆலோசித்தும் உறுதியான எம்முடிவிற்கும் வரவில்லை. லாரன்சும் லிட்டனும் வெவ்வேறு கொள்கைகளைப் பின்பற்றியதைக் கண்டோம். எல்லைப்புறப் பிரதேசத்தில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டி அங்கு முக்கிய மான இடங்களில் இருப்புப் பாதைகள் அமைத்து, அவ் வெல்லை முழுவதையும் இந்திய அரசாங்கத்தின் நேரடி யான கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டுவர வேண்டுமெனச் சிலர் கருதினர். இக்கருத்தை எதிர்த்தவர்களோ அவ்வாறு செய்வது மிகவும் அருமையான தென்றும், மிக்க பொருட் செலவாகுமென்றும் விளக்கினர். அதனுல் ஆப்கானிய

நாட்டு அமீரின் நட்பை இழக்க நேரிடுமென்றும் எடுத்துக் காட்டினர். அமீரோ எல்லைப்புற மக்களின் சமயத்தலைவர். அவர்களை அவர் கட்டுப்படுத்தி வைத்திருக்க முடியா விடினும் அவர்கள் தொடர்ந்து சுதந்திரமாக வாழ்தல் தம் முடைய நாட்டிற்கே ஒரு சிறந்த பாதுகாப்பெனக் கருதினர். லாண்ஸ்டவுன் காலத்தில் படைத்தளபதி இராபர்ட்ஸ் (1885-93) ஆதிபத்தியக் கொள்கையைப் பின்பற்றினர் என இங்கே குறிப்பிடவேண்டும்.*

ஆப்கானிய நாட்டு அமீர் அப்துர் ரஹ்மான் ஆங்கி லேயருடன் நட்பாக இருந்தபொழுதிலும் அவர்கள் எல் லைப்புறக்கொள்கையை மாற்றிக்கொண்டதை வெறுத்தார். அரசப்பிரதிநிதியின் போக்கு அமீரின் வெறுப்பை மேலும் வளர்த்தது. அமீர் ஆங்கிலேயரிடம் நம்பிக்கை கொள்ளக் கூடிய அளவிற்கு அரசப்பிரதிநிதி அவரிடம் பழகவில்லை. அப்படிப் பழகுதற்கேற்ற பண்பும் டஃப்ரினிடமிருந்ததைப் போல் அவரிடமில்லை. எனவே இரு நாடுகளுக்கும் இருந்த நல்லுறவு சிறிது சிறிதாக மாறி 1890-ம் ஆண்டில் நட்பு முறியக்கூடிய அளவிற்குப் பகை நிலைமையே முற்றியது. இருந்தாலும் உறவும் அறவில்லை, போரும் மூளவில்லை. 1892-ல் இரண்டாவது ஆப்கானியப் போரில் பெரும்பங்குகொண்ட இராபர்ட்ஸ் தலைமையில் ஒரு தூதுக்குழுவை அமீரிடம் அனுப்ப இந்திய அரசாங்கம் முடிவு செய்தது. இதை விரும்பாத அமீர் தந்திரமாக அத்தூதுக்குழு தம்நாட்டிற்கு வருவதை ஒத்திவைக்கு மாறு கோரி அதில் வெற்றியும் பெற்றார். அடுத்த சில மாதங்களில் இராபர்ட்ஸ் இங்கிலாந்திற்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டார். 1893-ல் சர் மார்ட்டிமர் டுராண்டு காபூலுக்கு அனுப்பப்பட்டார். அந்த ஆண்டு அக்டோபர் நவம்பர் மாதங்களில் அமீருக்கும் ஆங்கிலேயருக்கும் எல்லைபற்றி ஒரு உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி அமீர் சில ஜில்லாக்களைப் பெற்றார். அவர் பெற்றுவந்த உதவித்தொகையும் பன்னிரண்டு லட்ச ரூபாயிலிருந்து

* 72, பக். 35-7.

பதினெட்டு லட்சமாக உயர்ந்தது. சிறிது காலம் கழித்து அது இருபது லட்ச ரூபாயாகியது. இந்தியாமூலம் தம் நாட்டின் போர்க் கருவிகளையும், வெடி மருந்தையும் இறக்குமதி செய்துகொள்ள அமீர் அனுமதி பெற்றார். இவைகளுக்குப் பதிலாக அமீர் எல்லைப்புற மக்கள் விவகாரங்களில் தாம் தலையிடுவதில்லையென ஒப்புக்கொண்டார். இந்த ஏற்பாட்டால் எல்லைப்புற மக்கள் இந்திய அரசாங்கத்தின் ஆட்சிக்கு உட்படலாயினர். 1896-ல் இரு நாடுகளுக்கும் உரிய எல்லையை வரையறுக்கும் வேலை பெரிதும் முடிவடைந்தது. எஞ்சியது மூன்றாம் ஆப்கானியப் போருக்குப்பின் முற்றுப்பெற்றது.[1] டூராண்டு உடன்பாடுபற்றி அமீர் பின்வருமாறு கூறினார்: ஆங்கிலேயருடைய நட்பினால் நான் இழந்ததைவிடப் பெற்றதே அதிகமாகும். ஆப்கானிய நாட்டின் ஒரு சிறு பகுதியைக்கூட ஆங்கிலேயர் கவர்ந்துகொள்ள விரும்பவில்லை என்றாலும் அப்படிச் செய்வதற்குத் தகுந்த வாய்ப்பு எதையும் அவர் நழுவ விடுவதில்லை. ருஷியர்கள் கவர்ந்துகொண்டதைவிட மிகுதியாகவே ஆப்கானிஸ்தானத்திடமிருந்து நட்பு பாராட்டும் ஆங்கிலேயர் கவர்ந்து கொண்டுள்ளனர்.[2] 1893-ல் இவ்வுடன்பாட்டால் இரு நாடுகளுக்கும் இடையே மீண்டும் ஏற்பட்ட நல்லுறவு அப்துர் ரஹ்மான் இறக்கும்வரை (1901) எவ்வித மாறுதலுமின்றி நீடித்தது. ஆப்கானிஸ்தானத்தை ஆண்ட சிறந்த மன்னருள் அப்துர் ரஹ்மான் ஒருவராவர். அவருடைய கூரிய அறிவும் அரசியல் ஞானமும் அவர் வெற்றிக்குக்காரணமாயிருந்தன. ஆப்கானியரை நன்கு அடக்கியாண்டதுடன் அவர்கள் தாம் ஆங்கிலேயருடன் செய்துகொண்ட நேச உடன்பாட்டையும் ஒத்துக் கொள்ளும்படி செய்துவிட்டார். ருஷியர்களைவிட ஆங்கிலேயர்களுடன் தொடர்பு கொள்வதே சிறந்ததென அவர் கருதினார். தமது வாழ்க்கை வரலாற்றையும் சமயப் போர்களையும் பற்றி இவர் நூல்கள் எழுதியுள்ளார்.

---

1. 72, பக். 35-37.

2. 23, பக். 162.

பொருளமைப்பு : ரூபாய் நாணய மதிப்புப் பிரச்சினை : 1873-லிருந்து நாணயப் பிரச்சினைகள் இந்தியாவின் பொருளமைப்பைப் பாதித்து வந்தன. அந்த ஆண்டிற்கு முன்பு ஒரு ரூபாய் ஆனது இரண்டு ஷில்லிங்கிற்குச் சமமாய் இருந்தது ; அதாவது பத்து ரூபாய் ஒரு பவுனுக்குச் சமம். 1873-லிருந்து ரூபாயின் நாணய மதிப்பு குறையத் தொடங்கியது ; 1885-லிருந்து விரைவாக மேலும் குறைந்து வரலாயிற்று. 1890-ல் ஒரு ரூபாயின் மதிப்பு ஒரு ஷில்லிங் நான்கு பென்சுகளாக இருந்தது; 1892-ல் ஒரு ஷில்லிங் இரண்டு பென்சுகளாகக் குறைந்தது; 1895ல் ஒரு ஷில்லிங் ஒரு பென்சுக்கு வந்தது. இதற்கு, உலகின் வெள்ளி உற்பத்தி அதிகரித்ததும், ஜெர்மனி முதலிய நாடுகளில் வெள்ளி நாணய முறை அமுலிலிருந்து மறைந்ததும் காரணங்களாகும். இந்திய நாணயமுறை, வெள்ளிநாணயமுறை ; ஆனால் இந்தியா இங்கிலாந்திற்கு நாட்டுக் கடனுக்காகவும், இந்தியாவில் முதலீடு செய்யப்பட்டுள்ளவற்றிற்காகவும், சிவில், இராணுவ அதிகாரிகளில் இங்கிலாந்தில் போய்த் தங்கியவர்களின் உபகாரச் சம்பளத்திற்காகவும் கொடுக்க வேண்டிய தொகை தங்கத்திலேதான் கணக்கிட்டுக் கொடுக்க வேண்டியிருந்தது. எனவே ரூபாயின் மதிப்பானது குறைந்துபோயிற்று. அதனால் இந்தியா இங்கிலாந்திற்குக் கொடுக்க வேண்டிய தொகை 50 சத வீதம் மிகுதியாயிற்று. இவ்விதம் மிகுதியான தொகை செலுத்த நேரிட்டது. இதனால் இந்தியாவில் பயனடைந்தவர் ஒரு கூட்டத்தினரே ஆவர். அவர்கள் யாரெனில் ஏற்றுமதி செய்யக்கூடிய பொருள்களை உற்பத்தி செய்தவர்களே. அதைத் தவிர மற்றவர்களுக்கு எத்தகைய பயனும் கிட்டவில்லை. வருமான வரியை மீண்டும் விதித்தனர்; உப்பு வரியை மிகுதி ஆக்கினர். ஆனால் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை. எனவே இதுபற்றி ஆய்ந்து வழி கூற ஹெர்சல் பிரபுவின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அதனுடைய முடிவின்படி 1893-ல் கட்டுப்பாடின்றி வெள்ளிநாணயங்கள் செய்து வெளியிடும்

முறையை நிறுத்தி விட்டார்கள் ; 15 ரூபாய் ஒரு பவுனுக்குச் சமமென வரையறுத்தார்கள். இதன் பின்பும் சிறிது காலம் ரூபாயின் மதிப்பு மேலும் குறைந்து வந்தது. ஆயினும் 1895-லிருந்து நிலைமை மாறத் தொடங்கியது. 1899-ல் ரூபாயின் மாற்று மதிப்பு ஒரு ஷில்லிங் நான்கு பென்சுகளுக்கு அதிகரித்தது. ஆனால் அதேசமயத்தில் ரூபாயை வெள்ளி அல்லது தங்கக் கட்டி மதிப்பிற்கு ஒப்பிடும் போது பத்து பென்சுகள் குறைந்துபோய் விட்டது. இவ்விதம் ரூபாய் நாணயமுறை (பவுனோடு தொடர்புடைய) ஒப்பு நாணயமுறையாக மாறியது ; இதனால் போலி நாணயங்கள் நாட்டில் தோன்றுவதற்கு இடமேற்பட்டது.

சமூகச் சீர்திருத்தம் : 1890-ல் தொழிற்சாலைகளில் வேலை செய்வோரின் நிலைமைகளை ஆய்ந்து அவர்களின் நலத்திற்கான வழிகளைக் கூறத் தொழிற்சாலைக் குழு ஒன்று ஏற்பட்டது. அந்தக் குழுவினுடைய முடிவுகளின் அடிப்படையில் 1891-ல் தொழிற்சாலைச் சட்டம் ஒன்று நிறைவேறியது. அது 1881-ஆம் ஆண்டுச் சட்டத்தைவிட முற்போக்கானது. புதிய சட்டம் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் ஆண், பெண், இளைஞர் முதலியோரின் வேலை நேரங்களைத் தகுந்தபடி வரையறை செய்தது. தொழிலாளர்க்கு வாரத்திற்கு ஒரு நாள் விடுமுறை அளிக்க வேண்டியதாயிற்று. மற்ற நாட்களிலும் இடை வேளையில் அரை மணி நேரம் ஓய்வு அளிக்கவும் இச் சட்டம் வழி செய்தது. 1891-ல் திருமணம் செய்து கொள்ளக் கூடிய வயது பத்திலிருந்து பன்னிரண்டாக உயர்ந்தது. இதை வைதிகர்கள் எதிர்த்தனர். ஆனால் அதனை அரசாங்கம் பொருட்படுத்தவில்லை. சில செய்திகளில் சமயத்தை விட நல்லொழுக்கத்திற்கே முக்கியமளிக்க வேண்டுமென அரசாங்கம் கருதியது.

பொதுப் பணித்துறைக் கமிஷன் : சர் சார்லஸ் அட்கிசன் தலைமையில் அமைந்த பொதுப் பணித்துறைக் கமிஷன் சிவில் பணித்துறையில் பல மாறுதல்களைப்

பற்றிப் பரிவுரை வழங்கியது. 1891-ம் ஆண்டுதான் அரசாங்கம் அவற்றைச் செயலில் கொண்டுவர முற்பட்டது. லிட்டன் பிரபுவின் காலத்தில் சட்டமுறைப்படி ஏற்பட்ட சிவில் பணித்துறை நீக்கப்பட்டது.சிவில் பணித்துறைகள் இப்போது மூன்று தரங்களாகப் பிரிந்தன. அவை யாவன பேரரசுப் பணித்துறை, மாகாணப் பணித்துறை, கீழ்த்தரப் பணித்துறை. ஒப்பந்தச் சிவில் பணித்துறை இப்போது இந்திய சிவில் பணித்துறையாக மாறியது. அதில் சேர விரும்புவோர் போட்டித் தேர்வில் வெற்றி பெற வேண்டும். இந்தியர்களும் தேர்வில் போட்டியிடலாம். ஆனல் தேர்வு இங்கிலாந்தில் லண்டன் நகரில்தான் நடைபெற்று வந்தது. தாதாபாய் நௌரோஜி இங்கிலாந்தில் பாராளுமன்ற உறுப்பினராய் இருந்த பொழுது இந்தப் போட்டித் தேர்வை இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஒரேசமயத்தில் நடத்த வேண்டுமென 1893-ல் காமன்ஸ் சபையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அது நிறைவேறியது. ஆனல் இந்தியாவில் சென்னை மாகாண அரசாங்கம் தவிர இதர மாகாண அரசாங்கங்கள் அதை ஆதரிக்கவில்லை. எனவே அத் தீர்மானம் நடைமுறைக்கு வரவில்லை.

இந்திய கவுன்சில்ஸ் சட்டம், 1892 : 1889-ல் நிறைவேறிய சட்டம் இந்தியா கவுன்சில் உறுப்பினரின் எண்ணிக்கை பத்தாகக் குறையும் வரை புதிதாக உறுப்பினர் எவரையும் நியமிப்பதில்லை யென முடிவு செய்தது. 1892-ல் நிறைவேறிய இந்திய கவுன்சில்ஸ் சட்டப்படி மத்திய சட்டசபையின் மிகுதி உறுப்பினரின் (" Additional Members ") எண்ணிக்கை பத்திற்குக் குறையாமலும் பதினாறுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். சிலர் தேர்வின் மூலம் உறுப்பினராக இச் சட்டம் வழி செய்தது. சட்டசபை உறுப்பினர் கேள்விகள் கேட்கவும் அரசாங்கத்தின் நிதிக் கொள்கை பற்றிப் பொதுவாக விவாதிக்கவும் இச் சட்டம் உரிமையளித்தது. 1892-ல் இச் சட்டத்தை இங்கிலாந்துநாட்டுப் பாராளுமன்றத்தில் கொண்டு

வந்த உதவி இந்தியா அமைச்சர் G. N. கர்சான் (பின்பு இந்தியாவின் அரசப் பிரதிநிதியாக இருந்தவர்) பின் வருமாறு கூறினர் : "இந்திய மக்கள் என்போர் யார்? பொதுச் செய்திகளைப் பற்றித் தங்கள் கருத்தைத் தெரிவிக்க இயலாதவர்கள், தங்களுடைய மொழியைக் கூடப் படிக்கவோ எழுதவோ தெரியாதவர்கள், ஆங்கிலத்தைப் பற்றி எவ்வித அறிவுமில்லாதவர்கள், தங்கள் நாட்டை ஆங்கிலேயர்கள் ஆண்டு வருகிறார்கள் என்பதையே உணராதவர்கள்—இத்தகைய கோடிக்கணக்கான மக்கள்தான் இந்தியமக்கள் எனப்படுவோர். காங்கிரசினுடைய கொள்கையும் திட்டங்களும் இவர்களை எவ்விதமும் பாதிக்கா*. கர்சானின் பழைமைப் போக்கிற்கும் அவர் இந்தியாவின் அரசப்பிரதிநிதி ஆகும் முன்பே இந்தியரின் அரசியல் விருப்பங்களைப்பற்றி எப்படி எண்ணினர் என்பதற்கும் இது ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

லாண்ஸ்டவுனின் வாழ்க்கையின் பிற்பகுதி : 1894ம் ஆண்டு ஜனவரி மாதம் லாண்ஸ்டவுன் இந்தியாவை விட்டுப் புறப்பட்டார். 1895-லிருந்து 1900 வரை அவர் இங்கிலாந்தின் போர்அமைச்சராகப் பணியாற்றினர். பின்பு ஐந்தாண்டுகள் வரை இங்கிலாந்தின் வெளிநாட்டு அமைச்சராக இருந்தார். அப்பொழுது இங்கிலாந்து பிரான்சுடனும் ஜப்பானுடனும் கொண்டிருந்த நேச உறவிற்கு அவர் பெரிதும் காரணமாவார். பின்னர் ஆஸ்குவித் பிரபு கூட்டுமந்திரிசபை அமைத்தபொழுது லாண்ஸ்டவுன் அதில் ஒருவரானர். 1927-ம் ஆண்டு லாண்ஸ்டவுன் காலமானர்.

பகுதி 10

இரண்டாவது எல்ஜின் (1894--9)

இரண்டாவது எல்ஜின் பிரபு: விக்டர் அலெக் ஸாண்டர் புரூஸ் 1849-ல் பிறந்தவர். இவருடைய தந்தை இந்தியாவில் கானிங்கு பிரபுவுக்குப்பின் அரசப்பிரதி நிதியாக இருந்தவர்; எர்ல் (Earl) பட்டத்திற்குரியவர். எல்ஜின் லிபரல் கட்சியைச் சேர்ந்தவர். அரசப்பிரதி நிதியாகு முன்பே சிறந்த ஆட்சியாளரெனப் பெய ரெடுத்தவர். குரோமர் பிரபும் சர் ஹென்றி நார்மனும் அரசப்பிரதிநிதிப் பதவியை ஏற்கவிரும்பாத பொழுது எல்ஜின் அதை ஒத்துக்கொண்டார். 1894-ல் எல்ஜின் இந்தியாவிற்கு வந்து சேர்ந்தார்.

எல்லைப்புறக் கொள்கை: டுராண்டு உடன்படிக் கைப்படி சிட்ரல் (Chitral) எனப்படும் சிறுநாடு (வ. மே. எ. மா.) 1893-ல் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டிற்கு உள்ளாகியது. இரண்டாண்டுகள் கழித்து அந்நாட்டில் ஒரு புரட்சி ஏற்பட்டது. அதில் அந்நாட்டை ஆண்ட தலைவர் கொலையுண்டார். அதை எதிர்த்த ஆங்கிலேயப் பிரதிநிதியான டாக்டர் ராபர்ட்சனை அந்நாட்டைவிட்டுத் துரத்தவும் புரட்சிக்காரர்கள் முயன்றனர். ஆயினும் ஆறுவாரங்கள் வரை தமக்குப் பதிலாக வேறு ஒருவர் வரும் வரை ராபர்ட்சன் வெற்றியுடன் ஈடு கொடுத்துவந்தார். இந்நிலையில் இங்கிலாந்தில் அதி காரத்திலிருந்த லிபரல் கட்சி மந்திரிசபை சிட்ரல் நாட்டை ஆங்கிலேயர் வசமிருந்து விட்டுவிட முடிவுசெய்தது. ஆனால், அரசப்பிரதிநிதி இதற்கு நேர்முரணை கருத் தைக் கொண்டிருந்தார். சிட்ரல் நாட்டைவிட்டு ஆங் கிலேயர் வெளியேறுமுன் இங்கிலாந்தில் யூனியனிஸ்டு கட்சி பதவிக்குவந்தது. சிட்ரல் பற்றி முன்பிருந்த

---

* 50, Vol. II, பக். 63-4.

அரசாங்கம் செய்த முடிவு மாற்றப்பட்டது. அந்நாடு தொடர்ந்து ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்து வரவேண்டுமென முடிவாயிற்று. இதனுல் எல்லேப்புறம் முழுவதிலும் 1897-ல் ஒரு பெருங்கலகம் ஏற்பட்டது. விரைவில் நிலேமை மிகவும் நெருக்கடியான தறுவாயை அடைந்தது. ஆயினும் ஆங்கிலேயர் தமது முயற்சியைத் தளரவிடவில்லே. 1898-ம் ஆண்டு தொடக்கத்தில் கலகக் காரர்களில் ஒரு பிரிவினரான மொமணியர் (Mohmands) ஆங்கிலேயரிடம் சரணடைந்தனர். ஆனுல் மற்ருெரு பிரிவினரான ஆப்ரிதியர் (Afridis) கொரில்லாப் போரிட்டு ஆங்கிலேயர்களுக்கு மிகுந்த இன்னல்களேயும் ஏராளமான பொருளழிவினேயும் விளேவித்தனர். ஆயினும் கடைசியில் அதே ஆண்டிலேயே அவர்களும் சரணடைந்தனர். இவ்வெல்லேப்புறப் போர்களில் இந்தியச் சிற்றரசர்கள் ஆங்கிலேயர்களுக்கு நன்கு உதவினர். இருப்பினும் ஆங்கிலேய அரசாங்கத்திற்கு 1857-ம் ஆண்டு படைக் கலகத்திற்குப்பின் ஏற்பட்ட சோதனேகளில் இதுவே மிகக் கடுமையானதாகும். 1895-ல் ஆங்கிலேயர்களும் ருஷியர்களும் அடங்கிய குழு ஒன்று பாமீர் பிரதேசத்தில் எல்லேவரையறுக்கும் வேலேயை முடித்தது. எல்லேப்புற மக்களின் கலகம் ஆப்கானிய அமீர் அப்துர் ரஹ்மானே மிகவும் சங்கடமான நிலேக்குள்ளாக்கியது. ஆயினும் அவர் ஆங்கிலேயரின் உண்மை நண்பினராகவே நடந்து கொண்டார். எல்லேப்புற மக்களின் கலகம் சமயப்போர் என்று ஆப்கானிய மக்கள் கருதாதவாறு அவரே செய்து விட்டார். அந்த அளவிற்கு ஆப்கானியரை அடக்கியாள் வதில் அவர் வெற்றிபெற்ருர்.

மாப்பிள்ளேமாரின் கலகங்கள் : மலபாரில் மாப் பிள்ளேமார் எனப்படும் முகமதியர் பலமுறை கலகங்கள் செய்தது கண்டோம். அவைகளேத் தடுப்பதற்காக 19-ம் நூற்ருண்டின் முற்பகுதியில் அரசாங்கம் எடுத்துக் கொண்ட முயற்சிகள் வெற்றிபெறவில்லே. 1873--1885 இவற்றின் இடைப்பட்ட காலத்தில் அவர்கள் பலமுறையும்

அமைதியைக் குலைத்தனர். 1887-ல் குடியானவர்சட்டம் ஒன்று நிறைவேறியது. அதன்படி வேலையிலிருந்து நீக்கப்பட்ட குடியானவர்கள் தாங்கள் பயிரிட்ட குத்தகை நிலங்களில் சீர்திருத்தம் ஏதாவது செய்திருந்தால் அதற்காக அவர்களுக்கு நட்ட ஈடு கொடுக்க வேண்டும். அடிக்கடி கலகங்கள் மூள்வது பற்றி ஆராய்ந்த பொழுது வேலையிலிருந்து நீக்கப்பட்ட குடியானவர்களின் இன்னல்கள் தெரியலாயின. 1894-ல் பெருங்கலகம் ஒன்று மூண்டது. அதை அடக்கியபின் அரசாங்கம் மாப்பிள்ளைமார் வாழும் பகுதியில் சாலைகளை அமைப்பதிலும் அவர்கள் குழந்தைகளின் கல்வியிலும் மிக்க அக்கரை கொள்ளல் ஆயிற்று. 1896-ல் மீண்டும் ஒரு கலகம் ஏற்பட்டது. இந்துக்கள் மிகுந்த துயருக்காளான பின்னரே கலகம் அடக்கப்பட்டது. 1900-ல் குடியானவர் சட்டமொன்று புதிதாக நிறைவேற்றப்பட்டது.

பொருளமைப்பு: 1895-ல் ரூபாயின் மதிப்பு ஒரு ஷில்லிங்கு ஒரு பென்சுக்குக் குறைந்தது; ஆனால் 1898-ம் ஆண்டிற்குள் ஒரு ஷில்லிங்கு நான்கு பென்சுகளுக்கு உயர்ந்துவிட்டது. அதே மாற்று விகிதத்திலேயே ரூபாயின் மதிப்பானது தொடர்ந்து இருப்பதற்கு, பௌலர் குழு (1898) அரசாங்கத்திற்குப் பல ஆலோசனைகளைத் தெரிவித்தது. எல்ஜின் பதவிக்கு வந்த பின் சில ஆண்டுகள் வரை வரவுசெலவுத் திட்டம் பற்றுக்குறையையே கண்டு வந்தது. எனவே மீண்டும் 1894-ல் இறக்குமதியாகும் எல்லாப் பொருள்கள்மீதும் ஐந்து சதவீத இறக்குமதி வரி விதிக்கப்பட்டது. தொடக்கத்தில் பருத்தித் துணிகளுக்கு மட்டும் இறக்குமதி வரி விலக்கு இருந்தது. விரைவில் அவ்விலக்கும் நீங்கியது. அதற்குப் பதிலாக இந்தியாவில் உற்பத்தியாகும் பருத்தித் துணிகளுக்கும் தீர்வை தரவேண்டியதாயிற்று. 1896-ல் இறக்குமதி வரியும், இந்தியாவில் உற்பத்தியான பொருள்கள் மீது உள்ள தீர்வையும் மூன்றரை சதவீதத்திற்குக் குறைந்தன.

இராணுவம் : 1893-ல் இராணுவ நிர்வாகத்தில் முக்கியமான மாறுதல் உண்டாகியது. சென்னை, பம்பாய் மாகாணங்களில் இருந்த தலைமைப் படைத்தலைவர்களின் (Commander-in-chief) பதவி ஒழிக்கப்பட்டது. 1895-ல் ஷை மாகாணங்களில் இருந்த படைகள் வங்காளத்திலும் வடமேற்கு மாகாணங்களிலும் இருந்த படைகளைப் போல் ஒரு லெப்டினண்ட்—ஜெனரலின்கீழ் இருந்து வரத் தொடங்கின. இதனால் இந்தியாவின் பல பாகங்களிலும் இருந்துவந்த படைகள் ஒரே தலைமைப் படைத்தலைவரின் கீழ் வரலாயின. அவரின்கீழ் நான்கு லெப்டினண்ட்—ஜெனரல்கள் இருந்தனர். இந்தியாவின் அரசியல் ஒற்றுமை வளர்ச்சியை நோக்குமிடத்து இச்சீர்திருத்தம் முன்பே செய்திருக்கவேண்டும். எனவே மிகவும் காலங் கடந்தே இது நிகழ்ந்தது எனலாம்.

அபின் குழு : 1893-ல் அபின் உபயோகிப்பதால் உடல்நலமும் நல்லொழுக்கமும் கெடுவதனை ஆராய ஒரு குழு நியமிக்கப்பட்டது. அப்பொழுது இந்தியாவில் அபின் உற்பத்தி அரசாங்கத்தில் தனிஉரிமையாக இருந்தது. அபின் இந்தியாவில் விற்பனையானதுடன் சீனாவிற்கும் ஏற்றுமதியாகியது. அதனால் அரசாங்கத்திற்குக் கணிசமான வருவாயும் கிடைத்துவந்தது. அபின் குழு இச்சிக்கலை ஆரஅமர ஆராய்ந்து 1895-ல் அரசாங்கத்திற்குத் தன் முடிவினைத் தெரிவித்தது. அதன்படி அபின் உற்பத்தி அரசாங்கத்தின் தனி உரிமையாகவே தொடர்ந்து இருக்கவேண்டுமென முடிவாயிற்று. அதனால் 1908-லிருந்து சீனாவிற்கு அபின் ஏற்றுமதி செய்வது படிப்படியாகக் குறையவேண்டியதாயிற்று 1913-ல் ஏற்றுமதி முற்றிலும் நின்றது. மேலும் தூரக்கிழக்கு நாடுகளுக்கு அபின் ஏற்றுமதி செய்வதும் சிறிது சிறிதாகக் குறைக்கப்பட்டது. 1926-ல் மருத்துவத்திற்கும் விஞ்ஞான ஆராய்ச்சிக்கும் அன்றி வேறு வகைக்கு ஏற்றுமதியாகும் அபினின் அளவு ஆண்டிற்குப் பத்துசதவீதம் குறைந்து கொண்டே வந்தது. முடிவாக 1935-ல் அபின் ஏற்றுமதி

அறவே நிறுத்தப்பட்டது. ஆனால் மருத்துவத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் பயன்பட ஏற்றுமதி அனுமதிக்கப் பட்டது. வருவாயை நோக்காது பொதுவாக நல்லொழுக் கத்திற்காக அபினியின் ஏற்றுமதியை அரசாங்கம் நிறுத்தியது மிகவும் பாராட்டத்தக்கதோர் அருஞ் செயலேயாம்.

பஞ்சம்: 1895-ல் மழை குறைந்ததாலும் அடுத்த ஆண்டு மழையே சிறிதும் இல்லாததாலும் ஒரு பெரும் பஞ்சம் ஏற்பட்டது. இது பஞ்சாபு, இராசபுதனம், வட மேற்கு மாகாணம், பீகார் வங்காளத்தின் சில பகுதிகள், மத்திய மாகாணம், பீரார், பம்பாய், சென்னை, வடபர்மா முதலிய இடங்களைப் பெரிதும் பாதித்தது. வடமேற்கு மாகாணங்களில் பஞ்ச நிவாரணம் மிக நல்ல முறையில் அளிக்கப்பட்டது, இப்பஞ்சத்தால் மொத்தம் ஏழரை இலட்சம் மக்கள் உயிரிழந்தனர்; சுமார் நாற்பது இலட்சம் மக்கள் அரசாங்கத்தின் உதவியைக் கொண்டுதான் உயிர் வாழமுடிந்தது; அரசாங்கத்திற்கு இதனால் சுமார் அரைக் கோடி பவுன் செலவேற்பட்டது. 1898-ல் பஞ்ச நிவாரண ஆய்வுக்குழு ஒன்று சர் ஜேம்ஸ் லயல் தலைமையில் ஏற்பட்டது. அதனுடைய அறிக்கையை அரசாங்கம் கவனிப்பதற்குள் 1900-ல் மீண்டும் ஒரு பஞ்சம் ஏற்பட்டது.

பிளேக்கு: 1896-ல் (புபோனிக்) பிளேக்கு என்னும் கொள்ளை நோய் பம்பாயில் பரவத்தொடங்கியது. சீனா விலிருந்து பம்பாய்க்கு வந்த தானியக் கப்பல்களிலிருந்த எலிகளே இது பரவக் காரணமாயிருந்தன. 1904-ம் ஆண்டு தொடக்கத்தில் இந்நோயால் இருபது இலட்சத் திற்கு மேற்பட்ட மக்கள் உயிரிழந்தனர். நோய் பரவு வதைத் தடுப்பதற்காக அரசாங்கம் கடுமையான விதிகளை விதித்துப் பின்பற்றியது. வீடுகளைச் சோதித்தல், நோய் கண்டோரை ஒதுக்கிவைத்தல், ஊசிபோடுதல் முதலிய விதிகளைக் கடுமையாகப் பின்பற்றியதால் அதிகாரிகளுக் கும் மக்களுக்கும் இடையே சச்சரவு ஏற்பட்டது. 1897-ல்

இரண்டு ஆங்கிலேய அதிகாரிகள் இதனுல் கொலையுண்டனர். அடுத்த ஆண்டு பம்பாயில் பல இடங்களில் கலகம் ஏற்பட்டது. இதன் பயனுக அரசாங்கம் கொள்ளை நோய் தடுப்பு விதிகளை அனுசரிக்கும் முறையைத் தக்கபடி மாற்றியமைத்தது.

எல்ஜின் பிரபுவின் கடைசிக்காலம்: 1899-ம் ஆண்டு ஜனவரி மாதம் எல்ஜின் இந்தியாவை விட்டுப் புறப்பட்டார். 1905-லிருந்து 1908 வரை அவர் இங்கிலாந்து நாட்டு அமைச்சர் குழுவில் குடியேற்றநாட்டு மந்திரியாக அமர்ந்திருந்தார்; முடிவில் 1917-ம் ஆண்டு காலமானுர். எல்ஜின் தமது இந்திய நிர்வாகத்தில் பல புதிய இடர்ப்பாடுகளைக் கண்டார்; தமது ஆலோசகர்களின் வழியே தம்மால் முடிந்தமட்டும் அவற்றை நீக்கவே பாடுபட்டார்.

———

பகுதி 11

சமயமும் இந்திய தேசீய இயக்கமும்

பிரம்ம சமாசம் : இராஜாராம் மோகன்ராய் இறந்த பின் செயலற்றிருந்த பிரம்ம சமாசத்திற்கு ஊக்கமளித்து அதை வளர்த்த பெருமை தேவேந்திரநாத தாகூரையே (பி. 1817 – இ. 1905) சாரும். அவர் இந்து கிறித்தவ சமயங்கள்பால் கொண்டிருந்த மனப்பான்மையை முன்பே கண்டோம். மொத்தத்தில் அவர் ஒரு பழமை வாதியே; புராதன இந்தியாவின் இலட்சியங்களைப் பெரிதும் போற்றியவர்; கடவுளைப் பற்றிய சிந்தனையை மிகவும் வலியுறுத்திய பக்தர். 1857-ல் கேசவ சந்திரசென் (பி. 1838 – இ. 1884) பிரம்ம சமாசத்தின் உறுப்பினரானார். சிறிது காலம் கழித்து அவரே சமாசத்தின் ஆச்சாரியரானார். அப்பொழுது தேவேந்திரநாத தாகூருக்கு மகரிஷி பட்டத்தை வழங்கினார். கேசவர் கிறித்தவ சமயத்தில் கொண்டிருந்த ஈடுபாட்டைத் தேவேந்திரநாதர் விரும்பாத தால் இருவரும் 1865-ல் பிரிய நேரிட்டது. கேசவ சந்திர சென் முயன்றதன் பயனாகவே 1872-ல் சிவில் திருமணச் சட்டத்தை அரசாங்கம் நிறைவேற்றியது. 1881-ல் கேசவர் தமது "புது சமய முறை" (New Dispensation) இயக்கத்தைத் தொடங்கித் தாமே அதன் தீர்க்கதரிசி யானார். இதனால் பிரம்ம சமாசத்தில் இரண்டாவது பிளவு ஏற்பட்டது. ஆகப் பிரம்ம சமாசத்தில் மூன்று பிரிவுகள் இருந்துவரலாயின. தேவேந்திரநாத தாகூர் தலைமையில் இயங்கி வந்தது ஆதி பிரம்ம சமாசம்; அது இந்து மதத்தைப் போற்றியது. சதாரண் பிரம்ம சமாசம் கிறித்தவ மதத்தைப் போற்றியது. இவை இரண்டிலும் சேராத பக்தர்களைக் கொண்டது மூன்றாவது பிரம்ம சமாசம்; அது கேசவ சந்திரசென்னின் தலைமையில் இயங்கி வந்தது. பிரம்ம சமாசம் வங்காளத்தில்தான் சிறப்புடன் விளங்கியதென்றாலும், பம்பாய், சென்னை முதலிய இடங்

களில் உள்ளவரும் அதனை ஓரளவு போற்றி ஆதரித்தனர். 1867-ல் பம்பாயில் பிரார்த்தன சமாசம் ஒன்று ஏற்பட்டது. R. G. பந்தார்க்கார், M. G. ரானடே முதலியோர் அதன் தலையாய உறுப்பினர்களில் இருவர் ஆவர்.

ஆரிய சமாசம் : 1875-ல் கத்தியவார் பிரதேசத்தைச் சார்ந்த மூல சங்கரர் என்ற பிராமணத் துறவி பம்பாயில் ஆரிய சமாசத்தைத் தொடங்கினர். அவரே பின்னர்த் தயாநந்த சரசுவதி (பி. 1824 – இ 1883) என்றழைக்கப் பட்டார். இவருடைய இயக்கம் பெரும்பாலும் பஞ்சாபு, ஐக்கிய மாகாணம் முதலிய இடங்களில் ஆதரவுபெற்று விளங்கியது. 1877-ல் லாகூரில் ஆரிய சமாசத்தின் பிரிவு ஒன்று தொடங்கியது. விரைவில் லாகூர் ஆரிய சமாசத் தின் தொண்டுக்கு நடுவிடமாக விளங்கியது. கடவுள் ஒருவரே என்ற கோட்பாட்டைத் தயாநந்த சரசுவதி வலியுறுத்தினர் ; மேலும் வேதங்கள் கடவுளின் திருவாக்கே என்றும் நம்பினர் ; உருவ வணக்கத்தையும் புராண இந்து சமயத்தையும் அவர் ஏற்றுக்கொள்ள வில்லை ; தனிப்பட்டவர்களின் மதிப்பின் அடிப்படையில் எழும் சாதிமுறையையே போற்றினர். அவருடைய வேத விளக்கம் வைதீகர்களின் வேத விளக்கத்தி னின்றும் மாறுபட்டது. இவர் வட மொழியிலும் இந்தியிலும் பல நூல்கள் இயற்றியுள்ளார். வட மொழியில் இயற்றிய "வேத பாஷ்யம்" என்ற நூல் முற்றுப்பெறவில்லை. அதையே எளிய நூலாக வடமொழி யிலும் இந்தியிலும் எழுதியுள்ளார். சத்தியார்த்தப் பிரகாசம் (Satyarth Prakash) என்னும் இவரெழுதிய இந்தி நூல் திருமணம், கல்வி, அரசாங்கம், சமயம் முதலிய பலவற்றைப் பற்றி ஆராய்ந்து விளக்குவதாகும். சுருங்கக் கூறின் ஆரிய சமாசம் இந்துக்களின் பண்பாட்டை வலியுறுத்தி இந்திய தேசீய இயக்கம் வளர்வதற்கான சக்தியை அது தோற்றுவித்தது எனலாம். பிரம்ம சமாச மும் ஆரிய சமாசமும் இந்தியாவின் முன்றேற்றத்திற் காகப் பல வகைகளிலும் தொண்டாற்றியுள்ளன.

இராமகிருஷ்ண பரமஹம்சர்: இராமகிருஷ்ண பரமஹம்சர் (பி. 1834 – இ 1886) வங்காளத்தில் ஹூக்ளி அருகே உள்ள ஊரில் பிராம்மண குலத்தில் தோன்றியவர். இவருடைய பெயர் முதலில் கடாதா சாட்டர்ஜி என்பதாகும். எல்லா மதங்களுக்கும் பொதுவாக உள்ள அடிப்படை உண்மைகளை இவர் உணர்ந்தவர்; ஒவ்வொரு மதமும் கடவுளை அடையக்கூடிய ஒவ்வொரு வழியேயெனக் கருதியவர்; ஒவ்வொருவரும் தத்தம் சமயத்தைப் பின்பற்றவேண்டுமென்று விரும்பியவர்; இந்துக்களுக்கு மிகவும் ஏற்றது இந்துமதமே தவிர வேறு மதமன்று என்று வலியுறுத்தியவர். சாதாரண மக்களுக்கு இவர் கூறிய உபதேசம் யாதெனில் பெண்ணாசையையும், பொருளாசையையும் விட்டுவிடவேண்டுமென்பதே. சுருங்கக்கூறின் பரமஹம்சர் ஒரு வேதாந்தியாகவும், பக்தராகவும், யோகியாகவும் திகழ்ந்தார். அவருடன் தொடர்புகொண்டு அவருடைய அறவுரைகளால் பயனடைந்தோர் பலர்.

சுவாமி விவேகானந்தர் : இராமகிருஷ்ண பரமஹம்சரின் புகழ் பரவுவதற்குக் காரணமாக இருந்தவர் அவருடைய தலையாய சீடரான நரேந்திரநாத தத்தா என்பவர் ஆவார். இவரே பின்பு சுவாமி விவேகானந்தர் (பி. 1862 – இ. 1902) என்றழைக்கப்பட்டார். இவர் 1893-ம் ஆண்டு சிகாகோ (அமெரிக்கா) நகரில் கூடிய பல சமயப் பாராளுமன்றத்தில் (Parliament of Religions) இந்து மதத்தைப் பற்றிப் பேசிப் பலருடைய உள்ளங்களைக் கொள்ளைகொண்டார். வேதாந்தத்தின் புகழை அமெரிக்காவில் பரப்பினர். அதன்பின் ஐரோப்பாவில் சுற்றுப் பயணம் செய்துவிட்டு 1897-ல் இந்தியாவிற்குத் திரும்பினர். அடுத்த ஆண்டே இவர் மீண்டும் ஐரோப்பாவிற்கும் அமெரிக்காவிற்கும் சென்றார். சுருங்கக்கூறின் விவேகானந்தர் பொதுவாக இந்து நாகரிகத்தின் சிறப்பையும் சிறப்பாக வேதாந்தத்தின் புகழையும் உலகமறியும்படி செய்தவர். இந்தியர்களுக்கு இவர் கூறிய அறவுரைகளின்

சாரம் யாதெனில் "நீ இந்தியனுக இருப்பதைப் பற்றிப் பெருமை கொள்" என்பதே யாம். இவரை ஏசுநாதருக்குப் பால் அடிகள் (செயிண்டு) போல இராமகிருஷ்ண பரம ஹம்சருக்கு விவேகானந்தர் என்று கூறுவதுண்டு.

பிரம்மஞான சங்கம்: 1875-ல் H. P. பிளாவட்ஸ்கி என்ற ருஷிய மாதும், கர்னல் H. S. ஆல்காட் என்ற அமெரிக்கரும் நியூயார்க்கில் பிரம்மஞான சங்கம் நிறுவினுர்கள். 1870-ல் கர்னல் ஆல்காட் இந்தியாவில் தாம் நிகழ்த்திய சொற்பொழிவுகளில் கீழ்நாட்டுப் புனித நூல்களின் சிறப்புகளையும், சமயம் தேசீய இயக்கத்திற்கு அளிக்கக்கூடிய ஊக்கத்தையும் வலியுறுத்தினுர். 1882-ல் சென்னை அருகே உள்ள அடையாறே பிரம்மஞான சங்கத்தின் தலைமைஅலுவலகமாகியது. 1907-ல் கர்னல் ஆல்காட் மரணம்டைந்தபின் அன்னிபெசண்ட் அம்மையார் (பி. 1847—இ. 1933) அச்சங்கத்தின் தலைவரானுர். இவ்வம்மையார் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர். 1893-ல் அவர் இந்தியாவிற்கு வந்தார். 1898-ல் காசி நகரில் சென்ட்ரல் இந்துக்கல்லூரியை ஏற்படுத்தினுர், அவருடைய அரசியல்தொண்டும் செய்தித்தாள் பணியும் முதல் உலகப்போர்க் காலத்திலும் அதன் பின்பும் இந்திய தேசிய இயக்கத்தை வலுப்படுத்தின. சுருங்கக் கூறுமிடத்து மேலே கூறப்பட்டுள்ள சமய இயக்கங்கள் இந்து கலாச்சாரம் சமுதாயச் சீர்திருத்தங்கள் முதலியவற்றை வற்புறுத்தியதுடன் தேசிய இயக்கம் வளர்ச்சியுறப் பெரிதும் காரணமாயிருந்தன. அவற்றின் உறுப்பினர் சிலர் அரசியலில் தங்களது சமயக் கோட்பாட்டிற் கேற்றவாறு தீவிர பங்குகொண்டனர்.

பகுதி 12

கர்சான் (1899--1905)

கர்சான் பிரபு : ஜார்ஜ் நதானியல் கர்சான் 'பாரன்' (Baron) ஸ்கார்ஸ்டேலின் மகன். 1859-ம் ஆண்டு ஜனவரி மாதம் கெடில்ஸ்டன் (டெர்பி ஷயர், இங்கிலாந்து) நகரில் பிறந்தவர். இவர் ஈட்டன் பள்ளியிலும் ஆக்ஸ்போர்டில் பாலியல் கல்லூரியிலும் கல்விபயின்றவர். ஆக்ஸ்போர்டு மாணவர் கழகத்தில் பெரும்பங்கு கொண்டு 1880-ம் ஆண்டு அதன் தலைவராக விளங்கினர். மாணவராக இருக்கும்பொழுது இவர் கவிபாடுவதில் ஆர்வங் காட்டினர். அக்காலத்திலேயே இவரது தற்பெருமை வெளிப்பட்டது. 1882-லிருந்து 1895 வரை இவர் ஓய்வு ஒழிவு இல்லாமல் பல நாடுகளையும் சுற்றிவந்தார். உலகம் முழுவதையும் இருமுறை சுற்றியவர் கர்சான். 1886-ல் இவர் இங்கிலாந்து நாட்டுப் பாராளுமன்றத்தின் உறுப்பினரானர். 1891-லிருந்து 1892 வரை இவர் உதவி இந்தியா அமைச்சராக இருந்தார். பின்னர் 1895-லிருந்து 1898–வரை இவர் இங்கிலாந்தின் வெளிநாட்டு அமைச்சராகப் பணியாற்றினர். ஆசிய நாடுகளிலும் குறிப்பாக இந்தியாவிலும் இவர் செய்த சுற்றுப்பயணங்களே அந்நாடுகளின் பிரச்சினைகளைப்பற்றி நூலெழுத மிகவும் உதவின. " மத்திய ஆசியாவில் ருஷியா " (1889) "பாரசீகமும் தூரக்கிழக்கு நாடுகளின் பிரச்சினைகளும்" என்ற நூல்களை இவர் எழுதியுள்ளார். மிகச் சிறுவராக இருக்கும் பொழுதே இவர் இந்தியாவின் அரசப்பிரதிநிதியாகவும், இங்கிலாந்து நாட்டின் பிரதம அமைச்சராகவும் வரவேண்டுமென அவாக்கொண்டவர். இவரது முதல் விருப்பம் நிறைவேறியது ; ஆனல் இரண்டாவது நிறைவேறவில்லை. தமக்கு இந்தியப் பதவி முடிந்தவுடன் இங்கிலாந்தின் பாராளுமன்ற உறுப்பினராக இவர் இருக்க விரும்பியதால் இவருக்கு அயர்லாந்து நாட்டு

'பாரன்' பட்டம் வழங்கப்பட்டது. 1899-ம் ஆண்டில் ஜனவரி மாதம் கர்சான் இந்தியாவை அடைந்து அரசப் பிரதிநிதிப் பதவியை ஏற்றுக்கொண்டார்.

எல்லேப்புறக் கொள்கை : அரசப்பிரதிநிதியாகும் முன் கர்சான் ஆதிபத்திய எல்லேப்புறக் கொள்கையை ஆதரித்தார். ஆனல் அரசப்பிரதிநிதியான பின் அக் கொள்கை ஏற்றதல்ல வென்று விட்டுவிட்டார். ஆயினும் அதேசமயத்தில் ஆங்கிலேயர் வசத்திலிருந்த குவெட்டா, சிட்ரல் போன்ற முக்கியமான எல்லேப்புற ஊர்களே விட்டு விடவும் கர்சான் உடன்படவில்லே. எனவே அவரது எல்லேப்புறக்கொள்கை ஆதிபத்தியக் கொள்கையுமன்று, "பிற்போக்குக்" கொள்கையுமன்று. "பிற்போக்குக்" கொள்கையாவது எல்லேப்புற முழுவதையும் வென்று இந்திய அரசாங்கத்தின் நேரடி ஆட்சிக்குட்படுத்து வதே ஆம். எல்லேப்புறத்திலிருந்த ஆங்கிலேயப்படைகள் பெரிதளவில் திருப்பியழைக்கப்பட்டன. அவற்றிற்குப் பதிலாகப் பிரிட்டிஷ் அதிகாரிகள் தலேமையில் இந்தியர் களேக்கொண்ட படைகள் எல்லேப்புறத்தில் நிறுத்தப் பட்டன. எல்லேப்புறப் பிரதேசத்தில் அமைதியையும் ஒழுங்கையும் நிலேநிறுத்துவது அங்கு வாழும் மக்களின் பொறுப்பென அவர்களிடமே விடப்பட்டது. ஆனல் அவர்கள் பிரிட்டிஷ் இந்தியாவின் எல்லேயைக் கடக்காமற் பார்த்தல் வேண்டும். அவர்களின் உள்நாட்டு நிர்வாகத் திலும் மதவிஷயங்களிலும் தலேயிடுவதில்லேயென இந்திய அரசாங்கம் முடிவுசெய்தது. அதேசமயத்தில் பிரிட்டிஷ் இந்தியாவின் எல்லேயில் ஆங்கிலேயர் தங்களது நிலேயை வலுப்படுத்திக்கொண்டனர். படைவீடுகள் அதிகரிக்கப் பட்டன. இராணுவ முக்கியத்துவமுள்ள இடங்களுக்கு இருப்புப் பாதைகள் ஏற்பட்டன. எல்லேப்புற மக்களுக்கு ஆயுதங்களும் வெடிமருந்தும் கிடைக்கமாலிருப்பதற் காகத் தடைகள் எழுந்தன. இக்கொள்கை சிக்கனமானது; இராணுவத்திறமை மிக்கது; இக்கொள்கையையே மூன்ரு வது ஆப்கானியப் போர் (1919) தொடங்கும்வரை

வெற்றியுடன் பின்பற்றினர். கடைசியாக 1901-ல் கர்சான் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தை நிறுவினர். பழைய வடமேற்கு மாகாணங்களும் அயோத்தியும் ஐக்கிய மாகாணம் (United Provinces of Agra and Oudh) ஆயின. புதிய வடமேற்கு எல்லைப்புற மாகாணமோ சிந்து நதிக்கப்பாலிருந்த பஞ்சாபின் சில ஜில்லாக்களையும் இதர எல்லைப்புறப்பகுதிகளையும் கொண்டதாயிற்று. ஒரு தலைமைக் கமிஷனரின்கீழ் அதன் நிர்வாகம் நடைபெற்றது. அவர் இந்திய அரசாங்கத்திற்கு நேரடியாகக் கட்டுப்பட்டவர்,

ஆப்கானிஸ்தானம் : 1901-ல் அப்துர் ரஹ்மான் இறந்தபின் அவருடைய மகனை ஹபிபுல்லா எவ்விதப் போட்டியுமின்றி அரியணை ஏறினர். அவர் தமது தந்தை செய்துகொண்ட உடன்படிக்கையைப் புதுப்பிக்க வேண்டுமென்று ஆங்கிலேயர்கள் கோரினர். தமது தந்தை செய்த உடன்படிக்கை தம்மைக் கட்டுப்படுத்தாது என்று ஹபிபுல்லா கூறுவாரென ஆங்கிலேயர் ஐயம் கொண்டதே இதற்குக் காரணம். ஆனல் அமீர், இரண்டு அரசுகள் செய்துகொண்ட உடன்படிக்கையைப் புதுப்பிக்க வேண்டியது அவசியமில்லை என்று கூறிவிட்டார். மேலும் தமக்குரிய உதவித் தொகையையும் அவர் பெருமலிருந்தார். கர்சானுக்கு முன் தற்காலிகமாக அரசப்பிரதிநிதி பதவியை வகித்த ஆம்தில்பிரபு இந்தப் பிணக்கைத் தீர்ப்பதற்குச் சர் லூயி டேன் என்பவரைக் காபூலுக்கு அனுப்பிவைத்தார். அமீருக்கும் ஆங்கிலேயருக்கும் அதன்பயனுக மீண்டும் நல்லுறவு ஏற்பட்டது. பழைய உடன்படிக்கையைப் புதுப்பிப்பதுபற்றி அமீர் கொண்ட கருத்தை ஆங்கிலேயர் ஏற்றுக் கொண்டனர். அமீர் " மேன்மை தங்கிய " (His Majesty) என்ற பட்டத்திற் குரியவரென்பதையும் ஆங்கிலேயர் ஒத்துக் கொண்டனர். தமக்கு வேண்டிய ஆயுதங்களை இறக்குமதி செய்து கொள்வதற்கும் அமீர் உரிமை பெற்றுர். அமீருக்குக் கொடுக்க வேண்டிய உதவித் தொகையின் நிலுவை முழு

வதையும் ஆங்கிலேயர் 1905-ல் அவருக்குக் கொடுத்தனர். இவ்வுடன்பாடு ஆங்கிலேயரின் ஏகாதிபத்தியப் பெருமைக்கு இழுக்கானது என்று சில ஆங்கிலேயர் கருதினர்.

பாரசீக வளைகுடா: கர்சான் காலத்தில் பிரான்சு, ருஷியா, ஜெர்மனி, துருக்கி முதலிய நாடுகளின் பாகப் போக்கால் பாரசீக வளைகுடா பிரதேசத்தில் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற்கு இடையூறு விளையும் நிலை ஏற்பட்டது. இதைச் சமாளிப்பதற்கு 1899-ல் கர்சான் பாரசீக வளைகுடாவிற்கு ஒரு கடற்படையை அனுப்பினார். அடுத்த ஆண்டு எதிரி நாடுகள் செய்த முயற்சி தோல்வியுற்றது. அவ்விடத்தில் ஆங்கிலேயருடைய ஆதிக்கத்தை அழிக்க எந்த நாடு முற்படினும் அதை ஆங்கிலேயர் எதிர்ப்பர் என 1903-ல் பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி எச்சரிக்கை செய்தார். அதே ஆண்டின் இறுதியில் கர்சான் வளைகுடாப் பிரதேசத்தை நேரிற் சென்று பார்வையிட்டு வந்தார். அப்பொழுது "இந்தியாவில் பிரிட்டிஷ் ஆதிக்கம் இருப்பது பாரசீக வளைகுடாவில் பிரிட்டிஷ் ஆதிக்கம் இருப்பதையே பொறுத்தது. வளைகுடாப் பிரதேசத்தில் பிரிட்டிஷ் ஆதிக்கம் மறையுமானால் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆதிக்கம் நெடுநாள் நீடித்திராது."* என்று அவர் கூறினார்.

திபேத்து: இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சீன அரசாங்கம் வலிவற்றிருந்தது. இதை வாய்ப்பாகக் கொண்டு, தலாய் லாமாவின் தலைமையில் இயங்கி வந்த திபேத்திய அரசாங்கம் அந்நாட்டின் மீது சீனா கொண்டாடிய ஆதிபத்திய உரிமையை நீக்க முயன்றது. அதன் பொருட்டு ருஷியாவுடன் நேச ஒப்பந்தமும் செய்து கொள்ள அதனுடன் திபேத்து பேச்சுவார்த்தை நடத்தியது. திபேத்தில் ருஷிய செல்வாக்கு ஏற்படுமானால் அது ஆசியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பெருமைக்கே கேடாகும் எனக் கருதிய கர்சான் அதைத்

---

* *34*, பக். *112*.

தடுக்க முடிவு செய்தார். திபேத் எந்த வல்லரசுடனும் சேராது தனித்திருக்கும் கொள்கையையே தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டுமென்பதை வற்புறுத்தவும் மற்றும் சில பொதுக் குறைகளை நீக்கவும் கர்னல் F. E. யங்ஹஸ்பண்ட் என்ற ஆங்கிலேயர் தலைமையில் கர்சான் ஒரு தூதுக் குழுவைத் திபேத்திற்கு அனுப்பிவைத்தார். இதற்கு இங்கிலாந்து அரசாங்கம் எளிதில் அனுமதி யளிக்கவில்லை. பிரிட்டிஷ் தூதுக்குழு சிக்கிம் நாட்டெல்லைக் கருகே உள்ள கம்பா ஜோங் என்ற இடத்தை அடைந்தது. அவ்விடத்தில் திபேத்தினைப்பற்றி அந் நாட்டரசாங்கத்துடனும் சீனாவுடனும் பேச்சு வார்த்தை நடத்த ஆங்கிலேயர் முயன்றனர். ஆனால் அம் முயற்சி தோல்வியுற்றது. பிரிட்டிஷ் தூதுக்குழு திபேத்தின் தலைநகரான லாசாவை நோக்கி முன்னேறத் தொடங்கியது. இதைத் திபேத்தியர் எதிர்த்துப் போரிட முற்பட்டனர். இங்கிலாந்து அரசாங்கமும் பிரிட்டிஷ் தூதுக் குழு லாசாவிற்கு இப்பாலிருந்த ஜியான்ட்ஸி என்னுமிடம் வரை முன்னேற அனுமதித்தது. இங்கிலாந்தின் இப் போக்கைப்பற்றி ருஷியா தடை எழுப்பியது. அதற்கு, இங்கிலாந்து, திபேத்தை வென்று பிரிட்டிஷ் பேரரசுடன் சேர்க்கும் நோக்கம் தனக்கில்லை யென உறுதி கூறியது. 1904-ம் ஆண்டு ஜனவரி மாதம் பிரிட்டிஷ் தூதுக்குழு ஜியான்ட்ஸியை நோக்கி முன்னேறியது. வழியில் திபேத்தியர்களுடன் செய்த ஒரு போரில் பெரும்பாலான திபேத்தியர்கள் உயிரிழந்தனர். ஏப்ரல் மாதம் ஆங்கிலேயர்கள் ஜியான்ட்ஸி நகரை அடைந்தனர். அத் தருணத்திலும் தலாய் லாமா ஆங்கிலேயருடன் பேச்சு வார்த்தை நடத்த மனம் கொள்ளவில்லை. எனவே மேற்கொண்டு லாசாவை நோக்கி முன்னேறப் பிரிட்டிஷ் அரசாங்கம் முடிவு செய்தது. கடைசியாக ஆகஸ்ட்டு மாதம் ஆங்கிலேயப் படை திபேத்தியரை முறியடித்து லாசாவில் புகுந்தது. இதற்குள் ஆங்கிலேயருடன் உடன்பாட்டிற்கு வரத் தலாய் லாமா இணங்கி விட்டார். பின்னர் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி திபேத்தின் வெளி விவகாரம் ஆங்கிலேயரின்

கட்டுப்பாட்டின்கீழ் நடைபெற வேண்டியதாயிற்று. 75 லட்ச ரூபாயும் போர்நட்ட ஈடாகத் திபேத் கொடுக்க வேண்டியதாயிற்று. அத் தொகையைப் பல ஆண்டுத் தவணைகளில் பெற்றுக் கொள்ள ஆங்கிலேயர் ஒப்புக் கொண்டனர். தொகை முழுவதும் கொடுக்கும்வரை சிக்கிம், பூடான் நாடுகளுக்கு இடையே சும்பி சமவெளி ஆங்கிலேயர் வசம் இருக்க வேண்டும். இந்தியா திபேத்துடன் வாணிகம் நடத்துவதற்கான ஏற்பாடுகளையும் செய்தது. ஜியான்ட்ஸியில் ஒரு ஆங்கிலேய வாணிகப் பேராள் இருப்பதற்கும் அவர் லாசா சென்றுவரும் உரிமை பெற்றிருப்பதற்கும் லாசா உடன்படிக்கை அனுமதித்தது. இவ்வுடன்படிக்கையின் சில நிபந்தனைகளை இங்கிலாந்து அரசாங்கம் ஆதரிக்கவில்லை. எனவே அப்பொழுதிருந்த இந்தியா மந்திரி உடன்படிக்கையைத் திருத்துமாறு கர்சானுக்கு உத்திரவிட்டார். அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட உடன்படிக்கையின்படி திபேத்து நாடு கொடுக்க வேண்டிய போர் நட்ட ஈடு 25 லட்ச ரூபாயாகக் குறைக்கப்பட்டது. ஆனல் அத் தொகை மூன்று ஆண்டுத் தவணைகளில் கொடுபட வேண்டும். தொகையைக் கொடுத்து முடிக்கும் வரை ஆங்கிலேயர் சும்பி சமவெளியைத் தம் ஆட்சியில் வைத்திருக்க வேண்டும். பிறகு அதைத் திபேத்தியரிடம் விட்டுவிட வேண்டும். மேலும் ஜியான்ட்ஸியில் இருக்கக் கூடிய ஆங்கிலேய வாணிகப் பேராளுக்கு லாசாவிற்குச் செல்லக்கூடிய உரிமை கிடையாது. திபேத்து நடவடிக்கைகளில் கர்சான் கடைப்பிடித்த கொள்கை ஆப்கானிஸ்தான நடவடிக்கைகளில் லிட்டன் கடைப்பிடித்த கொள்கையைப் பல வகைகளிலும் ஒத்துள்ளது. திபேத்து உயரமான நாடு ; அங்கே போரிடுவது அருமை ; ஆயினும் திறமையுடனும் மன உறுதியுடனும் போரிட்டுக் கர்னல் யங்ஹஸ்பண்ட் ஆங்கிலேயருக்கு வெற்றியைத் தேடித் தந்தார். கர்சானுடைய திபேத்துக் கொள்கை ஏகாதிபத்தியக் கொள்கையேயாகும் ; சர்வதேச நியதிக்கும் நேர்மைக்கும் புறம்பானதே ஆம்.

பாதுகாப்பிற்குட்பட்ட நாடுகள்: இந்திய சிற்றரசுகளின் ஆட்சி முறையில் கர்சான் மிகுந்த ஆர்வம்கொண்டார். பிரிட்டிஷ் இந்தியாவை ஒப்ப நிர்வாகத்துறையில் அவைகளும் முன்னேற வேண்டுமெனவே அவர் விரும்பினார். சுருங்கக் கூறுமிடத்துக் கர்சான், இந்தியப் பேரரசின் நிர்வாகத்தில் பாதுகாப்பிற்குட்பட்டநாடுகளின் சிறப்பினை நன்கு உணர்ந்திருந்தார். அவருக்குப்பின் வந்த II-ம் மிண்டோ அவருடைய கொள்கையை ஆதரிக்கவில்லை. 1901-ல் சிற்றரசக் குடும்பத்தினர்களுக்கும் உயர்குடி மக்களுக்கும் போர்ப்பயிற்சி அளிப்பதற்காகப் பேரரசுப் பணிப்படை (Imperial Cadet Corps) ஒன்று அமைக்கப்பட்டது. அவர்களின் கல்விநிலையிலும் கர்சான் மிகுந்த ஊக்கம் காட்டினார். 1853-லும் 1860-லும் செய்துகொண்ட உடன்படிக்கைகளின்படி ஆங்கிலேயர் பீராரை நிசாமிடமிருந்து பெற்றதை முன்பே கண்டோம். 1902-ல் கர்சான் ஐதராபாத்திற்குச் சென்றபொழுது பீராரைச் சாசுவதக் குத்தகைக்கு நிசாமிடமிருந்து பெற்றுக்கொண்டார். அதன்மீது நிசாம் பாராட்டிய உரிமையை இவ்வாறு ஆங்கிலேயர் ஏற்றுக்கொண்டனர். பீரார் பிரச்சினைக்கே காரணமாயிருந்த 'ஐதராபாத் படை' இந்தியப் படையுடன் ஒன்ருகிவிட்டது. ஐதராபாத்தில் ஆங்கிலேயர் வேறு படை எதையும் வைத்திருக்கவில்லை என முடிவுசெய்தனர். பின்னர், பீரார் மத்திய மாகாணத்தின் ஒரு பகுதியாயிற்று. 1905-ல் காஷ்மீர் மன்னர் மீண்டும் அவர் பதவியில் அமர்த்தப்பட்டார்.

ஆட்சிமுறை: நிர்வாகத் துறையின் எல்லாப் பிரிவுகளிலும் கர்சானுடைய சீர்திருத்த ஆர்வம் விளங்கியது. எந்தப் பிரச்சினையையும் நுண்ணறிவாளர் குழுவைக் கொண்டே ஆய்ந்து, அந்த ஆய்வின் அடிப்படையில் சட்டங்களை இயற்றுவதே கர்சானுக்கு மிகவும் பிடித்தமான முறையாகத் தோன்றியது. அவர் மூன்று திட்டங்களை வகுத்தார். அவை ஒவ்வொன்றும் பன்னிரண்டு பிரச்சினைகளைப் பற்றியதாகும். நிர்வாகத்துறையில் எல்லாவற்றி

லும் கர்சான் நன்கு கவனம் செலுத்திஞர். கர்சானுடைய அயராத உழைப்புச் சக்தியும், நிர்வாகத்திறமைபற்றி அவர் கொண்டிருந்த உயர்ந்த நோக்கங்களும், பல துறைகளிலும் மிக்க பயனுள்ள சீர்திருத்தங்களைச் செய்வதற்கு அவருக்கு உதவின. ஆட்சி முறையில் கர்சானுடைய சாதனை பெரிது எனினும் அவர் இந்தியரின் பொல்லாப்பிற்கே ஆளாஞர். இதற்குக் காரணமாவன நல்லாட்சி அல்லது பொதுநன்மை பற்றி அவர் கொண்டிருந்த கருத்தும் அவருடைய இயல்புமே ஆம். நல்லாட்சிக்கும் சுய ஆட்சிக்கும் தொடர்பில்லை என அவர் கருதியது, அவரைப்பல இடப்பாட்டிற்காளாக்கியது. இதஞல்தான் அவர் தேசியவாதிகளின் பகையாளியாஞர். அவருடைய பகை தேசிய இயக்கத்தை ஊக்குவித்ததேயன்றி அழிக்கவில்லை. இருப்பினும் நிர்வாகத்தில் பல துறைகளில் கர்சான் நல்ல பணியே புரிந்திருக்கிருர். இந்திய அரசாங்கம் திறமை மிகுவதும் முன்னேற்றத்தில் ஈடுபாடு கொள்வதுமே அவரது நோக்கமாகும். இந்தக் கண்கொண்டு நோக்கும்பொழுது அவரது ஆட்சிக் காலத்தை டல்ஹௌசியின் காலத்தோடு ஒப்பிடலாம். கர்சானுடைய நிர்வாகம் சில கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டது ; ஒவ்வொரு நிர்வாகத்துறைப் பிரிவிற்கும் ஒரு கொள்கை இருக்கவேண்டும் ; இந்திய விவசாயிகளின் நலத்தை ஒருபொழுதும் மறக்கக்கூடாது ; அரசாங்கம் தனது கொள்கையை ஐயமற வெளியிட வேண்டும் ; அதைத்தொடர்ந்து கடைப்பிடிக்கவும் வேண்டும் ; "எங்கும் எதிர்கால நோக்கு வேண்டும்........ எதிலும் நிகழ்காலத்திற்கு மட்டுமின்றி எதிர் காலத்திற்கும் பணிபுரிய வேண்டும்."* என்பவையே அக்கோட்பாடுகள்.

பஞ்சமும் பிளேக்கும் : மழையின்மையிஞல் 1900-ம் ஆண்டு மீண்டும் ஒரு பெரும் பஞ்சம் ஏற்பட்டது. அதற்கு முன்பு இருநூருண்டுகளில் இத்தகைய கொடும்பஞ்சத்தை எவரும் கண்டதில்லை. மேலும் 1896-ல் ஏற்பட்ட

* *34, பக். 479-480.*

பஞ்சத்தை அடுத்து இதுவும் ஏற்பட்டது, அதன் கொடுமையை மிகுதிப்படுத்தியது. பஞ்சத்துடன் காலரா, காய்ச்சல், வயிற்றளேச்சல் முதலிய நோய்களும் பரவத்தொடங்கின. இவற்ருல் வடமேற்கு இந்தியா, மத்திய இந்தியா, தக்கணம் முதலிய பகுதிகள் பெரிதும் இடர்ப்பட்டன. பஞ்ச நிவாரணத்திற்கென அரசாங்கம் ஏராளமாகப் பொருளேச் செலவிட்டது (அறுபது லட்சம் பவுன்). இருப்பினும் பிரிட்டிஷ் இந்தியாவில் மட்டும் சுமார் பத்து லட்சம் மக்கள் பஞ்சத்தின் கொடுமைக்காளாயினர். இப்பஞ்சச் சிக்கலே விரிவாக ஆராயும்பொட்டு சர் அந்தோணி மக்டனெல் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. குழுவின் முடிவு அறிக்கை 1901-ல் வெளியாகியது. பஞ்சத்தின் தொடக்கத்திலேயே நிலவரியைத் தள்ளுபடி செய்தல், கடன் கொடுத்துதவல் முதலிய முறைகளின் வழியே அரசாங்கம் பஞ்சத்திற்கு மக்கள் ஈடுகொடுக்கக்கூடிய மன உறுதியை வளர்க்க வேண்டுமெனக் குழு கூறியது. அதே சமயத்தில் நிலவரி அளவுக்குமேலாக உள்ளது என்ற கருத்தைக் குழு மறுத்தது. ஆயினும் உழவர்களின் நிலேயை உயர்த்த வேண்டும் என்பதைக் குழு ஒத்துக்கொண்டு அதற்கானவற்றைப் பற்றியும் பரிவுரை கூறியது. இக்குழுவின் அறிக்கையை நன்குணர்ந்த கர்சான், பஞ்சத்தைத் தடுப்பதற்கும் அப்பஞ்சத்திற்கு ஈடுகொடுப்பதற்குமான முயற்சிகளில் ஈடுபட்டார். ஆனல் மனித முயற்சி எல்லாம் பிளேக்கிடம் ஒன்றும் செய்ய முடியாமற் போய்விட்டது. பிளேக் நோயின் கொடுமைக்குச் சுமார் நாற்பது லட்சம் மக்கள் ஆளாயினர். இதனுல் 1900-ம் ஆண்டு பல கலவரங்களும் ஏற்பட்டன.

பொருளமைப்பு : 1893-லும் 1899-லும் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் அரசாங்கத்தின் பொருளமைப்பினேச் சீர்படுத்தின. வரவு செலவுத் திட்டத்தில் நிகர மிச்சம் தொடர்ந்து ஏற்படலாயிற்று. அதனுல்தான், மக்களுக்குத் தாராளமாகப் பஞ்சநிவாரண உதவி அளிக்க முடிந்தது. ஐந்து ஆண்டுகளுக் கொருமுறை மாகாணங்

களுடன் செய்துகொண்டிருந்த நிதி ஏற்பாடு 1904-ல் ஓரளவு நிலையானதாயிற்று. மேலும் உப்புவரி பெரிதும் குறைந்தது; மணங்கிற்கு 2½ ரூபாய்களாக இருந்தது 1 ரூபாய்க்கு குறைந்தது. இதைத் தவிர வேறு சில வரி களும் குறைக்கப்பட்டன.

நிலவரியும் வேளாண்மையும் : பஞ்சாபு மாகாணத் தில் கடன்பட்ட விவசாயிகளின் நிலத்தைக் கடன்கொடுத் தோர் கைப்பற்ருதிருக்க 1900-ம் ஆண்டு ஒரு சட்டம் இயற்றப்பட்டது. 1902-ல் நிலவரி பற்றி நிறைவேறிய தீர்மானத்தில் கண்டபடி நிலவரி உயர்வே பஞ்சத்திற்குக் காரணம் என்பதையும், நிலையான நிலவரித் திட்டத்தை இதர மாகாணங்களிலும் பின்பற்றினுல் பெரும்பயன் உண்டாகும் என்பதையும் அரசாங்கம் மறுத்தது. மேலும் படிப்படியாக மிக்கோ குறைந்தோ வரும் நிலவரித்திட்டம் தான் சிறந்தது என்றும் வலியுறுத்தியது. 1904-ல் விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் பெரும்பயன் அளிக்கக்கூடிய கூட்டுறவுக் கடன் சங்கங்களைப் பற்றிய சட்டம் நிறைவேறியது. பின்னர் 1912-லும் 1915-லும் இச்சட்டம் திருத்தியமைக்கப்பட்டது. 1905-ல் பஞ்ச காலங்களில் நிலவரியைக் குறைப்பதற்கான விதிகள் நிறைவேற்றப்பட்டன. இதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பே வேளாண்மைத் துறைத்தலைமையாளர்(Inspector General of Agriculture) ஒருவர் நியமிக்கப்பட்டார். பின்னர் வேளாண்மைபற்றி ஆராய பீகாரில் பூசா என்னு மிடத்தில் ஒரு ஆராய்ச்சிக்கூடமும் நிறுவப்பட்டது. 1905-லேயே கர்சான் அதற்கு அடிகோலினுர்.

வாணிகமும் தொழில்களும் : படை, போலீஸ், புகை வண்டி வழிகள், நீர்ப்பாசனம் முதலியவைகளின் நிர்வாக விஷயங்களில் கர்சான் மிகவும் ஈடுபட்டார். 1904-ல் அரசப்பிரதிநிதியின் நிர்வாகக் குழுவின் பொது மரா மத்துத்துறை உறுப்பினராக இருந்தவர் மற்ற உறுப்பினர் களைப் போல் சாதாரண உறுப்பினரானுர்; அதனுல் நிர்வாகக்குழுவின் மொத்த உறுப்பினரின் எண்ணிக்கை

ஆறுக மிகுந்தது. அவர்களில் ஒருவரிடம் வாணிகத் தொழில்துறை ஒப்படைக்கப்பட்டது. இந்தியாவின் தொழில் வளர்ச்சிக்காக ஜாம்ஷெட்ஜி டாடா (பி. 1839 — இ. 1904) கொண்டிருந்த திட்டத்தைக் கர்சான் ஆதரித்தார். ஜாம்ஷெட்ஜி இறந்த பின் அவருடைய புதல்வர்கள் அவருடைய முப்பெரும் திட்டங்களை நிறைவேற்றினர். 1910-ல் பம்பாயில் டாடா நீராற்றல் வழி மின்சார உற்பத்தித் தொழிற்சாலை நிறுவப்பட்டது. அடுத்த ஆண்டு பீகார் மாகாணத்தில் சக்சி (பின்னர் ஜாம்ஷெட்பூர் என்றழைக்கப்பட்டது) என்னுமிடத்தில் இரும்பு, எஃகு உற்பத்தித் தொழிற்சாலை அமைக்கப்பட்டது. அதே ஆண்டிலேயே பெங்களூரில் இந்திய விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடமும் நிறுவப்பட்டது.

கல்வி: 1901-ல் ஆங்கிலேயக் கல்வியாளர்கள் மாநாடு ஒன்று சிம்லாவில் நடந்தது. அதற்கு இந்தியர் எவரையும் அழைக்கவில்லை. சென்னைக் கிறித்தவக் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் மில்லர் ஒருவர்தான் அதில் கலந்துகொண்டவர்களில் அரசியல் அலுவற் சார்பற்றவர். அடுத்த ஆண்டு பல்கலைக்கழகங்களை ஆயக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. சட்ட அமைச்சர் சர் தாமஸ் ராலே அதன் தலைவரானார். இந்து உறுப்பினர் ஒருவரும் முஸ்லீம் உறுப்பினர் ஒருவரும் அதில் இருந்தனர். குருதாஸ் பானர்ஜி என்ற நீதிபதி இந்துக்களின் பிரதிநிதியாக அமர்ந்தார். பல்கலைக்கழகக் கல்விபற்றி அவர் தெரிவித்த கருத்து குழுவின் பெரும்பான்மை உறுப்பினரின் கருத்திற்கு முரணாக இருந்தது. 1904-ல் இந்தியப் பல்கலைக்கழகச் சட்டம் நிறைவேறியது. இதனால் பல்கலைக் கழகங்களிலிருந்த சில குறைபாடுகள் நீங்கின. ஆயினும் அதே சமயத்தில் இச்சட்டம் பல்கலைக்கழகங்கள் மீது இருந்துவந்த அரசாங்கக் கட்டுப்பாட்டை மேலும் பல வகைகளில் நெருக்கியது. எனவே சட்டத்தின் பிற்போக்கான கூறுகளைக் காங்கிரசு தலைவர் G. K. கோகலே சட்டசபையில் எடுத்து விளக்கி எதிர்த்து வாதாடினார்.

சர் பிரோஸ் ஷா மேத்தாவும் இச்சட்டத்தைக் கடுமையாக எதிர்த்தார்*. ஆயினும் சட்டம் செயற்பட்டது. கல்லூரிகள், உயர்நிலைப்பள்ளிகள் முதலியவைகளின் மீது பல்கலைக் கழகங்களுக்கிருந்த கட்டுப்பாடு மிகுதியாயிற்று. கர்சான் தமது கல்விச் சீர்திருத்தத்தால் பொதுவாக இந்தியர் வெறுப்புக்கும் சிறப்பாகத் தேசியவாதிகளின் வெறுப்புக்கும் ஆளானர்.

தொல்பொருட் கலை: 1870-ல் இந்தியாவின் தொல் பொருட் கலை ஆய்வு ஜெனரல் (சர்) அலெக்சாண்டர் கன்னிங்ஹாம் தலைமையில் தொடங்கியது. அவர்தான் அத்துறையின் முதல் இயக்குநர். 1878-ல் மேஜர் கோல் என்பவர் தொல் பொருட்கலைப் பாதுகாவலராக நியமிக்கப் பட்டார். ஆனல் அடுத்தசில ஆண்டுகளில் இவ்விரு பதவிகளும் மறைந்தன. கர்சான் இத்துறையில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். அரசப்பிரதிநிதி ஆகுமுன்பே அவர் பெர்சிபொலிஸ், அங்கோர்வாட் முதலிய இடங்களில் உள்ள புகழ்வாய்ந்த பழஞ் சின்னங்களை நேரே கண்டறிந் தவர். 1900-ம் ஆண்டிலும் பின்னரும் கர்சான் ஹம்பி, அஜந்தா போன்ற தலைசிறந்த தொல்பொருட்கலை நிலையங்களைப் பார்வையிட்டார். அதன் பயனுக ஏற் பட்டது தொல்பொருட் கலைத்துறை. 1902-ல் சர் ஜான் மார்ஷல் இதன் தலைமை இயக்குநர் ஆனர். அவர் காலத்தில் மொகஞ்சதாரோ, ஹரப்பா, தட்சசீலம், பாடலி புத்திரம், நாளந்தா, நாகார்ஜுனகொண்டா முதலிய இடங்களில் மிகுதியான அகழ்வு ஆராய்ச்சி வேலை நடந் தது. பல வரலாற்று உண்மைகள் வெளியாயின. வேறு இடங்களிலும் இத்தகைய வேலை நடந்தது. 1904-ல் தொல் பொருட் கலைச்சின்னங்களின் பாதுகாப்புச் சட்டம் நிறை வேற்றப்பட்டது. இதன்பின் பழஞ் சின்னங்களைக் காப்ப திலும் அவை கிடைக்கக்கூடிய இடங்களை ஆய்வதிலும் அரசாங்கம் அக்கரைகாட்டியது. எகிப்தில் இரண்டாண்டு காலத்தில் செய்த மிக்க வேலைப்பாடுடன்கூடிய விலை

---

* *34, பக். 191-3.*

யுயர்ந்த விளக்கு ஒன்றை மும்தாஜ்மகாலின் கல்லறைக்குக் கர்சான் 1906-ல் தந்துதவினர். இரண்டாண்டு கழித்து அவ்விளக்கு அங்குப் பொருத்தமுற்று விளங்கியது.

கர்சானின் பதவிக்காலம் நீடித்தல்: 1903-ம் ஆண்டு முதல்நாள் ஏழாம் எட்வர்டு பேரரசரின் முடிசூட்டுவிழாச் சிறப்பானது தில்லியில் கொண்டாடப்பட்டது. லிட்டன் காலத்துக் கொண்டாட்டத்தைவிட இது மிகவும் சீர்பெற்று அமைந்தது. கர்சானுடைய பதவிக்காலம் நீடிக்கப்பட்டது. 1904-ல் கர்சான் இங்கிலாந்து சென்று அந்த ஆண்டு இறுதியிலே இந்தியாவிற்குத் திரும்பினர். அச்சமயம் அம்தில் பிரபு தற்காலிகமாக அரசப்பிரதிநிதியின் பதவியைப் பூண்டார். கர்சான் இந்தியாவிற்குத் திரும்பி வந்தபின் 11 மாதங்களே பதவியில் இருந்தார். பின்னர்ப் பதவியைத் துறந்தார்.

வங்காள மாகாணப் பிரிவினை : இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் வங்காளம் இந்தியாவிலேயே மிகப்பெரிய மாகாணமாய் விளங்கியது. 1905-ல் அதனுடைய மக்கள் தொகை 7·8 கோடி. அந்த ஆண்டு நிர்வாக வசதிக்காக, கர்சான் வங்காளத்தை இரு மாகாணமாகப் பிரித்தார். கிழக்கு வங்காளமும் அஸ்ஸாமும் ஒரு மாகாணமாயின. அதற்கு டக்கா தலைநகராயிற்று. அதன் மக்கள் தொகை 3·1 கோடி. மேற்கு வங்காளம் கல்கத்தாவைத் தலைநகராகக்கொண்ட தனி மாகாணமாயிற்று. இதற்கு முன்புகூட ஆங்கிலேயர் இந்திய மாகாணங்களை இம்மாதிரி மாற்றியமைத்தது உண்டு. வங்காளத்தை நிர்வாக வசதிக்காகக் கர்சான் பிரித்தார் என்பது உண்மையாக இருக்கலாம். ஆனல் அதை வங்காளத் தேசியவாதிகள் வேறு விதமாய்க் கருதினர். தங்களிடையே வகுப்புவாத உணர்ச்சியை வளர்த்துப் பிளவு உண்டு பண்ணுவதற்காகவே அரசாங்கம் வங்காளத்தை இரு மாகாணங்களாகப் பிரித்தது என்று அவர்கள் கருதினர். பிரிவினையை நீக்கும்பொருட்டு ஒரு பெரும் போராட்டத்தைப் பல ஆண்டுகள் நடத்தினர். ஆனல் கர்சான்

இதைப் பொருட்படுத்தவில்லை. 1911-ல் வங்காளப் பிரிவினை நீக்கப்பட்டதும், பீகார், ஒரிசா மாகாணங்கள் அமைக்கப்பட்டதும், வங்காளம் நிர்வாக வசதிக்காகப் பிரிக்கப்பட்டது என்ற வாதம் பொருத்தமன்று என்பதையே காட்டுகின்றன. கர்சான் இந்திய தேசியவாதிகளின் கருத்தைச் சிறிதுகூடப் பொருட்படுத்தவில்லை. 1900-ம் ஆண்டு காங்கிரசு இயக்கம்பற்றிக் கர்சான் இந்திய அமைச்சருக்குத் "தற்பொழுது காங்கிரசு பற்றி என் கருத்து யாதெனில் அதன் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. எனது முக்கியமான ஆசைகளில் ஒன்று நான் இந்தியாவில் இருக்கும் பொழுதே காங்கிரசு இயக்கத்தின் உயிர் அமைதியாகப் பிரிவதற்கு நான் உதவவேண்டும் என்பதுதான்"* — என்று எழுதினார்.

கர்சான் பதவி துறத்தலும், அவரது பிற்கால வாழ்க்கையும்: கர்சான் காலத்தில் இந்தியப் படையின் தலைமைத் தளபதியாக விளங்கியவர் கிட்செனர் பிரபு. தமக்கு முன்பு இருந்தவர்களைப்போன்று அவரும் அரசப் பிரதிநிதியின் நிர்வாகக் குழுவில் சிறப்பு உறுப்பினராக இருந்தார். அவர் இராணுவ நிர்வாகத்தில் ஒரு பெரிய சீர்திருத்தவாதி. நிர்வாகக் குழுவில் அவருக்கு அடுத்த நிலையில் இருந்து, படை நிர்வாகத்திற்குப் பொறுப்பான நிர்வாகக்குழு உறுப்பினர், அவருடைய கொள்கையைப் பற்றிக் குறைகூறியது அவருக்கு முறையற்றதெனப் பட்டது. எனவே அவர், படை நிர்வாகம் முழுவதும், நிர்வாகக்குழுவின் உறுப்பினரான தம்மிடமே இருப்பதுதான் பொருத்தம் என்று அரசப்பிரதிநிதிக்குக் குறிப்பாகத் தெரிவித்தார். ஆனால்அவ்வாறுசெய்வது சிவில் அதிகாரம் இராணுவ அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டதாகுமெனக் கருதிய அரசப் பிரதிநிதியும் அவருடைய ஆலோசகர்களும் அதற்கு இணங்கவில்லை. உண்மையில் கிட்செனர் அதை அவ்வாறு எண்ணவில்லை. சிக்கல் முற்றுவதற்கு முன் இங்கிலாந்து அரசாங்கம் ஒரு சமரச ஏற்பாட்டைச் செய்

* *82 II, பக். 151.*

தது. அதன்படி இராணுவச் செய்திகளில் தலைமைத் தளபதி கவனிக்கவேண்டியவை அவருடைய முழுப் பொறுப்பிற்குள் வந்தன. பிற செய்திகளை நிர்வாகக்குழு உறுப்பினரில் மற்றொருவர் கவனிக்கவேண்டும்; அவர் இராணுவ சப்ளை உறுப்பினரென அழைக்கப்படவேண்டும். நிர்வாகக் குழுவின் புதிய உறுப்பினரை நியமிப்பதுபற்றிக் கர்சான் ஆலோசிக்கும்பொழுது அவர் அதுபற்றிக் கிட்செனரைக் கலந்தாலோசிக்கும்படி இந்தியா அமைச்சர் குறிப்பாகத் தெரிவித்தார். இதை விரும்பாத கர்சான் தமது பதவியைத் துறந்தார். தமது முடிவை மாற்றும்படி இங்கிலாந்து அரசாங்கம் கோரியபொழுதும் கர்சான் அதை மாற்றிக்கொள்ளவில்லை. 1905-ம் ஆண்டு நவம்பர் மாதம் இந்தியாவை விட்டுப் புறப்பட்ட கர்சான் 1907-லிருந்து 1925 வரை ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தின் வேந்தராக விளங்கினர்; 1907-லிருந்து 1911-வரை ராயல் பூகோள சங்கத்திற்குத் தலைவராக இருந்தார்; 1911-ல் எர்ல் (Earl) பட்டத்தையும் 1821-ல் மார்க்கிஸ் (Marquis) பட்டத்தையும் பெற்ருர்; 1915-ல் இங்கிலாந்து நாட்டு அமைச்சர் குழுவில் ஒருவரானர். 1917-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 20-ம் தேதி. வெளியான அரசியல் அறிக்கையை உருவாக்குவதில் கர்சான் மற்ற அமைச்சர்களுடன் ஒத்துழைத்தார். அவ்வறிக்கையின் வாசகத்தையும் சிலவிடங்களில் தமது ஏகாதிபத்தியக் கொள்கைக்கேற்ப மாற்றியமைத்தார். ஆயினும் உண்மையில் அவ்வறிக்கையின்படி இந்தியாவில் ஏற்படவிருந்த அரசியல் சீர்திருத்தத்தைக் கர்சான் ஆதரிக்கவில்லை. இது, அப்பொழுதிருந்த இந்தியா அமைச்சர் மாண்டேகுவிற்கே வியப்பளித்தது. * 1919-ல் இங்கிலாந்து அரசாங்கம் மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்த மசோதாவை உருவாக்கியபொழுது கர்சான் அதில் ஒத்துழைக்க மறுத்துவிட்டார். சுருங்கக் கூறுமிடத்துக் கர்சான் இம்முயற்சியைச் சிறிதுகூட விரும்பவில்லை.

* 82—Vol. III பக். 120.

1919-லிருந்து 1924 வரை, கர்சான் இங்கிலாந்தின் வெளிநாட்டமைச்சராக விளங்கினர். 1923-ல் அவர் இங்கிலாந்து நாட்டுப் பிரதமஅமைச்சராகக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. ஆனால் குடியாட்சி நடைபெறும் காலத்தில் சர்வாதிகாரப் போக்குடைய கர்சான் அப்பதவிக்கு ஏற்றவரல்லர் என்று பால்பர் கருதியதால் அவருக்கு அது கிட்டவில்லை.* 1925-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் கர்சான் காலமானர்.

கர்சானின் இயல்பும் சாதனைகளும்: கர்சான் தம் பதவிக்கேற்ற அறிவாளி. அவர் செய்த உலகச் சுற்றுப் பயணங்கள் அவருடைய பரந்த நோக்கை வளர்த்தன. அவருடைய கடமையுணர்ச்சி, ஆற்றல், முயற்சி, இந்தியரின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதில் அவர் காட்டிய ஆர்வம், பொது முயற்சியில் அவரது செயற்றிறன், உறுதியான கோட்பாடுகள், தளர்ச்சியுருத மன உறுதி, இவற்றிலும் மேலாக, அவரது அழகிய சொல்வன்மை இவை எல்லாம் மிகவும் பாராட்டற்குரியன. தொடக்கத்தில் காங்கிரசுகாரர்களே அவரைப் போற்றினர். எந்தக் குறிக்கோளிற்காக இந்தியாவில் அவர் முயன்ருரோ அதைப்பற்றி இந்தியாவில் அவர் பேசிய கடைசி பேச்சில், நன்கு விளக்கியுள்ளார்: "நேர்மைக்காகப் பாடுபடுவதும் அநீதி, குறைபாடு, கயமை முதலியவற்றை வெறுப்பதும், சிறிதுகூட நீதி வழுவாதிருப்பதும், பிறர் புகழ்வதையோ, இகழ்வதையோ, வெறுப்பதையோ, பாராட்டுவதையோ, சிறிதும் பொருட்படுத்தாது பணியாற்றுவதும் நமது குறிக்கோளாக இருக்கவேண்டும். கோடிக் கணக்கான மக்கள் வாழும் இந்தியாவில் ஒரு சிலருக்காவது நீதி வழங்கினேம், வாழ்க்கை நிலை மேலோங்கச் செய்தோம், நேர்மையில் பெருமிதம்படச் செய்தோம், நாட்டின்மீது குன்ருத பற்று ஏற்படச் செய்தோம், அறிவு (விளக்கம்) தழைக்கச் செய்தோம், கடமையுணர்ச்சி வளரும்படி செய்தோம் என்பதே ஆங்கிலேயர் தங்களாட்சி இந்தியாவில்

* 68, பக். 355.

இருப்பதற்குக் கூறக்கூடிய சமாதானமாகும்." [1] ஐரோப்பியர் எவரும் இந்தியரைக் கொடுமைபடுத்துவதையோ இந்தியருக்கு அநீதி இழைப்பதையோ கர்சான் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார். தாம் பதவி துறந்ததற்குரிய காரணத்தைக் கர்சான் தயக்கமின்றி வெளியிட்டுக் கூறினார். (1) இராணுவ அதிகாரம் சிவில் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும், (2) இந்தியாவைப் பற்றிய வரையில் இந்திய அரசாங்கத்தின் கருத்திற்கு இங்கிலாந்து அரசாங்கம் மதிப்பளிக்க வேண்டும் என்ற இந்த இரு கோட்பாட்டிற்காகவே தாம் பதவியைத் துறந்ததாகக் கர்சான் அறிவித்தார்.[2] ஐக்கியம் போன்ற உயர்ந்த குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டிருக்குமானல் ஆங்கிலேய ஆட்சி இந்தியாவில் நீடித்திருக்கும் என்று கர்சான் நம்பினர்.[3] அதேசமயத்தில் இந்தியாவின் முன்னேற்றத்தில் கர்சான் அளவிற்குமீறி உழைத்தார்; மிக உயர்ந்த நிர்வாகத் திறமைக்காகப் பாடுபட்டார்; விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை சிறிதும் அவரிடம் இல்லை; மற்றவர்களின் ஆற்றலும் திறமையும் வெளிப்படுத்துவதற்குச் சிறிதும் வாய்ப்பின்றிப் பணியாற்றும் இயல்புடையவர். கோகலே அவரை ஔரங்கசீபுடன் ஒப்பிட்டது மிகப் பொருத்தமேயாம். மற்றவர்களின் கருத்துக்களைச் சிறிதுகூடப் பொருட்படுத்தாது பிடிவாதமாகத் தம் போக்கிலேயே சென்றவர் கர்சான்; மிகவும் கண்டிப்பானவர்; தமக்குக் கீழ்ப்பட்ட சாதாரண அதிகாரிகளும் தம்மைப்போன்றே செவ்வனே பணியாற்ற வேண்டுமென்றவர். வங்காள மாகாணப் பிரிவினையின் பயனாகவும் அவர் கொண்ட கல்விச் சீர்திருத்தத்தின் பயனாகவும் கர்சான் இந்தியரின் வெறுப்புக்கே ஆளானர். இந்திய அறிஞர்களின் கருத்தை வேண்டுமென்றே கர்சான் புறக்கணிக்கின்றார் என்று கோகலே கூறியது (1905,டிசம்பர்) உண்மையே. 1905-ல் கல்கத்தாப் பல்கலைக்

1. 68, Vol. II, பக். 424.
2. 34, பக். 448.
3. 34, பக். 488.

கழகப் பட்டமளிப்பு விழாவில் கர்சான் மேல்நாட்டு மக்களின் பண்பைப் போற்றியும் கீழ்நாட்டு மக்களின் இயல்பை இகழ்ந்தும் பேசினார்: "மேல் நாட்டினர் உண்மையைப்பற்றி மேலான கருத்துடையவர்கள். கீழ் நாட்டு மக்கள் தந்திரத்தையும் அரசியல் சூழ்ச்சியையும் உயர்வாக மதிப்பவர்கள்........ உங்களுடைய இதிகாசங்களில் உண்மை ஒரு நற்குணமெனப் போற்றப்பட்டுள்ளது. ஆயினும் ஆதற்கு ஒரு வரம்பு காட்டப்படுகிறது; நேர்மையான நோக்கத்துடன் வெற்றிகரமாகச் செய்யப்படும் ஏமாற்றுதலே புகழப்படுகிறது.* இது இந்தியரின் இயல்பையும் சமயத்தையும் தாக்கிப் பேசப்பட்டதெனக் கருதிய இந்தியர்சிலர் கர்சானைக் கண்டித்தனர். இது கர்சானுக்கு வியப்பூட்டியது. கர்சான் இந்திய மக்களைப் பற்றிக் கொண்டிருந்த கருத்தையும், காங்கிரசு கட்சியின் முடிவைப்பற்றித் தெரிவித்த கருத்தையும் முன்பே கண்டோம். இந்நிலையில் அவர் இந்தியரின், சிறப்பாக கற்றறிந்த இந்தியரின் வெறுப்பிற்காளாகாது எவ்வாறு தப்ப முடியும்? மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்டத்தை உருவாக்குவதில் கர்சான் நடந்துகொண்ட வகையை முன்பே கண்டோம். அவருடைய ஆளுமையில் வியப்பிற்குரிய கூறு யாதெனில் அதன் முரண்பாடுகளும் நிலைகேடுகளுமேயாம். அவரைப் பெருமை மிக்கவர் என்றும் கூறலாம்; எளிமைமிக்கவர் என்றும் கூறலாம்; ஒதுங்கியிருக்கும் இயல்புடையரென்றும் கூறலாம்; பிறருடன் நெருங்கி நன்கு பழகக்கூடியவரென்றும் கூறலாம்; பரந்த நோக்குடையவரென்றும் சொல்லலாம்; சகிப்புத் தன்மையற்றவரென்றும் சொல்லலாம்; தாராள மனப் பான்மையுடையவரென்றும் கருதலாம்; சிறுமைக் குணமுடையவரென்றும் கருதலாம்; அன்புமிக்கவரென்றும் கூறலாம்; மாருத வெறுப்புடையவரென்றும் கூறலாம்; மிகுந்த வீம்புடையவரென்றும் கூறலாம்; மனப்பணிவுடையரென்றும் கூறலாம். இவரை எத்தன்மையானவரென்று கூறுவது? இதைவிட வியப்பிற்குரிய புதிர் எவருடைய

* 82, vol II பக். 364.

இயல்பில் காணமுடியும்?"[1] கர்சானை டல்ஹௌசியுடன் முன்பே ஒப்பு நோக்கி உள்ளோம்; இருவரும் புதிதாகப் பல செயல்களைச் செய்து முடித்தவர்கள்; ஆற்றல் மிக்கவர்கள்; மிகுந்த சாதனைகள் செய்தவர்கள்; இருவரும் உடல் நலம் குன்றியவர்கள்; குடும்பக் கவலைமிக்கவர்கள்; உயர்ந்த நோக்கங்களுக்காகத் தொடர்ந்து பாடுபட்டவர்கள்; இருவரும் தங்கள் கொள்கைகளில் அளவிற்கு மீறிச்சென்று அதனால் பெருந் தவறுகள் இழைத்தவர்கள்; படைக்கலகத்திற்கு டல்ஹௌசி ஓரளவு காரணமாக இருந்ததுபோல வங்காளப் பிரிவினை எதிர்ப்புக் கலவரத்திற்குக் கர்சான் காரணமாக இருந்தார். வங்காளப் பிரிவினை, எல்லைப்புறக்கொள்கை கல்விச் சீர்திருத்தம், நிலவரிக்கொள்கை இவை நான்கும் கர்சானுடைய பெருஞ் சாதனைகளாம்.[2] இவற்றில் முதலாவதையும் மூன்றாவதையும் விரிவாகக் கண்டோம். அவற்றின் தன்மைகளையும் விளைவுகளையும் மேற்கொண்டு ஆராய வேண்டியதில்லை. கர்சானுடைய அரசியல் ஞானத்தைப்பற்றி ஆராயும் பொழுது அவர் காங்கிரசு இயக்கத்திடம் காட்டிய மனப்பான்மையைப்புறக்கணிக்க முடியாது. அவர் அதனிடம் பாராட்டிய பகைமை அதன் வளர்ச்சிக்கு ஊக்கமளித்தது என்பதை மறுக்கமுடியாது. கர்சான் பல தவறுகள் இழைத்தார். அவருடைய சாதனைகளைப்பற்றி பலரிடையே கருத்து வேறுபாடு உண்டு. இருப்பினும் அவர் ஒரு மேதை என்பதையோ மேலானவர் என்பதையோ யாரும் மறுப்பதற்கில்லை. கர்சானுடைய நிர்வாகம் நலம்பயக்கும் சர்வாதிகார ஆட்சிக்கு ஒரு மேலான குறிக்கோளாக விளங்குகிறது; மேலும் அத்தகை ஆட்சியின் நன்மைகளையும் குறைபாடுகளையும் விளக்கக்கூடிய சிறந்த சான்றாகவும் உள்ளது. இந்தியாவை ஆண்ட "கவர்னர்-ஜெனரல்கள், வைசிராய்கள் இவர்களில் தலைசிறந்தவர் கர்சான்". டல்ஹௌசியை அவர் பலவகைகளில் ஒத்திருந்தார்; ஆயினும் டல்ஹௌசியை

1. 82, Vol. III. பக். 384.
2. 34, பக் 18-19

விட அவர் மிக மோலானவர் ; அவருடைய சிறப்புகள் அவருடைய குறைபாடுகளுக்கு விஞ்சியிருந்தன. அவருடைய ஆட்சி ஆங்கிலேயராட்சியின் சிகரமாகும்.[1] வேந்தர் கடமைகள்பற்றி அசோகன் கொண்டிருந்த கருத்திற்கும் கர்சானுடைய கருத்திற்கும் வேறுபாடு இல்லை.[2]

---

1. 78, பக். 179-180
2. 78, பக். 181-2

பகுதி 13

இரண்டாவது மிண்டோ பிரபு (1905--10)

கில்பெர்ட் மிண்டோ 1847-ல் பிறந்தவர். ஹேஸ்டிங்ஸ் பிரபுவிற்கு முன்பு கவர்னர்-ஜெனரலாக இருந்த மிண்டோவிற்கு இவர் கொள்பேரன். இவர் இரண்டாம் ஆப்கானியப் போரில் பங்குகொண்டவர்; 1898-லிருந்து 1904-வரை கானடாவின் கவர்னர்-ஜெனரலாக இருந்தார். 1905-ல் இவர் இந்தியாவின் அரசப்பிரதிநிதி பதவியை ஏற்றுக்கொண்டார்; 1910-ல் இங்கிலாந்திற்குத் திரும்பிச் சென்ருர்; 1914-ல் காலமானுர். இவர் அரசப்பிரதிநிதியாக இருக்கும்பொழுதுதான் வைகௌண்ட் (Viscount) மார்லி இந்தியா அமைச்சர் பதவியில் இருந்தார். மார்லி லிபரல் கட்சியில் சிறப்பு வாய்ந்தவர். தமது பதவியில் திறம்பட ஆண்டார். ஆயினும் தமது முற்போக்குக் கோட்பாடுகளுக்கேற்ருற்போல எல்லாவற்றையும் செய்தார் என்று கூறமுடியாது. 1895-லிருந்து 1905-வரை இங்கிலாந்தில் யூனியனிஸ்டு கட்சி பதவியிலிருந்தது. ஆனல் 1905-ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் லிபரல் கட்சி வெற்றிபெற்றது. அதன்பின் பத்தாண்டுகள் வரை லிபரல் கட்சி அதிகாரத்திலிருந்தது. அப்பொழுதுதான் காம்பெல் பானர்மேனும் (1905—8) ஆஸ்குவித்தும் (1908-15) இங்கிலாந்தின் பிரதம மந்திரிகளாக விளங்கினர்.

ருஷியாவின் ஆதிக்கப்பெருக்கத்தின் முந்தைய வரலாறு: பிரிட்டிஷ் இந்தியாவிற்கு, ருஷியாவின் ஆதிக்கப்பெருக்கத்தால் முதன் முதல் 1807-ல் பேரிடர் ஏற்படவிருந்தது. அந்த ஆண்டில் நெப்போலியனும் ருஷிய மன்னரும் ஒரு நேச உடன்படிக்கைசெய்து கொண்டனர். இதன்பின் ருஷிய மன்னர் இந்தியாவை வென்று ஆளுவதைப்பற்றிப் பல கனவுகள் கண்டுகொண்டிருந்தார்.

ஆனால் 1812-ல் ருஷியாமீது நெப்போலியன் படையெடுத்ததும் 1815-ல் ஆங்கிலேயர் நெப்போலியன்மீது கடைசியாக வெற்றி பெற்றதும் அதற்குத் தடையாக எழுந்தன. முதல் பர்மியப் போரில் ஆங்கிலேயர் வெற்றிபெற்றதும் பரதபுரி கோட்டையைக் கைப்பற்றியதும் ஆங்கிலேய இராணுவத்தின் புகழை ஓங்கச்செய்தன. முதலாம் ஆப்கானியப் போருக்கு முன் அந்நாட்டில் ருஷியரின் செல்வாக்கு ஏற்படுவதை ஆங்கிலேயர் தடுப்பதில் வெற்றி பெற்றதனை முன்பே கண்டோம். கிரிமியாப் போரில் (1854-56) ஆங்கிலேயர் வெற்றிபெற்றது ருஷியரின் பழைய ஊக்கத்தை அழித்தது. எனினும் இந்தியாவில் ஏற்பட்ட (1857) படைக்கலகமும் சீனுவுடன் ஆங்கிலேயர் போரிட்டதும் (1859-60) ருஷியரின் ஆதிக்க ஆசையை வளர்த்தன. அடுத்த இருபதாண்டுகளில் ருஷியா மத்திய ஆசியாவில் எவ்வாறு தன் ஆதிக்கத்தைப் பரப்பியது என்பதைப் பற்றி முன்பே விரிவாகக் கண்டோம். பாஞ்ச்டே பற்றி ருஷியருக்கும் ஆங்கிலேயருக்கும் ஏற்படவிருந்த போர், டஃப்ரின் முயற்சியாலும் அப்துர் ரஹ்மான் ஒத்துழைப்பாலும் தடைபெற்றது. 1903-ல் கர்சான் திபேத்தில் தலையிட்டது கூட அங்கு ருஷியாவின் செல்வாக்குப் பரவாமல் இருப்பதற்காகவே ஆம். 1905-ல் ருஷியா ஜப்பானிடம் பெருந் தோல்வியுற்றது. அதனுல் ருஷியாவின் ஆதிக்கப் பெருமை சிதைவுற்றது. 1907-ல் இங்கிலாந்திற்கும் ருஷியாவிற்கும் உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. இதன் பின் ருஷியாவைப்பற்றி ஆங்கிலேயர் சிறிதுகாலம் அச்சமற்றிருந்தனர்.

1907-ஆ உடன்படிக்கை : 1907-ல் ருஷியா இங்கிலாந்துடன் ஆப்கானிஸ்தானம், திபேத்து, பாரசீகம் முதலிய நாடுகளைப் பற்றி உடன்படிக்கை ஒன்று செய்து கொண்டது. இதன்படி ருஷியா ஆப்கானிஸ்தானத்தில் தலையிடுவதில்லை யென்றும், பிரிட்டிஷ் அரசாங்கம் மூலமாக அன்றி அமீரிடம் தொர்பு கொள்வதில்லை என்றும் ஒத்துக்கொண்டது. இங்கிலாந்தும், தான் ஆப்கானி

ஸ்தானத்துடன் கொண்டிருந்த உறவில் எவ்வித மாறு தலையும் செய்வதில்லையென ஒப்புக்கொண்டது. ஆனால் அமீர் ஹபிபுல்லா இவ்வுடன்படிக்கைக்கு இணங்க மறுத்து விட்டார். பாரசீகம் பற்றி இரு நாடுகளும் செய்து கொண்ட உடன்படிக்கை அதன் சுதந்திரத்தை அங்கீ கரித்தது. ஆயினும் அந்நாட்டில் அரசியல் குழப்பம் இருந்ததால் வட பாரசீகத்தில் ருஷியாவின் செல்வாக்கு நிலைத்திருக்கவும் தென் கிழக்குப் பகுதியில் பிரிட்டிஷ் செல்வாக்கு நிலைத்திருக்கவும் இரு நாடுகளும் இணங்கின. ஆனால் பாரசீக வளைகுடாப் பகுதி இவ்வுடன்படிக்கையின் கீழ் வரவில்லை. பாரசீகம் அப்பொழுதிருந்த நிலையில் இரு நாடுகளுக்கும் போர் ஏற்படாதவாறு இவ்வுடன் படிக்கை தடுத்தது. மேலும் இவ்வுடன்படிக்கை மூலம் சீனா, திபேத்துமீது கொண்டாடிய மேலாட்சியை இரு நாடுகளும் ஒத்துக்கொண்டன. இரு நாடுகளும் திபேத் தின் எப் பகுதியையும் கைக்கொள்ளுவதில்லை யென்றும், அதன் உள் விவகாரங்களில் தலையிடுவதில்லை யென்றும் ஒப்புக்கொண்டன.

திபேத்து: 1904-ல் நிறைவேறிய லாசா உடன் படிக்கையை 1906-ல் சீனா உறுதிசெய்தது. இதன்படி வெளிநாடுகள் எதுவும் திபேத்துடன் தொடர்புகொள்வது தடுக்கப்பட்டது. 1906-ஆ உடன்பாட்டின்படி திபேத்து கொடுக்கவேண்டிய போர் நட்ட ஈட்டுப் பணம் இருபத் தைந்து லட்ச ரூபாய்; அதனை மூன்று தவணைகளில் ஆங்கி லேயருக்குக் கொடுத்து விட சீனா இணங்கியது. இந்த ஏற்பாட்டிற்கு இந்திய அரசாங்கம் தடை எழுப்பியது. ஆயினும் இந்தியா மந்திரி மார்லி இதைப் பொருட்படுத்த வில்லை. 1908-ற்குள் சீனா திபேத்திற்காகத் தான் கொடுக்க ஒப்புக்கொண்ட தொகை முழுவதையும் கொடுத்துவிட் டது; ஆங்கிலேயரும் தங்கள் வசமிருந்த சும்பி சம வெளியை விட்டுவிட்டனர். இதுபற்றியும் இந்திய அர சாங்கம் தெரிவித்த தடைகளை மார்லி தள்ளிவிட்டார். மார்லியின் இப் போக்கிற்குக் காரணம் அவர் திபேத்தில்

தலையிடாக் கொள்கையை உறுதியாகக் கடைப்பிடித்ததே யாம். ஆனால் கர்சான் அதற்கு நேர்மாறான கொள்கையைப் பின்பற்ற விரும்பினார்; அது நடைபெறவில்லை. திபேத்து மீது சீனா தன் கட்டுப்பாட்டை மிகுதி ஆக்கியது. 1910-ல் தலாய் லாமா திபேத்தை விட்டுச் செல்லும்படி நேரிட்டது. அவர் அப்பொழுது இந்தியாவின் அரசப் பிரதிநிதியான மிண்டோ பிரபுவைக் கண்டு சீனாவிற்கெதிராகத் தமக்கு உதவும்படி கோரினார். ஆனால் அவர் முயற்சி வெற்றி பெறவில்லை.

வங்காளப் பிரிவினை எதிர்ப்புக் கிளர்ச்சியும் பொது அமைதியின்மையும்: வங்காளப் பிரிவினை ஒரு பெரிய கிளர்ச்சியை உண்டுபண்ணியது; வங்காளிகளின் தேசிய உணர்ச்சியைத் தட்டி எழுப்பியது; சுதேசி இயக்கத்தைத் தோற்றுவித்தது. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருள்கள் வாங்கப்படாமல் ஒதுக்குண்டன; இந்தியாவில் உற்பத்தியாகும் பொருள்களையே பயன்படுத்த வேண்டுமென்ற இயக்கம் நாடெங்கிலும் பரவத் தொடங்கியது. புரட்சிப் பிரசாரத்தால் வங்காளத்தில் பல கொலைகள் நிகழ்ந்தன. இதில் மாணவர்களும் பங்கு கொண்டு வெடி மருந்து போன்ற பயங்கர ஆயுதங்களையும் பயன்படுத்தினர். அவர்களது செயல்களைச் செய்தித்தாள்கள் பாராட்டி எழுதி வந்தன. வங்காளத்திலிருந்த இவ்வரசியல் கொந்தளிப்பு மற்ற பகுதிகளிலும் ஓரளவு பரவியது. 1905-ல் ருஷியா மீது ஜப்பான் பெற்ற வெற்றி ஆசிய நாடுகள் எல்லாவற்றிலும் ஒரு புத்துணர்ச்சியை எழுப்பியது. இந்தியாவில் கர்சானுடைய கொள்கைக்கு எதிர்ப்பு மிக்கு வந்தது. காங்கிரசு இயக்கம் மேன் மேலும் செல்வாக்கடைந்தது. சுதேசி இயக்கத்தை அது தீவிரமாக ஆதரித்தது. இந்தியா அமைச்சர் மார்லி வங்காளப் பிரிவினையில் மாறுதல் எதுவும் செய்வதற்கில்லையென்றும் அது முடிவானதென்றும் தமது முற்போக்குக் கோட்பாடுகளுக்கே இடங்கொடாது அறிவித்தார். கிளர்ச்சியை அடக்க அரசாங்கம் கடுமையான முறைகளைப் பின்பற்றத்

தொடங்கியது. அரசாங்கத்திற் கெதிராக நடைபெறும் கூட்டங்களைத் தடுக்கவும், அனுமதியின்றி வெடி மருந்து ஆயுதங்களை உற்பத்தி செய்தல், வைத்திருத்தல் முதலிய வைகளில் ஈடுபட்டோரைத் தண்டிக்கவும் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அதே போன்று கொலைகளைச் செய்யுமாறு தூண்டும் செய்தித்தாள்களின் பொறுப் பாளர்களைத் தண்டிக்கவும், கடுமையான குற்றங்கள் புரிந்தவர்களை விரைவாக விசாரித்துத் தண்டிக்க வும் சட்டங்கள் இயற்றப்பட்டன. 1910-ல் நிறைவேறிய இந்தியச் செய்தித்தாள் சட்டம் அரசாங்கத்திற் கெதிராகச் செய்தித்தாள்கள் புரியக்கூடிய குற்றங்களை 16 வகை களாகப் பிரித்தது. இச் சட்டத்தின்படி எல்லாச் செய்தித் தாள்களும் அரசாங்கத்திடம் பிணையத் தொகை கட்ட வேண்டியதாயிற்று. ஒவ்வொன்றிற்கும் தக்கவாறு பிணை யத் தொகை ரூ. 500-லிருந்து ரூ. 2000 வரை நிர்ணயிக்கப் பட்டது. சட்டத்தை மீறி எந்தச் செய்தித்தாளாவது குற்றம் புரிந்தால் பிணையத் தொகையை அது இழக்க வேண்டியதுதான். ஒரு முறை குற்றம் புரிந்து பிணையத் தொகையை ஒரு செய்தித்தாள் இழக்குமானல் அடுத்தாற் போல் அது கட்டவேண்டிய பிணையத் தொகையை ரூ. 1000-திலிருந்து ரூ. 10000-ம் வரை நிர்ணயிக்க சட்டம் அரசாங்கத்திற்கு உரிமை அளித்தது. இரண்டாம் முறை யாக ஒரு செய்தித்தாள் குற்றம் புரிந்தால் அதன் பிணையத்தொகையுடன் அதன் அச்சுக்கூடத்தையும் அரசாங்கம் பறிமுதல் செய்யலாம். இச்சட்டம் 1922 வரை அமுலில் இருந்துவந்தது. முதலாவது உலகப் போர்க் காலத்தில் (1914–18) தேசிய இயக்கத்தை ஆதரித்த பல செய்தித்தாள்கள் தங்கள் பிணையத்தொகையை இழந்தன. அவற்றுள் சென்னையிலிருந்து வெளியிடப்பட்ட 'ஹிந்து' வும் (The Hindu), 'நியூ இந்தியா' வும் (New India) குறிப்பிடத்தக்கன. 1908-ல் B. G. திலகர் சட்ட எதிர்ப்புக் குற்றத்திற்காகத் தண்டனை அடைந்து பர்மாவிலுள்ள மாண்டலே நகரில் ஆறுண்டுகள் கைதியாக இருந்தார். 1909-ம் ஆண்டு நவம்பர் மாதம் மிண்டோ பிரபுவையும்

அவரது மனைவியாரையும் கொலைபுரிய முயற்சி நடந்தது. ஆனால் அது வெற்றிபெறவில்லை.

இந்தியச் சிற்றரசுகள்: இந்தியச் சிற்றரசுகளிடம் கடைப்பிடித்த கொள்கையில் கர்சானுக்கும் மிண்டோ விற்கும் இடையே வேறுபாடிருந்தது. அவற்றின் உள் விவகாரங்களில் மிகுதியாகத் தலையிடாதிருப்பதையே மிண்டோ விரும்பினர். ஆனால் அதேசமயத்தில் அவற் றின் மீதிருந்த பிரிட்டிஷ் ஆதிபத்திய உரிமையை விட்டுக் கொடுக்காமலிருக்கவும், அவற்றில் கொடுங்கோல் நடை பெறுவதைத் தடுக்கவும் விரும்பினர்.

இராணுவத்துறை: தாம் இந்தியா அமைச்சராகு முன் மார்லி இராணுவ நிர்வாகத்தில் கர்சான் கொண்ட கருத்தையே ஆதரித்தார். ஆனால், பின்னர், அதற்கு நேர்முரணன கிட்சனர் கருத்தை ஆதரித்தார். இதனல் அரசப்பிரதிநிதியின் நிர்வாகக் குழுவில் பொது உறுப்பின ரான தலைமைத்தளபதி இராணுவ நிர்வாக அதிகாரம் அனைத்தையும் அடைந்தார். இராணுவத்துறையில் அவர் வைத்ததுதான் சட்டமாகவிருந்தது. 1907-ல் நிர்வாகக் குழுவில் இராணுவச் சப்ளை உறுப்பினர் பதவி நீக்கப் பட்டது. ஆனல் இம்முறை மிகவும் குறைபாடானது. இதன் பயனக முதல் உலகப்போரில் இந்தியப் படைகள் மெ[illegible]ாமியாவில் போரிடும்போது பல அல்லல்களுக் கா[illegible]னர். அப்போதுதான் இங்கிலாந்து அரசாங்கம் கிட்சனர் திட்டத்தின் குறைகளையும், கர்சானுடைய ஆழ்ந்த அறிவினையும் உணரத்தொடங்கியது. 1917-ல் மெசபடோமியாவிலிருந்த இந்தியப்படை நிர்வாகத்தைப் பற்றி ஆராய்ந்த குழுவும் தனிப்பட்ட ஒருவர் கையில் இராணுவ நிர்வாகம் முழுவதும் இருப்பது சரியன்று எனக் கிட்சனர் திட்டத்திற் கெதிராக முடிவு கூறியது.

ஆட்சிமுறை: சீனவிற்கு அபின் ஏற்றுமதி செய் வதில் மிண்டோ கடைப்பிடித்த கொள்கையைப் பற்றி முன்பே கண்டோம்; படிப்படியாக ஏற்றுமதியைக்

குறைப்பதையே அவர் விரும்பினர். அதிகாரத்தைப் பன் முகப்படுத்துவது பற்றி ஆராய 1907-ல் C. E. H. ஹாப் ஹவுஸ் தலைமையில் ஒரு குழு ஏற்பட்டது. அது ஒருசில வற்றைப்பற்றி மட்டும்தான் ஆராய உரிமைபெற்றது. குழு தனது அறிக்கையில் முற்போக்கான கொள்கை எதையும் ஆதரிக்கவில்லை. மாகாணங்கள் நிர்வாகத்தில் புதிதாக உரிமை எதையும் பெறவில்லை. ஆனல் குழு தலத் தாபானங்களைச் சிறப்பாகக் கிராமப் பஞ்சாயத் துக்களை ஏற்படுத்தி வளர்ப்பதன் இன்றியமையாமையை வற்புறுத்திக் கூறியது.

இந்தியக் கவுன்சில்ஸ் சட்டம், 1909

மார்லி-மிண்டோ சீர்திருத்தங்கள் : 1907-ல் நிறை வேறிய சட்டம் இந்தியா கவுன்சில் உறுப்பினரின் எண்ணிக்கை பத்திற்குக் குறையாமலும் பன்னிரண்டிற்கு மேற்படாமலும் இருக்கவேண்டுமென வரையறுத்தது. மேலும், அவர்களது பதவிக்காலமும் ஏழு ஆண்டென நிர்ணயித்தது ; தனிச்சிறப்பு காரணங்களின்பேரில் அதை இன்னும் ஐந்தாண்டுகளுக்கு நீடிப்பதற்கும் சட்டம் இடம் தந்தது. மார்லி-மிண்டோ சீர்திருத்தங்கள் காங்கிரசு மிதவாதிகளுக்கு ஆறுதல் அளிப்பதற்காகவே கொண்டு வரப்பட்டன இவை 1909-ல் நிறைவேற்றப்பட்ட இந்தியக் கவுன்சில்ஸ் சட்டத்தின் மூலம் செயற்பட்டன. இதன்படி மத்திய சட்டசபை உறுப்பினரின் எண்ணிக்கை 60 ஆக உயர்ந்தது. இதில் 27 பேர் தேர்தல் மூலம் வர வேண்டும். மீதி 33 பேர் அரசாங்கத்தால் நியமிக்கப் படுவர். அப்படி நியமிக்கப்படுவோரில் அதிகாரிகள் 28 பேருக்கு மேல் இருக்கக்கூடாது தேர்தல் கோட் பாட்டை ஓரளவு அங்கீகரித்ததுடன், இச்சட்டம் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தையும் தொடங்கி வைத்தது. சட்டசபையின் கடமைகளும் மிகுந்தன. சட்டசபை உறுப்பினர் பொதுவான செய்திகளைப் பற்றி விவாதிக்க வும், துணைக்கேள்விகள் கேட்கவும் உரிமைபெற்றனர்.

ஆண்டு வரவு செலவுத் திட்டம் முடிவாக தீர்மானிக்கப்படு முன் அதைப்பற்றி சட்டசபை பல நாட்கள் விவாதிக்கவும் சட்டம் வழிகோலியது. கடைசியாக, பொதுச் செய்திகளைப் பற்றித் தீர்மானம் நிறைவேற்றவும், அவற்றைப்பற்றி வாக்கெடுக்கவும் சட்டசபை உறுப்பினர் உரிமைபெற்றனர். மாகாணங்களில் சட்டசபை, நிர்வாகக்குழு முதலியவற்றின் உறுப்பினர் தொகை மிகுதியாகியது. சென்னை, பம்பாய் போன்ற மாகாணங்களில் நிர்வாகக்குழு உறுப்பினரின் உயர் எல்லை எண்ணிக்கை நான்காக உயர்ந்தது. லெப்டினண்ட்-கவர்னர்களின் ஆளுகைக்குட்பட்ட மாகாணங்களில் நிர்வாகக்குழு ஏற்படுத்தவும் சட்டம் இடமளித்தது. மார்லியின் தூண்டுதலால் இந்தியா கவுன்சிலில் இந்தியர் இருவரும் அரசப்பிரதிநிதியின் நிர்வாகக்குழுவில் இந்தியர் ஒருவரும், சென்னை பம்பாய் மாகாண நிர்வாகக் குழுக்களில் ஒவ்வொரு இந்தியரும் இடம்பெற்றனர்.

விளக்கம் : இந்தியாவில் புரட்சிப் பிரச்சாரத்தைக் கடுமையாக அடக்கியதுடன் மார்லி நிற்கவில்லை. இந்திய ஆட்சியில் இந்தியருக்கு ஓரளவு பங்கு அளிப்பதன் மூலம் காங்கிரசில் உள்ள மிதவாதிகளின் நட்பைப் பெறவும் அவர் விரும்பினர். மார்லி முற்போக்குக் கோட்பாடுகளுடையவர்; ஆயினும் சுய ஆட்சி இந்தியருக்கு ஏற்ற அரசியல் இலட்சியமென அவர் கருதவில்லை. "என்னுடைய பதவிக்காலமும் வாழ்நாளும் பொதுவாக அமைவதை விட இருபது மடங்கு காலம் நீண்டால்கூட இந்தியாவில் பாராளுமன்ற அரசியல் திட்டத்தை ஏற்படுத்த ஒரு நிமிடமேனும் ஆசைப்பட மாட்டேன்"*. மாண்டேகு - செம்ஸ்போர்டு அறிக்கை இச்சட்டத்தைப்பற்றிக் கூறுவதும் ஈண்டுக் கவனிக்கத்தக்கது "1909-ம் ஆண்டு சீர்திருத்தங்கள் இந்தியாவின் அரசியல் பிரச்சினைக்கு மாற்று ஒன்றும் அளிக்கவில்லை; அளிக்கவும் இயலாது. தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபைகளுக்கு அரசாங்கம் பொறுப்புடையது என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட

* *81*, பக். 572.

வில்லை. இந்திய அரசாங்கத்தை நலம் பயக்கும் யதேச்சாதிகாரமாக்கியது பழைய கோட்பாடு. அதன் முடிவே மார்லி-மிண்டோ சீர்திருத்தங்கள். மக்களாதரவு பெற்ற அரசாங்கத்தின் சிறப்பியல்பு பொறுப்பாட்சியாகும். தற்பொழுது நிர்வாகக்குழுக்களில் அது காணப்படவில்லை. அவற்றைப் பொறுப்புடையனவாக ஆக்குதலே நமது குறிக்கோள்''. இவ்வாறு இந்தியாவில் பாராளுமன்ற அரசியல் முறையைப் புகுத்துதலுக்கேற்ற நல்ல வாய்ப்பை மார்லியும் மிண்டோவும் இழந்தனர் என்பதில் ஐயமில்லை.

பகுதி 14

இரண்டாவது ஹார்டிஞ்சு (1910—16)

ஹார்டிஞ்சு பிரபு : சார்லஸ் ஹார்டிஞ்சு டல்ஹௌசிக்கு முன்பு கவர்னர்-ஜெனரலாக இருந்த ஹார்டிஞ்சு பிரபுவின் பேரர். இவர் 1858-ல் பிறந்தவர். தந்தைக்குப் பின் தமது பாரன் (Baron of Penshurst) பட்டத்திற்குரியவரானுர். இவர் இந்தியாவின் அரசப்பிரதிநிதியாகுமுன் இங்கிலாந்தின் வெளிநாட்டுத் துறையில் சிறந்த பதவியிலிருந்தார். ஹார்டிஞ்சு இந்தியாவில் அரசப்பிரதிநிதியாக விளங்கியபொழுது குருபிரபு (Marquis of Crewe) இந்தியா அமைச்சராக இருந்தார். (1911–15). 1910-ல் ஏழாம் எட்வர்டு மன்னர் காலமானுர். அதே ஆண்டு மே மாதம் ஐந்தாம் ஜார்ஜு அரியணை ஏறினுர். 1914–ல் மூண்ட முதலாம் உலகப்போர் 1918 வரை நடந்தது. அதன் காரணமாக இங்கிலாந்தில் ஆஸ்குவித் தலைமையில் இயங்கிய லிபரல் கட்சி மந்திரிசபை கூட்டு மந்திரிசபையாக மாறியது. 1916-ல் ஆஸ்குவித்திற்குப் பிறகு லாய்ட் ஜார்ஜு இங்கிலாந்து நாட்டு முதல் அமைச்சரானுர். ஹார்டிஞ்சு பிரபு 1944-ம் ஆண்டு காலமானுர்.

தில்லி தர்பார் : (1911) 1911-ம் ஆண்டு டிசம்பர் மாதம் தில்லியில் ஐந்தாம் ஜார்ஜு மன்னரின் முடிசூட்டு விழாக் கொண்டாடப்பட்டது. அதற்குப் பேரரசரும், பேரரசியும் இந்தியா மந்திரியும் வந்திருந்தனர். அவ்விழாக்கூட்டத்தில் ஜார்ஜுப் பேரரசர் முக்கியமான அரசியல் மாறுதல்களை அறிவித்தார். அதன்படி இந்தியாவின் தலைநகர் கல்கத்தாவிலிருந்து தில்லிக்கு மாறியது. வங்காளம் தனி மாகாணமாயிற்று. பீகாரும் ஒரிசாவும் பிரிக்கப்பெற்றுத் தனி மாகாணங்கள் ஆயின. அஸ்ஸாம் பகுதி ஒரு தனிக் கமிஷனரின் ஆளுகையில் வந்தது. இவ்வாறு கர்சானின் வங்காளப்பிரிவினை ஒழிந்தது.

1912-ல் இம்மாறுதல்கள் நிறைவேறின. அதே ஆண்டில் தில்லியும் அதன் சுற்றுப்புறப் பகுதியும் பஞ்சாபினின்று ஒரு தலைமைக் கமிஷனரின் ஆளுகைக்கீழ் வந்தன. அந்த ஆண்டு தலைநகர் தில்லிக்கு மாறிய சமயத்தில் அரசப் பிரதிநிதியைக் கொல்வதற்கு எழுந்தது ஒரு முயற்சி. அது வெற்றி பெறவில்லை. புதுதில்லி நிர்மாணிக்க சுமார் 14 கோடி ரூபாய் செலவாயிற்று 1931-ல் அங்கு அரசாங்க அலுவலகம் இயங்கத்தொடங்கியது.

வாரணசி : 1911-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வாரணசி ஜமீன் தனி அரசாகியது; மகாராஜா ஆட்சித் தலைவரானார்.

பொதுப்பணித்துறைக் குழு : 1912-ல் பொதுப் பணித்துறை பற்றி ஆராய ஐஸ்லிங்டன் பிரபுவின் தலைமையில் ஒரு குழு நியமானம் ஆயிற்று. அந்தக் குழுவில் இருந்த மூன்று இந்தியர்கள் கோகலே, அப்துர் ரகீம், M. B. சௌபால் ஆவார்கள். ஆனால், தலைவர் தவிர ஏனைய எட்டு உறுப்பினரும் ஆங்கிலேயர்களே. 1915-லியே குழுவின் அறிக்கை முடிவாகி இருந்தும் போரின் காரணமாக 1917-ல் தான் வெளியாயிற்று. 1917-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் வெளியான அரசியல் பிரகடனத்தால் நிர்வாகத்தை இந்தியர் மயமாக்கும் பிரச்சினை வேறு நிலையை எய்தியது.

திபேத்தும் தென் ஆப்ரிக்காவும் : திபேத்து சீனாவின் மேலாட்சி உரிமையை இந்திய அரசாங்கம் ஒப்புக்கொண்ட போதிலும் அந்நாட்டில் பெரும் மாற்றங் கள் ஏற்படுவதை விரும்பவில்லை. 1913–14-ல் இந்திய அரசாங்கத்தின் அயல்நாட்டுத்துறைத் தலைவர் சீனா திபேத்து முதலிய நாடுகளின் பிரதிநிதிகளைச் சிம்லாவிலும் தில்லியிலும் சந்தித்து நடத்திய பேச்சுகளின் வழியே இது பற்றி ஒரு நல்ல முடிவு கண்டார். 1909-ல் இங்கிலாந்து நாட்டுப்பாராளுமன்றம் நிறைவேற்றிய சட்டத்தின் படி தென். ஆப்பிரிக்கா யூனியன் அமைக்கப்பட்டது. நேட்டால்

மாகாணத்தில் இந்தியர்க் கெதிராக இயற்றப்பட்ட சட்டங் களால் அங்குத் தங்களது அரசாங்க உடன்பாட்டோடு இந்தியர் குடியேறுவது தடைப்பட்டது. 1907-ல் டிரான்ஸ் வால் மாகாணத்தில் அதேபோன்ற சட்டங்கள் இயற்றிய போது M. K. காந்தி சாத்துவிக முறையில் எதிர்த்துப் போராடினர். 1913-ம் ஆண்டு நிறைவேறிய தென் ஆப்பிரிக்கச் சட்டம் இந்தியர்கள் மீது மேலும் பல தடை களை ஏற்படுத்தியது. ஹார்டிஞ்சு பிரபு தென் ஆப்ரிக்கா இந்தியரின் குறைகளுக்கும் அவர்களுடைய சாத்துவிகப் போராட்டத்திற்கும் பரிவு தெரிவித்தும், தென்ஆப்ரிக்க அரசாங்கத்தின் போக்கைக் கண்டித்தும் சென்னையில் பேசினர். 1914-ல் ஏற்பட்ட ஸ்மட்ஸ்—காந்தி உடன் பாட்டின்படி தென் ஆப்ரிக்காவில் இந்தியர் நிவாரணச் சட்டம் நிறைவேறியது. இதனல் தென் ஆப்ரிக்காவில் இந்தியர் போராட்டம் ஒரு முடிவிற்கு வந்தது.

தொழில்துறை முன்னேற்றம்: 19-ம் நூற்றுண்டின் பிற்பகுதியில் அரசாங்கம் கடைப்பிடித்த மராமத்துத் துறைக்கொள்கை இந்தியாவின் பொருளாதார மாறு தலுக்குக் காரணமாக இருந்தது. இதற்கு வழிகாட்டிய வர் டல்ஹௌசியே. பஞ்சாலைத் தொழில், சணல், தேயிலைத் தோட்டத் தொழில்கள் போன்ற நமது பெருந் தொழில்கள் அக்காலத்தில்தான் வளர்ச்சியடைந்தன. நீர்ப்பாசன வசதிகளின் முன்னேற்றம் வேளாண்மைத் தொழில் முன்னேற்றத்தை விரைவில் கண்டது. அரசாங் கத்தின் பஞ்ச நிவாரணக்கொள்கையால் இருப்புப்பாதை களின் வளர்ச்சி பெருகியது. கர்சானுடைய கொள்கையா லும், கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியாலும், விவசாய ஆராய்ச்சிக் கேற்பட்ட பெருவசதிகளாலும் இருபதாம் நூற்றுண்டில் வேளாண்மைத் தொழில் மேலும், மேலும் முன்னேறிக்கொண்டே வந்தது. கர்சான் ஜாம்ஷெட்ஜி டாடாவிடம் கொண்டிருந்த தொடர்பைப் பற்றி முன்பே கண்டோம். முதலாம் உலகப்போர் தொடங்கும் முன்பே அமெரிக்கத் தொழில் வல்லுநர்களின் உதவியுடன் டாடா தம் இரும்பு எஃகுத் தொழிற்சாலையை நிறுவினர்.

இந்திய முதலீடும் இந்தியத் தொழில்முயற்சியும் கண்ட மிகச் சிறந்த சாதனை இது. ஆனால் இந்தியச் சணல் ஆலைகள் பெரும்பாலும் ஆங்கிலேயரின் மூலதனத்தினாலே இயங்கிவந்தன. டாடா இரும்பு எஃகுத் தொழிற் சாலை போர்க்காலத்தில் ஆங்கிலேயருக்குப் பெருந் தொண்டு ஆற்றியது. இந்தியத் தொழில் முன்னேற்றத்தின் பயன்களை நன்கு உணரத்தொடங்கிய ஆங்கிலேயர் 1916-ல் சர் தாமஸ் ஹாலண்ட் தலைமையில் தொழில் முன்னேற்ற ஆராய்ச்சிக்குழு ஒன்றை நியமித்தனர்.

முதலாம் உலகப்போர் : 1914-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஐரோப்பாவில் முதலாம் உலகப்போர் தொடங்கியது. இந்திய இராணுவம் போரில் பங்குகொள்ள முன்வந்தது பெல்ஜியத்திற்காக இங்கிலாந்து போரிலிறங்கியது. இந்திய சிற்றரசர்களும் பொதுமக்களும் இந்திய அரசாங்கமே மலைக்கத்தக்க அளவிற்கு முழுமனதாக அதில் ஈடுபட்டனர். ஆனால் ஆங்கிலேய அரசாங்கம் மக்களின் உற்சாகத்தை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளவில்லை. போரினால் இந்தியா எவ்விதத்திலும் பாதிக்கப்படாமல் இருந்தபோதிலும் ஆளுதவி, பொருளுதவி, பண உதவி முதலியவற்றை நல்கியது; பல போர்முனைகளில் இந்தியர் மெச்சத்தகுந்த அளவிற்கு வீரமுடன் போரிட்டனர். 1914-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் சென்னை நகரை எம்டன் என்ற ஜெர்மானியப் போர்க்கப்பல் தாக்கியது. ஆனால் பெருங்கேடு ஒன்றும் ஏற்படவில்லை. இந்திய – பர்மாப் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுமெனக் கருதிய அரசாங்கம் இந்திய–பர்மா ரெயில் இணைப்பைப் பற்றி எண்ணலாயினர். 1915-ல் இங்கிலாந்து நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தைப் போன்று இந்தியாவிலும் ஒரு பாதுகாப்புச் சட்டம் நிறைவேறியது.

பகுதி 15

செம்ஸ்போர்டு (1916 - 21)

செம்ஸ்போர்டு பிரபு : பிரடெரிக் ஜான் நேப்பியர் தெசிஜெர் எனப்படும் செம்ஸ்போர்டு பிரபு 1868-ல் பிறந்தவர். இவர் 'பாரன்' (Baron) பட்டத்திற்குரியவர் ; பின்பு வைகௌண்ட் பட்டம் பெற்ருர். 1905-லிருந்து 1909-வரை இவர் குயூன்ஸ்லாண்டு மாகாண கவர்னராகவும் 1909-லிருந்து 1913-வரை நியூ சௌத் வேல்ஸ் மாகாண கவர்னராகவும் இருந்தவர். 1916-ல் இவர் இந்தியாவின் அரசப்பிரதிநிதியானுர் ; 1921-ல் இங்கிலாந்து திரும்பிச் சென்ருர் ; 1924-ல் இங்கிலாந்து நாட்டுக் கடற்படை அமைச்சரானுர் ; 1933-ல் காலமானுர்.

முதல் உலகப் போர் : (1914–18) முதல் உலகப் போரில் இந்தியா நேச நாடுகளுக்கு—குறிப்பாக இங்கிலாந்திற்குப் பெருந்தொண்டு செய்துள்ளது. பத்து லட்சத்திற்கு மேற்பட்ட இந்தியர் போரில் பங்கு கொண்டனர். பிரான்சு, பெல்ஜியம் கல்லிப்போலி, சாலொனிகா, பாலஸ்தீனம், எகிப்து, சூடான், மெசபடோமியா முதலிய நாடுகளிலெல்லாம் இந்திய வீரர்கள் நேச நாடுகளுக்காகப் போரிட்டனர். வெளிநாடுகளில் போரிட்டதால் ஏற்பட்ட செலவில் இந்தியா சுமார் மூன்று கோடி பவுன் செலவை ஏற்றுக் கொண்டது ; மேலும் பத்துக் கோடி பவுனைப் போர் நிதியாக அளித்தது. இதனுல் இந்தியாவின் தேசியக் கடன் முப்பது சத வீதம் மிகுந்தது. இந்தியப் பொதுமக்கள்வேறு போருக்காக நிதியளித்தனர். இங்கிலாந்திற்காக இந்தியா போர்த்தளவாடங்கள் வாங்கியதால் பின்னுல் இந்தியாவில் பல நாணயப் பிரச்சினைகள் ஏற்பட்டன. இவ்விதம் இந்தியா பல வகைகளில் உதவி புரிந்தது. உலகில் போரை அறவே ஒழிப்பதற்கும் சுய நிர்ணயக் கோட்பாட்டை நிலைநாட்டவும், குடியாட்சிக்குப்

பாதுகாப்பளிக்கவும் தாங்கள் போரிடுவதாக நேசநாடு கள் அறிவித்தன. அமெரிக்கத் தலைவர் வில்சனின் அரசியல் குறிக்கோள் நேசநாடுகளுக்கு மிகுந்த அறவழி ஆதரவைத் தேடித் தந்தன. ஆயினும் இங்கிலாந்து பிரான்சு முதலிய நாடுகளின் தலைவர்கள் வில்சனின் கொள்கைகள் ஈடேருதபடி செய்து விட்டனர். போரினால் இந்தியா சில பலன்களை அடைந்தது உண்மையே. இந்தியாவின் பிரதிநிதிகள் பேரரசுப் போர்மகாநாடுகளிலும், சமாதான மகாநாட்டிலும் கலந்து கொண்டனர். ரெய்ப்பூரைச் சேர்ந்த சின்ஹா என்ற இந்தியர், இந்தியா மந்திரியின் உதவியாளராக நியமிக்கப்பட்டார். பின்னர் அவர் பிரபுப் பட்டத்தையும் பெற்ருர். இவற்றிலும் மேலாக இந்தியா தொடக்கத்திலேயே சர்வதேச சங்கத்தின் உறுப்பாயிற்று. இதனுல் அனைத்துலக நாடுகளுக்கிடையே இந்தியாவின் மதிப்பு உயர்ந்தது. இந்தியாவில் அரசியல் சீர்திருத்தம் விரைந்திட வேண்டியதாயிற்று. ஆயினும் இந்திய தேசிய வாதிகள் பெரிதும் ஏமாற்றமே அடைந்தனர். "போரில் வெற்றிக்காக இந்தியா பல தியாகங்களைப் புரிந்தபோதும் கடைசியாகப் போர் முடியும் தறுவாயில் இந்தியா அமைதியை இழந்து அடக்கு முறையைத்தான் கண்டது.*

அமிர்தசரசு படுகொலை : (ஏப்ரல், 1919). 1915-ல் முதல் உலகப் போர் நடந்து கொண்டிருக்கும்போது இந்தியப் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப் பட்டது. இச் சட்டத்தின் மூலம் அரசாங்கம் புரட்சி நடவடிக்கைகளை ஒடுக்க முடிந்தது. போர் முடிந்த ஆறு மாதங்களுக்குப் பின் இச்சட்டம் நீங்கிவிட வேண்டும். ஆகையால் வேறு ஒரு சட்டம் கொண்டுவந்து புரட்சி நடவடிக்கைகளை அடக்க அரசாங்கம் முயன்றது. 1917-ல் ஆங்கிலேய நீதிபதி ரவ்லட் தலைமையில் இதுபற்றி ஆய்ந்து ஆலோசனை கூற ஒரு குழு நியமிக்கப்பட்டது. அடுத்த ஆண்டில் இக் குழு தன் முடிவினைத் தெரிவித்தது. அதன் அடிப்படையில் 1919-ல் ரவ்லட் சட்டம் நிறைவேறியது. இச் சட்டம்

---

* *14*, Vol. VI, பக். *488*.

மக்களுடைய உரிமைகளைக் கட்டுப்படுத்தியதால் காந்தியடிகள் (பி. 1869) ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினர். ஏப்ரல் மாதம் 6-ந் தேதி நாடு முழுவதும் அனைத்து வேலை நிறுத்தம் கொண்டாடப்பட்டது. அதே மாதம் 9-ந் தேதி காந்தியடிகள் தில்லிக்குச் செல்ல விருந்ததை அரசாங்கம் தடுத்தது. அடுத்த நாள் பஞ்சாபின் தலைவர்கள் இருவர் அமிர்தசரசில் கைது செய்யப்பட்டுத் தர்மசாலாவில் (கங்ரா ஜில்லா) சிறையிலடைக்கப்பட்டனர். இதனல் அமிர்தசரசு நகரில் அரசியல் கொந்தளிப்புப் பொங்கியது. மக்கள் கூட்டம் ஒன்று போலீஸ் டெபுடி கமிஷனர் இல்லத்தை நோக்கிச் சென்றது. அதைத் தடை செய்ய இராணுவத்தினர் துப்பாக்கி கொண்டு சுட்டதில் பலர் இறந்தனர். அப்படியும் கட்டுக்கடங்காத அக்கூட்டம் ஐந்து ஐரோப்பியரைக் கொன்றது ; ஓர் ஆங்கிலேயப் பெண்மணி கொடுமைக்குள்ளானுள் ; இரண்டு ஐரோப்பிய வங்கிகள் சூறையாடப்பட்டன ; சில பொது நிலையங்கள் தீக்கிரையாயின. அரசாங்கம் நிலைமையைக் கட்டுக் கடங்கச் செய்ய ஜெனரல் டையருக்கு அதிகாரமளித்தது. டையர் மூன்றுக்கு மேற்பட்ட ஆள்கள் கூட்டமாகக் கூடுதலையே தடுத்தார். இருந்தும் அதே மாதம் 13-ந் தேதி ஜாலியான்வாலாபாக்கில் ஒரு பெருங் கூட்டம் திரண்டது. முன்னெச்சரிக்கையின்றியே கூட்டத்தைக் கலைக்க டையர் சுமார் பத்து நிமிடங்கள் வரை துப்பாக்கி கொண்டே சுட்டுக் கொண்டிருந்தார். 379 பேர் இதனல் மாண்டனர். சுமார் 1000-க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். அமிர்தசரசு உள்பட ஐந்து ஜில்லாக்களில் இராணுவச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. பள்ளிச் சிறுர்கள் உள்பட பலர் கொடுமைப் படுத்தப்பட்டனர் ; பல விதங்களில் இழிவும் படுத்தப்பட்டனர். ஏப்ரல் 19-ந் தேதி ஆங்கிலேயப் பெண்மணி கொடுமைக்காளான தெருவின் வழியாகச் செல்லும் இந்தியர் முழந்தாளிட்டு ஊர்ந்து செல்லும்படி டையர் ஆணையிட்டார். இவ்விழிவான ஆணையை அதே மாதம் 26-ந் தேதி பஞ்சாபு அரசாங்கத்தின் விருப்பப்படி செயற்படுத்தாது விட்

டார்கள். இராணுவ அதிகாரிகளும் பஞ்சாபு லெப்டினண்ட் கவர்னரும் ஜெனரல் டையரின் நடவடிக்கைகளை ஆதரித்தனர். அடுத்த அக்டோபரில் இந்திய அரசாங்கம் பஞ்சாபு குழப்பங்களைப்பற்றி ஆராய ஹண்டர் தலைமையில் ஒரு குழுவினை நியமித்தது. ஹண்டரும் அவரது ஆங்கிலேயக் குழுவினரும் தந்த அறிக்கை பெரும்பான்மையோர் அறிக்கையாகும். குழுவின் வேறு மூன்று இந்திய உறுப்பினர்கள் தங்கள் கருத்தைத் தனியறிக்கையாக வெளியிட்டனர். காங்கிரசு சார்பில் காந்தியடிகள் உள்ளிட்ட தனிக்குழு ஒன்றும் இதுபற்றி நவம்பர் மாதத்தில் ஆராயத் தொடங்கியது. அதன் அறிக்கை 1920-ம் ஆண்டு பிப்ரவரியில் வெளியாகியது. அரசாங்கம் நியமித்த குழுவின் பெரும்பான்மையான உறுப்பினர்கூட இராணுவச் சட்டம் செயற்பட்ட முறையைக் கண்டித்தனர். அதிலும் குறிப்பாக ஜாலியன்வாலபாக்கில் எச்சரிக்கையின்றி மக்களிடையே அச்சம் உண்டாக்க நீண்டநேரம் டையர் துப்பாக்கியால் சுட்டதனைக் கண்டித்தனர். காயமடைந்தோரைப்பற்றிக் கவலைகொள்ளாது இரக்கமின்றி நடந்துகொண்டதனையும் ஊர்ந்து செல்லும்படி செருக்கோடு ஆணையிட்டதனையும் கண்டித்தனர். இந்திய அரசாங்கம் அக்குழுவின் பெரும்பான்மையோர் முடிவை ஒட்டி நடவடிக்கை எடுத்துக்கொண்டு டையரைப் பதவியினின்று நீக்கியது. ஆனால் டையரின் நடவடிக்கைகளை ஆதரித்த பஞ்சாபு லெப்டினண்ட்-கவர்னர்மீது நடவடிக்கை எடுக்கவில்லை. இந்திய அரசாங்கத்தை இதுபற்றி இங்கிலாந்து அரசாங்கம் ஆதரித்தது. ஆனால் இங்கிலாந்திலும் இந்தியாவிலும் இதுபற்றிய வாதங்களும், மாறுபாடான கருத்துக்களும் இனப்பூசலையே வளர்த்தன. காங்கிரசோ இன்னும் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமெனக் கோரியது. இங்கிலாந்து பஞ்சாபு லெப்டினண்ட்-கவர்னரைப் பதவியிலிருந்து நீக்கவேண்டும். அரசப்பிரதிநிதியைத் திருப்பியழைத்துக் கொள்ள வேண்டுமெனக் காங்கிரசு வற்புறுத்தியது. சர்.C.சங்கரன் நாயர் 'காந்தியும் அரசியற் குழப்பமும்' (Gandhi and

Anarchy) என்ற நூலில் பஞ்சாபு•லெப்டினண்ட்-கவர்னர் டையரை ஆதரித்ததைக் கண்டித்தார். அதற்காக அவர் மீது அவதூறு வழக்கு தொடரப்பட்டது. அதில் ஆங்கில நீதிமன்றம் டையரின் செயல்களை நியாயமானதென்று கூறியதுடன் அவருக்கு மானநஷ்ட ஈடாக 500 பவுன் கொடுக்குமாறும் தீர்ப்பளித்தது. ஆனால் பிரிட்டிஷ் மந்திரி சபையோ அதனுடைய முந்திய கருத்தையே வலியுறுத்தியது. அமிர்தசரசு படுகொலை மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களைக் காங்கிரசு எதிர்க்குமாறு செய்துவிட்டது. 1921-ல் புதிய மத்திய சட்டசபையைத் தொடங்கிவைத்த கானாட்டுப் பிரபு அமிர்தசரசு நிகழ்ச்சி பற்றிப் பின்வருமாறு கூறினார்: "பஞ்சாபு நிகழ்ச்சிகள் குறித்துப் பேரரசர் கொண்ட ஆழ்ந்த துன்பத்தை நானறிவேன். என்னைக்காட்டிலும் அதுபற்றி யாரும் மிக்க வருத்தமடைய முடியாது."*

மூன்றாம் ஆப்கானியப் போர் (மே, 1919): முதல் உலகப் போரில் இந்திய அரசாங்கத்திற்குத் தாம் அளித்த வாக்குறுதிப்படி ஆப்கானிய மன்னர் ஹபிபுல்லா நடுநிலைமை பூண்டார். ஜெர்மானியரும் ருஷியரும் ஹபிபுல்லாவைத் தம்பக்கம் சேரும்படி முயன்றது வீணாயிற்று. 1919-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஹபிபுல்லா கொலையுண்டார். அதன்பின் சிறிதுகாலம் அரசுரிமைப் போராட்டம் நிகழ்ந்தது. முடிவில் அவருடைய மகன் அமனுல்லா அமீரானார். புதிய அமீர் இந்திய அரசாங்கத்துடன் நேச உறவு கொள்வதையே விரும்பினார். இந்தியாவில் நிலவிய அரசியல் கொந்தளிப்பும் பஞ்சாபில் ஏற்பட்ட குழப்பங்களும் ஆப்கானியத் தலைவர்களைப் போரையே விரும்பத் தூண்டின. அதனால் அவர்கள் தங்கள் அமீரை இந்திய அரசாங்கத்தின் பகைவராக்கிவிட்டனர். 1919-ம் ஆண்டு மே மாதம் ஆப்கானியர் போர் தொடுத்தனர். போர் தொடங்கிய பத்து நாட்களில் ஆங்கிலேயர் ஆப்கானியரை முழுதும் தோற்கடித்தனர். ஜலாலாபாத், காபூல் முதலிய

* *50*, Vol. II, பக். *343*.

நகரங்கள் ஆங்கிலேயரின் குண்டு வீச்சுக்கு இலக்காகின. இப்போரில் தளபதி டையர் சிறந்த பங்குகொண்டு இராணுவ உயர் பதவியைப் பெற்ருர். அதே ஆண்டு ஆகஸ்டு மாதம் அமீர் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி அவர் பெற்றுவந்த உதவித் தொகையை இழந்ததோடு, போர்க்கருவிகளை இந்தியா மூலமாக இறக்குமதி செய்யும் உரிமையையும் இழந்தார். ஆனல் அவரது சுதந்திரம் முழுவதும் ஒப்புக்கொள்ளப் பட்டது. 1921-ம் ஆண்டு நவம்பர் மாதம் சர் ஹென்றி டாப்ஸ் காபூலுக்குச் சென்று அமீருடன் ஒரு உடன்படிக் கையை நிறைவேற்றினர். அதன்படி இரு நாடுகளுக்கும் சமத்துவ அடிப்படையில் நேசத் தொடர்புகள் ஏற்பட்டன. அமீர் நட்பாக இருக்கும் வரை இந்தியா மூலமாகப் போர்க் கருவிகள் இறக்குமதி செய்துகொள்ள அனுமதிக்கப் பட்டார். 1923-ல் இரு நாடுகளுக்குமிடையே ஒரு வாணிக உடன்பாடும் ஏற்பட்டது. 1921-ம் ஆண்டே ஆப்கானிஸ் தானம் ருஷியாவுடன் இரகசிய உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டது. பின்னர் 1926-ல் இதற்குக் குந்தகம் விளையாதபடி புதிய உடன்படிக்கை ஒன்றையும் செய்து கொண்டது. இவ்வாறு ஆப்கானிஸ்தானத்துடன் மூன்று போர்கள் செய்த ஆங்கிலேயர் கடைசியில் அதன் சுதந் திரத்தை, வெளிநாட்டு உறவிலும், ஒப்புக்கொண்டனர். மூன்ரும் ஆப்கானியப் போர் எல்லைப்புறத்தில் மீண்டும் பல இடையூறுகளை விளைவித்தது. இதுபற்றி இந்திய அரசாங்கம் புதிய கொள்கை ஒன்றைப் பின்பற்ற வேண்டி யிருந்தது.

ஆகஸ்டு பிரகடனம் (1917): காங்கிரசு கட்சி யில் மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே 1907-ல் ஏற்பட்ட பிளவு 1916-ல் நீங்கியது. அன்னி பெசண்ட் அம்மையார் திலகர் முதலியோர் தொடங்கிய ஹோம் ரூல் லீகு காங்கிரசுடனும் முஸ்லீம் லீக்குடனும் (தோற்றம் 1906-ல்) ஒத்துழைத்தது. 1916-ம் ஆண்டு அக்டோபர் மாதம் மத்திய சட்டசபை உறுப்பினர் பத் தொன்பதுபேர் இந்தியாவின் அரசியல் சீர்திருத்தத்திற்

கான திட்டத்தை இந்திய அரசாங்கத்திடம் தந்தனர். அதைக் காங்கிரசு கட்சியும் முஸ்லீம் லீக்கும் லட்சுமணபுரியில் தாங்கள் செய்துகொண்ட உடன்பாட்டில் ஆதரித்தன. இவ்வுடன்பாட்டில் முஸ்லீம்களுக்குச் சட்டசபையில் தனிப் பிரதிநிதித்துவம் அளிப்பதைக் காங்கிரசு ஒத்துக்கொண்டது. 1917-ம் ஆண்டு ஜூன் மாதம் அன்னி பெசண்டும் அவருடைய தோழர்களான G. S. அருண்டேல், P. B. வாடியா முதலியோரும் உதகமண்டலத்தில் சிறைப்பட்டனர். இதைப்பற்றிச் சென்னை உயர்நீதிமன்றப் பழைய நீதிபதி S. சுப்பிரமணிய அய்யர் அமெரிக்கத் தலைவர் வில்சனுக்கு ஒரு கடிதம் எழுதினர். வில்சன் அக்கடிதத்தில் கூறப்பட்டிருந்த செய்திகளைப் பிரிட்டிஷ் பிரதம மந்திரிக்குத் தெரிவித்தார். பின்னர் அன்னி பெசண்டும் அவருடைய தோழர்களும் விடுதலை ஆயினர். அதே ஆண்டு ஆகஸ்டு மாதம் 20-ம் தேதி இந்தியா மந்திரி மாண்டேகு (1917–22) இங்கிலாந்து நாட்டுக் காமன்ஸ் சபையில் இந்தியாவின் அரசியல் சீர்திருத்தத்தைப்பற்றிப் பின்வருமாறு பிரகடனம் செய்தார்: “இந்தியாவின் அரசியலைப்பற்றிப் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொள்கை யாதெனில் இந்தியருக்கு நிர்வாகத்துறை எல்லாவற்றிலும் மிகுதியான பங்களிப்பதும், வட்டார நிலையங்களைச் சிறிதுசிறிதாக வளர்த்துப் படிப்படியாக இந்தியத் தன்னுட்சியை நிலைநாட்டி இந்தியாவைப் பிரிட்டிஷ் பேரரசின் ஒரு பகுதியாக விளங்கச்செய்வதுமேயாம். இதைப்பற்றி இந்திய அரசாங்கமும் இங்கிலாந்து அரசாங்கமும் ஒரே கருத்தைக்கொண்டுள்ளன. சீர்திருத்தத்திற்கு வேண்டிய நடவடிக்கைகளைக் கூடிய விரைவில் செயற்படுத்த முடிவுசெய்துள்ளன. முன்னேற்றம் படிப்படியாகவே இருக்கும். எந்தெந்தக் காலத்தில் எந்தெந்த நடவடிக்கைகள் நடைபெறவேண்டும் என்பதைப் பற்றிப் பிரிட்டிஷ் அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் தீர்மானிக்கும்.”

மாண்ட்போர்டு அறிக்கை : 1917-18ல் மாண்டேகு இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்தார். 1918-ம் ஆண்டு

ஏப்ரல் மாதம் இந்திய அரசியல் சீர்திருத்தங்களைப்பற்றிய கூட்டறிக்கை வெளியானது. இது மாண்டேகு-செம்ஸ் போர்டு அல்லது மாண்ட்போர்டு அறிக்கை என வழங்கு கிறது. இது, சுய ஆட்சிக்கான நடவடிக்கைகள் முதலில் மாகாணங்களில் நடைபெறவேண்டும், இந்திய அரசாங் கம் தொடர்ந்து பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்குக் கட்டுப் பட்டிருக்கவேண்டும்; உள்ளிடத் தன்னுட்சியில் இந்திய ருக்கு முழுப்பொறுப்பும் அளிக்கவேண்டும் என்பவற்றை வற்புறுத்தியது. மாகாணங்களில் இரட்டையாட்சியை ஏற்படுத்தும் திட்டமே இவற்றுள் தலையாயது ஆகும். வாக்குரிமை, மத்திய, மாகாண அரசாங்கங்களின் நிர்வாக மாறுதல், இந்தியாக் கவுன்சில், இந்தியா மந்திரியின் அலுவல்கள் முதலியவைகளைப்பற்றி ஆராய மூன்று குழுக்கள் நியமனம் ஆயின. முதல் இரண்டைப் பற்றி இந்தியாவிலிருந்து ஆராய்ந்த குழுவிற்குச் சௌத்பரோ பிரபு தலைவராக இருந்தார். மூன்ருவது பற்றி இங்கிலாந் திலிருந்து ஆராய்ந்த குழுவிற்குக் குரு பிரபு தலைமை பூண்டார். 1919-ம் ஆண்டு ஜூன் மாதம் இத்திட்டம் மசோதாவாகக் காமன்ஸ் சபையில் வந்தது. அங்கு நிறைவேறியபின் மன்னரின் ஒப்பத்தைப்பெற்று அது 1919-ம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டமாயிற்று.

1919-ம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம்: சட்டத் தின் முன்னுரை பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் இந்தியக் கொள்கையைப் பற்றிக் கூறுகின்றது. அஃதாவது நிர்வா கத்தை இந்தியர் மயமாக்கல், படிப்படியாக இந்தியாவில் தன்னுட்சியை ஏற்படுத்தல், அதைப் பிரிட்டிஷ் பேரரசின் கீழ் இருக்கச்செய்தல் முதலியனவாம். இந்தியாவின் அரசியல் முன்னேற்றம் படிப்படியாக இருக்கவேண்டு மென்றும், அதைப்பற்றிப் பிரிட்டிஷ் பாராளுமன்றம்தான் முடிவு செய்யும் என்றும், அதன் அரசியல் முடிவு எல்லாம் இந்தியருடைய ஒத்துழைப்பையும் பொறுப்புணர்ச்சியை யும் பொறுத்தே இருக்கும் என்றும் முன்னுரை வற்புறுத்து கிறது.

சட்டத்தின் முதற்பகுதி மாகாண நிர்வாகத்தைப் பற்றியது. அதன்படி மாகாண நிர்வாகத் துறைகள் மாற்ருத துறைகள் (Reserved Departments) என்றும் மாற்றப்பட்ட துறைகள் (Transferred Departments) என்றும் பிரிந்தன. மாற்றப்பட்ட துறை மந்திரிகளின்கீழ் இருக்க வேண்டும். மந்திரிகள் மாகாண சட்டசபையின் உறுப்பினராக இருத்தல் வேண்டும். அவர்களை மந்திரிகளாகக் கவர்னரே நியமிக்கவேண்டும். தலத்தாபன நிர்வாகம் சுகாதாரம், கல்வி, பொது மராமத்து முதலிய துறைகள் மந்திரிகளின்கீழ் இருக்கவேண்டும். இத்திட்டம் கவர்னரின் ஆளுகைக்குட்பட்ட வங்காளம், சென்னை, பம்பாய், ஐக்கிய மாகாணம், பஞ்சாபு, பீகார், ஒரிசா, மத்திய மாகாணம், அஸ்ஸாம் முதலிய மாகாணங்களில் செயற்பட வேண்டும். 1923-லிருந்து பர்மாவிலும் 1932-லிருந்து வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலும் இத்திட்டம் செயற்படவேண்டும். கவர்னரின் நிர்வாகக்குழு (Executive Council) இருவருக்குக் குறையாமலும் நால்வருக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும். மாற்ருத துறைகளின் நிர்வாகம் அதன்கீழ் நடக்கவேண்டும். மாகாணச் சட்டசபையின் காலம் மூன்ருண்டுகளாகும். நிர்வாகக்குழு உறுப்பினர்கள் சட்டசபையின் உறுப்பினராவர். சில சட்டசபை உறுப்பினரைக் கவர்னரே நியமிக்கவேண்டும். எஞ்சியவர்கள் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். சட்டம் வந்த நான்காண்டுகளுக்குப்பின் சட்டசபையே தன் தலைவரைத் தேர்ந்தெடுக்க உரிமை பெறும். வரவு செலவுத் திட்டத்தில் சிலவற்றைத் தவிர மற்றவைகளை நிறைவேற்றச் சட்டசபைக்கு உரிமை இருந்தது. சட்டசபை நிறைவேற்றிய மசோதாவிற்கு எல்லாம் கவர்னர் ஒப்புதலளிக்கவேண்டும். அதை நிராகரிக்கவும் அல்லது மாற்றியமைக்கவும் சட்டசபைக்குத் திருப்பி அனுப்பவும் கவர்னர்-ஜெனரலின் ஆலோசனைக்கு விட்டுவிடவும் கவர்னருக்கு உரிமை உண்டு. மாற்ருத துறைகளைப் பற்றிய மசோதாவைச் சட்டசபை நிறைவேற்ற மறுத்தாலோ கவர்னர் விருப்பப்படி நிறைவேற்ருவிடிலோ கவர்

னர். அவசியமெனக் கருதினுல் அம்மசோதாவைச் சட்டமாக்கலாம். ஆனுல் அத்தகைய சட்டங்கள் கவர்னர்-ஜெனரலுக்கு அனுப்பப்பெற வேண்டும். அவர் அவற்றிற்குப் பேரரசரின் ஒப்புதலைப் பெற்றுத்தர வேண்டும். ஆனுல் மாற்றப்பட்ட துறைகள் பற்றியவற்றில் கவர்னர் மந்திரிகளின் ஆலோசனைப்படியே நடக்கவேண்டும். கவர்னர் தகுந்த காரணத்தின்பேரில் மந்திரிகளின் கருத்தை நிராகரிக்க அதிகாரமிருந்தது. இச்சட்டத்தின் படி மாகாண சட்டசபை உறுப்பினரின் எண்ணிக்கை மிகுதியாயிற்று. பெரும்பாலான உறுப்பினர் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். 1909-ல் முஸ்லீம்களுக்கு அளிக்கப்பட்ட வகுப்புவாரிப் பிரதிநித்துவம் இப்பொழுது சீக்கியர், இந்திய கிறித்தவர் முதலியோருக்கும் வேறு சிலருக்கும் அளிக்கப்பட்டது. கவர்னரின் நிர்வாகக் குழு உறுப்பினரில் பாதிபேர் இந்தியராக இருக்கவேண்டுமென்பது ஒரு எழுதாச் சட்டமாயிற்று. இவ்விதம் ஓரளவு பொறுப்புள்ள அரசாங்க ஆட்சியே இரட்டை ஆட்சி எனப்படுவதாம்.

சட்டத்தின் இரண்டாம்பகுதி மத்திய அரசாங்க அமைப்பைப் பற்றியது. இதில் மார்லீயின் மரபே தொடர்ந்து தோன்றியது. சட்டசபை, கீழ்ச் சட்டசபையும் மேல் சட்டசபையும் என இரண்டாக வளர்ந்தாலும் சுய ஆட்சி அடிப்படையில் எவ்வித மாறுதலும் எழவில்லை. சட்டசபை நிர்வாகக் குழுவின் மலர்ச்சியே என்ற பழைய கருத்து மறைந்தது. கீழ்ச்சபையின் (Legislative Assembly) காலம் மூன்ருண்டுகளாகும். அதில் 140-க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் இருக்கவேண்டும். அவர்களில் ஏழில் ஐந்து பங்கு தேர்ந்தெடுக்கப்படவேண்டும். நியமனம் செய்யப்படுவோரிலும் மூன்றில் ஒரு பங்கு உத்தியோகச் சார்பற்றவர்களாக இருக்கவேண்டும். வாக்குரிமை மேலும் பலருக்கு வழங்கப்பட்டது. பெண்களிலும் சிலர் அவ்வுரிமை பெற்றனர். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் மேலும் சிலருக்கு அளிக்கப்பட்டது. மேல்சபை (Council of State) ஐந்தாண்டு காலம் இருக்க வேண்டி

யது ; 60 உறுப்பினரைக் கொண்டது ; அவற்றில் பெரும்பாலோர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள். சட்டசபையின் இரு பிரிவுகளுக்கும் இடையே மாறுபாடு ஏற்படின் கவர்னர்-ஜெனரலின் விருப்பத்தின்பேரில் அவை ஒன்ருகக்கூடிப் பெரும்பாலோர் வாக்குக்கள் மூலம் முடிவு செய்யவேண்டும். சட்டசபையின் உரிமை பல வகையிலும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. தேசியக் கடன், இராணுவம், அயல்நாட்டு விவகாரங்கள் முதலியவைகளைப் பற்றி விவாதிக்கும்முன் சட்டசபை கவர்னர்-ஜெனரலின் அனுமதியைப் பெறவேண்டும். பின்னர் வேறுசில நிர்வாகங்களும் இக் கட்டுப்பாட்டின்கீழ் வந்தன. சட்ட சபை நிறைவேற்றிய மசோதாவை நிராகரிப்பதற்கும், செயற்படுத்த இங்கிலாந்து அரசாங்கத்தின் அனுமதி வேண்டும் என்று கூறுவதற்கும், சட்டசபை மசோதாவை மாற்றியமைப்பதற்காகத் திருப்பி அனுப்புவதற்கும் கவர்னர்-ஜெனரல் அதிகாரம் பெற்றிருந்தார். சட்டசபை நிறைவேற்றிய ஒரு மசோதா, பிரிட்டிஷ் இந்தியா முழுமைக்கோ அதன் ஒரு பகுதியினுக்கோ இடையூறு விளைவிக்கும் எனக் கவர்னர்-ஜெனரல் கருதினுல் அதை நிராகரிக்கலாம். அதே போல கவர்னர்-ஜெனரல் தாம் வேண்டும் ஒரு மசோதாவைச் சட்டசபை ஆதரிக்கா விடிலும் அவர் விருப்பப்படி நிறைவேற்ருவிடினும் அது நாட்டின் பாதுகாப்பு, அமைதி, நலன் முதலியவற்றிற்கு அவசியமென அவர் கருதினுல் அதைச் செயலாக்க அதிகாரமுண்டு. ஆனுல் அத்தகைய சட்டங்கள் இங்கிலாந்து அரசாங்கத்தின் ஒப்புதலைப் பெறவேண்டும். ஆயினும் நெருக்கடியான காலங்களில் அவ்வித ஒப்புதலின்றியே கவர்னர்-ஜெனரல் அச்சட்டங்களைச் செயற்படுத்தலாம். வேண்டுமானுல், பின்னர் இங்கிலாந்து அரசாங்கம் அவற்றைத் தள்ளிவிடலாம். வரவுசெலவுத் திட்டத்தில் பாதுகாப்பு, அரசியல், சமயம் முதலியவற்றைப் பற்றியவை கவர்னர்-ஜெனரலின் அனுமதியின்றி வாக்கெடுப்பதற் குரியவை ஆகா. அரசாங்கம் கேட்கும் பணத்தைச் சட்ட சபை குறைத்தாலும் அனுமதிக்க மறுத்தாலும் அது

அவசியமெனக் கவர்னர்-ஜெனரல் கருதினுல் அவர் விருப்பப்படி மாற்றங்கள் செய்யலாம். கடைசியாக, நெருக்கடியான காலங்களில் நாட்டின் பாதுகாப்பு அமைதி முதலியவற்றிற்கான செலவை அனுமதிக்கக் கவர்னர்-ஜெனரலுக்கு முழு அதிகாரம் இருந்தது. அரசப் பிரதிநிதியின் நிர்வாகக் குழு உறுப்பினரின் எண்ணிக்கை பற்றிய கட்டுப்பாடு நீங்கியது. அதில் பொது உறுப் பினருக்கும் சிறப்பு உறுப்பினருக்கும் இடையே இருந்த பாகுபாடும் மறைந்தது. நிர்வாகக் குழுவில் மூன்று இந்தியர்கள் உறுப்பினராயினர். சட்டம் இதைப்பற்றித் தெளிவாகக் கூருவிடினும் இது வழக்கமாகத் தொடர்ந்து கையாளப்பட்டது. நிதிவிஷயத்திலும் இந்தியாவின் தன்ஞட்சியுரிமை எழுதாச் சட்டமாக வழங்கியது.

சட்டத்தின் மூன்ரும் பகுதி இந்தியா மந்திரியையும் இந்தியா கவுன்சிலேயும் பற்றியது. இதுவரை இந்தியா மந்திரியின் சம்பளம், அவரது இந்திய அரசாங்கத்தின் வருமானத்திலிருந்தே செலவாகியது. இனி அவற்றை இங்கிலாந்து அரசாங்கம் தனது வருமானத்திலிருந்தே கொடுக்கவேண்டும். இந்தியா கவுன்சிலின் உறுப்பின ரின் எண்ணிக்கை எட்டிற்குக் குறையாமலும் பன்னிரண் டிற்கு மேற்படாமலும் இருக்கவேண்டும். அவர்களுடைய பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாகும். இந்தியா மந்திரி யின் சில அலுவல்களேக் கவனிக்க உயர் ஆணையாளர் (High Commissioner for India) ஒருவர் புதிதாக நியமிக்கப்பட்டார். இந்திய நிர்வாக மேற்பார்வை இந்தியா அமைச்சரிடம் பழையபடியே இருந்துவந்தது.

சட்டத்தின் நான்காம் பகுதி சிவில் பணித்துறைகளே யும், அதிகாரிகளேப் பொறுக்கும் பொதுப் பணித் துறைக்குழு அமைப்பையும் பற்றியது. ஐந்தாம் பகுதி, இச்சட்டம் நிறைவேறியதிலிருந்து பத்தாண்டுகள் கழிந்த பின் ஒரு குழுவினே நியமித்து இச் சட்டத்தின்கீழ் இந்தியாவின் ஆட்சி எவ்வாறு நடைபெறுகிறது என ஆராய்ந்து தன்ஞட்சிமுறையை விரிவுபடுத்துவதா

அல்லது குறைப்பதா என்பதை ஆராய்வது பற்றியது. 1919-ல் வெளியான பேரரசரின் பிரகடனம் " இச்சட்டம் மக்களின் பிரதிநிதிகளுக்கு நாட்டின் ஆட்சியில் தெளிவான பங்கை அளித்துள்ளது; பின்னல் முழுமையும் தன்னுட்சியாக விளங்குவதற்கு ஏற்ற வழியையும் காட்டுகின்றது " என்று கூறுகிறது. இப்புதிய ஆட்சித் திட்டத்தை 1921-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் கானுட்டுப் பிரபு தொடங்கிவைத்தார். எனவே செம்ஸ்போர்டு பதவிக்காலத்திலேயே இத்திட்டம் உருவாகிச் செயலுக்கு வந்தது.

இந்தியச் சிற்றரசர்கள் : முதல் உலகப் போருக்குமுன் இந்தியச் சிற்றரசர்களுக்கும் இந்திய அரசாங்கத்திற்கும் இடையே நிலவிய உறவைப்பற்றி முன்பே கண்டோம். ஒற்றுமையும் ஒத்துழைப்பும் அதன் சிறந்த கூறுகளாகும். போருக்குப் பின்னர் அந்தக் கொள்கை தீவிரமாகவும் விரிவாகவும் பின்பற்றப்பட்டது. பிரிட்டிஷ் இந்தியாவைத் தவிர இந்திய சிற்றரசுகளும் பேரரசின் அவைகளில் பிரதிநிதித்துவம் பெற்றன. மேலும் சிற்றரசுகளிடையே நெருங்கிய தொடர்பு ஏற்படவும் அவைகளுக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் இடையே நெருங்கிய உறவு ஏற்படுவதற்கும் நரேந்திர மண்டலம் என்கின்ற வேந்தர்கள் அவை ஒன்றினைக் கானுட்டுப் பிரபுவே தொடங்கி வைத்தார் (பிப்ரவரி, 1921). இதனுடைய தோற்றத்திற்கு மாண்ட்போர்டு அறிக்கையே காரணமாகும். இச்சபை ஓர் ஆலோசனை சபையேயாகும்; இதன் நடவடிக்கைகள் 1929- வரை இரகசியமாகவே இருந்தன.

ருஷிய அபாயம் : 1914-லிருந்து 1917 வரை ருஷியா ஜெர்மனி முதலிய நாடுகளுக்கு எதிராக நேச நாடுகளுடன் சேர்ந்திருந்ததால் இந்தியாவிற்கு ருஷியா பற்றிய அச்சம் மறைந்தது. ஆனல் ருஷியாவில் சோவியத்து அரசாங்கம் ஏற்பட்ட பின்பு ஆங்கில-ருஷிய உறவு சீர்கேடடைந்தது. 1920-ல் லெனின் இதைப் பற்றிப் பின்வருமாறு அறிவித்தார். " இங்கிலாந்துதான்

நமது மிகப்பெரிய பகையாகும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமே எங்கும் பரவுகின்ற கொள்ளை நோயாக உள்ளது. பிரிட்டிஷ் ஆதிக்கத்தைப் பொதுவாக ஆசியாவிலிருந்தும், குறிப்பாகத் துருக்கி, பாரசீகம் முதலிய நாடுகளிலிருந்தும் வேரறுப்பதே நம்முடைய பணியாகும். இந்தியாவில் அதை உரமாகத் தாக்கவேண்டும். காபூல் இந்தியா வழியாகவே இலண்டனுக்கு நாம் செல்ல வேண்டும் ''.

எல்லைப்புறக் கொள்கை: மூன்றும் ஆப்கானியப் போர் எல்லைப்புறத் தொல்லைகளை மீண்டும் மூளவிட்டது. 1920-ல் அதுபற்றி இந்திய அரசாங்கம் ஒரு புதிய கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதனைச் செம்ஸ்போர்டு வற்புறுத்தினர். 1923-ம் ஆண்டு மார்ச்சு மாதம் இந்திய அரசாங்கத்தின் வெளிநாட்டுத்துறைத் தலைவர் (Foreign Secretary) சர் டென்னிஸ் பிரே மத்திய சட்டசபையில் இதுபற்றி முடிவாக உருவாகிய கொள்கையைப்பற்றிப் பின்வருமாறு விளக்கினர். "வாசிரிஸ்தானத்தின் கேந்திரப்பகுதியாகிய மகசூத் பிரதேசத்தை இந்திய அரசாங்கத்தின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவர வேண்டும். எல்லைப்புறம் முழுவதையும் இராணுவத்தின் கீழ்க்கொண்டுவருதல் பொருளாதார வகையில் முடியாது. எல்லைப்புறத்தை யாவரும் எளிதில் அணுகமுடியாத நிலை நீக்கப்படவேண்டும். வேறுவிதமாய்க் கூறினல் இந்திய அரசாங்கத்தின் கொள்கை ஓரளவு ஆதிபத்திய கொள்கையேயாகும். அது ஒரு முன்னேற்றக் கொள்கையுமாகும். எல்லைப்புறத்தில் எளிதில் அணுகமுடியாத இடத்தில் வாழ்ந்ததாலும் பிற்பட்டவர்களாகஇருந்ததாலும் முரட்டுத்தனமும் ஆக்கிரமிப்புப் போக்கும் உடையவர்களாக விளங்கியகூட்டத்தினரை நாகரிகமுடையவர்களாக ஆக்குவதன் மூலம் அமைதியோடு வாழச்செய்வதற்குரிய வழிகளில் இது முதற்படியாகும். '' இவ்விதம் ஆதிபத்திய கொள்கைக்கும் புறக்கணிப்புக் கொள்கைக்கும் இடைப்பட்ட ஒரு கொள்கையையே அரசாங்கம் பின்பற்றியது. இது ஒரு வகையில் ஆதிபத்திய கொள்கையே.

ஆட்சி முறை : சர் தாமஸ் ஹாலண்ட் தலைமையில் ஏற்பட்ட இந்தியத் தொழிற்குழு (1916—18) இந்தியத் தொழில் விரைவில் முன்னேறச் செய்வதில் அரசாங்கத்திற்குரிய தலையாய பங்கை வற்புறுத்தியது. அதனுடைய பரிவுரைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டபோதிலும் பலகாரணங்களால் அவற்றைப் போதிய அளவு நிறைவேற்றவில்லை. 1918-ம் ஆண்டு மே மாதம் இந்திய அரசாங்கம் தலத்தாபன ஆட்சிமுறையைப்பற்றி விரிவான தொரு தீர்மானத்தை மாண்ட்போர்டு அறிக்கையில் கூறியதற்கேற்ப வெளியிட்டது. 1920-ம் ஆண்டு டிசம்பர் மாதம் மத்திய அரசாங்கம் ஐ. சி. எஸ். (I. C. S.) போட்டித் தேர்வு இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஒரே சமயத்தில் நடத்தவேண்டுமென்ற கோரிக்கைக்கு ஓரளவு இணங்கியது. பேரரசு சிவில் பணித்துறையில் சிறுபான்மை வகுப்பினரை நியமிப்பதன் மூலம் பிரதிநிதித்துவம்பெற வழிகோலியது. இந்திய நாணய மாற்று விகிதத்தை நிலைபெறுத்துதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் முடிவின்படி ஒரு ரூபாய், இரண்டு ஷில்லிங்கிற்குச் சமம் என்ற விகிதம் 1920-ம் ஆண்டு முதல் வழக்கிற்கு வந்தது. ஆனால் அது பல சிக்கல்களை உண்டாக்கி நாணயமாற்றில் பெரும் ஏற்றத்தாழ்வுகளை விளைவித்தது. அதன் காரணமாக ஹில்டன் யங் என்பவர் தலைமையில் இந்திய அரசாங்கத்தின் பொருளமைப்பு நாணய முறையை ஆராய அரச நிலைக்குழு ஒன்று 1925-ம் ஆண்டு நியமிக்கப்பட்டது.

பல்கலைக்கழகங்கள் : 1857-ம் ஆண்டு கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய இடங்களில் பல்கலைக்கழகங்கள் ஏற்பட்டதைக் கண்டோம். பின்னர்ப் பஞ்சாபிலும் அலகாபாத்திலும் முறையே 1882-லும் 1887-லும் இரண்டு பல்கலைக்கழகங்கள் ஏற்பட்டன. 1857-க்கும் 1915-க்கும் இடையே ஏற்பட்ட பல்கலைக்கழகங்கள் இவை இரண்டுமேயாம். ஆனால் 1916-க்கும் 1929-க்கும் இடையே பதின்மூன்று பல்கலைக்கழகங்கள் தோன்றின. வாரணாசி இந்துப் பல்கலைக்கழகம், மைசூர்ப் பல்கலைக்கழகம் (1916), பாட்னாப் பல்கலைக்கழகம் (1917), ஐதராபாத்து உஸ்மானி

பெண்மணிகள் கற்பழிக்கப்பட்டனர்; இந்துக்கள் முகமதிய மதத்தில் சேரும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர்; பலர் கொலைசெய்யப்பட்டனர். கலகத்தை அடக்க அரசாங்கம் இராணுவச் சட்டம் வழங்கும் என்று அறிவிக்கப்பெற்றது. அரசாங்கப்படை கலகக்காரர்களுடன் பலமுறை போரிட்டது. கொரில்லாப் போர்தந்திரங்களைக் கையாண்ட கலகக்காரர்கள் முடிவில் தோல்வியுற்றனர். அந்த ஆண்டு நவம்பர் மாதம் 97 மாப்பிள்ளைக் கைதிகள் பொருள்களை ஏற்றிவரும் மூடுவண்டி ஒன்றில் அடைக்கப்பட்டுக் கோயம்புத்தூருக்குப் புகைவண்டி வழியே அனுப்பப்பட்டனர். போதுமான அளவு காற்றோட்டம் இல்லாத காரணத்தால் அதில் எழுபதுபேர் வழியில் சாகநேரிட்டது. காவலாக வந்த போலீஸ் ஆதிகாரி ஆண்ட்ரூஸ் என்பார் கைதிகள் வழியில் இறந்துகொண்டிருந்ததைக் கேள்விப்பட்டும் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லையாம். பின்னர் அவர் நீதிமன்ற விசாரணையில் குற்றவாளியல்ல வென விடுதலை அடைந்தார் (1922-ம் வருடம் டிசம்பர் மாதம்). இத்துயர நிகழ்ச்சியும், ஆண்ட்ரூஸ் வழக்கில் ஐரோப்பியர் அவருக்குக் காட்டிய ஆதரவும் இன வெறுப்பை வளர்த்தன. இதுபற்றி ஒரு அமெரிக்க மதியுரைஞர் பின்வருமாறு கூறுகிறார்: "ஆண்ட்ரூஸின் வழக்கு விசாரணை நேர்மையானது, ஓரவஞ்சகமானதன்று, அவர் செய்த முடிவில் தவறு இருக்கலாம் என்று கருதினால், அதே போன்றே சிராஜ்-உத்-தௌலாவைப்பற்றியும் முடிவு செய்யவேண்டும். அவர் தமது கைதிகள் இறக்க வேண்டுமென எண்ணினார் என்று நம்புவதற்குக் காரணம் எதுவுமில்லை." * 1922-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் கடைசி வரை கலகப் பிரதேசத்தில் இராணுவச் சட்டம் வழங்கி வந்தது.

இந்தியச் சிற்றரசுகள் : முறைதவறி நடந்த நபா (Nabha, 1925) இந்தூர்(1926) மன்னர்கள்மீது ரீடிங் பிரபு நடவடிக்கை எடுத்துக்கொண்டார். சிற்றரசுகளின் உள்

* *103*, பக். *318*.

வாழ்வியற் சூழல் வளம் பெற

— க.சி. அகமுடைநம்பி பி.இ.,எம்.ஏ.

முன்னுரை :

உயிரினங்கள் அனைத்தும் இயல்பாக வாழ்வதற்கு ஏது வாக அமைகின்ற சூழலை வாழ்வியற் சூழல் (Eco-System) என்று கூறலாம். உயிரினங்கள் வாழுகின்ற இந்த உலகையே உயிரினங்களின் 'இல்லம்' என்று சொல்வது தகும் இவ் இல்லத்து உயிரினங்களாம் புள்ளினங்கள், நுண்ணுயிர்கள், மரஞ்செடி கொடிகள் (தாவரங்கள்), மனிதர்கள் போன்ற அனைத்துயிர் களின் ஒருங்கிணைந்த வாழ்வியலையும், அதற்குரிய இல்லத்துச் சூழலையும் வகுத்தும் தொகுத்தும் காணுகின்ற அறிவியலை 'வாழ்வுச் சூழலியல்' அல்லது' 'உயிர்ப்புச் சூழலியல்' (Ecology) என்று குறிப்பிடுவது பொருத்தமானது.

வாழ்வியற் சூழல் சீராக அமைந்து நிலைபெறத் தேவைப் படும் கூறுபாடுகள் பல. அவற்றுள் நிலம், நீர், காற்று, மரம் செடி கொடிகள் போன்றவை அடிப்படைத் தேவைகளாம். இவற்றைத் தனித்தனியாகவும் தொகுத்தும் பார்ப்பது, வாழ்வியற் சூழலைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வழிகோலும்.

நிலம் :

நிலத்தைப் பெண்ணாக உருவகப்படுத்திக் காண்பார்கள் தமிழ்ப் புலவர்கள். ''நில மடந்தைக்கு எழில் ஒழுகும்...'' என்று வரும் தமிழ்த்தாய் வாழ்த்து நம்முடையது. தாய்க்கு நிகராக நிலத்தைப் போற்றுவது தமிழர் மரபு. நாம் பிறந்த நாட்டைத் தாய்நாடு என்றே போற்றுகிறோம்.

உலகக் கோளில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதியாக விரிந்து கிடக்கிறது நிலப்பரப்பு. இந்த நிலப்பரப்பை இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். கருப்பு நிறத்து நிலவகை ஒன்று; 'கரிசல்' என்றிதற்குப் பெயர். செந்நிற நிலவகை மற்றது; 'செவ்வல்' என்று இதனைக் கூறுவர். இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட நிலவகைகள்தாம் எத்தனை! எத்தனை! இக்கிய

யாப் பல்கலைக்கழகம் (1918), அலிகார் முஸ்லீம் பல்கலைக் கழகம், இரங்கூன் பல்கலைக்கழகம், லட்சுமணபுரி பல்கலைக் கழகம் (1920). 1917ல் சர் மைக்கேல் சாட்லர் தலைமையில் நியமிக்கப்பட்ட கல்கத்தாப் பல்கலைக்கழகக் குழு அப் பல்கலைக்கழகத்தின் புனரமைப்பைப் பற்றிப் பல முடிவு களைத் தெரிவித்தது. கற்பிக்கும் ஒருமுகப் பல்கலைக் கழகங்கள் ஏற்படுவதை அக்குழு ஆதரித்தது. 1921-ல் டக்காவில் ஏற்பட்ட பல்கலைக்கழகம் அத்தகையதே. குழு வின் அறிக்கை, பழைய பல்கலைக்கழகங்கள் சீர்பெறுவ தற்கும் புதியன தோன்றுதற்கும் தூண்டுகோலாயிற்று.

நாட்டுச் செய்திகளில் தலையிடுவதற்குப் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு உள்ள உரிமையை இது எடுத்துக்காட்டியது. தம் உள்நாட்டுச் செய்திகளில் தமக்கு முழு உரிமை இருக்க வேண்டுமென நிசாம் மன்னர் கோரியதையும் பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. பீரார் பகுதியைத் திரும்பப்பெற முயன்ற நிசாம், தாம் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு ஒத்த அரசியல் நிலை உடையரென்றும், தமக்கும் இந்திய அரசாங்கத்திற்கும் இடையே இருந்த சச்சரவைத் தீர்க்கப் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு உரிமை இல்லை என்றும் கூறியதை ரீடிங் மறுத்தார். இது பற்றி 1926-ல் ரீடிங் பின்வருமாறு விளக்கம் தந்தார்: ''பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அதிகாரமே இந்தியாவில் தலையாயது. எனவே இந்தியச் சிற்றரசர் எவரும் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் சமமான நிலையில் பேச்சுவார்த்தை நடத்துவது என்பது ஒப்புக்கொள்ள முடியாததாகும். பிரிட்டிஷ் அரசாங்கம் சிற்றரசுகளின் உள்நாட்டுச் செய்திகளில் தலையிடக்கூடிய உரிமை அதன் ஆட்சியின் ஒரு கூறே ஆகும்.

புதிய அரசியலமைப்பும் ஒத்துழையாமை இயக்கமும்: சீர்திருத்தப்பட்ட அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த பொழுது காந்தியடிகள் தலைமையில் காங்கிரசும் முஸ்லீம் லீக்கும் ஒத்துழையாமை இயக்கத்தைக் கடுமையாக நடத்தின. கிலாபத்து இயக்கமும் மும்முரமாயிற்று. 1921-ல் வேல்ஸ் இளவரசர் இந்தியாவிற்கு வந்தார். அவரை வரவேற்கும் விழாக்களில் ஒத்துழையாமை இயக்கத்தினர் பங்குகொள்ளவில்லை. அப்பொழுது பம்பாயில் நடந்த கலகங்களினால் மிகுந்த சேதங்கள் விளைந்தன. 1922-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் சௌரிசௌரா (ஐக்கிய மாகாணம்) என்னுமிடத்தில் 21 போலீஸ்காரர்கள் கொலையுண்டனர். அதே ஆண்டு ஆகஸ்டு மாதம் பிரிட்டிஷ் முதல் அமைச்சர் காமன்ஸ் சபையில் இந்தியாவின் புதிய அரசியல் சீர்திருத்தத்தை ஒரு பரிசோதனை என்று குறிப்பிட்டதுடன் இந்திய சிவில் பணித்துறையிலிருந்த ஆங்கிலேயர்கள் இந்திய நிர்வாகத்தின் முதுகெலும்பாவர் என்றும் எப்பொழுதும் இன்றியமையாதவர்

கள் என்றும் வலியுறுத்தினர். முதல் அமைச்சரின் பேச்சுப் பாராளுமன்றத்தில் முன்வெளியான கொள் கைக்கு மாருக நிர்வாகத்தை இந்திய மயமாக்கும் வேகத் தைத் தடைசெய்யுமென்ற அச்சமேற்பட்டது. ஆனல் லீயை (Lee) த்தலைவராகக் கொண்ட பொதுப் பணித் துறைக்குழு இந்தியர்களுக்கு அனுகூலமான முடிவுகளைச் செய்தது. இந்திய அரசாங்கமும் அவற்றைப் பெரும் பாலும் ஏற்றுக்கொண்டது. அதே ஆண்டு செப்டம்பர் மாதம் 1910-ம் ஆண்டு செய்தித்தாள் சட்டமும் இதர அடக்குமுறைச் சட்டங்களும் நீக்கப்பட்டன. ஆயினும் இந்தியச் சிற்றரசர்களைச் செய்தித்தாள்களின் தாக்கு தலினின்றும் காக்க மத்திய அரசாங்கம் ஒரு மசோதாவைக் கொண்டு வந்தது. அதனைச் சட்டசபை எதிர்த்தது. அரசப்பிரதிநிதி தமது சிறப்புரிமையைப் பயன்படுத்தி அதனை நிறைவேற்றினர். 1923-ல் அதே சிறப்புரிமை வழியே உப்புவரியும் இரு மடங்காகியது. அதற்கடுத்த ஆண்டு சுயராச்சியக் கட்சி சட்டசபையில் நுழைந்தது. பின்னரும் அரசப்பிரதிநிதி தமது சிறப்புரிமை வழியே நிதிமசோதாவை நிறைவேற்றினர். அதே ஆண்டு துருக்கிய நாட்டுச் சட்டசபையானது காலிஃப் (Khalif) பதவியை ஒழித்தது. அதன் பயனுக இந்தியாவில் கிலாபத்து இயக்கம் ஒடுங்கிற்று. இந்திய சட்டசபை, பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளின் சுய ஆட்சிமுறை அடிப் படையில் இந்தியாவிற்கு அரசியலமைப்பு ஒன்றை ஏற் படுத்த வேண்டுமெனக் கோரியது (1924). மூன்று ஆங் கிலேயர்களையும் ஆறு இந்தியர்களையும் கொண்ட மடிமான்குழு இந்திய அரசியல் சீர்திருத்தங்களின் நடை முறையை ஆய்ந்தது. குழுவில் நான்கு இந்தியர்களும் இருந்தனர். அவர்கள் சிறுபான்மையோர் அறிக்கையை (1925) வெளியிட்டனர். இரட்டை ஆட்சி நடைமுறைக்கு ஒத்துவருவதற்கில்லை என்று கண்டித்தார்.

காப்புவரிக் கழகம் : (1923) சர் இப்ராகிம் ரஹி மத்துல்லா தலைமையில் நிறுவப்பட்ட அரசாங்க வருவாய் ஆலோசனைக்குழு இந்தியத் தொழில்களில் ஏற்பன

வற்றிற்குப் பாதுகாப்பளிப்பதையும் காப்புவரிக் கழகம் ஒன்று நிறுவுவதையும் தனது முடிவாகக் கூறியது. அது பருத்தித் தீர்வையை ஆதரிக்கவில்லை. 1923-ல் காப்புவரிக் கழகம் அமைக்கப்பட்டது. அடுத்த ஆண்டு அதன் பரிவுரையை ஒட்டி இரும்புத் தொழில் பாதுகாப்புச் சட்டம் நிறைவேறியது. அதன்படி டாடா இரும்பு எஃகு தொழிற்சாலை பாதுகாப்புப் பெற்றது. காப்புவரிக் கழகம் வேண்டும்பொழுது கூட்டப்பெறுகின்ற ஒரு தற்காலிக அமைப்பாகும். 1925-ம் ஆண்டு டிசம்பர் மாதம் பருத்தித் தீர்வைவரி தற்காலிகமாக நீக்கப்பட்டது. பின்னர் அது அடியோடு ஒழிக்கப்பட்டது (1926–வருடம் மார்ச்சு மாதம்). இவ்வாறு இந்தியரின் நீண்டநாளைய குறை நீங்கியது.

பல்கலைக்கழகங்கள் : டக்கா (1921), தில்லி (1922) நாகபுரி (1923) ஆகிய இடங்களில் பல்கலைக்கழகங்கள் ஏற்பட்டன. 1925-ல் அனைத்திந்தியப் பல்கலைக்கழக நிறுவனம் (Inter-University Board) ஒன்று ஏற்பட்டது. பல்கலைக்கழக நடவடிக்கைகளை ஒன்றுபடுத்தல் அதன் தலைசிறந்த பணிகளில் ஒன்றாகும்.

பகுதி 17

இர்வின் (1926—31)

இர்வின் : வாழ்க்கைக் குறிப்பு : எட்வர்டு பிரெடரிக் லிண்ட்லே உட் 1881-ல் பிறந்தவர். இவர் 1854-ல் இந்திய அரசாங்கத்தின் கல்வி அறிக்கையை உருவாக்கிய முதல் வைகவுண்ட் ஹாலி பாக்ஸ் ஆகிய சர் சார்லஸ் உட் என்பாரின் பேரராவர். இவர் குடியேற்ற நாட்டுத் துணையமைச்சராகவும் (1921-22), கல்விக் கழகத்தின் (Board) தலைவராகவும் (1922—24), உழவு மந்திரியாகவும் (1924–25) தொண்டாற்றியவர். 1925-ல் 'பாரன்' (Baron) பட்டம் பெற்றார். இவர் 1926-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந்தியாவிற்கு அரசப் பிரதிநிதியாக வந்தார். 1934-ல் தமது தந்தையார் காலமான பிறகு இவர் வைகவுண்ட் பட்டத்திற்குரிய வரானார். இர்வின் சிறந்ததொரு அறிஞராக இருந்த துடன் உண்மையான கிறித்தவராகவும் திகழ்ந்தார். இவர் பிரிட்டிஷ் கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்தவ ராயினும் இந்தியரின் அரசியல் ஆர்வங்களைப் பரிவுடன் நோக்கிய அறிஞர். ராம்சே மாக்டனல்டு 1929-லிருந்து 1931-வரை தொழிற்கட்சியின் அமைச்சர் குழுவிலும் 1931 லிருந்து 1935 வரை பதவியிலிருந்த தேசிய அமைச்சர் குழுவிலும் அமைச்சராக விளங்கினார்.

தென் ஆப்ரிக்கா : 1921-ம் ஆண்டு பேரரசு மாநாடு பிரிட்டிஷ் டொமினியன்களில் வாழும் இந்தியர் குடி யுரிமை பெறுவதற்கு உரியவர்கள் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. ஆனால் தென் ஆப்பிரிக்கா யூனியன் அரசாங்கம் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. 1922-க்கும் 1925-க்கும் இடையே இந்தியருக் கெதிரான சட்டங்கள் தென் ஆப்பிரிக்காவில் நிறைவேறின. ஆனால் 1927-ல் கேப்டவுன் நகரில் ஒரு சமரச உடன்பாடு ஏற்பட்டது.

அதே ஆண்டில் தென் ஆப்பிரிக்காவில் இந்திய அரசாங்கத்தின் தலைமை முகவர் நியமிக்கப்பட்டார்.

ஆப்கானிஸ்தானம்: மூன்றும் ஆப்கானியப் போருக்குப் பிறகு (1919) மேற்கின் போக்கில் சில சீர்திருத்தங்கள் கொண்டுவர அமனுல்லா முயன்றார். அதனால் அவர் தம் குடிமக்களிடையே செல்வாக்கிழந்து காபூலை விட்டுக் காந்தகாருக்குச் சென்று விட்டதோடு (1929, ஜனவரி மாதம்) பின்னர் முடியையும் துறந்தார். ஆப்கானிஸ்தானத்தில் நிலவிய அரசியல் குழப்பத்தில் அரசிற்கு உரிமையுடைய இனயத்துல்லா அமீர் ஆனார். ஆனால் இவர் ஐந்து நாட்களே அரியணையிலிருந்தார். பின்னர் ஒரு தண்ணீர் தூக்கியின் மகனாகிய பாச்சாயி சாக்கோ (Bacha-i-Sakao) இனயத்துல்லாவை நீக்கிவிட்டுப் பதவிக்கு வந்தார். அதே ஆண்டிலேயே பழைய அரச குடும்பத்தைச் சார்ந்த நாதிர்கான் என்பார் பாச்சாயி சாக்கோவைக் கொன்று பதவியைக் கைப்பற்றினார். இந்தியாவானது ஆப்கானிஸ்தானத்தின் உள்நாட்டுப் போரில் குறுக்கிடவில்லையாயினும் தன் குடிகளின் பாதுகாப்பில் கண்ணும் கருத்துமாக இருந்தது. புதிய அமீரான நாதிர் ஷா ஆட்சி புரிந்து வெற்றியடைந்ததுடன் இந்திய அரசாங்கத்துடன் நல்லுறவும் கொண்டிருந்தார். அவர் கொலைக்குப் பின் அவருடைய புதல்வராகிய முகமது ஸாகீர் 19-ஆம் வயதில் உரிமைப் போரின்றி அரியணை ஏறினார் (1933). இந்திய அரசாங்கத்திற்கு எல்லைப்புற வாசிகள் அளித்துவந்த தொல்லைகள் 1925-லும் 1930–31-லும் மிக்கு வந்தன.

இந்தியாவின் அரசியல் சிக்கல்: பட்லர் குழு (1927-9). 1927-ல் பர்மா கவர்னரான சர் ஹார்கோர்ட்டும் வேறு இருவரும் கொண்ட ஒரு குழு பேரரசிற்கும் இந்திய சிற்றரசுகளுக்கும் இடையேஉள்ள உறவுகளைப் பழைய உடன்படிக்கைகள், சன்னத்துக்கள், பொருளாதார உறவுகள் முதலியவற்றின் அடிப்படையில் ஆராய நியமிக்கப்பட்டது. குழுவின் அறிக்கை 1929-ல் வெளியாயது. அது

பிரிட்டிஷ் பேரரசின் மேலாட்சியுரிமையை வலியுறுத்திய துடன் பிரிட்டிஷ் பேரரசு இந்தியச் சிற்றரசுகளுடைய உடன்பாடின்றிச் சட்டசபைக்குப் பொறுப்பான பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்திற்கும் அவற்றிற்கும் உள்ள உறவில் மாறுதல் எதுவும் செய்யக்கூடாது என்று தெளி வாக்கியது.

குடியேற்ற நாட்டு அரசு நிலை: 17,18-ம் நூற்றாண்டு களில் பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள் பலவற்றில் மக்கள் பிரதிநிதி ஆட்சிமுறை வளர்ச்சியுற்றது. ஆனால் மக்கட் பொறுப்பாட்சிக் கோட்பாடு முதன் முதலில் கானடாவின் அரசியலைப்பற்றி டர்ஹாம் பிரபு வெளியிட்ட அறிக்கை யில்தான் உருவாகியது. பின்னர் அது கானடா (1867) ஆஸ்திரேலியா (1900) தென் ஆப்பிரிக்கா (1909) அயர் லாந்து (1922) நாடுகளின் அரசியல் அமைப்புக்களில் இடம் பெற்றது. இங்கிலாந்திற்கும் தன்னாட்சி பெற்ற குடியேற்ற நாடுகளுக்கும் இடையே உள்ள ஒத்துழைப் பினைப் பற்றிய திட்டங்களை ஆராய 1887-லிருந்து குடி யேற்ற நாடுகளின் மாநாடுகள் பல நடந்தன. கானடா வின் தூண்டுதலால் 1907-ம் வருட மகாநாடு, மாநாட்டின் பெயர் பேரரசு மாநாடு (Imperial Conference) என்று மாறியது. 1911-ல் முதல் பேரரசு மாநாடு கூடியது. 1907-ம் ஆண்டு மாநாடு தன்னாட்சி உரிமைபெற்ற குடி யேற்ற நாடுகளை "டொமினியன்கள்" என்று வழங்க முடிவுசெய்தது. 1917-ல் பிரிட்டிஷ் பேரரசு தனது வெளிநாட்டு உறவில் டொமினியன்களுக்கும் இந்தியா விற்கும் உள்ள பங்கை ஒத்துக்கொண்டது. 1925-ல் டொமினியன்கள் அலுவலகம் (Dominions Office) ஒன்று (குடியேற்ற நாடுகளின் அலுவலகத்தினின்று வேறாகப் பிரிந்து) விளங்கியது. 1926-ம் ஆண்டு கூடிய பேரரசு மாநாடு டொமினியன் நிலைபற்றிய சிக்கலை ஆராயப் பால் பர் தலைமையில் ஒரு குழுவை நியமித்தது. அக் குழுவின் முடிவை மாநாடு ஒத்துக்கொண்டது. அம் முடிவு இதுவே ஆம்: "பிரிட்டிஷ் பேரரசில் இங்கிலாந்தும் டொமினியன்கள் ஒவ்வொன்றும் தன்னுரிமை கொண்ட

சமுதாயமாகும். அவை உள்நாட்டு விவகாரங்களிலும் வெளிநாட்டு விவகாரங்களிலும் எந்த வகையிலும் ஒன்றிற் கொன்று ஏற்றத் தாழ்வு இல்லாத நிலை பெற்றவையே. அவை பிரிட்டிஷ் பேரரசருக்கு இறையன்பு காட்டுவதில் ஒன்றுபட்டவை. அவை பிரிட்டிஷ் காமன் வெல்த்தில் தத்தம் விருப்பப்படி இயங்கி விளங்குவனவாகும்.'' 1931-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட வெஸ்ட்மினிஸ்டர் சட்டம் 1926,1930 ஆண்டுகளில் கூடிய பேரரசு மாநாடுகளின் முடிபுகளை நடைமுறைக்குக் கொண்டுவந்தது. அதில் குறிக்கப்பட்ட டொமினியன்கள் கானடா, ஆஸ்திரேலியா, நியூசீலந்து, தென் ஆப்பிரிக்கா, அயர்லாந்து, நியூபவுண்ட்லாந்து என்பனவாகும்.

இந்தியாவின் அரசியலமைப்புச் சிக்கல் : இந்தியாவின் அரசியலமைப்பு நிலை முன்பே சிறப்புநிலை பெற்றிருந்தது. ரீடிங் பிரபுவும் சர் மால்காம் ஹெய்லியும் (பஞ்சாபு கவர்னர், 1924-8) 1917-ல் அறிவிக்கப்பட்ட மக்களுக்குப் பொறுப்புள்ள இந்திய அரசாங்கநிலை டொமினியன் நிலையினின்றும் வேருனது என்றே கூறினர். ஆனல் இர்வின் வேறுவகையாக எண்ணினர். அவை இரண்டும் ஒன்றே என்பது இவருடைய எண்ணமாகும். அதுவே தேசியவாதிகளின் கருத்தும் ஆகும். 1919-ம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டப்படி இந்திய அரசியலைப் பற்றிய சட்டநிலைக்குழு 1929-ல்தான் நியமிக்கப்பட வேண்டும். ஆனல் அச்சட்டம் திருத்தப்பட்டது ; சைமன் குழு 1927 நவம்பரிலேயே ஏற்படுத்தப்பட்டது. அக்குழுவில் பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர் எழுவர் இருந்தனர். அவர்களில் மூவர் கன்சர்வெட்டிவ் கட்சியைச் சேர்ந்தவர்கள், இருவர் லிபரல் கட்சியினர், இருவர் தொழிற்கட்சியைச் சார்ந்தவர். குழுவில் இந்தியர் எவருமில்லாதது இந்திய மக்களின் வெறுப்பை மூட்டியது. குழு 1928, 1929-ம் ஆண்டுகளில் இந்தியாவிற்கு இருமுறை வந்தது. இந்தியா மந்திரியான பர்க்கென்கெட் பிரபு இந்தியப் பொதுமக்கள் ஒத்துக்கொள்ளக்கூடிய அரசியலமைப்பை உருவாக்குமாறு இந்தியத் தலைவர்

களுக்குச் சவால் விடுத்தார். 1927-ல் சென்னையில் கூடிய காங்கிரசு சைமன் குழுவைப் புறக்கணிக்க முடிவுசெய்தது; இந்தியாவிற்கு ஓர் அரசியலமைப்பைத் திட்டமிடவும், இந்திய சுதந்திரத்தை அரசியல் குறிக்கோளாகக் கொள்வதற்கும் முடிவுசெய்தது. மோதிலால் நேருவின் தலைமையில் அமைந்த குழு குடியேற்ற நாட்டு அரசியல் அடிப்படையில் 'நேரு அறிக்கை' என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டது (ஆகஸ்டு 1928). அந்த ஆண்டிலேயே ஓராண்டிற்குள் குடியேற்ற நாட்டு நிலையை இங்கிலாந்து இந்தியாவிற்கு வழங்குவதானால் அதை ஏற்றுக்கொள்ளவும் முடிவு செய்தது. 1929-ல் இர்வின் பிரபு இங்கிலாந்திற்குச்சென்று தலைமை அமைச்சர் ராம்சே மாக்டனலுடன் கலந்து எண்ணி ஆராய்ந்தார். இந்தியாவிற்குத் திரும்பியதும் அவர் இந்தியாவிற்குக் குடியேற்ற நாட்டு நிலையை வழங்குவதைப்பற்றி ஓர் அறிக்கை வெளியிட்டார் (அக்டோபர் 31, 1929): 1917-ம் ஆண்டு அறிக்கையில் உள்ளபடி இந்தியாவின் இயல்பான அரசியலமைப்பின் முன்னேற்றம் குடியேற்றநாட்டு நிலையை அடைவதாகவே உள்ளதென்பதை மேன்மை தங்கிய மன்னர் அரசாங்கத்தின் சார்பாகத் தெளிவாக்கும்படி எனக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது." சைமன் குழுவின் அறிக்கை வெளியானபின் வட்டமேசை மகாநாட்டைக் கூட்ட வேண்டுமென்று இங்கிலாந்து அமைச்சரவை முடிவு செய்தது. இதனையும் அவர் அறிவித்தார். ஆனல் குடியேற்ற நாட்டு நிலையை வழங்கும் அடிப்படையில் அம் மாநாட்டின் நடவடிக்கைகள் அமையவேண்டுமெனக் காங்கிரசு வற்புறுத்தியது. அதற்கு அரசப்பிரதிநிதி உடன்படவில்லை. எனவே 1929-ல் மோதிலால் நேருவின் புதல்வர் ஜவகர்லால் நேருவின் தலைமையில் கூடிய லாகூர் காங்கிரசு முழு விடுதலையே இந்தியாவின் அரசியல் குறிக்கோள் என்று குறித்தும் வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்வதை எதிர்த்தும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. 1930-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் சட்ட மறியல் இயக்கத்தைக் காந்தியடிகள் தொடங்கினர். அரசாங்கம்

அடக்குமுறையைப் பின்பற்றியது. 1930-ம் ஆண்டு மே மாதம் வெளியான சைமன் அறிக்கை மாகாணங்களில் இரட்டை ஆட்சியை ஒழித்து முழு சுய ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என முடிவு கூறியது. ஆனால் நடுவிடத்துரைத்தனத்தில் எவ்வகை மாற்றத்தையும் அது விரும்பவில்லை. அத்தகைய திட்டத்தை மிதவாதிகள் உள்பட எல்லா இந்தியரும் வன்மையாகக் கண்டித்தனர். வட்டமேசை மாநாட்டில் காங்கிரசு கலந்துகொள்ள முயன்றதெல்லாம் வீணாயிற்று. முதல் வட்டமேசை மாநாடு லண்டன் மாநகரில் நடைபெற்றது (நவம்பர்1930-ஜனவரி 1931). இந்தியச் சிற்றரசர்கள் ஆதரவு பெற்ற கூட்டாட்சி அரசும் பொறுப்புள்ள நடுவிடத்துரைத்தனமும், இருக்கவேண்டும் என்று எல்லோரும் ஒப்பினர். இந்தியக் கூட்டாட்சி அமைப்பு ஏற்படுத்தும் சிக்கல் இவ்வாறு முடிவாகியது. இது சைமன் குழுவின் முடிவுக்கும் அப்பாலும் சென்றது. கூட்டாட்சி அரசியலில் நடுவிட அரசாங்கம் பொறுப்புள்ளதாக இருக்கவேண்டுமென்பதை இங்கிலாந்து அரசாங்கம் ஒத்துக்கொண்டது. 1931 மார்ச்சு மாதம் ஏற்பட்ட காந்தி - இர்வின் ஒப்பந்தத்தின் பயனாகச் சட்ட மறியல் இயக்கம் நின்றது. காந்தி காங்கிரசின் ஏகப்பிரதிநிதியாக இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்துகொண்டார் (செப்டம்பர்1931-டிசம்பர் 1931). மேற்குறித்த ஒப்பந்தம் ஏற்பட்டவுடன் இர்வின் பிரபுவின் பதவிக்காலமும் முடிவுற்றது (ஏப்ரல் 1931).

சாரதாச் சட்டம் 1929 : 1929-ல் ஹர்பிலாஸ் சாரதா என்பவர் கொண்டுவந்த குழந்தைகள் திருமணத் தடைச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்திற்குக் காரணமான சாரதா என்பவரின் பெயராலே பொதுமக்கள் இதை அழைத்தனர். இதன்படி 18 வயதிற்குட்பட்ட ஆண்களும் 14 வயதிற்குட்பட்ட பெண்களும் குழைந்தகளாவர்; இவ்வயதிற்குட்பட்ட ஆண்களுக்கும் பெண்களுக்கும் திருமணம் செய்விப்பது குற்றமாகும்; இத்தகைய குற்றத்திற்கு ஒரு மாதத்திற்கு மேற்படாத சிறைத்

தண்டனையும் ரூ. 1000-க்கு மேற்படாத அபராதமும் விதிக்கலாம். குற்றத்தில் சம்பந்தப்பட்ட 18 வயதிற்கு மேற்பட்ட மாப்பிள்ளைகள், பெற்றோர்கள் அல்லது பாது காவலர்கள் திருமணத்தை நடத்திவைக்கும் புரோகிதர்கள் தண்டனைகளுக்கு உள்ளாவர். ஆனால் பெற்றோரோ பாதுகாவலரோ பெண்டிரானால் சிறைத்தண்டனை இல்லை. அபராதமே உண்டு. இச்சட்டத்தை மீறி நடக்கும் குழைந்தகள் திருமணத்தைப்பற்றி நீதிமன்றம் ஆராய வேண்டுமானால் திருமணம் நடந்த ஓராண்டிற்குள் வழக்குத் தொடரவேண்டும். பொறுப்பின்றி வழக்குத் தொடர்வதனைத் தடுக்கப் பிணையத்தொகை ஒன்று கட்ட வேண்டுமென்ற விதியுமிருந்தது. இத்தகைய வழக்குகளை மாவட்ட மாஜிஸ்ட்ரேட்டுகள் அல்லது மாநில மாஜிஸ்ட் ரேட்டுகள் இவர்கள்தாம் விசாரிக்க அதிகாரம் பெற்றிருந்தனர்.

பொருளாதார முன்னேற்றம் : ஹில்டன் யங் தலைமையில் ஏற்பட்ட குழு (1925-6) ரூபாய் நாணய மாற்று 1 ஷில்லிங் 6 பென்சுகள் விகிதத்தில் நிலைத்திருக்கும்படியும் இந்தியாவில் ரிசர்வ் பாங்க் ஒன்று ஏற்படுத்தும்படியும் முடிவு செய்தது. குழுவின் உறுப்பினரான சர் புருஷோத் தமதாஸ் தக்கூர்தாஸ் ரூபாயின் புதிய மாற்று விகிதத்தை ஒப்புக்கொள்ளவில்லை. குழுவின் முடிவு மசோதா உருவில் நடுவிடச் சட்டசபைக்கு வந்தபொழுது கீழ்ச் சபையில் பழைய விகிதமே வேண்டும் என்பவர்கள் அதை எதிர்த்தனர். ஆயினும் மிகக் குறைவான மிகுதி வாக்குகளால் அது நிறைவேறியது. கீழ்ச்சபையும் மசோதாவை ஆதரித்ததால் மசோதா சட்டமாகியது. 1929-ம் ஆண்டு தோன்றிய பொருளாதார நிலையின் தளர்ச்சி 1931-ல் மேலும் இழிநிலை அடைந்தது. அதை யொட்டி இந்திய அரசாங்கம் பணித்துறையில் ஆட்களைக் குறைத்தும், சம்பளத்தில் 10 சதவீதம் குறைத்தும், வருமானவரியை மிகுதிப்படுத்தியும், பழைய வரிகள் பெரும்பாலனவற்றில் 25 சதவீதம் மிகுதிப்படுத்தியும் நிலைமையைச் சரிகட்ட முயன்றது. இந்திய உழவினைப்

பற்றி லின்லித்கோவின் தலைமையில் ஆராய அரசநிலைக் குழு ஒன்று வந்தது. உழவுநிலை ஆராய்ச்சியையும், வேளாண்மைப் பொருள்களின் விற்பனையையும்வற்புறுத்தியது. 1929-ல் பேரரசு உழவர் ஆராய்ச்சிக் கழகம் (Imperial Council of Agricultural Research) ஏற்படுத்தப்பட்டது. காப்புவரி நிறுவனத்தின் முடிவினை ஒட்டிச் (1927) சீன, ஜப்பானிய நாடுகளின் போட்டிக்கெதிராகப் பஞ்சாலைத் தொழிலுக்குப் பாதுகாப்பளிக்க முடிவானது. பம்பாய் மாகாணத்தில் பண்டார்தாரா, பட்கார் என்னுமிடங்களில் அமைந்த வில்சன் அணைக்கட்டும் லாயிட் அணைக்கட்டும் முறையே 1926, 1928-ம் ஆண்டுகளில் பாசனத்திற்குத் திறக்கப்பட்டன. இவ்விரு அணைக்கட்டுகளும் நீர்ப்பாசனப் பொறிஇயலின் பெரிய சாதனைகளாகும். அயோத்தியின் நீர்ப்பாசன வசதிகளை மிகுதியாக்குவதற்காக வெட்டிய சார்தா கால்வாய் 1928-ல் திறக்கப்பட்டது. மோட்டார் போக்குவரவு மிகுதியானதால் சாலைவழிப் போக்கு வரவு வசதிகளை ஆராய ஒரு குழு நியமிக்கப்பட்டது. அதன் முடிவினை ஒட்டி 1929-ல் சாலை முன்னேற்ற நிதி ஒன்று தொடங்கப்பெற்றது.

பல்கலைக்கழகங்கள் : 1926-ல் வால்டேர் என்னுமிடத்தில் ஆந்திரப் பல்கலைக் கழகமும், 1927-ல் ஆக்ராப் பல்கலைக் கழகமும், 1929-ல் அண்ணாமலைநகரில் (தென்ஞர்க்காடு ஜில்லா) அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் ஏற்பட்டன. தென் இந்தியாவில் தனி ஒருவர் ஏற்படுத்தியது இது ஒன்றே; ஒருமுகப் பல்கலைக்கழகமாக விளங்குவதும் இது ஒன்றே; இந்தியப் பொதுமக்களின் உள்ளங்களில் போதுமான அளவு உயர்நிலைக்கல்வி உறுதியாக வேரூன்றி இருப்பதற்குத் தனி ஒருவரின் வள்ளன்மையால் எற்பட்ட அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நற்சான்ருகும்".* 1928-ல் சர் பிலிப் ஹார்டாக் தலைமையில் சைமன் குழுவின் கல்வித் துணைக் குழு நியமிக்கப்பட்டது. இந்தியக் கல்வி பற்றிய அதன் விரிவான அறிக்கை அடுத்த ஆண்டில் வெளிவந்தது.

---

* *81*, பக். *654*.

பகுதி 18

வில்லிங்டன் (1931 - 6)

வில்லிங்டன் பிரபு: வாழ்க்கைக் குறிப்பு: வில்லிங்டன் எனப்படும் ஃபிரீமேன் ஃபிரீமேன் தாமஸ் 1866-ல் பிறந்தவர். 1900-லிருந்து 1910 வரை இவர் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் உறுப்பினராய் இருந்தார். 1910-ல் இவர் 'பாரன்' (Baron) பட்டம் பெற்ருர்; 1913-லிருந்து 1919 வரை பம்பாய் கவர்னராகவும், 1919-லிருந்து 1924 வரை சென்னைக் கவர்னராகவும் இவர் இருந்தார். 1924-ல் வைகௌண்ட் பட்டம் பெற்ற இவர் ஐந்தாண்டுகள் (1926-31) கானடாவின் கவர்னர்-ஜெனரலாயிருந்தார். அடுத்தாற்போல் 'எர்ல்' (Earl of Willingdon) பட்டம் அளிக்கப்பட்டபின் இவர் இந்தியாவிற்கு அரசப் பிரதிநிதியாக வந்தார்; ஐந்தாண்டுகள் கழித்து மார்க்-குவிஸ் (Marquis) பட்டமடைந்தபின் வில்லிங்டன் 1941-ல் காலமாஞர்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு 1931: 1881-ல் சுமார் 25·4 கோடியாக இருந்த இந்தியாவின் மக்கள் தொகை 1891-ல் ஏறக்குறைய 28·7 கோடியாகவும், 1901-ல் கிட்டத்தட்ட 29·4 கோடியாகவும், 1911-ல் ஏறக்குறைய 31·5 கோடியாகவும் 1921-ல் சுமார் 31·9 கோடியாகவும், 1931-ல் கிட்டத்தட்ட 35·3 கோடியாகவும் மிக்கு வந்தது. கடைசி பத்தாண்டுகளில் பத்துசத வீத மிகுதிப்பாடு நோக்கத்தக்கது.

அரசியலமைப்பு உருவாக்கும் முயற்சிகள்: இங்கிலாந்தில் நடைபெற்ற இரண்டாவது வட்டமேசை மகாநாட்டில் (செப்டம்பர்—டிசம்பர் 1931) காந்தியடிகள் கலந்துகொண்டதால் எவ்வித பயனும் ஏற்படவில்லே. இதற்குக் காரணம் இந்தியத் தலேவர்களிடையே வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் பற்றி எவ்வித ஒற்றுமையும் ஏற்

படாமையே ஆம். ஆயினும் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய அரசியலமைப்பில் தொடர்ந்து அக்கரைகாட்டி வந்தது. 1931-ஆம் ஆண்டின் முடிவில் வாக்குரிமையை ஆராய ஒரு குழுவும், பொருளமைப்பு நிலையை ஆராய ஒரு குழு வும் ஏற்பட்டன. இவை 1932-ம் ஆண்டு ஜூலை மாதம் தங்கள் முடிவுகளை வெளியிட்டன. அதே சமயத்தில் காங்கிரசும் சட்ட மறியல் இயக்கத்தை மீண்டும் தொடங் கியது. அதனால் வில்லிங்டன் அடக்குமுறையைக் கடுமை யாகப் பின்பற்றினார்; காந்தியடிகள் கைதுசெய்யப்பட்டார்; காங்கிரசின் நடவடிக்கைகள் சட்டத்திற்கு மாறானவை என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் 1934-ம் ஆண்டில் நிலைமை மாறத்தொடங்கியது ; சட்டமறியல் இயக்கம் நின்றது ; காந்தி அடிகள் காங்கிரசினின்றும் விலகி நின்றார். 1932-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பிரிட்டிஷ் அரசாங்கம் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பற்றிய தனது முடிவை வெளியிட்டது. இம்முடிவை விரும்பாத காந்தி அடிகள் இதை மாற்றுவதற்காக உண்ணாவிரதம் பூண்டார்; முடிவை மாற்றவேண்டும் அல்லது தாம் உண்ணாமல் இறக்கவேண்டும் என்பதே காந்தி அடிகளின் நோக்கம். 1932-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் காந்தி அடிகளுக் கும் அம்பேத்காருக்கும் இடையே ஏற்பட்ட பூனா உடன் படிக்கையால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முடிவு ஓரளவு மாறியது. அதன்படி தேர்தலில் தாழ்த்தப்பட்ட வகுப் பினருக்குத் தனித்தொகுதி அளிக்கும் திட்டம் கைவிடப் பட்டது ; அதற்குப் பதிலாகப் பொதுத் தொகுதியிலே அவர்களுக்கு இடம் ஒதுக்கும் முறை ஏற்றுக்கொள்ளப் பட்டது. மூன்றாம் வட்டமேசை மாநாடு (நவம்பர்–டிசம்பர் 1932) காங்கிரசின் ஒத்துழைப்பின்றியே நடைபெற்றது. இதுவரை ஏற்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் 1933-ம் ஆண்டு மார்ச்சு மாதம் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய அரசியலமைப்பின் சீர்திருத்த ஏற்பாடு பற்றிய விரிவான அறிக்கை ஒன்றை ("the White Paper") வெளியிட்டது. இதை வின்ஸ்டன் சர்ச்சிலும் வேறு சிலரும் எதிர்த்தனர். அதே ஆண்டில் பிரிட்டிஷ் பாரளு

மன்றத்தின் கீழ்ச்சபை, மேல்சபை உறுப்பினர்கள் பதினாறு பேர்கள் கொண்ட கூட்டுப் பொறுக்குக் குழு ஒன்று லின்லித்கோ பிரபு தலைமையில் நியமிக்கப்பட்டது. அது தன் அறிக்கையை 1934-ம் ஆண்டு நவம்பர் மாதம் வெளியிட்டது. அதன்படி அடுத்த ஆண்டு பிப்ரவரியில் காமன்ஸ் சபையில் ஒரு மசோதா கொண்டுவரப்பட்டது. அது மன்னரின் ஒப்பம் பெற்றது. 1935 ஆண்டினுடைய இந்திய அரசாங்கச் சட்டம் எனப்பெயர் பெற்றது இதுவே ஆம்.

1935-ம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டமும் கூட்டாட்சி அமைப்பு ஏற்பாடும்

கூட்டாட்சியின் முக்கிய அம்சங்கள்: 1935-ம் ஆண்டுச் சட்டம் இந்தியாவில் ஒரு கூட்டாட்சி அரசு ஏற்பட இடமளித்தது. இப்புதிய திட்டத்தில் எளிதில் மாற்ற இயலாத ஓர் அரசிலமைப்புக்கே இடம் இருந்தது. மாநில அரசாங்கங்களுக்கும் கூட்டரசாங்கத்திற்கும் இடையே அதிகாரப் பிரிவினைக்கு ஏற்பாடு இருந்தது; கூட்டாட்சி நீதிமன்றமும் இடம் பெற்றது. கானடா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளின் அரசியல் அமைப்புகளை மாதிரியாகக்கொண்டு இத்திட்டம் அமைந்தது. என்றாலும் இந்தியாவின் நிலையை ஒட்டி, வழக்கமான கூட்டாட்சி முறைக்குப் புறம்பான சில கூறுகளும் இதில் இடம் பெற்றன. கானடா ஆஸ்திரேலியா முதலிய நாடுகளின் மாகாணங்கள் சுயாட்சி பெற்றவை. பிரிட்டிஷ் இந்தியாவின் மாகாணங்கள் சுயாட்சி பெருதவை. எனவே கூட்டாட்சியில் சேருவதால் அவைகளின் நிலை உயர இடம் ஏற்பட்டது. அதே சமயத்தில் அவை சில அதிகாரங்களையும் கடமைகளையும் இழந்தன. அதே போன்று இந்தியச் சிற்றரசுகளும் தங்கள் அதிகாரங்களில் சிலவற்றை இழக்கவேண்டியிருந்தது. பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களையும் இந்தியச் சிற்றரசுகளையும் கொண்ட இக்கூட்டாட்சித் திட்டத்தில் சில முரண்பாடுகளைக் காண

லாம். கூட்டாட்சி அரசாங்கம் மாகாணங்கள்மீது கொண்டிருந்த அதிகாரத்திற்கும் சிற்றரசு நாடுகள்மீது கொண்டிருந்த அதிகாரத்திற்கும் வேறுபாடிருந்தது; மாகாணங்கள்மீது இருந்த அதிகாரம் ஒரே வகையானது; ஆனால் சிற்றரசு நாடுகளின்மீது இருந்த அதிகாரம் ஒவ்வொரு நாட்டிற்கு ஒவ்வொரு வகையாக இருந்தது. சட்டமியற்றும் அதிகாரம் கூட்டாட்சி அரசாங்கத்திற்கு இருந்தது. ஆனால் சிற்றரசு நாடுகளின் ஒப்புதலின்றி அதன் சட்டம் பல செய்திகளில் செல்லாது. கூட்டாட்சி அரசாங்கத்தின் நிர்வாக அதிகாரமும் அப்படித்தான் விளங்கியது. மேலும் கூட்டாட்சியில் சிற்றரசுகள் சேர்ந்தாலும் சேரலாம் சேராமலும் இருக்கலாம். மாகாணங்களோ சேர்ந்தே தீர வேண்டும். இவற்றையெல்லாம்விட சிற்றரசு நாடுகளின் எண்ணிக்கையும் அவற்றில் இருந்த பலவகை ஆட்சி முறைகளும் தலையாய சிக்கலாம். அப்பொழுது 562சிற்றரசுகளிருந்தன. இவற்றில் மன்னராட்சி முதல் பிரதிநிதித்துவ ஆட்சிமுறை ஈருகப் பலவிதமான ஆட்சிமுறைகள் வழங்கி வந்தன. தென் இந்தியாவில் ஒரே ஒரு சிற்றரசு நாட்டில் தான் — அதுவும் இச்சட்டம் ஏற்படுவதற்கு சிறிது முன்பு தான் — இரட்டை ஆட்சி நடைமுறைக்கு வந்தது. 1931-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புப்படி இந்தியாவின் மொத்தப் பரப்பில் சிற்றரசு நாடுகளின் பரப்பு 45 சதவீதமாக இருப்பினும் அவைகளின் மக்கள் தொகை மொத்தத்தில் $22\frac{1}{2}$ சதவீதமே ஆகும். பின்வரும் 13 சுதேச நாடுகளில்தான் பத்து இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இருந்தனர்: ஐதராபாத்து, 14·4; மைசூர், 6·5; திருவாங்கூர், 5·0; காஷ்மீர், 3·6; குவாலியர், 3·5; ஜெய்ப்பூர், 2·6; பரோடா, 2·4; ஜோத்பூர், 2·1; பாடியாலா, 1·6; ரேவா (மத்திய இந்தியா), 1·5; உதயபூர், 1·5; இந்தூர், 1·3; கொச்சி, 1·2. 15 சிற்றரசு நாடுகளில் ஐந்து இலட்சத்திற்கும் பத்து இலட்சத்திற்கும் இடைப்பட்ட மக்கள் தொகை இருந்தது. மாகாண அரசாங்கங்களின் அதிகாரங்களையும் கூட்டாட்சி அரசாங்கத்தின் அதிகாரங்களையும் தனித்தனிப் பட்டியல்களில் சட்டம் தந்திருந்தது.

அவற்றில் குறிக்கப்பெருத அதிகாரங்களைக் கூட்டாட்சி அரசாங்கத்திற்கோ மாநில அரசாங்கங்களுக்கோ அளிக்கக் கவர்னர்-ஜெனரல் அதிகாரம் பெற்றிருந்தார். கானடாவிலும் ஆஸ்திரேலியாவிலும் கவர்னர்களும் கவர்னர்-ஜெனரல்களும் சட்டத்திற்குட்பட்டு ஆளும் மன்னர்களைப் போன்று விளங்கினர். இந்தியாவிலோ கவர்னர்கள் கவர்னர்-ஜெனரலுக்குச் சிலவற்றில் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அதே போன்று கவர்னர்-ஜெனரலும் சிலவற்றில் இந்தியா மந்திரிக்கு அடங்கி நடக்கவேண்டும். கானடாவும் ஆஸ்திரேலியாவும் குடியேற்ற நாடுகளாதலால் அவற்றின் ஒப்புதலின்றி அரசியலமைப்புகளை மாற்றமுடியாது. ஆனால் 1935-ம் வருட இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி கூட்டாட்சி நிர்வாகக்குழு சட்டசபைக்கு ஓரளவே பொறுப்புள்ளது. பாதுகாப்பு, வெளிநாட்டுச் செய்தி முதலியவைகள் மாற்ருத்துறைகளாகும். இந்தியாவிற்கெனச் சட்டமியற்றத் தனக்கு அதிகாரமுண்டு என்று பிரிட்டிஷ் பாராளுமன்றம் இச்சட்டத்திலும் வலியுறுத்தியது. 1919-ம் ஆண்டுச் சட்டம் 1935-ம் வருடச் சட்டத்தால் மாறியது. என்ருலும் பழைய சட்டத்தின் முன்னுரை புதிய சட்டத்திலும் இடம் பெற்றது. நீதி நிர்வாகத்தில் உயர்நீதிமன்றங்களும் கூட்டாட்சி நீதிமன்றமும் (Federal Court) அரசியலமைப்பு பற்றிய சட்டச் சிக்கலைத் தீர்த்து முடிவுசெய்யும் அதிகாரம் பெற்றன. ஆயினும் முடிந்த முடிவைக்கூறப் பிரிவி கவுன்சிலுக்குத்தான் உரிமை இருந்தது. இத்தகைய கூறுகள் பொறுப்புள்ள கூட்டாட்சி முறை நடைபெறுவதற்குத் தடையாகவே இருக்கக் கூடியவை.*

மாநிலங்களும் சிற்றரசு நாடுகளும்: கவர்னர்களின் ஆளுகைக்குட்பட்ட பம்பாய், சென்னை, வங்காளம், ஐக்கிய மாகாணம். பஞ்சாபு, பீகார், மத்திய மாகாணம், அஸ்ஸாம், வடமேற்கு எல்லைப்புற மாகாணம், ஒரிசா, சிந்து முதலிய மாநிலங்களும் தலைமை ஆணையாளரின் கீழிருந்த பிரிட்-

* No. 51, பக். 316.

டிஷ் பலுசிஸ்தானம், தில்லி, ஆஜ்மீர் – மேர்வாரா, குடகு அந்தமான், நிக்கோபார், பந்துபிப்லோடா முதலிய பகுதி களும் தாமாகக் கூட்டாட்சியில் சேரக்கூடிய சிற்றரசு நாடு களும் கூட்டரசின் உறுப்புகளாகும். மேலே குறிப்பிடப் பட்டுள்ள மாநிலங்களில் முதல் நான்கின் கவர்னர்கள் ஆண்டு ஒன்றிற்கு ரூ. 1,20,000-மும் ஐந்து, ஆறுவது மாநிலங்களின் கவர்னர்கள் ரூ. 1,00,000-மும், ஏழாவது மாநிலத்தின் கவர்னர் ரூ. 72,000-மும் மற்றைய கவர்னர் கள் ரூ. 66,000-மும் சம்பளம் பெறுவர். கூட்டாட்சி நடை முறைக்கு வர வேண்டுமானல் சிற்றரசு நாடுகளின் மொத்த மக்கள் தொகையில் பாதியைக் கொண்டிருக்கக் கூடிய, அரச சபையில் (Council of State) சிற்றரசு நாடு களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இடங்களில் பாதி இடங்க ளுக்கு (52) உரிமையுள்ள நாடுகள் அதில் சேர வேண்டும். சிற்றரசு நாடுகளின் மீது கூட்டாட்சி அரசாங்கத்திற் குள்ள அதிகாரம் தொடக்கத்திலேயே அறிவிக்கப்படும். கூட்டாட்சி சட்டசபை சிற்றரசுநாடுகள் கூட்டாட்சியில் சேருவதுபற்றி எவ்வித அதிகாரமும் கொள்வதற்கில்லை. கூட்டாட்சியில் சேர்ந்த சிற்றரசுநாடுகள் கூட்டாட்சிக்குத் தாங்கள் விட்டுக்கொடுத்த அதிகாரங்களைத் திரும்பப்பெற வியலாது ; விரும்பினல் அவைகள் தங்கள் அதிகாரங்களை மேலும் கூட்டரசாங்கத்திற்கு விட்டுக் கொடுக்கலாம். கூட் டாட்சியில் சேர விரும்பும் சிற்றரசு நாட்டின் விண்ணப் பத்தை ஏற்றுக் கொள்ளவோ தள்ளி விடவோ பேரரசர் முழு உரிமை பெற்றிருந்தார். கூட்டாட்சியில் சேராத சிற்றரசு நாடுகள் பிரிட்டிஷ் மேலாட்சியின்கீழ் தொடர்ந்து இருந்துவரும். கூட்டாட்சிக்கும் அவற்றிற்கும் தொடர்பு இல்லை.

கவர்னர் - ஜெனரலும் கூட்டரசாங்க அமைச்சவை யும் : இச்சட்டத்தின்படி மத்திய அரசாங்கத்தில் இரட்டை ஆட்சி ஏற்பட்டது. நிர்வாகத் துறைகள் இரண்டாகப் பிரிந்தன. மாற்றப்பட்ட துறைகள் பத்துப் பேர்களுக்கு மேற்படாத அமைச்சர் குழுவின்கீழ் இருந்துவரவேண் டும். வெளிப் பாதுகாப்பு, வெளிநாட்டுத் துறை, சமயம்

முதலியவை மாருத்துறை. இவை கவர்னர்-ஜெனரலுக்கு மட்டும் பொறுப்பான மூன்று அறிவுரைஞர்கீழ் இயங் கும். கவர்னர்-ஜெனரல் ஆண்டு ஒன்றிற்கு ரூ. 2,50,800 சம்பளம் பெறுவார். மாற்றப்பட்ட துறைகளிலும் நாட் டின் அமைதி, ஒழுங்கு முறை, நடுவிட அரசாங்கத்தின் நிதிச் சீரமைப்பு, சிறுபான்மையோர் நிலே, அரசாங்க அதி காரிகள் நிலே, இங்கிலாந்திலிருந்தும் பர்மாவிலிருந்தும் இறக்குமதி செய்தல், இந்தியச் சிற்றரசர்களின் உரிமை களேயும் மதிப்பையும் காத்தல் முதலியவற்றில் கவர்னர்-ஜெனரல் தமது கருத்துப்படி நடக்க முழு உரிமை பெற்றி ருந்தார். இவைகளெல்லாம் அவரது சிறப்பு நிலேப் பொறுப்பிற் குட்பட்டவை. கவர்னர் - ஜெனரலுக்குரிய இப் பொறுப்பைச் சட்டசபை நன்குணர்ந்து நடவாவிடில் இவற்றைப்பற்றிச் சட்டசபைக்குரிய பொறுப்பைக் குறைப் பதற்கும் வழியுண்டு. சட்டம், அமைச்சர் குழுவிற்கு இவற் றைப்பற்றியுள்ள பொதுப் பொறுப்பை வலியுறுத்திய போதிலும் மேற்கண்டவாறு அப்பொறுப்பு குறைபடும் நிலேயும் ஏற்பட இடமிருந்தது. கவர்னர்-ஜெனரலோ மத் திய சட்டசபையோ, அமைச்சர்களின் சம்பளங்களே வரை யறுக்கலாம். ஆனுல் ஒரு அமைச்சவை பதவியிலிருக்கும் பொழுது அமைச்சர்களின் சம்பளங்களேக் குறைக்கக் கூடாது. சிறப்புநிலேப் பொறுப்புக்கு அடங்காதவற்றில் அமைச்சர்களின் கருத்துப்படியே கவர்னர்-ஜெனரல் நடக்க வேண்டும். மாற்ருத் துறைகள் பற்றியவரை கவர் னர்-ஜெனரலே தமது அறிவுரைஞர்களே வேலேக்கு அமர்த் தலாம். அவர்கள் அவருக்கு மட்டுமே பொறுப்புடையவர் கள். இருப்பினும் வெளிப் பாதுகாப்புப் போன்றவற்றில் கவர்னர்-ஜெனரல் அமைச்சர்களேயும் கலந்து கொள்ள லாம். சட்டத்தின் 45-பிரிவுப்படி அரசாங்கத்தின் நிலேயில் சீர்குலேவு ஏற்படின் அதற்கேற்ற தம் அறிக்கையை வெளி யிட்ட பின் கவர்னர்-ஜெனரல் எல்லா அதிகாரங்களேயும் தாமே செலுத்தலாம். ஆனுல் அத்தகைய நிலே ஆறு மாதங்களுக்கு மேல் நீடித்தல் ஆகாது. நீடிக்க வேண்டு மானுல் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் அனுமதி

வேண்டும். அதுவும் மூன்றாண்டுகளுக்கு மேல் வழங்கப் படமாட்டாது. சுருங்கக் கூறுமிடத்து எந்த இரட்டை ஆட்சியைச் சைமன் குழு கண்டனம் செய்ததோ அதே ஆட்சி முறை இப்பொழுது நடுவிட அரசாங்கத்தில் அமைந்தது. இது ஒருபுற மிருக்க, கூட்டாட்சி சட்ட சபையின் அமைப்பு முறை இக்குறைகளை மிகுதிப்படுத்து வதாகவே இருந்தது. நடுவிட அமைச்சர் அவையின் அதி காரம் மொத்த அரசாங்கச் செலவில் 20 சத வீத அள விலே சுருங்கிக் கிடந்தது.

மேல்சபை : (The Council of State) கூட்டாட்சி மேல் சபையில் மாநிலப் பிரதிநிதிகள் 156; சிற்றரசுகளின் பிரதிநிதிகள் 104 வரை இருக்கலாம். மூன்றாண்டுகளுக் கொருமுறை மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர் நீங்குவர்; அதே எண்ணிக்கையான புதிய உறுப்பினர் தேர்ந் தெடுக்கப்படுவர். பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகளில் அறுவரைத் தாழ்த்தப்பட்ட வகுப்பினரிலிருந்து கவர்னர்-ஜெனரல் நியமிப்பார். மீதி 150 பிரதிநிதிகளில் 75 பேர் பொதுத் தொகுதிகளிலிருந்தும், 6 பேர் தாழ்த்தப்பட்டவரி லிருந்தும், 4 பேர் சீக்கியரிலிருந்தும், 49 பேர் முஸ்லீம் களிலிருந்தும், 6 பேர் பெண்களிலிருந்தும் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பெறுவர்; ஐரோப்பியர்களிலிருந்து எழு வரையும் இந்தியக் கிறித்தவர்களிலிருந்து இருவரையும் ஆங்கிலோ-இந்தியர்களிலிருந்து ஒருவரையும் நேர்முக மாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். மாகாணங்கள் ஒவ்வொன் றிற்கும் உறுப்பினர் எண்ணிக்கை பின்வருமாறு :— சென்னை, வங்காளம், மத்திய மாகாணம் இவை ஒவ்வொன் றிற்கும் 20; பம்பாய், பஞ்சாபு, பீகார் இவை ஒவ்வொன் றிற்கும் 16; மத்திய மாகாணம் 8; இதர கவர்னர்க்ளின் கீழுள்ள நான்கு மாகாணங்கள் ஒவ்வொன்றிற்கும் 5 ; தலைமை ஆணையாளரின் கீழுள்ள முதல் நான்கு மாகாணங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பிரதிநிதி. சிற்றரசு நாடுகளுக்கு மேலெல்லையாக அமைந்த 104 இடங்களில் ஐதராபாத்திற்கு ஐந்தும், மைசூர், காஷ்மீர், குவாலியர், பரோடா இவைகள் ஒவ்வொன்றிற்கும் மும்

மூன்றும், திருவாங்கூர் கொச்சி இவைகள் ஒவ்வொன்றிற்கும் இரண்டும், புதுக்கோட்டை, பங்கனப்பள்ளி, சாந்தூர் முதலியனவற்றிற்கு ஒவ்வொன்றும் அளிக்கப்படவேண்டும். பிற சிறிய சிற்றரசு நாடுகளின் பிரதிநிதிகள் அவற்ருல் பொதுவாகவோ ஒருமுறை ஒரு நாடும் பின்பு அடுத்த முறை வேறு நாடும் என்று அனுப்பும் முறையிலோ தேர்ந்தெடுக்கப்படுவர். சிற்றரசுகளின் எல்லாப் பிரதிநிதிகளையும் அவற்றின் மன்னர்களே தேர்ந்தெடுப்பார்கள்.

கீழ்ச்சபை (The Federal Assembly): ஐந்தாண்டுக்கொருமுறை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியது கீழ்ச்சபை; அதில் பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகள் 250; சிற்றரசுகளின் பிரதிநிதிகளின் மேல் எல்லை 125. பிரிட்டிஷ் இந்தியாவின் பிரதிநிதிகளை மாநிலக் கீழ்ச்சபைகளிலுள்ள இந்துக்கள், முஸ்லீம்கள் மற்றைய வகுப்புகளின் உறுப்பினர்கள் நேர்முகமல்லாத ஒற்றை மாற்று முறையே தேர்ந்தெடுப்பர். இதில் 105 பேர் பொதுத் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவர். ஏனையோரில் 19 பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பினராகவும், 6 பேர் சீக்கியராகவும், 82 பேர் முஸ்லீம்களாகவும், 4 பேர் ஆங்கிலோ-இந்தியராகவும், 8 பேர் ஐரோப்பியராகவும், 8 பேர் இந்திய கிறித்தவராகவும், 11 பேர் தொழில் நிலையத்தாராகவும் வணிகப் பெருமக்களாகவும், 7 பேர் நிலச்சுவான்தார்களாகவும், 10 பேர் தொழிலாளிகளாகவும், 9 பேர் பெண்டிராகவும் இருக்கவேண்டும். மாநிலங்கள் ஒவ்வொன்றிற்கும் உறுப்பினரின் எண்ணிக்கை பின்வருமாறு :— சென்னை, வங்காளம், ஐக்கிய மாகாணம் இவை ஒவ்வொன்றிற்கும் 37; பம்பாய், பஞ்சாபு, பீகார் இவை ஒவ்வொன்றிற்கும் 30; மத்திய மாகாணம் 15; அஸ்ஸாம் 10; இன்னபிற. ஒரு மில்லியனுக்கு ஒரு உறுப்பினர் வீதம் சிற்றரசுகளின் பிரதிநிதிகள் பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டனர் :— ஐதராபாத் 16; மைசூர் 7; திருவாங்கூர் 5; காஷ்மீர், குவாலியர் இவை ஒவ்வொன்றிற்கும் 4; பரோடா 3; கொச்சி 1; இன்னபிற. மேல்சபை உறுப்

பினரின் வயது குறைந்தது 30-ம், கீழ்ச்சபை உறுப்பினர் வயது குறைந்தது 25-ம் இருத்தல் வேண்டும். உறுப்பினர் மன்னர் குலத்தவராயின் இவ்வரையறை இல்லை. உறுப்பினரின் சம்பளத்தைச் சட்டசபையே வரையறுக்கும்.

சட்டமியற்றும் நடைமுறை: ஒரு மசோதா சட்டமாக அதை இரு சபைகளும் நிறைவேற்ற வேண்டும். இரு சபைகளில் எதிலும் மசோதாக்கள் முதலில் கொண்டுவரப் படலாம். ஆனால் நிதி மசோதாக்களைக் கீழ்ச்சபையில்தான் கொண்டுவர முடியும். இரு சபைகளுக்கும் ஒரு மசோதா பற்றி மாறுபாடு ஏற்படின் கவர்னர்-ஜெனரல் இரு சபைகளின் உறுப்பினரும் ஒன்றாய்க் கூடும் கூட்டத்தைக் (Joint sitting) கூட்டி அதில் பெரும்பான்மையோரின் வாக்குப்படி முடிவு செய்யலாம். இரு சபைகளிலும் நிறை வேறிய மசோதா கவர்னர்-ஜெனரலின் ஒப்பத்தைப் பெறவேண்டும். கவர்னர்-ஜெனரல் விரும்பினால் ஒப்பம் பெறவந்த மசோதாவைச் சட்டசபை மறித்தும் ஆராய வேண்டித் திருப்பி அனுப்பலாம். வெளிநாடு, சிற்றரசர்கள் நிலை போன்றவைகளைக் கவர்னர்-ஜெனரலின் அனுமதியின்றிச் சட்டசபை விவாதிக்க முடியாது. மேலும் சட்டசபை ஒரு மசோதாவைப்பற்றி விவாதிக்கும்போது விவாதம் நாட்டின் அமைதிக்கும் ஒழுங்குமுறைக்கும் இடையூறு விளைவிக்குமென அவர் கருதினால் அதை நிறுத்தவும் முடியும். கவர்னர்-ஜெனரலின் சம்பளம் சிற்றரசுகளின் அரசாங்கச் செலவு இவற்றைப்பற்றி சட்டசபை விவாதிக்கக்கூட முடியாது. பாதுகாப்பு, வெளிநாடு, சமயம் முதலியவற்றைப் பற்றிய நிதி மசோதாக்களைச் சட்டசபை விவாதிக்கலாம்; ஆனால் பெரும்பான்மையான வாக்குகளால்கூட எம்முடிவும் அச்சபை செய்ய முடியாது. எனவே அரசாங்கத்தின் நிதி நிலையைப் பொறுத்த அளவில் கிட்டத்தட்ட 20 சதவீதத்திற்கே சட்டசபை அதிகாரம் பெற்றிருந்தது.

மாநிலங்களும் பொறுப்புள்ள அரசாங்கமும்: மாநிலங்களில் கவர்னரின் நிலைமை கவர்னர்-ஜெனரலின் நிலையை

ஒத்திருந்தது. இருவர்களுக்கும் சிறப்புநிலைப் பொறுப்புகள் சில இருந்தன; வகையிலன்றி அளவில்தாம்வேறுபாடு உண்டு. மாநிலத்தின் அமைதி ஒழுங்குமுறை முதலியவற்றில் கவர்னர் சிறப்புநிலை அதிகாரம் பெற்றிருந்தார். பிறவற்றில் அவர் மாநில அமைச்சரவையின் முடிவின்படி நடக்கவேண்டும். கவர்னர் - ஜெனரலைப் போலக் கவர்னரும் சட்டத்தின் 93-வது பிரிவுப்படி அறிக்கைவெளியிட்டபின் சட்டசபையையும் அமைச்சர் அவையையும் கலைத்துவிட்டு மாநில ஆட்சி முழுவதையும் தாமே நடத்த முடியும். அப்படிச்செய்ய அவர் கவர்னர்-ஜெனரலின் அனுமதியைப் பெறவேண்டும். அத்தகைய நிர்வாகம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் ஒப்பத்துடன் மூன்றாண்டுகள் வரை நீடிக்கலாம். சட்டசபைகளில் பெரும்பான்மையோர் ஆதரவினைப் பெற்ற பொறுப்புள்ள அரசாங்கம் நிலையாக நன்கு நடைபெற மாநிலங்களில் வழியிருந்தது. சென்னை, பம்பாய், வங்காளம், ஐக்கிய மாகாணம், பீகார், அஸ்ஸாம் முதலிய மாகாணங்களில் சட்டசபைகள் இருபிரிவுகளாக இருந்தன. பிற மாநிலங்களில் ஒரு சட்டசபை அமைப்பே (Unicameralism) இருந்தது. இவ்வேறுபாடு பழமை வாதிகளுக்கு ஓர் ஆறுதலை அளிக்கவே அமைந்தது. மாநில அரசாங்கங்களில் சிற்றரசு நாடுகளின் நலனைக் காக்கும் கேள்வியே ஏற்படுவதற்கில்லை.

மாநில மேல்சபை (The Legislative Council): மத்திய மேல்சபையைப் போன்று மாகாண மேல்சபையும் நிரந்தரமானது; மூன்றாண்டுகளுக்கொருமுறை மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர் பதவியினின்றும் நீங்குவர். வங்காளத்தின் மேல்சபையில் மொத்த உறுப்பினர் 65 பேரில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் பெண்டிருக்கும் பிரதிநிதித்துவமளிக்க கவர்னர் 8-பேரை நியமிக்க அதிகாரம் பெற்றிருந்தார். ஏனையோரில் 10-பேரைப் பொதுத் தொகுதிகளிலிருந்தும், 17-பேரை முஸ்லீம்களிலிருந்தும், 3-பேரை ஐரோப்பியரிலிருந்தும், 27-பேரைக் கீழ்ச்சபையிலிருந்தும் தேர்ந்தெடுக்க வேண்டும். இந்தக் கொள்கையைப் பீகாரும் பின்பற்றியது. மொத்த உறுப்

பினர் 30-பேரில் கீழ்ச்சபை 12-பேரைத் தேர்ந்தெடுத்தது. பம்பாயில் கீழ்ச்சபை 30 உறுப்பினரையும், ஐக்கிய மாகாணம் 60-பேரையும், அஸ்ஸாம் 22-பேரையும் தேர்ந்தெடுத்தது. சென்னையில் மொத்த உறுப்பினர் 56-ல், 35 பேரைப் பொதுத்தொகுதியிலிருந்தும், 7-பேரை முஸ்லீம்களிலிருந்தும், ஒருவரை ஐரோப்பியரிலிருந்தும், 3-பேரை இந்திய கிறித்தவர்களிலிருந்தும் கீழ்ச்சபை தேர்ந்தெடுக்க வேண்டும்; கவர்னர் 10-பேரை நியமிப்பார்.

மாநிலக் கீழ்ச்சபை (The Legislative Assembly) : பொதுவாக மாநிலக் கீழ்ச்சபை ஐந்து ஆண்டுகளுக்கொருமுறை தேர்ந்தெடுக்கப்படவேண்டும். வங்காளத்தில் கீழ்ச்சபையின் மொத்த உறுப்பினர் 250; ஐக்கிய மாகாணத்தில் 228; சென்னையில் 215; பம்பாயிலும், பஞ்சாபிலும் 175; அஸ்ஸாமில் 108; சிந்து மாகாணத்திலும் ஒரிசாவிலும் 60; வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் 50. சென்னைக் கீழ்ச்சபையின் உறுப்பினர் விவரம் பின்வருமாறு :— தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பிரதிநிதிகள் உள்படப் பொதுத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள் மொத்தம் 146; பிற்போக்கு வட்டாரத்தையும் வகுப்பினரையும் சேர்ந்தவர் 1; முஸ்லீம்கள் 28; ஆங்கிலோ-இந்தியர் 2; ஐரோப்பியர் 3; இந்தியக் கிறித்தவர் 8; வாணிகம், தொழில் இவற்றின் பிரதிநிதிகள் 6; நிலச்சுவான்தார் 6; பல்கலைக்கழகங்கள் 1; தொழிலாளிகளின் பிரதிநிதிகள் 6; பெண்டிர் 8; (முஸ்லீம் பெண்டிர் 1; இந்தியக் கிறித்தவ பெண்டிர் 1; ஏனைய வகுப்புப் பெண்டிர் 6). சட்டமியற்றும் நடைமுறை நடுவிடச் சட்டசபையின் நடைமுறையையே ஒத்திருந்தது. கவர்னரின் சம்பளம், அவரின் சிறப்புநிலைப் பொறுப்பிற்குத்தேவையான நிதியைப்பெறுதல் போன்றவற்றில் சட்டசபை தனது வாக்குகளால் ஒன்றும் செய்ய முடியாது என்றாலும், பொதுவாக, பொறுப்புள்ள அரசாங்கத்திற்கு வேண்டிய கொள்கையையே இவ்வமைப்பில் காணலாம். சட்டசபை தனிச்சட்டம் மூலம் உறுப்பினருக்குச் சம்பளம் அளிக்கவேண்டும்.

வாக்குரிமை : நடுவிடக் கீழ்ச்சபை நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை; ஆதலின் வாக்குரிமையைப் பற்றிய கேள்வி அங்கு எழுவதற்கில்லை. நடுவிட மேற் சபைத் தேர்தலில் மாநில மேற்சபைகள் வாக்குரிமை பெற்றிருந்தன. ஆயினும் அது முழு நிலையான உரிமை யன்று. மாநிலச் சபைகளின் தேர்தலில் வயதுவந்த எல் லோரும் வாக்குரிமை பெறவில்லை. வாக்குரிமை பெறுவ தற்கு அடிப்படைத் தகுதி சொத்துரிமையாகும். மொத்த மக்கள் தொகையில் 14 சதவீத மக்களே (ஆண்கள் 29 மில்லியன்கள், பெண்டிர் 6 மில்லியன்கள்) இச்சட்டத்தின் படி வாக்குரிமை பெற்றனர்; ஆயினும் 1919-ம் ஆண்டுச் சட்டத்தின்கீழ், வாக்குரிமை பெற்றவர்களைவிட மிகுதியாக (3 சதவீத மக்கள், ஆண்கள் 7 மில்லியன்கள், பெண்டிர் 315,000) வாக்குரிமை பெற்றனர்.

அதிகாரப் பங்கீடு : அதிகாரப் பங்கீடு பற்றி மூன்று பட்டியல்கள் இருந்தன : கூட்டாட்சி அதிகாரப்பட்டியல், மாநில அதிகாரப்பட்டியல், இரண்டு அரசாங்கங்களுக்கும் பொதுவான அதிகாரப்பட்டியல். முதல் பட்டியலில் 59 இனங்கள் இருந்தன. அவையாவன : இராணுவம்; கடற்படை ; வெளிநாடு ; சமயம் ; தபால் தந்தி ; வாரஞ்சி, அலிகார் இவற்றின் பல்கலைக்கழகங்கள் ; நிலக்கணக்கெடுப்பு (Surveys of India); மக்கள் தொகை கணக்கெடுப்பு ; புகைவண்டித் தொடர்கள் ; தொழிலாளர் நல விதிகள் ; இன்ஷூரன்ஸ்; வரு மானவரி ; இன்னபிற. இரண்டாவது பட்டியல் 54 இனங்களைக் கொண்டிருந்தது. அவையாவன : நாட்டின் அமைதி ஒழுங்குமுறை ; நீதிநிர்வாகம் ; போலீஸ் ; சிறைக்கூடங்கள் ; வட்டார நிறுவனங்கள்; பொதுச் சுகா தாரம் ; கல்வி ; உழவு ; நிலவரி ; காடுகள் ; தீர்வை ; இன்னபிற. மூன்றுவது பட்டியலில் 36 இனங்கள் அடங்கி யிருந்தன : கிரிமினல் சட்டம் அதன் நடைமுறை ; சிவில் சட்ட நடைமுறை ; திருமணம், மணவிலக்கு ; செய்தித் தாள்கள் ; பித்தரின் நலன் ; தொழிற்சாலைகள் ; தொழி லாளர் சங்கங்கள் ; மின்சார உற்பத்தி நிர்வாகம் ; இன்ன

பிற. மூன்று பட்டியல்களிலும் அரசாங்க அதிகாரங்கள் பற்றிய குறிப்புகள் அடங்கியிருந்தன ; ஆயினும் அவை எல்லாம் அடங்கியன என்று கூறுவதற்கில்லை ; எல்லாம் அடங்கி இருக்கவும் முடியாது. மூன்ருவது பட்டியலைச் சேர்த்த காரணம் மாநில அரசாங்கங்களுக்கும் நடுவிட அரசாங்கத்திற்கும் சட்டமியற்றுவதில் வேறுபாடின்றி ஒருமைப்பாடு இருக்கவேண்டுமென்பதே ஆம். எடுத்துக் காட்டாகத் தொழிலாளர் நலனைப்பற்றிச் சட்டமியற்றுவதைக் கூறலாம். மூன்ருவது பட்டியலில் கண்டவற்றைப் பற்றி மாநில அரசாங்கமும் கூட்டாட்சி அரசாங்கமும் தனித்தனியே முரண்பாடான சட்டங்கள் நிறைவேற்றினுல் கூட்டரசாங்கத்தின் சட்டமே செல்லுபடியாகும். இப் பட்டியல்களில் காணப்படாத அதிகாரம் எதையும் சட்டத்தின் 104-வது பிரிவுப்படி கவர்னர்-ஜெனரல் மாநில அரசாங்கத்திற்கோ கூட்டாட்சி அரசாங்கத்திற்கோ வழங்கும் உரிமை பெற்றிருந்தார்.

கூட்டாட்சி நீதிமன்றம் (Federal Court) : இதில் தலைமை நீதிபதி (மாதச் சம்பளம் ரூ. 7000) ஒருவரும் அவருக்கு அடுத்த நிலையில் 6 நீதிபதிகளும் இருக்க வேண்டும். நீதிபதிகள் அனைவரையும் இங்கிலாந்து அரசாங்கத்தாரே நியமிக்கவேண்டும் ; அவர்கள் 65-வயது வரை வேலையிலிருக்கலாம். பொதுவாக இந்நீதிமன்றம் தில்லியில் நடைபெறும். கூட்டாட்சி அரசாங்கத்தில் சட்ட உரிமை எழக்கூடிய எவ்வழக்கையும் இந்நீதிமன்றம் தொடக்கத்திலேயே விசாரிக்கலாம். அதேபோன்று கூட்டாட்சி அரசாங்கத்திற்கும் சிற்றரசு அரசாங்கத்திற்கும் இடையே அரசியல் சட்ட விளக்கம்பற்றி ஏற்படும் வழக்குகளையும் தொடக்கத்திலேயே இது விசாரிக்கலாம். இத்தகைய வழக்குகளில் பிரிவி கவுன்சிலே இறுதியாக முடிவு நீதிமன்றமாகும். பிரிட்டிஷ் இந்தியாவின் உயர்நீதி மன்றங்களின் தீர்ப்புக்குமேலும் சிற்றரசு நாடுகளின் நீதிமன்றங்களின் தீர்ப்புக்குமேலும் சில வழக்குகளை மேல் தீர்ப்புக்காக கூட்டாட்சி நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லலாம். கூட்டாட்சி ஏற்படுவதற்கு முன்பே பிரிட்டிஷ்

இந்தியாவிற்குக் கூட்டாட்சி நீதிமன்றம் (Federal Court) ஏற்படுத்தச் சட்டத்தில் வழி இருந்தது.

இந்தியா மந்திரி : இச்சட்டத்தின்படி இந்தியா மந்திரிக்கு உதவியாக இருந்த இந்தியாகவுன்சில் ஒழிக்கப்படவேண்டும். அதற்குப் பதிலாக மூவருக்குக் குறையாதும் அறுவருக்கு மேற்படாதும் அறிவுரைஞர்களின் உதவியை அவர் பெறுவார். அவர்களின் பதவிக்காலம் ஐந்தாண்டுகளாகும். இச்சட்டத்தினால் ஏற்படும் அரசியலமைப்பு மாற்றங்கள் இந்தியா மந்திரியின் அதிகாரங்களைப் பெரும்பாலும் குறைக்கக் கூடியனவே ஆம்.

அரசியலமைப்பின் திருத்தம் : கூட்டாட்சிச் சட்டசபையோ மாநிலச் சட்டசபையோ இவ்வரசியலமைப்பைத் திருத்தமுடியாது. சட்டசபை உறுப்பினரின் எண்ணிக்கை, தகுதிகள், அவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறைகள் முதலியவற்றில் பிரிட்டிஷ் மன்னரைக்கொண்ட பிரிவி கவுன்சில் சில மாறுதல்களைச் செய்யலாம். ஆனால் 1935-ஆம் ஆண்டு சட்டத்தைப் பிரிட்டிஷ் பாராளுமன்றமே திருத்தியமைக்க முடியும். கூட்டாட்சி ஏற்படுவதால் அரசாங்கத்திற்கு 4 கோடி ரூபாய்க்குச் செலவு மிகுதியாகும் என்று மதிப்பிட்டனர். 1935-ஆம் ஆண்டுச் சட்டத்தில் பல குறைகளுண்டு; இருப்பினும் அதை இந்தியாவில் ஆங்கிலேயர் செய்த "கடைப் பேராக்கச் சாதனையாகக்"* கருதலாம்.

பொருளாதார முன்னேற்றமும் கல்வியும் : இந்தியத் தொழிலாளிகளின் நிலைமையை ஆராய J. H. விட்லி தலைமையில் அமைந்த அரசு நிலைக்குழு (1929–31) பெரும் மாறுதல்களைச் செய்யும்படி வேண்டியது. இதனை ஒட்டி எழுந்த சட்டங்கள் பின்வருவன :— இந்தியத் தொழிலாளர்சங்கச் சட்டம் 1926, தொழிற்சாலைச் சட்டம் 1934, சுரங்கச் சட்டம் 1935, 1933-ல் திருத்தப்பட்ட 1923-ம் ஆண்டு தொழிலாளர் நட்டஈட்டுச் சட்டம், சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது பற்றிய சட்டம் 1938. அனைத்து

---

* *81,* பக். *613.*

நாட்டுத் தொழிலாளர் நிறுவனத்தின் (ஜெனிவா) தூண்டுதலால்தான் இந்தியாவில் தொழிலாளர் நலனைப்பற்றிப் பல சட்டங்கள் நிறைவேறின. 1934-ல் இந்திய ரிசர்வ் பாங்க் சட்டம் நிறைவேறியது. 1935-லிருந்து உழவுப் பொருள்களின் விற்பனை முன்னேற்றமடைந்தது. 1932-ல் ஏற்பட்ட ஒட்டாவா உடன்படிக்கைகள், இந்தியா ஜப்பானுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தைகள் நடத்திச் செய்துகொண்ட வாணிக உடன்படிக்கை (1933) லங்காஷயர் தூதுக்குழுவுடன் செய்துகொண்ட உடன்படிக்கை (1933) ஆகிய இவைகள் இங்கே குறிப்பிடத்தக்கவை. 1934-ம் ஆண்டு அரசுநிலை இந்தியக் கடற்படை ஏற்பட்டது. கடைசியாக சிந்து மாகாணத்தில் சுக்கூர் என்னுமிடத்தில் உலகத்திலே ஒருவகைப் பெரிய லாயிட் அணைக்கட்டு கட்டி முடிக்கப்பட்டதும், சென்னை மாகாணத்தில் மேட்டூர் அணைக்கட்டு கட்டப்பட்டதும் (1925-34) பைக்காரா நீர்வீழ்ச்சி மின்சார உற்பத்தி திட்டத்தில் முதல் பகுதி முற்றுப்பெற்றதும் குறிப்பிடத்தக்கன. பைக்காராத் திட்டத்தில் பின்னர் வளர்ச்சிக்கேற்ற பல திருத்தங்கள் செய்யப்பட்டன. 1925-ம் ஆண்டு தொடங்கிய விசாகப் பட்டினத்துறைமுக வேலையின் முதற்பகுதி 1933-ம் ஆண்டில் முடிவுற்றது. 1933-ம் ஆண்டு எவரெஸ்ட் சிகரத்தை எட்டிப்பார்த்து இயற்கை மீது வெற்றி கொண்டனர். ஆனால் 1934, 1935-ம் ஆண்டுகளில் பீகாரிலும் குவெட்டாவிலும் ஏற்பட்ட பூகம்பங்கள் மனித இனத்தைத் திகைக்க வைத்து இயற்கை ஆற்றலின் முன் மனிதனுடைய சிறுமையை உணர்த்தின. பஞ்சாபு பல்கலைக்கழக ஆராய்ச்சிக்குழு, பல்கலைக்கழகம் தனது அதிகார வரம்பினை உணர்ந்து நடக்க வேண்டியதனை வலியுறுத்தியது; பல்கலைக்கழகக் கல்விக்குத் தகுதி அற்றோரைப் பல்கலைக்கழகத்தில் சேர்ப்பதால் உண்டாகும் அவல நிலையையும் எடுத்துக்காட்டியது; உயர் நிலைப்பள்ளிக் கல்வி எல்லா வகைகளிலும் சீர்படவேண்டுவதோடு மாணுக்கர்களின் கவனத்தைத் தொழிற் கல்வியில் திருப்பவேண்டும் என்றும் முடிவு கூறியது.

கோரியது. ஆனால் அரசாங்கம் உடன்படவில்லை. அதனால் அரசியலமைப்புக் குலையாதபடி சிறுபான்மைக் கட்சிகளின் ஒத்துழைப்போடு இடைக்கால அமைச்சர் அவைகள் அமைக்கப்பட்டன. சில மாதங்களுக்குப் பிறகு அரசப் பிரதிநிதி அறிக்கை ஒன்று விடுத்தார். அது காங்கிரசு கோரியதற்கு இணக்கமாக இருந்தது. ஆதலால் காங்கிரசு கட்சி மாநிலங்களில் அமைச்சரவைகள் அமைந்தன. முஸ்லீம் லீகும் காங்கிரசுடன் சேர்ந்து மாநிலங்களில் கூட்டு அமைச்சவைகள் அமைக்க ஜின்னா போட்ட திட்டத்தைக் காங்கிரசு ஒப்புக்கொள்ளவில்லை. வருந்தத்தக்க இந்த முடிவு அண்மைக்கால இந்தியாவின் வரலாற்றின் ஒரு பெருந் திருப்பமாகும்.* 1938-ம் ஆண்டு தொடக்கத்தில் இரு நெருக்கடிகள் ஏற்பட்டன ஒன்று அரசியல் கைதிகளை விடுவிப்பதுபற்றியது. அது பீகாரிலும் ஐக்கிய மாகாணத்திலும் ஏற்பட்டது. மற்றொன்று துணை அதிகாரி ஒருவரைத் தற்காலிக கவர்னராக ஏற்படுத்தியதின் பயனாக ஒரிசாவில் ஏற்பட்டது. பின்னைய நெருக்கடி அந்த ஏற்பாட்டை நீக்கியதால் சரியாகியது. காங்கிரசு கட்சி இரண்டாண்டுகள் நடத்திய ஆட்சியை நடுநிலையாளர்கள் போற்றிப் புகழ்ந்தனர். அஸ்ஸாமிலும் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலும்கூடக் காங்கிரசு அமைச்சர் அவைகள் அமைந்தன. 1939-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் இரண்டாம் உலகப்போர் மூண்டது. இங்கிலாந்து மேற்கொண்ட போரின் குறிக்கோள்கள் இந்தியாவின் சுய நிர்ணய கோரிக்கையைப் பொறுத்து எவ்வாறு அமைய வேண்டும் என்பதில் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. அதனால் மாகாணங்களில் காங்கிரசு ஆட்சி முடிவடைந்தது. அதையொட்டி முஸ்லீம் லீகு விடுதலைத் திருநாள் கொண்டாடி மகிழ்வுற்றது. மாகாணச் சுய ஆட்சி பல மாகாணங்களிலும் குலைந்தது. அதனால் 1935-ம் ஆண்டினுடைய இந்திய அரசாங்கச் சட்டத்தின் 93-வது பிரிவின்படி காங்கிரசு ஆட்சியிலிருந்த மாநிலங்களில்

---

* *74, பக். 131.*

பகுதி 19

லின்லித்கோ (1936--43)

லின்லித்கோ பிரபு : வாழ்க்கைக் குறிப்பு : 1887-ல் பிறந்த விக்டர் அலெக்சாண்டர் ஜான் ஹோப் 1908-ல் தமது தந்தையாருக்குப்பின் மார்க்கிஸ் பட்டத்திற்குரியவரானர். இவர் முதல் உலகப்போரில் (1914-18) பணியாற்றியவர். 1926-ல் இந்திய உழவிணைப்பற்றி ஆராய வந்த அரசுநிலைக் குழுவிற்கும், இந்திய அரசியலமைப்பின் சீர்திருத்தத்தைப்பற்றி ஆராயவந்த பாராளுமன்றத்தின் கூட்டுப்பொறுக்குக் குழுவிற்கும் (1933) இவர் தலைவராக விளங்கினர். 1936-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வில்லிங்டனுக்குப் பின் இவர் இந்தியாவிற்கு அரசப் பிரதிநிதியாக வந்தார். இங்கிலாந்தில் 1935- முதல் 1937 வரை பால்டுவினும் 1937 முதல் 1945 வரை நெவில் சேம்பர்லேனும் 1940 முதல் 1945 வரை சர்ச்சிலும் தலைமை அமைச்சர்களாக இருந்தனர்.

புதிய மாநிலங்கள் : 1936-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதி சிந்துவும் ஒரிசாவும் தனி மாநிலங்களாயின. சிந்துவில் பெரும்பான்மையோராக இருந்த முஸ்லீம்கள் தனி மாநிலம் கோரியதால் அது தனி மாநிலமாகியது. பீகார், ஒரிசா, மத்திய மாகாணம், சென்னை முதலிய மாநிலங்களின் பகுதிகளில் வாழும் ஒரியர்களைக்கொண்ட தனி மாநிலம் அமைக்கப்படவேண்டும் என்ற ஒரியர்களின் வற்புறுத்தலின்பேரில் மொழிவழியில் ஒரிசா மாநிலம் அமைந்தது.

பர்மா, ஏடன் பிரிவினை : 1937-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதி பர்மா இந்தியாவிலிருந்து பிரிந்தது. அராபியரிடமிருந்து கைப்பற்றப்பட்டு (1939) இந்திய அரசாங்கத்தின் ஆளுகையிலிருந்த ஏடன் துறைமுகப்

பட்டினம் இங்கிலாந்து அரசாங்கத்தின் நேரடி ஆட்சிக்குட்பட்ட குடியேற்ற நாடாயிற்று (ஏப்ரல், 1937).

தென் ஆப்ரிக்கா : தென் ஆப்ரிக்காவில் இந்தியர்களுக்கு எதிராக நிறைவேறிய சட்டங்களால் 1932-ம் ஆண்டிலிருந்து தென் ஆப்ரிக்க இந்தியர்களின் நிலைமை மறுபடியும் வருந்தத்தக்கதாகியது. ஐரோப்பியர்களுக்கும் இந்தியர்களுக்கும் மணஉறவு ஏற்படுவதே பெரும் குற்றம் எனச் சட்டம் செய்ய முயன்றனர். ஆனால் இரண்டாம் உலகப்போரினால் (1939–செப்டம்பரிலிருந்து) நிலைமை முற்றவில்லை.

1941–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு : 1937-ல் பர்மாவை இந்தியாவினின்று பிரித்ததால் இந்தியாவின் மக்கள் தொகையில் (1931-ம் வருடக் கணக்குப்படி 35·3 கோடி) 1·5 கோடி குறைந்தது. 1941-ம் ஆண்டு கணக்கெடுப்புப்படி இந்தியாவின் மக்கள்தொகை (பர்மா நீங்கலாக) சுமார் 38·9 கோடியாகும். ஆகவே 1931லிருந்து 1941க்குள் மக்கள்தொகை 15 சதவீதம் மிக்கு வந்தது எனல் வேண்டும்.

மாகாண சுயாட்சியும் அதன் வீழ்ச்சியும் : 1937-ம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதி மாகாண சுயாட்சி ஏற்பட்டது. அதே தேதியில் இந்தியா கவுன்சில் கலைக்கப்பட்டது. 1937-ம் ஆண்டு அக்டோபர் முதல் தேதி ஒரு தலைமை நீதிபதியையும் அவருக்குக் கீழ்ப்பட்ட இரு நீதிபதிகளையும் கொண்ட கூட்டாட்சி நீதிமன்றம் ஏற்பட்டது. பஞ்சாபு, சிந்து, வங்காளம், அஸ்ஸாம், வடமேற்கு எல்லைப்புறம் என்ற மாநிலங்களில் அமைச்சரவைகள் ஏப்ரல் மாதம் ஏற்பட்டன. கவர்னர்களைக் கொண்ட ஆறு மாகாணங்களின் சட்டசபைகளில் காங்கிரசு கட்சியினர் பெரும்பான்மையோராக இருந்தனர். அமைச்சர்கள் அரசியல் சட்ட வரம்பிற்குட்பட்டு நடந்தால் கவர்னர்கள் தங்கள் சிறப்புநிலை அதிகாரங்களைப் பயன்படுத்துவதில்லையென்று உறுதிமொழி அளிக்க வேண்டுமெனக் காங்கிரசு

அறிவுரைஞர்கள் ஆட்சி நடைபெறும் என அரசிய லறிக்கை வெளியாயது.

அரசியல் பிணக்கும் பாகிஸ்தான் பிரிவினைச் சிக்கலும் : புதிய அரசியலமைப்பின்படி நடுவிட அரசாங் கத்தில் ஏற்படவிருந்த மாறுதலைக் காங்கிரசும் பிற அரசியல் கட்சிகளும் எதிர்த்தன. அதனால் அது நடை முறைக்கு வரவில்லை. கூட்டரசு பற்றி இந்தியச் சிற்றரசர் கள் கொண்ட எண்ணம் கவலைக்கே இடமாயிற்று. இவை எல்லாவற்றிற்கும் மேலாக முகமது அலி ஜின்னு தலைமை யில் அனைத்து இந்திய முஸ்லீம் லீகு பாகிஸ்தான் பிரிவினையை வற்புறுத்தியது. இதற்கு மூல காரணராக இல்லாவிட்டாலும் இக்கருத்தினை மக்களிடம் பரப்பியவர் சிந்தனையாளரும் கவிஞருமாக விளங்கிய சர் முகமது இக்பால் ஆவர். இந்தியாவைப் பாகிஸ்தான் என்றும் ஹிந்துஸ்தான் என்றும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்க வேண்டும் என்றனர். முன்னதில் பஞ்சாபு, வடமேற்கு எல்லைப்புற மாகாணம், (அல்லது ஆப்கானிய மாகாணம்) காஷ்மீர், சிந்து, பலுசிஸ்தானம் ஆகிய பகுதிகள் அடங் கும் (இவற்றின் பெயர்களின் முதலெழுத்துக்களையும், இடை யெழுத்துக்களையும், கடை யெழுத்துக்களையும் கொண்டே பாகிஸ்தான் என்ற பெயர் ஏற்பட்டது). இங் குள்ள மக்களின் தொகை 3 கோடி ஆம். பாகிஸ் தான் என்ற பெயர் 1933-ல் ரஹ்மத் அலி . என்பவர் படைத்தது. பிரிவினைப் பேச்சு இந்தியாவின் ஒற்று மையை விரும்பிப் பாடுபட்டோரின் உள்ளத்தைப் புண் படுத்தியது. காங்கிரசுக்கும் முஸ்லீம் லீகிற்கும் இடையே நிலவிய தொடர்பு சீர்குலைந்தது. வேற்றுமைகளே வளர்ந்துவரத் தொடங்கின. 1936-லிருந்து ஆண்டு தோறும் நடைபெற்ற காங்கிரசின் மாநாடுகள் யாவும் நாட்டுப்புறங்களில் நடைபெற்று வந்தன. இது குறிப் பிடத் தக்கதொரு சிறந்தபோக்கு. முதல் உலகப் போர் பற்றி இந்தியர் கொண்ட கருத்திற்கும் இரண்டாம் உலகப் போர் பற்றி அவர்கள் கொண்ட கருத்திற்கும் அடிப்படை யில் வேற்றுமை விளங்கியது. 1940-ம் ஆண்டு ஜனவரி

மாதம் குடியேற்றநாட்டுநிலை பற்றி அரசப்பிரதிநிதி "மேன்மை தங்கிய மன்னரின் அரசாங்கம் குடியேற்ற நாட்டு அரசு நிலையையே இந்தியாவின் அரசியல் முன்னேற்றக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது; அதுவும் வெஸ்ட்மினிஸ்டர் சட்டத்தின்கீழ் ஏற்பட்ட குடியேற்ற நாட்டுநிலைபோன்ற தொன்றாகும்" என்று கூறினார். அதே ஆண்டு அனைத்து இந்திய முஸ்லீம் லீகு பாகிஸ்தான் அடைவதே தனது குறிக்கோள் என்று தீர்மானித்தது. பாகிஸ்தான் என்பதின் பொருள் தூய்மை யான மக்களைக்கொண்ட நாடு என்பதாகும்.[1] பாகிஸ்தான் குறிக்கோள் இந்தியா இரு சமூகங்களைக்கொண்டது என்ற ஜின்னாவின் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டதே ஆம்.[2] உலகில் எந்தச் சக்தியும் பாகிஸ் தான் ஏற்படுவதைத் தடுக்கமுடியாது என்று ஜின்னா கூறி வந்தார்.[3]

ஐதராபாத்: 1936-ம் ஆண்டு எழுந்த பீரார் உடன் படிக்கை பீரார் மீது நிசாம் மன்னர் கொண்டாடிய உரிமையை மீண்டும் வலியுறுத்தியது. ஆயினும் நிர்வா கத்தைப் பொறுத்தவரையில் அது மத்திய மாநிலத்தைச் சேர்ந்ததாகவே கருதப்படவேண்டும். இதற்காக ஐதரா பாத் மன்னர் ஒரு நிலையான தொகையைப் பெற்றுவந் தார். ஐதராபாத் நிசாமின் இளவரசர்க்குப் பீரார் இள வரசர் என்ற பட்டம் உரியதாயிற்று.

திருவாங்கூரும் கொச்சியும்: 1936-ம் ஆண்டு நவம் பர் மாதம் ஆலய நுழைவுச் சட்டத்தை வெளியிட்டுத் திருவாங்கூர் நாடு பெருமை பெற்றது. அடுத்த ஆண்டு அதேமாதம் திருவாங்கூர்ப்பல்கலைக்கழகம் ஏற்படுத்துவது பற்றிய அறிக்கையும் வெளியானது. கலைக் கல்விக்குக் கேடில்லா வகையில் தொழில்நுட்பக் கல்வியையும் ஆராய்ச்சியையும் ஊக்குவிப்பதே இம்முயற்சியின் நோக்க

1. 75, பக். 70-71
2. 113, பக். 56-57
3. 113, பக். 60

மாகும். சமீப காலத்தில் திருவாங்கூரின் ஆட்சியில் மிக விரைந்த முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதனை இங்கே குறிப்பிடவேண்டும்.

கொச்சியில் இரட்டையாட்சி ஏற்பட்டது. பரோடா, குவாலியர், அவுந்து (Aundh) முதலிய சிற்றரசர் நாடுகளும் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தில் ஆர்வம் காட்டின. 1928-ல் தொடங்கிய கொச்சித் துறைமுக வேலையின் முதல் மூன்று பகுதிகள் 1937-ல் வெற்றியோடு முடிவடைந்தன; கொச்சி பெரும் துறைமுகமாயிற்று.

சாரதாச் சட்டத் திருத்தம் (1938) முதலியன: 1938-ம் ஆண்டு திருத்தப்பட்ட குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் சிற்றரசர் நாடுகள் உள்பட இந்தியாவின் எல்லாப் பகுதியிலும் நடைமுறைக்கு வந்தது. சட்டத்திற்கு மாறாக நடைபெறக்கூடிய குழந்தை திருமணங்களை நீதிமன்றங்கள் தடைசெய்யலாம். அதையும் மீறித்திருமணம் நடத்துவோர் மூன்று மாதச் சிறைத் தண்டனையோ, 1000 ரூபாய் வரை அபராதமோ அல்லது இரண்டுமோ பெறுவர். ஆனால் குற்றவாளிகள் பெண்களானால் சிறைத்தண்டனை மட்டும் அவருக்கு இல்லை. 1936-ல் கான்பூரில் பேரரசுச் சர்க்கரைத் தொழிலாராய்ச்சி நிலையம்" என்பது இந்திய சர்க்கரைத் தொழிலாராய்ச்சிக் குழுவின் (1920) முடிவிற்கிணங்க இந்திய அரசாங்கம் ஏற்படுத்தியது. 1939-ம் ஆண்டு திருத்தப்பட்ட வருமான வரிச்சட்டம் வருமானத்திற்கேற்றவாறு உயர்ந்துவரும் வரிமுறையைப் புகுத்தியது.

கல்வி: பர்மா நீங்கலாக இந்தியாவில் ஏற்பட்ட பல் கலைக்கழகங்களில் திருவாங்கூர்ப் பல்கலைக்கழகம் பதினெட்டாவதாகும். 1938-ல் காந்தியடிகள் புதிய கல்வி முறையை வற்புறுத்தினர். அது வார்தா ஆரம்பக் கல்வித் திட்டம் என்று பெயர் பெறும். கல்வி புகட்டும் இடங்களில் உள்ள தொழில்களைக் கல்விக்குக் கருவியாகக்கொண்டு எல்லாப் பாடங்களையும் கற்பிப்பதே அதனுடைய அடிப்படை. இக்கல்வி முறையைப் பலரும் போற்றினர்; இந்த ஆதாரக்

கல்வி முறை இந்தியக் கல்வி முறையில் ஒரு நிலையான இடம் பெற்றது. பம்பாய் இந்தியப் பெண்கள் பல்கலைக் கழகம், ஹரித்துவார் அருகே உள்ள குருகுலம், தாகூர் ஏற்படுத்திய விசுவபாரதி பல்கலைக்கழகம் போன்றவற்றைக் கூறுமல் இந்தியக் கல்வி வளர்ச்சியின் வரலாறு நிறைவெய்தமுடியாது. 1921-ல் தாகூர் ஏற்படுத்திய விசுவபாரதி என்ற அனைத்துலகப் பல்கலைக்கழகம் "உயரிய எதிர்காலத்தைக் காணும் முயற்சியாகும். அது அவர் இந்தியாவில் தன்மானமும் தன்னினைவும் ஆன்மீய விடுதலையும் வளர்வதற்கென எடுத்த முயற்சியின் சிறந்த வெற்றியாகும்."*

இரவீந்திரநாத தாகூர்: இரவீந்திரர் பெருங் கவிஞர்; சிறந்த நாடக ஆசிரியர்; உயர்ந்த சிந்தனையாளர். தாகூர் (பி. 1861 – இ. 1941) தமது கீதாஞ்சலியை 1912ல் வெளியிட்டார். பிறகு ஐரோப்பாவில் பெரும் புகழடைந்தார். 1913-ல் அவருக்கு இலக்கியத்திற்கான நோபில் பரிசு கிடைத்தது. 1915-ல் அவர் 'சர்' (Sir) பட்டம் பெற்றுர். ஆனல் அதை அமிர்தசரசு படுகொலை (1919) விளக்கிய ஆங்கில மறப்போக்கை எதிர்ப்பது காரணமாக நீத்துவிட்டார். இவர் தமது தந்தையாரான தேவேந்திர நாத தாகூரின் வழியில் நிலைத்து நின்ருர். இவரிடத்தில் சாக்ரடீஸ், காண்ட் முதலியோர் காலத்திற்குப்பின் ஐரோப்பாவில் வளர்ந்த இயக்க ஆற்றலும் முற்போக்கு உணர்வும் பழங்கால இந்தியாவின் மெய்ஞ்ஞானமும் பரந்த சிந்தனைப் போக்கும் இணைந்து விளங்கின.

கிரிப்ஸ் திட்டம், 1942: அமெரிக்கக் குடியரசுத் தலைவர் வில்சனின் பதினன்கு கோட்பாடுகள் (ஜனவரி, 1918) அட்லாண்டிக் சாசனத்தில் (ஆகஸ்டு, 1941) ஓரளவு இடம் பெற்றன. ரூஸ்வெல்டும் சர்ச்சிலும் ஒவ்வொரு நாட்டின் சுய நிர்ணய உரிமையை வலியுறுத்தினர். சாசனம் வெளியான அடுத்த மாதம் இதுபற்றி

* Edward Thompson, Rabindranath Tagore (1926) P. 280

சர்ச்சில் காமன்ஸ் சபையில் பேசும்போது "பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட்ட நாடுகள் படிப்படியாகத் தன் ஆட்சியை வரையறை செய்து அமைத்துக் கொள்ளுதலில் சாசனம் குறுக்கிடாது" என்று குறிப்பிட்டார். இந்தியாவிலும் இந்தத் தேசீய சுய நிர்ணயக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும் என்ற முடிவில் சர்ச்சிலும் ரூஸ்வெல்டும் மாறுபட்டனர். ஆனால் அக்கொள்கை 1922-ல் காந்தி அடிகளும் 1935-ல் காங்கிரசும் வற்புறுத்தியதே ஆகும். பர்மாவில் ஜப்பானுடைய இராணுவ வெற்றியால் ஆங்கிலேயர் இரங்கூனைக் கைவிடும்படி ஆயிற்று (மார்ச், 7, 1942). அச் சமயத்தில்தான் பிரிட்டிஷ் முதல் அமைச்சர் தமது அமைச்சர்களுள் ஒருவரை இந்தியாவிற்கு அனுப்ப முடிவு செய்தார். அதன்படி ஸ்டாப்போர்டு கிரிப்ஸ் இந்தியாவிற்கு வந்தார் (மார்ச்சு 22, 1942). இந்தியாவிற்கு குடியேற்றநாட்டு அரசு நிலையை வழங்கும் திட்டத்தை (1940 அரசப்பிரதிநிதி வாக்களித்தது போலக்) ,கிரிப்ஸ் கொண்டுவந்தார். இரண்டாம் உலகப் போர் முடிந்த பின் இந்தியர்களே தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளைக் கொண்ட அரசியல் நிர்ணய சபையை அமைப்பதும் அதனுடைய முடிவுகளை மாநிலங்களின் ஒத்துழைப்போடு செயலாக்குவதும் இத் திட்டத்தின் கூறுகளாகும். புதிய அரசியலமைப்பை ஒத்துக்கொள்ளாத மாநிலம் அதன் பழைய நிலையிலேயே இருக்கலாம். அல்லது பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் வேறு ஏற்பாடு செய்துகொள்ளலாம். ஆனால் போர் நடக்கும் காலத்தில் இந்திய அரசியல் தலைவர்களுக்கு அரசப்பிரதிநிதியின் நிர்வாகக் குழுவில் இடமளித்து இந்தியாவின் பாதுகாப்பைத் தங்கள் வசமே வைத்துக் கொள்வதைத் தவிர வேறு உண்மையான அதிகார மாற்றம் எதுவும் செய்வதற்குப் பிரிட்டிஷ் அரசாங்கம் உடன்படவில்லை. எனவே கிரிப்ஸ் திட்டத்தை இந்திய அரசியல் கட்சிகளெல்லாம் ஒப்புக்கொள்ளாததில் வியப்பொன்றுமில்லை. ஆங்கிலேயரின் வெளியேற்றத்திற்குப் பிறகு தான் இந்தியாவை நன்கு பாதுகாக்க முடியும் என்று காந்தி அடிகள் எண்ணினர். அதே ஆண்டு

ஆகஸ்டு 8-ந் தேதி அனைத்திந்திய காங்கிரசு வெள்ளையர் வெளியேற்றத் தீர்மானத்தை நிறைவேற்றியது. உடனடியாக நாட்டிற்கு விடுதலை வழங்கப்படாவிட்டால் பெருமளவில் அகிம்சாப் போராட்டம் நடத்தவும் காங்கிரசு முடிவுசெய்தது. மறுநாள் காந்தி அடிகள் கைது செய்யப்பட்டார். அதை யொட்டிப் புரட்சிச்செயல்கள் வலிந்து நிகழ்ந்தன ; குருதி சிந்தவேண்டியதாயிற்று. ஆனால் முடிவில் புரட்சி ஒடுக்கப்பட்டது. சர்ச்சில் பிரிட்டிஷ் பேரரசைக் குலைப்பதற்குத் தாம் தலைமை தாங்க முடியாது என்ற தமது முடிவை விடாப்பிடியாகக் கொண்டிருந்தார்.

பகுதி 20

வேவல் பிரபு (1943 - 47)

வேவல் திட்டம் (1945): ஆர்ச்சிபால்டு வேவல் (பி. 1883) இந்தியாவின் அரசப் பிரதிநிதியாகவும் கவர் னர்-ஜெனரலாகவும் 1943-ம் ஆண்டு அக்டோபரிலிருந்து 1947-மார்ச்சு மாதம் வரை வீற்றிருந்தார். 1941-லிருந்து இந்தியாவின் தலைமைத் தளபதியாக இருந்த இவருக்குப் போர் நிலையை ஒட்டி இப்பதவி கிடைத்தது. 1943-ம் ஆண்டு வங்காளப் பஞ்சம் எல்லோர் மனத்தையும் கலக்கி யது. பஞ்ச நிவாரணச் சட்டங்கள் போதிய அளவு பயன் த்ராது போனதை அவர் கண்டார். 1944-ம் ஆண்டு மே மாதம் காந்தி அடிகள் விடுதலை அடைந்தார். பாகிஸ் தான் கொள்கையை C. இராஜகோபாலாச்சாரியார் ஒத் துக் கொண்டு ஒரு திட்டம் வெளியிட்டார். அதனையும் ஜின்னா ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார். துண்டு துண் டாகச் சிதைவுண்ட மாநிலங்களைக் கொண்ட பாகிஸ் தானை ஜின்னா விரும்பவில்லை. ஆறு முழு மாநிலங்களைக் கொண்ட பாகிஸ்தானே அவர் விரும்பியது. 1945-ம் ஆண்டு பிரிட்டிஷ் பொதுத் தேர்தலுக்கு முன்பு இந்தியா வின் அரசியல் சிக்கலைப் பற்றிச் சர்ச்சிலோடு கலந்தா லோசிக்க வேவல் இங்கிலாந்து சென்றார். இந்தியா திரும்பியதும் அவர் இந்தியத் தலைவர்களின் மகாநாடு ஒன்றை ஜூன் மாதம் தன் திட்டத்தைப் பற்றிக் கலந்து எண்ணுவதற்காகச் சிம்லாவில் கூட்டினார். அரசப் பிரதி நிதி, தலைமைத் தளபதி பதவிகள் நீங்கலாக அரசப் பிரதி நிதியின் நிர்வாகக் குழுவில் இந்தியரே இருப்பதும் அதில் இந்துக்களும் முஸ்லீம்களும் பப்பாதியாக இருப்பதும் அவர் திட்டத்தின் அடிப்படையாகும். நிர்வாகக் குழுவில் முஸ்லீம் உறுப்பினர்களை முஸ்லீம் லீகே நியமிக்க வேண்டும் என்ற ஜின்னாவின் கோரிக்கை வேவல் திட்டத் தைக் குலைத்தது. இங்கிலாந்து பொதுத் தேர்தலில்

தொழிற் கட்சி வெற்றிபெற்றது (ஜுலை, 1945). C. R. அட்லி தலைமை அமைச்சரானுர்.

மந்திரி சபை தூது கோஷ்டி : (1946) இங்கிலாந்தின் தொழிற் கட்சி அரசாங்கம் சிறையிடப்பட்டிருந்த இந்தியத் தலைவர்களை விடுவித்தது. மாநிலங்களுக்கும் நடுவிட அரசாங்கத்திற்கும் தேர்தல்கள் நடைபெற்றன. ஏழாண்டு இடையீட்டிற்குப் பிறகு 1946-ல் மாநில அமைச்சர் அவைகள் திரும்பவும் அமைக்கப்பட்டன. இந்தியாவின் அரசியல் சுய நிர்ணய உரிமையை ஒத்துக் கொண்டு இந்தியா பற்றி தன்னுடைய கொள்கையை ஐயமற இங்கிலாந்து அரசாங்கம் விளக்கியது. அது இந்தியாவில் சிறுபான்மையினேர் பெரும்பான்மையோரின் அரசியல் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பது முறையற்றது என எடுத்துக் காட்டியது. இந்தியாவின் அரசியல்நிலை முன்னேடாது தேங்கிக் கிடக்கும் தேக்க நிலையை நீக்க எண்ணியது. பிரிட்டிஷ் அமைச்சரவை ஒரு தூதுக் குழுவினை அனுப்பியது. இங்கிலாந்து அரசாங்கத்தின் புதிய போக்கை இது காட்டியது. அத் தூதுக் குழு இங்கிலாந்து அமைச்சர் பெதிக் லாரன்சு, ஸ்டாப் போர்டு கிரிப்ஸ், A. V. அலெக்சாண்டர் முதலியோரைக் கொண்டிருந்தது. அவர்கள் இந்தியாவிற்கு 1946-ம் ஆண்டு மார்ச்சு மாதம் வந்து சேர்ந்தனர். அடுத்த மே மாதத்தில் அவர்கள் தங்களுடைய கருத்துக்களை விளக்கினர். பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களும் சிற்றரசு நாடுகளும் கொண்ட ஒன்றுபட்ட இந்தியா உருவாக வேண்டும் ; தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளைக் கொண்ட அரசியல்நிர்ணய சபையே இதனை உருவாக்க வேண்டும் ; மாநிலங்கள் சில அடிப்படைகளில் ஒன்று சேர வேண்டும். இப்படி மூன்று நிலைகளைக் கொண்ட ஒரு அரசியலமைப்பை உருவாக்க வேண்டும். அதுவரை இந்தியாவின் தலையாய அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்போடு அக்கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட இடைக்கால அரசாங்கம் ஒன்று நிர்வாகத்தை நடத்த வேண்டும். இதுவே அவர்கள் திட்டம். இதற்கு இணங்க ஜுன்

மாதத்தில் அரசப் பிரதிநிதி ஓர் அறிக்கை விடுத்தார். ஆனல் காங்கிரசுக்கும் முஸ்லீம் லீகிற்கும் இடையே இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கவில்லை. ஒத்துழைப்பு பற்றிப் பேசிக்கொண்டே காலம் கழிந்தது. முஸ்லீம் லீகு ஆகஸ்டு மாதத்தில் நேரடி நடவடிக்கையில் இறங்கியது வங்காளத்தில் கொடிய கலகங்கள் தோன்றின.[1]

இடைக்கால அரசாங்கம் (1946) : 1946-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் அரசப்பிரதிநிதியின் நிர்வாகக் குழு வின் துணைத்தலைவராக ஜவகர்லால் நேருவைக் கொண்டு, காங்கிரசு தலைவர்கள் இடைக்கால அரசாங்கத்தை அமைத்தனர் ; அக்டோபர் மாதம் முஸ்லீம் லீகும் அதில் பங்கு கொண்டது. " இவ்வாறு இடைக்கால அரசாங்கம் ஏற்பட்டது இந்தியாவின் அரசியல் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியது. இந்நிலை வெளி நாட்டுக் கொள்கை, பாதுகாப்பு போன்ற எல்லாத் துறை களிலும் பிரிட்டிஷாரின் அதிகாரம் மறைந்ததைக் குறிப்ப தாகும். பிரிட்டிஷார் இந்தியர்கைக்கு அதிகாரத்தை மாற்றுவதில் கொண்ட உறுதியையும் காட்டுவதாகும்.[2] ஆனல் நிர்வாகக் குழுவில் காங்கிரசுத் தலைவர்களுக்கும் முஸ்லீம் லீகு தலைவர்களுக்கும் இடையே இருந்த ஒற் றுமையின்மை அரசியல் நிலைமையை மேலும் குழப்பியது. வட இந்தியாவில் பீகாரிலும் மற்ற பகுதிகளிலும் இன வெறிக் கலகங்கள் பரவின. மாநிலங்களைப் புதிய அரசி யல் ஏற்பாட்டில் ஒன்றுசேர்க்கும் திட்டத்தை அரசியல் கட்சிகள் பிறழ உணர்ந்தன. அதனல் பிரிட்டிஷ் அரசாங் கம் அதனை டிசம்பர் மாதத்தில் தெளிவுபடுத்தியது. அரசி யல்நிர்ணய சபை அதே மாதத்தில் தன்னுடைய வேலை யைத் தொடங்கியது. ஆனல் முஸ்லீம் லீகு அதில் ஒத் துழைக்க நாட்டம் கொள்ளவில்லை. இத்தகைய இக்கட் டான நிலையில் 1947-ம் ஆண்டு பிப்ரவரி 20-ம் தேதி பிரிட் டிஷ் அரசாங்கம் அதிகாரத்தைப் பொறுப்புள்ள இந்தியர்

1. 9, பக். 294.
2. 73, பக். 40.

கைக்கு 1948-ம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் மாற்றி விட்டு வெளியேறும் தன் திண்ணமான எண்ணத்தை வெளியிட்டது. 1947-ம் ஆண்டு மார்ச்சு மாதம் வேவல் பிரபுவினுடைய பதவிக் காலம் முடிவுற்றது. இந்தியாவின் அரசியலில் ஒரு புதிய சூழ்நிலை உருவாக இது வழி கோலிற்று.

இந்தியா 1858 — 1947



பகுதி 21

இந்தியாவின் கடைசி அரசப்பிரதிநிதி

பிரிட்டிஷ் பேரரசுப் படையின் பதினான்காம் பிரிவின் தலைவராக இருந்து தென் கிழக்கு ஆசியாவில் வெற்றியுடன் போர் நடத்திய கடற்படைத் தளபதி மவுண்ட்பேட்டன் பிரபு 1947 மார்ச்சு மாதம் 22-ம் தேதியிலிருந்து ஆகஸ்டு மாதம் 14-ம் தேதி வரை இந்தியாவின் அரசப் பிரதிநிதியாகவும், பின்னர் 1948-ம் ஆண்டு ஜூன் 21-ம் தேதி வரை கவர்னர்-ஜெனரலாகவும் தொண்டாற்றினார். அவர் தம்மை இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் முடிவைக் காணும் கடைசி அரசப் பிரதிநிதியாகக் கருதாமல் புதிய இந்தியாவின் முதல் வழிகாட்டியாகக் கருதுமாறு நேருவைக் கேட்டுக் கொண்டார்.* இந்தியாவின் அரசியல் நிலையை நன்குணர்ந்த அவர் அதன் பிரிவினையைத் தவிர்க்க முடியாதெனக் கருதினார். ஜூன் மாதத்தில் அவர், இந்தியா 1947-ம் ஆண்டு ஆகஸ்டு 15-ம் தேதிக்குள் இரண்டு குடியேற்றநிலை நாடுகளாகப் பிரிக்கப்படும் என்ற தன் முடிவை அறிவித்தார். காங்கிரசும் இம் முடிவிற்குக் கடைசியில் இணங்கியது. ஜூலை மாதத்தில் இந்திய சுதந்திரச் சட்டம் நிறைவேறியது. அது அமுலுக்கு வந்ததும் வங்காளம், கிழக்கு வங்காளமாகவும் மேற்கு வங்காளமாகவும் பிரிந்தது. பஞ்சாபும் மேற்கு பஞ்சாபாகவும் கிழக்கு பஞ்சாபாகவும் பிரிந்தது. பிரிட்டிஷ் மன்னர் ஏற்படுத்தும் கவர்னர் - ஜெனரல்களின் தலைமையில் இந்தியாவும் பாகிஸ்தானும் தனித்தனி குடியேற்ற நிலை நாடுகளாக விளங்கத் தொடங்கின. பிரிட்டிஷ் மன்னர் இந்தியாவின் பேரரசர் என்ற நிலையும் நீங்கியது. அதே போன்று இந்தியச் சிற்றரசுகள் மீது அவருக்கிருந்த மேலாட்சி உரிமையும் மறைந்தது. இந்தியா அமைச்சர் பதவியும் ஒழிந்தது. இரண்டு நாடுகளின் அர

---

* *15, பக். 45.*

சியல்நிர்ணய சபைகள் முழுஉரிமை கொண்ட சட்ட சபைகளாயின. புதிய அரசியலமைப்பை உருவாக்கும் வரை 1935-ம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம் தேவை யான மாறுதல்களுடன் நடைமுறையில் இருந்துவர வேண்டும். மேற்குப் பஞ்சாபு வடமேற்கு எல்லைப்புற மாகா ணம் சிந்து மாகாணம் பிரிட்டிஷ் பலுசிஸ்தானம் அஸ்ஸா மின் சில்ஹெட் ஜில்லாவைக் கொண்ட கிழக்கு வங்காளம் ஆகியவை பாகிஸ்தான் என்ற தனிநாடாயின. "ஆகஸ்டு 15-ம் தேதி உலக வரலாற்றில் எப்பொழுதும் கண்டிராத வகையில் ஆள்கடத்தல், தீயிடுதல், இரத்தம் சிந்துதல் போன்ற வெறிச் செயல்களுக்கிடையே இந்தியாவும் பாகிஸ்தானும் சுதந்திர நாடுகளாயின."* சுதந்திர இந்தியாவின் முதல் அமைச்சர் அவை ஜவகர்லால் நேரு (தலைமை அமைச்சர்), வல்லபாய் படேல் (உள்நாட்டு அமைச்சர், துணைத் தலைமை அமைச்சர்), R. K. சண்முகம் செட்டியார் (நிதி அமைச்சர்) இவர்களைக் கொண்டிருந்தது.

கடைசி கவர்னர்-ஜெனரலும், முதல் குடியரசுத் தலைவரும்: 1948-ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 1950 ஜனவரி மாதம் வரை C. இராஜகோபாலாச்சாரியார் (பி. 1879) இந்தியாவின் கடைசி கவர்னர்-ஜெனரலாகப் பதவியிலிருந்தார். இவர் சென்னை மாகாணத்தின் முத லமைச்சராகவும் (1937–39), இடைக்கால இந்திய அரசாங் கத்தில் ஓர் அமைச்சராகவும் (1946–47), மேற்கு வங்காளத் தின் கவர்னராகவும் (1947–48), மவுண்ட்பேட்டன் இங்கி லாந்து சென்ற பொழுது தற்காலிகக் கவர்னர்-ஜெனர லாகவும் இருந்தவர். இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் சிறப்பிடம் பெற்றவர் என்று பெதிக் லாரன்சு குறிப்பிட்ட (1950) அரசியல் வல்லுநர் நால்வர்களுள் இவர் ஒருவர். ஏனையவர் காந்திஜி, நேரு, படேல் எனபவர்களாவர். பிரிட்டிஷ் அமைச்சரவை தூதுக் குழுவின் திட்டத்தின்படி 1946-ம் ஆண்டு ஜூலை மாதம் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல்நிர்ணய சபை முஸ்லீம் லீகின் ஒத்துழைப்

---

* 9, பக். 303.

பின்றியே அதே ஆண்டு டிசம்பர் மாதம் 9-ம் தேதி தன் வேலையைத் துவக்கிற்று. அரசியல்நிர்ணய சபையின் தலைவராக இராஜேந்திர பிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜனவரி 22-ம் தேதி அரசியலமைப்பு குறிக்கோள்களைப் பற்றிய நேருவின் தீர்மானம் நிறைவேறியது. அது அதிகாரப் பட்டியல்களில் காணப்படாத அதிகாரங்கள் மாநிலங்களுக்கே என விளக்கி மாநிலங்களின் தனியுரிமை நிலையினை வற்புறுத்தியது. ஆனால் 1947-ம் ஆண்டு ஜூலை மாதம் நிறைவேறிய இந்திய விடுதலைச் சட்டம் இந்தியாவை இரண்டாகப் பிரித்தது. பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் தனித்தனி அரசியல்நிர்ணய சபைகளை ஏற்படுத்தியது. பிரிவினைக்கு முன் ஏற்பட்ட அரசியல் நிர்ணயசபையை இந்தியாவின் அரசியல்நிர்ணய சபையாக அதற்குரிய எல்லா அதிகாரங்களோடு இயங்கச் செய்தது. ஆகஸ்டு மாதம் அரசியலமைப்புச் சட்டத்தை வரைய அம்பேத்கார் தலைமையில் ஒரு குழு நியமிக்கப் பட்டது. அதன் அடிப்படைத் திட்டம் 1948 பிப்ரவரியில் வெளியாகியது. அது அதிகாரப்பட்டியல்களில் குறிக்கப் படாத அதிகாரங்களை நடுவிட அரசாங்கத்திற்கே வழங்கியது. இந்தியா பிரிக்கப்பட்டதின் காரணத்தையொட்டி நடுவிட அரசாங்கத்திற்கு மிகுந்த அதிகாரங்களை அளிக்கும் ஒரு கூட்டாட்சி அமைப்பையே அது விரும்பியது. 395 விதிகளையும் 8 அட்டவணைகளையும் கொண்டு உருவாகிய இந்தியாவின் அரசியலமைப்புத் திட்டம் 1949-ம்ஆண்டு நவம்பர் 26-ம் தேதி நிறைவேறியது. இதை உருவாக்க அரசியல் நிர்ணயசபைக்கு ஆயிரம் நாட்களுக்கு மேல்-சுமார் மூன்றாண்டுகள் ஆயிற்று. 1950-ம் ஆண்டு ஜனவரி 26-ம் தேதி அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது. அரசியலமைப்பின் 379-வது விதிப்படி அரசியல் நிர்ணய சபை இந்தியாவின் தற்காலிக பாராளுமன்றமாகியது. இதுவே இராஜேந்திர பிரசாத்தைத் தற்காலிக குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. பின்னர் நடந்த (1951–52) பொதுத் தேர்தல்களை அடுத்து 1952-ல் அவரே இந்தியாவின் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பகுதி 22

1950-ம்ஆண்டு இந்திய அரசியலமைப்பும் 1951-ம் வருட திருத்தமும்

முகவுரை : அரசியலமைப்பின் முன்னுரை இந்தியக் கூட்டாட்சி அமைப்பினுடைய மக்களாட்சியின் இயல்பு, விடுதலை, எல்லோரும் ஓர்நிறை என்ற ஒருநிகர் தன்மை முதலிய கூறுகள்பற்றி வலியுறுத்திக் கூறுகிறது. காமன்வெல்த்து (பிரிட்டிஷ் காமன்வெல்த்து) நாடுகளில் ஒன்ருயினும் இந்தியா எல்லா அதிகாரங்களையும் கொண்ட ஒரு நிறைநிலைக் குடியரசாகும். இதுபற்றி 1949-ம் ஆண்டு கூடிய காமன்வெல்த்து தலைமை அமைச்சர்கள் மாநாட்டில் நேரு பின்வருமாறு கூறினுர் : "இந்தியா தொடர்ந்து காமன்வெல்த்தின் உறுப்புகளில் ஒன்ருக இருந்துவரும். தன்னுரிமை நாடுகள் இங்குத் தன்னுரிமை விளங்கவே கூடிவரும் காமன்வெல்த்தின் அடையாள மாகவே பிரிட்டிஷ் மன்னர் இருப்பார். அம்முறையில் அவரே அதன் தலைவர் ஆவார்." கூட்டாட்சி அரசாங்கத் தின் கூட்டாட்சி கூறுகளைப்பற்றி முன்னுரையில் குறிப்பு எதுவும் இல்லை. அந்த அரசாங்கம் கூட்டாட்சி அரசாங் கமே ஆம் ; ஆனுல் முழுக் கூட்டாட்சியன்று. சோவியத்து ருஷியாவின் கூட்டாட்சி அரசியல் அமைப்பிற்கும் இந்தியக் கூட்டாட்சி அரசியல் அமைப்பிற்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. நார்வேயிலிருந்து நியூஸிலந்து வரை உலகில் நிலவிவரும் அரசியல் அமைப்புக்களை ஆராய்ந்து பார்த்து அவற்றில் நமக்கு வேண்டியவற்றைக் கொண்ட னர் நமது அரசியலமைப்பைப் படைத்தோர்கள். உலகம் போற்றற்குரிய அரசியலமைப்பின் சிறந்த குறிக்கோள் களுக்கு முன்னுரையில் அவர்கள் இடமளித்தது இயற் கையே. "1935-ம் ஆண்டுச் சட்டம் நடைமுறையில் எப்படி இருந்தது என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். சுருங்கக் கூறுமிடத்துப் புதிய அரசியலமைப்பில்

கிட்டத்தட்ட முக்கால் பகுதி, அச்சட்டத்தை அடிப்படை யாகக் கொண்டதே ஆம். அதிலும் அனுபவத்திற்கு ஏற்ற வாறு சில மாற்றங்கள் அமைந்துள்ளன. அடிப்படை உரிமைகளைப் பற்றிய பகுதி பெரிதும் அமெரிக்காவின் அரசியலமைப்பை ஒட்டி எழுதியது. அயர்லாந்து அரசிய லமைப்புகள் போன்றவைகளும் இதில் ஓரளவு பின்பற்றப் பட்டன. நம் கூட்டாட்சி அமைப்பு கானடாவின் அரசிய லமைப்பைப் பின்பற்றி எழுதியதாகும். இதில் சில இடங்களில் ஆஸ்திரேலியா அரசியலமைப்பின் கூறுகளை யும் காணலாம். பொறுப்புள்ள அரசாங்கமுறை இங்கி லாந்தின் அரசியலமைப்பு முறையைப் பின்பற்றியதாகும். எனவே, பல அரசியல் அமைப்புகளை ஆதாரமாகக்கொண்டு தனிச்சிறப்புடன் நமது அரசியலமைப்பு விளங்குகிறது.* அரசியலமைப்பின் முதற் பகுதியிலுள்ள முதல் நான்கு விதிகள் புதிய இந்திய நாட்டுப் பகுதிகளை எடுத்துக்கூறு கின்றன. அரசியலமைப்பைத் திருத்தாமலே புதிய நாடு களைக் கூட்டாட்சியில் சேர்த்துக்கொள்ளவும் இப்போது உள்ள நாடுகளின் பகுதிகளையோ அல்லது பெயர்க ளையோ மாற்றவும் இந்த முதற்பகுதி பாராளுமன்றத்திற்கு உரிமை வழங்குகிறது. இது அரசியலமைப்பின் வளைந்து கொடுக்கும் தன்மையைக் காட்டுகின்றது. நாடுகள் கூட் டாட்சியிலிருந்து பிரியமுடியாதென்பது தெளிவு இரண் டாம் பகுதியில் ஐந்திலிருந்து பத்துவரை உள்ள விதிகள் குடிமை உரிமையைப் பற்றி விளக்குகின்றன. 11-ம் விதி இதுபற்றி புதிய சட்டங்கள் இயற்றப் பாராளுமன்றத்திற்கு உரிமை அளிக்கின்றது. கூட்டாட்சிமுறை இருந்தாலும் கூட்டாட்சிக் குடிமை நாட்டாட்சிக் குடிமை என இருவகைக் குடிமைக்கு இடம் இல்லை. கூட்டாட்சிக் குடிமை என ஒன்றே உண்டு. அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் நடந்தபொழுது (1861-65) இரு குடிமை உரிமையால் பல தொல்லைகள் விளைந்தன அன்றோ.

---

* 7, பக். 4.

அடிப்படை உரிமைகள் : மூன்ரும் பகுதியில் 12-லிருந்து 35-வரையிலுள்ள விதிகள் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பற்றியன. சுதந்திரவாதிகளுக்கும் வழக்கறிஞர்களுக்கும் இது ஓர் விண்ணுலகாகும்; சட்டத்திற்கு முன் யாவரும் ஒரு நிகர்; பிறந்த இடம், சமயம், இனம், சாதி, ஆடவர், பெண்டிர் இவற்றின் அடிப்படையில் எவரும் தனி வேற்றுமைகளுக்காளாகார் (விதி 15); அரசாங்கத்தில் பணிபுரிய எல்லோருக்கும் ஒரு நிகரான வாய்ப்புகள் உண்டு; தீண்டாமைக்கும் பட்டங்களுக்கும் (Titles) இடமின்றி' ஒழித்தல் ; 19-ஆம் விதி பேச்சுரிமை, கூட்டம் கூட்டும் உரிமை, கட்சி அமைப்புரிமை, எங்கும் கட்டுப்பாடு இன்றி நாட்டில் போய் வரும் உரிமை, சொத்துரிமை, தொழில் உரிமை முதலிய ஏழுரிமைகளைப் பற்றியதாகும். வாழும் உரிமைக்கும் தனி மனிதனின் தற்போக்கு உரிமைக்கும் சட்டத்தை மீருது இருக்கும்வரை கைதி ஆகா உரிமைக்கும், விசாரணையின்றி நீண்ட நாள் சிறைபடா உரிமைக்கும், ஒரு குற்றமும் செய்யாமல் இருக்கும்பொழுது தண்டிக்கப்படா உரிமைக்கும் அரசியலமைப்பு அங்கே பாதுகாப்பளிக்கிறது. பரத்தமை, கட்டாயவேலை போன்றவை அரசியலமைப்பில் சட்டத்திற்கு மாறுபட்டவை. எல்லோருக்கும் மனச்சான்றின்படி நம்பிவரும் மனச்சான்று உரிமை உண்டு; எவரும் எச்சமயத்தையும் பின்பற்றவும் அதனைப் பரப்பவும் உரிமையுண்டு. அதே போன்று சமய நிறுவனங்களை நிர்வகிக்கவும் உரிமை உண்டு. சில கல்வி நிலையங்களில் ஒரு சமயத்தைப்பற்றிய வகுப்புகளுக்குச் செல்லாது இருக்கவும் உரிமை உண்டு; கல்வி கலை பண்பாடு பற்றிய உரிமைகளும் உண்டு; பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் எவரும் சேர்ந்து கற்க உரிமையுண்டு — (விதி 29); 39-ஆம் விதிப்படி அரசாங்கம் தனி ஆளுக்குச் சொந்தமான சொத்து எதையும் பொது நன்மைக்காகக்கூட நட்டஈடு கொடுக்காமல் எடுத்துக்கொள்ள முடியாது. இவ்வுரிமைகளில் எவற்றையாவது அரசாங்கம் பறித்துக்கொள்ளுமாளுல் அதைத் திரும்பப்பெற 32-ஆம் விதிப்படி எந்த தனி

மனிதனுக்கும் தலைமை நீதிமன்றத்தில் (Supreme Court) வழக்காட உரிமையுண்டு. இது பற்றித் தலைமை நீதி மன்றத்திற்கு ஹேபியஸ் கார்ப்பஸ், மாண்டமஸ், சர்ஷியோராரி, முதலிய தடை உத்தரவுகளைப் பிறப்பிக்கவும் அதிகாரம் உண்டு. இத்தகைய அதிகாரங்களைப் பிற நீதி மன்றங்களுக்கும் வழங்கப் பாராளுமன்றம் அதிகாரம் பெற்றுள்ளது. அடிப்படை உரிமைகளைப் பற்றிக் கூறும் அரசியலமைப்பின் மூன்றும் பகுதியைப் பாராளுமன்றம் சிறப்புநிலை பெருவாரி ஆதரவுடன்தான் திருத்தலாம். அத்தகைய திருத்தங்களை நாடுகளும் ஒத்துக்கொள்ள வேண்டும் என்பது இல்லை. தனி ஆள்கள் உரிமைகளுக்கு அரசியலமைப்பின்கீழ்ப் பாதுகாப்பளிக்கின்றது அமெரிக்காவின் முறை. பொதுச் சட்டத்தின்கீழ்ப் பாதுகாப்பளிக்கின்றது பிரிட்டிஷ் முறை. இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட முறையையே நம் அரசியலமைப்புக் கடைப்பிடித்துள்ளது. 1951-ம் ஆண்டு ஜூன் மாதம் அடிப்படை உரிமைகளைப் பற்றிய 15, 19, 31 முதலிய விதிகள் எளிதாகவே (பாராளுமன்றத்திலும் வெளியிலும் இதற்கு ஓரளவு எதிர்ப்பு இருந்தது) திருத்தப்பட்டன. இத்திருத்தம் 15-ம் விதிக்குள் ஒரு புதுப் பிரிவைச் சேர்த்தது. சமூகக் கல்வித் துறைகளில் பிற்பட்ட மக்களுக்குச் சில தனிப்பட்ட எளிய வாய்ப்புகளை வழங்க வழிகோலியது. 19-வது விதியில் சில பிரிவுகளும் மாற்றப்பட்டன; வெளிநாடுகளுடன் கொண்டுள்ள நல்லுறவுக்கு ஊறு நேராமைக்கும் பொது அமைதி குலையாமைக்கும் குற்றங்களைச் செய்யுமாறு தூண்டாமைக்கும் வேண்டிப் பேச்சுரிமையே சில கட்டுப்பாடுகளுக்கு உள்ளாகியது; 31-ஆம் விதிக்குப்பின் 31-A, 31-B என்ற இரு புதிய விதிகளும் சேர்க்கப்பட்டன; இவை ஜமீன்தாரி முறையை ஒழிப்பதற்காகவும், உழவுநிலையின் சீர்திருத்தத்திற்காகவும் நிறைவேற்றப்பட்ட சட்டங்களை மக்களின் பொருளாதார, சமூக முன்னேற்றத்தின் காரணமாக அரசியலமைப்பின் வரம்பிற்குட்பட்டனவாக ஆக்குகின்றன. மேலும் இத்திருத்தம் அத்தகைய பதின்மூன்று

* 76, பக். 594-605.

சட்டங்களை அரசியலமைப்பின் 9-வது அட்டவணையாகச் சேர்த்துள்ளது.*

அரசியலை இயக்கிவரும் கொள்கைகள் (Directive Principles): அரசியலமைப்பின் நான்காம் பகுதியில் 36-லிருந்து 51-வரை உள்ள விதிகள் பொதுநல அரசுக் கோட்பாட்டை ஒட்டி இந்தியா முழுவதும் சட்டம் மூலம் பின்பற்றுவதற்கான கொள்கைகளைக் குறிப்பிடுகின்றன. ஆனால் இக்கொள்கைகளை அரசாங்கம் கையாளாது இருந்தால் எவரும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க இயலாது. எனவே இவை அடிப்படை உரிமைகளைப் போன்றவையல்ல. இருப்பினும் 37-ஆம் விதி இவைகளை ஆட்சி முறையில் பின்பற்ற வேண்டியதின் இன்றியமையாமையையும், சட்ட உருவில் செயலாக்க வேண்டியதின் சிறப்பினையும் கூறுகின்றது. இவற்றுள் தலையாய கொள்கைகள் பின்வருமாறு: போதுமான வருமானம் வரக்கூடிய வேலைகள்; ஒரு நிகரான வேலைக்கு ஒரு நிகரான கூலி; வயதிற்கும் உடல் வலிமைக்கும் ஏற்ற வேலை; கிராமப் பஞ்சாயத்து; மனித வல்லமைக்கும், பண்பிற்கும் ஒத்த நியாயமான வேலை நிலைமை; மகப்பேற்றின்போது ஓய்வு; வாழ்வதற்குப் போதுமான கூலி; குடிசைத் தொழிலாதரவு; ஒரே முறையான சிவில் சட்டங்கள்; 14வயதுக்குட்பட்ட எல்லாச்சிறுர்களுக்கும் சம்பளமில்லாமல் கட்டாயக் கல்வி; பிற்பட்ட வகுப்பினருக்குக் கல்வி, பொருளாதாரம் முதலியவற்றில் தனிப்பட்ட வாய்ப்புகள்; போதுமான உயர்தர உணவு, சிறந்த வாழ்க்கை நிலை; பொதுச் சுகாதாரம்; மதுவிலக்கு (J. S. மில் இது தனி ஆளின் சுதந்திரத்திற்கு மாருனது என்று கருதினர்); விஞ்ஞான முறையான வேளாண்மை; நாட்டுப்பொதுச் சின்னங்களின் பாதுகாப்பு; நீதித்துறையும் நிர்வாகத்துறையும் ஒன்ருகாமை. 51-ஆம் விதி அனைத்துலக அமைதிக்காகவும் பாதுகாப்பிற்காகவும் பணிபுரிவதை வற்புறுத்துகிறது. அயர்லாந்தின் அரசியலமைப்பைப் பின்பற்றியே நமது அரசியலமைப்பில் இக்கொள்கைகள் சேர்க்கப்பட்டுள்ளன. பிரான்சின் நான்

காவது குடியரசு அரசியலமைப்பு உலக அமைதிக்காக நாட்டின் இறைமையைப் பரஸ்பர ரீதியில் விட்டுக் கொடுப்பதை அங்கீகரிப்பது இங்கு கவனிக்கத்தக்கது.

குடியரசுத் தலைவர் : இந்தியாவின் குடியரசுத் தலைவரை மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுப்பதில்லை. மக்கள் தேர்ந்தெடுக்கும் நாட்டுக் கீழ்ச்சபைகளின் உறுப்பினரும், பாராளுமன்ற உறுப்பினருமே குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கு உரியவர்கள். தேர்தல் முறை எளிதானதன்று; இதில் நாடுகளின் ஒரு நிகராந்தன்மையும் நாடுகளும் பாராளுமன்றமும் ஒரு நிகராந்தன்மையும் விளங்க வழிசெய்யப்பட்டுள்ளது. ஒரு நாட்டுக் கீழ்ச்சபை உறுப்பினர் ஒருவர் எவ்வளவு வாக்குகள் அளிக்கலாம் என்பது பின்வரும் முறையில் முடிவு செய்யப்படும். ஒரு நாட்டு மொத்த மக்கள் தொகையை அந்நாட்டுச் சட்டசபையில் மக்கள் தேர்ந்தெடுக்கும் மொத்த உறுப்பினர் தொகையால் வகுக்க வேண்டும்; இதில் வரும் ஈவை ஆயிரத்தால் வகுக்க வேண்டும்; இதில் வரும் ஈவு அக் கீழ்ச்சபை உறுப்பினருக்குள்ள வாக்குகளைக் குறிக்கும். இதே முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்வாக்கு பின்வருமாறு முடிவுசெய்யப்படும். நாட்டுக் கீழ்ச்சபைகளின் உறுப்பினர் எல்லோரின் மொத்தவாக்குகளைத் தேர்ந்தெடுக்கப்பெற்ற பாராளுமன்ற உறுப்பினர் மொத்த எண்ணிக்கையால் வகுக்க வேண்டும். அதில் கிடைக்கும் ஈவே பாராளுமன்ற உறுப்பினர் வாக்காம். இம்முறை புதியது; நாம்தான் முதல் முதல் பின்பற்றுகிறோம். குடியரசுத் தலைவரை 5 ஆண்டுகளுக் கொருமுறை வீதப் பிரதிநிதித்துவ முறைப்படி ஒற்றை மாற்று வாக்கு மூலம் (ஹேர் காட்டிய, J. S. மில் போற்றிய, முறை) தேர்ந்தெடுக்க வேண்டும். ஒருவரையே மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுக்கலாம். அமெரிக்க குடியரசுத் தலைவர் ஒருவரை இருமுறைக்கு மேல் தேர்ந்தெடுக்கக்கூடாது என்ற வழக்கத்தை ரூஸ்வெல்டு புறக்கணித்ததனை இங்கே நினைவுகூரவேண்டும். இந்திய குடியரசுத் தலைவர் ஒரு இந்தியராக இருக்கவேண்

டும்; குறைந்தது 35 வயது உடையவராக இருக்கவேண்டும்; பாராளுமன்றக் கீழ்ச்சபை (மக்கள்சபை) உறுப்பினராகக்கூடிய தகுதி படைத்தவராகவும் இருத்தல் வேண்டும். அவரது மாதச்சம்பளம் ரூ.10,000 (அரசியலமைப்பின் இரண்டாவது அட்டவணை). அரசியலமைப்பு விதிகளைக் குடியரசுத் தலைவர் மீறி நடந்தால் பாராளுமன்றம் அவரை விசாரணை செய்யலாம். பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையோ அல்லது மேல்சபையோ இதற்கு ஏற்பாடு செய்யலாம். ஆனால் அப்படி விசாரிப்பதற்கு முடிவு செய்ய, கீழ்ச்சபையிலோ மேல்சபையிலோ உள்ள மொத்த உறுப்பினர்கள் மூன்றில் இரண்டுபங்கு உறுப்பினர் ஆதரவு அளிக்க வேண்டும். அங்ஙனம் ஒரு சபை முடிவு செய்யின் மற்றொரு சபை நீதிமன்றமாக அமைந்து குடியரசுத் தலைவரின் குற்றவிசாரணையை நடத்தித் தீர்ப்பளிக்கும். அதற்கு அச்சபையின் மொத்த உறுப்பினரில் மூன்றில் இரண்டுபங்கு உறுப்பினரின் ஆதரவு வேண்டும். குடியரசுத் தலைவர் நிர்வாக அதிகாரம், இராணுவ அதிகாரம், வெளிநாட்டு உறவுபற்றிய அதிகாரம், சட்டசபை பற்றிய அதிகாரம், நீதிபரிபாலன அதிகாரம், அவசரகால அதிகாரம் முதலிய பலவகையான அதிகாரங்களைப் பெற்றிருக்கிறார்.* பாராளுமன்றப் பொறுப்புள்ள ஆட்சிமுறையில் குடியரசுத் தலைவர் பெயருக்குத்தான் தலைவர். அவருடைய அதிகாரங்கள் அனைத்தையும் அமைச்சர் குழுவே நடத்தும். தலைமை அமைச்சரை ஏற்படுத்தல், நீக்குதல் பிற அமைச்சர்களைத் தலைமை அமைச்சரின் முடிவுபடி ஏற்படுத்தல், இந்தியாவின் தலைமை வழக்குரைஞர் இந்தியத் தலைமைத் தணிக்கையாளர், இந்தியத் தலைமை நீதிமன்ற நீதிபதிகள், நாடுகளின் கவர்னர்கள், முதலியவர்களை நியமித்தல் குடியரசுத் தலைவரின் நிர்வாக அதிகாரத்திற் குட்பட்டவையாகும். உடன்படிக்கைகளைப் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தல் அவரின் வெளிநாட்டு உறவைப்பற்றிய அதிகாரத்தில்

---

* 7, பக் 253-5

அடங்கியதாகும். பாராளுமன்றக் கூட்டத்தைக் கூட்டு வித்தல் அங்குப்பேசுதல் பாராளுமன்றத்திற்குச் செய்தி அனுப்புதல், சில மசோதாக்கள் கொண்டுவர அனுமதி அளித்தல், கூட்டாட்சி மசோதாக்களுக்கு ஒப்பம் அளித்தல், பாராளுமன்றம் கூடாதபொழுது அவசர கால சட்டங்களைப் பிறப்பித்தல் (விதி 123) இன்னபிற குடியரசுத் தலைவரின் சட்டசபை அதிகாரத்திற்குட்பட்ட வையாகும். 72-ஆம் விதிப்படி சாவுத் தண்டனை அடைந் தவர்களை மன்னிக்க குடியரசுத் தலைவர் அதிகாரம் பெற் றுளளார். 352-லிருந்து 360 வரையில் உள்ள விதிகள் குடியரசுத் தலைவரின் அவசரக்கால அதிகாரங்களைப் பற்றியனவாகும். அவை வெளிநாட்டினர் படையெடுப்பு உள்நாட்டுக் கலகம் முதலியவைகளிலிருந்து நாட்டைக் காக்கவும் அரசியல் அமைப்புப்படி நிர்வாகம் முறையாக நடைபெறுவதற்காகவும் வழங்கப்பட்டு உள்ளன. பொதுவாக மூன்றுவித நெருக்கடிகளைப் பற்றி மேற் கூறிய விதிகள் குறிப்பிடுகின்றன. அவை பின்வருமாறு: இந்தியாவின் பாதுகாப்புக்கு இடையூறான அரசியல் அல்லது இராணுவ நெருக்கடி; அரசியலமைப்பின்படி மாநில நாடுகளின் நிர்வாகம் நடைபெறாது சீர்குலைதல் ; மாநில நாட்டு நிதி நெருக்கடி இந்திய அரசாங்கத்தின் நிதிநிலைமை சீர்கேடடைதல் முதலியன. அரசியல் அல்லது இராணுவ நெருக்கடி ஒரு நாட்டில் ஏற்பட்டால் அந்த நாட்டின் நிர்வாகத்தை நடுவிட அரசாங்கமே மேற் கொள்ளலாம் (விதி 353). இதனால் கூட்டாட்சி முறை அப்போதைக்கு மட்டுமே மாறும்; மக்களது அடிப்படை உரிமைகள் அப்போதைக்கு மட்டுமே நீங்கும் (விதிகள் 358 & 359). இரண்டாவதாக மாநில நாட்டின் நிர்வாகம் நடைபெறாதபடி சீர்குலைவதால் நெருக்கடி ஏற்பட்டாலும் ஒரு நாட்டின் நிர்வாகத்தை நடுவிட அரசாங்கம் ஏற்கும் (விதி 356). இது 1935-ஆம் ஆண்டுச் சட்டத்தில் இருந்த 93-ஆம் பிரிவைப் போன்றதாகும். மூன்றாவதாக ஒரு நாட்டில் நிதி நெருக்கடி ஏற்பட்டால் அங்கே நிதி நிலையில் என்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றி நடுவிட

அரசாங்கம் தெரிவிக்கும். அரசாங்க அலுவலர்கள் எல்லோரின் ஊதியத்தையும் இச்சமயங்களில் குறைக்க அரசாங்கத்திற்கு அரசியலமைப்பு அதிகாரம் அளிக்கிறது.

குடியரசுத் துணைத்தலைவர் : பாராளுமன்றத்தின் இரு சபைகளும் சேர்ந்து ஹேர் என்பவர் கண்ட வீதப் பிரதிநிதி முறைப்படி ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை குடியரசின் துணைத்தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவர் ஓர் இந்தியராக இருத்தல் வேண்டும்; குறைந்தது 35 வயதுடையவர் ஆதல் வேண்டும்; பாராளுமன்ற மேல் சபை (Council of States) உறுப்பினர் ஆவதற்குரிய தகுதிகள் பெற்றிருத்தல் வேண்டும். குடியரசின் துணைத் தலைவரே அம் மேல்சபையின் (இராச்சிய சபை) உரிமை பெற்ற தலைவர். யார் குடியரசுத் துணைத்தலைவரோ அவரே அச்சபையின் தலைவர் ஆவார். குடியரசுத் தலைவர் வெளி நாடு சென்றாலும் நோய்வாய்ப்பட்டாலும் இறந்தாலும் பதவி துறந்தாலும் பதவியிலிருந்து நீக்கப்பட்டாலும் குடியரசின் துணைத்தலைவர் அப்போதைக்குக் குடியரசுத் தலைவர் பதவியை வகிப்பார். மேற்கூடிய கடைசி மூன்று தறுவாய்களில் புதிய குடியரசுத் தலைவர் (ஆறு மாதங்களுக் குள்) தேர்ந்தெடுக்கப்படும் வரைதான் துணைத்தலைவர் குடியரசுத் தலைவராக இருக்க முடியும். ரூஸ்வெல்டு 1944-ல் நான்காவது முறையாக அமெரிக்காவின் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் அடுத்த ஆண்டே அவர் காலமானார். அதனால் அப்பொழுது குடியரசுத் துணைத்தலைவராக இருந்த ட்ரூமன் குடியரசுத் தலைவராக எஞ்சிய காலமெல்லாம் தொண்டாற்றினார். அத்தகைய நிலை நமது அரசியல் அமைப்பின்கீழ் ஏற்பட இடமில்லை.

கூட்டாட்சி அமைச்சவை : தலைமை அமைச்சரைத் தலைவராகக் கொண்ட கூட்டாட்சி அமைச்சர் அவை குடியரசுத் தலைவருக்கு "ஆலோசனை கூறி உதவிபுரிய வேண்டும்" (விதி 74). பிரிட்டிஷ் அரசாங்க முறையை நாம் பின்பற்றியிருப்பதால் அதன் வழக்காறுகளையும் பின்பற்ற வேண்டியதேஆம். அதன்படி நோக்கின்

குடியரசுத் தலைவரே தலைமை அமைச்சரை நியமிக்க வேண்டும். அதே முறையில் பிற அமைச்சர்களைத் தலைமை அமைச்சரின் அறிவுரையின்படி குடியரசுத் தலைவர் நியமிக்க வேண்டும். 75-வது விதிப்படி இந்த அமைச்சர் அவை நடுவிடக் கீழ்ச்சபை (மக்கள் சபை)-க்கு கூட்டுப் பொறுப்புள்ளது. குடியரசுத் தலைவரின் விருப்பம் உள்ள வரை அமைச்சர்கள் தம் பதவியில் இருப்பார் என்பது சட்டத்தின் கூற்று. ஓர் அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர் ஆகாமல் ஆறு மாதங்கள் இருந்தால் தமது பதவியை இழப்பார். அமைச்சர்களின் சம்பளத்தைப் பாராளுமன்றமே வரையறுக்கும். சட்டம் இயற்றல், நிர்வாகம் பற்றிய அமைச்சர் அவையின் முடிவுகளைத் தலைமை அமைச்சர் குடியரசுத் தலைவருக்குத் தெரிவிக்க வேண்டும் (விதி 78). பாராளுமன்றப் பொறுப்புள்ள அரசாங்க முறையில் தலைமை அமைச்சர் மிகச்சிறந்த இடத்தைப் பெற்றுள்ளார். சட்டம் இயற்றல், நிர்வாகம் போன்றவற்றில் அமைச்சரவையே பெரும் பங்கு கொள்கின்றது ; அதன் தலையாய வேலை அரசாங்கத்தின் பலதுறை வேலைகளை ஒருமுகப்படுத்தி வழிகாட்டுவதும் முரண்பாடற்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதுமே ஆம். கட்சி அரசாங்கம் நன்கு நடைபெற, அமைச்சரவையின் உறுப்பினர் அனைவரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாய் இருக்கவேண்டும். பாராளுமன்றத்தில் ஒரு பெரும் பான்மையோர் கட்சியும், வலிவற்றதாயினும் மதிக்கத்தக்க எதிர்க்கட்சியும், கீழ்ச்சபையின் பணிக்குத் தடையாக இல்லாமல் விளங்கும் மேல்சபையும், அடிப்படைக் கொள்கைகள் பற்றி அடித்துக்கொள்ளாத கீழ்ச்சபையும் இன்றியமையாது வேண்டும். பாராளுமன்ற முறை அரசாங்கநிலைக்கும் கூட்டாட்சி அரசாங்கநிலைக்கும் இடையே உள்ள முரண்பாடுகள் தோன்றுதவாறு செய்வன, ஈரங்கச் சட்டசபைமுறை, கூட்டாட்சிமுறை இவைகளில் நாம் செய்துள்ள மாற்றங்களே ஆம்.

பாராளுமன்றம் : இந்தியப் பாராளுமன்றம் ஈரங்கச் சபையாகும். மேல்சபை அல்லது இராச்சியசபையின்

தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரின் எண்ணிக்கை 248க்கு மேற்படாது. இவர்களே அன்றி இலக்கியம், விஞ்ஞானம், கலை, சமூகத்தொண்டு, முதலியவற்றில் சிறப்புடன் திகழும் 12 உறுப்பினர்கள் இருப்பர்; இவர்களைக் குடியரசுத்தலைவர் நியமிப்பார். அரசியலமைப்பின் நான்காவது அட்டவணையில் மாநில நாட்டு மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடக்கத்தில் 205-ஆக இருந்தது; 1950-ல் அது 204-ஆகக் குறைக்கப்பட்டது. A பிரிவு, B பிரிவு மாநில நாடுகளின் உறுப்பினரை (145+49=194) நாடுகளின் கீழ்ச்சபைகள் வீதமுறைப்படி தேர்ந்தெடுக்கும். மற்றவர்கள் (10) C பிரிவு நாடுகளின் உறுப்பினர் ஆவர். அவர்கள் பாராளுமன்றம் முடிவுசெய்யும் முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவர். நடுவிட மேல் சபை நிரந்தரமான சபையாகும்; இரண்டு ஆண்டுகளுக்கொருமுறை அதில் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர் பதவியினின்று விலகவேண்டும். உறுப்பினர் யாவரும் இந்தியராகவும் 30 வயதுக்குக் குறையாதவர்களாகவும் இருக்கவேண்டும். முன்கூறியபடி குடியரசின் துணைத்தலைவரே இச்சபையின் தலைவர் ஆவார். இம்மேல் சபையின் துணைத்தலைவரை அதன் உறுப்பினர்களே தேர்ந்தெடுப்பர். இவ்விருவர்களின் சம்பளத்தையும் பாராளுமன்றமே நிர்ணயிக்கும்.

மக்கள்சபை, "லோக் சபை" என்று அழைக்கப்படும். நடுவிடக் கீழ்ச்சபை மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் 500-க்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டது. 7,50,000 மக்களுக்கு குறைந்தது ஒரு பிரதிநிதியாவது இருத்தல் வேண்டும் என்றும் 5,00,000 மக்களுக்கு ஒரு பிரதிநிதிக்கு மேல் இருக்கக்கூடாது என்றும் எழுந்த கோட்பாட்டின் அடிப்படையில் இக்கீழ்ச்சபை உறுப்பினரின் மொத்த எண்ணிக்கை நிர்ணயிக்கப்படுகின்றது. 1950-ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் முதல் அட்டவணை, மக்கள் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை, 496-ஆக (A-பிரிவு நாடுகள் 374; B-பிரிவு

நாடுகள் 96 ; C-பிரிவு நாடுகள், 26) வரையறுத்தது. இது அன்றி D-பிரிவு மாநிலத்திற்கு ஓர் உறுப்பினரையும் இருவருக்கு மேற்படாத ஆங்கிலோ-இந்திய உறுப்பின ரையும் நியமிக்கச் சட்டம் வழிசெய்துள்ளது. சபை உறுப் பினர் எல்லோரும் 25 வயதுக்குக் குறையாதும் இந்தியர் களாகவும் இருக்கவேண்டும். சபையின் தலைவரையும் துணைத்தலைவரையும் உறுப்பினரே தேர்ந்தெடுப்பர். அவர் களின் சம்பளத்தைப் பாராளுமன்றமே வரையறுக்கும். பாராளுமன்றத்தைக் கூட்டுவிப்பவர் குடியரசுத் தலைவரே. இரு சபைகளின் உறுப்பினரைக்கொண்ட ஒருங்கிய கூட் டத்தில் ஒன்ருகவும் இரு சபைகளிலும் தனித் தனியாகவும் பேருரை நிகழ்த்தக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு. மேலும் சட்டமியற்றுவதுபற்றி இரு சபைகளுக் கும் சிறப்புநிலைச் செய்தி அனுப்பும் உரிமையும் அவருக்கு உண்டு. ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்குப்பின் நடை பெறும் முதல் பாராளுமன்றக் கூட்டத்திலும் (1951-ம் ஆண்டு அரசியலமைப்புத் திருத்தம்) ஒவ்வோர் ஆண்டின் தொடக்கத்தில் நடைபெறும் முதற் கூட்டத்திலும் குடியர சுத் தலைவர் இருசபைகளின் உறுப்பினர்களைக் கொண்ட ஒருங்கிய கூட்டத்தில் பேருரை நிகழ்த்தும் உரிமை அவ ருக்கு உண்டு (விதி 87). அமைச்சர் ஒவ்வொருவரும் இரு சபைகளின் நிகழ்ச்சிகளிலும் பங்கெடுத்துக் கொள்ள லாம். பாராளுமன்றத்தின் முடிவுகள் எல்லாம் அதன் கூட்டத்தில் ஆராய்ச்சிக்கு வந்து வாக்கெடுப்புகளில் (தலைவர் நீங்கலாக) பங்குகொள்ளும் உறுப்பினர்களில் பெரும்பான்மையோரால் செய்யப்படுபவையே ஆம். வாக்குகள் சமமாக இருந்தால் தலைவர் தமது வாக்கைத் தம் விருப்பப்படி தருவார்; அதனுல் சபை ஒரு முடிவைச் செய்ய முடியும். இரு சபைகளும் தங்கள் தங்கள் கூட் டத்தை நடத்தக் குறைந்தது பத்தில் ஒருபங்கு உறுப்பினர் களாவது வந்திருத்தல் வேண்டும். பாராளுமன்றம் இதனை மாற்றலாம். எவரும் ஒரே சமயத்தில் இருசபைகளிலும் உறுப்பினராக இருக்க முடியாது; அதே போன்று எவரும் ஒரே சமயத்தில் பாராளுமன்ற உறுப்பினராகவும் நாட்டுச்

சட்டசபை உறுப்பினராகவும் இருக்க இயலாது. பாராளு மன்ற உறுப்பினர் ஒருவர் அனுமதி இன்றி 60 நாட்கள் தொடர்ந்து அதன் கூட்டத்திற்கு வராவிடில் அவரை உறுப்பினர் பதவியினின்று நீக்கச் சபைக்கு அதிகாரம் உண்டு. பாராளுமன்ற உறுப்பினராக இருக்கத் தகுதி அற்ருேர் பின்வருவோராவர்: அரசாங்கத்தின்கீழ் ஊதியம் கிடைக்கக்கூடிய வேலேயில் இருப்பவர்; பைத்தியம் பிடித்தோர்; கடனேத் தீர்க்கமுடியாதவர் ஏழை தீர்ப்புப் பெற்றவர்; வெளிநாட்டுக்குடிமை உரிமை பெற்றிருப்போர் இன்னபிறர் (விதி 102). பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் பேச்சுரிமையுடன் பிற பேறுகளேயும் பெற்றுள்ளனர் (விதி 105); அவர்களுடைய சம்பளமும் படியும் பாராளுமன்றமே முடிவு செய்கின்றது. பாராளுமன்றம் தலேமை நீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகளின் நீதி நிர்வாகம் பற்றி விவாதிக்காது. ஆனல் அவர்களேப் பதவியினின்றும் நீக்குவதற்காகக் கொண்டுவரப்படும் தீர்மானத்தை விவாதிக்கலாம். பாராளுமன்றத்தின் நடவடிக்கைகள் சட்டப் படியுள்ளனவா என்று எந்த நீதிமன்றமும் கேட்பதற்கு உரிமையில்லே,

சட்டமியற்றும் நடைமுறை: அரசியலமைப்பின் 110-வது விதிப்படி நிதி மசோதாக்கள் முதலில் மக்கள் சபையில்தான் கொண்டுவரப்படவேண்டும். அங்கு அவை நிறைவேறியபின் மேல்சபைக்கு அனுப்பவேண்டும். மேல்சபை அவற்றை 14 நாட்கள்வரை விவாதிக்கலாம். ஆனல் அதன் பரிவுரைகளோ, திருத்தங்களோ, கீழ்ச் சபையைக் கட்டுப்படுத்தா. குடியரசுத் தலேவரின் ஒப்பம் பெறுவதற்காகத் தான் நிறைவேற்றிய நிதி மசோதாவைக் கீழ்ச்சபை அவருக்கு அனுப்பிவைக்கும். பிற மசோதாக்களே இருசபைகளில் எதிலும் கொண்டு வரலாம்; இரு சபைகளும் நிறைவேற்றினல் மசோதாவைக் குடியரசுத் தலேவருக்கு அனுப்பவேண்டும். அவர், அதை மீண்டும் சட்டசபை ஆராயவேண்டுமென்று கருதினல் திருப்பி அனுப்பலாம். ஆனல் அப்படி குடியரசுத் தலேவரிடமிருந்து திரும்பிவந்த மசோதாவை இரு சபைகளும் மீண்டும்

நிறைவேற்றினுல் குடியரசுத் தலைவர் அதற்குத் தமது ஒப்பத்தைக் கட்டாயம் அளித்தே தீரவேண்டும் (விதி III). "நமது குடியரசுத் தலைவரின் நிராகரிப்பு முறை முழு நிராகரிப்பு, தற்காலிக நிராகரிப்பு, நடைமுறைக்கு வருவதைத் தாமதம் செய்யும் நிராகரிப்பு என்ற மூன்று முறைகளும் சேர்ந்த ஒரு முறையாகும்*. ஒரு மசோதாவை நிறைவேற்றுவதில் இரு சபைகளும் மாறுபாடு கொள்ளின் இரு சபைகளின் உறுப்பினரைக் கொண்ட ஒருங்கிய கூட்டம் ஒன்று கூட்டி, அதில் பெரும்பான்மையோர் ஒரு முடிவு செய்யக் குடியரசுத் தலைவர் ஏற்பாடு செய்யலாம். இவ்வழி மேற்சபையின் உறுப்பினரைவிட அதிகமான உறுப்பினரைக்கொண்ட மக்கள் சபைக்குத்தான் துணைசெய்யும்.

தலைமை நீதிமன்றம் : இந்தியாவின் தலைமை நீதிமன்றம் (The Supreme Court) இந்தியத் தலைமைநீதிபதி உள்பட எட்டு நீதிபதிகளைக் கொண்டிருக்கவேண்டும். இவர்களைக் குடியரசுத் தலைவரே நியமிப்பார். ஒரு நீதிபதியை நியமிக்கும்முன் குடியரசுத் தலைவர் தலைமை நீதிமன்ற நீதிபதிகளையும் உயர்நீதிமன்ற நீதிபதிகளையும் வேண்டியதற்கு ஏற்பக் கலந்தாலோசிப்பார். இந்தியத் தலைமைநீதிபதி நீங்கிய பிற நீதிபதிகளை நியமனம் செய்யும்முன் குடியரசுத் தலைவர் இந்தியத் தலைமைநீதிபதியைக் கட்டாயம் கலந்தாலோசிப்பார். (விதி 124) எல்லா நீதிபதிகளும் 65 வயது வரை பதவியில் இருக்கலாம். இந்தியத் தலைமைநீதிபதியின் மாதச் சம்பளம் ரூ. 5000; பிற நீதிபதிகளின் மாதச் சம்பளம் ரூ. 4000 (2வது அட்டவணை). பாராளுமன்றம் ஒரு நீதிபதியைப் பதவியினின்று நீக்க அதிகாரம் பெற்றுள்ளது. அப்படி அது செய்ய விரும்பும்போது இரு சபைகளிலும் ஒரு தீர்மானம் கொண்டுவரப்படவேண்டும். தீர்மானம் கொண்டுவருவதை இரு சபைகளிலும் பெரும்பான்மையோர் ஆதரிக்கவேண்டும்; அத்தீர்மானம், இரு சபைகளிலும்

---

* 7, பக். 371.

வாக்கெடுப்பில் கலந்துகொள்ளும் உறுப்பினரின் மூன்றில் இருபங்கினர் ஆதரவுடன் நிறைவேறவேண்டும். பிறகு தான் அந்த நீதிபதி பதவியிலிருந்து நீக்கப்படுவார். இந்திய அரசாங்கத்திற்கும் மாநில நாட்டு அரசாங்கங்க ளுக்கும் ஏற்படும் வழக்குகளையும், மாநில நாடுகளின் அரசாங்கங்களுக்கிடையே ஏற்படும் வழக்குகளையும் தொடக்கத்திலேயே தலைமைநீதிமன்றம் விசாரணை செய்ய லாம். உயர்நீதிமன்றங்களிலிருந்து வரும் சிவில் கிரிமினல், அரசியலமைப்பு முதலிய பற்றிய அப்பீல் வழக்குகளையும் தலைமை நீதிமன்றம் விசாரித்து முடிவு செய்யும்; மற்றும் குடியரசுத் தலைவர், எதனைப்பற்றியும் தலைமை நீதிமன்றத் தின் சட்ட ஆலோசனையை வேண்டும்போது பெறலாம். 141-வது விதிப்படி தலைமை நீதிமன்றத்தின் சட்ட முடிவு கள் இந்தியாவிலுள்ள எல்லா நீதிமன்றங்களையும் கட்டுப் படுத்தும். அமெரிக்க நாட்டின் தலைமை நீதிமன்றத்தை விட நமது நாட்டுத் தலைமை நீதிமன்றத்திற்கு மிக்க மேலாய்வு (அப்பீல்) அதிகாரங்கள் உண்டு. மேலும் அதுவே அரசியலமைப்பிற்கு ஒத்ததும் முடிவானதுமான விளக்கம் தரக்கூடியது; அரசியலமைப்பைப் பாதுகாப்ப தும், குறிப்பாக மக்களின் அடிப்படை உரிமைகளைக் காப் பதும், அரசியலமைப்பிற்கு முரணான சட்டங்களைத் தள்ளி விடுதலும் அதன் கடமைகளாம்; இது நிர்வாகத்துறை யின்கீழ் அன்றித் தனித்தியங்கும் உரிமையுள்ளது. இந்த உரிமை குடியாட்சி முறைக்கும் கூட்டாட்சி முறைக்கும் இன்றியமையாதது ஒன்றாகும்; உலகத்திலுள்ள பிற தலைமை நீதிமன்றங்களைவிட இது மிக்க அதிகாரங்களைப் பெற்றுள்ளது எனலாம்.

மாநில நாடுகள் : கூட்டு இந்தியா 27 மாநில நாடு களைக்கொண்டது. அரசியலமைப்பின் முதல் அட்டவணை இத்தகைய மூன்று வகை நாடுகளைக் குறிப்பிடுகின்றது. A பிரிவு நாடுகள் கவர்னர் ஆளுகைக்குட்பட்ட நாடுகளாகும். இவை பழைய ஒன்பது பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களாக இருந்தவை. அஸ்ஸாம், பீகார், பம்பாய், மத்தியப் பிரதேசம் (மத்திய மாகாணம்), சென்னை, ஒரிசா, பஞ்சாபு

(கிழக்கு), உத்தரப் பிரதேசம் (ஐக்கிய மாகாணம்), மேற்கு வங்காளம் என்று கூட்டிந்தியாவில் பெயர் பெற்றன. B பிரிவு நாடுகள் இராசப்பிரமுகர் நாடுகள். இவை தலையாய எட்டுச் சிற்றரசர் நாடுகள். இவை ஐதராபாத், ஜம்மு-காஷ்மீர், மத்திய பாரதம் (மத்திய இந்தியா), மைசூர், பெப்சு (Pepsu) (பாட்டியாலா கிழக்கு பஞ்சாபு இராச்சியங்களின் யூனியன்), இராஜஸ்தானம், சௌராஷ்டிரம், திருவாங்கூர் -கொச்சி என்பனவாம். பின்னர் இந்தப் பிரிவில் ஒன்பதாம் நாடான விந்தியப் பிரதேசம் B பிரிவிலிருந்து C பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளது. C பிரிவு நாடுகள் தலைமை ஆணையாளர் (Chief Commissioner) நாடுகள். இவை முன் லெப்டினண்ட்-கவர்னர் ஆளுகையிலோ நடுவிட அரசாங்கத்தின் நிர்வாகத்தின்கீழோ இருந்தவையும் தலைமை ஆணையாளர் ஆளுகைக்குட்பட்டிருந்த ஆஜ்மீர், குடகு, தில்லி முதலிய பழைய மாகாணங்களும், 1950-ல் நடுவிட அரசாங்க நிர்வாகத்தின்கீழ் வந்த சிற்றரசு நாடுகளான போபால், விலாஸ்பூர் (சிம்லா அருகே உள்ளது) ஹிமாசலப் பிரதேசம், கட்சு, மணிபுரி, திரிபுரா, விந்தியப் பிரதேசம் (இது முன்கூறியபடி B பிரிவில் சேர்ந்தது). என்பனவும் ஆம். C பிரிவில் நான்காவது நாடாக விளங்கியது கூச்-பீகார். இது மேற்கு வங்காளத்துடன் ஒன்றாகி விட்டது. அந்தமான், நிக்கோபார் தீவுகள் D பிரிவு நாடுகளாகும். A பிரிவு நாடுகளும் பெரும்பாலான B பிரிவு நாடுகளும் ஒரே வகையான பொது ஆட்சிமுறையையே பெற்றுள்ளன.

A பிரிவு 'நாடுகள் : இவற்றின் கவர்னர்கள் ஒவ்வொருவரையும் குடியரசுத் தலைவர் ஐந்தாண்டுகளுக்கொருமுறை நியமிப்பார். கவர்னர் குறைந்தது 35 வயதுடையவராகவும் இந்தியராகவும் இருத்தல் வேண்டும். அவரது மாதச்சம்பளம் ரூ. 5500 (இரண்டாவது அட்டவணை). அவருடைய அதிகாரங்கள் எல்லாம் குடியரசுத் தலைவர் அதிகாரங்களைப் போன்றவையே. ஆனால் இராணுவத்தையும் அவசரக்காலத்தையும் வெளிநாட்டு

உறவினையும் பற்றிய அதிகாரங்கள் கவர்னருக்கில்லை.* குடியரசுத் தலைவரைப்போன்று இவரும் பெயரளவிற்கே நிர்வாகத் தலைவர். மாநிலநாட்டு அமைச்சரவை இவருக்கு 'அறிவுரை கூறி உதவி புரியவேண்டும்,' ஆனால் அரசியலமைப்புப்படி ஆற்றவேண்டிய சில கடமைகளைக் கவர்னர் தமக்குத் தக்கது என்று தோன்றுகிறபடி செய்யலாம் (விதி 163). இவ்விதிவிலக்கு அஸ்ஸாம் கவர்னருக்கு மட்டுந்தான் உண்டு (அட்டவணை-6). முதலமைச்சரைக் கவர்னர் நியமிப்பார், பின்னர் முதலமைச்சர் கருத்துப்படி கவர்னர் பிற அமைச்சர்களையும் முதல் வழக்கறிஞர்களையும் (அட்வகேட்-ஜெனரல்) மாவட்ட நீதிபதிகள் முதலியவர்களையும் நியமிப்பார். எல்லா அமைச்சர்களும் அவ்வந்நாட்டுக் கீழ்ச்சட்ட சபைக்குப் பொதுவாகப் பொறுப்புள்ளவர்கள் (விதி. 164). அவர்கள் நிலையையும் அதிகாரங்களையும் பொறுத்தவரையில் நடுவிட அமைச்சர்களைப் போன்றவர்களே. நடுவிட அரசாங்கத்திலும் மாநில நாடுகளின் அரசாங்கத்திலும் பிரிட்டிஷ் அமைச்சவை முறையே பின்பற்றப்படுகின்றது.

மாநிலநாட்டு மேல்சட்டசபை (The Legislative Council) : பீகார், பம்பாய், சென்னை, பஞ்சாபு, உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம் முதலிய நாடுகளில் மேல் கீழ் என்ற இருகூற்றுச் சட்டசபையும், பிற நாடுகளில் கீழ்ச்சபை மட்டுமே அமைந்த ஒரு கூற்றுச்சட்ட சபையும் உள்ளன. மாநிலநாட்டில் மேல்சபையை ஏற்படுத்துவதற்குப் பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு ; ஆனால் அவ்வதிகாரம் அந்நாட்டின் கீழ்ச்சபையின் விருப்பப்படியே இயங்கவேண்டும். கீழ்ச்சபையின் கூட்டமொன்றில் மூன்றில் இருபங்கு உறுப்பினர் மேல் சட்டசபையை நீக்குவதற்கு ஓர் தீர்மானம் நிறைவேற்றினால் பாராளுமன்றம் அதற்கேற்ப நடக்கும். அதேபோல் கீழ்ச்சபையின் மொத்த உறுப்பினரில் பெரும்பான்மையோர் மேல்சபையை ஏற்படுத்த முடிவு செய்தால் அதன்

---

* 7 , பக். 470.

படி பாராளுமன்றம் அங்கே மேல்சபையை ஏற்படுத்தும். மேல்சபையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை நாற்பதுக்குக் குறையவும் கூடாது; கீழ்ச்சபையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் நான்கில் ஒருபங்கிற்கு மேல் போகவும் கூடாது. 1950-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதிச் சட்டப்படி ஒவ்வொரு நாட்டு மேல்சட்டசபை உறுப்பினரின் எண்ணிக்கை பின்வருமாறு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. பீகார், 22; பம்பாய், சென்னை, உ. பி. முதலியவைகள் ஒவ்வொன்றிற்கும் 72; பஞ்சாபு, 40; மேற்கு வங்காளம், 51. ஒவ்வொரு மேல் சபையும் பின்வருமாறு அமையவேண்டும்: மூன்றில் ஒரு பங்கு உறுப்பினரை மாவட்ட ஆட்சிக் கழகங்களும் நகராண்மைக் கழகங்களும் தேர்ந்தெடுக்க வேண்டும்; பன்னிரண்டில் ஒரு பங்கு உறுப்பினரைக் கல்விப் பட்டம் பெற்று மூன்றுண்டு ஆனவர்கள் தேர்ந்தெடுப்பர்: அதே எண்ணிக்கை உடைய உறுப்பினரை உயர்நிலைப் பள்ளி ஆசிரியரின் நிலைக்குக் கீழ்ப்படாது மூன்றுண்டுக்குமேல்ஆசிரியர்களாக இருந்து வருபவர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்; நாட்டின் கீழ்ச்சபை உறுப்பினரே மேல்சபை உறுப்பினரின் மூன்றில் ஒருபங்கினரைத் தேர்ந்தெடுப்பர். அப்படி தேர்ந்தெடுக்கப்படுவோர் கீழ்ச்சபை உறுப்பினராக இருக்கக்கூடாது; பிற உறுப்பினர்களை நாட்டுக் கவர்னரே இலக்கியம், விஞ்ஞானம், கலை, கூட்டுறவு இயக்கம், சமூகசேவை முதலிய துறைகளில் சிறப்புற்றிருப்போரிலிருந்து நியமிப்பார். மேல்சபையில் தேர்தலில் வீதப் பிரதிநிதிமுறை பின்பற்றப்பட வேண்டும். மேல்சபை நிரந்தரமானது; இரண்டாண்டுகளுக் கொருமுறை அதன் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர் பதவியினின்று விலகவேண்டும். ஒவ்வொர் உறுப்பினரும் 30 வயதிற்குக் குறையாத இந்தியராகவும் இருத்தல் வேண்டும். மேல்சபை உறுப்பினர்களே தம் சபைத் தலைவரையும் துணைத்தலைவரையும் தேர்ந்தெடுப்பர்.

மாநில நாட்டுக் கீழ்ச் சட்டசபை (The Legislative Assembly) ஒரு நாட்டுக் கீழ்ச்சட்டசபையின் மொத்த

உறுப்பினர் 500-க்கு மேற்படாமாலும் 60-க்கு குறையாமலும் இருக்கவேண்டும். நடுவிட மக்கள் சபை உறுப்பினரைப் போன்று இக்கீழ்ச்சபை உறுப்பினரும் ஐந்தாண்டுகளுக் கொருமுறை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஆனல் நாட்டுக் கீழ்ச்சபையை அதன் காலம் முடியும் முன்பேகூட கலேத்துவிடலாம். 1950-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதிச் சட்டம் நாடுகளின் கீழ்ச்சபை உறுப்பினர் எண்ணிக்கையைப் பின்வருமாறு நிர்ணயித்துள்ளது : அஸ்ஸாம், 108 ; பீகார், 330 ; பம்பாய், 315 மத்தியப் பிரதேசம், 232 ; சென்னே, 375 ; ஒரிசா, 140 ; பஞ்சாபு, 126 ; உ. பி. 430 ; மேற்கு வங்காளம், 238. அவ்வக்கீழ்ச்சபை உறுப்பினரே அவ்வச் சபைத்தலேவரையும் துணேத்தலேவரையும் தேர்ந்தெடுப்பர். சபையைக் கூட்டுவிக்கவும், அங்குப் பேருரை ஆற்றவும், அதற்குச்செய்தி அனுப்பவும் கவர்னருக்கு அதிகாரம் உண்டு. 85, 87 விதிகளேப் போன்று 174, 176 விதிகளும் 1951-ம் ஆண்டு ஜூன் மாதம் திருத்தப்பட்டன. கீழ்ச்சபையின் சட்டமியற்றும் நடைமுறை பாராளுமன்றத்தின் முறையை ஒத்ததே ஆம். ஆனல், கீழ்ச் சட்டசபைக்கும் மேல் சட்டசபைக்கும் பிணக்கு ஏற்படின் இருசபை உறுப்பினர்களேயும் ஒருங்கே கூட்டி ஒரு முடிவு செய்வதற்கு அரசியலமைப்பில் இடமில்லே. கீழ்ச்சபையில் இருமுறை நிறைவேற்றப்பட்ட ஒரு மசோதாவை மேல்சபை இருமுறை நிராகரித்தாலும், அம்மசோதா இரு சபைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகவே கருதப்படவேண்டும். சட்டசபை நிறைவேற்றிய மசோதாக்களுக்கு ஒப்பம் அளிப்பதில் கவர்னர் குடியரசுத்தலேவரைப் போன்று நடந்து கொள்வார் ; ஆனல் உயர்நீதி மன்றத்தின் நிலேயைக் கட்டுப்படுத்தும் எம்மசோதாவிற்கும் கவர்னர் குடியரசுத் தலேவரைக் கலந்து எண்ணிய பின்பே ஒப்பம் அளிப்பார் (விதி 200).

உயர்நீதிமன்றம் (The High Court) : உயர் நீதி மன்றம் ஒரு தலேமை நீதிபதியையும் பிற நீதிபதிகளேயும் கொண்டிருக்க வேண்டும். தலேமை நீதிபதியை நியமிப்

பதில் குடியரசுத்தலைவர் இந்தியாவின் தலைமை நீதிபதியையும் அந்நாட்டுக் கவர்னரையும் கலந்து எண்ணுவார். பிற உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்குமுன் அதன் தலைமை நீதிபதியைக் கலந்து எண்ணுவார் (விதி 217). ஒவ்வொரு நீதிபதியும் 60 வயதை அடையும் வரை பதவியிலிருக்கலாம். உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியின் மாதச் சம்பளம் ரூ. 4000; மற்ற நீதிபதிகளின் மாதச் சம்பளம் ரூ. 3500 (இரண்டாவது அட்டவணை). உயர்நீதிமன்றத்தின் அதிகாரங்கள் புதிய அரசியலமைப்பு நடைமுறைக்கு வரும் முன்பு இருந்ததுபோலவே உள்ளன. உயர்நீதிமன்றம் ஹேபியஸ் கார்ப்பஸ் (Habeas Corpus), சர்ஷியோரார் (Certiorari), மாண்டமஸ் (Mandamus) இன்ன பிற தடை ஆணைகளைப் பிறப்பிக்கலாம் (விதி 226). தனது அதிகார வரம்பிற்குட்பட்ட கீழ் நீதிமன்றங்களையும் நடுவர் மன்றங்களையும் உயர்நீதிமன்றங்களையும் மேற்பார்வை செய்யும் ஆதிகாரம் பெற்றுள்ளது. சுருங்கக் கூறுமிடத்து உயர் நீதிமன்றம் தனித்தியங்கித் தனிப்பட்டோர் உரிமைகளைக் காப்பாற்றக்கூடிய சிறந்த பாதுகாவலாகவே விளங்குகிறது.

B பிரிவு நாடுகள்: அரசியலமைப்பில் A பிரிவு நாடுகளைப் பற்றியுள்ள விதிகள் (152-லிருந்து 237-வரையுள்ள விதிகள்) B பிரிவு நாடுகளுக்கு எந்த அளவிற்குப் பொருந்தும் என்பதை 238-ம் விதி தெளிவுபடுத்துகின்றது. B பிரிவு நாடுகள் ஒவ்வொன்றும் ஒரு இராசப்பிரமுகர் தலைமையின்கீழ் இருந்துவரும். அவரைக் குடியரசுத் தலைவர் அங்கீகரிப்பார்; நியமிப்பதில்லை. அவருடைய சம்பளமும் படியும் குடியரசுத் தலைவரால் நிணயிக்கப்பட்டு நடுவிட அரசாங்கத்தின் நிதியிலிருந்து கொடுக்கப்படும். மத்திய பாரதம், இராஜஸ்தானம், சௌராஷ்டிரம் முதலிய நாடுகளில் உதவி இராசப்பிரமுகர்களும் உள்ளனர். மைசூரைத் தவிர, எல்லா B பிரிவு நாடுகளும் ஒரு கூற்றுச் சட்டசபையே பெற்றுள்ளன. 1950-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதிச் சட்டம் இச்சட்ட சபைகளின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையை நிர்ணயித்துள்ளது.

மைசூரின் மேல்சபை 40 உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும். பிற மாநில நாட்டுச் சட்டசபைகள் பின்வருமாறு உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். ஐதராபாத் 175; மத்திய பாரதம் 99; மைசூர் 99; பெப்சு (Pepsu) 60; இராஜஸ்தானம் 160; சௌராஷ்டிரம் 60; திருவாங்கூர்–கொச்சி 108; 238-வது விதி ஜம்மு–காஷ்மீர் நாட்டிற்குப் பொருந்தாது என்று 370-வது விதி கூறுகின்றது. B பிரிவு நாட்டு உயர் நீதிமன்ற நீதிபதிகளின் சம்பளத்தைக் குடியரசுத் தலைவர் இராசப்பிரமுகரைக் கலந்தெண்ணி நிர்ணயிப்பார். குடியரசுத்தலைவரே B பிரிவு நாட்டுச் சட்டசபைத் தலைவர்கள், துணைத்தலைவர்கள், உறுப்பினர்கள் முதலியோரின் சம்பளங்களையும் நிர்ணயிப்பார். திருவாங்கூர்-கொச்சி நாட்டில் 51 லட்ச ரூபாய் தேவஸ்தான நிதிக்குக் கொடுக்க வேண்டும். B பிரிவு நாடுகள் யாவும் முதல் பத்தாண்டுகள் வரை குடியரசுத் தலைவரின் பொதுக்கட்டுப்பாட்டின் கீழ் இருந்துவருமென 371-வது விதி கூறுகின்றது.

C பிரிவு நாடுகள் : C பிரிவு நாடுகளின் நிர்வாகம் குடியரசுத்தலைவரின் கீழ் இருந்துவரும். இங்கே அவர் தலைமை ஆணையாளரையோ லெப்டினண்ட்-கவர்னரையோ நியமிக்கலாம். இந்நாடுகளில் ஏற்படுத்தப்பட்டோ அல்லது தொடர்ந்தோ இருந்துவரும் சட்டசபைகள் பிற நாட்டுச் சபைகள் போல இருக்கவேண்டும் என்பதில்லை. 1951-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பாராளுமன்றம் C பிரிவு நாட்டு அரசாங்கங்களில் மக்களுக்கு மிக்க பங்கை அளித்தது. இருப்பினும் C பிரிவு நாடுகளின் நிர்வாகம் மற்ற பிரிவு நாடுகளின் நிர்வாகத்தினின்றும் வேறுபடுகின்றது. இதற்குக் காரணம் அவை குடியரசு முறைக்குப் பக்குவமடையாததேயாம். முதல் அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள D பிரிவு வட்டாரங்களின் (அந்தமான், நிகோபார் தீவுகள்) நிர்வாகத்தைத் தலைமை ஆணையாளரின் வழியே குடியரசுத்தலைவர் நடத்துவதற்கு 243-வது விதி வழிசெய்துள்ளது. இவற்றைப்பற்றிப் பாராளுமன்றம் இயற்றும்

சட்டங்களை ஓரளவு மாற்றுவதற்குக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

அதிகாரப்பங்கீடு: இந்திய அரசியலமைப்பு ஓரள விற்கே கூட்டாட்சியாக விளங்குகிறது. இது அரசிய லமைப்பின் 11-வது பகுதி விதிகள் 245–63, 7-வது அட்டவணை முதலியவற்றால் நன்கு விளங்கும். மேற் குறித்த 7-வது அட்டவணையில் மூன்று அதிகாரப்பட்டியல் கள் உள்ளன. கூட்டு அரசாங்க அதிகாரப்பட்டியல் கீழ்க்கண்ட 97 இனங்களைக் குறிப்பிடுகின்றது: இந்தியா வின் பாதுகாப்பு, தடுப்புக்காவல், அயல்நாட்டு விவகாரங் கள், ஐக்கியநாடுகள் சபை, போர் - அமைதி, குடிமை, இருப்புப்பாதைகள், விமானப் போக்குவரத்து, தபால் தந்தித் துறைகள், நாணயம்-நாணயமாற்று, வாணிகம், வெளிநாட்டு உள்நாட்டு வாணிகம், பாங்குகள், இன்ஷூ ரன்சு, காசி, அலிகார், தில்லி பல்கலைக்கழகங்கள், பாராளு மன்றத்தில் தேசியச் சிறப்பு வாய்ந்தவை என்று அறிவிக்கப்பட்ட நிறுவனங்கள், (விசுவபாரதி 1951-ல் சேர்க்கப்பட்டது), தேசியச் சிறப்பு வாய்ந்த பழம்பெருஞ் சின்னங்கள், பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் கல்வியின் தரத்தை நிர்ணயித்தல் - ஒருமைப்படுத்தல், இந்தியாவின் நிலக்கணக்கெடுப்பு (சர்வேக்கள்), மக்கள் தொகை கணக்கெடுப்பு, நடுவிடப் பொதுப் பணித்துறை கள், தேர்தல்கள், தலைமை நீதி மன்றம், உயர்நீதிமன்றங் கள், வருமானவரி போன்றனவும் மற்ற இரு பட்டியல் களில் குறிக்கப்படாத வேறு பிறவும். இரண்டாவதாக உள்ள மாநில நாட்டு அதிகாரப் பட்டியல் 66 இனங்கள் அடங்கியது: பொது ஒழுங்குமுறை, போலீஸ், நீதித் துறை நிர்வாகம், சிறைச்சாலைகள், தலத் தாபனங்கள், பொதுச்சுகாதாரம், கட்குடி வகைகள், பல்கலைக்கழகக் கல்வி உட்பட்ட கல்வித்துறை, உழவு, நிலம், காடுகள், மீன் துறை, நிலவரி, உழவர் வருமானவரி இன்ன பிற. கூட்டு அரசாங்கத்திற்கும் மாநில நாட்டு அரசாங்கங் களுக்கும் பொதுவாக உள்ள அதிகாரப் பட்டியலே மூன்றாவது பட்டியலாகும். இதில் 47 இனங்கள்

அடங்கியுள்ளன: கிரிமினல் சட்டம் அதன் சட்ட நடை முறை, திருமணம் திருமண விலக்கு, ஒப்பந்தங்கள், சிவில் சட்ட நடைமுறை, தொழிற்சங்கங்கள், தொழி லாளர் நலம், புள்ளியியல் விவரங்கள், விலைவாசிக் கட்டுப்பாடு இன்ன பிற. கூட்டாட்சியின் அதிகாரப்பட்டிய லில் உள்ள 97-வது இனமும் 248-வது விதியும் மூன்று பட்டியல்களிலும் குறிக்கப்படாத அதிகாரங்களைப் பாராளு மன்றத்திற்கு அளிக்கின்றன. மூன்ருவது பட்டியலில் உள்ள இனங்களைப் பற்றிப் பாராளுமன்றம் இயற்றும் சட்டங்களுக்கும் மாநில நாட்டுச் சட்டசபைகள் இயற்றும் சட்டங்களுக்கும் முரண்பாடு இருக்குமாளுல் பாராளு மன்றச் சட்டமே செல்லுபடியாகிச் செயற்படும் (விதி 254). மாநில நாட்டுப் பட்டியலில் காணப்படும் கீழ்க்கண்ட வற்றைப்பற்றிப் பாராளுமன்றம் சட்டமியற்றலாம்: தேசிய நலனுக்கு இன்றியமையாததோ உகந்ததோ என்று சபை உறுப்பினரில் கூட்டத்திற்கு வந்து வாக்கெடுப் பில் கலந்துகொள்ளும் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறைவில்லாதவர்கள் கருதும்பொழுது (விதி 249); அவ சரச் சட்டம் (விதிகள் 352, 353) செயலிலிருக்கும் பொழுது (விதி 250); இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட நாடுகள் அத்தகைய சட்டம் இயற்றுவதற்கு உடன் படும்பொழுது (விதி 252); சர்வதேச ஒப்பந்தங்களைச் செயற்படுத்தும்பொழுது (விதி 253). 249, 250-ஆம் விதி களின்படி பாராளுமன்றம் இயங்கும்பொழுது கூட்டரசுச் சட்டத்திற்கும் மாநில நாட்டுச் சட்டத்திற்கும் முரண்பாடு ஏற்படுமாளுல் கூட்டரசுச் சட்டமே நிலைபெறும் என்று 251-வது விதி கூறுகின்றது. கூட்டரசுச் சட்டங்களை மாநில நாடுகளில் நடத்தத் தனியாக ஒரு நிர்வாக இயந் திரமில்லை. எனவே கூட்டரசு-நாட்டரசு நிர்வாக உறவு கள் 256-முதல் 263-வரை உள்ள விதிகளில் விளக்கப்பட் டுள்ளன. அதே போன்று நாட்டு நீதி மன்றங்கள், கூட்டரசு-நாட்டரசுச் சட்டங்களை வழக்கில் கொணரும்.

பொதுப் பணித்துறைக் குழு: அமைச்சவை ஆட்சி முறை என்பது சிறப்பறிஞர்களின் ஆட்சிமுறையன்று,

பொது மனிதர்களின் ஆட்சிமுறையே ஆம்; அவர்கள் கொள்கைகளை ஆக்குபவர்களேயன்றிப் பயிற்சிபெற்ற நிர்வாகி களல்லர். கொழுத்த எருதை ஓட்டப் பருத்த மனிதன் வேண்டுமென்பதில்லை; கல்வி மந்திரி கல்வித்துறை அறிஞனாக இருக்கவேண்டுமென்பதில்லை. ஆதலினால் திறமையும் நேர்மையும் உள்ள சிவில் பணித்துறையின் உதவி அமைச்சவை ஆட்சிமுறைக்கு இன்றியமையாதது. கூட்டரசுப் பொதுப்பணித்துறைக் குழுவைக் குடியரசுத் தலைவர் நியமிப்பார். அவ்வந் நாட்டுப் பொதுப்பணித் துறைக் குழுவை அவ்வக் கவர்னரே நியமிப்பார்; இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட நாடுகளுக்கும் கூட்டாகப் பொதுப்பணித்துறைக் குழுவைக் குடியரசுத் தலைவர் நியமிக்கலாம். இவற்றிற்கு எல்லாம் 315வது விதி இடமளிக்கிறது. கூட்டரசுக்குழுவின் உறுப்பினர் ஆறு ஆண்டுகளோ அதற்குள் 65-வயதானால் அவ்வயது அடையும் வரையோ பதவியில் இருக்கலாம்; நாட்டுக்குழுவிலோ அல்லது கூட்டு நாட்டுக் குழுவிலோ உறுப்பினரானோர் ஆறு ஆண்டுகளோ அதற்குள் 60 வயதானால் அவ்வயது அடையும்வரையிலோ பதவியில் இருக்கலாம். அரசாங்க நியமனங்களுக்குத் தேர்வு நடத்துதலும், இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட நாடுகள் வேண்டிக்கொள்ளும் பொழுது சிறப்புநிலைப் பணிகளுக்குத் தக்க ஆட்களை ஆராய்ந்து முடிவு செய்வதில் துணைசெய்தலும் குழுவினுடைய அலுவல்களாகும். பின்வரும் இனங்களில் அதனை அரசாங்கம் கலந்தெண்ணுதல் வேண்டும்: சிவில் பணித்துறை அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கும் முறை; பதவி நியமனங்கள், பதவி உயர்வுகள், பதவி மாற்றங்கள் பற்றிய கொள்கைகள்; பதவி ஒழுங்கு முறைகள் இன்ன பிற. பொதுவாக அதனுடைய பரிவுகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகின்றது. கூட்டரசுப் பொதுப் பணித்துறைக் குழு தன் ஆண்டறிக்கையைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பவேண்டும். அதனைப் பாராளு மன்றத்தின் முன் வைத்தல் வேண்டும். குழுவின் முடிவுகள் எந்த அளவிற்கு ஏற்றுக் கொள்ளப்

படவில்லை என்பதையும், ஏற்றுக் கொள்ளப்படாததற்கு உள்ள காரணங்களையும் அரசாங்கம் விளக்க வேண்டும். இது போலவே நாட்டுக் குழுவோ கூட்டுக் குழுவோ தம்தம் ஆண்டு அறிக்கைகளை அனுப்பியதும் அவ்வச் சட்டசபை முன் மேற்கண்ட விளக்கங்களோடு அவை வைக்கப்பெறும்.

தேர்தல்கள் : கூட்டரசு நாட்டரசு துரைத்தனங்களின் நிர்வாகத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்படாத தேர்தல் ஆணைக் குழுவினைப்பற்றிக் கூறுவதே 324-வது விதி. வேறு எந்த நாட்டு அரசியலமைப்பிலும் இது இல்லை. ஆதலின் நம் அரசியலமைப்பின் சிறப்பியல்பு என இதனைக் கூறலாம்: பாராளுமன்றத்திற்கும், நாட்டுச் சட்டசபைகளுக்கும், குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர் பதவிகளுக்கும் தேர்தல்கள் நடத்தும் பொறுப்பு இதைச் சார்ந்தது. வாக்காளர் பட்டியல்களை ஆயத்தம் செய்வதும், தேர்தல்களை நடத்துவதும், கூட்டரசு நாட்டரசு சட்டசபைகளின் தேர்தல்களில் ஏற்படும் வழக்குகளை விசாரித்து முடிவு செய்ய நடுவர் நீதிமன்றங்களை ஏற்படுத்தலும், தேர்தல் ஆணைக் குழுவின் பணிகளாகும். குடியரசுத் தலைவர் அல்லது குடியரசுத் துணைத் தலைவர்களின் தேர்தல்களில் எழும் வழக்கைத் தலைமை நீதிமன்றமே தீர்க்கும். தேர்தல் ஆணைக் குழுவில் ஒரு தலைமைத் தேர்தல் ஆணையாளரும் வேறு உறுப்பினர்களும் இருப்பர். இவர்களைக் குடியரசுத் தலைவரே நியமிப்பார். வட்டாரத் தேர்தல் ஆணையாளர்களைக் குடியரசுத் தலைவர் தலைமைத் தேர்தல் ஆணையாளரைக் கலந்து கொண்டு நியமிக்கலாம். சட்டசபைத் தேர்தல்களை நடத்த 325-வது விதிப்படி ஒரே ஒரு பொதுவாக்காளர்கள் பட்டியலே இருக்கவேண்டும். வகுப்புவாரி வாக்காளர் தொகுதிமுறை ஒழிக்கப்பட்டுவிட்டது. நடுவிடக் கீழ்ச் சட்டசபைக்கும் நாடுகளின் கீழ்ச்சட்டசபைகளுக்கும் வயது வந்தோர் வாக்குரிமை அடிப்படையிலே தேர்தல்கள் நடத்த வேண்டுமென 326-வது விதி கூறுகின்றது. 21-வயது அடைந்த ஆடவரும் பெண்டிரும் வயது வந்

தோராவர் ; சொத்து, கல்வி முதலிய வேறு தகுதிகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. 329-வது விதி நீதிமன்றங்கள் தேர்தல்களில் குறுக்கிடுவதைத் தடை செய்கின்றது. 330–4-ஆம் விதிகளின் கீழ் மக்கள் சபையிலும் நாடுகளின் கீழ்ச்சட்டசபைகளிலும் தாழ்த்தப்பட்ட இனத்தினருக்கும் குடிகளுக்கும் அவர்களின் எண்ணிக்கைக் கேற்பச் சில இடங்களை ஒதுக்க அரசியலமைப்பில் வழி உள்ளது ; மேலும் ஆங்கிலோ இந்திய வகுப்பினருக்கு நியமனத்தின் வழியே பிரதிநிதித்துவம் வழங்கவும் வழியுள்ளது; ஆனால் இவ்வேற்பாடுகள் அரசியலமைப்பு நடை முறைக்கு வந்த முதல் பத்தாண்டுகள் வரைதான் வேண்டப்படும். அதற்கு மேல் செல்லா.

அரசியலமைப்புத் திருத்தம் : 368-வது விதிப்படி நமது அரசியலமைப்பைத் திருத்தப் பாராளுமன்றத்தின் சபை ஒவ்வொன்றிலும் மொத்த உறுப்பினரில் பெருவாரியான உறுப்பினர் கூட்டத்திற்கு வந்திருத்தல் வேண்டும். மேலும் திருத்தத்தைப் பற்றிய வாக்கெடுப்பில் கலந்து கொள்ளும் உறுப்பினரில் பெருவாரியோர் அதனை ஆதரிக்க வேண்டும். இவ்விதம் இரு சபைகளும் திருத்தத்தை நிறைவேற்றியபின் அது குடியரசுத் தலைவரின் ஒப்பத்தைப் பெறும். அரசியலமைப்பைத் திருத்தக்கூடிய எம்மசோதாவிற்கும் குடியரசுத் தலைவர் தமது ஒப்பத்தை அளிக்காமலிருக்க முடியாது. ஆனால் பின்வரும் இனங்களைப் பற்றிய திருத்தங்களை ஐம்பது சத வீதத்தில் A, B, பிரிவு நாட்டுச் சட்டசபைகள் ஆமோதிக்க வேண்டும் : குடியரசுத் தலைவரின் தேர்தல் முறை ; கூட்டரசு நாட்டரசு அரசாங்கங்களின் நிர்வாக அதிகாரம் ; தலைமை நீதிமன்றம் உயர்நீதிமன்றங்கள் ; நாட்டரசு கூட்டரசு அரசாங்கங்களிற்கு இடையே அதிகாரப் பிரிவினை ; பாராளுமன்றத்தில் நாடுகளின் பிரதிநிதித்துவம் (368-வது விதி). எனவே மேற்கூறியவை நீங்கலாக அரசியலமைப்பின் மற்ற பகுதிகளைப் பாராளுமன்றம் மேற்கண்டபடி சிறப்புநிலைப் பெருவாரி வாக்குகள் மூலம் திருத்தலாம். புதிய நாடுகளை ஏற்படுத்துவதும், உள்ள நாடு

களை மாற்றி அமைப்பதும், மாநில நாட்டு மேல்சட்டசபை களை ஏற்படுத்துவதும் நீக்குவதும் சட்டப்படி கூறினல் அரசியலமைப்புத் திருத்தங்களாகா (விதிகள் 4 & 169). வேறு சில இனங்களில் பாராளுமன்றம் சட்டத்தின் மூலமே மாற்றங்களைச் செய்வதற்கு அரசியலமைப்பே இடமளிக்கின்றது. சுருங்கக் கூறுமிடத்து நமது அரசிய லமைப்பு அமெரிக்க நாட்டு அரசியலமைப்பைப் போன்று வளைந்து கொடாத தன்மையுடையதுமன்று ; ஆஸ்திரேலி யாவின் அரசியலமைப்பைப் போன்று முழுதும் வளைந்து கொடுக்கும் தன்மையுடையதுமன்று ; இரண்டிற்கும் இடைப்பட்டதொரு சிறந்த அமைப்பாகும். 395-வது விதி இந்திய சுதந்திரச் சட்டத்தையும் (1947), 1935-ம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தையும் (அதுபற்றிப் பின்பு நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் உட்பட) நடைமுறையி லிருந்து நீக்கியுள்ளது. ஆனல், 1949-ம் ஆண்டு பிரிவி கவுன்சிலின் அதிகாரத்தை நீக்குவதற்காக நிறைவேற்றப் பட்ட சட்டம் மட்டும் நடைமுறையில் இருந்து வருகிறது.

பகுதி 23

தேசிய ஒற்றுமையும் பிற முன்னேற்றங்களும்

1947-ம் ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சி நீங்கியது. அப்போது சிற்றரசு நாடுகளின் தொகை 562; இவற்றைப் பற்றிய சிக்கல் மிகவும் முற்றியது. இதை 1948-49ம்ஆண்டுகளில் வல்லபாய் படேல் வியக்கத்தக்க வகையில் மிகவும் விரைவாகத் தீர்த்து வெற்றி கண்டார்; சிற்றரசர்களின் முன்னேற்ற உணர்ச்சியும் விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கும் இவ் வெற்றிக்கு உதவின; சுருங்கக் கூறுமிடத்து இம் மாபெரும் பணி "குருதி சிந்தாத ஒரு பெரும் புரட்சியாகும்" (படேல்); இதனுல் இந்திய நாட்டு அரசியல் படமே பெரிதும் மாறியது. இம் முன்னேற்றப் போக்கில் மூன்று வகையான முறைகள் இயங்கியதனைக் காணலாம். அவையாவன: சிற்றறரசு தன்னைச் சேர்ந்தாற்போல் உள்ள மாநில நாட்டுடன் ஒன்ருதல்; நடுவிட அரசாங்கத்தின் நேரடி ஆட்சியின்கீழ் வருதல்; சிற்றறரசுகள் பல ஒன்ருகச் சேர்ந்து ஒரு நாடாக அமைதல். ஜுனுகைத் மன்னர் தம் நாடு பாகிஸ்தானுடன் சேரவேண்டுமென்று செய்த முடிவு அவரது குடிமக்களின் எழுச்சியாலும் எதிர்ப்பாலும் பயனற்றுப் போயிற்று ஆனுல் 1948-ல் ஐதராபாத்தில் போலீஸ் நடவடிக்கை தேவையாயிற்று.* 1947-ம் ஆண்டு அக்டோபர் மாதம் ஜம்மு-காஷ்மீர் மன்னர் தமது நாட்டைக் கூட்டு இந்தியாவுடன் சேர்த்துவிட்டார். அரசியலமைப்பின் 370-வது விதி அந்த நாட்டைப் பற்றிய தற்காலிக ஏற்பாட்டினைக் கூறுகின்றது. அந்த நாட்டு மகாராசாவிற்குப் பதிலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவர் இருக்கவேண்டியதாயிற்று. ஆகையால் 370-வது விதி விரைவில் குடியரசுத் தலைவரின் உத்தரவின்மூலம் இதற்காகத் திருத்தப்பட்டது; ஜம்மு-காஷ்மீர் அரசியல்நிர்ணய சபையின் முடிவுகளுக்கேற்ப அவர் ஒரு கவர்னரின்

---

*: 84, அதி. 15.

சம்பளத்தையும் ஊதியத்தையும் பெறுவார். இந்தியாவிற்கும் பாகிஸ்தானத்திற்கும் காஷ்மீர் பற்றியுள்ள பிரச்சினை ஐக்கியநாடுகளின் சபையில் 1948-ம் ஆண்டிலிருந்து ஒரு முடிவைக்காணுமல் இன்னும் இருந்து வருகிறது.

1949-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பிரான்சுக்கு உரிய சந்திரநாகூர் இந்தியாவுடன் ஐக்கியமாக ஒரு வாக்கெடுப்பின்மூலம் முடிவுசெய்தது. ஆனால் மற்றைய பிரஞ்சு இந்தியப் பகுதிகளைப் பற்றிய நிலைமை இன்னும் முடிவுருமலே கிடக்கிறது. இன அடிப்படையில் மக்கள் ஒதுங்கி வாழவேண்டுமென்றும் தென் ஆப்ரிக்காவின் கொள்கை கிறித்தவ சமயக் கோட்பாட்டிற்கு எதிரானது ; பொதுவுடைமைக் கொள்கைக்குக் கைகொடுப்பது ; குடியரசுக் கோட்பாட்டிற்குப் பகையானது. 1946-ம் ஆண்டு இது பற்றி இந்தியா ஐக்கியநாடுகள் சபையில் தெரிவித்தது ; ஆனால் இதுவரை எவ்வித பயனுமில்லை.

1947-ம் ஆண்டு காப்புவரிக் குழு திருத்தியமைக்கப்பட்டது ; அதன் பணிகள் மிகுதியாயின. அடுத்த ஆண்டு (1948) தொழிற்சாலைகள் சட்டம் நிறைவேறியது. 1949-ம் ஆண்டு ரூபாய் நாணயத்தின் மாற்றுமதிப்பு வீதம் குறைக்கப்பட்டது. தங்களுடைய வருமானங்களைப் பற்றிச் சரியான புள்ளிவிவரங்கள் அளிக்காதவர்களுக்குத் தண்டனை வழங்குமாறு வருமான வரி ஆராய்ச்சிக் குழு தன் கருத்தைத் தெரிவித்தது. நமது பொருளாதார முன்னேற்றத்தின் வேகம் முதலாவது ஐந்தாண்டு திட்டத்தில் நிழலிடக் காணலாம். திருத்தியமைக்கப்பட்ட இத்திட்டத்தின்படி 1955–56-ம் (நிதி) ஆண்டின் இறுதிக்குள் தேசிய வருவாயின் மதிப்பு ஒன்பதாயிரத்திலிருந்து பத்தாயிரம் கோடி ரூபாய் வரை மிக்குவரும் எனக் கணக்கிட்டுள்ளனர். நமது பொருளாதாரக் கொள்கை தனிப்பட்டோர் துறைக்கும் அரசாங்கத் துறைக்கும் இடமளிக்கின்றது 1951-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி கூட்டு இந்தியாவின் (ஜம்மு, காஷ்மீர் உள்பட) மொத்த மக்கள் தொகை 36·182 கோடியாகும்; இது 13·4 சதவீத மக்கட் பெருக்கத்தைக் காட்டுகின்றது. 1949-ம் ஆண்டு சாரதாச்

(குழந்தைகள் திருமணத் தடை) சட்டம் மேலும் திருத்தப் பட்டது. அதன்படி பெண்களின் திருமண வயது 14-லிருந்து 15-ஆக உயர்ந்தது; தவிர சில வழக்குகளில் அபராதத்திற்குப் பதிலாகச் சிறைத்தண்டனை அளிப்பதற் கும் சட்டத்தில் வழிவந்தது. இந்தியாவின் புதைபொருள் ஆராய்சிக்கு R.E.M. வீலர் ஊக்கத்தை அளித்தார். அரிக்க மேடு (புதுச்சேரி அருகே) புதைபொருள் ஆராய்ச்சியின் சாதனைகள் மிகச்சிறந்தன. இந்திய அரசாங்கத்தின் புதை பொருள் ஆராய்ச்சித்துறை தென் இந்தியாவில் கொண் டுள்ள அக்கரையை இந்த ஆராய்ச்சி காட்டுகின்றது.

1943-ம் ஆண்டிற்குப் பிறகு பரோடா, கௌகத்தி, குஜராத்து, ஜம்மு, காஷ்மீர், கருநாடகம், மத்திய பாரதம், பஞ்சாபு, பூனா, இராஜஸ்தானம், ரூர்க்கி, சாகர், உத்கல் பல்கலைக்கழங்கள் ஏற்பட்டன. அறிஞர் இராதாகிருஷ்ணர் தலைமையில் ஏற்பட்ட பல்கலைக்கழகக் கல்விக்குழு தன் அறிக்கையை 1949-ஆம் ஆண்டு வெளியிட்டது. 1951-ல் விசுவபாரதிச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. பல்கலைக்கழகங்களில் பெரும் பாலானவை அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணைப் படி நாட்டு அரசாங்கங்களின் அதிகார வரம்பிற்குட் பட்டவை. ஆயினும் கூட்டரசு அதிகாரப் பட்டியலில் 63-லிருந்து 66-வரை உள்ள இனங்கள் பல்கலைக்கழகங் களைப்பற்றிக் கூட்டரசு அரசாங்கத்திற்குள்ள பொது பொறுப்பைப்பற்றிக் கூறுகின்றன; பல்கலைக்கழகங்களி லும் விஞ்ஞானத் தொழிலாராய்ச்சி நிலையங்களிலும் கல்வி யின் தரத்தையும் ஆராய்ச்சியின் தரத்தையும் நிர்ணயித் தலும் ஒரு முகப்படுத்தலும் போன்றவற்றில் கூட்டரசு அரசாங்கத்திற்குரிய பொறுப்பை 66-வது குறிப்பு சுட்டு கின்றது. பல்கலைக்கழகத்தின் தன்னுரிமை குடியரசுக் கோட்பாட்டின் சிறப்பியல்பாகும். அரசாங்கம் எல்லாம் வல்லதாயினும், பல்கலைக்கழகங்களிற்கு மிகுதியாக மான் யங்கள் வழங்கி வந்தாலும் கல்வித்துறையில் பல்கலைக் கழகம் தனது விருப்பப்படி நடக்கவேண்டுமென்று அரசாங் கம் கருதுவது குடியரசுக் கோட்பாட்டிற்கு ஒத்ததன்று.

அரசியலமைப்புத் திருத்தங்கள் (1952–1959): அரசியலமைப்பின் இரண்டாவது திருத்தம் 1952-ல் நிறைவேறியது. இது மக்கள்சபை உறுப்பினரின் மொத்த எண்ணிக்கையை மக்கள் தொகையின் பெருக்கத்தின் அடிப்படையில் மிகுதியாக்குவதனைத் தடை செய்கின்றது. 1954-ஆம் ஆண்டு நிறைவேறிய மூன்றாவது திருத்தம் இந்தியாவின் பொதுவான பொருளாதார நலனுக்காகச் சில பொருள்கள்மீது கூட்டரசுத் துரைத்தனத்தின் கட்டுப்பாட்டைப் பற்றியது. தனிப்பட்டோர் சொத்துக்களை அவர்களின் அனுமதியின்றிப் பொதுநலனுக்காகத் துரைத்தனம் எடுத்துக்கொண்டு நட்டஈடு அளிப்பதில் ஏற்படும் சிக்கல்களைத் தவிர்க்கவே அரசியலமைப்பின் நான்காவது திருத்தம் 1955-ல் நிறைவேறியது. தலைமை நீதிமன்றத்தின் முடிவுகள் இதற்கு ஓரளவு காரணமாயிருந்தன. அதே ஆண்டில் ஐந்தாவது திருத்தமும் நிறைவேறியது. இது அரசியலமைப்பின் 3-வது விதிப்படி எல்லைகளைப் பாதிக்கும் மசோதாவைப்பற்றி மாநில நாடுகள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதில் காலம் தாழ்ப்பதால் அதனைத் தவிர்க்கவே இந்த மாற்றம் வந்தது. 1956-ஆம் ஆண்டு நிறைவேறிய அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தின்படி மாநில நாடுகளுக்கிடையே விதிக்கப்படும் விற்பனைவரி, வாங்குதல் வரி முதலியவைகள் கூட்டரசின் தனிப்பட்ட சட்ட நிர்வாக அதிகாரங்களின்கீழ்க் கொண்டுவரப்பட்டன. அதே ஆண்டில் நிறைவேறிய ஏழாவது திருத்தம் மொழிவாரி நாட்டமைப்பைப் பற்றியது.* 1959-ஆம் ஆண்டு நிறைவேறிய அரசியலமைப்பின் எட்டாவது திருத்தத்தின்படி கூட்டரசு சட்டசபையிலும் நாட்டுச் சட்டசபைகளிலும் தாழ்த்தப்பட்ட இனத்தினருக்கும் குடிகளுக்கும் ஆங்கிலோ-இந்திய வகுப்பினருக்கும் இடங்கள் ஒதுக்கியிருக்கும் ஏற்பாடு 1970-ஆம் ஆண்டு வரை நீடிக்கப்பட்டுள்ளது.

---

* *48, பக். 380-84.*

இந்தியாவும் பாகிஸ்தானமும்



SELECT BIBLIOGRAPHY

1 AITCHISON, C., Lord Lawrence, 1892.

2 ASCOLI, F. D., Early Revenue History of Bengal, 1917.

3-5 BANERJEE, A. C., The Eastern Frontier of British India, 1946; British Relations with Burma, 1948; The Rajput States and the East India Company, 1951.

6 BASU, B. D., Rise of the Christian Power in India, 1931.

7 Basu, D. D., Commentary on the constitution of India, 1952.

8 BEVERIDGE, H. A., Comprehensive History of India, Vol. II, 1866.

9 BOMBWALL, K. R., Indian Politics and Government (Since 1885), 1951.

10 BOULGER, D C., Lord William Bentinck, 1892.

11 BOWRING, L. B., Haidar Ali and Tipu Sultan, 1893.

12 BRADSHAW, J., Sir Thomas Munro, 1894.

13 BROWN, HILTON, The Sahibs, 1948.

14 Cambridge History of India, Vols. IV, V & VI (1937, 1929 & 1932).

15 CAMPELL-JOHNSON, A., Mission with Mountbatten, 1951.

16 CHATTERJI, NANDALAL, Mir Qasim, 1935.

17 CHAUDHURI, S. B., Civil Rebellion in the Indian Mutinies, 1957.

18 COLLIS, MAURICE, British Merchant Adventurers, 1945.

19 COWELL, H, The History and Constitution of the Courts and Legislative Authorities in India, 1905.

20 CUNNINGHAM, H. S., Earl Canning, 1891.

21 DATTA, K., Alivardi and His Times, 1939.

22 DAVIES, A. M, Warren Hastings, 1935.

23-24 DAVIES, C. C., The Problem of the North-West Frontier, 1890-1908, 1932; Warren Hastings and Oudh, 1939.

25 DHARKER, C. D. (Ed.), Lord Macaulay's Legislative Minutes, 1946.

26-27 DODWELL, H., Dupleix and Clive, 1920 ; A Sketch of the History of India from 1858 to 1918, 1925.

28 DUFF, I. C., GRANT, A History of the Mahrattas, 2 Vols. 1921.

29 DUTT, R., The Economic History of India under Early British Rule, 1906.

30 ELPHINSTONE, M., The Rise of the British Power in the East, 1887.

31 FARQUHAR, J N., Modern Religious Movements in India, 1929.

32 FEILING, KEITH, Warren Hastings, 1954.

33 FORREST, G., The Life of Lord Clive, 2 Vols., 1918.

34 FRASER, LOVAT, India under Curzon and After, 1911.

35 FURBER, HOLDEN, John Company at Work, 1948.

36 GOPAL, S., The Viceroyalty of Lord Ripon, 1953.

37 GRIFFIN, L. G., Ranjit Singh, 1893.

38 GRIFFITH, British Impact on India.

39 GUPTA, A. P. DAS, The Central Authority in British India, 1774-1784, 1931.

40 HARDINGE, C , Viscount Hardinge, 1891.

41 HARVEY, G. E., History of Burma, 1925.

42 HOLMES, T.R E., A History of the Indian Mutiny, 1885.

43-44 HUNTER, W W., The Marquiss of Dalhousie, 1890 ; The Earl of Mayo, 1891.

45 HUTTON, W. H., The Marquiss of Wellesley, 1915.

46 ILBERT, C , The Government of India, 1915,

47 IRVINE, W., Later Mughals, 2 Vols. 1922,

48 IYENGAR, G. R , The New Indian Constitution, 1957.

49 KEENE, H. G., Madhava Rao Sindhia, 1895.

50-51 KEITH, A. B., Speeches and Documents on Indian Policy, 2 Vols., 1922 ; A Constitutional History of India, 1936.

52 KHAN, M. H., History of Tipu Sultan, 1951.

53 KINCAID, C. A., Lakshmi Bai, Rani of Jhansi, and other Essays, 1945.

54 KINCAID, C. A., AND PARASNIS, D. B., A History of the Maratha People 1931.

55 KINCAID D., British Social Life in India, 1938.

56-57 LEE-WARNER, W. The Life of Marquis of Dalhousie 2 Vols. 1904 ; The Native States of India, 1910.

58-60 LYALL, ALFRED, The Life of the Marquis of Dufferin and Ava, 1905 ; Warren Hastings, 1908 ; The Rise and Expansion of the British Dominion in India, 1914.

61 MACMUNN, G., Afghanistan from Darius to Amanullah, 1929.

62 MAJUMDAR, R. C. The Sepoy Mutiny and the Revolt of 1857 1957.

63 MALHOTRA, A. R., The Constitution of India, 1951.

64 MARSHMAN J. C., The History of India, 3 Vols. 1869.

65 MITRA L. M, The Danes in Bengal, 1952.

66 Montagu-Chelmsford Report, 1918.

67 MUIR, R., The Making of British India, 1915.

68 NICOLSON H., Curzon : The Last Phase, 1937.

69 NILAKANTA SASTRI K. A. History of India, Part III, 1952.

70 OSBORNE, W. G., Ranjit Singh, 1840, reprinted, 1952.

71–72 PAL, DHARM Administration of Sir John Lawrence, 1952 ; The North-West Frontier, 1947.

73 PALANDE, M. R., Introduction to Indian Administration, 1951.

74–75 PHILIPS, C. H, India 1949 ; Handbook of Oriental History, 1951.

76 RAGHAVACHARIAR, N.R., The Constitution of India, 1951.

77 RANADE, M. G., Rise of the Maratha Power, 1900.

78 RAWLINSON, H. G., The British Achievement in India, 1948.

79 RITCHIE and EVANS, Lord Amherst, 1894.

80-81 ROBERTS, P. E., India Under Wellesley, 1929; History of British India, 1952.

82 RONALDSHAY, the EARL of, The Life of Lord Curzon, 3 Vols., 1928.

83 ROY, A. C., The Career of Mir Jafar Khan, 1953.

84 RUSSELL, WILFRID, Indian Summer, 1951.

85 SAPRE, B. G., The Growth of Indian Constitution and Administration, 1929.

86-87 SARDESAI, G. S., The Main Currents of Maratha History, 1933; New History of the Marathas, Vols. II & III, 1948.

88 SARKAR, J. Fall of the Mughal Empire, 4 Vols. 1932, 1934, 1938 & 1950.

89 SAVARKAR, V.D., The Indian War of Independence, 1947.

90 SCHWARZENBERGER, G., Power Politics, 1951.

91 SEN, N. B., History of the Koh-i-Noor, 1953.

92-94 SEN, S. N., Administrative System of the Marathas, 1925; Military System of the Marathas, 1928; Eighteen Fifty-Seven, 1957.

95 SETON-KARR, W. S, The Marquis of Cornwallis, 1890.

96 SHARMA, S. R., The Making of Modern India, 1951.

97 SHEJWALKER, T. S. Panipat, 1761, 1946.

98 SINGH, K, The Sikhs, 1953.

99 SINHA, H. N., Rise of the Peshwas, 1931.

100-102 SINHA, N. K. Rise of the Sikh Power, 1936; Haidar Ali, 1941; Ranjit Singh, 1945.

103 SMITH, W. R, Nationalism and Reform in India, 1938.

104-106 SPEAR T. G.P., The Nabobs, 1932: India, Pakistan and the West, 1949, Twilight of the Mughuls, 1951.

107 SRINIVASACHARI, C. S., The Inwardness of British Annexations in India, 1951.

108 SRINIVASAN, C. K., Maratha Rule in the Carnatic, 1945.

109 SRIVASTAVA, A. L, Shuja-ud-Daulah, 2 Vols. 1945.

110 STEPHEN, J. F., The Story of Nuncomar and the Impeachment of Sir Elijah Impey, Vol. I, 1885.

111 STRACHEY, JOHN, Hastings and the Rohilla War, 1892.

112 SYKES, P., A History of Persia, Vol. II, 1930.

113 SIJMONDS, R. The Making of Pakistan, 1950.

114 THOMPSON, EDWARD, The Making of the Indian Princes 1944.

115 THOMPSON, and GARRATT, Rise and Fulfilment of British Rule in India, 1934.

116 TROTTER, L. J., History of India under Queen Victoria, Vol. I, 1886.

117 VARMA, S. P., A Study in Maratha Diplomacy, 1956.

118 WEITZMAN, S., Warren Hastings and Philip Francis, 1929.

119 WILSON, CHARLES. CLIVE (English Men of Action Series).

120 WOODRUFF, P., The Founders, 1953.

121 YUSUF ALI, A., A Cultural History of India during the British Period, 1940.